
JL
Ev6m2u11, N03NA
N03.17
162058

The Good Pastor

நல்ல ஆயன்

பன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் எமக்குண்டு.
வகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே
ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

ஜனவரி 1919. | இலக்கம் 1.

EW YEAR..
புது வருஷம்.

பழய வருஷம் பறந்துபோ
கப்புதுவருஷம்பிறந்து
விட்டது. 1918-ம் வரு
ஷம் மறைந்துபோன
ஆண்டுகளோடுசேர்ந்து
விட, 1919-ம் வருஷம்
பாந்திருக்கிறது. வருஷப் பிறப்பு
கிறீஸ்துவர்கள் வீடெங்கும்
ம் விசேஷக் கொண்டாட்டங்க
பு அலங்காரங்களும், வேடிக்
கேளிக்கைகளும், விநோத வினை
ம், விவித பட்சண பலகாரங்க
து சாப்பாடுகளும், ஆடைய்
ாணங்களும் செய்து, உண்டு, உடித்து
ல்லாகிப்பார்கள். ஒருவரை யொருவர்
ித்து, ஆசிமொழி கூறி நேசம் பாராட்
கள். ஒருவர் மற்றொருவருக்கு சுப
ன வாழ்த்து வசனங்கள் அடங்கிய
திர வாழ்த்துச் சீட்டுகளும், கொடை
வழங்கி, அன்புசெய்து ஆனந்திப்
ள். இவை முதலான விசேஷ வைப
கொண்டாட்டங்கள் செய்து அந்நா
சந்தோஷமாய்ச் செலவழிப்பது சக

ஜமே. ஆயினும், இவைமத்தியில், பெரியோ
ரானவர்கள் [illegible] சம்பந்தமான சிந்தனை
களுக்கு இடங்கொடுத்து, ஓர் வியாபாரி
வருஷக் கடைசியில் கணக்கு வழக்குப்
பார்த்து இலாப நஷ்டங் கண்டுபிடித்து,
நஷ்டம் வரும் வழியை விடுத்து, இலா
பம் வரும் வழியைக் கண்டுப்பிடித்துத்
தொழில் செய்யத் தீர்மானிப்பதுபோல,
"சர்வேசுரன் மனுஷர்களை யேதுக்காக
உண்டாக்கினாரோ" அந்தக் கருத்துப்
படி நாம் இதுவரையில் நடந்தோமா
இல்லையாவெனத் தமது கடந்த சீவியத்
தைச் சீர்தூக்கிப்பார்த்துத் தவறுண்டா
னால் அதைத் தவிர்த்து, புது வருஷத்
தைத் தக்க விதமாய்த் தொடங்கி, அதை
உத்தம மேரையாய்க் கழிப்பதற்கான வழி
வகைகளைத் தீர்மானஞ் செய்துகொள்வார்
கள்.

இந்தப் புது வருஷமானது நம்மில்
ஒவ்வொருவருக்கும் புது வருஷமாயிருக்
குமோ, பழய வருஷமாயிருக்குமோ, சந்
தோஷமானதாயிருக்குமோ, துக்கம்நிறைந்
ததாயிருக்குமோ, இனி நமக்கு மீதியா
யுள்ள சீவியத்தின் தொடர்ச்சியாயிருக்
குமோ, முடிவாயிருக்குமோ யார் அறி
வார்? சென்ற நாளெல்லாம் சிறு விரல்
வைத் தெண்ணலாம் நின்ற நாள் யார்க்
கும் நிணவரிது. ஆதலின், எல்லாம் அறி

பவரும், எல்லாம் வல்லவரும், சர்வ ஞானியும், சர்வோத்தமருமான சர்வேசுரனுக்கே இவையெல்லாம் பிரத்தியட்சமானதால், அவரை நினைந்து, அவரை வேண்டி, அவரை நம்பி இப்புது வருஷத்தைத் தொடங்குவோமாக. அது எப்படிப்பட்டதாயிருந்தாலும் இருக்கட்டும். அவனன்றியோரணுவு மசையாதெனும் பெரு ஆப்த மொழிப்படி, நமக்கு நேரும் நன்மையும் தின்மையும், வாழ்வும் தாழ்வும், பெருமையும் சிறுமையும், எல்லாம் அவருடைய செயலால், அவருடைய திருவுளப்படி சம்பவிப்பனவாகையால், "சர்வேசுரா, உமது திருச்சித்தம், எமது பாக்கியம்" எனச் சொல்லி முழுமனதுடன், அவற்றையேற்று அநுபவிக்கவேண்டுமேயன்றி, ஒன்றை வேண்டுமெனவும், மற்றொன்றை வேண்டாமெனவும் நாம் சொல்லுவதற்கில்லை.

"நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும் பெருமை யுடைத்து இவ்வுலகு" என்றபடி "இன்றைக்கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்" லாத இந்தமாயா சீவியத்தில்மகிழ்ச்சி கொள்வது எங்ஙனம்? சென்ற வருஷத்தில் சண்டையினாலும், கொள்ளைநோயினாலும் இன்னும்மற்றக்காரணங்களாலும் மாண்டு போன மனுஷர்களுக்குக் கணக்குண்டோ? சமீபத்தில் நமது நாடெங்கும் நடுக்கொள்ளைகொண்ட விஷஜுரத்தினால் நமது உற்றார் உறவினருக்குள் எத்தனையோ பெயர் மாண்டுபோயினர். இந்தப் பெருவாரிக் காய்ச்சலிலிருந்து எப்படியோ அற்புதவிதமாய் நாம் காப்பாற்றப்பட்டிருக்கிறோம். இனி இந்தப் புது வருஷத்தில் நமக்கு என்ன கதியோ! சாவு ஒரு திருடனைப் போல வரும் என்பதால் நாம் எப்போதும் சாவை நம் தலைமேலே கொண்டு திரிகிறோம். இன்றைக்கோ, நாளைக்கோ, இப்போதோ, இன்னுஞ் சற்றுநேரமோ, வீட்டிலோ, காட்டிலோ, வீதியிலோ, தெருவிலோ, நமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ நாம் மரித்து கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டிய காலம் வரும். ஆனதினால், நாம் அடிக்கடி நமது சாவைச் சிந்தித்து, நமது முடிவை நினைத்துத்தான், எப்பக்கத்திலும் சூழ்நது நம்மைக் கெடுக்கக் காத்திருக்கும், உலகம், பசாசு, சரீர மென்னப்பட்ட மூன்று சத்
யும் வெல்லவேண்டும். புது வரு
போன்ற திருநாட்கள் பெருந
மிருகங்களைப்போல் மிதமிஞ்சின
ஷங்களுக்கு இடங்கொடுக்கலாக
பேர்க்கொத்த நாட்களில்தா
நம்மையுண்டாக்கிக் காப்பாற்றிக்
வருகிற கருணையங் கடவுள் நமக்
துள்ள சாதாரணமும் விசேவ
பல உபகார சகாயங்களுக்காக
நன்றியறிந்த தோத்திரங்கள்
நாம் அவருக்குச் செய்துள்
துரோகங்களுக்காகப்
இனி நமக்கு வேண்டி
மைகளுக்காகவும்
மரித்த விசுவாசிகளு
விதமாய் அவரை வே
வேண்டும்.

உலகாதிமுதல் இது
எங்கும் கண்டுங் கேட்டுமி
களைக்கொண்டு, கடந்த ந
ளுக்கதிகமாய் கொடூரமாய் நடத்
வந்த மிக்க பயங்கரத்துக்குரிய
பிய மகா யுத்தமானது, இப்போ
தானத்தைநோக்கி நிறுத்தப்பட்டி
னால், இது தொடக்கமாக இனி ச
முற்றுமே நிறுத்தப்பட்டுப்போய்,
புது வருஷத்தில் சமாதானம் மற
உலகமெங்கும் குடிகொள்ளவும்,
முகாந்தரமாய்த் தடைப்பட்டுப்
வியாபாரமும், வர்த்தகமும்
தொழில்களும், விவசாயமும்,
அபிவிருத்தியடையவும், பசி,
நோய் முதலிய தின்மைகள் நீங்
கள் சம்பிரமமாய் வாழவும்,
கும் அஞ்ஞானம் அறவே ஒ
பதிதர் துர்மதங்கள் அழியவு
மறை செழித்தோங்கவும், அ
னவர், மேற்றிராணிமார் முதலிய குரு
பிரசாதிகள் மேன்மைபெற்று உய்யவு
அரசர்களுக்குள் உண்மைச் சமாத
முண்டாகி தேசபரிபாலனம் சீராய் ந
வும், ஞானமுங் கல்வியும் நயந்து நாளு
நாள் அபிவிருத்தி அடையவும், நன்
சிகள் ஈடேறவும் கருணையங் கட
கிருபை கூர்வாராக.

கடைசியாய் நமது "நல்ல ஆய
சந்தாதார சத்புருஷ பூவையர்களுக்

நன்கொடை யளித்த நண்பர்
, விஷயதானஞ்செய்த் விற்பன்
, அதன் அபிவிருத்தியைக்கோரி
ஷயமாயும் உதவிபுரிந்த உத்தம
ளுக்கும், அவரவர்கள் குடும்பத்
, நாம் நன்றியறிந்த வந்தனத்
துவருஷ சோபனங் கூறுகிறோம்.
ளல்லோரும், இப்புது வருடத்
வசுரன் திருவருளால் சகல சம்
அஷ்ட ஐஸ்வரியமும் பெற்று
திடகாத்திரராய்ப் பல்லாண்டு
ாக! நாம் நமது சந்தாதாரர்க
ம், நமது உபகாரிகளுடைய
சரீர நன்மைகளுக்காக,
RY OF ால் வருஷப்பிறப்பு
திவ்யபூசை செய்து சர்வேசுர
ப்புக்கொடுத்து, அவர்களுக்காக
விதமாய் வேண்டிக்கொள்ளு
இதுபோல் நமது நண்பர்களும்
திரிகைக்காகவும், நமக்காகவும்,
கொள்ளுவார்களெனக் கோருகி
சுப மங்களம்!!

E POPE & THE PEACE CONFERENCE.

ப்பரசரும் சமாதானச் சங்கமும்.

தத்தோலிக்கு திருச்சபையை
தற்போது மெத்த சிலாக்
கியமாய் ஆண்டுவரும் பரி
சுத்த தந்தையாகிய 15-ம்
ஆசீர்வாதப்பர், ஐரோப்பா
வையும் இதர நாடுகளை
4-மாதங்களாக வாட்டி வதைத்து
காலத்தில், யுத்தத் துன்பங்க
தேசங்களுக்கும், பற்பல
ம் தமது செல்வாக்குள்ள
யென்ற நன்மைகளையெல்
பது லோகப் பிரசித்

ங்கங்கள் கடும் பகை
ளுத்தப்பட்டு, ஒன்
ழும் பொல்லாங்

கும், நஷ்டமும் நாசமும், அநியாயமும் அட்டூழியமும் செய்து, மனுக்குலத்தை அதம்பண்ணி வரும்போது, யுத்தத் தொடக்கத்திலிருந்தே, பாப்பரசர் தாம் விடுத்த பிறர் சிநேகமும் ஞானமும் நிறைந்த நிருபங்களால் தேச மன்னர்கள் ஒத்து உறவாடி சமாதானம் செய்துகொள்ளும்படி அவர்களைப் பன்முறையும் வற்புறுத்தி அழைத்தார். அவருடைய வேண்டுகோளுக்குச் செவிகொடாது, அவர்கள் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு போகும்போது, யுத்தத்தினால் விளைந்த கொடுமைகள், துன்பங்களையாவது குறைக்கவும், தணிக்கவும் ஓய்வு ஒழிவில்லாமல் பெரிதும் பாடுபட்டு உழைத்தார். இவைகளைச் சுருக்கமாய் விவரித்துக் காண்பிப்போம் :—

(1) அந்நிய நாடுகளில் கைதிகளாக்கப்பட்ட போர்வீரர்கள், தங்கள் காயங்களால் மீண்டும் சண்டைபோட சக்தியற்றவர்களாயிருக்கும் பட்சத்தில், அவர்களைத் தத்தம் சொந்த தேசங்களுக்கு அனுப்பிவிடும்படியாக பாப்பரசர் கேட்டுக்கொள்ள, அதன்படி நடக்க ஒவ்வொரு கட்சியாரும் ஒப்புக்கொண்டனர்.

(2) வியாதியால் வருந்திக்கிடந்த கைதிகளையும், 4 பிள்ளைகளைக்குத் தந்தைகளாயிருந்த சிறையாளரையும், யுத்தத்திற் கலவாது நடுநிலைமையை அநுசரித்த சுவிட்ஸெர்லாண்டு முதலிய தேசங்களுக்கு அனுப்பவேண்டுமென்றும், அங்கு அவர்களுக்குத் தக்க சிகிச்சையும், சவரக்ஷணையும் செய்யப்படவேண்டுமென்றும் கேட்டு, அன்னவருடைய சுகத்துக்கும் சௌகரியத்துக்கும் வேண்டிய வசதிகளை ஏற்படுத்தினார்.

(3) பாப்புவின் ரெயில் தொடர் என்று சொல்லப்படும் வண்டிகள் காச வியாதியினால் பீடிக்கப்பட்ட இத்தாலிய சிறையாளரை வாரந்தோறும் அவர்களுடைய சொந்த நாட்டுக்குக் கொண்டுவந்துவிட்டதும் நமது பரிசுத்த பிதாவின் செயல்தான்.

(4) பாப்பரசர் தமது வத்திக்கான் மாளிகையில் யுத்தக் கைதிகளுடையவும், அவர்களுடைய சுற்றத்தாருடையவும் ஆறுதலுக்காக உத்தியோகசாலை யொன்றை ஸ்தாபித்து, அந்நிய தேசங்களில் காணாமற்போன போர்வீரர்கள், சிறைப்பட்டவர்கள், பந்தோபஸ்தில் வைக்கப்பட்ட குடித்தனக்காரர்கள் இவர்களுடைய இருப்பிடம், சுகக்ஷேமம், நிலைமை இதுமுதலான சமாசாரங்களை அந்தந்த அரசாங்கங்களில் விசா

ரணை செய்து, அன்னேருடைய பந்து ஜனங்க
ளுக்கு அறிவித்து, அவர்களுடைய கவலைகளை
நீக்கினர். இதற்குப் பிடிக்கும் செலவுகளை
யெல்லாம் பாப்பானவர் தாமே ஏற்றுக்கொண்
டார்.

(5) அவருடைய முயற்சியால்தான் யுத்
தக்கைதிகள் எல்லோருக்கும் ஞாயிற்றுக்கிழமை
யில் ஓய்வு அளிக்கப்பட்டது.

(6) யுத்தத்தில் மரணதண்டனை விதிக்கப்
பெற்ற அநேகருக்கு முழு மன்னிப்பையாவது,
அல்லது மரணத்தீர்ப்பை மாற்றி வேறே தண்
டனையையாவது கொடுக்க ஏற்பாடு செய்தவர்
பாப்பரசரே.

(7) பெல்ஜிய தேசத்தாருக்கு பாப்பரசர்
காண்பித்த தயாளத்துக்கும் நேசத்துக்கும் அள
வில்லை. அத்தேசத்துக்கு ஜெர்மானி செய்த
கொடுமைகளையும், அநியாயங்களையும் மெத்த
தீரமாயும் தீர்க்கமாயும் கண்டனம் செய்துள்
ளார். அத்தேசத்தில் பிரக்கியாதிபெற்று விளங்
கும் கர்தினல் மெர்சியர் ஆண்டவருக்கு நிருபங்
கள் பல எழுதித் தமது பெல்ஜிய மக்களுக்கு
அநுதாபங் காட்டி, ஆறுதலும் தேறுதலும்
சொல்லித் தாமே ஏராளமான பண உதவி செய்
ததுமன்றி, மற்ற தேசத்தாரும் அவ்வாறு செய்
யும்படியாக எவித் தூண்டினர். இப்படியே
பிரான்சு, லுக்ஸம்பர்க், போலாண்டு, லிதுவா
னியா, ரூத்தேனியா, செர்வியா, மோன்டினி
கிரோ என்னும் தேசங்களில் யுத்தத்தால்
நொருங்கிக் கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற
ஏழை மக்களுக்கு உதாரமான பணத்தொகையை
அனுப்பினர்.

(8) யுத்தக் கைதிகளுக்கு அவர்களுடைய
ஜாதி குல மத வித்தியாசங்களைப் பாராமல்
உணவுபண்டங்களையும், மருந்துகளையும், வஸ்தி
ரங்களையும், புஸ்தகங்கள், பத்திரிகைகளையும்
அனுப்பி அவர்களை குதூகலப்படுத்தினர்.

(9) பெல்ஜிய தேசத்தின் சிறுபிள்ளைகளை
ஆதரிக்கும்படியாக அமேரிக்காவின் சிறுவர்
களைத் தூண்டிவிட்டதினால், இவர்களுடைய
தாராளமான நற்கொடைகளால் லட்சக்கணக்
கான குழந்தைகள் மடியாமல் பாதுகாக்கப்பட்
டார்கள்.

(10) தேவாலயங்களையும், விசித்திரமான
பொது மாளிகைகளையும், கலாசாலைகளையும்,
புஸ்தகசாலைகளையும், தர்மசாலைகளையும்,
விநோதமான வேலைப்பாடுகளையும்
யர்கள் தங்கள் வெடிகுண்டுகளால் ப
போதும், போர்வீரர்களல்லாத குடிகளை
கிர்தமாய் இம்சித்தபோதும், பாப்பரச
களைப் பன்முறையும் கண்டித்துத் த

(11) அவர் புரிந்த எண்ணிக்கை
தயாளமும் கருணையும் நிறைந்த செய
த்தில் தண்புற்றவர்களை மாத்திரமல்
உயிர்துறந்தவர்களையும் எட்டின.
டைய சவங்கள் கௌரவமாய் அடக்கள
படவேண்டுமென்றும், இவர்களுடைய
களும் பூச்சியமாய் பாதுகாக்கப்ப
மென்றும் ஏற்பாடுகள் செய்த

(12) யுத்தம் ஒழிய
சமாதானம் எங்கும் தழைத்
ஒரு அருமையான செபத்தை உண்
மோடு சகல கிறீஸ்துவர்களும் ஒன்றி
தபங்களை ஒப்புக்கொடுத்து, தேவ கி
மன்றாடவும், சகல குருக்களும் ஓர்
காளில் திவ்யபூஜை பலியை ஒப்புக்கொ
படிச்சுங் கற்பித்ததும் பாப்பரசரேயா

இன்னும் அவர் செய்துள்ள தரு
கரியங்களையும், பரோபகாரச் செயல்
காருண்ய திருத்தியங்களையும் பற்றும்
விவரிக்கவேண்டுமென்றால் ஏடிடங்கெ
எடுத்தெழுதமுடியாது. இவ்வளவு கா
யெல்லாம் செய்து முடிக்க நமது
ருக்கு அளவற்ற செல்வாக்கும், அ
உண்டு என்பதற்குச் சிறிதும் சந்தே
அவர் நடுநிலைமையையும், பாரபக்ஷ
யும் எப்போதும் பின்பற்றியவராய்
மையின் சுடரை சண்டையில்
கிடந்த மன்னர்களுக்கு காண்பித்
சகல ஜாதி ஜனங்களையும் அளவ
கத்தோடு அரவணைத்து வந்த
தகைய அரிய பெரிய பரோபகா
செய்யவல்லவரானர். இத்தகை
யம்படைத்த பிதாவை, இவ்வுல
பெற்ற தர்ம இராஜாவை,
ளில் நிபுணத்துவம்பெற்ற
ஆசீர்வாதப்பரை, சமீபத்
கூடிப் பேசப்போகிற
றுக்கொள்ள வேண்டு
புத்தியாலோசனை
நீதியும் நிலைமை
ஒழுங்கையும் பி

வேண்டுமென்றும், கிறீஸ்துவை ஜன
எங்கும் இளர்ச்சிகள்செய்ய மூன்
க. மீண்டும் இச்சங்கத்தில் பாப்பு
ன்றுதொட்டு அரசாண்டுவந்த
ரையும், மற்ற காகேளையும் இத்
ாக்கத்தார் 1870-வருடத்தில்
த்துப் பறிமுதல் செய்த அரியா
ங்குபடித்தி, அவ்விராச்சியத்தை
சருக்கு திரும்பவும் கொடுத்துவிட
ன்றும் கிறீஸ்துவர்களனைவரும்
இளர்ச்சிசெய்ய முற்படுவார்களாக.

S. M.

RY OF ST. MONICA.

னிக்கம்மாள் சரித்திரம்.

Rights Reserved.)

2-ம் அதிகாரம்.

னக்குடும்ப சீவியம்—
ணிக்கம்மாளின் சாந்தமும்
ும்—கர்த்தர் அவளை முன்று
ாகளுக்குத் தாயாக்கி
றுதலளிக்கிறார்.

சண்யம் 355—369.)

(முன் தொடர்ச்சி.)

மோனிக்கம்மாளோ

வெனில், தன் நல்
லொழுக்கத்திலும், மாது
ரிய குணத்திலும், வினய
மரியாதையிலும் தன் மாமி
யாரை மேற்கொண்டதி
வள்மட்டிலிருந்த வெறுப்பா
ட பனிபோல் கொஞ்சங்
ஒழிந்துபோயிற்று. குடும்
கெடுக்கவும், சமாதா
ட்டி வேலைக்காரர்கள்
ன் மருமகன்பேரில்
சாட்டிவருகிறார்
தெல்லாம் முழு
குத் தெரியா
சொன்னள்.

இதைக் கேட்டவுடன் பத்ரீவியூஸ் அடிபட்ட
நாகம்போல் சீறி தன் ஊழியர்களைச் சவுக்கா
லடிப்பித்தான். பிறகு மோனிக்கம்மாளின் மாமி
யார் வேலைக்காரரை ஒருங்குகூட்டி, இனி யாரா
வது தன் மருமகள்பேரில் ஏதாவது குற்றஞ்
சொல்லத் துணிவார்களாகில், அப்படிப்பட்ட
வர்களுக்கு இதே விதமான தண்டனை கிடைக்கு
மென்று பிரசித்தமாய்த் தெரிவித்து எச்சரித்
தாள். அக்காலத்திலிருந்து அவர்களுடைய காவு
கள் மோனிக்கம்மாளின் விஷயத்தில் ஊமையின்
நாவைப்போல் கட்டுப்பட்டிருந்தன. மாமியாரும்
மருமகளும் அப்போதிருந்து சமாதானமாயும்,
ஒற்றுமையாயும் வாழ்ந்துவந்தார்கள். முதலில்
என்னவோ சவுக்கடிக்குப் பயந்து, வேலைக்காரர்
கள் வாயடங்கியிருந்தார்கள். ஆனால் மோனிக்
கம்மாள் நேச பாசத்தைக்காட்டி அவர்களுடைய
வாயை முழுதும் அடைக்க வருந்தினாள். இவள்
அவர்களை நேசித்த நேசத்தைக் கண்டு அவர்கள்
மனம் இளக்கம் அடைந்ததினால், அத்தியந்த
உருக்கத்தோடும் பிரமாணிக்கத்தோடும் இவ
ளைப் பராமரித்துவந்தார்கள்.

இப்படியாய் அவள், தன் வசப்படுத்திக்
கொண்டது தன் உறவின்முறையாரையும் ஊழி
யரையும் மாத்திரமேயன்று. அர்ச். அகுஸ்தீன்
சொல்வதாவது "ஓ! என்தேவனே! உமக்குஸ்து
தியும் புகழ்ச்சியும் உண்டாகக்கடவது; ஏனெ
னில் என்னைக் கருப்பந்தரித்துப் பெற்றெடுத்த
உமது பிரமாணிக்கமுள்ள ஊழியக்காரியான
அர்ச். மோனிக்கம்மாள், அதிக மாட்சிமை
பொருந்திய வரத்தை உம்மிடத்திலிருந்து
அடைந்தாள். அதேதெனில், ஒருவருக்கொரு
வர் சண்டை சச்சரவுசெய்து ஒருவரை யொரு
வர் பகைத்து வருவதைக்கண்டால், அவர்களைச்
சமாதானப்படுத்துவாள். ஆதலால் அங்கிருந்த
அயலார்கள் யாவரும் மோனிக்கம்மாளின்பேரில்
நம்பிக்கைவைத்துத் தங்களுடைய கஷ்ட நஷ்
டங்களில் அவளைச் சரணடைந்து, அவளுடைய
நல்லாலோசனையைக் கோருவார்கள். யாவரும்
அவளிடம்வந்து தங்கள் குடும்பங்களின் தொந்
தார்த்தங்களை அறிக்கையிடுவார்கள். தங்களுக்
கிருக்கும் விசனத்தையும், சஞ்சலத்தையும்
வெளிப்படுத்துவார்கள். சிலர் பிறர்பேரில் வன்
மஞ்சாதித்து அவ்வன்மத்தை அடக்கமுடியா
மல் இவளிடம்வந்து வெளிப்படுத்துவார்கள்.
இவனோவெனில் பொறுமையோடும் அமைதி
யோடும் அவர்கள் சொல்வதைக்கேட்டு மெத்த

வும் விவேகத்துடன் அவர்களுக்கு ஆறுதலளிப்பாள். குடும்ப விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதெப்படியென்று இவளைவிட நன்றாய் அறிந்தவர்கள் வேறு யாருமில்லை. இவளுடைய சாமர்த்தியம் எல்லாம் மவுனம் ஒன்றிலேயே அடங்கியிருந்தது. மவுனம் மலையைச் சாதிக்குமென்பது வீண் வார்த்தையல்ல. யாராவது சரி, அவளிடம் ஒரு சங்கதியைத் தெரிவித்தால் அதைத் தன் இருதயத்தின் அந்தரங்கத்தில் பதனப்படுத்தி யாருக்கும் அதனை வெளியிடமாட்டாள். அவளிடம் ஒரு சங்கதியைச் சொல்வதுஞ் சரி, அங்கிங்கும் பாயாமல் ஒரே நிலையாயிருக்கும் தண்ணீரடங்கிய ஆழ்ந்த கிணற்றில் ஒரு பொருளைப் போடுவதும் சரி. ஒருதரம் அவளிடம் பேசிய விஷயத்தில் எதையாவது அவள் வெளிப்படுத்துவாளேயானால், அது ஒருவர் வன்மத்தையடக்குவதற்காவது, அல்லது ஒருவர் ஆத்தும காரியத்தைக் குணப்படுத்துவதற்காவது மாத்திரமேயன்றி வேறு எந்தக் காரணத்திற்காயுமிராது."

மீளவும் அர்ச். அகுஸ்தீன் சொல்வது, "ஒருவர் தன்னிடம் வெளிப்படுத்திய இரகசியங்களைப் பிறருக்கு வெளிப்படுத்தும் குணம் என் தாயாரிடமில்லாதிருந்ததைப்பற்றி அவளை வாழ்த்திப் புகழுகிறேன். ஒருவன் தன் கோபவேளையில் தனக்கு ஆகாதவன்பேரில் ஆக்ரோஷத்துடன் கடுஞ் சொற்களைச் சொன்னால், அநேகம்பேர் அச்சொற்கள் யாரைச் சாருமோ அவனிடம்போய் ஒன்றும்விடாமல் அவைகளை வெளிப்படுத்தி மனச்சந்தோஷங்கொள்ளுவார்கள். இப்படி எனக்கே ஒருதரம் சம்பவித்தது. அப்படி சம்பவித்திராவிட்டால் என் தாயாரிடம் விளங்கிய மவுனம், வாயடக்கம் என்னும் குணம் அவ்வளவு சிரேஷ்டமென்பதாக எனக்குத் தோன்றியிராது. இதுமாத்திரமா? எரிகிற நெருப்பில் எண்ணெயை வார்க்கிறதுபோல், சண்டைகளை மும்மூரப்படுத்தும்படி அவர்கள் சொன்னதோடு சொல்லாததையுங் கூட்டிப் பெருக்கிச் சொல்லி ஒருவரொருவரை நாயும் பூனையும்போல் பகைக்க வழிதேடுவார்கள். ஆனால் இதற்கு மாறாக, கோபக்கொண்டிருக்கும் இரு கட்சியாருக்கும் சமாதான வார்த்தைகளைச் சொல்லி அவர்கள் கோபத்தைச் சாந்தப்படுத்துவது கஷ்டமாயிராது." மீளவும் அர்ச். அகுஸ்தீன் சொல்வது, "இவ்விதமாகவே என் தாயார் எப்போதும் நடந்துகொள்ளுவாள். ஏனெனில் ஓ! கடவுளே, நீர் அவளை தயத்தை அவ்விதமாய்ப் பயிற்றி வார்த்தையில் சொல்லவேண்டுமா தான தர்மமென்பது அவளிடம் என் கும். அவளுடைய வீடு மவுனம் எ யினால் காக்கப்பட்டு அதனுள் டைய துயரங்களையும் மனக்கலக போக்கி அவர்களுக்கு ஞான சந்தோ சமாதானத்தையும் அளிக்கும் ஆ சமானமாயிருக்கும். விசேஷமாய் த மட்டில் மெத்தவும் விவேகமாய் நட தன் நல்ல நடத்தையினால் அனை கொள்ள வருந்தினாள். அவள் ஒ அவன் மெய்யான கடவுளை மென்று ஆசித்தாள். அவள் ஒரு த தன் குமாரனைக் கிறீஸ்துவளவி னெறியில் பயிற்றிசெய்ய தான் தெ அலுவலில் அவன் தனக்குச் சகாய அல்லது தனக்கு இடையூறுயிரா டப்படி நடக்கவிட்டுவிடவும் கோ

அர்ச். மோனிக்கம்மாள் ச தில் தனக்கு நேர்ந்த துன்பங்கள் பொறுமையுடன் சகித்து, தனக்கு செய்தவர்கள் யாவரையும் தன் ப ஒன்றினாலேயே ஜெயித்து, க களைத் தேவ பாரிசமாய்த் திருப் அகுஸ்தீன் சில வார்த்தைகளினா திக்காட்டுகிறார். எப்படியெனில், தில் நான் சத்திய வேதத்தை நம்பி தாயாரும் நம்பினாள். எங்களோ வரும் நம்பினார்கள். அதை க தகப்பன் ஒருவரே" என்பதே தில் ஒரு குடும்பம் இருந்த கதி ஐயோ நமது காலத்தில் முதல் பங்களின் கதி இவ்விதமாக "இருந்தாலும்" அர்ச். அகு "நான் சத்திய வேதத்தை றும் அதன் போதனையின் மென்றும் என் தாயார் எ த்துக்கவும், அல்லது அதன் போதனையின் என்னைக் கண்டிக்க அவர் விசுவாசங் லும், நெறிகெட் எனக்குத் என் புத்தி

சேசுக்கிறீஸ்துநாதரை நானும் விசுவசியாதபடி செய்ய அவரால் கூடாமல்போயிற்று."

இதனால் மோனிக்கம்மாள் தனது குமாரனுடைய இரட்சண்ய அலுவலுக்குத் தன் புருஷன் இடையூறுயிராதபடி, அவரைத் தன் வசப்படுத்திக்கொண்ட சாமர்த்தியமும், தன் குமாரனுடைய இளமனதில் விதைத்த விசுவாச விதையின் விசேஷமும் தெரியவருகின்றன.

தாயானவள் உத்தம கிறீஸ்துவளாயிருந்தால், இப்படியே எப்போதும் சம்பவிக்கும். தகப்பனவன் சத்திய வேதத்தின்மட்டில் நம்பிக்கைகொள்ளாத அவிசுவாசியாயிருந்தாலும், தாயானவள் நல்ல விசுவாசியாயிருப்பாளேயானால், "தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை" என்னும் பழமொழியின்படி, பிள்ளையானது தாயையே கண்டுபாவித்து அவளுடைய போதனைகளையே ஒரு தத்தளிப்புமின்றி கைக்கொள்ளும்.

பிராயம் போகப் போக சில வேளை அர்ச். அகுஸ்தீன் விசுவாசத்தில் நிலைத்திருக்கமாட்டாரென்றும், தன் தகப்பனுருடைய துர்குடத்தையையும் அக்கிரமத்தையும் கண்கூடாய்ப் பார்க்கப் பார்க்க ஆசாபாசங்கள் அவரை எதிர்த்துச் ஜெக்கிரமாய் வெல்லுமென்றும், ஆதலால் பாலியர்களின் இருதயத்தில் விசுவாசத்தை நிலைநாட்ட குழந்தைப் பருவம் எப்படிப்பட்ட நல்ல காலமென்றும், அர்ச். மோனிக்கம்மாள் அறிந்திருந்தபடியால், காலத்தை வீண்போக்காமல் அவருக்கு வேதபோதனைகளை விளக்கிக்காட்டி நல்லவர்களுக்குண்டாகும் சம்பாவனையையும் தீயவர்களுக்குண்டாகும் ஆக்கினையையும் எடுத்துச் சொல்லி, அவரைச் சன்மார்க்கத்தில் நடத்திவந்தாள். அர்ச். அகுஸ்தீன் சொல்வது, "எல்லாத்திற்கும் மேலாக, என் தகப்பனுருக்கும் மேலாக, கடவுள் ஒருவரே எனக்குப் பெரியவரென்பதாகப் பாவித்து அவர் சொல்லையே நிரம்பக் கொண்டு அதன்படி நடந்து முழு இருதயத்தோடே அவரை நேசிக்கவேண்டுமென்று எனக்குக் கற்பித்தாள்."

தன் புருஷன்மட்டில் மட்டற்ற விநயபக்தியைக்காட்டி அவனுக்குப் பணிவிடை செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பாள். சில சமயங்களில் வேதவிஷயத்தில் அவனோடு வாக்குவாதஞ்செய்யவேண்டியிருந்தபோதிலும், எப்போதும் மதுரகுணத்தோடும் அத்தியந்த தாழ்ச்சியோடும் அவனுக்கு ஊழியம் செய்வாள். அவள் படிப்பில் அவனைவிடத் தேர்ந்தவளாயும், கடத்தையில் அவனைவிட உத்தமியாயு மிருந்தபோதிலும், "குலமகட்கழகு தன் கொழுனைப் பேணுதல்" என்றபடி அவனுக்குப் பாதம் பணிந்து பணிவிடை செய்வதே தனது மேலான இன்ப சந்தோஷமென்று சொல்லுவாள். தன் புருஷனைப் பிரியப்படுத்துவதில் தன் சுக சவுக்கியத்தையும் இஷ்ட சந்தோஷத்தையும் பரித்தியாகஞ் செய்யவேண்டியிருந்தபோதிலும், அதன் பயனுகத் தனது குமாரனின் இருதயத்தில் ஆழ்ந்த தேவ விசுவாசத்தை நிலைநாட்ட தனக்குச் சுதந்தரங் கிடைத்ததே போதுமென்று மகிழ்ச்சியடைந்தாள். இம்மேலான கருத்தை காடித் தன் கால முழுவதையும் ஒரு முறைப் பாடுமின்றி மனோ சந்தோஷத்துடன் செலவழித்து வந்தாளாதலால், அவள் இவ்வுலகில் ஜீவித்துவந்தது, முதலாவது கடவுளுக்காகவும், இரண்டாவது தன் குமாரனுக்காகவுமே யென்னத்தகும்.

இவ்வுலகத்தில் தன் குமாரனை தேவ அறிவில் பயிற்சி செய்வதும், பரலோகத்திலுள்ள தன் கடவுளை தியானிப்பதும், தன் குமாரனையும் தன் கடவுளையும் நேசிப்பதுமே போதுமாயிருந்தது அவளுக்கு. இதுவே அவளுடைய இருதயத்திற்குப் பரிபூரண திருப்தியை யளிப்பதாயிருந்தது. தனது சிறிய காலத்தில் தனக்குண்டாயிருந்த கஷ்ட துன்பங்களிலும் ஆறுதலாயிருந்தவைகள் இவைகளேயாம்.

ஆனால், ஐயோ! ஒரு பக்கம் அவளுக்குச் சந்தோஷமிருந்தபோதிலும், மறு பக்கம் கவலையும் துயரமும் இருந்தன. தன் பாலகனை அவள் தன் அருகிலேயேவைத்திருந்த காலம் வெகு கொஞ்சம்! அகுஸ்தீன் குழந்தைப் பருவம் கடந்ததுதான் தாமதம், உடனே அவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டுமென்று யோசனை செய்தார்கள். உபாத்திமார்கள் அவருக்கு வெளிகே கல்வியை கற்பிப்பதில் எங்கே அவருடைய இருதயத்தையும் ஆத்துமத்தையும் மாசுபடுத்திக் கெடுத்து விடுவார்களோவென்று மோனிக்கம்மாள் பயந்தபடியால், அவர் அத்தனை சிக்கிரம் தன்னைவிட்டுப் பிரிவது அவளுக்குப் பிரியப்படவில்லை. ஆதலால் தான் வசித்த தகாஸ்தே பட்டணத்திலிருந்த உபாத்திமார்கள் வசம் அவரை ஒப்புவித்துத் தன் முகாமையில் அவருக்குக் கல்வி கற்பிக்கும்படி ஏற்பாடு செய்தான்.

எவ்வளவோ தீட்சண்ய புத்தியும் ஆழ்ந்த மனோசக்தியும் கொண்டிருந்த அகுஸ்தீன் தனக்கு உபாத்தியாயர் முதல் பாடம் சொல்லிக் கொடுத்தவுடன் படிப்பின்மட்டில் அத்தியந்த ஆசைகாட்டி யிருப்பாரென்றும், தன் பாடங்களைக் குறையறப் படித்துத் தன் தாயாருக்கு மனோதிருப்தி யளித்திருப்பாரென்றும் ஒருவன் நினைக்கக்கூடும். ஆனால் அப்படியன்று. படிப்பென்ற பேச்சை எடுத்தவுடன் அவரிடம் இனமில்லாத சோம்பேறித்தனமும் மனவெறுப்பும் தோன்றும். அவைகளை அவரிடமிருந்து போக்குவது முழுதும் அசாத்தியமான காரியமாயிருந்தது. வாசிக்கக் கற்றுக்கொள்ளுவதும், எழுதக் கற்றுக்கொள்ளுவதும், ஒன்றும் ஒன்றும் இரண்டு, இரண்டும் இரண்டும் நான்கு, என்று ஓயாமல் சொல்வதும் அவருக்கு அரோசகமாயும் அர்த்தசாரமற்ற காரியமாயுமிருந்தன. இலக்கணம் படிப்பதும் அப்படியே அவருக்கு வருத்தமாயிருந்தது. இலத்தீன் பாஷையையும் பூனிக் பாஷையையும் கற்றுக்கொள்ளுவதைத் தவிர்த்து, மற்றப்படி வேறு எந்தப் படிப்பென்றாலும் அவருக்கு எட்டிக்கசப்பாயிருந்தது. இவ்விரண்டு பாஷைகள்பேரில்மாத்திரம் அவர் அவ்வளவு பற்றுதல் காட்டியதற்குக் காரணமேதெனில்:—லத்தீன் பாஷையை யாதொரு பிரயாசையுமின்றித் தன் சின்னஞ்சிறு வயதில் தனது விளையாட்டுத் தோழர்களுடன் ஆடிப் பாடிக்கொண்டே தனக்குந் தெரியாமல் கற்றுக் கொண்டிருந்தார். பூனிக் பாஷையோவெனில், தன் தாய் பாஷை, நாட்டுப் பாஷை, தன் வீட்டில் பேசும் பாஷை; அதுதான் அவருக்குப் பிரியம். அவருடைய உபாத்திமார்கள் அவரைப் படிக்கவைக்கும்படி பயத்தினாலும் பயத்தினாலும் எவ்வளவோ வழி வகைகள் தேடினார்கள். ஒன்றும் பயனில்லாமல்போயிற்று. அதற்கு மாறாக, அவர்கள் காட்டிய பயத்தினால் அவர் படிப்பென்றால் திகில்கொண்டு வெறுக்கவும், பொய்யும் புளுகும் பேசித் தன் தாய் தந்தையரையும் உபாத்திமார்களையும் ஏமாற்றவும் தலைப்பட்டார்.

அகுஸ்தீன் ஆத்துமத்தில் பாவ தோஷத்தின் பிரதமக் குறிப்புகளை மோனிக்கம்மாள் கண்டு பயத்தால் நடுங்கி, பெருமித குணங்கொண்டிருந்த அவருக்குப் படிப்பில் ஆசையூட்ட அடியும் உதையும் உதவாதென்று அறிந்து, அவரைத் "தேவ ஊழியர்களிடம்" அழைத்துச் சென்றாள். "அவர்கள் தங்கள் சீவிய காலத்தை ஜெப தபங்களிலும், புண்ணிய முயற்சிகளிலும் செலவழிக்கும் சன்மார்க்கர்கள்." படிப்பின் மேன்மையையும் அதைக் கற்றறிவதற்குண்டான காரணங்களையும் காட்டி அதன்மட்டில் அவருக்குள்ள வெறுப்பைப் போக்கும்படியாக, அவரை அவர்களிடம் அழைத்துச் சென்றாள்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றபடி அர்ச். அகுஸ்தீன் சொல்வது, "ஓ உன்னத கடவுளே நீர் எங்கள் கண்ணுக்கு மறைவாயிருந்தபோதிலும், எங்களுடைய ஆபத்துவேளையில் உதவிபுரியக்கூடிய பரம தேவனுயிருக்கிறீரென்று உமது ஊழியர்கள் மூலமாகவே அறிந்துகொண்டேன். என்னுடைய கஷ்டத்திலும் துக்கத்திலும் எனக்கு ஆதரவும் தஞ்சமுமாயிருக்கும்படி உம்மைப்பார்த்து மன்றாட அப்போதே ஆரம்பித்தேன். நான் அப்போது சிறு பிள்ளையாயிருந்தபோதிலும், பள்ளிக்கூடத்தில் உபாத்திமார்கள் என்னை அடிக்காதபடி பாதுகாக்கவேண்டுமென்று எவ்வளவு உருக்கத்தோடு உம்மைப் பார்த்து மன்றாடினேன். ஐயோ! ஒவ்வோர் சமயத்தில்மாத்திரம் என்னை அடியிலிருந்து காப்பாற்றினீரேயன்றி எப்போதும் அல்ல. இதுவும் என் நன்மைக்காகவே. அக்காலத்தில் பிரம்பைக் கண்டால் எனக்கு எப்படிப்பட்ட நடுக்கம்! எத்தகையான பயம்! என் பெற்றோரும் மற்றோரும் அதை ஒரு அற்பமாயெண்ணி நான் படும் பயத்தைக் கண்டு குலுங்க குலுங்க நகைப்பார்கள்."

படிப்பின்மட்டில் வெறுப்புகொள்வது ஒன்றுமாத்திரம் அவர் தப்பன்று. அவர் சுபாவத்தில் கோழைத்தனமுள்ளவராயும் அடக்கமுள்ளவராயுமிருந்தபோதிலும், தான் என்னும் ஆங்காரமும், கீர்த்தி புகழ்ச்சி அடையவேண்டுமென்னும் ஆவலும், ஆட்டத்திலும் இன்பத்திலுமே தன் வாழ்நாட்களைக் கழிக்கவேண்டுமென்னும் ஆசையும், அவரிடம் தோன்றின. அவர் சொல்வது "ஆயிரங் கணக்கான பொய் புளுகுகள் பேசி என் பெற்றோர்களையும் உபாத்திமார்களையும் ஏமாற்றினேன். ஆட்ட பாட்டங்களென்றால் எனக்கிருந்த ஆசையையும், நாடகங்களைப் பார்க்கவும் அக்காடகங்களில் கண்டவைகளை நடித்துக்காட்டவும் எனக்கிருந்த அபரிமிதமான ஆவலையும், என் பெற்றோர் கண்டு மனகொந்து வருந்தினார்கள். என் போசனப் பிரியத்திற்குத் திருப்திசெய்ய, அல்லது என்னோடுகூடி விளையாடி நேசம்பாராட்டி வந்த குழந்தைகளுக்கு அதைக் கொடுக்க, பண்டகசாலையிலிருந்தும், என் பெற்றோர் அசன அறையிலிருந்தும் திண்பண்டங்களைத் திருடினேன். மற்றவர்களை மேற்கொள்ளவேண்டுமென்கிற ஆவல் அவ்வளவு அபரிமிதமாய் எனக்கிருந்தபடியால், ஆட்ட வேளைகளில் என் விளையாட்டுத் தோழர்களுக்கு அநியாயம்செய்து அவர்களை மேற்கொள்ளுவேன். பிறருக்கு மோசஞ் செய்யவேண்டிய கூடுமான வழிவகைகளையெல்லாம் நான் கையாடிவந்தபோதிலும், பிறர் என்னை மோசஞ்செய்வதுமாத்திரம் எனக்குப் பொருந்தாது. என் தோழர்கள் அடாததனமாய் என்னை மேற்கொள்ள முயலுவதைக்கண்டால், உடனே அவர்களைப் பழித்துப் பேசி நிந்திப்பேன். ஆனால் நான் செய்யும் மோசத்தைப் பிறர்கண்டு கேட்டாலோ, என் குற்றத்தை மனப்பூரணமாய் ஒத்துக்கொள்வதற்குப் பதிலாக அடிபட்ட நாகம்போல் அவர்கள்மேல் சீறிப் பாய்வேன்."

ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால், அஞ்ஞானியான தன் தகப்பனுருடைய மூர்க்க வெறிகுணம் இவரிடத்தில் தோன்றத் துவக்கிற்று.

அர்ச். அகுஸ்தீனிடம் இத்தகையான தூர்க்குணங்கள் அமைந்திருந்தபோதிலும், அவரிடம் சில நற்குணங்களும் துலங்கிவந்தன. அவர் சத்தியத்தை நேசித்துவந்தார். மெத்தவும் புத்திசாலி. நேசபாசமுள்ளவர். நன்றியறிதலுள்ளவர். யாராவது அவருக்குக் கொஞ்சம் பட்சம் காட்டினால் "நன்றி மறப்பது நன்றன்று" என்றபடி ஒன்றுக்கிரண்டாய் அவர்களுக்குப் பிரதிபட்சம் காட்டுவார். தாயாரென்றால் உயிர் விடுவார். அவரது பாலப் பருவத்தில் நற்குணங்களும், தூர்க்குணங்களும், நற்சுபாவ உணர்ச்சிகளும், தூர்சுபாவ உணர்ச்சிகளும் அவரது இருதயத்தில் மூளை இளம்பித் தலைகாட்டத் தொடங்கின. எது மற்றொன்றைப் போராடி வென்று நிலைகொள்ளும்? அஞ்ஞானியான தன் தகப்பனின் தூர்சுபாவமோ? அல்லது அத்தூர்சுபாவத்துக்கு விரோதமாய் தன் தாயார் அவருக்குக் கலந்து ஊட்டிய கிறீஸ்துவ நல் அமுதோ? அவருடைய பாலப் பருவத்தில் அவருடைய தாயார் கன்னெறிக்கேற்ற சத்விஷயங்களை அவருடைய ஆத்துமத்தில் ஆழமாய்ப் பதிப்பித்திராவிட்டால், அல்லது ஞானாவட்டத்தில் அவருடைய ஆத்துமத்திற்கு அபாயம்மேலிட்டுப்போவதைக் கண்டுணர்ந்து ஜாக்கிரதையுடன் மேலும் மேலும் அவருக்காக உருக்கத்துடன் ஜெபித்துப் புரிந்திராவிட்டால், மேற்கூறிய இரண்டில் எது கடையாய் ஜெயம்பெற்றிருக்கும்?

OFFICE 7 - JAN 1919

இப்படிப்பட்ட [illegible] அர்ச். மோனிக்கம்மாள் முதல் [illegible] தனது குமாரனை விட்டுப்பிரிய [illegible] வளர்ந்துவருகிறார். தகாஸ்தே [illegible] படியால் ஒரு பாலியனைப் பயிற்றுவிக்கவேண்டிய கல்விச்சாலை அதிலில்லை. மேலும் அகுஸ்தீன் சோம்பேறியாயிருந்தபோதிலும், பின்னுக்குப் பெரியவராவாரென்று பலராலும் எண்ணப்பட்டுவந்தபடியால், அவருடைய பிதாவாகிய பத்ரீஷியூஸ் அவர்மட்டில் பெருமைகொண்டிருந்தான். ஆதலால் தனக்கு ஆஸ்தி பாஸ்தி ஏதோ கொஞ்சம் இருந்தபோதிலும், அவரை வெளியூருக்கு அனுப்புவதினால் மோனிக்கம்மாளுக்குத் துயரமுண்டாகுமென் றறிந்திருந்தபோதிலும், இவைகளைக் கவனியாமல் அவருடைய புத்தி சாமர்த்தியத்திற்குத் தக்க படிப்பை யவருக்குக் கற்பிக்கும்படி நல்ல பள்ளிக்கூடம் இருக்கும் இடத்திற்கு அவரை அனுப்பத் தீர்மானித்தான்.

தகாஸ்தேயுக்குப் பதினெட்டு கமல் தூரத்தில் மதாரா என்னும் நகரொன்றுண்டு. இக்கர் நாகரீகத்தில் கீர்த்திவாய்ந்தது. பிரபல வித்துவான்களால் கடத்தப்பட்டுவந்த கல்லூரிகள் இதில் இருந்தன. இப்பட்டணத்தின் நியாயஸ்தலத்தில், அக்காலத்தில் ரோமர்கள் ஆராதித்துவந்த தேவர்களின் விக்கிரகங்கள் அலங்காரமாய் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இத்த நியாயஸ்தலத்தைச் சுற்றிலும் கீர்த்திபெற்ற பாடசாலைகளிருந்தன. மோனிக்கம்மாள் அகுஸ்தீனை அங்கழைத்துப்போய் மெத்தவும் உருக்கத்துடன் அவருக்குப் புத்தி போதனைகளைச் சொல்லி, தங்கள் நேசமக்களைவிட்டுப் பிரியவேண்டிய சமயத்தில் சகல தாய்மார்களுக்கும் உண்டாவதுபோல், விசனமும் பொங்கிக் கண்ணீர் விட்டழுது, கடைசியாய் அவரைப் பள்ளிக்கூடத்தில் விட்டாள். அப்போது அவளுக்கிருந்த ஒரே ஆறுதலென்னவென்றால், தான் வெகு தூரத்திலில்லை; ஆதலால் அவருக்கு ஏதாவது ஒரு தீங்கு உண்டாயிற்றென்று தனக்கு முதல் சமாசாரம் கிட்டினதும் தனிதமாய் அவரிடம் போகக்கூடுமென்பதே.

பாவமென்பது குழக்தைப் பருவத்தில் அவரை அணுகவொட்டாமல் அத்தனை எச்சரிக்கையுடன் தான் பாதுகாத்துவந்தும், அப்பாவத்தின் தூர்க்குறிகள் அவரிடம் தோன்றியதைக்கண்டு மனம் வருந்தினாள். ஆனால் அவர் தன்னைவிட்டுப் பிரிந்திருந்த சொற்ப காலத்தில் அப்பாவம் அவ்வளவாய் மிகுந்து அவரது குணத்தைக் கெடுத்துப்போடுமென்று அவள் சற்றேனும் நினைக்கவில்லை.

DUTIES OF A WIFE.
செல்வியர் நியதி.
(மனைவியின் கடமைகள்.)

(*All Rights Reserved.*)

(முன் தொடர்ச்சி.)

5 நேயன் வருக – நேரமானால்
காயகன் மீது – நம்பிக்கையில்லாச்
சாயை மிகவும் – சந்தேகங்கொண்டு
நோயுற வினுக்கள் – தூறுங் கேட்பாள்
மாய்ஞ் செய்வாள் – மனஞ் சோதிப்பாள்
சேயம்போன்று – சினத்து விழுவாள்
தீய பதூறு – செப்புவாள் வீணுய்
வாயினல் வசைகள் – வதறுவாள் துவ்டை.

86 வாயினல் பெண்கள் – வரிசை யிழப்பது
மாய வுலகில் – வழக்கமெனலால்
தீயினும் கொடுஞ்சொல் – திகைத்திடப்
[பேசல்
சாயினும் வேண்டாம் – சமுசாரிகட்கே.

87 மருத்து தின்றும் – மக்களைப் பெறுதல்
திருத்து மில்லச் – சிறத்த வழகே.

88 மைந்தர் தம்மை – மடியினில் வைத்து
எந்தை பயமதை – இன்பா யூட்கெ.

89 நற்குண நற்செயல் – நாடிடவென்று
சிற்கதை சொல்லித் – தேடி யமைக்க.

90 நற்குணமுள்ள – தோழரை விலக்க
மக்கள் தமக்கு – மதி புகட்டிடெ.

91 மக்களால் நற்பயன் – வதிய விரும்பின்
நிக்கென நல்வழி – செலுத்தல்வேண்டும்.

92 பெற்றோர் ஒழுக்கம் – பிழையறப் படித்து
நற்றவ மைந்தரை – நடத்தல்வேண்டும்,

93 சொல்லுரைக் கடங்காச் – சுந்தரப் புதல்வர்
தொல்லுல கிருத்தல் – தொந்தரையாமே.

94 தலைவன் தலைவி – தாமொருமித்து
நல்வழி மக்களை – நடத்தல்வேண்டும்.

95 மக்களைத் தங்கள் – மனம்போல் விடாமல்
தக்குதல்வேண்டும் – தரும் பெரியோரே
மிக்கவும் மைந்தர் – விரும்பிடும் வழியே
புக்கிட விடுவோர் – புதல்வரை யிழப்பார்.

96 உற்றதோர்'கர்வம் – உறுதிவை ராக்கியம்
அற்று வருத்தனை – அன்னத்தைச் சுருக்க.

97 தெய்வ பயமது – நிறைதுமில்லா
செய்வகை பிழையுறுந் – தீய பெற்றோர்
உய்வகை மக்கள் – உணர்த்து வித்தை
கைவரப் பெரிய – கசடராவார்.

98 மக்கள் செல்நெறி – வதிய விரும்பின்
அக்கம் தம்மேல் – அமைத்துப் பெற்றோர்
தக்க நற்குணம் – தரித்தல்வேண்டும்.

99 மக்கள் மனமது – வளமுறு மெழுகுப்
புக்க வுருவமை – புகை படமும்போல்
காண்பது பதியும் – கண்களும்போலே
எண்பெறும் பொருளா – இருப்பது நிமித்தம்
மாண்புறு கல்ல – மாதிரி தாமே.

100 புதல்வர் கையில் – பொருளது சிக்கா
விதமே காத்தல் – வேண்டும் பெரியோர்.

101 பின்னைகள் நன்னெறி – பிசகியபோது
தன்னை தந்தை – தகுந்த புத்தி
வென்னென வோதி – வெகுமதி தண்டனை
கொன் றுபகரணம் – கொண்டு கடத்த.

முற்றிற்று.

அரிச். அருளப்பருடைய கடைசிப் பிரகடனம்.—அப்போஸ்தலரான அரிச். அருளப்பருக்கு 99 பிராயம் கடக்கும்பொழுது, அவர் கடக்கச் சக்தியற்றவராயிருக்க பிரதி நாட் காலையிலும் கோவிலுக்குத் தூக்கிக்கொண்டுபோகப்படுவார். வெகுநேரம் பிரசங்கஞ் செய்யக்கூடாதவராய் கொஞ்ச நேரத்துக்குள் அதை முடிப்பார். எப் பொழுதும் ஒருவர் ஒருவரை நேசிக்கும்படி புத்தி சொல்வார். அடிக்கடி பிறர் ஸ்நேகத்தைப்பற்றிப் பேசியதைக் கேட்டவர்கள் சலிப்படைந்து, "நீர் எப்பொழுதும் பிறர் ஸ்நேகத்தைப்பற்றி ஏன் பிரசங்கிக்கிறீர்?" என்று கேட்க: "பிள்ளைகளே! நான் எப்பொழுதும் அந்தப் பிரசங்கத்தை இரட்டித்து இரட்டித்துச் சொல்வேன். ஏனெனில், நீங்கள் ஒருவரொருவரை ஸ்நேகிப்பீர்களேயானில் சர்வேசுரனுடைய கற்பனைகளையெல்லாம் நிறைவேற்றுவீர்களென்று அறிவீர்களாக" என்றார்.

JEYACEELI'S TREASURE.
ஜெயசீலியின் பொக்கிஷம்.

(முன் தொடர்ச்சி.)

அதன்பிறகு சூசையும் மங்களமரியும் நடுப்பீடத்தின் திராதியருகே, மூழ்தாளிட சங்கைதங்கிய குருக்களால் திருவிவாகச் சடங்குகள் நிறைவேறப்பெற்று, இனுவரர் ஆசீர்வதிக்கப்படவே, கோவில் மணிகள் மறுமுறையும் கலகலவென்று கோஷிக்க, பாண்டி வாத்தியம் பண்புடன் முழங்க, தம்பதிகள் இருவரும் எழுந்திருந்து தத்தம் ஸ்தானங்களில் அமர்ந்தார்கள். உடனே இரண்டாவது பெரிய பாட்டுப்பூசை தொடங்கியது. இப் பூஜையில் அடுத்தடுத்து தம்பதிகள் பீடத்தினடி வாரத்தில் அழைப்பிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப் பெற்றார்கள். இவ்வாறு மகா ஆரவாரத்தோடு திவ்யபூஜை முடிவுபெறவே, அக்காலே கோவிலில் விஜயஞ் செய்திருந்த புருஷ பூவையர் அனைவருக்கும், பூமாலையும், தாம்பூலப் பட்டியும், மிட்டாய் பொட்டலமும் பரிமாறப்பட்டன. இது எல்லோருக்கும் வெகு திருப்திகரமாகவே இருந்தது. துரைசாமி ஐயரும் அவர் மனைவியும் ஆனந்தவாரியில் அமிழ்ந்தினர். ஜெயசீலி அடக்க முடியாத அக்களிப்பையடைந்தனள்.

சற்று நேரம் சென்றபின்னர், ஞானஸ்நான தஸ்திரத்திலும் கலியாண தஸ்திரத்திலும் ஞானஸ்நானம், மெய்விவாகம் பெற்றவர்கள் பெயர் முதலிய விவரங்களை எழுதிவைத்து, சாட்சிகளுடன் கையொப்பமிட்டபின் பெரும் பரிகள் பூட்டிய ரதங்களி லூர்ந்துசென்று, இங்காரிக்கப்பட்டிருந்த அரண்மனையில் ஆடம்பரமாய்வந்து சேர்ந்தனர். பிறகு அவ்வு விஜயஞ் செய்திருந்த பந்துமித்திராதிகள் தங்களுக்கு சந்தனம், பூ, பன்னீர், தாம்பூலாதிகள் வழங்கி, பண்பெலாதிகளுடன் அறுசுவை யுண்ணமளித்து உண்டி உபசரித்து விருந்துசெய்தவர்களுக்கு வந்தனஞ்செலுத்தி, அவரவர்களும் தத்தம் இல்லங்களுக் கேகினார்கள். இவ்வாறு கலியாண சடங்குகள் யாவும் சம்பிரமமாய் யாதொரு குறைவுமின்றி, வெகு சிறப்போடும் ஆடம்பரத்தோடும் யாவருக்கும் திருப்திகரமாக முடிவுபெற்றபின் ஜெயசீலி துரைசாமி ஐயரையும், சுந்தரம்மாளையும், சூசையையும், மங்களமரியையும் அழைத்து ஆசனத்திலிருத்தி சொல்லுகிறாள். "ஓ! ஜீவகாருண்ய மிகுந்த உளத்தாராகிய எனது ஞானத்தாய் தந்தையரும், தற்போது நிகழ்ந்தேறிய விவாகத்தால், மாமன் மாமியருமாகிய உங்களுக்கு அடியாள் எனது ஆழ்ந்த நன்றி செலுத்தத்தக்க சமயம் கிட்டியதனால், இதோ உங்கள் சன்னிதானத்தில் யான் மூழ்தாளூன்றி அன்பும் நன்றி யுணர்வும் நிறைந்த இருதயத்தோடு இருகரம் கூப்பி, முதலாவது சர்வ காரண கர்த்தராகிய சர்வேசுரனுக்கும், இரண்டாவது தங்களுக்கும், வார்த்தைகளால் காண்பிக்கக்கூடிய என் உண்மையான நன்றி செலுத்துகிறேன். அன்றியும், தங்களிடம் நான் பெற்றுள்ள பேருபகாரத்தின் ஒரு சிறு பாகத்துக்கும் கைம்மாறுகாத சுவற்பத் தொகையாகிய இந்த 5,000 ரூபாய்களை கொடுக்கிறேன். பெரிய மனதுடன் அதைப் பெற்றுக்கொள்ளத் தயைசெய்வீர்களெனத் தங்கள் மேலான கனத்தை மன்றாடுகிறேன். இதனைக்கொண்டு எனது தங்கையும், தற்போது மைத்துனியுமாகிய, உங்கள் மகள் மங்களமரிக்கு ஒரு ஸ்ரீதனமாக ஏதாவது தக்க பொருள்களை வாங்கிக் கொடுத்தும், மீதி தொகையை ரொக்கமாகவேனும், நாங்கள் அப் பெண்ணுக்கோர் சீர் செய்யும்படி பிரார்த்திக்கின்றேன்" என்று விநயமாய்க் கூறினாள்.

அவர்கள் அதை மிகவும் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டதைக் குறிப்பிக்க, துரைசாமி ஐயர், தன் பெண்சாதியின் முகத்தை நோக்கி எழுந்து நின்று பின்வருமாறு சொல்வாராயினர்:—"பெறுதற்கரிய பெருந் திரவியமாக எங்களுக்கு சர்வேசுரனுல் அற்புதமாயளிக்கப்பட்ட அரிய புத்திரியே வாழ்க, வாழ்க, நீடூழி வாழ்க. எக்தையினுசீர் சந்ததந் தங்கி, பரமானந்த பாக்கியத்தைத் தாணியின்மீதே சுவைக்க வருள் பெருக. உன்னை யாங்கள் ஒரு சிசுவாகக் கண்டெடுத்தபோது யாங்கள் முழு சந்தோஷத்தைப் பெற்றோமல்ல. கவலையும் கலக்கமும் அதனைக் குறைவுபடுத்தின. உன்மீது யாங்கள் எவ்வளவோ அன்பும் ஆர்வமும் பூண்டு சிரமமும் கவலையுங்கொண்டு உன்னை எங்கள் சொந்தப் பிள்ளையினும் வேறுபாய்ப் பார்த்தோமல்லேம், என்பதே நன்கறிவாய். ஐயாண்டு கழிந்து உன்னை மடத்தில் விடும்பொழுது யாமனுபவித்த துக்கம்

செப்பும் தரமன்று. மறுபடியும், இங்கு உன்னைக் காணப்பெற்று உன் வரலாற்றையுங் கேட்டு எவ்வளவோ பரமானந்தத்தில் மூழ்கி, காம் வளர்த்தது பிராமணப் பிள்ளையேயெனக்கண்டு களிப்பெய்தினேம். நீ இப்போது இங்கு வழங்கிய பேருதவியால் அதிலும் ரெட்டிப்பாக மகிழ்வுற்றேம். ஆ! எங்கள் கண்மணியே! உன் அபீஷ்டப்படியே இதோ உனது ஆஸ்தியை என் மகள் மங்களமரிக்குக் கொடுக்கிறேன். இதோ, மங்களமரி, இந்த 5,000 ரூபாயைக் கைப்பற்றிக் கொண்டு, இதனில் 1,000 ரூபாய்க்குச் சீதனப் பொருள்கள் வாங்கித் தரும்படி, உனது நாயகனிடம் 1,000 ரூபாய் கொடுத்துவிட்டு மீதி 3,000-த்தைக்கொண்டு ஒரு வீடோ, நிலமோ, எதாவதொன்று வாங்கி வைத்துக்கொண்டு, சுகஜீவியாய் பல்லார்க்கும் கனந்தங்கிய லாயராகிய உன் கணவனுக்குப் பணிந்து உன் பேருக்குத் தகுந்தபடி தம்பதிகளிருவரும், மங்களமாய் வாழ்க்கடவீர்" என்று சொல்லிப் பணத்தை மங்களத்தினிடம் தந்தனர். மங்களமரியும் அதை அன்போடு வாங்கிக்கொண்டு, "கூறியவாறே செய்வேன்" என வாக்களித்தனள். அன்று பகல் கலியாண விருந்து தங்களுக்குள்ளே நிறைவேறியதும், சற்று நேரம் வாச்சியக் கருவிகளைக் கொண்டு தோபியாசும், துரைசாமி ஐயரும் வாசித்து, அங்குள்ளோர் அனைவரையும் மகிழ்வித்தார்கள். அலங்காரமரியும் இடையில் தனது இனிமையான குரலமைந்த பாட்டினால் எல்லோரையும் உற்சாகப்படுத்தினள். இக்கால க்ஷேபமெல்லாம் முடிய மணி காலாயிற்று. பிறகு சிற்றுண்டியருந்தித் தேத்தண்ணீர் பருகி, உடுத்துக்கொண்டு, வண்டியேறி எல்லோரும் மடத்திற்குப்போனார்கள். அங்கு ஜெயசீலியைப் பற்றிய விவரங்கள் யாவும் விரித்துரைக்கக் கேட்டு, அக்கன்னியர்களெல்லோரும் ஆச்சரிய மூற்று "ஜெயசீலி, ஆஸ்பத்திரியிலிருந்து எங்கே போய்விட்டாய்?" எனக் கேட்கவும், ஜெயசீலி சொல்லலுற்றனள் :—

"எனக்கு வியாதி பலத்ததுதண்டு, நீங்களும் ஒரு மாதமாய் வராமல் இருந்துவிட்டீர்கள். பிறகு அடுத்த மாதத்தில் படிப்படியாய் சுகம் வந்தது. கடையெய்ய பூரண சௌக்கியமாகவே, பெரிய டாக்டரும் வீட்டுக்குப்போக எனக்கு விடைகொடுத்தார். இதனிடையில் என்னை இதுவரையும் கட்டிக் காத்து என்னை யீன்ற அன்னையிலும் ஆயிரமடங் கதிகமாக, எனக்கு வேளாவேளைக்கு ஆகாரமும், மருந்தும், பானமும் உதவி, எக்நேரமும் என் பக்கத்திலிருந்து எனக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, என்னை ஆற்றித் தேற்றி, சுகந்தந்த எனது உபமாதாவின் தொழிலைக்கண்டு வியந்து, அது கடவுளுக்கு மிகவும் பிரியமானது என உணர்ந்து, அத்தொழிலையே யான் பின்பற்ற அந்த டாக்டரை மன்றாட, அப்படியே அவரும் எழும்பூர் மாதராஸ்பத்திரியில் தொழில் பயிலவிடுத்தனர். அங்கே அத்தொழிலில் தேறி திரும்ப அடுத்த வருஷம் இங்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில் 15-ரூபாய்க்கு வேலையில் அமர்ந்தேன். பிறகு சற்று காலம் கழிந்தபின் எனது தம்பியாகிய சூசை ஒருநாள் தலையில் கனத்த காயம்பட்டு வழியில் கிடக்கக்கண்டு, யாரோ ஒரு ஏழையென்றெண்ணி அவனைக் கொண்டுவந்து ஆஸ்பத்திரியில் வைத்துப்பார்த்து சுகப்படுத்தினேன். இதன்மூலமாய் நான் இவர்கள் வீட்டுக்குப்போகவே, நான் இவர்கள் மகள்தான் என அறியலானேன். இப்போதுதான் நான் குலத்தில் பிராமணத்தியெனத் தெரியலானேன். ஆதலால், மூன்று தங்களுக்கிருந்த சந்தேகம் இப்போது நிவர்த்தியாய் விட்டபடியினால் என்னை தேவ ஊழியத்திற் சேர்த்துக்கொள்ள தடையிராதென்று நினைத்து அதற்காக மறுபடியும் உங்கள் மடத்திற் சேரலாமென்று தீர்மானித்தே இங்கு வந்தேன். ஆனால், நான் இனி ஆஸ்பத்திரிக்குப்போக கேரிட்டால், என்னைவத்து எட்டிப்பாராதேயுங்கள்" என்று சொல்லி முடிக்குமுன், அக்கன்னியாஸ்திரி "கேளுங்களம்மா, வராமல் என்ன, போகாமல் என்ன? அடிக்கடி 5 கல் தூரம் போவதென்றால் அதிக சிரமமும் செலவுமாவதுடன், மடத்து ஒழுங்குகளை நிறைவேற்றுவதற்கும் கூடாமையாய்ப் போய்விடுகிறது. உமக்கிருந்த வியாதி சிக்கிரம் குணமாகுமென்று தோன்றுதபடியால் மாதமொருமுறை போய்ப்பார்த்தால் போதும். இதற்குள் அதிக ஆபத்தாயிருந்தால் ஆஸ்பத்திரி அதிகாரிகள் உடனே ஆள் அனுப்புவார்களென்றும், காரும் சர்வேசுரன் அவளுக்கு சிக்கிரம் சுகத்தைக் கட்டளையிடும்படி காலை மாலை தவறாமல் வேண்டிக்கொள்வோம் என்றும் பெரிய தாயார் சொன்னார்கள். அப்படியே சுமார் ஒருமாதம் பொறுத்து உம்மை வந்து தேடினபோது உம்மைக் காணோம். பெரிய டாக்டருக்கு எழுதிக் கேட்டோம். அவர் 'எனக்குத் தெரியாது, எனக்கு முன்னிருந்தவரே அறிவார்.

அவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டார். அதேதா! அவர் சேமக்குப் போய்விட்டாரெனத் தெரிந்து எங்களாலேம். நாங்களோ பெண்பிள்ளைகள் என்ன செய்வோம்" என்றார்கள். இதற்குள் அங்கு பக்கத்திலிருந்தவர்கள் பற்பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்ததால், இம்மட்டிலேயே இதைவிட்டுவிட்டார்கள். பிறகு மணி 6½-ஆய்விடவும், திரிகாலே ஜெபத்திற்கு மணி யடித்தது. ஜெபமுடிந்தெழுந்து, இனி இங்கே தங்கப்படாது, நீங்கள் போகலாம் என்று சொல்லி, வாசற் கதவை யடைத்துவிட்டார்கள். ஜெயசீலி தனக்கு ஆஸ்தியாக 5,000 ரூபாய் மடத்து முதலாளி அம்மாள் கையில் கொடுத்துவிடவே, அவளோமாத்திரம் உள்ளே நிறுத்திக்கொண்டார்கள். அவள் தவிர மற்றையோர் தங்கள் வீட்டிற்குவந்து சேர்ந்ததும், துரைசாமி ஐயரும், சுந்தரம்மாளும் தங்கள் நிருகத்திற்குப் புறப்பட்டுப்போயினர்கள். மணமகனும் மணமகளும், மலரும் மணமும்போலும், மணியும் ஒளியும் போலும், சுகமும் சுதையும்போலும், உள்ளன்புடன் ஒருவரையொருவர் நேசித்து, இல்லறம் வழுவாவொழுகி கல்லற நாயகங்களாய் நானிலத்தில் நீடூழி வாழ்ந்துவந்தனர்.

துறவறத்தைத் தொடர்ந்த ஜெயசீலி மாதரசியோ, துறவற ஞானிகளுக்கு ஓர் நிகோயகமெனத் தக்கவிதமாய், மடத்தின் ஒழுங்குகளை அதி நுணுநுணுக்கமாய் அநுசரித்து, அன்பு, பொறை, சாந்தம், தயை, தானம், அடக்கம், ஒழுக்கம், ஜெபம், தவம், தியானம், ஒறுத்தல், உபவாசம் முதலிய சகலவித புண்யங்களுக்கு மாதிரிகையாய், புத்தி விமரிசையுடன் நடந்துவந்ததபடியால், அதி சீக்கிரத்தில் கன்னியாஸ்திரிபட்டம் அளிக்கப்பெற்று, அதிக ஞானாகாமுன்னே அம்மடத்துக்கு முதலாளித் தாயாரம்மாளாகத் தெரிந்துகொள்ளப்பட்டாள். இவள் அதிகாரத்திற்குட்பட்ட அம்மடத்திலும் அதன் கிளை மடங்களிலுமுள்ள கன்னியர்கள், இவளுடைய மூன்மாதிரிகையைப் பின்பற்றி நடக்க சம்மனசுக்களொப்ப ஒழுகி, மற்ற கன்னியாஸ்திரீகளுக்கு மாதிரிகையானார்கள். கடையாய் ஜெயசீலி யென்னும் தன் பேருக்கொத்தவல்லணம் தான்கொண்ட துறவறக்கருத்தில் ஜெயங்கொண்டவளாய் ஞான சீவியத்தில் இம்மையில் பெரும்புகழும் பெற்ற பெருவாழ்வு வாழ்ந்தாளென்றால், மறுமையில் அவள் அடையும்பேற்றின் பெருமையை அறையவும் வேண்டுமோ?

ஜெயசீலி ஜெயசீலியாயினள்.

முற்றிற்று.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

சென்னைக் கத்தோலிக்கு இந்தியர் பரோபகாரச் சபை.

ஐயா,

தங்களுடைய டிசம்பர் மாதச் சஞ்சிகையில், 283-ம் பக்கத்தில் "ஓர் கிறீஸ்துவன்" என்னும் இறகு நாமம்பூண்ட ஒருவர் சென்னைக் கத்தோலிக்கு இந்திய பரோபகாரச் சபையார்களுக்கு ரூபாய் (20,000) இருபதினாயிரம் வேண்டியதாக இருக்கிறதென்றும், அத்தொகையை யடைவதற்கு இருபது வருடமாகுமென்றும், போலி நீர்க்கதரிசன முரைத்திருக்கிறதுடன், கூட்டுறவு கடன் சங்கம் ஸ்தாபித்து, அதன் வாயிலாகவருஞ் சொற்ப வட்டியைக்கொண்டு திரிதத்தில் ரூபாய் (20.000) இருபதினாயிரம். சேர்த்துவிடலாகுமென்னும் பொருளே யமைத்துத் தீட்டியுள்ளார். மீண்டுங் காலதாமதஞ் செய்தால் சங்கத்தின் அங்கத்தார்கள் அலுத்துப் போவதுடன் சங்கம் கூடிணைதிசையடையுமென்றும், எண்ணூறு துணிக்கிருக்கின்றனர். "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" யென்பதை யிவர் மறந்தார்போலும்.

இவர் சற்றேனுங் கருதாமல் தனக்குத் தோன்றியவாறு வரைந்திருப்பது தகாததும், நியாய விரோதமானதுமாம்.

இவர் உண்மையிலே சென்னை கத்தோலிக்கு இந்திய பரோபகாரச் சபையைச் சேர்ந்தவரல்லர் எனத் தோன்றுகிறது. ஆனபடியால் தமக்குக் கூட்டுறவில்லாத சபையைப்பற்றி யிவர் பேசுவானேன்? ஒருகால் பரோபகாரச் சிந்தை யிவருக்கிருக்குமாயின், நமது சபையிற் சேரத்தருந்தவராயிருந்தால், சேர்ந்து அதன்பின்னர் தம்முடைய அபிப்பிராயங்களைச் சபையார்களுடைய கூட்டங்களி லெடுத்துரைக்கலாம். அன்றேல், எற்கெனவே சபையார்களில் ஒருவராகவிருந்தால் தம்முடைய அபிப்பிராயங்களைச்

சபையார்களுடைய கூட்டங்களில் எடுத்துரைக்க வேண்டியதே யுசிதம். அங்ஙனமின்றி சஞ்சிகையின்வாயிலாக, தம்முடைய காமத்தை மறைத்து இறகுநாமம் பூண்டு எழுதுவாரேயாகில் இவர் தம்மைத்தாமே மறைத்துச் சபையார்களுக்கு முன்னர் அஞ்சிநின்றவர்போலன்றே? மீண்டும் கத்தோலிக்கு இந்திய பரோபகாரச் சபையை ஸ்தாபித்து நடத்திவருகின்ற நிர்வாகச் சபையார்களுக்குத் தம்முடைய சபையின் அபிவிருத்திக் கேதுவானவைகளையெல்லாம் எக்காலத்தில், எவ்வழியிற் செய்யவேண்டுமென்பதை இவர் சொல்லாமலே தெரிந்திருக்கின்றனவென்பதை யிவர் உணராதென்னே? ஒருகால் இவர் அண்ணைரைக்காட்டிலும் விவேகி என்பதைக் காண்பிக்க துணிந்தனர்போலும்.

கூட்டிறவுகடன் சங்கம் ஸ்தாபித்து (ஈர் இரு) காலு வருடத்தில் (20,000) இருபதினாயிரம் ரூபாய் சம்பாதிக்கலாமென்று எழுதத் துணிந்த இவர் எண்ணித் துணிந்தாரோ, இல்லையோ? காலு வருடத்தில் (20,000) இருபதினாயிரம் ரூபாய் வருமானமென்றால், ஒரு வருடத்தில் (5,000) ஐயாயிரம் ரூபாய், அதாவது மாதமொன்றுக்கு ரூபாய் 416—10—8 வருமானமாகும். ரூபாய் ஒன்றுக்கு ஒருபைசா இரண்டுபை வீழுக்காடு வட்டிவாங்கி மாதமொன்றுக்கு ரூபாய் 416—10—8 சம்பாதிக்க எண்ணின், மூலதானமாக எத்தனை ஆயிரம் ரூபாய் வேண்டியதாயிருக்குமென்று இவர் அறிந்தாரா? அப்பெருந்தொகையை யெத்தனை நாட்களுக்குள்ளாகச் சேர்க்கக்கூடுமென்பதை யுணர்ந்தாரா?

"சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாஞ்
சொல்லவண்ணஞ் செயல்."—

என்னும் பாடத்தை யிவருக்கு ஞாபகமூட்டுகின்றனம். இனி யிவர் தம்மைச் சாராத விடயத்தில் தலையிட்டுக்கொள்ளாம லிருக்கச்செய்யும்படியாகச் சங்கைக்குரிய பத்திராதிபரவர்களை மிக வினயத்துடன் கேட்டுக்கொண்டனன்.

த. தாமஸ் பிள்ளை,
கத்தோலிக்கு இந்திய பரோபகார
9—12—18. சபையின் பிரதம காரியதரிசி.

[இக்கடிதக்காரர், தாம் குறிப்பிடுகிற சென்ற மாதத்திய கடிதக்காரர் தம்மைச் சாராத விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளாமலிருக்கச் செய்யும்படி நம்மைக் கேட்டுக்கொள்ளுகிறார். அப்படிச் செய்வது பத்திராதிபர்களுக்கு ஒழுங்கல்லவென்பது எமது அபிப்பிராயம். ஓர் பொது நன்மையை முன்னிட்டு கடிதக்காரர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுவார்களானால் அவற்றை பத்திரிகாசிரியர்கள் ஆட்சேபனை செய்வதற்கில்லை. அவரவர்கள் அபிப்பிராயங்களுக்கு அவரவர்களே உத்தரவாதிகள். மேலும், நமது பரோபகார சபை ஓர் பொதுநல ஸ்தாபனம். பல்லோருக்கும் உரித்தானது. அதன் விஷயமாய் அதன் விருத்தியைக் கோருபவர்கள் நன்னோக்கத்தோடு சொல்லுபவைகளில் கொள்ளற்பாலனவற்றைக் கொண்டு தள்ளற்பாலனவற்றைத் தள்ளுதல் உசிதம். ப—ர்.]

புத்தந்துரையும் அதன் ஜனத் தலைமையும்.

ஐயா,

புத்தந்துரையெனும் பரதநாட்டினில் எங்குலத்தவருள் ஒற்றுமையின்றிப் பலவாறாய்ப் பிரிந்து, பகுதிக் கொருதலைமை வகித்து, ஒன்று இரண்டாகி, இரண்டும் பலவாகி, அதிலும் சில பிரிவாகி, பிரிவும் சில பிளவாகி நீலகுலேந்திருக்கின்றனர்.

இங்ஙனமிருப்பின் நம் ஜனசமூகம் முன்னேறுவதெப்படி? உலக முழுமையிலுமுள்ள ஜனங்கள் தத்தம் சுதந்தரத்துக்காகப் போரார்டுமிந்நாளில், எம்மவர் தமக்குள்ளேயே கலகத்தையுண்டுபண்ணிக்கொண்டிருப்பது எம் ஜனத் தலைவர்களின் மகத்துவத்துக்குப் பொருத்தமல்லவென்பதைச் சொல்லவேண்டுவதில்லை. இத்தகைய ஒற்றுமையின்மையின் காரணத்தை ஆராயப் புகுங்கால், நமது நிவ்ய இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தெரிந்துகொண்ட அப்போஸ்தலர் கூட்டத்திலும் யூதாஸ்காரியோத்தெனுமொருவன் சுயலாபத்தை விரும்பி, தேவதுரோகியானதுபோல், நம்முள்ளு மனேகரிருக்கின்றனரென்பதை நம்மால் எடுத்துரையாதிருக்கக்கூடவில்லை. நம்மில் சில சுயலாபப்பிரியரும், கக்ஷிப்பிரியரும், கலகப்பிரியருமில்லாமற் போகவில்லை. நம்மனோர்கள் துர்ப்போதனைகளுக்குச் செவிகொடுக்காமலும், மேன்மேலும் கக்ஷியை வளர்க்காமலும் ஒற்றுமையை நாடி நம் ஜனசமூகம் முன்னேற்றங்கொள்ளவேண்டுமென்பதே எனது அபிலாஷை.

நம்மூதாதைகள் பக்தியிற் சிறந்தவர்களாயும், தேசாபிமானிகளாயும், குலாபிமானிகளாயும், சமூக பிரயோஜனமளிக்கும் பரோபகாரிகளாயும் ஒருமித்து வாழ்ந்ததாலல்லோ, சீருஞ் சிறப்பும், பேரும் கீர்த்தியும் அவர்களுள் வியாபித்திருந்தது. ஆனால் தற்சமயம் நமது துர்அதிர்ஷ்டத்தால், ஜாதியாசாரம், ஜாதிக் கட்டுப்பாடு, ஜாதிப் பொதுநிதியெல்லாம் தொலைந்து நம் ஜனசமூகமே அடியோடு சிதறுண்டு கிடக்கின்றது. நம் ஜனசமூகம் கூடிணதிசையடைந்திருக்கு மிந்நாளி லித்தகைய கக்ஷியை வளர்ப்பது கண்ணியமோ, உசிதமோ?

ஆகையால், ஒற்றுமையின்மையை யழித்து விடுமென்பதை நங்குலத்தார் நன்குணர்ந்து கக்ஷியை மேன்மேலும் வளர்க்காது, அதையிவ் வளவிலேயே விட்டுத் தொலைத்து, உண்மையைத் தெளிந்து, நன்மையைக் கடைப்பிடித்து, நமது விருத்தியை விரும்பி, முன்னேற்றத்தை நாடி நடக்கவேண்டுமென்பதே எனது கோரிக்கை. இங்ஙனமில்லையானால் நம் பரதகுலத்தவரெல்லோரும் ஒரே மாதா வயிற்றிற் பிறந்த மக்கள்போ லுள்ளன்புபொங்கி, நம் மூதாதைகளைப்போல் குலாபிமானிகளாயிருப்பதெங்ஙனம்? பதிதாவுக்குள்ளிருந்து பகையை மூட்டும் பரமசண்டாளர்களைக் கண்டித்து சமாதானத்தை நாடல்வேண்டும். பகையை மூட்டுவது பசாசின் வேலை; அதை நிர்மூலப்படுத்துவது உத்தமர் தொழிலாகையால் நாமெல்லோரும் ஒரு மனத்தராய் சமாதானத்தை நாடினால், நம் ஜனசமூகமென்னும் விருக்ஷமானது எல்லோர் மனமும் மகிழும்படி, குளிர்ந்த இதழ்களைப் பரப்பி, சோபிதமாயெழும்பி, இலைத்துப் பூத்து, நற்கனிகொடுக்குமென்பதற் கையமில்லை. அப்படியே ஆக அம்பரன் அருள் அளிப்பாராக.

எம். கபிரியேல் ரோட்றிகோ.

செங்கற்பட்டில் போர்டிங்கு பாடசாலை.

செங்கற்பட்டு ஜில்லாவில் தெலுங்கு கிறீஸ்துவ கிராமங்கள் சுமார் 25-வரையிலுமிருக்கின்றன. இவைகளில் சில கிராமங்கள் செங்கற்பட்டுக்கு வடக்கேயும், சில மேற்கேயும், சில தெற்கேயும் இருக்கின்றன. ஷே கிராமங்களுக்கு ஏறக்குறைய மத்தியில்தான் ஷை செங்கற்பட்டு என்னும் ஊரும் இருக்கிறது. செங்கற்பட்டுக்கு வடக்கேயுள்ளகிறீஸ்துவ கிராமங்கள் சென்னை அதிமேற்றிராசனத்தையும், செங்கற்பட்டு ஜில்லாவின் மத்தியிலிருக்கிற கிராமங்கள் மைலாப்பூர் மேற்றிராசனத்தையும், செங்கற்பட்டுக்குத் தெற்கேயும் மேற்கேயும் உள்ள கிறீஸ்துவகிராமங்கள் புதுவை அதிமேற்றிராசனத்தையும் சேர்ந்தவைகள். இந்த மூன்று மேற்றிராசனஞான ஆளுகைக்குட்பட்ட ஷை 25 தெலுங்கு கிறீஸ்துவ கிராமங்களுக்கும் மத்தியில் இருக்கும் செங்கற்பட்டிலேயே தெலுங்கு கிறீஸ்துவ பிள்ளைகளுக்கு ஓர் போர்டிங்கு பாடசாலை ஏற்படுத்திலுல் சௌக்கியமாய் இருக்குமென்று சங்கைக்குரிய ஷை செங்கற்பட்டு பங்கு சுவாமிகள் தெரிந்துகொண்டு, ஷை செங்கற்பட்டிலேயே ஓர் போர்டிங்கு பாடசாலையை ஏற்படுத்தியுள்ளார். மேலும் தெலுங்கு கிறீஸ்துவ கிராமங்களிலிருந்து செங்கற்பட்டுக்குவர சுலபமான ரயில்வேவசதி இருக்கிறது. செங்கற்பட்டில் ஓர் உயர்ந்த வகுப்பு வைத்தியசாலையும் இருக்கிறது. ஷை செங்கற்பட்டுக்கு சுற்றுப்பாகங்களிலுள்ள கிறீஸ்துவ கிராமங்களிலிருந்து சுமார் 20 பிள்ளைகள் அங்குபோய் வாசிக்கிறார்கள். வாசிக்கும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் துணிகளுக்கும் புஸ்தகங்களுக்கும் நீங்கலாக மாதம் 1-க்கு ரூ 4 கொடுக்கவேண்டும். இந்தக் கடும் பஞ்ச காலத்தில் மாதம் 1-க்கு ரூ 4 சாப்பாட்டுக்காகவும் படிப்புக்காகவும் ஏற்படுத்தினதே தெலுங்கு கிறீஸ்துவ பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் அப்புண்ணிய குரு சுவாமிகளுக்கிருக்கிற அக்கரையும் அபிமானமும் வெளியாகிறது. சொந்த வீட்டில் பிள்ளைகளை அதிக பகூத்துடன் கவனிப்பதைவிட ஷை பாடசாலையில் வாசிக்கும் பிள்ளைகளை அதிகமாய் அக்குருவானவர் கவனிக்கிறரென்று ஒருவர் மூலமாய் நான் கேள்விப்பட்டேன். இப்பொழுது இங்கிலீஷும் தமிழும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. இன்னும் மாணாக்கர் அதிகப்பட்டால் இந்தப் பாடசாலையை இன்னும் உயர்ந்த வகுப்பிற்கு உயர்த்தப்போகிறதாகவும் தெரிகிறது. தெலுங்கு கிறீஸ்துவ பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் அதிக அக்கரையும் அன்புங்கொண்டிருக்கிற சகலரும், விசேஷமாய் செங்கற்பட்டு ஜில்லாவிலிருக்கிற தெலுங்கு கிறீஸ்துவ கனதனவான்களும், ஷை தெலுங்கு கிறீஸ்துவ பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் அதிக அக்கரைகொண்டு பாடுபட்டுவருகிற ஓர் ஏழை குருவானவரான செங்கற்பட்டு பங்கு சுவாமியாரின் அரிய பிரயத்தனத்தை கண்ணோக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓர் தெலுங்கு கிறீஸ்துவர்.

பத்திராகாபிவிருத்தி.

சகலைக்குரிய பத்திராதிபரே,

தாங்கள் கூடந்த இரண்டு சஞ்சிகைகளிலும் "சந்தாதார நேயர்களுக்கோர் விசேஷ அறிவிப்பு" என்று தலைப்பிட்டு வெளியாக்கிய துண்டுப் பத்திரிகைகள் இரண்டையும் உற்றுநோக்கினேன்—நமது ஆயனே கைதூக்கி ஆதரித்துவர, நம் சகோதர நேயர்கள் இன்னும்முன்னெழுந்து வரவில்லைபோலும்—இப்பாரிய யுத்தத்தால் அயல் நாட்டு சாமான்களாகிய கடிதம், மை முதலிய அச்சாபீசுக்கு உபயோகப்படுத்தக்கூடிய வைகள் தற்சமயம் ஒன்றுக்கு காலாக விலை ஏறி நிற்கு மிக்காலத்திலும், நமது ஆயன் அக்காலத்தைப்போலவே—ஒரே சமஸ்திலையிலிருந்து, பிரதி மாதமும் தன் ஆட்டுக் கிடையைத் தேடி கற்போதனை போதித்து—சேற்றில் அமிழ்ந்தி யிருப்பவர்களைக் கைகொடுத்து உதவிவருவ தோடு—பரோபகார சிந்தையின்பொருட்டாக —வேறு சஞ்சிகைகளைப்போல், சந்தாவை உயர்த்தாமலிருந்தும்—அநேக சந்தாதாரர்கள் இதுவரையிலும் தங்கள் பாக்கியைச் செலுத்தி ஆயனை மேன்மைப்படுத்த முயலாமலிருப்பது மெத்த விசனிக்கத்தக்க விஷயம். இந்தியாவின் கண் உலவிவரும் கணக்கற்ற பத்திரிகைகளில், சத்திய வேதத்துக்கடுத்த பத்திரிகைகள் மிக சொற்பமே. இப்பத்திரிகைகளை கத்தோலிக்க ராகிய நாம் மனமுவந்து ஆதரியாவிடில், வேறு யார்தான் அவற்றை யாதரிக்கக் கவலையோடு முன்னுக்கு வரப்போகிறார்கள்? ஆகையால் என தருமைச் சகோதர சகோதரிகளே—நமது ஆயனைக் கைவிடாதீர்கள். தங்களாலியன்றவரை பொருள்கொடுத்து உதவிசெய்யத் தவறாதீர்கள். தங்களாலியன்ற பொருளுதவி செய்வதினால், உங்களுக்கு உண்டாகும் சம்பத்துக்கள் குறைவுரு. ஆனால் அதற்குப் பதிலாக, சகல சம்பத்தும் ஒங்கி வளர எம்பெருமான் அருள்பாலிப்பார். இதுதப்பாது.

இன்று தங்கள் பேருக்கு ரூ 1 அனுப்பியிருக்கிறேன். அதை "நல்ல ஆயன்" அபிவிருத்தி நன்கொடை நிதிக்கு இந்த ஏழையாகிய அடியேனுடைய பங்காக அங்கீகரிப்பீர்களெனக் கோருகிறேன்.

இங்ஙனம்,

A. JOHN GREGORY,

12—11—18. No. G. 79.

சங். டால்சுவாமிகளின் வெள்ளி ஜூபிலிக்காக "நல்ல ஆயன்" வாயிலாய் வரவேற்கப்பட்ட தொகை.

		Rs.	A.	P.
Mr. C. S. Devasagayam Pillai, *Coimbatore*		1	0	0
,, K. Joseph, *Bangalore* ...		5	0	0
,, Gabriel Fernandez, *Tuticorin*		2	0	0
,, C. M. J. Sanjivi, *Parbhani*		5	0	0
,, T. S. Arokiasamy Pillai, *Tirumangalan* ...		1	0	0
TOTAL ...		14	0	0

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாச்சாரம்.

ஜேர்மனியரால் பிராஞ்சில் விளைந்த நஷ்டம்.—பிராஞ்சு தேசத்தின் வடபாகத்தில் ஜெர்மனியர் விளைவித்த சேதம் 260-கோடி பவுனென பிராஞ்சிய நிபுணர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

மேஞட்டுத் தபால்/கப்பல்.—நாளது மீ 11உ முதற்கொண்டு வாரம் ஒரு முறை சனிக்கிழமைதோறும் பகல் 12-மணிக்கு பம்பாயிலிருந்து மேஞடுகளுக்குத் தபால் கப்பலொன்று புறப்படும்.

பாப்பரசரும் பிரசிடென்டு வில்சனும்.—நமது பரிசுத்தத் தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் சமாதான சம்பந்தமாய் தம் கைப்பட கடிதமொன்றெழுதி அதைத் தமது பிரதிநிதியின் வழியாய் பிரசிடென்டு வில்சனுக்கு அனுப்பப்போவதாக தந்தி சமாசார மெட்டியிருக்கிறது.

மோட்டார் வண்டிகள்.—இயந்திரம் அமைக்கப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டிகள், நாலு சக்கர வண்டிகளாகிய மோட்டார் சைக்கில்ஸ், மோட்டார் கார்ஸ் முதலிய சமான்களை இறக்குமதி செய்யப்படாதென்று யுத்த காலத்தில் செய்யப்பட்ட கவர்ண்மென்ட் உத்தரவானது இப்போது ரத்துசெய்யப்பட்டுவிட்டது. இனியித் தகைய வண்டிகள் தாராளமாய் இறக்குமதியாகும். அதினால் அவைகளின் விலையும் இறங்கும்.

"ஆர்மிஸ்டிஸ்" என்னும் போரிடையீடு.—ஜெர்மனியர் வேண்டுகோளின்படி சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிர்ணயிக்கும்வரையில் இருதிறத்தாரும் ஒப்புக்கொள்ளப்பட்ட சண்டை நிறுத்தமாகிய போரிடையீட்டின் கெடு, இந்த ஜனவரிமீ 17-ம் தேதிவரையில் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் சமாதானம் முடிவுக்கிவிடுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

புது கவர்னர்.—பொம்பாயின் புது கவர்னராகிய லாயிட் ஜியார்ஜ் அவர்கள் சென்ற மாசம் 16-ம் தேதி பொம்பாய்க்குவந்து தமது அலுவலை ஒப்புக்கொண்டார்கள். அதன் பழைய கவர்னராகிய வில்லிங்டன் பிரபு அவர்கள் அன்று மாலையே கப்பலேறி இங்கிலாந்துக்குப் பிரயாணமாயினர்கள். இப்பிரபு மூன்று மாத ரஜாவின்பேரில் தமது ஊருக்குப் போகிறார். திரும்பி வரும்போது சென்னை இராஜதானிக்குப் புது கவர்னராக வருவார்.

ஆகாயத் தபால்.—பொம்பாயிக்கும், கல்கத்தாவுகும் ஆகாயத்தபால் போக்கு வருத்து செய்வதற்கு ஏற்பாடு செய்யப் படுவதாகத் தெரியவருகிறது. ஆகாயவிமானம் இரவில் பன்னிரண்டு மணி தியாலத்தில் பிரயாணஞ் செய்யுமென்றும், ஒரு அவுன்ஸ் எடையுள்ள கடிதத்துக்கு ஒரு ரூபாய் தபாற்கூலி முதலில் விதிக்கப்படுமென்றும், தந்தி மார்க்கமாய் அரைகுறையான சமாசாரம் அனுப்புவதைவிட இதன் மூலமாய் முழு விவரத்துடன் சங்கதிகள் எழுதியனுப்பக்கூடுமென்பதால் இதுவே தந்தியைவிட அதிக இலாபகரமானதென்றும் சொல்லப்படுகிறது.

சமாதானச் சங்கம்.—இந்த சமாதானக் கான்பரன்ஸ் பாரிஸ் நகரத்தில் இம்மாதம் முதல் தேதியாகிய வருஷப் பிறப்பன்று ஆரம்பமாகி முடிவுபெற இரண்டு மூன்று வாரங்கள் செல்லும். இக்கான்பரன்சில் விஷயங்களைக் கலந்துபேச நியமிக்கப்பட்ட தேசாதிபதிகளும், அரசர்களும் அல்லது அவர்கள் ஸ்தானாதிபதிகளும் ஏறக்குறைய எல்லாரும் பாரிஸ்வந்து சேர்ந்துவிட்டார்கள். விவகாரங்கள் ஆரம்பிப்பதுதான் தாமதம். இந்தச் சமாதான உடன்படிக்கையானது எந்தத்தேச ஜனங்களையும் அநுவகியமாய் பாதிக்காதபடி நீதியாய்ச் செய்யப்படும்படி நீதியுள்ள சர்வேசுரன் துணைபுரிவாராக!

மிஸ்டர் வில்சன்.—ஐக்கிய மாகாணத்தின் அக்கிராசனாதிபதியாகிய மிஸ்டர் வில்சன், சமாதானக் கான்பரன்சுக்காக பாரிஸ் நகரத்தில் டிசம்பர்மீ 14-ம் தேதி வந்து சேர்ந்தார். அவருக்கு மகா ஆரவாரமான வரவேற்புபசாரம் செய்யப்பட்டது. அவர் பெரும்பாலும் சமாதான உடன்படிக்கையின் முக்கியாம்சங்கள் முடிவுசெய்யத் தீர்மானிக்கப்படுகிறவரையில் அதாவது பல வாரங்கள்வரையில் பாரிஸில் தங்கியிருப்பாரென்று தெரியவருகிறது. சமாதானச் சங்கம் ஜனவரி மாதம் முதல் தேதி கூடும். இதன் மத்தியில ஜெர்மனிய அட்டூழியத்தால் அதமாக்கப்பட்ட ஊரையும், பதியையும், கட்டிடங்களையும் அவர் பார்வையிட்டுக்கொண்டுவருகிறார்.

சாராய விற்பனை.—சாராயக் கடைகள் இரவு 8-மணிக்குமேல் திறந்திருக்கப் படாதென்பது தற்கால உத்தரவு. இந்தக் கால அளவை இன்னும் குறைக்கவேண்டுமென்று இந்திய கவர்ண்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். இதன் விஷயமாய் அந்தந்த ஸ்தல அதிகாரிகளுடைய அபிப்பிராயங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கேட்டபின் முடிவான உத்தரவு பிறப்பிக்கப்படும். ஏழு மணிக்குமேல் சாராயங்களும் முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை செய்யக்கூடாதென்று திட்டம்பண்ணுவது, பொதுவாய் ஜனங்களுக்கு நன்மையைத் தருவதாகுமென்று நாம் நம்புகிறோம்.

"மட்ராஸ் மேய்ல்" பத்திரிகை.—இப்பத்திரிகை தென்னிந்தியாவில் பிரசுரமாகும் இங்கிலீஷ் தினசரிப் பத்திரிகைகளில் மிகப் பிரசித்திபெற்றது, செல்வாக்குள்ளது. இது ஆரம்பமானது 1868ஞ் டிசம்பர்மீ 14உ. சென்ற டிசம்பர் 14உ யோடு ஐம்பது வருடங்கள் பூர்த்தியாய் விட்டபடியால், அத்தேதியில் அதில் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களெல்லாரும், தங்க ஜூபிலி உற்சவங் கொண்டாடினார்கள். அதன் மானேஜராகிய மிஸ்டர் சென்ட்லெட்ஜருக்கும் அவர் மூலமாய்

அப்பத்திரிகைச் சொந்தக்காரருக்கும் சுப சோபன வாழ்த்துப் பத்திரமொன்று வாசித்தார்கள்.

ஏகாதிபத்திய கான்பரன்ஸ்.—பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட குடியேற்ற நாடுகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளுடன், யுத்த மந்திராலோசனை சபையார் லண்டனில் ஒரு ஏகாதிபத்திய கான்பரன்ஸ் என்னும் முக்கியமான கூட்டத்தை நடத்தினார்கள். அதில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அக்கிராசனம் வகித்தார். பிக்கானீர் மகாராஜா, சர். எஸ். பி. சின்ஹ முதலியவர்களும், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய தேசங்களின் பிரதிநிதிகளும் அக்கான்பரன்ஸில் விஜயமாயிருந்தார்கள். சமாதானக் கான்பரன்ஸில் விவாதத்திற்கு வரக்கூடிய பற்பல விஷயங்களைக்குறித்து ஆலோசனை நடந்ததாய்த் தெரியவருகிறது.

சர்வ தேச ஜன சங்கம்.—எந்த ஒரு அல்லது பல தேசங்கள் தனியாகவாவது, ஒருமித்தாவது சமீபத்தில் ஜெர்மனி செய்ததுபோல் அதிக்கிரமித்து அடாது செய்யத் தலைப்பட்டால், அதை அல்லது அவைகளை அடக்கி நீதிப்படி செய்வதற்கு, உலகத்திலிருக்கும் தேசாதிகாரிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு கட்டுப்பாட்டாய் உடன்படிக்கை செய்துகொள்ள, சர்வ தேச ஜன சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று இராஜ தந்திர நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்போது சம்பவித்த ஐரோப்பிய சண்டையைப் போல அட்டூழியமான சண்டைகளைத் தடுக்க ஷி சங்கத்தைப்போல ஒரு சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்று முதல் முதல் பிரேரித்தவர் நமது பரிசுத்த தந்தையாகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பராம். இந்த சர்வ தேச ஜன சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவது பொதுவாய் உலக சமாதானத்துக்கு அத்தியாவசியமாகும்.

கட்டாய இராணுவச் சேவகம்.—ஒரு தேசத்திலுள்ள ஆண் பிரஜைகளில் ஒவ்வொருவரும் கட்டாயம் இராணுவப் பயிற்சியடையவேண்டுமென்ற சட்டமிருக்கும்பட்சத்தில், அத்தேசத்து அதிகாரிகளுக்கு அயல்நாடுகளின்மேல் படையெடுத்துப் போர்புரிய தணிவுவுண்டாகிறதாதலால், இங்கிலாந்து பிரதான மந்திரியாகிய மிஸ்டர் லாயிட் ஜார்ஜ், எத்தேயத்திலும் கட்டாய இராணுவச் சேவகம் இருக்கவேபடாதென்று ஓர் நிபந்தனையை சமாதான சங்கத்தில் சொல்லி, அதை ஸ்தாபிதப்படுத்தவேண்டுமென்று அசசங்கத்தாரை வற்புறுத்தி வாதிக்கத் தீர்மானித்திருக்கிறார். திரளான சேனைகளைக் கையில் வைத்திருந்தால், அது சண்டைக்கு அதிகாரிகளைத் தூண்டிவிடுமன்றோ? சண்டைக்காக சைன்னியத்தை தேடுவதுபோக, இந்த யுத்த சம்பந்தமாய் ஜெர்மானியர் செய்ததுபோல சைன்னியத்துக்காக சண்டையைத் தேடும்படியாகும். ஆனதினால் கட்டாய இராணுவச சேவகம் எங்கும இருக்கப்படாதென்பது ஒரு நல்ல ஏற்பாடுதான்.

இந்தியாவில் ஆகாய விமானம்.—இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு ஒரு ஆகாய விமானம் நான்கு நாட்களில் பிரயாணஞ்செய்து வந்திருக்கிறது. இன்னொன்றும் புறப்படத் தயாராயிருக்கிறது. இவ்வாறு இனி ஒன்றின்பின் ஒன்றுய் ஆகாய விமானங்கள் வருவது சகஜமாய்விடும். இனி இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஆகாய விமானங்கள் மூலமாய் தபாலகள் வரத்துப்போக்குசெய்ய கம்பெனிகள் கிளம்பும்போலும். தபால்ரதமேயன்றி, பிரயாணிகள் ரதமும் சீக்கிரத்தில் புறப்படும். 15-நாள் 20-நாள் பிரயாணத்தை 4-நாள் 3-நாளுக்குள் முடித்துவிடுவார்கள். பலநாள் கட்டைவண்டிப் பிரயாணங்கள் எப்படி அரைநாள் ஒருநாள் ரெயில்வண்டிப் பிரயாணங்களாய்விட்டனவோ, அப்படியே இனி சமுத்திரயாத்திரைபோய் ஆகாய யாத்திரையாய்விடும். யுத்தத்துக்குமுன் ஆகாய விமானத்தின் பிரயோஜனம் இவ்வளவு நன்றுய்ப் புலப்படவில்லை. இனி வருங்காலத்தில் ஆகாய விமானம் அபாரவேலை செய்யுமென்பதற்குச் சந்தேகமில்லை. சண்டையினால் உலகமடைந்த நஷ்டம் அனந்தம். அதனல்கிடைக்கலான லாபங்களுமுண்டு. இவைகளில் இந்த ஆகாய விமானப்பிரயோஜனம் ஒன்று.

கடல் சுதந்தரம்.—இவ்விஷயத்தைப் பற்றிப் பேசும்போது, வைக்கவுண்டகிரே

யென்பவர், ஐரோப்பிய வல்லரசுக்களுக்குள் ஏற்பட்டிருக்கிற ஹேகு உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்குக் கடல் சுதந்தரம் கொடுக்கப்படலாகாதென்று சொன்னர். கடல் சுதந்தரமாவது, கடலில் யாரும் எக்காலத்திலும் எங்கும் தாராளமாய்ப் பிரயாணஞ் செய்யலாம் என்பதுதான். இப்போது அப்படியல்ல, யாதோர் தவறுஞ் செய்யாமல் எதிலுந் தலையிட்டுக் கொள்ளாமல் தன் வேலையைக் கவனித்துக் கொண்டு நிரபராதியாயிருந்த பெல்ஜியந் தேசத்தின்மேல் ஜெர்மனியானது துராகிர்தமாய்ப் படையெடுத்துச் சென்று அதை அகம்பண்ணின அநியாயத்துக்காக, இங்கிலாந்தானது, தன்னுடைய கடற்படைப் பலத்தைக்கொண்டு, ஜெர்மனிக்கு கடல் மார்க்கமாய் அன்னிய தேசத்தினின்று எந்தச் சாமானும் போகாதபடி கடலடைப்பு செய்துவிட்டபடியால், ஜெர்மனிக்கு வெளிச்சரக்குகள் ஒன்றும் விசேஷமாய் உணவு பொருட்கள் வராமல், பசிபஞ்சம் கேரிட்டபடியால்தானே; தன் அங்காரம் அடங்கி, சமாதானத்துக்குக் கெஞ்சிவந்தது. இவ்வாறு கடலடைப்புச் செய்யாதிருந்திருந்தால், ஜெர்மனியை வேறு விதமாய் வெல்வது கஷ்டசாத்தியமாயிருந்திருக்கும். இந்தக் கடலடைப்பு நிர்ப்பந்தத்தை நீக்கிவிடவேண்டுமென்பதுதான் ஜெர்மனியினுடைய நோக்கம். இந்த விஷயத்தைச் சமாதானச் சங்கத்தார் எப்படித் தீர்மானிக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

சங். சூசை பாலசுவாமிகள்.—இந்தச் சுவாமிகளின் வெள்ளி ஜூபிலி, சென்ற மாதம் 17-ம் தேதி சென்னை, வேப்பேரி, அர்ச். பிலவேந்திரர் ஆலயத்தைச் சேர்ந்த பள்ளிக்கூடத்தில் மிகச் சிறப்பாய் நடைபெற்றது. சங். மொன்சின்ஞோர் ஆஞ்சிலோ சுவாமிகள் அக்கிராசனம் வகித்தார்கள். ஆங்கிலேயரும் இந்தியருமான ஸ்திரீ புமான்கள் பெருங் கூட்டமாய்க் கூடியிருந்தனர். அந்த ஜூபிலிக்குக் காரணகர்த்தரான சுவாமிகளின் சுகுணங்களையும் அவர் ஆங்காங்கு செய்துள்ள நல்ல வேலைகளையுமபற்றி வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டதுடன், சில உபந்நியாசங்களும் விஸ்தாரமாய்ச் செய்யப்பட்டு அவரைப் புகழ்ந்து வாழ்த்தினர்கள். அவருக்கு புஷ்பஹாரம் போட்டு, 500-ரூபாய்கள் அடங்கிய ஒரு பணப்பையும், பூசைப் பாத்திரமும் பரிசளிக்கப்பட்டன. பள்ளிச் சிறுமிகள் பாட்டுகள் பாடிச் சபையோரைக் களிப்பித்தனர். பிறகு சங். பாலசுவாமிகள் எழுந்து தமக்கு வாசித்த வந்தனோபசாரப் பத்திரத்துக்காகவும், பேசின புகழ்ச்சி வார்த்தைகளுக்காகவும், தாம் பெரிதும் நன்றியறிந்திருப்பதாகச் சொல்லி பேசப்பட்ட புகழ்ச்சிக்குத் தாம் ஒரு சிறிதும் அருகரல்லவென்றும், குறிப்பிட்ட வேலைகள் விஷயத்தில் தாம் தம் கடமையைத் தவிர வேறு விசேஷமாய் ஒன்றையும் செய்துவிடவில்லையென்றும், தம்மைத் தாழ்த்திப் பேசியதின், அரசர் வாழ்த்துப்பாடலுடன் கூட்டம் கலைந்தது.

பாப்பு ஸ்தானாதிபதி யவர்களின் விஜயம்.—சென்ற டிசம்பர் மீ 20உ காலை, அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதியாகிய, மிக வந்திக்கத்தக்க, பேதுரு புமசோனி பியாந்தி ஆண்டவரவர்கள் பெங்களூரிலிருந்து சென்னைக்குவந்து சேர்ந்தார்கள். சென்னை வாசிகளின் பிரதிநிதிச் சபையார் சென்னை சென்டரல் ஸ்டேஷனில் காத்திருந்து, அவர்களுக்கு நல்வரவு கூறி, புஷ்பமாலையிட்டு உபசரித்து, மோட்டார் இரதத்தில் ஏற்றிவந்து சென்னை சட்டகலாசாலையண்டை நிறுத்தி, திரளான கிறீஸ்துவர்கள் புடைசூழ, இருமருங்கிலும் சிறுவர் சிறுமிகள் கீதம்பாட, ஊர்கோலமாய் மேற்றிராசனக் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சென்றதும் ஆண்டவரவர்கள் தம்மை யாவலாய்க் காணவந்திருந்த பிரஜைகளுக்கு ஆசீரளித்து, திவ்ய பலிபூசை செய்தனர். அன்று மாலை சென்னை யதிமேற்றிராசனக் கிறீஸ்துவர்களால், சென்ட் மேரீஸ் ஹாலில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் மூன்று வந்தனோபசாரப் பத்திரங்களும், தென்னிந்தியா சத்தோலிக்கு இந்தியர் சங்கத்தாரால் ஒரு வந்தனோபசாரப் பத்திரமும் வாசிக்கப்பட்டன. அவைகளை ஆண்டவரவர்கள் அன்புடனேற்று அவைகளுக்குப் பதிலுரை ஆங்கிலத்தில் மிகச் சாதுரியமாய் மொழிந்தார்கள். தமக்கு அவ்வளவு ஆடம்பரமாக

நல்வரவேற்று உபசரித்ததற்காக ஜனங்களுக்கு வந்தனஞ் சொன்னபின், சிறிது காலத்துக்குமுன் மேற்றிராணிமார்களின் தீர்மானங்கள் விஷயமாய் சென்னையில் ஜனங்களுக்கு நேரிட்ட மனஸ்தாபம் நீங்கி, அவர்கள் தற்போது சமாதானங் கொண்டிருப்பதைக் கேள்வியுற்று தாம் சந்தோஷப்படுவதாயும், ஆத்தும விஷயத்தினாயினுஞ் சரி, சரீர விஷயத்தினாயினுஞ் சரி விசுவாசிகள் தங்கள் சத்திய வேதாதிகாரிகளின் யோசனையைக்கேட்டு அதன்படி நடப்பது கிறீஸ்துவர்களுக்கு அழகு என்றும், அதனால் அவர்களுக்கு நன்மை விளையுமேயன்றி, தின்மையொருபோதும் நேராதென்றும், இந்தத் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியரின் குருபக்தியைப் பற்றி அர்ச். பாப்பானவருக்கு அவசியம் அறிவிப்போமென்றும் பேசி முடித்து அனைவரையும் ஆசீர்வதித்தார்கள்.

புதிய விஷஜுரத்தினால் மரணம்.—சென்ற மூன்று மாதங்களுக்குள் உலகத்தின் நானாதிசைகளிலும் புதிய விஷஜுரத்தினால் மாண்ட ஜனங்களின் தொகை அறுபது லட்சமிருக்குமென்று லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு ஒரு வைத்திய நிருபர் எழுதியிருக்கிறார். ஐரோப்பிய யுத்தத்தில் சென்ற 4½-வருஷமளவில் மாண்டு போனவர்கள் 300 லட்சமிருக்கலாமென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி மூன்று மாதத்துக்கு சுமார் 16½ லட்சங் கணக்காகிறது. ஆனால் விஷஜுரத்தினாலோ 60 லட்சம் ஜனம் நஷ்டமாயிருக்கிறது. ஆதலினால் யுத்தத்தைவிட, விஷஜுரம் அதிதீவிரமாய் தன் விநாசவேலையைமுடித்திருக்கிறது. யுத்தந்தான் அரசர்களின் ஆங்கார கர்வத்தால் விளைந்தது என்று சொல்லுகிறோம். இந்தப் பெருவாரிக் காய்ச்சல் யாரால் விளைந்தது? நமது பாபத்தால்வந்ததேவகோபத்தால் விளைந்ததன்றோ? ஆகவே தேவ கோபத்தைத் தணிக்க ஜெபமும் தபமும் செய்வோமாக!

புதுத் துறைமுகங்கள்.—சென்னைச் சட்ட சபை கூட்டமொன்றில், கனம். கே. சிதம்பரநாத முதலியார் கேட்டுக்கொண்டபடி, கப்பல் சாமான் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு பின்வரும் துறைமுகங்களைத் திறந்துவைக்க சென்னை கவர்ண்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்:—கஞ்சம் ஜில்லாவைச் சேர்ந்த, கஞ்சம், சோனாப்பூர்; கிருஷ்ணாஜில்லாவைச் சேர்ந்த நர்சப்பூர், பெரும்பாலம்; குண்டூர்ஜில்லாவைச் சேர்ந்த, இருபருப்பாலம், மோருத்தோட்டா, இதமுக்காலா, மோட்டுப்பள்ளி, கங்காடிபாலம் ஆகிய ஒன்பது துறைமுகங்களேயாகும்.

ஸ்திரீகளுக்கு இராஜாங்கத்தில் சுதந்திரம்.—இங்கிலாந்தில் ஸ்திரீகளுக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதென்ற சங்கதி முன்னமே தெரிந்தவிஷயம். இப்போது இந்திய ஸ்திரீகளும் தங்களுக்கு முனிசிபாலிடியில் வாக்கு சுதந்தரம் வேண்டுமென்று பல கூட்டங்கள்வைத்து தீர்மானங்கள் செய்து கவர்ண்மெண்டுக்கு மனு செய்திருக்கிறார்கள். இந்தக் கட்சியை ஜெயித்துக்கொடுக்கும்படி, மிஸ்ஸஸ் பெசன்டம்மையாரையும், மிஸ்ஸஸ் சரோஜினிநாயுடுவையும் இங்கிலாந்துக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கின்றனர். இந்தியாவில் ஸ்திரீகள் புருஷர் கண்ணிற் படாமல் புருக்காமூடி கோஷா நிலைமையை அனுசரித்தார்கள் ஒரு காலத்தில். இப்போது புருஷரோடு சமானஸ்தராய் உட்கார்ந்து அலுவல் பார்க்க இராஜாங்க சுதந்தரங் கேட்கிறார்கள். சபாஷ்!

மேஜர் சிதேனியா பாயிஸ்.—போர்த்துகல் தேசத்து குடியரசுத் தலைவராகிய இவர் ஒப்போர்ட்டோ பட்டணத்துக்குப் பிரயாணமாகி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகையில் வழியில் ஓர் படுபாவி இவரை கைத்துப்பாக்கியினால் சுடவே, அவர்மேல் மூன்று குண்டுகள்பட்டன. உடனே ஆஸ்பத்திரிக்கு தூக்கிக்கொண்டுபோனார்கள் அங்குசென்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் உயிர்துறந்தனர். போர்த்துகல் தேசத்து குடியரசினால் கத்தோலிக்குத் திருச்சபைக்குவிரோதமாய் செய்யப்பட்டிருந்த அநேக அநியாய சட்டங்களையெல்லாம் ரத்துசெய்து, திருச்சபையின் விருத்திக்காகவும், நன்மைக்காகவும் பாடுபட்டுவந்த இவர் இவ்வாறு கொலைசெய்யப்பட்டது கத்தோலிக்கரணைவருக்கும் மிக்க விசனகரமான சங்கதியெனச் சொல்லத்தேவையில்லை.

ஓர் அருமையான பட்சம்.—ஜெருசலேமிலுள்ள பிரிட்டிஷ் படைக்கு ஆத்தும குருவாயிருந்துவந்த பெர்நார்ட் கவேனா என்னுஞ் சுவாமியார் மரணமடைந்தபோது, அவ்விடத்துக்குச் சமீபமாய் ஓர் கன்னியர்மடத்திலிருந்த ஓர் கத்தோலிக்குக் குருவானவரிடம் ஓர் புரொட்டெஸ்டாண்டு பாதிரியார் போய், மரித்த மேற்படி சுவாமியாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக பூசைசெய்யவேணுமென்று கேட்டுக்கொள்ளவே, அந்த சுவாமியார் தாம்பட்ட குண்டின் காயத்தையும் சட்டை செய்யாமல் உடனே பூசைசெய்தார். மேற்படி பதித பாதிரியார் அந்தப் பூசையைக் கண்டு ஷை குருவானவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுத்ததுமல்லாமல் பூசைசெய்த குருவானவருக்கு மெத்த நன்றி செலுத்தி பணவுதவியுஞ் செய்தாராம். உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று விசுவசிக்கிற இவர், கூடிய துரிதத்தில் சத்தியமறையில் சேர்ந் தீடேற சர்வேசுரன் கிருபைபுரிவாரரக.

ஜெர்மனி பெல்ஜியத்துக்கு உத்தரித்தல்.—யுத்தகாலத்தில் பெல்ஜியத்திலிருந்து ஜெர்மனி அபகரித்துக்கொண்டு போன 380 லட்சம் பவுன் பிராங்ஸையும் (பெல்ஜிய நாணயம்) சமீபத்தில் பெல்ஜியத்துக்கு ஜெர்மனி கொடுத்துவிட்டதாக தெரியவருகிறது.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

வண்ணாரப்பேட்டை.

எனது பிரிய மாமனார் (Lazar) லாஜர் 25-வது காலாட் படையில் 1885-ம் வருஷம் போர்வீரனாக சேர்ந்து, சர்க்கார் சேர்விசை முற்றிலும் முடித்து, 1907-ம் வருஷம் பென்ஷன் என்னும் உபகார சம்பளம் பெற்று, மதராஸ் (M.A.V.) ஆர்டில்லெரி வாலண்டரில் (Gunner) கன்னராய் சிலகாலம் சீவித்துவருங்கால், சில தினங்களாக இருமலால் பீடிக்கப்பட்டு எவ்வித சிகிச்சைசெய்தும் குணப்படாமல், 1918-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 25-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 11½-மணிக்கு கடைசி தேவத்திரவிய அநுமானங்களை குறையறப்பெற்று, தன்னருகிலிருந்த மனைவியையும், நாலு பிள்ளைகளையும் இம்மண்ணுலகின்கண் கலங்கவிட்டு தனது 45-ம் வயதில் பரலோகபிராப்தியடைந்தனர். இப்பரிதாப துக்கசெய்தியைக் கண்ணோக்கும் நேயர்கள் இவ்வாற்றம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள கேட்டுக்கொள்பவனாகிய,

மருமகன்,
J. MARRIYAN,
MUSICIAN,
R. F. Base Band, 80th C. I. M. E. F.
Busrah.

செக்கந்திராபாத்.

செக்கந்திராபாத் பூர்வமட்போர்ட் திருச்சபைக்கு தர்மகர்த்தாவாய் விளங்கியவரும் 6—6—1905 இல் தேகவியோக மெய்திய ம-ா-ா-ஸ்ரீ ஜே. பி. மிக்கேலவர்களின் மருகியும் H. H. The Nizam's Railway Audit Office இலிகிதரிலொருவராயிருந்து தேகவியோகமெய்திய ஸ்ரீமான் (J. Dorasawmy Pillay) ஜே. துரைசாமி பிள்ளையவர்களி னருமை குமாரத்தியும், நைசாம் ரெயில்வே (Budnapur) புட்னப்பூர் என்னுமிடத்தில் Asstt. Station Master ராக உத்தியோகம் வகிக்கும் A. D. Michael என்பவரின் உவிர்தேசியுமான ஸ்ரீமதி மரியஞானதீபம்மாள் ஷை நண்பரை 1913ஆம் மெய்மணந்து இல்வாழ்க்கையில் இன்பத்துடன் சுகித்து வாழ்ந்து ஆண், பெண் இருமக்களை சுகத்துடன் ஈன்று 3-வது பேறுகாலம் பரிபக்குவமாவதற்கு முந்தி குழந்தை ஈன்று 20—10—1918, 11¾-மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்தனள். மறுநாள் காலை 9-மணிக்கு போன்பல்லி கல்லறையில் (Revd. Fr. Grassi) சங். கிராஸி குருவானவரவர்களால் நல்லடக்கம் செய்யப்பட்டது. நற்குணம்வாய்ந்த இம்மாதின் கணவனும், மக்களும், மற்றுமிருக்கும் பந்துக்களும் துக்கசாகரத்தை சகிக்க மனந்தாளவில்லை. அந்தோ பரிதாபம்! இதைக் கண்ணோக்கும் சகோதரர், சகோதரிகள் மரித்த மாதுவின் ஆத்துமத்துக்கு இரக்கம் நிறைந்த ஆண்டவர் நித்திய இளைப்பாற்றியைத்தர ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள வணக்கத்துடன் கோரும்,

15—11—1918. ஓர் அனுதாபி.

✠

மரண அறிக்கை.

அகண்ட இப்பூவுலகின்கண் சீர்பூத்திலங்கிய நிம்பைமா நகரென்னும் வேம்பாற்றில் சந்திரகுலத்தவருள் பூர்வமாய் தலைமை அதிகாரம் வகித்தவர்களும், துன்பத்திலும் அறத்தையே கடைப்பிடித்துத் தம் எழை உறவினருக்கு தம்மாலியன்ற உதவிபுரிந்தவர்களும், அன்பே அணையாகக்கொண்டு வான் வீட்டின் கன்மை கிடைக்கும் வழியைத் தேடியவர்களும், திரிசிரபுரம் மேற்றிராசனக் கோவிலில் தூணைக் குருவாயிருக்கும் சங்கைகீர்தியகனம் வேதநாயகம் தல்மேயித சுவாமியவர்களின் பிரிய தக்தையும், எனது நேச மாமனுருமாகிய சற்குணதீர தூசைமாதவடியான் தல்மேயித சீதாதிய அவர்கள் ரண ரோகத்தினுல் பீடிக்கப்பட்டு எவ்விதமான சிகிச்சைகள் செய்தும் குணப்படாமல் கடைசி தேவத்திரவிய அநுமானங்களை நிறைவுறப்பெற்று மரணப்படுக்கையில் சூழ்ந்திருந்த தம் இன பந்துக்களுக்கு அன்புடன் ஆறுதலளிக்கும் மதுரமொழிகள் கூறி, பரிபூரண பலனுள்ள ஜெபங்களைப் பக்தியுடன் பன்முறை உசரித்து ஊக்கமது தளராமல் பேரின்ப மடைந்தவர்கள்போல் மகிழ்ச்சியுடன் தமதாத்துமத்தைப் பிதாவின்கையில் ஒப்புவித்து பந்து மித்திரர்களை இக்கண்ணீர் கணவாயில் பரதவிக்கவிட்டு நிகழும் 1918 ஆம் அக்டோபர்மூ 5ஆ சனிக்கிழமை கதிரவன் தன் கிரணங்களை யடக்கி மறையும் நேரமாகிய மாலை சுமார் 6-மணிக்கு பரமபதமடைந்தார்கள்.

மறுநாள் (6—10—18) ஞாயிறன்று காலை சுமார் 8½-மணிக்கு எம் பரதகுல கோமானுகிய கனம். கனம் கஸ்பார் றேச்சு சுவாமியவர்களால் மிஷ சடலம் மந்திரிக்கப்பட்டு பந்துஜன மித்திரர்கள் புடைசூழ சகல விருதுகளுடனும் வெகு ஆடம்பர சிறப்புடனும் தீவ்ய இஸ்பிரீத்துசாந்து சர்வேஸ்வரன் தேவாலயத்திற்குக் கொண்டுபோய் நெக்குயம் பாட்டுப்பூசைசெய்து பின் மையவாடிக்குக் கொண்டுபோய் பூஸ்தாபகம் செய்யப்பட்டது.

அந்தோ! அருமை பெருமைவாய்ந்த இம்மகானின் திடீரூன மரணத்தினுல் நிம்பைநகர்வாசிகள் மெய்மறந்து துக்கசாகரத்திலமிழ்ந்தினர். அன்னவர்களின் நற்குண நற்செய்கைகளை அங்கீகரித்துக்கொண்டதின் அடையாளமாக அவர்களின் சரீரத்திற்குக் கடைசி ஆசாரம் செய்ய சமூகம்தந்த திரளான ஜனங்களும் நல்லடக்கமுமே ஆதாரமாகியிருந்தது. தமது சுகவீனத்தால் தந்தையவர்களின் அவஸ்தையில் வரக்கூடாதிருந்த சகு. கனம் வேதநாயகம் தல்மேய்த சுவாமிகளும் அன்னவர்களின் கடைசி நேரத்தில் அருகிருக்கப் பாக்கியம் கிடையாமல் இலங்கையிலிருந்த மூன்று மக்களில் மூத்த குமாரரும் காளது மாதம் 15ஆ தமது ஜனன பூமியாகிய நிம்பைநகருக்குவந்து, ஆப்த பந்தாவையிழந்து பரதவிக்கும் மாதாவுக்கும். இன்னும் இக்கதிக்குள்ளான தம் உறவினர்களுக்கும் அன்புறும் இன்ப மொழிகளுரைத்து ஆறுதல்படுத்தி 28ஆ திங்கட்கிழமை சகு. கனம் வேதநாயகம் தல்மேய்த சுவாமிகள் தமது நேச பிதாவின் ஆத்தும ஈடேற்றத்திற்காக நெக்குயம் பாட்டுப்பூசை செய்து முடித்தபின் மையவாடிக்குப்போய் வெகு சிறப்பாய் அலங்கரித்திருந்த தமது அன்புள்ள தந்தையின் கல்லறையை மந்திரித்து சகல வேதச் சடங்குகளையும் நிறைவேற்றினர்.

பின்பு (15—9—18)ல் கடுகண்ணுவில் மரணமான அவர்களின் மாமனுராகிய ஜான் அந்தோனி பேர்னந்து அவர்களின் ஆத்தும ஈடேற்றத்திற்காக 30ஆ புதன்கிழமை நெக்குயம் பாட்டுப்பூசை செய்து அன்று சாயுங்காலம் 3-மணியளவில் தமது பங்கு விசாரணையாகிய திருச்சிமாநகருக் கேகினர்.

நித்திய பிதாவே! இவ்வாத்துமங்களுக்கு முகிவில்லாத சுகத்தின் பேரின்ப ராச்சியத்தைக் கட்டளையிட்டருளும். நித்திய காலத்தின் பிரகாசம் இவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.—ஆமென்சேசு.

இங்ஙனம்,

மரணப்படுக்கையில் பணிபுரியப் பாக்கியம்பெற்ற மருமகன்,

குருஸ்மிக்கேல் விக்டோரிய கோவில் பிள்ளை.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் கல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 17. | பிப்ரவரி 1919. | இலக்கம் 2.

POLITICAL REFORMS AND CATHOLIC INDIANS.

இராஜாங்க சீர்திருத்தமும் கத்தோலிக்கு இந்தியரும்.

சமீபத்தில் இந்திய அரசியல் முறையில் செய்யப்போகிறதாய்ப்பிரேரிக்கப்பட்டிருக்கிற சீர்திருத்த மசோதாசம்பந்தமாய் இந்தியாவிலுள்ள பற்பல வகுப்பினரும் தத்தம்வகுப்பினருக்கு உள்ள குறைகளையும், கஷ்டங்களையும், வேண்டிய சௌக்கியங்களையும், சுதந்தரங்களையும் அதிகாரிகளுக்கு எடுத்தோதி நலம் பெறும் முயற்சியில் ஓயாது உழைத்துவருகிறார்கள். தங்கள் தங்கள் கட்சிகளை எவ்வாறு, எச்சமயம், எவர் மூலமாய் எடுத்துரைப்பின் காரிய சித்திபெறலாகுமெனக் கவலையுற்றுச் சிரமப்பட்டு வேலைசெய்துவருகிறார்கள். பிராமணர் ஆதிக்கம் நிறைந்த இந்திய காங்கிரஸ் அதிகாரிகள், இந்தியாவிலு எத்தனை காங்கிரஸ் கூட்டங்கள் கூடி எத்தனை தீர்மானங்கள் செய்தாலும் தங்கள் ஹோம் ரூல் கட்சி ஒங்கப்போகிறதில்லையெனத் தேர்ந்து, இங்கிலாந்துக்கு ஒரு பிரதிநிதிச் சபையைக் கூட்டியனுப்பி, அவ்விடத்தில் பார்லிமென்ட்டு மகா சபை மெம்பர்களுக்குத் தங்கள் கட்சியின் விசேஷ விஷயங்களை விவரமாய் எடுத்துச்சொல்லி, அவர்களைத் தம்வசப்படுத்தி ஜெயம்பெறுவதற்காகப் பதினைந்து பிரதிநிதிகளை அவ்விடத்துக்கு அனுப்ப பிரயாணச் சீட்டுகளுக்கும் உத்தரவு வாங்கிவிட்டார்கள். இந்தக் காங்கிரஸ் கட்சியாரைச் சேர்ந்தவரும், சென்னை "இந்து" என்னும் ஆங்கிலத் தினசரிப் பத்திரிகையின் ஆசிரியருமாகிய மிஸ்டர் கஸ்தூரிரெங்க ஐயங்கார் தம் கட்சிக்காக இங்கிலாந்தில் தக்க முயற்சிசெய்துவந்திருக்கிறரெனச் சொல்லப்படுகிறது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும், இன்னும் வேறு சுதந்தரங்களையுங் கேட்கும் பிராமணரல்லாதார் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் சென்னைக்கு விஜயஞ் செய்திருந்த கமிட்டியாருக்கு வாக்கு மூலம் கொடோமென மறுத்துவிட்டு, "எங்கள் காரியங்களைக் கொண்டுபோக எங்களுக்கு வழி தெரியு" மெனச் சொல்லித் தங்கள் பிரதிநிதிகளை இங்கிலாந்துக்கு அனுப்புவதற்கு வேண்டிய செலவுக்காக தென்னிந்தியாவிலுள்ள ஜில்லாக்கள்தோறும் நாலாயிரம், ஐயாயிரமாக நிதி

வசூல் செய்துகொண்டுவருகின்றனர். இந்தக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் நாயர் என்பார், ஏற்கெனவே இங்கிலாந்தில் வெகு வேலைசெய்து தங் கட்சிக்கு வெற்றி பெறுவிக்கத் தக்கவழியை ஒருவாறு செவ்வைப்படுத்திவிட்டுவந்திருக்கின்றார். வெகு சீக்கிரத்தில் அவர் மறுபடியும் இங்கிலாந்துக்குச் செல்ல இருக்கிறார்.

ஏற்கெனவே சில சுதந்தரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள மகம்மதியரும் தங்கள் வகுப்பினருக்குள் அபிப்பிராய பேதமொன்றின்று எல்லவரும் ஏகோபித்துத் தங்களுக்கு இன்னுந் தேவையாயுள்ள சுதந்தரங்களுக்காக இராஜாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

ஆங்கிலோ இந்தியரும், ஐரோப்பியரும் இந்த அரசியல் முறைச் சீர்திருத்த மசோதாவால் தங்களுக்குப் பிரதிகூலமேயன்றி அநுகூல மேதுமில்லையென்றும், அதை அமுலுக்குக் கொண்டுவரப்படாதென்றும், அதை அமுலுக்குக் கொண்டு வரும்பட்சத்தில் தங்களுக்கு அநுகூலமான மாறுதல்கள் செய்யவேண்டுமென்றும், தங்களுக்கு விசேஷ வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைக்கப்படவேண்டுமென்றும் வாதிக்கிறார்கள்.

அசிஸ்டன்ட் (உதவிக்) கலெக்டர் முதல் கவர்னரின் நிர்வாக சபை மெம்பர் வரைக்குமுள்ள அதிகார உத்தியோகங்களை வகித்துவரும் ஐரோப்பியரான இந்தியன் சிவில் சர்விஸ் வருக்கத்தினரெல்லோருஞ் சேர்ந்து, இந்தச் சீர்திருத்தங்களால் தங்கள் வருக்கத்தினருடைய செல்வாக்கும், அதிகாரமும் சிதைவுறுமென்றும், தங்களுக்கும் கவர்ண்மென்டாருக்கும் எற்பட்டுள்ள உடன்படிக்கைகளின்படித் தங்கள் காரியங்கள் நடைபெறுவென்றும், அதினால் தங்களுக்கு நஷ்டமே நேருமென்றும், அப்படி நஷ்டத்துக்கு ஈடுபட்டுழைக்கத் தங்களுக்குப் பிரியமில்லையென்றும், உடன்படிக்கையின்பிரகாரம் கவர்ண்மென்டார் நடக்கமுடியாதாதலால், அதனால் தங்களுக்கு ஏற்படும் நஷ்டத்துக்கு ஈடுகட்டிக்கொடுத்தால் தாங்கள் எல்லோரும் திரும்பத் தம் நாட்டுக்குப் போய்விடுகிறோமென்றும் முறையிடுவதாகச் சொல்லப்படுகிறது.

இன்னுமற்ற வகுப்பினர்களும் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றபடி தங்கள் தங்கள் வகுப்புக்கு அநுகூலமான வகையில் முயற்சிசெய்துவர, கத்தோலிக்கு இந்தியர்மாத்திரம், தங்களுடைய கேவலநிலைமையை உள்ளபடியே உணர்ந்து அதற்குத் தக்கபடி தங்கள் முன்னேற்றத்துக்கான காரியங்களைக் கவனித்துத் தொழில் நடத்துவதாகத் தெரியவில்லை. தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கமானது சமீபத்தில் திருச்சிராப்பள்ளியில் கூடின வருஷாந்தப் பொதுக்கூட்டத்தில், கத்தோலிக்கு இந்தியர்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென்று ஒரு தீர்மானஞ் செய்து அதைக் கவர்ண்மென்டாருக்கு அனுப்பியிருக்கிறதாகத் தெரிகிறது. இந்தியா காரியதரிசியாகிய மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்கு விஜயஞ் செய்த பொழுதும், பிரான்சிஸ் கமிட்டியெனும் ஓட்டுக் கமிட்டியார் சமீபத்தில் சென்னைக்குவந்து விசாரணை செய்தபோதும் மேற்படி சங்கமானது கத்தோலிக்கருடைய கஷ்டங்களை அன்னோர்களுக்கு ஒருவாறு குறிப்பித்துச் சில சுதந்தரங்களைக் கேட்டதோடு தங்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கேட்டதாகவும் தெரியவருகிறது. ஆயினும் சும்மா கேட்பதுமாத்திரம் போதாது. கேட்பதைத் தப்பாமல் அடையுமாறு கேட்கவேண்டும். வனந்தரத்தில் கூவும் குரலொலியைப்போல் வியர்த்தமாய்ப் போகும்படியான வகையில் கேட்கப்படாது. தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கமானது. இப்போது இருக்கிற நிலைமையில் அது தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியர்களுக்காக அதிகாரத்துடன் பேச ஆற்றலுடையதாயிருக்கிறதென்றுவது, அல்லது அது சொல்லும் விஷயங்களைக் கவர்ண்மென்டார் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியரின் பொதுஜனவாக்காக மதித்துக் காரியம் நடத்துவார்கள் என்றுவது சொல்லுவதற்கில்லை. இச்சங்கம் இப்போது நான்கு பிளவாகப் பிளந்து மிகவும் பலஹீனப்பட்டிருக்கிறது. சில காலத்துக்குமுன் தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியர்களுக்கெல்லாம் இந்த ஒரே சங்கமிருந்தது போக, இப்போது இவர்களுக்குள்ளே

இதையன்றி வேறு நான்கு சங்கங்கள் தோன்றியுள்ளன. இது ஒற்றுமைக்கும் பலத்துக்கும் சாதகமாகுமா? ஒருபோதுமாகாது. கத்தோலிக்கு இந்தியர்களுக்குள் ஒற்றுமையும் பலமும் வேண்டுமானால், அவர்கள் கவர்ண்மென்டாரிடத்தில் செல்வாக்கடையவேண்டுமானால், அவர்களுக்குள்ளே பல சங்கங்கள் இருக்கப்படாது. ஒரே சங்க மிருக்கவேண்டும். அவர்களுக்குள் உயர்ந்தோர் தாழ்ந்தோர், பெரியோர் சிறியோர் என்னும் விகற்பங்களில்லாமல், பொதுஜன சமூக வாழ்க்கையில் எல்லோரும் ஏகோபித்துச் சகோதரப் பாண்மையுடன் நடத்தல்வேண்டும். இப்போது பிளவுபட்டுள்ள சங்கங்களெல்லாம் ஒன்றுசேர்ந்துகொள்ளவேண்டும். இவ்விஷயமாய்மேற் சங்கத்தினின்று பிரிந்தோரும், பிரிக்கப்பட்டோரும், தனித்துப் புறத்தே நின்றோருமாகிய சகல கத்தோலிக்கு இந்தியரும் ஊன்றியோசித்து, ஏகோபித்து ஒத்து உழைப்பதினால் ஜன சமூகத்துக்கு உண்டாகும் நன்மைகளையும், பல பிரிவினைகளாயிருந்து தொழில் செய்வதினால் உண்டாகும் கெடுதிகளையும் நன்கு உணர்ந்து, அதிசீக்கிரத்தில் ஒற்றுமைபடவேண்டும். இவ்விஷயத்தில் தாமதஞ் செய்வதானது நெடுங்காலம் வரைக்கும் நிவிர்த்திக்கமுடியாத கெடுதியை விளைவித்துவிடும்.

இது முன்னேற்றகாலம், உலகமெங்கும் மானிடர்கள் கல்வி, நாகரிகம், வர்த்தகம், கைத்தொழில், சிற்பம் முதலிய மேம்பாடுகளில் அபிவிருத்தியை நாடி, அபார முயற்சிகள்செய்து முன்னேறுகிற காலம். அரசுரிமைகளுக்காக அத்தந்த வகுப்பினர்களும் ஒற்றுமையுடன். உழைத்துக் கிளர்ச்சிசெய்து, அதிக சுதந்தரங்களை அடைந்து, சுயாதீனமுற்று, சுகம் பெறுகிற காலம். இக்காலத்திற்கேற்ப ஊக்கங்கொண்டு உழைப்பவர்களே சித்தியடைந்து சுகம்பெறுவார்கள். "சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்" என்றபடி முயற்சியற்றிருப்பவர்கள் தப்பாமல் இகழ்ச்சியடைவார்கள். கத்தோலிக்கு இந்தியரானவர்கள், ஹிந்துக்கள், மகம்மதியர்கள் முதலானோர்களுக்குமுன் சிறியவகுப்பினராயிருக்கின்றார்கள். அவ்வகுப்பினர் எல்லோரும் பெரு முயற்சிகள்செய்து இராஜாங்க விஷயத்தில் பயன்பெறுவதாயிருக்கையில், இவர்கள்மாத்திரம் தக்க முயற்சியின்றி இதுவரையிலு மிருந்தது போல் அசிரத்தையாயிருந்து விடுவார்களானால் செல்வாக்கற்று, மற்றையோரால் நசுக்குண்டுபோவார்கள். பொதுஜன சமூக வாழ்க்கையில் இவர்களுக்குச் சற்றேனும் மதிப்பு கிடைக்காது, சௌகரியம் கிட்டாது, பெருஞ் சங்கடப்படவேண்டுவதாகும். இது தப்பாது. காருண்ய பிரிடிஷ் இராஜாங்கத்தார் காரியங்களை நேரில் கவனித்துவருகையிலேயே கிறீஸ்துவர்கள் ஏனையோரிடத்தில் படுங் கஷ்டம் இடையூறுகள் கொஞ்சமல்ல. முழு அதிகாரத்தையும் அவர்கள் வகித்துவிடுவார்களானால், அவர்களிடத்தில் கிறீஸ்துவர்கள் படப்போகும் பாடு சொல்லுந்தரமல்ல. விஷயாவிஷயங்களை நன்கறிந்த மதியூகிகளுக்கும், அதுபோகஸ்தர்களுக்கும் இதன் உண்மை புலப்படாமற்போகாது. கத்தோலிக்கு இந்தியரின் முன்னேற்றத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் இச்சமயம் எழுந்திருந்து இடுப்புகட்டிக்கொண்டு வேலைசெய்யவேண்டும். இச்சமயத்தைக் கைநெகிழவிடுவார்களானால் அவர்கள் காரியமுழுதுங் கெட்டுப்போகும்.

கத்தோலிக்கு இந்தியரே! எல்லோரும் ஒற்றுமையை நம்புங்கள். ஒற்றுமை வலிமைதரும். அப்போது உங்களை எவராலும் வெல்லமுடியாது. சத்திய கத்தோலிக்கு வேதத்தைச் சேர்ந்தோர் அனைவரும் ஒரே தாய் தகப்பனின் பிள்ளைகளைப்போல் ஒற்றுமையாயும் சமாதானமாயும், சகோதரரைப்போலும் நடவுங்கள். அப்போது சர்வேசுரன் உங்களை இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வதிப்பார். நீங்கள் பெரு வாழ்வு வாழ்வீர்கள்!

மதியல்லோ விதியாச்சு சதியல்லோ செய்வினீர், விதியற்றுண்டே.

—(திருவள்ளுவர் ஞானவெட்டி.)

வெண்பா.

விதியெழுதினவைத்ததில்லே வேதாவுன் சித்தம்
மதியினுறமீறினுல் வாய்க்குமே—விதிபோல
கடந்தோமேயானுல் பாவ நமக்குண்டோ?
கடவுள் என் கேட்பார் கணக்கு.

—(மார்க்கண்டேயர்.)

ALL THAT YOU DO, DO WELL.
செய்வன திருந்தச் செய்.

செய்யவேண்டுவன வற்றைச்-சரிவர அதாவது (அவற்றைச்செய்தலினால் அடையக்கூடிய பிரயோஜனத்தைப் பெறத்தக்க விதமாகப்) பயன்படச் செய் என்று அர்த்தங்கொள்ளும். ஷை ஔவையின் வாக்கியத்தை அறியாதார் பலர் இரார். பள்ளிச் சிறார்கள் ஒவ்வொருவரும் ஆரம்பத்திலேயே படிக்கும் படிப்பிது. எழுத்து வாசனையறியாத பெரியோர்கள்முதலாய்ச் சிறியோர்கள் இவ்வாக்கியத்தைப் பன்முறைச் சொல்லிப் படிக்கும்போது, அதைக் கேளாமல் இருந்திரார். ஆகவே சர்வ சாதாரணமான இச்சிறு வாக்கியத்தை-அநேகர் அறிந்திருந்தும், அதனைச் சிந்தித்து, அது போதிக்கிற போதனையை கண்குணர்ந்து, அதன்படி கடந்து காரியசித்தி பெறுமற்போகின்றனர். "கற்கக் கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத் தக" எனும் குறள் வாக்கியப்படி, படித்தறியவேண்டிய விஷயத்தை ஐயந்திரிபறப் படித்தறியவேண்டும். படித்தறிந்தபின் படித்தறிந்தவாறு நடத்தல் வேண்டும். ஷை படிப்பினையின்படி அநேகர் இலௌகிகக் காரியங்களை ஒருவாறு திருந்தச் செய்தாலும், ஞானக்காரியங்களை மேலெழுந்தவாரியாகவும் ஒப்பாசாரத்துக்காகவும் செய்து, அவற்றால் அடையக்கூடிய அரிய நன்மைகள் அனேத்தையும் அவலமாக்கிவிடுவார்கள்.

நாம் செய்யும் ஒவ்வொரு நற்கிருத்தியத்தினாலும் நாம் அடையக்கூடிய முழுப்பலனையும் அடைவதற்கு நம்மிடத்தில் அது விஷயத்தில் சுத்த கருத்து இருக்கவேண்டும். தற்பெருமைக்காக, மனுஷருடைய முகத்தாட்சண்யத்துக்காக வல்லாமல், எல்லாவற்றையும் சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காகச் செய்யவேண்டும். மேலும், அக்கிருத்தியத்தைப் பக்தியோடும், ஆசையோடும், சுறுசுறுப்போடும் செய்யவேண்டும். எல்லாத்துக்குமுன்னே, யாதொரு நற்கிருத்தியத்தைச் செய்யப் போகும்போது, நாம் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருக்கிறோமாவென்று பார்க்கவேண்டும். தேவ இஷ்டப்பிரசாதமில்லாமல் சாவான பாவத்தோடிருக்கையிலே செய்யும் எந்தக் கிருத்தியமும் சர்வேசுரனுக்குப் பிரியப்படாது. அதனால் யாதொரு நன்மையும் வராது.

ஜெபம் செய்யும்போது அநேகர் தங்கள் வாயாற் சொல்லும் வசனங்களை மனதாற் சிந்தியாமலும், அல்லது பக்திக்குரிய வேறு ஞானசிந்தனைகளைச் செய்யாமலும், பாராக்குடனும் உலக விவகாரங்களில் தங்கள் சிந்தனைகளைச் செல்லவிட்டும்கொண்டிப்பிள்ளை சொல்லுவதுபோல் ஜெபத்தைச் சொல்லுவார்கள். இவ்வாறு 53-மணி, 153-மணிச் செபங்களை நெடுநேரஞ் செய்வார்கள். விசேஷமாய்க் இழவர்கள் தங்கள் ஜெபத்தின் மத்தியில் வீட்டு விவகாரத்தை யாருசரித்த பேச்சு சம்பாஷணைகளையும் சேர்த்துக் கொள்ளுவார்கள். "பிரியதத்தத்தினாலே பூரண மரியாயே வாழ்க. அடே ரத்தினமரி! தழந்தையை விழித்துக்கொண்டழுகிறான். ஓடிவந்து தூக்கு. விழுந்துவிடப்போகிறான். ஓடிவா. கர்த்தருடனே ;பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. "அடே வந்தாயா? ஏணியிலிருந்து விழுகிறான் பார் தழந்தை. ஓடிவா சீக்கிரம்." உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவருமாமே. ஹர்ச். மரியாயே, அடே பாப்பா! தம்பி பெரியவன் எங்கே போனான் பார்? தெருவில் வண்டியிலே கிண்டியிலே அகப்பட்டுக்கொள்ளப்போகிறான். சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும், அடே அடே ரசுங் கொதித்துப்போச்சுது. கொஞ்சந் தண்ணீர் தெளித்து இறக்கு உடனே, கடுத்துப் போகப்போகிறது. எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் ஆமென்சேசு." என்று பிரியதத்த மந்திரத்தை இரகசியத்தை அடுப்பிலிருந்து இறக்குகிறதோடே முடிப்பார்கள். இப்படிச் செய்கிற ஜெபம் எம்மாண்டவருக்கு எள்ளளவேனும் ஏற்குமா? இப்படிப்பக்திச் சுறுக்கின்றி வெது வெதுப்பாய்ச் செபம் செய்வதைப்பார்க்கிலும், புராக்கில்லாமல் பக்தியுடன், உருக்கமாய் ஒரு பர., பிரி., திரி. சொல்லியொப்புக்கொடுப்பது உசிதமாகும். உலகக் கவலையை ஒழித்துவிட்டு, அல்லது ஒரு புறம் ஒதுக்கிவைத்துவிட்டு ஜெபம் செய்யவேண்டும். "எவனும் இரண்டு எஜமானர்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடாது" என்பதும், "சர்வேசுரனையும், அவருடைய இராச்சியத்தையும் முந்தத் தேடுங்கள். அதனோடு மற்றவையுங்கூடக் கொடுக்கப்படும்." என்பதும் நமதாண்டவர் திருவுளம்பற்றிய வசனங்கள். இவைகளை அநுசரித்து நாம் முதலில் நமது ஆத்ம காரியத்தை அதிமுக்கியமாகக் கவனிக்கக்கடவோம். அப்படிச் செய்வோமானால் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்தருளியபிரகாரம், நமது சரீரத்துக்கடுத்தவைகளையும் நமக்குக் கூடக்கொடுப்பார்.

மேற்கண்டபடி உண்மையான பக்திக் கருத்தின்றி வாடிக்கையார்த்தமாய்க் கோவிலுக்குப் போதல், பிறர் மெச்சிக்கொள்ளத் தருமஞ் செய்தல், திருநாள் கொண்டாடுதல், முதலிய கிருத்தியங்களால் நமக்கு ஞான நன்மை இலவலேசமும் கிடைக்கமாட்டாது. "வலது கரம் செய்வதை இடது கரம் அறியாமலிருக்கட்டும்" என்பது நமது கர்த்தரின் கற்பனை. சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கல்லாமல் வேறு இலௌகிகக் கருத்துடன் செய்யும் கருமங்கள் எவையும் ஞானப்பலனைப் பெறுவிக்கமாட்டா.

சிலர் பக்தியுடன் உருக்கமாய்ச் செபித்து, நற்கிருத்தியங்களைச் செய்கிறார்களென்றாலும், அவர்கள் நடத்தை ஆகாத நடத்தையாயிருப்பதினிமித்தம் அவர்களின் ஜெபமும், நற்கிருத்தியங்களும் சர்வேசுரனுக்குப் பொருத்துவதில்லை; அவைகளுக்காக யாதொரு சம்பாவனையும் கிடைக்கிறதில்லை. ஏனெனில், "ஆண்டவரே, ஆண்டவரே என்கிற எவனும் மோட்சராச்சியத்திற் பிரவேசிக்கப்போகிறதில்லை. என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவன் எவனோ அவனுக்கே மோட்ச சம்பாவனை யளிக்கப்படும்" என்று நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தாமே திருவுளம்பற்றியிருக்கிறார். இத்தாற்பரியம் என்னவென்றால், "கையில் ஜெபமாலை கக்கத்தில் கண்ணக்கோல்" என்பதற்கிணங்க, செய்கிறதையெல்லாம் அதிருத்தியமாய்ச் செய்துவிட்டு, ஆண்டவரே, சேசுவே, என்றால் கேட்கப்படாது என்பதாம். செய்கிற பாவத் தொழிலை விடாமலும், அதற்காகப் பச்சாதாபப்படாமலும், பாவப்பொறுத்தல் அடையாமலும், நாம் செய்கிறதை (பாவத்தைச்) செய்துகொண்டே, ஜெபஞ் செய்தாலும், பூசை கண்டாலும், கன்மை வாங்கினாலும், மற்றும் நற்கிரியைகளைச் செய்தாலும் அவையனேத்தும் விழலுக்கிறைத்த நீர்போலும், கடலிற் கரைத்த புளிபோலும், காட்டில் எரித்த நிலாபோலும் வியர்த்தமாகும். ஆகவே நாம் செய்யும் ஜெபமும் தபமும், தானமும் தருமமும், மற்ற நற்கிருத்தியங்களும், நமக்குப் பயன்தரவேண்டுமானால், நாம் முதல் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருக்கவேண்டும். இரண்டாவது நம்மிடத்தில் சுத்தக்கருத்து இருக்கவேண்டும். மூன்றாவது பக்தியுடனும் உருக்கத்துடனும் செய்யவேண்டும். இதுவரையில் நாம் செய்தவைகளைச் சரியாய்ச் செய்யவில்லையானால், இனிமேலாவது செய்யுமவைகளைச் சரியாய்ச்செய்ய முயலவேண்டும். ஆகாத பழக்கங்களையும், பயனில்லாத செயல்களையும் விட்டொழிக்கவேண்டும். நாம் செய்கிற முறை எப்போது சரியல்லவென்று காண்கிறோமோ, அப்போதே அதை அகற்றிவிட்டுச் சரியான முறைகளைக் கையாட முயலவேண்டும். "பழக்கம் கொடியது பார் பாறையினைக் கோழி கிழிக்கும்" என்றவாறு, பழக்கம் கெட்டது. வழக்கத்தை வழக்கத்தாலேயே வெல்லவேண்டும்.

"மரம் எந்தப் பக்கம் சாய்ந்திருக்குமோ அந்தப் பக்கத்திலேதான் அது விழும்" என்று நமது தெய்வ கர்த்தர் திருவுளம்பற்றியிருக்கிறார். அதாவது ஒரு மனுஷன தன ஜீவியகாலத்தில் எந்தப் பழக்கத்தில இருந்தானோ அந்தப் பழக்கத்திலேயே அவன சாவான எனபது கருத்து. "பாம்பொடு பழகுகிறவன பாம்பினால் கடிபட்டிறப்பான்" என்பது உலகோர் பழமொழி. ஆகையினால், நம்மிடத்தில் கெட்டப் பழக்கங்கள், பிரயோஜனமற்ற வழக்கங்களிருக்குமானால் அவைகளை உடனே தவிர்த்துவிட்டு, நற்பழக்கங்களையும், பிரயோஜனமான காரியங்களையுங் கைப்பற்றிச் செய்யுங் காரியங்களைச்செவ்வனே செய்து, அவற்றினால் அடையக்கூடிய பலனியாவையும் பெற்று வாழ்வோமாக!

ஆதிகம் விருத்தம்.

ஐங்கரன்றலையிழக்க அரிவனந் தன்னிற் போக, சங்கரன் பிச்சையேற்கச் சதுர்முகனெழுதினானே, அங்கவனெழுதினுக்காலவன்றலை யறுபடாக, இங்கெவனெழுதினான் சொல் லிதுவெல்லாம் மயக்கந்தானே.

விதியினால் வருவதல்லால் வேறில்லையென்று முன்னோர், மதியில்லாருரைத்த சொல்லை மனதினுட்கொண்டோர் கேளீர், பதியெலாமிரக்கமான பரனோடும் பார்வனந்தனிற் சென்றோனும், கதிதருங் கடவுடாமோ கண்ணினைத் திறந்துபாரீர்.

—(சத்தியகாத பிள்ளை.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2.—அதிகாரம்; வசனம்—1-7.

கன்னிமரியாயி தமது பந்துவாகிய எலிசபெத்தினில்லத்தை விட்டு, நசரேத் ஊருக்குச் சென்றுள். அங்கு சென்ற போதுதான், மத்தெயுஸ் 1-ம் அதிகாரம், 18-24-ம் வசனங்களில் கூறியுள்ள வர்த்தமானம் சம்பவித்தது. சேசுக்கிறீஸ்துநாதர் தாவீது ராசாவின் சிம்மாசனத்தைத் தமது தேவபிதாவினிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டியகாலம் நெருங்கினபடியால், தாவீது ராசாவைப்போல் அவருடைய நகரிலேயே பிறக்கவேண்டியது கிரமமாம். மக்கேயாஸ் தீர்க்கதரிசியும் (5-அதிகாரம், 2-வசனம்) இதனை வெளிப்படுத்தியுள்ளார். யூத ஜனங்களும், பிரதான ஆசாரியரும், ஜனத்தின் வேதபாரகரும் இவ்விசேஷத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். (அருளப்பர் 7-அதிகாரம், 42-வசனம்.)

சர்வேசுரன் தமது தேவ பராமரிப்பின் நடவடிக்கைகளால் மெஸ்ஸியாஸ் அரசனுகிய பூலோக இரட்சகர், தாவீது ராசாவின் சொந்த நகராகிய பெத்லேமிலே ஜனனமாவதற்காக உலகத்தில் நடந்தேறிய சகல சம்பவங்களையும் ஒழுங்குபடுத்தி, அவைகளை வலிமையாயும் இனிமையாயும் நடத்திக்கொண்டுவந்தார். பூலோக அரசுக்களில் நடுநாயகமாய் விளங்கின ரோமருடைய அரசாங்கமும் இதற்கு அநுசரணையாயிருக்கவேண்டுமென்பது தேவ சித்தமாயிருந்தது.

1-ம் வசனம்.—"அந்நாட்களிலே சம்பவித்ததேதெனில்: உலகம் முழுமையும் குடிகணக்கு எழுதப்படும்படியாக செசார் அகுஸ்துஸ் இராயனிடத்திலிருந்து ஓர் கட்டளை பிறந்தது."

"அந்நாட்களிலே" என்றவார்த்தையால் ஸ்நாபக அருளப்பர் பிறந்த காலம் குறிப்பிடப்படுகின்றது.

அக்காலத்தில் ரோமருடைய செங்கோன்மை ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா என்னும் மூன்று கண்டங்களிலும் செலுத்தப்பட்டுவந்தது. அவர்களுடைய ஆளுகைக்குட்பட்ட தேசங்கள்மாத்திரம், அக்காலத்தில் பிரபல்யமாயிருந்தபடியால், ரோமர் உலகமெல்லாம் இராச்சிய பாரம்பண்ணுகிறார்கள் என்ற பேச்சு வழங்கிவந்தது. ஆகவே, உலகமெல்லாம் குடி கணக்கெழுதும்படி கட்டளை பிறந்ததென்று அர்ச். லூக்காஸ் கூறுகிறார்.

இங்கே சொல்லப்பட்ட செசார் அகுஸ்துஸ் இராயனின் உண்மையான பெயர் ஒத்தாவியுஸ் என்பதாம். இவன் சக்கரவர்த்தியாய் ஆண்டுவந்தகாலத்தில், ரோமருடைய அரசாங்கம் செழித்தோங்கி, மெத்தச் சிறப்பும்செல்வாக்கும்பிரபல்யமும்பெற்று விளங்கினது. இவன் அபார செல்வத்திலும், ஒப்பற்ற கீர்த்திப் பிரதாபத்திலும், குறைவில்லா சமாதானத்திலும் 57-வருஷகாலமாய் அரசாட்சி செய்துவந்தான்.

இச்சக்கரவர்த்தி தனது ஆளுகைக்குட்பட்ட சமஸ்த ஜாதி ஜனங்களின் தொகையை அறியவும், கணக்கான அவனவனுடைய ஆஸ்தி யுடைமை சம்பத்திலிருந்து யிறைவரிகளைக் கற்பித்து, பற்பல யுத்தங்களின் செலவுகளால் குறைவடைந்தரோமை அரசாங்கபொக்கிஷத்தை விருத்திசெய்யவும் இக்குடி கணக்கு எழுதப்படும்படியாகக்கட்டளையிட்டான். யுத்தங்கள் ஒழிந்து உலகமெல்லாம் 12-வருஷமாய்ச் சமாதானத்தில் அமர்ந்து செழிப்புற்று இன்புற்றிருந்தகாலத்தில் சமாதானத்தின் அரசர் எனப் பெயர்பூண்ட மெஸ்ஸியாஸ் அரசர் பிறப்பது சர்வநியாயமே. இவருடைய ஜனனக் காலத்தைப் பற்றி வேதசாட்சிகளின் டாப்பில் (Martyrology) மெத்த சிறப்பாயும் பூஜிதமாயும் எழுதியிருக்கிறதாவது:—

"சர்வேசுரன் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த 5199-ம் வருஷத்திலே, சலப்பிரளயம உண்டான 2957-ம் வருஷத்திலே பிதாப்பிதாவாகிற அபிராமெனபவர் பிறந்த 2015-ம் வருஷத்திலே, தீர்க்கதரிசியாகிற மோயீசனென்கிறவரும், இஸ்ரயேல் ஜனங்களும் எஜிப்த் இராச்சியத்தை விட்டுவந்த 1510-ம் வருஷத்திலே, தாவீதென்கிறவர் இராஜபட்டத்திலேவந்த 1032-ம் வருஷத்திலே, தீர்க்கதரிசியான தானியேல்சொன்னபடியே 65-ம் வருஷ வாரமாகிய எப்தோமதிலே, 194-ம் ஒலிம்பியத்திலே, உரோமாபுரி யுண்டாகி 752-ம் வருஷத்திலே, உரோமாபுரி இராயனுகிய ஒத்தாவியான் அகுஸ்தென்கிறவன் பட்டத்துக்குவந்த 42-ம் வருஷத்திலே, உலோகமெங்குஞ் சமாதானமாயிருந்த நாளிலே, உலோகத்தின் 4-ம் யுகத்திலே, சேசுக்கிறீஸ்துவென்னப்பட்ட சுதனுகிய சர்வேசுரன் பிதாவாகிய சர்வேசுரனுக்கு உகந்த சரிசமான குமாரனுயிருக்கையில் அர்ச்சிக்கப்பட்ட தமது ஆகமனத்தைக் கொண்டு உலோகத்தை இரட்சிக்கச் சித்தமாயிருந்து, இஸ்பிரீத்துசாந்துவினுலே உற்பவித்து, அதற்கு ஒன்பதாம் மாசத்திலே யூதேயா சீமையின் பெத்லேமென்கிற ஊரிலே, மார்கழி மாதம் 25-ம் தேதியில், பிரசித்தமாய் ஸ்துதிக்கப்படுகிற கன்னியாஸ்திரியான அர்ச். மரியம்மாளிடத்திலே மனுஷனுப்பிறந்தார்" என்பதாம்.

2-ம் வசனம்.—"சீரியா தேசத்து அதிபதியாகிய சீரினுஸ் என்பவனுல் இந்த முதலாம் குடி கணக்குச் செய்யப்பட்டது."

அக்காலத்தில் சீரினுஸ் சுல்பிசியுஸ் என்பவன் ரோமைச் சக்கரவர்த்தியின் கீழ் அவனுடைய பிரதிநிதியாக சீரியா தேசத்தை ஆண்டுவந்தான். இவனுடைய ஆளுகையின்போது, முதலாம் குடி கணக்கு செய்யப்பட்டது. மறுபடியும் 10-வருஷங்களுக்குப்பின் இவன் காலத்திலேயே இரண்டாம்குடிகணக்கும் செய்யப்பட்டது. (அப்போஸ்தலர் நடபடிக்கை. 5-அதிகாரம், 37-வசனம்) பலஸ்தீனுவை ஏரோதரசன் சுயராச்சியமாக ஆண்டுவரவில்லையென்றும், ரோமைச் சக்கரவர்த்திக்குக் கப்பங் கட்டிக்கொண்டுவந்ததாகவும் சரித்திராசிரியர் கூறுகிறார்கள். பலஸ்தீனு ரோமையர் ஆளுகைக் குட்பட்டிருந்தபடியால் ரோமை அதிகாரியால் இக்குடிக் கணக்கு நடத்தப்பட்டது.

3-ம் வசனம்.—"ஆதலால் எல்லோரும் தங்கள்தங்கள் பேர் எழுதிக்கொடுக்கும்பொருட்டு, தங்கள் தங்கள் சொந்த ஊருக்குப் போவார்கள்." குடி கணக்கைப்பற்றிய கட்டளை ஜனங்களுக்குள் வெளிப்பட்டபின் ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்கள் தங்கள் பேர் எழுதிக்கொடுக்கும்பொருட்டுத்தத்தம்சொந்தநாட்டுக்குச் செல்லவேண்டியதாயிற்று. இவ்வேற்பாடு யூதர்களுடைய வழக்கத்தையொட்டி நடத்தப்பட்டது. ஏனெனில், ரோமை அதிகாரிகள் யூதர்களுடைய குலசாரங்களையும், மதக்கொள்கைகளையும், வழக்கப் பழக்கங்களையும் ஆதரித்துவந்தார்களேயன்றி அவைகளுக்கு இடர் செய்து ஜனங்களை இம்சிக்கவில்லை.

யூத ஜனங்கள் 12 கோத்திரங்களாகவும், இக்கோத்திரங்கள் பல குடும்பங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. பலஸ்தீனு தேசம் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, இக்குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. தாவீது ராசாவின் குடும்பம் பெத்லேம் ஊரைச் சேர்ந்தது. சூசையப்பரும் கன்னிமரியாயும் தாவீது ராசாவின் குடும்பத்தினராயிருந்தபடியால் அவர்கள் பெத்லேம் ஊருக்குப்போய் தங்கள் பேர்களை பதிவு செய்யவேண்டியதாயிற்று. இவர்களிருவரும் பெத்லேமுக்குச் சென்றதும், அங்கு சேசுநாதர் ஜனனமானதும், அவர் யூதர் கோத்திரத்தையும் தாவீது ராசாவின் குடும்பத்தையும் சார்ந்தவர் என்றும் தீர்க்கதரிசிகள் ஏற்கெனவே அறிவித்திருந்தபடியே அவர்தாம் மெஸ்ஸியாஸ் அரசரென்றும் உலகமுழுமைகும் வெளிப்படையாகும்பொருட்டு தேவதிருவுளம் காரியங்களை நடத்திவந்தது.

4-5-ம் வசனங்கள்.—"அப்படியிருக்க, சூசையப்பர் தாவீதின் கோத்திரத்தையும், குடும்பத்தையும் சேர்ந்தவராகையால், கருப்பவதியான தம்முடைய மனைவி மரியம்மாளோடு பேரெழுதிக்கொடுக்கும்படியாக, கலிலேயாவிலுள்ள நசரேத்தை விட்டு யூதேயாவிலுள்ள பெத்லேம் என்னும் தாவீது நகரத்துக்குப் போனர்."

6-7-ம் வசனங்கள்.—"அவர்கள் அங்கே இருக்கையில் சம்பவித்ததேதெனில், அவளுக்குப் பேறுகாலம் நிறைவேறிற்று. அவள் தன் தலைச்சன் பிள்ளையைப் பெற்றுத் துணிகளால் அவரைச்

சுற்றி முன்னிட்டியில் கிடத்திவைத்தாள். ஏனெனில் சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாமல்போயிற்று."

கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்திலிருந்து யூதேயாவைச் சேர்ந்த பெத்லேமுக்கு சுமார் 4 நாள் பயணம் பிரயாணிகள் சிக்கேம், பெத்தெல், ஜெருசலேம் மார்க்கமாயர்வது, அல்லது ஜோர்தான் நதியோரமாயாவது ஜெரிக்கோவரையில் சென்று ஜெருசலேம் நகரையடைந்து பெத்லேமுக்குச் செல்வதுண்டு. பெத்லேமில் குடியிருந்தவர்களின் கணக்கு சுமார் 300 பேர். இப்படிப்பட்ட தூரப் பயணத்தைக் கருப்பவதியாயிருந்த கன்னிசுத்தத் தேவமாதா தமது பத்தாவாகிய சூசையப்பருடன் சிலநேரம் வேசரியின்மீதும், சிலநேரம் கால்நடையாயும் கடினமான குளிர்காலத்தில் காடு, கணவாய், மலைநாடுகளைக் கடந்துசென்றதானது பரிதாபகரமான காட்சியாயிருந்திருக்கவேண்டும்.

அவளுடைய கருப்பம் அவளுக்குத் துன்பத்தையும் கஸ்தியையும் கொடாமல் ஆறுதலையும் சந்தோஷ உல்லாசத்தையும் கொடுத்தது. அது அவளுக்கு ஓர் சுமையாகத் தோற்றவில்லை. அர்ச். பெர்நார்து வசனிக்குமாப்போல் விலைமதிக்கப்படாத இப்பொக்கிஷம், அதிலேசான இச்சுமை, தன்னைச் சுமந்து தாங்கி நடத்திவரும் கர்த்தாதி கர்த்தரானபடியால் அது அவளுக்கு திவ்யானந்த உல்லாசமாயிருந்தது.

பெத்லேம் என்பதற்கு அப்பத்தின் வீடு தி என்று அர்த்தம் கூறப்படுகின்றது. "கிறீஸ்துநாதர் பெத்லேமில் பிறந்ததானது மெத்த பொருத்தமுள்ளது; ஏனெனில் அவர் பரலோகத்தினின்று இறங்கி வந்த ஜீவியத்தின் அப்பம் அல்லவா?" என்று அர்ச். கிரகோரியார் வசனிக்கிறார். இப்படியே சூசைமாமுனியும் கன்னிமரியாயும் பெத்லேமுக்கு வந்தபோது, வெகு ஜனங்கள் மேற்கூறிய கட்டளை நிமித்தமாகத் தத்தம் பரிவாரங்களுடன் அவ்வூருக்கு முன்னதாகவேவந்து எல்லா வீடுகளிலும், அவ்வூர் சத்திரத்திலும் திரளாய் நிறைந்திருந்தார்கள். ஆகையால் சூசைமாமுனியும் கன்னிமாதாவும் பட்டணத்தின் வெளியில் கோட்டையருகே ஒரு கற்கெபியில் இரவு தங்கப்போனார்கள். அதேதெனில்:—மலைத்தேசமாகிய யூதேயா ராச்சியத்தில் மலையடிவாரங்களில் தற்சுபாவமாய் அமைந்துள்ள கெபிகள் பல உண்டு. இப்படிப்பட்ட கற்கெபி ஒன்று பெத்லேமின் கீழ்த்திசையில் பரதேசிகளுக்கும் வழிப்போக்கருக்கும் தாபரமுமாய், இடையர்களுக்கும் மிருகங்களுக்கும் ஒதுக்கமுமாயிருந்தது. இந்த அரண்மனையைப் பரலோக இராயன் தமது முதல் வாசஸ்தலமாகத் தெரிந்துகொண்டார். இந்த மாளிகையில், பரலோகமும் பூலோகமும் பாதாளமும் படைத்த சர்வ கர்த்தாதி கர்த்தர் வசிக்கவந்தார்.

இந்தக் கற்கெபியில் சூசையப்பரும் கன்னிமரியாயும் மார்கழி மாதம் 24-ந் தேதி சந்தியாநேரம் உட்பிரவேசித்து அதனைத் துப்புரவாக்கிச் சர்வேசுரனுக்கு மிகுந்த ஸ்தோத்திரஞ் சொன்னதின்பின், கன்னிமாதா பிரசவநேரம் முடுகினதை யறிந்து, அதிக மகிழ்ச்சியினால் தரையில் முட்டிட்டு ஆகாசத்தை நோக்கி இரு கரங்களைக் குவித்துத் தியானத்தி லுட்பிரவேசித்திருக்க, அவளுடைய ஆத்துமம் சந்தோஷ வெள்ளத்தில் மூழ்கினதாகவும் இருதயம் தேவாமிர்தம் நிறைந்ததாகவும், சரீர முழுதும் பக்தியின் வேகத்தா லுருகுகிறதாகவுமிருக்க, கன்னிமுத்திரை சற்றுங் குன்றுமல், பளிங்குப்பாத்திரத்திற் சூரியக்கதிர் பிரவேசிக்கிறதுபோல் மாதாவின் உதரத்திலிருந்து நீதிஸ்பர சூரியனுகிய தேவசுதன் நடுச்சாம ராத்திரியிற் புறப்பட்டுக் கண்ணுக்குத் தரிசனமானார். அசூஷணத்திலே யந்தக் கற்கெபி முழுதும் மோக்ஷத்துக்குச் சமானமாய் மாறிப்போகவே, மோக்ஷத்திலிருந்த தூதர் அதி தூதர் யாவரு மிறங்கி நாதகீதம்பண்ணி யானந்த மகிழ்ச்சியான மங்களங்களைப் பாடித் தங்கள் தேவனை வணங்கி நமஸ்கரித்தார்கள். தேவசுதன் உதித்தமாத்திரத்தில் தமக்கு எவ்விதமான படுக்கையைத் தெரிந்துகொள்ள சித்தங்கொண்டாரென்பதில் இவருடைய பிறப்பைப்பற்றி எழுதியுள்ள ஞான கர்த்தாக்களுக்குள் அபிப்பிராய பேதங்களுண்டு. அது ஏதென்றால்: மாதாவினுதரத்திலிருந்து புறப்பட்டவுடனே தரையில்முதற்காணப்பட்டு மானிடனுடைய அகந்தையைத் தாழ்த்த நினைத்தாரென்று சிலர் சொல்ல, தேவதூதர் தங்கள் கைகளில் முந்த முந்தக் கைக்கொண்டு வணங்கிக் கன்னிமாதாவின் திருக்கரங்களில் வளர்த்தினார்களென்று சிலருரைக்க, மற்றவர்கள் கன்னிமாதாவின் திருக்கரங்களைத்தானே யதிக பாத்திரமான பத்திராசனமாக அவர் கைக்கொண்டாரென்று அதிக நியாயத்துடனே மொழிகிறார்கள்.

இப்படிப்பட்ட விலைமதியாத மாணிக்கத்தைக் கன்னிமாதா தமது திருக்கரங்களில் அடைந்தவுடனே தமது மார்போடே யருகித்து, முகத்தோடே யரவணைத்துக் குளிர்காயப் பண்ணினதின்பின் தமது திவ்ய குமாரனுடைய மிருதுவான அழகிய மேனியை, ஏற்கெனவே தேடிவைத்திருந்த துகில் துண்டுகளால் பொதிந்து முன்னிட்டியில் வைக்கோல்மீதே சயனிப்பித்து, சாஷ்டாங்கமாய்ப் பணிந்து நமஸ்கரித்து வணங்கி, தமது தேவனென்று அவருடைய திருப்பாதங்களிலும், ராயனென்று திருக்கரங்களிலும், புத்திரனென்று திருமுகத்திலும் முத்தமிட்டாள். சூசைமாமுனிவரும் அந்தப்பிரகாரமாய் வணங்க, அவ்விடத்திலிருந்த மிருகங்களும் தங்களைப் படைத்தவரையறிந்த மேரையாக வணங்கி நமஸ்கரித்தன.

கன்னிமரியாயி தன் தலைச்சன் பிள்ளையைப் பெற்றுளென்று சொல்லும்போது, அந்தப் பிள்ளைக்கு முந்தி வேறு பிள்ளைகளைப் பெற்றதில்லையென்று அர்த்தமாகுமே யொழிய பின்பு வேறே பிள்ளைகளையும் பெற்றுளென்று அது குறிக்கிறதில்லை.

(தொடரும்.)

S. M.

விருத்தம்.

இருட்டறையிற் பொருளெடுத்த வாறதொக்கும்
இறைவருட வுபதேசத் தின்பமில்லாற்
இருட்டறையில் விளக்கெடுத்த வாறதொக்கும்
இறைவருட வுபதேச மியம்புவ காலே
மருட்டதனை நீக்க மரித்தவனைப்போல
மனனர்குலத் துபதேச மதிக்குவ காலங்
குருட்டெருதை யுழுவ குருடன குருவின் சேவன்
கூடாரகினில் வீழ்வார் குறிப்பில்லாமல்.

—(பட்டணத்துப் பிள்ளை.)

HISTORY OF St. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

3-ம் அதிகாரம்.

அகுஸ்தீன் என்பவரின் பாலியமும் அவருடைய ஆசாபாசங்களின் தோற்றமும் அவைகளின் காரணங்களும் வளர்ச்சியும் உச்சமும்—அர்ச். மோனிக்கம்மாளுக்கு ஆதுதல் அளிக்கவும் அர்ச். அகுஸ்தீனுக்குத் தாபரமாயிருக்கவும்—பத்தீஸ்யூஸ் அஞ்ஞானத்தை வெறுத்து திருச்சபையோடு ஐக்கியமடைகிறார்.

(கர்த்தர் அவதாரம் 368—370.)

அர்ச். அகுஸ்தீன் சொல்லுவது, "நான் செய்த தோஷ அக்கிரமங்களையும், என் இருதயத்தை அந்தக்கேடாக்கிய நிர்ப்பாக்கிய சிற்றின்பங்களையும் விவரித்துச் சொல்லுவேன். நான் அவைகளைச் சொல்லத் தொடங்கினது, ஓ! என் தேவனே, அவைகளின்மேல் எனக்குள்ள பற்றுதலினாலல்ல, ஆனால் நான் அவைகள்மட்டில் பச்சாத்தாபப்பட்டு உம்மை ஓயாமல் நேசித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதைப்பற்றித்தான். எனெனில் நான் இப்பொதும்மை நேசிக்கிறேன். ஓ! என் கர்த்தாவே, இந்த நேசத்தின் சக்தியினாலேயே, துக்கத்தோடும் விதனத்தோடும் என் வாலிபப் பிராயத்தின் அலங்கோலங்களையும் தாறுமாறுகளையும் நினைவுகூர்வேன். அப்படி அவைகளை மனஸ்தாபத்துடன் நினைவுகூர்வதினால், உமது மாதுரியத்தைச் சுவைக்கக் கூடுமாயிருக்குமென்றெண்ணுகிறேன். ஓ! பரம சந்தோஷமே, நீரே உண்மையான சந்தோஷமென்று இப்போது பூரணமாய் அறிகிறேன்."

அர்ச். அகுஸ்தீன் இப்படிப்பட்ட தாழ்ச்சியும் பிரதாபமும் நிறைந்த உணர்ச்சிகளுடன் தன் ஞாத்துமத்தில் தோன்றிய ஆசாபாசங்களை விவரித்துக்காட்டுகிறார். இவ்வாசாபாசங்கள் 368-ம் ஞாத்தில் மதாராவில் இரகசியத்தில் தோன்றி, 370—371-இல் தகாஸ்தேயில் பிரசங்கமாய்ப்

பெருகி, கடைசியாய் கார்த்தேஜ் நகரில் 372-ம் ஜூத்தில் தம் உச்சத்தையடைந்து பதினேந்து வருஷகாலம்வரைக்கும் அவரது அறிவை மயக்கிச் சித்தப்பிரமையாக்கின. இங்கிர்ப்பாக்கிய அர்தஸ்தின் ஆரம்பத்தையும், தொடர்ச்சியையும், அதனால் நேர்ந்த பயங்கரத்துக்குரிய கேட்டையும் அவர் வாக்குச் சாதுரியத்துடன் எடுத்துக்காட்டுவதைக் கேட்போமாக. அப்படிக் கேட்பதினால், அச்சந்தர்ப்பங்களில் தாயாருக்கு எத்தன்மையான துயரம் உண்டாயிருக்கக்கூடுமென்றுகிரகித்துக்கொள்வதுசுலபமாயிருக்கும்.

அகுஸ்தீன் மதாரா நகரில் சேர்ந்தபோது அவர் வயது 13, அல்லது 14-க்குமேற்பட்டிராது. அவருடைய மனோசக்திக்கும் புத்தி நீட்சண்யத்திற்கும் எதனால் உற்சாகம் உண்டாயிற்றென்றுவது, அவர் தகாஸ்தே நகரிலிருக்கும்போதே அவ்வுற்சாகம் தலைகாட்டத் துவக்கிற்றென்றுவது, நாம் அறியோம். ஆனால் இது ஒன்று நிச்சயம். அதாவது, அவர் பிரதம வித்தையில் தேறி, வாக்கியாலங்காரம், செய்யுள் அலங்காரம் ஆகிய இவைகளுக்கடுத்த மேலான இலக்கண இலக்கிய புஸ்தகங்களை வாசிக்கத் தொடங்கினபிறகு, முழுதும் மாற்றமடைந்தார். படிப்பிண்மட்டில் அவருக்கிருந்த வெறுப்பு மாயமாய் மறைந்துபோயிற்று. விர்ஜில், ஹோமர், ஷிஸரோ, ஒவித் என்னும் சிறந்த வித்துவான்கள் எழுதியுள்ள பிரபந்தங்களை அவர் வாசிக்கவே இதுவரைக்கும் அடைபட்டுக்கிடந்தாப்போலிருந்த அவரது மனோசக்தி வெளிப்படையாய்க் காணப்பட்டது. விசேஷமாய் விர்ஜில் என்பவர் எழுதிய புஸ்தகமே அவர் மனதில் ஆழமாய்ப் பதிந்தது. தீதோ என்பவனின் துயரங்களைக் கண்ணீர் சிந்தாமல் வாசிக்க அவரால் முடியாது. இப்படிப்பட்ட துயர வுணர்ச்சி அவரிடம் தோன்றுமல் விலக்கும்படி அப்புஸ்தகத்தை வாசிக்கவேண்டாமென்று யாராவது அவரைத் தடுத்தால் உடனே அழுவார். அவரது கோரிக்கைக்கிணங்கி அதை மறுபடியும் வாசிக்கும்படி அவரை ஏவினால் இன்னும் அதிகமாய் அழுவார். அத்தியந்த உருக்கமும் ஆழ்ந்த உணர்ச்சியும்கொண்டிருந்த அவரது ஆத்துமமானது, இப்புஸ்தகத்தை வாசித்து வாசித்து மேலான சந்தோஷத்தையடையும்.

ஹோமர் என்னும் வித்துவான் எழுதிய ரெந்தங்கள் அவருக்கு அத்தனை பிரியமில்லாததுபோல் தோன்றுகிறது. "இவனெழுதிய புஸ்தகங்கள் என் குழந்தைப் பருவத்தில் எனக்கு எட்டிக்கசப்பாயிருந்தன" வென்று சொல்லுகிறார். அவர் இப்படிச் சொல்வது விர்ஜில் என்னும் வித்துவானுடைய திறமைக்கும், ஹோமர் என்னும் வித்துவானுடைய திறமைக்கும் உண்டான பேதாபேதத்தை அறியாததினாலன்று, அல்லது ஹோமர் என்பவருடைய பிரபந்தங்கள் மேலானவையென்றும் இயல்பில் அதிக மாட்சிமைபொருந்தினவையென்றும், சித்திரக்காரன் படங்களைச் சித்திரித்துக்காட்டுவதுபோல் தான் பேசும் ஒவ்வொரு விஷயமும் பிறர் மனதில் ஆழமாய்ப் பதியும்படி தனது பாஷாலங்காரத்திறமையால் விஸ்தரித்துப் பேசுகிறானென்று அவருக்குத் தெரியாமல்போனதினாலுமன்று, ஆனால் அவர், தாமே சொல்வதுபோல், கிரேக்குப் பாஷையைப் படிக்க அவருக்கிருந்த கஷ்டத்தினால், சகல கவிவாணர்களுள்ளும் சிரேஷ்டனாய் மதிக்கப்பட்டுவரும் ஹோமர் என்பவனுடைய மதுரநிறைந்த கற்பிதங்களை வாசிக்கவும், அலங்கார நிறைந்த அக்கட்டுக்கதைகளில் உண்டான மாட்சிமையையும் சாமர்த்தியத்தையும் கண்டு சுகித்துப் பூர்த்தியான ஆனந்தமடையவும், அவரால் கூடாமற்போயிற்று. சில சமயம் விர்ஜில் என்பவருடைய புஸ்தகங்களில் காணப்பட்ட உணர்ச்சி விசேஷம், கிரேக்கு கவிவாணர்களுடைய புஸ்தகங்களில் இருப்பதைவிட அவ்வளவு ஆழ்ந்ததாயிராவிட்டாலும், சொல் வன்மையில் கனீனமாயிருந்தபடியால் அது அவரது இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்ததென்னலாம். இது எப்படியிருந்தாலுமிருக்கட்டும். இப்பருவத்திலும் உண்மையாகவே எப்போதும், அகுஸ்தீன் விர்ஜில்பாரிசமாகவே மனச்சார்புள்ளவராயிருந்தார். மேலும் தெரென்ஸ், பிளாட்டஸ், ஒவித் என்பவர்களுடைய பிரபந்தங்களையும் வெவ்வேறு உணர்ச்சிகளுடன் வாசித்து, அவர்களுடைய சுகந்த பரிமள வாசனையைச் சுவாசித்து, செய்யுளலங்காரத்தைச் சுவைத்து, அவைகளில் விவரிக்கப்படும் அழகிய கற்பனாரூபங்களுக்கும் அதே சமயத்தில் அவைகளில் போதிக்கப்பட்டுவந்த அபாயகரமான போதனைகளுக்கும் தமதிருதயத்தை ஒப்படைத்தார். ஐயோ! விஷம் தங்கப் பாத்திரத்திலிருக்கிறதென்று அதை யருந்தலாகுமோ! பொன் கத்தியென்று கழுத்தை யறுத்துக்கொள்ளலாகுமோ!

மாணாக்கர்களுடைய புத்தித்திறமையை அபிவிர்த்திசெய்யும்படி, ஜூலே என்பவன்

ஆசக்தியுடன் வசனித்த செய்யுள் வாக்கியங்களை அல்லது தீதோ வென்பவன் மனோவிவகாரத்துடன் புலம்பிய புலம்பலை வசன நடையாய் மாற்றும்படி அடிக்கடி அவர்களுடைய வாத்திமார் அவர்களுக்குக் கட்டளையிடுவார்கள். வீரகாவியத்தில் மனோரதமாய்க் குறிக்கப்பட்டிருக்கும் இப்புருஷர்கள்கொண்ட கோபாவேசத்தை, அடைந்த வியாகுலத்தை, அல்லது காட்டிய காமவிகாரத்தை, எவனெருவன் தனது சுய பாஷையில் சொல்வண்மையோடு தெளிவாய், வெளிப்படுத்தி அவர்களுடைய மனதிலிருந்த உணர்ச்சிகளை நல்ல பாஷா நடையில் தீர்க்கமாய்க் காட்டுவானோ அவனுக்கே வெகுமதி. அகுஸ்தீன் என்பவர் இப்படிப்பட்ட பரீட்சையில் தேர்ச்சியடைந்து வெகுமதி பெறுவாராகையால், அவருடைய வாத்திமார்களும் பள்ளித் தோழர்களும் அவரை வெகுவாய் மெச்சிப் புகழ்ந்து கைகொட்டி ஆர்ப்பரித்துத் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டுவார்கள்.

கடந்த முந்நூறு வருஷ காலங்களாய்க் கிறீஸ்து வேதத்தின் நற்போதனையின் பலனாக, அஞ்ஞானக் கொந்தளிப்பு அடங்கி எங்கும் அமைதியும் அமரிக்கையும் வியாபித்துவரும் நமது காலத்திலேயே, பாலியர்களுடைய மனது ஆசாபாசப் பற்றுதல்களில் சிக்கிக் கெட்டுப்போகாத படிநாம் அத்தனை சாவதானமாய் நடக்கவேண்டியிருக்க, துன்மார்க்கக் கவிவாணர்களும் வித்துவான்களும் இயற்றிய பிரபந்தங்களில் கல்லொழுக்கத்திற்கு வீரோதமானவைகளை நீக்கி அவைகளைச் சுத்தப்பிரதியாய் அச்சிடாமலும், வாத்திமார்கள் அக்கியானிகளாயும், வீரகாவியங்களில் குறிக்கப்பட்டிருக்கும் புருஷர்கள் வசனித்த செய்யுள் வாக்கியங்களுள் அடங்கியிருக்கும் கசுமாலத்தையும் தர்ப்போதனையையும் அவ்வாத்திமார்கள் சரியானபடி விவரித்துக்காட்டாமலுமிருக்கும்போது, நாடக மேடைகளில் மாணாக்கர்கள் ஸ்திரீ புருஷர் வேஷம் பூண்டு மேற்படி செய்யுள் வாக்கியங்களிலுள்ள காமவிகாரத்திற்கடுத்த உள்ளர்த்தத்தை நடித்துக்காட்டி வெளிப்படுத்துவதாயிருந்த அக்காலத்தில், இளைஞர்கள் நீய வொழுக்கங்களில் தவறி கெட்டுப்போவதற்கு எதுகரமான அபாயங்கள் எப்படிப்பட்டவையாயிருந்திருக்குமென்று நினைக்கும்போது பயங்கரத்தினால் நமது உடம்பு சிலிர்க்கின்றது.

அஞ்ஞான சக்கரவர்த்திகளின் நிஷ்டூரஏற்பாடுகளுக்குப் பயந்து இதுவரைக்கும் சுரங்கங்களில் ஒளிந்துகொண்டு வேதசாரங்களை அநுஷ்டித்துவந்த திருச்சபையானது, அவ்வரியாயக் காரர்களின் கொடுமை அடங்கினதைக்கண்டு தைரியங்கொண்டு அப்போதுதான் சுரங்கங்களை விட்டுப் பட்டணத்திற்குள்வந்து வெளிப்படையாய் வேதபோதகம் செய்யத் தலைப்பட்டது. அது இன்னும் இலக்கியப் புஸ்தகங்களைப் பரிசோதித்து அவைகளுள் கல்லொழுக்கத்திற்கு வீரோதமானவைகளை விலக்கிச் சுத்தப்பிரதியாய் அச்சிடவில்லை. அன்றியும், பள்ளிக்கூடங்களில் சத்திய வேதசாரத்திற்கு வீரோதமான வைகளைப் போதிக்கும் வாத்திமார்களை நீக்கி, நல்ல கிறீஸ்துவ பண்டிதர்களை இன்னும் நியமிக்கவில்லை. ஆதலால் கிறீஸ்துவ பிள்ளைகளும் அஞ்ஞானப் பிள்ளைகளைப்போலவே வளர்க்கப்பட்டும் கல்வி கற்பிக்கப்பட்டும் வந்தார்கள். இதைக் கண்டு "ஐயோ! இந்த அவகேடும் அடுக்குமா?" என்று அநேகர் பிரலாபித்தார்கள். ஆனால் கிறீஸ்துவத் தகப்பன்மார் இதைப்பற்றி எவ்வளவுதான் மனவெறுப்புகொண்டபோதிலும், கிறீஸ்துவத் தாய்மார்கள் எவ்வளவுதான் துயரப்பட்டபோதிலும், "மாமூல், வழக்கம், எல்லாம் வழக்கப்படி ஆகட்டும்" என்னும் புத்திகெட்ட ஏற்பாடானது பூலோகத்தின் அரசியைப்போல் வீளங்கி, அவர்களுடைய மனவெறுப்பையும் துயரத்தையும் மேற்கொண்டது. அர்ச். அகுஸ்தீன் சொல்வது, "ஓ! வழக்கம் என்னும் ராகப் பாசாசின் ஏற்பாடே! நீ எப்படிப்பட்ட நீர்த்தாரையைப்போல் வேகமாய்ப் பாய்ந்து ஓடி, நீ பாயும் இடங்களையெல்லாம் உன் வசப்படுத்திக்கொள்ளுகிறாய். உன் பாய்ச்சலை நிறுத்தி உன்னை அடக்க ஒருபோதும் முடியாதா? விசாலமானதும், அபாயத்திற்கு எதுகரமானதுமான, சமுத்திரச் சாகரத்திற்குச் சமானமாயிருக்கும் இவ்வுலக சீவியத்தில், ஏவையென்னும் பூவையின் மக்களை எங்கே இழுத்துக்கொண்டுபோகிறாய்? இலுவையென்னும் அடையாளத்தைத் தங்கள் வெற்றி விருதாகத் தரித்திருக்கும் அவர்கள், இச்சீவியத்தில் அத்தியந்த கஷ்டத்தில் வழி நடந்து செல்லுகின்றார்களே! இடியின் கடவுளென்று அஞ்ஞானிகளால் வணங்கப்படும் யூப்பித்தர் என்பவன் வீபசாரத்தில் அமிழ்ந்திக்கிடந்தானென்று நான் வாசிக்கவில்லையா? நிர்மலமான தேவன் அப்படிப்பட்ட அக்கிரமகடத்தை நடத்திருப்பாரென்பது கனவிலும் எண்ணவொண்ணாது. இருந்தாலும் வீரகாவி

யத்தை யெழுதிய வித்துவான்கள், காம் அவனுடைய அக்கிரமங்களைக் கண்போவிக்கும்படி, அவனை இடியின் தேவனென்றும், தாறுமாறாய் சீவித்துவந்தவனென்றும், செய்யுளலங்காரத் தோடுவரைந்துவைத்திருக்கிறார்கள். நேரென்ஸ் என்பவன் வாலிப வயதுள்ள ஒரு தூர்த்த ஸ்திரீயை காடகமேடையின்மேல் நிறுத்தி "மஹாதேவனுடைய யூப்பித்தர் என்பவன் நடந்த மோக சீவியத்தை எடுத்துப் பேசி 'ஒரு தேவன்! ஆ! எப்படிப்பட்ட கடவுள்! அவரே சிற்றின்ப நுகர்ச்சியில் தன் வாழ்நாட்களைக் கழித்திருக்க, மரணத்திற்கும் அழிவுக்கும் எதுகரமாயிருக்கும் நான் அவரைக் கண்போவிப்பதில் வெட்கப்படுவதேன்? பரிச்சேதமில்லை' யென்று சொல்லி அங்கேயே, அந்த நாடகமேடையின்மேலேயே, காமச் சேஷ்டைகளுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தாளென்பதை நான் படிக்கவில்லையா?"

"அப்படிப்பட்ட அக்கிரமம் நிறைந்த இலக்கிய புஸ்தகங்களை வாசித்துத் தேர்ச்சியடையும் மாணாக்கர்களுக்குக் கனவான்கள் பரிசளிக்கிறார்கள்! அம்மாணாக்கர்களுடைய வாத்திமார்களுக்கு நியாயசாலைகளில் ஸ்தானமுண்டு! அப்படிப்பட்ட அவலட்சணங்களைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாகாதென்று சர்க்கார் சட்டம் ஒன்றும் கிடையாது. நாடகமேடைகளில் இச்சரிதைகளை நடித்தும் அபிநயித்துக் காட்டும் நடனக்காரர்களுக்குச் சம்பளமுண்டு. சிற்றின்ப லீலைக்கடுத்த அப்படிப்பட்ட அசங்கிய வார்த்தைகள், பாலியர்களுடைய மனதில் பதிந்தால் எவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் பாவத்திற்குச் சார்புள்ளவர்களாவார்களென்பது யாருக்கும் உள்ளங்கை கனிபோல் சொல்லாமலே விளங்கும்." அர்ச். அகுஸ்தீன் மீளவும் சொல்வது "வீவேகத்திற்கு அத்தியாவசியமான மட்டித்திட்டத்துடன் அல்ல, ஆனால் ஒரே அடியாய் அப்புலவர்களுடைய வாக்கியங்களும் அவ்வாய்ச்சாலகர்களுடைய வசனங்களும் தகாதென்று விலக்குகிறேன். சொல்நயம், பொருள் நயம் பொருந்திய அவர்களுடைய வார்த்தைகள் தங்கத்தால் செய்யப்பட்டு முத்துரத்தினங்கள் பதிக்கப்பெற்ற பாத்திரங்களுக்குச் சமானம். ஆனால் நாம் பானம் செய்யும்படி அச்சொன்ன பாத்திரங்களில் அவர்கள் வார்த்துத் தரும் பானமோவெனில், மோக விஷமேவிஷமென்று நிர்மானித்து விலக்குகின்றேன். உபாத்தியாயர்களே முதலாவது, அவ்விஷ பாண்டத்தைக் குடித்து வெறிகொண்டவர்களைப்போலிருந்தார்கள். ஆதலால் அவர்களிடம் பாடம் படிக்கும் நாம் அவ்விஷ பானத்தை அருந்தமாட்டேம்—அதாவது: அவ்வவலட்சண பாடங்களைப் படியோமென்று சொன்னால்—அடிப்பார்கள். இந்நிர்ப்பந்தத்தை வேறு யாருக்காவது தெரிவித்து நமது குறையைத் தீர்த்துக் கொள்ளவும் சாத்தியமில்லை. என்றாலும் ஓ! என் கடவுளே! தேவ சந்நிதானத்தில் என்னை இருத்தி இதுவரையிலும் எனது சீவியகாலத்தில் புரிந்துவந்த அக்கிரம தோஷங்களைச் சிந்தித்துப் பச்சாத்தாபப்படும் அடியேன், அவ்வாத்திமார்கள் கற்பித்துவந்த யாவையும் மனப்பூர்வத்துடன் கற்றுவந்தேன். நான் எப்படிப்பட்ட நிர்ப்பாக்கியனென்னலாம்!"

இன்னும் பாலியராயிருந்த அவர், அசுத்த புஸ்தகங்களில் வாசித்த காமவிஷயங்களும், மோக நாடகங்களில்கண்ட லீலா காட்சிகளும், அவருடைய இளமையும் கசிவுமுள்ள மனதில் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்தனவென்பதைக் கிரகிப்பது கஷ்டமான காரியமல்ல. மேலும் அக்காலத்தில், அவர் இன்னும் ஞானஸ்நானம் பெறாமலும், தன் தாயின் மேற்பார்வை தப்பியும் இருந்தபடியால், தன்னைவிட அதிகமாய் மோகவெறிகொண்டு அலைந்து திரிந்திருந்த அவருடைய வாத்திமார்களுக்கு அவரை உட்படுத்திய பயங்கரமான ஆபத்துகளிலிருந்து அவரைப் பாதுகாத்துக் காபந்துசெய்ய அவருக்கொரு ஆதரவுமிருக்கவில்லை.

ஆதலால் அவர் கூவிச்சொல்வது "ஓ! என் கர்த்தாவே, யான் வியர்த்தமும் வெட்கமுமான காரியங்களில் சிக்கி, தாகங்கொண்ட மானுனது காணலைக் கண்டோடி மோசம்போனதைப் போல், உம்மைவிட்டுப் பிரிந்து சிருஷ்டிகளில் என் ஆத்துமத்திற்குத் திருப்திகரத்தை காடித் தேடிப்போனது அத்தனை அதிசயமல்ல. ஏனெனில் எனக்குப் போதகர்களாயிருந்தவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால், ஒருவன் நாக்குத் தவறி இலக்கணவழுவுடன் ஒரு வாக்கியத்தைப் பேசிவிட்டால் எப்படி சங்கோசப்படுவானோ, அப்படியே எதாவது ஒரு நற்கிரியத்தைப் பற்றிப் பேசும்போது நாணங்கொள்வார்கள். இதுமாத்திரமல்ல. தாங்கள் கட்டிக்கொண்ட மோக அக்கிரம தோஷங்களை அற்ப வெட்கமுமின்றி வாய்ச்சாலகத்தோடும் சொல் வன்மைப் பொருள் வன்மையோடும் பேசுவார்கள். அப்பேச்சுகளைக் கேட்டு அங்கு கூடியிருக்கும் அனைவரும் சந்தோஷத்துடன் பேரிரைச்சலிட்டுப் பேஷ் பேஷ் என்று கைதட்டி ஆர்ப்பரிப்பார்கள்."

அர்ச். அகுஸ்தீன் சொல்வது "நிர்ப்பாக்கியமுள்ள பாலியனுகிய எனக்கு, அத்தனை சிறு வயதில், என் தாய்ப் பாலின் மணம் மாறுமுன். உண்டான ஆபத்து சோதனைகளைப் பாருங்கள்! எப்படிப்பட்ட காமாதுரர்கள் மத்தியில் என் இளம் வயதைக் கழிக்கவேண்டியிருந்தது! எனக் குண்டான சோதனைகளோடு யான் எப்படி மல்லுக்கட்டிப் போராடவேண்டியிருந்தது." உள்ளபடியே மோகவிஷமானது வெகு சீக்கிரத்தில் அர்ச். அகுஸ்தீனுடைய மனதில் நுழைந்து அவருடைய சரீரமெல்லாம் பாய்ந்து பரவினது. அவருடைய சரீரம் இன்னும் பூரணபக்குவமடையவில்லை. வயதும் சரியாய்ப் பதினேந்து ஆகவில்லை. வீளக்கைக்கண்ட விட்டிலானது, எப்படி அதன் சோதியைப் பார்த்து மயங்கி அதன்மேல் மோதி தீய்ந்துபோகுமோ, அப்படியே இவரும் அவ்வள வயதில் சிற்றின்ப சந்தோஷம் இத்தகையானதென்று தெரியாதிருந்தும், காம லீலைகளைக்கண்டு மனோவிகாரங் கொண்டு மோக ஆசையால் உள்ளம் பூரித்து, அவ்வாசை திருப்தியடையாததைக்கண்டு சஞ்சலமடைவார்.

அவர் சொல்வது "எனக்கிருந்த ஆசையெல்லாம் ஒன்றேயொன்று; அஃதிமுதல் சந்தி வரையில் என்னை வாதித்துவந்த எண்ணம் அதைத்தவிர வேறொன்றுமில்லை. அதேதெனில் நான் ஸ்திரீகளை நேசிக்கவேண்டுமென்பதும் ஸ்திரீகள் என்னை நேசிக்கவேண்டுமென்பதுமேயாம்." ஆயினும் அவர் மனத்தாழ்மையுடன் சொல்வது "நான் கொண்டிருந்த நேசமானது நல்லவர்கள் சகோதரவாஞ்சையுடன் ஸ்திரீகள் மட்டில்கொண்டிருக்கும் தூய கற்புக்கடுத்த நேசமல்ல. என் இருதயம் காம அக்கினியால் வெந்து அவ்வக்கினிப் புகையால் மண்டி இருளடைந்திருந்தபடியால், ஞாயத்தோடும் சகோதர வாற்சல்யத்தோடும் ஸ்திரீ புருஷர் நேசிக்கும் நேச உணர்ச்சிகளிப்படிப்பட்டவையென்றும், பாவத்திற்கேதுகரமான நீச அக்கிரம நேச உணர்ச்சிகளிப்படிப்பட்டவையென்றும் என்னால் பகுத்தறியக்கூடாமல்போயிற்று. எவ்வளவு உக்கிரத்துடன் மோக அக்கினியானது என்னை எரித்துவந்ததென்றால், சரியான மாலுமியால் நடத்தப்படாத கப்பலானது எப்படி தக்க பாதையைப் பிடித்துப்போகாமல் திகைதப்பிக் கற்பாறைகளில் மோதி நாசமடையுமோ, அப்படியே என் அறியாத வயதில் ஆசாபாசப் பற்றுக்களால் கட்டப்பட்டு அவலட்சண அக்கிரம தோஷத்தில் அமிழ்ந்திப்போனேன்."

கொஞ்சங் கொஞ்சமாய்க் கெட்ட நினைவுகள் அவருடைய மனதில் புகுந்தன. அவ்வெண்ணங்களை அடியோடு பிடுங்கியெறிக்க யாருமில்லாதபடியால், அவைகள் வேர்பிடித்து ஸ்திரமடைந்துபோயின. அவர் சொல்வது "இன்னும் சிறுவனுயிருக்கும்போதே, மோகசந்தோஷங்களைச் சுவிக்கப் பேராவல்கொண்டேன். யாதொரு வெட்கஞ்சிக்கியாவது, கூச்சநாச்சமாவது இல்லாமல் சிற்றின்பத்தில் என் சீவியத்தைக் கழித்துவந்தேன். என் ஆத்துமத்தின் தேஜஸும் சுந்தர வஜீகரமும் முழுதும் போய்விட, கர்த்தாவே! நான் உமது கண்முன்பாக வெறுப்புக்குரிய ஒரு கீச வஸ்துவாய்ப்போனேன். அப்படியிருந்தும். என்மட்டில் நானே சந்தோஷங்கொள்ளவும், மனிதர்கள் கண்ணுக்குப்பிரியமுள்ளவனுய்க் காணப்படவும் தப்பினேனில்லை." அவர் கொஞ்சங் கோழையாயும் சுபாவத்தில் மன அடக்கமுள்ளவராயுமிருந்தபடியால், தனது ஆத்துமத்தின் அக்கிரம அலங்கோலங்கள் யாவற்றையும் மறைத்திருந்தார். கொடிய புசல்போல் அவரது இருதயத்தைப் பாழாக்கிக் கெடுத்த இக்காமக்கோரத்தை அவருடைய பள்ளித் தோழர்களாவது சிநேகிதர்களாவது ஒருவரும் அறிந்திருந்ததில்லை.

இதனிடையில் அவரது கீர்த்தி மேலும் மேலும் பெருகிவந்தது. அவரது குணலட்சணங்களைப் பாவாக்கிரம விஷந் தீண்டியும், இன்னும் அவ்விஷயத்தில் அவர் மூழ்கிப்போகவில்லையாகையால், அக்குணலட்சணங்கள் நாள்போகப்போக அலங்கிர்தவடிவாய்த் துலங்கிவந்தன. அவரது வாய்ச்சாலகத்தையும் வாக்குச் சாதுரியத்தையும் கண்டு, ஜனங்கள் ஆச்சரியமடைவார்கள். அவர் இன்னும் வயதில் மிகுந்து, புத்திரூட்சமம் பூரணபக்குவமடையும் காலத்தில், எப்படிப்பட்ட வாய்ச்சாலகர்களையும் தன் வாக்குச்சாதுரியத்தால் தோற்கடிப்பாரென்று யாவரும் பேசிக்கொள்வார்கள்.

(இன்னும் வரும்.)

"தேவதாயின் பிள்ளை ஒரு காலும் அவலமாய்ச் சாகாது." —(அர்ச். பெர்னர்து.)

AVERSION TO DIE.

இறத்தல் ஆற்றுமை.

உலகின்கண் உய்யும் ஆன மகோடிகள் "சாவு" என்னும் வார்த்தையைக் கேட்டாலே கலங்கியஞ்சுகிறார்கள்; விசேஷமாய், 'கொள்ளைநோயினால், சாவு' என்றால், திடுக்கிட்டு மதிமயங்கி, பொறி கலங்கி, 'ஐயோ, ஐயோ' என்று அலறுவார்கள். இந்நோயினல் நெருங்கின பந்துக்களில் ஒருவர் இறந்தார் என்றால், ஓவென்றலறி, ஒப்பாரி வைத்து அழுது அங்கலாய்ப்பார்கள். இது உலகில் சகஜம். ஏனெனில், இதனலுண்டாகிய கஷ்டமாகிய துன்பத்தை அடக்கமுடியாமல் அழுகிறார்கள் என்றே சொல்லக்கடவோம். ஆதலால் மாண்டவருக்காக அழுகிறவர்கள் எல்லோரும் இறந்தவர்களால் தங்களுக்குண்டாகியநஷ்டத்தைத்தாளமுடியாமல்அழுகிறார்கள் என்னத்தகும். ஆகவே, உண்மையில் செத்தவருக்காக அழுவார் ஒருவருமில்லை; தங்கள் சொந்த நஷ்டத்தின் பொருட்டுத்தான் வியாகுலப்படுகிறார்கள். சுருக்கமாய்ச் சொன்னல், அவர்கள், பொருளோ, சுகமோ, ஆதரவோ, சந்தோஷமோ, ஆறுதலோ, மரியாதையோ, பராமரிப்போ, உபசரிப்போ, அநுசரணையோ ஆகிய இவைகளில் ஏதோ ஒன்றில் அல்லது பலவற்றில் நஷ்டம் அடைந்திருக்க வேண்டும். அதன் நிமித்தம் உண்டான துக்கமே அழுகைக்குக் காரணம். அன்றியும், "கொள்ளைநோய்" என்று கேட்டவுடனே, அந்நோய்க்கு நாம் எங்கே இரையாகப் போகிறோமோ என்பது பயத்துக்கு வேறொரு காரணம். அதாவது நாம் எப்படி இறந்துபோகிறது? எப்படி உலகத்தை விட்டுப் போவோம்! என்பதே. நமது உடல்மீதும் உலகத்தின்மீதும் நமக்குள்ள ஆசையே, இவ்வச்சத்திற்குக் காரணம். உலகமானது சகல துன்பங்களுக்கும் உறையிடமாயிருக்கிறது. பூலோகம் துக்க சாகரமென்பது ஆன்றோர் வாக்கு. அன்றியும் உடலமானது சகல பிணிகளுக்கும் ஆஸ்பதமாயிருக்கிறது. இவைமீது நமக் காசையென்ன? ஆதலால் பூலோகத்தை விட்டால் இவ்விதத் துன்பங்கள் நேராவன்றோ? துன்பங்களை ஒழிக்கப் பயப்படுவாருமுண்டோ? சாவானது பூலோகத்தினின்று நம்மையும் இவ்வுடலத்தினின்று உயிரையும் பிரிக்கும் பொருளாயிருக்கின்றது. இதனைக்கண்டு அஞ்சும் காரணமேன்? சந்தோஷப்படவேண்டிய பொருளைக்கண்டு பயப்படுபவனை உலகம் என்சொல்லும்? பைத்தியன் என்னுமன்றோ? நாம் அப்படித்தான் இருக்கின்றோம். ஆனல், இதனில் ஒரு காரியம் கவனிக்க வேண்டும். நாம் எப்போது மனிதராய்ப் பிறந்தோமோ, அப்போதே நாம் சாகவேண்டும் என்பது சத்தியமன்றோ? சாவுக்கு யாரும் தப்பித்துக்கொள்ளமுடியாது. அன்றியும் சாவு நினையாத,குறியாத நேரத்தில் திருடனைப்போல் வரும். ஆதலால் நாம் எப்போதும் சாவுக்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். இவ்வாறு சாவுக்கு ஆயத்தமாயிருப்பவர் சாவுக்கு அஞ்சவேண்டிய அவசியமில்லை. ஆனல் சாவுக்கு ஆயத்தமாயிராதவர், சாவுக்குப்பின் தமதான்மாவைக் கவனிக்கமுடியாதாகையால், அதற்கு அஞ்சவேண்டிய காரணம் உண்டு. தங்கள் ஆத்துமத்தைக்கவனிக்க, அதாவது சாவுக்கு ஆயத்தஞ் செய்ய எத்தனை நாட்கள்வேண்டும்? மூன்றோ, ஏழோ? அதிகமாய்ச் சொன்னல் 30-நாட்கள் போதுமன்றோ? சிலருக்கு 30-வருஷங்கள் தந்தபோதும், சாவுக்கு ஆயத்தஞ் செய்யார்கள். சாகிறபரியந்தம் ஆயத்தமில்லை. சாகும்போது, பார்த்துக்கொள்வோம் என்று மகா அசட்டையாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இவ்விதக்கொள்ளைநோய் காலத்தில் கலங்கி, உடனே சாவுக்கு ஆயத்தப்படாத காரணம் என்ன? ஆத்துமவிஷயத்தில் தாங்கள் கொண்டிருக்கிற அசட்டையும் அஜாக்கிரதையுமேயாம். தன்னை நேசியாதவனும், உலகின்கண் உண்டோ? நேசித்தானுயின் அழிந்துபோகும்சரீரத்தினும் அழிவில்லாத ஆன்மாவே சிறந்ததாகையால், ஆத்துமத்தைக் காப்பாற்ற கவலைகொள்ளாதிருப்பானேன்? ஆத்துமத்தின் கட்டுகளை அறுத்தெறிய சரீரம் சம்மதியாமல் இருப்பதால், அதனுடன் வாதிட்டுப் போர்புரியவேண்டியதா யிருக்கின்றது. சிலர், சரீர சுகத்தைக் கவனித்து "நாளைக்கு வரும் பணம்பழத்திலும், இன்றைக்கு வரும் களாப்பழமே சிறந்தது" என எண்ணி, ஆன்ம சுகத்தைக் கவனியாதொழிகிறார்கள். இவர்கள் தூரப்பார்வையற்ற கிட்டப்பார்வையை யுடையவர்கள். சிலர் சரீரத்தை எதிர்த்துப் போராடசக்தியற்றவர்களாகி, சரீரமென்னும் சத்துருவுக் கிறையாகி ஆத்துமத்தை யிழந்து போகிறார்கள். மரமானது எந்தப்பக்கம் சாய்ந்திருக்கிறதோ அதே பக்கமாய்த்தான்விழும். "கண்கூடாப்பட்டதுகேடினும் கீழ்மக்கட்குண்டோ வுணர்ச்சி" என்றபடி இவர்கள் ஞான அந்தகர்களேயாவர்.

M. P. Ml.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குத்தப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

சென்னைக் கத்தோலிக்கு இந்தியர் பரோபகாரச் சபை.

சம. பத்திராதிபரவர்களே!

நாளது ஜனவரி மாதத்தின் நல்லாயன் சஞ்சிகையில் நமது சபையின் பிரதம காரியதரிசி ஸ்ரீமான் த. தாமஸ் பின்னே யவர்கள் எழுதியுள்ள கடிதத்திற்குத் தகுதியான சருக்க விடைதாங்கள் கொடுத்திருந்தாலும், யான் இதன்பின் வரையும் என் கருத்தையும் அதற்கிரண்டாவதாகப் பிரசுரிப்பீரென்று வேண்டுகிறேன :—

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

யார் யார் எவ்வெவ் கருத்துடன் ஒரு விஷயத்தை விவரிப்பார்களோ அன்னேர் கருத்திற்கிசைய அதைப் பொருள்படுத்தித் தமக்கு வேண்டினவற்றைக்கொண்டு, வேண்டாதனவற்றைத் தள்ளிவிடுதல் சான்றோர்க் கழகாகும்.

கடந்தசெப்டம்பர்மீ வெளியான "நல்லாயன்" 209-ம் பக்கத்திலும், டிசம்பர்மீ வெளியான "நல்லாயன்" 283-ம் பக்கத்திலும் அடியிற்கண்ட யான் விவரித்துள்ள வியாசத்தின் கருத்தென்ன? என் கருத்திற்கிசைய (ஆகஸ்டுமீ 23வ) "காத்லிக் வாச்சுமென்" பத்திரிகையில் 673-ம் பக்கத்தில் மற்று மொருவர் பிரசுரித்துள்ள கருத்தென்ன?

"சாதல் பொருள் கொடுத்தலின் சொற்புணர்வுவத்த
லேதற் பிரிவிற் கவறலே—யோதலி
னன்புடையார்க் குள்ளவாறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. என்றாகலின் என் முக்கிய கன்னேக்கமென்ன? க. இ. ப. சபைக் கிறீஸ்துவர்கள் யாவருக்கும் பொதுவாகத்தாக்கூடிய சபையாதலின் அது ஊர்ஜிதம் பெற்றுச் செழித்தோங்கி அதன்மூலியமாய் எளியகிறீஸ்துவச் சகோதரர்கள், கடன் என்னும் நிர்ப்பந்தப் படுகுழியினின்றும் மீண்டுகொள்ள வேண்டுமென்னும் பொருளை யடக்கிச் சிறு பிள்ளைகளும் எளிதில் உணரக்கூடியவாறு ஷெபக்கங்களில் விவரித்துள்ளேனுகும். அங்ஙனம் பொருள்படுத்தாது, "ஆகாத மருமகன் கைபட்டாலுங் குற்றம் கால் பட்டாலுங் குற்றம்" எனப் பொருள்படுத்தல்தானே பெரியோர் குணம்?

ரூபாய் 20,000, அடைவதற்குக் குறைந்தது இருபதுவருடஞ் செல்லுமென்பது போலித் தீர்க்கதரிசனமென்றார். அது தீர்க்கதரிசனமுமல்ல, போலித் தீர்க்கதரிசனமுமல்ல. சிறுவர்களுக்குத் தெரிந்தவகுத்தல் பெருக்கல் கணக்கேயாகும். கடந்த அக்டோபர்மீ வெளியான நல்லாயன் சஞ்சிகையின் 236-ம் பக்கத்தில் (22 வரி முதல்) "இதுகாறும்சேகரஞ்செய்துள்ளதொகை ரூபாய் 2,334 என்றும், நமதுடைய கன்னேக்கங்களைப் பூர்த்திசெய்யச் சுமார் 20,000, ரூபாய்கள்வேண்டிய" தென்றும்சொல்லப்பட்டுள்ளது. க. இ. ப. சபையானது 1916-ம் வருடத்தில் ஸ்தாபனம் செய்யப்பெற்றது. இப்பொழுது அதற்கு வயது ஏறக்குறைய மூன்று வருடமாகும். சேகரமான தொகை 2,334 என்றால் வருடம் ஒன்றுக்குச் சுமார் ரூபாய் ஆயிரம் விழுக்காடானதல்லவா? அவ்வாறே வருடம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரம் சேகரமானலும் ஷெ தொகை சேரயான் விவரித்துள்ளபடி குறைந்தது இருபது வருடஞ் செல்லுமென்பது தெற்றென விளங்கும்.

நான்கு வருடத்தில் ரூபாய் 20,000 சம்பாதிக்கவேண்டுமாயின், மாதம் ஒன்றுக்கு ரூபாய் 4161—0—8 ஆகுமென்றார். அவை எளிதான காரியமல்லவெனப் பொருள்படுத்தினீரா? மெய்தான். க. இ. ப. சபைக்கு 21டிவிஷன்கள்

இருக்கின்றனவென்று அறிக்கைப் புத்தகத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்விருபத்தொரு டிவிஷன்களிலும், 21 கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியும் 21 (Provision Stores) சாமக்ரியைச் சங்கங்களும் நிலைப்படுத்தினால், டிவிஷன் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டே சங்கமும் சேர்ந்து ரூபாய் 19—13—5½ வருவானல் மொத்தம் 21 டிவிஷன்களின் மொத்தம் 416—10—8 ஆகுமென்பது பள்ளிச்சிறுவனும் ஒத்துக்கொள்ளும் உண்மையாகும். அஃதின்றி நான்கு வருடத்தில் ரூபாய் 20,000 சம்பாதித்திட வேண்டியதென சட்டம் யாதுமில்லையாகலின் சிறுகக் கட்டிப் பெருக வாழலாம். பல துளி பெரு வெள்ளமாகுமென்பது என் துணிபாகும்.

சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி பத்திரிகையில் ஒருவர் எழுதியதாவது :—

* * * *

கோவாப்பரேஷனின் பெருமையை உள்ளபடி எல்லோருக்கும் ஓரோமாதிரியாகச் சொல்ல முயலுதல், முதல் வகுப்பில் படிக்கும் மாணாக்கனுக்குத் தத்துவ சாஸ்திரங்களையெல்லாம் போதிக்க ஆசைப்படுவதை யொக்கும். ஆகையால் பக்குவத்திற்குத் தக்கபடிதான் ஜனங்களின் ஆசையையும், பக்தியையும், புத்தியையும், படிப்பையும், சக்தியையும் அனுசரித்து, அவர்களுக்குக் கோவாப்பரேஷனைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் "கட்டாயப்படுத்தி" யாவது புகட்ட வேண்டும். பஞ்சாயத்தார்கள் பணக்காரர்களாயிருப்பதால்மாத்திரம் பிரயோஜனமில்லை. அன்பு ஒழுக்கம் முதலிய கோவாப்பரேட்டிவ் குணங்கள்தான் முக்கியமாயிருக்கவேண்டும். தான் இதைச் செய்தால் இதனால் தனக்கு என்ன கிடைக்கும் என்று பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல், கோவாப்பரேஷன் ஏழைகளின் சேஷணையால் தனக்கு அதில் நிர்வாக வேலை கிடைத்தவுடன், அது ஈசுவரக் கிருபையென்றுணர்ந்து, தன்னுலியன்ற அளவு எல்லாருக்கும் உபகாரம் செய்வதையே காட்டமாகக் கொண்டு, தான் இந்த முயற்சியைச் செய்தால் இதனால் ஜனங்கள் எவ்வளவு உபகாரம் பெறுவார்கள் என்னுங் கொள்கையைக் கொள்வதற்குத் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு, ஜனங்களுக்குமுன் வந்து பலவிதத்திலும் உபகாரம் செய்யவேண்டி நாடும் அத்தகைய நாட்டம் ஏற்பட்டிவிட்டால் 'வேணுமென்றால் வேரிலும் காய்க்கும்" என்ற பழமொழிப்படி சந்தர்ப்பமும் சக்தியும் கிடைக்காமற் போகாது.

* * * *

இவ்வியாசத்தை வினம்பியவர் ஓர் இந்து மஹாஜனவார். இவ்வியாசத்தால் அவரது அன்பும் உபகாராபிமானமும் தெற்றென வினங்கி நமக்கு நற்படிப்பினையாகும்.

இப்படிக்கு,

பெங்களூர். க. கோ. இ. சொஸைட்டி கிர்வாக சபையார்களில் ஒருவரும்; மைசூர். இ. க. கு. சங்கத்தின் நிர்வாக சபையார்களில் ஒருவரும்; அர்ச். அன்னம்மாள் மதுலிலக்குச் சபைக்காரியதரிசியுமாகிய,

"ஓர் கிறீஸ்துவன்" என்னும்,
அ. மரியதாஸ்.

மிக. சங். ரேண்டி சுவாமியார் அவர்களின் தேகவியோகம்.

இவர் 1848-ம் ஆண்டில் பிரான்சுமா தேசத்திற் பிறந்து, 12-ம் வயதில் குருமடம் சென்று, 25-ம் வயதில், அதாவது 1873-ம் ஆண்டில் குருப்பட்டம் பெற்று, அவ்வாண்டில்தானே, கோயமுத்தூர் மேற்றிராசனத்துக்கு அனுப்பப்பட்டார். அம்மேற்றிராசனத்துக்கு வந்துசேர்ந்த பின்னர், ஈராண்டு கொடிவேரிப்பகுதில் இருந்த பின் மேற்றிராசனப் பங்குக்கு மாற்றப்பட்டு, அப்பங்கிற்றானே தமது மரணபரியந்தமும் அதாவது 43-வருடங்களாய், குறித்தகாலங்களில் பகுசுவாமியாராகவும், ஸ்கூல் மானேஜராகவும், வைக்கர் ஜெனரலாகவுமிருந்து, அம்மேற்றிராசன அபிவிருத்திக்கான பலதுறைகளிலும் வெகு நிறமையுடனுழைத்து, நெடுங்காலம் சர்க்காரால் தெரிந்தெடுக்கப்பட்ட முனிசிபல் கவுண்சிலராகவும், சமையா சமயங்களில் ஆக்டிங் முனிசிபல் சேர்மனுகவும் இருந்து, பொதுஜன நன்மைக்காக வேண்டியபோது தம்மாலான உதவிகள் புரிந்து, இவ்வாறு வெகு பிரக்யாதி பெற்று வினங்கினர். இவரை அறியாதார் இத் தென்னுட்டில் சொற்பமெனக் கூறினும் மிகையாகாது.

இவருடைய நிறமையையும் புத்திக்கூர்மையையும் பரோபகார நற்செய்கைகளையும் கண்ணுற்றிவந்த கவர்ண்மென்டார் அவைகட்குச் சம்மானமாக இவருக்கு முதலில் வென்னிப்

பதக்கமும், பின்னர் கெய்சர் இ. ஹிண்ட் எனும் தங்கப் பதக்கமும் பரிசளித்தனர்.

இவருக்கிருந்த இரப்பை நோய்னது காலடைவில் மேலிட்டுப்போக இவர், இப் புதுவருடத்தினத்தன்று பாக்கியமான மரணம் அடைந்தனர். அன்று முழுவதும் அவருடைய சடலம் ஒக் என்னும் மரப்பலகையால் செய்யப்பட்ட சிறப்புற்ற பெட்டியில் வைக்கப்பட்டு, கிறீஸ்துவ சகோதரருடைய சந்திப்புக்காக மந்திரக்கூடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்து, மறுநான்காலையில், ம. க. ஆண்டவரவர்கள் பாடற்பூசை செய்து அதனை மந்திரித்தபின்னர், சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள கல்லறைத்தோட்டத்துக்கு, அவரால் மிக நேசிக்கப்பட்ட அவரது ஞானமைந்தர்களாகிய கிறீஸ்துவ சகோதரர்களால் தூக்கிக்கொண்டுபோகப்பட்டு, அங்கும் ம. க. ஆண்டவர் அவர்களால் மந்திரிக்கப்பட்டு, பூஸ்தாபகஞ் செய்யப்பட்டது.

அடக்கத்தின்போது அவ்வூர் கலெக்டர், ஜட்ஜி முதலிய பல பெரிய ஆங்கிலக் கனவான்களும், ஹிந்து, மகம்மதிய கனவான்களும் ஆயிரக்கணக்கான கிறீஸ்துவ சகோதரரும் விஜயமாயிருந்தனர்.

இவருடைய மரணம் கோயமுத்தூர் மேற்றிராசனத்துக்குப் பெரும் நஷ்டம் என்பது பொதுஜன அபிப்பிராயம்.

இவ்வுத்தம குருவானவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக அவருடைய ஞானமைந்தர்களாகிய கிறீஸ்துவ சகோதரர் அவருடைய மரணத்தின் 16-ம் தினத்தன்று ம. க. ஆண்டவரவர்களால் பாடற்பூசை செய்வித்ததுமன்றி, அதற்கெதித்த ஞாயிறு ஏறக்குறைய 600 ஏழைகளுக்குப் போஜனமுமளித்தனர். அல்லாமலும் 30-ம் நாளில் அவருடைய உதவிப் பங்கு சுவாமியார் அவர்களால், டீக்கன் சப்டீக்கனுடன் பாடற்பூசை செய்வித்தனர். இவர் ஆத்துமம் சமாதானத்தில் இளைப்பாறக்கடவதாக.

இப்படிக்கு,
T. A. லூர்துசாமிப் பிள்ளை,
கோயமுத்தூர்.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

(1913ஆ-ந்த 7-வது ஆக்டின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.)

மேற்படி சங்கத்தின் 22-வது வருஷாந்தப் பொதுக்கூட்டம், சென்ற டிசம்பர்மீ 27-ம் தேதி திருச்சிஞப்பள்ளி, அர்ச். சூசையப்பர் கலாசாலையைச்சேர்ந்த லாலி ஹாலில், சென்னை யதிமேற்றிராணியாரும், சென்னை இராஜாங்கச் சட்ட நிரூபணச் சபையங்கத்தவருமாகிய மிக. வந்திக்கத்தக்க கனம் அருளப்ப ஆலன் ஆண்டவரவர்களின் அக்கிராசனுதிபத்தியத்தில் மிக விமரிசையாய் நடைபெற்றது. அன்றையத்தினம் காலை போட் மெயில் மூலமாய் சென்னையிலிருந்து வந்த ஷை அக்கிராசனுதிபதியவர்களை திருச்சிஞப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலை இளைச் சங்கத்து வரவேற்புக் கமிட்டியார்கள் கண்டோன்மென்ட் ஸ்டேஷனில் சந்தித்து, அவர்களுக்குப் புஷ்பஹாரமிட்டு உபசாரஞ் செய்து, அவர்களை இரதமீதேற்றி, இருமருங்கிலும் வாழைச்சோலை தென்னஞ்சோலைகள் காட்டப்பட்டு, மகரத்தோரணங்களாலும், கோரை, புஷ்பாதிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த தெருக்கள் வழியாய், பாண்டு வாத்திய முழக்கத்துடன் திரளான கிறீஸ்துவர்கள் புடைசூழ ஊர்வலஞ்செய்து, அர்ச். சூசையப்பர் கலாசாலைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர். அங்குள்ள சவ். பெர்ட்ராம் சுவாமிகளுடன் மற்றச் சேசு சபைக் குருசுவாமிகளும் அவர்களை நல்வரவேற்று உபசரித்தார்கள். காலைப்போஜனமானவுடன் முற்பகல் 10-மணிக்கு ஷை லாலி ஹாலில் பொதுக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த விசாலமான ஹால் முழுதும் 500-க்கு அதிகமான கிறீஸ்துவர்களால் நிறையப்பட்டிருந்தது. அக்கிராசனுதிபதியவர்கள், திருச்சிஞப்பள்ளி மேற்றிராணியாராகிய சரி. வந். பசான்தியர் ஆண்டவரவர்கள் சகிதமாய் மேடைமீதிருந்த ஆசனங்களில் அமர, அவர்களோடு சவ். சௌதியர் சுவாமிகள், கார்ட்டி சுவாமிகள், பெர்ட்டிராம் சுவாமிகள், ரோச்சு சுவாமிகள், மிஸ்கித்தோ சுவாமிகள், புரத்தாக்குடி சவரிநாத சுவாமிகள், பாலையங்கோட்டை ஞானப்பிரகாசஞ் சுவாமிகள், கொன்னக்குடி இரத்தினகாத சுவாமிகள் முதலிய சுவாமிகளும், தஞ்சை டிப்டிகலெக்டர் மகா-ரா-ரா-ஸ்ரீ அருளானந்தம் பிள்ளையவர்கள், ராவ் சாகேப் ஆரோக்கியசாமிப் பிள்ளையவர்கள், திண்டுக்கல் மிராசுதார் ஸ்ரீமான் சந்தனக்கவுண்டர் அவர்கள் முதலானோர்களும் அமர்ந்தார்கள். பாப்பரசர் வாழ்த்துப்பாடலுடன் கூட்டம் ஆரம்பமானது. அக்கிராசனுதிபதியவர்கள் தமது முகவுரையில் தமக்குச் திருச்சிஞப்பள்ளிக் கிறீஸ்துவர்கள் கொடுத்த ஆடம்பரமான நல்வரவேற்புக்காகத் தாம் மன மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு வந்தனம் அளிப்ப

தாகச்சொல்லி, தற்காலத்தில் ஜனங்கள் இலௌகிக முன்னேற்றத்துக்காக பெருமுயற்சி செய்யும் விஷயத்தைப்பற்றியும், கத்தோலிக்கு இந்தியர்கள் தங்களுக்குள் ஒற்றுமையுடன் அரசுரிமைகளுக்காக ஏகோபித்து உழைக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் மிகவும் வற்புறுத்திப் பேசினார்கள். அதன்பின். ரிட்டையர்டு சப் இஞ்சினீர் மிஸ்டர் அருளானந்தம் பிள்ளையவர்கள் மிக. சங். கனம் அக்கிராசனாதிபதியவர்களுக்கும், வெளியூரிலிருந்து வந்திருந்த சங். குருமார்களுக்கும், கிறீஸ்துவர்களுக்கும் அன்பும் நேசமும் நிறைந்த வசனங்களால் நல்வரவு கூறினார்கள்.

பிறகு சங்கத்துக் கௌரவகாரியதரிசியவர்கள் சங்கத்தின் கடந்த வருஷத்து விருத்தாந்த அறிக்கைப் பத்திரம் வாசித்தார்கள். அதன்பிரகாரம் சங்கத்தின் நிலைமை பின்வருமாறு :

போன நிர்வாகச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி, சங்கம் 1913௵த்திய 7-வது ஆக்டின்படி, 1918௵ செப்டம்பர்௴ 7-ம் தேதி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

சென்ற வருஷத்தில் ஆரம்பத்திலிருந்த மெம்பர்கள் 610 பேர். இவர்களில் இறந்தவர்கள் 6 பேர்கள் போக மிகுதியாயுள்ளவர்கள் 604 பேருடன் அவ்வருஷத்தில் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட 18 மெம்பர்களைக் கூட்டி வருஷக் கடைசியில் இருந்த மெம்பர்களின் தொகை 622. இவர்களில் பேட்ரன் 4 பேர், ஆயுள் மெம்பர்கள் 86 பேர், சாதாரண அங்கத்தினர் 532 பேர்.

வரவு :—	ரூ.	அ.	ப.
மெம்பர்களின் சந்தாத் தொகை ...	135	2	0
நன்கொடை	5	0	0
சங்க க்ஷேமநிதியிலிருந்து வட்டி...	90	12	4
சங்க விடுதிக்காக வசூல்	448	0	0
ஆ மொத்தம் வரவு ...	678	14	4

செலவு :—	ரூ.	அ.	ப.
ஆபீசு சம்பளச் செலவு	120	0	0
அச்சுக் கூலி காகிதம் முதலியன...	176	8	9
தபாற் செலவு	35	12	0
நிஜிஸ்ட்ரேஷன் செலவு முதலியன.	211	2	9
ஆ மொத்தம் செலவு ...	543	7	6

க்ஷேம நிதியோடு வருஷக் கடைசியில் கையிருப்புத் தொகை ரூ. 7,043—6—1.

அதன்பின்னர், மங்களூர், அர்ச். ஞானப் பிரகாசியார் கலாசாலைப் போதகாசிரியராகிய ஸ்ரீமான் சி. ஜே. வர்க்கி (எம். ஏ.,) அவர்கள் கத்தோலிக்கு இந்தியருக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென்று கவர்ண்மென்டாரைக் கேட்கும் பின்வரும் பிரேரணையைக் கூட்டத்தினருக்குப் பிரேரிக்கையில் வெகு சாதுரியமும், மாதுரியமுமான நீண்டதோர் உபந்நியாசம் செய்தார்கள் :

"கத்தோலிக்கு இந்தியர்கள் இதர வகுப்பினர்களுக்கு மற்ற விஷயங்களிற் சமானமாயிருந்தாலும், தொகையில் குறைந்தவர்களாயிருக்கிறதினிமித்தம், இராஜாங்கச் சட்ட நிரூபணச் சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் சுதந்தரத்தை எல்லோருக்கும் பொதுவாகக் கொடுக்கும்பட்சத்தில், கத்தோலிக்கு இந்தியருடைய லட்சியங்கள் ஷை சபையில் சரியானபடி பாதுகாக்கப்படாவாதலாலும்; இந்தியர்கள் சுயபரிபாலன வித்தையைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்பதும், பொதுஜன சமூக வாழ்க்கைக்குரிய பரஸ்பரப் பொறுப்புக்களின் விஷயமாய் ஜனங்களுக்கு அறிவுறுத்தவேண்டுமென்பதும் திருத்தப் பிரேரணையின் கருத்தாதலாலும்; கவர்ண்மென்டாரே பிரதிநிதிகளை நியமிக்கும் விதியானது, திருத்தப் பிரேரணையில் விளக்கஞ்செய்யப்பட்டிருக்கிற முக்கியாம்சங்களுக்கு விரோதமாகிறபடியாலும், கத்தோலிக்கு இந்தியரின் லட்சியங்களைக் காப்பாற்றுவதற்கேற்ற ஒரேவகை, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவந்தானென்றும், மற்றவைகளால் அவர்களுடைய தேவைகள் திருப்தியடையமாட்டாவென்றும் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம் கவர்ண்மென்டாருக்கு விஞ்ஞாபித்துக்கொள்ளுகிறது."

இப்பிரேரணை, ஸ்ரீமான் எஸ். எம். அடைக்கலநாயகம் பிள்ளை (பி.ஏ., எல்.டி.,) அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, சபையோரால் ஒரே மனமாய் அங்கீகரிக்கப்பட்டது.

ஸ்ரீமான் ஏ. சவரிநாதப் பிள்ளை (பி. ஏ., எல். டி.,) அவர்கள் "சங்கம் நன்கு நடைபெறும் பொருட்டும், தலைமைச் சங்கத்துக்கும் கிளைச் சங்கங்களுக்கும் அதிகப் பொருத்தத்தை உண்டாக்கும்பொருட்டும் அடிக்கடி ஊர்கள்தோறும் சென்று, சங்க வேலையைச் செய்வதற்கு பிரயாண உதவிக் காரியதரிசி ஒருவர் நியமிக்கப்படவேண்டும்" என்று ஒரு பிரேரணை கொண்டு வந்தார்கள். அப்பேர்ப்பட்ட உதவிக் காரிய

தரிசி ஒருவர் அத்தியாவசியமென்பதற்குத் தக்கக் காரணம் காணாமையாலும், வெளியூர்களில் கிளைச் சங்கம் ஸ்தாபித்தல், உள்ள கிளைச் சங்கங்களைத் தூண்டிவேலை செய்யச்செய்தல் முதலியவைகளைக் கவனிக்க முன்வருபவர்களின் பிரயாணச் செலவுக்காக ஏற்கெனவே நிர்வாகச் சபையாரால், ரூ. 250/- வரையில் செலவிடும்படி உத்தரவளிக்கப்பட்டிருக்கிறபடியாலும், அந்தப் பிரேரணையைச் சபையார் அங்கீகரிக்கவில்லை. அப்போது பகல் பன்னிரண்டு மணியாய்விட்டபடியால் அக்கிராசனாதிபதியவர்கள், பகற்போஜனத்துக்காக கூட்டத்தை நிறுத்திவைத்தார்கள். சபையோர் எழுந்து போஜனசாலைக்குப் போக, அங்கு வரவேற்புக் கமிட்டியாரால் வெகு நேர்த்தியாய் தயாரிக்கப்பட்டிருந்த சம்பிரமமானவிருந்து எல்லோருக்கும் அன்புடன் அளிக்கப்பட்டது. அனைவரும் ஆவலாய் உண்டு களித்தார்கள்.

பிறகு, பிற்பகல் இரண்டு மணிக்குக் கூட்டம் ஆரம்பித்தபோது ஸ்ரீமான் எஸ். அற்புதசாமி உடையார் (பி.ஏ., எல்.டி.,) அவர்கள் "சங்க நிர்வாகச் சபைக்குச் சென்னை இராஜதானியிலுள்ள ஒவ்வொரு மேற்றிராசனத்திலிருந்தும் ஒரு குருவானவரையும், ஒரு அதீட்சகரையும் நியமித்தனுப்ப அந்தந்த மேற்றிராணியார் சுதந்தரமுடையவராவார்" என்னும் பிரேரணையைக் கொண்டுவந்தார்கள். இந்தப்படிக்கு முன்னிருந்த ஒழுங்கானது திருப்திகரமாய் வேலை செய்யவில்லையென்ற காரணத்தால் சென்ற வருஷம் சங்க ஒழுங்குகள் திருத்தப்பட்டபோது, அது நீக்கப்பட்டுப் போய்விட்டபடியாலும், அதை மறுபடியும் அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதற்குத் தக்கக் காரணங்கள் இருக்கும்பட்சத்தில், அவைகளை அங்கத்தினர் தீர யோசிப்பதற்குப் போதிய விவரங்களும் காலமும் கொடுபடவில்லையாதலாலும் அந்தப் பிரேரணை சபையாரால் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

பிறகு "கிளைச் சங்கங்கள் தங்கள் அங்கத்தினரிடமிருந்து வசூலிக்குந் தொகையில் சரிபாதி, அந்தந்த ஸ்தல தேவைகளின் விநியோகத்துக்காக தாங்களே நிறுத்திக்கொள்ளலாமென்றும், ஆனால், ஸ்தல காரியதரிசிகள், பிரதி வருஷமும், மார்ச்சு௴ முதல் தேதியிலாவது அல்லது அதற்கு முன்னதாகவாவது தங்கள் வரவு செலவுக் கணக்குப் புத்தகங்களையும், மற்றப் புத்தகங்களையும் தலைமைச் சங்கத்துக் கௌரவகாரியதரிசிக்குத் தணிக்கைசெய்வதற்கு அனுப்பக்கடவார்கள்" என்னும் பிரேரணையை ஸ்ரீமான் ஜீ. வைத்தியநாத ஐயர் (பி. ஏ., எல். டி.,) அவர்கள் பிரேரிக்க, ஸ்ரீமான் இராஜசேகரம் ஐயர் ஆமோதித்ததன்பின் அது சபையோரால் ஒரே மனமாய் அங்கீகரிக்கப்பட்டது.

கௌரவகாரியதரிசியவர்கள் வாசித்த சங்கத்து வரவு செலவுக் கணக்குகளும், சங்க விருத்தாந்த அறிக்கைப் பத்திரமும் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டன.

இப்போது இருக்கிற நிர்வாகச் சபையங்கத்தினர்கள் இன்னும் ஒரு வருஷத்துக்கு அலுவல் பார்க்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த வருஷம் சங்கத்துப் பொதுக்கூட்டம் திண்டுக்கல்லில் கூடவேண்டுமென்று ஸ்ரீமான் ஐ. சந்தனக் கவுண்டர் அவர்கள் கோரியபடித தீர்மானிக்கப்பட்டது.

கடைசியாய், கனந்தங்கிய பசாந்தியர் ஆண்டவரவர்களும், அக்கிராசனாதிபதியவர்களும், கத்தோலிக்கருக்கும் குருப்பிரசாதிகளுக்கும் இருக்கவேண்டிய பரஸ்பர விசுவாசம் ஒத்துழைப்பு ஆகிய இவைகளைப்பற்றியும், கத்தோலிக்கு அதீக்ஷகர்களுக்குள்ளே விசேஷமாய்த் தற்காலம் இருக்கவேண்டிய ஒற்றுமையைப்பற்றியும் முறையே பேசினார்கள். பிறகு அக்கிராசனாதிபதியவர்கள், "இச்சங்கம் தொடங்கிய காலமுதல், அதன் கௌரவகாரியதரிசியாயிருந்து சென்ற 20-வருஷகாலமாய் ஓயாது உழைத்து, அதைச் சித்திபெற நடத்திவந்து, சர்க்கார் உத்தியோக விஷயமாய் வெளியூருக்குப்போக நேர்ந்ததை முன்னிட்டு அக் காரியதரிசி யலுவலினின்றும் நீங்கிக்கொண்ட மகா-ா-ா-ஸ்ரீ திவான்பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை அவர்களுக்கு இச்சங்கத்தார் தங்கள் மனமார்ந்த வந்தனமளிக்கிறார்கள்" என்று பிரேரித்த பிரேரணையை, சபையாரெல்லோரும்கரகோஷ்டத்துடன் அங்கீகரித்தார்கள். அதன்பின் அக்கிராசனாதிபதியவர்களுக்கும், கூட்டங்கூட இடந்தந்த காலேஜ்ரெக்டர் அவர்களுக்கும், விருந்தினர் எல்லோரையும் உருக்கமாய் விசாரித்து உபசரித்த வரவேற்புக் கமிட்டியாருக்கும் வந்தனங் கூறப்பட்டபின், அரசா வாழ்த்துப் பாடலுடன் கூட்டம் முற்றுப் பெற்றது. (கனம் பசாந்தியர் ஆண்டவரவர்களுடைய உபந்நியாசமும் அக்கிராசனாதிபதியவர்களுடைய முடிவுரையும் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.) கூட்டம் முகிந்தவுடன், கூட்

டத்தினர் எல்லோரும் வெளியேவந்து அதற்காக நியமிக்கப்பட்டிருந்த விடத்தில் அமர, அவர்களுடைய புகைப்படம் எடுக்கப்பட்டது.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

எலிமென்டரி பாடசாலைகள்.— இச்சென்னை இராஜாதானியில் எலிமென்டரி பாடசாலைக்கான கட்டிடங்கள் கட்டுவதற்காக இவ்வருஷம் கவர்ன்மெண்டார் ரூபாய் 2,95,322 சாங்ஷன் செய்திருக்கிறார்கள். சென்ற வருஷம் புதிதாய்க் கட்டப்பட்ட எலிமெண்டரி பாடசாலைக் கட்டிடங்கள் 593. இவ்வாறு எலிமெண்டரி, அதாவது பிரதமக்கல்வி எவ்வளவு விருத்தியடைகிறதோ அவ்வளவுக்கு நம் நாடு சகல விதத்திலும் விருத்தியடையும்.

காலஞ்சென்ற அரசிளங் குமரன்.— நமது மாட்சிமைதங்கிய ஜியாராஜ் சக்கரவர்த்தியாரின் கடைசிப் புத்திரனாகிய பிரின்ஸ் ஜான் காலஞ்சென்றாரென்னும் துக்கசெய்திவந்து, பிரிடிஷ் இராச்சியமெங்குமுள்ள இராஜ விசுவாசிகளையெல்லாம் துக்கத்துக்குள்ளாக்கிவிட்டதென்று நாம் சொல்லவேண்டியதில்லை. இவருக்கு வயது பன்னிரண்டாகும். பெற்றோர்கள் தங்கள் கடைசிப் பிள்ளையின்பேரிலதான் அதிக பட்சம் பாராட்டுவது வழக்கம். இராஜாங்கக் காரியங்கள் ஒரு நிலைவரப்படாமல சிதறுண்டுகிடக்கு மிக்காலத்தில தங்கள் பட்சமுள்ள இளங் குமாரனைப் பறிகொடுக்க நேர்ந்த இராஜ தம்பதிகளுக்கு நாம் மனமார்ந்த அநுதாபங் கூறுகிறோம்.

குடியரசுக்குப் பதில் முடியரசு.—சில காலத்துக்கு முன்னேதான குடியரசையேற்படுத்தக்கொண்ட போர்த்துக்கல் தேசமானது, சில மாதமாய் முடியரசுக்காகக் கலகம்பண்ணிக்கொண்டிருந்தது. அப்போது இங்கிலாந்திலிருக்கும் போர்த்துக்கல் மாஜியரசராகிய மானுவேல் அரசர் தன்னைப்பற்றிக் கலகம்பண்ணவேண்டாமென்று கலகக்காரர்களுக்குக் கடித மூலமாயத் தெரிவித்திருந்தார். எனினும், இப்போது போர்த்துக்கல்லில் முடியரசு ஏற்பட்டுப்போயிற்று என்ற சமாசாரம் எட்டுகிறது. இந்தச் செய்தி இன்னும் ஊர்ஜிதமாகவேண்டும். பின்னர் வந்த தந்தி சமாசாரத்தால் முடியரசுக் கட்சிக்காரர், குடியரசுக் கட்சிக்காரரால் தோல்வியடைந்தார்களென்று தெரியவருகிறது. இன்னும் முடிவான செய்தி எட்டவில்லை.

சர் எஸ். பி. சின்னா.—இவர் பங்காளத்தைச் சேர்ந்த ஓர் இராஜ தந்திர நிபுணர், மகா புத்திமான், கல்விமான். இவருடைய திறமையாலும், நேர்மையாலும் இராஜாங்கத்தில் உயர் பதவிக்கு யோக்கியதையுடையவர் எனத் தெரிந்து, காருண்ய சிந்தையும், பாரமனோபாவமுமுள்ள ஜியாராஜ் சக்கரவர்த்தியவர்கள், இந்தியரை எவ்வளவு உயர்தரப் பதவிக்கு உயர்த்தலாமோ அவ்வளவுக்கு உயர்த்தவேண்டுமென்றே அவரை இங்கிலாந்திலுள்ள இந்தியா காரியதரிசிக்கு உதவி காரியதரிசியாக நியமித்து, அவருக்கு லார்டு பட்டமும் சூட்டிவிட்டார்களெனத் தெரிகிறது. இந்தியர்களுக்குள் இவ்வித உயர்பதவியும், லார்டு பட்டமும் கிடைக்கப்பெற்றவர் இவரே முதலவராவர். இவர் இன்னும் மேலான பதவிபெற்று, இவருடைய தாய்த்தேசமாகிய இந்தியாவுக்கு தம்மாலான நன்மையெல்லாம் செய்வாராக.

ஐர்லாந்தில் குடியரசு.—ஐர்லாந்து தேசமானது நெடுநாளாகத் தனக்கு சுய ஆட்சி தரவேண்டுமென்று பிரிடிஷ் பார்லிமென்டு சபையாரைக் கேட்டுவந்தது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இப்போது சண்டை முடிந்ததும் முடியாததுமாயிருக்கையிலே, பாரிஸ் நகரத்தில் சமாதானச் சங்கத்தில் அதிமுக்கியமான விஷயங்களைப்பேசி முடிவுகட்டுவதில் பிரிடிஷ் பிரதான மந்திரியும் மற்ற முக்கிய மெம்பர்களும் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கையிலே, அது தீர்க்கமாய்க் குடியரசு கொண்டுவிட்டதாய்ச் சொல்லப்படுகிறது. இது எப்போப்பட்ட துணிச்சலான செய்கை! அது தனக்குத் தனியாக பார்லிமென்டு சபையாரகளைத் தெரிந்து கொண்டதாகவும், காபினட் கூட்டங்கூடி அந்தந்த இலாக்காக்களுக்கு மந்திரிகளை ஏற்படுத்தவிட்டதாகவும் தெரிகிறது.

இதைக்கண்ட பிரிடிஷ் சபையார் ஏது செய்யப்போகிறார்களோ தெரியவில்லை!

சர்வதேச ஜனசங்கம்.—உலகத்திலுள்ள தேசமன்னர்களில் இனி ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகள் நேராமல் சமாதானமாய் வாழ்வதற்கு, அவர்களையெல்லாம் உள்ளடக்கிய "சர்வதேச ஜனசங்கம்" ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பது, அமெரிக்க ஐக்கியமாகாணத்து குடியரசின் அதிபதியாராகிய மிஸ்டர் வில்சனின் பிரேரணையல்லவா? அதன்படியே அவர் இப்போது நடந்துவரும் சமாதானச் சகங்த்தில் சமீபத்தில் அவ்விஷயத்தைப் பற்றி மிகவும் வற்புறுத்திப் பேசினார். அப்படிப்பட்ட பொதுச் சங்கம் அவசியமென்பது யாதொரு பயத்தினாலும், அல்லது அதைரியத்தினாலும் ஏற்பட்டதல்லவென்றும், சொல்லவும் எண்ணவும்படாத பெரிய அநியாயமும் அக்கிரமமும் நடத்தப்பட்ட யுத்தத்தின் அநுபோகத்தினால் ஏற்பட்டதாகுமென்றும், ஆனதினால் அத்தகைய சங்கம் அத்தியாவசியகம் என்றும் எண்பித்துக்காட்டினார்.

துருக்கியின் பிற்காலக்கதி.—ஐரோப்பிய மகா யுத்தத்தில் ஜெர்மனி பக்கத்தில் சண்டைசெய்து தோற்றுப்போன துருக்கியின் எதிர்காலக்கதி என்னவாகுமென இப்போது திட்டமாய்ச் சொல்லுவதற்கில்லை. ஐரோப்பாவிலுதிக்கிற சண்டைக்கெல்லாம் ஏறக்குறைய நேராகவாவது வேறு விதமாகவாவது துருக்கியே காரணமென்றும், துருக்கி தேசத்தை துருக்கியர் ஆதீனத்தினின்று எடுத்துவிட்டால் ஐரோப்பாவில் சண்டை சம்பவியாதென்றும், துர்க்கியின் தலைநகரமாகிய கொனஸ்தாந்திநோப்பில் நகரை துருக்கியரிடமிருந்து பிடுங்கி, அதை ஐரோப்பாவிலுள்ள எல்லா அரசுக்களுக்கும் பொது ஸ்தானமாக்கிவிடவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. எப்படி நடக்கப்போகிறதோ தெரியவில்லை. ஆயினும், இந்தியாவிலும், மற்ற இடங்களிலும் பிரிடிஷ் ஆதிக்கத்துக்குள்ளிருக்கும் மகம்மதியரெல்லாரும் கூடி துருக்கியை ஒன்றுஞ் செய்யாமல், அது முன்னிருந்தபடி சுயாதீனத்தில் விட்டுவிடவேணுமென்று பிரிடிஷ் இராஜாங்கத்துக்கு மனுசெய்துகொண்டிருக்கிறார்கள்

உணவுப்பொருட்கள்.—ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்கு உத்தரவின்றி உணவுப்பொருட்களைக் கொண்டுபோகலாகாதென்றிருந்த உத்தரவை இந்தியா கவர்ண்மெண்டார் ரத்து செய்துவிட்டார்கள். ஆனால், கோதும்பை, அரிசி, கொள்ளு ஆகிய இம்மூன்று சரக்குகள்மாத்திரம் இன்னும் சில காலம் முந்திய நிபந்தனைகளுக்குட்பட்டேயிருக்கும். சென்ற ஜனவரி, பெப்ரவரி, மார்ச்சு மாதங்களில் கவர்ண்மெண்டார் ஆஸ்திரேலியாவிலிருந்து முப்பதினாயிரம் டன் எடையுள்ள கோதும்பை தருவித்து, இந்தியாவில் ஜனங்களுக்குக் கொண்ட விலைக்குக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அங்கிருந்து கோதும்பை வரவழைக்கப் பிரயத்தனஞ்செய்துகொண்டுவருகிறார்கள். சென்னைக் கவர்ண்மெண்டார், தானியம், பயிறு, மாவு ஆக இவைகளைக் கப்பல்மூலமாய் வருகிற செப்டம்பர் மாதக் கடைசி வரைக்கும் இறக்குமதித் தீர்வையில்லாமல் யாரும் வரவழைக்கலாமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

தமிழ் அகராதி.—இப்போது இருக்கிற அகராதியெல்லாவற்றையும்விட அதிகப்பெரிதும், கூடியவரையில் தமிழ்ப் பாஷையில் வழங்கும் எல்லா வார்த்தைகளையுங் கொண்டதுமாகிய புதிய அகராதி ஒன்று கவர்ண்மெண்டார் செலவில், சர்வகலாசாலையார் கண்காணிப்பில் தயாரிக்கப்பட்டுவருகிற செய்தி நண்பர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இது முதல் முதலில், சில வருஷங்களுக்கு முன்னே காலஞ்சென்ற ஐரோப்பியராகிய போப்பையரால் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அதன் வேலை மிகத்துரிதமாய் நடத்தப்பட்டுவருகிறதாய்த் தெரியவருகிறது. எழுபத்து மூன்றாயிரம் வார்த்தைகளுக்கு அர்த்தம் வியாக்கியானம் முதலியன எழுதி முடித்தாயிற்று எனச் சொல்லப்படுகிறது. அப்படியானால் ஏறக்குறைய முக்காற பங்கு வேலை முடிந்துபோயிற்றென்றே சொல்லலாம். அடுத்த ஜூன மாதத்துக்குள் முழுதும் முடிந்துபோகலாம். இதற்காக இந்த வருஷத்தில் செலவானது 11 ஆயிரம் ரூபாயாகும். அடுத்த வருஷத்தில் ரூ 13 ஆயிரம் பிடிக்குமென்றும் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

மைசூரில் இரும்பு வேலைகள் செய்வதற்கு, அதில் மெத்தத் திறமையும் அநுபோகமும்கொண்டவராகிய, மிஸ்டர் பெரின் என்னு மோர் எஞ்சினீயரை வர வழைத்து, பாங்கிப்பூர் என்னுமிடத்தில், ஒரு பெரிய இயந்திரசாலை அமைக்கவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் முடிந்துவிட்டது. இதற்குப் பிடிக்கும் செலவுகளெல்லாம்மைசூர் இராஜாங்கத்தாரால் கொடுக்கப்படும். மைசூர் கவர்ண்மென்டாரால் நியமிக்கப்பட்ட சில மெம்பர்களையும், டாட்டா ஐயர்ன் வொர்க்ஸைச் சேர்ந்த சில மெம்பர்களையுங்கொண்ட ஒரு கமிட்டியாரால் இந்தப் பெரிய வேலை நிர்வாகஞ் செய்யப்படும். இப்படி நமது சென்னை ராஜதானியிலேயும் பெரிய பெரிய இயந்திரசாலைகளை அங்கங்கேயமைத்து, நமக்கு வேண்டிய இரும்பு சாமான்கள் அனைத்தையும அந்நிய நாடுகளிலிருந்து வர வழைக்காமல், நம் நாட்டிலேயே செய்து கொண்டால் நமக்கு எவ்வளவோ சௌகரியங்கள் ஏற்படும். இது விஷயமாய் நமது கவர்ண்மென்டார் சீக்கிரத்தில் தக்க முயற்சிகள் செய்யவேண்டுவது அவசியம்.

பாப்பானவரைப் போய்ச் சந்தித்தார். —சமாதானச் சங்கத்துக்காகப் பாரிசுக்கு வந்த அமெரிக்க ஐக்கிய மாகாணத்து அக்கிராசனாதிபதியாகிய மிஸ்டர் வில்சன், அச்சங்கத்தைத் தொடங்குமுன்னே, நிலையான சமாதானத்துக்கு ஆதாரமான விஷயங்களை ஏற்கெனவே போர் பொருதும இரு கட்சியாருக்கும், நடு நிலைமை வகிக்கும மற்ற தேசத்தாருக்கும் எடுத்துக் காட்டியவரான பதினைந்தாம லூசீர்வாதப் பாபாகிய பரிசுத்த பாப்பானவரைக் கண்டு கொண்டுவர ரோமை நகருக்குப் போனார். தமது பரிவாரங்களுடன வந்த இவரை நமது பரிசுத்த பிதாவானவர், தமது வத்திக்கான் மாளிகையில் மிக வாஞ்சையுடன் நலவாவேற்று உபசரித்தபின், மிஸ்டர் வில்சனைத் தனியே தமது பிரத்தியேக அறைக்குள் அழைத்துப்போய், அவருடன் அரை மணித நேரம்வரையில் சம்பாஷித்துக்கொண்டிருந்தாரெனச் சொல்லப்படுகிறது. சமாதான இராயனுக்குப் பிதாவாயிருக்கும் இவருடன, உண்மையான சமாதானத்தைக் கோரி அதை அடையுமபடிக்கான வழிவகைகளை மிஸ்டர் வில்சன் கலந்து பேசியிருப்பாரெனத் தாராளமாய் யூகிக்கலாம். நிலைமையான சமாதானத்தைச் சீக்கிரத்தில் சர்வேசன் கட்டளையிடுவாராக?

சமாதானச் சங்கம்.—ஜனவரி மீ 18-ம் தேதி தொடங்கிச் சமாதானச் சங்கம் பாரிஸ் நகரில் நடைபெற்றுவருகிறது. அது முடிவுபெறுவதற்கு மூன்று மாதம் பிடிக்குமெனச் சொல்லப்படுகிறது. அதில் பற்பல இராஜாங்கங்களினுடைய பிரதிநிதிகள் 72 பேர் கூடித் தீர்மானிக்கப்பட வேண்டிய மகத்தான விஷயங்களைப்பற்றி ஆலோசனைசெய்துவருகிறார்கள். அங்கு நடைபெறுகிற நடவடிக்கைகளைத் தெரிந்து, அப்போதைக்கப்போது பத்திரிகைகளுக்கு எழுதியனுப்புவதறகாகப் பத்திரிகைப பிரதிநிதிகள் ஆயிரமபேர் வந்திருக்கிறார்களென்றும், அவர்களில் 500 பேர் அமெரிக்கர்களென்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் பல முக்கியாம்சங்களை முடிவாயத் தீர்மானிக்கிறவரையில் நடக்கும விவாதங்களெல்லாம அறைக்குள் பிரத்தியேகமாகநடத்தப்படுகின்றனவாம். சமாதானச் சங்கத்தின் பிரதிநிதிகள் பின் வருமாறு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்:— அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், பிரிடிஷ் இராச்சியம,பிரான்சு, இத்தாலி,ஜப்பான், ஆக இந்நாடுகள் தனித்தனியே ஐந்தைந்து பேர்; பிரேசில் மூனறு பேர்; ஆஸ்திரேலியா, கனடா, தென் ஆபிரிக்கா, இந்தியா, பெலஜியம், சீனு, கிரீஸ், போலண்டு, போர்த்துகல, ருமேனியா, செர்பியா, ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள் இவ்விரண்டு பேர்; சையாம, கியூபா, கௌடிமாலா, ஹேயிட்டி, ஹாண்டிபூராஸ், லிபேரியா, நிக்கராகுவா, பானமா, மாண்டிநிகரோ, நியூசீலாண்டு ஆக இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவர்: இதற்குபபிறகு வந்த தந்தியில, ஜொமனியிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் சேர்க்கப்படபம்பாவதாய்ச் சொலலபபட்டது. பிரதிநிதிகளெலலாரும் ஒருமனப்பட்டு சமாதானத்தை நாடியுழைத்து, கூடிய சீக்கிரத்தில உலகத்தில் சமாதானததை ஸ்தாபிபபார்களாக. சர்வேசுரனும் இதற்குத் துணைபுரிவாராக!

தென்னபிரிக்காவில் இந்தியர்.—கெட்டால் முதலிய தென்னபிரிக்க நாடுகளில் குடியேறியிருக்கும் நமது இந்தியர் அந்நாட்டு வெள்ளைக்காரரிடமாய்க் கஷ்டம் துன்பம் இடையூறு அநுபவித்துவருவது நம்மவருக்கு ஏற்கெனவே தெரிந்த விஷயம்.இந்தச்சங்கடங்களினின்றுஎப்போது விடுதலை பெறுவோமோவென்று ஏக்கங் கொண்டிருந்த இவர்களுக்கு, சர். எஸ். பி. சின்ஹ அவர்கள் இந்தியா மந்திரிக்கு உதவி மந்திரியாக நியமனமடைந்த சங்கதியானது ஒருவித ஆறுதலை அளித்தது போலும். அதைக் கேட்டவுடன் அவர்கள் குதூகலங்கொண்டு அவருக்குச் சுபசோபன வாழ்த்துத் தந்தியொன்றை யனுப்பி, அதில், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த பிரஜைகளாகிய இந்தியர்களுக்குத் தென் ஆபிரிக்க நாடுகளில் இப்போது காண்பிக்கப்படுகிற ஜாதி வித்தியாசம், மத வித்தியாசம், நிற வித்தியாசம் முதலியவைகளைப் போக்கித் தங்களுக்கு மற்றவர்களைப்போல் சம சுதந்தரங்களைப் பெற்றுத் தரவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டனர். இப்போது இந்தியாவானது பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த நாடுகளோடு சேர்க்கப்பட்டுச் சமாதான சங்கத்தில் முதலாய்ச் சமபதவி கொடுக்கப்பட்டுவிட்டபடியால், இந்த நாடுகள் ஒன்றுக்கொன்று சகோதர பான்மை காட்டவேண்டுவ தவசியம். ஒரு நாட்டு ஜனத்தை மற்ற நாட்டு ஜனம் கனக்குறைவாய் கருதப்படாது, மதிக்கப்படாது, நடத்தப்படாது. இவ்விஷயத்தில் இனியாவது, இங்கிலாந்திலுள்ள இராஜதந்திரநிபுணர்கள் தக்க கவனஞ் செலுத்தி, முறைப்பாடுகளை யொழிக்க வகைதேடுவார்களென நம்புகிறோம்.

ஜெர்மன் வேவுகாரர்கள்.—யுத்தம் மும்முறமாய் நடந்த காலத்தில், இங்கிலாந்தில் வேவு பார்த்திருந்து இரகசியங்களை ஜெர்மனிக்குத் தெரிவித்துக்கொண்டிருந்த 12 வேவுகாரர்கள் லண்டன் கோபுரவாசலண்டை நிறுத்தப்பட்டுபிரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்களென்றும், இரண்டு ஸ்திரிகளும் அக்குற்றங்களுக்காகவே தீவாந்தரசிட்சை விதிக்கப்பட்டார்களென்றும் சங்கதிகள் இப்போது வெளிக்குவந்திருக்கின்றன. அவர்களில் ஒருவன், ஏராளமான செலவு செய்து உள் இரகசியங்களை உளவாய் அறிந்து, அப்போதைக்கப்போது ஜெர்மனிக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தானும். இன்னொருவன் "டெருஸ்டாக்" என் பவன் யுத்தத் தளவாடங்கள் கொண்டு செல்லும் கப்பல்கள் லண்டனை விட்டுப் புறப்படப்போகிற தேதிமுதலிய விவரங்களை ஜெர்மன் ஜலக்கீழ்க்கப்பல் மாலுமிகளுக்கும், குண்டு மருந்துமுதலிய யுத்தத் தளவாடங்கள் செய்யப்படும் ஆயுதசாலைகளிருக்கிற இடங்களை ஜெர்மன் ஆகாயவிமானிகளுக்கும் தெரிவித்துக்கொண்டிருந்தானும். மேற்கண்ட ஸ்திரிகளில் ஒருத்தி அதிவேகமாய்ச் செல்லதக்க ஒரு மோட்டார் வண்டியை வைத்துக்கொண்டு,அங்குமிங்குந்திரிந்து, யுத்தக்கப்பல்கள் போகிற இடம் காலமுதலியவைகளை யறிந்து எதிரிக்குத் தெரிவித்துவந்தாளாம். இவைகளையெல்லாங் கண்டுபிடித்துத்தான் அந்த இராஜ துரோகிகளைச் சுட்டுக் கொன்றார்கள். உளவறியாமலா எதிரிகள் அத்தனைக் கப்பல்களை அமிழ்த்தியும், ஆயுத சாலைகளின்மேல் வெடிகுண்டெறிந்தும் நாசஞ் செய்தார்கள்? "உளவனில்லாமல் வீடு வேகுமா?"

சென்னை அடையாறு, அர்ச். சவேரியார் பாடசாலை.—இந்தப் பாடசாலையோடு, திக்கற்றச் சிறு குழந்தைகளை ஆதரிப்பதற்கென்று ஒரு மடமும் உண்டு. இம்மடத்து முதலாளித் தாயாரும் சகோதரிகளும் தங்களுடைய அடைக்கலத்தில் இருக்கும் பிள்ளைகளைப் பெற்றதாய்மார்போல் ஆதரித்துப் போஷித்துவருகிறார்கள். கடந்த நவம்பர் மாதம் உண்டான பெரும் புயற்காற்றினது இந்த மடத்துக் கட்டிடங்களில் மோத, மேற்கூரை, கள்ளிக்கோட்டை ஓடுகள் ஆகாயத்தில் தூக்கியெறியப்படுவதையும், மடத்துச் சுவர்கள் எப்பக்கமும் பிளவுண்டு நெக்குவிடுவதையும் மடத்து முதலாளியம்மாளும் சகோதரிகளும் கண்டு, நடுக்கமும் திகிலுமடைந்து, தப்பிப் பிழைக்க என்னசெய்வதென்பதொன்றும் புலப்படாமல், நடுச்சமுத்திரத்தில் அலைக்காற்றில் அகப்பட்ட கப்பல்போல் திகைத்து,அம்மடத்துப்பாதுகாவலராகிய அர்ச். சவேரியாரை முழு நம்பிக்கையோடு கண்விழிப்புடன் இராமுழுவதும்வேண்டி, எல்லோரும் யாதொரு ஆபத்துமின்றிக் காப்பாற்றப்பட்டார்கள்.

விளம்பரம்.

திருநெல்வேலி ஜில்லா தேன் காசி ரயில்வே ஸ்டேஷனுக்கு 12 மைலில் உள்ள சேர்ந்தமரத்துக்கடுத்த வரதாகூஷிமலை அர்ச். லூர்துஷாதாக் கோவில் திருநாள் பிரகடனம்.

(I) 1919ஆம் பிப்ரவரிமீ 6உ வியாழக்கிழமை மாலையில் கொடி யேற்றம். (II) 9-ம் திருநாளாகிய பிப்ரவரிமீ 14உ வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு வெஸ்பர்ஸ், திவ்யநற்கருணை ஆசீர்வாதம், அதின் பின் சப்பரச் சுற்றுப் பிராகாரம்; வாணவேடிக்கை, பஜனை. (III) பிப்ரவரிமீ 15உ (மாசிமீ 4உ) சனிக்கிழமை காலை திவ்யபூசை முடிந்தபின் சப்பரச் சுற்றுப் பிராகாரத்துடன் திருநாள் மங்களகரமாய் முடிவுபெறும். (IV) மலையின்மேல் திருயாத்திரைக்காரர்கள் தங்குகிறதற்கு வேண்டிய சௌகரியம் செய்யப்படும். இத்திருநாளின் பலனை எல்லோரும் வந்தடைந்து ஆனந்திக்கும்படி ஆசிக்கிறோம்.

Sendamaram,
20—1—19. } பங்து ஸ்வாமியார்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

வேம்பாறு.

வேம்பாற்றில் காலஞ்சென்ற தேவரீர் எனது மாமனார் சவரியாரடிமைக் கர்வால்ய அவர்களின் செல்வப் புதல்வியும், எனது அன்பும் தீஷண்யமும் வாய்ந்த மனைவியுமாகிய எலிசபெத்தம்மாள் கர்வால்ய, நடைபிணி உபத்திரவத்தால் எவ்வித அவுஷதங்களாலும் குணமடையாமல், கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் பெற்று, காளது மீ 16உ மாலை 3-30 மணிக்குத் தனது 27-வது பிராயத்தில் என்னையும், தனது நேச மாதாவையும், அருமைப் பிறவிகளையும், மற்றும் பந்துக்களையும் இக்கண்ணீர்க் கணவாயில் பரிதபிக்கவிட்டுப் பரமபதமடைந்தனள். மறுநாள் காலை 8-மணிக்கு அச்சடலம் திவ்ய இஸ்பிரீத்துசாந்து சர்வேஸ்வரன் தேவாலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டு, பாளையங்கோட்டை அர்ச். சவேரியார் கலாசாலை மானேஜரவர்களாகிய சங். அல்பெர்ட் லெபோ (Albert Lebeau S. J.) சுவாமிகளால் மந்திரிக்கப்பட்டு, சிமித்தேரியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் சேயர்கள் அவ்வாத்தும நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பான உயிர்த்துணைவியை யிழந்து பரிதபித்துப் புலம்பும்,
25—12—18. வி. சோர்னம் விக்டோரியா.

தூத்துக்குடி.

என் பிரிய சகோதரன் கபிரியேல் பேர்னந்தீஸ் சில காட்களாய் அசௌக்கியமாகியிருந்து, கடைசித் தேவத்திரவிய அனுமானங்களைப்பெற்று, இன்று காலை 9-30 மணிக்குப் பரலோகபிராப்தியான பரிதாபமான துக்கத்தை, "நல்லாயன்" சந்தாதாரர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, அவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

22-ம் நிர். வீடு,
அந்தோனியாள் முடிக்கு
22—1—1919. } L. P. பேர்னந்தீஸ்.

தூத்துக்குடி.

எனதருமை ஒன்பது மாதக் குழந்தை மீக்கேலய்யா பேர்னந்தீஸ் கபஜுரத்தினால் பீடிக்கப்பட்டு இன்று விடியற்காலை 1½-மணிக்கு பரமன்பதம் எய்தினதை "நல்லாயன்" சந்தாதாரர்களுக்குத் துயரத்துடன் தெரிவித்து சர்வேஸ்பரனுக்குத் தோத்திரமாக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

22, அர்ச். அந்தோனியார் முடுக்கு
7—12—18. } கபிரியேல் பேர்னந்தீஸ்.

தூத்துக்குடி.

எனது தமையனூர் நகரத்து பேர்னந்தீஸ் அவர்கள் கொஞ்சக்காலம் அசௌக்கியமாயிருந்து கடையிசாக சகல தேவத்திரவிய அநுமானங்களைப்பெற்று இன்று மாலை 2-மணிக்குப் பரலோகபிராப்தியான பரிதாபமான துக்கத்தை "நல்லாயன்" சந்தாதாரர்களுக்குத் தெரிவிப்பதுடன் அந்த ஆத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளவுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

27, மணல் தெரு
2—12—18. } சூசை பேர்னந்தீஸ்.

தூத்துக்குடி.

கர்மலீத்தம்மாள் மரணம்.

கடவுளின் வலது கரமெனுந் திவ்ய
நிடமுறு மேக சபைதனைத் திருவார்
நகரெனுந் தூற்றுக் குடிகாட்டியவன்
புகழார் சவியோ ரூபீன் புதல்வோய்.

(விண்ணுலக விஜயப்பா.)

உலகெங்கும் நமது சுவிசேஷச் சொல்வன்மையால் மேன்மைபெற்றதும், சர்வலோக சக்கரவர்த்தியின் வலதுகரம் போன்றதுமாகிய, சேசு சபையைத் திருமந்திர நகரில் நிலைநாட்டுவதற்கு இடைபூருய் நின்ற, சைவர் முதலியவர்களின் தன்பத்தைவிலக்கி, நல்ல குருக்களுடன் ஒன்றுகூடி, அம்மெய்ச் சபையைத் தூத்துக்குடியில் நிலைநாட்டிய பரதகுலப் பெரியவர், சவியோ ரூபீன் அவர்களின் பௌத்திரன், மகா-ன-ன-ஸ்ரீ ஜே. எல். ரூபீன் அவர்களின், பிரியாப் பிரிய மனைவி கர்மலீத்தம்மாள், கொடிய நோயாகிய கபச்சுரத்தின் வசப்பட்டு, எத்தகைய ஒளஷதத்திற்கும் குணப்படாது, இறுதி ஒளஷதமாகிய, "சங்கீர்த்தனம் அலங்தைப்பூசுதல் நற்கருணை" களைப் பெற்று நிகழும் ஹு நவம்பர்மீ 12உ செவ்வாய்க்கிழமை இரவு 11½-மணியளவில், தான்பெற்ற மதலைவாய் மக்கள் இருவர் ஒரு புதுமும், தன்னைத் திருமணஞ்செய்த காயகன் ஒரு புதுமும், சுற்றத்தார் பலர் மற்றோர் புதுமுமாக மனக்கலக்கியழுது நிற்க, கூட்டிலடைபட்ட பைஞ்சிறைக்கிள்ளை, வாசலைத் திறந்தமாத்திரத்தில் கூட்டை விட்டுப் பறந்து தன் புள்ளினங்களோடு கூடிக்கொள்வதுபோல; இவ்வுரிமையற்ற உலக வாழ்வைவிட்டுச் சதா உரிமை வாய்ந்த மேலோக வாழ்வையடைந்தனள். மறுநாள் சாயரட்சை சங்கைக்குரிய அந்தோனி சுவாமிகளால் இப்பெண்ணின் சடலம் மந்திரிக்கப்பட்டு, அர்ச். சூசையப்பர் மையவாடியில் கல்லடக்கஞ் செய்யப்பட்டது. சர்வ சாம்பிராஜ்ஜிய வல்லபராகிய நமது பெருமான், இவ்வாத்துமாவுக்கு முடிவற்ற நித்திய ஜீவனை யருள்வாராக. இதைப் பார்வையிடும் நண்பர்கள் இவ்வாத்தும இரட்சண்யத்திற்காக, ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
12—11—18. ஓர் பரததுல அனுதாபி.

செலம்—சூரமங்கலம்.

நண்பர்களாவருக்கும்பட்சத்துடன் தெரிவிப்பது, காலஞ்சென்ற எனது மாமன் 36-வது பட்டானத்து பெண்டான் காயக் ஸ்ரீமான். ஆரோக்கியம் பிள்ளையவர்களின் செல்வக் குமாரத்தியும், எனது தமயன் சேலம் சூரமங்கலம் நாட்டாண்மை வி. ஏ. தெய்வநிகாமணி பின்னை அவர்களின் நேசப் பத்தினியுமான ஸ்ரீமதி ஞானசௌந்தரி அம்மாள் தனது அகால பிரசவத்தால் நிகழும் வருஷம் ஜனவரி மாதம் 4-ச் தேதி சனிக்கிழமை மாலை 4-மணியளவில் தனது நேசப்பத்தாவையும் 3 பிள்ளைகளையும் இன்னும் பந்து மித்திரர்களையும் கண் கலங்க பரிதவிக்கவிட்டு, தனது 25-வது பிராயத்தில் பரலோகபிராப்தியடைந்தனள். மறுநாள் மாலை 5-மணிக்கு அம்மாளுடைய சடலம் அர்ச். அந்தோனியார் பஜனையுடன் விமரிசையோடு கல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் சகோதரர் சகோதரிகள் ஷை ஞானசௌந்தரி அம்மாளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
C. A. ANTHONY PILLAY,
19—1—19. Engine Driver M.S.M.RY.
Bowringpet.

சிங்கப்பூர்.

சென்னை, புரசை, செம்மன் வீதியில் வசித்துக் காலஞ்சென்ற P. ஞானப்பிரகாசம் அவர்களின் இளைய சகோதரனும், எங்கள் சிறிய தந்தையருமாகிய P. தேவசகாயம் என்பவர் Semenyih Estate, Kojong Hospital வில் தம்மனைவி இரு ஆண்மக்கள் 3 பெண்மக்கள் மற்றும் சுற்றத்தார் யாவரையும் சென்னையில் விட்டு, 1918ஆம் நவம்பர்மீ 12-க்தேதி இன்புலுவன்சா என்னும் விஷகாய்ச்சலால் கர்த்தருக்குள் நித்திரையடைந்தனர். இப்பரிதாபமான துக்கச்செய்தியை, வாசிக்கும் சகோதரர்களே! மேற்படி ஆத்தும இளைப்பாறுதிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளும்படியாய்த் தங்களை வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்

இங்ஙனம்.

சிறிய தர்தையை இழந்த பரதவிக்கும் குமாரர்
P. G. ANTONY.
P. G. AROKIASAMY.

வீரமாமுனிவர் ஒளஷதசாலை.

"வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை" யானது காலுவித வியாதிகளையும் கண்டித்துப் போக்கும் அதிசய குணத்தைக்கொண்டிருப்பதனால் அதற்கு "சர்வரோக நிவாரணி" யென்னும் பேர்கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கட்டுக்கதையல்ல; கைகண்டது. பல்லாயிரம் பேர்களால் பரீட்சிக்கப்பட்டது. மேலும் பேர்போன ஓர் கத்தோலிக்குக் குருவானவரால் ஏழைகளின் பிரயோஜனத்துக்காக சுவமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. கத்தோலிக்குக் குருவானவர்கள், கன்னியாஸ்திரிகள், ஐரீஸ்துவர்கள் முதலியோரால் கையாளப்பட்டுவருகிறது. அநேக சற்சாட்சிப் பத்திரங்களைப் பெற்றுள்ளது. ஒவ்வொருவரும் தம்தம் வீடுகளில் கையிருப்பாய் வாங்கி வைத்துவைக்கத்தக்கது. குணமே தவிர

குற்றம் ஒருபோதும் செய்யாதது. பத்தியம் வேண்டாதது. இதனை இதுவரையில் வாங்கி பரீட்சியாதவர்களும், அல்லது வாங்கி அரை குறையாய் அவசரமாய் உபயோகித்துப் பயன் பெறுமல் கைவிட்டவர்களும், மறுபடியும் அவையம் வாங்கி பரீட்சித்துப்பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விலை 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு விலை ரூ 1 0 0.

தபாற் செலவு வி. பி. சார்ஜ் உள்பட ரூ 1 3 0.

வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தி. ம. மாணிக்கம் பிள்ளை,
போஸ்டு பாக்ஸ் நெ. 103,
மதராஸ்.

C. A. SILVEIRA,
Proprietor.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவை யென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்னாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,628—15—0. ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக் காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

			ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்டதொகை	...	...	1,628	15	0
இதற்கு 100-க்கு வட்டி ஆ வட்டி	...	...	16	4	9
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (ஜனவரிமீந்துக்கு)		...	30	0	0
	ஆக மொத்தம்	...	1,675	3	9

Rev. Fr. L. X. FERNANDEZ, North Georgetown, Madras, E.

விளம்பரம்

திருமயிலாப்பூர் அர்ச். சல்லாசர் கோவில் கட்டிட தருமம்.

இதனால் சகல கிறீஸ்துவர்களுக்கும், தருமசிந்தையுடைய எனையோருக்கும் அறிவிப்பது யாதெனில்:—

சென்னைக்கோர் சிரசென விளங்கும் திருமயிலாப்பூரின்கண் காலாகாலமாய்ப் பிரசித்திப் பெற்றிலங்காநின்ற அர்ச். சல்லாசர் கோவிலானது, அதனில் வருஷா வருஷம் பிரபல்யமாய்க் கொண்டாடப்படும் திவ்ய மகோற்சவத்திற்கும், வாரந்தோறும் பிரதி செவ்வாய்க்கிழமைகளிலும், அங்கு நடத்தப்படும் பரிசுத்த திருப்பூசை யாசிவர்தங்களுக்கும் விஜயஞ்செய்யும்படி தின தினாய் வருகிற, திருயாத்திரைக்காரர்கள் யாவரும் திவ்யபூசை சடங்குகளைத் தக்கபடி தரிசிக்கக் கூடாத அவ்வளவு சிறியதாய் இருப்பதால், இவ்வாலயத்தை வளர்த்திப் பெரிதாகக் கட்ட வேண்டுமென்பது அதிகருடைய விருப்பமும் வேண்டுகோளுமாக இருக்கின்றது. யாது காரியமும் பொருளின்றிக் கைகூடாதாகையாலும், அரிய பெரிய காரியமும் அதிகரது முயற்சியால் சுலபமாய் முடியக்கூடுமாகையாலும், அர்ச். சல்லாசர்மீது பக்தியுள்ள தாசர் நேயர்கள் ஒவ்வொருவரும் தவறாமல், தங்களால் கூடிய பொருளுதவி (அது, என்ன சிறு தொகையென்றாலும் சரி) செய்வார்களானால், இம்முயற்சி சீக்கிரமாய் நிறைவேறும்.

ஆதலால், இது கண்ட தகுணமே ஒவ்வொரு கிறீஸ்துவரும், தருமசிந்தையுள்ள கனதனவான்களும் தங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி கோருகிறோம்.

இங்ஙனம்,
அர்ச். சல்லாசர் கோவில், விசாரணை குரு,
T. da FONCECA DIAS.

திருமயிலாப்பூர்,
6—1—19.

The
Good Pastor
நல்ல ஆயன்

"நாம் கல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 17. | மார்ச் 1919. | இலக்கம் 3.

சென்னை அதிமேற்றிராணியாருடைய நிருபம்

சென்னை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த குருக்களுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் கர்த்தரில் ஆரோக்கியமும் ஆசீரும் உண்டாவதாக.

சேசுக்கிறீஸ்துநாதரில் நமக்குப் பிரியமுள்ள சங்கைக்குரிய சகோதரர்களே, பிரியமான பிள்ளைகளே,

இதற்கு முந்தின சில நிருபங்களில் நாம் உங்களுக்கு ஞானஸ்நானத்தினால் நமக்கருளப்பட்ட தேவசம்பந்தமான புண்ணியங்களினிமித்தம் சில உத்தமதிகளைச் சொல்லிவந்தோமல்லவா? இப்புத்திமதிகளைப் பூர்த்திசெய்துவிட இப்புண்ணியங்களில் மூன்றுவதான தேவ சிநேகத்தின்பேரில் இவ்வருஷத்திய இந்த எமது தபசுகாலத்திய நிருபத்தை எழுத எண்ணியிருந்தோம்.

ஆயினும் நாம் அனுசரிக்கவேண்டிய ஒருபொழுது, சுத்தபோசன ஒழுங்குகளில் செயயப்பட்டுள்ள சில மாற்றங்கள் இவ்வருஷத்திலிருந்து அனுசரிக்கப்படுவது

அவசியமாகையால், இம்மாற்றங்களை நாம் உங்களுக்கறிவித்து, இவைகளைப்பற்றி இரண்டோர் வார்த்தை சொல்லுவது நமக்கு அத்தியாவசியமாமே.

புதுப்பிக்கப்பட்டிருக்கும் திருச்சபையின் சட்டம் சென்ற 1918-ம் வருஷம் இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளன்று அமுலுக்குவந்ததென நீங்கள் அறிவீர்கள். ஒருபொழுது, சுத்தபோசனம் ஆகிய இவைகளின் விஷயமாய் அர்ச். பாப்பானவர் எமக்கு 10-வருஷங்களுக்களித்திருந்த விசேஷ உத்தரவு இவ்வருடத்துடன் முடிவாகிறபடியால், திருச்சபையின் புதுச் சட்டப்படி இவைகளில் நமக்குள்ள கடமைகளை யறிவிக்கப் பரிசுத்த தந்தையவர்களைக் கேட்டுக்கொண்டோம். பரிசுத்த தந்தையவர்கள் உலகமடங்கலிலும் ஒரே விதமாய் ஒடி கடமைகள் அனுசரிக்கப்படுதலே தமக்குப் பிரியமென்றும், ஆயினும் தம்முடைய இந்த அபிலாஷையை நாம் இன்னும் இரண்டு வருஷங்கள்வரையிலும் நிறைவேற்றத் தேவையில்லையென்றும் தம்முடைய தந்தைக்குரிய அநுதாபத்தோடு நமக்குத் தெரிவித்திருக்கிறார். ஆனபடியால் நாம் எல்லோரும் அர்ச். பாப்பானவருடைய உண்மையுள்ள விதேயர்களென்றெண்பிக்குமாறு, இந்த இரண்டு வருஷங்களுக்குப்பிறகு அவருடைய இஷ்டப்படி ஒருபொழுது சுத்தபோசன கடமைகளை யனுசரிக்கத் தயாராயிருப்போமாக. இந்த இரண்டு வருஷங்களிலும் நாம் அனுசரிக்கவேண்டிய ஒருபொழுது, சுத்தபோசன ஒழுங்குகள் திருச்சபையின் புதுச் சட்டப்படிக்கும், இன்னும் நமக்களிக்கப்பட்டிருக்கிற விசேஷ உத்தரவின்படிக்கும் அதிக இலேசானவைகளாயிருக்கின்றன. இந்த இரண்டு வருஷங்களுக்குப்பிறகு ஏறக்குறைய திருச்சபையின் பொதுச் சட்டத்தை யனுசரித்துக் கண்டிப்பான ஒருபொழுது சுத்தபோசன ஒழுங்குகள் நமக்குக் கற்பிக்கப்படும். அப்போது அவைகள் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

பரிசுத்த தந்தையவர்கள் ஆசிக்கிறபடி எவ்விடத்திலும் ஒரே விதமாய்த் திருச்சபையின் கட்டளைகள் அநுசரிக்கப்படுவதற்குத் தொடக்கமாக, நாம் இவ்வருஷத்திலிருந்தே ஓர் கட்டளையை அநுசரிக்கக் கடமைப்பட்டுள்ளோமென்பதைக் கவனிப்போமாக. உங்களெல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்திருப்பதுபோல, பாஸ்குக்கடனைத் தீர்க்க இதுவரையிலுங் குறிக்கப்பட்டிருந்த காலம் விபூதித் திருநாளன்று ஆரம்பித்து அர்ச். தமதிரீத்துவத்தின் ஞாயிறோடு முடிவாகிவந்ததல்லவா? ஆனால் இது முதற்கொண்டு இந்தக் காலம் தபசுகாலத்தின் நான்காம் ஞாயிறு தொடங்கி அர்ச். தமதிரீத்துவத்தின் ஞாயிறோடு முடிவாகும்படி குறைக்கப்பட்டிருக்கிறது. தபசுகாலத்தின் துவக்கத்திலேயே பாஸ்குக்கடனைத் தீர்த்துப்போடுவது மேலானதும் மெச்சத்தக்கதுமான காரியம். ஆயினும் இவ்வருஷத்திலிருந்து தபசுகாலத்தின் 4-ம் ஞாயிறுக்குமுந்தி யாருக்கும் பாஸ்குக்கடனைத் தீர்க்க உத்தரவில்லை. எமது அதிமேற்றிராசனக் குருக்கள் இந்தப் புதுக் கட்டளையைத் தத்தம் பங்கு கிறீஸ்துவர்களுக்குத் தெளிவுபட தெரிவித்து, அவர்களெல்லோரும் தங்களுடைய பாஸ்குக்கடனைக் குறிக்கப்பட்டுள்ள காலத்துக்குள் நிறைவேற்றிப்போடப் பார்ப்பார்களாக.

நாம் இன்று இன்னோர் பிரதானமான காரியத்தைப்பற்றி உங்களுக்குச் சொல்லவும், அதன் விஷயமாய் நீங்களெல்லோரும் பொறுப்பும் பிரியமுங்கொள்ளவும் ஆசிக்கிறோம்.

மேற்றிராணிமார்களுடைய ஆதரணையில் இந்தியாவுக்காக கத்தோலிக்கு வேத உண்மை பிரசுரச் சபை ஒன்று ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கத்தோலிக்குச் சத்திய திருச்சபையின் பலத்த சத்துருக்களில் ஒன்று யாதெனில், சத்திய திருச்சபையின் சொந்த மக்களும், இன்னும் அதில் சேராதோர்களும் அதன் உண்மையான போதகத்தைச் சரியாய் அறியாதிருத்தலேயாம். கத்தோலிக்கு வேதத்தை நன்றாய்க் கற்றறிந்த எவரும் தம்மிடத்திலுள்ள விசுவாசத்தில் ஸ்திரமாய் ஊன்றி நிற்பார்களாதலால், அவர்கள் தங்கள் சத்திய வேதத்துக்கு விரோதமாய் பத்திரிகைகளிலும், துண்டுப் புத்தகங்களிலும், இன்னுமற்ற பிரசுரங்களிலும் பிரசுரிக்கப்படுவனவற்றைக் காண்கையில் தங்களுடைய விசுவாசத்தில் தத்தளியார்கள். இத்த

கைய கெட்ட பிரசுரங்கள் சத்திய வேதத்தை நன்றாய் அறியாதவர்களுக்குத்தான் பல கேடுபாடுகளை விளைவிக்கும். இந்த வேத அறிவீனத்தைப் போக்க வழிவகைகள் கோவில்களிலும், பள்ளிக்கூடங்களிலும் புத்திப் பிரசங்கங்கள், ஞானப்போதகங்கள் செய்யப்படுதலேயாம். இவ்விஷயம் எவ்வளவு அவசியமென்பதை நாம் உங்களுக்கு வற்புறுத்திக்காட்டத் தேவையில்லை. அன்றியும் கத்தோலிக்கு வேத சத்தியங்களை விளக்கிக்காட்டும் துண்டுப் புத்தகங்களும், பிரசுரங்களும் இந்த அறிவீனத்தைவெல்ல இன்னொரு மேலான சாதனமாகும்.

நம்முடைய சத்திய வேதத்தின் உண்மையையும் ஞானத்தையும் இந்தியாவில் அதிகமதிகமாய் விளங்கச்செய்வது மகா அவசியம். இன்னும் 30 கோடி ஜனங்கள் சத்திய வேதத்திற் சேராதிருக்கிறார்கள். பல பிரிவினராயுள்ள புரோடஸ்டாண்டாரோ "சர்வேசுரனுடைய சத்தியத்தைப் பொய்யாக மாற்றிப்போட்டதுமன்றி" (உரோ. I. 25.) கத்தோலிக்கு வேதத்துக்கு விரோதமாய்ப் பொய்ப்புரட்டுகளையும் அவதூறுகளையும், துர் அபிமானங்களையுங்கொண்ட பத்திரிகைகளையும், பிரசுரங்களையும் தேச முழுவதிலும் வழங்கிவருகிறார்கள். ஆனபடியால் நம்முடைய சத்திய வேதத்தின் உண்மைகளைக் கோடானுகோடி ஜனங்கள் அறியும்படியாகவும், அதற்கு விரோதமாய்க் கூறப்படும் பொய்ப்புரட்டுகளையும், புரணிகளையும் எதிர்த்து மறுக்கும்படியாகவும் முயற்சிசெய்யப்படவேண்டிய தவசியம். இவ்விஷயம் நமது குருக்களுடைவும் கிறீஸ்துவர்களுடையவும் கவனத்தைக் கவரக் கோருகிறோம். ஏனெனில் உங்களுடைய மெய்யான விசுவாசமொன்றே உங்களுக்கு விலையுயர்ந்த பொக்கிஷமன்றோ?

வேத சத்தியங்களை விவரமாய் விளக்கிக்காட்டும் பிரசுரங்களைப் பிரசுரித்து அவைகளைச் சுலபமான விலைக்கு விற்பதே கத்தோலிக்கு வேத உண்மை பிரசுரச் சபையின் முக்கிய நோக்கம். உண்மையை அறிய மனமுள்ளவர்கள் இவைகளை வாசிப்பார்களானால் அவர்களும் சத்திய வேதத்திற் சேர ஏதுவாகும். ஆனதுபற்றி நீங்கள் எல்லோரும் இந்தச் சபையின் விருத்திக்காக உடனுழைக்க உங்கள் எல்லோரையும் நாம் ஏவித் தூண்டுகிறோம்.

"நல்ல ஆயன்" எனும் மாதாந்தர பத்திரிகையை அநேக வருடங்களாய்ப் பிரமாணிக்கத்துடன் கைசோரவிடாது ஆதரித்துவருகிற ஆயிரமாயிரமானோர் அதனால் பல நன்மைகள்பெற்றுவருகிறார்கள். "கத்தோலிக்கு வாச்சுமன்" என்னும் ஆங்கிலப் பத்திரிகை கடந்த 30-வருடங்களுக்கதிகமாகவே தன்னுடைய சிறந்த அலுவலை அஞ்சாத் தைரியத்துடன் நிறைவேற்றிவருகிறது. எமது அதிமேற்றிராசன வாராந்தப் பிரசுரமாகிய இப்பத்திரிகையினால் எமக்கு அதிக செலவும் சிரமமும் நேருகின்றனவென்றாலும் பல நன்மைகளுமுண்டாகிவருகின்றனவென்று ஆறுதலடைகிறோம். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமுள்ள பேர்போன பத்திரிகாபிமானிகளிற் சிலர் இந்த "வாச்சுமன்" பத்திரிகையை வாசித்து சந்தோஷப்பட்டு இதைப்பற்றி சிலாகித்துப் பேசியிருக்கிறார்களென்றாலும், இது பிரசுரிக்கப்படும் இவ்விடத்தில் இதற்குரிய செல்வாக்கு கிடைக்கவில்லையென்பது நமக்குக் கஸ்திக்கிடமாகிறது. இப்பத்திரிகையின் கையொப்பக்காரர் வெகு சொற்பப்பேர். இந்தச் சொற்பப்பேருக்குள் பெரும்பாலோர் இந்த மேற்றிராசனத்துக்குப் புறத்திப்பட்டவர்களாவர். நீங்கள் எல்லோரும் கத்தோலிக்கு வாச்சுமனுக்கு கையொப்ப நேயர்களாகும்பொருட்டு உங்களை உற்சாகப்படுத்த, காலஞ்சென்ற பரிசுத்த தந்தை பத்தாம் பத்திநாதர் வசனித்திருப்பதையே நாமும் உங்களுக்கு வசனிக்கிறோம்: "தகுந்த கத்தோலிக்குப் பிரசுரங்களின் உதவியின்றி நீங்கள் கோவில்கள் கட்டியெழுப்புவதும் வீண், பிரசங்கங்கள் செய்வதும் வீண், பள்ளிச்சாலைகளை ஸ்தாபிப்பதும் வீண்."

கடைசியாய் நாம் உங்களை ஏவித்தூண்டுவதுயாதெனில் உலகத்தில் தற்போது உண்டாயிருக்கும் குழப்பங்களையும் குதர்க்கங்களையும் ஒழுங்குபடுத்தும்படி சங்கங்கூடிப் பேசுகிறவர்கள் காரியாகாரியங்களைச் சீர்தூக்கிப்பார்த்துத் தீர்மானிக்குமாறு

அவர்களே இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் சரியான வழியில் நடத்தியருள வேண்டுமென்று அவரை நோக்கி வேண்டிக்கொள்ளவேண்டுமென்பதே. எனெனில் உலகத்தின் பிரகாசமாகிய அவருடைய பராமரிப்பின்றி ஓர் தீர்மானமும் சரியான முடிவுபெறாது (அரு. IX. 5.) "நாமே வழியும் உண்மையும் சீவியமுமாயிருக்கிறோம்" மென்று அவரே திருவுளம்பற்றியிருக்கிறார். (அரு. XIV. 6.)

அப்போஸ்தலராகிய அர்ச். மத்தியாஸ் திருநாளன்று இந்நிருபம் விடுக்கப்பட்டது.

இந்த நிருபமானது நமது அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த எல்லாக் கோவில்களிலும், சிறிய கோவில்களிலும், மடங்களைச்சேர்ந்த கோவில்களிலும் தபசுகாலத்துக்கு முந்திவரும் ஐம்பதாம் நாள் ஞாயிறன்று வாசிக்கப்படக்கடவது.

சர்வேசுரன் உங்களனைவரையும் தமது பரிசுத்த பாதுகாவலில்வைத்துக் காப்பாற்றுவாராக.

கிறீஸ்துநாதரில் உங்கள் பக்திக்குரிய தங்கையாகிய,

✠ அருளப்ப ஆலன்,
சென்னை அதிமேற்றிராணியார்.

எ. மேர்கேஸ்,
செக்ரடெரி.

RULES OF FAST AND ABSTINENCE.

திருச்சபை அதிகாரத்துக்குட்பட்ட சென்னை மாகாணத்தில் அநுசரிக்கவேண்டிய ஒருபொழுது சுத்தபோசன ஒழுங்குகள்.

(இவை திருச்சபையின் புது கானன் சட்டத்தை யநுசரித்தும், 1909வது ஜூன்மீ 9உ நமது பரிசுத்த பிதாவினால் நமக்கு அளிக்கப்பட்ட விசேஷ அதிகாரத்தை இன்னும் இரண்டு வருஷ காலத்துக்குத் தொடர்ந்து நடத்தலாமென்று வந்த உத்தரவை யநுசரித்தும் நியமிக்கப்பட்டவை).

1. இருபத்தோர் பிராயமானவர்களும், இன்னும் 60-வது பிராயத்தை யடையாதவர்களும் தபசுகாலத்தில் வரும் ஏழு வெள்ளிக்கிழமைகளிலும், பெரிய சனிக்கிழமையில் மத்தியானம்வரையிலும், கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளிலும் ஒருபொழுதிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த ஒருபொழுது நாட்களில் சில்லறை சாப்பாட்டைச் சாப்பிடவும் உத்தரவு உண்டு.

2. சில்லறை போசனத்தைக் காலையில் அருந்தி மத்தியானத்துக்குப்பிறகு முழுச் சாப்பாட்டைச் சாப்பிடலாம் அல்லது ஏறக்குறைய மத்தியான நேரத்தில் முழுச் சாப்பாட்டைச் சாப்பிட்டு மாலையில் சில்லறைச் சாப்பாட்டைச் சாப்பிடலாம்.

3. ஏழு பிராயமான பிள்ளைகளினை வரும் சுத்தபோசனம் அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

வருஷத்தில் வரும் சகல வெள்ளிக்கிழமைக்ளும், விபூதித் திருநாளும், பெரிய சனிக்கிழமை மத்தியானம்வரையிலும், கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளும் சுத்தபோசன நாட்கள்.

4. சுத்தபோசன நாட்களில் இறைச்சியையாவது அதின் சாரத்தையாவது சாப்பிடலாகாது.

5. முட்டை, பால், வெண்ணை, பாற்கட்டி, மற்றும் நெய், கொழுப்புமுதலியவை சேர்ந்த பதார்த்தங்களைச் சுத்தபோசன நாட்களில் சாப்பிடலாம். பெரிய வெள்ளிக்கிழமையிலும் சாப்பிடலாம்.

6. தபசுகாலத்தில் இறைச்சி சாப்பிட உத்தரவு உள்ள நாட்களில் மீனும் இறைச்சியுங் கலந்து சாப்பிட உத்தரவு உண்டு.

7. தபசுகாலத்தவிர மற்றக் காலத்தில் வருங் கடன் திருநாட்களில் சுத்தபோசனமாவது ஒருபொழுதாவது அனுசரிக்கக் கடமையில்லை.

8. யாதொரு திருநாளுக்கு முந்தி "விஜில்" அல்லது ஆயத்த நாளாகவரும் நாள் முந்திவருமானால் அந்த நாளில் சுத்தபோசனமாவது ஒருபொழுதாவது அனுசரிக்கக் கடமையில்லை.

9. சரீரப் பிரயாசைப்பட்டுக் கஷ்டவேலைசெய்து சீவனஞ் செய்கிறவர்களும், சரியான சாப்பாட்டுக்கு வழியில்லாத ஏழைகளும், வியாதியஸ்தரும், வியாதி நீங்கி சொஸ்தமடைந்துவருகிறவர்களும், இவர்களைப்போல் பூரணசுகமில்லாத மற்றவர்களும் ஒருபொழுதிருக்கக் கடனில்லை. ஆயினும், இவர்களெல்லோரும் வேறு காரணங்களினிமித்தம் சுத்தபோசனத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தாலொழிய 21 பிராயத்துக் குட்பட்டவர்களைப்போலவே சுத்தபோசன ஒழுங்கை யனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

10. இப்போது சொல்லிய வொழுங்குகளில், விசேஷித்த முகாந்தரத்தை முன்னிட்டு ஏதேனுமொன்றைக் குறைக்கவேண்டுமானால், நமது அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த குருப்பிரசாதிகளுக்குத் தங்கள் தங்கள் பங்கு கிறீஸ்துவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய ஒருபொழுதையும் சுத்தபோசனத்தையுமபற்றிய கடமைகளை மாற்றவும் வேறே நற்கிரியைகளைச்செய்யக் கட்டளையிடவும் அனுமதியுண்டு. ஆகையால் கிறீஸ்துவர்கள் அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொள்ளலாம். இப்போது கொடுத்திருக்கிற ஒழுங்குகள் மிகவும்சுலபமானவைகளாயிருப்பதால் விசேஷித்த பெரும் முகாந்தரமிருந்தால்லாது கிறீஸ்துவர்கள் இவற்றை இன்னும் குறைக்கும்படி கேட்கிறதும் சரியல்ல; குருப்பிரசாதிகள் அதற்கு இணங்குகிறதும் சரியல்ல.

* * *

திருச்சபையின் புதிய சட்டப்படிக்குத் தபசுகாலத்தின் நான்காம் ஞாயிறு முதல் அர்ச். தபதீரித்துவத்தின் ஞாயிற்றுக்கிழமைக்குள்ளாக விசுவாசிகள் தங்கள் தபசுக் கடனைத் தீர்த்துக்கொள்ளவேண்டியது.

* * *

1909வது ஜூன்மீ 9உ நமக்களித்த அப்போஸ்தொலிக் அதிகாரத்தையினும் இரண்டு வருஷங்களுக்குத் தொடர்ந்து செலுத்த அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறபடிக்கு அடியிற்கண்ட நாட்களை சென்னை மாகாணத்தில் கடன் திருட்களாக அனுசரிக்கவேண்டியது:

நமது கர்த்தர் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாள்.

தேவநற்கருணை திருநாள்.

தேவமாதா மோக்ஷத்துக் கெடுத்துக் கொள்ளப்பட்ட திருநாள்.

கர்த்தர் பிறந்த திருநாள்.

✠ அருளப்ப ஆலன்,
சென்னை அதிமேற்றிராணியார்.

எ. மேர்கேஸ்,
செக்ரடெரி.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

3-ம் அதிகாரம்.

அகுஸ்தீன் என்பவரின் பாலியமும் அவருடைய ஆசாபாசங்களின் தோற்றமும் அவைகளின் காரணங்களும் வளர்ச்சியும் உச்சமும்—அர்ச். மோனிக்கம்மாளுக்கு ஆறுதல் அளிக்கவும் அர்ச். அகுஸ்தீனுக்குத் தாபரமாயிருக்கவும்—பத்தீஸியூஸ் அஞ்ஞானத்தை வெறுத்து திருச்சபையோடு ஐக்கியமடைகிறார்.

(கர்த்தர் அவதாரம் 368—370.)

(முன் தொடர்ச்சி.)

அக்காலத்தில் பத்தீஸியூஸ் தகாஸ்தேயிலிருந்து தன் மகனை அழைப்பித்து மதாரா என்னும் நாடுகளிலுள்ள கீர்த்திபெற்ற கல்லூரிகளுக்கு அவனை அனுப்பும்படியாகத் தன் வீட்டில் வைத்துக் கொண்டிருந்தான். தன் மகனிடம் வீளக்கும் புத்திநிறமையை அறிந்ததினாலும், கண்டோர் யாவரும் அவனை மெச்சிப் புகழ்வதைக் கேட்டதி

னலும், அவன் இனியில்லாத அக்களிப்படைத்து தன் செல்வப்புத்திரனே உரோமாபுரிக்கு அனுப்ப ஆசையாயிருந்தான். ஆனால் அதற்குப் போதுமான திரவியம் இல்லாத குறைவால், அவரைக் கார்த்தேஜ் நகருக்காவது அனுப்பிவைக்க முயற்சிசெய்யும்படி தீர்மானித்தான். இந்நகரிலும், சிறந்த கல்விச்சாலைகளும் பெரிய புஸ்தக சாலைகளும் இருந்தன. கீர்த்திபெற்ற வித்தியார்த்திகளும், கல்ல வங்கிஷத்தைச்சேர்ந்த அநேக வாலிப மாணாக்கர்களும் அங்கு இருந்தார்கள். இம்மாணாக்கர்கள் யாவரும் கூட உடைபாவனைகளில் நாகரீக வழக்க பழக்கங்களேயே சம்பிரதாயமாய்க்கொண்டவர்கள். அகுஸ்தீன் புத்தியில் பூரணபக்குவமடையவும், கல்வியிலும் லௌகீக ஞானத்திலும் ஓங்கவும், இவையெல்லாம் அவசியமாயிருந்தன. ஆனால் இதற்கெல்லாம் வேறும் ஆசைபற்றுதல் மிகுதியான திரவியமும் வேண்டும். பத்ரீஷியூஸ் திரவியவானன்று. தன் சம்பாதனையைச் சிக்கனமாய்ச் செலவு செய்து, அவசியமில்லாத சக சந்தோஷங்களைத் தள்ளி, மீதியாகும் பணத்தைச் சில காலம் வரைக்கும் சேர்மானம் செய்தால்தான், தன் கருத்தை நிறைவேற்றக்கூடும். ஆதலால் கார்த்தர் பிறந்த 369-ம் வருஷத்தின் மூடிவில் பள்ளிக்கூடங்கள் விடுமுறைக்காகச் சாத்தப்பட்ட போது, பத்ரீஷியூஸ் தன் மகனை மதாராவிலிருந்து அழைப்பித்து ஒரு வருஷம்வரையில் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருந்தான். தன் மகன் கார்த்தேஜ் நகருக்கு நெடும் பயணம் செய்து போவதற்கு அவசியமான திரவியத்தை இக்காலத்தில் சேர்மானம் செய்யவேண்டியிருந்தது. அகுஸ்தீன் தகாஸ்தேயுக்கு வந்தபோது, அவருடைய தாயார் எப்படிப்பட்ட சந்தோஷத்துடன் அவருக்கு நல்வரவுகொடுத்திருப்பாளென்று நாம் நிதானிக்கக்கூடும். இவர் எப்படிப்பட்டவரென்றும் தன்னை விட்டுப் பிரிந்திருந்தகாலையில் அவர் குணம் என்ன மாற்றமடைந்ததென்றும் அவள் இன்னும் அறிந்தவளல்ல. தனது கண்ணுக்குக் கண்ணான புத்திரன் புத்தி சூட்சமமுள்ளவனாய், உயர்தர பரிட்சைகளில் தேறி, கீர்த்திப் பிரதாபமடைந்திருப்பதைக் கண்டவுடன் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்" என்றபடி அவளது உள்ளம் அபரிமித சந்தோஷத்தால் பூரிப்படைந்தது. பிள்ளையைப் பெற்ற தாய் எவ்வளவுதான் ஸ்திரமையுள்ளவளாயிருந்தபோதிலும், இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் இப்படி மகிழ்ச்சியடைவது சகஜமே. அவர் ஒரு தோஷமுமறியாமல் மாசற்றவராயிருக்கிறாரென்று அவள் எண்ணி, மூவைந்து வயதுள்ள அவரது பரந்த நெற்றியை நேசம் நிறைந்த உள்ளுணர்ச்சியுடன் முத்தமிடுவாள்.

அகுஸ்தீன் இன்னும் ஒரு தோஷமுமறியாமல், மாசற்றவராயும் பரிசுத்தராயுமிருந்திருந்தால், அல்லது தன் படிப்பைக் கொஞ்ச காலத்திற்கு நிறுத்தி, தன் பெற்றோர் வீட்டிற்குவந்திருந்த அச்சமயத்தில் முதல் முதலாக தனக்குள் எழும்பிய ஆசாபாச உணர்ச்சிகளைத் தன் தாயாருக்குத் தைரியத்துடன் நிஷ்கபடமாய் வெளிப்படுத்தியிருந்தால், அவருக்கு நலமாயிருந்திருக்கும். அவளும் அவருக்கு வேண்டிய சற்போதனைகளைப் பகட்டி "சகவாச தோஷம் சகலமும் தோஷம்" என்றபடி கார்த்தேஜ் நகரிலுள்ள பொல்லாத வாலிபர்களுடைய சகவாசத்தினால் அவர் கெட்டுப்போகாதபடி வேண்டிய எத்தனங்களைத் தேடியிருப்பாள். ஆனால் அவரது ஆத்துமம் அச்சமயத்தில் நிர்ப்பாக்கிய ஸ்திதியிலிருந்தது. மேலும், தன் இருதயத்தின்மேல் அரசு செலுத்திவந்த ஆசாபாச வுணர்ச்சிகளைத் தனது தாயாருக்கு வெளிப்படுத்தாமல், மறைத்துவைக்கவேண்டுமென்று ஒரே தீர்மானமாயிருந்தார். இதைவிட பிரலாபத்துக்குரிய விஷயம் வேறொன்றுமில்லை. இப்போது தனது தகப்பனார் வீட்டில், படிப்புமுதலிய மனோமுயற்சியொன்றுமில்லாமல் சோம்பேறித்தனத்தில் நாள் கழித்துவந்தபடியால், அவரது இருதயம் வெறுமைகொள்ளலே, அவரது உள்ளத்தில் என்னென்னவோ இல்லாத வீண் எண்ணங்களெல்லாம் உற்பத்தியாயின. இதனால் பாலியரான அவரது இருதயத்தில் முன்னமேயே வியாபித்திருந்த ஆசாபாச உணர்ச்சிகள், எரிகிற கொள்ளியின்மேல் எண்ணெய் வார்த்ததற்கொப்ப உக்கிரக்கொண்டு கொழுந்துவிட்டு எரியத்துவக்கின.

அவர் சொல்வதாவது: "என் பதினாறாம் பிராயத்தில் சிற்சில வீட்டுக்காரியங்களினால் என் படிப்பு தடைபட்டுப்போக, நான் பள்ளிக்கூடம் விட்டு என் பெற்றோரிடம் போகவேண்டியதாயிற்று. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல மோக ஆசைகள் என்னும் கெருஞ்சில் முட்கள் இதுவரைக்கும் என் ஆத்துமத்தைக் கொஞ்சமாய்ச் சுருக்கு சுருக்கென்று குத்திக்

கொண்டிருந்தன. இப்போதோ அவைகள் ஒரே அடியாய் என் தலைக்கு மிஞ்சிக் கிளைகளைப்போல் வளர்ந்து என்னை மூழ்கடிக்கத்துவக்கின." ஆத்துமத்திலுள்ள தேவ கிருபைவையும் விசேஷமாய் தேவ அன்பையும் மோக ஆசையைப்போல் வேறெதுவும் குறைவுபடுத்துவதில்லை. ஆகையால் அவருக்கு மனசாட்சியின் சப்தம் குறைந்தே வந்தது. மீளவும் அவர் வாக்குச் சாதுரியத்துடன் சொல்வது "என் கடவுளே, நான் தேவ துரோகியாய்ப்போனேன். அதற்குத் தண்டனையாக, என் பாவச்சிறைச் சங்கிலியின் சப்தத்தினால் உமது திவ்ய குரலொலி என் காதில் விழவில்லை. மேலும் உமது சகாயமும் உதவியும் தப்பிப்போனபடியால், நான் மோக அகோர அக்கினி வெள்ளத்தில் அமிழ்ந்தி வெந்துகிடந்தேன். என் இருதயம் முழுதும் அக்கினிமயமாய்ச் சுவாலைவிட்டெரிந்து பாவத்தில் புழுவைக்கிடந்தது." அர்ச். அகுஸ்தீன் மொழிந்த வாக்கியவகளை அதில் அடங்கிய உள்ளர்த்தத்துடன் விவரித்துச் சொல்வது முற்றிலும் கடாமை.

மீண்டும் அவர் சொல்வது "மோக ஆசையானது வெள்ளம்போல திரண்டிருண்டு என்னை முழுகடிக்க, என் ஆத்துமமானது அக்கிரமத்தில் நிலைகொண்டது. ஓ! என் கடவுளே, என சந்தோஷமே, உம்மில் யான் சுகிக்க எவ்வளவு தாமதம்! ஆத்துமத்தைப் ஊடுருவிப் பாயகூடிய தான உமது மாதுரியமுள்ள குரலொலிக்கு யான் செவிகொடுக்காமல், உமைவிட்டு வெகு தூரமாய் அகன்றுபோனேன்." அகுஸ்தீன எவ்வளவுதான் சிறறின்ப உணர்ச்சியுள்ளவராயிருந்தபோதிலும், எவ்வளவுதான் சீர தூரிச்சைகளுக்கு இடங்கொடித்தபோதிலும், மனப்பாக்கியம் எனபதை அணுவளவும் அநுபவித்தவரேயல்லவென்று உறுதியாய்ச் சொல்லக்கூடும். இப்படி எப்போதும் அவர் மனோவாதனையால் வாதிக்கப்பட்டுவருதினால், குழந்தைப் பருவத்திலேயே அவருடைய இருதய உணர்ச்சிகளைப் பக்குவப்படுத்தி அவைகளை கல்வழிச் சார்ப்பாய் நடத்திவந்த அர்ச். மோனிக்கம்மாளுக்குச் சர்வ ஸ்துதியும உண்டாவதாக. அவர் பாவத்தைச் செய்ததினால் அவருக்குத் துக்கமும் மூகவாட்டமுமே உண்டாயிற்று. மகா கொடிய மனோவாதனையை யநுபவித்தார். சமாதானத்தையும் பாக்கியத்தையும் தெடினார். ஆயினும் சந்தோஷம் சற்றும் உண்டாகவில்லை. பாவச் சகதியைவிட்டுப் புறப்பட இது எப்படிப்பட்ட தாண்டுதல்!

பைத்தியம் பிடித்தவனைப்போல் கொஞ்ச நேரம் சிற்றின்ப நுகர்ச்சியிலிருந்தபிறகு, என்னவோ ஒரு பயங்கரமான கனவு கண்டெழுந்தவனைப்போல் உணர்ச்சி தெளிந்து தன் நிலைமையைப்பற்றி பயப்பட்டுப் பிரலாபிப்பார்.

"ஓ! என் கடவுளே, நான் பாவத்தில் தேடும் சகல சந்தோஷங்களையும் தேவரீர் கசப்புள்ளதுக்கமாக மாற்றிவிடுகிறீர்! இது என்னதற்கெனறால் 'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல, கலவழியிற்கூட்டுதற்கே' என்றபடி, மனோகரமானதும், மோட்சபாக்கியத்திற் கடித்ததும, மனசாட்சியின் கண்டனைக்கு அற்பமும எதுகாமிலலாததுமான தூய சந்தோஷங்களை நான் சுகிக்க என்னை உமது பாரிசமாய்த் திருப்பும்படியாகத்தானேயன்றி மற்றப் படியல்ல."

"கடவுளை மறப்பதில் மெய்யான சந்தோஷம் கிடைப்பதிலலை. அகுஸ்தீன் எப்போது கடவுளை மறந்தாரோ, அப்போதே தன் மனோ சுதந்தரத்தையும் யிழந்து, கடிவாளமில்லாத கோவேறு கழுதைகளிகித்த ஆசாபாசங்களுக்கு அடிமையாய்ப்போனார். கலக்கங்கொண்ட தன் மனதில் எழுமபிய மோக ஆசையை யெதிர்த்து ஜெயிப்பது கூடாதகாரியமன்று சாதிக்க எண்ணங்கொண்டு, அவ்வாசைகளுக்குத் தன்னை முற்றிலும் ஒப்படைத்தது சேற்றில் புரண்டிருளும் பனறியைப்போல் பாவசகதியில் புரண்டுவந்தார். அவர் சொல்வது "நான் மனோ இஷ்டத்தின்படி நடக்கக்கூடிய சர்வ சுதந்தரமுள்ள மனுஷனாயிருக்கிறேனென்று நினைக்கும் போதே, கொல்லனனவன் உலையில் காய்ச்சியடித்துச செய்யும் இரும்பு சங்கிலிக்கு நிகரான பாவச் சங்கிலியை என் தரப்பியாசத்தினால் எனக்கு நானே செய்துகொண்டு அதனால் என்னை வரிந்து கட்டிக்கொண்டேன். தேவனுக்குப் பயந்து நடப்பது கேவலமான அடிமைத்தனம்! அவருடைய கட்டுப்பாட்டை மீறி நடப்பதில்தான உண்மையான சுதந்தரமுண்டு! என்று இவ்வாறாக நினைத்து அப்பொய்ச் சுதந்தரதை யான கையாடிவந்ததில், தலைமேல் ஒரு பளுவுள்ள பாரத்தைத் தனக்குத்தானே வைத்துக்கொண்டு அப்பாரத்தை யசைத்து ஆட்டி கீழே தள்ளக்கூடாமல் தவிக்கும் மூடனுக் கொப்பானேன். மேலும் தன்னையே பருத்த

தாம்புக்கயிறுகளினால் கட்டிக்கொண்டு பிணம் போல் கிடக்கும் பிதத்னுக்கொப்பானேன்."

பொஸ்ஸெ என்பவர் சொல்லுமாப்போல் "உலகத்தில் இருவித சுதந்தரமுண்டு. ஒன்று தேவனுக்குப் பயந்து நடக்கும் தேவ மக்களின் சுதந்தரம். மற்றொன்று தேவ கட்டளையை மீறி நடக்கும் பேய் மக்களின் சுதந்திரம். அகுஸ்தீன் இப்பேய் மக்களுக்குரித்தான சுதந்தரத்தைக் கையாடிவரும்போது, எப்படிப்பட்ட நீச அடிமைத்தனத்திற்குட்பட்டிருந்தாரென்பதைப் பாருங்கள்!"

அந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியில் அடிக்கடி கடவுளைப் பார்த்து மன்றாடுவார். பாவமென்னும் குஷ்டரோகங்கொண்ட தன் ஆத்துமத்தைக் கடவுள் பாரிசமாய்த் திருப்புவார். அவர் பட்ட பச்சாத்தாபத்தினால் அவருடைய பாவத்தளைகள் அசைந்தன. அக்கினிமயமாய்ப் பற்றியெரிந்த ஆசாபாசங்களின் நீச அடிமைத்தனத்திலிருந்து தன்னை விடுவிக்கும்படியாகக் கடவுளின் உதவி சகாயத்தைக் கோருவார்.

ஒரு பக்கத்தில் கடவுள் எங்கே தன் மன்றாட்டைச் சீக்கிரத்திற் கேட்டுத் தமது உதவி சகாயத்தை அநுக்கிரகம் செய்துவிடுவாரோவென்று பயப்படுவார். "கர்த்தாவே, எனக்குக் கற்பையும் விரதத்துவத்தையும் அருள் புரியும்படியாக உம்மை வேண்டுகிறேனென்று உரத்த சப்தமாய் மன்றாடுவார்." ஆனால் அப்படி மன்றாடும்போதே "சுவாமீ இத்தனை சீக்கிரம் வேண்டாம். இந்த நல்ல வாலிப வயதில் கொஞ்சம் உலக சந்தோஷத்தை யான சுகிக்கட்டும்" என்று உள்ளுக்குள்ளே சொல்லிக்கொள்ளுவார். அவர் பாவியாயும் நிர்ப்பாக்கியராயுமிருந்தும் தன்னைச் சொஸ்தப்படுத்திக்கொள்ள வழிதேடமாட்டார். இதனால் அவருடைய நிர்ப்பாக்கிய நிலைமை நாளாவட்டத்தில் சகிக்கக்கூடாததாயிற்று.

அகுஸ்தீன் தன் பதினாறாம் பிராயத்தில் இருந்த நிர்ப்பாக்கிய நிலைமை இப்படிப்பட்டதே. சிறுவத்தில் அகுஸ்தீனுடைய இருதயத்தில் அர்ச். மோனிக்கம்மாள் விதைத்த நற்போதனையென்னும் விதைகளியாவும், கடந்த மூன்று நான்கு வருஷகாலமாய் அவர் கையாடிவந்த பாவப்பழக்கங்களினால் நசுக்குண்டு முளை கிளம்பாமல் அமிழ்ந்திக்கிடந்தன. ஆத்துமத்தின் அழகைக் கெடுத்து அதனைப் பாழாக்கக்கூடிய உபகரணங்கள் அவரைச் சூழ்ந்திருக்கும்போது அவருக்கு அப்படியானது ஆச்சரியமேயல்ல. தகப்பனோவென்றால் மகன் நல்லவனாயிருந்தாலுஞ்சரி கெட்டவனாயிருந்தாலுஞ்சரி தனக்கு அதைப் பற்றி அக்கறையில்லை. அவன் நன்றாய்ப் படித்து உயர்தரப் பரீட்சையில் தேறி அலங்கார வருணனையோடும் வாக்குச் சாதுரியத்தோடும் பேச்சு சக்தியடைந்தால் போதுமென்றிருக்கிறான். வாத்திமார்களோவெனில், அவருக்கு இலௌகீக விதத்தையையும் சற்றும் பயனற்ற அஞ்ஞான கிரந்தக் காவியங்களையும் கற்பிக்கிறார்களேயன்றி, சன்மார்க்கம் நல்லொழுக்கம் என்பதைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசமாட்டார்கள். அவர் படிப்பதெல்லாம் அசுத்தமும் ஆபத்தும் நிறைந்த புஸ்தகங்கள். அவர் போகும் நாடகங்களில் ஆபாசம் நிறைந்த காம சேஷ்டைகள் கண்ணுக்குப் பிரத்தியட்சமாய்க் காட்டப்படுகின்றனவேயன்றி வேறல்ல. அவருடைய தோழர்கள் துன்மார்க்கர்கள். மிருகத்திற்குச் சமானமாய் நடப்பவர்கள். தங்களுக்கு ஒரு ஆத்துமம் உண்டென்று கனவிலும் நினையாதவர்கள். "துஷ்ட சகவாசந் தினமைக்கு வேர்" என்றபடி அவர் கெட்டதெல்லாங் கூடி இவர்களாலேதான். அவருடைய தாயாரோ, அவள் ஒரு அவிசுவாசிக்கு வாழ்க்கைப்பட்டு, அச்சண்டாளனுடைய மூர்க்கத்திற்குப் பயந்து, தன் மகன் இன்னின்னதைத்தான் படிக்கவேண்டும், இன்னின்னதைப் படிக்கலாகாதென்று எவ்வித அதிகாரமும் காட்டச் சக்தியற்றவளாயிருக்கிறாள். இது ஒரு பரிதாபமான விஷயம். அவருக்கிதுவரைக்கும் ஞானஸ்நானமாவது, பாவசங்கீர்த்தனமாவது, தேவநற்கருணையாவது கிடையாதாகையால், சத்திய வேதத்தின் எவ்வித உதவி ஒத்தாசையும் அவருக்கிருந்ததில்லை. தன் சத்துருக்களிடம் போராடுவதற்குத் தேவையான அப்படிப்பட்ட ஞான ஆயுதங்கள் இப்பிராயத்திலேதான் அவருக்கு விசேஷமாய் அவசியமாயிருந்தன. அந்த ஞான ஆயுதங்கள் அவருக்கிருந்திருந்தால், இரத்தக் கொதிப்புள்ள வாலிப்ப பருவத்தில் தன்னுள்ளெழும்பிய ஆசாபாசங்களுடன் எப்படியும் மல்லுக்கட்டிப் போராடி ஜெயமடைந்திருப்பார். அவை இல்லாததினாலேதான் அவ்வாசாபாசங்களுக்கு அடிமையானார். இக்காரணங்களையெல்லாம் நாம் யோசித்துப்பார்க்கும்போது, அர்ச். மோனிக்கம்மாள் அவருடைய ஆத்தும விஷயமாய்ப் பட்ட பாடு மிகுதியாயிருந்தும், கண்ட பலன் சொற்பமே. ஆயினும் அவள்

உழைப்பு வீணாகப்போகவில்லை. இதை நாம் நிச்சயமாய் நம்பக்கடவோம். ஏனெனில் கடவுளும் ஒரு கிறீஸ்துவத் தாயாரும், ஒரு குழந்தையின் இளமனதில் விதைக்கும் ஞான விதைகள் அற்பமும் பலன்தராமற் போகா. ஆசாபாசமென்னும் கடுங்காற்றானது, மனசாட்சியென்னும் பரிசுத்த சுவாலையைக் கொஞ்சகாலம் ஆட்டி யசைத்து மங்கடிக்கும்படியான சக்தியுள்ளதாயிருந்தபோதிலும், அச்சுவாலையை முழுதும் அவிக்க அதனால் கூடாதென்பது சத்திய பிரமாணம்.

இக்காலத்திலெல்லாம் சர்வ தயாபரரான கடவுள் தாயையும் பிள்ளையையும் திவ்ய நேசத்துடனேயும் பட்ச பராமரிப்புடனேயும் பாதுகாத்துவந்தார். தனது குமாரனுடைய அலங்கோலையான சீவியத்தை மோனிக்கம்மாள் காணவே, அவளுடைய இருதயம் வியாகுலவாளால் ஊடுருவப்பட்டது. இதைப் பார்த்துக் கடவுள் வேறு விதமாய் அவளுக்கு ஆறுதலை அளித்தார். எப்படியென்றால், அவளுடைய புருஷனாகிய பத்ரீஸியூஸ் இதுவரைக்கும் சத்திய வேதத்தின்மட்டில் வெறுப்பும் அசட்டையும் கொண்டவன், இப்போதுதான், அதன் போதனைகளென்ன, அதன் விசுவாசப் பிரமாணமென்ன, என்று மனதுவைத்து விசாரிக்கத் தொடங்கினான்.

அர்ச். மோனிக்கம்மாள் தன் அஞ்ஞான புருஷனோடு விவாக அந்தஸ்தில் சீவித்துவந்த பதினேழு வருஷகாலத்தில் பட்ட கஷ்ட வருத்தங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதனால் அவளடைந்த பேறுபலன்கள் அநந்தம். அவன் மனந்திரும்பிச் சத்திய வேதத்தில் சேரவேண்டுமென்பதை முன்னிட்டு, அத்தியந்த விவேகத்துடன் ஒரு நிமிஷமேனும் ஓயாமல் அப்பதினேழு வருஷமும் பாடுபட்டுவந்தாள். தனது அதிசயத்துக்குரிய புத்திச் சூட்சுமத்தினாலும் கிறீஸ்துவப் பொறுமையினாலும் ஆழ்ந்த பத்தியினாலுமே அவனைக் கடவுள் பாரிசமாய்த் திருப்ப அவளாலாயிற்று. அவள் அவனிடம் வேதத்தைப்பற்றிப் பேசினது வெகு கொஞ்சம். அவனுடன் அவள் தர்க்கம் செய்ததுமில்லை. அல்லது அவனுக்குப் புத்தி சொன்னதுமில்லை. ஆனால் அவனுக்காக வெகுவாய் சுவாமியைப்பார்த்து மன்றாடுவாள். ஜெபம் ஒன்றினாலேயே அவனுடைய மூர்க்க சுபாவத்தை ஜெயித்தாள்.

தனது அஞ்ஞான புருஷனின் இருதயமும் ஆத்துமமும் தேவதயவால் இளக்கமடைவதைச் சில நம்பிக்கைக்குரிய குறிப்படையாளங்களால் கண்டுகொண்டாள். "பொறுத்தவர் பூமியாள்வார்" என்றபடி பொறுமையாய்க் காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு தேவ சித்தத்தின்படி வரும் நல்ல காலம் இவளுக்கும்வந்து இவளாசையைப் பூர்த்திசெய்தது.

பத்ரீஸியூஸுக்கு வயது ஆக ஆக, அவனுடைய மூர்க்ககுணந் தணியத் தணிய, பசாசின் கிரியைகளாகிய ஊமை விக்கிரகங்களை யாராதித்து வணங்குவது எப்படிப்பட்ட பைத்தியமென்றும், எவ்வளவு தேவ துரோகமான காரியமென்றும் கண்டான். தனது தூய பத்தினியின் இருதயத்திலிருந்து புறப்பட்டு வீசிய சேசுக்கிறீஸ்துநாதருடைய மதுரமுள்ள தெய்வீக திருமணத்தை உணரத்துவக்கினான்.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2.—அதிகாரம்; வசனம்—8-12.

(முன் தொடர்ச்சி.)

மெஸ்ஸியாஸ் அரசன் தம்முடையவர்களிடம் வந்தார். அவருடைய ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தேவமாதாவுக்கும் சூசைமுனிக்கும் பெத்லேம் சத்திரத்தில் இடம் கிடையாததினால், அவ்வூர் ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும், அதனால் மனிதர் சஞ்சரிக்கும் வீடுகளில் அல்ல, மிருகங்கள் அடையும் தொழுவத்திலே அவர் பிறக்க நேரிட்டதென்றும் சொல்லத்தகும்.

அப்போது அவரை மெஸ்ஸியாஸ் அரசன் என்று அவர்கள் அறியாமல் தள்ளிவிட்டார்கள்; ஆனால் அவர்கள் கொஞ்ச காலத்துக்குப்பிறகு அவரை அறிந்தும், தங்கள் இஷ்டமாகவே அவரைத் தள்ளிவிடுவார்கள், அவர் பெத்லேம்

நகரவாசிகளால் உபசரிக்கப்படாமல், ஊருக்கு வெளியே தள்ளப்பட்டு, அட்டதாரித்திரத்தில் பிறந்ததானது, பிற்பாடு அவர் யூத ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டு, ஜெருசலேம்பட்டணத்துக்கு வெளியே தள்ளப்பட்டு, அவமானங்களால் பூரிக்கப்பட்டு பலியாகப்போவதற்குப் பொருத்தமான ஆரம்பமாகின்றது.

ஆனால் சர்வேசுரன் தாம் தெரிந்து கொண்ட ஜனங்களைத் தள்ளிவிடவில்லை. தீர்க்கதரிசிகள் முற்காலத்தில் கூறியிருந்தவண்ணம் மீதியாயிருப்பவர்கள் இரட்சண்ணியம் அடைவார்கள். தெரிந்து கொள்ளப்பட்ட இச்சனங்களுக்கு முற்குறிப்பாக இருந்த சில இடையருக்கு மெஸ்ஸியாஸ் பிறந்த இரட்சண்ணிய செய்தி முதல் முதல் அறிவிக்கப்படுகின்றது. மெஸ்ஸியாஸ், ஆயனாகிய தாவீது இராசாவின் கோத்திரத்தில் பிறப்பார் என்றும், அவரை ஜனங்களின் ஆயன் என்றும் தீர்க்கதரிசிகள் உரைத்திருக்கிறார்கள். சேசுநாதர்தாமே பிற்காலத்தில் தம்மை நல்ல ஆயன் என்று அழைத்திருக்கிறார். ஆதலால் தம்மை ஆயர்களுக்கு முதல் முதல் அறிவிக்கிறார்; அவர்களைத் தம்மிடம் கூப்பிட்டழைத்து தாம் கொண்டுவந்த இரட்சண்ணியத்தின் முதற் பலன்களை அவர்களுக்குக் கொடுக்கிறார்.

8-ம் வசனம்.—அப்போது அந்நாட்டில் சில இடையர் விழித்து தங்கள் கிடைக்கு சாம காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்.

பெத்லேம் ஊருக்குக் கிழக்கே ஒரு மயிலுக்கப்பால் பட்டியின் கோபுரம் என்கிற ஒரு உப்பரிகையிருந்தது. அங்கு ஆடுமாடுகளை மேய்ப்பதற்கு வசதியான பசும் புற்புலங்கள் உண்டு. இவ்விடங்களில் இடையர்கள் தங்கள் மந்தைகளைக் கொண்டுபோய்ப் பகலிலே மேயவிட்டு, இரவில் விழித்துத் துஷ்ட மிருகங்களினின்றும், கள்ளரினின்றும் காப்பார்கள்.

சேசுநாதர் அத்தியந்த தாழ்மையிலும் அட்டதாரித்திரத்திலும் மாட்டுத் தொழுவத்தில் மறைந்துகிடக்கும்போது, பிதாவாகிய சர்வேசுரன் மனுஷாவதாரமான தமது ஏக குமாரனுடைய ஜனனத்தையும் மகிமைப்பிரதாபத்தையும் விண்ணுலக சோதிப்பிரகாசத்தால் ஒளிரும் சம்மனசுக்கள் மூலமாய் வெளிப்படுத்துகிறார்.

9-ம் வசனம்.—அப்போது இதோ ஆண்டவருடைய தூதன் அவர்களருகே வந்து நிற்க, தெய்வீகப்பிரகாசம் அவர்களைச் சூழ்ந்து ஒளிர, அவர்கள் மிகவும் பயந்து அஞ்சினார்கள்.

சம்மனசானவர் மானிட ரூபம் எடுத்து இரவில் விழித்திருந்த இடையர் அருகில் திடும்பிரவேசமாய்வந்து நின்றார். அவர் பாதாதிகேசம்வரை மங்கா ஒளியைப் பொழியும் தூய ஆடையைத் தரித்துப் பிரகாசிப்பவர்போல் தோன்றினார்.

தெய்வீகப்பிரகாசம் அவர்களைச் சூழ்ந்து ஒளிர்ந்தது. அதாவது சர்வேசுரனுடைய பிரசன்னம் அற்புதமான ஒளியின் மிகுதியால் இடையருக்குக் காண்பிக்கப்பட்டது என்றர்த்தமாகும்.

இச்சோதி மகிமையால் அவர்கள் உண்மையான தேவ காட்சியைக் காண்கிறதாக உணர்ந்து மெய்மறந்து பரவசமாகிறார்கள்.

தரிசனமானவர் கபிரியேல் சம்மன சென்று அநேக வேதசாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள். ஏனெனில் மெஸ்ஸியா வைப்பற்றிய வர்த்தமானங்களை தானியேல் தீர்க்கதரிசிக்கும், சக்கரியாஸுக்கும், கன்னிமரியாயிக்கும் அறிவித்தவர் அவர்தான். அவரே மெஸ்ஸியாவின் தூதரானபடியால் அவருடைய பிறப்பின் சுபசெய்தியை அறிவிப்பதும் அவருடைய அலுவலைப் பொறுத்தது என்பது வேதபாரகருடைய அபிப்பிராயம்.

சம்மனசுக்கள் மனிதருக்கு சில தடவைகளில் தரிசனமான சங்கதியை வேதாகமத்தில் வாசிக்கலாம். ஆனால் இவ்வளவு மகிமைப்பிரதாபத்தோடு தரிசனமானார்கள் என்று எங்கும் குறிக்கப்படவில்லை. இங்குமாத்திரம் அவர்கள் ஒப்பற்ற சோதி சோபனத்துடன் விளங்கினதைப்பற்றி கூறியிருப்பதானது மெஸ்ஸியாவின் அற்புத மகத்துவ பெருமையை எண்பிக்கின்றது.

தெய்வீகப்பிரகாசத்தைக் கண்ணுற்ற இடையர் சிந்தை கலங்கி பயந்து அஞ்சினார்கள். மானிட பலவீனம் தேவ வல்லபத்தின் மகிமைச் சுடரைத் தாளமாட்டாமல் கலங்கி நடுங்குகின்றது.

10-ம் வசனம்.—"ஆனால் தேவதூதன் அவர்களை நோக்கி, நீங்கள் பயப்படாதிருங்கள், ஏனெனில் இதோ எல்லா ஜனததுக்கும் மகா சந்தோஷத்தை வருவிக்கும் சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்." தேவதூதன் கொண்டுவந்த சுபசெய்தியை இடையர் பதறாமல் தெளிவாய் அறிந்துகொள்வதற்கும், அதனைத் தத்தளிக்காமல் விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்வதற்கும், இவர்களுடைய கலக்கமும் அச்சமும் தடையாயிருந்தமையால், சம்மனசானவர் தம்முடைய அன்பும் தேறுதலுமுள்ள மொழிகளால், இவர்களுடைய பயத்தை முதல் முதல் நீக்கி, இவர்களைச் சித்த சமாதானத்தில் ஸ்தாபிக்கிறார்.

கிறீஸ்துநாதருடைய ஜனனம் யூத ஜனங்களுக்குமாத்திரமல்ல சகல ஜாதி ஜனங்களுக்கும் அளவில்லாத சந்தோஷத்தைக்கொடுக்கும் சுபசெய்தி. ஏனெனில் அவர் சமஸ்தரையும் இரட்சிக்கவந்த அன்பான தேவ இரட்சகர்.

11-ம் வசனம்.—அதேதெனில் இன்று தாவீதின் நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிறார்.

இசையாஸ் தீர்க்கதரிசி கூறியுள்ள "ஒரு பாலன் நமக்குப் பிறந்தார்." (9-அதிகாரம், 6-வசனம்) என்ற தீர்க்கதரிசனத்திற் கிசைந்தவண்ணம் தேவதூதன் தம்முடைய சுபசெய்தியை அறிவிக்கிறார்.

தாவீதின் நகர் என்பது பெத்லேம் நகராம். அந்நகர் மெஸ்ஸியாஸ் பிறந்த காலத்தில் பேரும் பெருமையுமற்று மிகவும் எளிய சிறிய ஊராக இருந்தது.

தாவீது இராசாவின் மகிமையுள்ள இராஜ கோத்திரமும் சிறுமையிலும் வறுமையிலும் மறைந்து ஒடுங்கிக்கிடந்தது. எல்லாததுக்கும்மேலாக அக்கோத்திரத்தில் உதித்த மெஸ்ஸியாஸ் அரசன் அச்சிறுமையையும் வறுமையையும் தமது பங்காகவும் பூஷணமாகவும் பிரிய வாஞ்சையோடு தெரிந்துகொண்டார்.

12-ம் வசனம்.—"குழந்தையைத் துணிகளில் சுற்றி, முன்னிட்டியில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றார்."

சம்மனசானவர் உலக இரட்சகர் பிறந்த செய்தியை எளிய யூதர்களாகிய இடையர்களுக்கு அறிவித்து, அத்திவ்ய பாலன் பிறந்த இடத்தையும், அவர் தோன்றின வகையையும் விவரிக்கிறார்.

அவர் இராசாதி இராசனாயிருப்பதினால், இராச மாளிகையில், இராச மகிமையுடன், இராச பரிசாரகர்களால் சூழப்பட்ட இராச வைபவ சிறப்புகள் மத்தியில் பிறக்கவேண்டுமென்றும், அவர் தேவனாயிருப்பதினால், தேவப்பிரகாச கதிர்கள் வீசும் அற்புதமான ஓர் சரீரத்தை உருவாக்கி, சம்மனசுக்களால் புடை சூழப்பட்டு, மேக கர்ச்சிப்புகள், மின்னலகள் முதலிய ஒளிகளிடையில் உலக மடங்கலும் கிடுகிடுத்து நடுங்கும்படி தோன்றுவார் என்றும் மனிதர் தம் புல்லறிவால் நினைக்கக்கூடும். அவ்விதமான எண்ணங்களால் இடையர் கலவரப்படாதபடி கிறீஸ்துநாதர் பிறந்த தாழ்மையுள்ள மேரையைச் சம்மனசானவர் வெளிப்படுத்துகிறார்.

உலக இரட்சகர், மனிதர் அச்சாதி சயப்படும்படியான ரூபத்தை எடுக்காமல், எல்லோருடைய இருதயங்களையும் கவர்ந்து இழுக்கக்கூடிய அன்பும் அழகும் அருளும் பொழியும் ஒரு பாலன் ரூபமாய்த் தோன்றினதையும் அவர் மெத்த தாரித்திர கோலமாய்ப் பழந்துணியால் மூடப்பட்டு மாட்டுத் தொழுவிலே, வைக்கோல் வைக்கப்படும் புற்றொட்டி மஞ்சத்தில் வளர்த்தப்பட்டிருப்பதையும், இதையே அவர்கள் அவருடைய அடையாளமாகக்கொண்டு அவரைக் கண்டு பிடித்து அவரை வணங்கி ஸ்துதிக்க வேண்டுமென்றும் தேவதூதன் அறிவிக்கிறார்.

பூலோக இரட்சகர் சொல்லொண்ணாத தாரித்திரத்திலும் தாழ்மையிலும் பிறந்திருப்பதை இந்த எளிய மேய்ப்பர் கண்டு, அப்பாலகன் சாதாரண மனுஷன் தான் என்று தப்பெண்ணங்கொள்ளாமல், அவருடைய உண்மையான தெய்வீக மகி

மையையும் பெருமையையும் அறிந்து கொள்ளும்படியாக, அந்நேரத்தில்தானே வானமண்டலத்தில் கணக்கற்ற சம்மனசுக்கள் அணி அணியாய் நின்று அற்புத அலங்கார பிரகாசத்தால் சூழப்பட்டு பிறந்த தேவ பாலகனைப் பணிந்து வணங்கின மேரையாய் பேரானந்த கீத சங்கீதங்களைப் பாடி தேவ மகத்துவத்தை வாழ்த்தி ஸ்துதித்தார்கள்.

(தொடரும்.)

S. M.

THE PRIESTHOOD.

குருப்பட்டம்.

குருப்பட்டத்துக்கு எல்லோரும் பாத்திரரல்லர். இவ்வழைப்புக்கு உரியவர் சிலரே. இச்சிலரும் அதற்குச் சரிவர செவிகொடாமையினாலேயே நந்தேசத்தில் குருக்கள் குறைவாயிருக்கின்றனர். தப்பித்தவறி இரண்டொருவர் இவ்வழைத்தலுக்கிணங்கிவிடுவாரானாலோ, இவர்களனுபவிக்க நேரும் இன்னல் இடையூறுகள் அனந்தம். இவர்களுக்கு இவ்விதம் துன்புறுத்துவோர் இவர்கள் சொந்த பிதா மாதாக்களேயாவர். இவர்கள் இவ்வாறு நல்ல காரியத்துக்கு இடைஞ்சல்செய்வதற்குக் காரணம் குருத்துவம் இன்னதென்று இவர்கள் தெரிந்துகொள்ளாததினாலேயே. குருத்துவமென்பது என்ன? நமது தவ்ய இரட்சகாரற்படுத்திய ஏழு தேவத்திரவிய அனுமானங்களுக்குள் ஒன்றென்பது எல்லோருமறிந்த விஷயம். இத்தேவத்திரவிய அனுமானங்களால் நாம் அடையும் நன்மை பல. அந்த நன்மைகளனைத்தும் குருத்துவமென்னும் தேவத்திரவிய அனுமானத்தைப்பெற்ற குருமார்கள் மூலமாகவே அடைதல் கூடும். ஆதலால் குருக்கள் உலக வாசிகளுக்கு அத்தியாவசியமென்பது உண்மையும் உண்மை.

இவ்வித நன்மைகளைத் தாங்களும் பிறரும் அடையாவண்ணம் தங்கள் பிள்ளைகளைத் தடுக்கும் பெற்றோரும் மற்றோரும் தேவ கோபாக்கிரிக்குப் பங்காளிகள் ஆகிறார்கள் என்பதை யிவர்கள் அறியார்போலும். அதை அறிந்தும் அதற்குத் தடங்கல்செய்வோரும் இருக்கின்றனர். அவர்களை என்னென்று சொல்வது? அறிந்தும் அறியாதவர்களாய்ப் பிடிவாதஞ்செய்கிறார்கள். தேவ ஊழியத்துக் கழைக்கப்பட்டவர்களைக் கட்டாயப்படுத்திக் கலியாணம் செய்வித்துக் கண்ணாரப் பார்த்துக் களிக்குமுன் அவர்கள் காலஞ்சென்றதைக்கண்டு கதறி யழுதோர் எத்தனை பேர்! அப்படித் தப்பித்தவறிப் பிழைப்பினும் அக்குடும்பங்கள் தேவாசீர்வாதமில்லாமலே பலவிதத் துன்பங்கள் அனுபவிப்பதுமுண்டு. இப்பேர்ப்பட்ட நபர்களை பலரும் சகஜமாய்ப் பார்த்திருக்கலாம். ஆதலால் பெற்றோரானவர் தங்கள் பிள்ளைகள் இவ்வுந்நத வழைப்புக்குக் காதுகொடுப்பதைத் தடுக்காமல் இருப்பதோடு, அவர்களுக்கான உதவி ஒத்தாசை அநுகூலங்களும்செய்து, ஆண்டவரின் திராட்சைத்தோட்டத்தின் உத்தம ஊழியராவதற்குத் தங்களாலான பிரயாசையெல்லாம் படுவார்களாக. அதனால் பெற்றோர்கள் இவ்வுலகத்திலேயே பல நன்மைகள் அடைவதோடு மறு உலகத்திலும் சொல்லொண்ணாப் பாக்கியத்தை என்றென்றைக்கும் சுகித்தனுபவிப்பார்கள் என்பதை அவர்கள் மனத்தில் ஸ்திரமாய்ப் பதித்துவைத்துக்கொள்ளவேண்டும்.

நமது சுதேசக் குருப்பிரசாதிகள் அதிகமானாலொழிய இந்நாட்டில் சத்திய வேதம் பரம்புதற்கும், கிறீஸ்துவர்களுடைய பராமரிப்புக்கும் போதுமான சௌகரியம் ஏற்படமாட்டாது. மற்ற தேசங்களைவிட நம் சுயநாடாகிய இவ்விந்தியாவில் சத்திய வேதம் அதிகக் குறைவுபட்டிருப்பதற்குப் போதுமான குருக்கள் இல்லாமையே முதற்காரணமாகும். இந்நாட்டில் கோடிக்கணக்காயுள்ள நம் இந்திய சகோதரரோடு நம்மை ஒத்திட்டுப்பார்க்குமளவில் கிறீஸ்துவர்கள் மிகக் கொஞ்சமபேரே. இக்கிறீஸ்துவர்களுள்ளும் புரோடஸ்டாண்டார் என்பவர் போக சத்திய வேதக் கத்தோலிக்கரின் தொகையோ சொற்பமாகும். இச்சொற்பத் தொகையினராகிய சத்திய வேதத்தாரைப் பாதுகாக்க முன்வந்திருக்கும் குருக்களின் தொகையைக் கூறுதற்கோ நாவெழவில்லை. எழுதக் கையுங் கூசுகின்றது. கிறீஸ்துவர் தொகையில் சிறிது அதிகமாயுள்ள இத்தென்னிந்தியாவில் ஐயாயிரம் ஆறாயிரம் ஜனங்களும், இருபது இருபத்தைந்து கோவில்களுமடங்கிய சில பங்குகளில் சுவாமிமார்கள்

உதவிக் குருவின்றித் தனியே யுழைத்துவர வேண்டியதாயிருக்கிறது. சுவாமியாரின் வாசஸ்தானத்தைவிட்டு அதிகத் தூரத்திலிருக்கும் சில கிறீஸ்துவர்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறைமுதலாய் திவ்யபூசை காண்பது அரிதாயிருக்கின்றது. இங்ஙனம் பட்டிக்கு உட்பட்டவர்களே இவ்விதக் கஷ்டம் அனுபவிக்கும்பொழுது, பட்டிக்கு வெளியேயுள்ள அத்தனை கோடி இந்துக்களும், மகம்மதியரும் பிறரும் மனந்திரும்பிப் பட்டிக்குட்படுவதெங்ஙனம்? ஆதலால் இதனை வாசிக்கும் இந்திய கத்தோலிக்கு வாலிபர்கள் சர்வேசுரனின் திராட்சைத்தோட்டத்தில் வேலைசெய்ய முன்வந்து நமது பிரிய சகோதரர்கள் படும் கஷ்டத்தைத் தீர்க்கவும், அஞ்ஞானிகள் மனந்திரும்பவும் பிரயாசைப்படுவார்களாக. இது நம் சொந்தப் பிரயாசத்தால்மாத்திரம் இயலாது. ஆதலால் நமது கத்தோலிக்கு இந்தியர்களுக்கு நற்புத்தியும் தெளிந்த ஞானமும் பிறரீடேற்ற ஆவலும் தந்தருளும்படி கிறீஸ்துவர்களுடைய உபகாரியும் சர்வேசுரனுடைய மாதாவுமாகிய அமலோற்பவ நாயகியை அண்டி மன்றாடுவோமாக.

கணக்கில்லாப்பேர் தேவதாயாரின் சகாயத்தால் இப்பாக்கியத்தையடைந்தார்கள். ஆண்டவர் ஸ்தாபித்த சத்திய திருச்சபை நீடித்திருக்கவும், விருத்தியாகவும் குருத்துவம் வெகு அவசியமாதலால் ஆண்டவரின் அழைப்புக்கு நமது வாலிபச் சகோதரர்கள் செவிசாய்ப்பார்களாக. நமது தேசத்தாருக்கு வேதம் போதிக்கவும் நமக்கு ஞான விஷயங்களில் உதவி புரியவும் நாம் எவ்வளவு காலந்தான் மேலநாட்டாரை எதிர்பார்க்கலாம். அவ்விதம் எதிர்பார்ப்பதற்குக்கூட இனி வழியில்லாமல் கடந்த கொடிய யுத்தம் செய்துவிட்டதென்பது சகோதரர்களுக்குத் தெரியாதகாரியமல்ல. உலகம் பல விதம் சொல்லும். அவைகட்குச் செவிகொடுக்கப்படாது. அது தன் கண்ணுக்கு இன்பமாய்த் தோன்றுவதொன்றையே நாடுகின்றது. தன் கண்ணுக்கு மறைவாயுள்ள வினபத்தைக் காணப் பிரியப்படுவதில்லை. பிரியமவந்தாலும் அதைக் கொடிய விஷமென்றெண்ணித் தூரத் தள்ளிவிடுகிறது. என்னே இதன் வஞ்சகம்! இவ்வஞ்சகம் நிறைந்த உலகம் காட்டும் வழியை நாம் பின்பற்றியும் நடக்கலாமோ? இதன் சொல்லுக்கிணங்கி இதன் பின்னேபோவது எப்படி இருக்கிறதென்றால் 'வீழ்வார்க்கு வீழ்வார் துணை' என்றபடி குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போல் இருக்கிறது. கடைசியாய் இரண்டு குருடரும் படுகுழியில் விழுந்தபிறகு கண்ணுடையோரையல்லோ நாம் அடுத்திருக்கவேண்டுமென்று கருதுவதிற் பயனென்ன? "அப்பா தம்பி நீ குருவாகப் பிரியப்படுகிறாயா? அது நமக்குத் தகுந்த அந்தஸ்தா? உனக்குக் காணி பூமியில்லையா? காசு பணமில்லாத அட்டத்தாரித் திரனாகவா உன்னை வைத்தேன். உற்றார் உறவினர் இல்லையா? உனக்குவந்த விதியென்ன? உனக்கு இருக்கும் சொத்தைக்கொண்டு ஒன்பது குடியைத் தாங்கலாமே. குடிக்கக் கஞ்சியில்லாதாரும், இருக்க விடமில்லாதாரும், படுக்கப் பாயில்லாதாருமல்லோ பார்க்கிற அந்தஸ்து அது" என்று யெள்வனரைக் கெடுக்கப்பார்க்கும் பெரியோருமுண்டு. இன்னும் வேறு சிலர், "தம்பீ, குருவாகிறதென்றால் இலேசான காரியமா? பி. ஏ. பட்டம் பெற்றிருக்கவேண்டும். கோடிச் சோதனைகளுக்கு (உன்னை) உட்படுத்துவார்கள். வயிறாற்ப போசனமளியார்கள். கட்டாந்தரையிற் படுக்கும்படி கட்டாயப்படுத்துவார்கள். வீடு பெருக்கச்செய்வார்கள். கக்கூஸ் கழுவச்சொல்வார்கள். இவைமுதலிய கடினதண்டனை விதிப்பார்கள்" என்று கலக்கிவிடுவார்கள். இப்படியெல்லாம் சொல்லி சிறு பிள்ளைகளைப் பயப்படுத்திவிட்டு, குருக்கள் குருக்கள் என்றால் குருக்களெங்கிருந்துவருவார்கள்? இவ்வபாய உபாய தந்திரங்களினின்று விடுவிக்கப் பிள்ளைகளைப் பலகு சுவாமிகள் மடத்துக்கு அனுப்பிவிட்டாலோ, அம்மாசற்ற குருமீது அவதூறு பேசவும் முன்வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு அதனால் ஒரு குறைவுமில்லை. ஏனெனில், அவர்கள் சர்வேசுரனின் தொழிலைச் செய்கிறார்கள். அவர்கள் செய்வது கெடுதியல்லவென்பதும் அவர்களுக்குத் தெரியும். இதனால் வரும் துன்பத்திற்கு நூறத்தனையாய்ப் பரலோகத்தில் பங்கடைவார்களென்பது திண்ணம்.

நேச வாலிபர்களே! உலகம் சொல்லும் அபத்தமான வார்த்தைகளுக்குச் செவிகொடாதீர்கள். படிப்பு விஷயத்திலும் மடத்து விஷயத்திலும் மனங்கலங்கவேண்டாம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதைக் கடைப்பிடியுங்கள். உங்களுக்கு மெய்யாகவே தேவ அழைப்பு இருக்குமாகில், எவரெவர் என்னென்ன விதமாய் உங்களைக் கெடுக்க முயன்றாலும் முடியாதென்பது உங்கள் மனதிலிருக்கட்

டும். சில பிள்ளைகள் தேவ அழைப்புள்ளவர்கள் போலிருந்தும், தள்ளப்பட்டார்களே என்று சொல்வீர்கள். அத்தகையோர்கள் விஷயங்களைச் சரிவரத் தெரிந்துகொள்ளாமையினாலும் அவ்வழைப்புக்கு தேவ சித்தமில்லாமையினாலுமே இவ்விதம் சம்பவித்திருக்கலாம். ஆயினும் இவ்விதம் சம்பவிப்பது அரிது. இதைப் பற்றி மனங்கலங்கவேண்டாம். இக்கலக்கம் அநேகரை நோகப்பண்ணுவதுண்மையே. ஏனெனில் பலா அரியப் பரித்தியாகம்பண்ணித் திரும்பவும் ஒருகால் அவர்கள் வீட்டையண்ட நேரிடுமோவென்கிற வெட்கமே அவர்களைத் துக்கத்துக்குள்ளாக்குகிறது.

அஞ்சாதீர்கள், சகோதரர்களே! அவையனைத்தும் நம்மை நாசஞ்செய்யக் கருதும் மோச எண்ணங்களென்று எண்ணிக்கொள்ளுங்கள். நம்முடைய துவ்ய இரட்சகர் ஆச். இராயப்பரை நோக்கி "நீ இராயாய் (கல்லாய்) இருக்கிறாய்; உன்மீது திருச்சபையைக் கட்டுகிறோம். இதனை நரகத்தின் வாசல் மேற்கொள்ளாதென்றார்." அச்சபையாரைப் பாதுகாக்கவும் அதில் சேராதாரை அதிற் கொண்டுவந்து சேர்க்கவும் பிரியப்படும் உங்களை அவர் அந்தரத்தில் விடுவாரென்று நினைப்பது மதியீனமேயொழிய வேறல்ல. "முற்பகற் செய்யற் பிற்பகல் விளையும்" என்றபடி கஷ்டமில்லாமல் நன்மை எதுவும் வராதென்பது சிறந்த உண்மை. முதலிற கஷ்டப்பட்டுத்தான் நன்மையடைதல் வேண்டும். உதாரணமாய் ஒரு வியாதியஸ்தன் கசப்பு மருந்தென்று கஷ்டத்திற்கஞ்சினால் பிறகு சுகமடைவானா? இரட்சணயம் வேண்டுமானாலும் கஷ்டமில்லாமல் முடியாது. "பரலோகத்திற்குச் செல்லும் வழி முள்ளும் மூர்டுமானது" என்று நமது துவ்ய காத்தரே திருவாயமலர்ந்தருளினார். அந்தியச் செலவத்தை யடையக் கஷ்டப்படும்பொழுது, நித்திய செலவத்தைச் சுளுவாய் அடைதல் நீதியாகுமா? கஷ்டமென்றால் ஏதோ பெரிதென்று பயந்துவிடாதீர்கள். குரு ஆவது அவ்வளவு கஷ்டமாயிருந்தால் நம்முன் காணப்படும் குருக்கள் குருக்களாயிருப்பார்களாவென்றெண்ணித்துணிந்து தேவ அழைத்தலுக்கிணங்குங்கள். குருத்துவமென்னும் தேவத்திரவிய அனுமானத்தை யடைவதனால் அநேக பாக்கியங்களை இவ்வுலகத்திலேயே அடைவதல்லாமல் மறு உலகத்திலும் ஆண்டவர் வாக்களித்தபிரகாரம் நூறத்தனையாய் அடையலாமென்பது உண்மை. அதன் பெருமை பாக்கியங்களையெல்லாம் எடுத்துரைக்கின் பெருகும்.

பரலோக பூலோக இராக்கினியும், பாவிகளுக்குத் தஞ்சமுமாகிய பரமநாயகியாலும், தூதர் அதிதூதராலும் செய்ய இயலாக் காரியமாகிய பாவ மன்னிப்பளிக்கும் அதிகாரத்தை சாதாரண மனிதராகிய ஒரு ஏழைக் குருவானவர் அடைந்திருப்பது எவ்வளவோ பெருமை. இது ஆச்சரியத்திலு மாச்சரியமன்றோ. சேசுநாதரின் பிரதிநிதியாய், அண்ட சராசரமனைத்தையும் ஆக்கி, அளித்து, அழிக்க வல்லவராகிய பரமநாதனையே பலியிடும் பாக்கியம்பெற்று நிற்கும் குருக்கள் பாக்கியவான்களன்றோ? பிரிய சகோதரர்களே! நாம் இதனையடைய அருகரல்லோமாயினும் கடவுள் சித்தத்திற்கிணங்கி அதைத் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோமாதலால், மனக்கலக்கத்திற் கிடங்கொடாமல் குரு மடத்தை யண்டுங்கள். போதுமான குருக்களில்லாக் குறையை நிவர்த்திசெய்யுங்கள். அப்பொழுது நமது தேசம் பத்தியிலும் புத்தியிலும் விருத்தியடைவதோடு, அநேகர் மனந்திரும்புவதற்கும் ஏதுவாயிருக்குமென்பதைச் சிந்தியுங்கள். குருக்களமாத்திரம் ஏராளமாயிருந்து, அங்குமிங்கும் சுற்றித் திரிந்து, சுறுசுறுப்புடன் வேலைசெய்து, விடாமுயற்சியாய் வேதம் போதித்துவருவார்களானால், அஞ்ஞானிகள் மனந்திரும்புவதற்கு ஆடங்கமென்ன? ஆகையால், குருக்களைப் பெருக்கு முயற்சியில் கத்தோலிக்கரெல்லோரும் ஈடுபட்டு உழைக்க வேண்டும். அப்போதுதான் இந்தியாவுக்கு இரட்சணயமுண்டாகும். இந்தியா முழுமையிலும் ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகக்கடவதாக.

S. J.

ஜெபத்தையே செய்வதற்கு சீவன் வேணும்
ஜெபஞ்செய்யத் திருச் சித்தந் தேடவேணும்
பவத்தையே யொழிப்பதற்குக் கண்ணீர் [வேணும்
பரன்பாத மடைவதற்குத் தபசு வேணும்
அபத்தமாய்ப் பலதானம் பண்ணவேண்டாம்
ஆறு குளந்தனின் மூழ்கி யலையவேண்டாம்
சிவமபேரி லாணைப்படி சொல்லிப்போட்டேன்
தீட்சை பெற்று சிவபாதஞ் சேருவாயே.

—(அகஸ்தியர் ஞானம் 30.)

சென்னை
சங்கைவாய்ந்த S. J. பாலசுவாமிகளின்
வெள்ளி ஜூபிலி
மகோற்சவப்பா
1893ஆம் டிசம்பர்மீ 1உ. 1918ஆம் டிசம்பர்மீ 1உ.

SOUVENIR
Rev. Fr. S. J. BALASAMI
SACERDOTAL SILVER JUBILEE
1st Dec., 1893. 1st Dec., 1918.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருப்பால சுவாமியாஞ் சர்வ வல்ல
தெய்வபிரான் றன்பிரதி நிதிகளாகக்
குருப்பிரசாதிகளைத் தந்தானந்தக்
குருமுறையில் வழுவாத குருவேயான
அருட்பிர சாதம்வளர் பால சுவாமி
ஆண்டகையின் றுறவறத்தைப் பின்றொடர்ந்து
குருப்பிரசாதியாய் வாய்ந்த வெண்பொற்
குருச்சுபிலி யின்றியாங்கொண் டாடுவோமால்.

கழைமதுரக் கனியிருப்ப வேம்பை யுண்ணும்
காகத்தைக் கவட்டுமரக் கவியை மாணும்
விழைமிகுந்த மாந்தர்வலை சிக்கான் ஞான
வேடனிவ னம்மாந்தர் தமைப் பிடிப்பான்
முழையகத்து வந்தான்மூ வுலக டங்கான்
மோனைநடு முகுவிலான் விரைந்து தோன்றித்
தழைமலர்க்கைக் கோதுமையிற் றங்குவானேற்
றமியேனிக் குருமாண்பு சாற்றப் போமோ.

3 இத்தகைய குருமுன்னெம் பரத கண்டம்
இல்லாத பெருங்குறைவா லிறைவர் தம்மை
முத்திதரு தெய்வமென வணங்கி யெந்தம்
முன்னோர்கள் வாழ்ந்தாரீ துண்மை சொற்றேம்
குத்திரஞ்செய் யிம்மாற்ற மகற்ற விந்த்ய
குருக்கள்பல தந்தனனெஞ் சர்வ வல்லான்
சத்தியஞ்சே ரக்குருக்க ளெல்லாம் வாழ்த்துஞ்
சற்குருவாய்க் கூறன்மிகை யாகா தன்றோ.

4 இருளோட்டுங் கதிரவனாய் மண்டலத்தோர்
இதயவிரு ளோட்டுநல் லாய னென்னுந்
திருநாமம் வாய்ந்தபத் திரிகை வாழத்
திடமுயற்சி செய்தஃதை நாட்டி வைத்தோன்
தருமமெனு மரிய நூற் றந்தோ னேனைத்
தகுநூற்கள் பலதந்தோன் றமிழெழுத்தின்
உருவறியாப் பாமரர்க்குஞ் ஞானங் காட்டும்
ஓவியமா வித்தையிலும் மிவனே வல்லான்.

5 நெய்தல்வள நிலத்தலைவர் பரத பாண்ட்யர்
நீண்மதுரை யாண்டபின்னம் மதுரை யாண்ட
வெய்யகதி ரெறிக்கும்வேல் நாயக்கர் வம்ச
விளக்கெனவே வாய்ந்தபுரு ஷோத்ம னென்பாம்
செய்யரிய தவக்குருவா மிவன் பல்லாண்டு
சீருறவே வாழ்கதொல் லுலக மெல்லாம்
உய்யவொரு கடவுடந்த வழுவேயில்லா
வுற்பவிதண் பனிமயத்தாய் போற்றுவாமே.

M. X. RUBEEN VARMA,
Tuticorin.

இஃது பழையகாயல் பிரதகுல பட்டவர்த்தனன் பௌத்திரன் ஸ்ரீமான் அலேக்ஸ் குருஸ் நற்றார் அவர்களின் வேண்டுகோளுக்கிசைந்து இயற்றப்பெற்றது.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

ஏழைக் கத்தோலிக்கு அடிமைகள்.

கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த கொடிவேரிப் பங்கு விசாரணையில் குண்டிரி என்னும் மலைநாடு ஒன்று இருக்கிறது. அதில் ஊராளி என்னும் ஜாதியார் அவ்விடத்தில் இருக்கும் குடியானவர்களிடத்தில் படியான் என்னும் அடிமைகளாய் உழைத்து அவர்களால் கொடுக்கப்படும் மாதச் சம்பளமாகிய 15-கள்ளம் கொண்ட 30-பக்காப்படி ராகியை (கேழ்வரகைக்கொண்டு) தங்கள் குடும்பங்களைச் சவரட்சணை செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இவ்வித நிலைமையில் இவர்கள் மேல்கண்ட குடியானவர்கள் கையில் அகப்பட்டு, காளடைவில் தங்கள் வயிற்றுக்கு ஆகாரம் போதாமல் கடன் பட்டு, கடனில் இருந்து தங்களையும் தங்கள் குடும்பங்களையும் மீட்டுக்கொள்ளமுடியாமல் நசுக்கப்பட்டுவருகிறார்கள்.

இந்நிலைமையில் இருக்கும் அந்த ஜனங்களின் ஆத்துமங்களை இரட்சிக்கவும், இவர்கள் அடிமைத்தனத்தை மீட்டு, அவர்களுக்கு சுவாதீனத்தைக் கொடுக்கவும், என்ன ஏற்பாடு செய்யக்கூடும் என்று இப்பங்குக்கு அனுப்பப்பட்ட சங்கை Rev. J. B. Petit சுவாமியார் அவர்கள் முயற்சி எடுத்து, வளந்தரங்களையும் மலைகளையும் கால் நடையாய்க் கடந்துபோய், 7-8-வருஷங்களாய் மெ ஜாதியார்களுக்கு ஞான உபதேசஞ்செய்து துவக்கத்தில் 4 குடும்பங்களை அவர்கள் பட்டிருந்த கடன்களை நிவர்த்திசெய்து, சத்திய திருச்சபையில் சேர்த்தார். மேல்கண்ட ஜாதியாரில் வருஷா வருஷம் சிலர் மனந்திரும்பிக்கொண்டுவந்தார்கள். வந்திக்கத்தக்க மேற்றிராணி ஆண்டவர் அவர்களும் இச்சனங்களுக்கு ஒரு தகுந்த கோவிலைக் கட்டும்படி உத்தரவளித்தார்.

மேல்கண்ட Petit சுவாமியார் அவர்கள் பிராஞ்சு தேசத்துக்குச் சண்டைக்குப் போகும்படி கேரிட்டுவிட்டது. இவர் இப்பங்கைவிட்டுப் புறப்படும்போது இவர் பயணத்தைக்கண்ட கிறீஸ்துவர்கள் கண்ணீர் சிந்தியழத் தாம்மும் கண்ணீர் சிந்தி அவர்களை ஆசீர்வதித்துப் புறப்பட்டுப்போய்விட்டார். இத்தயாள குணமுள்ள குருவானவர் சண்டையில் அபாயமில்லாமல் சர்வேஸ்பரனால் காப்பாற்றப்பட்டு சில மாதங்களுக்குள் இம்மேற்றிராசனத்துக்கு வந்துசேருவார் என்று தெரியவருகிறது. இவர் போனபின் இவருக்கு உதவிபாய் இருந்த சுவாமிமார்களும் பின்வந்த சுவாமிமார்களும் மெ அடிமைச் சாதியாரை மனந்திருப்பும் விஷயத்தில் விடாமுயற்சியாய் உழைத்துவருகிறார்கள். 1918-ம் வருஷம் நவம்பர் மாதம் 3-வது வாரத்தில் Rev. G. Martial சுவாமியார் அவர்கள் மெ யார்களில் 25 பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களை ஞானமந்தையில் சேர்த்துக்கொண்டார்.

இச்சமயத்தில் இன்புளூவென்சா என்னும் வியாதியால் சிலர் பீடிக்கப்பட ஒரு குடும்பத்தில் முதல் நாள் புருஷனும், இரண்டாம் நாள் பெண்ஜாதியும் இறந்துபோகவே, பிரேதத்தை மூடி அடக்கம்செய்யத் துணி இல்லாமல் Martial சுவாமியார் அவர்கள் தாம் சமான் கொண்டுவந்த சாக்குப்பையால் புருஷனையும், தமது துப்பட்டியால் பெண்சாதியையும் பொதிந்து அடக்கம்செய்ய கேரிட்டது. (ஒரு துணி வாங்கவேணுமானால் 20 மைல் தூரம் போய் கடையில் வாங்கவேணும்) இச்சமயத்தில் மெ சுவாமியார் அவர்கள் சில நாள் அவ்விடம் தங்கியிருந்து இவர்களுக்கு ஆறுதல் வருவிக்கச் சில புதுக் கலியாணங்களையும் கொடுத்து, கொடிவேரிக்குவந்து சேர்ந்தார்.

இம்மலைவாசிகளான புதுக் கிறீஸ்துவர்களின் சரீர பிழைப்புக்காக சர்க்காரிடத்தில் பூமிகளை Rev. J. B. Petit சுவாமியார் அவர்கள் வாங்கி அதின் பலன் கைக்கு வரும்வரையில் அவர்கள் சாப்பாட்டுக்குத் தானியங்களைத் தமது சொந்தப் பணத்திலிருந்தும் தர்ம தண்டல்வழியாய் வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்தும் செலவு செய்துவந்தார். இவ்விதமைகளான ஜனங்கள் நாளுக்கு நாள் சிற்சிலராக சத்திய திருச்சபையில்சேர்ந்துகொண்டேவருகிறார்கள். ஆயினும் இவர்களைச் சவரட்சணைசெய்ய போதுமான பொருள் இல்லாதபடியால் சமயத்துக்குத் தக்காப்போலும் கைப்பொருளுக்குத் தக்காப்போலும் இவர்களைச் சேர்க்கவேண்டியதாயிருக்கிறது. இப்போது இவர்கள் 80 பேருக்கு அதிகம் இருக்கிறார்கள்.

ஆகையால் இன்னும் புதுக் கிறீஸ்துவர்களைச் சேர்க்க பொருள்வேண்டியதாயிருப்பதால் தர்மம் செய்ய இஷ்டமுள்ளவர்கள் வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணி ஆண்டவருக்காவது, கொடிவேரி சங்கை. G. Martial சுவாமியாருக்காவது அனுப்பிவைத்தால் எவ்வளவு சொற்பத் தொகையாயிருந்தாலும் தூல்ல மனதோடு அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுவார்கள். இதற்குத்தக்க பலன் சர்வேஸ்பரன் மறுலோகத்தில் கொடுப்பார் என்பது நிச்சயம்.

இப்படிக்கு,
ஓர் கிறீஸ்துவன்,
கொடிவேரி.

குறிப்பு.—இந்த மிக்க பரிதாபத்துக்குரிய அடிமைச் சாதியார்மட்டில் பரோபகார சிந்தையுடைய கத்தோலிக்குச் சகோதரர்கள் இரக்கங்கொண்டு தங்களாலான உதவி செய்வார்களாக!

பத்திராதிபர்.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

கடந்த மாதம் கல்லாயனில், "தெ. இ. க. சங்கத்தின் 22-வது வருஷத்திய பொதுக் கூட்டம்" சென்ற 1918-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ம் தேதி, திருச்சிஜெப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையைச்சேர்ந்த லாலி ஹாலில், மிக. வ. சென்னை யதிமேற்றிராணியாரவர்களின் அக்கிராசனத்தியத்தில் மிக்க விமரிசையாய் நடந்தேறியதாகவும், அக்கூட்டத்துக்கு சரி. வ. திருச்சி மேற்றிராணியாரவர்களும் மற்றும், மைலாப்பூர், கும்பகோணம் மேற்றிராசனங்களைச்சேர்ந்த குருக்களில் பலரும், இன்னுமுள்ள கனதனவான்களும் விஜயம் செய்ததாகவும், அக்கூட்ட நடவடிக்கையில் "கத்தோலிக்கருக்கென தனிப் பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டும்" எனும் பிரேரணையைப் பிரேரபித்து, இக்காரியத்தை நமக்குக் கொடுக்கவர்ண்மென்டாருக்கு விஞ்ஞாபித்துக்கொள்ள வேண்டுமென்பதை சபையோரெல்லாரும் ஒரே மனமாய் அங்கீகரித்துக்கொண்டதாகவும் எழுதியுள்ளதைப்பார்த்து நானும், இன்னும் அதைப் படிக்கும் நேரத்தில் என் கிட்டவிருந்த சகல கத்தோலிக்கரும் சொல்லமுடியாத ஆனந்தமடைந்தோம். மற்றும் சங்கத்தில் நடந்ததாகச் சொல்லப்பட்டுள்ள சகல நடவடிக்கைகளும் புகழ்ச்சிக்குரியனவாகவேயிருந்தன.

எனினும் இதை வாசித்துமுடிந்தபின் திருச்சியிலுள்ள எனது நண்பர் ஒருவரிடமிருந்து "க. இந்தியர்களின் மாஸ் மீட்டிங்" (The mass meeting of Catholic Indians) என்ற தலைப்புள்ள ஓர் அச்சுப்பிரதியை வரப்பெற்றேன். இதை வாசிக்கும்போது மிகவும் வருத்தமாயிற்று. அத்துடன் அந்நண்பர் இக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதின் காரணங்களையும் இன்னும் சில சங்கதிகளையும் எழுதியுள்ளார். அவற்றின் சுருக்கம் பின்வருமாறு:

"தீண்டப்படாத ஜாதிகளெனப் பாவிக்கப்படும் சில தாழ்ந்த வகுப்புக் கத்தோலிக்கர்கள், மெ தெ. இ. க. சங்கம் நடைபெறப்போகும் இரண்டு நாட்களுக்கு முன்னரே, ஆங்கிலத்தில் நோட்டீஸ் அச்சிட்டு, அவைகளை தெ. இ. க. சங்கத்தின் பிரசிடென்ட் முதல், சகல மெம்பர்களுக்கும் கொடுத்ததாகவும் எழுதியிருந்தார். அந்நோட்டீஸில் அடங்கிய சங்கதிகளென்னவெனில் தெ. இ. க. சங்கம் உண்டாகி எவ்வளவோ வருஷங்களாகியும் அது தங்களைக் கவனிக்கவில்லையென்றும், க. இ. சங்கத்தின் வேலைக்கத்தோலிக்கருக்குள் ஒற்றுமையையும் கல்வி முன்னேற்றத்தையும் அவர்கள் கடைத்தேறும் வழியையும் கவனிப்பதென்றிருந்தும் சென்னை இராஜதானியிலுள்ள கத்தோலிக்கர் ஜனத்தொகையில் நூற்றில் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் நாங்களாயிருந்தும், எங்களைக் கவனியாமலும், கத்தோலிக்கு போர்டிங் மடம், சபை, முதலியவைகளில எங்களைச் சேர்க்க முயற்சிக்காமலும், முன் இருந்ததுபோல் இருக்கிறதன்றும், குருமார்கள் தற்சமயம் செய்வதுபோல், தாங்கள் செய்துவரும் சொற்ப உதவிகளையும் செய்யாமற்போவார்களானால்,இதுவரையிலுமான்கள் வேரோடற்றுப்போயிருப்போமென்றும், ஆகையால் இனிமேலாகிலும், எங்களை அச்சங்கத்தில் சேர்த்து மேற்கண்ட கஷ்டைகளை நாங்களடைய எங்களை ஆதரிக்குமாறு கோருகிறோம்" எனபதே. (இச்சங்கதிகள் யடவலியுள்ள மெ நோட்டீஸில் மெ தாழ்ந்த வகுப்பார்கள் கையொப்பமிட்டு, பிரசுரித்தனராம்). இம்மீ தனியில் மெ தெ. இ. க. எங்கக் கூட்டம் துவக்கப்படுமுன்னமே இத்தாழ்ந்த வகுப்பினர்கள் தங்களால தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதிக்கு, அக்கூட்டத்தில் கொஞ்சம் பேச உத்திரவு கொடுக்குமபடியாக சமயத்தின் பிரசிடெண்டையும் கேட்டுக்கொண்டார்களாம்.

"பின் கூட்டம் துவக்கியதும், சங்கக் காரியதரிசியவர்கள் தம்முடைய ரிப்போர்ட்டை வாசிக்குமுன் அப்பிரதிநிதியிடம்வந்து "என் ரிப்போர்ட் முடிந்ததும் உமது உபந்நியாசத்தைச் செய்யப் பிரசிடெண்டவர்கள் உத்தரவளிக்கிறார்" என்று செப்பி தமது ரிப்போர்ட்டை வாசித்தனராம். அப்படி வாசித்துவருங்கால் ஷை தாழ்ந்த வகுப்பார்களால் பிரசுரிக்கப்பட்ட கோட்டீஸையும் காண்பித்து "இவர்களே மெம்பர்களாகச் சேர்க்கக்கூடுமேயொழிய அவர்கள் கேட்கும் நன்மைகளுக்கு சங்கம் பொறுப்பாயிராதென்றும் வேண்மொனுல் குருவானவர்களிடமிருந்து தாங்கள் கேட்கும் நன்மைகளே அடைந்துகொள்ளட்டுமென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டுத் தம் ரிப்போர்ட்டை முடித்தனராம். பின்பு, ஷியார்களின் பிரதிநிதி தமக்கு அறிவித்த உத்தரவுப்பிரகாரம் உபந்நியாசிக்க எழுந்து மேடையண்டையிற்போய், பிரசிடெண்டவர்களே மறுபடியும் உத்தரவு கேட்டுக் கொண்டு, ஆங்கிலத்தில் தம் உபந்நியாசத்தைத் துவக்க, வாயெடுக்கும்சமயத்தில் சங்கத்தைச் சேர்ந்த இரு மெம்பர்கள் எழுந்து "அவ்வுபந்நியாசத்தைக் கடைசியில் சொல்லலாம்" என்று கத்தி அவர் செய்யப்போவதைத் தடுத்தனராம். உத்தரவு கொடுத்த பிரசிடெண்டவர்களும். இதைப்பற்றி ஒன்றும் சொல்லாதபடி, அப்பிரதிநிதி, தன் உபந்நியாசத்தை நிறுத்தியிருக்கத் தானே தொடங்கினாராம். அப்படித் தாம் சொல்லிய உபந்நியாசத்தில் "கனம் செக்ரட்டரியவர்கள் சொல்லியதுபோல் தாழ்ந்த வகுப்பார்களாகிய உங்களே இச்சங்கத்தில் மெம்பர்களாகத் தான் சேர்க்கமுடியுமேயொழிய நீங்கள் கேட்கும் நன்மைகளைத் தேடிக்கொடுக்க சங்கத்தால் முடியாதென்றும், மேண்மொனுல் சென்னையில் உள்ள க. இ. பரோபகாரச் சபையைப்போன்ற ஓர் சபையை, உங்களுக்கென்றுண்டாக்கி உங்கள் நன்மைகளே யடைந்துகொள்ளுங்களென்றும்" சொல்லி ஆவனத்திலமர்ந்தனராம். மறுபடியும் ஷை பிரதிநிதியவர்கள், பிரசிடெண்டவர்களிடம் "கடைசியிலாவது கொஞ்சம் பேச எனக்கு உத்தரவு தாருங்கள்" என்று கேட்டுக்கொண்டதற்குமுதலாய் மேற்படி பிரசிடெண்டவர்களாதோர் பதிலுமுரைக்கவில்லையாம். ஆகவே இப்பேர்ப்பட்ட ஒரு சார்பான கத்தோலிக்கருக்குமாத்திரம் நன்மைசெய்யும் இச்சங்கத்துக்கு ஏன், பொதுவாய், தெ. இ. க. சங்கம் என்று பெயரிடவேண்டும்? என்று எண்ணி இதனுல் மனங் கசிந்து மேற்படி பிரதிநிதியவர்கள் வெளியே வர அங்குள்ள சுமார் 100 தாழ்ந்த வகுப்புக் கத்தோலிக்கரனைவரும் வெளியே வந்துவிட்டனராம். பின் அன்றைய சாயுங்காலமே இவர்கள் எல்லோரும் ஒரு மாஸ் மீட்டிங் (மகா சபை) கூட்டி தெ. இ. க. சங்கம் செய்யும் விகற்பங்களையும், தங்கள் சார்பாருக்கு வேண்டிய வேறு விஷயங்களையும்பற்றிப் பல தீர்மானங்களைச்செய்து, அவைகளே அச்சிட்டு அவற்றின் நகல்களே தென் இந்தியாவிலுள்ள சகல கத். மேற்றிராணிமார்களுக்கும், இராஜப் பிரதிநிதிக்கும், இந்திய மந்திரிக்கும், சென்னை கவர்னருக்கும், பிராண்ஸைஸ் கமிட்டிக்கும் (Franchise Committee) அனுப்பப்போவதாகவும் தீர்மானித்து ஷை கூட்டத்தை முடித்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்த இரண்டுவித அறிக்கைகளைப் பார்க்கும்போது, இத்தகைய விகற்பங்கள் ஷை தெ. இ. க. சங்கத்தின் வருஷாந்தக் கூட்டத்தில் ஏற்பட்டனவா, அல்லது இல்லையாவென்று சந்தேகம் உதிக்கிறது. ஆகையால் யானும், மற்றுமுள்ள தூர தேச வாசிகளும் ஷை சந்தேகத்தை நிவர்த்தித்துக்கொள்ளும்படி உண்மைச் சங்கதிகளைத் தெரிந்த நண்பர்கள் அவற்றை இத்தப்பத்திரிகை வாயிலாய்த் தெரிவிப்பார்களெனக் கோருகிறேன்.

Mandalay,
13—2—1919. } P. AROKIAM.

"நல்ல ஆயன்" அச்சியந்திரசாலைக்காக நன்கொடை.

	எற்கெனவே வசூலான தொகை.	88	10
Mr.	பிச்சை முத்து பிள்ளை, டெக்கான்.	1	10
,,	கபிரியேல் பெர்ணுண்டெஸ், தூத்துக்குடி	0	11
,,	ஏபிரஹாம், சிலோன்	0	12
,,	A. இராயப்பன், மெசொப்பொட்டேமியா	0	8
,,	A. சாண்டோ, உதகமண்டலம் ...	1	0
,,	M. மரியதாஸ், டெல்லி	1	0
Mrs.	கிராசியம்மாள், மைசூர் ...	0	4
	ஆ மொத்தம் ...	94	7

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

கோச்சி தீவான்.—கைத்தொழில் இலாக்காவைச்சேர்ந்த மகா-ரா-ரா-ஸ்ரீ ருவ் பஹதூர் டி. விஜயராகவாச்சாரியார் அவர்கள் மிஸ்டர் ஜே. டப்ளியூ. போர் என்பவருக்குப்பதில் கொச்சி தீவானுகநியமிக்கப்பட்டிருக்கிறார்.

மிஸ்டர் வில்சன்.—சமாதானக் கான்பரன்வினிருந்து ஒரு அவசர அலுவலியிட்டு அமெரிக்காவுக்குச் சென்ற மிஸ்டர் வில்சன், மறுபடியும் பிரான்சுக்குத் திரும்பிவர, நியூயார்க் துறைமுகத்தில் இம்மாதம் 5-ம் தேதி கப்பலேறப்போகிறரெனச் சங்கதி தெரியவருகிறது.

27 அடுக்கு மெத்தை வீடு.—அமெரிக்காவில் சாப்பாட்டு விடுதிக்காக (ஓட்டல்) இருபத்தேழு உப்பரிகைகள் ஒன்றின்மேலொன்றுவைத்துக் கட்டிய கட்டிடமொன்று புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறதாம். அதில் 2,200 தனிப் படுக்கையறைகளும், ஸ்நானத்துக்கான ஏற்பாடுகளும், மற்ற சௌகரியங்களும் இருக்கின்றனவாம். இவ்வளவு பெரிய கட்டிடமும், இவ்வளவு பெரிய சாப்பாட்டு விடுதியும் உலகத்தில் எங்கும் கிடையாதென்று சொல்லப்படுகிறது.

நட்சத்திரங்களோடு சம்பாஷணை.—கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த மர்க்கோனி என்னும் சாஸ்திரியைக்கண்டு ஒருவர் சமீபத்தில் பல விஷயங்களைப்பற்றிப் பேசியபோது, அவர் மின்சார சாஸ்திர ஆராய்ச்சி நாளடைவில் விருத்தியாகிவர, சந்திர சூரிய நட்சத்திரங்கள் முதலிய கிரகங்களிலிருப்பதாய் அனுமானிக்கப்படுகிற ஜீவஜெந்துக்களுடன் கம்பியில்லாத் தந்தியில் கணித சாஸ்திர முறையால் சம்பாஷிப்பது சாத்தியமானகாரியமென்று அபிப்பிராயப்பட்டாராம். என்னே ஆச்சரியம்!

சக்கரவர்த்தியின் குமாரன்.—"குடை நிழலிலிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்" என்னு மூதுரை மாஜீ சக்கரவர்த்திபாகிய கெய்சருக்கும் அவன் பிள்ளைகளுக்கும் பலித்தது. அவர்கள் வீட்டை விட்டு நாட்டை விட்டு இருக்குமிடந்தெரியாமல் பரதேசிகளாய்த் திரிகின்றனர். மேற்படி சக்கரவர்த்தியின் நாலாவது பிள்ளையாகிய அகஸ்ட் வில் ஹெல்ம் என்னும் அரசிளங் குமாரன் இப்போது அந்திய நாட்டில்மோட்டார்வண்டிகள் செய்யும் கம்பனியில் ஒரு வேலைக்கு அமர்ந்து அலுவல் பார்த்துவருகிறனும். என்னே சர்வேசுரனின் நியமம்!

புது ஆயுதச் சட்டம்.—இப்போதுள்ள ஆயுதச் சட்டத்தின்படி ஐரோப்பியர் எல்லோரும் லைசென்ஸ் இல்லாமலே துப்பாக்கி கத்திமுதலிய ஆபத்தான ஆயுதங்களே வைத்துக்கொள்ளலாம். இந்தியர் யாவராயினும் லைசென்ஸின்றி அவைகளைத் தங்கள்வசம் வைத்திருக்கப்படாது. இப்போது புதிதாய் இந்தியா கவர்ண்மென்டாரால் கொண்டுவரப்படப்போகிற சட்டத்தின்படி, ஐரோப்பியராயினும், இந்தியராயினும், வேறு எந்த ஜாதியாராயினும், எல்லாரும், யாதோர் வித்தியாசமுமின்றி ஆயுதங்களைக் கையாடலாமாம். ஆயினும் தக்க அந்தஸ்து யோக்கியதை உடையவர்களுக்கே மேற்படி விஷயத்தில் லைசென்ஸ் கொடுக்கப்படுமென்று சொல்லப்படுகிறது.

கெய்ஸர் சக்கரவர்த்தியின் மாளிகை யானது சென்ற மாதம் 11-ம் தேதியன்று காலை 8-மணி முதல் பகல் 12-மணிவரையிலும் பீரங்கிக் குண்டுகளால் தகர்க்கப்பட்டு மிக்க சேதமடைந்ததாய்ச் சொல்லப்படுகிறது. ஷை மாளிகையைக் காவல் காத்துக்கொண்டிருந்த ராஜிய கட்சியினருக்கும், இராஜன் கூடாது குடியரசு வேண்டுமென்ற அராஜகக் கட்சியினருக்கும் அவ்விடத்தில் நடந்த சண்டையில் இரு கட்சியினருக்குள்ளும் அநேக உயிர்கள் சேதமாயின. இராஜ அரண்மனையிலிருந்த விலையுயர்ந்த சாமான்களெல்லாம் வெளியில் கொண்டுவந்து எறியப்பட்டு சின்னபின்னமாக்கப்பட்டுப்போயின. யுத்தத்தின்போது கேய்ஸரின் குரூரமான செய்கைகளால்எவ்வளவோ அருமையான கட்டிடங்களும், கோவில்களும், அவைகளிலுள்ள அரிய சாமான்களும் நாசமாக்கப்பட்டனவல்லவா? அதற்குச் சம்மானமாக கெய்ஸருடைய சொந்த மாளிகையும்

அதே கதியடைய சர்வேசுரனுக்குச் சித்தமாயிற்று. "எந்த அளவைக்கொண்டு அளப்பீர்களோ, அந்த அளவைக்கொண்டு தான் உங்களுக்கும் அளக்கப்படும்" என்ற தேவ வாக்கியம் நிறைவேறலாயிற்று.

யாழ்ப்பாணத்து மேற்றிராணியாராகிய சரியாய் வந்திக்கத்தக்க ஹென்ரி ஜூலேன் ஆண்டவரவர்கள் சென்ற சில காலமாய் நோயுற்றிருந்து, கடந்த மாதம் 7-ம் தேதியன்று கர்த்தர் திருவடியடைந்தாரெனக் கேள்வியுற்று மிகவும் விசனப்பட்டோம். அவருக்கு வயது 66. அவர் குருப்பட்டம் பெற்று 43-வருஷமளவாக ஆண்டவரின் திராட்சைத் தோட்டத்தில் உழைத்துக் கடைசியாய்க் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இந்த அவரது ஊழியத்துக்காகச் சர்வேசுரன் தக்க சம்மானம் அளிப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை. அவருடைய சடலம், மிக்க சிறப்புடன் கனம். கண்டி, திரிகோணமலை மேற்றிராணியார்களுடன் கொழும்பு அதிமேற்றிராணியார் அவர்களால் தக்க மந்திரச் சடங்கு ஆசாரத்துடன் அர்ச். தேவமாதாவின் மேற்றிராசன ஆலயத்துப் பெரிய பீடத்தடியில் பூஸ்தாபகஞ் செய்யப்பட்டது. அவர் அடக்கத்துக்கு திரளான விசுவாசிகளும், பாரிய உத்தியோகஸ்தர்களும், பிரபுக்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். இதனால், அவ்வூரார் அந்த நல்ல மேய்ப்பர் விஷயத்தில் எவ்வளவு அன்பும் மதிப்புங்கொண்டிருந்தார்கள் என்பது விதிதமாகிறது. அவர் ஆத்துமத்துக்கு அம்பரன் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருள்வாராக?

அர்ச். அந்தோனியாரின் புதுமை.—ஐரோப்பிய மகா யுத்தம் சம்பந்தமாய் அர்ச். அந்தோனியாரின் திருச் சரீரம் அடக்கம்பண்ணப்பட்டிருக்கும் பதுவா பட்டணத்தின் மேல் சத்துருக்களின் ஆகாய விமானக் குண்டுகள் விழுந்து பட்டண முழுதும் நாசமாய்ப்போகும் ஆபத்திலிருந்தது. அடுத்தடுத்து எதிரியின் ஆகாய விமானங்கள் பதுவா பட்டணத்தின்மேல் பறந்துவருவதைக்கண்ட அந்நகரத்தார் அர்ச். அந்தோனியாரை அத்தியந்த பக்தியுடன் அண்டி, தங்கள் ஊரை யாதோர் ஆபத்துமின்றிக் காப்பாற்றித் தரும்படி மிக்க உருக்கத்துடன் அவரை மன்றாடுவாராயினர். எந்தச் சமயத்தில் அவர்கள் ஆபத்தை எதிர்பார்த்தார்களோ அந்தச் சமயத்தில், கனத்த கருமையான மூடுபனியானது ஆகாயத்திலுண்டாகி பதுவாபட்டணமுழுவதையும் கூடாரம் போட்டதுபோல் மறைத்துக்கொண்டதாம். ஆபத்தான சமயம் கடந்துபோன பிறகு அந்த மூடுபனியும் தானாய் நீங்கிவிட்டதாம். இதற்குமுன்னே இப்பேர்ப்பட்ட மூடுபனி எக்காலத்திலுங் காணப்பட்டதில்லையாம். ஆனதினால் பதுவாபட்டணத்தைக் காப்பாற்றுவதற்காக அர்ச். அந்தோனியாருடைய விசேஷ வேண்டுதலால் உண்டான மூடுபனியென ஜனங்கள் சந்தேகமறத் தெளிந்து அக்கோடியற்புதருக்கு நன்றியறிந்த வந்தனஞ் செலுத்தினர்களாம்.

மிஸ்டர் கிளேமென்சோ.—சமாதானக் கான்பிரன்சில் விசேஷ ஊக்கங்கொண்டு உழைத்துவந்த பிரென்ச் பிரதம மந்திரியாராகிய மிஸ்டர் கிளெமென்சோ என்பவரை அராஜகக் கட்சியைச்சேர்ந்த காட்டின் என்னும் பெயர்கொண்ட ஒரு தச்சன், துப்பாக்கியால் சுட, துப்பாக்கிக் குண்டானது மார்பைத் தொளைத்து நுரையீரல் வரைக்குஞ் சென்று அங்கே, தங்கியிருக்கின்றதாம். அதை வெளியே யெடுப்பது தற்கால தேக நிலைமையில் ஆபத்தானது என்று டாக்டர்கள் கருதியோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். மற்றப்படி அவருக்கு வேறு சங்கடமில்லை. இரவில் அதிகதொந்தரையில்லாமல் அமர்ந்து சிறு நித்திரைசெய்கிறாராம். காலையில் எழுந்து உடுத்திக்கொண்டு ஆகாரம் சாப்பிட்ட பின் சற்று உலாவுகிறாராம். ஆயினும் அவருக்கு இப்போது இருக்கும் தேக ஸ்திதியைக் கவனிக்கையில், அவர் சமாதான சங்கத்துக்குச் சில நாள்வரையில் வரமுடியாதென்று சொல்லப்படுகிறது. இவருக்குச் சர்வேசுரன் கூடியசீக்கிரத்தில் பூரணசௌக்கியத்தைக் கொடுத்து, உலகத்தில் நித்திய சமாதானம் ஏற்படுவதற்கு இன்றியமையா சாதனமாகிய "சர்வ ஜன சங்கத்தை" முற்றும் முடிய தீர்மானமாய் ஸ்தாபிப்பதில் வேண்டிய செல்வாக்கைக் கொடுத்தருள்வாராக!

சமாதானக் கான்பரென்ஸ்—இந்தச் சமாதானச் சங்கத்தாரால் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்கள் பலவாயும், மகத்தானவையாயுமிருப்பதால், சிற்சில முக்கிய விஷயங்களை விசாரித்துத் தீர்மானிக்கும்படி சில சிறு உப கமிட்டிகளை யேற்படுத்தியிருக்கிறார்கள். கடல் சுதந்தரத்தைப்பற்றி ஒரு கமிட்டியும், சர்வதேச ஜனச்சங்கத்தின் அமைப்பைப்பற்றி ஒரு கமிட்டியும், சத்துருக்களிடத்திலிருந்து. ந்ஷ்டயீடு வாங்குவதைப்பற்றியொரு கமிட்டியும், ஜலக்கீழ்க் கப்பல்கள், ஆகாய விமானங்கள் செய்த அட்டூழியங்களை விசாரிக்க ஒரு கமிட்டியும், குடியேற்ற நாடுகளைப் பாகிப்பதைப்பற்றியொருகமிட்டியுமாக பல கமிட்டிகள் கூடி அவரவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி நுணுக்கமான ஆராய்ச்சிகள் செய்து, உண்மைகளைக் கண்டுபிடித்து ஞாயப்பிரகாரம் தீர்மானஞ் செய்துவருகிறார்கள். இந்தக் கமிட்டிகள் ஒவ்வொன்றும் முடிவாக்குகிற தீர்மானங்களெல்லாம், சமாதானக் கான்பரன்ஸ் முன்பாகக் கொண்டுவரப்பட்டு அவர்களால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி அமுலுக்கு வரமாட்டா. எந்த விஷயமும் முடிவான தீர்மானத்துக்கு வந்ததாகத் தெரியவில்லை. சில விஷயங்களில் மெம்பர்களுக்குள் அபிப்பிராத பேதமில்லாமற்போகவில்லை. ஒவ்வொரு விஷயமும் பூராய் வாதிக்கப்பட்டுத்தான் முடிவுக்கு வரவேண்டியதாயிருக்கிறது. சமாதானம் முடிவாக மூன்று மாதம் அதாவது மேமீ வரையிற்செல்லுமென்று சொல்லப்படுகிறது.

மார்ஷால் போஷ்.—ஐரோப்பிய மகா யுத்தத்தை வெற்றியான முடிவுக்குக் கொண்டுவந்த பிரென்சு தளக்கர்த்தராகிய மார்ஷால் போஷ் என்பவர் மிக்க பக்தியுள்ள கத்தோலிக்கரென்பது நமது நண்பர்களுக்குத் தெரிந்த விஷயம். இவர் கடைசியாய் மார்ண் நதி தீரத்தில் ஜெர்மானியரைத் தோற்கடித்த சண்டைக்கு யோசனை முஸ்திப்புக்கள்செய்தது, மார்மோன்ட் என்னு மூருக்கருகாமையிலிருக்கும், "ஷாட்டோ தெ பாம்போன்" என்னும் அரண்மனையில்தானென இப்போது தெரியவருகிறது. இந்த அரண்மனைக்கருகாமையில், ஒரு சிறு கோவிலிருக்கிறது. இக்கோவிலுக்கு மேற்படி தளக்கர்த்தர், பிரதி ஞாயிற்றுக்கிழமையிலும் தவறாமல் திவ்யபூசைகாண வருவாராம். கனத்த மழை பனி முதலிய சங்கடங்களில்லாத நாட்களில், கால்நடையாகவே கோவிலுக்குவந்து, பக்தியுடன் பூசைகண்டு, அங்கு எதிர்ப்படும் விருத்தருடனும், வாலருடனும் மிக அன்பாய் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுப் போவாராம். இந்தக் கோவிலில்தான் திரு இருதயப் பக்தியுள்ள இந்தப் படைத்தலைவர் தமது சேனைகளையெல்லாம் சேசுவின் திரு இருதயத்துக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்தாராம். நேச ராஜ்ஜியங்களுக்குக் கிடைத்த வெற்றிக்குக் காரணம், போஷ் தளக்கர்த்தரின் பக்தியும், பக்தியினாலுண்டான புத்தியுமேயென்று சொல்லவேண்டுவதில்லை. கடவுளை நம்பினோர் கைவிடப்படாரல்லவோ?

அர்ச். பாப்பானவரின் சுயாதீனம்.—ஐரோப்பிய மகா யுத்தக்காரணமாய் ஏற்பட்டுள்ள சர்வ தேச ஜன சங்கத்தின் கோட்பாட்டின்படி, சிறிய தேசமானாலுஞ் சரி, பெரிய தேசமானாலுஞ் சரி, எல்லா தேசங்களும் தன் தன் சுயாதீனத்தைப் பெற்று, எல்லாம் சமாதானமாய் வாழ ஏற்பாடுசெய்யப்பட்டுவருகிறது. 1870-ம் வருஷத்துக்குமுன்னே, "பேப்பல்ஸ்டேட்ஸ்" என்ற பூகொத்தை நமது பரிசுத்த பாப்பானவர் தம் வசத்தில் வைத்து, அரசாண்டுவந்தார். அந்நாடுகள் மெ வருஷத்தில் அவரிடமிருந்து பலாத்காரமாய் பிடுங்கப்பட்டு இத்தாலியா இராஜ்ஜியத்தோடு சேர்க்கப்பட்டன. அதுமுதற்கொண்டு பரிசுத்தத் தந்தையானவர் தமது வத்திக்கான் மாளிகைக்குள் ஒரு குற்றவாளியைப்போல் அடங்கியிருக்கிறார். மேற்கண்டபடி சிறிய நாடுகளும் சுயாதீனம் பெறும்பொழுது, நமது பரிசுத்த பிதாவுக்கு முன்னிருந்த சுயாதீனத்தை ஏன் கொடுக்கப்படாது, அவசியம் கொடுக்கத்தான்வேண்டுமென்று அப்போஸ்தொலிக்கு லீக் என்னும் சபையார் உலகமெங்கணுமுள்ள கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களைபோல் சமாதானச் சங்கத் தலைவர்களுக்கும், ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்களுக்கும் ஸ்பெயின், பெல்ஜியம் தேசத்து அரசர்களுக்கும், ஆலண்டு இராக்கினிக்கும்,

சுவிட்ஸர்லாண்டு தேசத்து ஜனப்பிரதி நிதிக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அதிபதியாகிய மிஸ்டர் வில்சனுக்கும், பிரான்சு குடியரசுத் தலைவராகிய பாயின் கரேயுக்கும், மெஸர்ஸ் லாயிட் ஜார்ஜ், மார்ஷால் போஷ், இத்தாலியின் மந்திரி மேடா, ஆகிய இவர்களுக்கும் மனுசெய் திருக்கிறார்கள்.

இன்புளுவென்சா.—புது சுரமென் றும், பசரா சுரமென்றும், ஸ்பெயின் சுர மென்றும் சொல்லப்படு மிந்தப் பெருவா ரிச் சுரத்தைப்பற்றி, இங்கிலாந்திலுள்ள கிரெஷாம் காலேஜில், சர். ஆர். ஆரம்ஸ்ட் ராங் ஜோன்ஸ் என்னும் சாஸ்திரியாரால் ஒரு விவாமான உபந்நியாசஞ் செய்யப் பட்டது. இந்தச் சுரமானது கணக்காய் 33-வருஷங்களுக்கு ஒரு முறை வருவ தென்றும் அது தன்னிலே அவ்வளவு கெட்டதாயில்லையானாலும், பற்பலதொந்த வியாதிகளைத் தூண்டிவிடுவதினால் மிக்க ஆபத்தான வியாதியென்றும், அது காலத் துக்கும் இடத்துக்கும் தக்கபடி, மெது வாயும், துரிதமாயும், அதிவேகமாயும் ஓரி டத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பிர யாணஞ் செய்கிறதென்றும், அந்த நோய் கொண்டவன் விடும் சுவாசத்தின் வழி யாய் ஆகாயத்திற் கலந்து மற்ற இடங்க ளுக்குப் பரவுகிறதென்றும், அதைப் பர வச்செய்யும் கிருமி, ஒரு அங்குலத்தை 50,000, பாகமாய்ப் பிரித்தால் அதன் ஒரு பாகம் எவ்வளவு பருமனுயிருக்குமோ அவ்வளவு பருமனுகிய மிக நுண்ணியதா யிருக்கிறதென்றும், இந்த வியாதி 1566-ம் வருஷத்திலேயே கண்டு அப்போது ஸ்பா னிஷ் நோய் என்ற பேர் பெற்றதென்றும், 1740-ம் வருஷத்தில் இத்தாலியில்தான் இதற்கு "இன்புளுவென்சா" என்ற பேர் கொடுக்கப்பட்டதென்றும் சொன்னர்.

சண்டை செய்தி—இராஜாக்களுக்குள் ஏற்பட்ட ஐரோப்பிய மகா யுத்தமானது சென்ற நவம்பர் மாதம் 11-ம் தேதி யோடே, நின்றுவிட்டதாயினும், "மழை விட்டும் தூவானம் விடவில்லை" என்பது போல, ஐரோப்பாவைச்சேர்ந்த நாடுகள் பலவற்றில் ஜனங்களுக்குள் ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அபேத வாதக்கட்சி, மித வாதக்கட்சி, அமித வாதக்கட்சி எனப் பல கட்சிகள் புறப்பட்டு அங்கங்கே குழப் பங்கள்செய்து, சண்டையிட்டு, உயிர்க ளைக் கொல்லுகிறதும், கட்டிடங்களைக் கொளுத்துகிறதுமா யிருக்கிறார்கள். போர்த்துகல்லிலும், ருஷியாவிலும், போலாண்டிலும், ஜெர்மனியிலும், பிரஷி யாவிலும் இவ்வித கலகங்கள் மிகுந்திருக் கின்றன. போர்த்துகல் பிரஜாதிபதியைக் கொன்றார்கள், பவேரியா தேசத்து மந் திரியையும் மற்றுஞ் சில உத்தியோகஸ் தரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டார்கள். பிரான்சு பிரதம மந்திரி யைச் சுட்டார்கள். ஊரெங்கும் நாடெங் கும் தொழிலாளர் தாங்கள் வேலைசெய்யும் நேரத்தைக் குறைக்கவேண்டுமென்றும், கூலியை அதிகப்படுத்தவேண்டுமென்றும் கிளர்ச்சிகள் செய்து, ரெயில்வேகளி லும், யந்திரசாலைகளிலும், கப்பல் துறை முகங்களிலும், மற்றுமுள்ள தொழிற் சாலைகளிலும் வேலை நிறுத்தஞ்செய்து முத லாளிகளுடன் வாதிட்டுக்கொண்டுவருகி றார்கள். உணவுப் பொருட்களும் மற்றும் ஜீவனத்துக்குவேண்டிய வஸ்துக்களும் கிடைக்காமல் அநேக தேசங்கள் கஷ்டத் துக்குள்ளாகி வருந்துகின்றன. இவை யெல்லாம் யுத்தங் காரணமாய் நிகழ்ந்த காரியங்களேயாகும். யுத்தத்துக்கு முன் னிருந்தபடி சௌக்கியமும், சந்தோஷ மும், சௌகரியமும், சமாதான சம்பிரம வாழ்க்கையும் இனி எப்போது வருமோ வென உலகமெங்கும் ஜனங்கள் ஏங்கி யிருக்கின்றனர். எல்லாம்வல்ல ஈசனுக்கு எப்போது கருணைவருமோ தெரியவில்லை. அதற்காக அவரை அல்லும் பகலும் ஆவ லாய் வேண்டுவோமாக.

சரஸ்வதி படம்.—வங்காளத்தில் ஐரோப்பிய பூரோடஸ்டாண்டு பாதிரிமா ரால் நடத்தப்பட்டுவரும் சென்ட் பால்ஸ் காலேஜ் போர்டிங் அவுஸில், அதிகாரி களின் உத்தரவின்றி ஒரு பையன் சரஸ் வதிபடமொன்றைக் கொண்டுவந்து வைத் திருந்தான். சரஸ்வதி படம் அல்லது வேறுபக்திக்கடுத்த படமென்று அறியாத ஒரு ஐரோப்பிய பாதிரி, வாலிபர்கள் இருக்கப்பட்டவிடத்தில் ஸ்திரீ படமுத லிய படங்கள் வைக்கப்படாதென்றே, கண்டதைச் சுவரில் மாட்டி சுவரின் அழ

கைக் கெடுக்கக்கூடாதென்று கருதியோ அப்படத்தை யெடுத்துக் கோபத்தினால் வெளியே விசிறியெறிந்துவிட்டார். அது அப்பக்கத்திருந்த குப்பைமேட்டில் விழுந்ததாம். இதைக்கண்டு, ஷை பையனும், அவனைச்சேர்ந்த மற்றவர்களும் சீற் றங்கொண்டு, தங்கள் மதத்துக்கு நிந்தனை யாக இப்படிக் செய்தாரென்று அந்தப் பாதிரியார்மேல் வழக்குத் தொடுத்திருக் கிறார்கள். இதையறிந்த ஷை பாதிரியார் ஹிந்துமத நிந்தனையாக நான் அப்படிச் செய்யவில்லை. சாதாரண படமென்று எண்ணி அதை யெறிந்தேன் என்று சமா தானஞ் சொல்லியும், அவர்கள் அதை யொப்புக்கொள்ளாமல அதையிட்டு ஊரெங்கும் பெரிய கிளர்ச்சி யுண்டு பண்ணி, கவர்னர் இவ்விஷயத்தில் தக்க நடவடிக்கை யெடுத்துக்கொள்ளவேண்டு மென்று அவருக்கு ஒரு கண்டனத் தந்தி கொடுத்திருக்கிறார்களாம். ஷை பாதிரி யார் சொன்ன சமாதானத்தைக் கேட்ட பிறகு அவ்விஷயத்தை அத்தோடே விட்டி ருக்கலாம். அப்படிக்கின்றி அற்பத்தைப் பெரிதாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இது, "வெறும் வாயை மெல்லும அம்மையா ருக்குக் கொஞ்சம் அவல அகப்பட்ட" வகையாயிருக்கிறது.

தேகம் கல்லாக மாறியது.—அமெரிக் காவிலுள்ள அர்க்கான்சாஸ் என்ற நதி தீரத்திலுள்ள வயலொன்றில் பயிரிடுவதற் காகப் பண்ணையாட்கள் நிலத்தைக் கொத் தித் தோண்டியபோது, கல்லாக்கப்பட்ட ஒரு கத்தோலிக்குக் குருவானவரின் தேகம் அகப்பட்டதாம். அந்தச் சரீரத் தில் உடுத்தப்பட்டிருந்த உடுப்பு குருவா னவரின் உடுப்பாயிருந்ததால் குருவான வர் என்று கண்டுகொள்ளப்பட்டது. அந் தச் சரீரம், அது தரித்திருந்த உடுப்பு, போட்டிருந்த சப்பாத்து முதலிய எல லாம் கல்லால் செதுக்கப்பட்ட சிலைபோ லிருந்ததாம். அவர் கழுத்தில் அணிந் திருந்த ஜெபமாலையின் தந்த பாடுபட்ட சுரூபத்தை, அவர் கைகளிரண்டும் இறு கப் பிடித்திருந்த விதமாகவும், அவர் தேகத்தில் எய்யப்பட்ட அம்பானது முது குபக்கம் துளைத்துமார்புபக்கம் அதன் தலை வெளிப்படும் மாதிரியாகவும் அது காணப்படாதிருந்தால், அது யாதொரு சிற்ப சாஸ்திரியால் நிருமாணிக்கப்பட்ட ஒரு கற்சிலையென்றே தீர்மானிக்கப்பட்டி ருக்கும். இந்த ஆச்சரியத்துக்குரிய புது மையைக்கண்டவர்கள், அவ்வுருவம் தரித் திருந்த பாதரட்சையின் மாதிரியைக் கொண்டு, அக்குருவானவர், பதினேழாம் நூற்றண்டில் ஜீவித்திருந்திருக்கவேண்டு மென்றும், அக்காலத்தில அவ்வூர் அநா கரிகமுற்ற ஜாதியாரால் கொல்லத் தூரத் தப்பட்டபோது, அந்நகரத்தைவிட்டு வில கிக்கொள்ளவேண்டுமென்றுதப்பி யோடு கையில் அவ்விந்தியர்களுடைய அம்பினால் எய்யப்பட்டு இறந்து அந்நகரிதீரத்தில் அடக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தக் கல் தேகமானது, அவ்வூர் கோவிலுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே பற்பலரு டைய காட்சிக்காகப் பயிரங்கமாக வைக கப்பட்டிருக்கிறதென்றும், விசுவாசிகள் திரளாய்வந்து அதை ஆவலாய்ச் சந்திக்கி றார்களென்றும் சொல்லப்படுகிறது.

ரௌலட் மசோதா.—வட இந்தியா வில் சில காலத்துக்குமுன்னே அடுத்த டுத்து நடந்துவந்த வழிப்பறிக் கொள்ளை கள், தீவர்த்திக் கொள்ளைகள், கொலைகள் முதலியவைகளைப்பற்றித் தீர்க்கவிசாரணை செய்து, அவைகளுக்குக் காரணமென்ன, அக்காரணத்தை அகற்றி ஊரில் எவ்வாறு நிர்ப்பயத்தையும, சமாதானத்தையும் உண்டுபண்ணலாமென்று யோசித்து அறிக்கையிடும்படி ஒரு கமிட்டி நியமிக் கப்பட்டது. இந்தக் கமிட்டிதான் ரௌலட் கமிட்டியெனப்படுவது. இவர் கள் விஷயா விஷயங்களை நுணுக்கமாய் விசாரித்து ஓர் அறிக்கை வெளியிட்டார் கள். ஷை அட்டூழியங்களெல்லாம் இர கசியமாய் வேலைசெய்துவரும் அராஜகக் கட்சியாரால் பெரும்பாலும் செயயப்பட் டவையென்றும், அக்கட்சியார் பொது ஜனங்களுக்குள் இராஜத் துவேஷத்தை யுண்டுபண்ணிவிட்டார்களென்றும், அவை களை மறுபடியும் தலைகாட்டாமல் அடக்கு வதற்கு மிகு கண்டிப்பான இராஜ சட்டம் அத்தியாவசியமென்றும், அப்படிப்பட்ட கடுமையான சட்டம் ஏற்படாதவிட் டால, இராஜத் துவேஷம் அதிகரித்து, இராஜாங்கத்துக்குக் கெடுதி யுண்டாகு மென்றும் அபிப்பிராயப்பட்டார்கள்.

இதன் பயனுய் உண்டாக்கப்பட்ட இராஜத் துவேஷச் சட்டமே, "ரௌலட் மசோதா" என்னப்படுவது. அராஜகச் சூழ்ச்சி செய்வோரையும், அதற்கு அநுகூலமாயிருப்போரையும், அது சம்பந்தமான பேச்சு, கடிதப் போக்குவரவு வைத்துக்கொள்வோரையும்,ஜனங்களுக்கு இராஜத் துவேஷத்தை உண்டுபண்ணும்படியான புத்தகம் எழுதுபவர் அச்சிடுபவர் முதலானேரையும் அந்தச் சட்டம் பாதிக்குமேயொழிய இராஜ விசுவாசமுடையவர்களே யொருபோதும் ஒன்றுஞ் செய்யாது. இப்படியிருக்க, அந்த மசோதாவைச் சட்டமாக்கக்கூடாதென்று அநேகர் கூட்டங்கூடி, இராஜாங்கத்தாருக்கு மனு எழுதி, அதைக் கண்டனஞ் செய்துவருகிறார்கள். இது என்னத்துக்கோ தெரியவில்லை. துஷ்ட பையனேயன்றி நல்ல பையன் உபாத்தியார் பிரம்புக்குப் பயப்படவேண்டியதில்லையே. மடியில் பணமிருந்தால்லோ வழியில் பயப்படவேண்டும்? ஆழ்ந்த யோசனையுள்ள இராஜ தந்திர நிபுணர்களெல்லாம் இத்தகைய கடுமையான சட்டம் கொஞ்சக்காலத்துக்கு மாத்திரமாவது இருந்துதான் ஆகவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக்கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

பெங்களூர்.

பெங்களூரில் வசித்து காலஞ்சென்ற அ. இ. பொன்னுசாமி பிள்ளை அவர்களின் மூத்த குமாரனும் எனது பெரிய சகோதரருமாகிய இங்கராயப் பிள்ளை கடந்த அக்டோபர் மாதம் 15-ந் தேதியன்று இன்புளுவென்சா—நியுமோனியா என்னும் வியாதியினால பீடிக்கப்பட்டு பெங்களூரிலுள்ள தனது மனைவி, இரு குமாரத்திகள், மருமகன், பேரப்பிள்ளைகள் இருவர் இவர்களின் மத்தியில் தனது 54-வது வயதில் மரணமடைந்தாக தந்தி சமாசாரம் எட்டியாங்கள் மிகவும் துக்கமுள்ளவர்களாக இருக்குங்கால், Insein Loco-Superintendent Officeல், Clerk உத்தியோகம் செய்துவந்த எனது இளைய சகோதரன் டானியேல் மாதவராய பிள்ளை 3 நாள் வியாதியாக இருந்து எவ்வித சிகிச்சைசெய்தும் சுகங் காணுமல் கடைசித் தேவத்திரவிய அனுமானமாகிய அவஸ்தைப்பூசுதல் பெற்று மறுநாள் பாவசங்கீர்த்தனஞ்செய்து தேவநீற்கருணை உட்கொண்டு கர்த்தர் பிறந்த நாளாகிய December மாதம் 25-ந் தேதி மத்தியானம் 1½-மணிக்கு வெகு அமரிக்கையுடன் தன் ஆத்துமாவை ஒப்புக்கொடுக்கலாகி, தன் மனைவி, 5 மக்கள், முதிர்ந்த வயதுள்ள தாயார், சகோதரன், மனைவி, மக்கள் 7 பேர்கள், இன்னும்மற்றைய பந்துக்கள், சினேகிதர்கள் கண்கலங்கி நிற்க தனது 48-வது வயதில் பரலோகப்பிராப்தி அடைந்தனன். இதை வாசிக்கும் அன்பர்கள் அனைவரும் மேல்கண்ட இருவர்களின் ஆத்தும இளைப்பாற்றியை நித்தியானந்த தயாபரக்கடவுள் கிருபைசெய்யும்படியாக, மன்றாடி ஒரு பர., பிரி., திரி. ஒப்புக்கொடுக்க மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிக்கு,

P. DEVARAJU PILLAI,
Senior Grade Sub-Assistant Surgeon
29—1—19. Central Jail, Insein.

கோழம்பு.

நண்பர்கள் யாவருக்கும் பகூத்துடன் தெரிவிப்பது: அர்ச். தேவமாதாவின் காட்சிப் பட்டணமெனும் பெயர்வாய்ந்த வடக்கன்குளமாநகரில் வாசம்செய்யும் நாடார்குல ஸ்ரீமான் சவரிமுத்து அண்ணுவியவர்களின் சிரேஷ்டப் புத்திரியும் மிக்கேல் நாடார் அவர்களின் அருமை மனைவியுமாகிய எனது தாயார் ஸ்ரீமதி செபஸ்தியாயம்மாள் காலரா வியாதியின் இடருல் விடாய்ப்பட்டு, கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் குறைவறப் பெற்று, சோர்வுற்று, நிகழும் 1919 ஞ் ஜனவரியீ 6 திங்கட்கிழமை மாலை 4-மணியளவில் பரலோகப் பிராப்தியாகினள். ஐந்து மணியளவில் சடலம் பிராட்வே அர்ச். வியாகுலமாதா திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் கம்பவுண்டில் நலலடக்கம் பண்ணப்பட்டது. இதை கண்ணுறுக்கும் சகோதரர்களே, சகோதரிகளே, இந்த ஆத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி., வேண்டிக்கொள்ளும்படியாய் தங்களே வெகு வாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்வண்ண,

பெற்ற தாயையிழந்து பரிதவிக்கும் குமாரர்,
K. M. தேவசகாயம் நாடார்.
21—2—1919.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் கல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுசெளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 17. | ஏப்பிரல் 1919. | இலக்கம் 4.

LITURGICAL AND HOMILETIC NOTES.
தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

ஞானஸ்நான சடங்கின்பேரில்

நமதாண்டவரான சேசு நாதஸ்வாமி ஸ்நாபக அருளப்பர் கையால் ஜோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டபோது, வான மண்டலங்கள் திறக்கப்பட இஸ்பிரீத்து சாந்துவான் சர்வேசுரன் புறுவின் வடிவமாய் அவர்மேல் இறங்கிவந்து நின்றுரென்றும், பரலோகத்திலிருந்து அவருடைய பிதாவும் "நமக்குப் பிரியமாயிருக்கிற நம்முடைய நேச குமாரன் இவரே" என்று திருவாய்மலர்ந்து திருவுளம்பற்றினுரென்றும் மத்தே. III. 16, 17-வது வசனங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. நாம் ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டபோது இவ்வாறே சம்பவித்த தென்பதற்கையமில்லை. ஆம், நாம் எல்லோரும் ஜென்மப்பாவத்தோடிற்பவித்து, ஜென்மப்பாவத்தோடு பிறந்தபடியால் தேவகோபத்தோடும் சாபத்தோடும் இவ்வுலகிலுதித்தோமல்லவா? ஆயினும் நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட அந்தொடிப்பொழுதிற்றானே நாம் பரிசுத்தராக்கப்பட, பிதாவாகிய சர்வேசுரனும் நம்மேல் பிரியங்கொண்டு நம்மைத் தம்முடைய சுவிகாரப்பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள, இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனும் நம்முடைய இருதயத்தைத் தம்முடைய இருப்பிடமாகச் செய்துகொண்டார். மேலும் நமக்காக வானமண்டலங்கள் திறக்கப்பட்டன. நாம்மாத்திரம் ஞானஸ்நானம் பெற்ற உடனே மரணமடைந்திருப்போமானுல் நேராக மோட்ச இராச்சியத்தில் பிரவேசித்திருப்போம். ஞானஸ்நானத்தின்வழியாய் நமக்கருளப்பட்ட இத்தகையான அரிய சுதந்தரங்களையும், மேலான வரங்களையும் நாம் பாவத்தினுல் இழந்துபோவதானது எப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கியம்! நம்முடைய சீவியகாலத்தில் மெ சுதந்தரங்களையும் வரங்களையும் நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டு, அவ்வகளை நம்முடைய கண்மணியிலும் அருமையாய்க் காப்பாற்றிக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளோமன்றே? ஞானஸ்நானத்தின்போது நிறை

வேற்றப்படும் பரிசுத்தச் சடங்குகள் ஞானஸ்நானத்தினால் நமக்கருளப்படும் வரங்களின் அறிகுறியாயிருப்பதனால் அச்சடங்குகளின் அர்த்தம் யாதென்று விசாரிப்போமாக.

***

ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வருகிறவர்களை உடனே கோவிலுக்குள் பிரவேசிக்கவிடாமல், அவர்களைக் கோவிலின் வெளிமுற்றத்தில் நிற்கவைப்பது திருச்சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் மகா புராதனச் சடங்கு. திருச்சபை உண்டானகாலமுதற்கொண்டு இச்சடங்கு அனுசரிக்கப்பட்டுவருகின்றது. அக்காலத்தில் ஞானஸ்நானம் பெறப் பிரியப்பட்டு வந்தயூதர்களும் அஞ்ஞானிகளும் ஞானஸ்நானம் பெறும்வரையில் கோவிலுக்குள் பிரவேசிக்க இச்சடங்கின்படி உத்தரவளிக்கப்படவில்லை. இவர்கள் சில காலத்துக்கு கோவிலுக்கு வெளியே இருக்கக் கடமைப்பட்டிருந்தார்கள். இக்காலத்துக்குள் விசுவாச சத்தியங்கள் இவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு, இரட்சகரான சேசுக்கிறீஸ்து நாதர்பேரில் இவர்கள் திடனான விசுவாசங்கொள்ளப் போதனை செய்யப்படும். திருச்சபையின் இந்தப் புராதன சடங்கை யனுசரித்து, இக்காலத்திலும் ஞானஸ்நானத்துக்காகக் கொண்டுவரப்படும் குழந்தையானது அதன் ஞானத்தாய் தகப்பனோடுகோவில் வாசற்படியிலிருக்கவேண்டியதாகிறது. இதனால் ஞானஸ்நானம் பெறப்போகிற குழந்தை இன்னும் சர்வேசுரனுக்கும் திருச்சபைக்கும் பிள்ளையாகவில்லையென்றும், திருச்சபையின்வழியாய்க் கிறீஸ்துவர்களுக்குக் கிடைக்கும் நமதாண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய பேறுபலன்கள் அக்குழந்தைக்குக் கிடைக்கிறதில்லையென்றும், நமதாண்டவர் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறபடி "ஒருவன் ஜலத்தினாலும் இஸ்பிரீத்துசாந்துவினாலும் மறு பிறப்பு அடையாதிருந்தால் சர்வேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்றும் அறிந்துகொள்வோமாக.

***

ஞானஸ்நானங் கொடுக்கப்போகும் குருவானவர் சர்ப்பிலிஸ் (Surplice) எனும் குறுகிய வெள்ளைச் சட்டையையும் அதன் மேல் ஸ்ற்றோல் (Stole) எனும் நீளிய ஊதா பட்டையையும் அணிந்தவராய் கோவில் வாசற்படிக்கு வருகிறார். குருவானவர் அணிந்திருக்கும் நீளிய ஊதா பட்டானது, மனுக்குலத்துக்குப் பாவத்தினால் நேர்ந்த நிர்ப்பாக்கியத்துக்குரிய நிலைமையைச் சுட்டிக்காட்டுவதுடன், அப்பாவத்துக்கு ஞானஸ்நானம் பெறப்போகிற குழந்தை யடிமைப்பட்டிருக்கிறதென்றுங் காட்டுகிறது. பிறகு, குருவானவர் குழந்தையின் ஞானத்தாய் தந்தையரை நோக்கி, "குழந்தைக்கிடப்போகிற பெயர் என்ன?" என்று கேட்கும்போது அவர்கள் அப்பெயரைச்சொல்லுவார்கள். இவ்வாறாக பெயரை வினாவும் வழக்கமும் திருச்சபையின் ஓர் புராதன வழக்கமாமே. அக்காலத்தில் ஞானஸ்நானம் பெறப்போகிறவர்கள் விசுவாச சத்தியங்களைக் கற்றறிந்து கொண்டபிறகு, தங்களுடைய பெயரை எழுதி மேற்றிராணியாரிடத்தில் கொடுப்பார்கள். மேற்றிராணியார் ஒவ்வொருவருடையவும் அஞ்ஞானப்பெயரை மாற்றி, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அர்ச்சியசிஷ்டவருடைய பெயரைக் கொடுத்து, அதை டாப்பில் பதிவுசெய்வார். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் அர்ச்சியசிஷ்டவருடைய பெயரை யிடுவதானது அவர்கள் தங்கள் பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவரைக் கண்டுபாவித்து, அவரைப்போல் பரிசுத்தமாய்ச் சீவிக்கவும், அவருடைய பாதுகாவலில் தங்களை வைத்துக்கொள்ளவும் வேண்டுமென்று அவர்களுக்குக் கற்பிப்பதற்காகவேயாம். ஆம், மெய்யான கிறீஸ்துவன் எவனும் தன்னுடைய பெயர் கொண்ட அர்ச்சியசிஷ்டவருடைய புண்ய சீவியத்தையும் நல்லொழுக்கத்தையுந் தனக்கு மாதிரிகையாகக்கொண்டு சீவித்துப் பாக்கியமான மரணத்தையடைந்து, அவருடன் மோட்சத்தில் நித்திய பாக்கியத்தைச் சுகித்தனுபவிக்கப் பிரயாசப்படுவானென்பது திண்ணம்.

***

பிறகு, குருவானவர் "சர்வேசுரனுடைய திருச்சபையில் நீ என்ன கேட்கிறாய்?" என்று வினாவுவார். அதற்கு ஞானத்தாய் தகப்பன் குழந்தையின்பேரால் "விசுவாசம்" என்பார்கள். அஸ்திவாரமின்றி வீடு கட்டுவது வீண் என்பது

போல், பரிசுத்தத்தனத்தையும் இரட்சண்யத்தையுமடைய விசுவாசமே மூலமும் ஆதாரமுமென்பதாலும், "விசுவாசமில்லாமல் சர்வேசுரனுக்குப் பிரியப்படமுடியாது" (எபிரே. XI. 6.) என்பதாலும் ஞானஸ்நானம் பெறப்போகிறவர்களும் தங்களுக்கு விசுவாசம் வேண்டுமென்று கேட்கிறார்கள். மேலும் மெய்யான விசுவாசம் அதாவது, சேசுக்கிறீஸ்துநாதரால் படிப்பிக்கப்பட்ட விசுவாசம் மாறாமலும் வழுவாமலும், திருச்சபையில்மாத்திரம் உண்டென்பதால், திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற விசுவாசத்தையே இவர்களுங் கேட்கிறார்கள். இதன்பிறகு குருவானவர் கேட்கும் கேள்வியாவது: "விசுவாசத்தினால் உனக்கு என்ன கிடைக்கும்?" என்பதாம். இதற்கு மறுமொழியாக ஞானத்தாய் தகப்பன் "நித்திய சீவியம்" என்று சொல்ல, குருவானவர்: "நித்திய சீவியத்தையடைய நீ ஆசிப்பாயானால், சர்வேசுரனுடைய கற்பனைகளை யனுசரி; உன்னுடைய கர்த்தாவாகிய ஆண்டவரை உன் முழு இருயத்தோடும், உன் முழு ஆத்துமத்தோடும், உன் முழு மனதோடும், உன்னுடைய புறத்தியாரை உன்னைப்போலவும் சிநேகி" என்பார். இதனால் ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் எவ்வளவுக்கு உயிருள்ள விசுவாசத்தோடு சர்வேசுரனுடைய கற்பனைகளை யனுசரிக்கிறார்களோ, அவ்வளவுக்கு நித்திய சீவியத்தையடைய பாத்திரவான்களாவார்களென்று குருவானவர் வற்புறுத்திச் சொல்லுகிறாரென்று அறிந்துகொள்வோமாக.

***

அதன்பின் குருவானவர் பிள்ளையின் முகத்தில் மும்முறை சிலுவை அடையாளமாக ஊதிக்கொண்டு "அசுத்த அரூபியே இதனிடத்திலிருந்து அகன்றுபோ; தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவுக்கு இடங்கொடு" என்று சொல்வார். நாம எல்லோரும் பிறக்கும்போதே கோபத்தின் மக்களாயும், பசாசுக் கடிமைகளாயும் பிறக்கிறோம். ஆனபடியால், குருவானவரும் ஞானஸ்நானங் கொடுக்கும்போது மேற்சொன்ன வார்த்தைகளைச்சொல்லி, நம்மிடத்திலிருந்து பசாசை ஓட்டுகிறார். மும்முறை ஊதுவதினால் ஞானஸ்நானம்பெறப்போகிறவர்கள் பரமதிரித்துவத்தின்பேரால் புது சீவியத்தை யடைகிறார்களென்றும், சிலுவை அடையாளமாய் ஊதுவதினால் சேசுக்கிறீஸ்துநாதர் தம்முடைய பாடுகளினாலும் மரணத்தினாலும் நம்மை யிரட்சித்திருக்கிறாரென்றும் நாம் அறிந்துகொள்வோமாக.

(இன்னும் வரும்.)

BIBLE QUOTATION.
சுவிசேஷ வாக்கியம்.

(இந்துக்களால் மேற்கோளாக வழங்கப்படுகிறது.)



ரோலட் மசோதாவை அதாவது, இராஜத்துவேஷச் சட்டமசோதாவைச் சட்டமாக ஏற்படுத்தக்கூடாதென்று இராஜாங்கத்துடன் அநேகர் வாதிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதும், இதற்கு விரோதமான பிரேரணைகளும், தீர்மானங்களும், கண்டனக் கூட்டங்களும், கண்டனப் பேச்சுகளும் வெகு பலமாய் நடந்துவருகின்றனவென்பதும் நண்பர்களுக்குத் தெரிந்த விஷயங்கள். இந்த மசோதாவைச் சட்டமாக்க வேண்டுமென்று கவர்ண்மென்டார் அபிப்பிராயப்படுவதையும், அது நிறைவேறிவிடுமென்பதையும் அறிந்த அநேகர், அது சட்டமாய்விட்டாலும், அந்தச் சட்டத்துக்குக் கீழ்ப்படியக்கூடாது என்று தீர்மானித்துக்கொண்டு, தங்களோடு மற்றவர்களையும் சேர்த்துத் தங்கள் கட்சியைப் பலப்படுத்தக் கங்கணங்கட்டித் திரிகிறார்கள். இத்தகையோர்களுக்குத் தலைவர் ஸ்ரீமான் காந்தியென்பவர். இவரை மகாத்துமாவென்கிறார்கள். இவர் இந்தக் கட்சியைச் சேர்வோர்களுக்கு இதன் நிபந்தனைகளையெல்லாம் சொல்லி, இவைகளைத் தவறமாட்டோம், இவற்றின்படி நடப்போமென அவர்களிடத்தில் சத்திய வாக்கு வாங்கிக்கொள்ளுகிறாராம். இதுதான் "ஸத்தியாக்கிரகப் பிரதிக்ஞை" எனச் சொல்லப்பட்டுவருவது. எதிர்க்காமல்

எதிர்த்தல், சாத்வீக எதிர்ப்பு என்னப் படும் இந்தக் கட்சிப் போதனைகளை வட இந்தியாவெங்கும் போதித்துவந்த மிஸ் காந்தியென்பவர், சமீபத்தில் சென்னைக்கு வந்து சென்னைவாசிகளுக்குத் தமது கட்சியின் கோட்பாடுகளை உபதேசம்பண்ணி வந்தார். இவர் கட்சியைச்சேர்ந்த மிஸ்ஸஸ் சரோஜினி நாயுடு என்னும் மாதராளும் அவரோடுவந்து இதன் சம்பந்தமாய் பிரசங்கஞ்செய்துவந்தார். வெளியரங்கமாகவே இந்தக் கட்சியை அநுசரித்த "சுதேசமித்திரன்" பத்திராதிபர், சென்ற மாதம் 18-ந் தேதி வெளிவந்த சஞ்சிகையின் தலையங்கத்தில் ஸ்ரீமான் காந்தியையும் அவரது கட்சியையும்பற்றிப் புகழ்ச்சியாய்ப் பேசி, இந்தியரெல்லோரும் அவரது முன்மாதிரிகையைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்று சிபார்சு செய்கையில், நமது இரட்சகரெருமானுகிய சேசுநாதர் திருவாய்மலர்ந்தருளிய ஒரு வாக்கியத்தை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார். அது பின்வருமாறு :—

"கிறீஸ்துமத ஸ்தாபகராகிய சேசுநாதர் தமது சிஷ்ய ஜனங்களைப் பார்த்து, என்னைப் பின்பற்ற இஷ்டமுள்ளவர்கள் சிலுவையை எடுத்துக்கொண்டுவாருங்கள் என்று சொன்னதாக ஐதீகம் இருக்கிறது. அக்காலத்தில் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள்தான் சிலுவைமேல்வைத்துத் தங்களைக் கொல்லுகிறார்களோ அந்தச் சிலுவையைச் சுமந்துபோவது வழக்கம். ஆகையால் "என்னைப் பின்பற்றுவோர் சிலுவையை எடுத்துக்கொண்டுவாருங்கள்" என்று சேசுநாதர் சொன்னபொழுது "என்னைப் பின்பற்றுவதால் பிராணத்தியாகம் செய்யவும் நேரலாம். அதற்குச் சம்மதப்பட்டவர்கள் என்பின் வாருங்கள்" என்று சொன்னார். அதே மாதிரி இன்று மகாத்மா காந்தி சிலுவையைச் சுமந்து முன்னேபோகிறார்; தமைப் பின்பற்றுவோர் தலைக்கொரு சிலுவையைக் கையில் எடுத்துக்கொண்டுவரலாமென்று சொல்லுகிறார். சிலுவையில் அறைபட்டு பிராணவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தகாலத்திலும், அஞ்ஞானத்தால் தம்மைத் துன்பதுக்குள்ளாக்கின தமது சத்துருக்களைப் பகவான் மன்னிக்கும்படி கிறீஸ்துநாதர் பிரார்த்தனை செய்தார். ஸ்ரீமான் காந்தியைப் பின்பற்ற இஷ்டப்படுவோரும் அதே மனோபாவமுடையவர்களாயிருக்கவேண்டும்" என்பதே.

கிறீஸ்துவர்களல்லாதவர்களாகிய இவர்கள் தாங்கள் செய்வது சரியானகாரியமானாலும், சரியல்லாத காரியமானாலும், அவ்விஷயத்தில் நமது தெய்வ கர்த்தரின் திருவாக்கின்படி அநுஷ்டிக்கத் தேடுகையில், சத்திய வேதத்தில் பிறந்து, சத்திய வேதத்தில் வளர்ந்து, சத்திய ஞானதீட்சை பெற்று, சத்திய வேதக் கிறீஸ்துவர்கள் என்ற பேர்படைத்தவர்கள், தங்களை நித்திய நரகத்தினின்று மீட்டிரட்சித்த தெய்வ கர்த்தருடைய திருவாக்கியங்களை எவ்வளவு மதிக்கவேண்டும்,எவ்வளவு பூசிக்கவேண்டும்,எவ்வளவு சிந்திக்கவேண்டும், எவ்வளவு அநுஷ்டிக்கவேண்டுமென்பதைப்பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டுவதில்லையெனக் கருதுகிறோம்.

நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் திருவாய்மலர்ந்தருளிய வாக்கியங்கள் விலைமதிக்கப்படாதவை. நமது மனுஷீக புத்திக்குத்தக்கபடி அவைகளை விலைமதிக்கவேண்டுமானால், அவைகளின் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மாணிக்கமென மதிக்கலாம். இலௌகிக ஞானமடங்கிய சில வாக்கியங்கள் ஒவ்வொன்றுங் கோடி பெறும் என்று ஔவையார் சொல்லியிருக்கிறாள். ஆனால் தெய்வீக ஞானமடங்கிய சுவிசேஷ வாக்கியங்களில் ஒவ்வொரு வாக்கியமல்ல, அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் பல கோடி பெறும் என்று சொல்லத்தகும். ஆஸ்திகர் முதல் நாஸ்திகர்வரையில எம்மதத்தினரும், எத்திறத்தோரும, அவைகளை மிக்க ஸ்ரவணத்துடன ஏற்றிப் போற்றிப் புகழுகிறார்கள். சுவிசேஷ வாக்கியத்தைப் புகழ்ந்து பேசாதவர் ஒருவரில்லை. கலவியென்ற கண்ணுள்ளபோகள் ஒவ்வொருவரும் சுவிசேஷப் புத்தகத்தை ஓர் அரிய பொக்கஷத்தைப்போல காப்பாற்றிப் பூசித்துவருகிறார்கள். இந்துக்களில அநேகர் இரவில அதைத் தம் தலையணையருகே வைத்து நித்திரைசெய்து அதி காலையில் எழுந்தவுடன அதை முத்தமிட்டுப் பூசித்ததை நாம் கண்டிருக்கிறோம். இந்துக்கள இப்படிச் செய்கையில, நமது கிறீஸ்துவர்கள் அவ்விஷயமாய்ளப்படி நடந்துகொள்ளுகிறார்களென்று பார்க்கப்போனாலோ அது விசனத்துக்குரிய விதமாயிருக்கிறது.

கிறீஸ்துவர்களில் அநேகரிடத்தில் "சுவிசேஷம்" என்கிற புத்தகமே கிடையாது. சிற்சில வீடுகளில் அப்புத்தகமிருந்தாலும் பேருக்குமாத்திரமிருக்கும். அதைப் படிப்பாரில்லை, பூசிப்பாரில்லை, போற்றுவாரில்லை, புகழுவாரில்லை. சிற்சில கோவில்களில் ஞாயிற்றுக்கிழமைதோறும், பூசைநேரத்தில் சுவிசேஷத்தை நம் தாய்ப் பாஷையில் விசுவாசிகளுக்கு வாசித்துக் காட்டுகிற நல்லவழக்கமுண்டு. அதையுங் கூட சில கிறீஸ்துவர்கள் கவனித்துக் கேட்பதில்லை. நல்ல கிறீஸ்துவர்கள் சுவிசேஷத்தைத் தேடக்கிடையாத் திரவிய மென மதித்து, அதை அடிக்கடி பூச்சிய மாய்ப் படித்து ஞான நன்மைகளை யடைவதுமன்றி; மற்றவர்களுக்கும் படித்துக் காட்டுவார்கள். சுவிசேஷ வாக்கியங்களை அடிக்கடி வாசிப்பதினால் அதிக ஞான பலனுண்டு. "ஒரு மனிதன் உலக முழுவதையும் தனகு ஆதாயமாக்கிக்கொண்டாலும், அவனுடைய ஆத்துமம் அவனுக்குச் சேதமாகுமானால் என்ன பிரயோஜனம" என்ற ஒரு சுவிசேஷ வாக்கியமானது, உலகப்பெருமையில் மிறுமாப்புகொண்டிருந்த ஓர் இளவாலிபனை அர்ச்சியசிஷ்டவர்களில மிக்கப் பேர்பெற்ற அர்ச். சவேரியாராக்கிவிட்டதென்றால், அதன் பெருமையும் அருமையும் பிரயோஜனமும் பேசததரமோ? ஆதலினால் கிறீஸ்துவர்கள் அனைவரும் சுவிசேஷ வாக்கியங்களை வாசித்துச் சிந்தித்தல்வேண்டும். பாவத்தில் அதிக நாட்டமான சுபாவமுடையவர்களும், எந்நேரமும், எப்பக்கத்திலும், உலகம பசாசு சரீரமெனப்படும் மூச்சத்துருக்களுடன் போராடவேண்டியவர்களுமாகிய நமக்கு ஞானச் சுறுக்கு அவசியம. சுவிசேஷம், கிறீஸ்துநாதர் அநுசாரம், நன்றாய் நினை, அநித்ய நித்ய வித்தியாசம் முதலிய புத்தகங்களை வாசித்தலவேண்டும. இதை வாசிக்கும் நமது நண்பர்களும் சுவிசேஷத்தை அடிக்கடி வாசிக்கும வழக்கமில்லாதவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் இனியாகிலும் அவ்வழக்கத்தைக் கைக்கொள்வார்களெனக் கோருகிறோம.

சுவிசேஷப் புத்தகத்தைப் படிக்கக் கூடாதென்று கத்தோலிக்குக் குருக்கள் தங்கள் கிறீஸ்துவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்களென்று சில பதிதர் தப்பறையாய்ச் சொல்லுவார்கள். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் சுவிசேஷத்தைப் படிக்கக்கூடாதென்று ஒருகாலுங் கட்டளை பிறப்பித்ததில்லை. அதற்கு மாறாக அதை அவர்கள் அடிக்கடி வாசிக்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுவருகிறார்கள். சுவிசேஷத்தைப் பக்தியுடன் வாசிக்கும் ஒவ்வொரு விசைக்கும் 300-நாட் பலன் அர்ச். பாப்பானவர் கட்டளையிட்டிருக்கிறார். இதினால், சுவிசேஷத்தைக் கிறீஸ்துவர்கள் அடிக்கடி படிக்கவேண்டுமென்று நமது பரிசுத்த பிதா விரும்புகிறார் என்பது வெளிப்படை. ஆகையினால், கண்பர்களே, சுவிசேஷத்தைத் திறந்து,இரண்டொரு வாக்கியத்தையாகிலும் வாசியாமல் ஒரு நாளைப் போக்காதீர்கள். "ஓதாமல் ஒரு நாளு மிருக்கவேண்டாம்" என்று உலகநீதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால நாமோ, "சுவிசேஷத்தை ஓதாமல் ஒரு நாளு மிருக்கவேண்டாம்" என்று உங்களுக்குச் சொல்லுகிறோம்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக."

வணங்குவாய் ஜெகஜோதி ஒருவனுகி
மாலிலத்தை யொரு கொடியில வுத்தே
[மண்ணிற்
குணமான மனிதரையும் படைத்தபின்பு
குவலயத்திற் ரூனுதித்து குருவாய்வந்து
சனமான சமூசார மொன்றிலலாமற்
சங்கியாசிபோலிருந்து தவத்தைக் காட்டி
யண்பான சிததாகளை யிருத்திப்போட்டு
அகண்டதலம சென்றவரை யண்டுவாயே.

அரிபாத மரிச்சைசெய்யுஞ் சித்தரெல்லா
மாலசமூறை தானடக்கி யனபதாகும்
பொறியகத்தை தானடக்கிப்
[பொசிப்பொகெக்கிப்
பூரணத்தின் ஞானமதைப பிரசவித்துச்
சரியாக வாத்துமத்தின சுட்டைத் தீர்க்கும
சற்குருவைத் தேடிப்போய்ச் சடகு செய்து
அரிபாதம் காண்பிப்பார் சித்தருண்டு
அம்புவியில அவர்களை நீ தேடுவாயே.

—(அகஸ்தியர் ஞானம் 30.)

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

3-ம் அதிகாரம்.

அதுஸ்தீன் என்பவரின் பாலியபழம்
அவருடைய ஆசாபாசங்களின் தோற்றமும்
அவைகளின் காரணங்களும் வளர்ச்சியும் உச்
சமும்—அர்ச். மோனிக்கம்மாளுக்கு
ஆறுதல் அளிக்கவும் அர்ச். அதுஸ்தீனுக்குத்
தாபரமாயிருக்கவும்—பத்தீஸ்மியூஸ்
அஞ்ஞானத்தை வெறுத்து
திருச்சபையோடு
ஐக்கியமடைகிறார்.
(கர்த்தர் அவதாரம் 368—370.)
(முன் தொடர்ச்சி.)

வெகுகாலம்வரைக்கும் தேவ தயவின் குரலொலியை அசட்டைசெய்து வந்தான். கிறீஸ்துவேத போதனைக்குத் தான் ஒரு போதும் இணங்கப்போகிறதில்லையென்று தனக்குள் பிரதிக்கினை செய்துகொண்டான். இப்படியே அசட்டைத்தனத்தில் அநேக காட்சிகளைக் கழித்தான். ஒவ்வொரு சமயங்களில், அவனுடைய மனசாட்சியானது அவனுடைய தாறுமாறான நடத்தையைப்பற்றி யவனைக் கண்டிக்கும். அப்போது அவன் "இதற்குள் என்ன அவசரம், மனந்திரும்ப இன்னுங் காலமுண்டே" என்று சொல்லிக்கொள்வான். இச்சிந்தனைகள் அவனுடைய இருதயத்தை உபாதித்துவந்ததினால், தான நடக்கும் துன்மார்க்கத்திலேயே நிலைப்பதோ, அல்லது அத்துன்மார்க்கத்தை விட்டுவிட்டு சன்மார்க்கத்தை நாடுவதோவென்று தெரியாமல் தத்தளிப்பான். இப்படி தனக்குள்ளிருக்கும் சந்தேகங்களையும், தத்தளிப்பையும் அவகம்பிக்கையையும் விசேஷமாய்த் தன் மனைவிக்குக் காட்டாமல் மறைத்துவைப்பான். அர்ச். மோனிக்கம்மாளோவெனில், அவனுடைய மனசாட்சியின் நிர்ப்பாக்கிய நிலைமையைக் கண்டுணர்ந்து, அவனோடு அதிகமாய்ப் பேசமாட்டான். ஆனால் அவனுக்காக அதிகமாய் ஜெபிப்பாள். கடைசியாய் சத்தியம் அவனை வென்றது. தான் தன் அஞ்ஞான மார்க்கத்தைவிட்டு மெஞ்ஞான மார்க்கத்தைக் கைப்பற்றத் தீர்மானித்ததாக அர்ச். மோனிக்கம்மாளுக்குத் தெரிவித்தான்.

இச்சுபசெய்தியைக் கேட்டதும் அர்ச். மோனிக்கம்மாள் இருதயம் கொண்டசந்தோஷப்பெருக்கம் இத்தன்மையதென்று நிதானிக்கயாரால் கூடும்? பதினாறு வயதுள்ள அர்ச். அகுஸ்தீனுடைய குணச்சார்பை ஜாக்கிரதையுடன கவனித்து, அவரை நேரான பாதையில் நடத்தவேண்டியிருந்த அச்சமயத்தில், தனது காவலாளி கிறீஸ்துவராய்விட்டாரென்று நினைப்பது அவளுக்கு எப்பேர்ப்பட்ட பாக்கியம்! அவள் தனதாத்துமத்தின் சத்துவமெல்லாத்தையுங் கூட்டிக் கடவுளுக்கு கண்ணியமிக்க ஸ்தோத்திரம் செய்து, தனது பத்தாகொண்ட பிரதிக்கினையை உறுதிப்படுத்தும்படி அழுகையோடு மன்றாடினாள். மேலும் ஞானஸ்நானம் பெறத் தயாராயிருப்பவர்களுடைய பட்டியில் அவருடைய நாமதேயம் சீக்கிரத்தில் எழுதப்படவேண்டுமென்று உருக்கத்துடன் வேண்டிவந்தாள். பூர்வத்தில் அஞ்ஞானம் பெருகியிருந்தகாலத்தில் புதிதி விவரமுள்ள அஞ்ஞானிகள், சத்திய வேதத்தில் சேரப் பிரியங்கொண்டால், அவர்களைக் கோவில் தலைவாசலில் நிறுத்தி, ஞானஸ்நானம் பெற மனசுள்ளவர்களுடைய கூட்டத்தில் தாங்களே சுயேச்சையாய்ச் சேர்ந்துகொள்ளுகிறார்களோவென்று பார்த்து, அப்படிச் சேர்ந்துகொண்டபிறகு அவர்களுக்குச் சத்திய வேத போதனைகளையும் ஒழுங்கு கிரமங்களையும் தெரிவித்து, பின்னிட்டு ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கம்.

பத்தீஸ்மியூஸ் கிறீஸ்து வேதத்தில் சேரத் தீர்மானித்ததும், தானே கோவிலுக்குப்போய் அஞ்ஞான மதாசார வகைகள் தப்பானவைகளென்று பிரசித்தமாய்க் கூறிப் பிறகு சத்திய வேதத்தைக் கைப்பற்றினான். இது சுமார் கர்த்தர் அவதரித்த 370-ம் வருஷத்தில் தபசுகாலத் துவக்கத்தில் நடந்தது. மோனிக்கம்மாளும் அர்ச். அகுஸ்தீனும் அவனோடுகூடக் கோவிலுக்குச் சென்றார்கள். மோனிக்கம்மாள் இந்த மகத்துவமுள்ள ஞானஸ்நானத் திருச்சடங்குகளைக் கண்டதும் ஆஹா என்ன பாக்கியம்! தான் பட்ட வருத்தத்திறகெல்லாம், அழுத அழுகைக்கெல்லாம், புரிந்த ஜெப வேண்டுதலுக்கெல்லாம், இதோ

பிரதிபலனுண்டாயிற்றே யென்று புளகாங்கிதமாய் ஆனந்தபாஷ்பம் சொரிந்தாள்.

பத்தீஸ்மியூஸ் பீடத்தின்முன் போனதும், தனது பழய இறுமாப்பை விட்டுவிட்டு முழங்கால்படியிட்டுத் தலைகுனிந்தான். மேற்றிராணியாண்டவர் தமது கரங்களை அவன்மேல் வைத்துக் கடவுள் அவனை அர்ச்சித்துத் தமது மக்களுள் ஒருவனாய்ச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுதல் புரிந்தார். மேலும் இரட்சகர் சிலுவையில் அவமானத்துடன் அடைந்தமரணத்தை அவன் வெகுமானப்படுத்திக் திருச்சபையில் சேரும்படியாக, அவனுடைய நெற்றியின்மேல் சிலுவை யடையாளத்தை வரைந்தார். இனி அவன் தன் இருதயத்தை மாசின்றிக் காப்பாற்றுதல் அவசியம் என்பதற்கடையாளமாகக் கொஞ்சம் மந்திரித்த உப்பை அவன் வாயில் தடவினார். பத்தீஸ்மியூஸ். இவ்வாறுகத் தன் விசுவாசத்தைக் காட்டியபிறகு, உடனே வேத சத்தியங்களையாவையும் தீர்க்கற்று, அடுத்த பாஸ்குத் திருநாட்காலத்தில் ஞானஸ்நானம் பெற்றிருப்பானேயானால், அர்ச். மோனிக்கம்மாளுக்குண்டாயிருக்கும் சந்தோஷமும் பாக்கியமும் இவ்வளவிவ்வளவென்று சொல்லமுடியாது.

ஆனால், இப்படி உடனே ஞானஸ்நானம் பெறப் பத்தீஸ்மியூஸ் முஸ்திப்பாயிருந்ததில்லை. கிறீஸ்துவர்கள் ஆலோமென்று பெயர்கொடுத்தவர்கள் அக்காலத்தில் அநேகரிருந்தார்கள். அவர்கள் அக்கியானிகளுமல்ல கிறீஸ்துவர்களுமல்ல. கிறீஸ்துவர்களாகத் தங்களுக்கு மனதுண்டென்று பெயர்கொடுத்திருந்தபோதிலும், ஞானஸ்நானம் பெறுமல் காள் போக்கிக் கொண்டுவந்தார்கள். ஞானஸ்நானம் பெற்று ஞானப்பிறப்படையாதிருக்கும் மூடத்தனத்தையும், அதனால் ஆத்துமத்திற்குண்டாகும் அபாயத்தையும், குருமார்கள் எவ்வளவோ வாக்குச் சாதுரியத்துடன் எடுத்துக்காட்டிப் பிரசங்கஞ் செய்தும், பயனில்லாமற்போயிற்று. பிரதி வருஷத்திலும் ஆகமனகாலம் வரும்போதும், பாஸ்குக்காலம் வரும்போதும் குருக்கள் இடி முழக்கம்போல் கூவி, "இதோ விசேஷமான காலம் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தம் செய்து கிறீஸ்துவப்பெயரைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று எவ்வளவோ பிரசங்கித்தும் அற்பமேனும் பிரயோசனமில்லாமற்போயிற்று. அவர்களுடைய அசட்டைத்தனத்தைப் போக்கடிப்பது முழுதும் அசாத்தியமான காரியமாய்த் தோன்றினது. கிறீஸ்துவப்பெயரைத் தரித்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் கிறீஸ்துவனுக்குரிய கடமைகளை அநுசரிக்கமாட்டார்கள். பாவசங்கீர்த்தனம் செய்யவும், பாஸ்குக் காலத்திலாவது நன்மை வாங்கவும், திருச்சபையின் எந்தக் கடமைகளையும் அநுசரிக்கவும். அவர்களுக்குக் கடன் இருந்ததில்லை. எனென்றால் அவர்கள் இன்னும் ஞானஸ்நானம் பெற்றதில்லை. ஏதாவது தொரு பாவத்தைச் செய்யும்போது அவர்களுடைய மனசாட்சி அவர்களைக் கண்டித்தால், "பாவம் செய்தால் என்ன! இன்னம் ஞானஸ்நானம் பெறவில்லையே!" என்று தங்கள் மனசாட்சியைச் சமாதானப்படுத்திக்கொள்ளுவார்கள். மரணசமயத்தில் ஞானஸ்நானம் பெற்று ஆத்தும சுத்திகரமடைந்து இரட்சண்யம் பெறுவது போதும் என்று நினைத்துக்கொள்வார்கள். ஆனால் அந்திய வேளையில் அப்படிப்பட்ட பாக்கியம் கிடைக்குமோ இல்லையோவென்பது சந்தேகம். ஆகலால் காலம் முழுவதும் பாவத்தில் புரண்டிருண்டு, கடைசியாய் மோட்சத்தை யிழந்து, நரகத்திற்காளாய்ப் போகும்படியான நிர்ப்பாக்கியத்திற்கு ஏதுவுள்ளவர்களாயிருந்தார்கள். எல்விராவில் கூடிய திருச்சங்கத்தின் 42-ம் சட்டப்படி, சாதாரணமாய் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தம்செய்ய இரண்டு வருஷகாலம் குறித்திருந்தது. சில சமயங்களில் இதைவிட அதிகமான காலம் கொடுத்திருந்ததுமுண்டு. ஆனால் நான்காம் யுகத்தில் இக்காலத்தைக் குறைக்கச் திருச்சபை பிரயாசைப்பட்டது. ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு விதமான ஆபத்து, ஒவ்வொரு விதமான சோதனை, ஒவ்வொரு விதமான கஷ்டம் உண்டன்றோ? அப்படியே அக்காலத்தில் இருந்த ஆபத்து இது. இவ்வாபத்திற்கு அநேகர் இரையாய்ப்போனார்கள்.

பத்தீஸ்மியூஸும், ஆப்பிரிக்காவில் அக்காலத்தில் கடைபெற்றுவந்த துராசாரத்தின்படியும், மற்றநேகரைப்போலவும், உடனே ஞானஸ்நானம் பெறேனென்று மூர்க்கமாயிருந்தான். அவன் உடனே ஞானஸ்நானம்பெற அவன் மனதைத் திருப்பவேண்டுமென்று அர்ச். மோனிக்கம்மாள் கர்த்தரைப் பார்த்துக் கண்ணீர் சிந்தி வெகுவாய் ஜெபம் செய்யவேண்டியிருந்தது. இச்செபம் சித்தியடையக் காலமும் வேண்டியிருந்தது. கடைசியாய்ப் பத்தீஸ்மியூஸ் கடும் வியாதியில் விழுந்தான். ஆகவே, மரண ஆபத்தாயி

ருந்த அச்சமயத்தில், பயங்கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக் கர்த்தரோடு சமாதானமானான். இதனால் நமதர்ச்சியசிஷ்டவளுக்குண்டான சந்தோஷம் அளவிறந்தது. பத்ரீஸியூஸ் இன்னம் அஞ்ஞானியல்ல. அவன் மெய்யான கடவுளைத் தொழுவான். கிறீஸ்துநாதரை இரட்சகர் என்று நம்பினான். அவன் தன்னோடு ஒரே வரிசையாய் கோவில் கிராதியில் முழங்காலிலுட்கார்ந்து நன்மை வாங்குவதைப் பார்க்கும்படியான பாக்கியம் மோனிக்கம்மாளுக்கில்லாமற்போனபோதிலும் "ஆலயந்தொழுவது சாலவு நன்று" என்றபடி தானும் அவனும் இருவரும் ஏகமாய்க் கோவிலுக்குப்போய், காலைப் பூசைகண்டு பிரசங்கங் கேட்டு வருவார்கள். இப்படியாக மோனிக்கம்மாள் விவாகம் செய்து பதினெட்டு வருஷத்திற்குப்பிறகு, தங்களுடைய பொது நன்மைக்கு மெத்தவும் அவசியமான மதப்பொருத்தம் என்னும் பாக்கியத்தை அடையலானாள். பூர்வீகத்தில் நான்காம் யுகத்தில் நடந்தேறிவந்த இக்காரியாதிகளை நாம் வாசிக்கும்போது, அவைகட்கு நிகராக கேடுகெட்ட இக்காலத்திலும் அநுதினமும் நமது கண்முன் பிரத்தியட்சமாய் நடந்து வரும் காரியங்கள் நமது ஞாபகத்தில் வருகின்றன. குணப்பொருத்தம் மதப்பொருத்தம் முதலிய அத்தியாவசமான பொருத்தங்களைக் கவனியாமல் ஏற்படும் சம்பந்தங்களினால், அற்பமும் பாக்கியமும் சமாதானமுமின்றிச் சீர்குலைந்த குடும்பங்கள் மறுபடியும் சீருக்குவந்ததைப் பாராதவர் யார்? பத்தியிலும் புத்தியிலும் சிறந்த வாலிபப்பெண்களை, அயோக்கியமான வாலிபர்களுக்குக் கலியாணம் செய்துவைப்பார்கள். அவ்வாலிபர்கள் விசுவாசந்தவறி, ஒழுக்கங்கெட்டு, மறு சீவியத்திற்கடுத்த எக்காரியங்களையும் சட்டைசெய்யாமல், வேதத்தையும் குருக்களையும் நிந்தித்துவருவார்கள். அப்படி நிந்திப்பது, தாங்கள் புத்திமான்களென்பதற் கடையாளமென்பதாகவும் நினைப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்குக் கொஞ்சம் படிப்பும், ஒரு சிறு உத்தியோகமும் கையில் கொஞ்சம் காசும் இருந்தால்போதும். பெண்களைப் பெற்ற தாய் தந்தையருக்குத் திருப்தியாச்சுது. ஐயோ "அவர்களிடம் வேத ஒழுக்கமில்லையே, குடியுண்டே, விபசாரமுண்டே" என்பதைப்பற்றிச் சிறிதேனும் சிந்தியாமல், தங்கள் வயிற்றில் பிறந்த நல்ல பெண்களை, கழுத்தில் யந்திரக்கல்லைக் கட்டிப் பாழுங் கிணற்றில் உருட்டுவதைப்போல், அப்படிப்பட்டவர்களுக்குக் கட்டிக்கொடுத்துவிடுவார்கள். பத்து வருஷம் கழிகின்றன; அந்தத் தூர்த்த வாலிபன், சர்வேஸ்வரனுடைய ஏற்பாடுகளையும் அவருடைய திருச்சபையையும் அதன் ஊழியர்களையும் ஒரே வார்த்தையில் மதசம்பந்தமான அனைத்தையும் அவமதித்துவந்தவன், இதோ மனந்திரும்பித் தன் சிருஷ்டிகரைப் பார்த்துச் செபம் செய்து வேத ஒழுக்கங்களை யநுசரிக்கத் துவக்குகிறான்.

"காலஞ் செய்வது கோலஞ் செய்யாதென்பதுபோல" ஓ! நமது காலத்தின் காலா கோலமே! நமது யுகத்தின் தாறுமாறான நடத்தையே! அவ்வளவு சோதிப்பிரபையுடன் வீசும் தேவ வெளிச்சத்தைக் கண்திறந்து பார்க்க ஒரு கிறீஸ்துவனுக்கு அத்தனைகாலம் வேண்டியதோ? ஆனால் இக்காலத்தில் இது ஒரு அநுகூலம். அந்த நெறிகெட்ட, வேத வொழுக்கந் தவறிய வாலிபனுக்குக் காவலான சம்மனசுக்கொப்பாக விளங்கும்படி, ஒரு வாலிபப் புண்ணிய ஸ்திரீயைக் கலியாணத்தினால் மனைவியாகக் கொடுக்கும்படியான சக்தியைத் திருச்சபை நமக்கு அளித்திருக்கிறதே. அப்படிப்பட்ட விவாக அந்தஸ்தில், அப்புண்ய ஸ்திரீதனக்குண்டான கடமையை மறக்கத் தகாது. அவளிடம் பொறுமையும், பிரமாணிக்கமும், ஜாக்கிரதையும், நேசமும், மதுரம்பொருந்திய மௌனமும், ஜெப அப்பியாசமும் இருந்தால், ஒரு சம்மனசுக்குரிய சக்தி தன்னிடமுண்டென்றறியக்கடவாளாக. ஓர் சிறந்த சாஸ்திரி சொல்வது: "கிறீஸ்துவப் பெண்பிள்ளைகளின் கடமைகள் காவலான சம்மனசுகளுக் கடுத்தவை. அச்சம்மனசுக்களைப் போலவே அவர்களும், மனுஷர் கண்களுக்கு மறைந்திருந்து உலகத்தை நன்னெறியில் நடத்தக்கூடும்."

அலகையது தேவனுக்குச் சரியாய் நின்று
ஆங்காரந் தானெடுத்து அகந்தையாலே
நிலைகுலைந்து பாதாளக் குழிக்குள் நின்று
நித்தியமும் மானிடரை மோசம் போக்கிப்
பலகலையு முணரறிவை மயக்கித் தங்கள்
பாதாள வீடதிலே பதுங்கச்செய்யும்
நிலையதுவை யறியாமற் போறார் போறார்
நினைத்துப்பார் புலத்தியனே
[நிசமாய்த்தானே.

—(அகஸ்தியர் ஞானம் 30.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2.—அதிகாரம்; வசனம்—13–20.

(முன் தொடர்ச்சி.)

கிறீஸ்துநாதரின் ஜனனத்தை தேவதூதன் இடையருக்கு அறிவித்தார். ஒரு சம்மனசு அறிவித்த செய்தியின் உண்மை திரளான சம்மனசுக்களால் உறுதிப்படுத்தப்படுகிறது. முதல் தோன்றின தேவதூதனைச் சம்மனசுக்களின் திரளான கூட்டம் சேர்ந்து கொள்கிறது. பிறந்த பாலனின் தேவ மகத்துவத்தையும் மகிமையையும் ஒப்பற்ற சோதி சோபனமுள்ள தேவதூதர்களின் சேனை ஆனந்த அக்களிப்பாய்ப் பாடிக் கொண்டாடுகிறது.

13-ம் வசனம்.—"என்றவுடனே வானுலக சேனையின் கூட்டம் அந்தத் தேவதூதனோடு சேர்ந்து, சர்வேசுரனைத் துதித்து."

14-ம் வசனம்.—"உன்னத ஸ்தலங்களிலே சர்வேசுரனுக்கு மகிமைப்பிரதாபமும், பூலோகத்திலே நல்ல மனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது என்றார்கள்."

மனுவுருவெடுத்த கிறீஸ்துநாதர் சம்மனசுக்களின் கர்த்தரும் அரசருமாயிருக்கிறார் என்று விளங்கும்பொருட்டு, சம்மனசுக்கள் சேனாசமுத்திரமாய்த் தோன்றி அவரை வணங்கி வாழ்த்திக் கொண்டாடுவது சர்வ நியாயமே. திரள் திரளாய்க் காணப்படும் சம்மனசுக்களின் கூட்டத்தை வானுலக சேனையென்றும், பரம சேனையென்றும் வேதாகம புஸ்தகங்கள் அழைக்கின்றன. ஏனெனில், சம்மனசுக்கள் சர்வேசுரனுடைய சிம்மாசனத்திற்கு முன் நின்றுகொண்டு தேவ மகத்துவத்தை வணங்கிச் சேவிக்கிறார்கள்; சேனையைப் போல் அணியணியாய் வகுக்கப்பட்டிருக்கிறார்கள். (3-ம் அரசராகமம். 22-ம் அதிகாரம். 19-ம் வசனம். தாவீது ராசா சங்கீதம் 148. 3-ம் வசனம்.)

முக்கியமாய்ச் சேசுநாதர் பிறந்த போது சம்மனசுக்களை வானுலகச் சேனையென்றழைப்பது மெத்தப் பொருத்தமுள்ளதாகிறது. ஏனெனில், அவர் பசாசுடன் போர்புரிந்து, அதனரசை யழித்துத் தேவ இராச்சியத்தை ஸ்தாபிக்க இப்பூலோகத்தில் தோன்றினார். இத்திவ்ய அரசனை வணங்கிச் சேவிக்கவும், அவருடைய மகிமைப்பிரதாபத்தைக் காண்பிக்கவும், அவருடைய கட்டளைகளை நிறைவேற்றவும் சம்மனசுக்கள் ஏற்பட்டிருக்கிறபடியால், அவர்களை வானுலக சேனையென்றும், பரம சேனையென்றும அழைப்பது உசிதமாமே. சர்வேசுரன் உலகத்தைச் சிருஷ்டிக்கும்போது விடியற்காலத்துத் தாரகைகள் (அதாவது சம்மனசுக்கள்) ஏகோபித்து அவரை ஸ்துதித்துப் பாடினார்கள் என்றும், தேவ புத்திரர் எல்லோரும் அக்களித்தார்கள் என்றும் வேத வாக்கியம் கூறுகின்றது. (யோபாகமம் 38-ம் அதிகாரம். 7-ம் வசனம்.)

தேவ குமாரன் மனுஷாவதாரம் எடுத்துப் பூலோகத்தில் தோன்றின பரம இரகசியமோ உலக சிருஷ்டிப்பைவிட நனிமிகச் சிறந்ததாமே. அத்திவ்ய செயலில் சர்வேசுரனுடைய அளவில்லாத ஞானமும் வல்லபமும் கிருபையும் அற்புதமாய்ச் சொலித்துத் துலங்குகின்றபடியால், இத்தருணத்தில் தேவதூதர்களின் சேனை சர்வேசுரனுடைய தோத்திரங்களைப் பாடிக் கொண்டாடி அகமகிழ்வது உசிதமாம்.

அவர்கள் பாடின "உன்னத ஸ்தலங்களில் சர்வேசுரனுக்கு மகிமைப்பிரதாபமும், பூலோகத்தில் நல்ல மனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானமும்" என்கிற ஸ்துத்திய மொழிகள் இரு விஷயங்களைக் குறிப்பிடுகின்றன.

முதலாவது, கிறீஸ்துநாதரின் மனுஷாவதாரம் சர்வேசுரனுக்கு அளவில்லாத மெய்யான தோத்திரத்தை விளைக்கின்றது. ஏனெனில், தேவ மனுஷனாகிய சேசுவினிருதயத்தினின்று புறப்படும் ஒவ்வொரு பற்றுதலும், ஆசையும், நேசமும், அவருடைய கீழ்ப்படிதல், ஆராதனை, தாழ்ச்சிமுதலிய ஒவ்வொரு புண்ணிய

கிருத்தியமும் தேவ ஆளுக்குரியதாகையால், இதெல்லாம் அளவில்லாப் பேறு பலனுடையதும், சர்வேசுரனுக்கு அளவில்லாத தோத்திரமுண்டாக்கக்கூடியதுமாயிருக்கின்றது.

இரண்டாவது, உலக இரட்சகர் பிறந்ததினால் மனுக்குலத்துக்குப் பாவத்தால் வந்த தேவ சாபமும் பகையும் ஒழிந்து, மனிதன் சர்வேசுரனோடு உறவாட வழி ஏற்பட்டதுமன்றி சகலமான நன்மைகளும் பொழியப்படுமென்ற நம்பிக்கையும் உண்டாயிற்று.

வேத வாக்கியத்தில் (pax) சமாதானம் என்கிறபதம் மெஸ்ஸியாஸ் அரசன் ஸ்தாபித்த தேவ இராச்சியத்திலுள்ள சகலமான இன்பசுக செல்வ பாக்கியத்தையும், நன்மைகளையும் குறிக்கும்சொல். ஆகவே மெஸ்ஸியாவின் பிறப்பினால் பரலோகத்துக்கும், பூலோகத்துக்கும், இம்மையிலும், மறுமையிலும், உண்டாகிற சகல பாக்கியங்களையும் நன்மைகளையும்பற்றிச் சம்மனசுக்கள் அத்திவ்பமான மகோற்சவ அர்த்தராத்திரியில் பேரானந்தமாய்ப் பாடி, சகல சிருஷ்டிகளும் அவர்களுடன் அக்களிக்கும்படியாகச் செய்தார்கள்.

Hominibus bonae voluntatis, (Beneplaciti divini), என்கிற லத்தீன் பதங்களை நல்ல மனதுள்ள மனுஷர்கள் என்று மொழிபெயர்ப்பது மூல பாஷையின் பதங்களின் அர்த்தத்துக்கு இசைந்ததாயில்லை. தேவ கடாட்சத்துக்குரிய மனிதர்கள் என்று அர்த்தம் கூறுவது சாலச்சிறந்ததாம்.

தேவ கடாட்சத்துக்குரிய மனிதர்களுக்கு அல்லது சர்வேசுரனுடைய தயவுள்ள சித்தத்தால் நேசிக்கப்பட்ட மனிதர்களுக்கு சமாதானம் அளிக்கப்படுகின்றதென்பது அவ்வசனத்தின் கருத்து.

தேவ கோபத்துக்குரியவர்களான மனுஷர்கள் கிறீஸ்துநாதரின் மனுஷாவதாரத்தினால் தேவ கருணைக்கும், நேசத்துக்கும்யோக்கியமுள்ளவர்களாகிறார்கள். தேவசாபத்துக்குட்பட்ட அவர்கள் தேவ இஷ்டப்பிரசாத புத்திரர்களாகிறார்கள். கிறீஸ்துநாதர் பிறந்தகாலத்தில் சர்வேசுரன் மனுக்குலத்தைக் கிருபாகடாட்சமாய் நோக்கி, அதின்மேல் சகலமான நன்மைகளையும் தேவாசீர்வாதங்களையும் பொழிய சித்தமானார் என்பதுதான் அவ்வசனத்தின் அர்த்தம்.

சர்வேசுரனுக்கு மகிமைப்பிரதாபமும் மனிதர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக என்று இனி வரப்போகிற நன்மைகளை நோக்கிச் சம்மனசுக்கள் ஆசீர் கூறுமல், அத்தேவதோத்திரமும் சமாதானமும், கிறீஸ்துநாதரின் மனுஷாவதாரத்தால் உண்டான நற்பலன்களாகக் கொண்டாடுகிறார்கள்.

வானுலக சேனையின் கூட்டம் தங்கள் கண்களுக்குமுன்னர் தரிசனமாயிருக்கும் வரையில் இடையர் அதனை ஆச்சரிய பிரமிப்புடன் கண்ணுற்றுக்கொண்டு அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தார்கள்.

ஆனால் 15-ம் வசனம்.—"தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப்போனவுடனே, இடையர்கள் ஒருவரொருவரை நோக்கி, நாம் பெத்லேம் மட்டும்போய் சம்பவித்ததும், ஆண்டவர் நமக்கு அறிவித்ததுமாகிய இந்தச் சங்கதியைப் பார்ப்போமாக என்று பேசிக்கொண்டு."

16-ம் வசனம்.—"தீவிரமாய்வந்து, மரியம்மாளையும், சூசையப்பரையும் முன்னிட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டார்கள்."

சம்மனசுக்களின் கூட்டம் மறைந்தும் இடையர்கள் சற்றேனும் தாமதிக்காமல் தீவிரமாய் பெத்லேமுக்குப்போனார்கள். அவர்கள் போகும்போது அந்த ராத்திரியில் அவர்கள் கண்டதும் கேட்டதுமான அதிசயத்துக்குரிய சங்கதிகளைப் பற்றி வீர்த்தையாடிக்கொண்டும், மனுக்குலத்தின் இரட்சகரின் பிறப்பைக்கண்டுகளிக்கச் சர்வேசுரன் அவர்களை அழைத்ததானது எவ்வளவு பெரிய உபகாரமென்று சிந்தித்துக்கொண்டும் பெத்லேம் நகரையடைந்து, அங்கு சம்மனசானவர் அவர்களுக்கு அறிவித்தபிரகாரம் கன்னிமரியாயையும், சூசைமுனியையும் முன்னிட்டியில் கிடத்தியிருந்த தேவபாலனையும் தரிசித்தார்கள். அத்தருணத்தில் அவர்களுடைய இருதயங்களில் பொங்கி

எழும்பின அத்தியந்த சந்தோஷத்தையும் தேவபாலகன்மட்டில் அவர்கள் காண்பித்த உருக்கமான அன்பின் பற்றுதல்களையும், கன்னிமாதாவை அவர்கள் கண்டு மகிழ்ந்து அவளை வாழ்த்திக் கொண்டாடின விதத்தையும் ஒருவாறு தியானித்து உணரலாமொழிய வார்த்தைகளால் செப்பத்தரமன்று. திவ்ய பாலகனின் எளிமையின் நிமித்தமாகவும், அவ்விடத்தின் வறுமையின் நிமித்தமாகவும் சற்றுகிலும் பின்வாங்காமல், அவரைத் தங்கள் தேவனென்றும், இராயனென்றும், இரட்சகரென்றும் விசுவசித்து வணங்கி நமஸ்கரித்தார்கள்.

17-ம் வசனம்.—"கண்டு, அந்தக் குழந்தையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியை அறிந்துகொண்டார்கள்."

மூலபாஷையில் "அந்தக் குழந்தையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரஸ்தாபித்தார்கள்" என்று கூறியிருக்கிறது. இடையர் பெத்லேம் குகையில் கன்னிமாதாவையும், சூசைமுனியையும், திவ்ய பாலகனையும் கண்ணுரக்கண்டபின், அந்தப் பாலகனைப் பற்றித் தேவதூதனும், கன்னிமாதாவும் அவர்களுக்கு ஏதேது அறிவிக்கப்பட்டதோ, அவையெல்லாம் சமஸ்தருக்கும் பிரஸ்தாபித்து, அவர்களை இரட்சண்ணியத்தின் சுபசெய்தியால் மனங்களிக்கச்செய்தார்களென்பதே இவ்வசனத்தின் கருத்தாம்.

18-ம் வசனம்.—"அன்றியும் கேட்டவர்களெல்லோரும் இடையர்களால் தங்களுக்குச் சொல்லப்பட்டவைகளின்பேரிலும் ஆச்சரியப்பட்டார்கள்."

இடையர் வெளியிட்ட சங்கதியைக் கேட்ட ஜனங்கள் எல்லோரும் அதன் விஷயமாய் ஆச்சரியப்பட்டாலும், சிலர் விசுவசித்து அதனை ஏற்றுக்கொண்டதினால் இரட்சண்ணிய நன்மைகளை அடைவதற்குத் தங்களை அருகராக்கினார்கள். இவர்கள்தான் பக்தியும் நெறியும் தேவ பயமும் உள்ள இஸ்ராயேலர். மற்றநேகர் விசுவசிக்காமல் மெஸ்ஸியாவைப்பற்றித் தாங்கள்கொண்ட தப்பான அபிப்பிராயத்தில் சலஞ்சாதித்து, அவர் கொண்டுவந்த இரட்சண்ணிய பலன்களுக்குத் தங்களை அபாத்திரராக்கினார்கள்.

கன்னிமாதா, மெஸ்ஸியாவைப்பற்றி முந்தின திருஷ்டிகர் செப்பின மொழிகளையும், தமக்கும், சூசைமுனிக்கும், எலிசபெத்துக்கும் தேவதூதன் சொன்ன வாக்கியங்களையும், இடையர்கூறிய சங்கதிகளையும் ஒன்றோடொன்று ஒத்துப்பார்த்து பிரியவாஞ்சையாய் தமதிருதயத்தில் தியானித்துவந்தாள். இத்தியானத்தினால் ஏற்கெனவே அவள்கொண்ட விசுவாசம் பலவேறு புது அத்தாட்சிகளால் பலப்பட்டு ஓங்கி வளர்ந்தது.

19-ம் வசனம்—"மரியம்மாள் இந்த வாக்கியங்களையெல்லாம் தன் இருதயத்தில் வைத்துச் சிந்தித்துக்கொண்டுவருவாள்." இந்த வாக்கியங்கள் எவை என்றால், கிறீஸ்துநாதரின் ஜனனத்தின்போது சொல்லப்பட்ட வார்த்தைகளும், நடந்தேறிய வர்த்தமானங்களும் என்றறியவும். கன்னிமாதா இவ்வர்த்தமானங்களையெல்லாம் தமதிருதயத்தில் அடக்கிக்கொண்டு, அவைகளின் அற்புதமான பொருத்தத்தைக் கண்டுணர்ந்து, தேவ மகத்துவத்தை ஸ்துதித்துப் பேரின்பம் சுகித்துவந்தாள்.

கன்னிமாதா அல்லும்பகலும் இடைவிடாமல் இவ்வதிசயமான விசேஷங்களைத் தியானித்துத் தமது ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்ததினால்தான் பிற்காலத்தில் இவைகளை விபரமாய் அப்போஸ்தலர்களுக்கு அறிவிக்கக்கூடுமாயிற்று. கிறீஸ்துநாதரின் பாலியத்தின் வர்த்தமானங்களை இவ்வளவு நுணுநுணுக்கமாய்ச் சுவிசேஷகரான அர்ச். லூக்காஸ் எழுதியிருப்பதானது, தேவமாதாவினிடத்திலிருந்தே இச்சங்கதிகளை அறிந்திருக்கவேண்டுமென்பதை எண்பிக்கின்றது. இடையர் தங்களுடைய கபடின்மையாலும், விசுவாசத்தாலும், பக்தியினாலும், தங்களுக்குக் கிடைத்த சுபசெய்தியை மற்றவர்களுக்கு அறிவிப்பதில் காட்டிய சுறுசுறுப்பினாலும், சர்வேசுரனை தோத்திரித்துக் கொண்டாடுவதில் காண்பித்த பேரூக்கத்தினாலும் மேன்மேலும் தேவ வரங்களையும் ஆசீர்வாதங்களையும் பெறுவதற்கு பாத்திரவான்களானார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

20-ம் வசனம்.—இடையரும் தங்களுக்குச் சொல்லப்பட்டபடியே தாங்கள் கண்டதும் கேட்டதுமாகிய யாவற்றையும் பற்றிச் சர்வேசுரனைத் தோத்திரித்துக் கொண்டு திரும்பிப்போனார்கள். இடையர் பெத்லேம் குகையில் தாங்கள் கண்டதும் கேட்டதுமாகிய சங்கதிகள், தேவதூதன் அவர்களுக்கு முன்னர் அறிவித்த விஷயங்களுக்கு முற்றும் ஒத்திருப்பதைக் கண்டு, தங்களுடைய விசுவாசத்தில் உறுதிகொண்டு, சர்வேசுரனுக்குத் தோத்திரம் செலுத்தி, மெத்த குதூகலத்துடன் தங்களுடைய மந்தைகளுக்குத் திரும்பிப் போனார்கள் என்றறியவும்.

(தொடரும்.)

S. M.

LEAGUE OF NATIONS.
சர்வ தேச சங்கம்.

ஜேர்மனியரின் பிரேரணைகள்.



லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் பழய பெர்லின் நிருபர் சர்வ தேச சங்கத்தின் சம்பந்தமாய் ஜேர்மனியர் செய்ய உத்தேசித்திருக்கும் பிரேரணைகளைக் குறித்து அப்பத்திரிகையில் விவரித்து எழுதியிருக்கின்றார். அவர் எழுதியிருப்பதன் சாராம்சம் பின்வருமாறு :—

ஜேர்மனியர் சர்வ தேச சங்கத்தின் சம்பந்தமாய்ச் செய்திருக்கும் பிரேரணைகளிலிருந்து ஜேர்மனியரின் முறை இன்னதென ஸ்பஷ்டமாய் விளங்கும். இப்பிரேரணைகளடங்கிய சட்டமானது 10 பிரிவுகளடங்கியதாயும் 36 ஷரத்துகளடங்கியதாயு மிருக்கின்றது. முதலாவது பிரிவில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது :—

"சகல ராஜ்யங்களின் சுதந்தரத்தைக் காப்பாற்றவும், சகல ஜனங்களுக்கும் நன்மை தரத்தக்க வழியில் சகலரும் கலந்துழைத்து, ஸத்தியத்தையும் நீதியையும் கைக்கொண்டு உலகத்தில் சமாதானத்தை எந்நாளும் நிலைநிறுத்துவதே சர்வ தேச சங்கத்தின் நோக்கமாயிருக்க வேண்டும். எந்த ஒரு தேசமும் இன்னொரு தேசத்துடன் இரகசியமாக எவ்வித உடன்படிக்கையும் செய்துகொள்ளக்கூடாது. ஒவ்வொரு ராஜ்யமும் இன்னொரு ராஜ்யத்தோடு செய்துகொள்ளும் உடன்படிக்கையானது சர்வ தேச சங்கத்தின் சாஸ்வத கமிட்டிக்கு அறிவிக்கப்பட்டுப் போகவேண்டும். அக்கமிட்டியானது அவ்வுடன்படிக்கையைப் பகிரங்கமாய்ப் பிரசுரஞ் செய்யவேண்டும். தத்தம் பார்லிமெண்டுகளின் சம்மதத்தைப் பெறுமல் எக்கத் தேசத்தின் கவர்ண்மெண்டும் சண்டை தொடங்கக்கூடாது.

சங்கத்தின் அமைப்பு.

சங்கத்தின் அமைப்பைக் குறித்து ஜேர்மனியர் செய்திருக்கும் பிரேரணைகளாவன :— சட்ட ரீதியாக கவர்ண்மெண்டு ஸ்தாபிக்கப்பெற்ற ராஜ்யங்களனைத்தும் சங்கத்தில் சேர்ந்துகொள்ளலாம். அர்ச். பாப்பானவருக்கு பிரத்தியேகமாக சங்கத்தில் ஸ்தானம் அளிக்கவேண்டும். சர்வ தேச சங்கத்தின் தரப்பில் ஸ்தாபிக்கப்பெறும் சர்வ தேச காங்கிரவின் சம்மதமின்றி, எந்தத் தேசமும் சங்கத்தினின்று விலகிக்கொள்ளக்கூடாது. சங்கமானது 7 அங்கங்கள் அடங்கியதாயிருக்கவேண்டும். முதலாவது சங்கத்தைச்சேர்ந்த தேசங்களின் பிரதிநிதிகளடங்கிய காங்கிரஸ் ஒன்று ஏற்படவேண்டும். இந்த காங்கிரஸ் மூன்று வருஷத்திற்கொருமுறையேனும் கூடைபெறுமாறு ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு தேசமும், மும்மூன்று பிரதிநிதிகளை இந்தக் காங்கிரஸுக்கு அனுப்பிக்கொள்ளலாம். ஆனால் ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரே வோட்டு தான் உண்டு. மூன்றில் இரண்டு பங்குகொண்ட வோட்டுகள் கிடைத்தாலன்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவாகமாட்டா. இரண்டாவது, இந்தக் காங்கிரவினால் வெளியிடப்படும் ஆலோசனைகளின்படி நடவடிக்கை கடத்த ஹேக் நகரத்தில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்படவேண்டும். மூன்றாவது, சர்வ தேச நியாயஸ்தலம். நான்காவது, மத்தியஸ்த கோர்ட்டொன்றும் ஏற்படவேண்டும். ஐந்தாவது, தேசங்களுக்குள் பிணக்கு ஏற்படும்போது அதைத் தீர்த்துவைக்க நிருவாகக் கமிட்டியொன்று ஏற்படுத்தப்படவேண்டும். இக்கமிட்டிக்கு, பிணக்கில் சம்பந்தப்பட்ட உபய கக்ஷிகளும் தனித்தனியே இரண்டு பிரதிநிதிகளையும், தங்களுக்குற்ற கடினிலைமைத் தேசங்களின் கவர்ண்மெண்டுகளினால் தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு பிரதிநிதிகளையும் அனுப்பிக்கொள்ளலாம். ஆறாவது ஹேக் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துக் கோர்ட்டைப்போன்ற சாஸ்வதமான ஸ்தாபனமொன்றும் அமைக்கப்படவேண்டும். ஏழாவது, சர்வ தேசங்களும் ஐக்கியப்பட்டு பரஸ்பர சம்மதத்தின்மேல் ஸ்தாபித்துக்கொண்டிருக்கும்யூனியன்களுக்கெல்லாம் மத்திய ஆபீஸ் எதுவோ அதுவே சர்வ தேச நிருவாக ஆபீஸாய் ஏற்பட்டிவிடவேண்டும்.

சங்கத்தின் அதிகாரம்.

மூன்றாவது பிரிவில் அதிகாரத்தைப்பற்றி விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. இத்தப் பிரிவில் காணப்படும் ஷரத்துகளின் சாராம்ச மென்னவென்றால், குறிப்பிட்ட ஒரு தேசத்தோடு இதர தேசங்கள் சம்பந்தத்தை அடியோடு விலக்கிக் கொள்ளவேண்டுமென்று தீர்க்கவும், அத்தேசத்தின் வியாபார வசதிகளுக்கு தடை ஏற்படுத்தவும், அதன் கப்பல்களைப் பறிமுதல் செய்யவும், ஏற்றுமதி இறக்குமதிகளைத் தடுத்துவிடவும் சங்கமானது அதிகாரமுடையதாயிருக்கவேண்டும். சங்கத்திற்கு உசிதமாகத் தோன்றினால், அத்தேசத்தைக் கட்டாயப்படுத்த இராணுவ நடவடிக்கைகளும் நடத்தலாம். இவ்வாறு பலவந்தமான நடவடிக்கைகள் நடத்தப்படும்போது சங்கத்தின் நிருவாகக் கமிட்டி நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டுவரவேண்டும். திடீரென்று ஒரு தேசமானது இன்னொரு தேசத்தைத் தாக்கின், தாக்கப்பட்ட தேசமானது தற்காப்பின் பொருட்டு எதிர்க்கலாம். ஆனால் இப்படி தற்காப்பின்பொருட்டு சண்டையிடப் புறப்பட்டிருக்கும் விஷயத்தை உடனே அத்தேசம், சர்வ தேசச் சங்கத்தின் சாஸ்வத கமிட்டிக்குத் தெரிவித்துவிடவேண்டும். அந்தக் கமிட்டியானது தற்காப்பின்பொருட்டு சண்டைக்குப் புறப்பட்டதின் நியாயநியாயத்தைக் கவனித்து தீர்மானஞ்செய்யவேண்டும். தற்காப்பின்பொருட்டுச் சண்டைக்குப் புறப்பட ஆதாரமில்லையென அக்கமிட்டியானது நிர்ணயித்தால், உடனே அத்தேசம் சண்டையை நிறுத்திவிடவேண்டும்.

ஆயுத பலத்தை மட்டுப்படுத்திக் கொள்ளுதல்.

சங்கத்தைச்சேர்ந்த எந்தத் தேசமும் 1909-ம் வருஷத்தில் கடற்படை தரைப்படைகளின் பொருட்டு செய்த செலவில் கால்பங்குக்கு அதிகமாய் இனிச் செலவு செய்யக்கூடாது. இந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு தேசங்கள் நடந்து வருகின்றனவாவென்பதைச் சர்வ தேச காங்கிரஸ் கண்காணித்துவரவேண்டும்.

வியாபார வசதிகள்.

வியாபார வசதிகளைக் குறித்து ஜேர்மனியர் செய்திருக்கும் பிரேரணைகளாவன :—

(1) கடல்களும், கால்வாய்களும், ஜலசந்திகளும் சர்வ தேச சங்கத்தைச்சேர்ந்த சகல ராஜ்யங்களுக்கும் பொதுவானவையா யிருக்கவேண்டும். எந்த ஒரு தேசமும், பிறிதோர் தேசத்தின் கப்பல்கள், போக்குவரத்துசெய்யும் விஷயத்தில் பிரத்தியேகமான எவ்வித நிபந்தனைகளையும்விதிக்கக்கூடாது. இதன்பொருட்டு, முக்கியமான தரைமுகங்களில், பொது கமிட்டியொன்று நியமிக்கப்பட்டுப் போகவேண்டும்.

(2) சங்கத்தில் சம்பந்தப்பட்ட சகல தேசங்களின் ரெயில் பாதைகளிலும் தரைப் பாதைகளிலும், இதர தேசங்களின் பிரஜைகள் யாதொரு தடைகளுமின்றி, வியாபாரப் போக்குவரத்து செய்துகொள்ளலாமென்ற விதி ஏற்பட்டிவிடவேண்டும்.

(3) சர்வ தேச சங்கத்தைச்சேர்ந்த தேசங்கள் அனைத்தும், ஆகாய விமானங்களின் போக்குவரத்துக்கு எவ்வித தடைகளையும் ஏற்படுத்தக்கூடாது.

(4) சர்வ தேச சங்கத்தைச்சேர்ந்த ஒரு தேசத்தின் பிரஜைகள், சங்கத்தைச்சேர்ந்த இன்னொரு தேசத்தில் குடியேறும்போது, அத்தேசத்திலுள்ள பிரஜைகளுக்குரிய சகல சதந்தரங்களும், அவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும். யாதொரு வித்யாசமும் பாராட்டப்படக்கூடாது. சர்வ தேச சங்கத்தில் சேர்ந்த ஒரு தேசத்தின் பிரஜைகள், சங்கத்தைச்சேர்ந்த இன்னொரு தேசத்தில் தொழில் நடத்த முயற்சி செய்யும்போதும், பூஸ்திதி வைத்துக்கொண்டு முயற்சி செய்யும்போதும் அத்தேசத்தின் பிரஜைகளுக்கு இல்லாத நிபந்தனைகளை, இவர்கள் பொருட்டு ஏற்படுத்தக்கூடாது. அந்திய தேசத்தின் பிரஜையென்ற காரணத்தினால், ராஜீய சதந்தரங்கள் இல்லாமற் செய்துவிடவும் கூடாது. ராஜீய வியாபார விஷயங்களில், சங்கத்தைச்சேர்ந்த தேசங்கள் பரஸ்பர ஒற்றுமை காட்டி வேலைசெய்துவரவேண்டுமென்று கட்டுப்பாடி செய்துகொள்ளவேண்டும்.

(5) சர்வ தேச சங்கத்தைச்சேர்ந்த தேசங்களில் எதுவும், எக்காரணத்தை முன்னிட்டும்

இதர தேசங்களின் வியாபார விஷயத்திலோ இதர விஷயத்திலோ எவ்வித தாரதம்மியமான ஏற்பாடுகளையும் செய்யக்கூடாது. தனக்கு உவந்த தேசத்தினர் என்ற காரணத்தினால் ஒரு தேசமானது இன்னொரு தேசத்திற்கு விசேஷ வசதிகளை யுண்பெண்ணிக்கொடுக்கவுங்கூடாது. சர்வ தேச சங்கத்தைச்சேர்ந்த சகல தேசங்களின் பிரஜைகளுக்கும் சம உரிமை இருக்க வேண்டும்.

(6) ஏற்றுமதி இறக்குமதி விஷயங்களில் எந்தத் தேசமும் எவ்வித சாமான்களையும் விலக்கிவைக்கக்கூடாது. உணவுப் பொருள்களைப்பற்றிய விஷயத்தில்மாத்திரம், அந்தந்தத் தேசங்கள் தங்களுக்கு இதமான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்.

குடியேற்ற நாடுகளின் நிருவாகம்.

சர்வ தேச சங்கத்தில் சேர்ந்த தேசங்களுக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளின் நிருவாகத்தைப்பற்றி ஜெர்மனியர் விதிக்கும் நிபந்தனைகளாவன :—

(1) நீதியை ஆதாரமாகக்கொண்டு குடியேற்ற நாடுகள் நிருவாகிக்கப்பட்டுவரவேண்டும். அந்நாடுகளில் வசிக்கும் சுதேச ஜனங்களுக்கும், குடியேறும் ஜனங்களுக்கும் சமமை தரத்தக்க வழிகளில் குடியேற்ற நாடுகளில் நிர்வாகம் நடைபெறவேண்டும்.

(2) குடியேற்ற நாடுகளை வைத்திருக்கும் ராஜ்யங்கள் அங்குள்ள சுதேச ஜனங்களின் அபிவிருத்திக்கேற்ற காரியங்களைச் செய்யவேண்டுமென்பது கடமையென விதிக்கப்படவேண்டும். குடியேற்ற நாடுகளை வைத்து நடத்தும் தேசங்கள் அங்கு அடிமை வியாபாரத்தை அடியோடு ஒழித்து விடவேண்டும். சுதேச ஜனங்களின் கல்வி, சரீர சுகம், வியாபார விருத்தி, நிலங்களை வைத்துக்கொள்ளும் உரிமை ஆகிய விஷயங்களைக் கவனிப்பதும் கடமையென ஏற்பட்டு விடவேண்டும். லாகிரி வஸ்துக்களால் சுதேச ஜனங்கள் சீர்கெட்டுப்போகாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(3) உள் நாட்டில் கலகங்கள் ஏற்படில் அவற்றை அடக்குவதற்கு எவ்வளவு சைன்யம் வேண்டுமோ அவ்வளவு திருப்புகளைமட்டும் குடியேற்ற நாடுகளில், அவற்றை பரிபாலிக்கும் நிருவாகிகள் சுதேச ஜனங்களிலிருந்து திரட்டிக் கொள்ளலாம். வேற காரியங்களுக்காக அந்தத் தேசமும், தனது குடியேற்ற நாடுகளில் ராணுவம் சேகரிக்கக்கூடாது.

(4) சகல தேசங்களின் குருப்பிரசாதிகளுக்கும் குடியேற்ற நாடுகளில் சம சுதந்தரமிருக்கவேண்டும்.

(5) எந்தத் தேசத்தின் குடியேற்ற நாட்டிலும், அந்திய நாட்டுப் பிரஜைகளுக்கு சகல விஷயங்களிலும் சம சுதந்தரமிருக்கவேண்டும். குடியேற்ற நாடுகளின் கவர்ண்மெண்டுகள் கண்டிராக்ட் கொடுக்கும் விஷயத்திலும் அந்நியர்களிடம் வித்தியாசம் பாராட்டக்கூடாது.

(6) குடியேற்ற நாடுகளின் நிருவாகத்தைக் கண்காணித்துவரும்பொருட்டு சர்வ தேச சங்கத்தையொட்டி குடியேற்ற நாட்டு ஆபீஸ் ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டும். அந்த ஸ்தாபனம் சகல விஷயங்களையும் சரிவரக் கண்காணித்துக்கொண்டுவரவேண்டும்.

(7) ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் சர்வ தேச சங்கத்தின் தரப்பில் ஒரு ஸ்தானாதிபதி இருந்துவரவேண்டும். அந்நாட்டில் குடியேறிய சகல தேசங்களின் பிரஜைகளின் முறைப்பாடுகளையும் கவனித்துத் தக்க உதவிகளைச் செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்துவிடவேண்டும். மேலே கண்ட நிபந்தனைகளை எந்த குடியேற்ற நாடேனும் நிராகரித்தால், சர்வ தேச சங்கத்தின் ஸ்தானாதிபதி உடனே அவ்விஷயத்தைச் சங்கத்திற்கு அறிவித்து வேண்டிய பரிகாரங்களைத் தேடவேண்டும்.

(8) உலகத்திலுள்ள தொழிலாளிகளின் நன்மைக்கேற்ற விஷயங்களைக் கண்காணித்து வருவதற்காக சர்வ தேச சங்க ஸ்தாபனமொன்றை ஏற்படுத்திவிடவேண்டும்.

(9) எந்தத் தேசத்திலும், இன்னொரு தேச ஜனங்களுக்கு விரோதமான உணர்ச்சியை ஜனங்களுக்குள் உண்டுபண்ணுவதற்காகச் செய்யப்படும் முயற்சிகளை அத்தேசத்திலுள்ள கவர்ண்மெண்டானது அடக்கவேண்டுமென்று ஒரு நிபந்தனை ஏற்பட்டுவிடவேண்டும்."

பத்திரிகைகள் மூலமாகவோ, பிரசங்கங்கள் மூலமாகவோ, சித்திரங்கள் மூலமாகவோ குறிப்பிட்ட ஒரு தேசத்தாரிடம் விரோத உணர்ச்சி யுண்டாக்கக்கூடிய முயற்சிகள் எத்தேசத்திலேனும் செய்யப்படின், அத்தேசத்தின் கவர்ண்மெண்ட் அம்முயற்சியை அடக்கிவிட வேண்டுமென்ற நிபந்தனையினால் ஜெர்மனியருக்கு விரோதமாய் எத்தேசத்திலும் எவரும் எதையும் சொல்லமுடியாமற்போய்விடும். இந்த நோக்கத்துடனேயே ஜெர்மனியர் இந்த நிபந்தனையைக் கொண்டுவந்திருக்கின்றார்கள்.

(சு—மி.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குத்தப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்

I

சங். பத்திராதிபரே,

கடந்த டிசம்பர்மீ கடைசியில் திருச்சிராப்பள்ளியில் நடந்த ஷை சங்கத்துப் பொதுக் கூட்டத்தின் நடவடிக்கைகளைப்பற்றி, மாண்டலே நண்பர், மிஸ்டர் பி. ஆரோக்கியம் என்பவர் சில சந்தேகங்கொண்டு, சென்ற சஞ்சிகையில் எழுதிய கடிதத்தைப் பார்வையிட்டேன். ஷை கூட்டத்தில் நானும் பிரசன்னமாயிருந்தபடியால் எனக்குத் தெரிந்தமட்டும் அவர் சந்தேகத்தை நீக்கப்பார்க்கிறேன். நமது நண்பர் ஷை கூட்டத்தில் நடந்ததாகச் சொல்லியுள்ள விவரங்களிற் பெரும்பான்மையும் எனக்குத் தெரிந்தவரையில் கலப்பில்லாத உண்மையென நான் பகருவேன். ஷையார் குறிப்பிக்கும் பிரதிநிதியானவர் பிரசங்க மேடைமீதேறி அக்கிராசனாதிபதியவர்களைப் பேச உத்தரவு கேட்க, அவர்கள், அவருக்குச் சில புத்திமதிகளைச்சொல்லி, கூட்டத்து நடவடிக்கைக் கிரமச் சீட்டிற் கண்டுள்ள விஷயங்கள் நடந்தபின்னர் பேசலாம் என உத்தரவளித்தார். அப் பிரதிநிதியானவர் தாம் பேசவதற்குக் கூட்டத்தினரில் சிலர் ஆட்சேபித்ததையும், அக்கிராசனாதிபதியவர்கள் உடனே பேச உத்தரவளிக்காததையுங்கண்டு சீற்றங்கொண்டு, தமக்குள்ளே ஏதோ சொல்லிக்கொண்டு வெளியேறிவிட்டார். அவருடன் வெளியே சென்றவர்கள் 100 பேராயிருக்கமாட்டார்கள். ஏறக்குறைய 30 பேராயிருக்கவேண்டுமென்பது என் மதிப்பு. இப்படி வெளியே சென்றவர்களும், அவர்கள் கட்சியைச்சேர்ந்த மற்றுஞ் சிலருங் கூடித் தீர்மானித்ததாகச் சொல்லப்படுகிற தீர்மானங்களின் சகலை நானும் பார்வையிட்டேன். அவைகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் நியாயமானவைகளாயிருக்கின்றன. அத் தீர்மானங்கள் முறையிட்டுக்கொள்ளும் விகற்பங்கள் நிகழ்வதும் உண்மை. அவைகளுக்குப் பரிகாரந் தேடவேண்டுவதும் அவசியமே. விசேஷமாய், கல்வி சாகரீக மிகுந்து, எத்தேசத்தாரும், எச்சாதியினரும் சுயநிர்ணயம், சமரசபாண்மை, சமத்துவம் பாராட்டி மிக்காலத்திலே, கத்தோலிக்குத் திருச்சபையின் ஒரு தாய்மக்களாகிய சகோதர்களுக்குள் விகற்பம், வித்தியாசம், வேறுபாடு காணப்படுவது மெத்தவும் விசனத்துக்குரிய காரியம். இவைகளைக் கூடியசீக்கிரத்தில் வேரோடு களைந்தெறிவது அத்தியாவசியம். இவ்விஷயத்தைப்பற்றித் தீர்க்க ஆலோசனைசெய்த அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார் முதலாகிய குருப்பிரசாதிகளும், மற்றப் பெரியோர்களும், அவைகளை அறவே ஒழிக்க வேண்டுமென அபிப்பிராயப்படுகிறார்கள். அன்றியும், இப்போது இந்தியர்க்குக் கொடுக்கப் போவதாய்ச் சொல்லப்படுகிற இராஜாங்கச் சுதந்தரங்கள் விஷயத்திலே கத்தோலிக்கு இந்தியனெப்படுவோர் அனைவரும் ஏகோபித்து ஒருமித்து நின்றாலன்றி, இவர்களுக்குச் செல்வாக்கு, சௌகரியம், க்ஷேமம் கிடைப்பது துர்லபமெனக் கண்டறிந்த மேதாவிகள் இவ்விஷயத்தில் வெகுவாய்க் கலக்கங்கொள்ளுகின்றார்கள்.

ஆயினும், "பழக்கங் கொடியதுபார் பாறையினைக் கோழி கிழிக்கும்" என்றவாறு காலாகாலமாய் அநுசரிக்கப்பட்டுவந்த ஒரு பழக்கத்தை திடீரென அகற்றுவதென்றால் அது மெத்தப் பிரயாசையான காரியமென்பது எவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். காட்பட்ட (chronic disease) வியாதியை காட்பட மருந்து சாப்பிட்டித்தான் போக்கவேண்டும். ஒரே நாளில் போக்கவேண்டுமென்றால் போகுமா? போகாது. மேலும் காட்பட்ட கொடிய வியாதிக்கு, வேகமான மருந்து சாப்பிட்டுக் கடும் பத்தியமும் பிடிக்கவேண்டும். அப்படிச் செய்தால், வியாதியும் படிப்படியாய்த்தான் நீங்கும்; அதுபோல கத்தோலிக்கு இந்தியர்க்குள்ள காட்பட்ட விகற்பங்களும், காளடைவிலேதான் நீங்கவேண்டும். நமக்குள்ளிருக்கும் கல்விமான்களும் நீதிமான்களுமான பெரியோர்களுடைய கற்புத்தியினாலும்,

முன்மாதிரிகையினுலும், கல்வி, நாகரீகத்தினு லும், முன்னிருந்த கொடிய விகற்பங்கள் நாளுக்கு நாள் தாமாகவே தளர்த்தப்பட்டுவருவ தைக் கண்ணுள்ளவர்கள் காணலாம். ஆனுல் விகற்பங்களே ஒருமட்டாய் ஒழித்துவிடவேண்டு மென்று ஆத்திரப்படவொண்ணுது. ஆத்திரப் பட்டுக் காரியம் நடத்தினவர்கள் அபஜெயப்பட் டார்கள். இதற்கு அத்தாட்சிகள் பல எடுத்துக் கூற அவசியமில்லே. சில காலத்துக்குமுன்னே புதுச்சேரியிலும், தஞ்சாவூரிலும், இன்னும் வேறு சில ஊர்களிலும் நடந்தவைகளே போது மானவை. ஆகவே, காலம் தானே இவைகளைக் கூடிய அளவில் குணப்படுத்திவிடும். குணப் படுத்தவேண்டுமென்று வெகு பேர்களுங் கங்க ணங்கட்டி நிற்கின்றூர்கள். இவ்விஷயத்தில் ஆத் திரப்பட்டுக் காரியமில்லே. ஆத்திரப்படுவோமா னுல் மேற்காட்டியபடி கோரிய காரியங் கெட்டுப் போகும். பாரிய யோசனேயும், விவேகமும், அது போகமுமற்ற சாமான்யர்கள் திடீரென வழக்கத் துக்கு விரோதஞ்செய்யச் சம்மதியார்கள். கட் டாயப்படுத்தினுலோ முழுமோசமாய்விடும். ஒரு குறையை நிவர்த்திக்கப்போனுல் வேறு பெருங் குறை வந்து சேரும். இதற்கும் பாதகமின்றி அதற்கும் பாதகமின்றி வெகு ஜாக்கிரதையாய்க் காரியம் நடத்தவேண்டியிருக்கிறது. இவைகளே யெல்லாம் உத்தேசித்துத்தான், காரியங்களே விவேகிகள் சாவதானமாய் யோசித்துச் செய்து வருஞர்கள்.

ஆனுலும், மேற்கண்ட விகற்பங்களினுல் பாதிக்கப்பட்டவர்கள் கொஞ்சம் பொறுமையை அநுசரிக்கவேண்டும். கத்தோலிக்கு இந்தியர் களுக்கெல்லாம் பொதுவாய் ஸ்தாபிக்கப்பட் டுள்ள ஷை தெ. க. இ. சங்கத்தில் தாராளமாய்ச் சேர்ந்து அதன் ஒழுங்குகளிற் சொல்லப்பட்ட சுதந்தரங்களைக் கையாண்டு, தங்களுக்குச் சாதக மான வழி வகைகளைத் தெரிந்து, முறைமை யின்படி அவைகளை அடைய முயற்சி செய்ய வேண்டும். இப்போது ஷை சங்கம் இராஜாங்கத் தாரால் ரிஜிஸ்தர் செய்யப்பட்டுப் போய்விட்ட படியால், அவ்வொழுங்குகளே எவரும் மீறி நடக்கமுடியாது. அதைச்சேர்ந்த அங்கத்தின ருக்கெல்லாம் அதில் சர்வ சுதந்தரமுமுண்டு. இலௌகிக காரியங்களில் கத்தோலிக்கு இந் தியர் அனைவரும் எகோபித்துத் தொழில் செய் யக்கூடிய ஒரே மார்க்கம் இந்தத் தெ. க. இ. சங்கமாகும். அதில் உயர்ந்தோர் என்போரும், தாழ்ந்தோர் எனப்படுவோரும் (தாழ்ந்த வகுப் பாவதேது? உயர்ந்த வகுப்பாவதேது? எல்லா மொன்றே. இட்டார் பெரியோர் இடாதோர் இழி குலத்தோர்) எல்லோரும் அச்சங்கத்திற் சேர்ந்து அதைப் பலப்படுத்தி, அதனுல் கத்தோ லிக்கு இந்தியர் குடும்பத்தை மேற்றவேண் டும், இப்படி யெல்லோரும் ஒருமிக்கக்கூடித் தொழில் நடத்துவதினுல் ஒருவருக்கொருவர் பரிச்சய மேற்பட்டு, உள்ள விகற்பங்கள் எடு பட்டுப்போக இருதரத்தினருக்குள் நேச பாண்மை தானு யுதிக்கும். இவ்விஷயத்தில் சாமான்ய ஜனங்களே நடத்தும் ஆற்றலும் செல் வாக்குமுடைய ஜனத்தலைவர்கள் தீர்க்காலோ சனைசெய்து, பொது நலத்தையிட்டு, வகுப்பு வைராக்கியங்களே விட்டு கத்தோலிக்கரெல்லோ ரும் சகோதரர்கள் என்னும் உண்மையை தொட்டு ஒருவித ஒருமைப்பாடான எற்பாட் டுக்குவரும் வழி வகைகளைக் கூடியசீக்கிரத்தில் செய்ய முன்வருவார்களெனக் கோருகிறேன்.

சென்னை, 15—3—19. }

இப்படிக்கு, கண்டது விண்டோன்.

II

ஐயா,

சென்ற மாத நல்லாயனில் தென்னிந்திய கத்தோலிக்கு இந்தியர் சங்கம் என்ற தலேப்பின் கீழ், கூடின்த வருஷத்திய ஷை சங்கத்துப் பொதுக் கூட்டத்தின்போது தீண்டப்படாத ஜாதிகளெ னப் பாவிக்கப்படும் சில தாழ்ந்த வகுப்புக் கத் தோலிக்கர் விஷயமாய் ஏதேதோ விகற்பங்கள் நடந்ததாகக் கூறி, அவை உண்மையோவென உசாவி உள்ளார் ஒரு நண்பர்.

கத்தோலிக்கு என்னும் பதத்தின் கீழ் தீண் டப்படாத ஜாதி என்னும் மொழி குதிரை, கொம்பு, மூயல்மூட்டை, மலடிமகன் என்ற சொற்களேப்போல பொருளற்ற வார்த்தையே யொழிய வேறல்ல. எவ்வளவு தாழ்ந்த குலத் தில் பிறந்தோரும் குருக்களாகவும், எவ்வளவு தாழ்ந்த குருக்களும் பாப்பரசராகவும் கூடிய அத்தனே சகோதரத்துவத்தைப் போதனேயாகக் கொண்டுள்ளது கத்தோலிக்கு வேதமே யென் பதை யார் மறுப்பார்கள்? இவை நிற்க ஆயிரக் கணக்கான ஜாதிகளும் வகுப்புகளும் உள்ள இவ் விந்தியாவில் ஒவ்வொரு ஜாதியாரும் (அவர்கள் பறையர் (புலையர்) சக்கிலியரேயானுலும்) தங்க

ளுக்குள்ளேயே உயர்வு தாழ்வு உண்டென்று கூறி, அவ்வாறு தாழ்வாக மதிக்கப்படும் சில அல்லது பல குடும்பங்களேத் தள்ளிவைத்து அவர்களோடு சமபோஜனமாவது சம்மந்தமா வது செய்யமாட்டோமென்கிறார்கள். இவ்வித வழக்கம் இவர்கள் கத்தோலிக்கரான பின்னும் இருந்துகொண்டே இருக்கிறது. ஒரு ஜாதிப் பெயரையுடைய தங்களுக்குள்ளேயே இப்படி உயர்வு தாழ்வு பாராட்டல் வழக்கமாயிருக்க, வெவ்வேறு ஜாதிப் பெயர்களே யுடையவர்களி டையில் கேட்கவும் வேண்டுமோ? இந்த ஆகாத வழக்கத்தைக் கூடியமட்டும் விலக்கக் கத்தோ லிக்குக் குருக்களும் கத்தோலிக்குப் பொதுச் சங்கத்தின் அதிகாரிகளும் வேண்டிய பிரயாசை எடுத்துக்கொள்ளாமலிருக்கவில்லே. இப்படியே அன்று கூடியுள்ள தெ. இ. க. பொதுக் கூட் டத்திலும் தங்களேத் தீண்டா ஜாதிகளென்றும், தாழ்ந்த வகுப்பினரென்றும் கூறிக்கொண்டுவந் தவர்க ளேனவரையும் ஷை சங்கத்தில் மெம்பரா கச் சேர்த்துக்கொள்ள ஆட்சேபனேயில்லே யென்று செக்ரிட்டரி அவர்களும் சபைத் தலேவரும் சொன்னதை ஷை நண்பரே எழுதி யிருக்கிறார். இதைவிட வேறென்னவேண்டும்? இவர்கள் தங்களே ஓர் சார்பாக்கிக்கொண்டு தங் களுக்கு தெ. இ. க. சங்கம் எதோ பிரத்தியேக கண்மை செய்யவேண்டுமென்கிறார்கள்; இது கூடுமோ? அப்படி வேண்டுமானுல் சென்னே இராஜதானியில் கத்தோலிக்கர் தொகையில் நூற்றில் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களாயிருக்கி றேமென்று சொல்லும் இவர்கள் நூற்றில் ஐம்ப துக்கு அதிகமாகவே தெ. இ. க. சங்கத்திலும் சேர்ந்து, வெகு ஜனங்களான இவர்கள் தங்க ளுக்கு வேண்டிய காரியத்தைச் சித்திபெறச் செய்யலாமே. இப்படிச் செய்யும் நேரான வழியை விட்டுவிட்டு, ஒரு சங்கமானது அதன் வருஷாந்தப் பொதுக் கூட்டத்தின்போது, அந்த நாளில் அது செய்து முடிக்கவேண்டிய முக்கிய விஷயங்களுக்காகக் கால அட்டவணே குறித்து, அவற்றைச் செய்துதீர்க்கத் துரிதப்பட்டுக் கொண்டிருக்கும் மத்தியில் வேறொரு கூட்டத் தார் இடையில்வந்து பேச இடங் கேட்பதும் ஒரு சார்பான தங்களுக்கென்று ஏதேதோ வேண்டுமென்பதும் சரியா?

அப்படிக் கேட்டவர்களுக்கு தன்னுல் இய லாததை இயலாதென்று நியாயமாய்க் கூறிய பதிலேயும், எங்களோடு நீங்களும் இந்தச் சங்கத் தில் சேர இடமுண்டென்று சொன்ன நல்ல மறுமொழியையும் விகற்ப மொழி என்று குறை கூறுவதும் நீதியா? ஆகையால தங்களே த் தாழ்ந்த வகுப்பினரென்று சொல்லிக்கொள்ளும் இவர்கள் தங்களுக்குக் கிடைத்த இந்த அநுகூல மான மறுமொழியைக்கொண்டு தங்கள் சார்பான எல்லாரோடும் உடனே தெ. இ. க. சங்கத்தில் சேர்ந்துகொள்வது எவ்வளவோ மேல். இப் படிச் செய்வதைவிட்டு வீணே மனங்கசிந்து கொள்வதிலும், கிடைத்த நல்ல மறுமொழியை விகற்பமென்றெண்ணுவதிலும், பல தீர்மானங் களேப் பண்ணுவதிலும், மேற்றிராணியார், ராஜப் பிரதிநிதி, மந்திரி முதலியவர்களுக்குத் தெரிவிப் பதிலும் பயனென்னே? தங்களுக்கென்று பிரத் தியேக நன்மைவேண்டுமானுல் ஒவ்வொரு ஜாதி யாரும் தங்கள் தங்களுக்கென்றே ஒரு சபையை ஸ்தாபித்து முன்வருவது சரி என்பதும் பிசகா?

ஆகவே, தெ. இ. க. சங்கம் கத்தோலிக்கர் யாவருக்கும் பொதுவான சங்கமே எனவும், ஓர் சார்பான கத்தோலிக்கருக்குமாத்திரம் நன்மை செய்ய எற்பட்டதன்றெனவும், அதற்கு தெ. இ. க. சங்கம் என்ற பெயர் சரியே எனவும் நமது நண்பர் அறிவாராக.

மணப்பாடு, 21—3—19. }

க. அ. சி.

கோயமுத்தூர் ஜான் பெர்க்மான்ஸ் ரோச் எனும் சங். ஆரோக்யநாதரின் குருப் பட்டாபிஷேகம்.

இம்மாதம் 9-ம் தேதியாகிய ஞாயிறுவாரம் இங்கர்க் கிறீஸ்துவ சகோதரர்கட்கு மிக்க சந் தோஷகரமான திருநாளாகவிருந்தது. இம் மேற்றிராசனத்தைச்சேர்ந்த ஷை சங். ஆரோக்ய நாதருக்கு அன்று மகா கனம்பொருந்திய அருஸ் தின் ரூஹா ஆண்டவர் அவர்களால் குருப் பட் டாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. ம. க. ஆண்டவர் அவர்கள் தமது திருப்பணிக்கடுத்த வஸ்திராபரணமணிந்து, செங்கோற் கிரீடாதி பதியாய், மேற்றிராசனப் பாண்டுவாத்தியமுழக் கத்துடன் முன்செல்ல, திருச்சிலுவையையும் கத்திரிச்சால்களேயும் கையிற்கொண்ட மூன்று சிஷ்யபிள்ளைகளும், அவர்கள் பின்னே மற்றச் சிஷ்யப்பிள்ளைகள், சுமார் 25 குருமார்களும் பட்

டம் பெற விருந்தவருடன் அணிவகுத்துப் பின் செல்ல, திரளான விசுவாசிகளால் புடைசூழப் பட்டுத் தமது மாளிகையினின்று பவனிசென்று, ஆலயத்துக்கேகித் திருப்பலிபூசை யாரம்பித்தனர். இம்மகத்துவக் காட்சியைத் தரிசித்தானந் திக்குமாறு, புதுக் குருவானவரின் சுற்றத்தாரும், கண்பர்களும், மெட்ரோ சின்னப்பள்ளம், ஈரோடு, சோமனூர், திருப்பூர், பாலக்காடு, கள்ளிக் கோட்டை முதலிய நானா திசைகளினின்றும் திரண்டு விஜயஞ்செய்திருந்ததைப்பற்றி, ஆல யத்தினுள்ளும் புறமும் விசுவாசிகள் நெருக்க மூற்றிருந்தனர்.

திருப்பலிபூசையின்போது இடைக்கிடை குருப்பட்டம்பெறுபவர்க்கு நிகழ்த்தப் படலான திருக்கிருத்தியங்களின் மேன்மை செப்பத்தர மல்ல. அவைகளில் ஒரு கிருத்தியம் விசேஷ மாய்க் குறிப்பிடத் தகுந்தது. அதாவது: ஆங்கு பிரசன்னமாயிருந்த குருமார் அனைவரும் பட்டம் பெறுபவரின் சிரமீது முறையே தம்தம் கரத்தை வைத்து அதனை உயர்த்திப்பிடித்த வண்ணமாய் நிற்க, அச்சமயம் உரைக்கப்பட்ட திருமந்திரத் தைச் செவியுற்றுக் கேட்குங்கால், தெய்வ இஸ் பிரீத்துசாந்துவானவர் பட்டம் பெறுபவர்மீது மெய்யாகவே இரங்கிவருதலின் மகிமை ஆங்கு கூடியிருந்த விசுவாசிகளி னுள்ளத்தில் தேவ பற்றுதலைப் பொலிவுற்றமேரையாய்ப் பற்றுவித் திருக்குமென்பது எனது துணிவு. சுமார் இரு மணித்தியாலம்சென்று பட்டாபிஷேகச் சடங்கு முடிவுபெற்றது.

பின்னர், பட்டம்பெற்ற குருவானவரின் ஆசிரை அனேக குருமாரும் விசுவாசிகளும் முழங்காற்படியிட்டவண்ணமாய் நின்று பெற் றுத் தம் தம் இடமேகினர்.

இப்புதுக் குருவானவரின் பட்டாபிஷேகத் தைப்பற்றிய விசேஷம் யாதெனில், இவர் புரா தனக் கிறீஸ்துவக் குடும்பத்தைச்சார்ந்தவராயி ராமல் சில வாண்டுகளுக்குமுன்னே புதிதாய் ஞானஸ்நானம்பெற்ற குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவராயிருப்பதே. அன்று மாலை சுமார் 4-மணிக்கு இக்குருவானவரின் கண்காணிப்பில் இருந்துவரும் அர்ச். மிக்கேல் போர்டிங் மடத் துப் பிள்ளைகள், மேற்றிராசனப் பாண்டவாத்தி யம் ஆர்ப்பரிக்க, அவரையும், ம. க. ஆண்டவ ரவர்களையும் சிறப்புற்ற மேடைமீதேற்றி, அரு கில் அனேக குருமார் வீற்றிருக்க மங்களக் கவி பாடி, வந்தனோபசாரப் பத்திரம் படித்துத் தங் கள் சக்திக்கியன்ற காணிக்கையொன்றை யளித்து, அவரை உபசரித்தனர்.

இஃது முடிவுபெற்றதும், இம்மேற்றிரா சனப் பங்குக் கிறீஸ்துவ சகோதரர் யாவரும் யாதொரு பேதமின்றி ஏகோபித்த மேரையாக பெருந்திரள்கொண்டு, மேள தாளத்துடன் தங் கள் காணிக்கைகளை ஏந்தியவண்ணமாய்க் கோட் டையினின்று பவனிகொண்டு சென்று, குருவா னவர்கள் புடைசூழ வீற்றிருந்த ம. க. ஆண்டவ ரவர்களுக்கும், புதுக் குருவானவருக்கும் வாத்ய இன்னிசையுடன் மங்களக்கவி பாடி, பூமாலை சூட்டி, ஆங்கிலத்தில் தங்கக் கிலிட்டகூரங்க ளால் தயாரிக்கப்பட்டிருந்த இரு வந்தனோப சாரப் பத்திரங்களும், நந் தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையில் இன்னொரு வந்தனோபசாரப் பத்திரமும் வாசித்தனர். வாசகத்தின்போது பணப் பரிசு ஒன்று குருவானவருக்குக் காணிக்கையிடப்பட்டது. பின்னர், மீண்டுமொரு முறை மங்களக்கவி பாடி நின்றதும், ம. க ஆண் டவரவர்கள் சிறிது உபன்னியாசம் செய்தனர். பிறகு, ம. க. ஆண்டவரவர்களும் புதுக் குருவா னவரும் இட்ட ஆசிரைப் பணிவுடன் பெற்று குழாம் கலைய விருக்குந் தருணத்தில், அக்குரு வானவரது பந்து மித்திரர் ஒருங்கு திரண்டு, பூசைப் பாத்திரம், மிஸ்ஸால், பணப் பரிசு முத லிய தங்கள் காணிக்கைகளுடன் புதுக் குருவான வரையும், மற்ற தேசிகரையும் அணுகி, தங்கள் காணிக்கைகளை அவர்கள்முன் சமர்ப்பித்து, வந் தனோபசாரப் பத்திரம் படித்து, அவரது ஆசிரை இரந்து நின்றனர். யாவும் அரை மணிநேரத் திற்குள் முற்றுப்பெற, பிறகு 6-மணிக்கு புதுக் குருவானவர் டீக்கன் சப்டீக்கனுடன் தேவநற் கருணை ஆசீர்வாதமளித்தனர்.

பிற்றை நாள் காலை 6½-மணிக்கு சங். ரிவி யர். சுவாமிகள் உதவியாயிருக்க, புதுக் குருவான வர் மிக்க பக்தி வினயத்துடன் தமது முதற் பலி பூசையை ஒப்புக்கொடுத்தனர். இத்திருப்பூசை யில் அனேகர் மோட்ச விருந்தாகிய திரு மன்னுவை அருந்தும் பாக்யம் பெற்றனர். பூசைக்குப்பிறகு, முதற் றடவையாக தேவ பலி யிட்ட அவரது கரங்களை அனேக குருமாரும் விசுவாசிகளும் முத்தமிட்டனர். அன்று, புதுக் குருவானவரும் அவரது உற்றூர் மித்ரரும் சேர்ந்த புகைப்படம் பிடிக்கப்பட, திருப்பட்டா பிஷேகக் கொண்டாட்டம் முடிவுற்றது.

புதுக் குருவானவர் நீடுழிவாழ்ந்து நித்ய முடி பெறுவாராக!

இப்படிக்கு,
12—2—19. டி. எ. லூர்துசாமிப் பிள்ளை.

ஆரம்பாக்கம்
லூர்துநாயகியின் தரிசனத் திருவிழா.

ஷை திருவிழா சென்ற பிப்ரவரிமீ 15, 16-ம் தேதிகளில் ஆரம்பாக்கம் அமலோற்பவ ஆண்ட வள் ஆலயத்தில் அதி ஆடம்பரத்துடன் கொண் டாடப்பட்டது. சென்னை யதிமேற்றிராணியா ராகிய கனம் வந்திக்கத்தக்க ஜே. ஆலன் ஆண் டவரவர்களும், ரோஷநாகரம் சங். கோப்பர் டாட் சுவாமிகள், பெரம்பூர் சங். ஒக்கரால் சுவா மிகள், ஜியார்ஜ்டவுன் லாரென்ஸ் பெர்காந்திஸ் சுவாமிகள் ஆகிய மூன்று குருமார்களும், நெல் லூர் கலெக்டர் மகா-ரா-ரா-ஸ்ரீ திவான்பஹதூர் எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளையவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் இன்னுமற்ற கனவான் களும் வந்திருந்து ஷை திருநாள் கொண்டாட்டத் தைச் சிறப்பித்தார்கள். 15-ம் தேதியாகிய சனிக்கிழமை ஆண்டவரவர்கள், 14 சிலுவைப் பாதைப் படங்களைத் திருச்சபை யாசாரத்தின் படி ஸ்தாபிக்கும் சடங்கை நிறைவேற்றினார்கள். அன்று மாலை மிக்கச் சிறப்புடன் நடத்தப்பட்ட தேர் சுற்றுப்பிரகாரத்திற்குப்பின் சங். பெர் காந்திஸ் சுவாமிகள் பல்லாயிரம் இந்து ஜனங் களுக்குத் தமிழில் ஒரு நேர்த்தியான பிரசங் கஞ்செய்தார்கள். ஆண்டவரவர்கள் மாலை ஆரா தனை முடிந்தபின், இங்கிலீஷில், தெய்வமான புத்திப்பிரசங்கஞ் செய்து திவ்யநற்கருணை யாசீர்வாதங்கொடுத்தார்கள். அடுத்த நாளாகிய ஞாயிறன்று போந்திபிக்கால் என்னும் பெரிய பாட்டுப்பூசையும், பிரசங்கமும், புதுநன்மையும், உறுதிப்பூசலும், தெய்வநற்கருணை யாசீர்வாத மும் அருளப்பட்டன. வண்ணரப்பேட்டை இங் கிலீஷ் பாண்டு வாத்தியமும், ரோஷநாகரத்து புதுக் கிறீஸ்வர்கள் பாண்டு வாத்தியமும், உள் ளூர் மேள வாத்தியமும் இடையிடையே மனோ கரமான கீதங்கள் பாடி நூற்றுக்கணக்கான திரு யாத்திரைக்காரர்களை மகிழ்வித்தன. வட ஜியார்ஜ்டவுனிலிருந்து வந்திருந்த மிஸ்டர் டிக் ரூஸ் ஆதிய லத்தீன் பாட்டுக்காரர்கள் நவ நாள் ஆரம்பமுதல் திருநாள் முடிவுவரையிலுமிருந்து திருப்பூசைப் பலியாராதனைகளைச் சிறப்பித்தார் கள்.

இந்தப் பொருத்தனைக் கோவில் பங்கு விசாரணைக்குப் பலவிதமாய் உதவி புரிந்துவரும் பரோபகார புருஷ பூவையர்களை நமது தெய்வ கர்த்தரும், நமது லூர்துநாயகியும் ஆசீர்வதித்து, அவர்களுக்குச் சகல சம்பத்தும் அளிப்பார் களாக. ஷை கோவில் குருவும், அதன் பங்குக் கிறீஸ்துவர்களும், திருயாத்திரைக்காரர்களும், அங்கு விஜயஞ்செய்து திருநாள் வைபவத்தைச் சிறப்பித்த ஷை அதிமேற்றிராணியார் அவர்க ளுக்கும், மற்றுங் குருமார்களுக்கும் மிகவும் நன் றியறிந்திருக்கிறார்கள். பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவானவர் நம்மெல்லோருக்கும் புண்ய வரங்களையும், பரிசுத்த ஜீவியத்தையும், கடைசியில் நல்ல மரணத்தையும், நித்தியாகந்த மோட்சபாக்கியத்தையுந் தந்தருள்வாராக. மேலும் இவ்வூரிலுள்ள ஏராளமான இந்துக் களுக்கு தேவனுடைய இராட்சியம் வருவதாக.

ஆரம்பாக்கம், } இப்படிக்கு,
1—3—1919. } எஸ். எம். எப். இன்னசிநாதர்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

சமாதான முடிவு.—நாளது ஏப்பிரல் மீ 30-ம் தேதிக்குள் ஜெர்மனியுடன் சமா தான உடன்படிக்கை ஷரத்துடன் முடி வாகிவிடுமெனச் சொல்லப்படுகிறது.

சென்னை சட்ட நிருபண சபை.—இச் சபையில் இப்போது இருக்கும் அங்கத் தினர்களின் உத்தியோக காலம், வருகிற சூன்மீ 3-தோடே முடிவடைந்துபோகிற படியால், இவர்களுக்குப்பதில் வேறு அங் கத்தினரைத் தெரிந்தெடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அரிவாளுக்கு இரையானார்கள்.—திரு வடமருதூருக் கருகிலுள்ள ஆட்டுச்சேரி யென்னுங்கிராமத்தில், ஒருநிலத்திலுள்ள பயிர் அறுவடையாகுங்காலத்தில், தானி யத்தைப் பகிர்ந்துகொள்ளும் விஷயமாய் பங்காளிகளுக்குள் உண்டான சச்சரவில், பயிர் அறுக்கும் அரிவாளால் ஒருவரை யொருவர் தாக்க, நால்வர் காயப்பட்டிறந் தார்களென்றும், பலர் பெருத்த காயம் பட்டார்களென்றும் சமாசாரம் எட்டுகி றது. என்னே மனுஷனின் பொறுமை!

யுத்தத்திற்காக சென்னை செய்த வுதவி.—யுத்த சகாய நிதிக்காகச் சென்னையில் வசூலானது ரூ. 80 லட்சத்துக் கதிகம். இதைக்கொண்டு முறையே "மதராஸ்", "சிக்கிம்" என்னும் இரண்டு ஆஸ்பத்திரிக் கப்பல்கள் தயாரித்துக் கொடுக்கப்பட்டன. 352 குதிரைகளும், "மதராஸ் கார்டனர்ஸ் கோர்" என்னுந் தோட்டக் காரர்கள்பட்டாளமும் சவதரித்து அனுப் பப்பட்டன.

யுத்தத்தின் கோரம்.—ஐரோப்பிய யுத் தம் செய்த நாசம் இப்படிப்பட்டதா யிருந்ததென்று இனிவரும் சந்ததிகள் கண்டறியும்வண்ணம், ஈப்ரஸ் பட்டணம் இப்போது நாசமாக்கப்பட்டிருக்கிற படியே விட்டுவைக்கும்படி பெல்ஜியம் கவர்ண்மென்டார் தீர்மானித்திருக்கிறார் கள். இப்பட்டணத்தில் குடியிருந்த ஜனங்களுக்கு வேறு இடத்தில் புதிய வூர் ஒன்று கட்டிக்கொடுக்க ஏற்பாடு நடந்து வருகிறது.

சென்னைக் கவர்னர்.—தமது உத்தி யோக காலத்தின் கெடுவு முடிந்துபோன கவர்னராகிய மேன்மைதங்கிய பென்ட் லான்டு பிரபுவும், அவர் பத்தினியாரும் சென்ற மார்ச்சுமீ 29-ம் தேதியன்று இங்கிலாந்துக்குப் பிரயாணமாயினார்கள். புது கவர்னராகிய மேன்மைதங்கிய வில் லிங்டன் பிரபு அவர்கள் இந்த ஏப்பிரல்மீ 12-ம் தேதி வந்து தமது அலுவலை ஒப்புக் கொள்ளுந்தினையும் கனந்தங்கிய சர். அலெக்சாந்தர் கார்டியூ துரையவர்கள் ஆக்டிங் கவர்னராய் அலுவல் பார்த்து வருவார்கள்.

வருமான வரி.—சில காலத்துக்கு முன்னிருந்தபடி இந்த வருமான வரியை குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும் எங்கே விதித்துவிடப்போகிறார்களோ வென்று ஏழை ஜனங்கள் ஏங்கியிருந்தார் கள். ஆனால் அப்படிச் செய்யவில்லை. அதற்குமாறாக, இப்போது வரி விதிக்கப் பட்டுவரும் தொகையின் அளவை உயர்த் திவிட்டார்கள். அதாவது, வருஷத்தில் 1,000 ரூ. அல்லது மாசத்தில் ரூ 83-5-4 வருமானமுள்ளவர்களிட மிருந்துதான் இப்போது வரி வாங்கப்பட்டுவருகிறது. ஆனால் இனிமேல் இப்படிப்பட்டவர்க ளுக்கு வரியில்லை வருஷத்துக்கு இரண் டாயிரம் ரூபாய், அல்லது மாசத்துக்கு ரூ. 166-10-8 வருமானமுள்ளவர்களிடமிருந் துதான் அவ்வரி வசூலிக்கப்படும். இது ஷை குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு விசேஷமாய் இந்தப் பஞ்சக்காலத்தில் எவ்வளவோ சகாயம்.

ரௌலெட் மசோதாக்கள்.—இராஜத் துவேஷ மசோதாக்கள் இரண்டும் இந் தியா கவர்ண்மென்ட் சட்ட கிரூபணச் சபையில், பெரும்பாலோரால் சட்டமாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. இராஜப் பிரதிநிதியவர்கள் சம்மதமும் அவைக ளுக்குக் கிடைத்துவிட்டது. இனி மாட் சிமைதங்கிய சக்கிரவர்த்தியவர்கள் சம்ம தம் ஒன்றே பாக்கி. இச்சட்டங்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்துவந்தவர் கள், கடைசியாய்ச் சக்காவர்த்தியவர்கள் அதை அங்கீகரிக்காவண்ணம் அவர்க ளுக்கு மனுசெய்யப்போவதாய் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

மண்ணெண்ணெய் பஞ்சம்.—கிரிசலை யில் என்னும் மண்ணெண்ணெய்க்கு வந்த பஞ்சம் கூடியசீக்கிரத்தில் நிவர்த்தியாய் விடுமென உத்தேசிக்கப்படுகிறது. ஏனெ னில், இவ்வெண்ணெய் கொண்டு ஒரு கப் பல் இப்போது வந்திருக்கிறதாம். ஆனல் அரிசி, நல்லெண்ணெய், மிளகாய், பருப்பு முதலிய உணவுப் பொருட்களின் விலை யிறங்காமல் ஏறிக்கொண்டுவருகிறது. ஏழைகள் ஏங்கித் தவிக்கிறார்கள். இவர்க ளுக்கு விமோசனம் எப்போது வருமோ ஈசன்தான் அறிவார்.

"ஜஸ்டிஸ்" பத்திரிகை.—பிராமண ரல்லாதார் இயக்கத்தின் அங்கமாகிய "ஜஸ்டிஸ்" என்னும் ஆங்கிலப் பத் திரிகையின் இரண்டாம் வருஷ நிறை விழாக் கொண்டாட்டம் சென்றமீ 8-ம் தேதி நிறைவேறியது. கனந்தங்கிய சிங்கம் பட்டி ஜமீன்தார் அவர்கள் அக்கொண் டாட்டத்தின்போது அக்கிராசனம்வகித் தார்கள். அவர்கள் செய்த உபந்நியாசத் தில், ஷை இயக்கத்துக்கு மூலாதாரமாய் நின்று உழைத்துவரும் டாக்டர் நாயரை யும், திவான்பஹதூர் தியாகராய செட்டி யாரையும் அவ்வியக்கமாகிய உலகத்துக்கு முறையே சூரியன், சந்திரன் என உருவ

கப்படுத்திக்கூறி யுபசரித்தார்கள். அவ் வுவமானம் அம்மகான்களுக்குச் சால அமையும்.

யுத்த நஷ்ட ஈடு.—ஜெர்மானியாதிய சத்துருதேசங்கள், யுத்தத்தினலேற்பட்ட நஷ்டத்துக்கு ஈடாக ஐக்கிய தேசங்க ளுக்கு முப்பத்தாறுபிரங் கோடி ரூபாய் கொடுக்கவேண்டுமென்று யுத்த நஷ்ட மீட்டுக் கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார் களாம். இவ்வளவு பெருந் தொகையை ஒருமட்டாய்க் கொடுக்கமுடியாததலால், ஆயிரத்தைந்நூறு கோடி ரூபாய் உடனே உரொக்கமாகவாவது, பொன், சாமான் கள், விளைப்பொருள்கள், கப்பல்கள்முதலி யவையாகவாவது கொடுக்கப்படவேண்டு மென்றும், மற்றத் தொகையை 25 அல் லது 35 வருஷங்களுக்குள் தவணையாகக் கொடுத்துச் சரிசொல்லக் கடவார்களென் றும் நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன.

ஆகாயவிமானத்தின் வேகம்.—லெப்டி னெண்ட் D. ராபர்ட் பேகர் என்ற வொரு வர் 20 மினிட்டு நேரத்துக்குள் 90 மைல் தூரம் பறந்துசென்றாராம், இக்கணக் கின்படி 1-மணி நேரத்துக்கு 270 மைல் தூரம் பறக்கலாமென்று தெரியவருகிறது. அப்படியானல் தற்போது செங்கல்பட்டு முதலிய வெளியூர்களிலிருந்து சீசன் டிக் கட் வாங்கிக்கொண்டு சென்னைக்கு அன்று டம் வந்துபோகிற வக்கீல்களும் பாரி உத்தி யோகஸ்தர்களும், சென்னை இராஜதானி யைச்சேர்ந்த எவ்வளவு தொலைதூரமான இடங்களிலிருந்தும் இரண்டு மூன்று மணி நேரத்துக்குள் சென்னைக்குவந்து போகலாமல்லோ?

ஸ்ரீமான் ஜி. ஞானதிக்கம் பிள்ளை.—சென்னை, மீர்சாபேட்டை நிவாசியாகிய இவர் ஸ்பென்சர் கம்பெனியில் தாம் வகித்துவரும் உத்தியோகத்தை மிக்க நேர் மையாயும் சமர்த்தாயும் கண்ணுங்கருத்து மாயும் செய்து வருவதின்நிமித்தம், ஷை கம்பெனியாரால் ஒரு பொற்கடியாரமும், தலீமன்னர் தென்னிந்தியா ரெயில்வே உத்தியோகஸ்தரால் ஒரு பொற் பதக்க மும் சமீபத்தில் பரிசளிக்கப் பெற்றார். இவர் ஒரு நல்ல கத்தோலிக்கராயும், குரு பக்தியுள்ளவராயும், இராஜ விசுவாசியுமா யிருப்பதுடன் பரோபகார சிந்தை யு முடையவர். நிகழ்ந்த ஐரோப்பிய யுத்தத் தின் 3-வது வருட கொண்டாட்டத்தின் ஞாபகார்த்தமாக தம்முடைய சொந்த செலவில் 200 ஏழைகளுக்கு அன்னதான மும் அளித்துள்ளார். இவ்வுத்தமரை நல் லாயன் ஆசீர்வதிப்பாராக.

கப்பல்கள் ஒப்படைக்கப்பட்டன.—யுத்த நிறுத்த உடன்படிக்கையின்பிரகா ரம் ஜெர்மனிக்குச் சொந்தமான வியாபா ரக்கப்பல்கள் 150, 18 லட்சம் டன் எடை யுள்ள் சாமான்களைக் கொண்டுபோகத்தக் கவை, நேச ராஜ்ஜியங்களுக்கு ஒப்படைக் கப்பட்டுப்போயின. இது மெத்த அரு கூலமான காரியம். இந்த மரக்கலங்களைக் கொண்டு ஐரோப்பிய சாமான்கள் தாராள மாய் இந்தியாவுக்கும் இன்னுமற்ற நாடு களுக்குங் கொண்டுவரப்படலாம். இனிப் படிப்படியாய் இந்தியாவில் தினிமணி இரும்பு பளிங்கு சாமான்கள் முதலிய ஐரோப்பிய சாமான்கள் வந்து சேரும். நமது இடைஞ்சல்கள் தீரும். ஷை மரக் கலங்களைப் பெற்றுக்கொண்டபின், ஐக்கி யகட்சியார் ஜெர்மனிக்கு வேண்டிய உண வுப்பொருட்கள் சப்ளை செய்வதாய் தீர் மானித்திருக்கிறார்கள்.

"பரதபோதினி".—இப்பத்திரிகை யின் ஜனவரி, பெப்ரவரிமீ த்துக் சஞ்சிகை நமது பார்வைக்கு எட்டியது. அது வழக் கம்போல் நல்ல தமிழில் எழுதப்பட்டுள் ளது. விஷயங்களும் நல்ல விஷயங்களே. இதிலுள்ள "பெண் கல்வி" என்னும் வியா சத்தில் பெண்களுக்கு ஆங்கில முறைப் படி உயர்தரக்கல்வி கூடாதெனக் கண் டனஞ் செய்யப்பட்டிருக்கிறது. இந்த அபிப்பிராயம் நமக்கு ஒப்பாகாது. பெண் களுக்குக் கல்வி நல்லது என்று ஏற்படுங் கால, அதிக கல்வி அதிக நல்லதாகுமே யொழிய ஆகாததாகாது. உயர்தரக்கல்வி இக்காலத்து நிலைமையில் இத்தேசத்துப் பெண்களுக்கு அவசியமில்லையென்பது வேறு. ஆனல் அது பெண்களுக்குக் கூடாது, ஆகாது, தகாது என்பதன் நியா யம் நமக்கு நன்கு புலப்படவில்லை.

குருட்டுப்பையன் பரிட்சையில் தேறி னன்.—கல்கத்தாவிலுள்ள குருடர் பள் ளிக்கூடத்தில் மெற்ரிக்குலேஷன் பரிட்சை

வரையில் அவர்கள் படிக்கவேண்டிய வசதிகள் அனைத்தும் செய்திருப்பதாகத் தெரிகிறது. சமீபத்தில் அப்பள்ளிக்கூடத்தில் படித்த நாகேந்திரநாத் சென் குப்தா என்னும் அந்தகன் ஒருவன் மெற்ரிக்குலேஷன் பரிட்சையில் தேறினதாகச் சொல்லப்படுகிறது. அவனுக்கென்று விசேஷ கேள்விக் கடுதாசியும், ரேகா கணிதப் பலகையும், மற்றும் உபகரணங்களும் தயாரிக்கப்பட்டன. அவைகளை அந்தகன் தடவித் தடவிக் கேள்விகளைத் தெரிந்து, அவற்றிற்கு வேண்டும் மறுமொழிகளை அதற்கென்று நியமிக்கப்பட்ட ஒருவனுக்கு (இலேகனுக்கு)ச்சொல்ல அவன் அவ்விடைகளை யெழுதிக்கொண்டுவந்தான். இவ்வாறே ஒவ்வொரு கேள்விக் கடுதாசிக்கும் விடையெழுதிக்கொடுத்துப் பரிட்சையில் தேறினனும். என்னே ஆச்சரியம்!

உயர்குல மக்களின் சேதம்.—ஐரோப்பிய யுத்தத்தில் மாண்டுபோனஜனங்களின் தொகை 60 லட்சமென மதிப்பிடப்பட்டிருக்கிறதல்லவா? இதில் பெரும்பான்மையோர் சாமான்ய ஜனங்களானலும் உயர்குலமாக்கள் வெகுபேர் சேதப்பட்டுப் போனதாகத் தெரியவருகிறது. இவர்களின் விவரம் பின்வருமாறு:—

இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்	1
பிரபுக்கள்	23
பிரபுக்களின் மக்கள்	151
பார்னெட் என்னும் பட்டவர்த்தனர்	38
இவர்கள் மக்கள்	157
"நைட்ஸ்" என்னும் பிரபுபட்டம் பெற்றவர்	14
இவர்கள் மக்கள்	277
பார்லிமென்ட் மகா சபை மெம்பர்கள்	14
கம்பானியன் என்னும் பட்டதாரிகள்	913
	1588

மைசூர் குடும்ப சம்ரக்ஷணை சங்கம்.—இந்தச் சங்கத்தின் 17-வது வருஷாந்தரிப்போர்ட்டு (அறிக்கைப் பத்திரம்) வரப்பெற்றோம். கத்தோலிக்கு இந்தியர்களால் ஏற்படும் ஸ்தாபனங்கள் பெரும்பாலும் ஒங்காதிருக்கு மிக்காலத்தில், இச்சங்கம் தினே தினே விருத்தியடைந்துவருகிறதைப் பார்க்க நமக்கு மெத்த சந்தோஷம் உண்டாகிறது. இது ஸ்தாபகமான முதல் வருஷத்தில் கத்தோலிக்கு குடும்பங்களுக்குக் கொடுபட்ட போஷணைத் தொகை ரூபா 672. ஆனல் பிரஸ்தாப வருஷத்தில் கொடுபட்ட போஷணைத் தொகையோ 1,688 ரூபாயாகும். இத்தொகை 16 குடும்பங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இச்சங்கம் அக்கிராசனாதிபதியாகிய சங். ஜே. பி. செர்வாந்தோண் சுவாமிகளுடைய மேற்பார்வையில் காரியதரிசியாகிய மிஸ்டர் கே. ஜோசப்பு என்பவருடைய உழைப்பினல் நல்ல வேலை செய்து வருகிறது. இதில் தற்காலம் 1,006 மெம்பர்கள் இருக்கிறார்கள். இன்னும் அதிக பேர்கள் சேர்ந்து, இதன் பிரயோஜனத்தை விருத்திசெய்வார்களெனக் கோருகிறோம். இச்சங்கத்தைப்பற்றி மற்றும் விவரங்கள் வேண்டுவோர்கள், பெங்களூர், கிளீவ்லாண்டவுண்போஸ்ட், மைகாரியதரிசிக்கு எழுதிக்கொள்ளலாம்.

சென்னை டிராம்வே வேலை நிறுத்தம்—சென்னை டிராம் வண்டி வேலைக்காரர்கள் தங்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்றும், விடுமுறை அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்றும், உடுப்புகள் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்றும் அதிகாரிகளைக் கேட்க, அவர்கள் திருப்திகரமான மறுமொழிகொடாததால், எல்லோரும் ஒரேகட்டாகவேலைக்கு வராமல் நின்றுவிட்டார்கள். ஆகையினல் சென்ற மூன்று வாரங்களாகச் சென்னையில் டிராம் வண்டிகள் ஓடுவதில்லை. உள்ளூர் ஜனங்களும் வெளியூர் ஜனங்களும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போவதில் அசௌகரியப்படுகிறார்கள். ஜட்கா வண்டிக்காரர்களுக்கும், ரிக்ஷா வண்டிக்காரர்களுக்கும் இப்போது கொண்டாட்டமாயிருக்கிறது. சாதாரணகாலத்தில் 4-அணு கூலி கேட்கிறவன் இப்போது முக்கால் ரூபாய், ஒரு ரூபாய் கூலி கேட்கிறன். கொடுக்கக்கூடியவர்களும், நடக்க முடியாதவர்களும் கொடுத்துத் தீரவேண்டியிருக்கிறது. மைடிராம்வே வேலைக்காரர்களெல்லாரும் ஒரு சங்க மேற்படுத்திக்கொண்டு ஏகோபித்து ஒரு மனமாய் காரியங்கள் நடத்துவதாலும், டிராம்வே அதிகாரிகள் பிடிவாதமாய் அவர்கள் கேட்பதை முழுதுங் கொடோமென்று மறுப்பதாலும், டிராம் வண்டி மறுபடியும் சீக்கிரத்தில் ஓடுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

சென்னை கவர்ண்மென்ட் ஆபீசு.—இந்த ஏப்பிரல் மாதம் 15-ந் தேதிமுதற்கொண்டு இந்த ஆபீசு கோடைகாலவாசத்திற்கு, வழக்கம்போல் நீலகிரி மலைக்குப் போய்விடுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நித்திரை வியாதி.—ஆப்பிரிக்கா தேசத்தில் தூக்க வியாதி என்ற ஒரு தூதன வியாதி கிளம்பியிருக்கிறதாம். இவ்வியாதி கொண்டவர்கள் அசக்தியினல் ஸ்மரணையற்றுத் தூங்கிக்கொண்டேயிருந்து அப்படியே மரித்துப்போகிறார்களாம். ஷை தேசத்தைச்சேர்ந்த காங்கோ என்னும் மர்காணத்திலுள்ள ஜனங்களில் ஏறக்குறைய சில பேர் இந்த வியாதியால் இப்போது பீடிக்கப்பட்டிருக்கிறார்களென்று தெரியவருகிறது.

கம்பியில்லா வாய்த்தந்தி.—ஜோனஸ்ட் அலேச்சாண்டர் என்னும் அமெரிக்க சாஸ்திரியொருவர் கம்பியில்லாமல் வாய்த்தந்தி பேசும் சூழ்ச்சியொன்று செய்து சித்தி பெற்றனர் எனச் சொல்லப்படுகிறது. நியூயார்க் நகரிலிருந்து நியூசிலாண்டிலுள்ள தம் சிநேகிதரோடு வெகு சுலபமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தனராம். இந்த யந்திரத்தைக்கொண்டு 12,000 மைல் தூரத்திற்கப்பால் உள்ளவர்களோடு எளிதாய் வார்த்தையாடலாமென்று சொல்லப்படுகிறது. இதுவும் நடக்கக்கூடாத காரியமல்ல.

திருச்சி மேற்றிராணியார் நிருபம்.—திருச்சினுப்பள்ளி மேற்றிராணியாராகிய கனம் பெசாந்தியர் ஆண்டவர் அவர்கள், இந்த வருஷத்துத் தபசுகால நிருபத்தில் பிறர்மேல் புறங்கூறல், அவதூறு, ஆவலாதி பேசுதலாகிய விஷயத்தின்பேரில் தம்முடைய பிரஜைகளுக்கு வெகு நேர்த்தியான புத்திமதிகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்நிருபம் அனேவோராலும் அநேகமுறை படிக்கப்படத்தக்கது. நாவினல் ஒவ்வொரு நிமிஷமும் கட்டிக்கொள்ளப்படும் பாவங்கள் அளவிறந்தன. நாவை அடக்கியாளுந் தகைமையுண்டானல் நம்மிடத்தில் பாவங்கள் குறைந்துபோகும். நாவை அடக்கியாள்பவனே உத்தம புருஷன். இந்த அதிமுக்கிய விஷயமாகிய நாவடக்கத்தைப்பற்றி இன்னும் அதிகமாக அறிய விரும்புவோர்கள், 1913ஹூ ஆகஸ்டுமீ்த்து "நல்ல ஆயன்" சஞ்சிகையின் 181-வது பக்கத்தைப் பார்க்கலாம். அதில் "அவதூறு" என்னுந் தலைப்பின்கீழ் இவ்விஷயத்தைப்பற்றிச் சற்று விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

கிராமப் பஞ்சாயத்துக்கள்.—கொச்சி ராஜ்ஜியத்தில் பஞ்சாயத்துக்கள் மிக்க திறமையுடன் வேலை செய்துவருகின்றனவென்றும், இன்னும் இரண்டு வருஷங்களுக்குள், அவ்விராஜ்ஜிய எல்லைக்குள், பஞ்சாயத்துச் சபையில்லாத கிராமமே குதிரைக் கொம்பாகிவிடுமென்றும் அதன் திவான் சொல்லுகிறார். கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டுபோனல் ஜனங்களுக்குப் பலவிதத்திலும் சௌகரியங்கள் கிடைக்கும். ஏழைகள் தாங்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பொருளை, வக்கீல்களுக்கும், கோர்ட்டுகளுக்கும், முத்திரைக்கும் கொடுத்துப் பாழாக்காமல் ஜீவனம் செய்ய வழியுண்டாகும். முனிசிப்பு கோர்ட்டு, ஜில்லா கோர்ட்டு முதலிய கோர்ட்டுகளுக்கும் வேலை, சிரமம், செலவு குறைந்துபோகும். நமது பிரிட்டிஷ் இராச்சியத்திலும் இவ்விதம் ஏற்பாடு செய்யப்போவதாகச் சொல்லப்படுகிறது. இது சீக்கிரத்தில் செய்யப்படுமெனக் கோருகிறோம்.

லண்டனில் உணவுப் பொருட்கள்.—உணவுப் பொருட்களின் விலை நக்தேசத்தில் உயர்ந்துபோனதைப்பற்றி வெகு வாய்க் கஷ்டப்பட்டுவருகிறோம். இங்கிலாந்தின் தலை நகரமாகிய லண்டன் பட்டணத்தில் அவைகளுக்குள்ள விலையைக் கேட்கப்போனலோ, மெத்த பயங்கரமாயிருக்கிறது. ஒரு எலுமிச்சம்பழத்தின் விலை 10-அணுவாம். முட்டை ஒன்று 5½-அணு. ஒரு முசல் 10½-ரூபாயாம். தினிமணிகளின் விலை நூற்றுக்கு முந்நூறு பங்கு அதிகப்பட்டுப்போயிற்றும். இவ்விடத்திற்போலவே அங்கும செயில்வே

பிரயாணக் கஷ்டமும் பெரிதாயிருக்கிறதாம். ஒரு முதற் கிளாஸ் வண்டியில் 14 பேருக்குத்தான் இடமுண்டாம். ஆனல் அதில் பிரயாணஞ்செய்த ஒருவர் சொல்லுகிறார்: தாமிருந்த வண்டியில் இந்த பதினன்கு பேருக்குமேல் ஒன்பது பேர் நின்றுகொண்டும், ஒரு பையன் தொப்பி மாட்டும் கிளை ஒன்றில் தொத்திக்கொண்டும் வந்தானும். முதல் வகுப்பு வண்டியில் இப்படியானல் மற்ற கீழ்த்தர வகுப்புப் பிரயாணிகளின் கதியைச் சொல்லவும் வேண்டுமா?

வகுப்புவாரி பிரதிநிதித்துவம்.—லார்டு சின்னுவுக்குச்சமீபத்தில் அளித்தவிருந்து கொண்டாட்டத்தின்போது, இந்தியா செக்ரிட்டரியாகிய, மிஸ்டர் மாண்டேகு பேசின பேச்சிலிருந்து, இந்திய இராஜாங்க விஷயத்தில், வகுப்புவாரி பிரதிநிதித்துவம்கொடுக்கப்படுமென்றுஎண்ணவிடமுண்டு.

ஆயுதச் சட்டம்.—இதன் விஷயமாய் இந்தியர்களுக்கு பெரிய மனஸ்தாபமிருந்துவருகிறதுரகசியமல்ல. இப்போது ஒருவாறு இந்த மனஸ்தாபத்துக்கு இடமில்லாதபடி இந்தச் சட்டம் மாற்றப்பட்டுப்போயிற்று. இதன்படி ஐரோப்பியரானலும், இந்தியரானலும் எவரும் தாரதம்மியமின்றி லைசென்சு பெற்றுக்கொண்டே ஆயுதங்களைக் கையாளவேண்டும். இனிமேல் ஐரோப்பியர்கூட லைசென்சில்லாமல் ஆயுதத்தை வைத்திருக்கப்படாது.

பசு பேசுகிறது.—கல்கத்தாவிலே ஆடுமாடடிக்கும் சாலையில் ஒரு பசுவை ஒருவன் வாள்கொண்டு வெட்டப்போனன். கத்தியை அவன் ஓங்கினவுடனே அவனை நோக்கி "என்னைக் கொல்லாதே" என்று அப்பசு தெளிவாகக் கத்தியதாம். இதைக் கேட்ட அவன் நடுநடுங்கி கூச்சலிட்டானும். அருகிலிருந்த ஒரு ஸார்ஜெண்ட் அக்கூச்சலைக்கேட்டு ஓடிவந்து விசாரித்தார். விசாரித்து "பசுவாவது பேசவாவது வெட்டு" என்று சொன்னர். உடனே அவன் வெட்டப்போனன். அப்பொழுதும் அப்பசுவானது "என்னைக் கொல்லாதே" என்று சத்தமிட்டதாம். இந்த அதிசயத்தை நேரில்கண்ட பலர் பெருமிப் படைந்ததாகவும், அப்பால்அப்பசு கொல்லப்படவில்லை என்பதாகவும், சொல்லப் படுகிறதென்று "வங்காளி"ப் பத்திரிகை சொல்லுகிறது. இது எவ்வளவு தூரம் மெய்யோ!

உணவுப் பொருள் கான்பரன்ஸ்.—சென்றமீ 16-ந்தேதி போர்ட் சென்ட் ஜியார்ஜ் மண்டபத்தில், தற்காலம் உணவுப் பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு என்ன வழிகளைத் தேடுவதென்று யோசிப்பதற்காக, உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தரல்லாதவர்கள் அடங்கிய கான்பரன்ஸ் கூட்டம் ஒன்று கூடிற்று. கனம் அலெக்சான்டர் கார்டியூ அக்கிராசனம் வகித்தார். கிருஷ்ணை, கோதாவரி, தஞ்சாவூர், மதுரை, மலையாளம் முதலிய எட்டுஜில்லா கலெக்டர்களும்பிரபல வர்த்தகர்கள், சட்ட நிரூபண சபை மெம்பர்களாகியவர்களிற் பலரும் விஜயஞ் செய்திருந்தனர். அக்கூட்டத்தில் பின்வருந் தீர்மானங்கள் செய்யப்பட்டன:—(1) ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்துக்கு, அரிசி, கோதுமை, கொள்ளு முதலிய உணவுப் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு இப்போதுள்ள தடைகள் அவசியம்; அவைகளை ரத்து செய்யப்படாது. ஆனல் மிராசுதாரர்கள் தங்கள் சொந்த சாப்பாட்டுக்கு அரிசியை ஏற்றுமதி இறக்குமதி செய்துகொள்ளலாம். (2) எந்தெந்த இடங்களில் ரஸ்தா, கால்வாய் மார்க்கமாய் போக்குவருத்தில் தடை யேற்படுத்தவேண்டுமோ அவ்விடங்களில் ஏற்படுத்த கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். கோதாவரி கிருஷ்ணை, குண்டூர் ஜில்லாக்களை ஒரு தொகுதியாக்கி, அவைகளிலுள்ள உணவுப் பொருள்களைக் கட்டுப்படுத்த ஒரு டைரக்டரை நியமிக்கவேண்டும். (3) பர்மா அரிசியைத் தருவிப்போர் இரண்டு மணங்கு எடைகொண்ட மூட்டைக்கு சகலசெலவுகளும்போகநாலணவேலாபம் பெறவேண்டும். எட்டணு லாபம் பெறலாமென்று முன்னம் இருந்த ஏற்பாடு இனி மேல் கூடாது. (4) பர்மா அரிசியைத் தருவிப்போர் தங்களுக்குக் கிடைக்கும் லைசென்வில் கண்டபடி நடப்பார்களென்பதற்கு ஜாமீனுக டன் ஒன்றுக்கு 50-ரூபாய் வீதம் பணம் கட்டவேண்டும். (5)

கிருஷ்ணை, கோதாலரிப் பிராந்தியங்களிலிருந்து அரிசியைத் தருவிப்பவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் லைஸென்வில் கண்டபடி நடப்பதற்கு ஜாமீனுக டன் ஒன்றுக்கு 100-ரூபாய் வீதம் கட்டவேண்டும். (6) தானியங்கள், இதர உணவுப் பொருள்கள் இவைகள் வெளி ஜில்லாக்களிலே இவ்வளவு விலைக்கு மேல் விற்கப்படக்கூடாதென்று விலையை நிர்ணயிக்கலாமென்பது அனுபவத்திற்கு ஒத்துவராத காரியம். (7) அவசரம் நேருமேயானல், ஜில்லா கலெக்டர்கள் சில்லரையில் உணவுப் பொருள்களை விற்க ஏற்பாடு செய்யலாம். (8) சென்னை நகரிலே அரிசிமுதலிய உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தல் அனுபவத்திற்கு ஒத்துவராதானும், கார்பொரேஷனும் இதர சங்கங்களும் உணவுப் பொருள்களை சில்லரையில் விற்பதற்கு டைரக்டர் ஆப் ஸிவில் ஸப்ளைஸ் தக்க வசதி தேடிகொடுக்கவேண்டும்.

புரத்தாகுடி தியான அறிக்கை.

இவ்வூரில் எப்ரல்மீ 6உ ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் தியானந் துவக்கி 10உ வியாழக்கிழமை காலையில் முடியும். தியானப் பிரசங்கம் செய்பவர் கொன்னகுடி பங்கு சங். K. ரத்தினநாத சுவாமியார் அவாகள்.

பாஸ்குத் திருநாள் அறிவிப்பு.

புதுக்கோட்டையில் அர்ச்சிபரிஷ்ட வாரத்தின் பெரிய வியாழக்கிழமை 7½-மணிக்குத் திவ்விபூசையும், பின் தேவநற்கருணை ஸ்தாபகமும், ஜாதனையும் நடக்கும். சேசுநாதர் சுவாமியின் திருப்பாடுகளின் பாஸ்கு வெள்ளிக்கிழமை இரவும், உயிர்த்தபாஸ்கு சனிக்கிழமை இரவும் வெகு விமரிசையுடன நடத்தப்படும். ஞாயிறறுக்கிழமை காலை 4½-மணிக்கு பாஸ்குக் கொண்டாடகையில திவ்யபூசை நடக்கும். 9-மணிக்குக் கோவிலில் சிறப்பாசீர்வாட்டுப் பூசை நடக்கும். ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் 5½-மணிக்கு மிகுந்த ஆரம்பாரச் சிறப்போடு திவ்யநற்கருணைச் சுற்றுப்பிரகாரம் செய்யப்படும். பாஸ்கு பார்க்கவருகிற சகல கிறீஸ்துவர்களும் திவ்யநற்கருணைச் சுற்றுப்பிரகாரத்துக்கு இருந்து, நமதாண்டவராகிய சேசுநாதர்சுவாமியுடைய ஆசீர்வாதம் பெற்றுப்போகவேண்டியது. வியாழன், வெள்ளி, சனி யிந்நாட்களில் பாஸ்கு சடங்குகள் நடத்தப்படும்.

REV. JUSTIN VION S. J.,
நீதிநாதர் சுவாமி,
பங்கு சுவாமியார்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

மார்தப்பம்.

கண்ணனூர் நிவாசியும் லேகிரி வெலிவடன் ஆபீஸர் மேஸையில் ஒபின்கூலராகவுமிருந்து காலஞ்சென்ற D. Salomon அவர்களின் கடைசி புத்திரியும், என இஷ்ய சகோதரனின் பிரிய பத்தினியுமாகிய ஆரோக்கியமரி அம்மாள் என் சகோதரனே மணாந்த 11-வருடத்தில் ஒரு மகனையும், 4 பெண மக்களையும் கர்த்தர் ஆசீரால் எவ்வித தனபயங்களில்லாமல் ஈனறு கலசுகத்துடனிருக்கும்போது தனனுடைய 6-வது குழந்தையின கர்ப்பகாலத்தில் சென்ற 9-2-19தல் திடீரென இடுப்பு குடைச்சலகண்டு அதிக கஷ்டத்துடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட அங்கே தனக்கு அம்மை எனனும் கொடிய நோய்கண்டு அதிகமாய் தன்னுல பொறுக்க முடியா கஷ்டத்தை அடையவும், உடனே நற்திருச்சபை பரம விசாரணை குருவானவரை அழைத்து அவஸ்தை என்னும் தேவகிரியையை பெற்று திடீரென ஜன்னிகண்டு, சென்ற 25-2-19 செவ்வாய்க்கிழமை பகல் 12-மணிக்கு ஆத்துமம் தன பரமகர்த்தாவிடம்பாய்ச்சேர, எமையும் 5 மக்களையும் ஆழ்ந்த துக்கத்திலமிழ்த்திகர்த்தருக்குள் நித்திரையடைந்தாள். அன்று மாலை நமது திருசசபை வழக்கத்தின்படி மிக சடலம் மிகவும் வந்திக்கத்தக்க சவகை பெலின குருவானவரால் மாதிரிக்கப்பெற்று உரிசம கல்லறையில் கலஅடக்கம் செய்யபட்டது. இந்த ஆத்தும இளைபபாறறிக்காக தவகள ஜெபவகனோடு ஒரு பர., பர. வேண்டிக்கொள்ள மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளும் அடியன,

M. A. SANTIAGO,
மாண்ட மனைவியை பினபறறும் நிர்ப்பாக்கியன்.

9—3—1919. M. A. JACOB.

புதுப்பேட்டை.

Mr. P. S. C. பிரான்சிஸ் பிள்ளையுடைய அருமந்த குமாரனும், சென்னை மேட்டரென் ஆஸ்பிட்டல கம்பவுண்டரு மாகிய Mr. S. F. அலெக்ஸாண்டர்பிள்ளைக்குக்கண்ட விஷக்காய்ச்சல் சேசுவின் திருஇருதயத்தை நோக்கி வேண்டவே அக்காய்ச்சலநீங்கினும், அவர் அதேபலயீன முடைவயராகப் படித்த படிக்கையாயிருந்து, தந்தை தாய் சகோதரர் சகோதரிகள் தாத்தா வுடன் மற்ற உறவினர்களையும் பரதவித்துத் துக்கிக்கவைத்து, தமது 24-ம் பிராயத்தில் சேசுவின் திருஇருதயத்தையே நாவினால் உச்சரித்துக்கொண்டு பாக்கியமாக மரித்தார். மறுநாள் 17-ம் திகதி மாலை அவர் சடலம் திருச்சபை ஆசாரத்தின்படி கீழ்பாக்கத்துக் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது. இதைக் கண்ணுறுக்கும் அன்பர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர.. பிரி.. திரி. வேண்டிக்கொள்ள வெகுவாகக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அருமைக் குமாரனை யிழந்த பாவி.
P. S. C. பிரான்சீஸ் பிள்ளை,
தோத்திரம்.

வீரமாமுனிவர் ஔஷதசாலை.

"வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை" யானது காலுவித வியாதிகளையும் கண்டித்துப் போக்கும் அதிசய குணத்தைக்கொண்டிருப்பதனால் அதற்கு "சர்வரோக நிவாரணி" யென்னும் பேர்கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கட்டுக்கதையல்ல; கைகண்டது. பலலாயிரம பேர்களால் பரீட்சிக்கப்பட்டது. மேலும் பேர்போன ஓர் கத்தோலிக்குக் குருவானவரால் ஏழைகளின் பிரயோஜனத்துக்காக சுலமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. கத்தோலிக்குக் குருவானவர்கள், கன்னியாஸ்திரிகள், கிறீஸ்துவர்கள் முதலியோரால் கையாளப்பட்டுவருகிறது. அநேக சற்சாட்சிப் பத்திரங்களைப் பெற்றுள்ளது. ஒவ்வொருவரும் தமதம வீடுகளில கையிருப்பாய் வாங்கி வைத்துவைக்கத் தக்கது. குணம்மதவிர குற்றம் ஒருபோதும செய்யாதது. பத்தியம் வேண்டாதது. இதனை இதுவரையில் வாங்கி பரீட்சியாதவர்களும், அல்லது வாங்கி அரை குறையாய் அவசரமாய் உபயோகித்துப் பயன் பெறுமல் கைவிட்டவர்களும், மறுபடியும் அவசியம் வாங்கி பரீட்சித்துப்பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விலை 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு விலை ரூ 1 0 0.

தபாற் செலவு வி. பி. சார்ஜ் உள்பட ரூ 1 3 0.

வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தி. ம. மாணிக்கம் பிள்ளை,
போஸ்டு பாக்ஸ் நெ. 103,
மதராஸ்.

C. A. SILVEIRA,
Proprietor.

விளம்பரம்

ST. ANN'S ORPHANAGE RAFFLE.

அர்ச். அன்னம்மாள் அநாத பிள்ளைகளின் மடத்து லாட்டரி 7—5—19ல்.

250 பிரைஸ்கள்.

ரூபா 1,500லிருந்து ரூபா 5 வரையில் 250 பெயர்களுக்கு பிரைஸ்கள் கிடைக்கும். டிக்கட் 1-க்கு காலே அணு.

ST. ANTHONY'S ORPHANAGE RAFFLE (For Girls).

அர்ச். அந்தோனியார் அநாதைப் பெண் பிள்ளைகளின் மடத்து லாட்டரி 21—4—19ல்.

103 பிரைஸ்கள்.

டிக்கட் காலே அணு. ரூபா 1,000த்திலிருந்து 10 ரூபா வரையில 103 பெயர்களுக்கு பிரைஸ்கள் கிடைக்கும்.

22 டிக்கட்டுள்ள புஸ்தகத்துக்கு 2 பிரீ டிக்கட்டும், 2 புஸ்தகத்துக்கு 4 பிரீ டிக்கட்டும் 1 ஸ்பெஷல் டிக்கட்டும கிடைக்கும. கூமோனவர்கள் புத்தகத்துக்கு உடனே எழுதவும. டிக்கட் தேவையுள்ளவர்கள் பணம அனுப்பியாவது வி. பி. மூலமாவது தருவித்துக்கொள்ளலாம். வேண்டியவர்கள் அடியிற்கண்டவரிடம பெற்றுக்கொள்ளுங்கள். (வெளி காடுகளுக்கு வி. பி. மூலமாய் அனுப்பமுடியாது.

விலாசம்:—**M. M.** தோமாஸ் பிள்ளை,
உபதேசியார்,
ஓசூர், ரிமவுண்ட் டிபோ, P. O.,
தென் இந்தியா.

Address:—**M. M.** THOMAS PILLAI,
Cath. Catechist,
Hosur, Remount Depot, P. O.,
South India.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் கல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 17. | மே 1919. | இலக்கம் 5.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

ஞானஸ்நான சடங்குகளின்பேரில்

(முன் தொடர்ச்சி.)

பிறகு குருவானவர் குழந்தையின் நெற்றியிலும் மார்பிலும் சிலுவை அடையாளத்தைவரையும்போது பின்வருமாறு சொல்வார்: "உன்னுடைய நெற்றியின்பேரிலும் இருதயத்தின்பேரிலும் சிலுவை அடையாளத்தைப் பெற்றுக்கொள். பரலோக கற்பனைகளையனுசரிப்பதில் பிரமாணிக்கமாயிரு; அன்றியும் நீ சர்வேசுரனுடைய இருப்பிடமாகப்போகிறாயென்பதற்கொப்ப உன் நடவடிக்கைகளுமிருக்கக்கடவனவாக." நெற்றியிலும் மார்பிலும் சிலுவை அடையாளத்தைவரைவதானது, ஞானஸ்நானம் பெறப்போகிற குழந்தை மறுபடியும் கிறீஸ்துவக் குழந்தையாய்ப் பிறக்கிறதென்றும், அது கிறீஸ்துநாதருடைய போர்ச் சேவகனாகப்போகிறதென்றும், ஆனபடியால் "என்னைப் பின்செல்லயாதாமொருவன் விரும்புவானாகில் அவன் தன்னைத்தானே பரித்தியாகஞ்செய்து தன் சிலுவையை அநுதினமுஞ் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லக்கடவான்" (மத். XVI, 24) என்று நமதாண்டவர் திருவாய்மலர்ந்து திருவுளம்பற்றியிருக்கிறபடி அது தத்தளிப்புக்குந் திகிலுக்கு மிடங்கொடாமல், விசுவாசத்தில் நிலைநின்று பாவத்தையும் அபத்தத்தையும் தைரியமாய் எதிர்த்துப் போராடவேண்டுமென்றும் நமக்கு விளக்கிக்காட்டுகின்றது. இப்படியாக அக்குழந்தை சத்திய வேதத்தில் உறுதியாயிருப்பதற்காகவேண்டிய தேவானுக்கிரகம் அதற்குக் கிடைக்கும்படி குருவானவர் உடனே ஒரு ஜெபத்தை ஜெபிப்பார். மீளவும் குருவானவர் பிள்ளையின் தலையின்பேரில் தம்முடைய வலதுகரத்தை உயர்த்திக்கொண்டு வேறொரு ஜெபத்தையும் ஜெபிப்பார். குருவானவர் தமது கரத்தை இவ்வாறுக உயர்த்தி ஜெபிப்பதினால் திருச்சபையானது ஞானஸ்நானம் பெறுங் குழந்தையைத் தன் பாதுகாப்பில்வைத்துக்கொள்ளுகிறதென்றும், திருச்சபையின் மூலமாய் இக்குழந்தைக்கு ஏராளமான அருட்பிரசாதங்கள்

கிடைக்கு மாதலால் பசாசின் ஆட்சியை விட்டு விலகி, சேசுக்கிறீஸ்துநாதருடைய ஆட்சியின்கீழிருக்கச் சகல சௌகரியங்களும் அதற்குண்டென்றும், ஆனதுபற்றி அவருக்கு பிரமாணிக்கமுள்ள ஊழியனாயிருக்க அதற்கு யாதோர் இடைஞ்சலுமில்லையென்றும் அறிந்துகொள்வோமாக.

* * *

பிறகு குருவானவர் பிள்ளையின் வாயில் ஒரு சிறிது உப்பைப் போடும்போது "விவேகத்தின் உப்பைப் பெற்றுக்கொள். இது நீ இரட்சண்யமடைய உதவியாயிருக்கடவதாக" என்று சொல்லுவார். சுமார் திருச்சபையின் ஆரம்பத்திலிருந்துதானே அனுசரிக்கப்பட்டுவருகிற இந்த சடங்கிற்குப் பற்பல அருத்தங்களுண்டு. உப்பு கரிக்கும். இப்படியே ஞானஸ்நானம் பெறப்போகிறவனும் கிறீஸ்துநாதருடைய சீஷனென்னு முறையில் தனக்கு வரும் துன்ப துரிதங்களில் தத்தளியாமலும் தடுமாறுமலும் ஒரே நிலையாயிருந்து, அவைகளைத் தைரியமாய்மேற்கொள்ளத் தயாராயிருக்க வேண்டுமென்றும், உப்பானதுவாயில்போட்டமாத்திரத்தில் எப்படி கரைந்துபோகுமோ அப்படியே இத்துன்பங்களனைத்தும் இப்பிரபஞ்ச சீவியத்தோடு துரிதத்தில் முடிவுபெறுமென்றும், உப்பு போசன பதார்த்தங்களுக்குச் சுவையைத் தருவதுபோல தனக்குப் புண்யங்களைச் செய்வதில் பிரியமுண்டாகவேண்டுமென்றும் அவன் அறிந்துகொள்வானாக. அல்லாமலும், "உங்களுடைய பேச்சு எப்போதும் இனிதாகவும் உணர்வாகவும் இருக்கும்படி உப்பிட்டதாயிருக்கட்டும்" (கொலோ. IV, 6) என்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறபடி, உப்பானது விவேகத்துக்கும் அடையாளமாயிருக்கிறபடியால், ஞானஸ்நானம் பெற்போகிறவனும் விமரிசையுள்ள தன் பேச்சினாலும், நடவடிக்கைகளினாலும், வேதகற்பனைகளைப் பிரமாணிக்கமாய் அனுசரிப்பதினாலும், மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாய் விளங்கவேண்டுமென்றும் தெரிந்துகொள்ளக்கடவானாக. மேலும் பதார்த்தங்கள் கெட்டுநாறிப்போகாவண்ணம் உப்பு உபயோகிக்கப்படுகிறதல்லவா? அப்படியே ஞானஸ்நானம்பெறுகிறவனும் தன் ஆத்துமத்தை அசுத்தப்படுத்தி அதைக் கெடுத்துப்போடும்பாவம், தான் பெறும் ஞானஸ்நானத்தினால் நிர்மூலமாக்கப்படுமென்று உணர்ந்துகொள்வானாக.

* * *

இதன்பிறகு குருவானவர் ஞானஸ்நானம் பெறப்போகிறவனிடத்திலிருந்து பசாசை முன்னொருமுறை விரட்டினதுபோல மறுபடியும் அதை விரட்ட உச்சாடன ஜெபங்களை அவன்பேரில் ஜெபிப்பார். இவ்வாறு உச்சாடனம் பண்ணுவதினால் ஞானஸ்நானம் பெறப்போகிறவனை பசாசு பிடித்திருந்ததென்றும், அந்தப் பசாசை ஓட்டவே இச்சடங்கு நிறைவேற்றப்படுகிறதென்றும் நாம் அர்த்தம்பண்ணப்படாது. ஆனால், இச்சடங்கினால் ஞானஸ்நானம் பெறப்போகிறவன் தான் பெறும் ஞானஸ்நானத்தினால் தான் அடிமைப்பட்டுக்கிடந்த பசாசின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு, சர்வேசுரனுக்குப் பிள்ளையாக்கப்படுகிறானென்றும், ஜென்மப்பாவத்தின் நிமித்தம் அவன்பேரில் பசாசுக்கிருந்த வல்லமையை ஒழிக்கவும், அவன் மறுபடியும் அதற்கு அடிமைப்படாமலிருக்கவும் இந்த உச்சாடன ஜெபங்கள் ஜெபிக்கப்படுகின்றனவென்றும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். உச்சாடன ஜெபங்களின் முடிவில் குருவானவர் ஞானஸ்நானம் பெறப்போகிறவனுடைய தலையின்பேரில் சிலுவை அடையாளம் வரைந்துகொண்டு "சபிக்கப்பட்ட பசாசே, நீ இவனுடைய நெற்றியில் நாங்கள் வரையும் இந்தச் சிலுவை அடையாளத்தை ஒருகாலும் பங்கப்படுத்தாதே; எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதரின்மூலமாய் அப்படியே ஆகக்கடவது" என்று சொல்லி தம்முடைய கையை அவன் தலையின்பேரில் நீட்டி, ஞானஸ்நானத்தின்வழியாய்ச் சர்வேசுரன் அவன் புத்திக்கு ஞானத்தெளிவைத் தரவும், அவன் இருதயம் பரிசுத்தப்படுத்தப்பட்டு, அவன் எப்போதும் உண்மையும் நேர்மையுமான வழியில் சுமுத்திரையாய் நடக்கவும்வேண்டிய தேவானுக்கிரகத்தை கட்டளையிட்டருளவேண்டுமென்று அவரை நோக்கிப் பிரார்த்திக்கிறார்.

(தொடரும்.)

16203

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

முன்னுரை.

அர்ச். கன்னிமரியாயைப் பற்றி ஆதிகாலத்திலேயே தீர்க்கதரிசனங்களும் உவமானங்களும் பல கூறப்பட்டுள்ளனவென அர்ச்சியசிஷ்டவர்களும் வேதபாரகர்களும் ஒருமனப்படப் பகர்கின்றனர். மரியாயின் மகத்துவப் பிரதாபமே யதற்குக் காரணம். அவள் சிருஷ்டிகட்குள் பரிசுத்தமானவளும், பெண்களுக்குள் ளாசீர்வதிக்கப்பட்டவளுமாவதுமன்றி, நமதீடேற்ற அலுவலில் விசேஷவிதமாய் உடன்பட்டவளுமாவாள். நம்மையிரட்சிக்கவந்த 'மெசையாஸ்' என்பவரைக் குறித்து வேதாகமங்களில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவரது மாதாவைப்பற்றியும், ஆதியாகமம், இசையாஸாகமங்களில் சொல்லப்பட்டுள்ளவை அவ்வளவு தெளிவாயிராவிடினும், வேதாகமத்தில் ஒருவாறாய் குறிப்பாலும், உவமானங்களாலும் வரையப்பட்டிருக்கிறதாமே. இவ்வுவமானங்கள் மிக்கப் பிரயோஜனமுள்ளவை. வாசிக்கத் தெரியாதவர்களுக்குச் சித்திரங்கள் படிப்பூட்ட உதவுகின்றன. பிறர் எழுத்தாலறிகிறதை, யிவர்கள் படத்தாலுணர்கிறார்கள். பிறர் வாசித்துப் படிப்பதை யிவர்கள் கண்ணால் பார்த்து கொஞ்சமாகிலுமறிகிறார்கள். ஞான காரியத்திலும், கடவுளினலுவலிலும் நாம் தேர்ச்சியுள்ளவர்களெனச் சொல்லுவதற்கில்லை. மரியாயைப்பற்றியு மதிகமறிந்தவர்களல்ல. ஆகையால் உவமானப் படங்களைக்கொண்டு அத்தாயின் மகிமைக் கீர்த்தியை யறியலாம். அப்படிச் செய்வது நமக்குப் பிரீதியாகவும், அறிவு புகட்டக்கூடியதாகவு மிருக்கிறது.

மரியாயைப்பற்றி உவமானங்கள் பல உள. ஆனால் வேதாகமத்திலவளைப்பற்றி நேராகச் சொல்லப்பட்டவை சிலவே. இவ்வாறே அர்ச். வில்லனேவா தோமையார் விளுவுகிறார்: "சுவிசேஷகர்கள், ஸ்நாபக அருளப்பரைப்பற்றியும், அப்போஸ்தலர்களைப்பற்றியும் பெருக்க எழுதியிருக்கின்றனர். ஆனால் தமது சீவிய ஒழுக்கத்திலும், மகிமையிலும், அவர்களையெல்லாம் மேற்பட்ட மரியாயைப்பற்றிச் சிறுக எழுதியிருப்பதேன் என நான் மின்முறை யோசிக்கலானேன். அவ்வம்மணி எப்படி யுற்பவித்தாள், பிறந்தாள், கற்றாள் எனவும், அவளது கற்றுத்தியங்கள் புண்ணியங்களெனவும், தமதிருமைக்குமாரனுடனே எவ்வாறு சல்லாபித்தாளெனவுமதையும், அப்போஸ்தலர்களோடு எங்ஙனஞ் சீவித்தாளென்பதையும்பற்றி ஏன் அவர்கள் விவரிக்கவில்லை? அவைகள் முக்கிய விஷயங்களென்பதில் ஐயமோ? விசுவாசிகளவற்றைப் பற்றி விருப்புடன் வாசியாரோ? அர்ச். பொனவேந்தூர் சொல்வது மேற்கூறிய வினாவிற்குத் தகுந்த விடையாகத் தோன்றுகிறது. "அவளைப்பற்றி யபரிமிதமாய் எழுதப்பட்டுளதே. அவள் தன் திருக் குமாரனுடனே சம்பந்தப்பட்டமட்டும் ஆகமமுழுதும் அவளைப்பற்றிக் கூறியுளவே. 'பரிசுத்த கன்னியைப்பற்றி வெகு சொற்பமாய் சொல்லப்பட்டிருக்கிறதெனப் பலர் பகர்கிறார்கள். அது அப்படியன்று. அவளைப்பற்றி அதிகஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அவளைப்பற்றித் தனிமையாய் ஒரு புஸ்தகத்தில் சொல்லக்கூடியதைவிட அதிகமாய் வேதாகமத்தில் எழுதப்பட்டுளவே" என்பதே.

மரியாயைப்பற்றி வேதாகமத்திலுள்ள உவமானங்கள் பல. அவைகளில் சிலவற்றைத் தெரிந்தெடுக்கத் துணைவேண்டும். ஞான விதமாய் மரியாயை உவமித்திருக்கும் பொருட்களதிகம். அவைகளில் முக்கியமானதைத் தேடியெடுக்கவுந் துணையவசரம். ஆதலால் வண்டுகள் தேனெடுக்க மலர்களையடைவதுபோல், மரியாயின் மகிமை கீர்த்தி ரசஞ் சாப்பிட அர்ச்சியசிஷ்டவர்கள், வேதபாரகர்கள், எழுதிய கிரந்தங்கள், திருச்சபையா லங்கீகரிக்கப்பட்ட மந்திரமாலை மலர்களையடைவது உசிதம். இருளில் நடப்போருக்கு பிரகாசம் வழிகாட்டுவதுபோல் இவைகள் மரியாயின் மகிமை குண சம்பத்துக்களைப்பற்றித் தெளிவுறுத்தும்.

I
ஏவாள்.

"தனது பெண்சாதி சீவியர்களுக்கெல்லாந் தாயாயிருந்ததால் அவளை 'ஏவாள்' என்று ஆதாமழைத்தார்" (ஆதி: 3, 20.)

வேதாகமத்தில் மரியாயின் முதலுவமானமாய் நிற்பது யார்? ஏவாள்தான்! ஏவாள் பெயரைக்கேட்டவுடன் மானிடவர்க்கத்தினரின் ஆரம்பம் ஞாபகத்திற்குவருகின்றது. கடவுள் முதன்

முதல் ஆதாமைப் படைத்தார். ஆகையால் அவன் ஆதி மனிதன். மனித சந்ததிக்குத் தகப்பன். ஒரே ஆதாம்தா னுண்டு. ஆயினும் அப்போஸ்தலருடைய நிருபங்கள்மூலமாய்ப் பார்க்கப் போனால் இன்னுமொரு ஆதாமிருக்கிறார். முன்னவர் இகத்துக்குரியவர். பின்னவர் பரத்துக்குரியவர். "மண்ணினின்றுதித்த முந்தின மனிதன் மண்ணாயிருக்கிறான். வானத்தினின்று வந்த இரண்டா மனிதன் வானத்துக்குரியவராயிருக்கிறார்." (அர்ச். சின். 2 கொரி: 15, 14.) வானத்துக்குரிய இரண்டாவது மனிதன் சேசுக்கிறீஸ்துவே. இவர்தாம் இரண்டாம் ஆதாம் என்றழைக்கப்படுகிறார். முதலாதாமுக்கும் இரண்டாமாதாமுக்கும் ஓர்வித—அதுவும் மிக்கக் குறைவான சம்பந்தம் உண்டு. "மனிதனால் மரணமுண்டானதுபோல் மனிதனாலேயே மரித்தோரி னுயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லோரும் மரிப்பதுபோல், கிறீஸ்துவினிடத்தில் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1 கொரி: 15, 21, 22.)

ஆதி மனிதன் இரண்டாம் ஆதாமாகிய கிறீஸ்துவானவரைக் குறித்துக் காட்டுவது போல், முதல் மனுஷியாகிய ஏவாள், புது அல்லது இரண்டாவது ஏவாளாகிய கன்னிமரியாயை உவமிக்கின்றாள். "மரியாய் இரண்டாமாதாமை யீன்றெடுத்த புது ஏவாள்" என ரிச்சர்ட் விக்தரினுஸ் கூறுகிறார். என்ரி சுசோ என்பவர் மரியாயை "இரண்டாவதானவளும், பாக்கியம்பெற்றவளுமான ஏவாளென வர்ணிக்கிறார்." ஏவாள் மரியாய்க்கு எவ்வண்ணம் உவமானமாய் நிற்கின்றனளெனப் பார்ப்போம்.

1. ஏவாள் கடவுளின் கரங்களாலேயே சிருஷ்டிக்கப்பட்டவள். தமக் கிருப்பிடமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட மரியாயும் விசேஷவிதமாய்க் கடவுளால் உண்டாக்கப்பட்டவள். "தேவசுதன் மனிதாவதாரமெடுத்த ஓர் அற்புத செயலைத்தவிர, சிருஷ்டிகர் புரிந்த மற்றெல்லா வேலைகளிலும், ஓ! பரிசுத்த கன்னிகையே! நீர்தான் ஏற்றமும் விசேஷமும்பெற்றவள். அவர் சிருஷ்டித்த முதற் பெற்றோரால் உருவிழந்தவர்களை உம்மாலேயே செம்பைப்படுத்த உம்மைப் படைத்தார்" என, ரயிமோந்துஸ் ஜோர்தானுஸ் மரியாயைப்பார்த்து வசனிக்கிறார். அர்ச். அகுஸ்தீன் பின்வரும் மொழிகளை கிறீஸ்துவானவ ருரைப்பதுபோல் வரைந்துளர்: "என்னைப் பெற்றெடுக்க நியமிக்கப்பட்ட தாயை நானே சிருஷ்டித்தேன். நான் வரவேண்டிய வழியை நானே சுத்தஞ்செய்து முஸ்திப்பாக்கினேன். ஓ! மணிக்கேயீ! நீ புறக்கணிக்கிறவள் என் தாய். ஆயினும் என்னால் படைக்கப்பட்டவளே. கடவுள் மனித சந்ததி பெருக விசேஷமாக ஆதிப் பெற்றோரைமட்டும் படைத்தார். அப்படியே மரியாயையும் விசேஷித்தவிதமாய்ப் படைத்ததாகக் காட்ட மனுக்குலத்தின்பேரிலிட்ட சாபத்தை மரியாயின்மட்டில் விலக்கினார். மானிட சந்ததியார் உதிக்கும்பொழுது அவர்களுக்கு வரும் கேட்டை மரியாய்க்குமட்டுமே வராது தடுத்தார் கடவுள்." மரியாய் தேவ சுதனின் மாதாவாக நியமிக்கப்பட்டிருந்ததால்—அதினிமித்தம் பரலோக பூலோக விராக்கனியாவதால்—அவளை சிருஷ்டிகளுக்குள் சிரேஷ்டமாகப் படைத்து, ஓர் சிருஷ்டி யடையக்கூடிய சகல அருள் பிரசாத பாக்கிய சம்பத்துக்களை அவள்மீது பொழிந்தருளினார்.

2. ஏவாளையும் மரியாயையும் கடவுள் பாக்கியமும் பரிசுத்தமுமான அந்தஸ்திலேயே படைத்தார். ஆயினும் ஒரே விதத்திலல்ல. ஏனெனில் ஏவாளை மாசுபடாத நிலைமையில் மட்டுஞ் சிருஷ்டித்தார். ஆனால் மரியாயையோ, கறையற்ற கண்ணாடியைப்போல் பரிசுத்தமாய் மாத்திரமன்றி கறைபடக்கூடாதவிதமாயுஞ் சிருஷ்டித்தார். பாவமென் றறியாமுன் ஏவாளின் பாக்யஸ்திதி யென்னை? விலக்கப்பட்ட கனியைத் தின்றாள். பரிசுத்த வந்தஸ்த்தைப் போக்கடித்தாள். கடவுள் கையினின்று விலகினாள். பசாசுக் கடிமையானாள். மரியாயோ, ஈசனின் நேசத்தினின் றொருபோதும் பிறிந்தவளல்லள். பாவமறியாதவள், சர்வ வல்லமையுள்ளவர் அவள்மட்டில் பெரிது காரியங்களைச் செய்தார். மரியாயே! நீ சோபன சுந்தர சௌந்தரீ! பாக்கிய பரிசுத்தக் கன்னிகை! மாசற்ற மடந்தை! உன்னிடஞ் சிறு கறையுங் கிடையாதன்றோ?

3. "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்திற்கும் அவள் வித்திற்குமிடையே பகையை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள்" என்பது ஆதியாகமத்தின் வசனம். கடவுள் இந்தத் தீர்ப்புச் சொன்னபோது அவர் முன்பாக மூவர் பிரசன்னமாயிருந்தனர். ஆதாம், ஏவாள், பாம்பு அல்லது பசாசு என்பவர்களாம். அரவமு மங்கேயிருந்ததென்பது தேர்ந்த வேதாகம வியாக்கியானியாகிய கோர்னேலியுஸ்தெ லாப்பிதெ என்பவரி னபிப்பிராயம். இம்மூவருக்குமே, இம்மூவரையுங் குறித்தே தீர்ப்புரைக்கப்பட்டது. 'ஸ்திரீ' என்பது ஏவாளை மட்டுமே குறித்துக்காட்டினது. அவள் எப்படி சர்ப்பத்தை நசுக்கினாள் எனக் கேள்வி பிறக்கலாம். தனது பாவங்களுக்குத் தபசால் பரிகாரம் பண்ணினதினால் சர்ப்பத்தை நசுக்கினாள் என்று மேற்சொன்ன ஆசரியர் கூறுகிறார். அவர் பின்னுந் தொடர்ந்து சொல்வதாவது: மரியாயின் வித்து சேசுக்கிறீஸ்துவானபடியால் 'ஸ்திரீ' எனும் வார்த்தை மரியாயையே சுட்டிக்காட்டுகிறது. பரிசுத்த மரியாய் மெய்யாகவே சர்ப்பத்தை நசுக்கினாள். ஏனெனில் அவள் பசாசினின்றும் பாவத்தினின்றும் முற்றுமங்களமாய் வெற்றிகொண்டாள்.

ஸ்திரீக்கும் வித்திற்கு மிடையே உண்டாக்கப்பட்ட பகை ஏவாள்மட்டுக்கும் உவமையாகவன்றி உண்மையாகக் கூறப்படவில்லையென அர்ச். எபிபானியுஸ் சொல்லுகிறார். ஸ்திரீயின் வித்தைப்பற்றிக் கவனிக்கின், அது தெளிவாகும். ஏவாளையும் அவள் வித்தையுமட்டும் வேத வசனங் குறிப்பிடின், மனுக்குலம் ஏவையின் மக்களாகையால்—பசாசிற்கும் மனுமக்கட்குமிடையே பகையிருக்கவேணும். அதெங்கே? பசாசு மனிதரைப் பகைப்பது வாஸ்தவம். ஆனால் எத்தனையோ பேர்—கிறீஸ்துவர்கள்முதலாய்—அரவத்தோடுறவாடி அதன் தோழர்களாயிருக்கிறார்கள். அத்துர்ச்சவகாசம் சில சமயம் நித்திய நரகமட்டுஞ் செல்கின்றதே. அப்படியாயின் ஏவையின் வித்தாகிய மனுக்குலம் எப்படி சர்ப்பமாகிய பசாசை நசுக்கினவென்பது? ஆனால் அத்தீர்க்கதரிசன வசனம் மரியாயும் அவளது வித்தாகியசேசுவின்மட்டில் முற்றும் நிறைவேறிற்று. ஏவாள் தனது பாவத்திற்காகத் தபசுபண்ணினதினால் சத்துருவை முற்றும் நசுக்கவில்லை. ஏனெனில் தீமைக்கே எப்போதுஞ் சார்புடையவளானாள். மரியாயோ, சர்ப்பத்தின் தலையை நையநொய்ய அடியோடே நசுக்கிவிட்டாள். ஏனெனில் அவள் மாசில்லாது உற்பவித்தாள்—பரிசுத்தத்தனத்தில் ஜன்மித்தாள். பாவ நிழல் முதலா யவளை யண்டவில்லை.

(இன்னும் வரும்.)

M. S. M.

அர்ச். மரியாயின் மதுரமான இருதயமே, என் ஆதரவாயிரும். (300-நாட் பலன்.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2.—அதிகாரம்; வசனம்—21.

(முன் தொடர்ச்சி.)

"அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலாகி, மனுரூபமாகக் காணப்பட்டார். தம்மைத்தாமே தாழ்த்தி மரணமட்டுக்கும்..... கீழ்ப்படிதலுள்ளவரானார்." (பிலிப்பியர் 2-ம் அதிகாரம், 7-ம் வசனம்.)

"அவர் சகலத்திலும் தம்முடைய சகோதரர்களுக்கு ஒப்பாகவேண்டியது." (எபிரேயர் 3-ம் அதிகாரம், 17-ம் வசனம்.) என்று தேவசுதனாகிய கிறீஸ்துநாதரைப்பற்றி அர்ச். சின்னப்பர் கூறியுள்ள வண்ணம், சேசுநாதருடைய திவ்ய பிறப்பில் அதிசயத்துக்குரிய தாழ்மையும் கீழ்ப்படிதலும் காணப்பட்டன. அது போலவே அவருடைய சீவியத்தின் மற்ற காலங்களிலும் இப்புண்ணியங்கள் பிரகாசிப்பது உசிதமாமே.

21-ம் வசனம்.—"பின்பு பிள்ளைக்கு விருத்தசேதனஞ் செய்வதற்கு எட்டு நாளானபோது, அவர் தாயின் உதரத்தில் உற்பவிக்குமுன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே, சேசு என்ற நாமதேயம் அவருக்குச் சூட்டப்பட்டது."

சுவிசேஷகராகிய அர்ச். லூக்காஸ் தமது குருவும் ஆசிரியருமாகிய அர்ச். சின்னப்பரின் போதனைக்கேற்க, சேசுநாதர் நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, தாமும் தம்மை நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படுத்தினார் என்பதைக் காட்டவே இவ்வசனத்தை எழுதினார் என்பது நன்கு புலப்படுகிறது.

பிள்ளை பிறந்த எட்டாம் நாள் விருத்த சேதனச் சடங்கு செய்யவேண்டுமென்பது மோய்சேஸ் வேதக்கட்டளை

யாம். (ஆதியாகமம் 17-ம் அதிகாரம், 12-ம் வசனம்.)

விருத்த சேதனம் என்பது யாதெனில், பூர்வத்தில் சர்வேசுரன் அபிரகாமின் பிதிராளிகளோத் தம்முடைய ஜனமாக ஒரே வேதநெறியில் சேர்க்கத் தெரிந்து கொண்டதினால், அவனவன் தன் மந்தையிலுள்ள மாடு புருவைகளுக்குக் குறியிடுவதுபோல, அவர்களுக்குத் தமது ஜனமென்ற குறிப்பாக இச்சடங்கைக் கட்டளையிட்டார். அதனால் அந்தப் பிதிர் வழியாகக் கிறீஸ்துநாதர் பிறப்பார் என்கிறதை விசுவசித்தவர்கள், இவ்விசுவாசத்தால் தேவ வாக்குப் பிரசாதங்களுக்குப் பேறுபெற்றவரானார்கள்.

ஆகவே இது புற ஜாதி ஜனங்களினின்று விலகி, யூத வேதத்தில் பிரவேசிப்பதின் அடையாளமாகும். அதன் கடமைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஒருவனை இது உட்படுத்தும். விருத்த சேதனம் இஷ்டப்பிரசாதத்தைக் குறிக்கும் ஓர் அடையாளம். நமது ஞானஸ்நானத்துக்கு அது முதற்குறிப்பாகவுமிருந்தது. பாவப் பற்றுதல்கள் துர் ஆசாபாசங்கள் இவைகளை ஒழிப்பதற்கு இன்றியமையாத ஒறுத்தலாகிய இருதய விருத்த சேதனத்தைக் குறிப்பிடும் ஓர் அறிகுறி. இந்த அர்த்தத்தை நாம் கவனித்தால் இச்சடங்கால் சேசுநாதர் அதி பரிசுத்தராயிருந்தும், ஒரு பாவியைப்போல் எம்மாத்திரம் தம்மைத் தாழ்த்தினார் என்பது தெற்றென விளங்கும். இஸ்ராயேலினிடமிருந்து இரட்சண்யம் பூலோகத்துக்கு வரவேண்டுமென்பதால், மெஸ்ஸியாஸ் என்பவர் இச்சடங்கால் யூத குலத்தில் முதல் முதல் சேர்க்கப்படுதல் அவசியமாயிருந்தது. நியாயப் பிரமாணத்தின் நுகத்தடியில் அவர் தம்மைப் பிணைத்து அதின் பாரத்தையும் கடமைகளையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

"நாம் புத்திர சுவீகாரத்தை அடையும்படி, நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக காலம் நிறைவேறியபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவருமான தம்முடைய சுதனை சர்வேசுரன் அனுப்பினார்." (கலாத். 4-ம் அதிகாரம், 4-5-ம் வசனம்.)

அவர் இரட்சகராய் வந்ததினால், பாவத்துக்கு விரோதமாய் புரியவேண்டிய போராட்டத்தைக் குறிக்கின்ற விருத்த சேதனச் சடங்கிற்கு அவர் உள்ளாக வேண்டியது அவசியமே.

இவ்வாறு இந்த மண்ணுலகம் தேவசுதனுக்குத் தனது துக்க துயரங்களைக் கொடுக்க, அதற்குக் கைம்மாறாக அவர் தமது விண்ணுலக சம்பத்து சம்பன்னங்களையெல்லாம் அதி அற்புத ஏற்பாட்டால் மனுக்குலத்திற்குக் கொடுத்து அதைச் சீர்ப்படுத்தி சிறப்பிக்கச் சித்தமானார். நாம் அவருடைய தெய்வீகத்தில் பங்காளிகளாகும்பொருட்டு, ஓர் கன்னிகையின் உதரத்தில் அவர் நமது மனுஷீகத்தைக் கைக்கொண்டார். நியாயப் பிரமாணத்தின் சாபத்தினின்று நம்மை நீக்கிவிட, அவர் நியாயப்பிரமாணத்துக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தினார். நாம் சர்வேசுரனுடைய சுவீகாரப் புத்திரர்களாவதற்காக, அவர் அபிரகாமின் புத்திரர்களின் அடையாளத்தை தமது சரீரத்தில் பதித்துக்கொண்டார். தம்முடைய நீதியையும் பரிசுத்தத்தனத்தையும் பாவிகளாகிய நமக்கு அளிப்பதற்காக, பாவிகள் செய்யவேண்டிய பரிகாரத்தையும் பரித்தியாகத்தையும் தாமே ஏற்றுக்கொண்டார். கிறீஸ்துநாதர் தேவகுமாரனாகினும், பழய ஏற்பாட்டின் சட்டங்களுக்கெல்லாம் காரணகர்த்தரானகினும், இச்சடங்கை அனுசரிக்க அவருக்கு ஒரு கடனுமிருந்ததில்லை. ஆனால் சகல கஸ்திக்கும் கீழ்ப்படிந்து, சகல தாழ்ச்சியையும் கைக்கொண்டு, சகல தர்ம நெறியையும் நிறைவேற்றவந்ததினால், மனோ பிரியமாய் அதற்கு உடன்பட்டார். இச்சடங்கு நிறைவேறின வேளையில் தேவபாலனுடைய பச்சை மேனியில் சத்திரம் பண்ணப்பட்ட வேதனையை அவருடைய திவ்ய மாதா கண்டு தமது இருதயத்திற் பட்டதுபோல் துக்கித்து, அதனால் சிந்தப்பட்ட உதிரத் துளிகளை நமது இரட்சண்யத்துக்காக ஒப்புக்கொடுத்தாள் என்று சந்தேகமில்லாமல் சொல்லலாம்.

இச்சடங்கை நிறைவேற்றுகிறவர் சாதாரணமாய்க் குடும்பத் தலைவராவர். அவரே அத்தருணத்தில் குழந்தைக்கு நாமதேயமும் இடுவார். இக்காரியத்தைச் சிறப்பிக்க பந்து மித்திரர்களும் அயலகத்தாரும் அழைக்கப்படுவதுண்டு.

சூசைமாமுனியே இவ்விய பாலனுக்கு இச்சடங்கை நிறைவேற்றி அவருக்கு சேசு என்கிற நாமதேயத்தைச் சூட்டினார்.

இந்த நாமம் மற்ற சாமானிய நாமங்களைப்போல் மனுஷ புத்தியால் தெரிந்தெடுக்கப்படவில்லை. ஆனால் இது பரலோகத்தினின்று கொண்டுவரப்பட்ட நாமம், சம்மனசால் அறிவிக்கப்பட்ட நாமம். மெஸ்ஸியாவுக்குரிய நாமங்கள் தீர்க்கதரிசன புஸ்தகங்களில் பல உண்டு. அவைகள் அவருடைய ஞானத்தையும் வல்லபத்தையும் நன்மைத்தனத்தையும் மகத்துவ மகிமைகளையும் வனப்பு இலட்சணங்களையும் வருணித்து விளக்குகின்றன. தேவ கிறீஸ்து: (சர்வேசுரனால் அபிஷேகப்பட்டவர்) எம்மானுவேல்: (எங்களோடே சர்வேசுரன்), தர்மிஷ்டர், சமாதானத்தின் பிரபு, உதய சூரியன், நீதிஸ்பர சூரியன், அதிசயர், புத்திப் பிரபோதகர், சத்துவர், தேவர், எதிர்காலப் பிதா, நீதியங்கர்த்தர், நல்ல ஆயன் என்னும் இவை முதலான உத்தம நாமங்கள் அவருக்கு உண்டு.

ஆனால் இரட்சாதிபரன் என்றர்த்தம் வாய்ந்த சேசு என்கிற நாமம் மற்ற நாமங்களிலுள்ள குணாதிசயங்களையெல்லாம் அடக்கிக்கொண்டிருப்பதல்லாதே முக்கியமாய் சர்வேசுரனுடைய அளவில்லாத இரக்கத்தையும் மதுர உருக்கத்தையும், அன்பையும் அருளையும் அதிகமாய் எடுத்துக்காட்டுகின்றது, இதுவே தேவ மனுஷனுகிய அவருடைய சுபாவத்தையும் இலட்சணத்தையும், பூலோகத்தில் அவருக்கு உண்டாயிருந்த அலுவலையும் உத்தரவாதங்களையும் தெளிவாய் வெளிப்படுத்துகின்றது. நிர்ப்பாக்கிய பாவிகளுடைய இருதயங்களுக்கு அளவற்ற நம்பிக்கையைக் கொடுத்து, அவர்கள் இரட்சண்ய மடைய செய்கின்றது இந்நாமமே. (அப்போஸ்த. 4-ம் அதிகாரம் 12-ம் வசனம்). நமதாண்டவருக்கு நமது ஞாபகத்தையும் நினைப்பையும் ஓயாமல் கொடுத்து, நம்முடைய இரட்சண்ய வேலையை முடிக்க அவரைச் சதா தூண்டிக்கொண்டிருந்ததும் இந்நாமமே. இத்திவ்ய நாமத்தை அவர் தரிக்கும்போது அவர் முதல் விசை தமது இரத்தத் துளிகளைச் சிந்தினதானது, பிற்காலத்தில் அவர் தமது இரத்தமெல்லாம் சிந்தி நமது இரட்சண்யத்தை நிறைவேற்றின அற்புத பரம இரகசியத்துக்கு தகுதியான ஆரம்பமாக விளங்குகின்றது.

ஆகவே இத்தகைய அருமையான நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் கொண்டிருக்கும் இந்த அற்புதமான அழகிய சேசு என்னும் நாமத்தை நாம் வாழ்த்தி ஸ்துதிக்கவும், வணங்கி நமஸ்கரிக்கவும் பெரிதும் கடன்பட்டிருக்கிறோம். அதைப்பற்றி ஆசாரத்தோடும், பரிவு அன்போடும் உச்சரிக்க நாம் பழகவேண்டும்.

சம்மனசானவர் முதல் விசை அதனை உச்சரித்தபோது காண்பித்த வணக்கத்தையும், தேவமாதாவும் சூசைமுனியும் ஓய்வில்லாமல் அதனை உச்சரித்தபோது காண்பித்த பற்றுதலையும், அப்போஸ்தலரும் வேதசாட்சிகளும், கன்னியரும் ஸ்துதியரும் தங்கள் கடைசி மூச்சுவரையில், அதனை உச்சரித்தபோது காண்பித்த விசுவாசத்தையும், அன்பையும் அர்ச்சிய சிஷ்டவர்களெல்லோரும் அதனை உச்சரித்து, பூசித்து சிறப்பித்த மேரையையும், நாம் கண்டுபோவிக்கக்கடவோம். அத்திவ்ய நாமத்தின் மகிமையை நமது விடாமுயற்சியால் எங்கும் பரப்பி, அதன் அரசாட்சியை நிலைநிறுத்தி, அதனால் உண்டாகும் பாக்கியங்களை சமஸ்தரும சுகித்தானந்திக்க, நாம் ஒவ்வொருவரும் முயல்வது நமது இன்பமான கடமையும் வேலையுமாயிருக்கவேண்டும்.

(தொடரும்.) *S. M.*

சாற்றுதற்கு இதன் னியாயந் தெரியக் கேளு
தன்றிமுகனுரென்றும் அய்யனுரென்றும்
பார்த்தாவில் வுலகமதின் மயக்கமப்பா
பல தேவர் முப்பத்து முக்கோடியோரும்
வேற்றருவோ டுருத்திரனு டைந்துபேரும்
வேதார்த்த இருப்பிடத்தின் வெளிச்சமாமோ
காத்திருப்பா ரிவர்களுக் கிடங்கை காடி
கருஞரா ரிப்படியே கருஞரே.
கருஞரு ரிப்படியே சொன்னேனப்பா
கைலாய விடமெங்கே கருஞரெங்கே
பருஞியடா வுலகமது பன்மன் வாழ்வு
பராபரனு ராசுசயம் பகர்ந்த சோது
ஒருவருமே நிகராத வல்லவப்பா
ஓகோகோ மயங்காதே யூன்றிப் பார்த்துத்
தெரிபொருளே யறிவினு லுணர்ந்து பார்த்துத்
தெரிசிப்பாய் தெரிபத்தர் தெரிசிப்பாயே.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

4-ம் அதிகாரம்.

அதுஸ்தீனுடைய துர் ஆசாபாசங்களினுல் நேர்ந்த தீமைகள்—மோனிக்கம்மாள் தன் மகனுடைய ஆத்தும அபாயகரத்தை அறிந்து எச்சரிக்கைகொள்கிறள்—எவ்வளவுக்கு அதுஸ்தீன் தன்னுடைய துர் நடத்தையினுல் தன் தாயாருடைய நேசத்தைவிட்டுப் பிரிந்துபோகிறனே, அவ்வளவுக்கு அவளுடைய பத்தா அவளை அதிகமாயி நேசித்துவருகிறர்—இது அர்ச். மோனிக்கம்மாளுக்கு ஆறுதலுண்டாகும்படி கடவுள் செய்த தயவு—பத்தீஸியூஸ் நல்ல மரணமடைகிறர்.

(இ. அ. 370—372.)

முந்தின அதிகாரத்தில் நாம் சொல்லிய விஷயங்கள் அர்ச். அகுஸ்தீன் மனதில் எவ்விதமாய்ப் பதிந்தன வென்பதை அறியோம். ஆனுல் அவைகளைப்பற்றி அவருக்கு அக்கரையில்லைபோலிருந்தது. எனெனில் தீர்க்கதரிசியானவர் சொல்வதுபோல "மனிதர்களுக்குக் காதுகளிருந்தும் கேட்பதில்லை. கண்களிருந்தும் பார்ப்பதில்லை" என்னும்படியான காலம் ஒவ்வொருத்தருக்கும் உண்டு. அவர் தன் ஆசாபாசங்களை அடக்கிச் சுகிர்த நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளும் படி, அவ்வளவு ஆழமாய் அவ்விஷயங்கள் அவர் மனதில் பதியவில்லைபோல் தோன்றுகிறது.

தன் புருஷன் தன் கண்ணடத்தையினுல், கடவுள் பாரிசமாயும் தன் பாரிசமாயும் திரும்பி வரும் சமயத்தில், தன் மகன் தனது துர் நடத்தையினுல், தன்னைவிட்டு அகன்றுபோவது அதிசயமான காரியந்தானே. "விருத்த நாரி பதிவிரதை" யென்னும் சுலோகத்தின்படி, தகப்பன் மூப்புப்பிராயமானதினுல் தன் ஆசாபாசங்கள் அடங்க, கர்த்தரை நாடிவரக் காரணமாயிற்று. மகன் வாலிபனானதினுல் ஆசாபாசங்கள் உக்கிரமமாய் எழும்பி, அவனைத் தாயினின்று பிரித்தன.

அகுஸ்தீன் மோக அக்கினியினுல் வெகுவாய் எரிக்கப்பட்டார். ஒரு வைத்தியன் எப்படி ஒரு வியாதியின் உற்பவத்தையும், அவ்வுற்பவத்திற்குண்டான காரணத்தையும், அவ்வியாதியின் விவரத்தையும், அதனுல் வியாதியும் நஷ்டத்தையும், ஒவ்வொன்றுய் எடுத்து விவரித்துக் காட்டுவானே, அப்படியே அவரும் தன்னுத்துமத்தில் பற்றியெரிந்துவந்த சபிக்கப்பட்ட மோக அக்கினியின் உக்கிரமத்தை, விவரமாய் எடுத்துப் பகுத்துக்காட்டி, அதனுல் தன் மனதும் இருதயமும் எப்படி மாசடைந்துபோகுமென்றும், தன் நடத்தை எவ்வளவு சீர்குலைந்ததாகுமென்றும், தான் அவ்வளவான படிப்பு படித்து என்ன பயனென்றும், தான் எழுதிய சங்கீர்த்தனம் என்னும் புஸ்தகத்தில் சொல்லி பிரலாபிக்கிறார். உருக்கம் நிறைந்த பத்தி பற்றுதலோடும், வாக்குச் சாதுரியத்தோடும், அவர் எழுதியகாரியங்களைப் படிக்கும்போது, உண்மையாகவே தேகம் சிலிர்த்து நடுங்குகின்றது. அக்கினியானது, சர்வத்தையும் எரித்துச் சங்காரம் செய்வதுமன்றி, அப்போதுதான் மூளுகிளம்பி வரும் பூண்டுகளையும் வேரோடு தீய்த்துவிடுகின்றது. ஜோப் என்பவர் சொல்வதுபோல, காமாக்கினியைப்பற்றியும் அப்படியே சொல்ல வேண்டியிருக்கிறது. காமாக்கினியானது, திரேக சுகத்தைக் கெடுத்து, இருதயத்தைக் கடினப்படுத்தி, புத்தி சாமர்த்தியத்தின் தீட்சண்யத்தைக் குறைத்துவிடுகிறது. நிர்மலமான சகோதர நேசத்தின் வாஞ்சையிப்படிப்பட்டதென்றும், மலர்ந்துவரும் புஷ்பத்திற்குச் சமானமான யௌவன பிராயத்தில் ஒருவன் அநுபவிக்கக் கூடிய மாசற்றசந்தோஷங்கள் இன்னின்னவையென்றும், கடவுளின் சுவை இப்படிப்பட்டதென்றும், மானுஷ்ய தேகபலன் இத்தகையானதென்றும், பிறருடைய கஷ்ட நஷ்டங்களின் மட்டில் உருக்க சிந்தனைகொண்டு அவர்களுக்கு நன்மை செய்ய எதுகரமாயுள்ள புத்தி யறிவு இத்தன்மையானதென்றும், நாம் கண்டறியுமுன்னமேயே, இப்பாழும் மோக அக்கினியானது நம்மூள் பற்றி எரித்து எல்லாவற்றையும் நாசப்படுத்திவிடுகின்றது. பாவத்திற்குச் சார்பான எதுவும், அன்பு, நேசம், பிறர் சிநேகம், ஈவு, இரக்கம் முதலிய நல்லுணர்ச்சிகளை முதலில் எதிர்த்துத் தாக்குகிறதென்றும், அதனுல் நொய்மையான புஷ்பத்திற்குச் சமானமான இருதயமானது, புத்தி யறிவைவிடச் சீக்கிரத்தில் கறைபட்டுக் கெட்டுப்போகின்றதென்றும், யார்தான் அறியாதிருக்கிறார்கள்?

பாவம் செய்யத்தகாதென்று அவருடைய மனசாட்சி எவ்வளவுதானவரைக் கண்டித்தபோதிலும், அவர் அதற்குச் செவிகொடுத்தது கிஞ்சித்தும் இடையாது. தன் தகப்பனுர் மனந்திரும்பி உத்தமராய்விட்டாரென்பதையாவது, குடும்பப் பாக்கியத்திற்குச் சுகிர்த நல்லொழுக்கம் அவசியம் என்பதையாவது, தன் தாயார் பரிசுத்த தீவியத்தை யநுசரித்துவரும் பதிவிரதாசிரோமணியென்பதையாவது சற்றேனும் உற்று யோசிக்காமல், பாவச்சேற்றிலேயே புரண்டுவந்தார். ஆதலால் மோனிக்கம்மாள் தன் குமாரனின் நிர்ப்பாக்கிய ஸ்திதியை நன்முயறிந்து, தன்னுல் கூடினமட்டும் அவருக்குப் புத்தி போதகங்களைச் சொல்வது அவசியமாயிற்று.

பத்தீவியூஸ்மூலமாய் அவருடைய ஸ்திதி அவளுக்குப் பரிஷ்காரமாய்த் தெரியவந்தது. தாயாரைவிட அதிக சீக்கிரமாய், தகப்பனுர் கண்டுபிடிக்கக் கூடுமான காரியங்களுமுண்டு. அவன் அப்போதுதான் அஞ்ஞானத்திலிருந்து மனந்திரும்பினவன். இன்னம் புண்ணிய தீவியத்தின்மட்டில் அவ்வளவு கவலை காட்டினவனல்ல. ஆதலால், தன் மகன் வாலிபப்பிராயமடைந்ததை யறிந்ததும், எங்கே தவறிக் கெட்டுப்போவானே, இவனைக் கட்டு திட்டத்தில் வைக்கவேண்டும் என்னும் கவலை சற்றேனுமின்றி, அவன் சிற்றின்ப நுகர்ச்சியைத் தேடத் தக்க காலம் வந்ததென்று சந்தோஷங்கொண்டு, நமது குமாரன் அகுஸ்தீனுக்குப் புருஷத்துவம் வந்துவிட்டதென்று மோனிக்கம்மாளிடம் சிரித்துக்கொண்டு சொன்னன். மேலும் அந்நேரத்தில் அவனிடத்தில் விளங்கிய முகமலர்ச்சியையும் களிப்பையும் பார்த்தால், அப்போதே அகுஸ்தீனுக்குப் பிள்ளை பிறந்ததுபோலவும் தான் தன் பேரப் பிள்ளையைக் கையில் எடுத்து தாலாட்டிக்கொண்டிருப்பதுபோலவும் தோன்றின.

தன் மகனுக்குப் புருஷத்துவம் வந்துவிட்டதென்று அவன் வாயெடுத்துச் சொன்னவுடன், அர்ச். மோனிக்கம்மாள் விவரிக்கக்கூடாத மனோ சஞ்சலத்தையடைந்தாள். அதுவரையிலும் அகுஸ்தீன் இன்னம் சிறு பிள்ளையென்று நினைத்துக்கொண்டு கவலையின்றியிருந்தாள். ஆனுல் அவனுக்குப் புருஷத்துவம் வந்துவிட்டபடியால், அவனுடைய ஆசாபாசங்கள் இதுவரைக்கும் என்னமோ அமைதியாயிருந்தபோதிலும், இனி அவனை அலக்கழிக்குமேயென்றும், ஆதலால் முன்போல் அவன் மாசற்றவனுயிருப்பது கஷ்டமாச்சுதேயென்றும் கவலைகொண்டாள்.

அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிறபடி "பத்தீவியூஸ் அப்போதுதான் கொஞ்ச காலமாய் ஞானோபதேசம் படித்துவந்திருந்தான்." ஆதலால் அவனிடம் மேலான எண்ணங்களில்லாமற்போனதைப்பற்றி நாம் ஆச்சரியப்படலாகாது. அர்ச். அகுஸ்தீன் சொல்வது, "என் தாயார் பத்தியில் சிறந்தவள். என் கடவுளே! நீர் அப்போதே அவளிருதயத்தில் உமதாலயத்தை ஏற்படுத்தியிருந்தீர். ஆகையால் என் தகப்பனுர் சொன்னதைக் கேட்டதும் பயமும் நடுக்கமுங்கொண்டு இனி எனக் குண்டாகப் போகும் ஆத்தும ஆபத்துகளை நினைத்து எப்படியோ, எதோவென்று பரதவித்தாள்."

அர்ச். மோனிக்கம்மாளின் ஞான கவலையுணர்ச்சிகள் எப்படிப்பட்டவையென்னலாம்? தன் மகன் பூரண வளர்ச்சியடைந்து, சரியான வாலிபனுய்,புருஷத்துவமடைந்திருக்கிறனென்பதை யறிந்து, சற்றேனும் சந்தோஷமடையாமல், இனி அவன் கெட்டுப்போகப் பல வழிகள் உண்டே, எங்கே அவனுடைய மாசற்றத்தனத்திற்குப் பங்கம் உண்டாகுமோவென்று அவள் படும் கவலையானது மெய்யாகவே மாட்சிமையுள்ளதாயும் அதிசயத்துக்குரியதாயுமிருக்கிறது. இப்போதும் அப்படிப்பட்ட கவலை அநேக கிறீஸ்துவ தாய்மார்களுக்குண்டு. கிறீஸ்துவர்களுள் அநேகர் தங்கள் மக்களைப்பற்றி இப்போதும் அப்படியே விசாரப்பட்டுவருகிறார்கள். ஆதலால் கடவுளுக்கு நித்திய ஸ்துதி உண்டாவதாக.

அர்ச். மோனிக்கம்மாள் அகுஸ்தீனைப் பெற்று, அவருடைய வாய்ப் பிறப்பாலேயே, அவரது ஆத்தும அந்தஸ்தைக் கண்டுகொண்டாளோ, அல்லது சாதாரணமாய்த் தாய்மார்களுக்கு இருக்கும்படியான இயற்கை யறிவால் அதனை யுணர்ந்துகொண்டாளோ தெரியாது. ஆனுல் அந்நாள் முதல் அவருடைய சீர்கெட்ட நடத்தையைப்பற்றியும், அதனுல் அவரது ஆத்துமத்திற்குண்டான நிர்ப்பாக்கியத்தைப்பற்றியும், அப்போதைக்கப்போது அவருடன் பேச

வாள். அடிக்கடி அவரை ஒரு தனி இடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் அங்கு, அல்லது இருவரும் உலாவப் போகும்போது, கடவுளைப் பற்றியும், சிறபத்தில் அவருக்கு இருந்த தேவ விசுவாசத்தைப்பற்றியும், சுத்த இருதயமுள்ளவர்களுக்கு உண்டாகும் மனே சமாதானத்தைப் பற்றியும், பாவத்தின் கொடுமையைப்பற்றியும், அதனால் அவைகளின்மட்டில் நம்மிருதயத்தில் இருக்கவேண்டிய வெறுப்பைப்பற்றியும் பேசுவாள்.

தங்கள் பிள்ளைகள் தவருன பாதையில் இருக்கும்போது, தாய்மார்கள் அவர்களை நல்வழிக்குத் திருப்பும்படித் தங்களால் கூடிய பிரயாசையெல்லாம்பட்டு அவர்களுக்கு நற்புத்தி புகட்ட வருந்துவதுபோல், மோனிக்கம்மாளும் அத்தியந்த உருக்கத்துடன் கல்லுங் கரையும் வண்ணமாய் அவருக்கு புத்தி யுரைப்பாள். அவ்வார்த்தைகள் யாவையும் அவர் கிரகிக்கவேயில்லே. செவிடன் காதில் சங்கை ஊதினதற்குச் சமானமாயின. அவைகள் அவருடைய காதுகளுள் ஒன்றில் நுழைந்து மற்றொன்றில் வெளிப்பட்டனவேயன்றி, அவரது ஆத்துமத்தில் பதியவேயில்லே. தன் தாயார் கேட்ட கேள்விகளுக்குப் பதிலுரைக்க அவருக்கு மனமில்லாமற்போனபடியால், அவளைக் கண்டால் ஒரு பக்கம் நழுவிவிடுவார். மோனிக்கம்மாள் முக விசாரத்துடன் அவரை உற்றுப்பார்த்தால் மனக்கலக்கமடைவார்.

அவர் வேட்டைக்குப்போய் தன்னந்தனியாய்க் காடுகளில் திரிந்தலைந்து, அங்கேயே அநேக நாள் தங்கிவிடுவார். அப்போது அவருக்கு வயது பதினேறுதான். ஆயினும் அவருடைய மனதில் கானுவித எண்ணங்களும் உணர்ச்சிகளும் சதா குடிகொண்டிருக்கும். சில சமயங்களில் கல்ல நினைவுகளும் அவருடைய மனதில் உதிப்பதுண்டு. வேறு சமயங்களில் மூடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல், கைக்குக்கிட்டாத காரியங்களேயெல்லாம்பற்றி சிந்தித்து மனப்பால் குடிப்பார். மற்ற சமயங்களில் உலக சிந்தனைகளில் அமிழ்ந்திப்போய் முற்றிலும் அவலட்சணமானதும் வெட்கத்துக்குரியதுமான காரியங்களைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருப்பார். சமுத்திர பிரயாணம் செய்யும் ஒரு உடைத்த கப்பலானது, எப்படி ஒரு வழி நோக்கிச் செல்லாமல், காற்று வீசும்போதும் அலைகள் சுருட்டி அடிக்கும்போதும், ஒரு தரம் தண்ணீருக்குள் அமிழ்ந்தியும், மறு தரம் மேலுக்கு எழும்பியும், இன்னொரு தரம் அக்கேயே அலை மோதிக்கொண்டுமிருக்குமோ, அப்படியே அவர் மனதானது ஒரு நிலையின்றி, எண்ணுத எண்ணங்களேயெல்லாம் எண்ணித் தயங்கித் தத்தளித்துக்கொண்டிருந்தது. வேட்டைக்குப்போகாமல் வீடு தங்கியிருக்கும் சமயத்தில், தன் சினேகிதர்களுடன் கெட்ட சம்பாஷணை செய்துகொண்டும், ஆபாசமான ஆட்டங்களே ஆடிக்கொண்டும் சிற்றின்பப் பாட்டுகளேப் பாடிக்கொண்டும் கேளிக்கையாய் நாள் கழிப்பார்.

அவர் சொல்வது "திருட்டை விடக் கொடிய தெது? திருட்டென்றல் யார்தான் பொறுப்பார்கள்? துன்பத்தினால் வருந்தி பசிபட்டினியாய் இருக்கும்போது மூதலாய் திருடினால், அதை நல்லதென்று சொல்வாரில்லே. சரி. நான் யாதொரு அவசரமினறி, திருட வேண்டுமென்னும் ஆசையைப்பற்றித் திருடினேன். என்னத்திற்கென்றல் திருடாமல் நல்லவனுயிருப்பதில் எனக்கு வெறுப்புதட்டினது. பாவப் பழக்கங்களே மேலும் மேலும் செய்ய எனக்காசையுண்டாயிற்று. என் தகப்பனுடைய நிராட்சத் தோட்டத்திற்கருகில் ஒரு பேரத்திமரமிருந்தது. அதில் பழங்கள் ஏராளம். நானும் என்னேப்போல துன்மார்க்கங்கொண்ட வாலிபர்களனேவரும், மத்திய ராத்திரியில் ஒரு கூட்டமாய் அந்தத் தோட்டத்திற்குப்போய், அப்பழங்களேயெல்லாம் ஒன்றும் விடாமல் பறித்தெடுத்து, பின்பு எங்கள் கெட்ட வழக்கப்படி வெகு நேரம் அங்கேயே ஆடிக்கொண்டிருந்தோம். ஆடித் தீர்ந்தபிறகு அப்பழங்களே மூட்டையாய்க்கட்டி தூக்கிக்கொண்டுவந்து பன்றிகளுக்கு வைத்துவிட்டோம். அப்பழங்களே நாங்கள் கொஞ்சங்கூட உருசிபார்க்கவேயில்லே. ஏனெனில் அவைகளேத் தின்று சந்தோஷப்படும்படிக்கல்ல, ஆனல் வேண்டாமென்று பெரியவர்கள் விலக்குகிற காரியத்தை வேண்டுமென்றே செய்து சந்தோஷப்படுவதற்கே அவைகளேப் பறித்தோம்."

பசங்கள் செய்த இந்த துஷ்கிருத்தியங்களேப்பற்றி நாம் இச்சரிதையில் பேசியிருக்க மாட்டோம். ஆனல் ஏன் அவைகளே இங்கு குறிக்கவந்ததென்றல், தீமையைத் தீமைக்காக, வேண்டுமென்று விரும்பிச் செய்யும் மனிதனுடைய நிர்ப்பாக்கியம் நிறைந்த குருட்டாட்டத்தைப்பற்றி, ஆழ்ந்தவிதமாய்த் தத்துவ விசாரணை செய்யும்படிக்கு இக்காரியம் மூக்கியமான ஆதாரமாயிருக்கிறது. துஷ்ட நேசர்களுடன் தோழமை செய்வதினுல் உண்டாகும் அபாயம் எத்தன்மையானதென்று, பாலியத்தில் தான் செய்த துஷ்கிருத்தியங்கள் அவருக்குக் காட்டின. ஏனெனில் நாம் தனியாயிருக்கும்போது செய்ய நினைத்தே யிராத பாவக்கிரியைகளே, கெட்ட சகவாசத்திலிருக்கும்போது செய்கிறுமே. ஆகாதவர்களுடைய சகவாசத்தை நாம் நாடிப்போனல், அவர்களுடைய அக்கிரம தோஷங்கள் ஈயைப்போல் நம்மேல் அப்பிக்கொள்ளும்.

"சகவாச தோஷம் சகலமும் தோஷம்."
அன்றியும்
"தீயாரைக் காண்பதுவுந் தீதே—திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே—யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது."

அவர் சொல்வது "நான் என் கெட்ட சினேகிதர்களுடைய கூட்டத்திலிருக்கும்போது, அவர்கள் தாங்கள் செய்த அக்கிரம தோஷங்களேப்பற்றியும் அசுசியான செய்கைகளேப்பற்றியும் பெருமையாய்ப் பேசி மகிழ்ச்சிகொள்வார்கள். அப்படி அவர்கள் மனக்களிப்படையும்போது, நான் அவர்களேப்போல் அத்தனே துன்மார்க்கனுகவும் கேடுகெட்டவனுகவும் இல்லேயே, அப்படி இராதிருப்பது எனக்கு மானக்குறைச்சல் அன்றே, என்று நினைத்து சங்கோசப்படுவேன். ஆகவே, யானும் அவர்களேப் போல பாவச்சகதியில் பன்றியைப்போல் புரண்டிருண்டு வருவேன். இத்தனேயும் பாவத்தில் எவ்வித நீச சந்தோஷத்தையாவது தேடும்படிக்கல்ல. ஆனல் என் ஜதைக்காரர்கள் என்னே மெச்சும்படிக்காகவேதான்."

மீண்டும் அவர் சொல்வது "பாவத்தைவிட மானக்குறைச்சலான காரியம் வேறே எதாகிலுமுண்டோ? இருந்தாலும், என் மனே விபரீதத்தினுல், புண்ணியவானுயிருப்பது மானக்குறைச்சலென்றெண்ணி, எங்கே என் நேசர்கள் என்னேப் பரிகசிப்பார்களோவென்று பயந்து, பாவத்தைச் செய்துவந்தேன். அவர்களேப்போல் அதி வெட்கங்கெட்ட விபசாரத்திற்குச் சமானமான எந்தத் தோஷத்தையும் நான் செய்யாதிருக்கும்போதுமுதலாய், எதோ கொஞ்சமாவது செய்ததாகப் பாசாங்கு செய்வேன். இப்படியாக நான் பாசாங்கு செய்துவந்தது, அவர்கள் கண்முன் சிரேஷ்டனுகத் தோன்றும்படிக்குத்தான். ஏனெனில் மாசற்றவனுயும் கற்புள்ளவனுயும் நான் நடக்க வருந்தியிருந்தால், அவர்கள் என்னே நிசமாய் நினைத்து இகழ்ச்சி செய்திருப்பார்கள். பாபிலோன் பட்டணத்தில், தகாத இடங்களில், எப்பேர்ப்பட்ட துன்மார்க்கத்தோழர்களோடு நான் சிநேகம்செய்து, பன்றிக்கொப்பாய்ப் பாவச்சேற்றில் புரண்டுவந்தேனென்று பாருங்கள்."

(இன்னும் வரும்.)

HIGHWAY ROBBERS.
வழிப்பறிக் கொள்ளைக்காரர்.

ஆதிகாலத்தில் நம்தேசத்தில் அரிதலக்காரரென்னும் ஒருவித ஜாதியார் பிரயாணிகளே வழிமடக்கிக் கொள்ளையிட்டு வருத்திவந்தனர். இப்பொழுது அவர்கள் அறவே யொழிந்தனராயினும் அவர்களேவிடக் கொடியரும், கொலைக்காரருமான இன்னொரு ஜாதியார் இருந்துவருகிறார்கள். இவர்கள் கிறீஸ்துவர்கள் மோட்சத்துக்கு நடத்துசெல்லும் ஞானப் பாதைகளிலிருந்து, வழிப்போக்கர்களேக் கொள்ளையிட்டுக் கொலே புரிந்து செய்யும்கொடுமைகள் செப்புந்தரமல்ல. இவர்கள் இந்தியாவில்மாத்திரமல்ல, எல்லாத் தேசங்களிலும் காணப்படுகின்றனர். இவர்கள் ஒரு காலைக்குக் கொண்டுபோகும் ஆத்துமங்களின் தொகை ஆயிரத்திற்கு மேற்பட்டதே யொழிய அதற்குக் குறைந்ததல்ல. அத்துணே ஆத்துமங்களே அவர்கள் அபகரித்துக்கொண்டு போவதைப்பற்றி நாம் கிஞ்சித்தேனும் சிந்திப்பதில்லே.

ஆத்துமத்தினுடைய மதிப்பு நம்போன்றவருக்குத் தெரியாவிடினும், அது தெரிந்த அறிவுடையோர் அதைக்கண்டு அங்கலாய்க்கின்றனர். இத்தகைய கொள்ளைக்காரர்கள் யார்? ஆதியில் ஆதித் தாய் ஆதித் தகப்பனேக் கெடுத்து, அவர்களேயும் அவர்கள் சந்ததியாராகிய நம்மையும் கெடுத்துவைத்த லூசிப்பேயும் அவனேச் சேர்ந்தோருமாவர். இவ்விதம் கெட்ட சந்ததி

யாகிய மனுக்குலத்தை மீட்கவே கடவுள் மனிதனாய் உருவெடுத்துவந்து கடின பாடுபட்டார். அவருடைய பாடுகளின் பலனே நமது ஆத்துமத்தின் இரயமாகும். இவ்விதம் நாமெல்லோரும் இரட்சிக்கப்பட்டு, மோட்சத்திற்கு உரியவர்களானோமாயினும் "அழைக்கப்பட்டவர் அநேகர் தெரிந்துகொள்ளப்படவர் சிலர்" என்று ஆண்டவர் சொல்லுகிறார். நாம் அழைக்கப்பட்டவருள் ஒருவராயிருப்பதோடு தெரிந்துகொள்ளப்பட்டவருள் ஒருவராயு மிருத்தல்வேண்டும். எத்தனைபேர் கத்தோலிக்கரென்ற பேர்வைத்துக் கொண்டு காளிதேவிக்காக கோழி விடுகிறவர்கள்! பச்சையப்பன் கோவிலிற்போய் படிக்கட்டு கிறவர்கள்! இவர்களிடத்தில் வேதவிஷயத்தைச் சொன்னலோ அது அன்னோர்களுக்கு வேப்பிலைக் கியாழமாய்விடுகிறது. இவர்களுக்குக் கோவிலுமில்லை, குருவுமில்லை; மந்திரமுமில்லை, குறிப்பிடமுமில்லை; ஆயத்தம் பாவசங்கீர்த்தனமெல்லாம் அதிவிருத்தாப்பியருக்கென்று சொல்லிவிடுவார்கள். கடன் பூசையைக் கனவிலும் கண்டிரார்கள். பாட்டன் பூட்டன் போய்வந்த பழக்கத்தை விடலாகாதென்று இவர்களுட் சிலர் திருவிழாக்காலங்களில்மாத்திரம் வேடிக்கையார்த்தமாய் கோவிலுக்கு வருவர். இவ்விதம்வந்தவர்களும்திவ்யபூசை காண்பதற்குப்பதிலாய்த் தெருச்சுற்றி வேடிக்கைப் பார்ப்பதிலும், கடைக்குக் கடைபோய் பண்டம் பாடி வாங்குவதிலும், கம்பக்கொல்லையைக் கண்ட மாடுகள்போலக் கண்டது கடியது வாங்கித்தின்பதிலும்குடிப்பதிலுங்காலத்தைக்கழிப்பார்கள். இத்தகையோர்களெல்லாம் அழைக்கப்பட்டவரெனினும் இன்னும் தெரிந்துகொள்ளப் பாக்கியம் பெறுவாரோடு சேர்த்துக் கணிக்கப்படுவதற்கில்லை. சத்துராதிகள் மித்துரு வேஷம்போட்டுச் சதிசெய்வதை நினைக்கிறார்கள் இல்லை.

பேய் தன் சுயரூபத்தோடுவந்து கெடுக்குமென்றும் சிலர் எண்ணலாம்; அப்படியல்ல. பின் வேறு என்னவிதமாய் வருமென்று கேட்டாலோ எல்லாம் சொல்லமுடியாவிடினும், அது அதிமுக்கியமாய் எடுக்கும் சில உருவங்களை மாத்திரஞ் சொல்லலாம். சில உற்றார் உறவினர் போலும், அக்கம்பக்கத்தார்போலும், மாமன் மைத்துனர்போலும், வேடிக்கை வினோதம்போலும், காடகம் நடிப்பைப்போலும், இனிய கதையைப்போலும் வரும். இவ்வித உருவெடுத்து வந்தாலும் எளிதில் அகப்படமாட்டார்களென்று வேம்பின்சுவையையுடைய துர்க்கிருத்தியங்களை நாம் விரும்புமாறு, அவைகளை வேம்பல்ல இனிய கரும்பென்று காட்ட வேறு சில உபாயங்களை எடுத்துவரும். இதில்தான் எல்லோரும் ஏமாந்து போகின்றனர். இவ்வுபாயங்களைப் பார்ப்போர் கேட்போர்களுக்கு அபாயமில்லாததுபோலத்தான் தோன்றும். "பத்து ஜனத்தையடித்த நாம் பல்லைக் கடித்துக்கொண்டிருப்பது தகுதியா? வீடென்ற இருந்தால் பத்து ஜனம் வரப்போகத்தான் இருக்கும், பேசப் புழங்கத்தான்வேண்டும், இல்லறம் நடத்தினால் எல்லாம்தான் இருக்கும். சமூசாரிகளானால் சகலமுந்தானிருக்கும். நாம் என்ன சந்நியாசி கன்னியாஸ்திரீகளா?" வென்று சட்டம் பேசும் இத்தகைய ஏமாற்ற மெல்லாம் வீண் கற்பிதம் வாஸ்தவத்தில். நிகழக்கூடியதல்லவென்று எண்ணிவிடப்படாது. நாம் அடிக்கடி கேட்டுவரும் மொழிகளேயொழிய நூதனமல்ல. இவைபோன்ற போலி நியாயங்களோ நமது சத்துருக்கள் பரப்பும் கண்ணிகள். இக்கண்ணிகளில் நாம் அகப்படாமல் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அவைகள் தாராளமாய் வருவதற்குத் தகுந்தவிதமாய்க் கதவுகளைத் திறந்துவையாமல் விழிப்பாயிருப்போமாக; அதாவது ஐம்புலன்களை அடக்கியாளக்கடவோம். இவைகளை அடக்கியாளுபவனே அதிவீரன். எச்சரிக்கையின்றியிருப்போமாகில் எளிதில் இவைகள் கம்மையாட்கொண்டுவிடும். இவையெல்லாம் கேட்டபிறகும் மேற்கூறியவைகளோடு பேசிப் புழங்கி உல்லாசிப்பதிலும், சிரிப்பதிலும், விளையாடுவதிலும் யாது குற்றமெனச் சிலர் நினைப்பார்கள். "அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகு"மென்னும் ஆன்றோர் வாக்கியத்தை அடிக்கடி நினைத்தல்வேண்டும். அங்ஙனமின்றி யொன்றும் குற்றமில்லையென்று நினைப்போமாகில், அதுவே நம்மைக் கெடுக்க முயலும் மூதலெண்ணமாகும். இப்படியே இதில் குற்றமில்லை அதில் குற்றமில்லையென்று நாமும் மோசம்போகின்றோம். இவ்விதம் கெட்டோரின் சரித்திரங்கள் அனந்தமுண்டு. உதாரணமாய் ஆதித் தாயைப் பார்ப்போமாக. அவளுடைய முதலெண்ணம் என்ன? இத்தப் பழத்தை என்ன தின்னவேண்டாமென்றார்? எல்லாப் பழங்களைப்போல் இதுவும் ஒரு பழந்தானே. இதைத் தின்பதில் என்ன குற்றமிருக்கிறதென்று சொல்லிவிட்டுத் தின்றாள். புருஷனுக்கும் கொடுத்தாள். பூலோகத்தைக் கெடுத்தாள், ஆதலால் இவ்விதத் தப்பான எண்ணத்தை விட்டுவிட்டுச் சரியான வழியில் நடக்கப் பிரயாசைப்படவேண்டும்.

இவ்விதம் கெட்டுப்போவோமென்றும், இத்துட்டர்கள் நம்மைக் கெடுத்துவிடுவார்களென்றுந்தான் இரக்கமுள்ள ஆண்டவர் இரட்சித்தது போதாதென்று நம்மைப் பாதுகாக்க ஒரு திருச்சபையையுமுண்டாக்கி, அதனை ஆண்டு நடத்த (அர்ச். இராயப்பருக்குச்) சர்வ அதிகாரங் கொடுத்தார். அதாவது "நீ பூலோகத்தில் எதைக் கட்டுகிறாயோ அது பரலோகத்திலும் கட்டப்படும், நீ எதைப் பூலோகத்தில் கட்ட விழ்க்கிறாயோ அது பரலோகத்திலும் கட்ட விழ்க்கப்படும்" என்றார். இவ்விதம் சொன்ன போதே திருச்சபைக்கு எல்லா அதிகாரமும் கொடுத்தாரென்று தெற்றென விளங்குகிறது. மற்ற அப்போஸ்தலர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, ஆண்டவர் போதித்த சத்தியத்தை உலகத்தின் பல திக்கிலும் சென்று பிரசங்கித்தனர். இவர்களுக்குப் பதிலாய் இருப்பவர்களே நமது பாப்பு மேற்றிராணிமார்களாவர். இவர்கள் வேத விஷயத்தில் ஆண்டவருக்குப் பதிலாயும் உலக விஷயத்தில் உத்தம தகப்பன்மாராயுமிருக்கிறார்கள். உத்தம தகப்பனாராய் இருந்தால் தன் பிள்ளைகள் சத்தியத்தில் சரிவர நடந்துவருகிறார்களா நடக்கவில்லையாவென்று பார்க்கவேண்டியது அவர்களின் கடமை. பிள்ளைகள் இயற்கையில் விளையாட்டுக்குணமுள்ளவர்கள். வினோதப் பிரியர்கள். எதைக் கொடுத்தாலும் வாயிற் போடக்கூடியவர்கள். இது விஷமுள்ளதென்றும், விஷமில்லாததென்றும் பகுத்தறியச் சக்தியற்றவர்கள். இஷ்டம்போல் விட்டுவிட்டால் எதையாவது தின்று உடம்புக்குக் கெடுதியை யுண்டுபண்ணிக்கொள்வார்கள். உத்தம தகப்பன் தன் பிள்ளை யவ்வாறு கெடுதியைத் தேடிக் கொள்வதைப் பார்த்திருக்கச் சகியான். அதற்கு மாறாக உடனே அப்பிள்ளையைக் கண்டிப்பான். ஆகாததை யகல வீசிவிடுவான். ஆனதைக் கொடுத்துப் பிள்ளையை அமர்த்துவான். ஆகாத காரியத்தையைச் செய்தாயே என்று பிள்ளையை அடித்தாலும் அடிப்பான். அடியை வாங்கிக் கொண்டு பிள்ளை அமைதியாய் நிற்பதைக்கண்டு அங்கலாய்ப்பான். ஆனந்த மொழிகளைக்கூறி ஆற்றித் தேற்றி ஆசீர்வதிப்பான். பிள்ளையும் தகப்பனுடைய பிரிய மொழிகளைக் கேட்டுத் தான் செய்தது தப்பிதமென்றும், இனி அவ்விதம் செய்யேனென்றும் தாழ்மையாய் மன்னிப்புக் கேட்பான். இதுவே உத்தம பிள்ளைகளின் உயர்ந்த இலக்ஷணம். இப்பிள்ளைகளைத்தான் நாமும் கண்போவிக்கவேண்டும். இவ்விதம் நடந்தால் நாமும் உத்தம பிள்ளைகளாவோம். உன்னத பதவிக்கும்உரித்தானவர்களாவோம். வழிப்பறிக் கொள்ளைக்காரராகிய லூசிப்பேயும் அவனைச் சேர்ந்தோரும் வெட்டி வந்த வழியே திரும்பிப்போய்விடுவார்கள். அப்பொழுதுதான் நமக்கு நல்ல ஆசீர்வாதமும் ஆத்ம சுத்தியும் உண்டாகும். இவை இரண்டுமுடையவனே என்றென்றைக்கும் பாக்கியவான். மோட்சத்திற்கு உரியவன். இவ்விதமாய் ஜெயம்பெற்ற மோட்சவாசிகள் அநேகர் இருக்கின்றனர். இவர்களுக்குள் நாமும் ஒருவராகும்பொருட்டு, அத்தகைய அந்தஸ்துக்கு அத்தியாவசியமாய் வேண்டிய திடனையும், தேவ இஷ்டப்பிரசாதத்தையும் நமக்குத் தந்தருளுமாறு திரியேக சர்வேசுரனைத் தினம் பிரார்த்திப்போமாக.

S. J.

MADIYEENI.

மதியீனி

அல்லது

'தன் வினை தன்னைச் சுடும்.'

தனது குளிர்ந்த கிரணங்களைப் பரப்பி, தெளிந்த பிரகாசத்தை யெங்கும் தூவி வான மண்டலத்தில் தோன்றி நிற்கிறது சந்திரன். நேரம் மாலை 9-மணி. ஆழியின் அலைகள் சலசலவென மோதிச் சப்திக்கின்றன. பூம்பொழிலிலுள்ள மல்லிகை முல்லை ரோஜா மலர்களினின்று கமகமவெனப் பரிமளம் வீசுகின்றது. தாமரை நிறைந்த தடாகத்தினின்று தவளைகள் "பாக்" "பாக்" எனக் கத்துகின்றன. குழையினின்று தண்ணீர் மளமளவென விழுகின்றது. அருகேயுள்ள மெத்தை வீட்டில் மின்சாரத்தீபம் பளபளவென ஜொலிக்கின்றது. இதுதான் அமிர்தசாமிப் பிள்ளையவர்கள் வீடு. அவர் கும்பகோணத்தில் மாஜிஸ்ட்ரேட்டாயிருந்து இறந்துபோனார். அவருக்கு

ஏக புத்திரன். அவன் பெயர் அருள்தாஸ். ‘ கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை ’ என்பதை நன்கறிந்த அமிர்தசாமிப் பிள்ளை.

“ தந்தை மகற்காற்று நன்றியவையத்து
முந்தி யிருப்பச் செயல் ” என்பதை நினைந்தவராய்த் தன் மகனை B. A., வரையில் படிக்க வைத்தார். மகன் தேர்ச்சியடைந்தபின் உடனே ரெவனியூ போர்ட் ஆபீஸில் உத்தியோகங் கிடைத்தது. தகப்பனாருக்கு ஆனந்த மதிகம், தாயும் பரமாநந்தங்கொண்டாள்.

“ ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய் ” என்ற முதுமொழியொன்றிருக்கிறதல்லவா? தக்க பிராயம் வரவும் மகனுக்குத் திருமணஞ் செய்துவைத்தனர். அருள்தாஸை மணந்தவள் பெயர் ஆரோக்கியமரி. அவள் தன் பெற்றோருக் குதித்த ஓரே குமாரத்தி. தகப்பனார் தஞ்சைமாநகரில் தாசில்தார். தாய்க்குப் பெண்ணைவிட்டுப் பிரிய மனமில்லை. என்செய்யலாம். கோலஞ் செய்யாதது காலஞ் செய்யுமன்றோ? வயதான பெண்ணை வீட்டில் வைத்திருப்ப தெங்ஙனம்? கடைசியாக அருள்தாஸுக்குக் கட்டிக்கொடுக்கலானார்கள். அவனுக்கு அப்பெண்மணி கிடைத்ததே பாக்கியம். அவள் கற்பலங்காரி. அன்பொழுகும் அணங்கு. அழகிற்சிறந்த அம்பிக்கை. பூவிற் பொலிந்திலங்கும் பெற்பாவை. பூணக்கிடையாப் பொன்னாபரணம். கூவாமற் கொஞ்சுங் குயில். தித்திக்கும் தீங்கரும்பு. மாற்றுரையாச் சொர்ணம். புண்ணியமே உருவான புனிதவதி. கன்னியர் மடத்தில் படித்துக் கற்றறிந்தவள். அடக்க வொடுக்கம், சாந்தம், தயை, பொறுமை, நேர்மை, கீழ்ப்படிதலாகிய உத்தம குணங்கள் பொருந்தியவள். ‘ குலமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதல் ’ என்பதை மேல்வரிச் சட்டமாகப்பாவித்துக்கொண்டு கணவனைக் கனம்பண்ணி, கண்ணுங் கருத்துமாய்க் கவனித்து அவனுக்குகந்தவிதமாய் ஒழுகிவந்தாள். மூடப் பூவையர்கள் சிலரைப்போல் அகங்காரங்கொண்டு, மாமியாரோடு சண்டைபோட்டு மண்டையை யுடைத்துக்கொள்ளாது, அவளைத் தன் தாயெனப் பாவித்து, ‘மூத்தோர் சொல் வார்த்தை யமிர்த’ மெனக்கொண்டு எல்லாவற்றிலும் அவள் சொல்லுக்கு இணங்கி நடந்துவந்தாள். ‘குற்றத்தில் பணிந்தும், கோபத்தில் தணிந்தும், கஷ்டத்தில் குனிந்தும் நடக்கும் குணமுடையவள். இவளது மாமியார் இவளை “ பாக்குக் கொடுத்த பாக்கியவதி. புஷ்பங் கொடுத்த புண்ணியவதி ”யென்று புகழ்ந்து பேசினாளென்றால் ‘ மாமியாள் மெச்சிய மருமகளில்லை ’ என்னும் பழமொழியைப் பொய்யாக்கி இந்தப் பெண்ணின் பெருமிதக் குணங்களைப்பற்றிப் பின்னும் பெருக்கிப் பேச வேண்டியதில்லை. இவ்வித மனோரம்மியமான பூவதியைக்கொண்டதையிட்டு அக்குடும்பம் முற்றும் ஆனந்தக் கடலில் மூழ்கியிருந்தது. ஆனால் அமிர்தசாமிப் பிள்ளையும் அவரது இந்த பாரியாளும் ஆனந்தத்தை அதிக காலம் அநுபவிக்கவில்லை. ஏனெனில், மகனின் திருமணமான ஒரு வருஷம் இரண்டு மாதத்திற்குள்ளாக இருவரும் பரலோகபிராப்தியானார்கள். பெற்றோர் மரிக்கவும், குடும்பத்துக்குச் சொந்தமான பொன் பொருள், காணி பூமி, முதலிய சொத்துக்கள் யாவும் அருள்தாஸ் கைவசம் வந்தன. இவைகளைவைத்து நிர்வகிப்பது அவனுக்குப் பெருஞ் சுமையாயிருந்தது. ஒரு பக்கத்தில் தன் உத்தியோக விஷயங்களைக் கவனிக்கவேண்டும். மறு பக்கத்தில் நிலபுலங்களைப் பார்க்கவேண்டும். இரண்டும் ஒன்றாய் நிர்வகிக்கமுடியாதாதலால், வேலையினின்று விலகி விவசாய அலுவலிலேயே தன்னோக்கத்தைச் செலுத்துவானாயினான். தான் போய் உழுது பயிரிடவில்லை. அதற்கு ஆட்கள் பலரிருந்தார்கள். அமிர்தசாமிப் பிள்ளைக்குச் சொந்தமான தோட்டந் துரவுகள் பல சுற்றுக் கிராமங்களிலிருந்தன. அவைகளையெல்லாங்காரியக்காரர்களைக்கொண்டு நடத்திவருவது சரிவராதென உத்தேசித்து, தானே நேரில் நின்று பார்க்கத் தீர்மானித்தான். மூன்று வருஷகாலமாய் தனது சமுசாரத்தோடு கிராமங்களிலே ஜீவித்துக் காரியாதிகளைக் கவனமாய்ப் பார்த்து வந்தான். கிராமங்களிலேயே குடியிருப்பது கடினமாயிற்று. போகிற வருகிற தொந்தரவும், முக்கியமாய்க் கோவிலில்லாக் குறையும் அவனைப் பட்டணத்திலேயே வசிக்கவேண்டுமெனத் தூண்டினது. ஆகவே, தகப்பனார் சிறப்பலங்காரமாய்க் கட்டிய பெரிய வீட்டில் குடியிருக்கிறார்கள். நாம் பார்க்கும் நேரத்தில் அவ்வில்லத்தில் ஓட்டமும் ஆட்டமுமாயிருக்கிறது. வீட்டின் வெளித்தோற்றங்கள் சிறந்திலங்கினும், அதன் நிவாசிகளது மனத்தோற்றம் கசிந்து வாடுகிறது. ஏனெனில் இரண்டு வயதுள்ள, அருமந்த மகன் அமலதாஸ் விஷஜுரத்தால் பீடிக்கப்பட்டு வாதனைப்படுகிறான். அவன் வியாதியாய் விழுந்து 17 நாளாகிறது. எவ்வித ஔஷதங்களுக்குங்

குணப்படுமாப்போலில்லை. அன்னையும் பிதாவும் அண்டி நின்று, ஊணுறக்கமின்றிப் பிள்ளையை வெகு கரிசனையாய்ப் பார்த்துவருகிறார்கள். நாம் பேசுகிற இரவில் அருள்தாஸ் மனைவியைப் பார்த்துச் சொல்லுகிறார். “ ஆரோக்கியமரி! நீ படுத்துத் தூங்கு. நான் கண்விழிப்பாயிருக்கிறேன். வேலைக்காரியும், ஏவலாளரும் அப்படியே செய்வார்கள். ”

ஆரோக்கியமரி.—“ எனக்குத் தூக்கம் வரவில்லை. நீங்கள் சற்றே நித்திரைசெய்யுங்கள். ”

அருள்தாஸ்.—“ நாளைக்கு உன் தாயார் வருவார்கள். அதற்குப் பின்னாகிலும் உனக்குக் கொஞ்சம் ஆறுதலுண்டு. ”

ஆரோ.—ஆம்! நான்தான் அவர்களை அன்றைக்கே வரும்படி எழுதச்சொன்னேனே நீங்கள் பார்க்கலாம், பார்க்கலாம் என்றுதானே எழுதத் தாமதித்துவந்தீர்கள்.

அருள்.—அவர்கள் வந்தால் அரிசி செலவாகிப்போகுமென்று தாமதித்தேன்? அவர்களுடைய சுபாவம் உனக்கு நன்றாய்த் தெரியும். அற்பக்காரியத்திற்கும் அஞ்ஞானச் சாங்கியங்களைச் செய்யத் தலைப்படுவார்கள். பிள்ளையினுடைய ஸ்திதியிப்படியானால் என்னதான் செய்யமாட்டார்கள். அஞ்ஞான அநாசாரங்களைச் செய்தால் நீயுந் துணிந்து தடுக்கமாட்டாய், நானும் வேண்டாம் என்று சொல்ல முன்வரேன். ஆகையால் வெள்ளம் வருமுன் அணையைப் போட்டுக் கொள்வது நல்லதென்றெண்ணி அவர்களை வரவழைக்காது விட்டுவிட்டேன்.

ஆரோ.—அவர்கள் வந்தால் எவ்வளவு சிரத்தை யெடுத்துக்கொள்வார்கள். நமக்கு இலகுவாகுமே. வேலைக்காரர்கள் எத்தனை பேரிருந்தாலும் அவர்கள் கூலிக்காரர்கள்தானே.

அருள்.—நீ சொல்லுகிறது வாஸ்தவந்தான். ஆனால் பேய்ச் சடங்குகளைப் பார்ப்பதைவிட, பிள்ளையைக் கொடுத்தவரிடம் மனப்பூர்த்தியாய் அளித்துவிடலே நலமென எண்ணினேன். அவர்கள் நாளைக் காலையில் கட்டாயம் வருவார்கள். ஸ்டேஷனுக்குப்போக வண்டிக்காரனுக்குச் சொல்லியாகிவிட்டது.

இப்படிச் சொன்னவண்ணமாகவே, சாய்வான நாற்காலியிலிருந்தபடியே நித்திரைபோயினர். ஆரோக்கியமரி கொஞ்சம் பாயில் படுப்பதும் எழுந்திருப்பதுமாக இரவை கழித்தாள். குழந்தை யன்றிரவு சற்றுச் சுமாராய்த் துயின்றது. விடியற்காலம் கோவிலில் மணியடித்தது. அருள்தாஸ் பிள்ளை எழுந்து காலைச் செபங்களை முடித்து, ‘ஆலயந் தொழுவது சாலவும் நன்றே’ யாதலால் கோவில்சென்று பூசைகண்டு வருகிறேன் எனச் சொல்லிப் போயினர். ஒரு பூசை, இரண்டு பூசை, மூன்று பூசை கண்டுவிட்டு மாதாவின் பீடத்தின்முன் முழங்காற்படியிட்டு உருக்கமாய் மகனின் சுகத்திற்காக இரந்து மன்றாடுகிறார்.

இங்கே வீட்டு வாசலில் வண்டிவந்து நின்றது. அவரது மாமியார் இறங்கி இல்லம் புகுந்தாள். பார்த்தாள் மகளை, கொண்டாள் கவலை. குழந்தையைக் காணவுங் கண்ணீர்விட்டழுதாள். தொட்டாள், துடைத்தாள், முத்தமிட்டாள், உச்சி மோந்தாள். பிள்ளையின் நெற்றியையும், கையையுங் காலையும் பிடித்துப்பிடித்துப் பார்த்தாள். காய்ச்சல் இன்னுமிருக்கிறது. மகள் நோயைப்பற்றிச் சவிஸ்தாரமாய்ச் சொன்னாள். கேட்டபின் சொல்வாள் தாய்—“ பிள்ளைமேல் யார் கண்ணோ பட்டிருக்கிறது. எந்தப் பாவிக் கண்ணோ! கண் திஷ்டியினாலேதான் பிள்ளை கஸ்திப்படுகிறது. மிளகாய் எடுத்து தலையைச் சுற்றிப்போட்டால் எல்லாஞ் சரியாய்ப்போம். ”

ஆரோ.—அது அஞ்ஞானமாச்சே.

தாய்.—என்ன பைத்தகாரி—உனக்கின்னும் அந்த புத்தி போகவில்லையா? மடத்திலேயிருந்து கொண்டுவந்த சரக்கையெல்லாம் நீயின்னும் மறக்கவில்லைபோலும். குடும்பத்தை நடத்துகிற விதம் உனக்கின்னுந் தெரியாது. நான் என்ன அக்கியானியா! இன்றைக்குச் செவ்வாய்க்கிழமை அர்ச். அந்தோனியார் நாள். அவரைக் குறித்து 13 மிளகாய் எடுத்து பிள்ளையின் தலையைச் சுற்றி அடுப்பிலே போட்டால் தொலைந்துபோகிறது வியாதி. குழந்தைக்கு நல்ல சுகமானால் அர்ச். அந்தோனியார்பேரால் 13 பிச்சைகாரருக்குச் சாப்பாடு போடவேண்டும்.’” இப்படிச் சொல்லிக்கொண்டே வேலைக்காரியிடம்போய் மிளகாய் வாங்கிவந்து சில மந்திரங்களைச் சொல்லி பிள்ளையின் தலையைச் சுற்றிச்சுற்றி எடுத்து நெருப்பில் போட்டுவிட்டாள். சடசடவென வெந்து, புகைந்து தொண்டைக்குள் காரத்தை மூட்டுகிறது.

அருள்தாஸ் பிள்ளை கோவிலிலிருந்து வந்தார். வீட்டில் மிளகாய் நாற்றம். சில சமயம் வேலைக்காரி மிளகாய் வறுத்திருப்பாளென எண்ணிக்கொண்டு உள்ளறைக்குப்போனார். வேலைக்

காரி:காப்பி பலகாரங்கொண்டுவந்துவைத்தான். அவளைப் பார்த்துக் கேட்பார்: "என்ன விடியற்காலமே மிளகாய் வறுக்கவேண்டுமா? வியாதிக்கார வீட்டிலே புகையும் நாற்றமுந்தானு?

வேலைக்காரி.—நான் ஒன்றுஞ் செய்யவில்லை ஐயா, ஊரிலிருந்து வந்த பெரியம்மாள்தான் மிளகாயைக் கொண்டுவந்து அடுப்பிலே போட்டார்கள். இதைக் கேட்கவும் நடந்த சமஸ்தமும் அவருக்கு வெளிப்படையாய்க் கண்டுகொண்டார். 'ஆகா! அந்த மனுஷி வந்தவுடனே அஞ்ஞானத்தைத் தொடங்கிவிட்டாள்' என உள்ளத்தில் உன்னியவாறே காப்பி யருந்திவிட்டு, டாக்டரைப் பார்க்கப் போய்விட்டார். அன்று பிள்ளையின் வியாதி கொஞ்சம் சுமாராயிருந்தது. மாலையில் அடுத்த வீட்டுப் பெண்ணுகிய கற்பகவல்லி பிள்ளையின் சுகக்ஷேமத்தை யறியவந்தாள். பிள்ளையைப் பார்த்துப் பலதும் பேசிவிட்டுப்போகுமுன் பெரியம்மாளே நோக்கிச் சொல்வாள். "அம்மா! என் அக்காள் மகனுக்கு மிப்படித்தானிருந்தது. என்னென்ன மருந்தெல்லாங் கொடுத்தோம், ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியாக எங்கள் பூசாரியைக் கூப்பிட்டு மந்திரிக்கச்செய்தோம். இரண்டாம் நாள், இருந்தவிடந் தெரியாது வியாதி ஓடிப்போயிற்று. நீங்கள் அப்படி மந்திரிக்கக்கூடாதா? ஐயோ! அமல்தாஸ், என்ன அழகான பிள்ளை! இது தங்கக்கட்டியாயிற்றே. நான் வந்தவுடனே, 'அம்மா! ஊ, அம்மா! ஊ' என்று ஓடிப்போய்ச், சொல்வானே! பூசாரியைக் கூட்டிவரவேண்டுமாலுல் நானிருக்கிறேன். உங்களிஷ்டம். பெரியம்மா! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

பெரியம்மாள்.—அப்படிச் செய்யலாமென்றுதான் நினைக்கிறேன். அதையும் பார்த்து விடுவோமே.

கற்பகவல்லி.—சந்தேகமா! பிள்ளை சுகமடைவதில் தடையில்லை.

பெரி.—மகன், நாளைக் காலையில் ஸ்நானத்துக்குப்போகிறான், அதுதான் தக்கச் சமயம். இரண்டுகாளில் வந்துவிடுவான். அதற்குள்ளாக காரியத்தை முடித்துவிடவேண்டியது.

கற்ப.—என் அவர் சம்மதியாரோ?

பெரி.—அதைப் பேசுவானேன்?

கற்ப.—நாளைக் காலையில் எட்டு மணிக்கு மேலே வரச்சொல்லட்டுமா?

பெரி.—அதுதான் தகுந்த நேரம்.

கற்பகவல்லி வீடு போனதும், வேறு சேலையை யுடுத்திக்கொண்டு பூசாரியிடம்போய் சங்கதியையெல்லாஞ் சொல்லிச் சரிப்படுத்திவிட்டு வந்துவிட்டாள். பூசாரியோ அதிக சந்தோஷங்கொண்டவனுகினன்.

தானே தான் குருக்களென்பான் பணங்கள் வாங்கச்
சதா வென்தான் வந்தாற்போல் பூசை செய்வான்,
ஊனுள்ளோர் தங்களேத்தான் மயக்கிப் பூசை
ஒரு மணி போலெட்டு மணி யடிப்பான் மட்டை
மானுர்கள் தங்களேத்தான் கழுத்தைக் கட்டி
மாளுவான் பாழுங்குழியை நம்பிக்கொண்டே
என்காணு மிதிலுலே வருவதேதோ
எட்டுமிரண் டறியாத முகடன்தானே.

முகடனென்று சொன்னக்காற் கோவிப்பான் கேள்
மூதேவியுட பேச்சை மொழியவேண்டாம்
அகடிதங்க ளவன்தானும் சொல்லாவிட்டால்
அவனுக்குச் சீவனெங்கே நடக்குமப்பா
விகடிதமா மொழிந்தக்கால் அவர்க்குமப்போ
மேன்மேலும் பணங்கள் வரும், பெண்டீர் பிள்ளை
சுகமாக வாழ்வதாய் மாண்டுபோவான்
துறைகாணு மடையனென்றும் சொட்டன்தானே.

இப்படி மொத்தைச் சோற்றிற்கு மேல மடிக்கிறவர்கள் எத்தனேபேருண்டு. அவர்களில் இவனுமொருவன். வீண்காலங் கழிக்கிறதுதான் அவன் வேலை. சமயம்வாய்த்தால் பூசாரி வேஷம் பூண்டு சாஸ்திரஞ் சொல்லத் தலைப்படுவான். விவேகமற்ற பெண்கள்ளே ஏமாற்றி வயிறு வளர்ப்பது அவனது வழக்கம். ஆகையால் இந்தச் செய்தியவனுக்கு அதிஷ்ட காரியம். காள் எப்போது விடியுமென்று காத்திருக்கிறான்.

(இன்னும் வரும்)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

பெங்களூர்
கத்தோலிக்கு கோவாப்பரேட்டிவ் கிரிடிட் சோஸைடி லிமிடட்.

இச்சங்கமானது 1917ஆ பிப்ரவரிமீல் தொடங்கி இப்போது நல்ல ஸ்திதிக்கு வந்திருப்பது நம் கத்தோலிக்கருக்குப் பெருமையை தரத் தக்கதே. கடந்த 1917-ம் வருடத்திய முடிவில் கணக்கிட்டபடி இச்சங்கத்தின் மெம்பர்களுக்கு கடன் கொடுத்ததால் வீலாந்த வட்டி 538-1-8, இதில் ரிசர்வ் பண்டிற்காகவும், எடிகேஷன் பண்டிற்காகவும், அர்ச். இராயப்பர் காசுக்காகவும், சங்கத்தில் மரித்துபோன மெம்பர்களுக்கு பூசைக்காகவும், மிசலேனியஸ் பண்டிற்காகவும் கொடுத்தது போக மீதியில் மெம்பர்களுக்கு நூற்றிற்கு 7½ வீதப்படி டிவிடண்டும் கொடுக்கப்பட்டது. 1918ஆ கடைசியில் கணக்கிட்டபடி இச்சங்கத்தால் வீலாந்த வட்டி ஏறக்குறைய ரூ 2,000/- எனத் தெரியவருகிறது. இதனுல் இச்சங்கம் வரவர நல்ல ஸ்திதிக்கு வருமென்பதற்குச் சந்தேகமில்லை.

இச்சங்கத்தின் முக்கிய நோக்கமேதென்னுல், நம் இந்திய கத்தோலிக்கருக்குள் ஐக்கியத்தை எழுப்பி, பேரவாக்கொண்டு பெருந்தொகையான வட்டிகளைத் தரும்படியாக வலிய கடன் கொடுத்து, வட்டியை சுமத்தி வழக்கை யேற்படுத்தி வாழவிடாது வழமையில் வதைய விடும் வஞ்சக நரிகளிடமிருந்து அன்னேரை விடுவித்து, அவர்களுக்கு அவசியம் நேர்ந்தபோது வேண்டிய பணத்தைத் தந்து குறைந்த வட்டிகளே வாங்கி, வாங்கிய வட்டிகளைக்கொண்டு சங்கத்தை நடத்த அத்தியாவசியமான செலவுகளே மிகவும் சிக்கனமாய் செலவிட்டு, மீதியான தொகையை சங்கத்தின் மெம்பர்களுக்கே திருப்பி தாங்கள் எற்கெனவே கேமித்துவைத்திருக்கும் பணத்தால் வீலாந்த லாபமாகத்தந்து, இவர்கள் வட்டியென்னும் பெரும் மூட்புதரில் சிக்கி மாளாது செட்டித்தனத்தை அபிவிருத்திச் செய்து, என்றுஞ் சந்தோஷமாய் வாழச்செய்வதேயாம். ஆதலின் துவக்கமுதற்கொண்டு தற்போதுவரையிலுமுள்ள வட்டி சற்று அதிகமாய் இருப்பதால், புதிதாய் துவக்கிய சங்கத்தின் லாப நஷ்டங்களைப் பார்த்தபிறகு வட்டியைக் குறைப்பதாக வாக்களித்திருந்த சங்கத்தின் தலைவர்கள், கடந்த இரண்டு வருடங்களாக வந்த லாபத்தை யறிந்தமையால், இனிமேற்படவாவது வட்டிகளைச் சற்று குறைத்து ஏழை மெம்பர்களோ சற்று லாபமடையச்செய்வார்களென எதிர்நோக்கும்,

16—4—1919. பொதுநலப்பிரியன்.

சங்கை. சூசை மென்கோனி சுவாமிகள், செக்கேந்திராபாத்.

இவ்வூர் விசாரணையைச்சேர்ந்த கத்தோலிக்கரோ அநேகர். அவர்களே நடத்தும் குருமார்கள் சொற்பம். இந்த சொற்பத்தில் சிறிது காலத்துக்குள் அநேக குருக்கள் இறந்துவிட்டார்கள். சமீபத்தில் (23-3-19.) சங். சூசை மென்கோனி என்னும் அரிய தகப்பனர் நித்திய ஜீவியத்துக் கேகினர். இவர் இத்தாலியா தேசத்தில் 1892-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ந் தேதி குருப்பட்டம்பெற்று மறு வருஷமே தன் சொந்த தேசத்தைத் துறந்து அக்டோபர் மாசம் 19-ந் தேதி ஐதராபாத் வந்துசேர்ந்தார். இத் தேசத்தில் அவர் செலவழித்த இருபத்தாறு வருஷங்களேயும் தமிழ் கிறீஸ்துவர்களுக்கே உழைத்துவந்தார். அவருடைய நல்லுழைப்பின் பலனே அதிகமாய் அனுபவித்தவர்கள் செக்கேந்திராபாத், நிரிமல்கிரியிலுள்ள கிறீஸ்துவர்களே. அவருடைய உழைப்பில் மெய்யாகவே தேவ நேசங் கலந்திருந்ததால் தமிழ் கிறீஸ்துவர்களுக்காக அவர் பட்ட பிரயாசையும், தேக ஒத்த லுமே அவருடைய மரணத்துக்குக் காரணமாயிருந்ததெனத் துணிந்துசொல்லலாம். தேவ மகிமைக்காக சீவித்திருப்பதே அவருடைய ஏக எண்ணம். அவர் எங்கிருந்தாலும் சர்வேசுரனுடைய சமுகத்தில்தாம் இருக்கிறுமென்ற எண்ணமே அவருடைய ஞாபகத்தில் என்றும் குடிகொண்டிருக்கும். ஒரு மணிநேரமாகிலும் செபஞ் செய்யாமல் கழித்தவரல்ல. வழியிற்போகு நேரமெல்லாம் அவருக்கு எதிர்ப்பட்டவர்களெல்லாரும் அவருடைய கையிற் செபமாலையைக் காண்பார்கள். இச்செபமாலையின்மட்டில் அவருக்கு மெத்த பற்றுதலிருந்தது. சிலுவைப்பாதை செய்ய ஒரு நாளுந் தவறினவரல்ல. மனவல்லயச் செபம் எந்நேரமும் அவருடைய காவில் நிலைத்திருந்தது. மொத்தத்தில், செபமே அவருக்குச் சீவியமும் அவருடைய மனதுக் இனிமையுமாயிருந்தது. சர்வேசுரனுடைய கற்பனைகளின்படி தான் முன்நடந்து, பிறகு அவைகளேக் கிறீஸ்துவர்களுக்குப் போதித்துவந்தார். அவருடைய தருமம், பொறுமை, கீழ்ப்படிதல் ஆச்சரியத்துக்குரியவைகளா யிருந்தன. அவர் உலகத்துக்கு மறைந்து நடத்தின தபசு சாமானியமானதன்று. கமதிரகூகர்மட்டில் அவருக்குண்டான நேசமும் கன்றியறிதலும் அவருடைய இருதயத்தில் என்றுஞ் சுவாலித்துக்

கொண்டிருந்தது. தேவமாதாவின்மட்டில் அவர் விசேஷபக்தி வைத்திருந்தார். என்ரூலும் அவருடைய சிவிய வழி சமமாயிருந்ததென்னலாமோ? அவர் தம் வழியைச் சமப்படுத்தப்பட்ட பிரயாசையில் தம் ஆத்தும சத்துருக்களால் கடினமாய் சோதிக்கப்பட்டார். ஆயினும் அவைகளுடன் போராடினார்—இடைவிடாமல் ஜெபித்தார்—இறுதியில் ஜெயித்தார்.

இந்த நல்ல தகப்பனின் தயாளத்தைக் கவனிப்போமானால் ஒரு வார்த்தையில், தம் மக்களின் ஆத்தும சரீர அவசரத்தில் உதவி செய்வதற்கு என்றுஞ் சித்தமாயிருந்தார்; விசேஷமாய் கொடிய தொத்துவியாதி காலத்தில் அவ்வித ஆலுலுடையவராயிருந்தார். இவ்வளவு இனிய குணங்களெல்லாங் கொண்டிருந்த நல்லாயன் தன்னை வெகுவாய் நேசித்த மந்தையைவிட்டு மறைந்தார். என்ரூலும் அவர் நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றி நடப்போமானால் நாம் அவரை மறுபடியும் மகிமையில் காண்போம். அவரும் நமக்காகக் காத்துக்கொண்டிருப்பார். மேலும் அவருடைய ஆத்துமத்தின் இளைப்பாற்றிக்காக நாம் வேண்டிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். இது அவர் நமக்காகச் செய்துவந்த நல்ல ஜெபங்களுக்காக நாம் காட்டக்கூடிய சிறு நன்றியாகும்.

கடைசியாய் ஆயன் மறைய ஆடுகள் சிதறினவெண்ணுமல் தமிழ் கிறீஸ்துவர்களே! சர்வேசுரன் நமதுபேரில் இரக்கம்வைத்து சூசை மென்கோனி சுவாமிகளைப்போன்ற ஓர் நல்ல ஆயனை நமது மத்தியில் அனுப்பவேணுமென்று வேண்டிக்கொள்ள மறவாதேயுங்கள். அவருடைய திருச்சித்தமே நமது பாக்கியம்.

14—4—19. J. F. X.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

இச்சங்க விஷயமாய் நமது ஆயனில் கடந்த மாதம் தோன்றிய இரண்டு கடிதங்களையும் வாசித்து, அவைகள் விஷயமாய் எனக்குள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்தத் துணிகிறேன்.

எவரையும் அவரவர் அழைக்கப்பட விரும்பும் பெயர் பட்டத்துடன் அழைப்பதே ஆங்கிலேய முறைமையாயிருப்பது ஞாயமாயிருக்கும் பட்சத்தில், இந்திய கத்தோலிக்கருள் போலி உயர்ந்த ஜாதியாரை அவர்கள் விரும்புகிறபடி ஜாதிக் கிறீஸ்துவர்களென்றும், போலி தாழ்ந்த ஜாதியாரை அவர்கள் விரும்புகிறபடி இந்திய கிறீஸ்துவர்களென்றும் இக்கடிதத்தில் குறிப்பது இரு பக்கத்தாருக்கும் திருப்தியாயிருக்கும்.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கமென்பது தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் அனைவருக்கும் பொதுச் சங்கமென்பதும், பிரதிநிதித்துவ சங்கமென்பதும் தவறு. அது தென்னிந்திய மேற்றிராசனங்கள் சகலத்திலும் ஸ்தாபிக்கப்பட்டில்லை. மேலும் பெரும்பாலும் ஜாதிக் கிறீஸ்துவர்களே அதில் சேர்ந்து அதன் விசாரணைக் கர்த்தாக்களாய் விளங்குகிறார்கள். தாங்கள் பிரதிநிதித்துவம் பாராட்டுவதாக சொல்லிக்கொள்ளும் தென்னிந்திய கத்தோலிக்கு ஜனசமுதாயத்தில், கேவல நிலைமையிலிருக்கும் பெரும்பான்மையோரான இந்திய கிறீஸ்துவர்களை உலக நிலைமையில் ஈடேற்றவும் அவர்கள் தங்களுடன் உடன் உழைப்பாளிகளாய் சேரச்செய்யவும் அக்கரைகொள்ளுகிறதில்லை. அல்லது இந்திய கிறீஸ்துவர்களே அதில் சேர விரும்புகிறதுமில்லை. இதனால் இருதரத்தாருக்கும் பரஸ்பர நிநேகம், பரஸ்பர நம்பிக்கையில்லையென்பதாய்த் தெளிவாய்த் தெரியவருகிறது.

ஜாதிக் கிறீஸ்துவர்களுள் பெரும்பான்மையோர் விசேஷமாய் திருச்சினுப்பள்ளி சேசு சபை குருக்களின் அரும்பிரயாசையால் உயர்தரக் கல்வியில் தேர்ச்சியடைந்து தென்னிந்தியாவின் பிரதான பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் சிறந்த உத்தியோகங்களை வகித்துவருகிறார்கள். அவர்களுள் படிப்பில்லாதவர்கள் தனவந்தர்களாயாவதிருக்கிறார்கள்.

இந்திய கிறீஸ்துவர்களோ அப்படியன்று. இவர்கள், பாவம், ஜாதியென்னும் கொடுங்கோலன் இரக்கமின்றிச் செய்த உபத்திரவத்தினால் தங்கள் சுயரூபத்தையே யிழந்து தற்பெருமை, சன்மானம் என்பது இத்தன்மையதென்று அறியாமல், பெரும்பாலும் சுகஜீவனம் நாகரீகம் கல்வியின்றி பாடுபட்டு இப்போதுதான் கிறீஸ்துநாதரில் ஞானப்பிறப்பையும் ஆங்கிலேய துரைத்தனத்தாரால் சரி சுதந்தரத்தையும் அடைந்து கிறீஸ்துவ குருக்களின் கரிசனையினாலும் தங்கள் சுயமுயற்சியினாலும் கொஞ்சங் கொஞ்சமாய் நத்தை நகருகிறமாதிரியாய் முன்னேற்றமடைந்துவருகிறார்கள். விசேஷமாய்

ஜாதிக் கொடுங்கோன்மை யில்லாதவிடங்களில் இவர்களுள் அத்தி பூப்பதைப்போல் சிற்சில உத்தியோகஸ்தர்களும் தனவந்தர்களுமுண்டு.

ஆதலால் அவர்களுடைய நிலைமைக்கும் இவர்களுடைய நிலைமைக்கும் மெத்த பேதமுண்டு. அவர்கள் தங்கள் உலக நிலைமையில் திருப்திகொண்டு ராஜாங்க சுதந்தரங்களைத் தேடுகிறார்கள். தங்கள் சங்கம் பொதுவாய் தென்னிந்திய கத்தோலிக்கு இந்தியர்களின் ஈடேற்றத்தை நாடி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்று அவர்கள் வாயால் சொல்லிக்கொண்டாலும் வழக்கமாய்ச்செய்வது யாதெனில் ஒரு வருஷத்திற் கொருமுறை ஆடம்பரமாய்க் கூடி, சிறந்த உபந்நியாசக்காரை செய்து ஒவ்வோர் சமயம் கிறீஸ்துவர்களுடைய முன்னேற்ற விஷயமாயும் பேசி, அப்போதே முடிவுகட்டி எல்லா உத்தரவாதத்தையும் குருக்கள்மேல் சுமத்திக் கலைந்துவிடுவார்கள்.

இந்திய கிறீஸ்துவர்களுக்கோ அப்படியில்லை. இவர்களுக்கு முதலாவது கல்வி தேவை. அதுவும் பிரதம கல்வியே முக்கியமாய் அவசியம். இவர்களுக்குச் செட்டித்தனத்தைக் கற்பிக்கவேண்டியிருக்கிறது. இவர்களை விசேஷமாய் கிராமங்களில் தங்கள் ஆண்டைமாரிடமும் சாவுகாரிகளிடமும் படும் உபத்திரவத்திலிருந்து மீட்கவேண்டியிருக்கிறது. இவர்களுக்காக கவர்மெண்டாரிடம் பேசி தர்காஸ்த்நிலங்களை யடைத்து இவர்களைக் குடித்தனக்காரர்களாக்க வேண்டியிருக்கிறது. இவர்களை ஈடேற்றவேண்டில் இன்னம் அநேகாநேக காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இவ்வளவு காரியங்களை யிவர்களுக்குச்செய்தால் இவர்கள் தங்கள் சுய உருவடைந்து ஜாதிக் கிறீஸ்துவர்களுக்கு வலது புஜத்திற்கு இடது புஜம்போலிருந்து இருவரும் ஏகோபித்து கத்தோலிக்கு ஜனசமுதாயத்திற்கு நன்மை புரிந்துவருவார்கள்.

ஐரோப்பாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கத்தார் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களைத் தங்களுக்குச் சரியொத்தவர்களாக்குவதே தங்கள் கடமையென்றுணர்ந்து அங்ஙனம் உழைத்துவருகிறார்கள். மங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தென்கன்னட கத்தோலிக்கு சங்கத்தாரும் அங்ஙனம்தான் உழைத்துவருகிறார்கள்.

இப்படிச் செய்யவேண்டில் இதற்கெல்லாம் கிறீஸ்துவ பிற நிநேகமே மூலாதாரமாயிருக்கவேண்டும். அதனிடம் வெறுப்பில்லை, எரிச்சலில்லை, காய்மகாரமில்லை, எல்லாம் இரக்கமும் தயாளமுமே.

ஆனால் சங். பெஸ் சுவாமியாரால் சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட வீரமாமுனிவர் சரித்திரத்தில் சொல்லியிருக்கிறபடி சேசு சபைக் குருக்கள் கத்தோலிக்கு இந்தியருள் ஜாதியென்னும் ஏற்பாட்டிற்கு இடங்கொடுத்ததால், கத்தோலிக்கு இந்திய சபையில் சொத்தை விழுந்திருக்கிறது. ஆகவே ஜாதிக் கிறீஸ்துவர்கள் தாங்கள் 300—400 வருஷத்துப் பழங் கிறீஸ்துவர்கள் என பெருமைபாராட்டினாலும், அவர்களுடைய மனசாட்சி இன்னும் கிறீஸ்துவப் பிற நிநேக போதனைகளினால் பரிபக்குவமடையாமல் ஜாதியையே நாடித் தாவுகிறது. இது பரிதாபத்திலும் பரிதாபம்!

காரியம் இப்படியிருக்க, இந்திய கிறீஸ்துவர்கள் தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தில் சேர்வது என்ன பயன் என எனக்கு விளங்கவில்லை. இந்திய கத்தோலிக்கு கிறீஸ்துவர்களுள் 4 அல்லது 5 தனிச் சங்கங்கள் இருப்பதாக மேல்ல பத்திரிகையில் கண்டிருந்தது. மேலும் இந்திய கிறீஸ்துவர்கள் தனிச் சங்கம் ஸ்தாபிக்க கொண்டிருக்கும் கருத்தை தனி இயக்கம் என மேல்ல பத்திரிகை விகடமாய்ப் பேசியதை, சென்னை அதிமேற்றிராசனத்து "காத்தலிக் வாச்மன்" பத்திரிகை கண்டித்து, இந்திய கத்தோலிக்கர்கள் யாவரும் ஒற்றுமையுடன் சங்கம் நடத்துவது உசிதமான காரியமேயாயினும், அப்படிக் கூடாதபட்சத்தில் அவரவர்கள் தனிச் சங்கங்கள் நடத்திவரின் நாளாவட்டத்தில் ஒற்றுமைக்கு வழியாகும் எனப் பேசியிருக்கிறது.

ஆகவே, இந்திய கிறீஸ்துவர்களுள் உத்தியோகஸ்தர்கள், தனவந்தர்கள், கைவிரலாலே யெண்ணக்கூடிய அவ்வளவு சொற்பப் பேராயிருந்தபோதிலும், 'ஒற்றுமை வலிதரும்' என்னும் முதுமொழியை யுணர்ந்து குருசிரேஷ்டர்களுடைய அநுமதியையடைந்து ஓர் தனிச் சங்கம் ஸ்தாபித்து நடத்திவந்தால், நானாவட்டத்தில் ஜாதிக் கிறீஸ்துவர்கள் ஜாதியென்னும் அக்கினியான அகந்தையிலிருந்து நீங்க, இவர்கள் கல்வி நாகரீகத்தில் தேற, ஐக்கியத்திற்கு வழியுண்டாகும். அப்படிப்பட்ட தனிச் சங்கம் திருச்சினுப்பள்ளி பாரிஸ்டர் ஸ்ரீமான் D. A. G. ரத்தினம் B.A. L.T. அவர்கள் மற்றும் கனவான்கள் முயற்சியால் ஏற்படப்போகிறதாகக் கேள்வி

ஆதலால் முன்னெடுத்த காலைப் பின்னெடுத்து வைக்காமல் கடவுளில் நம்பிக்கையைவத்து சீக்கிரத்தில் துவக்குவார்களாக.

கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் ராஜாங்க சுதந்தரம் அடையும் விஷயத்திலோவெனில், கூர்ந்த அறிவுள்ள சங். ஹல் சுவாமியார் "எக் சாமினர்" என்னும் தமது பத்திரிகையில் ஜாதியைப்பற்றிப் பேசி முடிவுகட்டிய சில வரிகளைக் கொண்டு இக்கடிதத்தை முடிப்பேன்.

"ஆதலால் முன்னிலும் அதிக கண்டிப்போடும் விளக்கத்தோடும் நாம் சொல்வதேதெனில். ஜாதியேற்பாடென்பது இந்திய கத்தோலிக்கர்களுடைய எண்ணத்திலிருந்து முற்றிலும் ஒழியுங்கனேயும் தங்களுக்கும் தங்களுடைய திருச்சபைக்கும் கண்மை பயக்கக்கூடிய எவ்விதக் கட்டுப்பாட்டையும் திறமையையும் ஒருபோதும் அடையவேமாட்டார்கள். இராஜாங்க சுதந்தரங்களை அடையவேண்டில், ஜாதியேற்பாடே பெரிய தடை யென்பதை யுணர்ந்து, முதலாவது அதனை அறவே நீக்க முயலவேண்டியது."

எதிரொலி.

["தயாமூறும் பூர்வீக திராவிட கத்தோலிக்கு சேயன்" என்பவரிடமிருந்து காலதாமதமாய்வந்த கடிதம் அடுத்த மாத சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். ப—ர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

ஓர் மனந்திரும்பல்.—பேர்போன பிரிமேசனும் வைத்தியசாலை ஒன்றுக்கு தலைமை டாக்டருமான கர்னல் பார்லெட் என்பவர் மனந்திரும்பி கத்தோலிக்கரானர்.

100 பிராயமுள்ள ஓர் கன்னியாஸ்திரி.—அமெரிக்காவிலுள்ள நல்ல ஆயன் சபை கன்னியாஸ்திரி மடமொன்றிலுள்ள சங். மிக்கேல்மரி சகோதரி சமீபத்தில் தாம் பிறந்த 100-ம் வருஷாந்தர நாளைக் கொண்டாடினர்கள்.

திருச்சபையின் அபிவிருத்தி.—ருஷியா தேசத்தில் பிரிவினைக்காரர் தற்போது ஏராளமாய் திருச்சபையில் சேர்ந்துவருகிறார்கள். அங்கே ஓர் ஊரிலிருந்த பிரிவினைக்காரர் குருவானவர் ஒருவர் தம்முடைய விசார ணையைச்சேர்ந்த 150 குடும்பங்களுடன் கத்தோலிக்கரானர். சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக!

பலஸ்தீன்.—இந்நாட்டிலுள்ள ஜனங்களின் தொகை ஏழு லட்சம். இவர்களுக்குள். யூதர் 80,000; மகம்மதியர் 538; கிரீக்பிரிவினைக்காரர் 40,000; புரோடஸ்டான்டார் 5,000; அர்மீனியர் சீரியர் முதலியவர்கள் 2,000; கத்தோலிக்கரோ 35,000; ஜெருசலேம் பட்டணத்தில் 5,227 கத்தோலிக்கர் இருக்கிறார்கள்.

ஓர் புதுமை.—பிரான்சு தேசத்தைச் சேர்ந்த அரகோன் அரணியத்தில் தேவமாதாவின்பேரால் கட்டப்பட்டுள்ள ஓர் திருயாத்திரைக் கோவிலுண்டு. நிகழ்ந்த கொடிய யுத்தத்தின்போது அந்தக் கோவிலும், அதிலிருந்த பீடம், கத்திரிசால்கள், புஷ்பச்சாடிகள் இன்னுமற்ற சரூபங்களாகிய இவைகள் சகலமும் நாசமாக்கப்பட, தேவமாதாவின் சரூபமாத்திரம் யாதொரு சேதமும்படாமலிருக்கிறது.

மகா பெரிய தேவதுரோகமும் நிஷ்ரேக் கோலியும்.—சென்ற மாதம் ருஷியாவில் சில கலகக்காரர் குருவானவர் ஒருவர் கோவிலில் பூசை செய்துகொண்டிருக்கும் போது துராகிர்தமாய் அதனுள் நுழைந்து திவ்யநற்கருணைப்பெட்டியிலிருக்கும் திருபாத்திரங்களை யெடுத்துத் தங்களுக்குக் கொடுக்கும்படி அக்குருவானவரைக் கேட்க, அதற்கவர் உடன்படாததினால், அவரை அச்சண்டாளர் அவ்விடத்திலேயே சுட்டுக்கொன்றார்கள்.

சமாதான உடன்படிக்கை ஷரத்துக்கள் யாவும் முடிவாய்த் தீர்மானிக்கப்பட்டு அவைகளை ஒப்புக்கொள்ள ஜெர்மன் பிரதிநிதிகள் வரவழைக்கப்படிருக்கிறார்கள். இவர்கள் இப்போது அந்த நிபந்தனைகளை ஆலோசித்துவருகிறார்கள். இவர்கள் இரண்டு வாரத்துக்குள் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டுமென்று நிபந்தனையிடப்பட்டிருக்கிறது. மேமீ 15-ந் தேதிக்குள் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஜெர்மன் பிரதிநிதிகள் 200 பேர்கள் வருவார்கள் எனச் சொல்லப் படுகிறது.

ஜெனரல் போஷ் சன்மானிக்கப்படுகிறார்.—இவர் நிகழ்ந்த கொடிய யுத்தத்தில் வெற்றியடைந்ததின் ஞாபகார்த்தமாய் இவருடைய சிலையொன்றைச் செய்வித்து, அதை அமெரிக்காவிலுள்ள வாஷிங்கடன் நகரத்தில் ஸ்தாபிக்க 3 இலட்சம் ரூபாய் செலவாயிருக்கின்றது. இன்னொரு மகான் இங்கிலாண்டிலுள்ள ஆக்ஸ்பர்ட் கலாசாலையில் பிராஞ்சு கல்வியின் அபிவிருத்திக்காக 3,75,000 ரூபாய் இவர்பேரால் அக்கலாசாலைக்கு அளித்திருக்கிறார்

உத்தரிக்கிற ஸ்தலம்.—இதுகாறும் புரோடஸ்டான்டு மதத்தார் உத்தரிக்கிற ஸ்தலமில்லையென்று சாதித்துவந்தார்கள். ஆனால் முடிவாயிருக்கும் ஐரோப்பிய மகா யுத்தந் தொடங்கினது முதற்கொண்டு அவர்கள் இறந்துபோனவர்களுக்காக வேண்டிக்கொள்வதுமல்லாமல், தாங்கள் வசிக்கும் ஊர்களிலும் பட்டணங்களிலுமுள்ள வீதிகளில் அங்கங்கே பாடுபட்ட சரூபங்களை ஸ்தாபித்து, அவைகளுக்கு முன் மிக்க பக்தி விசுவாசத்துடன் அவர்களுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொண்டுவருகிறார்கள்.

திரு இருதய உத்தரியம்.—ஐரோப்பாவில் நடந்த பெரும் போரின்போது கத்தோலிக்குப் போர்ச்சேவகர்கள் இருதய ஆண்டவரின் இரக்கத்தை இரந்து கேட்டுத் தங்கள் தங்கள்கழுத்துகளிலும் தொப்பிகளிலும் திரு இருதய உத்தரியத்தை தரித்துகொண்டபடியால், அவர்களில் அநேகர் அற்புதமாய் வெடிகுண்டுகளுக்குத் தப்பித்துக்கொண்டார்கள். இதைக் கவனித்த அநேக புரோடஸ்டான்டாரும், யூதரும் தாங்களும் அப்படியே திரு இருதய உத்தரியங்களைத் தரித்துக்கொள்ளத் தலைப்பட்டார்கள்.

மரியாயின் வல்லபம்.—நிகழ்ந்தயுத்த காலத்தில் ஓர் யுத்தக் கப்பலிலிருந்த குருவானவர் ஒருவர் அந்தக் கப்பலின் சுக்கான்மீது தேவதாயாருடைய கிறு சரூபமொன்றைவைத்து அதற்கு யாதோர் ஆபத்து வராவிடாமலிருக்க அடிக்கடி வேண்டிக்கொண்டுவந்தார். யுத்த முடிவானபின் இக்குருவானவர் அந்தக் கப்பலின் கப்பித்தானிடத்தில் தாம் செய்துவந்த காரியத்தை வெளியிடவே, அதற்கு அவன் "மெய்யாகவே, மற்றநேக கப்பல்களுக்கு ஆபத்துகளுண்டாயிருக்க, நம்முடைய கப்பல் அற்ப ஆபத்துமின்றிக் காப்பாற்றப்பட்டது மரியாயின் வல்லபமே" என்றனும்.

தூத்துக்குடி முனிசிபல் சேர்மேன் ஸ்தான விஷயமாய் வெகுபோட்டிகள் ஏற்பட்டு முதல் நடந்த எலெக்ஷன் தவறென்று கண்டனஞ் செய்யப்பட்டபின் நடந்த இரண்டாவது எலெக்ஷனிலும் நமது நண்பர் ஸ்ரீமான் குருசு பெர்நாந்து அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டது நமக்கு நிரம்ப சந்தோஷத்தையளித்தது. இவர் பொதுஜன க்ஷேமத்துக்கான விஷயங்களை கவனித்துச் செய்வரென ஜனங்கள் நம்பியிருக்கலாம்.

திவான்பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் நெல்லூரிலிருந்து, கோதாவரி ஜில்லா கலெக்டராகவும், கவர்னர் ஏஜெண்டாகவும் மாற்றப்பட்டிருக்கிறார்களென்று சென்ற வாரத்து கவர்ன்மென்ட் கெஜடில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புது ஜில்லாவிலும் நமது பிள்ளையவர்கள் நற்பேரும் புகழும் பெற்று, சீக்கிரத்தில் ரிவினியூ போர்டிலாவது, கவர்னரவர்களின் நிர்வாக சபையிலாவது உன்னத உத்தியோகமடைவாரெனக் கோருகிறோம்.

வில்சன் பிரபு.—அமெரிக்காவின் பிரஜாதிபதியாகிய இவர் சில மாதங்களுக்கு முந்தி ரோமாபுரிக்குப்போய் பரிசுத்த தந்தையாகிய 15-ம் ஆசீர்வாதப்பரைச் சந்தித்தபோது, பரிசுத்த தந்தை அவருக்கு ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூ. பெறத்தக்க ஒரு சிறந்த சித்திரப்படத்தை வெகுமதியாக அளித்தாரென்றும், பரிசுத்த தந்தையின் நேசகாரியதரிசியாகிய காஸ்பார் கர்தினலாண்டவர் திருச்சபையின் புதிய சட்டப் பிரதியொன்றை அவருக்குப் பரிசாகக் கொடுத்தாரென்றும் சொல்லப்படுகிறது.

அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும் என்னும் பழமொழிப்படி ஜெர்மனி இப்போது தெய்வதண்டனைக்குள்ளாகிறது. ஜெர்மனியின் தலைநகராகிய பெர்லின் பட்டணத்தில், கவர்ன்மென்டாருக்கும் அமிதவாதக் கட்சியா

ருக்கும் ஏற்பட்டுள்ள விவாதத்தில் பிந்தினவர்கள் செய்த கலகத்தை யடக்கும் விஷயமாய் கவர்ண்மென்டார் ஆகாய விமானங்கள்மூலமாய் ஆகாசத்திலிருந்து கலகக்காரர்கள்மீது வெடிகுண்டு எறிந்தார்கள். அதனால் அநேக உயிர்களும், பிரமாண்டமான பல கட்டிடங்களும், கோவில்களும் நாசமாய்ப்போயின. ஜெர்மனியர்கள் லண்டன்மீது வெடிகுண்டெறிந்தபோதுகூட அங்கே இவ்வளவு நஷ்டமும் கஷ்டமும் நேரவில்லையென்று சொல்லப்படுகிறது.

அகவிலை.—சென்னையில் அரிசி வியாபாரிகள் அதிகாரிகளால் குறிக்கப்படும் விலைக்கு அரிசி விற்கிறார்களோவென்று பார்த்து, அவர்கள் விலையை அதிகரிப்பித்து அநியாயமாய் இலாபம் அடைவதைத் தடுக்க, போலீசு உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார். தெனாலி, குண்டூர், நெல்லூர், கோதாவரி, கிருஷ்ணா முதலிய விடங்களிலிருந்து வரும் அரிசியை ரூபாய்க்கு நான்கு படி விற்கப் போலீஸ் கமிஷனர் ஏற்பாடு செய்திருக்கிறார். இதன்படி எவ்வளவுதூரம் நடக்கிறதோ பார்ப்போம்!

தெ. இ. க. இந்தியர் சங்கம்.—சென்னையின் புது கவர்னராகிய மேன்மைதங்கிய வில்லிங்கடன் பிரபு அவர்களுக்கு தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தாரின் பிரதிநிதிகள், அக்கிராசனாபதியாகிய கனந்தங்கிய சென்னை அதிமேற்றிராணியாண்டவர் உள்பட ஒன்பது பேர்கள் அடங்கிய சபையொன்று சென்றமீ 14-ம் தேதியன்று வரவோபசாரப் பத்திரம் வாசித்து அவரைப் பேட்டி கண்டுகொண்டார்கள். இச்சங்கத்துக்கும் இதனுடன் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தமற்றப்பதினோர் சங்கங்களுக்கும், கவர்னர் அவர்கள் அன்புடன் பிரதியுபசாரஞ் சொல்லி, தமது ஆளுகைக்குட்பட்ட பிரஜைகள் இராஜாங்க சுதந்தர விஷயத்தில் நியாயமாய்க் கோரும் முன்னேற்றத்துக்கு தாம் முன்னிருந்து தம்மாலானதையெல்லாம் செய்வதாக வாக்குக் கொடுத்தார்கள்.

புரொடெஸ்டான்டரின் தூஷணம்.—சென்னை "மெத்தடிஸ்ட் பப்ளிஷிங் அவுஸ்" என்ற அச்சியந்திரசாலையில் புரொடெஸ்டான்டாரால் வெளிப்படுத்தப்பட்ட மதவைராக்கியப் புத்தகமொன்றில், பின்கண்ட கத்தோலிக்குத் தூஷணம் சொல்லப்பட்டிருக்கிறதாம்: "பூசை செய்யும் குருவானவர் ஒவ்வொருவரையும் திவ்யநற்கருணை யெழுந்தேற்றம் செய்யப் போகுந்தருணத்தில் அவரைத் துப்பாக்கியாற் சுட்டுக்கொன்று, அவர் சதையைத் துண்டு துண்டாய்வெட்டி அதை விசுவாசிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறதாம். இது எப்பேர்ப்பட்ட தூஷணம்! மகம்மதியரின் குறானைப்பற்றி கிறீஸ்துவப் பத்திரிகையொன்றில் ஏதோ குறைவாய்ச் சொல்லப்பட்டதென்கிறதைப்பற்றி மகம்மதியருக்கு அநுதாபங்காட்டிய கவர்ண்மென்டார் கத்தோலிக்கர் விஷயமாய்ச் சொல்லப்பட்ட இந்த மகா கொடூரமான தூஷணத்தைப்பற்றி யொன்றுங் கேளாரோ?

"குயவனுக்குப் பல நாள் வேலை, தடியடிகாரனுக்கு ஒரு நிமிஷ வேலை" என்றபடி ஜெர்மனியர் சொற்ப காலத்துக்குள் பிரான்சு தேசத்துக்கு இழைத்த சேதம் நாவாற்சொல்லுந்தரமல்ல. உயிர்களுக்குப் பதில் உயிர் கொடுக்க யாவராலும் சாத்தியமல்ல. ஆனால், சேதமாக்கப்பட்ட நாடு நகரங்களையும், மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் செப்பனிட்டு முன்போலாக்குவது சாத்தியமானாலும், அப்படிச் செய்வதற்கு வேண்டும் பொருளும் ஏவலும் காலமும் அபாரமாகும். சமீபத்தில் இது விஷயமாய் பிரென்ச் செனெட் மகா சபையில் தர்க்கம் நடந்தபோது, கைத்தொழில் லாக்கா மந்திரியாகிய மிஸ்டர் லூஷேர் என்பவர், மாஸ் தெ கலே என்னும் இடத்தையும், துநோர்து என்னும் மிடத்தையும் செப்பனிடுவதற்கு 3,000,000,000 பவுன் செலவாகுமெனச் சொன்னார். இம்மாதிரி மற்றநேகவிடங்களையும் செப்பனிட எத்தனை கோடி பவுன் பிடிக்குமென்பதை வாசிப்போர் பெருக்கிக்கொள்ளவேண்டியதுதான்.

பூனையும் நாயும் ஐரோப்பிய யுத்தமும்.—கடந்த ஐரோப்பிய யுத்தத்தில் ஜீவகாருண்யமற்ற ஜெர்மானியர்கள் தங்கள் எதிரிகள்மீது விஷக்காற்றைப்பரப்பி, அது

காரணமாய் அநேக உயிர்களை மாளவைத்தனரல்லவா? அவ்வித விஷக்காற்று ஓரிடத்தில் இருக்கிறது என்று கண்டுபிடித்து அதை விட்டுவிலக நம்மவர்கள் பூனைகளை உபயோகித்துவந்தார்களாம். இந்த விஷக்காற்றானது வர ஆரம்பிக்கும்போதே அதன் வாடையை மற்ற எவரும் கண்டுபிடிக்குமுன்னே இந்தப் பூனைகள் கண்டுபிடித்துவிடுமாம். எப்படியெனில், அந்த வாடைபட்டவுடன், பூனையானது மயிர்க்கூச்செறிவுற்று தன் வாலைத் தூக்கிக்கொண்டு, அவருவருப்புக் கூச்சல்போடுமாம். அதன்பிறகு சற்று நேரத்துக்கெல்லாம் விஷக்காற்றுவர ஜனங்கள் மயக்கமுற்று கீழே விழுவார்களாம். இந்தவிதமாய் விஷக்காற்றைக் கண்டுபிடித்து அதை விட்டு விலகிக்கொள்ள, 500,000 பூனைகளை நமது ஐக்கிய கட்சியார் யுத்தகளத்தில் சேனாவீரரைப்போல்வைத்துக் காப்பாற்றிவந்தார்களாம். பிளேக் நோயை, எலிமூலமாய் நாம் கண்டுபிடிப்பதுபோல், பூனைமூலமாய் விஷக்காற்றைக் கண்டுபிடிக்கிறோம். மோப்பம் பிடிப்பதில் நாய்கள்தான் பேர்போனவை. பூனைகளும் மோப்பம் பிடிக்கின்றனவென்று இப்போது தெரியவருகிறது. பூனைகளைப்போலவே நாய்களும் யுத்தக்களத்தில் மிக்கப் பிரயோசனமுள்ளவைகளாயிருந்தன. விசேஷமாய் இவைகள் சிறு பீரங்கி வண்டிகளை யிழுக்க உபயோகப்பட்டன.

ஒரு புதுமை.—சமீபத்தில் லண்டன் நகரத்தில், பக்தியுள்ள ஒரு கிழவி பெரிதும் வியாதியுற்று மரணப்படுக்கையிலிருந்தாள். அவளுடன், ஒரு தாதிமட்டும் இருந்தாளேயன்றி வேறோர் உதவியுமிருந்ததில்லை. இந்தக் கிழவிக்கு இருக்க இருக்க நோய் அதிகரித்துவந்ததினால் ஒரு நாள் பொழுது விடிவதற்குள் இறந்துவிடுவாளோவென்று அஞ்சினவளான அந்தத் தாதி, சுவாமியாரை யழைத்துவந்து அவளுக்குக் கடைசித் தேவத்திரவியாநுமானங்களை நிறைவேற்றிவிடவேண்டுமென்று ஆவல்கொண்டாளாயினும், அந்த ஆபத்தானசமயத்தில் அவளைத் தனியே விட்டுப்போக மனஞ் சகியாமல், சுவாமியாரை யழைத்துவர வேறு யாருமில்லையேயென்று கவலைகொண்டவளாய் பக்கத்திலிருந்த ஜெபப் புத்தகத்தை யெடுத்துப் பக்தியுடன் படிக்கத்தொடங்கினாள். அப்போது இரவு ஒருமணியிருக்கலாம். இவள் இவ்வாறு கவலையுடன் ஜெபித்துக்கொண்டிருக்கையில் யாரோ தெருக் கதவைத் தட்டுஞ் சத்தங்கேட்டது. கதவைத் திறக்கவே அந்தக் குடும்பத்துக்கு அறிமுகமான ஒரு குருவானவர் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும், அந்தத் தாதி மிக்க சந்தோஷங்கொண்டவளாய் "தகப்பனே, தங்களைத்தான் அதிக ஆவலாய்த் தேடிக்கொண்டிருந்தேன். தங்களை யிங்கு இப்போது வரச்சொன்னதார்?" என்று கேட்டாள். "சற்று முன்னே நீ டெல்லபோனில் பேசவில்லையா? என "தகப்பனே, டெல்லபோனில் எந்தச் சுவாமியாரையாவது கூப்பிட்டுப் பேச எனக் காவல்தான். ஆனால், இந்த நோயாளியைத் தனியே விட்டுவிட்டுப்போக மனம்வராமல் சும்மாவிருந்தேன்" என்றாள். "அது எப்படியாயினும் இருக்கட்டும்." யாரோ ஒருவர் என்னை வரச்சொல்லித்தான் வந்தேன்; என்று சொல்லி அந்தக் கிழவிக்கு அவஸ்தைப்பூசுதல், அவஸ்தை நன்மைமுதலிய கடைசித் தேவத்திரவியாநுமானங்களை நிறைவேற்றிவிட்டுப்போனார். அதற்குப் பின் இரண்டுமணிநேரத்திற்கெல்லாம் அந்தக் கிழவி நன்மரணத்தையடைந்தாள். டெல்லபோனில் அக்குருவை அழைத்ததார் என்ற விஷயத்தைப்பற்றி அன்றிரவு டெல்லபோன் ஆபீஸில் இருந்தவரைக் கேட்க, போன ராத்திரி யாரும் தன்னைக் கூப்பிடவில்லையென்று தெளிவரமாய்ச் சொல்லிவிட்டார். ஆதலினால், ஷை தாதியினுடைய வேண்டுதலாலும், கிழவியினுடைய புண்ய பலனினாலும் உண்டான தேவ ஏவுதலே அக்குருவானவரைப் போய்க் கூப்பிட்டதென்று நம்பப்படுகின்றது. இது உண்மையாய் நடந்த விஷயம். அதில் சம்பந்தப்பட்டவர்களின் வேண்டுகோளுக்கிசைய அவர்கள் பேர் முதலிய விவரங்கள் குறிப்பிடாமல் விடப்பட்டன. இச்சங்கதி லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையிற் காணப்பட்டது.

மிஸ்ஸஸ் பெசென்ட்.—ஹோம் ரூல் அல்லது சுய ஆட்சிக் கிளர்ச்சிக்குத் தலைவியாயிருந்து இந்தியாவெங்கும் மிக்க பேர் பெற்று "உலோகமாதா"வெனப் போற்றப்பட்டுவந்த பெசென்ட்டம்மையாரை

இப்போது சட்டைபண்ணுவாரில்லைபோலும். சத்தியாக்கிரக நிகழ்ச்சிக்குத் தலைவரான காந்தியின் செய்கையை இந்த அம்மையார் பலமாய் எதிர்த்துக் கண்டித்திருக்கிறார். மேலும் ரௌலட் சட்டமிப்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளவகையில் அதைக்கண்டு இராஜத் துரோகிகள் அல்லாதவர் சற்றும் அஞ்சவேண்டுவதில்லையெனச் சொல்லி அச்சட்டத்தை அங்கீகரித்துவிட்டார். ஹோம் ரூல் விஷயத்திலும் கான்கிரஸ் விஷயத்திலும் அமிதவாதிகளுடன் சேராமல் இப்போது மிதவாதிகளின் கொள்கையை மேற்கொண்டவராயிருக்கிறார். இக்காரணங்கள்பற்றியே அவருக்கு முன்னிருந்த ஹோதா குறைந்து போய்விட்டதென்னலாம். சமீபத்தில் இந்த அம்மை கல்கத்தாவுக்குப் போயிருந்தபோது, அங்குள்ள பாங்கி வாசலண்டையில், தம்முடன பேசுவோர் ஒருவருமின்றி தனிமையாய் தலையின்மேல் கையை வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்ததைப் பார்த்தவர் ஒருவர் "இங்கிலீஷ்மென்" பத்திரிகைக்கு எழுதிய நிருபத்தில் "இது ஒரு பரிதாபமான காட்சியென்றும்," இதைவிட துக்ககரமான சம்பவம் இருந்திருக்காது" என்றும் சொல்லியிருக்கிறார்.

மாஜி கெய்சர்.—மாஜி ஜெர்மன் சக்கரவர்த்தியானவர் தம் நாடு நகரத்தை விட்டு உலாந்து தேசத்தில் பரதேசவாசம் பண்ணுகிறாரல்லவா? அவரைக்கண்டு பேசிய கவுண்ட் பென்டிர் என்பவர் கெய்சரைப்பற்றி பின்வருமாறு சொன்னார்: மாஜி கெய்சரின் ரோமங்கள் வெண்மையாய் மாறுபட்டபோதிலும், அவர் திடதேகமற்றோராகவும், வலிமை குன்றினோராகவும் காணப்படவில்லை. நாடோறும் அரை மணிநேரமளவும் நடந்து தேகாப்பியாசஞ் செய்துவருகின்றார். மற்ற ஒழிவு நேரங்களை, தையல் வேலை செய்துகொண்டிருக்கும் தமது பத்தினிக்குப் புத்தகங்களை வாசிப்பதிலாவது, அல்லது தன்சுயசரித்திரத்தை யெழுதுவதிலாவது கழித்துவருகின்றனர். பிரசித்தமாய்த் தம்மை நியாயஸ்தலத்தில் நிறுத்தி விசாரணைசெய்வார்கள் என்பதைப்பற்றியாவது, கடந்த கொடிய யுத்தத்தையும், அதனால் நடந்த குரூரமான செயல்களையும்பற்றியாவது சற்றாவது கிலேசப்பட்டவராய்க் காணப்படவில்லை. அதற்குமாறாக, யுத்தம் நடவாதபடிக்கு மற்றெல்லாரையும்விடத் தாம் வெகுவாய் பிரயாசைப்பட்டதாகவும் அரசியல் நிர்வாக பிரதம உத்தியோகஸ்தர்களால் சிருஷ்டிக்கப்பட்ட இந்தக் குரூர யுத்தத்திற்கு சகல மன்னரும் எதிராய் நின்றனரென்றும், ருஷியா சண்டை ஆரம்பித்ததால், ஆஸ்திரியாவைக் காப்பாற்றவே ஜெர்மனி யுத்தத்தில் பிரவேசிக்க நேர்ந்ததென்றும், அமெரிக்கரின் லுசித்தானியா கப்பல் அமிழ்த்தப்பட்டதைப் பற்றியும், மிங்கெவல் சுடப்பட்டதைப் பற்றியும் தாம் வெகுவாய்த் துக்கிப்பதாகவும் சொல்லுகிறார்.

கிளமென்சோ.—இவர் பிரான்சு தேசத்தின் முதல் மந்திரியென்றும் இவரைச் சமீபத்தில் துஷ்டன் ஒருவன் கைத்துப்பாக்கியினால் சுட்டபோது உயிர்ச்சேதமடையுமாறு காயப்பட்டபோதிலும் சாவுக்குத் தப்பித்துக்கொண்டாரென்றும் நேயர்கள் அறிவார்கள். இவர் கத்தோலிக்குத் திருச்சபையின் விரோதியாயிருந்தபோதிலும், இவர் ஆபத்துக்குத் தப்பித்துக்கொண்டதைப்பற்றி பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதபபர் மிக்க சந்தோஷப்பட்டு, தம்முடைய சந்தோஷத்தை அவருக்கு அறிவிக்கும்படி பரீஸ் நகரத்து கர்தினாலாண்டவரைத் தந்தியின் மூலமாய்க் கேட்டுக்கொண்டார். கர்தினால் ஆண்டவரும் மந்திரியாருக்கு அதை அறிவிக்க, மந்திரியார் அதற்குத் தம்முடைய நன்றியறிதலை பாப்பானவருக்கு அறிவிக்கும்படி கர்தினால் ஆண்டவரைக் கேட்டுக்கொண்டார்.

சரி. வந். டாக்டர் கண்டன்கரி.—திருவாங்கூரைச் சேர்ந்த சங்கனாச்சேரி மேற்றிராசனத்து விக்கர் ஜெனரலாகிய சரி. வந்திக்கத்தக்க டாக்டர் கண்டன்கரி சுவாமிகள் காலஞ்சென்ற துக்கசெய்தியைக்கேட்டு விசனிக்கிறோம். புத்தி தீட்சண்யமும் சாமர்த்தியமும், அநுபோகமும் தயை தாட்சண்யமும் கொண்டிருந்த இவரால் இந்த மேற்றிராசனத்துக்குண்டாகிய நன்மை கொஞ்சமல்ல இவருக்கு சர்வேசுரன் நித்திய இளைப்பாற்றியை தந்தருளுவாராக.

திருநாள் விளம்பரம்.

எண்ணூர் கத்திவாக்கத்தில் பிரதிஷ்டையாகி யிராநின்ற அர்ச். சூசையப்பர் தேவாலயத்தில் மே மாதம் முதல் தேதியாகிய வியாழக்கிழமை சாயரட்சை கொடியேற்றஞ் செய்து, அன்றுமுதல் காலையில் 7¼-மணிக்கு பூசையும், சாயரட்சை 6½-மணிக்கு அர்ச். சூசையப்பர் தேர் சுற்றுப்பிரகாரமும் பிரார்த்தனையும் நடக்கும். 10-ந் தேதியாகிய சனிக்கிழமை சாயரட்சை 6½-மணிக்கு பெரிய வேஸ்பராவும்-பிரசங்கமும் தேவநற்கருணை ஆசீர்வாதமும், தேர் எழுந்தருள்படியுமிருக்கும். மறுநாள் 11-ந் தேதியாகிய ஞாயிற்றுக்கிழமை காலையில் 5½-மணிக்கு முதற் பூசையும் தேர் சுற்றுப்பிரகாரமும், 7½-மணிக்கு பெரிய பாட்டுப் பூசையும் தேவநற்கருணை ஆசீர்வாதமுமிருக்கும்.

M. DEVADOSS,
விசாரணை குரு.

திருநாள் விளம்பரம்.

ஆரம்பாக்கம் பொருத்தனைக் கோவிலில் தேவமாதாவின் வணக்கமாதத்துக் கடைசி நாள் வழக்கப்படி கொண்டாடப்படும். மே மாதக் கடைசி நாளாகிய 31-ந் தேதி சனிக்கிழமை மாலையில் ஜெபமும், சின்ன தேர் சுற்றுப்பிரகாரமும், பிரசங்கமும் திவ்யநற்கருணை ஆசீர்வாதமும் இருக்கும். அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமை காலையில் பாடல்பூசையும், பிரசங்கமும், திவ்யநற்கருணை ஆசீர்வாதமுமிருக்கும். இந்தப் பொருத்தனைக் கோவிலில் நமது தேவதாயாரை வணங்கி கிருபைபெற ஆசையுள்ள திருயாத்திரைக்காரரெல்லோரையும் இத்திருநாளுக்கு வரும்படி அன்புடன் அழைக்கிறோம்.

ஆரம்பாக்கம் R. S.,
(நெல்லூர் ஜில்லா.)
15—4—1919.

S. M. F. இஞ்ஞாசியார்,
விசாரணை குரு.

திருநாள் விளம்பரம்.

மைசூர் ராஜ்யத்தைச்சேர்ந்த டோர்ண்ஹள்ளி கிராம க்ஷேத்திரத்தின்கண் திருக்கோயிற்கொண்டிலகி அநேகாநேக அற்புத நவங்கள் புரிந்தருளும் கோடி யற்புதரெனக் குவலயங் கொண்டாடும் பதுவாப்பதி அர்ச். அந்தோனியார் மஹோத்ஸவம் வழக்கப்படி நிகழும் 1919 ௵ மே௴ 20௳ செவ்வாய்க்கிழமையன்று திருப்பலி பாடற்பூசையோடு மிக்க ஆரவாரச் சிறப்பாய்க் கொண்டாடுவதால் அர்ச். அந்தோனியாரின் திருவடி பக்தர்களாகிய ஸ்திரீ பூமான்களனைவரும் திருயாத்திரையாக விஜயஞ்செய்து அர்ச். அந்தோனியாருடைய விசேஷ வேண்டுதல் மன்றாட்டின் ஆசீர் பெறுவார்களாக!

C. S. G.
பெங்களூர்.

S. டிசில்வா,
விசாரணை குரு.

விளம்பரம்.

நாளது 1919௵ எப்பிரல்௴ 20௳ நமது இரட்சகராகிய சேசுக்கிறீஸ்துநாதர் உயிர்த்த திருநாளன்று இராயபுரம் சன்மார்க்க சங்கத்தாரால் சேசுவின் திரு இருதயத்துக்குத் தோத்திரமாக சுமார் ஆயிரத்துமுந்நூறு ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது. (இச்சங்கம் 1900௵ ஸ்தாபிக்கப்பட்டது.) இது சுமார் 20 வருஷகாலமாக நடந்தேறிவருகிறது. இத்தர்மம் நாளுக்குநாள் வளர்ந்தோங்குமாறு சேசுவின் திரு இருதயம் ஆசீர்வதிப்பதாக.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-நபாயும், முழக்கலத்துக்கு 4-நபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

ரோஷாநகரம்.

இறந்துபோன விழிப்புரத்து போஸ்ட் மாஸ்டர் கண்ணய்ய நாயுடு, ஆரோக்கியம்மாள் மகன் பொன்னுராஜு நாயுடு தனது 29-வது பிராயத்தில் ரோஷா நகரத்திலே 1919௵ எப்ரல் மாதம் 8-ந் தேதி மரணமடைந்தார்.

R. I. P.

சிலோன்.

திருநெல்வேலி ஜில்லா ஏரலில் எனது பிரிய மனைவி அன்னம்மாள் பூபாலராயன் எப்பிரல் மாதம் 12-ந் தேதி காலையில் பிரசவவேதனையால் சேசுவின் திரு இருதயமே எனக்கு இரட்சண்ணியமாயிரும் என்கிற ஜெபத்தைச் சொல்லும்போதே அவளுடைய ஆத்துமம் பிரிந்தது. சகோதரரே மரித்தவளுடைய ஆத்துமம் மோட்ச இராச்சியம் சேரும்படி பிரார்த்தியுங்கள். பாரியை யிழந்த பத்தா

எ. வி. பெறநான்டெஸ்.
வைன் அன் ஜெனரல் மெற்ஜென்று
பிரைத்ஹோபிட்டிய அன் தெஹியே வெற்ற
சிலோன். 12—4—1919.

வீரமாமுனிவர் ஔஷதசாலை.

"வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை" யானது காலுவித வியாதிகளையும் கண்டித்துப் போக்கும் அதிசய குணத்தைக்கொண்டிருப்பதனால் அதற்கு "சர்வரோக நிவாரணி" யென்னும் பேர்கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கட்டுக்கதையல்ல; கைகண்டது. பல்லாயிரம் பேர்களால் பரீட்சிக்கப்பட்டது. மேலும் பேர்போன ஓர் கத்தோலிக்குக் குருவானவரால் ஏழைகளின் பிரயோஜனத்துக்காக நவமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. கத்தோலிக்குக் குருவானவர்கள், கன்னியாஸ்திரிகள், கிறீஸ்துவர்கள் முதலியோரால் கையாளப்பட்டுவருகிறது. அநேக நற் சாட்சிப் பத்திரங்களைப் பெற்றுள்ளது. ஒவ்வொருவரும் தம்தம் வீடுகளில் கையிருப்பாய் வாங்கி வைத்துவைக்கத் தக்கது. குணமேதவிர குற்றம் ஒருபோதும் செய்யாதது. பத்தியம் வேண்டாதது. இதனை இதுவரையில் வாங்கி பரீட்சியாதவர்களும், அல்லது வாங்கி அரை குறையாய் அவசரமாய் உபயோகித்துப் பயன் பெறுமல் கைவிட்டவர்களும், மறபடியும் அவசியம் வாங்கி பரீட்சித்துப்பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விலை 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு விலை ரூ 1 0 0.

தபாற் செலவு வி. பி. சார்ஜ் உள்பட ரூ 1 3 0.

வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தி. ம. மாணிக்கம் பிள்ளை,
போஸ்டு பாக்ஸ் நெ. 103,
மதராஸ்.

C. A. SILVEIRA,
Proprietor.

கத்தோலிக்கரின் கைத்தொழில்களை ஆதரியுங்கள்.

மனோலாசனி தைலம்.

இது தலை மயிருக்குத் தடவக்கூடிய மகா சிறந்த தைலம். தூக்கமின்மை, தலைநோய், காதில் சீழ்வடிதல், வழுக்கைத்தலை, இன்னும் சிரசு, கண், காது இவைகளைப்பற்றிய பலவித வியாதிகளைக் குணப்படுத்துவதுடன் மயிர் வளரவும் செய்கிறது. ஞாபக சக்தியை விர்த்தி செய்கிறது. தலை, கண் எரிச்சலைப் போக்கி குளிர்ச்சியைக் கொடுக்கிறது. தலைமயிருக்கு அழகைக் கொடுக்கிறது. இன்றைக்கே ஒரு சிறு பெட்டியை வாங்கி பரீட்சியுங்கள். விலை: ஒரு சிறு பெட்டி அணா 12; மூன்று சிறு பெட்டிகள் ரூ 2; ஓர் பெரிய பெட்டி ரூ 1—6—0. தபாற் செலவு பிரத்தியேகம்.

சின்=சின்=பாம் தைலம்.

இந்த மேலான அபூர்வ தைலத்தை சகல வித நோக்காடு வலிகள் உள்ள ஸ்தானத்தின் வெளிப்புறத்தில் பூசுவதால் ஆரோக்கியமுண்டாகும். விலை: ஜாடி ஒன்றுக்கு அணா 6; மூன்று ஜாடி ரூ 1—1—0; ஒரு டஜன் ஜாடி ரூ 4.

நாரீ=சக்தி.

இது ஸ்திரீகளுக்கு வரக்கூடிய ஈராணி முதலிய பலவித சிக்குமுக்கான வியாதிகளையும் கோளாறுகளையும் சொஸ்தப்படுத்தும். விலை: பெட்டி ஒன்றுக்கு ரூ 2

Pain-oil for Rheumatism and Paralysis: Re. 1.

MANOLLASINI Co.,
29, Kankanady, **Mangalore.**
மனோலாசினி கம்பெனி,
29, கன்கனடி, மங்களூர்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சவ. எஸ். எக்ஸ். பெர்னாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையில் ஏற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறகச் சிறக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,769—0—0. ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக் காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

		ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்டதொகை		1,769	0	0
இதற்கு 100-க்கு வட்டி 1 ஆ வட்டி		17	11	0
பாந்தர் தெருவு சருட்டு வியாபாரிகள் (எப்பிரல்மீத்துக்கு) ...		30	0	0
Mr. M. X. P. D'Cruz		2	0	0
ஆக மொத்தம் ...		1,818	11	0

Rev. Fr. L. X. FERNANDEZ, North, Georgetown, Madras, E.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுசிலரும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 17. | ஜூன் 1919. | இலக்கம் 6.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

ஞானஸ்நான சடங்குகளின்பேரில்

(மூன் தொடர்ச்சி.)

குருவானவர் ஞானஸ்நானம் பெறப்போகிறவனைக் கோவிலின் வாசற்படியில் நிறுத்தி, மேற் சொன்ன சடங்குகளையெல்லாம் நிறைவேற்றியபின் தாம் அணிந்திருக்கும் ஸ்தோலாவின் (Stole) ஓர் முனையை அவன் சிரசின் மேல் வைத்துத் தம்மைப் பின்சென்று கோவிலுக்குள் வரும்படியாக "நித்திய சீவியத்தில் கிறீஸ்துநாதரோடு உனக்கும் பங்கு கிடைக்க தேவாலயத்துக்குள் பிரவேசி" என்பார். "என்னை அனுப்பின பிதாவானவரால் இழுத்துக்கொள்ளப்பட்டவனன்றி வேறெவனும் என்னிடத்தில் வரமாட்டான்" (அரு. VI, 44) என்று நமது கர்த்தர் திருவுளம்பற்றியிருப்பதை நமக்கு ஞாபகப்படுத்த, குருவானவர் ஞானஸ்நானம் பெறுகிறவனைக் கோவிலுக்குள் அழைத்துச் செல்லுகிறார், அல்லது இழுத்துச் செல்லுகிறார். ஆனபடியால், சர்வேசுரன் நமக்குக் கொடுக்கும் நல்ல சிந்தனைகள், யோசனைகள், ஏவுதல்கள் ஆகிய இவைகளை நாம் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டு, அவைகளை நிறைவேற்றுவோமாக. கோவிலுக்குட் செல்லும்போது குருவானவரும் ஞானஸ்நானம் பெறப் போகிறவனும் (ஞானஸ்நானம் பெறப் போவது குழந்தையாயிருந்தால் அதன் ஞானத் தாய் தகப்பனும்) விசுவாச மந்திரத்தையும், பரமண்டல மந்திரத்தையும் சொல்லிக்கொண்டு ஞானஸ்நான தொட்டியை நோக்கிச் செல்லுவார்கள். விசுவாச மந்திரத்தில் நம்முடைய பரிசுத்த வேதத்தின் பிரதான சத்தியங்களெல்லாம் அடங்கியிருக்கிறபடியால், அவைகளையெல்லாம் தான் விசுவசிக்கவும், நமதாண்டவரான சேசுநாதர்சுவாமி படிப்பித்து கற்பித்திருக்கிறவைகளையெல்லாம் தான் அனுசரிக்கவும் மனசுள்ளவனாயிருக்கிறேனென்று காட்டுவதற்காக ஞானஸ்நானம் பெறப் போகிறவன் விசுவாச மந்திரத்தைச் சொல்லுகிறான். ஆயினும், இவைகளெல்லாம் அவனுடைய சொந்த பலத்தினாலாகாமல் தேவானுக்கிரகத்தினாலாகுமாதலால்

அந்தத் தேவானுக்கிரகத்தை அவன் அடைய உடனே பரமண்டல மந்திரத்தைச் சொல்லுகிறான். நமக்கு வேண்டிய தேவானுக்கிரகங்களைப் பெற்றுக்கொள்ள ஜெபம் ஓர் பிரதானமான சாதனமாகுமென்பதை இதனால் அறிந்துகொள்வோமாக.

*
* *

பிறகு குருவானவர் ஞானஸ்நானம் பெறுகிறவனிடத்திலிருந்து பாசாசை விரட்ட மூன்றாவது முறையாக உச்சாடன ஜெபத்தை ஜெபித்து, பெரு விரலினால் தம்முடைய உமிழ்நீரைத் தொட்டு, ஞானஸ்நானம் பெறுகிறவனுடைய வலது காதிலும் இடது காதிலுந் தடவும்போது சொல்லுவதாவது: "எப்பெத்தா, அதாவது திறக்கப்படு" என்பதே. பிறகு அவர் அதை அவனுடைய நாசியிலுந் தடவி "சுகந்தத்தின் இன்பத்துக்காக. ஆனால், சாத்தானே, நீ விலகிப்போ; ஏனெனில், சர்வேசுரனுடைய தீர்ப்பு கிட்டிவருகின்றது" என்பார். குருவானவர் செய்யும் இச்சடங்கானது மார்க்கு சுவிசேஷம் VII, 31; அரு. IX, 6-ம் வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி, நமதாண்டவர் குருடன் ஒருவனுக்குப் பார்வை கொடுத்தருளினதையும், ஊமையனுஞ் செவிடனுமான மற்றொருவனுக்குப் பேசவும் கேட்கவும் வரமளித்தருளினதையும் ஞாபகமூட்டுகின்றதாமே. அர்ச். அமிர்தநாதர் இச்சடங்கை வியாக்கியானித்துச் சொல்லியிருப்பதாவது: "குருக்களுடைய புத்திப் போதகங்களுக்கு நீ செவிகொடுக்கும்படியாகவே உன் செவிகளைத் தொடுகிறார். 'சர்வேசுரனுடைய சமுகத்தில் நாம் கிறீஸ்துநாதருடைய சுகந்தமாயிருக்கிறோம்' என்று அர்ச். சின்னப்பரோடு நீயுஞ் சொல்லுமாறு பரலோக காரியங்கள் உனக்குப் பரிமளம்போலிருக்க உன் நாசியையுந் தொடுகிறார்" என்பதே.

*
* *

மேற்சொன்ன சடங்கு முடிவுபெற்றவுடன் பசாசின் அரசாட்சியினின்று கிறீஸ்துநாதரின் அரசாட்சிக்கு மாறும் பாக்கியமான நேரம் ஞானஸ்நானம்பெறப் போகிறவனுக்குக் கிட்டிவருகிறபடியால், அவனுக்கும் அவருக்கும் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அவனை அவருக்குப் பிரமாணிக்கமுள்ள ஊழியனாயிருக்கும்படிச்செய்ய குருவானவர் அவனை நோக்கி: "பசாசை விட்டுவிடுகிறாயா? அதன் கிரியைகளை விட்டுவிடுகிறாயா? அதன் ஆரவாரங்களை விட்டுவிடுகிறாயா?" என்று கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும், அவன் "விட்டுவிடுகிறேன்" என்று மறுமொழி பகர்வான். இவ்வார்த்தைப்பாட்டின் சடங்கு திருச்சபையுண்டான துவக்கத்தில் மிக்க பயபக்திக்குரியவிதமாய் நடைபெற்றுவந்தது. ஞானஸ்நானம் பெறப்போகிறவன் இனிமேற்பட தன் பாவவழியைவிட்டுப் பரிசுத்த வழியில் செல்லுவானென்பதற்கு அறிகுறியாகத் தன் பாதரட்சைகளை கழற்றிவிட்டும், அந்தகாரத்தின் அரசனுன பசாசை விட்டுவிட்டதற்கு அடையாளமாகச் சூரியன் அஸ்தமிக்குந் திசையை நோக்கி தன் கைகள் இரண்டையு மூயர்த்தியும் மேற்சொன்ன வார்த்தைப்பாடுகளைக் கொடுப்பான். "பசாசை விட்டுவிடுகிறேன்" என்பதினால், பாசாசின் சூசனை சூழ்ச்சிகளுக்கும், தந்திரசோதனைகளுக்கும் தான் இடங்கொடாமல் அதைத் தான் வெறுத்துப் பகைப்பதாகவும், "அதன் கிரியைகளை விட்டுவிடுகிறேன்" என்பதனால், தான் பாவங்களைக் கட்டிக்கொள்ளாமல் அவைகளை அருவருத்துத் தள்ளுவதாகவும், "அதன் ஆரவாரத்தை விட்டுவிடுகிறேன்" என்பதனால் ஆங்காரம், பெருமை, சிலாக்கியம், பேராசை முதலியவைகளையெல்லாம் விலக்கி தாழ்ச்சியைக் கைக்கொள்ளுவதாகவும் வார்த்தைப்பாடு கொடுக்கிறான்.

*
* *

குருவானவர் மேற்சொன்ன வாக்குத்தத்தங்களை ஞானஸ்நானம் பெறுகிறவனிடத்திலிருந்து வாங்கிக்கொண்டபின், அவனுடைய மார்பிலும், இரு தோள் பட்டைகளுக்கு நடுவிலும் ஞானஸ்நான எண்ணெயைக்கொண்டு சிலுவை அடையாளம் வரையும்போது "உனக்கு நித்திய சீவியங் கிடைக்க உன்மேல் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரில் இரட்சண்ய எண்ணெயைப் பூசுகிறேன்" என்று சொல்லுவார். எண்ணெயானது திரேகத்துக்குத் திடனைக் கொடுக்குந் தன்மைவாய்ந்தது. ஆனபடியால்தான் பூர்வ காலத்தில் குஸ்தி பிடிக்கிறவர்களும், சிலம்பம் பழகுகிறவர்களும் தங்கள்மேல் எண்ணெயைப் பூசிக்கொள்வதுண்டு. ஞானஸ்நானம் பெறப்போகிறவன்பேரில் ஏன் எண்ணெயைப் பூசுவதென்றால், அவன் தன்னுடைய இரட்சண்யச் சத்துருக்களோடு தைரியமாய்ப் போராடவேண்டுமென்பதற்கேயாகும். ஆம், அவனுடைய மார்பின்மேல் எண்ணெயைப் பூசுவதானது அவன் தன்னை யுண்டாக்கின கடவுளுக்காகவும், தன் ஆத்துமத்துக்காகவும் தைரியத்துடன் போராடவேண்டுமென்றும், அவனுடைய தோள் பட்டைகளின் மத்தியில் பூசுவதானது அவன் தன் ஆயுளுள்ளளவும் பொறுமையோடும் துணிவோடும் தன் ஆண்டவருடைய நுகத்தடியைச் சுமந்துசெல்லக் கடவானென்றும் தெரிவிக்கின்றது.

(இன்னும் வரும்.)

ROWLATT BILL.
ரௌலட் சட்டம்.

கவர்ன்மேண்டார் வெளியிட்டிருக்கும் அறிக்கை.

1. தாரணமாய் ரௌலட் மகோதா என்று வழங்கும் இராஜத்துரோகம், இராஜத்துரோகக் கலகம் முதலிய குற்றங்களைப்பற்றிய சட்டம் ஒன்று செய்யப்பட்டது. அச்சட்டத்தைப்பற்றி பலவிதமான பொய்க் கண்தகளை (கிலர்) ஜனங்களுக்குள் பரவச்செய்வதாக இராஜாங்கத்தாருக்கு தெரியவருகிறது.

2. ஆகையால், இச்சட்டம் ஏற்படுவதற்குக் காரணங்கள் என்னவென்றும், அந்தச் சட்டத்தில் கண்டிருக்கும் விதிகள் உண்மையில் என்னவென்றும், அச்சட்டத்தைப்பற்றித் துன்மார்க்கர்கள் பிதற்றும் வார்த்தைகள் பொய்யென்றும், இந்தத் தேசத்திலுள்ள அமைதியும், சட்டத்திற்குப் படிந்து நடக்கும் குணமுமுள்ள ஜனங்களுக்கு அதினால் உண்டாகும் மிகவும் பெரும்பயன் என்னவென்றும் இராஜாங்கத்தார் கூடுமானவரையில் சுருக்கமாய் விளக்குவார்கள்.

3. சென்ற சில வருஷங்களாக, விசேஷமாய் சென்ற 10 அல்லது 12 வருஷங்களாக, இந்தியாவில் பல இடங்களில், ஆங்கிலேய இராஜாங்கத்தை அடியோடு எதிர்த்துவிடவேண்டும் என்னும் ஒரே நோக்கத்தை பொதுவாகக் கொண்ட பல சதிகாரர்களின் இரகசிய சதியாலோசனைகள் வெளியாக்கப்பட்டன. இச்சதியாலோசனைகளைப்பற்றி எல்லாவற்றையும் விவரித்துச் சொல்லுவதாயிருந்தாலும் அல்லது அவைகள் எவ்விதம் வெளியாக்கப்பட்டன வென்பதை விவரிப்பதாயிருந்தாலும் அதிகமாய் விரியும். ஆனால் 1909-ம் வருஷம் லண்டன் நகரத்தில் ஸர். டப்ளியூ. கர்ஜான் உவில்லி என்பவர், அதே வருஷம் டிசம்பர் மாதம் காசிக்கு என்னும் பட்டணத்தில் மிஸ்டர் ஜாக்ஸன் என்பவர் ஆகிய இவர்களைப்போன்ற பெரிய அதிகாரிகள் கொலை செய்யப்பட்டது எல்லா ஜனங்களுக்கும் ஞாபகம் இருக்கும். 1908-ம் வருஷம் (ஒரு அதிகாரியென்று தவறுதலாக) கெண்டி துரை சானியும் மிஸ். கெண்டியும் கொல்லப்பட்டதும், 1911-ம் வருஷம் திருநெல்வேலியில் மிஸ்டர் ஆஷ் துரை கொல்லப்பட்டதுங்கூட அவர்களுக்கு ஞாபகமிருக்கும். இந்தக் கொலைகளெல்லாம் இராஜத்துரோகிகளால் செய்யப்பட்டன. பிற்காலங்களில் இராஜத்துரோகச் சங்கத்தார்கள் பணம் சேர்ப்பதற்காக பங்காள தேசத்து வெளி நாடுகளிலும் மற்ற மகாணங்களிலும் பணக்காரர்களின் வீடுகளிற் புகுந்து கொள்ளையடிப்பதும், கண்ணக்களவு செய்வதுமே தொழிலாகக்கொண்டார்கள். இந்த இராஜத்துரோகக் கலகக்காரரைச் சங்கத்தார்களுக்கு விரோதமாய் சாட்சியம் தேடிச் சேகரித்த அநேக இந்திய போலீஸ் அதிகாரிகள் அவர்களால் கொலை செய்யப்பட்டார்கள். 1911-ம் வருஷத்தில் இராஜப் பிரதிநிதியாகிய ஆர்டிஞ்சு பிரபு டில்லி நகரத்திற்குள் இராஜாங்க ஊர்வலத்தோடு பிரவேசிக்கும்பொழுது அவரை அவர்கள் கொல்ல முயன்றார்கள்.

4. சில கொலைக்குற்றங்களில் கேரே கொலை செய்தவர்கள் பிடிபட்டபோதிலும் இன்னும் அநேக கொலைகளில் குற்றவாளிகள் அநேகர் அகப்படாமலேயிருந்தார்கள். மறைவாயிருக்கும் அநேக முக்கியமான மனிதர்கள் எவ்விதலைக்கேட்டு அவர்கள் சொற்படி கொலை செய்யும் இக்கொலையாளிகள் அவர்கள் சொற்படி ஆகின்றவர்கள் எனப் பின்னல் தெரியவந்தது.

5. இவ்விதமான குற்றங்கள் முதலில் ஆரம்பித்து அதிக சாதாரணமாய்ச் செய்யப்பட்டு வந்தது கீழ் வங்காள தேசத்தில் போலீஸ்காரர்கள் தூராதூரமாய்ப் பரவியிருந்த பல கிராமங்களில் சென்று தங்கள் வேலையைச் செய்யும்படி இருந்தது. அக்கிராமங்களில் அநேகவற்றிற்குப் போவதற்கு ஜலமார்க்கமாய்த்தான் வழியிருந்தது. ஆயுதபாணிகளாகிய ஒரு கொள்ளைக் கூட்டத்தார் தீடீரென்று அக்கிராமங்களின் ஒன்றில் பிரவேசித்து ஒன்று அல்லது பல வீடுகளைக் கொள்ளையடிப்பார்கள். அந்தக் கொள்ளைக் கூட்டத்தார்கள் தங்கள் முகங்களை மறைத்து மாறுவேஷம் பூண்டிருப்பார்கள். கிராமத்தார்கள் சமீபத்தில் வராதபடி துப்பாக்கியால் கண்டபடி சுடுவார்கள். கொள்ளையடித்தபின்பு போய் விடுவார்கள். தந்திக் கம்பிகள் ஏதாவது இருந்தால் அவைகளை அவர்கள் அறுத்துவிடுவார்கள். ஒரு வேளை அநேக மணிநேரங்களுக்குப்பின்னல் அல்லது அநேக நாட்களுக்குபின்னல் அதிக அனுபவமுள்ள ஒரு அதிகாரி அவ்விடத்திற் போய்ச்சேர்ந்தால், அக்குற்றத்தில் சம்பந்தப்பட்ட யாரையும் கண்டுபிடிக்கக்கூடிய போதுமான சாட்சியம் அவருக்குக் கிடைப்பதில்லை. அத்தக் கொள்ளைக் கூட்டத்தாரில் யாதாவதொருவன் காயப்பட்டாவது அல்லது பிடிபட்டாவது இருந்தாலும், அல்லது அவர்கள் திரும்பிபோகும்பொழுது தடுக்கப்பட்டு இருந்தாலுமொழிய வேறு எவ்விதமாகிலும் துப்பறியமுடியாது. சாதாரணமாய்க் கொள்ளைக்காரர்கள் தாங்கள் முதலில் தங்கியிருந்து புறப்பட்டவிடத்திற்கு இரண்டு பேர்களாகவும் மூன்று பேர்களாகவும் அதிக சுலபமாய்ப்போய்ச் சேர்ந்துவிடுகிறார்கள்.

பட்டணங்களில் நடக்கிற கொடுங் குற்றங்கள் விஷயத்தில் தெருக்கள் ஒழுங்காய் இராமல் இருப்பதையும், அத்தெருக்களில் முன்பக்கம் திறந்திருக்கும் கடைகள், வீடுகள் முதலானவைகளையும் காம்கவனிக்கவேண்டும். மேலும் வங்காளிகள் ஒரு சால்வையைத் தோளிலே போட்டுக் கொண்டு, அச்சால்வையை முன்பக்கம் கைகளை மறைக்கும்படித் தொங்கவிட்டு உடுக்கும் உடை ஒரு கனமான கைத்துப்பாக்கியைத் பிறரறியாமலே வெகு சுலபமாய்க் கொண்டுபோவதற்கு ஏதுவாயிருக்கிறது. ஐரோப்பிய உடை உடுத்தியிருக்கும் ஒருவன் அவ்வாறு செய்யமுடியாது.

6. முக்கியமான குற்றவாளிகளை விசாரணைக்குக் கொண்டுவரக்கூடவில்லை. எனென்றால், ஒரு நியாயாதிபதிக்குமுன் விசாரணை செய்ய, நேரிற்கண்ட போதுமான சாட்சிகள் அகப்படுவது கஷ்டமாக இருந்தது. சில வேளைகளில் சாக்ஷிகள் கலைக்கப்பட்டார்கள். அல்லது பயமுறுத்தித் தடுக்கப்பட்டார்கள். வங்காளத்தில் 1906-ம் வருஷமுதல் 210 இராஜத்துரோகக் கலகக் குற்றங்களும், அவ்விதக் குற்றம் செய்வதற்குப் பிரயத்தனங்கள் 101-ம் நடந்தன. அவ்விருநூற்றிபத்துக் குற்றங்களில் 91 கொள்ளைகளும், அக்கொள்ளைகளில் 16 கொலைகளும் நடந்தன. 1,038 மனிதர்கள் இக்குற்றங்களில் சம்மந்தப்பட்டதாகத் தெரிந்து கண்டுபிடிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களில் 54 பேர் மட்டுத்தான் விசாரணையில் சரியான தண்டனையடைந்தார்கள். 1915-ம் வருஷம் ஜனவரிமீ முதல் 1916ஹ ஜூன்மீ வரையிலுமுள்ள காலத்தில் 14 கொலைகள் நடந்தன. அவர்களில் 8 பேர் போலீஸ் அதிகாரிகள். அதற்காக ஒருவரையும் விசாரணை செய்வதற்குக் கூடவில்லை. இத்தக் கொலைகளில் கடைசியாகக் கொல்லப்பட்டவர் ஒரு இந்திய போலீஸ் சூப்பிரின்டன்டெண்டு. அதன்பிறகு வங்காளக் கவர்ன்மெண்டார் குற்றங்கள் செய்யாதபடி தடுப்பதற்கும், செய்தவர்களைத் தண்டிப்பதற்கும் சாதாரணமாயுள்ள வழிகள் முற்றும் பிரயோஜனப்படாமல்போய்விட்டபடியால், இந்த இராஜத்துரோகக் கலகக் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு அதிக விசேஷமான மார்க்கங்களை அனுசரிக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதற்காக பிரத்தியேகமான ஒரு சட்டமும், அச்சட்டத்தின்கீழ் இந்திய பாதுகாப்பு விதிகள் என்று சொல்லப்பட்ட சில விதிகளும் செய்யப்பட்டன. அவைகளின்படி பொது ஜனங்களின் அமைதிக்கு அவசியம் என்று கவர்ன்மெண்டார் நினைத்தால் அபாயகரமான இராஜத்துரோகிகளைப் பிடிக்கவும், குறித்த இடத்தைவிட்டு அவர்களை வெளியிலே போகாமல் நிறுத்தவும், அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. வங்காள இராஜத்துரோகிகளை அடக்குவதில் இந்த விதிகளை மிகக் கடுமையாய் உபயோகித்தார்கள். அதினால் அவர்களுடைய இராஜத்துரோக ஆலோசனைகள் எல்லாம் பயன்படாமல்போயிற்று என்று தெரியவருகிறது. ஆனால் அதிக ஆபத்தான வேளையில்மட்டும் அவ்விதிகள் உபயோகப்படுத்தப்படும்படி அச்சட்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டன.

7. பின்பு இந்திய கவர்ன்மெண்டார் ஆங்கிலேய தேசத்திலுள்ள ஒரு நியாயாதிபதியும், பம்பாய் ஐகோர்ட்டு பெரிய ஜட்ஜ-ம், சென்னப்பட்டணம் ஐகோர்ட்டிலுள்ள ஒரு இந்திய நியாயாதிபதியும், பங்காள தேசத்து ஐகோர்ட்டு வக்கீல் ஒருவரும், ஐக்கிய மாகாணங்களிலுள்ள ரெவினியூ போர்ட் மெம்பர் ஒருவரும் ஆகிய இவர்கள் அடங்கிய ஒரு பிரத்தியேகமான பஞ்சாயத்தை இதின் உண்மையை ஆராய்ந்து எழுதும்படி நியமித்தார்கள். இந்த பஞ்சாயத்தார்கள் ஆராய்ந்து அறிந்தபின் இராஜத்துரோகக் கலகக்காரர்களுடைய கூட்டங்களைக் கொலை செய்வதற்கும் கொள்ளையடிப்பதற்கும் ஏற்பாடு செய்யாமல் தடுப்பதற்கும், அவ்விதமான குற்றங்களைச் செய்யும்போது அகப்பட்டவர்களையும் அவர்களுக்கு உதவியாக இருந்தவர்களையும் காலதாமதமில்லாமல் விசாரணைக்குக் கொண்டுவருவதற்கும் கவர்ன்மெண்டாருக்கு போதுமான ஆதாரங்களாக குற்ற விசாரணை சட்டத்தில் அநேக மாறுதல்கள் உண்டாக்கவேண்டுமென்று ஒருமித்துச் சிபார்சு செய்தார்கள். 1919-ம் வருஷம் இராஜத்துரோகக் குற்றங்கள் இராஜத்துரோகக் கலகக்குற்றங்கள் இவைகளைப்பற்றிய ஆக்டு என்று சொல்லப்பட்ட இப்பொழுது சட்டமாகச் செய்யப்பட்டதாகிய ரௌலட்மசோதா என்பதற்கு ஆதாரமாய் இருந்தவைகள் இந்தப் பஞ்சாயத்தார்கள் செய்த சிபார்சுகளே.

8. இந்தச் சட்டமானது இந்தியா கவர்ன்மெண்டாரின் அனுமதியில்லாமல் எந்தக் காலத்திலாவது எந்த இடத்திலாவது உபயோகப்படுத்தப்படமாட்டாது. அந்த இந்திய கவர்ன்மெண்டார்கள், இராஜத்துரோகக் குற்றவாளிகளைக் காலதாமதமில்லாமல் விசாரணை செய்வதற்காவது, இராஜத்துரோக இரகசிய சதியாலோசனைகளைத் தடுப்பதற்காவது இந்தப் பிரத்தியேகமான சட்டங்கள் அவசியம் என்று தங்களுக்கு முற்றும் திருப்தியாகும்படி தெரிந்தாலொழிய அவ்விதமான அனுமதியைக் கொடுக்கமுடியாது.

இந்தியா கவர்ன்மெண்டார்கள் இந்தச் சட்டத்தை எந்த மாகாணத்திலாவது அனுபவத்திற்குக் கொண்டுவரும்படி கட்டளையிட்டாலுங்கூட அந்தச் சட்டத்தின்படி எந்த மனிதனையாவது தண்டிப்பதற்கு இராஜாங்கத்தார் அதற்குப் பிரத்தியேகமாக ஒரு உத்தரவு செய்யவேண்டும். அந்த உத்தரவும் தம்முடைய மன்னரும் சக்கிரவர்த்திக்கு விரோதமாய் சண்டை செய்தல், அவருடைய சைனியத்தில் கலகத்தை யுண்டுபண்ணுதல், கொலை, கொள்ளை, இராஜத்துரோகக் கலகங்கள் சம்பந்தமான வேறு குற்றங்கள், வெடிகுண்டு செய்வதற்கான வெடிமருந்துகளை உபயோகப்படுத்தல், ஆயுதச்சட்டத்திற்கு விரோதமாய் இரகசியமாய் ஆயுதங்களைச் சேர்த்தல் ஆகிய இவைகளைப்போன்ற சில குறிப்பிடப்பட்டிருக்கிற கொடுமையான குற்றங்கள் சம்பந்தமாய் இருக்கவேண்டும். இந்த ஒவ்வொரு குற்றவாளியின் குற்றத்தை உயர்ந்த பெரிய நியாயாதிபதிகள் விசாரணைசெய்யவும், அந்த ஒவ்வொரு குற்றவாளிக்கும் தன் குற்றம் இன்னதென்று முழுதும் அறியும்படி வேண்டிய சகவாசம் கொடுக்கவும், அவன்மேல் வந்திருக்கும் குற்றங்களை அவனுக்கு நன்றாய் எடுத்துச்சொல்லவும், போதுமான ஏற்பாடுகளை நிச்சயப்படுத்திக் கொள்ளும்படி அதிஜாக்கிரதையாய்ச் சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் காரணமில்லாமல் மனிதர்களை பிடிக்கவாவது அல்லது வீடுகளில் சோதனை போடவாவது அவர்களுக்கு அதிகாரம் இல்லை.

9. அந்தச் சட்டத்தில் மூன்று பாகங்கள் அடங்கியிருக்கின்றன. ஒரு பாகத்தில் இராஜத்துரோகக் கலகக்காரர்களின் குற்றங்களுக்கும், இராஜத்துரோகக் குற்றங்களுக்கும் அவர்களை விசாரிப்பதற்கு மூன்று ஐகோர்ட்டு நியாயாதிபதிகள் அடங்கிய ஒரு பிரத்தியேகமான நியாய சபை ஏற்படுத்துவதைப்பற்றி சொல்லியிருக்கிறது.

வேறொரு பாகத்தில் குற்றங்களைச் செய்வதற்கு ஏதுவாயிருக்கக்கூடிய இராஜத்துரோகிகள் அல்லது இராஜத்துரோகக் கலகக்காரர்களாகிய இவர்களுடைய முயற்சிகள் அதிக விரைவாய் விருத்தியாகக்கூடிய இடங்களில் அந்த மாகாணத்து கவர்ன்மெண்டார் சந்தேகப்பட்டவர்களிடத்திலிருந்து ஜாமீன் வாங்கவும், அவர்களுடைய முயற்சிகளை யடக்கி அவர்களுடைய செய்கைகளைக் கவனித்துவரவும், அவர்களுக்கு வேண்டிய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. கடைசி பாகத்தில் இராஜத்துரோகிகளும் இராஜத்துரோகக் கலகக்காரர்களும் தங்களுடைய முயற்சிகளை அதிகமாக விருத்திசெய்து அதன் காரணமாக குற்றங்கள் செயயப்படுகிற இடங்களில் சந்தேகப்பட்டவர்களைப் பிடிக்கவும்,

அவர்களைக் குறித்த இடத்தை விட்டுப்போகா மல் தடுத்துவைக்கவும், சந்தேகப்பட்ட இடங் களை சோதனை போட்டு பார்க்கவும், வேண்டிய யேற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. குற் றங்களைத் தடுப்பதற்காக அந்த சட்டத்தின்பின் இரண்டு பாகங்களின்படி கவர்ன்மெண்டார்செய் யக்கூடிய நடவடிக்கைகள் கல்ல அனுபோக முள்ள நியாய விசாரணை அதிகாரிகளும் இருக்கக் கூடிய சில பிரத்தியேகமாக ஆராய்ச்சி செய்யும் அதிகாரிகள் கன்ருய்ப் பரிசோதித்து அதன்மேல் தெரிவிக்கும் அபிப்பிராயத்திற்கு உட்பட்டே இருக்கின்றது. இவ்விதமாகத் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் மனிதர்களை கமிட்டியார் ஒழுங் காய்ப்போய் அடிக்கடி பார்த்து அவர்களுடைய கேமத்தையும் அவர்களால் நடத்தப்படும் விதத் தையும்பற்றி அவர்கள் அபிப்பிராயத்தை தெரி விக்கும்படியான ஏற்பாடும் செய்யப்பட்டிருக் கின்றது.

10. இந்தச் சட்டத்திலுள்ள நிபந்தனைகள், சென்ற 4-வருஷங்களாகச் சென்னை ராஜதானி யில் செல்லக்கூடியதாய் இருந்து, ஆனால் வங் காளத்தைப்போல இராஜத்துரோகக் கலகக் குற் றங்கள் சென்னை இராஜதானியில் இல்லாமல் இருந்ததினால் அந்தச் சட்டத்தை நடவடிக்கைக்கு கொண்டுவராமலிருந்த இந்திய பாதுகாப்புச் சட்டங்களைப்போல் அவ்வளவு கடுமையானவை களல்ல. சட்டத்திற்கு அடங்கி நடக்கும் எந்த மனிதனையாவது கெடுக்கக்கூடிய நிபந்தனை அந்த சட்டத்தில் ஒன்றும் இல்லை. அதனுடைய முக்கியமான கருத்து, துன்மார்க்க இராஜத்து ரோகிகள் குற்றங்களைச் செய்யாமல் தடுக்கவும் அவர்கள் அப்படிக் குற்றங்களைச் செய்தால் அவர் களைத் தண்டிக்கவேண்டுமென்பதுமே. இவற் றால் "ஒவ்வொரு மனிதனுக்கும் கெடுதியை உண்டாக்கி அவர்களுடைய சுயேச்சையை ஆபத் துக்குக் கொண்டுவரக்கூடியது இந்த சட்டம்" என்று வெளியிடப்பட்டவதந்திகளெல்லாம் முற் றும் பொய்யென்பதை யெல்லா மனிதர்களும் அறியலாம்.

11. எல்லா ஜனங்களும் இந்தக் காரி யத்தை கன்ருய் யோசித்துப்பார்க்கும்படி கவர்ன்மெண்டார் வற்புறுத்திக் கேட்டுக்கொள் ளுகிறார்கள். அவர்கள் அப்படி செய்வார்களா னால் ரௌலட் சட்டத்தைப்பற்றி எத்தனை பொய் யான கதைகள் சொல்லப்பட்டும் எழுதப்பட்டும் இருக்கின்றனவென்பதை அவர்கள் கன்ருய் உணர்வார்கள். இவ்வாறு சில பிரசங்கிகள் இச் சட்டத்தினால் போலீஸ்காரர்கள் யாதொரு குற்றமும் செய்யாத மனிதர்களைத் துன்பப்ப டுத்தி கஷ்டத்திற்கு உள்ளாக்கக்கூடும் என்று ஜனங்களுக்குச் சொல்லுகிறார்கள். வேறு சிலர் துராகிருதமாய்ப் பயமுறுத்தி பணத்தை வாங்கு வதற்கு மனிதர்களுக்கு உபயோகமாக இருக்கு மென்றும், யார்மேலாவது பொய்குற்றங்களைச் சாட்டுவதற்கு சுலபமாய் இருக்கும் என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் வழியில் இரண்டு மனிதர்கள் பேசிக்கொண்டிருக்கக் கண் டால் அவர்கள் துப்பாக்கியால் சுடப்படுவார்கள் என்றும் சொல்லுகிறார்கள். இவையெல்லாம் பொய்யான வார்த்தைகள்.

சென்றஞாயிற்றுக்கிழமை கடற்கரையோர மாய் நடந்த கூட்டத்திற்குப் போயிருந்த ஜனங் களில் அநேகருக்கு அந்தக் கூட்டம் என்ன காரணத்திற்காகக்கூட்டப்பட்டது என்றுதெரியாது. மற்றவர்களுக்கு நிச்சயமாய் ஒன்றுந் தெரியாது. ஆனால் சர்க்கார் ஒரு புதிய சட்டம் செய்திருப்ப தாயும், அச்சட்டத்தால் எல்லாருக்கும் ஆபத்து நேரிடும் என்றும் அவர்கள் நினைத்தார்கள். ஒரு போலீஸ் அதிகாரி அவர்களிடத்தில் சந்தேகப் பட்டாலும்கூட, அவர்களைத் துன்பப்படுத்து வதற்கு அவருக்கு அளவில்லாத அதிகாரம் உண் டென்று அவர்கள் நினைத்தார்கள். இவைகளெல் லாம் மேலே விளக்கிக்காட்டியிருப்பதைப்போல் மூடத்தனத்தால் உண்டாகும் அறியாமை.

12. முடிவாக கவர்ன்மெண்டார், எல்லா நிதானமான யோசனையுள்ள ஜனங்களும் இந்த விஷயங்களை அதிக ஜாக்கிரதையாய் யோசித் துப்பார்க்கவும், பொய்யும், தப்பு அர்த்தமுமுள்ள கதைகளை நம்பாமலிருக்கும்படிக்கும் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். மேலும் கவர்ன்மெண்டார் எல்லா கண்ணடக்கையுள்ள மனிதர்களையும் காப்பாற்றுவார்கள் என்பதை யும், சட்டத்துக்கு விரோதமாய் நடப்பவர்களைக் கடுமையாய்த் தண்டிப்பார்கள் என்பதையும் ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்றும் அவர்கள் விரும்புகிறார்கள்.

1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 21-ந் தேதி.

வலது கரத்தி லிடியேந்தி
மற்றோர் கரத்தில் மறையேந்தி
இலகுஞ் சேவ லெனுமதனில்
எமக்கு நிருபம் வருத்தனமே.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

4-ம் அதிகாரம்.

அதஸ்தீனுடைய துர் ஆசாபாசங்களினால் நேர்ந்த தீமைகள்—மோனிக்கம்மாள் தன் மகனுடைய ஆத்தும அபாயகரத்தை அறிந்து எச்சரிக்கைகொள்கிறாள்—எவ்வளவுக்கு அதஸ்தீன் தன்னுடைய துர் நடத்தையினால் தன் தாயாருடைய நேசத்தைவிட்டுப் பிரிந்துபோகிறானோ, அவ்வளவுக்கு அவளுடைய பக்தி அவளை அதிகமாய் நேசித்துவருகிறது—இது அர்ச். மோனிக்கம்மாளுக்கு ஆறுதலுண்டாகும்படி கடவுள் செய்த தபசு—பத்தீஸியூஸ் நல்ல மரணமடைகிறார்.

(இ. அ. 370—372.)

(முன் தொடர்ச்சி.)

இதனால் அர்ச். மோனிக்கம் மாளின் துக்கம் எவ்வளவு அதிகரித்து வந்ததென்று நாம் சுலபமாய்க் கண்டு பிடிக்கக்கூடும். தன் துக்க துயரங்கள் ஒழியும்படி, கர்த்தரைப் பார்த்து உருக்கமாய்ச் செபிப்பது மாத்திரம் போதாதென்றெண்ணி, அகுஸ்தீனு டைய நடத்தை முற்றிலும் தகாததென்று அடிக் கடி அவரைக் கண்டித்து எச்சரிப்பாள். அவர் சொல்வது "முக்கியமாய் ஒரு விசை என்னை யவள் ஒரு தனித்த இடத்துக்கு அழைத்துப் போய், என் ஆத்துமத்தின் க்ஷேமலாபத்தைநினைத் தாவது, நான் கற்புடையவனாயிருக்கவேண்டு மென்று மெத்த ஆவலுடன் என்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். இது எனக்கு கன்ருய்க் ஞாபகம் இருக்கிறது. மேலும் அவள் வற்புறுத் திச் சொன்னதேதெனில், "இந்தப் பரிசுத்த புண்ணியத்தை அநுசரித்துவர உனக்குப் போது மான தைரியம் இல்லாவிடினும், அதை அநுச ரித்துவருபவர்களாயினும் கனஞ்செய். அவர் களைக் கெடுக்காதே. விசேஷமாய் உன்னுடைய அலங்கோலமான சீவியத்தினாலும், தாறுமா ருன நடத்தையினாலும், அந்தியனுடைய மனை வியை இச்சித்து, குடும்பங்களின் சமாதானத் தைப் போக்கி, அதன் கண்ணியத்தைக் குறைத்து ஒற்றுமையைக் கலைக்காதே." மேலும்

"பிறர் மனை புகாமை
அறமெனத் தகும்"

என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பாள்.

ஆனால் ஆசாபாசங்கள் எத்தனை வேகமாய் பக்குவமடைகின்றன! எத்தனை சீக்கிரம் மதங் கொண்ட யானைகளைப்போல் அபார சத்தியுள் ளவையாகின்றன! இந்த அழகான வாலிபர், அவ்வளவு புத்திசாலி, அவ்வளவு தயாள இரு தயமுள்ளவர். இவருக்குக் காவல் சம்மனசுக் கொப்பான அவ்வளவு பக்தியுள்ள தாயார் இருந்தாலும், அத்தாயாரை யவர் அவ்வளவு நேச பாசத்துடன் நேசித்து வந்திருந்தபோதிலும், "தாய் சொலிற் சிறந்த வாசகமில்லை" என்ற மூதுரையையுங்கிக்காமல், அவள் சொன்ன புத்தி மதிகளையெல்லாம் அசட்டை செய்தபடியால், செவிடன் காதிற் சங்கை ஊதினதற்குச் சமான மாய்ப்போயின. தன் தாய் வார்த்தையை அசட்டைசெய்யத் துவக்கினர் என்பதுமாத்திர மன்று. அவள் ஏதாவது பேசத் துவக்கினால் "சீச்சீ இது என்ன பீடை" என்று அவளை நீச மாய் நடத்தத் தொடங்கினர். அவர் சொல்வது "நான் என் தாயாருடைய வார்த்தைகளைச் சற் றும் மதிக்காமல் யாரோ தெருவில் போகிற ஒரு கேவலமான பெண்பிள்ளையின் வார்த்தைகளாக அவற்றைப் பாராட்டிவந்தேன். வாலிபனாகிய எனக்கு, ஒரு பெண்பிள்ளை புத்திசொல்ல வரு வதும், அப்புத்தியின்பிரகாரம் நான் நடக்க வேண்டுமென்பதும், மானக்குறைச்சலாய்த் தோன்றின. பாருங்கள், என் தாயாரை யான் இகழ்ந்து எவ்வளவு நீசமாய் நடத்திவந்தேன். கர்த்தாவே! நான் என் தாயாரை இகழ்ச்சி செய்தேனென்பதல்ல. உம்மையே, உமது திரு வாக்கியத்தையே, இகழ்ச்சி செய்துவந்தேன்."

அந்நாளில், அதுவரைக்கும் அர்ச். மோனிக் கம்மாளின் கண்களுக்கு மறைவாயிருந்த ஒரு திரைச்சீலை நீங்கிற்றென்னலாம். ஒரு தாயார் படும் துயரம் எப்படிப்பட்டதென்பதாய் இப் போதுதான் அவளுக்குத் தெரியவந்தது. அவ ருடைய துர் நடக்கையை நினைத்து அவள் சிந் திய கண்ணீர்களெவ்வளவு! அவருக் குரைத்த

புத்திமதிகளெவ்வளவு! பாவச் சகதியில் புரண்டு வரும் தனது கெட்ட குமாரனை அச்சகதியினின்று தூக்கி எடுக்க அவள் பட்டபிரையாசைகளெத்தனை! அவரைப் புண்ணிய வழியில் திருப்பி, அவர் ஆத்துமத்தை மாசின்றி காப்பாற்றுவதெப்படியென்ற தனக்குத் தெரியாமல் போனபடியால், கர்த்தராவது அவர்மேல் தயவு கூர்ந்து அவரை இரட்சித்துத் தாபரிக்கும்படியவள் செய்த மன்றாட்டு வேண்டுதல்களெத்தனை!

அப்படி இருந்தும், இக்காரியம் நடந்த 25-வருஷத்திற்குப்பின், தனதாத்துமம் அபாயஸ்திதியிலிருந்தகாலத்தில் தன் தாய் பட்ட பிரயாசைகளையும், சொல்லிய புத்திமதிகளையும், புரிந்த செபங்களையும், சிந்திய கண்ணீர்களையும், காட்டிய எச்சரிக்கையையும், கவனமாய் யோசித்துப்பார்த்துத் தன் இரட்சண்யத்திற்கு அவசியமான காரியங்களை யவள் சரியாய்ச் செய்யவில்லையென்று அகுஸ்தீன் முறையிடுகிறார். அவருக்கு எதிர்காலத்தில் என்ன நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. இரட்சண்யம் ஒன்றை அவரடைந்தாற் போதுமென்று, அவன் யாவற்றையும் பரித்தியாகம் செய்யவேண்டியிருந்தது. அவர் சொல்வது "நான் கற்புள்ளவனுயிருக்க வேண்டுமென்று சொல்வதில்மாத்திரம் என் தாயார் அதிக கவனமாயிருந்தாள். ஆனால் என் தகப்பனார் எனக்குப் புருஷத்துவம் உண்டாயிற்றென்று அவளிடம் சொன்னபோது, என்னுடைய தாறுமாறான நடவடிக்கைகளை யடக்கும்படி அவள் ஒன்று செய்யவேண்டியிருந்தது. என்னவந்தாலும் வரட்டும் என்று உடனே தகாஸ்தாவிலேயே எனக்குக் கலியாணம் கட்டிவைத்து என் ஆத்துமத்தைக் காப்பாற்றவேண்டியிருந்தது. கலியாணம் என்றால் என் தாயார் பின்வாங்குவாள். அப்படி அவள் பின்வாங்கினது, முதலில் நான் நல்லவனுய் நடக்கவேண்டுமென்ற அவள் கொண்டிருந்த ஆவலினலல்ல. ஆனால் எனக்குக் கலியாணம் ஆய்விட்டால், அப்போது நான் இன்னம் படிக்கவேண்டிய சாஸ்திர வித்தைகளைக் கற்றறியமுடியாதென்றும், தான் ஆசைப்பட்டுவந்த அளவு முழுப் படிப்பாளியாகமுடியாதென்றும் பயந்தாள். என் தகப்பனாரும் அப்படியே. என் தகப்பனார் ஏதோ என் கடவுளே! உம்மை மறந்து பூலோகத்தின் வீழலான காரியங்களில் சிக்கிக்கொண்டிருந்த படியால், அவர் அப்படி எண்ணங்கொண்டு பயந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால் என் தாயாரோவெனில், எனக்கு ஒரு விவாகம் செய்துவைத்து மனை சமாதானத்தை யளிக்கத் தேடாமல், நான் இன்னம் படித்துவருவது என் ஆத்துமத்திற்கு ஆபத்தான காரியமென்று நம்பாமல், பிரமசாரியாயிருக்தே நான் உம்மை நாடி வரவேண்டுமென்று வருந்தினாள். இதனிடையில், மதம்பிடித்த யானையை மாவுத்தன் அங்குசத்தைக்கொண்டு நடத்துவதுபோல், யான் என் தூர இச்சைகளையடக்கி நல்வழியில் ஒழுகாமல், கடிவாளமற்ற குதிரைபோல், யாதொரு தங்கு தடையின்றி, என் மனம் போனபடிக் கெல்லாம் என் ஆசாபாசங்களுக்குத் திருப்தி தேடினேன்."

அகுஸ்தீன் தன் தாயாரைப்பற்றிச் சொன்னதைக் கேட்டீர்களோ? தன் மகனுடைய தன் மார்க்க நடத்தையின் பிரதம குறிப்புகளைக்கண்டும் அதற்குண்டான பரிகார வகைகளைத்தேடாமல் சும்மா அழுது பிரலாபித்துக்கொண்டிருந்தபடியால், "அவள் இன்னம் புண்ணியத்தின் பாதையில் நிதானமாய் நடந்துவந்தாள்" என்கிறார். அப்படியானால் என் கர்த்தாவே, தங்கள் மக்களுடைய துர்நடத்தைகளைச் சற்றேனும் கவனியாமல், அவர்கள் பாவம் செய்தபோதிலும் என்னவோ வாலிபப் பிராயம் என்று கண்டுங் காணாததுபோலிருந்து, தங்கள் மக்கள் புத்திவிவரம் அறிந்தவுடன் என்ன நஷ்டம் நேர்ந்தாலும் சரி, அவர்கள் பாவ வழிதேடாமலும் பஞ்சேந்திரியங்களை யடக்காமலும் இருக்க அவர்களைப் பாதுகாத்துவருவது தங்களுடைய முதல் கடமையென்பதாய்ச் சற்றேனும் உணராத கிறீஸ்துவர்களைப்பற்றி நாம் என்ன சொல்லக்கூடும்?

அகுஸ்தீன் மறுபடியும் கலாசாலையில் சேர்ந்து கல்விசாஸ்திரங்களைப் படிக்க, அவசியமான பணத்தொகை சேர்மானமாகவே அவருடைய தகப்பனார் அவரைப் பிரயாணப்படுத்தினார். மோனிக்கம்மாள் என்ன செய்வதென்று தெரியாமல் இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்பைப்போல் தவித்தாள். ஒரு பக்கம் பார்த்தால், அகுஸ்தீன் தகாஸ்தே பட்டணத்தில் எவ்வித மனை அப்பியாசமுமின்றிச் சோம்பேறித்தனத்தில் நாட்களைக் கழிப்பதைவிடக் கலாசாலைக்குப்போவது அவசியமாய் தோன்றிற்று. இன்னொரு பக்கம் பார்த்தால், அக்கலாசாலையிருந்த கார்த்தேஜ் நகரமானது, பணக்காரர்களும் சிற்றின்பப் பிரியர்களும் சுகபோகத்தில் நாட் கழித்துவரும் பட்டணமாகையாலும், அப்பட்டணம்வெகு தூரத்திலிருந்ததால் தான் அடிக்கடி அவரைச் சந்தித்து அவருக்குப் புத்திமதியுரைக்கமுடியாதாதலாலும் அவர் அங்கு போவதால் அவருக்கு ஆத்தும ஆபத்து விளையுமேயென்று பயந்து கடுகி கையை முறித்துக் கொண்டு பரிதபித்தாள். ஆயினும் தன் பத்தாவாகிய பதரீவியூவின் கட்டளைக் கவள் பணிய வேண்டியதாயிருந்தது. அவர் கலாசாலையில் சேர்ந்து தன் மனதைப் படிப்பில் செலுத்துவாரேயானுல், அவருக்கிருக்கும் தூர நாட்டங்கள் ஒழிந்தகலுமென, ஒருவாறு தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டு, கி. அ. 370-ம் வருஷக் கடைசியில், விடுமுறை நாட்கள் தீர்ந்து கலாசாலைகன் திரும்பத் திறக்கப்பட்டகாலத்தில், அவரைக் கர்த்தேஜ் நகருக்கு அழைத்துச்சென்றாள். அவள் அவரை அக்கலாசாலையில்விட்டு எங்ஙனம் பிரிந்துவந்தாளென்றும், அவர் தன் விசுவாசத்தைப் பழுதறக் காப்பாற்றிக் கற்புள்ளவராய்ச் சீவித்து வரவேண்டியதென்று அவருக்கு என்னென்ன புத்திமதிகளை உருக்க நிறைந்த நேசத்தோடு சொன்னுளென்றும், அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், தன் மகனை விட்டுப் பிரியும் வேளையில், அவள் மனம் எப்படிப் பதைத்துத் துடித்ததென்றும் சரித்திரத்தில் ஒன்றும் சொல்லக்காணேம். ஆயினும் அவைகளைக் குறித்து நாமே புத்தியில் யூகித்து உணர்ந்து கொள்ளலாகும்.

(இன்னும் வரும்.)

யைத் தேடிக்கொண்டதால் பின்வரும் சாபம் "நீ மண்ணுலுண்டாக்கப்பட்டபடியால் மண்ணுயிருக்கிறுய், ஆதலால் மீளவும் மண்ணுகவே மாறிப்போவாய்" என்று அவனுக்கு மனன் சந்ததியாருக்கும் இடப்பட்டது. அப்படியிருக்க, தனது பெண்சாதி சீவியர்களுக்குத் தாயாயிருந்ததால் அவளை எவாளென்று ஆதாமழைத்ததாக, மோசஸ் எழுதுகிறார். இதை நோக்கின் என்ன ஆச்சரியம்! எவாளினிமித்தம் மரணம் உலகத்திற்குவந்திருக்க, அதற்குக் காரணமாகிய அவளை, சீவியர்களின் தாய் என்றழைப்பது என்ன விந்தை! என்ன எதிரிடை! அது வேற்றுமையாகத் தோன்றினும், அப்படியல்லவென அர்ச். எபிபானியுஸ் துலக்கிக்காட்டுகிறார்: "ஆதாம், அக்ஷணம் மறைபொருளாகவும், தீர்க்கதரிசனமாகவும் பேசினுன். எவாளெனக் கூப்பிட்டான். ஆனல் மரியாயையே யுவமித்தான்—சுட்டிகாட்டினுல்—எனக் கொள்ளல்வேண்டும். எனெனில் எவாள் மரித்தவர்களின் தாயாயிருப்பதுபோல், மரியாய் சீவியர்களின் தாயாயிருக்கிறுள்." இப்படிக் கவனிக்கின், எவாளைவிட மரியாயே மெய்யான மனுக்குலத்தின் தாய் என விளங்கும். எனெனில் அவள்தானுண்மையான சீவியமளித்தாள். சீவியமென்றுலென்ன? தேவ எவுதற்படி நடக்கச்செய்வதே சீவியம். "அவரிடத்தில் சீவியமிருந்ததென அர்ச். அருளப்பர் வசனிக்கிறார். "நானே வழியும், உண்மையுஞ் சீவியமுமாயிருக்கிறேன்" என சேசு பெருமானே திருவாய்மலர்ந்தருளினர். ஆகையால் 'மாம்சமான வார்த்தையே நமது உண்மை சீவியத்தின்—ஞான சீவியத்தின்—ஊற்று. சரீர சீவியத்தைவிட அதுவே சிறந்தது. அதுவே உயிர் கொடுப்பது. அதுவின்றி நித்திய மரணமே. அவரதுதேவ சீவியத்தில் நாம்ஒருவாறு பங்கடையும் வண்ணமே நம்முடைய சீவியத்தைத் தாம் எடுத்தார். அதற்குதவியாக—எத்தனமாக—மரியாயைத் தெரிந்துக்கொண்டார். எப்படியெனில், 'இஸ்பிரீத்துசாந்துவினுல் கர்ப்பமாயுற்பவித்தற்புதமாய்ப் பிறந்தார். நமக்குப் புது சீவியமாகிய ஞான சீவியத்தைக் கொண்டுவந்தவள் பரிசுத்த கன்னிகையே. ஆகையாலேயே அவளை நமது தாய், சீவியர்களின் தா—யெனச் சரியாய் கூப்பிடுகிறோம். திருபைதயாபத்து மந்திரத்தில் 'எங்கள் சீவியமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே வாழ்க' என்று சொல்லுகையில் திருச்சபை மரியாயை நமது சீவியமென வழைக்கின்ற

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

I

எவாள்.

(முன் தொடர்ச்சி.)

4. 'எவாள்' என்றால் 'சீவியர்களின் தா'யெனப் பொருள்படும். ஆனல் இம்மகுடம் எவாளைவிட மரியாய்க்குத்தான் பன்மடங்கு சிரேஷ்டமாய்ப் பொருந்தும். எவாள் சொற் கிணக்கி ஆதாம் விலக்கப்பட்ட கனியைத் தின்று தேவாக்கினை

தென்பது வெளிப்படை. ஆதிகாலத்தில் பாரோவோனின் குமாரத்தி நதியில் நதிக்கரையில் கண்டெடுத்த மோசேஸைத் தம் பிள்ளையாகச் சுவீகரித்து வளர்த்துவந்ததுபோல, மரியாய் தேவசுதனின் திருச்சிலுவையினடியில் மனுமக்களைத் தமது பிள்ளைகளாகக்கொண்டனள். சேசுவே, அவர்களை மரியாயின் கையிற் ஒப்படைத்தார். அர்ச். அருளப்பரைச் சுட்டிக்காட்டி "ஸ்திரீயே! இதோ உமது குமாரன்" என்று மரியாயினிடமும், "இதோ! உன் தாய்" என்று சீஷனுக்குங் கற்பித்தார். 'அந்நேர முதல் சீஷன் தன் வீட்டில் அவளைச் சேர்த்துக்கொண்டார்' எனச் சுவிசேஷத்திற் கண்டிருக்கிறது மிகவுங் கவனிக்கற்பாலது. அருளப்பர் சேர்த்துக்கொண்டாரென்றில்லாது சீஷன் சேர்த்துக்கொண்டாரென்றிருக்கிறது. சீஷன் எனும் வார்த்தை நம் இரட்சகரைப் பின்பற்றுவோர்க்கெல்லாஞ் செல்லும். அவர்களுக்கெல்லாம் மரியாய் தாயாவாள். "சேசுநாதர் அருளப்பரைச் சுட்டிக்காட்டினது மோக்ஷத்திற் குரித்தான சகலருக்கும் பரிசுத்த கன்னிகை தாயாளுள் என கொள்ளவேண்டுமென்று" அர்ச். சியென்ஞ பெர்னார்தின் என்பவர் சொல்லுகிறார். மரியாயின்மீதுள்ள பக்தி மரியாய் மோக்ஷ சுதந்தரத்திற் கடையாளம். நித்திய சீவியத்திற்கு வழி. மோக்ஷத்துக் குரியவர்களுக்கு தாயாயிருப்பதுபோல், பரத்தில் சகல அர்சியசிஷ்டவர்களுக்குந் தாயாயிருப்பது மன்றி கடவுளுக்குப்பின் அவர்களது ஆனந்தமுமாயிருக்கின்றனள் என, அர்ச். பொனவெந்தூர் உரைக்கின்றார்.

எவன் மரியாயின் உவமானமாயினும் இருவருக்கும் எவ்வளவோ வித்தியாசம். எவன் மரணத்தைக் கொண்டுவந்தான். மரியாயி சீவியத்தைக் கொண்டுவந்தாள். ஆகையால் மரியாயைத் தாயாகக்கொள்வது நமக்கெவ்வளவோ பேருபகாரம்! எவ்வளவோ பாக்கியம்! மரியே! நீர் எனக்குத் தாயாகவிருக்கத் தயைசெய்வீராக.

II

"பாதீஸ்" எனும் சிங்காரவனம்.

"ஆண்டவராகிய கடவுள் ஆதியிலே செல்வமும் இன்பமும் நிறைந்த ஒரு சிங்காரவனத்தை நாட்டியிருந்தார். அதிலே தாம் உருவாக்கின மனிதனை வைத்தார்." ஆதி. 2, 8.

பாதீஸ் என்பது பல வளங்கள் பொருந்திய சிங்காரவனம். இன்பமுஞ் சந்தோஷமுமுள்ளிடம். காலானது நாளுவிதருசியும், கண்களிப்பான பார்வையையுங் கிளிக்கக்கூடிய ஸ்தலம்; கடவுள்தாமே நேராக வமைத்த தோட்டம். இதன் மத்தியில் ஆச்சரியத்துக்குரிய ஓர் விருக்ஷத்தை நாட்டினார். அதின் பெயர் சீவியதரு. பாக்கியமும் பரிசுத்தமுமான அந்தஸ்தில் உருவாக்கப்பட்ட மனிதனை இவ்வனத்தில் வைத்தார். அச்சிங்காரவனஞ் செழிப்பாயும் வனப்பாயுமிருக்குமாறு தெள்ளிய நீர்சுரந்தோடும் நதியொன்று நாலு கிளைகளாய்ப் பிரிந்து நாலு திசையு மோடி அதை நீர் பாய்ச்சிவந்தது. இந்த்தவனம் ஆண்டவரது உன்னதகந்தவனமாகிய மரியாய்க் கோர் உவமானம். "ஏதேன்" எனுஞ் சிங்காரவனத்தைவிட அதிகப் பாக்கியமானது இது. இங்கு புண்ணிய தருக்கள் புனிதமாய் நிற்கின்றன. அவைகளின் மத்தியில் ஜீவிய விருக்ஷமுமுளது. அதின்மூலமாகவே நாம் இழந்துபோன பாக்கிய சீவியத்தை (இஷ்டப் பிரசாதத்தை) யடைகிறோம்" என அர்ச். தமசீன் அருளப்பர் சொல்லுகின்றார்.

1. தனது இஷ்டப்பிரசாத நிறைவாலும் புண்ணிய பெருக்காலும் கடவுள்முன் இன்பமளிக்குஞ் சிங்காரவனமாக விளங்குகின்றனள் மரியாய். மற்றெல்லா சிருஷ்டிகளையும்விட அதிகமாய் மரியாய் வரப்பிரசாதங்களை பெற்றனள் என்பது உண்மை. ஏனெனில், அர்ச். சியென்ஞ பெர்னார்தின் விளம்புவதுபோல், கடவுள் ஒருவரை யோர் உன்னத பதவிக்குத் தெரிந்து கொண்டால் அதற்கேற்றதும் அவசரமுமான வரப்பிரசாதத்தை மெய்யாகவே யளிப்பார். ஆண்டவரின் மாதாவாயிருப்பதைவிட மேலான பதவி கிடையாதாதலால், அப்பதவிக்குரித்தான வளுக்கு அளிக்கப்பட்ட அருள் மற்றவர்களுக் கீந்ததைவிட அதிகமாயிருக்கவேண்டுமன்றே? தேவதூதர் மரியாயைப் 'பிரியதத்தத்தினுல் பூரணமானவளே' என வாழ்த்தி 'ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள்' எனும் மகுடமும் அவளுக்குச் சூட்டினர். 'ஆகவே மரியாய் அருட்பிரசாதங்களால் நிறையப்பெற்றவள். அதினிமித்தம் ஆண்டவருடைய அன்பார்ந்த சிங்காரவனம்' என அர்ச். பொனவெந்தூர் இயம்புகின்றனர். 'அருளானது, ஆசீர்வாதவகளடக்கிய கந்தவனம்' என்பது சர்வப் பிரசங்கியின் வாக்கியம். அது மரியாய்க்கு ஒருங்கே பொருந்தும். வரப்பிரசாதமானது மனித இருதயத்தைப் புண்ணிய கனிகளளிக்கும் இன்ப வனமாக்குமாஞல் மரியாய் அதியுன்னதவனமாயிருந்தனளென்பது பொய்யாகாது. ஏனெனில் எல்லா சிருஷ்டிகளையுமிட அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டவள் அவளொருவளன்றே?

பரதீஸ் எனுந் தோட்டமே முதல் மனிதனின் வாசஸ்தலமானது. மரியாய் மனிதாவதாரமெடுத்த கடவுளினிருப்பிடமாஞள். "ஆண்டவராகிய கடவுள் ஆதியிலே செல்வமும் இன்பமும் நிறைந்த ஒரு சிங்காரவனத்தை நாட்டியிருந்தார். அதிலே தாம் உருவாக்கின மனிதனை வைத்தார்." ஆதி. 2, 8. மனுவுருவெடுத்த சேசுநாதரிருந்த அதியாச்சரியத்துக்குரிய தோட்டமும் ஆதியிலேயே உண்டாக்கப்பட்டது. அதாவது— மனுமகனினிருப்பிடமாயிருக்க மரியாயைக் கடவுள் ஆதியிலேயே தமது திருவுளத்தால் தெரிந்துகொண்டனர். அதற்காக அவளை மாசில்லாதவளாக்கவும், புனித வரங்களால் அலங்கரிக்கவுஞ் சித்தமானார். மோசெஸ் என்பவர் ஆதியாகமத்தின் துவக்கத்தில் பூலோக பூந்தோட்டத்தை வர்ணிப்பதுபோல் அர்ச். மத்தேயு தமது சுவிசேஷ வரலாற்றில், புண்ணிய பூந்தோட்டமாகிய மரியாயை வர்ணிக்கின்றனர். முதல் மனிதனிருப்பிடமாகிய சந்தவனத்தை கண்கவர்மைத்து இன்பமொழுகச்செய்த கடவுள், எத்தனை மடங்கதிகமாகத் தமது ஏக குமாரனினிருப்பிடமாகிய மரியாயை ஞான விதத்தில் சிங்கார வலங்காரமாய் உண்டாக்கியிருக்கவேண்டுமென்று விளம்புவர் யார்?

"கடவுளின் பரிசுத்த தாயே! நீர் இன்பமளிக்க, அன்பு மலங்காரமும் உம்மிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது" எனத் திருச்சபை சரியாய்ப் பாடுகின்றது.

(இன்னும் வரும்.)

M. S. M.

சங்கமதிற் பரப்பிரம மொன்றைப் போற்றிச்
சகல பவத்தீர் கண்மை தனையே சாற்றி
துங்கமுறு மிலிங்கமென்றும் பூசைசெய்து
சுணைகெட்ட மாடப்பா சம்பற் பூசி
எங்கணும்போய் சிவ சிவவென் றலைந்தே
[யேங்கி
எரிகர வலகைசெயு மிடறெண்ணுமற்
பொங்குதிரை கடன் மூழ்கித் தீட்சை பெற்றுற்
புகழ்கிரியாம் கைலாயம் போதலாமோ?

—(அகஸ்தியர் ஞானம் 30.)

யர் காவாராயினு நாகாக்க—காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு.

—(நீருக்குறள்.)

MADIYEENI.

மதியீனி

அல்லது

'தன் வினை தன்னைச் சுடும்.'

அருள்தாஸ் பிள்ளை விடியற்காலமே புறப்படத் தீர்மானித்திருந்தார். ஆனல் கடைசி நேரத்தில், காலையில் பூசை கண்டுவிட்டுப் போவது நன்றென்று எண்ணினர். ஆகவே பூசைக்குப் போய்வந்து, காப்பி சாப்பிட்டுப் புறப்படுமுன் மணி எட்டாகிவிட்டது. சாமான்களெல்லாம் வண்டியில் ஏற்றியாகிவிட்டது. ஏவலாளர்கள் எல்லாம் மூஸ்திப் பாயிருக்கிறார்கள். குழந்தையைப் பார்த்துவிட்டுத் தன் மனைவியிடஞ் சொல்வார். "ஆரோக்கியமரி! இப்போது பிள்ளைக்குக் கொஞ்சம் சுகந்தான். நீயும் உனது அம்மாளும் நன்றுப்பார்த்துக்கொள்ளுங்கள். டாக்டர் சொல்லுகிறதையெல்லாம் அணுப்பிசகாது செய்யவேண்டும். காலை அவசரமாய்ப் போகவேண்டியிருக்கிறது. என்ன செய்கிறது. வியாதி துவக்கி இன்று 18 நாளாகிறது. 21-வது நாளில்தான் எல்லாக் தெரியும். அதற்குள்ளாக வந்துவிடவேன். ஏதாயினுஞ் சடுதியில் கோடின் உடனே ஆளனுப்பித் தெரிவிக்கவேண்டும்" என்று விளம்பிவிட்டு வெளியே வண்டியேறவந்தார். அங்கே யாரைக் கண்டார். ஓர் பிராமணன் பூணூல் தரித்து, பட்டை பட்டையாய் திருநீறு பூண்டு, கையில் கொஞ்சம் வேப்பங்கொழுந்தையேந்தியவண்ணம் வருகிறான். அவனைப் பார்த்ததும் அருள்தாஸ் பிள்ளைக்கு சங்கதியெல்லாம் வெட்டவெளியாயிற்று. ஆயினும் ஐயரைப் பார்த்துக் கேட்பார். "ஐயரவாள்! என்ன விசேஷம் இவ்வளவு தூரம் வந்தது?"

ஐயர்.—"பெரியம்மாள் வரச்சொன்னதாலே!"

இதைக் கேட்ட அருள்தாஸ் பிள்ளைக்குக் கோபமூண்டதென்றால், அது அபத்தமாகாது. கோபதாபத்தையெல்லாம் மனதிலடக்கிக் கொண்டே "சரி! பெரியம்மாளுக்கும் வேலையில்லை. உமக்கும் வேலையில்லை. நீரிங்கே வர வேண்டியதில்லை. வந்தவழியே போகலாம்.

இனி இங்கே காலடிவைக்கக்கூடாது" என்று சொல்லவே, ஐயர் திரும்பிக்கூடப்பாராமல் கம்பி நீட்டிவிட்டார். ஐயர் போய்விட்டார். அருள் தாஸ் பிள்ளைக்கு ஆத்திரமடங்கவில்லை. ஒரு பக்கத்தில் வீட்டிலேயே தங்கிவிடப் பிரியம். மறு பக்கத்தில் கிராமம் போவது அவசியம். வருவதாகவும் ஆனனுப்பியாயிற்று. இருதலைக்கொள் எறும்புபோல் திகைத்து நின்றார். என் செய்வது? வாசலிலே நின்று பார்த்திருந்த மனைவியிடம் இரண்டொரு வார்த்தை யம்பிவிட்டு வண்டியேறிப் பயணமானார்.

பெரியம்மாள் பூசாரிக்காகப் பார்த்துப் பார்த்துக் கண்ணெல்லாம் பூத்துப்போயிற்று. அன்று சாயங்காலம் கற்பகவல்லியை யழைத்து வர ஆளனுப்பினாள். அவளும் வந்தாள்.

பெரி.—ஏது இப்படித்தானு மாற்றமிறது? உன்னுடைய பூசாரியையுங் காணோமே, ஆசாரியையுங் காணோமே?

கற்ப.—எனம்மா? அப்படிச் சொல்லுகிறீர்கள்? கடந்த சங்கதி உங்களுக்குத் தெரியாதபோலும்.

பெரி.—என்ன சங்கதி?

கற்ப.—உங்கள், மருமகன்தான் வந்தவரை நிற்கவொட்டாது துரத்திவிட்டாரே!

பெரி.—அந்தப் பயல் அவரிருக்கும்போது என் வந்தான்? கொஞ்ச நேரம் பிந்திவரக் கூடாதா? சரி போனதுபோகட்டும், காலேக்குக் கட்டாயம் வரச்சொல்லுவாயா?

கற்ப.—ஏது! வருவானே! வரமாட்டானே! கல்ல தட்சணை கொடுத்தால் இல சமயம் உங்கள் இஷ்டத்துக் கிணங்குவான்.

பெரி.—ஆ, ஆ, அதற்கென்னதடை? நான் கல்ல வெகுமானங் கொடுப்பேன்.

கற்ப.—சரி அம்மா! நான் சொல்லிப் பார்க்கிறேன். சம்மதித்தால் அவரை காலேக்கு வரச்சொல்லுகிறேன்.

பெரி.—தவறாமல் வரும்படி செய்?

'கல்லது' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டாள் கற்பகவல்லி. அவள் எதிரிட வும், ஆரோக்கியமரி மனந் துணிந்து தாயை நோக்கி உரைப்பாள். "அம்மா! உங்கள் மருமகனுக்குச் சங்கதியெல்லாந் தெரியும். அவரிதை விரும்பார். என்னிடத்தில் சொல்லிப்போனார். ஆகையால் நீங்களப்படிச் செய்யக்கூடாது."

பெரி.—சும்மாயிரு, பயித்தியகாரி. நீ பயப் படுவானேன்? அவர் வந்தபின் விளைவுகள், ஒன்றுந் தெரியாதென்றுவிடு—இது என்ன பிரமாதம்?

ஆரோக்கியமரி என்ன செய்வதெனத் தெரியாது எங்கித் தயருற்றாள். தாயை மறுத்து நடக்கத் துணியவில்லை. பெரியம்மாளோ மனம் போன போக்கெல்லாஞ் செய்தார்கள்.

மறுநாட் காலையில் பூசாரி வருவானென எற்கெனவே தாம்பாளத்தில் வெற்றிலை பாப்பி அதன்மேல் ரூ 2 வைத்துக் காத்துக்கொண்டிருந்தாள். வந்தார் பூசாரியார். தட்சணையைப் பெற்று மகிழ்ந்தார். பிள்ளையிணங்டை கூட்டி விடவே, சோமனை இப்பில் கட்டி, வேப்பிலையால் பிள்ளையின் உச்சந்தலை முதல் உள்ளங்கால் பரியந்தம் ஒத்தி ஒத்தி ஒதினார். எல்லாம் முடிந்தது. வெளியே போகவேண்டியதுதானே. அவருக்கு மனமெழவில்லை. உருகிகண்ட பூனை உரியை உரியைத் தாவுவதுவழக்கம். அவ்வாறே யிவரும், பெரியம்மாளிடமிருந்து இன்னுமதிகமாகப் பணந்தட்ட உத்தேசித்தார். ஊர் திருடனுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டுமோ? கொஞ்சாதுரியமாய்ப் பேசத் தொடங்கினார். "அம்மா! காளை மதுரவீரனுக்குப் பூசைபோடவேண்டும். அங்கே நமது குழந்தையைப்பற்றி சில விசேஷ மந்திரங்கள் ஓதவேண்டும். அதனோடு அங்கே ஏதாகிலும் பொருத்தனை செலுத்திவந்தால் நலமாகும்."

பெரி.—அதற்கு என்ன வேணும்?

பூசாரி.—ரொம்ப வேண்டாம். ஒரு புட்டிச் சாராயம்—இரண்டு சேவல்—4 தேங்காய்—பழம்—கற்பூரம்—இவைகள்தான்.

பெரி.—இதெல்லாம் எங்கே தேடிப்பிடிக்கிறது?

பூசாரி.—நீங்கள் சிரமப்படவேண்டாம். என் கையில் பணத்தைக் கொடுத்தால் நான் அவைகளைச் சேகரித்துக்கொள்ளுகிறேன்.

பெரி.—எவ்வளவு வேணும்?

பூசாரி.—ஐந்து ரூபாய்க்குள் முடித்துக் கொள்ளலாம்.

பெரி.—ஐந்து ரூபாயா? மூன்று ரூபாய் தருகிறேன், வேண்டுமானால் கொண்டுபோ.

பூசாரி.—உங்களிஷ்டம் அதற்குள் சமாளித்துக்கொள்ளப் பார்க்கிறேன்.

பூசாரி போனவுடன், ஆரோக்கியமரி தாயைக் கடிந்து "அம்மா! அப்படிச் செய்யலாமா? சிவன் கோவிலுக்கெல்லாம் பொருத்தனை செலுத்தலாமா? இது கடவுளுக்கேற்குமா?" என்றாள்.

பெரி.—சும்மாயிரு பைத்தியக்காரி. நாம் பேய்க் கோவிலுக்குப் போயா சாற்றிவிட்டுவந்தோம். இல்லையே. அவன் கையில் கொடுத்தோம். அதனால் என்ன பாதகம்?

ஆரோ.—என்ன! நீங்கள் அப்படிச் சொல்லுகிறீர்களே!

பெரி.—வேறென்ன—சும்மா இல்லாததையெல்லாம் இழுத்துப்போட்டுக்கொண்டு, துரோகந் துரோகம் என்கிறாயே. பேய்க் கோவிலுக்குப் போவது பாதகந்தான். நாம் அப்படிச் செய்கிறோமா?

ஆரோ.—நாம் நேராய்க் கொண்டுபோய்க் கொடுத்தாலென்ன? வேறே ஆள்வசங் கொடுத்தனுப்பினாலென்ன? எல்லாம் ஒன்றுதானே? பேய்க் கோவிலுக்குப் போகிறதிலேதானு பாவமிருக்கிறது? வேடிக்கைக்குப்போனால் பரவாயில்லை. ஆனால் பொருத்தனை நாம் நேராகக் கொடுத்தாலும் மற்றவர் மூலமாய்க் கொடுத்தாலும் முழு இருதயத்தோடு கொடுக்கிறோம்—அது பாவம். நம்முடைய வீட்டிலிருக்கிறவன் நேரே வாடகையைக் கொண்டுவந்து உங்களிடம் கொடுத்தாலுஞ் சரி, அல்லது வேலைக்காரனிடம் கொடுத்தனுப்பினாலுஞ் சரி, பணத்தை உங்களுக்குத்தானே கொடுக்கிறான். அதுபோலவே, நீகள் கொடுத்தது எவ்விதத்திலும் பேய்க்குத் தானே போய்ச்சேருகிறது. மெய்யான சர்வேசுரன்மேல் நம்பிக்கைவையாமல், பசாசை நம்பி அதற்குப் பொருத்தனை செலுத்துவது எப்பேர்ப்பட்ட துரோகம்!

பெரி.—நீ ரொம்பப் படித்தவளென்று தான் தெரியுமே! தகப்பன்சாமி! நீ எனக்கு ஞானோபதேசம் பண்ணப் புறப்பட்டாயோ, என்ன?

ஏது இனிமேல் பேசினால் காரமேறுமென்று மௌனமாயிருந்துவிட்டாள் ஆரோக்கியமரி.

இரண்டு காலேக்குபின் அருள்தாஸ் பிள்ளை வந்தும் முதன் முதல் குழந்தையைப்போய்ப் பார்த்தார். படுக்கையில் நித்திரைகொள்கிறான். பின் மனைவியிடம், தனது மாமியார் ஏதாகிலும் அஞ்ஞான சடங்குகள் செய்தனளோவெனக் கேட்டார். அவள் உள்ளதை யுள்ளபடி உரைத்தாள். கொண்டார் கோபம். வெறப்பும் அருவருப்பும் அவரைக்கொண்டது. என் செய்வது? விலக்க வழியற்றுப்போயிற்று. 'சரி யிருக்கட்டும், இனிப் பார்ப்போம். எது எப்படியாயினும், அவ்வித அநாசாரங்களுக்கு இனி தான் சம்மதியேன்' என சபதத்தோடு மனதைத் தேற்றினார். அன்று குழந்தை நோயாகி 20 நாள். நாளேக்கு 21. என்ன வருமோ எது நேருமோவென எல்லோரும் கலக்கியிருக்கிறார்கள். பெற்றோர் சேசுவின் திரு இருதயத்தின்மீது பக்தி மிகுந்து நம்பிக்கையாயிருக்கின்றனர். பாட்டியாளோ பூசாரியின் அநாசாரத்தைக் கைப்பற்றியே விக்கினமெல்லாம் விலகிப்போமென்று உறுதியாயிருக்கிறார். 21-ம் நாளும் சேஷ்டைகள் ஒன்றுமின்றி கடந்துபோயிற்று. எல்லோருக்குஞ் சந்தோஷம். உடனே, தான் நேர்ந்த பொருத்தனைகளையெல்லாஞ் செலுத்திவிட வேண்டுமென்பது ஆரோக்கியமரியின் ஆர்ப்பரிப்பு. குழந்தை மூற்றுஞ் சுகமடைந்தபின், அதைக் கூட்டிச்சென்று எல்லாவற்றையுஞ் சமர்ப்பித்துவிடலாமெனச் சொன்னார் அருள் தாஸ். ஆணங்கினாள் உத்தமி.

இப்போதுதான் அவர்களுக்கு மன ஆறுதல், அன்னம் புசிக்க மனம், நித்திரைகொள்ளப் பிரியமுண்டாயிற்று, இனிமேல் ஆபத்தில்லையென்பது அவர்களது எண்ணம். ஆகையால் சந்தோஷம் அவர்கள் முகத்தில் தோன்றினது. இப்படியிருக்கையில் தபால்காரன் தந்தி ஒன்று கொண்டுவந்தான். அது பெரியம்மாளுக்கு. 'உடனே புறப்பட்டுவா' என்று தாசில்தார் கொடுத்திருந்தார். என்னமோ ஏதோவென வறியாது திகிலுற்றுத் திக்பிரமைகொண்டு நிற்கிறாள் பெரியம்மாள். அடுத்த ரயில்வண்டி ½-மணிநேரத்திற்குள் போகும். தணிமணிகளை முதலாய் எடுக்காது மகளை நோக்கி "ஆரோக்கியமரி—உன் பிள்ளையினி சுகமாகும். நான் போகிறேன். உன்னப்பாவுக்கு, என்னமோ ஏதோ தெரிவில்லை. நான் போனவுடனே தந்தி மூலமாய் செய்தி யறிவிக்கிறேன்" எனச் சொல்லிவிட்டு ஸ்டேஷனுக்குச்சென்று ரயில் வண்டியேறிப் பிரயாணமானாள்.

* * * *

(இன்னும்வரும்.)

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2.—அதிகாரம்; வசனம்—22-24.

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—22. மோயீசனுடைய நியாயப் பிரமாணத்தின்படி அவளுடைய சுத்திகர நாட்கள் நிறைவேறின போது, அவரை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்.

23-ம் வசனம்.—ஏனெனில் தாயின் கருப்பையைத் திறந்து பிறக்கும் ஆணெல்லாம் ஆண்டவருக்கு அபிஷேகமாக்கப்பட்டதென்று, கர்த்தருடைய நியாயப் பிரமாணத்திலே எழுதியிருக்கிறபடி, அவரைக் கர்த்தர் சமுகத்தில் ஒப்புக்கொடுக்கவும்.

24-ம் வசனம்.—ஒரு சோடு காட்டுப் புறாக்களாவது, இரண்டு மாடப் புறாக் குஞ்சுகளாவது பலியாகச் செலுத்த வேண்டுமென்று, கர்த்தருடைய பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி செய்யவும். (அவரை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்.)

தேவமாதா தமது திவ்ய குமாரனுகிய சேசுநாதரைப் பெற்றெடுத்த நாற்பதாம் நாள் நியாயப் பிரமாணத்தின் இரண்டு கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக எருசலேம் தேவாலயத்துக்குச் சென்றார். இவைகள் எவையெனில், பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்களுக்காகக் குறிக்கப்பட்ட சடங்கு ஒன்றும், முதற் பேறான குமாரனுக்காக ஏற்படுத்தப்பட்ட சடங்கு மற்றொன்றுமாம். இக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்ட காரணம் ஏதென்றால், முதலாவது:—சர்வேசுரன் எஜிப்த்து தேசத்தில் அடிமைப்பட்டிருந்த இஸ்ராயேல் ஜனங்களை மீட்க சித்தமாகி, அவ்விராச்சியத்தின் ஜனங்களுடைய சகல தலைச்சன் பிள்ளைகளைச் சங்காரித்ததால், அந்த உபகாரத்திற்கு நன்றியறிதலாக இஸ்ராயேலியருக்குள் பிறக்கும் முதற் பேறான ஆண் குழந்தைகளையெல்லாம் அவர்கள் சர்வேசுரனுக்குக் காணிக்கையாக ஒப்படைத்து * சிக்குலு என்கிற ஐந்து வெள்ளி காசு கொடுத்து அவர்களை மீட்டுக்கொள்ள கடமைப்பட்டிருந்தார்கள். இரண்டாவது:—புருஷனுடைய வித்தினுற் கருப் பந் தரித்துப் பிள்ளைப் பெறும் ஸ்திரீ ஆண் பிள்ளையைப் பெறுவாளாகில் நாற்பது நாளும், பெண்பிள்ளையைப் பெற்றால் எண்பது நாளும் அசுத்தமாக வெண்ணப்பட்டுத் தமது ஆலயத்தில் வராமலும், தமது பூசை பலிபதார்த்தங்களைத் தொடாமலும் விலகியிருக்கக் கட்டளையுமிருந்தது.

அப்படிப்பட்ட அசுத்தத்தினின்று சுத்தமாக, ஆண்பிள்ளையைப் பெற்றவள் நாற்பதாம் நாளிலேயும், பெண்பிள்ளையைப் பெற்றவள் எண்பதாம் நாளிலேயும் தேவாலயத்துக்குவந்து, ஒரு வருஷச் செம்மறிக் குட்டியைத் தகனப்பலியாகவும், ஒரு மாடப் புறுவை யல்லது காட்டுப் புறுவைப் பாவப்பலியாகவும் கொடுக்கக் கட்டளையிருந்தது. ஆனால் யாதொரு ஸ்திரீ செம்மறிப்புறுவையைக் கொடுக்கக் கூடாதபட்சத்தில், இரண்டு காட்டுப் புறாக்களையும், அல்லது இரண்டு மாடப் புறுக்களையும், ஒன்றைப் பாவப்பலியாகவும் ஒன்றைத் தகனப்பலியாகவும் கொடுத்துக் கடமையைத் தீர்த்துக்கொள்ளலாம். கன்னிசுத்த தேவமாதாவோவென்றால் இஸ்பிரீத்துசாந்துவினுலல்லாதே புருஷனால் கருப்பந் தரித்துப் பிள்ளையைப் பெறுத தினாற் தவிர, மற்ற ஸ்திரீகளைப்போல் அசுத்தமாகாமல், என்றும் அதி பரிசுத்தமுள்ளவளாயிருந்தபடியால், முற்கூறிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய அவளுக்கு யாதொரு கடனுமிருந்ததில்லை என்று வித்தியாபாரகரனைவரும் கூறுகிறார்கள். சர்வாதிகர்த்தராகிய தம் திருச் சுதன் விருத்த சேதன கட்டளைக்குக் கீழ்ப்பணிந்தபிரகாரம், கன்னிமாதாவும் மோசே கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறார்.

ஓர் சாமான்ய அசுத்த ஸ்திரீயைப் போல் அவள் முப்பத்தொன்பது நாள் மட்டும் விலகியிருந்து, நாற்பதா நாளிலே

* ஒரு சிக்குலு என்பது நம்முடைய நாணயத்தில் இரண்டு ரூபாயாகும்.

தமது திருக் குமாரனைத் தமது கரங்களிலெடுத்துக்கொண்டு சூசைமுனியோடு எருசலேம் நகரிலிருந்த தேவாலயத்துக்குச் சுத்திகரச் சடங்கையும் காணிக்கைச் சடங்கையும் நிறைவேற்றச் சென்றார். தாவீது இராசாவின் குமாரத்தியாகிய கன்னிமரியாயி எளியவர்களுக்குரிய காணிக்கையை ஒப்புக்கொடுத்ததானது அவள் எவ்வளவு எளிமைத்தசையையடைந்தனள் என்று தெற்றென விளக்குகின்றது.

"சேசுநாதர் தாம் ஐசுவரியராயிருந்தும் அவருடைய தரித்திரத்தால் நாம் ஐசுவரியராகும்பொருட்டு நமது நிமித்தம் தரித்திரரானார். (2-கொருந்தி. 8-ம் அதிகாரம், 9-ம் வசனம்.)

தரித்திரத்தைப் பாக்கியமுள்ளதென்றும், அதைப் புண்ணிய சாங்கோபாங்கத்தையடைய மெய்யான சாதனமென்றும் பிற்காலத்தில் வாழ்த்தப்போகிறவர் அதனை முந்த முந்த தம்முடைய தாயிடத்தில் தழுவிக்கொள்ளுகிறார்.

அர்ச். சின்னப்பர் சொல்லுமாப் போல் "சர்வேசுரா நீர் பலியையும் நைவேத்தியத்தையும் விரும்பாமல் எனக்கு ஒரு சரீரத்தைப் பொருத்தினீர், பாவத்துக்குப் பரிகாரமாகத் தகனபலிகள் உமக்குப் பிரியப்படவில்லை, உமது சித்தத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன்" (எபிரே. 10-ம் அதிகாரம், 5-6-ம் வசனம்.) என்று சேசுநாதர் இப்பூலோகத்தில் தோன்றினபோது தம்மைக் காணிக்கையாகச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்ததை திரும்பவும் தமது திவ்ய தாயின் கரங்களால் தேவாலயத்தில் புதுப்பிக்கிறார்.

கன்னிமாதாவும் இக்காணிக்கையோடு தம்மை ஒன்றித்து உலக இரட்சணியத்துக்காகத் தம்மையும் ஒப்புக்கொடுக்கிறார். பாவியாகிய ஒரு சாமான்ய ஸ்திரீயைப்போல் தேவமாதா தன்னைத் தாழ்த்திக்கொண்ட இத்தருணத்திலும், அவளுடைய திவ்ய குமாரனும் மற்ற சாமான்ய பிள்ளைகளைப்போல் தாமும் ஒருவர் என்று பிறர் எண்ணத்தக்க விதமாய்த் தம்மைத் தாழ்த்திக்கொண்ட தருணத்திலும், சர்வேசுரன் அவர்களை மற்ற ஜனங்கள் அங்கிகரிக்கும்படியாகச் செய்கிறார்.

பெத்லேம் குகையில் வறுமையிலும் தாழ்மையிலும் மறைபட்டிருந்த சேசுவின் தெய்வீக மகிமையை எப்படி சர்வேசுரன் எல்லோரும் கண்டு அதிசயிக்கும்படி செய்தாரோ, அப்பிரகாரமே இங்கும் தம்மைத் தாழ்த்திக்கொண்ட தமது திவ்ப சுதனை மகிமைப்படுத்துகிறார்.

(தொடரும்.)

S. M.

AN APPEAL.

தமிழ் கத்தோலிக்கருக்கு ஓர் விஞ்ஞாபனம்.

பிரிய சகோதரரே!

இங்கிலாந்து, அயர்லாந்து, அமேரிக்கா, ஆஸ்திரேலியாமுதலான நாடுகளில் வருஷா வருஷம் அநேகம்பேர் நமது சத்யமறையைக் கைப்பற்றுவதற்கும், அந்நாடுகளில் நமது சத்யவேதம் நாளுக்கு நாள் செழித்தோங்கி வளருவதற்கும், சிறந்த சாதனமாய் விளங்கிவருகிறதென்ன? வேத விளக்கத் துண்டுப் பத்திரிகைகளை அடிக்கடி பிரசுரஞ்செய்து, சொற்ப விலைக்கு விற்று எங்கும் பரப்புவதற்காக ஏற்பட்டுள்ள "கத்தோலிக் சத்யாபிமான சபை" தான் இதற்குக் காரணமான உன்னத சாதனம். பிரமாண்டமான இந்தியா தேசமாகிய நம் ஜென்ம நாட்டிலும், இத்தகைய சபை ஒன்று ஸ்தாபகமானுலொழிய, பிறர் ஆத்ம ஈடேற்ற விஷயமாய் நமக்குள்ள கடமையை, நாம் நிறைவேற்றமுடியாது. நமது சத்திய வேதத்தை இன்னும் அறியாத சற்றேறக்குறைய 32 கோடி ஜனங்களுக்கும், இதன் உண்மையைக்காட்டி விளக்குவதற்கு ஏற்ற வழி வேறில்லை. இதை நன்குணர்ந்த அனுபோகஸ்தர் பலர் ஒன்றுகூடி இந்தியாவிலுள்ள சகல மேற்றிராணிமார்களுக்கும், குருக்களுக்கும், கத்தோலிக் விசுவாசிகளுக்கும் இந்தக் கருத்தைத் தெரிவித்து, அவர்களுடைய உதவியையும் ஆலோசனையையும் கேட்டுக் கொண்டதின்மேல், 1½-வருஷமளவாக இதற்காகப் பிரயாசப்பட்டதின் பலனுகக் கடைசியாய் இந்தச் சபை ஸ்தாபகமாகப்போகிறது. இது மிகவும் சந்தோஷத்துக்குரிய விஷயமே.

ஆனால் இந்தச் சபையின் பிரசுரங்கள் இந்தியாவின் சகல பாகங்களிலுமுள்ள ஜனங்களுக்கும் பிரயோஜனப்படும்வண்ணம், அரசியல் பாஷையாகிய ஆங்கிலத்தில்தான் வெளியாகும். ஆங்கிலம் கற்றவர்கள்மாத்திரம், இவைகளால் பிரயோஜனமடைவார்கள். இந்தியாவின் தென் பாகமாகிய நமது தமிழ் நாட்டில் ஆங்கிலேய பாஷையை அறிந்தவர்கள் வெகு சொற்பப்பேர் என்று சொல்லாமலே விளங்கும். ஆகையால் இந்தியா கத்தோலிக் சத்யாபிமானச் சபையால்; நமது ஜனங்கள் நன்மையடையவேண்டுமானால், நமது தாய்ப் பாஷையாகிய தமிழில் அநேக பிரசுரங்கள் வெளியாகவேண்டுவது அவசியம். புதுவை அதிமேற்றிராணியாரவர்களும், கும்பகோணம், திருச்சினுப்பள்ளி மேற்றிராணிமார்களும் இதைப்பற்றி எற்கனவே தங்களுடைய அபிப்பிராயத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் பாஷையில் பிரசுரங்கள் இயற்றி, நம் நாடு எங்கும் பரப்புவதற்கென்று, கத்தோலிக் சத்யாபிமான சபையின் தமிழ்ப் பதுதியைக் கூடிய சீக்கிரம் ஏற்படுத்தவேண்டுமென்பது, மேற்கூறிய மேற்றிராணிமார்களின் ஆசையும் கருத்துமாம். இதே எண்ணமும் கருத்துந்தான், நமது தமிழ் நாட்டின ஞான மேய்ப்பர்கள்யாவருக்கும் இருந்துவருகிறதென்று திட்டமாய்க் கூறலாம். இவர்களுடைய நோக்கம் சித்திபெறுவற்காக நாம் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.

மங்களூர் மேற்றிராசனத்தில் சுய பாஷையாகிய "கொங்கணி"ப் பாஷையில் பிரசுரக்கள் வெளிவருமாறு எற்கனவே ஏற்பாடுகள் செய்துவிட்டார்கள். அந்தப் பாஷையைப் பேசுகிற கத்தோலிக்கர் சுமார் ஒரு லட்சம் இருக்கலாம்; தமிழ் கத்தோலிக்கரோ, இலங்கை மற்ற நாடுகள் நீங்கலாக, தென் இந்தியாவில்மட்டும் ஏறக்குறைய 6 லட்சம் இருக்கும். ஒருவன் தனியே செய்யக்கூடிய காரியத்தை 6 பேர் ஒன்று சேர்ந்து செய்யக்கூடாதென்கலாமா? சொற்பத் தொகையினராகிய அவர்கள் செய்ததுபோலாகிலும், பெருந் தொகையினராகிய நாம் செய்யவேண்டாமா? எது விஷயத்திலும் நாம் ஊக்கமற்றுத் தூங்கிக்கிடப்பதுதான் சுபாவம் என்று பிறர் நம்மை நகைக்க இடங்கொடுத்துக்கொண்டுபோவது சரியா?

அந்திய பாஷையைப் பேசும் நமது கத்தோலிக் சகோதரர்மாத்திரமல்ல; நமது தாய்ப் பாஷையை வழங்கிவரும் இதர மதஸ்தரான தமிழ்ச் சகோதரரும் தங்கள் தங்கள் மதவிஷயமாய் ஊக்கங்கொண்டு உழைத்துவருகிறார்கள். இந்துக்களில், வேத விஷயமாய்த் துண்டுப் பத்திரிகைகளும், புஸ்தகங்களும் நூற்றுக்கணக்காய் இந்நாட்களில் வெளிவருகின்றன. முற்காலத்தில் இதைப்பற்றி நினைத்தது யார்? ஓர்வகையில் நம்மிடமிருந்து இவ்வழியைக் கற்றாரே, இப்போது நம்மிலும் பன்மடங்கு அதிகமாய் இதைக் கையாடிவர, நாம் பின்னிடைந்துபோவது பரிதாபமான விஷயமல்லவா? இன்னும் இதை விவரிப்பானேன்? நாம் இதுவிஷயமாய் முயற்சி எடுக்கத் தவறினால், சொற்ப காலத்துக்குள் நாம் கத்தோலிக்கரென்று தலையைக் காட்டிக்கொள்ள முதலாய் நாணவேண்டியதாகும். ஆகையால், 'பிரிய சகோதரரே, விழித்துப்பாருங்கள்! அசமந்தத்தை ஒழியுங்கள்! உற்சாகங்கொண்டு முயற்சியுங்கள்!

இதற்காக, நாம் செய்யவேண்டியதென்ன?

I. தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கராகிய நாம் எல்லோரும், இந்திய கத்தோலிக் சத்யாபிமான சபையின தமிழ்ப் பகுதியில், அங்கத்தினராகச் சேரவேண்டும். இந்தப் பகுதியில் ஏழை எளியவர்களும் கிஞ்சித்தும் கஷ்டமின்றிச் சேரும்படியாக, வருட சந்தா தற்சமயம் ரூபாய் ஒன்று எனபதாக வெகு குறைந்த சந்தாவாக ஏற்படுத்தியிருக்கிறது. தற்பெருமைக்காகவும் வீண் டம்பத்துக்காகவும், அநேகாநேக சமயங்களில் அபரிமிதமாய்ச் செலவு செய்யும் நாம் பிறர் நன்மைக்காகவும் தேவ தோத்திரத்துக்காகவும், நமது ஈடேற்றத்துக்காகவும், வருஷத்துக்கோர்முறை ஒரு ரூபாய் கொடுக்க இயலாது என்போமா? அநுதினம் அரைத் தம்மிடி மீதிப்படுத்தினால், வருஷத்தில் இந்த ஒரு ரூபாய் கொடுப்பதற்குப் போதுமானது. நான் ஒன்றுக்கு அரைக் காசு கொடுக்கமுடியாத பரம ஏழை நாம் என்று சொல்லவும் வாய் வருமா? இல்லே, இல்லே; மனமும் ஆசையுமுண்டானால், எல்லோருமே இந்தச் சந்தாவைக் கொடுத்து, அரிய பெரிய இவ்வலுவலுக்கு உதவி புரியக்கூடும். இவ்விதமாக வருஷம் ஒரு ரூபாய் கொடுக்கும் சபையின் சாதாரண அங்கத்தினர் ஒவ்வொருவரும், சபையின்பேரால் அந்தந்த வருஷத்தில் வெளிவரும் வேத விளக்கத் துண்டுப் புஸ்தகங்கள் கிடைக்கப் பெறுவார்கள். வருஷத்துக்கு ஆறு தடவை பிரசுரங்கள் சபையின்பேரால் வெளிப்படுத்தத் தற்காலம் யோசித்திருக்கிறோம். நமது முயற்சி பலன் தருவதற்கு ஏற்றாற்போல் இப்பிரசுரங்களை அதிகரிப்போம்.

II. கூடுமானவர்கள், தூயுள் மேம்பர்களாகவேண்டும். இதற்காகக் குறிக்கப்பட்ட கட்டணம் ரூ. 15. இவர்கள் வேறு சந்தா எக்காலமும் கொடுக்காமலே, தங்கள் ஆயுள்காலபரியந்தம் வெளிவரும் பிரசுரங்கள்யாவையும் பெற்றுக்கொள்வார்கள்.

III. பதினைந்துக்கு மேற்பட்ட ரூ. 50 வரை மொத்தமாய்க் கொடுப்பவர்கள் சபையின் பரிபாலகராவர். ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்ட தொகை அளிப்பவர்கள் சபை ஸ்தாபகர் என்றழைக்கப்படுவார்கள். இவர்களுக்கும் சகல பிரசுரங்களும் ஆரம்பத்திலிருந்து அட்டியின்றி அளிக்கப்படும் என்று சொல்லத்தேவையில்லை.

IV. நம்மவரில் பிழையறத் தமிழ் பாஷையில் எழுதக்கூடிய கற்றோர் தங்கள் பாஷாஞானத்தைத் தேவ தோத்திரத்துக்காக உபயோகித்து நமது தமிழ்ச் சகோதரருக்குப் பிரயோசனப்படக்கூடிய துண்டுப் புஸ்தகங்களைத் தெள்ளிய நடையில் எழுதிச் சபையின் காரியதரிசிக்கு அனுப்பவேண்டும்.

இவைகள்தான் நாம் முக்கியமாய்ச் செய்யவேண்டியவை. சபை மெம்பர்கள் சேருவார்களென்றும், விஷயதானம் செய்யக்கூடியவர்கள் முன் வருவார்களென்றும் நிச்சயமானால், தமிழ் கத்தோலிக் சத்யாபிமான சபை நிலைபெற்று நீடூழி வாழ்வதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை. மற்ற விபரங்களும் ஒழுங்குகளும் காளடைவில் பார்த்துக்கொள்ளலாம். *

PROMOTERS.

சபையை ஆதரிப்போர்.

Pondicherry:—Rev. Frs. A. Combes, M. ap., G. M. Xavier, M. Anandu, Mr. & Mrs. Mariadoss Iyer, Mr. T. M. Doraicannoo.

Kumbakonum:—Rev. Fr. K. Ratnaswaminather, Mr. M. Ponnuswami Mudr.

Madras:—Rev. Fr. A. R. John, Mr. V. Mahadeva Iyer, B. A.

Mylapore:—Rev. Fr. S. Marianantham, Mr. Rao Sahib S. Arogiyaswami Pillay, Mr. P. Thumbuswami Pillay.

Trichinopoly:—Rev. Frs. J. Jeganather, T. Roche, S. J., Messrs. G. Vythinatha Iyer, B.A., L.T., J. L. P. Roche Victoria.

தென்னிந்திய கத்தோலிக்கருக்கு செய்து கொள்ளப்படும் இவ்விஞ்ஞாபனத்தை, வந்திக்கத்தக்க புதுவை அதிமேற்றிராணியாரவர்களும், கும்பகோணம், திருச்சினுப்பள்ளி மேற்றிராணிமாரவர்களும் அன்போடு அங்கீகரித்து பிரசுரப்படுத்த உத்தாரம் அளித்ததுமன்றியே இது விஷயத்தில் தங்களாலான உதவியும் புரிவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

இதற்காகப் பணம் அனுப்புகிறவர்களும், விஷயதானம் செய்ய விரும்புவோரும், வேறு விபரங்கள் அறிய ஆசிப்பவர்களும், சபையின் தற்கால கௌரவ காரியதரிசி சனம் A. ஜெகநாத பிள்ளைக்கு எழுதிக்கொள்ளவும். அவர் விலாசம் பின்வருமாறு:

MR. A. JEGANATHAM,
Manager,
Morning Star office,
Cantonment, Trichinopoly.

A. ஜெகநாத பிள்ளை,
மானேஜர்,
மார்னிங் ஸ்டார்,
கன்ரோன்மெண்ட், திருச்சி.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

கத்தோலிக்கு இந்தியர் பரோபகார சபை, சென்னை அன்பின் சகோதரத்துவப் பொதுக்கூட்டம்.

சென்ற ஏப்பிரல் மாதம் 27-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை, சென்னைக்கடுத்த மாதவரத்தில், நமது மிக. வந்தி. சென்னை அதிமேற்றிராணியாராகிய ஹரானரபில் அருளப்ப ஆலன் ஆண்டவரவர்களால் நமது சபைக்கென்று அளிக்கப்பட்

துறிப்பு:—சபையிற் சேர்ந்த சகலருக்கும் இரண்டு மாதத்துக் கொருதடவை பிரசுரமாகும் "கத்தோலிக் குடும்ப போதினிப்" பத்திரிகையும் சேர்த்தனுப்பப்படும்.

டிருக்கும் விஸ்தீரணமான வீஸ் நிலத்தில் சபை யாரின் விசேடப் பொதுக்கூட்டம் நிறைவே றிற்று.

சூரிப் பத்திரத்திற் குறித்திருந்தவண்ணம் சபையார்களிற் பெரும்பாலார் நேரத்துடன் வந்து கூடினர். பின்னர் சங்கீதக் காலதேபம் நிறைவேறிற்று. சுமார் 200 அங்கத்தார்கள் அன்பின் விருந்து அருந்தினர். நூற்றுக்கு அதி கமான ஸ்ரைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.

நமது சபைத்தலைவர் ம-ரா-ரா-ஸ்ரீ கனம் M. R. மகிமைதாஸ் பிள்ளை யவர்கள் அக்கிராச னம் வகிக்க, மாலை 2-மணிக்குக் கூட்டம் ஆரம் பிக்கப்பட்டது. கனம் S. M. ஞானப்பிரகாசம் பிள்ளை B.A., கனம் மனுவேல் இலாசர்ஸ். கனம் S. சின்னத்தம்பி பிள்ளை ஆகிய இவர்களால் நமது சபையின் அபிவிருத்தியையும் முன்னேற் றத்தையுங் குறித்து இராஜ பாஷையில் மூறையே உபந்நியாசங்கள் நடைபெற்றன. அக் கிராசனஞ்திபதியவர்களும் மேற்படி உபந்நியாசங் களையொட்டிப் பேசி, நமது சபையின் அபிவிருத் தியைப்பற்றியும், இந்த விஸ்தீரணமான வீஸ் நிலத்தைப் பண்படுத்தி யுழுது பயிர்செய்வதி னால்வரும் பலன்களைக்கொண்டு நமது ஸ்ரை அநாத சிறார்களுக்கு உறைவிடம், தொழிற்சாலை, கல் விச்சாலை முதலானவைகளைத் தாபனஞ்செய்து அன்னோர்களை ஆதரிக்கும் நிமித்தம் நாமெல் லோரும் முன்னர்போலவே ஏக மனதாக வுழைக்கத் தளராதிருக்கவேண்டுமென்றும், "வித்துமேரும் உளவாயிருக்க எய்த்தல் கிருக் கும் ஸ்ரையும் பதரே" யென்னும் கருத்துடன் பேசி முடிக்குந் தருணத்தில், நமது அதிமேற்றி ராணியாரவர்கள் அங்கு வருவதையறிந்து சபைத் தலைவரவர்கள்முதல் சகலரும் எதிர்சென்று முக மன்கூறி, சபையின் துவஜம் முன் துலங்க, சங் கீதவாத்திய முழக்கத்துடன் (Band of M. & S. M. Ry.) ஆண்டவரவர்களை யழைத்து, ஜார்ஜ் டவுன் ஹோச் சங்கத்தார்களின் முயற்சியால் அலங்கரிக்கப்பட்டிருந்த கட்டிடத்தில் சிங்கார ஆசனத்தில் அமர்த்தினர். ஆண்டவரவர்கள் சிம் மாசன மமர்ந்தவுடன், நமது சபைத் தலைவரவர் கள் 1916-ம் வருடத்திலிருந்து இம்மட்டும் நடந் துள்ள சபையின் விருத்தாந்தங்களை சுருக்கமாக வெடித்துரைத்து, ஆண்டவரவர்கள் சபையின் ஆரம்பமுதல் இதுவரையில் செய்துவரும் சகா யங்களுக்காகவும், சபைக் கூளித்திருக்கும் விஸ்தீ ரண நிலத்திற்காகவும், தாமும் சபையோரும் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கின்றோமென் றும் கூறினர். பிறகு உழைப்பு அங்கத்தவர்கள் (Active Members) ஒவ்வொருவராயும் ஆண் டவரவர்களின்முன் நிறுத்தலே, அவர்களெல் லோரும் ஆண்டவரவர்களிடமிருந்து (Society's Medals.) சபையின் முத்திரைப் பதக்கங்களை யும், அவரின் ஆசியையும் பெற்றனர் ஆண்டவ ரவர்கள் அவர்களை நோக்கி நற்போதனைகளையும் உற்சாகமான வார்த்தைகளையங் கூறினபின் அவர்களெடுத்துவரும் முயற்சியைச் சாலவும் மெச்சி, இவர்கள் இத்தன்மைப்போலவே தங்க ளுடைய ஒற்றுமையிலும் சகோதரத்துவத்திலும் வளர்ந்துவருவரேயாகில் இவர்களுடைய முயற் சிகள்யாவும் சித்திபெறுமென்றும், இந்த விஸ்தீ ரணமான வீஸ் நிலத்தைச் சபையார்களால் கூடிய அளவிற் பண்படுத்தி யுபயோகித்துக் கொள்ளலாமென்றும் மொழிந்தனர். நமது ஆண்டவரவர்களுடன் அவர்களின் செக்கிரட் டெரியாகிய Very Rev. Fr. Merkes அவர்க ளும் Rev. Fr. Theodore அவர்களும் விஜயஞ் செய்தனர். நமது சத்திய திருச்சபையின் தலைவ ராகிய பாப்பு அரசரின் வாழ்த்தும், இராஜ சக் கரவர்த்தியவர்களின் வாழ்த்தும் வாத்தியத்து டன் (Band of the M. & S. M. Ry.) பாடப் பட்டது.

இம்மஹோற்சவத்தன்று காலையிலிருந்து மாலைவரையில் நரசிங்கபுரம் அர்ச். அந்தோனி யார் பஜனை அங்கத்தவர்கள் சங்கீத ஞானக் கீர்த்தனங்களைப் பாடி சபையாரைக் களிப்பித்த னர்.

முடிவில் நமது சபையின் ஜீவியகால அங் கத்தவர்களிலொருவராகிய கனம் S. Johnson அவர்களால் புகைப்படம் எடுக்கப்பட்டது.

நமது மிகவும் வந்திக்கத்தக்க அதிமேற்றி ராணியாரவர்கள் நம்மீது கருணைகூர்ந்து மேற் கூறிய விஸ்தீரணமான வீஸ் நிலத்தைச் சபை யின் பிரயோசனத்திற்கென்றே அளித்திருப்ப தற்காக நாம் என்றென்றைக்கும் நன்றி பாராட் டுவதுடன், நம்மாலியன்ற அளவிற் பல வேறு முயற்சிகளால் அவ்வீஸ் நிலத்தைப் பண்படுத்தி யதன்வாயிலாக சேகரிக்குந் தொகையையுங் கொண்டு நம்முடைய சபையின் கருத்துக்களைப் பூர்த்திசெய்வோமேயாகில், நமது அதிமேற்றிரா ணியாராகிய வள்ளலவர்களுக்கு மன்க்களிப்பை புண்டாக்குவதுடன், கத்தோலிக்கு இந்தியர்க ளாகிய நம்மவர்களுக்கும் பொதுப் பெரும்

பயனை விளைவிக்குமன்றே. சுபம்! சுபம்!! சுபம்!!!

த. தாமஸ் பிள்ளை,
பிரதம காரிட்தரிசி.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

I

சங். பத்திராதிபரே,

சென்றமே கல்லாயனில் நடை தலைப்பின் கீழ் No. 1 சென்னை,கண்டது விண்டோன் என் பவர் மாண்டலே நிருபருக்கு சந்தேக நிவர்த்தி யாகப்பதில் எழுதியதைக் கண்ணுற்றேன். மாண் டலே வாசியாகிய யானும் தெ. இ. க. சங்கத்தின் வருடாந்திரக் கூட்டத்தின்போது விஜயம்செய் தவனுகையால் எனக்குத் தெரிந்ததைச் சிறிது சொல்ல ஆயன் இடம் கொடுப்பானென நம்புகி றேன். சென்னை நண்பர் "மாண்டலே நிருபர் எழுதியவாறு சகலமும் நடை கூட்டத்தில் நடந் தது (பெரும்பான்மையும்) கலப்பில்லா உண்மை யெனச் சொல்லிவிட்டு "நடை தாழ்ந்த வகுப்புக் கிறீஸ்துவர்களின் பிரதிநிதியானவர் பிரசங்க மேடையில்பேச உத்தரவு கேட்க, அக்கிராசனஞ் திபதியவர்கள் சில புத்திமதிகளைக்கூறி, கூட்ட கடவடிக்கைகள் முடிந்தபேசலாம் என்று மொழிந்தனராம்" என்று எழுதுகிறார். கடந் தது இப்படியல்ல என்பது தெளிவு. அப்படி அனுசரணையாய்ச் சொல்லியிருந்தால் எனிந்த கலக்கம்? சங்கம் தொடங்கு முன்னரே கனம் சங்கக் காரியதரிசியவர்களைக் கேட்டுக்கொள்ள, அவரும் அக்கிராசனஞ்திபதியவர்களிடம் கேட்டு உத் தரவடைந்து, வரவேற்புக் கமிட்டிச் சேர்மன் தமது வரவேற்புப் பத்திரத்தை வாசிக்கும் போது, நடை பிரதிநிதியவர்களிருந்த இடம்வந்து, "உமது கோரிக்கையை என் நிர்ப்போர்ட் முடிந் ததும் செய்ய அக்கிராசனஞ்திபதி உத்திரவளிக்கி றார்" என்று சொன்னதின்பேரில் நடை பிரதி நிதியும் அதுபோலவே நிர்ப்போர்ட் முடிந்ததும் மேடையில்போய் மறுபடியும் அக்கிராசனஞ்தி பதியை வணங்கிக் கேட்டுக்கொண்டு ஜூரண்டு வார்த்தைகளும் துவக்கிவிடவே, சங்கு அங்கத்தி னரி லிருவரெழுந்து "நடவடிக்கைகள் முடிந்து பேசவேண்டுமேயொழிய இப்போது கூடாது" என்று தடுத்தனர். இதைக் கண்டு உத்தரவு கொடுத்த அக்கிராசனஞ்திபதியவர்கள் நடை பிரதி நிதிதன் பிரசங்கத்தை நிறுத்தியிருக்கத் தாம் துவக்கி "தாழ்ந்த வகுப்புக் கத்தோலிக்கர்களா கிய நீங்கள் மெம்பர்களாகலாமொழிய, மடம், போர்டிங், சபை முதலியவைகளில் சேர்க்க சங் கத்தால் முடியாதென்றும், வேண்டுமானால் சென்னையிலுள்ள பரோபகாரச் சபைபோன்ற ஓர் சபையை உங்கள் நன்மைக்காக உண்டாக் கிக்கொள்ளுங்கள்" என்று முடிவாய்க்கூறி ஆச னத்திலமர, நடை பிரதிநிதி கடைசியிலாகிலும் உத்தரவு கிடைக்குமோவென, அதற்கு அக்கிரா சனஞ்திபதியாதொரு பதிலு மூரையாததுகண்டு, பொறுமையுடன் வெளியேகி விண்ணப்பித்தவர் கட்கு உங்கள் காரிய மனுகூலமடையாதெனவே, யாவரும் பொறுமையாய்த் தங்களில்லம் சென்று விட்டனர். இதுதானுண்மை விஷயம். கனம் மெம்பர்கள் அவ்வேழைக் கிறீஸ்துவர்களையும் நடை பிரதிநிதியையும் முறைமுறைத்து, நேராகவும் மறைவாகவும் பேசித் திட்டினதை யோசிக்குங் கால் என் மனம் பதறுகின்றது. பின் நிருப நேயர் இக்காலத்தில் சகலருக்கும் உண்டாயிருக் கும் இயக்கங்களை உணர்த்தியுள்ளார். இது புகழத்தக்கது. அதுபோலவே செய்வதல்லவோ சாலச் சிறந்தது!

நிருபர் சொல்லியபடி நாட்பட்ட வியாதி யைக் கடுமையான மருந்து சாப்பிட்டுக் கடும் பத் தியம் பிடிக்கவேண்டுமென்பதற் கையமில்லை. ஆனல் இதர வகுப்பினர்கள் முன்னேற்ற மடைய இணையிலாப் பிரயாசையுடன் உழைத்துவரும்போது, தாழ்வு உயர்வில்லா சமத் துவமுடைய கத்தோலிக்கு வேதத்தில் சேர்ந் தும் அடிமைபோல் பாவித்து அவமானமாய் நடத்தப்படும் இவர்கட்கும் அம்முன்னேற்றத் தின் உணர்ச்சி உண்டாகுமென்பதற் கையமுண்டோ? ஆதலால் இவர்களும் தங்களிஷ்டத் திற்குத் தகுந்தாப்போல் தெ. இ. க. சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கத்தோலிக்கர்க ளதிகமாயுள்ள திருச்சியில் நடைபெறப்போவ தைக் கேள்வியுற்று அவ்விடம்வந்தார்கள். அவர் கள் விண்ணப்பமும் அன்றே முடியவேண்டு மென்பதும் நோக்கமல்ல. எதோ நமது விண் ணப்பத்திற்குசிறிதளவேனும் ஆறுதலான வார்த் தைகள் கிடைக்குமென மனப்பால் குடித்திருக் தனர். ஐயோ! பாவம்! இதற்குமாருக என்ன நடந்தது? இவர்கள் பிரதிநிதி அக்கிராசனஞ்திபதி யால் உத்தரவடைந்தும் சங்கத்தாரால் நிராகரிக் கப்பட்டார். அதோடு நீங்கள் கேட்கும் நன்மை யடையாத மெம்பர்களாகுங்களென்ற மறுமொ

ழியேதவிர வேறல்ல. (நீயும் உன் சகோதரனும் ஓர் ஹோட்டலுக்குப்போக, இருவருக்கும் ஒரே மாதிரி சாப்பாட்டுக்கு உத்தரவளிக்க, உன் தமயனுக்கு மூப்பழமோடி பாலன்னமும், உனக்கு உப்பில்லாக் கூழுமிட்டால் நீ சகிப்பையோ?) இலவு காத்த கிளிபோல் மனங் கசியலாயினர். என்? இவர்களுக்கு அரவணைப்பாய் பயப்படாதீர்கள்! இதைப்பற்றி யோசித்து சன்னஞ் சன்னமாய் குணப்படுத்திவிடுகிறோம்! மெம்பராய் விடுங்கள்! ராஜாங்க விஷயத்தில் சௌகரியங்கள் கிடைக்கக் கூடியழையுங்களெனத் திடாரிக்கமாய்ச் சொல்லக்கூடாதா? அப்படி அரவணைப்பான பேச்சிருந்தால் எனிவ்விதகலக்கம்? அந்தோ! இவ்வேழைகளுக்குக் கத்தோலிக்கு நீதியும் இரக்கமும் காண்பிப்பாரில்லையோ! அல்லது, இப்படியே உலக முடியுந்தனையும் நீடிக்குமோ! அறியோம் (ஜாதி யாசாரத்தைத் தெய்வவாக்காகக்கொண்ட சுய ஆட்சி, திராவிட இயக்கத்தினர்கள் கவர்ன்மெண்டாருக்குத் தாங்கள் சமரசமாயிருக்கிறோமென்பதைக் காண்பிக்க தாழ்ந்த வகுப்பினரை முன்னேற்ற, எண்ணெண்ண முயற்சி செய்துவருகின்றனர். ஜாதியாசாரத்தை அஞ்ஞானம் என்றகற்றும் கத்தோலிக்கருக்கு அவ்வித முயற்சி இல்லையோ? என்ன பரிதாபம்!)

புதுச்சேரியிலும், தஞ்சையிலும் களகம் செய்த துஷ்மையாயினும் திருச்சியில் அப்படிக் கலகம் செய்ய ஏற்பட்டவர்களல்ல; அவ்வித எண்ணமுமில்லை. தங்களுக்குக் கிடைக்கவேண்டிய உண்மையான சுதந்தரங்களைத்தானே பணிவுடன் கேட்டனர். அது இல்லையெனப்போகவே பொறுமையுடன் திரும்பிவிட்டனர். இப்படி, உள்ள, சுதந்தரங்கள் கொடுக்க மனங்கொள்ளாதவரா, ராஜிய காரியங்களில் ஏதாவது நன்மை செய்ய முற்படுவாரென எண்ணித் தங்களுக்கென ஓர் சபை உண்டாக்கிக்கொண்டனர்போலும். ஆகையால் நிருபர் சொல்லுமாப்போல அன்னவர் குறைகளை நாளடவில் தீர்ப்போமென உரைத்து அகன்றவர்களை அழைத்து சமரசமாயிருந்து மை பிரதிநிதித்துவத்தை அடையக்கோருகின்றனம். ஆனால் சிறப்பலங்காரமாய் சொல்லுவதில் பயனில்லை. அதைப்போல் முடிக்க ஏற்பவர்களென எல்லாம் வல்ல நாதனை இறைஞ்சுகின்றனம்!

15—4—19. மான்டலேவாசி.

II

சென்ற மாத "நல்லாயனில்" மேற்குறித்துள்ள தலையங்கத்தின்கீழ், எப்பிரல் மாதம் அதே மகுடம் புனைந்து எழுதியிருந்த இரண்டு கடிதங்களுக்கும் எதிராக, எதிரொலி என ஒருவர் தோன்றி, கிறீஸ்துவர்களைப் போலியுயர்ந்த ஜாதியார், போலிதாழ்ந்த ஜாதியார் எனவும், இவர்களை ஜாதிக் கிறீஸ்துவர்கள், இந்திய கிறீஸ்துவர்களென இரு கூறுபடுத்தி இயம்புவது அரவருக்கும் திருப்தியும் சம்மதமுமாயிருக்குமெனத் தாமாய்த் தீர்மானித்துக்கொண்டும் அதை உறுதிப்படுத்திக்கொண்டும், அதன்படியே பெயர் வழங்கி ஒரு கடிதமெழுதியிருக்கின்றார். அக்கடிதத்தில் சென்ற சுமார் 20-வருஷங்களுக்கு முன்னிருந்தே சென்னை, மயிலை, திருச்சி, புதுவை, கோயம்பத்தூர், கும்பகோணம், திருவாங்கூர் முதலிய இடங்களின் மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார், குருக்கள், பெரியவர்கள் யாவருடையவும் ஆலோசனையும் அநுமதியும், அங்கீகாரமும், ஆசரணையும்பெற்று ஆரம்பமாகி நடைபெற்றுவந்ததும், அன்று லாலி ஹாலில் திருச்சி மேற்றிராணியாரும், பல மேற்றிராசனத்தைச்சேர்ந்த அனேக குருக்களும், பெரியவர்களும் சமூகமாயிருக்க, சென்னை அதிமேற்றிராணியாண்டவரின் அக்கிராசனத்தின் கீழ் தனது 22-வது வருஷத்திய பொதுக்கூட்டத்தை நடத்திப் பூர்த்தி செய்ததுமான தெ. இ. க சங்கத்தை இது தென்னிந்திய கத்தோலிக்கரனைவருக்கும் பொதுச் சங்கமும் பிரதிநிதித்துவ சங்கமும் என்பது தவறு என மனத்துணிவோடி மறுத்துக் கூறுவதுமன்றி, இந்திய கிறீஸ்துவர்கள் மை சங்கத்தில் சேருவதாலாகிய பயன்யாதும் தமக்கு விளங்கவில்லையென்று அனுமானித்து வெறுத்தும், யாரோ ஒருவர் திருச்சியில் இனிமேல் எப்பொழுதோ ஏற்படுத்தப்போகிற தனிச் சங்கத்தில் இந்திய கிறீஸ்துவர்களனைவரும் சேருவதால் ஐக்கியத்துக்கு வழிபுண்டாகுமென ஆலோசனைகூறி அதை ஆதரித்து மெழுதியிருக்கின்றார்.

மூந்த மூந்த, இவர் இதில் இந்திய கிறீஸ்துவனென்று தன்னை அழைக்கவிரும்பாத ஒல்லாந்தியாவிற் பிறந்த தமிழ் கிறீஸ்துவனில் இந்தியனல்லாத ஒருவனேனும் முண்டோவென்பதை நிரூபித்துவிட்டன்றே அப்பெயரைத் தாம் விரும்பும் ஒரு சாராருக்கு உரித்தாக்கி, மற்றவரிலிருந்து அதை அகற்றிவிடத் தேடவேண்டும். அல்லாமலும், ஜாதி என்னும் அஞ்ஞான அந்தகாரத்திலிருந்து விலகவேண்டுமென்று தாமே கூறிக்கொண்டு, பெருமாளென்னும் பெயரை மாற்றி பெரிய பெருமாள் என்று பெயர்வைத்துக்கொண்டவன் மேரையாய், இந்திய கிறீஸ்துவர்களென்ற ஒன்றையே இரண்டு வகுப்பாக்கி, வகுப்புக்கோர் பெயரையுந் தந்து, வேற்றுமை வைராக்கியத்தை உணர்த்துகின்றார். என்னே இவருடைய கொள்கை?

இது ஒரு புறமிருக்க, கண்டது விண்டோனென்ற ஒருவர் சென்ற மாத நல்லாயனில் தெ. இ. க. சங்கமானது உயர்ந்தோர் தாழ்ந்தோரென்றில்லாது கத்தோலிக்கு இந்தியர்க்கெல்லாம் பொதுவாயேற்பட்டுள்ள சங்கமெனவும், அதிற் சேர்ந்த அங்கத்தினரெல்லாருக்கும் சகல சுதந்தரங்களும் சமமாயுண்டெனவும், ஒவ்வொருவரும் நேசபாண்மையோடி தாராளமாயதிற் சேர இடமுண்டெனவும் உண்மையை உறுதிப்படுத்தி உரைத்து இருப்பதையும், நான் எனது சிற்றறிவுக்கெட்டியவாறு அன்று மை சங்கப் பொதுக்கூட்டத்தின்போது மை சங்கத் தலைவர் தங்களைத் தீண்டாச் சாதிகளெனக் கூறிவந்தவர்களனைவரையும் சங்கத்தில் மெம்பராகச் சேர்த்துக்கொள்ள ஆக்ஷேபனையில்லையென்று அறுமுறித்ததை ஆதாரமாகக்கொண்டு, கத்தோலிக்கர் தொகையில் நூற்றில் ஐம்பதுக்கு அதிகமானர் என்று சொல்லும் அவர்கள் அதிகமாயதிற் சேர்ந்து வெகு ஜனங்களாய அவர்கள் வேண்டியதைச் சித்திபெறச் செய்யலாமேயென்று உணர்த்தி நல்லாலோசனை தந்ததையும் நமது எதிரொலி நண்பர் வாசித்தறிந்தாரோ? ஆமாயின், இவையெல்லாம் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களைத் தங்களுக்குச் சரியொத்தவர்களாக்கும் கிரிகையென்றுணரா திருப்பதென்ன? கிறீஸ்துவ பிறர்சினேகமும் இரக்கமும் தயாளமுமுள்ள செய்கையிதுவல்லவாமா? "மனத்த கருப்பெனின் நல்ல செயினும் அனைத்தவையும் தீயவேயாகும்" என்ற ஆன்றோர் வாக்கின்படி நமது நண்பர் மனதுக்கு நன்மையெல்லாம் தீமையாகவே தோன்றுகின்றன. வருஷத்துக் கொரு முறை ஆடம்பரமாய்ச் சங்கங் கூடுவதும், சிறந்த உபன்னியாசங்களைச் செய்வதும், கிறீஸ்துவர்களுடைய முன்னேற்ற விஷயமாய்ப் பேசுவதும் தப்பிதமாமா? இன்னமும், இவர் ஜாதிக் கிறீஸ்துவர்களே பெரும்பாலும் மேற்படி சங்கத்தில் சேர்ந்து விசாரணைக் கர்த்தர்களாய் விளங்குகிறார்களென எரிச்சலும் வெறுப்பும் கொள்ளுகிறார். இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் பெருவாரியாய்ச் சேர்ந்து சங்கத்து விசாரணைக் கர்த்தர்கள் ஆவதற்குத் தடை செய்ததார்? கையைப் பிடித்ததார்? கதவடைத்ததார்? கத்தோலிக்கர் எல்லோரும் சாதாரணமாய்ச் சேரலாம். வாருங்கள், வாருங்கள் என்றதானே கூப்பிடுகிறார்கள். சேரத் தடையென்ன? கடையாய் நமது எதிரொலி நண்பர் கூறுவது "முன்னிலும் அதிக கண்டிப்போடும் விளக்கத்தோடும் ஜாதி எற்பாடென்பதை இந்திய கத்தோலிக்கருடைய எண்ணத்திலிருந்து முற்றிலும் அறவே நீக்க முயலவேண்டும்" மென்பதே. இதனால் கிறீஸ்துவர்களாயிருக்கு மிடங்களிலெல்லாம் வெட்டியான், அம்பட்டன், வண்ணனென்னும் வேறுபாடின்றி யாவரும் சமமாயிருக்கவேண்டுமென்பதல்லவோ அவரது கருத்து? அப்படியானால், எல்லாரும் ஒன்றுய்க் கலந்திருக்க ஏற்ற எக வழியும் வகையுமான தென்னிந்திய கத்தோலிக்கு சங்கத்தில் இந்திய கத்தோலிக்கர் சேருவதால் என்ன பயனை இவர் இயம்புவது தவறல்லவா? தண்ணீரிலிறங்காமலே நீர்த்தக் கற்றுக்கொள்வதும், சங்கத்தில் சேராமலே சமத்துவமில்லை பெறுவது மெங்ஙனம்? ஆகவே, இத்தகைய விகற்ப அபிப்பிராயங்களையெல்லாம் இனியேனும் நமது நண்பர் தவிர்த்து, அவரே தமது கடிதத்தில் சென்னை அதிமேற்றிராசனத்துக் "கத்தோலிக்கு வாச்மென்" பத்திரிகை கூறுவதாய் உரைத்ததுபோல, இந்திய கத்தோலிக்கர் யாவரும் ஒற்றுமையுடன் சங்கம் கடத்துவது உசிதமான காரியம் என்னும் உள்ளன்புள்ள உறுதி மொழியைச் சிரமேற்கொண்டி, அவ்வண்ணமே நல்லெண்ண முடையராய் ஒவ்வொருவரும் முன்னர விடாமுயற்சியை மேற்கொள்வதுடன், அபேத உணர்ச்சியை விரதமாகப் பூண்டினிது விளங்கும் நமது தென்னிந்திய கத்தோலிக்கு இந்தியர் சங்கத்திற் சேர்ந்து ஒற்றுமையாயிருந்துயர்குணச் சிறப்படையுமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்,

மணப்பாடு.
15—5—19. } க. அ. சி.

பத்திராதிபர் தறிப்பு:—நிருப நேயர்கள் தங்கள் நிருபங்களை மிக விரிவாய் எழுதிவிடுகிறார்கள். இடம் போதாமையால் அவைகளை ஒருவாறு தறைக்கவும், அல்லது முழுதுமே

விலக்கவும் அவசியம் நேரிடுகிறது. நேயர்கள் இதைக் கவனித்து தங்கள் கடிதங்களைக் கூடியவரையில் சுருக்கி எழுதவேண்டுமெனக் கோருகிறேம். மாண்டலே பூர்வீக தாவிட நேயர் எழுதிய இரண்டு நீண்ட நிருபங்களில் ஒன்று இடக் குறைவைப்பற்றி நிறுத்திக்கொள்ளப்பட்டது.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

மனிதனின் இருதயம் ஆறு அங்குல நீளமும், நாலு அங்குலம் குறுக்களவும் கொண்டதென்றும், அது ஒரு நிமிஷத்திற்கு 70 தரம் துடிக்கிறதென்றும் ஒரு பண்டிதர் கணக்கெடுத்திருக்கிறார்.

ஜேர்மனிப்படையில் உயிர்ச்சேதம்.—ஜெர்மனியின் இராணுவத்தில் நாளது வரையில் நேர்ந்த உயிர்ச்சேதத்தைப் பற்றி ஜெர்மனியரே கணக்கெடுத்திருக்கிறார்கள். அதன்படி 20 லட்சம் பேர்களுக்கு அதிகமாகவே கொல்லப்பட்டுப் போனார்களென்று தெரிகிறது.

பூலோகத்தில் 5,860 பாஷைகள் பேசப்படுகின்றன. இவைகளில் முக்கிய பாஷை 860; கிளைப் பாஷைகள் 5,000. அந்த முக்கிய பாஷைகளில் 89 ஐரோப்பாவிலும், 114 ஆப்ரிக்காவிலும், 123 ஆசியாவிலும், 417 அமெரிக்காவிலும், 117 ஒஷியானியாவிலும் பேசப்படுகின்றனவாம்.

சில மிருகம், பட்சிகளின் வயது.—நாய் 20-வருஷம் ஜீவிக்கிறது. பூனை 16 வரு; முயல் 7வரு; யானை 400வரு; குதிரை 62வரு; கழுதை 104வரு; ஆனால் மனுஷனுடைய வயதோ நாளுக்கு நாள் மட்டுப்பட்டுக்கொண்டேவருகிறது. தற்காலத்து மனுஷருக்கு பெரும்பாலும் 80-க்குமேலில்லை.

மாஜி கைஸர்.—ஐரோப்பிய யுத்தத்திற்கு காரணக்கர்த்தனாகிய மாஜி கைஸர் சக்கரவர்த்தியை நியாயஸ்தலத்துக்கு முன் கொண்டுவந்து விசாரணை செய்ய வேண்டுமென்றும், அவனுடைய பிரத்தியேக சொத்துக்கள்யாவும் பறிமுதல் செய்யப்படவேண்டுமென்றும் சமாதானச் சங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள்.

ரூ 1,25,000 திருட்டு.—பம்பாயில் ஒன்றேகால் லட்சம் ரூபாய் பெறுமான வைரங்கள் முடிந்து வைத்துக்கொண்டு போன நாராயணதாஸ் அசுமல் என்னும் இரத்தின வியாபாரியிடமிருந்து அம்முடிப்பை, முடிச்சு மாறிகள் ஒரு நிமிஷத்தில் அபகரித்துக்கொண்டுபோய்விட்டார்களாம். என்னே கள்வரின் குறிப்பு! என்னே அவ்வியாபாரியின் அஜாக்கிரதை!

கேந்தகச் சுரங்கம்.—வட இந்தியாவில் காலத் என்னுமிடத்தில், கெந்தகச் சுரங்கமொன்று புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதை வெட்டிப் பார்த்த பொழுது, பூர்வ காலத்தில் இந்தியர்கள் அதைக் கையாண்ட சின்னங்கள் அதில் காணப்பட்டனவாம். இதை எவ்வாறு வேலை செய்து விருத்திபண்ணலாம் என்பதைப்பற்றி ஆராய்ச்சிசெய்து அறிவிக்கும்படி, பூகர்ப்ப சாஸ்திர நிபுணராகிய மிஸ்டர் காட்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ரீம்ஸ் நகர தேவாலயம்.—ஐரோப்பிய மகா யுத்தத்தின்போது ஜெர்மனியர் இந்தத் தேவாலயத்திலிருந்து கொள்ளை கொண்டுபோன திருப்பண்டங்கள் அநேகம். அவைகளெல்லாம், கொலோன் அதி மேற்றிராணியாராகிய மிக. வந். ஹார்ட்மென் கார்தினல் ஆண்டவரவர்கள் முயற்சியால் சேகரிக்கப்பட்டு திரும்பவும் மேற்படி தேவாலயத்துக்கு அனுப்பப்பட்டு விட்டனவென்று தெரியவருகிறது. அவைகள் இருபது பெட்டிகளில் அடக்கப்பட்டு அனுப்பப்பட்டனவாம்.

இங்கிலாந்துக்குப் பிரதிநிதிகள்.—இந்தியாவில் இராஜீய விவகாரங்களில் ஏற்பட்டுள்ள பற்பல கட்சியினரின் பிரதிநிதிகள், தங்கள் தங்கள் கட்சிக்கான ஆதாரங்களை பிரிட்டிஷ் பார்லிமெந்து சபையார் முன் விஞ்ஞாபித்துக்கொள்ள இங்கிலாந்துக்குச்சென்றும் சென்றுகொண்டுமிருக்கிறார்கள். ஹோம் ரூல் கட்சி, காங்கிரஸ் கட்சி, முஸ்லிம் லீக் கட்சி, மிதவாதக் கட்சி அமிதவாதக் கட்சி முதலிய கட்சியினரின் பிரதிநிதிகள் போயிருக்கிறார்கள். கத்தோலிக்கரின் சுதந்தரங்களைப்பற்றி விவாதிக்க ஒரு பிரதிநிதியும் போகக்கூடாதாவென "கத்தோலிக் வாச்மென்" பத்திரிகை பிரேரிக்கிறது.

சக்கரவர்த்தியின் நன்கோடை.—மேன்மைதங்கிய ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் பட்டாபிஷேகத்துக்காக இந்தியாவுக்கு வந்தபோது, அவரை வரவேற்க ஏற்படுத்தப்பட்ட கமிட்டியார் வசூலித்த கொகையில் செலவுபோக மீதியாயிருந்த 3,450 ரூபாயை, இங்கிலாந்துக்குப்போன இந்திய மாணவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிவரப் பிரயாணச் செலவில்லாமல் தவிப்பவர்களுக்குக் கடன் கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கும் நிதியில் சேர்த்துவிடும்படி சக்கரவர்த்தியவர்கள் ஆக்யாபித்திருக்கிறார்கள்.

இராஜீய திருத்தங்கள்.—இந்திய காரியதரிசியும், இந்தியா இராஜப் பிரதிநிதியுங் கூடிச்செய்த இந்திய இராஜீய திருத்தப் பிரேரணைகளின்பேரில் இந்திய மாசாணக் கவர்ன்மெண்டுகளின் அபிப்பிராயங்களெல்லாம் இங்கிலாந்திலுள்ள இந்தியா காரியதரிசி ஆபிசுக்குப் போய்விட்டன. இவைகளையெல்லாம் அநுசரித்து முடிவாய் வரையப்பட்ட மசோதா சட்டம், பார்லிமெண்டு மகா சபையின் முன் அடுத்த ஜூன் மாதத்தில் அங்கீகாரத்துக்குக் கொண்டுவரப்படுமென்று தெரியவருகிறது.

அர்ச். சூசையப்பர் வித்தியா சங்கம் காகப்பட்டணம்.—(ஒரு நிருபர் எழுதுகிறார்) சென்ற ஞாயிற்றுக்கிழமை (4-5-19) இச்சங்கத்தின் அரை வருஷத்திய கொண்டாட்டம் வெகு சிறப்புடன் கொண்டாடப்பட்டது. மகா. சங். கொயிலோ சுவாமியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். தமிழில் நடையுடைபாவனை என்பதைப் பற்றியும், இங்கிலீஷில் தமிழ் சுலோகங்களும், "மூத்தோர்சொல்வார்த்தை அமிர்தம்" என்பதைப்பற்றியும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. மிஸ்டர் ஞானப்பிரகாசம் பிள்ளை லேட் கஸ்டம் சூப்பரண்டு அவர்கள் "கத்தோலிக்கரின் ஒற்றுமை" யைப்பற்றித் தமிழிலும், மிஸ்டர். மரியதாஸ் பிள்ளை அவர்கள் B.A., L.T., "உயர்தரக் கல்வியின் அவசிய" த்தைப் பற்றி இங்கிலீஷிலும் உபந்நியாசித்தார்கள். பிறகு அக்கிராசனாதிபதி அவர்கள் சங்கத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் இதற்காக முக்கிய பிரயாசை எடுத்து இச்சங்கத்தை முன்னுக்குக் கொண்டுவரும்படி அநேக புத்திமதிகளைச் சொன்னதின்பின் அரசர் வாழ்த்துப்பாடலோடு கூட்டம் முடிவுபெற்றது. இதற்குச் சுமார் 200 பேர் விஜயம் செய்தார்கள். இதற்குமுன் நங்கையில் இத்தமாதிரி சங்கம் கத்தோலிக்கர்களுக்குள் நடந்ததே இல்லை. இது தழைத்தோங்கக்கடவதாக!

இந்திய கிறீஸ்துவர்களும் சட்ட சபையும்—இந்திய இராஜீய திருத்தங்களைப் பற்றிச் சென்னை கவர்ண்மென்டார் அனுப்பியுள்ள யாதாஸ்தில், இந்திய கிறீஸ்துவர்களுக்கு சட்ட நிரூபண சபையில் மூன்று ஸ்தானங்கள் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்த மூன்று ஸ்தானங்களும், கத்தோலிக்கருக்கும், புரொடெஸ்டாண்டருக்கும் பொதுவானவையாகும். அதாவது, மூவரும் கத்தோலிக்கராயிருந்தாலு மிருக்கலாம், மூவரும் புரொடெஸ்டாண்டராயிருந்தாலு மிருக்கலாம். அல்லது அவர்களில் ஒருவர் இருவர், இவர்களில் ஒருவர் இருவர் சேர்ந்தாகிலு மிருக்கலாம். இவ்விஷயம், மேற்படி ஸ்தானத்துக்கு யோக்கியதையுள்ளவர்களையும் ஓட் கொடுக்கிறவர்களையும் பொருத்ததாகும். ஆதலினால், இந்திய கிறீஸ்துவர்களுக்கென்று தனிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென அவர்கள் கோரிக்கொண்டபடி கிடைக்குமென்று அநேகமாய் எதிர்பார்க்கலாம்.

முக்கொலை.—பர்மாவைச்சேர்ந்த மேய்மியோவிலுள்ள ஜெயில் வார்டர் ஒருவனுடைய பெண்சாதி தன் புருஷனோடு மனஸ்தாபங்கொண்டு தன் தாய்வீடுபோயிருந்தாள். இதைப்பற்றிப் புருஷன் அவ்விடத்துப் பஞ்சாயத்தாருக்கு முறையிட்டுக்கொள்ள, அவர்கள் பெண்சாதியானவள் புருஷனிடம் போய்விடவேண்டுமென்று தீர்மானஞ் செய்தார்கள். பெண்சாதிக்குப் புருஷனிடம்போக ஒருவாறு மனதிருந்தாலும் அவளுடைய தாய் அவளைப் பலவந்தம்பண்ணி தன் வீட்டிலேயே நிறுத்திவைத்திருந்தாள். இதைக்கண்ட புருஷன் மூர்க்கங்கொண்டு ஒரு நாள் இரவு தன் மனைவியிருந்த வீட்டிற்கேகி, அவளையும் அவள் தாயையும் கைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தன்னையும் சுட்டுக்கொண்

டான். அற்பத்துக்கும் ஆகாத ஆங்காரத்தினல் அநியாயமாய் மூன்று உயிர்கள் மாண்டன.

ஸ்திரீகளின் முன்னேற்றம்.— நாகரீகத்தில் விசேஷ விருத்தியடைந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளில், ஸ்திரீகள் நானுவித துறைகளிலும் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். ஸ்திரீகளில், 320 கிரந்த கர்த்தாக்களும், 2,061 விசித்திர வேலை செய்பவர்களும், 75 நியாயவாதிகளும், 165 பிரசங்கிகளும், 13,181 காடகமாடுகிறவர்களும், 2,902 நாவிதர்களும், 2,432 மருத்துவர்களும், 288 பத்திரிகாசிரியர்களும், 3,473 வஸ்திரம் நெய்பவர்களும், 1,54,375 உபாத்தியாயர்களும், 52,098 தையல்வேலை செய்பவர்களும், 3,456 அச்சு வேலை செய்பவர்களும் போக பற்பல வேலை செய்பவர்கள் 52,098 பேரும் இருக்கிறார்களென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதனல், பெண்கல்வி அமெரிக்காவில் எவ்வளவு விருத்தியடைந்திருக்கிறதென்று யூகித்துக்கொள்ளலாம். ஒரு தேசத்தின் முன்னேற்றத்துக்கு பெண்கல்வியே ஆதாரம். ஆகவே இந்திய தேசாபிவிருத்தியை விரும்புகிறவர்கள் முந்த முந்தப் பெண் கல்வியை விருத்திசெய்ய முயலவேண்டும்.

ஆப்கன் யுத்தம்.—ஆப்கானிஸ்தானத்துக்குப் புது அரசனுக வந்த அமீராகிய அமானுல்லா என்பவன் இந்தியாவுடன் யுத்தந் தொடுத்து, கைபர் கணவாயிலுள்ள பாக் என்னும் ஜல ஊற்றுகளையும் வடமேற்கு எல்லைப்புறத்திலுள்ள சில யுத்தோபாயமான ஸ்தானங்களையும் கைப்பற்றிக்கொண்டதன்மேல் நமது சேனைகளும் அவ்விடஞ் சென்று அநேகரைக் கொன்றன. ஆகாய விமானங்களும் எறிகுண்டுகளை யெறிந்து அதிக சேதத்தையுண்டு பண்ணின. நம்முடைய சைன்னியங்கள் முன்னேறி ஆப்கன் எல்லையிலுள்ள டாக்கா என்னுமிடத்தை 6 பிரங்கிகளுடன் பிடித்துக்கொண்டன. சத்துராதிகள் அபஜெயப்பட்டுப் புறங்காட்டி ஓடிவிட்டார்கள். ஆப்கன் தளக்கர்த்தன் சண்டையை நிறுத்திவைக்கும்படி பிரிட்டிஷ் பொலிட்டிக்கல் ஏஜெண்டுக்கு எழுதியிருக்கிறான். பொறுத்துப் பொறுத்து சிறு சண்டைகள் நடந்துகொண்டிருக்கின்றன. நமது பக்கத்தில் சேதம் மிகச் சொற்பம். பழய அமீர் கொல்லப்பட்டது புது அமீருடைய சூழ்ச்சியினல்தான் என்று ஜனங்களுக்குள் சமுசயம் எற்பட்டிருக்கிறது. இது காரணமாக இராணுவச் சேவகர்கள் தன்னை எங்கு கொல்லப்போகிறார்களோவென்று அச்சங்கொண்டவனை புது அமீர், அவர்களுக்கு வேலை கொடுக்க இந்த யுத்தத்தை ஆரம்பித்தான் எனச் சொல்லப்படுகிறது. இது எவ்வளவு தூரம் மெய்யோ அறியோம். இந்த அற்ப காரணத்துக்காக, புலியைப் பூனை எதிர்த்த வாறு, வல்லரசில் வல்லரசாகிய பிரிட்டிஷ் அரசை எதிர்ப்பது எவ்வளவு மதியீனம்!

இரத்த தானம்.—யாதொருவனுக்கு காயம்பட்டு அதிக இரத்தப்போக்குண்டானல், அவனுக்குச் சேதமான இரத்தத்துக்கு பதில் இரத்தம் புறத்தியாருடைய தேகத்திலிருந்து எடுத்து, அதை யவனுடைய தேகத்தில் செலுத்தியவனைக் குணப்படுத்தும். புதிய முறையொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுமாறு, மனுஷர்களிடத்திலிருந்து இரத்தத்தை ஏற்கெனவே எடுத்து, அதை அதற்கேற்ற சீசாக்களில் அடைத்து பனிக்கட்டிக்குள்ளாவது அல்லதுவேறு தக்க வஸ்துக்களிலாவது வைத்துப் பதனம்பண்ணி வைக்கப்படுகிறதாம். அக்கருத்துக்காக பரோபகார்த்தமாய் இரத்த தானஞ் செய்ய ஒப்புக்கொண்டவர்கள் ஏறக்குறைய நூறு பெயர்கள் லண்டன் ஆஸ்பத்திரியில் தங்கள் நாமதேயம், விலாச முதலியவைகளைப் பதிவு செய்திருக்கிறார்களாம். இவ்வாறு பெயர்களைப் பதிவு செய்யுமுன்னே, அவர்கள் யாதோர் வியாதியின்றி நல்லிரத்தமுடையவர்களாயிருக்கிறார்களாவென்று பரிசோதனை செய்யப்பட்டபின்பே பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றனவாம். வேண்டும்போது, பதிவு செய்யப்பட்டவர்களை அழைப்பித்து அவர்கள் தேகத்தில் எந்தப்பாகத்திலாவது குத்தி இரத்தம் எடுத்துக்கொள்வார்கள். இம்முறையினல் விசேஷமாய் யுத்தகளத்தில் அநேக உயிர்கள் காப்பாற்றப்படலாம்.

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 17. ஜூலை 1919. இலக்கம் 7.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

ஞானஸ்நானச் சடங்குகளின்பேரில்

(முன் தொடர்ச்சி.)

குருவானவர் மேற்கூறிய படி ஞானஸ்நான எண்ணெய்யை ஞானஸ்நானம்பெறப்போகிறவன் பேரில்பூசியபிறகு, தாம் அணிந்திருக்கும் ஊதா ஸ்தோலாவைக் கழற்றிவிட்டு, வெள்ளை ஸ்தோலாவை அணிந்துகொள்ளுகிறார். ஏற்கெனவே தெரிவித்திருக்கிறவண்ணம் எப்படி ஊதா ஸ்தோலாவானது ஞானஸ்நானம் பெறப்போகிறவனுடைய பாவ அந்தஸ்தைச் சுட்டிக் காட்டுகின்றதோ, அப்படியே வெள்ளை ஸ்தோலாவானது அவன் சிறிது நேரத்துக்குள்ளாக அடையப்போகிற பரிசுத்த அந்தஸ்தைச் சுட்டிக் காட்டுகின்றதாமே. பிறகு, குருவானவர் அவனை நோக்கி: "பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கிய பக்தியாக விசுவசிக்கிறாயா?" என்று வினவ, அவன் "விசுவசிக்கிறேன்" என்பான். மறுபடியும் குருவானவர்: "அவருடைய ஏக சுதனுகிய நம்முடைய நாதர் சேசுக்கிறீஸ்து நமக்காக இவ்வுலகத்தில் பிறந்தாரென்றும், பாடுபட்டாரென்றும் விசுவசிக்கிறாயா?" என்று கேட்கையில், அவன் "விசுவசிக்கிறேன்" என்றும் "இஸ்பிரீத்துசாந்துவையும், பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்ட சபையையும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமோதீதப் பிரயோசனத்தையும், பாவப் பொறுத்தலையும், மாம்ஸ உத்தானத்தையும், சததமான சீவியத்தையும் விசுவசிக்கிறாயா?" என, அவன் "விசுவசிக்கிறேன்" என்றுஞ் சொல்வான். திருச்சபையானது ஒருவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறதற்குள்ளாக அவனை மும்முறை விசுவாச முயற்சி செய்யச்செய்கின்றதென்று அது ஏற்படுத்தியுள்ள சடங்குகளினல் நமக்குத் தெரியவருகிறதல்லவா? ஆம், குருவானவர் ஞானஸ்நானச்சடங்குகளை முறைவேற்றுகையில் ஆரம்பத்திற்றானே, அவனைப் பார்த்து: "திருச்சபையில் நீ என்ன கேட்கிறாய்?" என்று கேட்க, அவன் "சுவாசம்" என்று சொல்லி முதல் முறையாக விசுவாச

முயற்சி செய்கிறான். இரண்டாம் முறையாக அவன் எப்போது செய்கிறானென்றால், விசுவாச மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு அவன் கோவிலுக்குட் பிரவேசித்து ஞானஸ்நானத் தொட்டியை நோக்கிச் செல்லுகையிலேயாம். மேற்கூறிய மூன்று கேள்விகளையும் குருவானவர் அவனைக் கேட்கும்போது அவன் மும்முறை "விசுவசிக்கிறேன்" என்று சொல்லுவதானது, அவன் மூன்று முறையாக விசுவாச முயற்சி செய்வதாகும். இவ்வாறாக திருச்சபை ஞானஸ்நானம் பெறுகிறவனே மும்முறை விசுவாச முயற்சி செய்ய நியமிக்கையில் அது கொண்டுள்ள நோக்கமும் கருத்தும் யாதெனில், பூர்வத்தில் சில நூற்றாண்டுகளாக ஞானஸ்நானம் பெற்றவர்களெல்லோரும் மும்முறை வெவ்வேறு சமயங்களில் விசுவாச முயற்சியை விசேஷ ஆடம்பரத்துடன் பகிரங்கமாகச் செய்துவந்தார்களென்று நமக்குத் தெரிவிப்பதற்காகவுமன்றி, ஞானஸ்நானம் பெறப்போகிறவன் தனக்கு உண்மையும், பிரமாணிக்கமுமுள்ள பிள்ளையாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறானென்பதை வ்யக்தமாய் அறிந்து கொள்ளும்படிச் செய்வதற்காகவுந்தான். ஆனபடியால், கிறீஸ்துவர்கள் கனமான காரியத்தில் திருச்சபைக்குக் கீழ்ப்படியாத போதும், அது விசுவசித்துப் போதிக்கிற சத்தியங்களை விசுவசியாதபோதும், வேண்டுமென்று விசுவாச சத்தியங்களைக் கற்றுக் கொள்ள அசட்டைசெய்யும்போதும், தங்கள் வேதத்தை மறுதலிக்கும்போதும், எல்லா வேதமும் ஒன்றுதானென்று சொல்லும்போதும், அஞ்ஞானமான காரியங்களை விசுவசித்து, சகுனசாஸ்திர முதலிய வைகளைப் பார்க்கும்போதும் மகா துரோகத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

* * *

ஞானஸ்நானம் பெறுகிறவனைப் பார்த்துக் குருவானவர் கடைசியாகக் கேட்கும் கேள்வியாவது: "உனக்கு ஞானஸ்நானம் பெற மனசுதானா?" என்பதாம். அப்போதவன் "எனக்கு மனசுதான்" என்று பதிலுரைப்பான். இக்கேள்வியானது நமதாண்டவரான சேசுநாதசுவாமி தம்முடைய வரப்பிரசாதத்தை ஒருவருக்கும் வலிய அல்லது கட்டாயப்படுத்திக் கொடுக்காமல், அதை உண்மையான மனதுடன்கேட்கிறவனுக்கேகொடுக்கிறாரென்று தெரியச்செய்கின்றது. மேற்சொன்னபடி ஞானஸ்நானம் பெறுகிறவன் தனக்குள்ள நல்ல மனதை அறிவித்தவுடன் குருவானவர் தண்ணீரை அவன் தலைமேல் வார்க்கும்போது, அவனுக்கு இடப்பட்டிருக்கிற பெயரை உச்சரித்து, "பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே நானுன்னைக் கழுவுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு ஞானஸ்நானங் கொடுக்கிறார். இவ்வாறு ஞானஸ்நானங் கொடுக்கும் சூசனத்திற்றானே, என்ன ஆச்சரியம்! பீரங்கியில் கிட்டிக்கப்பட்டிருக்கிற மருந்துக்கு நெருப்பு வைத்தவுடன் அது எப்படி வெடித்து வெளியாகின்றதோ அப்படியே ஞானஸ்நானம் பெறுகிறவனுடைய ஆத்துமத்தைப் பிடித்திருந்த பாவக்கறை முற்றுமே நீங்க, அது பரிசுத்தமாக்கப்படுகிறது. திரித்துவ ஏக சர்வேசுரன் உடனே அவனை மனக்கனிவோடு பார்த்து, அவனுடைய ஆத்துமத்தைத் தம்முடைய இருப்பிடமாகச்செய்து கொள்ளுகிறார். பரலோகத்திலுள்ள சகல சம்மனசுக்களும் அர்ச்சியசிஷ்டவர்களும் தங்களுக்கோர் சகோதரன் ஜெனமித்திருக்கிறானென்று ஆனந்தங் கொண்டாடி, அவனை வாழ்த்தி அவனுக்குச் சோபனங் கூறுகிறார்கள். அப்படியே பூலோகத்திலும் திருச்சபையானது சர்வேசுரனுக்கும் தனக்கும் ஓர் குமாரன் பிறந்திருக்கிறானென்று அகமகிழ்ந்து அக்களிக்கிறது. ஞானஸ்நானங் கொடுக்க அதிகாரமுள்ளவர்கள் குருக்களேயானாலும், அவஸ்தை சமயத்தில் யாராகிலும் ஞானஸ்நானங் கொடுக்கலாம். அதேனெனில், இரட்சண்ணியமடையவதற்கு ஞானஸ்நானம் இன்றியமையாத தேவத்திரவிய அநுமானமாம். ஆனபடியால், கிறீஸ்துவர்களான ஒவ்வொருவரும் அவஸ்தை சமயத்தில் ஞானஸ்நானங் கொடுக்கும் விதத்தைக் கட்டாயமாய் அறிந்திருக்கவேண்டியது. இப்படி ஞானஸ்நானங் கொடுக்கிறவர்கள் திருச்சபை ஞானஸ்நானங் கொடுக்கிற கருத்தோடு தாங்களும் கொடுக்கிறோமென்று எண்ணிக் கொடுப்பார்களாக.

(இன்னும் வரும்.)

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

II
"பரதீஸ்" எனும் சிங்காரவனம்.

(முன் தொடர்ச்சி.)



2. 'பரதீஸி'ன் மத்தியிலுள்ள சீவிய தரு மனிதாவதாரமெடுத்த கடவுளுக்கு உவமானம். 'பரதீஸ்' மரியாயிக்கு உவமானம். "நித்திய கனியளிக்கும் விருக்ஷக் கொண்டு என்றுஞ் செழித்தோங்கும் நந்தவனம் நீயே" என அர்ச். புரொக்ல்ஸ் மரியாயை அழைக்கிறார். "விலக்கப்பட்ட கனியைத் தின்று மரணத்துக்குள்ளானவர்களுக்குச் சீவியமளிக்கும் கனியீயுந் தருவையுடைய புது நந்தவனம் மரியாயன்றே?" எனப் புலவர் ஒருவர் போற்றுகிறார். கன்னிமரியாயின் திருவயிற்றின் கனி சேசுவே. அவரே சீவியமுஞ் சீவிய ஊற்றுமாம். அவரே தமது வரங்களால் நமதாத்துமங்களைப் போஷிக்கின்றார். திவ்யநன்மை மூலமாய் இச்சீவிய கனி நமதாகின்றது. மனிதன் சீவிய தருவின் கனியைச் சாப்பிட்டுச் சாவுக்குள்ளாகாதிருக்கப் பரதீஸின் மத்தியில் அத்தருவை வைத்தார். ஆனால் மனிதன் பாவத்தால் இவ்வரத்தை யிழந்தான். பரதீஸிலிருந்து வெளியாக்கப்பட்டான். இந்த வரம் நமக் கிப்போதில்லை. ஆயினும் நம்மை நித்திய மரணத்தினின்று காக்கும் உத்தம கனியை நமக்கு நமது இரட்சகர் அளித்துளர். திவ்ய கற்கருணையே நம்மைப் பாவ வியாதியில் விழாதுகாக்கும் மருந்து. திவ்யநன்மை யருந்துவோர் நித்திய சீவியமடைவர் என்பது சேசுநாதர் வசனித்த வாக்குத்தத்தம். "என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானஞ்செய்கிறவனுக்கு நித்திய சீவியமுண்டு. பின்னும் கடைசி நாளிலே நானவனை யுயிர்ப்பிப்பேன்." அரு. 6, 55.

மரியாயாகிய 'பரதீஸி'ல் சீவிய தருவாகிய சேசு விருந்ததால், சேசுவினண்டைபோகவிரும்பின் மரியாயின்மூலமாய்ப் போவது எவ்வளவு மேன்மையுஞ் சகாயமுமானது. "எங்கள் சீவியத்தின்—இரட்சணியத்தின் தாயே! உம்மிடத்தில் தேவ வரங்கள் நிறைந்திருப்பதால் உம்வழியாய் உமது குமாரனிடம்போகத் துணிகிறோம். அவர் உம் வழியாய் எங்களுக்கு வந்ததால் உம்மூலமாய் எங்களை எற்றுக்கொள்வாரென்று, உம்மிடத்தில் நம்பிக்கையாய் வருகிறோம்."

திவ்யபூசை செய்வதற்குமுன் சாதாரணமாய் குருக்கள் மரியாயினுதவியை மன்றாடுகிறார்கள். இது ஓர் சுகிர்த வழக்கமே. விசுவாசிகளுந் தாங்கள் திவ்யகன்மை வாங்குமுன் அதை உத்தமவிதமாய் வாங்க, மரியாயின் உதவியைக்கேட்பதோடு அத்தாயின் புண்ணிய பேறுபலன்களைக் கொண்டு தங்கள் ஆயத்தக் குறைவை நிரப்ப வேண்டுவது உசிதமும், பலனுள்ளதுமான வழக்கமாம்.

3. நந்தவனத்திலோர் நதியோடி நான்கு கிளைகளாகப் பிரிந்து தண்ணீர் பாய்ச்சிவந்தது. "மரியாயாகிய 'பரதீஸி'லும் வரப்பிரசாத நதியோடி நாலு திசையும் பரவி உலகெங்கும் அருள் பொழிந்துவருகின்றது" என ரிச்சர்ட் விக்டரினுஸ் விளம்புகிறார். ஊற்றம் அதினின்று சுரக்கோடும் நதியும் யாரென்றால் சேசுவும் அவரது அருட்பிரசாதமுமாமே. சமாரித்தன் ஸ்திரீயை நோக்கி யவர் கூறுவதைக் கேள் "நீ சர்வேஸ்பரனது வரத்தையும், எனக்குப் பானங் கொடுவென்று உனக்குச் சொல்கிறவனுரென்கிறதையும் அறிந்திருப்பாயானில் ஒரு வேளை நீயே அவனிடங்கேட்டிருப்பாய். அவனுமுனக்கு ஓடுகிற தண்ணீர் கொடுத்திருப்பான்" என்று அவளுக்குத் திருவுளம்பற்றினார். "இத்தண்ணீரைப் பானஞ்செய்கிறவனெவனும் மறுபடியுந் தாகமடையான், நான் கொடுக்குந் தண்ணீரைப் பானஞ்செய்பவன் என்றென்றைக்குந் தாகமடையான்; ஆனால் நானவனுக்குக் கொடுக்குந் தண்ணீர் அவனிடத்தில் நித்திய சீவியமட்டும் பாயும் நீரூற்றாகுமென்று திருவுளம்பற்றினார்." (அர்ச். அரு. 4, 10–14.) மரியாய் தாமே சேசுவெனு மூருணியினின்று நீர் வளம் பெற்றார். அதின்பின் அவள் வழியாய் உலகம் அதை அடைந்தது. மரியாயாகிய புண்ணிய பூந்தோட்டத்தில் அருட்பிரசாத நதியோடி மானிட விருதயங்களை யடைகின்றது.

நமதாதிப் பெற்றோரிருந்த பரதீஸானது, மரியாயிக்கு உவமானமாயினும், அவளைவிட மேன்மையுற்றவளென்பது வெளிப்படை. பூலோகநந்தவனம் இன்பமும்பாக்கியமுமானது. ஆயினும் அங்கிருந்த ஆதி மனிதர்க்கு ஆபத்தில்

ருந்தது. மானிட சத்துரு உள்நுழைந்து தனது மோசக் கருத்துக்களால் அவர்களை மாய வலையில் சிக்கும்படிச் செய்து, பாக்கியமான வந்தஸ்திலிருந்தவர்களது சமாதானத்தைக் கெடுத்து, அவர்களைத் தேவ துரோகிகளாக்கிவிட்டது. ஞான நந்தவனமாகிய மரியாயோ கடவுளால் நன்கு காப்பாற்றப்பட்டவள். நீசச் சர்ப்பம் அங்கு செல்ல வழியில்லை. மரியாயி ஞான பரதீஸ். 'ஏதெனை'விட அதிக பாக்கியம்பெற்றது. நமக்கு அஃதால் மிக்க சகாயமே. ஏனெனில், பரதீஸின் கபாடத்தில் தேவதூதர்களை எரிகிறவாட்களோடு காவல் வைத்தார். ஆதாமின் பிள்ளைகளை யுட்பிரவேசிக்கவிடவில்லை. மரியாயாகிய 'பரதீஸோ' எல்லோருக்காகவு மமைக்கப்பட்டது. எல்லோரு மங்கு பிரவேசிக்கலாம். எல்லோரு மழைக்கப்படுகின்றனர். அத்தாயினிடத்தில் எல்லோருக்கு மிடமுண்டு. பாவிகள்முதலாய் அங்கு செல்லலாம். சீவிய தருவினண்டை—அருட்பிரசாத ஊற்றினண்டை செல்ல, அங்கு வழிகாண்பர் அவர்கள்.

ஒரு நாள் புண்ணிய கன்னிகையாகிய அர்ச். ஜெர்த்துருத்தம்மாள் செபத்தியானத்தி லிருக்கையில், நமதாண்டவரை நோக்கி 'சுவாமீ! நானிந்நேரத்தில் என் செய்வது?" என வினவ "எனது பக்கமிருக்கும் என் மாதாவைக் கனம் பண்ணி அவளைப் போற்றிப் புகழ்வாயாக" என மறுமொழி யீந்தார் அவர். உடனே அக்கன்னிகை தேவதாயை ஸ்துதித்துக் கீதம்பாடி, தன திருதயத்தைத் தானஞ்செய்து, அங்கு சகல புண்ணிய மலர் மலரவேண்டுமெனக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். தேவதாயுந் தமதடியாள் வேண்டுகோட்கிணங்கி, அவள் பக்கம் சாய்ந்து சகல புண்ணிய புஷ்பங்களை அவளிருதயத்தில் விகசிக்கச்செய்தாள். நாமும் அத்தாயின் உதவியைத் தேடி சகாயம் பெறுவோமாக.

III

நோவேயின் பேழை.

"நோவேயும் அவனுடன் பேழையிலிருந்தவர்களும்மாத்திரமே தப்பிப் பிழைத்தார்கள்." (ஆதி. 7, 23.)

மானிடவர்க்கத்தினர் பூமியின்கண் பெருகப்பெருக அவர்கள் மத்தியில் தீச்செயல்களும் அதிகரித்துவந்தன. ஜனங்களிடந் துர்க்குணம் எம்மட்டும் பெருகினதென்றால், புண்ணிய வாடைமுதலாய்க் கிடையாதுபோயிற்று. ஆகவே, மனிதருடைய துஷ்ட குணம் மிஞ்சினதையும், அவர்களது இருதய சிந்தனை எக்காலமுந் தீமையின்மேற் சார்புள்ளதாயிருப்பதையுங் கண்டு, கடவுள் இவ்வுலகில் மனிதனை யுண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். தாம் சிருஷ்டித்த மனுக்குலத்தைப் பூமியின்முகத்தே யழித்துப்போடவும், மனிதன்முதல் மிருகங்களீறாக, ஊர்வனமுதல் ஆகாயப்பட்சிகளீறாக எல்லாவற்றையும் நாசம்பண்ணிவிடவுஞ் சித்தங்கொண்டார். ஆயினும் பூமியிலுள்ள அக்காலத்திய பிரஜைகளினிடையில் ஓர் புண்ணிய சீலன் உதித்து நின்றனன். அவன்தான் நோவே. அவன் ஆண்டவர் சந்நிதானத்தில் அருளடைந்தவனானான். மானிட சந்ததியை மீட்க அவனையே தெரிந்து கொண்டனர் கடவுள். தமது திருவுளத்தை யவனுக்குத் தெரிவித்தார்.

கடவுளாக்ஞாபனைக் கிணங்கி நோவே மரங்களால் ஓர் பேழையை யுண்டுபண்ணி அதில் ஓர் சன்னலுங் கதவு மமைத்துவைத்தான். கடவுள் சொற்படித் தானுந் தனது மனைவியும், தம புத்திரர்களும் அவர்கள் மனைவிமார்களும் அப்பேழையினுட் பிரவேசித்தார்கள். அங்கு உயிருள்ள பிராணிகளில் ஆணும் பெண்ணுமாகச் ஜாதி யொன்றுக்கு ஒவ்வொரு ஜோடும், ஜாதி ஜாதியான பறவைகளிலும், ஜாதி ஜாதியான சதுர்பாதமுள்ள மிருகங்களிலும், பூமியில் ஊருகின்ற ஜாதி ஜாதியான பிராணிகளிலும் இனமொன்றிற்கு ஒவ்வொரு ஜோடுஞ் சேர்க்கப்பட்டன. எல்லாமிப்படி முடிந்தாயினபின், பெரும் பாதாளத்தின் ஊற்றுக்கண்கள் அனைத்து முடைபட்டன. தேவ கோபாக்கினியால் ஜலப்பிரளயம் உண்டாகி தண்ணீர் பெருக்கெடுத்துப் பேழையைப் பூமியினின்று கிளம்பச்செய்தன. பூமியின்மேலுள்ள எல்லாவற்றையும் மூடிக்கொண்டது ஜலம். வெள்ளம் பூமியின்மீது மிஞ்சியதிகரித்ததால் வானத்துக்கெல்லாங் கீழ்ப்பட்டிருந்த அதி உயரமான மலைகள்யாவுமே மூடப்பட்டன. இப்பெரிய பர்வதங்களுக்குமேலேயே ஜலம் உயர்ந்து நின்றது. பூமியின்மீதுள்ள பட்சி பறவைகள், ஊருவன நடப்பனவாகிய மிருகஜெந்துக்கள் அழியலாயின. எல்லா மனிதர்களுமே அழிந்துபோனார்கள். பொதுவிலே பூமியிற சஞ்சரித்த சீவ சுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின. சீவஜெந்துக்கள் அனைத்தையு மழித்துவிட்டார் ஆண்டவர். அவைகளெல்லாம் பூமியின்கண் அற்றுப்போயின. அப்போது பேழைமட்டும் அழியாது மிதந்து நின்றது. நோவேயும் அவனுடன் பேழையிலிருந்தவர்களும்மாத்திரமே தப்பிப் பிழைத்தார்கள்.

1. மனிதனின் துஷ்டத்தனத்தினிமித்தம் உண்டான ஜலப்பிரளயமானது, மானிட சந்ததி மூழ்கிக்கிடந்த பாவப் பிரவாகத்திற்கொப்பாமே. ஆதாம் பாவங் கட்டிக்கொண்டதுமுதல் உலகம் முடியும்பரியந்தம் உதிக்கும் மனிதன் ஒவ்வொருவனும் தாவீது இராசாவோடு "நானோவென்றால் அக்கிரமத்தில் சன்மித்தேன். என் தாயார் பாவத்தில் என்னைக் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீ. 50, 6.) எனச் சந்தேகமறச் சொல்லவேண்டும். ஆயினும் இப்பெரும் பாவப் பிரவாகத்தில் மாசுபடாது நிற்கின்றார் ஒருவர். பொதுச் சலப்பிரளயத்தில் மூழ்கிப் போகாது தப்பித்து நிற்கின்றது ஓர் பேழை. இது கன்னிமரியே! ஆண்டவரடைக்கலமடைந்த பேழை இதுவே. தமது திருக்குமாரனாகிய சேசுவின் புண்ணிய சம்பாவனைப்பெருக்கால் அவள் ஒருவளே மாசில்லாதுற்பவித்தாள். "சமுத்திரங்களுக்குமேலே அவளுக்கு அஸ்திவாரமிட்டு, நதிகளுக்குமேலே அவளை ஸ்தாபித்திருக்கிறார் கடவுள். அவள் கர்த்தரிடத்தில் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சண்ணிய தேவனிடத்தில் இரக்கத்தையும் பெற்றிருக்கின்றனள். அதிகாலையில் தேவன் அவளுக்குச் சகாயம்பண்ணினார். தமது பேழையை—தமது வாசஸ்தலத்தை அர்ச்சித்தார் மாகா உன்னதமானவர்." (சங்கீ. 45.)

2. நோவேயின் பேழை கடவுளின் கற்பனைக் கிணங்க, அவர் கொடுத்த அளவு பரிமாணங்களோடு செய்யப்பட்டது. தேவ சுதனின் பேழையாகிய மரியாயை உண்டுபண்ணக் கடவுள் சித்தங்கொண்டதுமன்றித் தாமே அவ்வேலையைச் செய்துமுடித்தார். பரிசுத்த கன்னிகையே, கடவுள் படைத்த பொருட்களில் திவ்யமும் உத்தமமுமானது; அவர் கையால் அமைக்கப்பெற்ற அற்புதமு மலங்காரமுமான வேலை அது.

3. பேழையின் மேற்றட்டில் ஒரு சன்னலும், ஒரு பாகத்தில் ஒரு கதவுமிருந்தன. மற்ற பாகங்கள் எல்லாம் உள்ளும் புறமுமாகக் கிசில் பூசி அடைக்கப்பட்டிருந்தன. நோவே, தானுந் தன்னுடனிருக்கவேண்டியவர்களு முட்பிரவேசித்தவுடன், கதவைச் சாத்திக்கொண்டார். அவ்வாறே மரியாயின் மாசற்ற திருவிருதயம் உலக ஆசாபாச வாஞ்சை வஸ்துக்கள் உட்பிரவேசியாது அடைபட்டிருந்தது. கடவுளும் பரலோக காரியங்களும்மட்டுமே செல்லத் திறந்திருந்தது. தேவ சுதனைக் கருப்பந்தரித்துங் கன்னிமைகெடாது விளங்கினாள் மரியாயி. கடவுள் ஒருவரே உட்பிரவேசித்துக் கன்னிமைக் கதவை சாத்திக்கொண்டார்.

4. முதற் பேழையில் நோவேயிருந்தார். அவர் மனுக்குலத்தின் இரண்டா மாதித் தகப்பனும் இரட்சகருமாயினர். இரண்டாவது பேழையிலிருந்தவர் நோவேயல்ல. நோவேயைவிட மேலானவர்மட்டுமன்று, நோவேயைப் படைத்தவரும் மனுக்குலத்தின் மெய்யான பிதாவும் இரட்சகருமாயிருந்தார். அவர்தான் சேசுபெருமான். மனிதன் உலகிற் சீவிக்க உயிரும், அழியா வாத்துமாவுக்கருளும் சீவியமு மளிப்பவர் அவரே! தமது திரு உதிரத்தால் நம்மை மீட்டிரட்சித்து நித்திய சீவியமும் பெற்றருளினவருமவரே!

5. பேழைக்கு வெளியேயிருந்தவர்கள் இரட்சிக்கப்படவில்லை. அவ்வண்ணமே கடவுள் ஸ்தாபித்த திருச்சபையெனும் பேழைக்குப் புறம்பேயிருக்கிறவர்களுக்கு மிரட்சண்ணியங் கிடையாதாமே. இது வேதபாரகர்களின் கொள்கை. திருச்சபையைப்பற்றிச் சொன்னது ஒருவாறு மரியாயிக்கும் பொருந்தும். ஏனெனில் மரியாய் இரட்சண்ணிய பேழை. நோவேயின் பேழையிலிருந்தவர் தப்பினதுபோல், மரியாயின் ஊழியரும், மக்களும் அவலமாய் மரிப்பதில்லையாம். வேதபாரகாகளும் மரியாயின் பக்தர்களும் அங்ஙன மபிப்பிராயப்படுகிறார்கள். நோவேயின் பேழையால் பிழைத்தவர் எண்மர். மரியாயின் மூலமாய் நித்திய சீவியமடைந்தவர் எண்ணிறந்தவர். மரியாயினுதவியால் அமைதியடைந்தவர் அநந்தம்பேர். மரியாயின்மீது அன்பும் பக்தியும் வைத்தோர் அல்லல் பல அடுத்து வந்தபோதும் அமைதியடைந்தது நிச்சயம். ஏனெனில், பரிசுத்த கன்னிகை அவர்களுக்குத் தேவ வருள்பெற் றீந்து அவர்களைத் தற்காத்து கடைசிவரையில் நல்வழி நடத்தி நித்திய கரை சேர்த்திருக்கின்றனள்; இதற்கு முத்திபெற்ற முக்தர்களே சான்று.

6. நோவேயின் பேழைதனிலிருந்தோர் மனிதர்மட்டுமன்று, மிருகஜெந்துக்களு மங்கிருந்தன. அவைகளுந் தப்பிப் பிழைத்தன. மிருகங்களுக்குச் சமானம் பாவிகள். சரீர வாஞ்சையையே நாடி, ஆசாபாசத்தைப் போஷிக்கத்

தேடி பாவவழியில் ஓடித் திரிகின்றனர் பாவிகள் அஃதால் நித்திய சம்பாவனையை மறக்க நேரிடுகின்றது. சீர்கெட்டழிந்து ஆத்துமத்தை யிழக்காதிருக்க விரும்பின் அவர்கள் இரட்சண்ணிய பேழையாகிய மரியாயை அடையவேண்டும். பாவச் சேற்றில் வீழ்ந்த படும்பாவியாயினும் மரியாயினண்டை போகப் பின்வாங்கலாகாது. ஏனெனில், நோவேயின் பேழையில் அசுசியான மிருகங்களு மிருந்தனவன்றே? மரியாயி இரக்கத்தின் தாய். பாவிகளுக் கடைக்கலம். அண்டினோர்க் காதரவு. ஆகையால் ஒருவரையும் புறக்கணித்துத் தள்ளமாட்டாள்.

நோவேயின் பேழை ஜலப்பிரளயம் வற்றிப் போன்பின் அராராத் மலைகள்மீது தங்கினதென வேதாகமஞ் சொல்லுகிறது. அராராத் மலைகளுக்குச் சமீபத்தில் கட்டப்பட்ட குன்றுகளெனப் பெயர். இக்குன்றுகளின் பக்கத்தே ஆசீர்வதிக்கப்பட்ட பேழையிருந்தது. மனிதனின் பாவத்தால் உலகஞ் சபிக்கப்பட்டது. பாவியானவன் கடவுளின் கோபத்தையுஞ் சாபத்தையும் மேற்கொண்டான். பாவியானவன் சபிக்கப்பட்ட குன்றுகள் போல் கடவுள் முன்னிருக்கின்றனன். அப்பாவிகள் மத்தியில் ஆசீர்வதிக்கப்பட்ட பேழையாகிய மரியாயி நிற்கின்றனள். அவர்களுக்கு இரட்சண்யப் பேழையாய் நின்று அடைக்கலமும் ஆதரவுமளிக்கின்றனள் மரியாயி.

நோவேயின் பேழையை மரியாய்க் குவமானமாய் எடுத்துக் காட்டுகையில் அர்ச். பெர்நார்து பின்வருமாறு விளம்புகிறார்: "சிருஷ்டிகட்குள் சிரேஷ்டமானவளும், தேவ வருட் பேழையுமாகிய மரியாயிக்கு நோவேயின் பேழை யுவமானம். ஏனெனில், நோவேயின் பேழையிலிருந்தவர்கள் ஜலப்பிரளயத்தினின்று தப்பித்தக்கொண்டதுபோல், மரியாயினிட மடைக்கலம் புகுந்தோர் பாவப் பிரளயத்தினின்று தப்பித்துக்கொள்வர். மரப் பேழையானது நோவேயாலுண்டாக்கப்பட்டது. நோவேயென்றால் அமைதியெனப் பொருள்படும். ஞானப் பேழையாகிய மரியாயி, தேவ சுதனாலேயே யமைக்கப்பட்டது. அவரே சமாதானமும் அமைதியுமாம். பேழையால் உயிர் தப்பினோர் எட்டுப் பேரே. மரியாயின்வழியாய் எல்லோரும் நித்திய சீவியமடையலாம். பேழையை உண்பெண்ணை 100-வருஷங்கள் சென்றன. நூறு எனும் எண் 'சம்பூரணம்' எனும் பொருள்கொள்ளும். மரியாயினிடம் சகல புண்ணியங்களுஞ் சம்பூரணமாயிருந்தன. பேழையானது ஜலப்பிரளயத்தினின்று காப்பாற்றப்பட்டது. மரியாய் பாவ அலைகளினின்று முற்றுமே காப்பாற்றப்பட்டாள்."

(இன்னும் வரும்.)

M. S. M.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2.—அதிகாரம்; வசனம்—25–28.

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—25. "அப்பொழுது, இதோ எருசலேமில் சிமையோன் என்னும் பேருள்ள ஓர் மனிதன் இருந்தார். அந்த மனிதன் நீதிமானுமாய், பயபக்தியுடையவருமாய், இஸ்ராயேலின் தேற்றரவுக்கு எதிர்பார்த்திருக்கிறவருமாய் இருந்தார். இஸ்பிரீத்துசாந்துவானவரும் அவரிடத்தில் இருந்தார்.

26-ம் வசனம்.—அன்றியும், தாம் ஆண்டவருடைய கிறீஸ்துவைக் காண்பதற்குமுன்னே சாவைக் காண்பதில்லை யென்று அவர் இஸ்பிரீத்துசாந்துவின் வாக்குப் பெற்றிருந்தார்.

27-ம் வசனம்.—அப்படியிருக்க, அவர் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவலால் தேவாலயத்துக்கு வந்தார். குழந்தையாகிய சேசுநாதருக்காக வேத முறைமைப்படிச்செய்வதற்கு அவருடைய பிதா மாதா அவரை உள்ளே கொண்டுவரும்போது,

28-ம் வசனம்.—அவர் தம்முடைய கரங்களில் அதை ஏந்திக்கொண்டு சர்வேசுரனைத் தோத்திரித்து வசனித்ததாவது."

சிமையோனைச் சுவிசேஷ வாக்கியம் நீதிமானென்றும், தேவ பயபக்தியுடையவரென்றும், மெஸ்வியாவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவரென்றும், இஸ்பிரீத்துசாந்துவால் நடத்தப்பட்டவரென்றும், அருமையாய்ப் புகழ்ந்து வாழ்த்துகின்றது.

வேத வாக்கியத்தில் (Justus) 'நீதிமான்' என்றால் புண்ணியவாளர், அர்ச்சியசிஷ்டவர் என்றர்த்தமாகும்.

Timoratus—'தேவ பயபக்தி நிறைந்தவர்' என்பதை தேவ ஊழியத்துக்கு அடுத்த சட்டதிட்டங்களையும், சடங்கு சாங்கியங்களையும் அத்தியந்த ஆசை அச்ச ஆசாரத்துடன் நிறைவேற்றிவந்தவர் என்றும் பொருள்படுத்தலாம். இஸ்ராயேலின் தேற்றரவு என்பது மெஸ்வியாவைக் குறிப்பிடுகின்றது. மெஸ்வியாஸ் என்பவரை இஸ்ராயேல் ஜனங்களின் மெய்யான ஆறுதல் என்று தீர்க்கதரிசிகள் கூறியிருக்கிறார்கள். (இசையாஸ் 61-ம் அதிகாரம் 2-ம் வசனம்.) இந்த மெஸ்வியாவைத்தான் சிமையோன் அளவற்ற ஆசை அவாவுடன் எதிர்நோக்கிக்கொண்டிருந்தார். இதுதான் இவருடைய ஏக கவலையும், சிந்தனையும், நோக்கமும் அபேக்ஷையுமாயிருந்தது. மெஸ்வியாவின் பேரில் அவர் வைத்த இந்த அதிசயத்துக்குரிய பக்திதான் அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்துக்குக் காரணமாயிருந்தது. இஸ்பிரீத்துசாந்து அவரிடம் பிரியமாய் வாசஞ்செய்தார். மெஸ்வியாவாகிய தேவ சுதனை தமது சரீரக் கண்களால் காணுந்தனையும் மரணத்தைத் தான் காண்பதில்லையென்று இஸ்பிரீத்துசாந்துவினால் வாக்குப் பெற்றிருந்தார். மெஸ்வியாவின் மெய்யான சுபாவம், அலுவல் இவைகளைப்பற்றிய விபரங்களை இஸ்பிரீத்துசாந்து அவருக்கு அறிவித்திருந்தார்.

திருக்குடும்பம் தேவாலயத்துக்கு வந்த அதே வேளையில், அவரும் அங்கு சென்றதானது இஸ்பிரீத்துசாந்துவின் ஏவலால்தான். இஸ்பிரீத்துசாந்துவானவர் இவ்வளவு அந்நியோன்னியமாய் அவரிடம் வாசஞ்செய்து அவரை நடத்திவந்தானது, அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தின் மகத்துவ பெருமையை வெளிப்படுத்துகின்றது.

சிமையோன் தேவாலயத்துக்கு வந்தபோது, அங்கு கூடியிருந்த மற்ற ஸ்திரீகளுக்குள்ளே கன்னிமாதாவையுங், அவளுடைய திவ்ய பாலனையுங் கண்டு, இவர்தான் உலக இரட்சகர் என்று கண்டுபிடித்து, தமது கரங்களில் அவரை வாங்கிக் கட்டியணைத்து ஆனந்த மகிழ்ச்சியாயழுது, ஒரு புது சங்கீதத்தைப் பாடி சர்வேசுரனைஸ்துதித்தார். சிமையோன் தமது கண்களால் கிறீஸ்துநாதரைக் காணும்படியாக வாக்குப் பெற்றிருந்தார். ஆனால் அவரைக் கண்ணாரக்கண்டு மகிழுமாத்திரமல்ல, அவரைத் தொடவும், தம் கரங்களில் ஏந்தி அவரை அரவணைத்து மகிழும்படியான பாக்கியமும் அவருக்குக் கிடைத்தது. அவருடைய பாக்கியமே பாக்கியம். அவருடைய ஆனந்த பூரிப்பைக் கணித்துச் சொல்ல யார் தரம்? அவர் இனி இப்பூலோகத்தில் ஆசிக்கக்கூடியது ஒன்றுமில்லை. மரணத்தையே மெத்த அவாவுடன் எதிர்நோக்கினர்.

சிமையோன் திவ்ய பாலனை தமது கரங்களில் ஏந்திக்கொண்டு அவருடைய மார்பை தமது மார்போடும், அவருடைய கண்களை தமது கண்களோடும் சேர்த்தணைத்துச் சுகித்தனுபவித்த பாக்கியம் அவருக்கு மோட்சம்போலிருந்தது.

சாகப்போகிற இவ்வியோதிகருடைய கண்கள் தேவ பாலனுடைய கண்களைத் தரிசிக்கின்றன. அப்படி தரிசித்தபோது, ஒரு அதிசயமான காட்சி காண்பவர் போல் தோன்றுகிறார். இக்காட்சியில் அவருக்கு மெஸ்வியாவின் சீவியமெல்லாம் ஆதியோடந்தமாய் வெளிப்படுகின்றது. இவருடைய அலுவலும் உழைப்பும், துக்கமும் துயரமும், ஆறுதலும், சந்தோஷமும், பாடும், மரணமும் சிமையோனுடைய கண்முன் ஓர் சித்திரம்போல் துலங்கிப் பிரகாசிக்கின்றன. கொஞ்சத்துக்குள் அவிந்துபோகும் ஒரு சுடர்போல் அவருடைய சீவியம் முடிந்துபோகும் தருணத்தில், உலகத்தின் வெளிச்சமாகிய நீதி சூரியனைத் தமது கரங்களில் ஏந்தி உற்று நோக்கப் பாத்திரமாகிறார். தமது திருத்தாப்பிய காலத்தின் பலவீன மிகுதியால் நடுக்கமுற்ற அவருடைய கரங்கள் சர்வ வல்லபரின் பலத்தைத் தூக்கித் தாங்குகின்றன! பூலோக சீவியத்தின் துன்பதுரிதங்களாலும் தமது ஜனத்தின் பாவங்களின் காட்சியாலும் கலைத்துச் சலிப்படைந்த சிமையோன் நித்திய இளமையையும், என்றும் அழிவற்ற அழகு சௌந்தரியத்தையும் கொண்ட தேவ பாலனைத் தொடுகிறார்.

தொட்டவர் தாமும் ஒரு பாலனைப்போல் புது உயிரும் இளமையும் உற்சாகமும் பெற்றவர்போல் அக்களித்து தேவாமிர்தம் பொழியும் சங்கீதத்தைப் பாடுகிறார்.

அன்னப்பட்சியானது சாகிறதற்கு முன் அற்புதமான இன்னிசையுடன் பாடுமாம். சிமையோனும் தாம் மரிப்பதற்கு முன் தேவ மதுரம் நிறைந்த அழகிய சங்கீதத்தைப் பாடி ஆனந்தப் பரவசமாகிறார்.

சிமையோன் தமது விருத்தாப்பிய தசையின் பலவீனத்தால் அல்ல, தமது கோரிக்கைகள் யாவும் அற்புதமாய் நிறைவேறினதைக்கண்டு அளவற்ற சந்தோஷத்தின் மிகுதியால் உயிர்விடுகிறார்.

(தொடரும்)

S. M.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

4-ம் அதிகாரம்.

அதுஸ்தீனுடைய துர் ஆசாபாசங்களினால் நேர்ந்த தீமைகள்—மோனிக்கம்மாள் தன் மகனுடைய ஆத்தும அபாயகரத்தை அறிந்து எச்சரிக்கைகொள்கிறாள்—எவ்வளவுக்கு அதுஸ்தீன் தன்னுடைய துர் நடத்தையினால் தன் தாயாருடைய நேசத்தைவிட்டுப் பிரிந்துபோகிறானே, அவ்வளவுக்கு அவளுடைய பத்தா அவளை அதிகமாய் நேசித்துவருகிறார்—இது அர்ச். மோனிக்கம்மாளுக்கு ஆறுதலுண்டாகும்படி கடவுள் செய்த தயவு—பத்ரீஸியூஸ் நல்ல மரணமடைகிறார்.

(இ. அ. 370—372.)

(முன் தொடர்ச்சி.)

ரோமர்கள் அத்தியந்த பிரகியாதி யடைந்து மேலான நாகரீகத்தோடு வாழ்ந்துவரும் காலத்தில், கார்த்தேஜ் நகரம் திரும்பப்புதிதாய்க் கட்டப்பட்ட தாகையாலும், அதிலிருந்த ஜனங்கள் திரண்ட தனவந்தர்களாய்ப் பெரு வாழ்வு வாழ்ந்துவந்த படியாலும், அது உரோமை ராஜாங்கத்தில் அதிகச் சிறப்புள்ள பட்டணமாய்த் துலங்கிவந்தது. சிறப்பு பெருமையில், அது அந்தியோக்கியா புரிக்காவது அலெக்சாந்திரியா பட்டணத்திற்காவது கீழ்ப்பட்டதல்ல. இவ்விரண்டு புராதன பட்டணங்களுக்குப்பிறகு அது கட்டப்பட்ட தாகையால், அதைப் பார்க்கும்போதே ஒரு புதிய நகரம் என்றும் யாரும் சொல்லும்படியானதாயிருந்தது. இதனால் சில பூர்வ வங்கி வாதிபதிகளுக்கு அப்பட்டணத்தின்மேல் அத்தனை பிரியமிருந்ததில்லை. ஆனால் சாமான்ய ஜனங்களுக்கும், புதிதாய் முன்னுக்குவந்த திரவியவான்களுக்கும் இப்பட்டணமென்றால் பிரம்மானந்தம். இதில் அப்போதுதான் அகுஸ்துஸ் ராயனால் புதியதாய்க் கட்டப்பட்ட தூறை முகம் கண்டோர் கண்களைக் கவர்ந்தது. மேலும் ஒரே கோரய் நெடுந்தூரம் வரைக்கும் அமைத்திருக்கும் தெருக்களின் அழகையும், தேசச் சிறப்பை முன்னிட்டு இடைக்கிடை கட்டப்பட்டிருந்த ஜல ஸ்தம்பங்கள், காலையிலிருந்து மாலை வரைக்கும் தம்மருகிலிருக்கும் புஷ்பச்செடிகள் மேல் இயந்திர சக்தியால் புஷ்களமாய் ஜலத்தை வாரியடிக்கும் வனப்பலங்காரத்தையும், என்னென்று சொல்வது! இதுவுமன்றி, ஏராளமான ஜனம் நிறைந்த அங்காகரில் சூரியன் உதிக்கும்போது எங்கும் தேஜோமயமாய்த் துலங்கும். அச்சூரியன் தனது செங்கதிர்கிரணங்களை நாற்றிசையிலும வீசும்போது, சகல ஜீவ கோடிகளும் ஆனந்தத்தால் பூரிக்கும். அப்பட்டணத்து இராஜபாட்டை யொன்றுக்குச் சொர்க்க வீதியென்ற பெயர். எனெனில், அத்தெருவின் இருபுறமும் அஞ்ஞானக் கோவில்கள் அணிவகுத்திருக்கும். இன்னொரு தெருவுக்குச் சவுக்கார் வீதியென்ற பெயர். அத்தெருவிலிருந்த கட்டிடங்களியாவும் உயர்ந்த சலவைக் கற்களால் கட்டப்பட்டு தங்கப்பட்டிகளால் சித்திரிக்கப்பட்டிருந்தபடியால், ஒருவன் முதன் முதல் அத்தெருவைப் பார்க்கும்போது, இது குபேரசம்பத்துள்ளவர்கள் வசிக்கும் தெருவாக்கும் என்று எண்ணுவான். இன்னம் முன்னுக்குப் போனால் ஆடகம், வெளிச்சிறை, சாதரூபம், சரம் பூத்தம் என்கிற கால் வகை உயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட ஆபரணக்களும், முத்து, கோமேதகம், நீலம், புஷ்பராகம், மாகதம், வைடூரியம் முதலிய உயர்ந்த கவரத்தினக் கற்களும் விற்கும் சாலைகள் இருக்கும். வெவ்வேறு விதமான பழ

வகைகள், கோதுமை, ஆமாடமுதலியன விற்கு மிடங்களையும், பற்பலவித பரிவர்த்தன மாளிகைகளையும் அங்கு காணலாகும். ஒரே வார்த்தையில் சொல்லப்புகின் ஒரு பெரிய குபேர வர்த்தக பட்டணத்திற்கு அவசியமான சகலவித வர்த்தக சாலைகளையும் பண்ட பதார்த்தங்களையும் அங்கு ஏராளமாய்க் காணக்கூடும். இதைப் பார்த்தால் ஒரு நரம் அழிந்துபோனதென்ற சொல்லப்பட்ட கார்த்தேஜ் என்னும் புராதன நகரம் திரும்ப உயிர்த்துவந்ததுபோலத் தோன்றும்.

ஆனால் இப்படி வர்த்தக வாணிபம் கடந்து வந்து, சர்வ ஜனங்களுக்கும் இன்ப நுகர்ச்சிக்கு உறைவிடமாயிருந்த இந்நகரில், கல்வி சாஸ்திரப் பயிற்சிக்காகக் கல்லூரிகளும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இங்குலத்தின் பாஷையானது, மேற்கு தேசங்களில் கற்பித்துக்கொடுப்பதற்கேற்க, அணுவளவும் பேதமின்றி கற்பிக்கப்பட்டுவந்தது. ஆதலால் அந்தியோக்கியாபுரியாரும் விசேஷமாய் அலெக்சாந்திரியா பட்டணத்தாரும் கிரேக்கரின் கல்வி சாஸ்திரப் பயிற்சியை எப்படி நாடிவந்தனரோ, அப்படியே இந்நாட்டாரும் உரோமர்களுடைய கல்விப் பயிற்சியையும் மனச் சார்பையும் நாடிவந்தனர்.

அங்கு கீர்த்திவாய்ந்த பல பள்ளிக்கூடங்கள் இருந்தன. பள்ளிக்கூடங்களுக்கு எதிரில் நிலக்கதவு வைக்காமல் நீளமான வெண் திரைச் சீலைகளைத் தொங்கவிடுவது வழக்கமாகையால், ஒரு கட்டிடத்தைப் பார்த்தவுடன் அது வித்தியாசாலை என்று தெரியவரும். அவைகளில் இலக்கணமும் வாய்ச்சாலக சாஸ்திரமும் தத்துவ சாஸ்திரமும் கற்பிக்கப்பட்டுவந்தன. ஆப்பிரிக்கா தேசத்து வாலிபர்களும் கல்வி கற்க இங்கேயே வருவார்கள். இவர்கள் புத்திசாலிகளென்றால். ஆனால் பெருந்தன்மையற்றவர்கள். தூர்த்தத்தனமுள்ளவர்கள். அவ்வளவு ஸ்திர புத்தியுள்ளவரல்லர். அதலால் அவர்களைப்பற்றி ஒரு நம்பிக்கையும் கொள்ளக்கூடாமலில்லை. "ஒதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந்தானடங்கா பேதையிற் பேதையாரில்" என்பதற் கிணங்க, அம்மாணாக்கர்கள் இன்றைக்கு வித்தியாதிபரை மெச்சிப் புகழ்வார்கள். நாளைக்கு அவர் கொஞ்சம் கோபக்காட்டினால், அல்லது அதட்டிப்பேசினால், உடனே பள்ளி வகுப்பிலேயே பிரமாதமான கலகம் செய்து, கையில் கண்ட எதையும் சுக்கல் சுக்கலாய் உடைத்துப்போடுவார்கள். இப்படிப்பட்ட அக்கிரம கலகத்திற்குக் காரணமாயிருந்து கச்சைகட்டி முன்னின்றவர்கள் எவ்விதக் கட்டுக்கும் அடங்காத சண்டாளர்கள். ஆனால் அவர்கள் பார்வைக்கென்னமோ ஒரு தோஷமுமறியாத கனவான்களைப்போல் தோன்றுவார்கள். இவர்களுக்குக் கலகப்பிரியர் என்ற பெயர். அப்பெயரைச்சொல்லிக் கூப்பிட்டால், அவர்களுக்கு அத்தனை மனத்திருப்தியுண்டாகும்!

கார்த்தேஜ் நகரில் இவ்விதக் கல்விப் பயிற்சியுடன் சித்திரப் பயிற்சியுமிருந்தது. அதன் நாடகச்சாலைகளில், கிரேக்கு உரோமையின் சிறந்த சாஸ்திரவித்தன்னர்கள் கைவேலையாகச்செய்து தீர்த்த படங்களும், பதாகைகளும், நிரைச்சீலைகளும் தொங்கியிருந்தன. அங்கிருந்தவை பூரிப்பிதெஸ், சொபோக்கிலெஸ், தெரென்ஸ், பிரூட்டஸ் என்பவர்களின் நாடக சரித்திரங்களைக் கண்காட்சியைய்க் காட்டும் சித்திரங்கள்மாத்திரமன்று, மிருகக் காட்சிகளுமிருந்தன. துஷ்ட மிருகங்களுக்கும் மிலம்பக்காரர்களுக்கும் யுத்தம் நடக்கும். இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்த்தானந்திக்க ஜனங்கள் மெத்தவும் அபிலாஷை கொள்ளுவார்கள். மேலும் அங்கிருக்கும் மாணாக்கர்கள் அந்த யுத்தங்களை நேத்திரானந்தத்துடன் பார்த்து, மிலம்பக்காரன் மிருகத்தை மேற்கொள்ளுவானே அல்லது மிருகம் மிலம்பக்காரனை மேற்கொள்ளுமோவென்று தங்களுக்குள் பெருந்தொகையான பணத்திற்குப் பந்தயம் போட்டுக்கொள்ளுவார்கள். அங்கு கூடும் ஜனத்திரள் ஏராளமாயிருப்பதுபற்றி, ஒருவர்மேல் ஒருவர் எக்கி எக்கிப்பார்த்துத் தங்களுக்கு வேடிக்கையொன்றுங் காணக்கிடையாமையால், ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளுவார்கள். வசை மொழிகளால் திட்டிக்கொள்ளுவார்கள். கும்பல் கும்பலாய் ஜனங்கள் கூடிக் கலகஞ்செய்வார்கள். இப்படியே அம்மிருகமானிட யுத்தம் காலாகோலமாய், மண் பிடி மயிர் பிடி சண்டையாய் முடியும். அப்பேர்க்கொத்த பட்டண நிவாசிகள் எத்தகையான குணஸ்தர்களாயிருந்திருப்பார்களென்று இதைப் பார்க்கும்போதே யாவருக்கும் விளக்கமாகும். ஒரே வார்த்தையில், உரோமாபுரிதான் சர்வ அக்கிரமங்களுக்கும், சகபோகங்களுக்கும் சேர விற்றின்ப சந்தோஷங்களுக்கும் உறைவிடமாயிருந்ததென்று சொல்வதானால், கார்த்தேஜ் நகரம் அவ்விஷயங்களில் அதற்கு அப்பனுயிருந்ததென்று சொல்லவும்வேண்டுமோ?

அப்படியானால் மனோதமுள்ள பதினேழு வயதுள்ள வாலிபர்—அதுவும் அதற்குள் ஆசாபாச உணர்ச்சிகளில் அமிழ்ந்தியிருந்தவர், அப்படிப்பட்ட பட்டணத்தில் தழைவுஸ்தை கமது மனதில் உரூபிகரித்துக்கொள்ளுவோமாக. அவர் தன் மனதை மயக்கவந்த சுகபோக சந்தோஷமென்பதை இதுவரைக்கும் ஊமைகண்டகனப்போல் எதோ இருதயத்தில் உணர்ந்துவந்தார். இப்பருவத்திலோவெனில், சிற்றின்பமென்னும் பாத்திரத்தில் சிறிதேனும் உரிஞ்சிக் குடிக்கலாகுமேயென்று ஆசைகொண்டிருந்தார். ஆனால் இப்பட்டணத்திற்கு வந்ததும் உரிஞ்சிக் குடிப்பதென்னத்திற்கு, ஒரே மொத்தமாய் அடிவண்டலேயும் உட்கொள்ளுவதே சரியென்று நிர்மானித்தார். கார்த்தேஜ் நகரில் அவருக்கு நேர்ந்த ஆபத்துகளுக்குமுன், மதாரா நகரில் அவருக்கிருந்த ஆபத்துகள் ஒன்றுமில்லையென்னத்தகும்.

அகுஸ்தீன் கல்விச்சாலைக்குப் போனதும் ஊரெல்லாம் யாரும் அவரைப்பற்றியே பேசுவார்கள். அவர் அதேக பாஷைகளைத் தீரக் கற்றிருந்தார். தத்துவ சாஸ்திரமும் மானதசாஸ்திரமுமே அவருக்கு விசேஷப் பிரீதி. படிப்பின் மட்டில் அவருக்குத் தீராத ஆசை. செய்யுள் சங்கீதம், சித்திரம் ஆகிய இவைகள் அவர் மனதைக் கவர்ந்திருந்தன. எல்லாத்திற்குமேலாய், சொல்வன்மைபொருள்வன்மையோடேனினுமினிமையாய் மாதுர்ய பாஷிதம் செய்யும் பூரண சக்தியுடைத்தாயிருந்தார். அவரைக் கண்டால் அவர் பள்ளித் தோழர்கள்மாத்திரமன்று, அவருடைய வாத்திமார்களுமுதலாய் அதிசயப்படுவார்கள். கார்த்தேஜ்நகரின் கோர்ட்டுகச்சேரிகளில் வாதிக்கும் நியாயவாதிகளுள் ஒரு அலங்காரப் புருஷராய் இவரும் இன்னும் சில வருஷங்களுள் துலங்குவாரென்று யாவரும் முன்னுரைத்தார்கள். இவர் எல்லா விஷயங்களிலும் இவ்வளவு தீரராயிருந்தும், "நீற பூத்த நெருப்புப்போல்" அடக்கமுள்ளவராயும் அச்சமுள்ளவராயுமிருந்தபடியால், இவரது மனோவியல்பைக்கண்டு யாவரும் அதிசயிப்பார்கள். தன்னுடைய வித்தியாசாமர்த்தியத்தைப் பிரகாசப்படுத்தி, தனக்குப் பெருமை தேடிக்கொள்ள இவருக்குச் சற்றேனும் பிரியமிருந்ததில்லை. வளர் பிறையைப்போல் நான் போகப்போக அலங்காரமாய்ச் சோபித்துவந்த அவரது சுந்தர வதனத்தில், "வெள்ளோக் இல்லே கள்ளச் சிரிதை" என்பது போல் நிஷ்கபடமென்பது துலங்கிவந்தது. அப்படிப்பட்ட நிஷ்கபடமென்னும் மனசுத்தமே பெருமித குணமுள்ளவர்களின் இலட்சணம். மேலும் அதுவே மெய்யான சாமர்த்தியத்திற்கு அறிகுறியும் ஆபரணமுமென்னத்தகும்.

அவர் மனிதர்களுக்குக் காணப்பட்டுவந்தது இப்படியே. ஆயினும் உள்ளார்தரியத்தில் தான் வேறு விதமாயிருந்ததாகத் தாழ்ச்சியோடு ஒத்துக்கொள்ளுகிறார். பேரும் பெருமையும் தனக்கெப்போது கிடைக்குமோவென்று மனப்பால் குடித்து, நியாயச் சபையில் சேர்ந்து சாமர்த்தியத்துடன் நியாயவாதம் செய்து கீர்த்தியடையவேண்டுமென்று அபிலாஷைகொண்டிருந்தார். அவர் இயல்பில் அடக்கமுள்ளவர். அவ்விதமாகவே அவர் மனிதர்களுக்குக் காணப்பட்டாலும், அவருடைய இருதயமோவெனில் தனக்கிருந்த சாமர்த்தியத்தை நினைத்து அக்களிப்பால் துள்ளினது. அவர் சொல்வது "அணியிலக்கணத்தில் நான் முதல் ஆனேன். அது என் இருதயத்தை இனியில்லாத சந்தோஷத்தினுல் நிரப்பி எனக்குச் செருக்குண்டாக்கிற்று." மேலும் அவர் சொல்வது "என் கர்த்தாவே, நீர் அறியாத காரியமல்ல, என் கூட்டாளிகளுள் நான் அதிக அடக்கவொடுக்கமுள்ளவன்; கலகப்பிரியர்களென்று அழைக்கப்பட்டுவந்தவர்களோடு நான் சேரவில்லை. அவர்கள் அக்கிரமங்களில் நான் தலையிடவில்லை. அப்படி அவர்களோப்போல் நான் அக்கிரமங்களில் உழலாமலிருந்ததைப்பற்றி என்னுள் ஒரு விதநீச வெட்கமும் உண்டாயிற்று. நான் அவர்களுடன் சந்தோஷமாய்ச் சகவாசம் செய்துவந்தபோதிலும், அவர்கள் செய்யும் கிருத்தியங்கள் எனக்கு அருவருப்புக்குரியவையாயிருந்தன. பள்ளிக்கூடத்திற்கு யாராவது புதுப் பிள்ளைகள் அல்லது அந்நியர்கள் வந்தால், இவர்கள் இல்லாத சேஷ்டைகளையெல்லாம் செய்து அவர்களுக்குத் தொந்தரவுகொடுப்பார்கள். அப்புதியவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் ஆந்தைகளைப்போல் மிரண்டு இப்புறமும் அப்புறமும் பார்த்துக்கொண்டிருக்கையில், இவர்கள் கெக்கிலிகொட்டிச் சிரிப்பார்கள். எப்படிப்பட்டமாணாக்கரோடு சேர்ந்து நான் வாய்ச்சாலக சாஸ்திரத்தைப் படித்தேனென்று பாருங்கள்! விழலிலும் விழலானதும், புகையைப்போல் மறைந்துபோகக்கூடியதுமான வீண்பிலுக்குக்காக, கீர்த்தி பெருமையை நாடி, நான் அதை உருக்கப் பெருக்

கத்துடன் படித்துவந்தேனேயன்றி வேறல்ல." அகுஸ்தீனிடம் பெருமை சிலாக்கியமென்பது வெகுவாயிருந்தபோதிலும், அத்துற்குணத்தை அவருடைத்தாயிருந்த மற்ற துற்குணங்களோடு ஒத்துப்பார்க்குமிடத்து, அப்பெருமை சிலாக்கியம் வெகு சொற்பமானதென்னத்தகும். தகாஸ்தே பட்டணத்தில் அவரிருந்தபோது ஆசாபாச உணர்ச்சிகள் பயங்கரத்துக்குரிய ஆவேசத்தோடு அவரைத் தாக்கி, யெதிர்த்ததென்றேமல்லவா? அவ்வுணர்ச்சிகளுக்குத் திருப்திதேட வேண்டியதென்று இப்போது அவருடைய மனதில் அத்தியர்த்த வேகத்தோடு அசுத்த ஆசைகள் இளம்பின. தேவ சிந்தனையேயில்லாத அவருடைய ஆத்துமமானது தனது ஆசைக்குத் திருப்தி செய்யக்கூடிய ஒரு பெண்ணுக்காக அலைந்து திரிந்தது. ஆனால் அப்பெண் எங்கே கிடைப்பாளென்று அவர் அறியவில்லை. வாக்கினுலுரைக்கக்கூடாத ஒரு வித அசமாதானத்தினுல் பீடிக்கப்பட்டார். இன்னது தனக்கு வேண்டியது, இம்மட்டில் தனக்கு வேண்டியதென்று, எவ்வித குறிப்புமறியாமல் அவருடைய ஆத்துமமானது வீணான ஆசைகளால் வாதிக்கப்பட்டு, "கேடு வரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்னும் மூதுரையின்படி காற்றில் அகப்பட்ட சருகைபோல் அலைக்கழிக்கப்பட்டுவந்தது.

அவர் சொல்வது "இன்னும் நான் யாரையும் நேசிக்கவில்லை. ஆனால் பிறர் என்னை நேசிக்கவேண்டுமென்று விரும்பினேன். இவ்வாசையால் தூண்டப்பட்டு என் ஆசாபாசத்திற்கு இலக்காத ஒரு பெண்ணைத் தேடித் திரிந்தேன். அப்பெண்ணுக்காகப் பட்டணமெல்லாம் திரிந்தேன். அப்பெண் இன்ன விடத்தில் கிடையாதென்றெனக்குத் தெரியவந்தால் அவ்விடமே எனக்கு வெறுப்புக்குரியதாயிருந்தது." மேலும் யாவருக்கும் பிரமிப்பை யுண்டாக்கத்தக்க பரிகியானத்துடன் அவர் சொல்வது "கர்த்தாவே, ஆத்துமத்தின் மேலான போசனம் நீரன்றி வேறெதுவுமில்லை. அத்திவ்ய போசனம் இல்லாதினுல், என் ஆத்துமம் பஞ்சத்திலடிபட்ட பறவையைப்போல் வாடினது. ஆனாலும் என் கடவுளே! அந்த ஒய்வனத்தின்பேரில் நான் ஆசையற்றிருந்தபடியால், அது இல்லாமற்போனதினுல், எனக்கு எவ்வித ஞான எக்கமும் உண்டாகவில்லை. என் ஆத்துமம் கெடாதபடி அதை நல்ல ஸ்திதியில் பதனம்பண்ணத்தக்க உணவாகாரங்கள் அதற்குத் தேவையாயிருந்தனவென்பது சரியே. ஆனால் அவ்வுணவைத் தேட அதற்கு முதலாவது பசியேயிருந்ததில்லை. ஆதலால் நான் ஞான சம்பூரண சம்பன்னனுயிருக்கிறேனென்பதைப்பற்றியல்ல, ஆனால் மேலான இஷ்டத்திற்கடுத்த காரியங்களில் அஷ்டதாரித்திரனுயிருக்கிறேனென்பதைப்பற்றி, என்மட்டில் நானே வெறுப்புக்கொண்டேன். என் ஆத்துமம் மெலிந்து, பாவப்புண்களால் நிறைந்து, ஞானப்பசியால் தத்தித் தள்ளாடித் தலையெடுக்கமுடியாமல் விழுந்து, கோடைகாலத்து வெய்யிலில் பாழடைந்த நிலம்போல் காய்ந்து வரண்டு, எத்த சிருஷ்டியாயினும் சரி, தன் காயங்களைக் குணப்படுத்தினுற் போதுமென்று அதனே மன்றாடிற்று. நான் யாதொரு ஆடங்கமின்றி, அளவு பிரமாணமின்றி, எனக்குத் திருப்தியைத்தரும் யாதாமொரு பெண்ணே நேசிக்கவும் அப்பெண்ணினுல் நேசிக்கப்படவும் விரும்பினேன்."

அகுஸ்தீன் தாரித்திரராயும், அப்பெரிய பட்டணத்தில் யாருக்கும் முகப்பழக்கமற்றவராயுமிருந்தபோதிலும். குணமுள்ளவராயும், சௌந்தரிய ரூபமுள்ளவராயும். கண்டோர் மனதைக் கவரத்தக்க பெருந்தன்மையுள்ளவராயுமிருந்தபடியால். தான் விரும்பிய சிற்றின்பமென்னும் மாய வலையில் சிக்கிவிழுவது அவருக்குச் சுலபமான காரியமாயிருந்தது.

நாடகமென்றுல் அவருக்கு மெத்தப் பிரியம். பொழுதுபோக்க இதமான காலக்ஷேபம் இதைத் தவிர அவருக்கு வேறொன்றும் கிடையாது. அவர் கார்த்தேஜ் நகருக்கு வந்ததிலிருந்து, நாடகம் என்றுல் அவருக்கு ஒரு விதப் பைத்தியம், ஒன்றையும் விடாமல் போய்ப் பார்ப்பார். அதனுலேயே அவர் கார்மாக்கினியென்னும் படுகுழியில் விழுந்தார். அவருடைய மனோரதம் உக்கிரமானதாயிருந்தது. மேலும் சேஷ்டைக் காரணமாய்க்கொண்ட சுயப் பரித்தியாகத்தைப்பற்றிய பாடல்களைக் கேட்கும்போது கண்ணீர் தாரை தாரையாய்ச் சிந்தி அழக்கூடிய அவ்வளவு நுண்ணிய உள்ளுணர்ச்சியுள்ளவராயிருந்தார். ஆதலால், காந்தம் இரும்பை யிழுப்பதற்கொப்ப நாடகமென்பது அவருடைய மனதை யிழுக்கும்.

அவர் சொல்வது "இந்த நாடகப் பாவனைகள் எனக்கு அத்தியந்த அக்களிப்பையுண்டாக்கின. எனெனில் அவைகள் என்னுடைய கிர்ப்பாக்கிய கோலத்தின் மூலப்பிரதிகளாயிருந்தது

டன். என்னைச் சுட்டெரித்துவந்த காமாக்கினிக்கு உபசரணமாயுமிருந்தன.''

நாடகப் பாவனைகளின் வசியத்தினால் அவர் அவ்வளவாய் மயங்கிப்போனபடியாலும், காமத்திற்காக ஒருவன் செய்யும் பரித்தியாகங்களை அதனில் விளக்கிக்காட்டப்படுவதைக்கண்டு மனமிளகிப்போனபடியாலும், தானும் அப்படியே யார் மனதிலாவது நேசத்தைப் பிறப்பித்து தனது நேசத்தை யவளுக்குக் காட்டி அவள் தன்னை நேசிக்கச் செய்யும்படி சமயந் தேடினார்.

(இன்னும் வரும்)

MADIYEENI.

மதியீனி

அல்லது

'தன் வினை தன்னைச் சுடும்.'

(முன் தொடர்ச்சி.)

தஞ்சாவூர் ஸ்டேஷன் வந்தது. வேலைக்காரர் அம்மாளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இறங்கினவுடனே ''அடே வெங்கட்டாசலம்! என்ன செய்தி வீட்டிலே?''

''அம்மா! எஜமானுக்கு ரொம்ப நோவு.''

''என்ன நேரிட்டது?''

''காலிலே படுங்காயம்'' என்று சொல்லிக்கொண்டே ஸ்டேஷனிலிட்டி வெளியேகி, வந்திருந்த வண்டியில் ஏறச்செய்தான் பெரியம்மாளை. அவன் வண்டியை ஓட்டினான்.

''வீரைவாக ஓட்டு. ஐயாவுக்குக் காலிலே யெப்படிக் காயம்?''

''ராமத்திலேயிருந்து வரும்போது, சக்கரம் முறியவே, வண்டித் தலைமாறி விழ, ஐயா கீழேயும் வண்டி மேலுமாச்சு. காலு சக்கரத்திலே யாப்பிட்டு நஞ்சிப்போச்சு.''

''பாவிப் பயல்களே! உங்களுக்குக் கண்ணில்லாமலாபோயிற்று. முறிந்த சக்கரத்தைப் போட்டா ஓட்டுகிறது?''

''நான் போகல்லே அம்மா.''

''எந்தப் பயல் போனுல்தான் என்ன? தானிலே கட்டிவைத்துத் தேர்லே புரிக்க வேணும். இப்போது எப்படி?''

''அந்தப் புண்ணு பெரிசாச்சி. இப்ப, காச்சல், சுரம், சன்னி—டாக்குத்தர் அவ்வளவு பெண்ணுரு—உடனே தந்திகொடுத்தாங்க.''

இதையெல்லாங் கேட்டு வீடு வருமட்டும் மௌனமாயிருந்தனள். வீட்டிற்குள் போகவும், தன் கணவனைக் கண்டான். அங்குமிங்குமசைய சக்தியற்று, வேதனை யனுபவித்துப் படுக்கையில்கிடந்து வாடுகிறார். பேச மனமுண்டு, நாவெழாது. முகம் வாடி, தேக மெலிந்து, கண் இருண்டு, அங்கங் குலைந்து இருக்கிறார். பார்த்தாள். கண்ணீர் சொரிந்தாள். ஓவென் றலறினுள். கோவென்று கத்தி விழுந்தாள். இனபத்துக்கள் அவளைத் தேற்றியெடுத்தார்கள். சற்று மனதாறினவுடன் முதன்முதல் மகளுக்குச் செய்தியைத் தந்திமூலமாய் அறிவித்தாள்.

தேர்ந்த வைத்தியர்கள் வந்துபார்த்து சிகிச்சைசெய்தார்கள். தாசில்தாருக்குக் காச்சலும் சுரமும் தற்போதில்லை. நித்திரைகொள்கிறார். உணவுஞ் சற்றே யருந்துகிறார். டாக்டர் இது சற்குறிதான் எனச் சொன்னுர். மெய்யாகவே தாசில்தார் குணத்துக்குவருகிறார் என்று சொல்லலாம். பெரியம்மாளுக்கு எல்லாம் அத்திரந்தான். ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறக்கவில்லை. யார் வந்தாலும் ''என்ன மருந்து கொடுக்கலாம்? நோயெப்படித் தீரும்? காலிலே காயம் யெப்படி ஆறும்?'' என்றே கேட்பாள். ஒருநாள் வண்டிக்காரனுடன் பேசிக் கொண்டிருக்கும்போது இதைப்பற்றித்தான் கேட்டான். அவன் அக்கியானி. அவன் மனதிலுள்ளதைச் சொன்னுன். ''அம்மா! நம்ம ஊட்டுக்கு வாராரே. வெங்கட்டராமய்யர். அவரு வந்து பூசைபண்ணினுல் எல்லாம் ஓடிப்போயிடும். அவரு ரொம்பக் கெட்டிகாரரு. நமக்கு தெரிஞ்சவர்தானே. அவருக்குக்கூட வரப் பிரியம். நீங்க நிறீஸ்துவங்களாச்சே. அதுதான் அவருக்குத் துணிவில்லை. இல்லாதேபோனு, ஐயாவுக்கு என்னதான் செய்யமாட்டார் ஐயர்.''

''அப்படி என்ன பூசைசெய்வார். வீட்டிலேவந்து செய்யணுமா?''

''அப்படிச் செய்தாத்தான் நல்லது. இல்லாபோனுல் அவரே செய்துக்கிள்ளுவாரு. நாம பூசைக்கு வேண்டியதெல்லாங் கொடுக்கணும்.''

''இது சுலுவானதுதானே. உவரை வரச் சொல்லு?''

இதைக் கேட்ட நின்று கேட்டுக்கொண்டிருந்த ராஜமணி (தாசில்தாரின் தங்கை மகள்)

''என்ன! அத்தை அப்படிச்செய்யலாமா? அது அஞ்ஞானிகள் ஆசாரச் சடங்கல்லவா?''

''போங்கடி நீங்க—சும்மா கிடக்கமுடியாது. இந்த முண்டைகளையெல்லாம் மடத்திலே போடப்போயித்தான் எல்லாம் விடிந்துபோயிருக்கிறது. மாமா செத்தால் எல்லாத்தையுங் கட்டிக்கொண்டுபோகலாம் என்று பார்க்கிறீர்களோ?''

இராஜமணி புத்தியுள்ள பிள்ளையானபடியால், எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்க்கக் கூடாதென்று அப்புறம் போய்விட்டாள்.

வெங்கட்டராமய்யர் மனைவி யவரை வாட்டு வாட்டென வாட்டுகிறுள். 'நரிக் கிடங்கொடித்தால் கிடைக் கிரண்டு ஆடு கேட்பது' இயல்பே. இவர் பெண்ஜாதிக்குப் பயந்து நடப்பவர். அதினுல் அவள் இவர்மேல் எப்போதும் குதிரையேற வருகிறது. 'தட்டிக் கேட்க ஆளில்லாதே போனுல் தம்பி சண்டப்பிரசண்டன்' அதிலும் பெண்களுக்குப் பயந்தால் பரிதாபப்படவேண்டியதுதான். சும்மா விட்டால் பம்பரம்போலாட்டிவிடுவான் கொண்டவனையுங் கண்டவனையும். ஐயர் ஒரு மாதமாய் ஒன்றுங் கொண்டுவந்து கொடுக்காதினுல் அதிக மூர்க்கமுண்டாயிற்று பார்ப்பாத்திக்கு. ''தொக்கி பெருக்கத் திங்கிறதும்—திண்ணையிலே உட்கார்ந்து சலசல, வளவள எனப் பேசறதுந்தான் வேலை. எங்கேயாவது போய் ஹரி, ஹரி, சரி, உன் கையில் பணத்தைப் பறி என்று ஒதி காசு தட்டிக்கொண்டுவரத் தெரியாது. காலைக்குத் தீபாவளி. ஆத்திலோ ஒன்றுமில்லை. தானியதவசம் ஒரு மணி கிடையாது. உதித்த ஒரு புடவைக்குமிஞ்சி மறு புடவைக்கு வழியில்லை. இந்த விடிஞ்சாணுக்கு வாழ்க்கைப்பட்டது இதுதான் கண்ட பலன்'' எனத் தூற்றிக்கொண்டிருக்கிறுள் அகமுடையானை. அக்கணம் வண்டிக்காரன் வாயிலண்டை வந்தான். ''சாமீ! தாசில்தார் அம்மா! உங்களைக் கூப்பிடுறுங்க'' என்றுன்.

''எப்பா? இரண்டு நாளைக்குமுன் அவர் வீட்டுக்குப் போனேன், என்னை எட்டிப்பார்ப்பாரில்லை, எனென்று கேட்பாரில்லையே.''

''நீங்க வாருங்க சாமி. எசமானுக்குச் சுகமில்லை. அம்மா உங்களைக்கொண்டு மந்திரிக்கக் கூப்பிடுறுங்க. நல்லாக் கிடைக்கிஞ் சாமி. அடியாளை மறந்துபோகாதேயுங்க.''

'மந்திரிக்க' என்ற உடனே அவர்க்கு மனக்கினர்ச்சியாகிவிட்டது. நல்ல வேட்டை கிடைக்குமென்பது திண்ணம். சர்க்கரைப்பாண்டத்தில் கைவிட்டவன் சக்காமற் போவானு? இன்றைக்குவந்தது அதிஷ்டந்தானெனச்சொல்லியவண்ணமே புறப்பட்டார். வழியில் வண்டிக்காரனிடம் விளம்புவார். ''இன்றைக்கு இப்பேர்க்கொத்த அதிஷ்டம் வருமென நம்பவேயில்லை. விடியற்காலம் வீட்டைவிட்டு வெளியே வந்தேன். பூனை குறுக்கே போயிற்று.''

''அது தோஷமாச்சி என்பீங்களே.''

''ஆமடா; அதுதான் மனங் கஸ்தியால் வாடினது. இப்போது நீ கூப்பிட்டுப்போகிறாய் என்ன வருமோ தெரியாது.''

''அதுக்குப் பயப்படவேண்டாஞ் சாமி. தோஷங்கீஷமெல்லாம் போகட்டும். உங்களுக்கு யோகந்தான் இன்றைக்கு. என்னமாத்திரம் மறந்துபோப்படாது.''

''ஏதோ நீ சொல்லுகிறதைத்தான் நம்பி வருகிறேன்.'' சும்மா நம்புங்க சாமி. சாத்திரம் பார்த்தால் எல்லாங் கெட்டுப்போவும். போன வருசம் வேலை தேடப்போனேன். எங்கப்மா ஐயரிடத்திலே கேட்கச்சொன்னுங்க. கேட்டதுக்கு வியாயக்கியமை மடக்கே போகக்கூடாது. காரியஞ் சித்தியாகாது என்னுரு. அப்படியிருக்கப்போனேன். கொஞ்சம் பிசகிப் போயிருந்தால், வேலையை வேறே யாருக்குங் கொடுத்திருப்பாரு.''

''அப்படியா! எனக்கும் சாஸ்திரத்தின் மேல் அதிக நம்பிக்கையில்லை. எல்லாங் கட்டுக்கதை போலிருக்கிறது. பஞ்சாங்கங்களிலே வெகு ஜோராய் எழுதிப்போடுகிறார்கள். ஆனல் ஆகிறது ஒன்றுமில்லை. பல்லி வீழ்ச்சி பலனில்—தலையிலே விழுந்தால் நஷ்டமாம். ஆனல் எனக்கு அப்போதுதான் லாபம் வந்தது. அன்று இருந்து இதையெல்லாம் நம்புகிறதற்குச் சந்தேகந்தான்.''

''ஊர்க்கெல்லாஞ் சாத்திரஞ் சொல்லும் பல்லி கழுகீர்ப்பானைக்குள்ளே விழுந்தாப்போலிருக்கு. இன்னும் என் சாமி சொல்லுறீங்க.''

''வயறு பிழைக்கத்தான்'' இதற்குள்ளாக வீட்டினருகே வந்துவிட்டார்கள். வண்டிக்காரன் ''நான் முன்னுலேபோய் அம்மாட்ட சொல்றேன்'' என்று சென்றுன். ஐயர் வாயலில் வருமுன் பெரியம்மாள் காத்திருந்தனள்.

பெரி.—கொஞ்ச மந்திரித்து போகணும் ஐயரே!

ஐயர்.—அதற்கென்னம்மா! நம்முடைய ஐயாவுக்கு நான் செய்யாத ஊழியம் என்ன விருக்கிறது.

பெரி.—உள்ளே வந்துதான் செய்ய ணுமோ.

ஐயர்.—வியாதிக்காரரைப் பார்க்கவேண் டாமா?

பெரி.—தாகில்தார் சம்மதிக்கமாட்டாரே. வேறே ஏதாவது பூசை கீசை நீரே பண்ண முடியாதா?

ஐயர்.—ஆகா! அப்படியுஞ் செய்யலாம்.

பெரி.—பூசைபண்ணுவீரா நாளைக்கு?

ஐயர்.—பூசைபண்ணத்தான்; பண்ணுமற் போனால் எப்படி? அதற்குச் சாமான் சரக்கு வேண்டும். கையிலே ஒன்றுமில்லே.''

பெரி.—என்ன வேண்டும்?

ஐயர்.—ஐயாவுக்கு வந்திருக்கிற ஆபத்துப் பெரிது. அதற்குத் தகுந்த கொடை கொடுத் தால்தான் பலிக்கும்.

பெரி.—என்ன கேட்கிறீர்? சொல்லுமே.

ஐயர்.—மூன்று வெள்ளைச் சேவல் வேண் டும்—6 தேங்காய், பழம், சர்க்கரை, கற்பூரம் வேண்டும்.

பெரி.—இவ்வளவு சாமான்கள் என்னத் துக்கு?

ஐயர்.—எனக்கா அம்மா?

பெரி.—என் இரண்டு கோழி போதாதா?

ஐயர்.—நீங்கள் எவ்வளவு தாராளமாய்ச் செய்கிறீர்களோ அவ்வளவுதான் சாமியுஞ் செய் வார் உங்களுக்கு.

பெரி.—சரி! இரண்டு ரூபாய்த் தருகி றேன்.

ஐயர்.—அது பத்துமா?

பெரி.—என் பத்தாதா?

ஐயர்.—குறைந்தது 5-ரூபாய்க்காகிலும் வாங்கவேண்டுமே. இதிலேயெல்லாஞ் செட்டா யிருக்கக்கூடாதம்மா. வந்திருக்கிறதோ பெரிய ஆபத்து. அதற்குத் தக்கபடிச் செய்துதான் அதை விலக்கவேண்டும். கட்டப்பாரையால் ஈர க்கூடியதைச் சட்டுவத்தால் இளப்பப் பார்த் தால் இளம்புமா? தாங்கள் 'பசுவுக்குப் பலியுந் தீரவேண்டும், கர்தவனத்திற்குக் களையுந் தொலையவேண்டு'மெனப் பார்க்கிறீர்கள். அது மூடியாத காரியம்.

பெரி.—அப்போ ஐந்து ரூபாய் வேண்டு மாக்கும்?

ஐயர்.—நீங்களே சாமான்களை வாங்கிக் கொடுங்கள்.

பெரி.—அந்தத் தொந்தரவு எனக்கு வேண் டாம். நான் பணத்தைத் கொடுக்கிறேன். கொண்டுபோமெனச் சொல்லிக்கொண்டே பையை யவிழ்த்துப் பணத்தை எடுத்து ஐயர் கையில் வைத்தாள். கிடைத்தது வேட்டை. பொங்கினது சந்தோஷம் ஐயரவாளுக்கு. நெய்க் குட முடைந்தால் நாய்க்கு வேட்டையெனச் சொல்லவும்வேண்டுமோ. நேரே வீட்டுக்குப் போய் மனைவி கையில் பணத்தைக் கொடுத்தார். அவளுக்கு ஆனந்தங் கிளம்பிற்று. முகமலர்ந்து கணவனைப் பார்த்தாள். தீபாவளிக்கு வேண் டிய சாமக்கிரிகைகளை வாங்கக் கடைக்குப்போய் விட்டாள். ஐயர் பூசையும் பண்ணவில்லை; தோசையும் பண்ணவில்லை. வண்டிக்காரனை முதலாய் மறந்துவிட்டார். மனைவி படைத்த பழயதை மனம்பொறுக்க, தொந்தி பருக்க அருந் திவிட்டுத் திண்ணையில் ஹரி, ஹரி, ராமா என்று தலைசாய்த்து நித்திரைபோனார்.

கொள்ளாமற் பூதலத்தின் ஞானியெல்லாம்
கூடுடனே ஞானமெல்லாம் வந்தாற்போல
உள்ளான உதரத்தின் பசியாலார்க்கும்
உச்சிதமாய்ப் பேசி யவர்க்குண்மையாகக்
கள்ளாண்மையே யுரைத்துப் பசியைத் தீர்த்துக்
காலிலே குறடிட்டு நடப்பான் மட்டை
அள்ளிய தோரண்ணமே தானமென்பான்
அதிலுலே சொர்க்கம் வருமெனச் சொல்வானே.

இப்பேர்ப்பட்டவர்களில் வெங்கட்டராமய் யர் முதல்தரம் என்கலாம். அவனுக்கேற்ற பேதைப் பெண்ணுமகப்பட்டாள்.

பெரியம்மான் அவன் வந்து செய்தி சொல் வானெனக் காத்திருக்கிறாள். ஐயரும் மறக்க வில்லை. அவர் வந்தார்.

பெரி.—எல்லாமாகிவிட்டதா ஐயரே?

ஐயர்.—நல்ல கேமந்தான். இன்னும் ஒரு காரியந்தான் செய்யவேண்டும். தாயித்து ஒன்று செய்து கையில் கட்டிவைக்கவேண்டும்.

பெரி.—அவர் அதற்குச் சம்மதிக்கமாட் டாரே.

ஐயர்.—அப்படியானால் அதற்கும் ஒரு வழி யுண்டு. தலையணையின்கீழ் வைத்தால் போதும்.

பெரி.—அப்படிச் செய்யலாம். எப்போ கொண்டுவருவீர்?

ஐயர்.—உங்களிஷ்டம்.

பெரி.—என் அதற்கும் பணம் வேண்டுமா?

ஐயர்.—என்னிடத்திலிருந்தால் சும்மா கொண்டுவருகிறதற்கென்ன? நான் பணம் போட்டுத்தானே வாங்கவேண்டும்.

பெரி.—உம்மிடம் பழய தாயித்து இல் லையா?

ஐயர்.—என்ன சொல்லுகிறீர்க அம்மா! அதெல்லாம் உதவுமா? ஒவ்வொரு விபத்துக் கும் வெவ்வேறு மந்திரம் ஓதி, சீட்டுவைத்து கட்டவேண்டாமா? அல்லது விளையாட்டுத்தன மாய்க் கண்டதையெல்லாங் கொண்டுவந்து கட் டிவிட்டு காசு தட்டிப்போகிறதா பெரிய காரி யம்? அப்படி நான் செய்யேன்.

பெரி.—எவ்வளவுதான் வேண்டும்? சொல் லும் பார்ப்போம்.

ஐயர்.—உங்களுக்குத் தெரியாததா?

பெரி.—ஐந்து ரூபாய்ப் போதுமா?

ஐயர்.—ஏது! தாயித்தோ பொன் தாயித்து, கால் பவுனுகிலும் வேண்டுமே. அதற்குக் கூலி? பிற்பாடு பூசைபண்ணுகிறது, ஈரவேத்தியஞ் செய்கிறதற்கெல்லாம் எங்கே? எங்கே போகி றது?

பெரி.—சரி, கூட ஐந்து ரூபாய் கொண்டு போம்.

ஐயர்.—அப்படிச் சொல்லாதேயுங்கம்மா. குறைந்தது 15-ரூபாயாகிலும் அவசரம்.

பெரி.—15-ரூபாயா? என்ன, கொள்ளை யடிக்கிறீர்போலேயிருக்கிறது?

ஐயர்.—அம்மா! உங்களைப்போலொத்த உத்தமிகள் வாயில் அப்பேர்ப்பட்ட வார்த்தை வரப்படாது. ஐயாவுக்கென்று, எங்கேயாகிலும் கடன்பட்டாகிலும் நான் கொண்டுவருவேன். அவசரமாயிருப்பதால்தான் உங்களைக் கேட்கிற தெல்லாம். ஐயா, தருமபிரபு; அவர்களுக்கு வந் திருக்கிற ஆபத்து நீங்கி அவர்கள் சுகமாயிருக் கிறதை கண்குளிரப் பார்க்கவேண்டும். பிறகு மற்றவைகளெல்லாம். ஐயருடைய ஜோஜாலத் தில் அகப்பட்டாள். நிறைந்தாள் பையை. எடுத் தாள் சவரன் ஒன்று. ஐயர் கையில் கொடுத் தாள். மீறு பேச்சுப் பேசாது கையை நீட்டி பணத்தை வாங்கி மடியில் கட்டிக்கொண்டு எட்டி எட்டி நடந்தார். ஆனந்தம் உள்ளத்தில் துள்ளுகிறது. மனைவி மனதைச் சந்தோஷப் படுத்தலாமென்று மங்களமாய் வீடுபோனார்.

''அடீ! உனக்குத் தாலியறுக்க, நான் எங் கேயெல்லாம்போய் கொள்ளையடிக்கவேண்டியி ருக்கிறது. இந்தா! இப்போதாகிலும் கல்ல சோறு போடுவாயா?''

(இன்னும் வரும்.)

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத் திராதிபர் உத்தரவாதியல்லர். நிருப நேயர் கள் தங்கள் நிருபங்களை மிக விரிவாய் எழுதி விடுகிறார்கள். இடம் போதாமையால் அவை களை ஒருவாறு தறைக்கவும், அல்லது முழு துமே விலக்கவும் அவசியம் நேரிடுகிறது. நேயர்கள் இதைக் கவனித்து தங்கள் கடி தங்களைக் கூடியவரையில் சுருக்கி எழுத வேண்டுமெனக் கோருகிறேம். ப—ர்.]

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

1

ஆயனே, சென்ற எப்பிரல் மீ சஞ்சிகையில் மணப்பாடுவாசி எழுதியதைப் பார்த்து மகிழ்ந் தேன். அவர் முதலில் ''நீண்டப்படாதென்ப தற்குப் பொருளில்லை என்றும், தாழ்ந்த குருக் களையும் பாப்பரசர்களையும் கொண்டு அத்தனை சகோதரத்துவத்தைப் போதனையாய்க்கொண்ட தென்பதை யார் மறுப்பார்'' எனச் சொல்லுகி றார். இது வாஸ்தவமே. எழுவயது இளை ஞனும் இக்காரியம் பலிதமாவது மேஞட்டிலன்றி இக்கீழ் நாடாகிய இந்தியாவிலல்லவென்று பர பரப்புடன் பகர்வானே, எனிந்தக் கேள்வி? பின்னர் எமது நண்பர் ''கீழ்த்தர ஏழுப்பினர் களுக்குள்ளும் பேதகமிருந்துகொண்டு சம போஜனமும் சம்மந்தமும் செய்யாமலிருப்பதில் லையோ'' வென சுட்டிக்காண்பிக்கிறார். ஆம். வாஸ்தவந்தான். சம போஜனமும் சம்பந்தமும் செய்வதில்லைதான். ஆனால் பொது விஷயங்க ளில் அவர்களிடத்தில் வித்தியாசமே கிடை யாது. (உதாரணமாக தற்சமயம் கடைபெறும்

ஆதி திராவிடச் சங்கம், தென்னிந்தியா ஒடுக்கப் பட்டவர்கள் சங்கம், புதிதாய் உண்டான கத் தோலிக்கு சங்கம், கோவில், சபை, முதலியவை களிலும் சமத்துவமாகவே இருந்து சிற்றுண்டி (Sovial gathering) இவைகளிலும் பேதக மின்றி இருந்துவருகின்றனர்.) சம போஜனம், சம்பந்தஞ்செய்வது அவரவர் மனதைப் பொருத் தக் காரியமேயொழிய வேறல்ல; இவைகளைப் பற்றிய கேள்வியே கிடையாது. மேலுட்டில் முதலாய் இவ்விடப்பட்டாலன்றி சம போஜனம், சம்பந்தம் செய்ய முற்படார்கள் என்பதை நண் பர் அறியாததல்ல. சகலருக்கும் பொதுவான ஸ்தாபனங்களில் சமத்துவம் வேண்டுமென்பது தானே கருத்து ஒழிய வேறல்ல.

கனம் நண்பர் "சபைத் தலைவரும் காரிய தரிசியும் உங்களைச் சங்கத்தில் சேர்த்துக்கொள் வதாய் வாக்களித்தனரே, அப்போது 100-க்கு 50-க்கு மேல்பட்ட நீங்கள் 100-க்கு 50-க்கு மேலாகச்சேர்ந்து; என் உங்கள் காரியங்களை சித்திசெய்துகொள்ளக்கூடாது" என்று பகடி பண்ணுகிறார். அப்படிச் சேர மனமில்லாமல் தான் விண்ணப்பித்தனரோ? இல்லை! இல்லை! சங்கத்திற் சேர்ப்போமேயொழிய கேட்கும் கன் மைகட்கு நாங்கள் ஜவாப்தாரியல்லவென்றால் சேர்ந்தென்ன பயன்? ("கடன்பட்டும் பட் டினி" கல்யாணம் பண்ணியும் திறவறம் என்ற சமாச்சாரமா?) உயிரற்ற பினம்போல் உலரவேண்டியதுதான். அவர்கள் கேட்கும் கன் மைகள் பிரத்தியேகமான கன்மைகளென்கிறார். அது ஒருகாலுமில்லை. ஒரு சார்பினர் ஆதி முத விம்மட்டும் அடைந்துவரும்கன்மைகளான மடம் சபை, போர்டிக்கு இவை பிரத்தியேகமான கன் மையாகுமா? அது சகலருக்கும் பொதுவல்லவா? இதில் சேர்க்கமுடியாதென்றால் பின் எங்கு போவது? கடைசிவரையில் அடிமைபோல் கல்வி காகரீகமில்லாமல் ஒதுக்கப்பட்டே கிடக்க வேண்டுமோ? "இதென்ன அநியாயம்? கையி லிருக்கும் பழம் இல்லையாம், தூரட்டிப் பழமாகிய ராஜாக்க கன்மை தலங்கிவருமோ? இதெல் லாம் வீண். பரிதாபம்! அவ்வேழைக் கத்தோ லிக்கர் குருமார்களைப்போய் எங்களை யீடேற் றுங்களென்றால் ஜாதிக் கிறீஸ்துவர்க ளிசைக் தால் இன்றைக்கே செய்வோமென்கிறார்கள். அன்னவர்கள் அதிகமாக நிரம்பியுள்ள தெ. க. இ. சங்கத்தில் விண்ணப்பித்தாலோ, உங்களை முன்னேற்ற எங்கள் சங்கத்தில் ஒழுங்கில்லை. இப்போப்பட்ட காரியங்களில் பிரவேசிப்பதில்லை யென சுவாமியாருக்கு வாக்குக்கொடுத்துவிட் டோம். ஆகையால் வேண்டுமானால், மெம்பராய்ச் சேர்ந்துகொள்ளுங்களென்கிறார்கள். எங்ஙனம் அண்டுவார்கள்? வெளவால் கதிதான்போலும்! ஆயினும் பரவாயில்லை. நண்பரே, நீங்களெழுதி யதுபோல் அவர்கள் கன்மைக்காக தனிச் சபை உண்டாக்கிக்கொள்ளச்சொன்னது சரியே. எனெனில், அப்போதுதான் எதிர்மொழியும் வாக்குவாதமும் மேற்படும், காரியமும் சித்தியா கும். ஊர் இரண்டுபட்டால்தானே கூத்தாடிக்குக் கொண்டாட்டம். கிடைக்கப்போகும் அரசியல் சீர்திருத்தத்திலும் பிரதிநிதித்துவமும் கிடைக் கும். நீரும் புதிதா யுண்டான சபையை ஆதரி யும். அப்போது அவர்களுக்கும் தென்புண்டாகி காரியத்தை ஜெயமுற நடப்பிப்பார்கள்.

ஓ! தாழ்ந்த வகுப்புக் கத்தோலிக்களெனக் கூப்பிடப்படும் பூர்வீக திராவிட கத்தோலிக் களே! பொறுமையாக கைசோராமல் நீங்களேற் படுத்திய தெ. க. சங்கத்தை ஊக்கத்தோடு நடத் துங்கள். கத்தோலிக்கு விசுவாசத்திலும் குரு பக்தியிலும் தவறாமல் உங்கள் உழைப்பைக் காண்பியுங்கள். ஆதியிலிருந்து இறு உதவியை யாவது செய்துவரும் குருமார்களை மறந்தால் நீங்கள் அதோகதிதான். அவர்களாசீரைக் கைக் கொண்டு உங்கள் வெளகே கன்மைக்காக முற் படுங்கள். உங்கள் இனத்தார் குடியேறியுள்ள பர்மா, பினாங்கு, செட்டால், முதலிய இடங் கட்கும், உங்களை முன்னேற்ற ஆசிக்கும் மேதா விகட்கும், கல்வியான்களுக்கும் உங்கள் குறைக ளைக் கூறி நோட்டீஸ் விடுங்கள். அதின்மூல மாய் நிதி சேர்த்து, ஐக்ய நாணயமுதலிய சங்கங் களை உண்டாக்கி, தொழில், கல்விச்சாலைகள் ஏற்படுத்தி முன்னேற்றமடையுங்கள். அன்னி யர்கட்கு நமது புண் வலி தெரியாது. நமக்குத் தான் தெரியும். ஆகையால் காமே, தர்ம வைத் தியசாலைக்காவது சென்று, சுகப்படுத்திக்கொள் ளவேண்டியது என அறிவீர்களாக. "முயற்சி புடையர நிகழ்ச்சியடையார்."

இப்படிக்கு,

மாண்டலே, 15—4—19. } துயரழுறும் பூர்வீக திராவிட கத்தோலிக்கு நேசன்.

II

மே மாதத்து ஆயனுக்கு மேற்படி தலைப் பின்கீழ் யான் எழுதிய கடிதத்தை க. அ. தி.

என்பவர் முற்றிலும் வாசித்து, அதன் சாராம் சத்தைக் கண்டுபிடியாமல் புரொட்டெஸ்டாண் டார் நமது பரிசுத்த வேத புஸ்தகத்தின்மட்டில் நடந்துகொள்ளுவதைப்போல் என் கடிதத்தில் ஆங்காங்கு ஒரு வாக்கியத்தையெடுத்து அதை ஆதாரமாகக்கொண்டு முன் அர்த்தம் பின் அர்த் தம் பாராமல் ஜூன் மாதத்து ஆயனில் என்னை எதிர்க்கத் துணிந்ததைப்பற்றிப் பரிதபிக்கி றேன்.

நான் எழுதிய மூதல் கடிதத்தையும் இக் கடிதத்தையும் சேர்த்து வாசித்து என் நியாயப் போக்கையறிந்துகொள்ளும்படி கோருகிறேன்.

அக்கியானிகளிடம் தங்களுக்குக் குல சம் பக்தமான சரிசுதந்தரம் கிடையாவிட்டாலும் அவர்களோடே தொத்திக்கொண்டு கிறீஸ்துநாத னில் தங்களுக்குச் சகோதரர்களான இந்திய கிறீஸ்துவர்கள் எவ்வளவுதான் கல்ல ஸ்திதிக்கு வந்து மேன்மையடைந்தபோதிலும், அக்கியானி களைவிட நிசதமாய் அவர்களைப் பாராட்டும் ஜாதிக் கிறீஸ்துவர்களிடம் இருக்கும் மன வெறுப்புப்போய், உள்ளன்பு தோன்றுதலையும் அவர்களால் நடத்தப்பட்டுவரும் மேற்படி சங் கத்தில் இந்திய கிறீஸ்துவர்கள் சேர்வதினால் எப்போதும் மன மடிவும் குழப்பமுமேயுண்டா கும். வெல்லம் இருந்தால் ஈ சேரும்; பசை யிருந்தால் ஒட்டும்; ஐக்கியம் ஐக்கியம் என மேல்பேச்சினால் பயனில்லை.

மேலும், கிறீஸ்துவர்களுடைய கன்மைக் கடுத்த காரியாதிகளை நாடி உழைப்பதே தன் ஏக நோக்கமெனச் சொல்லிக்கொள்ளும் மேற் படி சங்கம் கடந்த 22-வருஷ காலத்தில், கிறீஸ்துவ மாணாக்கர்களைப் படிப்பிப்பதிலும், அவர்களுக்காகச் சர்க்காரிடம் வாதாடி உயர்த்த உத்தியோகங்களை அடைந்து கொடுப்பதிலும், கைம்பெண்ஜாதிகள், அநாத பிள்ளைகளுக்கு ஆதரவு செய்வதிலும், கிறீஸ்துவர்களுக்குள்ள குறைபாடுகளைத் தீர்த்து அவர்களை முன்னேற் றுவதிலும் அவர்களுடைய உலக விருத்திக்கு— என் ஞான விருத்திக்குத்தான்—விருத்தமாயி ருக்கும் ஜாதி வேற்பாட்டின் கட்டைக் கொஞ் சங் கொஞ்சமாய்த் தளர்த்தவும், தாழ்ந்த ஜாதி யாருக்கு வேதம் போதித்து ஞானஸ்நானம்கூட கொடுக்கக்கூடாதென்று தென நாட்டில் சில இடங்களில் பிடிவாதம் செய்யும் ஜாதிக் கிறீஸ் துவர்களின் மனச்சார்பை மாற்றவும், இன் னின்ன காரியங்களை முடித்திருக்கின்றதென நமது நண்பர் எடுத்துக்காட்டுவாராஞல் விசேஷ அநுகூலங்கள் வேண்டியதென விரும்பும் இந் திய கிறீஸ்துவர்கள், அது உண்மையாகவே பிற கிறிஸ்துவர்களை மனமார நடத்திவரும் சங்கமென்றுணர்ந்து, தைரியங்கொண்டு, துவண்டு விழும் கொடியானது அருகிலிருக்கும் மரத்தை ஆதாரமாகக்கொண்டு வளர்ந்துவரு வதைப்போல், அதில் சேர்ந்து பூலோடு கூடிய நாறும் மணம் பெறுவதற்கொப்ப முன்னேற்ற மடையக்கூடுமென்று யூகிக்கலாம்.

இந்திய கிறீஸ்துவர்கள் தங்களுக்கென தனிச் சங்கம் நடத்தி உழைப்பதே இரு பக்கத் திலும் தற்கால மன நிலைமைக்கேற்ற தென்ப தென் அபிப்பிராயம். அப்படிப்பட்ட அபிப்பி ராயங்கொள்ள எனக்குப் பூரண சுதந்திரமுண் டென நினைக்கிறேன். அப்படி இன்னொரு தனிச்சங்கம் ஸ்தாபிப்பது உசிதமாய்த்தோன்று விட்டால், சென்னையில் கடந்த 3, 4-வருஷங்க ளாய் நடந்துவரும் கத்தோலிக்குப் பரோபகார சங்கத்தின் சட்டங்களையும், நோக்கங்களையும் கொஞ்ச மாற்றி அதையே இந்திய கிறீஸ்துவர் களின் தலைமைச் சங்கமாக ஸ்தாபித்து, ஒவ் வொரு மேற்றிராசனத்திலும் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்துவது மேல். இந்திய கிறீஸ்துவர்க ளுள் படித்தவர்கள் உத்தியோகஸ்தர்கள் எக்கா லத்திலும் தலைமறைவாயிருந்து நாள் கழித்து வரும் வழக்கத்தை விட்டுவிட்டு, பொது அபிமா னங்கொண்டு தங்கள் இனத்தாருக்காக உழைப் பதே சிரேஷ்டம். தங்களுக்குத் தற்காலம் பய னில்லாவிட்டாலும் தங்களுடைய பின்னோர்கள் கன்மையடைவார்கள். எனெனில், சாஸ்திரிகள் சொல்லுவது; ஒரு தலைமுறை செய்யும் காரி யம் மறு தலைமுறை கால் ஊன்றி நிற்க அஸ்தி வாரமாய் விளங்கும் என்பதே.

அப்படிப்பட்ட பொது அபிமானம் கொஞ் சமாவது உண்டாயிருக்கிறதென்பதற்கு மேற் படி பரோபகார சபையே சாட்சி. இப்படியெல் லாம் ரோமை நாச்சியத்திலிருந்த பூர்வத்திய பினெசியர்களைப்போல் கஷ்டப்பட்டால்தான் ஜாதியார்களிடம் இந்திய கிறீஸ்துவர்களுக்குச் சமத்துவம் கிடைக்கும். எனெனில், ஜாதியே இந்தியாவின் அரசு. ஜாதியாரே இந்தியாவின் பிரபுக்கள். அது தன் அரசையும் அவர்கள் தங் கள் பிரபுத்துவத்தையும் மனமார இழப்பது சுலபமான காரியமல்ல. தன்னிலும் மேற்பட்டத்

தன்னாலும் அடக்கக்கூடாத காரணங்களால்தான் அங்ஙனம் ஆகவேண்டியிருக்கிறது.

சிறந்த வித்தியார்த்தியாகிய லார்ட் மக்காலே என்பவர் இயற்றிய இங்கிலாந்து தேச சரித்திரத்தில் நாம் காண்பதுபோல், இங்கிலாந்து தேசத்தில் பூர்வ குடிகளாகிய ஸாக்ஸ்ன் ஜாதியாருக்கும், அவர்களை ஜெயித்து ஆண்டுவந்த நார்மன் ஜாதியாருக்கும் எப்போதும் போராட்டம். இப்போராட்டம் சாதாரண சீவியத்திலும் அரசாங்க உத்தியோகத்திலும், திருச்சபை அதிகாரிகளுள்ளும் வியாபித்துவந்தது. அப்போராட்டத்தின் காரணங்களை அடியோடு எடுத்து இருவரையும் இங்கிலீஷ் ஜாதியென்னும் ஒரு ஜாதியாக பந்தனம் செய்தது யார்? கத்தோலிக்குத் திருச்சபைதான் என அப்புரொட்டெஸ்டாண்டு ஆசிரியர் புகழ்ந்து கூறுகின்றனர்.

முன்னிலும் அதிசீக்கிரமாக அப்படிப்பட்ட ஐக்கியம் இந்தியாவில் உண்டாகும். இதை உத்தேசித்துத்தான் நமது திருச்சபை அதிகாரிகள் 1917-ம் வருஷம் ஜனவரி மாதம் பெங்களூரில் நடத்திய கூட்டத்தில் பிரதி மேற்றிராசனத்திலும் ஒவ்வொரு சங்கம் ஸ்தாபிக்கவேண்டியதென்றும், இச்சங்கங்களையெல்லாம் (Federation) பொது தலைமைச் சங்கத்துடன் பிணைத்து ஒன்றுபடுத்தவேண்டுமென்றும் கூர்ந்த முன்னறிவுடன் தீர்மானித்தார்கள். கத்தோலிக்கருள் இருக்கும் பற்பல வகுப்பாரும் தங்கள் தங்களுக்கு அவசரமான காரியங்களை நாடி சங்கங்கள் ஸ்தாபித்து குலாபிமானத்துடன் உழைத்துவருவார்கள். இச்சங்கங்களையெல்லாம் ஷை பொது தலைமைச் சங்கத்துடன் ஐக்கியப்படுத்தி இவைகளிலிருந்து தெரிந்தெடுத்துக்கொண்ட பிரதிநிதிகளை பொதுச் சங்கத்திற்கு அனுப்ப அவர்கள் பொதுக் காரியங்களை விசாரணைசெய்வார்கள். இப்படியே நடத்திவந்தால் காலம் போகப்போக ஒருவர் ஒருவருக்கு பரஸ்பர விசுவாசம் உண்டாகும். யாவருக்கும் பொது அக்கரை தோன்றும். நாளாவட்டத்தில் ஐக்கியத்திற்கு வழி உண்டாகும். இப்படி நிதானமாய்ச் செய்துவரும் ஐக்கியமே நிலைத்து நீடிக்கும்.

இந்த ஆலோசனை ஐரோப்பா அமெரிக்காவிலே கத்தோலிக்குச் சங்கங்கள் நடந்துவரும் நாட்டத்தை யநுசரித்துச்செய்த சிறந்த ஆலோசனை யென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இந்த ஆலோசனை கைகூடிற்றா? இல்லவேயில்லை. அதற்குமாறாக இதனால் தீமையே விளைந்தது. இந்த ஆலோசனை வெளிப்பட்டது தான் தாமதம். கத்தோலிக்கர்கள் இந்து என்னும் சென்னைப் பத்திரிகைக்கு எழுதிய விஷயதானங்களையும், பெப்ரவரிமீ 26உ அப்பத்திரிகையில் தோன்றிய பத்திராதிபர் குறிப்பையும், இதை நமது திருச்சபை அதிகாரிகள் கண்டு விசனித்து மார்ச்மீ 22உ எழுதிய மறுப்புப் பிரசுரத்தையும் யாவரும் அறிவார்களே. அவ்வாலோசனையானது தென் இந்திய கத்தோலிக்கு சங்கத்தை யழித்து, நாசம்செய்ய சேசு சபையார் செய்த பித்தலாட்டம் என இன்னம் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் சொல்லிவரமாட்டார்களென நம்புகிறேன். இனி நடக்கப்போவதாக சொல்லிக்கொள்ளும் மாமரியின் மகா சங்கத்திலாவது இவ்வாலோசனையை மீண்டும் கவனிப்பார்களாக.

பாமாவில் பிரசுரமாகும் "நேசன்" என்னும் பத்திரிகையின்மூலியமாயும், லாஹூரில் பிரசுரமாகும் கத்தோலிக்கு வர்த்தமானியின் மூலியமாயும் வட இந்தியாவிலிருக்கும் சங்கங்களெல்லாம் ஒரு பொது சங்கமாக ஐக்கியப்பட்டதாக வதந்தி. அப்படியே இப்பக்கமும் ஆகக் கடவதாக.

முன்னிலும் அதிசீக்கிரமாக அப்படிப்பட்ட ஐக்கியம் உண்டாகுமென நம்புகிறேன். சில நாட்களுக்குமுன் லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் கரஸ்பாண்டண்டாகிய கனம் வின்சன்ட் ஷிரோல் என்பவர் சொன்னதுபோல், இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் மண்டேகு செம்ஸ்பர்டு சீர்திருத்த மசோதா சம்பந்தமாய், தாழ்ந்த ஜாதியாரை கல்விக் கைத்தொழில், விவசாயத்தில் தேர்ச்சிசெய்து வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஏற்பாட்டின்படி தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தெரிந்துகொள்ளும் திறமைசாலிகளாக்க முன்வந்திருக்கிறார்கள். இக்காரணத்தின் பொருட்டு கனம் பாடிஸன I. C. S. என்பவரைச் சென்னைக்கு நியமித்திருப்பதை அறியாதாரில்லை. இந்துக்களுள்ளும் இங்கிலீஷ் படிப்பின் பயனாக ஓர் வித கிளர்ச்சியுண்டாகி, அரசாங்க சம்பந்தமாயாவது தாழ்ந்த ஜாதியாரின மட்டில் கருணை காண்பித்துவருகிறார்கள். இந்நோக்கத்தை முன்னிட்டு பரோடாவிலும் மைசூரிலும் எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகள் மெத்த. மலையாள தேசத்தில் உடல தீட்டு, நிழல் தீட்டு சம்பந்தமாய் நடந்த பிரமாதமான கூட்டங்கள் மேய்ல பத்திரிகையில் கண்டிருந்தன.

இந்தியாவே, மாறுபாடடைந்துவருகிறது. இன்னம் அரசாங்க சீர்திருத்த மசோதா அமுலுக்கு வந்துவிட்டால் அநேக மாற்றங்கள் உண்டாகும். ஆனதால், இங்கிலாந்தில் அவ்வளவு விருத்தியில்லாத அக்காலத்தில் கத்தோலிக்குத் திருச்சபை ஒன்றினால் உண்டான ஐக்கியம் இக்காலத்தில் ஒரு பக்கத்தில் கத்தோலிக்கு திருச்சபையாலும், மறு பக்கத்தில் இங்கிலீஷ் படிப்பாலும் அது மாற்றும் மன நிலைமையாலும் சீவிய வகையாலும், இன்னொரு பக்கத்தில் அரசாங்க சீர்திருத்தத்தினாலும் சீக்கிரம் முடியும்.

இந்திய கிறீஸ்துவர்களோவெளில் தங்கள் ஜன்ம சத்துராதியாகிய ஜாதி யேற்பாட்டைத் தங்கள் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பாகப் பகைத்து வெறுத்து, பலவிதமான சாக்குகள் சொல்லித் தலைமறைவாயிராமல் திடாரிக்கத்துடன் முன்வந்து, தங்கள் சகோதரர்களுக்காக உழைப்பார்களேயானால், அப்போதுதான் முன்னேற்றம், சமத்துவம் பெருமையாவும் உண்டாகும். மற்றப்படி ஜாதியாரிடம் தங்கள் முன்னேற்றத்தை எதிர்பார்ப்பது பேதமையும் அநுபோகக் குறைவுமாம்.

எதிரொலி.

III

கடந்த மே மாத ஆயனில் கனம் எதிரொலியென்பவர் கொடுத்திருந்த வியாஸத்தைக் கொண்டு அவர் "இந்திய கிறீஸ்துவர்களென்றவொரு வகுப்பையே, இரண்டு வகுப்பாக்கி, வகுப்புக்கோர் பெயரையுந் தந்து, வேற்றுமை வைராக்கியத்தை உணர்த்துகிறார்" என்பதாக மணப்பாடு கனம் க. அ. சி. அவர்கள் சென்ற ஜூன் மாதச் சஞ்சிகையில் கூறியுள்ளார். ஆனால் கனம் எதிரொலியென்பவர் "எவரையும் அவரவ ரழைக்கப்பட விரும்பும் பெயர் பட்டத்துடனழைப்பதே ஆங்கிலேய முறையாயிருப்பது ஞாயமாயிருக்குமாயின்....." என்று துவக்கி அப்படியிரு வகுப்பாகச் சொல்லியது ஓர் போக்குக்காகவும், விஷயத்தை நன்றாய் விளக்கிக் காட்டும்பொருட்டு ஓர் உதாரணத்துக்காகவுமெடுத்துக்காட்டியிருக்கலாமேயொழிய, மெய்யாகவே அதிற் குற்றம் பாராட்டக்கூடியதொன்றுமில்லை. ஆகவே, அவ்வாக்கியத்தை, ஆற அமர ஆழ்ந்து ஆலோசிக்குங்கால், கனம் எதிரொலியென்பவர், அப்படி இந்திய கிறீஸ்துவர்களென்றவொன்றையே, இரண்டு வகுப்பாக்கிப் போடவுமில்லை, வகுப்புக்கோர் பெயருந் தந்துவிடவுமில்லை. தந்து, வேற்றுமை வைராக்கியத்தை உணர்த்திவிடவுமில்லை என்பது திண்ணமாய் விளங்குகிறது.

இரண்டாவது :—கனம் எதிரோவியென்பவர், தாம் எழுதிய அதே வியாஸத்தில் "அப்படிப்பட்ட தனிச் சங்கம் திருச்சினாப்பள்ளியில் ஸ்ரீமான் D. A. G. இரத்தினம் B.A.,L.T. அவர்கள் மற்றும் கனவான்கள் முயற்சியால்..... துவக்குவார்களாக" என்றிருந்ததை கனம் க. அ. சி. அவர்கள் கண்ணுற்றிருந்தும் "யாரோ ஒருவர், திருச்சியில் இனிமேல், எப்பொழுதோ ஏற்படுத்தப்போகிற தனிச் சங்கத்தில்....." என்பதாக ஏனோதானோவென்றும் ஏதுந் தெரியாதவர்போலும் ஏளனம் பண்ணுகிறார். மேலும், இது நிற்க, "ம-ா-ா-ஸ்ரீ D. A. G. இரத்தினம் B. A., L. T. அவர்களை நமது நண்பர் அறியாதவரா? அப்படி அறியாமற்போய் விட்டாலும் பத்திரிகை வாயிலாய் ஒருவருடைய நாமம் கூறப்பட்டிருக்கும்பொழுது அப்பெயரைச்சொல்ல ஏதுகாரணத்தாலோ நமது நண்பருக்கு மனமில்லாமல், அவ்வளவு அலட்சியமாய் (யாரோ இனிமேல் எப்போதோ என்று) சொல்வதின் காரணமென்னவோ? "மனத்த கருப்பெனின நல்ல செயினும், அனைத்தையும் தீயவேயாக்கும்" என்று நமது நண்பர் சென்ற மாதத்தில் செப்பியது தமக்கே உரித்தானதுபோலும். ஏனெனில், கனம் எதிரொலியென்பவருடைய வியாஸத்தில் விபரீத அர்த்தங்கள் ஒன்றுமேயில்லாமையாயிருக்க "வேண்டாம் என்பவனுக்குக் கைபட்டாலும் குற்றமாம் காற்பட்டாலுங் குற்றமாம்" என்றபடி ஒருவர்மேல் வெறுப்புக் கொண்டவிடத்து, அவர் நியாயமான காரியங்களைச் சொல்லுங்கால்கூட, அவைகளை அநியாயமான அர்த்தத்தில் எடுத்துக்கொள்வதாலேயே "எதார்த்தவாதி வெகு ஜன விரோதி" என்பதும் "உள்ளதைச் சொன்னாலுடம்பெரிச்சல்" என்பதும் நிதரிசனமாவது சகஜந்தானே.

மூன்றாவது :—கனம். க. அ. சி. அவர்கள் "இவர்கள் சங்கத்து விசாரணைக் கர்த்தர்களாவதற்குத் தடைசெய்ததார்? கையைப் பிடித்ததார்? கதவை அடைத்ததார்? வாருங்கள் வாருங்கள் என்றுதானே கூப்பிடுகிறார்கள்" என்கிறார். 1913, 1914-ம் வருஷங்களில் திருச்சியிலுள்ள தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்படும் கிறீஸ்துவர்களில் சிலர் ஷை ஊரிலுள்ள தெ. இ. க.

சங்கத்தின் பிரதம மெம்பர் ஒருவர்மூலமாய்த் தங்களைத் திருச்சியிலுள்ள தெ. இ. க. இலேச் சங்கத்தில் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனப் பிரயாசைப்பட்டும் அவர்களுக்கு அச்சங்கம் அவ்விடத்தில் இடங் கொடாமற்போகவே மேற்படி பிரதம மெம்பர், சென்னையிலுள்ள தெ. இ. க. தலேச் சங்கம், இவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியுமென்று சொல்ல, அச்சிறீஸ்துவர்கள் அவரிடம் தலேக்கு எட்டணாவாகப் பிரவேசக்கட்டணம் (Entrance fee) கொடுத்தும் பதிலுக்குக் காத்திருக்க, கொஞ்ச காலேக்குப்பிறகு வந்த தகவல்மூலமாய், அத்தலேச் சங்கமும் இவர்களுக்கு இடங் கொடுக்கமுடியாதென பணமும் வாபீஸ் செய்யப்பட்டதை இவ்விடத்தில் குறித்துக்காட்டுவது உசிதமாயிருக்கிறது. இப்படியாக இவர்களைச் சேர்க்க வொட்டாமல் தடைசெய்ததால் இவர்கள் கையைப் பிடித்தமாதிரியாகவில்லேயோ? சதையை மடைத்த மாதிரியல்லவோ? இதுதான் "வாருங்கள் வாருங்கள்" என்று கூவினதோ? கூவிக்கூவி ஆவியும் சோர்த்துபோய், வாருங்கள் என்று வாயும் வலித்துவிட்டதுபோல் சாதாரண மெம்பராவதற்கே இவ்வளவு தானத்திலிருக்கும்போதுதானு விசாரணைக்கர்த்தர்களாகிற துக் கிடங் கிடைக்கப்போகிறது? சென்ற வருஷாந்திரக் கூட்டத்தின்போது "உங்களே மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளமுடியு" மெனச் சொன்னதை ஆதாரமாக வைத்துக்கொண்டு கனம் க. அ. சி. அவர்கள் அப்படிச் சில வேளே சொல்லுகிறாக்கும். அதுவும்தானென்ன? தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்படும் அவர்கள் தங்களாகவே ஒன்றுகூடிவந்த பிரயாசையின் பயனுக்காகவும், அந்தேரத்திலுள்ள சஞ்சலத்தை ஓர் வகையி லொழிக்கவும், வேண்டாவெறுப்புக்காகவும் விளம்பிய வெறும் வார்த்தை தானே. வலியப் போயும் வார்த்தை உருசி முதலாயில்லேயென்பதைக் கண்டதினலல்லோ "இதிற் சேர்ந்தென்ன பிரயோஜனம்?" என்றூர் கனம் எதிரொலியவர்கள் ஆம் அவர் சொல்வதும் நியாயமே.

நான்காவது:—கனம் க. அ. சி. அவர்கள், ஜாதி துவேஷத்தை முற்றிலும் நீக்கினவராகக் காட்டிக்கொண்டபோதிலும், எப்படியாகிலும் இவர்கள் இழிவானவர்கள் என்று எடுத்துக் கூறவே, தம் வியாஸங்களில், அவஸரமில்லாத போதுகூட, பற்பல ஜாதிகளேக் கூறி எடுத்துக் காட்டாதவிதமாய் எடுத்துக்காட்டுகிறூர் (Indirect way of pointing) என்பதை எண்ண இவர் எவ்வளவுதூரம் ஜாதி துவேஷத்தை முற்றிலும் வெறுத்தவரென்பது "உள்ளங்கை நெல்லிக்கனியே!" யாரும் தாம்போன போக்காய்த் தடபுடலுடன் எதையும் எழுதிவிடலாம் தான். பேச்சுப் பேசுகிறதாயிருந்தால் எவ்வளவும் பேசலாந்தான். ஆனுல் "வாக்கிலல்ல, உன் நிரிகையில் காட்டு" என்ற வாக்கியத்தைக் கைக்கொள்வதல்லவோ கற்ருேர்களின் கடமை! அப்படிக் கைக்கொண்டிருந்தால் இவ்வளவு நாலேக்குள் ளிவ்வேழைக் கிறீஸ்துவர்கள் எவ்வளவோதூரம் முன்னடைந்திருக்கக்கூடும்! உயர்ந்தோர் என்று சொல்லும் இந்து மதஸ்தர்களும், இன்னும் பிராமணர்களால் முதலாய்த் தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்படும் இவர்கள், கிறீஸ்துவர்கள் என்ற கண்டமாத்திரத்தில் யாதோர் ஜாதி பேதத்தையும் மனதில் வையாமல் பொது இடங்களிலும் மற்றும் இல்லங்களிலும் எவ்வளவோ சகோதர பாந்தவ்யம் பாராட்டுகிறூர்கள். அதற்கு விரோதமாய், உயர்ந்தோர் என்று சொல்லும் ஜாதிக் கிறீஸ்துவர்களித் பலர், இத்தாழ்ந்த கத்தோலிக்கரைக் கண்ட விடத்திலெல்லாம் கர்ன கடோமாய்ப் பார்ப்பது காணுத விஷயமா? இவர்கள் இரு வகுப்பாரும் ஒரே இடத்தில் வேலே செய்யும் போது முதலாய் "இவன் கிறீஸ்துவனென் ரூலும் இன்ன ஜாதிப் பயல்" என்று இயம்புகிறது மில்லேயோ? தாழ்ந்த வகுப்பானுெரு வன், தான் கிறீஸ்துவனென்ருலும் "ஆம் கல்லாம் கிறீஸ்துவர்கள்தான், நீ என்ன வருணம்?" (ஜாதி) என்பதாகக் கேட்கிறதில்லேயோ? இவைகளெல்லாம் எதினுலே? எதினுலென்ருல் இவர்கள்மேல்கொண்ட வெறுப்புப் பொருமையாலும், ஜாதித் துவேஷத்தினுலுமேயாம். இப்படிப் பொது இடங்களில் முதலாய் துவேஷங்கொண்டவர்கள்தானு தாழ்ந்தோரைக் கவனிக்கப்போகிறூர்கள்? சிங்காரமாய்ப் பேசப்படும் வார்த்தைகளெல்லாம், வெறும் வார்த்தைகளும், வேண்டாவெறுப்புக்காகச் சொன்னவைகளும், உயிரற்ற வார்த்தைகளுமே யொழிய வேறில்லே.

ஆனுல் நாகரீகமும், கல்வியுணர்ச்சியும் காலுக்கு கால் வீர்த்தியாகிக்கொண்டுவரும் மிக்காளில், பற்பல இயக்கத்தார் பற்பல காரியங்களில் ஒருவருக்கொருவர் ஒற்றுமையை நாடிப்

போய்க்கொண்டிருக்க, கத்தோலிக்கராகிய நாம் நல்ல மனதுடன் ஒற்றுமையை நாடாது, நம்மவருக்குள்ளேயே சபிக்கப்பட்டதுக்கொப்பான ஜாதிபேதத்தால் அலேக்கழிக்கப்பட்டுத் தத்தளித்து நிற்பது மெத்த விசனத்துக்குரியதே. ஆகையால் "உங்களுக்குள் சமாதானம் உண்டாவதாக" என்று உலகவிரட்சகர் உரைத்த ஒப்பில்லா வாக்கியத்தைக் கண்டுணர்ந்து, கத்தோலிக்கராகிய நாம் சத்திய திருச்சபையின்கீழ் வளரும் அனேவரையும் சமத்துவமாகப் பாராட்டி, அகத்திலும் புறத்திலு மன்புடனுதரித் தாண்டவனினருளேப்பெற மீண்டுங் கூறும்

பர்மா,
16—6—19. } முப்பரிதாபிகள்.

IV

சங். பத்திராதிபரே! மாண்டலே கண்பர் Mr. P. ஆரோக்கியம் என்பவர் கொண்டசந்தேக நிவர்த்தியாக ஏப்பிரல் மாத கல்லாயனில் நான் எழுதிவிடுத்த கடிதத்துக்கு, மாண்டலேவாசி எனமற்ருெருவர் சென்றமு நல்லாயனில் மறுப் பெழுதி இருந்ததைக் கண்ணுற்றேன். அதில் "திருச்சியி லன்ற தாழ்ந்த வகுப்பாரின் பிரதிநிதியென வந்து பிரசங்கமேடைமீதேறி அக்கிராசனுதிபதிகளிடம் பேச உத்தரவுகேட்டதற்கு, அவர்கள் அவருக்குச் சில புத்திமதிகளேச் சொல்லி, எற்கெனவெ இக்கூட்டத்துக்காக குறிக்கப்பட்டிருக்கும் கால அட்டவணே ஒழுங்கின்படி விஷயங்கள் நடந்தேறினபின் பேசலாமென உத்தரவளித்ததாய்" நான் கூறியிருக்க, அவர் அதை மறுத்து "டை பிரஸிடி கடைசியிலாவது உத்தரவு கிடைக்குமோவென்று கேட்டதற்கும் அக்கிராசனுதிபதியாதொரு பதிலும் உரையாததுகண்டு, பொறுமையோடு விண்ணப்பித்தவர்கள் வெளியேறிவிட்டனர். இதுதான் உண்மை விஷயம்" என்றிருர். உண்மையதுவல்ல. நான் முன்னமே கூறியுள்ளபடி, பின்னர் பேசலாமென்று அக்கிராசனுதிபதி மொழிந்தாரென்றதும். முதலிலேயே பேசவிடவில்லேயே என்ற முறைப்பாட்டினுல் மூர்க்கத்துடன் முறுமுறுத்துக்கொண்டு உடனே அப்பிரதிநிதிகளும்மவருடன் வெளியே போய்விட்டார்களென்பதுவும், சுத்த உண்மை. இதற்குச் சென்னே அதிமேற்றிராணியாண்டவரவர்களும், அக்கிருந்த மற்றக் குருமார்களுமே சாகுஷி பகர்வார்களானுல் நமது கண்பர் என்ன சொல்லுவாரோ அறிகிலேன். உண்மையை ஒப்புக்கொள்ள மனதில்லாதவருடன் நாம் எவ்வளவு அழுத்தமாய்ப் பேசியும் என்ன பலன்? பொய்த் துயில் கொள்வான்தனே எழுப்ப வசமோ? மேலும் நான் அங்கிருபத்தில் கூறியுள்ள வேறு விஷயங்களெல்லாம் புகழத்தக்கது, ஐயமில்லாதது எனச் சொன்னுலும், கடைசியில் நான் ஆசார சீர்திருத்தஞ்செய்வதில் எவரும் ஆத்திரப்பட ஒண்ணுது. அப்படி ஆத்திரப்பட்டவர்கள் அபஜெயப்பட்டார்கள் என்பதை உதாரிக்க, புதுச்சேரிலும் தஞ்சாவூரிலும் நடந்தவைகளேச் சுட்டிக்காட்டியிருப்பதை நமது மாண்டலேவாசி உணர்ந்துகொள்ளாமல் "புதுச்சேரியிலும் தஞ்சையிலும் கலகஞ்செய்த துண்மையாயினும், திருச்சியி லப்படிக் கலகம் செய்ய ஏற்பட்டவர்களல்ல" என்கிறூர். திருச்சியில் வந்தவர்களோக் கலகஞ்செய்யவந்ததாக நான் சொன்னதில்லே. இவை நிற்க இவர் முடிவில் "இந்துக்களில் சய ஆகஷித் திராவிடர் தாழ்ந்த வகுப்பினரைத் தங்களோடு சமரசமாக்கவும், முன்னேற்றவும் ஏதேதோ முயற்சி செய்துவருகின்றனரென்றும், கத்தோலிக்கருக்கு அவ்வித முயற்சியில்லேயென்றும், அந்தோ! இவ்வேழைகளுக்குக் கத்தோலிக்கு நீதியும் நூக்கமும் காண்பிப்பாரில்லேயோ! பரிதாபம்" எனவும்சொல்லிப் பரிதபிக்கின்றூர். இவ்விஷயமாய் நமது நண்பர் அறியவேண்டியதாவது: இந்துக்கள் இவ்வாறு பிரசங்கமேடைகளில் பேசினுலும் அப்பேச்சுக்கு ஏற்றபடி எவரை முன்னேற்றினுர்கள், சமரசமாக்கினுர்கள்? இதுவரையில் இருந்ததுபோலவே இன்றும் தாழ்ந்த வகுப்பினரைத் தங்கள் கோவில்களில் நுழையவிடாமலும், கல்லூரிகளில் தங்கள் பிள்ளேகளோடு சேர்த்து பயிலவிடாமலும், தீண்டப்பாடாதென்னும் ஜாதீகத்தைக் கடைப்பிடித்தவர்களாகவுமே யிருக்கிறூர்கள். கிறீஸ்துவர்களோ இன்றுமாத்திரமல்ல, என்றுமே சகோதரத்துவ உரிமையுடையவர்களாய் எல்லா மேன்மையும் அடைந்துவருகிறூர்கள். ஆனுல் சிற்சில இடங்களில் கல்லூரி வீடுகளிலும், கோவில்களிலும் இயூரேஷியர் என்பவர்கள் தங்களுக்கென்றும், ஜாதியை அனுசரிக்கிறவர்கள் அவரவருக்கென்றும், ஜாதியை அனுசரியாதவர்கள் தமக்கென்றும் குறிக்கப்பட்ட இடங்களில் இருக்கவும், உண்ணவும் சேர்ந்தாலும், பலனடையவேண்டிய விஷயங்களிலும் முன்னேற்றமடையவேண்

டிய விஷயங்களிலும் யாவரும் தாரதம்மியமின்றிச் சம சுதந்தரமுடையவர்களாயிருந்தும் அடைந்துவருகிறார்கள். இப்படியே தாழ்ந்த வகுப்பார் எனப்படுவோர் பாலையக்கோட்டை, திருச்சினாப்பள்ளி முதலிய விடங்களிலுள்ள போர்டிங் ஸ்கூல்களில் படித்துப் பாசாகி ரிவினியுபோர்ட்டு முதலிய உத்தியோகசாலைகளில் உத்தியோகஞ் செய்பவர்களும், குரு மடங்களில் படித்துக் குருவானவர்களும் இல்லாமற்போகவில்லை. இப்படியிருக்க, இவ்விதமாக யாதொரு ஆசார சீர்திருத்தமும் செய்யாத இந்துக்களை நண்பர் மேற்கோளாக எடுத்துப்பேசியது உசிதமாகாது. அன்றியும் "நீங்கள் கேட்கும் நன்மையை அடையாத மெம்பர்களாகுங்களென்ற மறுமொழியே அன்று கிடைத்தது" எனக் குறைகூறுகிறார். கேட்கும் நன்மை என்ன? எந்தக் கோவிலிலும் சிலருக்கென்று வேறு இடங் குறியாமல் யாவரும் ஒரே யிடத்தில் சமரசமாயிருப்பதுவும், கத்தோலிக்கு ஸ்கூல் விதிகளில் யாவரும் உடனிருத்தண்ணுவதும், கத்தோலிக்கரெல்லாரும் பேதமின்றி சம்பந்தம் வைத்துக்கொள்வதுமாகிய காரியங்களா? இவை கட்டளைக் குருக்களாலும், கல்லூரி விதி அதிகாரிகளாலும், அந்தந்தக் குடும்பத்தாராலும் ஆகவேண்டியதொழிய தெ. இ. க. சங்கத்தாலாகும் காரியமல்ல வாகையால், அச்சங்கத்தினதிகாரிதம்மால் கூடாததைக் கூடாதென்ருெழிய வேறல்ல. ஆகையால், நான் என் முன்னிருபத்தில் கூறியபடி காலத்தானே இவைகளைக் கூடிய அளவில் குணப்படுத்திவிடுமேயல்லாது ஆத்திரப்பட்டாகுங காரியமல்ல.

கண்டது விண்டோன்.

விளம்பரம்.

இதனல் சகலருக்கும் தெரிவித்துக்கொள்வதாவது:—சென்ற மூன்று வருஷங்களாக என் கையொப்பமிட்ட சில தப்பறையான பத்திரிகைகள் பிரசுரம் செய்யப்பட்டன. அதைப்பற்றி நான் இப்போது வருத்தப்படுகிறேன்.

இப்படிக்கு,
(Sd) PONNUSAWMY,
ராம முனிசீப்,
வலம்புரி, தஞ்சாவூர்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

இந்திய ஸ்திரிகளின் சர்வகலாசாலே.—இச்சர்வகலாசாலே (யூனிவேர்வஸிடி)யில் சமீபத்தில், ஸ்ரீமதி வருதை வஸ்தேயென்னும் மாதராளுக்குப் பி. ஏ. என்னும் வித்தியாபட்டம் கொடுக்கப்பட்டது. இக் கலாசாலேயில் பி. ஏ. பட்டம் பெற்றவர் இவரே முதல்வராவர்.

இங்கிலாந்தின்யுத்த கடன்.—ஐரோப்பிய யுத்தத்தினல் இங்கிலாந்துக்கு ஏற்பட்ட கடன் 700 கோடி பவுன் என்றும், அந்தத் தேசம் பழய நிலேமையடைவதற்கு வேண்டியது 300 கோடி பவுன் என்றும், ஆக 1,000 கோடி பவுன் வேண்டுமென்றும், அதற்கு வருஷாந்தர வட்டியே 4,000 பவுன் ஆகுமென்றும் சொல்லப்படுகிறது.

அந்தகனன மெற்ரிக்குலேட்.— கல்கத்தா கமோதிகள் கல்விச்சாலேயில் சமீபத்தில் "மெற்ரிக்குலேஷன்" பிரவேச பரீட்சையில் தேறின மிஸ்டர் நாகேந்திரநாத்சென் என்பவரைப்பற்றி நமது நண்பர்களுக்குத் தெரியும் இவர் இவ்விதமாகக் கஷ்டப்பட்டுக் கல்வி கற்றதற்கு வெகுமதியாக அவர் ஊர் ஜில்லா போர்டார் அவருக்கு ரூபாய் 200 கொடுத்ததோடு அவர் இன்னும் பிரயாசைப்பட்டு உயர்தரக் கல்வி கற்பதற்கு அநுகூலமாம் பொருட்டு, மாதம்மாதம் ரூ. 50 உபகாரச் சம்பளம் உதவிவருகிறார்கள்.

கேம்பிரிட்ஜ் கணித சாஸ்திரிகள்.—கேம்பிரிட்ஜ்சர்வகலாசாலேயில், சமீபத்தில் நடத்தப்பட்ட கணித சாஸ்திரப் பரீட்சையில், இந்தியர் மூவர் தேறியிருக்கிறார்கள். இவர்களுக்கு ராங்கிலர் என்னும் பட்டப் பெயருண்டு. ஒருவர் பம்பாயையும், ஒருவர் பூனுவையும் இன்னெருவர் சென்னையையும் சேர்ந்தவர்கள். சென்னையைச்சேர்ந்தவர் மிஸ்டர் எஸ். ஜி. சங்கொடையன் என்னும் பெயரினர். இவர் ஈரோட்டுக்கடுத்த காங்கயன்பாளேயம்என்னும் ஊர் கிராம முனிசிப்பின் குமாராராவர். கவுண்டர் குலத்தைச் சேர்ந்தவர். இவர் சென்னைச் சர்வகலாசாலேப் பி. ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் முதல்வராய்த் தேறினமையால், இந்திய கவர்ன்மெண்டாரின் உபகாரச் சம்பளம் பெற்றுச் சீமைக்கு அதிக கல்வி கற்கப்போய் வெற்றி விருது பெற்றுக்கொண்டார்.

பம்பாய் அதிமேற்றிராணியார்.—யுத்தம் ஆரம்பித்தபோது மிஸ் அதிமேற்றிராசனத்துக்கு உதவி செய்யும்படியாக பம்பாய்க்கு வந்திருந்து ஐரோப்பாவுக்குத் திரும்பிப்போய் தற்போது உரோமாபுரியிலேயிருக்கின்ற சங். டாக்டர் கூடியர் சுவாமிகள் பம்பாய் அதிமேற்றிராணியாராய் நியமிக்கப்பட்டு விட்டார்களென அறிந்து சந்தோஷிக்கிறோம். இவர் சேசு சபையைச்சேர்ந்த இங்கிலீஷ் குருவானவர். பேர்பெற்ற பிரசங்கச் சமர்த்தர். நங்களுக்கு ஓர் இங்கிலீஷ் அதிமேற்றிராணியாரே வேண்டுமென்று நெடுநாள் விண்ணப்பித்துக்கொண்டிருந்த பம்பாய் கிறீஸ்துவர்களுக்கு இச்செய்தி மிக்க குதூகலத்தை விளைத்திருக்குமென்பதில் ஐயமில்லே.

ஏட்டிக்குப் போட்டி.—வட இந்தியாவில் ஒரு இந்திய நியாயாதிபதியும், ஒரு ஐரோப்பிய துரையுமாக இருவரும் முதல் வகுப்பு ரெயில்வேவண்டியில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார்கள். இந்தியர் நடக்கையில் அவர் தரித்திருந்த பாதரட்சை கொஞ்சம் சப்தித்துக்கொண்டிருந்தது. இந்த சப்தமானது அந்த ஐரோப்பியருக்குப் பொறுக்கொணு அருவருப்பாயிருந்தமையால், இந்தியர் பாதரட்சையைக் கழற்றிவிட்டு, சற்றுக் கண்ணயருஞ் சமயமாயிருக்கையில் அதை துரை எடுத்து வெளியே எறிந்துவிட்டார். இதைப் பார்த்த இந்தியர், அவ்வைரோப்பியர் தமது சட்டையைக் கழற்றிவைத்துவிட்டு நித்திரைபோகையில், அச்சட்டையைத் தூக்கி வெளியே யெறிந்துவிட்டார். சட்டையைக் காணுத ஐரோப்பியர் "என் சட்டை யெங்க".யென்று இந்தியரைக் கேட்கப் பிந்தினவர் "உமது சட்டை என் பாதரட்சையைக் கொண்டுவரச் சென்றது" என்று விடைபகர்ந்தனராம். என்னே வேடிக்கை யிது!

சமாதான உடன்படிக்கைக்குக் கடைசியாய் ஜெர்மனியர்கள் கையொப்பமிட்டுவிட்டார்கள் என்ற சந்தோஷ செய்தி ஜூன் மாதம் 29-ந் தேதி பிற்பகலில் கிடைத்தது. ஜெர்மன் இராஜாங்கத்தாருடைய உத்தரவின்பேரில், உடன்படிக்கைக்குக் கையொப்பமிட வெர்சேல்ஸ் நகரத்துக்குப்போன ஜெர்மன் பிரதிநிதிகள் முதலில் இரண்டொரு நிபந்தனைகளுடன் கையொப்பமிடுவதாகச் சொன்னர்கள். அதாவது, யுத்தத்திற்கு ஜெர்மனியே பொறுப்பு என்றுள்ள பிரிவையும் நஷ்டஈடு செய்யக் குறிக்கும் பிரிவுகளையும் தவிர்த்து பொருளாதார நிபந்தனைகளும், பண சம்பந்தமான நிபந்தனைகளும் ஜெர்மனியால் நிறைவேற்ற முடியாதனவாயிருப்பதால் அவைகளை நிறைவேற்றுவதற்கு அது பொறுப்புள்ளதாகாது என்ற ஷரத்தைச் சேர்த்தும் கையொப்பமிடுவோமென்றார்கள். நிறைவேற்றமுடியாதனவும், பொறுக்கக்கூடாதனவுமான பல நிபந்தனைகளை உடன்படிக்கைகொண்டிருப்பதால் அதில் கையொப்பமிட ஜெர்மனி தானுக சம்மதப்படவில்லை; கட்டாயத்தின்மேல் சம்மதிக்கிறது என்று சொல்லப்பட்டது. ஆனல், நேசக் கட்சியார், யாதொரு நிபந்தனையுமின்றிக் கையெழுத்திடவேண்டும்; இல்லாவிடில் இச்சணமே ஜெர்மனிமீது படையெடுக்கப்படுமென்று அச்சுறுத்த வேறு வகையில்லாமல் கையெழுத்திட்டார்கள். சமாதானக் கொண்டாட்டத்தை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏக காலத்தில் தக்க சிறப்பலங்காரததோடு ஆகஸ்டு மாதத்தில் நிறைவேற்றப்போவதாகச் சொல்லப்படுகிறது.

ஜெர்மானியரின் மோசச் செய்கை.—யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி ஜெர்மனியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட யுத்தக் கப்பல்களின் தொகுதியொன்று நேச ராஜாங்கத்தாரின் பொதுச் சொத்தாக பிரிடிஷாரிடம் ஸ்காப்பி என்னுமிடத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஆனல் அக்கப்பல்கள் அனேகமும் ஜெர்மன் மாலுமிகள் வசத்திலேயே விடப்பட்டிருந்தன. அவர்கள் அவைகளில் "பேடன" என்னும் ஒன்றைத் தவிர மற்றவைகளையெலாம் உடைத்து ஜலத்துக்குள் அமிழ்த்திக் கடலுக் கிரையாக்கிவிட்டனர். தங்கள் கப்பல்களை அன்னியர் கையாளப் படாது என்ற வைராக்கியத்தினலும், எதிரிகளுக்கு நஷ்டம் வருவிக்கவேண்டு

மென்ற மோச எண்ணத்தினலும் அப்படிச் செய்தனர்போலும். அப்படிச்செய்து விட்டு அம்மாலுமிகள் சுமார் 5,000 பேர் படகுகளிலும் தண்ணீரில் நீந்தியும் தப்பியோட எத்தனிக்கும்போது பிரிடிஷ் மாலுமிகளால் வெடி தீர்க்கப்பட்டு பலர் காயப்படுத்தப்பட்டும் சிலர் கொல்லப்பட்டும் போயினர். மூழ்கடிக்கப்பட்ட யுத்தக் கப்பல்களுக்கு ஈடாக ஜெர்மானியர் நேசக் கட்சியாருக்கு 70 கோடி பவுண் தங்கமாகவே கொடுக்கவேண்டுமென்றும், அவர்கள் செய்த மோசச் செய்கைக்கு அபராதமாக கீல் கால்வாயை நேசக் கட்சியார் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்றும் பிரான்சுக்குச் சேரவேண்டிய பங்குக்காக அதன்வசம் ஏற்கெனவே ஒப்புவிக்கப்பட்டிருக்கும் ஜலக்கீழ்க் கப்பல்களையும், சில வர்த்தகக் கப்பல்களையும் அதற்குக் கொடுத்துவிடவேண்டுமென்றும் பிரென்சுக்காரர் கேட்கிறார்கள். மெ மோசச் செய்கைக்குக் காரணமாயிருந்தவன் மாலுமித்தலைவனை வான்ரூடர் என்று தெரிகிறது. இதைப்பற்றி அவனைக் கேட்டதற்கு அவன், யுத்தத்தில் எவரும் சரண் அடையக்கூடாது என்ற மாஜி கெய்சரின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தேதான் அக்கப்பல்களை நாசஞ்செய்ததாக, விடைபகர்ந்தானும். என்னே கீழ்ப்படிதல்! யுத்தஞ் செய்யும்போது சரணடைதல் கூடாது. யுத்தம் நின்று யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு ஈடாக விடப்பட்டிருக்கும் போது சைந்நியத்துக்கு சுவாதீனமேது?

சமாதானக் கொண்டாட்டம்.—ஜெர்மனிக்கும் நேசக் கட்சியாருக்கும் தற்காலம் நடந்துகொண்டிருக்கும் சமாதானப் பேச்சு, பிந்தினவர்களுக்கு அநுகூலமாய் முடிவடைந்து சமாதான உடன்படிக்கை கையொப்பமிடப்படுமானல் அவ்விசேஷ ஒப்பில்லாத சமயத்தைத்தக்க சிறப்புடன் கொண்டாடவேண்டுமென்றும் அதை எவ்வாறு கொண்டாடலாமென்றும், நேச ராஜ்ஜியங்களிலெல்லாம் ஆலோசனை நடந்துகொண்டிருக்கிறது. சென்னையில் இவ்விஷயமாக ஒரு கூட்டம், மாட்சிமை தங்கிய கவர்னர் லார்டு வில்லிங்டன் அவர்கள் தலைமையில் சென்றமீ 13-ந் தேதி நிறைவேறியது. அதில் வந்திருந்த பலரும் பல அபிப்பிராயங்களை வெளியிட்டார்கள். கடைசியாய் அவ்விஷயமாய் ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் விவரங்களையெல்லாம் போதித்துத் தெரிவிக்கும்படி ஒரு சிறு கமிட்டியொன்றை நியமித்திருக்கிறார்கள். பின்வரும் விஷயங்கள் பிரேரிக்கப்படுகின்றன. (1) பள்ளிச் சிறுவர்களுக்கு தின்பண்டம் வழங்கி அவர்கள் ஆடியோடிக் களிக்கச்செய்தல்; (2) ஏழைகளுக்கு அன்னதானமும் வஸ்திரதானமும் செய்தல்; முக்கிய பெரிய மனுஷருட்பட சகலரும் ஊர்வலம் செய்தல்; (3) திக்கற்றவர்களுக்கு விடுதியொன்று கட்டுவித்தல்; (4) கிராமங்கள் தோறும் தருமவைத்தியசாலை ஏற்படுத்தல் (5) அங்கங்கே வெற்றி ஞாபகஸ்தம்பங்கள் கட்டுவித்தல்; (6) சிறையாளர்களை விடுவித்தல்; (7) ஊரலங்காரம் தேரலங்காரம் செய்து கோவில்களெங்கும் நன்றியறிந்த வந்தனை ஆராதனைகளுடன் பூசை நைவேத்தியங்கள்செய்தல்; (8) கவர்ன்மெண்ட் ஆபீசுகளும் மற்ற பொது உத்தியோக சாலைகளும் மூன்று நாள் மூடப்படுதல்; (9) உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அரைமாதத்துச் சம்பளம் இனமாகக் கொடுத்தல்; (10) குறிக்கப்பட்ட தினத்தில் பொதுக் கூட்டங்களும், வேடிக்கை விநோதங்களும், பாணவேடிக்கைகளும் நடத்தல் முதலியன பிரேரிக்கப்பட்டுள்ளன. இவைகளில் எவை இறுதியில் அங்கீகரிக்கப்பட்டு நடைபெறுமோவென்பது பின்னர்தான் தெரியவரும். ஆகிலும், இக்கொண்டாட்டம் ஆகஸ்டு மீ 4-ந்தில்தான் அநுசரிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது.

ஜெர்மன் சாமான்கள்.—ஜெர்மன் சாமான்களும், ஆஸ்திரிய சாமான்களும் நூற்றில் ஐந்து பங்குக்கு அதிகப்படாமல் இறக்குமதிசெய்யலாமென ஒரு உத்தரவு பிறந்திருக்கின்றதெனக் கேள்வி.

ஓர் நியாயமான தீர்ப்பு.—இங்கிலாந்தில் ஒரு புண்ணியவான் தன் மரணசாதனத்தில் தான் குறித்த ஆத்துமங்களின் இளைப்பாற்றிக்காகப் பூசைசெய்ய ரூ 3,000மும், சில மடங்கள்முதலிய தருமஸ்தாபனங்களுக்கு இவ்வளவென்றும் எழுதிவைத்து, அவைகளுக்கு வேண்டிய பணத்தை வெஸ்ட்மின்ஸ்டர் அதிமேற்றிராணியாராகிய கார்தினல் போர்ன் ஆண்டவரவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று குறித்துவைத்திருந்தார். மெ புண்ணியவான் சொத்துக்களுக்குப் பாத்தியமுடையவனனவன், புரோடெஸ்டாண்டு மதஸ்தனயிருந்தபடியால், ஆத்துமாக்கள் பூசைக்காக அத்தனை பணம் போகிறதேயென்று ஆத்திரமும் காய்மகாரமுங்கொண்டவனுய், ஆத்துமாக்கள் பூசைக்காக மரணசாதனத்தில் எழுதிவைத்ததுதவறு, நியாயப்பிரமாணத்துக்கு ஒத்ததல்லவென்று வழக்குத் தொடுத்து முதல் நியாயஸ்தலத்தில் சென்ற வருஷம் ஜூன் மாதம் 4-ந் தேதி ஈவ் என்னும் நியாயாதிபதியால் தனக்கு அநுகூலமாகத் தீர்ப்புப்பெற்றுன். இதன்மேல் அப்பீல் செய்ததில் அங்கேயும் அவனுக்கு அநுகூலமாகவே தீர்ப்புசெய்யப்பட்டது. அதன்பிறகு, மெ கார்தினல் ஆண்டவரவர்கள் தக்க முயற்சி எடுத்து இவ்வழக்கை அவுஸ் ஆப் லார்ட்ஸ் என்னும் பார்லிமெந்துவரைக்குங் கொண்டுபோய் வாதித்ததில், அச்சபையார் மெ இரண்டுகோர்ட்டாருடைய தீர்ப்புகளையும் ரத்துசெய்து "மரித்தவர்களின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகப் பூசைசெய்ய பணம் மரணசாதனத்தில் எழுதிவைப்பது நியாயப்பிரமாணத்துக்கு ஒத்ததே" யெனத் தீர்மானித்தார்கள். இனிமேல் இவ்வித அநியாய வழக்கு எவனும் செய்யத் துணியமாட்டான். இவ்வளவும் செய்தது மதத்தீவேஷமும், பண ஆசையுமே.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக்கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-நபாயும், முழுக்கலத்துக்கு 4-நபாயுமாக முன்பணம் அனுப்பிவைக்கவும், குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

வேம்பார்.

எங்கள் பிரிய மாமனூர் சு. சூசை அந்தோனி பெர்ணந்தவர்கள் மதுரையில் கடந்தவாத ஜனனியால் பீடிக்கப்பட்டு எவ்வித அவுஷதப் பிரயோகங்களாலுங் குணப்படாமல் நாளது மாதம் 4-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு பரலோகபிராப்தியான பரிதாபமான துக்க செய்தியை இத்தால் தங்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதுடன் அவ்வாத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
மாமனூரை யிழந்து பரிதவிக்கும்,
A. FERNANDO.
S. NICHOLAS FERNANDO.
S. M. FERNANDO.
J. S. M. FERNANDO.
S. P. FERNANDO.

15th May, 1919.
Baratharajah Street,
Vembar.

தூத்துக்குடி.

திருமந்திரநகரமெனுந் தூத்துக்குடியின் கண் ஓர் திலகம்போல் ஜொலித்து யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு காலஞ்சென்ற ஸ்ரீமான் சூசைக் சோமஸ் பல்டாஞை அவர்களின் கனிஷ்ட புத்திரியும், சென்னப்பட்டணம்வேப்பேரியில் பிரபல வர்த்தகராகிய S. T. பல்டாஞை அவர்களின் பிரிய பத்தினியும் எனது அருமைக் கொழுந்தியமாகிய விரிஜித்தம்மாள் சோமஸ் ரூசே எனும் செல்வ மாது சில நாள் சுகத்தாழ்வாயிருந்து எவ்வித அவிஷதம் பிரயோகம்பண்ணியும் பிரயோஜனப்படாமல் இவ்வுலக அநித்திய வாழ்வு வேண்டாமென்ற வெறுப்போ, அல்லது திவ்ய சர்வேஸ்வரனுடைய தரிசனத்தைக்கண் டானந்திக்கவேண்டுமென்ற பேராவலோ, தனது கடைசித் தேவத் திரவிய அநுமானங்களை நல்லறிவுடன் பெற்று, அர்ச். பதுவை அந்தோனியார் திருநாளாகிய சென்றமீ 13உ நமது இரட்சகப்பெருமான் மரணித்த தினமும் சோமுமாகிய வெள்ளிக்கிழமை சரியாய் பகல் 3-மணிக்கு தனது அருமைப் பத்தாவையும், இரு மக்களையும், மற்றும் சகோதரர், சகோதரி இன பந்துக்களையும் பரிதபிக்கவிட்டு "சேசு மரி சூசை" எனுந் திருநாமங்களைப் பத்தியுடன் உச்சரித்து 28-வதுவயதில் தனதாற்றுமத்தை திவ்ய கர்த்தாவின் திருக்கரங்களில் ஒப்படைத்து மிக அமரிக்கையுடன் பாக்கியமாய் மரித்தனள். இதைக் கண்ணுறும் நண்பர்கள் இவ்வாற்றுமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக பிரார்த்தித்துக்கொள்ள மிகவே கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. I. P.

J. X. FERNANDEZ.

2-ம் பதிப்பு! பணப்பை 2-ம் பதிப்பு!!

(ஓர் இனிய தமிழ் நாவல்)

பணப்பேய் பிடித்து, தர்மம், அதர்மம் என்பதை சற்றும் பாராமல் ஆகாத இருத்தியங்கள் செய்து, தான் தேடிய பணமே தனக்கு உதவாததோடு "அடாது செய்பவர் படாது படுவர்" என்பதற்கிணங்க பல கேடுபாடுபட்ட ஒருவனைப்பற்றிய கற்பிதக் கதை. இது படிப்பதற்கு மெத்த வேடிக்கையாகவும் விநோதமாகவுமிருப்பதுடன் அனேக நன்னடத்தைக்குரிய பாடங்கள் இதில் அங்கங்கே காணப்படும். ஒரு விசை படிக்க ஆரம்பித்தவுடன் நடுவில் நிறுத்த மனம்வராமல் முடிவுவரைக்கும் படிக்க சலிக்காத ஆசைதரும் கதை. இதைப் படித்தவர்க்கே ருசிகரம் தெரியும். முதற் பாகம்—விலை அணா 0—6—0. இரண்டாம் பாகம்—(அச்சிலிருக்கிறது)

மானேஜர், "நல்ல ஆயன்" ஆபீஸ், பிராட்வே, மதுரஸ்.

ஓர் வேண்டுகோள்.

அர்ச். அடைக்கலமாதா கோவில் கட்டிட தருமம்.



1900ஆம் சேலம் ஜில்லா கிருஷ்ணகிரி தாலூக்கா, எலத்தகிரி கிராமத்தில், அர்ச். அடைக்கலமாதா பேரால் ஷெட் கோவில் கட்டத் துவக்கி, பணக் குறைவால் இன்னும் முடிவுபெறாமலிருக்கின்றது. இன்னுஞ் சுமார் 4,000 ரூ தேவை. அவ்வாண்டவளுடைய பக்தர்கள் செய்யும் பொருளுதவி வீண்போகாது. அவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் அவ்வாண்டவள் தம்முடைய அடைக்கலத்தில் வைத்து பாதுகாப்பாள். எவ்வளவு சொற்ப தருமமும் எம்மாலியன்ற சன்றியறிதலுடன் ஒப்புக்கொள்ளப்படும்.

				ரூ	அ	பை
ஏற்கெனவே வரவேற்றுக்கொள்ளப்பட்ட தொகை				311	6	
3474	No.	Rayappen	...	,,	5	12
3827	,,	Mariannen	...	,,	4	0
3913	,,	Rayappen	...	,,	4	0
3914	,,	Selvappen	...	,,	4	0
4648	,,	N. A. Joseph	...	,,	5	0
4803	,,	Divianathan	...	,,	2	0
1902	,,	Devasagayam	...	,,	4	0
903	,,	Susai Mudaly	...	,,	4	0
920	,,	Jeganathan	...	,,	4	0
921	,,	Mathias	...	,,	4	0
922	,,	Thangam	...	,,	3	0
955	,,	Ignácimuthu	...	,,	4	0
1063	,,	Susai Mudaly	...	,,	4	0
926	,,	Saverimuthu	...	,,	4	0
3921	,,	Rayappen	...	,,	1	0
4274	,,	Baboo	...	,,	0	4
ஆக மொத்தம்			...	,,	368	6

(83rd W. L. I. D. Coy. advance Base. M.-I. E. Force.)

எமது விலாசம்:—யெஸ். டாமினிக் சுவாமியார், எலத்தகிரி, வாட்டனபல்லி போஸ்ட்,

கிருஷ்ணகிரி தாலூக்கா.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11–16.)

புத்தகம் 17. | ஆகஸ்டு 1919. | இலக்கம் 8.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

ஞானஸ்நானச் சடங்குகளின்பேரில்

(முன் தொடர்ச்சி.)

பிறகு குருவானவர் ஞானஸ்நானம் பெற்றவனுடைய சிரசின் உச்சியில் பரிமள தைலத்தைப் பூசும்போது சொல்லுவதாவது.—"கண்ணீராலும் இஸ்பிரீத்துசாந்துவினாலும் உன்னை மறுபடியும் பிறப்பித்தவரும், உன்னுடைய சகல பாவங்களுக்கும் பொறுத்தலளித்தவருமான சேசுக்கிறீஸ்துநாதருடைய பிதாவாகிய சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரன் தாமே உனக்கு நித்திய ஜீவியம் கிடைக்கும்படி, அந்த நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துவில் உன்னை இரட்சண்யத்தின் தைலத்தைக்கொண்டு பூசுவாராக.—ஆமென்" என்பதேயாம். பரிமள தைலத்தைப் பூசும் இச்சடங்கானது நான்காம் நூற்றாண்டிலிருந்துதான் திருச்சபையில் நடைபெற்றுவருகிறது. அதேனெனில், திருச்சபையானது அது உண்டானது தொடங்கி ஒருவனுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் அதே நாளில் அவனுக்கு உறுதிப்பூசுதலையுங் கொடுத்து வந்தது. ஆனால், காலக்கிரமத்தில் இவ்வழக்கம் அனுசரிக்கப்படுவது அசாத்தியமாகிவிட்டது. ஏனென்றால் உறுதிப்பூசுதல் என்னும் தேவத்திரவிய அநுமானத்தைக் கொடுக்கச் சுதந்தரம் பெற்றவர்கள் மேற்றிராணிமார்களாதலால், அங்கங்கே ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு உறுதிப்பூசுதலையுங் கொடுக்க மேற்றிராணிமார்கள் ஆஜராவது துர்லபமாகிவிட்டது. ஆனபடியால், திருச்சபையை நான்காம் நூற்றாண்டில் ஆண்டுவந்த சில்வெஸ்தர் என்னும் அர்ச். பாப்பானவர் ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு பரிமள தைலத்தைப் பூசும் சடங்கை ஏற்படுத்தி, உறுதிப்பூசுதலை அவர்களுக்கு மேற்றிராணிமார்களின் சவகாசப்படி கொடுக்கக் கற்பித்தார்.

***

இச்சடங்கானது பல சத்தியங்களின் அறிகுறியாயிருக்கின்றது. அவையாவன: ஞானஸ்நானம் பெற்றவன் கிறீஸ்துவன் அல்லது அபிஷேகஞ் செய்யப்பட்டவ

னென்றும், அவன் இனி பசாசுக்குச் சொந்தமாயிராமல் சேசுக்கிறீஸ்துநாதருக்குச் சொந்தமாயிருக்கிறானென்றும், அவன் அவருடைய ஞான சடலத்தின் ஓர் அவயவமாயிருக்கிறானென்றும், ஆனபடியால் அவன் அவருடைய குருத்துவத்திலும் இராஜரீகத்திலும் பங்குபற்றினவனாயிருக்கிறானென்றும் நமக்குத் தெரியச் செய்கின்றது. ஆனபடியாலல்லவா அர்ச். இராயப்பரும் தம்முடைய நிருபத்தில் "நீங்களோ தெரிந்துகொள்ளப்பட்ட வமிசமும் இராஜரீக ஆசாரியக் கூட்டமுமாயிருக்கிறீர்கள்" (1. இராயப்பர் II, 9) என்று எழுதியிருக்கிறார். கிறீஸ்துவர்களெல்லோரும் ஓர் விதத்தில் குருக்களாயிருக்கிறார்களென்பதற் காட்சேபணையில்லை. அதெப்படியெனில், நாடோறும் தேவாலய பீடங்களில் பலியிடும் குருக்களோடு கிறீஸ்துவர்களும் ஏகோபித்து பலியிடுவதுமல்லாமல், தங்களைச் சர்வேசுரனுக்குப் பரிசுத்தமும் பிரியமுமான சீவியப் பலியாக ஒப்புக்கொடுக்க கடமைப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள். (உரோ. XII, 1). மேலும் அவர்கள் தங்களையும் தங்களுடைய தர்க்குணங்களையும் அடக்கியாளவும், பரலோகத்தில் கிறீஸ்துநாதரோடு அரசாளவும் வேண்டியவர்களாயிருக்கிறபடியால், இராசாக்களாகவுமிருக்கிறார்களென்பது பரிஷ்காரம். அல்லாமலும், ஞானஸ்நானம் பெற்றவன் இஸ்பிரீத்துசாந்துவின் ஆலயமாய் அல்லது இருப்பிடமாயிருக்கிறானென்பதையும், பூசைப்பலிக்குதவும் பூசைப் பாத்திரமும் அதன் தட்டும் நமதாண்டவரான சேசுக்கிறீஸ்துநாதரின் திரு இரத்தத்தையும் சரீரத்தையுங்கொள்ள ஏற்றவைகளாகும்படி அவைகள் எப்படி மந்திரிக்கப்பெற்று அபிஷேகஞ் செய்யப்படுகின்றனவோ, அப்படியே ஞானஸ்நானம் பெற்றவர்களும் நமது கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் உட்கொள்ள பாத்திரவான்களாயிருக்கிறார்களென்பதை பரிமளதைலத்தைப் பூசுஞ் சடங்கு குறிப்பிக்கின்றது.

***

இச்சடங்கைநிறைவேற்றியபின் குருவானவர் ஞானஸ்நானம் பெற்றவனுடைய தலையின்மீது ஓர் சிறிய வெள்ளை வஸ்திரத்தை விரிக்கையில்: "இந்த வெள்ளை வஸ்திரத்தைப் பெற்றுக்கொள்; மேலும் உனக்கு நித்திய சீவியங் கிடைக்கும்படி இதை நீ நமதாண்டவரான சேசுக்கிறீஸ்துவின் நியாயாசனத்துக்குமுன் கறைபடாதபடி கொண்டுபோகக் கவனிப்பாயாக" என்று சொல்லுவார். பூர்வம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஞானஸ்நானத்திலே தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற பரிசுத்தத்தனத்திற்கும் மாசற்றதனத்திற்கும் அறிகுறியாக எட்டு நாள் பரியந்தம் வெள்ளை உடை தரித்துக்கொள்வதுண்டு. பிறகு தேவாலயத்திற்குச் சென்று, தாங்கள் தரித்திருக்கும் வெள்ளை வஸ்திரத்தைக் களைந்துவிடுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சடங்கு மிக்க சம்பிரமமாய் நிகழ்ந்தபிறகு, தங்களுடைய வழக்கமான உடைகளைத் தரித்துக்கொள்ளுவார்கள். பாவத்தைப்பிடித்திருந்த நமதாத்துமத்தைப் பரிசுத்தமும் அழகு சோபனமுமுள்ளதாக ஆக்கிக்கொள்ள ஞானஸ்நானத்திலே நாம் அடைந்த தேவ இஷ்டப்பிரசாதத்தை வெள்ளை வஸ்திரமானது நமக்கு ஞாபகப்படுத்துகிறதுமல்லாமல், அந்தப் பரிசுத்தத்தனத்தையும், அழகு சௌந்தரியத்தையும் நாம் மிக்க ஜாக்கிரதையுடன் காப்பாற்றிக்கொள்ளவும், சர்வேசுரன் நமக்குச் செய்தருளிய இப்பேருபகாரத்துக்காக நம்முடைய ஆயுளுள்ளளவும் அவருக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கவும் நமக்குள்ள கடமையையும் அது ஞாபகப்படுத்துகின்றது.

***

கடைசியாக குருவானவர் எரியும் மெழுகுவத்தி ஒன்றை ஞானஸ்நானம் பெற்றவன் கையில் கொடுக்கும்போது சொல்லுவதாவது: "எரியும் இந்த வத்தியைப் பெற்றுக்கொள்; யாதோர் பங்கமுமின்றி நீ பெற்ற ஞானஸ்நானத்தைக் காப்பாற்றிக்கொள். ஆண்டவர் பணிவாளனுகவரும்போது மோட்சத்திலுள்ள சகல அர்ச்சியசிஷ்டவர்களோடு நீயும் அவரை எதிர்கொண்டு அழைக்கவும், நித்திய சீவியத்தை யடைந்து என்றென்றும் சீவித்திருக்கவும் சர்வேசுரனுடைய கற்பனைகளை அனுசரிப்பாயாக" என்பதே யாம். "இதற்குமுன் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள். இப்போதோவெனில் கர்த்தரில் பிரகாசமாயிருக்கிறீர்கள். ஒளியின் புத்திரராக நடந்துகொள்ளுங்கள்" (எபேசி. V, 8) என்று அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் சொல்லியிருப்பதுபோல, எரியும் வத்தியானது ஞானஸ்நானம் பெற்றவன் அந்தகாரம் அடர்ந்திருந்த இராச்சியத்தைவிட்டு வெளிச்சம் நிறைந்த இராச்சியத்தில் வந்துசேர்ந்திருக்கிறானென்றும், அவனுக்குள்ள விசுவாசம் குளிர்விட்டு உயிரற்றதாயிராமல், எரிகிறதாயும், எதையும் பற்றி எரிக்கிறதாயுமிருக்கவேண்டுமென்றும். அதாவது: அவன் அத்தியந்த ஆவலோடு சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்கிறவனாயிருக்கவேண்டுமென்றும், அவனுடைய நன்னடத்தையினால் மற்றவர்களுக்கு நன்மாதிரிகை கொடுக்கவேண்டுமென்றும் தெரியச் செய்கின்றது. ஆனபடியாலல்லவா நமதாண்டவரான சேசுநாதசுவாமியும் "மனிதர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு பரமண்டலத்திலுள்ள உங்கள் பிதாவைஸ்துதிக்கும்பொருட்டு உங்கள் ஒளி அவர்களுக்குமுன்பாக பிரகாசிக்கக்கடவது" (மத். V, 16) என்று திருவுளம்பற்றியிருக்கிறார்? பிறகு குருவானவர் ஞானஸ்நானம் பெற்றவனைப் பார்த்து: "நீ சமாதானமாய்ப் போ, சர்வேசுரன் உன்னோடிருப்பாராக" என்று சொல்லி ஆசீர்வதித்து அவன் போக அனுமதியளிக்கிறார். ஆம், ஞானஸ்நானம் பெற்றவன் சர்வேசுரனுடைய இராசியாகிவிட்டதுமல்லாமல் அவருடைய பிள்ளையாகவும் ஆகிவிட்டான். ஆனபடியால், அவன் எவ்வளவோ மனச்சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் போகவேண்டியது!! ஆனால் அவன் இச்சமாதானத்தை யென்றும் காப்பற்றக் கடமைப்பட்டிருக்கிறான். இதற்காக இவனுக்குத் தேவானுக்கிரகம் வேண்டியதல்லவா? ஆனபடியால் குருவானவரும் "சர்வேசுரன் உன்னோடிருப்பாராக" என்று சொல்லி அவனை ஆசீர்வதிக்கிறார்.

***

ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாம் எல்லோரும் ஞானஸ்நானச் சடங்குகள் நமக்குப் படிப்பிக்கிற சத்தியங்களையும், அவைகள் நமக்கு ஞாபகப்படுத்துகிற கடமைகளையும் நம்முடைய புத்தியில் இருத்தி, அச்சத்தியங்களை விசுவசிக்கவும் அக்கடமைகளை யனுசரிக்கவும் முயலுவோமாக. நாம் இதுவரையிலும் அவைகளைக் கவனியாமல் இருந்திருப்போமாகில், அதற்காகப் பச்சாதாபப்படுவதோடு இனிமேல் அவைகளின்பேரில் கவனஞ் செலுத்தவும் பிரதிக்ஞைசெய்துகொள்வோமாக. அடிக்கடி, விசேஷமாய் நாம் திவ்யநன்மை வாங்கும்போதெல்லாம், "பசாசே, நான் உன்னை விட்டுவிடுகிறேன், உன்னுடைய கிரியைகளை விட்டுவிடுகிறேன், உன்னுடைய ஆலாரத்தை விட்டுவிடுகிறேன்; என்னுடைய இரட்சகரோடு நான் செய்திருக்கிற விசுவாசப் பிரமாணிக்கத்தின்படி நடந்துகொள்வேன், என் மரணபரியந்தம் அவருக்கு ஊழியஞ் செய்வேன்" என்று சொல்லி, நாம் ஒவ்வொருவரும் ஞானஸ்நானத்தின்போது சர்வேசுரனுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களைப் புதுப்பித்துக்கொள்வோமாக. நாம் ஞானஸ்நானத்திலே மோட்ச இராச்சியத்துக்காகப் பிறந்திருக்கிறோம். ஆகையால் அந்த மோட்ச இராச்சியத்தை நாம் சுதந்தரித்துக்கொள்ளும்வண்ணம் இவ்வுலகில் சீவித்துவருவோமாக.

முற்றிற்று.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

IV
வானவில்.

"மேகங்களில் நமது வில் காணப்படும். அப்போது உங்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை நினைவுகூருவோம்" (ஆதி. 9, 14).

ஜலப்பிரளயத்தை யுண்டு பண்ணிய பாதாளத்தின் ஊற்றுகளும், வானத்தின் மதகுகளும் அடைபட்டன. ஆகாயத்திலிருந்த மழை தவிர்க்கப்பட்டது. அலைய வலைய ஜலங்கள் பூமியில் வற்றிப்போயின. கடவுள் கற்பனைப்பிரகாரம் நோவேயும் அவன் பத்னியும், அவன் புத்திரரும் அவர்களின்

மனே விமார்களும் வெளிப்பட்டுவந்தார்கள். அவர்களோடுகூட சகலமான சீவன்களாகிய சதுர்பாத மிருகங்களும், பூமியின்மேல் திரிந்து ரும்பிராணி பூச்சிகளுஞ்ஜாதிஜாதியாகப்பேழை யைவிட்டு வெளிவந்தன. தாமுந் தன்னுறவி னருங் காப்பாற்றப்பட்டபின், நோவே ஓர் பீடத்தைக்கட்டி அதின்மேல் சதுர்பாத மிருகங் களிலும், சுத்த பறவைகளிலுஞ் சிலவற்றை யெடுத்து சர்வ தகனப்பலியாகக்கடவுளுக்கு ஒப் புக்கொடுத்தனன். ஆண்டவரோ அவனின் நன் மனதைப்பார்த்து அவனது பலியை யதிகரித்தார். அவனையு மவனின் புத்திரர்களையு மாசீர் வதித்தார். மனிதனின் பாவாக்கிரமத்தினி மித்தம் இனிமேல் பூமியைப் பரிச்சேதஞ் சபிப் பதில்லையென வாக்களித்து, புண்ணிய பிதாப் பிதாவோடும் அவர் சந்ததியாரோடும் ஓர் உடன் படிக்கை செய்தனர். அதற்கடையாளமாக வானவில்லைக் காட்டினார். "நமக்கும் உங்களுக் கும் உங்களுடனிருக்குஞ் சகல ஜீவ ஜெந்துக்க ளுக்கும் நித்திய தலைமுறைகளுக்கென்று நாம் பண்ணுகிற உடன்படிக்கையின் அடையாளம் அதுவே. நமது வில்லை மேகங்களிலே வைப் போம். அதுவே நமக்கும் உலகத்திற்கும் உள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாகும். ஆதலால், வானம் மேகங்களால் மறைத்திருக்கும்போது நம்முடைய வில் அங்கு காணப்படும். அப் போது உங்களுடனும், உடலியுடைய சீவ செந் துக்களுடனும் எற்படுத்திய நமது உடன்படிக் கையை நினைவுகூருவோமாகையால், இனி சமஸ்த மாம்ச சீவன்களையு மழிக்குஞ் சலப்பிர ளய மிராது. வில் மேகங்களில் தோன்றும். அதைக்கண்டு கடவுளாகிய நமக்கும் உலகத்தி லுள்ள சகல உடலியுடைய சர்வ சீவன்களுக் கும் ஏற்பட்ட நித்திய உடன்படிக்கையை நினைத் தருளுவோம்" என்றருளினர் கடவுள் (ஆதி. 10). மோகூ மேகங்களில் தோன்றும் வானவில் மரியாயே. "இகபரத்திற் கிடையேயுண்டான உடன்படிக்கையி னடையாள மவளே" என பெரிய அல்பர்த் செப்புகிறார். "மாம்ச சீவன் கள் அழிபடாதபடி ஏற்படுத்தப்பட்ட நித்திய உடன்படிக்கையி னடையாளம் மரியாயே!" என அர்ச். பெர்னார்து விளம்புகிறார்.

1. வானவில் அழகமைந்த ஓர் அற்புத வஸ்து. "வானவில்லைப்பார்; அதை உண்டாக் கினவரைத் துதி செய். தன் மாட்சிமையால் வெகு அழகுள்ளதாயிருக்கின்றது. தன் மகிமை யின் சுற்றுல் வானத்தைச் சுற்றினது. மேலான கடவுளுடையகைகள் அதைத் திறந்தன" சர்வப் பிர. 43,12–13. ஞான வில்லாகிய மரியாயுஞ் சொல்லமுடியாத எழில் பொருந்தியவள். அவ ளைக் கண்ணோக்குகையில்—ஞாபகத்திற்கொள் ளுகையில் முதலாய் துன்புறு மிருதயம் இன்ப மடையுமே. அவ்வாண்டவளரின் சரூபத்தைப் பார்க்கையில்—தமது குமாரனைக் கரங்களில் அத்தாய் ஏந்தியிருப்பதை நோக்குகையில்—தேவனின் தயையு மிரக்கமும் மனதில் உதிக் கின்றன. சிருஷ்டிகர் சிருஷ்டிகளாகிய நமக்கா கச் சிசுவானார். அவரது மாதா நம் தாயானாள். அன்பும் ஆறுதலுஞ் சொரிகின்றனள். தமது குமாரனிடம் நமக்காகப் பரிந்துபேசுகின்றனள். அவரை நமக்களிக்கின்றனள். எவ்வளவு பாவி யாயினும் நாமின்னுங் கைவிடப்படவில்லை. ஏனெனில், மரியாயி நமக்குத் தஞ்சமாகவும், சேசுநாதர் நமக்கு இரட்சண்ணியமாகவுமிருக் கின்றனர்.

2. "பல நிறங்கள் ஒருங்கே நன்றமைந்தி ருப்பதால்தான் வானவில் பார்வைக்கு மனோரத மாயிருக்கின்ற'தென கொர்னேலியுஸ் தெலா பிதே என்பவர் சொல்லுகிறார். 'அன்பாகிய செம்மை நிறமும், தூய்மையாகிய மஞ்சள் நிற மும், அருளாகிய பச்சை நிறமுந் தலையாகிய நீல நிறமும் கூடிய ஞான வானவில் பரிசுத்த கன் னிகை'யென ஜேம்ஸ்தே ஓராஜின் மரியாயை அழைக்கின்றனர். மரியாயை வானவில்லுக்கு ஒப்பிட்டுக் காட்டுகையில் பெர்னார்தின் தெபுஸ்தோ வென்பவர் "அவளிடத்தில் அவியா அன்பாகிய சிவப்பு வர்ணமும், தயையாகிய நீல வர்ணமும், தியானமாகிய மஞ்சள் வர்ணமும், கன்னிமையாகிய பச்சை நிறமும் ஒருங்கே துலங்கின"வென விளம்புகிறார்.

3. தனது நிறநிறைவால் மாத்திரமன்று, வடிவு அமைப்பாலும் அழகு பெற்றிருக்கிறது. வில் வடிவோ கண்பார்வைக் குகந்தது. வான வில், அது வானத்தில் வளைந்துநிற்கிறது. நன்கு வளைந்த வில்வடிவில் சுத்தம், சிங்காரம், ஒழுங்கு ஒருங்கேயுண்டு. அவ்வாறே மரியாயினிடத்தில் இம்மூக் குணங்களும் விளங்கின. எல்லாவற்றி லுங் கடவுளையே கதியாகக்கொண்ட சுத்த கருத் தினள்; அருளலங்காரம் புனைந்து மாசற்ற ஆன் மாவுடைய சிங்கார வனப்பினள்; தம் கிரிகை யெந்தனை யாவற்றையுங் கடவுளுக்கு உகந்தவித மாய்ச் செய்யும் ஒழுங்கினள்.

4. வானவில்லின் இரு மூலைகளும் பூமியை நோக்கியிருக்கின்றன. மரியாய் பூலோ கவாசிகளுக் கீயுந் தயை அருளைக் குறிக்கின்றன அவைகள். பாவிகளுக்குப் பொறுத்தலும் புண் ணியவான்களுக் கருளும் பெற்றளிக்கின்றனள் மரியாய். இந்த ஞான வில்லானது மானிடர் பேரில் கிருபாக்கண்ணோக்கி கல்லோருக்குந் தீயோருக்கும்—கல்லோர் மென்மேலும் பக்தி யில் வர்த்திக்கவும் தீயோர் நல் வழியடையவும் —தன் ஜெபத்தால் உதவி புரிகின்றாள்" என அர்ச். பிரிஜெட் தன் காட்சி வரலாற்றில் வரைந் துள்ளாள்.

5. மரியாயின் மாசில்லா வுதீபவத்திற்குச் சரியான உவமானம் வானவில். ஈரிப்பு நிறைந்த பிரகாசமான மேக மண்டலத்தில் சூரியகிரணங் களின் உஷ்ணத்தால் உண்டாவது வானவில். புண்ணிய பிரகாசம் ஜொலிக்க, கடவுளின் விசேஷ வருட்பிரசாதத்தால் ஜெனன வினை யின் சிங்காரமாய் இலங்குகின்றது மரியாயின் ஆத்துமம். வானவில்லின் காந்தியைக் கறைப் படித்தமுடியாது. அங்ஙனமே மாமரியின் மாசற்ற விருதயத்தின் கரைகடந்த வழகைப் பாவமானது பங்கப்படுத்தமுடியாதன்றோ?

6. மோட்ச சிம்மாசனத்தைச் சுற்றி ஓர் வானவில்லைப் பார்த்ததாக அர்ச். அருளப்பர் காட்சியாகமத்தில் சொல்லுகிறார். (தேவ சிம் மாசனத்தை) தன் ஜெபத்தாலும், பிறருக்காகப் பரிந்து வேண்டுவதாலும் சுற்றி நிற்கும் மரி யாயை நன்கு குறிக்கின்றதன்றோ இந்த வான வில்? ஆகையாலேயே "மனுக்குலத்தின் இரட் சண்யமாகிய சேசு தேவனை ஈன்றெடுத்த மரியே! என்றும் கன்னிமைகுன்றா தாயே! பூலோக விராக்கினியே! எங்கள் மத்தியில் சமா தானமும் நன்மையும் பொழிந்தருளும்" என்று திருச்சபையானது மாதாவை நோக்கிச் செபிக் கின்றது.

பரகதியில் இவ்வுன்னத வானவில்லிருப் பது எவ்வளவோ பாக்கியம். மேலான பதவி யடைந்து, பராபரன் பக்கத்தில் அமர்ந்தி ருந்து, நம்மேல் கிருபைக்கண்ணோக்கி நமது செபத்துக்குச் செவிசாய்த்து நமக்குதவி புரியப் பின்வாங்குகிறதில்லையே! "வானத்தில் நம்மு டைய வில்லும் காணப்படும். அப்போது நமக் குஞ் சர்வ சீவன்களுக்கும் ஏற்பட்ட உடன்படிக் கையை நினைத்தருளுவோ"மெனத் திருவாய் மலர்ந்தருளினர் தேவன். அப்படியானால் மரி யாயைக் காணும்போதெல்லாம் பூலோகவாசி களை நினைவுகூருமோ? ஐயமற அவர்களுக் கிரக் கங்காட்டுவார். மரியாயின் தாசர்களை நன்கு ஆதரிப்பார். ஆகையால் நாமெல்லோரும் இன்ப துன்பங்களிலும், நன்மை தின்மைகளிலும், ஞான வானவில்லாகிய மரியாயைச் சந்தோஷத் தோடும் நம்பிக்கையோடும் எதெடுத்துப்பார்ப் போமாக!

(இன்னும் வரும்)

M. S. M.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

4-ம் அதிகாரம்.

அதுஸ்தீனுடைய துர் ஆசாபாசங்களினால் நேரிந்த தீமைகள்—மோனிக்கம்மாள் தன் மகனுடைய ஆத்தும அபாயகரத்தை அறிந்து எச்சரிக்கைகொள்கிறாள்—எவ்வளவுக்கு அதுஸ்தீன் தன்னுடைய துர் நடத்தையினால் தன் தாயாருடைய நேசத்தைவிட்டுப் பிரிந்துபோகிறானே, அவ்வளவுக்கு அவளுடைய பத்தா அவளை அதிகமாய் நேசித்துவருகிறார்—இது அர்ச். மோனிக்கம்மாளுக்கு ஆறுதலுண்டாதற்படி கடவுள் செய்த தயவு—பத்ரீஸியுஸ் நல்ல மரணமடைகிறார்.

(கி. அ. 370—372.)

(முன் தொடர்ச்சி.)

ஐயோ! தன் ஆசைக்கினங்கிய ஒரு பெண்பால் கிடைக்க மாட்டாளாவென்று கோவிலில்முதலாய்ப் பார்ப் பார். அக்காலங்களில் அவருடைய சரீரம்மாத்திரம் கோவிலுக்குப்போய்ப் பூசை காணும். அவருடைய மனமோ காமாக்கினியால் பற்றியெரிந்து வாடும். அவருடைய கண்கள் எந்தச் சௌந்தரி யமுள்ள பெண் தன் ஆசைக்கினங்கிய நாயகி யாகக் கிடைப்பான் என்று இங்குமங்கும் சுற்றிப்

பார்த்துக்கொண்டிருக்கும். ஒரு நாள் கோவிலுக்குள் என்ன நடந்ததென்றும் கடவுள் அதைப் பற்றி அவருக்கு என்ன தண்டனை விதித்தாரென்றும் நாம் திட்டமாய்ச் சொல்லமுடியவில்லை. இது விஷயத்தில் அவர் சொல்வது சுருக்கமாயும் போதுமான தெளிவற்றதாயுமிருக்கிறது. "பாவத்தின் பலனுகிய மரணத்திற்குக் காரணமான பொல்லாத நினைப்பை உமது ஆலயத்தில் திவ்யபூசை வேளையில் நினைக்கவும் அதன் பேரிலேயே சிந்தனையாயிருந்து சந்தோஷிக்கவும் துணிந்தேன். தேவரீர் என்னை அதற்காக வெகு கடினமாய்த் தண்டித்தீர். ஆயினும் என் கடவுளே, என் பாதகத்திற்குத் தகுந்தபடியல்ல. ஓ! கர்த்தாவே, நீர் எவ்வளவு இரக்கப் பெருக்கமுள்ளவராயிருக்கிறீர்! நான் உம்முடைய திவ்ய நுகத்தடியைத் தள்ளிப்போட்டு, மிருகங்களுக்கும் பகுத்தறிவில்லாத ஜெந்துக்களுக்கும் அடுத்த சுதந்தரத்தைக் கையாடினேன். உம்மைச் சற்றேனும் நேசியாமல் என் நீச சரீரத்திற்குத் திருப்தி கொடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தேன். இப்போதோவெனில், நான் நேசபாசமாய்க் கூடி குலாவிவந்த தன் மார்க்கர்களை விட்டு உம்மையே அடைக்கலமாய் நாடிவந்திருக்கிறேன்."

அகுஸ்தீன் அத்தனை நாள் ஆசைப்பட்டுத் தேடிவந்த ஸ்திரீ இங்கேதான் பீடத்தினடியில் ஒரு பெரிய திருநாளன்று கிடைத்தாளென்பதாகச் சில சரித்தாசிரியர்கள் நம்புகிறார்கள். அது எப்படியிருந்தபோதிலும் அதி சீக்கிரத்தில் அகுஸ்தீன் நிர்ப்பாக்கியத்துக்குரிய படுகுழியில் விழுந்தார். அவர் சொல்வது "நான் சிக்கிக்கொள்ள ஆசித்த மாய வலையில் சிக்கிக் கொண்டேன். ஓ! என் கடவுளே, இந்த இன்பமான சிற்றின்ப நுகர்ச்சியில், தேவரீருடைய நன்மைத்தனமானது எப்படிப்பட்ட கசப்பைச் சேர்த்துவிட்டது. நான் நேசித்தேன். நான் நேசித்த ஸ்திரீயும் என்னை நேசித்தாள். நிர்ப்பாக்கியத்துக்குரிய பாவச் சங்கிலிகளால் நான் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்துச் சந்தோஷித்தேன். மோக சந்தோஷத்தில் இருக்கும் காய்மகாரம், சந்தேகம், பயம், கோபம், உக்கிரம் யாவையும் நன்கு உணர்ந்தேன்."

ஓர் ஸ்திரீயைப்பற்றி அகுஸ்தீன் கடவுளை மறந்ததுபோல், அகுஸ்தீனைப்பற்றி அவளும் கடவுளை மறந்து தனது மாய கட்டுக்களால் பதினேழு வருஷம்வரைக்கும் அவரது இருதயத்தைச் சிறைப்படுத்தி, பூமி மார்க்கமாயும் சமுத்திர மார்க்கமாயும் தகாஸ்தே, கார்த்தேஜ், ரோமாபுரி, மிலான் முதலிய பட்டணங்களுக்கு அவரைப் பின்தொடர்ந்து சென்று, அவர் தன் தீய தன்மார்க்கத்தைவிட்டு மனந்திரும்பியபோது, அதிக விசனத்துடன் அவரைவிட்டுப் பிரிந்து ஒரு கன்னியர் மடத்தில் சேர்ந்து, அங்கு மீதியான தன் வாழ்நாட்களைக் கழித்த அந்த ஸ்திரீ யார்? அவள் யாரென்று நமக்குச் சற்றும் தெரியவில்லை. அகுஸ்தீனும் அவள் பெயரை யாருக்கும் அறிவிக்காமல் அடக்கிவைத்தார். ஆதலால் தன் முகத்தை மூக்காட்டினால் மூடிக்கொண்டிருக்கும் ஸ்திரீ இன்னவளென்று நமக்குத் தெரியாதிருப்பதுபோல், இவளும் நமக்கு யாரென்று தெரியவில்லை. தன் தாயாருக்குமுதலாய் அவளுடைய பெயரையும் அவளுடன்தான் கொண்டிருக்கும் பாவச் சம்பந்தத்தையும் அகுஸ்தீன் தெரிவித்தவரல்ல. அர்ச். மோனிக்கம்மான் இவ்விஷயமாய் அவரை எவ்வளவுதான் வருந்திக்கேட்டபோதிலும், "சொல் மகனே, சொல் மகனே" யென்று எத்தனைதரம் தான் அழுகையோடு கெஞ்சி மன்றாடினபோதிலும், அவர் பேசாமடந்தையைப்போல் வாய் திறக்கவில்லை. ஆனால் நிர்ப்பாக்கியத்துக்குரிய அவ்விரகசியம் சீக்கிரம் வெளிப்படவேண்டிய தாயிற்று. எங்ஙனமெனில், கர்த்தர் அவதரித்த 372-ம் ஆண்டில் அவருக்கொரு ஆண்குழந்தை பிறந்தது. அதன் பெயர் அதியோதெத்துஸ் அல்லது தேவதத்தன் என்பதுவே. பிற்காலத்தில் அகுஸ்தீன் அவனை தேவதத்தன் என்று சொல்லாமல் அக்கிரமத்தின் புத்திரன் என்று சொல்லுவார். ஆனால் அவன் பிறந்தபோது தனக்கிருந்த சந்தோஷப் பெருக்கில் தன் அக்கிரமத்தைமுதலாய்ச் சிந்தியாமல் "தேவதத்தன்" என்றர்த்தமுள்ள அதியோதெத்துஸ் என்னும் பெயரை யவனுக் கிட்டார். அவர் கூவிச் சொல்வது "ஓ! என் கடவுளே, என் ஜீவியம் அப்போர்க்கொத்ததாயிருந்தது. அதைச் ஜீவியம் என்றழைப்பதோ?"

தன் புத்திரனின் தாறுமாறான நடத்தையை மோனிக்கம்மாள் அறிந்தபோது, அவள் அப்போர்க்கொத்த விசன சாகரத்தில் அமிழ்ந்தி வியாதியானபடியால், சாவாரோ பிழைப்பாரோ என்று சந்தேகத்துக் கிடமாயிற்று. இரவும் பகலும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாயிருப்பாள். அவள் கோவிலில் பூசை சமயத்திலும் ஜெப வேளையிலும் உட்காரும் இடத்தைப் பார்த்தால், அநேக சமயங்களில் அவ்விடம் தன் மகனின் அக்கிரமத்தை நினைத்து அவள் சொரிந்த கண்ணீரால் நனைந்திருக்கும். அர்ச். மோனிக்கம்மாளுக்குத் தோத்திரமாகத் திருச்சபையானது மே மாதம் 4-ந் தேதியில் ஒரு திருநாளை ஏற்படுத்தியிருக்கிறது. அத்திருநாளை உண்மையாகவே ஒரு கிறீஸ்துவ தாயாரின் கண்ணீர் திருநாள் என்றழைக்கத்தகும். அத்திருநாளை எவ்விதமாய் திருச்சபை கொண்டாடுகிறதென்று பாருங்கள்.

சங்கீதம். 1. இத்தப் பரிசுத்த தாய் தனது குமாரன் அகுஸ்தீன் மனந்திரும்பும்படியாகக் கர்த்தரைப் பார்த்து ஓயாமல் அழுது மன்றாடினாள்.

சங்கீதம். 2. இந்தப் பாக்கியவதியான தாயின் உருக்கப் பெருக்கமுள்ள மன்றாட்டை கர்த்தர் ஒரு காள் கேட்க இருக்கிறார். இதனிடையில் அவள் அல்லும் பகலும் ஆவற் பெருக்கத்துடன் தன்து புத்திரனுக்காக ஜெபம் செய்துவருகிறாள்.

சங்கீதம். 3. தனது புத்திரனுக்காக ஓயாமல் துக்கக்கண்ணீரைச் சிந்துகிற இந்த விதவையைப் பாருங்கள். ஆத்தும நஷ்டத்திற்காக எப்படி பிரலாபிக்கிறதென்று இவள் அறிந்திருக்கிறாள்.

சங்கீதம். 4. கர்த்தாவே. இந்தப் பரிசுத்த தாயாரின் நேத்திரங்களிலிருந்து தாரைதாரையாய் ஒழுகி வடியும் கண்ணீர்த் துளிகள் தங்கள் குரலே யெழுப்பி உருக்கச் சத்தத்துடன் உம்மை நோக்கி மன்றாடின.

சங்கீதம். 5. இந்த ஆறுதல் துயரமுற்ற தாயார், மெத்தவும் வினதத்துடன் பிரலாபிக்கிறாள்.

அவளுடைய திருநாளன்று ஜெபிக்கும் ஜெபங்கள்யாவும் இப்பிரகாரமாகவேயிருக்கின்றன. தன் மகனுக்காக இவள் பட்ட துயரம் மட்டில்லாத துயரமென்றும், அதற்குச் சமானமான துயரத்தைத் திருச்சபையில் யாருமே அனுபவித்ததுண்டையாதென்றும், இவளுடைய ஜீவிய சரித்திரத்திலுல் நமக்குத் திருஷ்டாந்தமாய்த் தெரியவருகிறது.

தன்னைப்போலவே தன் பத்தாவும் அகுஸ்தீனுடைய அக்கிரமத்தை நினைத்து மனமுருகுவது அவளுக்கு ஒரு ஆறுதலாயிருந்தது. இவ்வாறுதலுமின்றி அவன் தனியாகத் துயரத்தில் அமிழ்ந்தியிருப்பாளேயானுல், அவளுடைய நிலைமை மெத்தவும் நிர்ப்பாக்கிய நிலைமையென்னத்தகும். பூர்வத்தில் பத்ரீவியூஸ் அமிழ்ந்திக்கிடந்த அக்கியான அந்தகாரமானது. கொஞ்சங் கொஞ்சமாய் தேவக் கதிர்முன் நீங்கிவந்ததென்பது உண்மையே. அவ்விருள் ஒழிய ஒழிய அவன் சத்தியத்தையும் சன்மார்க்கத்தையுமே நாடிவந்தான். பத்ரீவியூஸ் மனந்திரும்பியதும் அகுஸ்தீன் மனந்திரும்பியதும் எல்லாம் அர்ச். மோனிக்கம்மாள் கண்ணீர் சிந்திக் கர்த்தருக் கொப்புக்கொடுத்த ஜெபத்தின் பலனேயன்றி வேறல்லவென்று திருச்சபை தனது சங்கீதத்தில் சொல்லுகிறது. அர்ச். அகுஸ்தீனும் அது சத்தியமான வாக்கியம் என்று கண்டிப்பாய் ஒத்துக்கொள்ளுகிறார். இதுவுமன்றி, நாம் மேலே வரைந்து காட்டியிருப்பதுபோல் நாளுக்கு நாள் வளர்பிரையைப்போல் வளர்ந்துவந்த அவளது புண்ணிய சற்குணங்களின் உன்னத ஆக்ருஷ்ணமும், அவளது பொறுமையும், மதுர குணமும், ஆழ்ந்த பக்தியும், தனது புருஷன் தன்மட்டில் எவ்வளவு வெறுப்புக்காட்டினுலும் தான் அதை கனிக்காமல் ஒய்வு ஒழிச்சலின்றித் தாழ்மையோடும் தூய கற்புக்கடுத்த உருக்கத்தோடும் அவனைப் பாதுகாத்துவந்த பாமரிபும், வானுலகை நாடிச்சென்ற அவளது பக்தியின் சுகந்தமும், தனது பத்தா மனந்திரும்பும்படியாக இடைவிடாமல் அவள் ஒப்புக்கொடுத்துவந்த சுயப் பரித்தியாகங்களும் ஆகிய இவைகள் யாவுமே அவர்களிருவரும் மனந்திரும்பக் காரணமாயிருந்தன. இக்குணலட்சணங்கள்யாவும் பத்ரீவியூஸைச் சுற்றி ஒருவித சுகந்த பரிமளம் வீச, அவன் தனக்குத் தெரியாமலே அப்பரிமளத்தைச் சுவாசித்து, அதனுல் விசுவாசப்பேறடைந்தான். சற்குணம், சவுந்தரியம், சத்தியம் ஆகிய லட்சணங்களெல்லாம் ஒருங்கு திரண்டு ஒரு மனுவுரு வெடுத்ததென்று வைத்துக்கொள்வோம். அவ்வுருவினிடம் யாராவது போனுல் அது தன் சுசீல விலட்சணங்களால் தன்னை நெருங்கி வருபவர்களை வசியப்படுத்திக்கொள்ளும். அவ்விரட்சா பந்தனங்களை வெல்ல யாராலும் முடியாது. ஒன்றில் அவைகளை விட்டு அகன்றுபோகவேண்டும். அல்லது அவைகளுக் கடங்கவேண்டுமேயன்றி மற்றப்படியல்ல.

நல்ல வேளைக்கு பத்ரீவியூஸ் மோனிக்கம்மாளின் ஞான வசியத்திற் குட்பட்டான். நான்

போகப்போக, அவனது சீவியம் கொஞ்சங் கொஞ்சமாய் மாற்றமடைந்துவர, கடைசியாய் முழுதும் புது மனிதனாய்ப் போனான். தான் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று முதன்முதல் தானே கோரினான். அத்தேவத்திரவிய அநுமானத்தின் அருளால், கற்பின் மாட்சிமையும் மாதுரிய குணத்தின் சவுந்தரியமும் அவனுக்குத் தெரியவந்தன. தான் முற்காலத்தில் செய்த பாவாக்கிரமங்களை நினைத்து மனம் வருந்தி அக்காலத்தில் தனது முரட்டுக் குணத்தினால் மோனிக்கம்மாளுக்கு உண்டுபண்ணின வியாகுலத்திற்கு பாரிகாரம் செய்யும்படியாக இப்போது அவளுக்குப் பட்சபாசங் காட்டத் தொடங்கினான்.

மனிதர்கள் இருதயத்தின் பாக்கியமான சுதந்தரம் ஒன்றுண்டு. அதேதெனில், அது எவ்வளவுதான் ஆழ்ந்த விசனத்தில் அமிழ்ந்தியிருந்தபோதிலும், ஏதோ ஒரு சந்தோஷமான காரியம் சம்பவித்தவுடன் அவ்விசனம் யாவும் அதன் ஞாபகத்திலிருந்து அற்றுப்போகும். இப்படிப்பட்ட சந்தோஷம் அர்ச். மோனிக்கம்மாளுக்குண்டாயிற்று. கலியாணம் ஆன பதினேழு வருஷத்திற்குப்பிறகு. மோனிக்கம்மாளும் அவளது பத்தாவும் பூவும் மணமும்போலும். நகமும் சதையும்போலும், மாட்சிமைதங்கிய நேசபாசத்தால் ஒன்றிக்கலானார்கள். இவர்களுக் கிருந்த இந்தத் தூய நேச பந்தனத்தையும் ஒருமிப்பையும் ஒரு சிறந்த கிரந்தாசிரியர் மெத்தவும் சாமர்த்தியமாய் வருணித்துக்காட்டும் வித மெப்படியெனில், "ஒரு நிர்ப்பாக்கியத்துக்குரிய சிருஷ்டி தன் உந்நத பதவியை யிழந்து, படுகுழியில் தவறி விழுந்து இருக்கும்போது, இன்னொரு சிருஷ்டியானது அதற்காகக் கடவுளைப் பார்த்து மன்றாடி தேவ வெளிச்சத்தை யடைந்து தர, அவ்வெளிச்சத்தின் உதவியால் அது தன் கேடு கெட்ட நிலைமையை யுணர்ந்து இரட்சண்யத்தை யடைய காரணமாயிருந்தால், அவ்விரு சிருஷ்டிகளுடைய உணர்ச்சிகள் எவ்வாறாயிருக்கும்? ஒன்று, ஐயோ நான் சதா காலத்திற்கும் நரகத்திற் காளாய்ப்போய் கேவல நிர்ப்பாக்கிய ஸ்திதியிலிருந்து மீட்சியடைந்தேனே, என் பாக்கியம் எப்பேர்ப்பட்டதென்றும். மற்றொன்று என் முகாந்தரமாய் ஊதாரிப் பிள்ளையைப்போல் தவறியிருந்த ஒரு ஆத்துமம் தன் உன்னத சுதந்தரத்தை அடையப்பெற்றதே, எனக் கெப்படிப்பட்ட ஆனந்தமென்றும், இப்படி இரு சிருஷ்டிகளும் யோசிக்க யோசிக்க, அவர்களுக்குள் வாக்குக்கெட்டாத பரஸ்பர பட்சபாசம் உண்டாகி வளர் பிறையைப்போல் வளர்ந்துவருமன்றோ" என்பதாம்.

மோனிக்கம்மாள் தன் மன்றாட்டின் பலனால் நல்வழிக்குத் திரும்பின தனது பத்தாவுடைய ஆத்துமத்தின் மட்டில் காட்டிய உருக்கமும், பத்ரீஸியூஸ் தன்னைத் தீய வழியிலிருந்து சன்மார்க்கத்திற்குக் கொண்டுவர அவ்வளவாய்ப் பாடுபட்ட அந்த மதுரமும் ஞான வைராக்கியமும் நிறைந்த தனது பத்தினியின் மட்டில் காட்டிய நன்றியறிதலும், எப்படிப்பட்டவையாயிருந்தனவென்றால், இவ்விருவரும் நேசமும் நன்றியறிதலும் நிறைந்த உணர்ச்சிகளால் ஒரே பந்தனமாய்ப் பந்திக்கப்பட்டு, மரணத்தினால் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியுமட்டும் அதே பந்தனக்கட்டுக் குட்பட்டிருந்தார்கள். பத்ரீஸியூஸ் தான் இவ்வுலக வாழ்வைவிட்டு கடவுள் திருவடி சேருமுன், தனது நேச பத்தினியைப் பிரிய வேண்டியிருப்பதை நினைத்து வருந்தினார். ஆதலால் இவர்களுக்கிருந்த ஐக்கிய சம்பந்தம் எப்பேர்ப்பட்டதென்று வாக்கால் விவரிப்பது கூடாமை

பத்ரீஸியூஸ் மரணமடைந்த விவரம் நமக்குத் தெரியவில்லை. இரட்சண்யம் 371-ம் வருஷத்தில் அவர் வியாதிப்பட்டு தனது முடிவு கிட்டியதை யுணர்ந்து, ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கேட்டு, அத்தியந்த உருக்கத்துடன் அதைப் பெற்று பூரண சமாதானத்தோடு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். ஒரு காவல் சம்மனசுக்கொப்பாய் கர்த்தர் அவருக் களித்திருந்த அவரது பத்தினியானவள். அந்திய நேரத்தில் அவருக்காறுதல் சொல்லித் தேற்றினாள். பதினேழு வருஷம் அவள் பட்ட பிரயாசையினால் உண்டான பலன் மெத்த. பத்ரீஸியூஸ் மோனிக்கம்மாளை மணந்த காலத்தில், அவரது பெருமித குணம், தயாளத்துவம், நேர்மைத் தனம், இயல்பாய் அவருக் கிருந்த சுசீலம் ஆகிய குணலட்சணங்கள் எங்கேயோ மறைந்துகிடந்தன. அவருக் கிவ்வித குண விலட்சணங்கள் இருந்ததைகூட யாரு மறியார்கள். தன் முதுகு தனக்கே தெரியவில்லையென்னும் பழமொழியைப்போல், தன்னிடம் அவ்வித குணலட்சணங்களுண்டென்று முதன்முதலாக தனக்கே தெரியாது. இதற்குமாறாக, ஆங்காரம், கோபம், ஞானக் காரியங்களில் அசட்டைத்தனம், ஆசா

பாசப் பற்றுக்கள் ஆகிய இவைகள் அவருடைய ஆத்துமத்தில் தங்கள் வெற்றி விருதுகளை நாட்டி, அதை அரசாண்டுவந்தன. கடைசியாய் அவையாவும் கொஞ்சங் கொஞ்சமாய் ஒழிந்தன. வெப்பமுள்ள சூரியன் மேற்றிசையில் மறையவே, குளிர்ந்த சந்திரன் புறப்பட்டுவந்து வானத்தின் திலதம்போல் துலங்குவதற்கொப்ப, அவரது தீய குணங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் அடங்கிப்போகவே, அவரது சற்குணங்கள் வெளிப்பட்டுச் சோதிப் பிரபையுடன் துலங்கிவந்தன. தேவ வெளிச்சம் அவரது ஆத்துமத்தின் அந்தகாரங்கள் யாவையும் அகற்றி, அதனைத் தனது இருப்பிடமாகக்கொண்டது. அவர் சாகும் சமயத்தில் தனது நேச மனைவியை உற்றுப்பார்த்தார். அப்பார்வையில் "செய்யாமற் செய்த உதவிக்கு வையமும் வானமுமாற்றலரிது" என்பதற் கொப்ப, பிரதி பலனை எதிர்பாராமல் தனது மனைவி தனக்குச் செய்த உபகாரத்தின் மட்டில் அவர் காட்டும் நன்றியறிதலும், அவ்வுபகாரத்தின் பலனால் தனக்குக் கிடைக்க விருக்கும் பாக்கியத்தை நினைத்து அவர் கொள்ளும் மகிழ்ச்சியும் வெளிப்பட்டன. மோனிக்கம்மாள் அவரது மரண சமயத்தில் அருகிலிருந்து முத்துக்களைப்போல் கண்ணீர் சொரிந்து, அவரடையப்போகும் மோட்ச பாக்கியத்தை நினைத்து ஒரு பக்கத்தில் சந்தோஷமும், அவர் தன்னைவிட்டுப் பிரிவதை நினைத்து இன்னொரு பக்கத்தில் விசனமும்பட்டாள். அவர் தன்னை நடத்திய கொடுமையையாவது, தன்மட்டில் காட்டிய வெடுவெடுப்பையாவது, நினைத்தவளேயல்ல. தாகத்தினால் தவித்த மானானது நெடுந்தூரம் தண்ணீரைக் கண்டும், அதை அருந்தி தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள கூடாமற்போனதுபோல், இதுவரைக்கும் படாத துன்பமெல்லாம் பட்டு அத்துன்பம்யாவும் ஒழிந்து, இப்போதுதான் அவர் தன் குணலட்சணங்களை யறிந்து தன்னை நேசிக்கத் துவக்கியிருக்கிற சமயத்தில், இன்னுங் கொஞ்ச காலம் அவரோடு ஒன்றித்து வாழ அதிர்ஷ்டமில்லாமற் போகிறதே, இதற்குள் அவரை இழக்கலாச்சுதே யென்று மனம் வருந்தி ஆறாத் துயரப்பட்டாள். ஆயினும் அவர் மனந்திரும்பி நல்வழியைச் சேர்ந்தபடியால், தேவ தயவால் மோட்ச சம்பாவனையை அடைவாரென்றும், தன் காலத்திற்குப்பிறகு அவரை மோட்சத்தில் சந்திக்கக்கூடுமாயிருக்குமென்றும் நினைத்துச் சந்தோஷித்தாள். அணைந்துபோன விளக்கைத் திரும்ப ஏற்றிவைப்பதுபோல், கேட்டின் பாதையிலிருந்து தான் நல்வழிக்குத் திருப்பின தனது காவலாளியின் கல்லறையின் பக்கத்தில், தனக்கும் ஒரு இடம் ஏற்படுத்தி வைத்துக் கொண்டாள்.

அகுஸ்தீன் ஒரு பெண்பிள்ளையின் மாயவலையில் சிக்கிப்போனதைப்பற்றி, மோனிக்மாள் அநுபவித்த விசனசாகரத்தில் முழுதும் அமிழ்ந்திப்போகாதபடி, கர்த்தர் இவ்விதமாய் அவளுக்கு ஆறுதலளித்தனர். அகுஸ்தீன் துன்மார்க்கத்தை நாடிச் செல்லச்செல்ல, பத்ரீஸியூஸ் சன்மார்க்கத்தை நாடிவந்தனர். அகுஸ்தீன் கடவுளை முற்றிலும் மறந்து, அக்கிரம நாடகங்களுக்குப்போய், தன்னிருதயத்தில் தணல்விட்டெரிந்திருந்த மோக அக்கினிக்கு இரைபோடுவதிலேயே நாட்டமாயிருந்தார். ஆனால் பத்ரீஸியூஸ் ஞானஸ்நானம் பெற ஆயத்தம் செய்கிறவர்களின பெயரை யெழுதும் பட்டியில் தன் பெயரை யெழுதிவைத்தார். அகுஸ்தீன் நல்லவராய் நடக்கவேண்டுமென்று அவரது தாயார் எவ்வளவாய்க் கண்ணீர் சிந்தி மன முருகியவரை மன்றாடினபோதிலும், அவர் அம்மன்றாட்டுக்களை சட்டைசெய்யாமல் ஒரு ஸ்திரீயோடு விபசாரம் செய்து அவ்விபசாரத்தில் ஒரு பிள்ளையும் பெற்றுத் தனக்குத்தானே மானபங்கந் தேடிக்கொண்டார். ஆனால் பத்ரீஸியூஸோவெனில் ஞானதீட்சை பெறவேண்டுமென்று கோரி, ஞானஸ்நானத்தினால் ஞானப் பிறப்பையடைந்து, உத்தம சீவியத்தில் ஒழுகி, நல்ல கிறீஸ்துவனாய் மரணமடைந்தார். அர்ச். மோனிக்கம்மாளுக்குத் தனது சீவியகாலத்தில் சம்பவித்ததெல்லாம் அப்படியே. ஒரு பக்கத்தில் அவளுக்குத் துயரமிருந்தால், மறுபக்கத்தில் ஆறுதலிருக்கும். கடவுள் இப்படியாக அவளுக்கு நியமித்திருந்தார். ஏனென்றால், தனது விசுவாசத்தின் பலத்தினால்மாத்திரம் தனது பெருத்த துயரங்களைப் பொறுமையோடு சகிப்பது அவளுக்குக் கூடுமாயிருக்கும் என்றுதான். மேலும் தான் அகுஸ்தீனைப்பற்றி அவ்வளவாய் மனநொந்து உருகி யழுததெல்லாம் கூடி, கடவுள்மட்டில் தனக்கிருந்த வரம்புகடந்த நேசத்தைப்பற்றித்தானேயொழிய மற்றப்படியல்ல.

நல்லவர்கள் ஆபத்திலுட்படாமல் சீக்கிரம் சாக ஆசிப்பது நன்று.—(அர்ச். கிறிசொஸ்தோம்).

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2.—அதிகாரம் ; வசனம்—29-32.

(முன் தொடர்ச்சி.)

சிமையோன் திவ்ய பாலனைத் தன் கரங்களில் ஏந்திக்கொண்டு சர்வேசுரனைத் தோத்தரித்துப் பாடிய சங்கீதம் பின்வருமாறு :—

29-ம் வசனம்.—"ஆண்டவரே! உம்முடைய வாக்கியத்தின்படியே உம்முடைய தாசனை இப்பொழுது சமாதானத்தோடு போகவிடுகிறீர்.

30-ம் வசனம்.—ஏனெனில் தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஏற்படுத்தின,

31-ம் வசனம்.—உம்முடைய இரட்சிப்பை என்னுடைய கண்கள் கண்டு கொண்டன.

32-ம் வசனம்.—அது புறஜாதிகளைப் பிரகாசிப்பிக்கிற ஒளியாகவும் உமது ஜாதியாகிய இஸ்ராயேலருக்கு மகிமையாகவும் இருக்கிறது என்றார்."

சிமையோன் கிறீஸ்துநாதரைக் காண்பார் என்றும் அவரைக் காணுந்தனையும் அவருக்கு மரணம் வராதென்றும், இஸ்பிரீத்துசாந்து வாக்கு அளித்திருந்தார். அவ்வாக்கின் பலனாக மெஸ்ஸியாவாகிய கிறீஸ்துவை சிமையோன் தரிசிக்கப் பாக்கியம் பெற்றார். அவருடைய உயிர் நீடித்திருந்ததும் இதற்காகத்தான். இப்பூலோகத்தில் அவருக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலை முடிந்தது என்றும், அவர் இனி உலகில் இருப்பதில் பயனில்லை என்றும் உணர்ந்து, ஆண்டவரே! உமது ஊழியனை இப்பிரபஞ்ச துன்ப துயரங்களினின்று விடுதலையாக்குகிறீர் என்றார்.

சிமையோன் தன்னை ஆண்டவருடைய ஊழியன் என்று பகர்வதால், சர்வேசுரனுக்கு ஊழியம் செய்வதுதான் இம்மையில் மனிதர்களுடைய ஏக கதியென்றும், சமாதானத்தோடு போகவிடுகிறீர் என்று கூறுவதால், மனக்கிலேசம் சஞ்சலம் ஒன்றுமில்லாமல், மனசம்மியமாயும் சந்தோஷமாயும் மரணத்தை எதிர் நோக்குகிறார் என்றும் விளங்குகிறது.

"இரட்சிப்பு" என்ற பதம் உலக இரட்சகரைக் குறிக்கின்றது. இவர் யூத ஜனங்களின் இரட்சகராய்மாத்திர மிராமல், சகல ஜாதி ஜனங்களின் இரட்சகராயிருக்கிறார் என்பதைக் காண்பிக்க "சகல ஜனங்களுக்கும் முன்பாக ஏற்படுத்தின இரட்சிப்பு" என்றார். மனுக்குலத்தின் இரட்சகரைப் பிதாப்பிதாக்கள் தீர்க்கத்தரிசிகள் விசுவாசத்தால்மாத்திரம் அறிந்தார்கள். ஆனால் அவரைச் சிமையோன் தன் கண்களால் தரிசித்து மகிழ்கிறார்.

அநேக தீர்க்கத்தரிசிகள், நீதிமான்கள், இராஜாக்கள் மெஸ்ஸியாவைக்காண அபேக்ஷித்தும் காணவில்லை ; அப்போஸ்தலர்கள் அவரைக் காண பாக்கியம் பெற்றார்கள். அதே பாக்கியம் சிமையோனுக்கும் கிடைக்கிறது.

புறஜாதியாரைப் பிரகாசிப்பிக்கிற ஒளியென்றும், இஸ்ராயேல் ஜனங்களின் மகிமையென்றும் கிறீஸ்துநாதரை சிமையோன் வாழ்த்துகிறார். அஞ்ஞானிகளாகிய புறஜாதியார் மெய்யான சர்வேசுரனையும் அவர் வெளிப்படுத்திய திவ்ய வேதத்தையும் அறியாமல், அந்தகாரத்திலும் மரண நிழலிலும் அமிழ்ந்தியிருந்தார்கள். இந்நிர்ப்பாக்கிய ஜனங்களுக்கு கிறீஸ்துநாதர் மெயயான ஒளியை வீசி, அவர்களுடைய அஞ்ஞானத்தைப் போக்கி சத்திய வேதத்தின் ஒளியில் அவர்களைப் பிரவேசிக்கச்செய்து நித்திய மகிமையின் பிரகாசத்தை அவர்களுக்குப் பாலித்தருளுகிறார். அதற்காகத்தான் கிறீஸ்துநாதரைப் புறஜாதியாரைப் பிரகாசிப்பிக்கிற ஒளி என்று சிமையோன் போற்றுவதும் நியாயமே. கிறீஸ்துநாதர் சகல ஜாதி ஜனங்களுக்கு இம்மையில் தமது வரப்பிரசாதங்களின் ஒளியையும் மறுமையில் நித்திய பிரகாசத்தையும் மகிமையையும் கொடுக்கவந்த இரட்சகர் என்று விளங்கும்பொருட்டு, தேவமாதாவின் சுத்திகாரத்தின் திருநாளில் குருக்கள் மந்திரித்துக் கொடுக்கும் எரிகிற மெழுகு திரிகளை விசுவாசிகள் கையில் ஏந்திக்கொண்டு சுற்றுப்பிரகாரம் செய்கிறார்கள். கிறீஸ்துநாதர் இஸ்ராயேலர் வம்சத்தில் பிறந்து, அச்சனங்களுக்கு அவர்களுடைய சொந்த நாடாகிய பலஸ்தீனாவிலே தம்மை மேஸ்ஸியாவெனும் அரசனாக வெளிப்படுத்தித் தம்முடைய நிகரற்ற புண்ணிய மாதிரிகையினாலும் திவ்ய போதனையினாலும் மகத்தான அற்புத அதிசயங்களாலும் அவர்களை மகிமைப்படுத்தினதினால் அவரை இஸ்ராயேல் ஜனங்களின் மகிமையென்று சிமையோன் போற்றிக் கொண்டாடுகிறார்.

இச்சங்கீதம் கிறீஸ்துநாதரை இரட்சகர், ஒளி, மகிமையென்று வாழ்த்துகிறது. இதிலே அவருக்கு உத்தம புகழும் உன்னத வாழ்த்துதலும் கூறப்படுவதுமன்றி இதனை சுவிசேஷத்தின் சங்கேஷேபம் என்றும் அர்ச். பொனவேந்தூரா வசனிக்கிறார்.

விசுவாசிகள், துறவிகள், குருப்பிரசாதிகள் மரணத்தை எப்போதும் நினைக்கும்படியாகவும், அவர்களுடைய சீவியம் மரணத்தைச் சதா எதிர்பார்த்தவண்ணமாயிருக்கும்படியாகவும், இப்பிரபஞ்ச சுகவிலைகள், வீண் விசாரங்களினின்று விடுதலையாக நித்திய பேரின்ப பாக்கிய மகிமையைக் கைப்பற்ற அத்தியந்த ஆசையுடன் அபேக்ஷிக்கும்படியாகவும் திருச்சபை இச்சங்கீதத்தை அனுதினம் மாலையில் பாட வேண்டுமென்று கற்பிக்கின்றது. "ஆனால் இப்பூலோக சுகவிலைகளினின்று விடுதலையாக விரும்புகிறவன், தேவாலயத்துக்கு வரக் கடவான். நமதாண்டவருக்காகக் காத்திருக்கக் கடவான். விசுவாசத்தின் கரங்களாகிய புண்ணிய கிரியைகளைச் செய்து, அவரை அரவணைத்துக்கொள்ளக் கடவான். அப்போதுதான், சுகவிலைகள் நீங்கி மனச்சமாதானமும், அமரிக்கையும், இளைப்பாற்றியும் அவனுக் குண்டாகும். சீயோனைக் கண்ணுற்றதினால் மரணத்தைக் காணமாட்டான். இவ்விதமாய் தன் சரீரச் சிறையில் அடைபட்டிருக்கும் நீதிமான் அதினின்று விடுவிக்கப்பட்டு கிறீஸ்துநாதருடன் நித்தியமாய்ச் சீவித்து மகிழ ஆசிக்கக்கடவான்." (அர்ச். அம்புரோஸ்).

(தொடரும்)

S. M.

MADIYEENI.

மதியீனி

அல்லது

'தன் வினை தன்னைச் சுடும்.'

(முன் தொடர்ச்சி.)



கணவன் கையிலிருந்த சாவரிசைப் பார்க்கவும், எட்டிப் பார்த்து எடுத்துக்கொண்டாள் மனைவி. அவளுக்குச் சந்தோஷம் எம்மாத்திரமென்று சொல்லவும் வேண்டுமோ? அன்று ஐயருக்கு நன்றாகப் படைத்தாள் சாதம். அவரும் விலாப்புடைக்கச் சாப்பிட்டுவிட்டு வீட்டுத் திண்ணையில் படுத்து நித்திரையானார். கண்விழித்ததும், இடுப்பிலிருந்த பித்தளைத் தாயித்தொன்றைக் கழற்றி, புளிபோட்டு தேய்த்து, பளபளவெனப் பொன்போல் ஜொலிக்கத் துலக்கிக்கொண்டிருக்கிறார். எவ்வளவு தேய்த்தும் சரிவரவில்லை மனைவியோ அதை வாங்கவேண்டும், இதை வாங்கவேண்டும் என்று காது செவிடுபடக் கத்திக்கொண்டிருக்கிறாள். "குரங்கு கையில் பூமாலை அகப்பட்டாற்போல்' என்னை என் வீணாய் அலட்டுகிறாய்? ஆக்கப் பொறுத்தவள் ஆறப் பொறக்கக்கூடாதா? கொஞ்சம் பொறு. எல்லாக் காரியமும் முடியுமட்டும். இதைத் தேய்த்துத்தேய்த்துப் பார்க்கிறேன், களிம்பு போய் துலங்கு தில்லையே" என்றார்.

"என் அவ்வளவு கஷ்டம்? ஒரு துணியில் அதைக் கட்டிக்கொண்டுபோய் இதைத் திறக்கக் கூடாது திறந்தால் தோஷம் என்று பயமுறுத்திவிட்டால், நிழலி பார்க்கப்போறாளாக்கும்" என்று ஓரினாள் மனைவி.

"ஆகா! நல்ல யோசனைதான்" எனச் சொல்லிக்கொண்டு, மஞ்சள் துணியொன்றில் அந்தப் பித்தளைத் தாயித்தைப் பொதிந்துகொண்டு தாசில்தார் வீட்டுக்குப்போனார். எப்போது வருவாரெனக் காத்துக்கொண்டிருந்த பெரியம்மாளிடம் கொடுத்தார் தாயித்தை. அவள் அதையவிழ்த்துப்பார்க்க ஆரம்பித்தாள். இதைக்கண்ட ஐயர் "அம்மா! அதைத் திறந்துபார்க்க ஒண்ணாது. நல்ல சகுனமான பின் வேண்டுமெனில் பார்க்கலாம். தற்போது செய்வது அதமம்" எனப்

பகர்த்தார். பேதை பெரிய மனுஷி யதற் கிசைந் தனள். அதைக் கொண்டுபோய் கணவனின் தலையணையின்கீழ், ஒருவரு மறியாது ஒளித்து வைத்துவிட்டனள். ஐயரோ பின்னும் பணம் பறிக்க வேறுபாய மெதுவெனச் சிந்தித்தவண் ணமாயிருக்கிறார். அவர் மனைவி பணவாசை யெனுங் கொள்ளியில் எண்ணெய் வார்க்கிறாள்.

தாசில்தாரின் வியாதி சற்றுக் குணம்போல் தோற்றுகிறது. அதைக்கண்ட பெரியம்மாள் எல்லாம் ஐயர் உபகாரமேயெனக் கொண்ட னள். இதர பந்துக்கள் வைத்தியரின் திறமை யேயென மதிக்கிறார்கள். வியாதியஸ்தர் தம் தேகத்தில் வியர்வை முற்றினதிலுல் தங்கை மகள் கங்கை ராஜமணியை யழைத்து விதிறி கொண்டு சற்றே வீசும்படி கேட்டார். அவ ளதை மறுப்பானா? மாமனுருக்குப் பணிபுரியவே வந்திருக்கின்றனள். மிகுந்த சந்தோஷத்தோடு தன் வேலையைச் செய்கிறாள். மாமனுர் தலை யணையின்கீழிருந்து புற்றிலிருந்து பாம்பு தலையை நீட்டுவதுபோல் நீட்டிக்கொண்டிருந்த மஞ்சள் துணியொன்றைக் கண்டாள். அது என்னவென்று பார்க்க இழுத்தாள். தலையணை யசைந்தது. தாசில்தார தை யுணர்ந்து என்ன வென விளுவிளுர். அதை யெடுத்துக் கண் ணில் காட்டவே அதின் அருத்தம் அவருக்கு உடனே புலப்பட்டுவிட்டது. "என்ன! இந்த அகாச்சாரங்களை யார் செய்தது?"

இராஜமணி.—எனக்குத் தெரியாது மாமா.

தாசில்தார்.—உன்னம்மா வைக்கச்சொன் னளோ?

இராஜ.—நானு வைத்தேன்? அங்கே யிருந் ததை யெடுத்தேனே தவிர வேறொன்று மறி யேனே! எங்கம்மா! அப்படிச் செய்யவேமாட் டார்கள்.

தாசில்.—அவளில்லாவிடில், உன்னத்தை தான் இப்படிச் செய்யத் துணிவான். அவ ளைக் கூப்பிடு. உடனே இராஜமணி தன் அத் தையை யழைத்துவந்தாள். அவள் வரவும் தாசில்தார், தாயித்தை யெடுத்து "சீ! மூதேவி" யென்று முகத்தி லெறிந்தார். அவருக்கு அக் ணம் போதுமான சக்தி யிருந்திருக்குமாகில் வாயாலும் கையாலும் அவளை கன்கு புடைத்தி ருப்பார். ஆனுல் பெரியம்மாளுக்கு இதுவே போதுமானது. இஞ்சி தின்ற குரங்குபோல் ஏமாந்து நின்ருள். ஐயர் கொண்டுவந்து கொடுத்த பரிசுத்த பண்டமோ அக்கினிக் கிரை யானது. முற்றத்திலிருந்து மாட்டுக்குத் தண் ணீர்காட்டிக்கொண்டிருந்த வண்டிக்காரன் இதைப் பார்த்திருந்தான்.

மறுநாள் தெருவில் ஐயரைச் சந்தித்தான் வண்டிக்காரன். "சாமி! என்னே மறந்திட்டிங் களே!" "இல்லேயடா! உனக்குக் கொடுக்கி றேன். அம்மா இன்னு மொன்றும் மளிக்கவில் லையே. நேற்றுத் தாயித்தொன்று கொடுத்தேன். இன்றைக்கு வரச்சொன்னுர்கள். நான் போகி றேன்."

வண்டிக்காரன்.—தாயித்தா! அது போச்சி.

ஐயர்.—என்ன சொல்லுகிருய் நீ?

வண்டி.—ஆம்! சாமி! நீங்க கொடுத்த தாயித்தை யடுப்பிலே போட்டுக் கொழுத்திப் போட்டாங்க.

ஐயர்.—யார் அந்த அநியாயஞ் செய்தது?

வண்டி.—ஐயாதான் செய்யச்சொன்னுரு.

ஐயர்.—"சரி! நான் போய் விசாரிக் கிறேன்" என்றவந்தார். வழியிலேயே பணந் தட்ட புது யோசனையொன்று செய்துகொண் டார். வீட்டிற்குள் புகுந்தார். பெரியம்மாளைக் கண்டார். வியாதியைப்பற்றி விசாரித்தார். சற்றே குணமென வறிந்து மகிழ்ந்தார். பின் னர் "அம்மா! தாயித்தை வைத்தீர்களா?"

பெரி.—"ஆம், அங்கேதானிருக்கு." உள் ளதைச்சொல்ல அவளுக்குச் சற்றே பயந்தான். 'சடையைப் பிடித்திழுத்தால் சங்கியாகி விட்டே வருவான்' என்பது அவருக்குத் தெரியும்.

ஐயர்.—அம்மா ஏதோ! தோஷம் கடந் திருக்கிறது. இன்றைக்கு கான் பூசைபண்ணும் போது எனக்குத் தெரிந்தது. அத்தத் தோஷம் கம்மேலே யிருக்குமாஞல் கட்டாயம் நாசம் வரும்.

பெரி.—என்ன தோஷம்.?

ஐயர்.—தாயித்துத்தான்.

பெரி.—தாயித்துத்தா னிருக்குது என்று சொன்னேனே.

ஐயர்.—அம்மா! அப்படியல்ல, என்னே ஏமாற்றவேண்டாம். அது இப்போது சாம்ப ரோடி கிடக்கும்.

பெரி.—உமக்கெப்படித் தெரியும்?

ஐயர்.—நாங்கள் பூசாரியென்றிருப்பது என்னத்துக்கு? இதையெல்லா மறியாவிடில் எங்கள் சாதகத்திஞல்தான் என்ன பயன்? பக வானருளால் எல்லாம் வெளிப்படையாகும்.

'உள்ளூர் சோதிடன் உளவறிந் தூரைப் பான்' என்பது அம்மாளுக்குத் தெரியாது. ஆதலால் ஐயர் சொன்னதைக் கேட்டு மயங்கித் தியங்கி, பயந்து தடுமாறி என்ன செய்வதெனத் தெரியாது ஏங்கினுள். ஐயர் சொல்லுவார் "அம்மா! அப்படிச் செய்தது பெருந் தோஷம். அந்த அபத்தமான செய்கையைச் சபத்தமாக்கி விடவேண்டும். அகாச்சாரக் கிரிகையைக் குஞ்சாரமாக்கிவிட லவணியம்! இல்லாவிடில் மோசமும் நாசமும் நிச்சயம்; 'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்றுற்போல் அத்தத் தோஷத்தின் பலன் அடித்தடித்து வரும். எச்சரிக்கையாயிருக்கவேண்டும்." இதைக்கேட் டுத் திகில்கொண்டாள் பெரியம்மாள். என்ன செய்து அதைப் பரிகரிக்கிறது என விளுவி னுள். ஐயர் (வந்தது வேட்டையென தன் னிலே உன்னிக்கொண்டு) "இன்னெரு பூசை போடவேண்டும் கூடிய சீக்கிரம், அதுவும் பெரிய பூசையாயிருத்த லவணியம்."

பெரி.—ஐயரே! போய்த் தவருமல் செய்து போடும், நான் 2-ரூபாய் தருகிறேன்.

ஐயர்.—இரண்டு ரூபாய் எந்த மூலைக்கு? போனதடவை 5-ரூபாய் கொடுத்தீர்களே; இப் போது அதிலும் மும்மடங்கு அதிகமாயிருக்க வேண்டும்.

பெரி.—5-ரூபாய் கொடுக்கிறேன்.

ஐயர்.—அது பற்றுமா! பத்து ரூபாயா லுமவசரம்.

பெரி.—பத்து ரூபாயா?

ஐயர்.—குறைந்தது அத்தனை. எனக்கென் ருல் கான் கவனிக்கமாட்டேன். இது சாமி காரியம். பின்னுல் எனக்குக் கிடைக்குமென கானிருக்கிறேன். பயப்படாதேயுங்கள். ஐயா வுக்கு கல்ல சுகமாஞல் பத்துக்குப் பத்தாயிர மாய்ச் சம்பாதிப்பாரே!

"நிரியாமல் ஞானியருக் கிவிடமென்று
தெருப்பிரித்தங் கிருக்கிறதோ இல்லையில்லை
நரியிடுட கொம்புவைத்து மழுப்பிப் பேசி
காட்டரசு குனென்று பெயருமிட்டு
குருவென்றே உபதேசம் கற்றோர் போலக்
குருடாகச் செத்தெழுத்தை உபதேசிப்பான்
அருளான பேர்போலே நீட்சை யென்பான்
அம்பரத்தைக் காணுத அசடன்தானே!"

கள்ளவேஷம்பூண்டு மழுப்பிப் பேசி இழுத் துப் பறிக்கும் மோசன் இவன் என்று அறியாது பத்து ரூபாய் ஐயருக்கு வாய்க்கரிசிபோட்டாள். ஐயர் ஆனந்தங்கொண்டார். ஐயர் மனைவி பர மானந்தங்கொண்டனள்.

பெரியம்மாளுக்கோ மனத்திருப்தி. ஒரு பக்கத்தில் தாசில்தார் சன்னஞ் சன்னமாய் சுக முறுகிறார். மறு பக்கத்தில் ஐயர் சொன்ன தோஷமெல்லாம் பூசைபண்ணுகிறதிஞல் நீங் கிப்போகுமென்பது மன உறுதியாயிற்று. கவலை குறைகிறது. கஷ்டம் நீங்குகிறது. வீடுமுற் றும் சந்தோஷமாயிருக்கிறது. அது நீளிக்க வில்லை. தாசில்தார் படுக்கையிலிருக்கிறார். மணி பகல் பத்து. தபால்காரன் தந்தி ஒன்று கொண்டுவந்து கொடுத்தான். பார்த்தார்—உடைத்தார்—வாசித்தார்—துயருற்றார். ஏனெ னில் "மகன் அமலதாஸ் மரணமாயினன் இன்று" என்ற அருள்தாஸ் பிள்ளை தந்தி கொடுத்திருந்தார். உடனே மனைவியை யழைத் துச் சொன்னர். கேட்டாள் சங்கதியை—கொண்டாள் துக்கம். அழுதாள் கதறிப் பதறி. உருத்தாள் கண்ணீர் மாலைமாலையாய்.

"அழுகிறதிருக்கட்டும் இன்றதானே தங் கச்சி மாப்பிள்ளையைக் கூட்டிக்கொண்டு புறப் பட்டுப்போ" வென மொழிந்தார் தாசில்தார். அவர்கள் வேண்டியவைகளை யெடுத்துக் கொண்டு அடுத்த வண்டியிற் பயணமாக முஸ் திப்புச்செய்கிறார்கள்.

* * * *

அமலதாஸ் மரணமாயினன். துயரக்கடலே லிட்டு நீந்துகிறன். கண்ணீர்க் கணவாயைக் கடந்தான். பெற்றேரைவிட்டுப் பிரிந்தான். ஆனந்தம் சுகிக்க எழுந்தான். பரமபதமடைந் தான். பரகதி சேர்ந்தான். பெரியம்மான் பட் டணத்தைவிட்டுப் போகும்போது குழந்தைக் குச் சுகம் சுமாராயிருந்தது. நாலைடவில் சுக முற்றான். ஆனுல் கினையாச் சமயத்தில் திடீ ரெனக் காய்ச்சல் கண்டது. இருமல் தோன்றி னது. ஜன்னி சேஷ்டை யுண்டானது. டாக் டர்மாரெல்லோரும்வந்து பார்த்தபோராயிருந்தார் கள். ('நியுமோனியா' வெனப் பகர்ந்தனர். தேர்ந்த பண்டிதர்). இரண்டு நாளைக்குள்ளாக உயிர்துறந்தான். பெற்றேர் துயரக்கடலில் மூழ்கினர். சேயை யிழந்த தாய் பட்ட கஸ்தி யும் துயரமும் எம்மட்டென்று சொல்லுந்தன்

மையன்று. அழுதழுது அங்கன் குலைந்து ஊணு றக்கமின்றி, பிள்ளையைப்பற்றி யேங்கி யேங்கி மதிமயங்கினவளாஞள். பெற்ற மனம் பித்தல்லவா! அருள்தாஸ் பிள்ளையின் மனம் துன்பத்தால் வாடினும், மனதைரியங்கொண்டு எல்லாவற்றையுஞ் சரிவர நடத்திவந்தார். குழந்தையை பூமிதானம் பண்ணினதுமுதல், தனது பத்தினியைத் தேற்றுவதே யவரலுவலாயிருந்தது. நய மொழிகளையும் ஆறுதலான வார்த்தைகளையுஞ் சொல்லி, மனப் புண்ணை யாற்ற முயன்றுவந்தார். தனிமையாக மனைவி விம்மி விம்மி யழுது அங்கலாய்ப்பதைப் பார்த்து "கண்ணே! என் துயருற்று உயிரை யிழக்கப் பார்க்கிறாய்? தேவ திருவுளம் அப்படியிருந்தது. நாம் என்ன செய்யலாம்? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தீர். கடவுள் கொடுத்தார், அவர் எடுத்துக்கொண்டார். அவருடைய நாமம் ஸ்துதிக்கப்படக்கடவதென அமைந்திருப்போமாக "வெனச் சொல்வார் ஒரு சமயம் "அமலதாஸ்—அவன் பேருக்கொத்த சீருடையவன். பாவமற்ற சிசு. மெய்யாகவே மோக்ஷத்திலிருப்பான். நமக்காக வேண்டிக்கொள்வான். சர்வேஸ்பரன்முன் நமக்காகப் பரிந்துபேசுவான். ஏன் சும்மா கண்ணியாயிருக்கவேண்டும் பெண்ணே?" என்று விளம்புவார் மறு சமயம். "கடவுள் செய்வதெல்லாம் நமது நன்மைக்காகவேயிருக்கும். பையன் சீவித்திருந்தால் நமக்கு என்னென்ன நேரிடுமோ, இன்பத்திற்குக் காரணமாயிருப்பானே, துன்பத்திற்குக் காரணமாயிருப்பானே தெரியாது. எத்தனையோ பெற்றோர்கள் தமது மக்கள் செய்யும் அடாத செய்கைகளைச் சகிக்கவொண்ணாது. குழந்தைப் பருவத்தில் மரித்திருந்தாலும் நல்லது என்று பிரலாபிப்பதைக் கண்கூடாய்ப் பார்க்கிறோம். இளமையில் அன்பாய் வளர்த்த மக்களே, முதுமையில் அவர்களுடைய தூர்க்கிருத்தியங்களினால் பெற்றோர் சபித்துத் துன்புறுவது நமக்கு நன்கு தெரியும். ஆகையால் நமக்கு அப்படியொன்றும் விளையவொட்டாது நமித்த தயாபரக் கடவுளைத் துதித்துக் கவலையற்றிருப்போம், ஆரோக்கியமரி" என்று உருக்கமாய் இயம்புவார் மற்றொரு சமயம். இப்போதுதான் அவள் வாய்திறந்து பேசுவாள் "நான் கடவுளை நிந்திக்கவில்லை. என் கவலைதான் என்னை வாட்டுகிறது. 'அம்மா' என்றழைக்க ஒரு சிசுவுமில்லையே. எத்தனையோ பொருத்தனைகள் செய்வதாக நேர்ந்தேன். ஒன்றும் பலிக்கவில்லையே."

அருள்.—அதெல்லாம் நமதிஷ்டம்போலாகுமா? கடையில் பணங்கொடுத்து சரக்கு வாங்குகிறமாதிரியா இது? அவருக் இஷ்டமானற்றையே யளிப்பார்.

ஆரோ.—கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறாரே, நான் அல்லும் பகலும் ஓயாது அழுத கண்ணீரும் நிந்தின மூக்குமாய் கெஞ்சி மன்றாடினேனே. என் மன்றாட்டைக் கேட்கவில்லையே.

அருள்.—கேளுங்கள் கொடுக்கப்படும் என்று நமது இரட்சகர் திருவாய்மலர்ந்தருளினார். ஆனால் நாம் கேட்டதையெல்லாங் கொடுப்பேனென்று சொன்னாரோ? இல்லையே! கேளுங்கள் கொடுக்கப்படும் அதாவது கேட்கவேண்டியது உங்களது கடமை. நானே கொடுப்பேன். நீங்கள் கேட்டது உங்களது ஆத்தும இரட்சண்யத்திற்கேற்றதாயின் அதையே கொடுப்பேன். உல்லாவிடின், அதை விட்டுவிட்டு வேறொன்றைக் கொடுப்பேன், என்பதுவே அதன் பொருள். ஆகையால், நாம் வருந்திக் கேட்ட பிள்ளையினுயிரைக் கொடாதபோதிலும் வேறு பேருபகாரம் தருவார் என்பதில் தடையில்லை. பின்னர் நாம் கேட்கும்போது அநேகமாய் நம்முடைய சுயநலப்பிரியத்தையேமுன்னிட்டுகேட்கிறோம். அவருடைய அதிமிக தோத்திரத்தையோ கனவிலேயும் நினைக்கிறோமில்லை. ஜெபம் செய்யும்போது நாம் எப்படிச் செய்கிறோம்? உதடு மட்டுமாடுகிறது, இருதய மங்குமிங்கும் ஓடுகிறது. இப்பேர்ப்பட்ட மன்றாட்டு அவருக்குகந்ததாகுமா? சில சமயங்களில், நாம் கேட்பதையடைய பாத்திரவான்களல்ல. மனம்போனபோக்கெல்லாம்போய். தேவ கட்டளையை மீறிவிட்டு, அவசர நேரத்தில் ஓலமிட்டுக் கடவுளைக் கேட்கிறோம். 'காரிய முடியுமட்டுங் காலைப் பிடிக்கிறது, காரிய முடிந்தபின் குடுமியைப் பிடிக்கிறது' போலல்லவா இருக்கிறது? நமது தர்கடத்தைக்குத் தண்டனையாக அவருடைய சகாயம் வரவேவராது. அமலதாஸ் விஷயத்தில் பார். உண்மம்மாள் பேயாராதனை பார்த்தார்களே. அது கடவுளுக் கேற்குமா? கடவுள் தான் நம்மட்டில் இரங்குவாரா? இப்படியெல்லாஞ் செய்துவிட்டு சாமி சாமியென்றுரும்பிட்டு விழுந்தால், காரியஞ் சித்திக்குமா? சித்திக்காவிடின் கடவுளைப் பார்த்து முறையிடுவது யோக்கியமாகுமா? நாம்மட்டும் உகந்தவிதமாய் இரந்து மன்றாடினால் கடவுளிடமிருந்து கருணைகள் பல வடைவது மெய். நாம் கேட்டதை யடையாதே போனாலும் அதற்குப் பதிலாய் மேலான உபகாரஞ் செய்வார். அநேக சமயங்களில் நாம் கேட்பது, நமக்கு நன்மையாகுமோ—தின்மையாகுமோவெனத் தெரியாது. ஆனால் எல்லாம் வல்ல நல்ல தேவனுக்குச் சர்வமும் சவிஸ்தாரம். ஆகையால் நமது நன்மையைக் கோரியதற்கேற்றதையே யளிப்பார். மனிதர்களுமே யப்படிச் செய்கிறார்கள். அதை முறையிடுவாரில்லை. அப்படியானால் சர்வ ஞானமுள்ள சர்வேஸ்பரன் செய்யும்போது முறையிடுவதற்கு நாம் யார்? நான் ஒரு தாள் பார்த்ததைக் கேள். அது இதற்குத் தகுந்த உதாரணமாகும். ஓர் தாயானவள் குழந்தையைப் பக்கத்தில் வைத்துகொண்டு முருங்கைக்காயை அரிந்துகொண்டிருந்தாள். பிள்ளை ஓர் காயை எடுத்து விளையாடிக்கொண்டிருந்தது. சற்றே பின் காயை எறிந்துவிட்டு கத்தியைக கேட்டது. தாய் அதைக் கொடுக்காது பொம்மையொன்றை எடுத்துக் கொடுத்தாள். அதை வேண்டாமென தள்ளிப்போட்டது. கத்தியே வேண்டுமெனப் பிடிவாதமாய் நின்றது. தாய் கொடுக்கவில்லை. அழுதது, கத்தினது, ஓலமிட்டது, கீழே விழுந்தது, உருண்டு புரண்டது. தாய் கொடுக்கவில்லை. "கத்தியை உன் கையில் கொடுத்தால் நீ கையைக் காலை வெட்டிக்கொள்வாய்—அப்புறம் உன்னைப் போட்டு மாரடிக்கவா! சும்மா இரு" என்றாள். ஒரு காயை எடுத்துத் திரும்பவுங் கொடுத்தாள். அது வாங்கவில்லை. அழுகையோ நீங்கவில்லை. அச்சமயம் வீதிவழி மிட்டாய்க்காரன் போனான். அவனைக் கூப்பிட்டு ஒரு காசுக்கு மிட்டாய் வாங்கிக் கொடுத்தாள். சக்கரை வாயில் படவும் பிள்ளையின் சத்தம் அமர்ந்தது. இதிலிருந்து நாமறிகிறதென்ன? பிள்ளையானது எவ்வளவு அழுதழுது கேட்டபோதிலும் தாய் அதன் கையில் கத்தியைக் கொடுக்கவில்லை. ஏனெனில் அதினால் ஏதாகிலும் தீங்கு வருமென உணர்ந்தாள். அதற்குப் பதிலாய் வேறொன்றைக் கொடுத்தாள். அது முன்னதற்கு மேலானது. இதேவண்ணந்தான் கடவுளும் நமக்கு செய்கிறார். அவர் நேசத் தாயைவிட பதின் மடங்கு பாசமுள்ளவர். ஆகையால் நாம் ஒன்று மறியாத குழந்தையைப்போல் எதையும் கேட்கத் துணிகிறோம். ஆனால் நாம் கேட்பது நமக்கு ஆபத்தை விளைவிக்குமென்பது அவருக்குத் தெரியும். ஆதலால் கொடுப்பதில்லை. அப்படியானால் நாம் சடைந்துகொள்வது தர்மமாகுமா? அதற்குப் பதிலாய் அவரை யதிசமதிகமாய்த் துதிக்கவேண்டாமோ? நாம் கேட்டதைக் கொடாவிடில் அதைவிட மேலான அருளை யளிப்பார் என்பது திண்ணம். ஆரோக்கியமரி! நமக்கு நேர்ந்தது அப்படியே. வீணைப் புலம்பிப் பிரலாபிப்பதைவிட 'கடவுள் தந்தார் கடவுள் எடுத்துக்கொண்டார், அவர் செய்வதெல்லாம் நமது நன்மைக்காகவே' என்றெண்ணி அமைதியாயிருப்போமாக.' இதைக்கேட்டு மனங் கனிந்து "சுவாமி உம்முடைய சித்தம்" என்று இருதயத்திலிருந்து உரைத்தாள். கெட்ட கிறீஸ்துவர்களைப்போல நமக்கு நேரிட்ட நிமைகளில் கடவுளைப் புறக்கணித்துச் சபித்துப் பழிசொல்லல. கடவுள் சித்தம் பணிந்து நடப்பது சுகிர்த இலட்சணமென்பதை மறந்தனளல்லள். அல்லது கடவுள் செய்வதெல்லாம் நமது நன்மையை விரும்பியேயென்பதை யறியாதவளல்ல. ஆனால் கவலை மேற்கொள்ளுவ மனித பலவீனத்தினுலப்படி அங்கலாய்த்தது நின்றாள். புத்தியை யுபயோகிக்கச் சக்தியற்றிருந்தாள். சன்னஞ்சனமாய் நன்குணர்ந்து ஆண்டவர் திருவுளத்திற்கு அமைந்தனள்.

மறுநாள் உதயம், ஆரோக்கியமரியின் தாய் வந்திறங்கினாள். உடனே ஒப்பாரிவைத்து ஓலமிட்டுக் கூவிக் கதறினாள். இது ஒருவாறு அவிந்த நெருப்பை ஊதிவிட்டாற்போலிருந்தது ஆரோக்கியமரிக்கு. தானுஞ் சற்றழுதுவிட்டு 'சுவாமி சித்தம், நாம் என் செய்யலாம்' என்று தேறுதலான வார்த்தை யுரைத்தாள். பெரியம்மாள் அங்கு ஏறக்குறைய 15-காளிருந்தார்கள். தஞ்சையிலிருந்து ஒரு கடிதமுமில்லை. எல்லாஞ் சேமமாயிருக்குமென யூகித்துக்கொண்டார்கள். வியாதியாயிருந்த தகப்பனாரை மகள் பார்க்க ஆசைப்படுவாளென்றும், அவளுக்குமே சற்று வீடி மாற்றுதல் நன்றென்றும் நினைத்து ஊருக்கு அழைத்துபோக மருமகனே வினவினான். அருள்தாஸ் பிள்ளை தடை செய்யவில்லை. "நான்கூட மாமனாரை வந்துப்பார்க்க ஆசிக்கிறேன். வேலைத் தொந்தரவும், வீட்டிலே வேறியாருமில்லாததாலும் இப்போது வரமுடியாது. ஆரோக்கியமரியையக் கூட்டிச்செல்லுங்கள். நான் பிற்பாடு வருகிறேன்" என மாமியாரிடம்

நவின்றார். ஆகவே பிரயாணத்திற்கு முஸ்திப்புச்செய்து ஞாயிறுவாரம் சாயரட்சை வண்டியில் புறப்பட்டுவிட்டார்கள்.

* * * *

(இன்னும் வரும்)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். நிருப நேயர்கள் தங்கள் நிருபங்களை மிக விரிவாய் எழுதி விடுகிறார்கள். இடம் போதாமையால் அவைகளை ஒருவாறு குறைக்கவும், அல்லது முழுதுமே விலக்கவும் அவசியம் நேரிடுகிறது. நேயர்கள் இதைக் கவனித்து தங்கள் கடிதங்களைக் கூடியவரையில் சுருக்கி எழுத வேண்டுமெனக் கோருகிறோம். ப—ர்.]

நாகையில் சமாதான உடன்படிக்கையின் கொண்டாட்டம்.

1919-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் தேதி செவ்வாய்கிழமை நேசக் கட்சியாரின் உடன்படிக்கையில் ஜெர்மனியர்கள் கையொப்பமிட்டார்களென்ற சந்தோஷ செய்தியைக் கேள்விப்பட்டவுடன் திருமயிலை மேற்றிராணியார் உத்திரவின்படியும் நாகை கலெக்டெர் அவர்கள் வேண்டுகோளின்படியும் நாகப்பட்டணத்திலுள்ள ராஜ விசுவாசிகளாகிய கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் மிக்க உற்சாகத்துடனும் ஆரவாரச் சிறப்புடனும் சமாதான உடன்படிக்கையின் கொண்டாட்டத்தைக் கொண்டாடினார்கள். அன்று காலைமுதல் மாலைவரையிலும் கோவில் மணிகள் எல்லாம் கலகலவென்று அடிக்கடி சப்தித்தன. அர்ச். லூர்துமாதாக் கோவிலின் வெளிப்புறம், கொடிகளாலும் தோரணங்களாலும் சிங்காரிக்கப்பெற்று காலை 6½-மணிக்கு திவ்யபலிபூசையும் மாலை 5½-மணிக்கு திவ்ய நற்கருணையின் சந்நிதானத்தில் "தேதேயும்" என்ற நன்றியறிந்த தோத்திரப்பாடலும் திவ்ய நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றன. பிறகு பாடசாலை சிறுவர்களும் சிறுமிகளும் மற்றும் நகரிலுள்ள கனதனவான்களுமாக ஏறக்குறைய சுமார் 600 பேர் மகிமைதங்கிய ஞானத் தந்தை தாமஸ் சுவாமியார் அவர்கள் அக்ராசனத்தின் கீழ் கூட்டம் கூட, கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றி அக்ராசனாதிபதியவர்கள் தெளிவாக தெரிவித்தபிறகு கனம் தங்கிய ஞானப்பிரகாசம் பிள்ளை, துரைசாமி செட்டியார், தம்புசாமி பிள்ளை, சின்னப்ப பிள்ளை முதலானோரால் நமது சுய பாஷையில் மிக்க சாதுர்யமாய், பிரிட்டிஷ் இராஜாங்கத்தாராலும் இராஜபக்தியாலும் உண்டாகும் பல நன்மைகளையும் முடிவான யுத்தத்தினால் உண்டான நன்மை தீமைகளையும், இன்னும் பல விஷயங்களையும்பற்றி உபந்நியாசம் செய்யப்பட்டன. கடைசியாய் சங்கைக்குரிய அக்ராசனாதிபதியவர்கள் நம்முடைய இராஜாங்கத்தாருக்கு இப்பெரும் போரில் வெற்றி விருதோடு ஜெயமும் சமாதான உடன்படிக்கையால் உலகத்திற்கு நன்மையும் உண்டானதற்காக நாம் எல்லோரு மனமகிழ்வதோடுகூட நம்முடைய இராஜாங்கத்தார் இந்தியர்களாகிய நமக்கு இதுகாறும் செய்திருக்கிறதும் இனி செய்யப்போகிறதுமான அநேக நன்மைகளுக்காக என்றும் நாம் இராஜ விசுவாசிகளாக நடந்து நன்றியறிதலைக் காட்டவேண்டுமென்றும், நம்முடைய பிரிட்டிஷ் இராஜாங்கம் மென்மேலும் தழைத்தோங்கி வளரவேண்டுமென்றும், நம்முடைய மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி நீடூழிகாலம் வாழ்ந்து சிறப்புற்றோங்க வேண்டுமென்றும் கடவுளை நோக்கி நாம் அநுதினமும் பிரார்த்திக்கவேண்டுமாய்ச் சொல்லி முடித்தார். பாடசாலைப் பிள்ளைகள் ஏறக்குறைய 250 பேர் ஒன்றாய்ச் சேர்ந்து (God save the King) என்னும் சங்கீதத்தைத் பாடின பிறகு வந்திருந்த அனைவருக்கும் சிற்றுண்டி அளிக்கப்பட்டுக் கொண்டாட்டம் முடிவாயிற்று. இந்தக் கொண்டாட்டம் மிக்க விமரிசையாகவும் சிறப்பாகவும் நிகழ உற்சாகத்துடன் உழைத்தவர்கள் கனந்தங்கிய R. சின்னப்பாவு செட்டியாரும், பீட்டரும், அந்தோனிசாமி செட்டியாரும், சிங்காரம் செட்டியாருமாவர்.

பிரிட்டிஷ் இராஜாங்கமும் ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் நீடூழி வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

4—7—1919. தம்பிதுரை.

குண்டிரிமலைவாசிகளின் ஆத்தும இரட்சண்யத்துக்காக வசூலான தருமம்.

1919-ம் வருஷம் மார்ச் மாசத்தில் பிரசுரிக்கப்பட்ட நல்ல ஆயன் பத்திரிகையில் குண்டிரிமலைவாசிகளின் ஆத்தும இரட்சணியத்தைக் குறித்தும், அவர்கள் நிர்ப்பாக்கிய நிலைமையைக் குறித்தும் தர்ம தண்டல் கேட்டிருந்ததைப் பத்திரிகை நேயர்களும் மற்ற நேயர்களும் வாசித்தும் கேட்டும் இருப்பார்கள். அதில் கோரியபடிக்கு இதனடியில் குறிக்கப்பட்டிருக்கும் லிஸ்டில் கண்ட தொகைகளை கொடுத்திருக்கும் தர்மிஷ்டர்களுக்கு நாம் மெத்த நன்றியறிந்திருப்பதுடன் சர்வேஸ்பரன் அவர்களுக்குப் பதின்மடங்கு சம்பாவனை கொடுப்பார் என்பதும் நிச்சயம்.

	ரூ.	அ.
Mr. A. R. டையாஸ்	5	0
,, A. P. கோமாஸ்	4	0
,, F. M. குருஸ்	3	0
,, J. P. பெரேரா	3	0
,, P. G. மரியபிரகாசம்	3	0
,, J. P. S. (குரும்பகரம்)	5	0
,, சர்ஜன் சாமிக்கண்ணுப் பிள்ளை ...	5	0
மொத்தம் ...	28	0

G. MARTIAL,
பங்கு சுவாமியார்,
கொடிவேரி.

13—7—1919.

[மேற்காட்டிய விஷயம் மிக்க பலனுக்குரிய தரும கைங்கரியமாகையால் நமது சந்தாதார நேயர்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்து அதை யாதரிப்பார்களென நம்புகிறோம். ப—ர்.]

பெங்களூர் கத்தோலிக்கு கோவாப்பரேட்டிவ் கிரெடிட் சொஸைட்டி (லிமிடெட்)

பெங்களூரில் ஸ்தாபகமாயிருக்கும் ஷை சங்கத்தின் இரண்டாம் வருடத்திய பொது ஜனக் கூட்டம் கடந்த ஜூன்மீ 29-ம் உயில் கூடியது. இதற்கு கனம் பஹதூர் மஹமது கரீமுல்லா சாஹிப். B. A. டிப்டி கலைக்டரவர்களும் விஜயம் செய்திருந்தார். ஷை பஹதூர் அவர்கள் இவ்வூர் பஞ்சத்தின் நிலைமையையும், ஏழைகள் சாப்பாட்டிற்காக பரிதபிக்கும் துயரையுங் கண்டு மனமிளகினவராய். ஷை சங்கத்தார் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய சாமான்கள் கிடைக்கக்கூடிய இடங்களையும், அதற்கு பணம் சேகரிக்கவேண்டிய விதத்தையும், அதனால் உண்டாகும் பிரயோசனங்கள் முதலியவைகளையும்பற்றி மகா சாதுர்யமாய் விளக்கிக்காட்டினார். பிறகு சங்கத்தின் ரிபோர்ட் வாசிக்கப்பட்டது. ரிபோர்ட்டினால் ஷை சங்கம் முதல் வருடத்தில் அடைந்ததைவிட இரண்டாம் வருடத்தில் அதிக தேர்ச்சியடைந்திருப்பதாகத் தெரியவந்தது. இவ்வருடத்தில் விளைந்த வட்டியாகிய சுமார் 2.000 ரூபாயைப் பாகித்து, இதில் ரிஸர்வ் பண்டிற்கு சேரவேண்டிய தொகையைக் கழித்து, மீதியில் எடுகேஷன் பண்டிற்காகவும், சில தர்மார்த்தமான காரியங்களுக்காகவும், மெம்பர்களுக்கு இவ்வருடமும் முந்தின வருடத்தைப்போலவே 100-க்கு 7½-ரூபாய் வீதப்படி டிவிடெண்டுக்காகவும், போக மீதியான தொகை மிஸ்லேனியஸ் பண்டில் வைக்கப்படும்படியாகவுந் தீர்மானிக்கப்பட்டது. சட்டப்பிரகாரம் புதிதாய் 4 டைரெக்டர்கள் இவ்வருடத்திற்காகத் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். இவர்கள் ஷை சங்கத்தின் நன்மைக்காக ஊக்கமாய் உழைப்பார்களெனக் கருதப்படுகிறது. கடந்த மே மாதத்திய "நல்ல ஆய"னில் ஓர் பொது நலப்பிரியன் கேட்டுக்கொண்டவண்ணம் ஷை சங்கம் கடன் கொடுத்து வாங்கும் வட்டியில் நாலில் ஒரு பாகம் குறைக்க ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் கனவான் ஒருவர் எழுந்து பாதிக்குப் பாதிவட்டியைக் குறைக்கவேண்டுமென்று தெரிவித்தார். இது ஏழைகளுக்கு மிகவும் அனுகூலமானதே. என்றாலும் ஒரே சமயத்தில் வட்டியில் பாதியைக் குறைப்பது சங்கத்தின் செலவுகளுக்கும் மற்ற தர்மார்த்தமான காரியங்களுக்கும் கஷ்டமாகுமென்றும். ஆதலின் தற்போது கால் பாகம் குறைத்து வருகிற வருடத்தில் இன்னும் கால் பாகம் குறைக்கலாமென்றும் கனம் டிப்டி கலைக்டரவர்களின் எவுதலால் கனம் செக்ரடெரியவர்கள் தெரிவித்தார். இதுவும் நல்ல ஆலோசனையே. கடைசியாக ஸ்ரீமான் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளையவர்களாலியற்றி இன்று வெளியாக்கப்பெற்ற பிரஸ்தாபக் கும்மி என்னும் சிறு புத்தகமும் ஓர் சிறிய பூசசெண்டும் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு இராஜ வாழ்த்

துப் பாடல் பாண்டு வத்தியத்தோடு பாடப் பட்டு கூட்டம் முடிவாயிற்று. சங்கத்தின் மெம்பர்கள் யாவரும் ஒற்றுமையோடு உழைத்து ஷை டிப்டி கலைக்டரவர்களால் பிரேரேபிக்கப்பட்ட கோவாப்பரேட்டிவ் ஸ்டோர் ஒன்றை ஸ்தாபித்து பலனடைவார்களாக.

கண்டது விளம்பி.

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

ஷை சங்கத்தின் 22-வது வருஷப் பொதுக் கூட்டத்தின்போது, தீண்டாக் கத்தோலிக்கர் மட்டில் சில விகற்பங்கள் நிகழ்ந்த துண்மையோவென மார்ச் மாத நல்லாயனில் மாண்டலே வாசியாகிய நண்பர் ஆரோக்கியம் அவர்கள் வினாவியதற்கு விடையாக, நான் ஏப்பிரல் மாத ஆயனில், தீண்டாக் கத்தோலிக்கர் என்பதற்குச் சிறிதும் பொருளில்லையென் றொப்பித்து, பொதுவாய் இந்திய கிறீஸ்துவர்கள் எல்லோருக்குள்ளுமுள்ள சாதியி னுயர்வு தாழ்வென்ற உதவா வழக்கத்தை ஒழிப்பதற்குக் குருக்களும் பெரியவர்களும் கொண்டுள்ள முயற்சியையும் கூறி, நண்பர் அந்த நிருபத்தில் எழுதியிருந்த விஷயங்களால் "அன்று நடந்தது விகற்பமல்ல; சந்தர்ப்பமற்ற சமயத்தில் சபையின் புறம்பேயுள்ளவர்களைப் பதிற் பேச விடாமை தவறாகமாட்டாது; அன்றியு மவர்க்குக் கிடைத்தது அனுகூலமான பதிலே; இப்பொழுது அவர்களில் வெகு ஜனங்கள் அதில் சேர்வதே யுக்தி; அந்தச் சங்கம் யாவருக்கும் பொதுவான சங்கமே" என் றுணர்த்தியிருந்தேன். இதற்கு மறுப்பாக எதிரொலி என்னும் நண்பரொருவர் தெ. இ. க. இந்தியர் சங்கம் இந்திய கிறீஸ்துவரனைவருக்கும் பொதுச் சங்கமும் பிரதிநிதிச் சங்கமுமென்பது தவறு என முதலி லாரம்பித்து, இடையில் ஜாதியி னுயர்வு தாழ்வையும், அவர் தமக்குள் உள்ள பகையையுங் கூறிக்கடைசியாக, தாழ்ந்த வகுப்பு இந்திய கிறீஸ்துவர்கள் ஷை சங்கத்தில் சேர்வதால் பயனென்னவெனவும், ஷை வகுப்பார் ஓர் தனிச் சங்கம் ஸ்தாபித்து நடத்தவேண்டுமெனவும் பிறவும் எழுதியிருந்தார். ஜூன் மாத ஆயனில் நானதை நிராகரித்து, தெ. இ. க. சங்கம் பொதுச் சங்கமே என்பதைத் திட்டாந்தப்படுத்தியும், இந்திய கிறீஸ்துவர் என்னும் பொதுப் பெயரை ஒரு சாராருக்குமாத்திரம் உரித்தாக்கி வழங்குதல் கூடாதென மறுத்தும், விகற்பமின்றி யாவரும் சமத்துவம் அடையத் தெ. இ. க. சங்கமே ஏற்ற வழியும் வகையுமென ஸ்தாபித்தும், தனிச் சங்கங்கள் பல விருப்பது தக்கதேயாயினும் பொதுச் சங்கமொன்றில் யாவருஞ்சேர்ந்து ஒருமித்துத் தொழில் நடத்துவதே புகழ்ச்சிக்குரியதெனப் போதித்தும் எழுதியிருந்தேன். அதற்கு எதிராகச் சென்ற மாதம் நல்லாயனில் மூன்று நிருபர்கள் ஏழு பக்கங்கள் நிறைய மறுப்பெழுதலானார்கள். அவற்றில் முதல் நிருபரான "பூர்வீக திராவிட நண்பர்" "தீண்டாத கத்தோலிக்கர் என்பதற்குப் பொருளில்லை, தாழ்ந்த அந்தஸ்தினரும் கத்தோலிக்கு வேதத்தில் குருக்களாகிப் பாப்புக்களாகவும் கூடு" மென்று நான் சொன்னதை மறுத்து, "அது மேல்நாட்டிலன்றி இந்தியாவி லல்லவென்று பரபரப்போடு சிறுவனும் பகர்வா" னென்கிறார். சென்ற மாத ஆயனில் IV-வது நிருபத்தில் 'கண்டது விண்டோ'னென்றவர் இவ்விந்தியாவிற்றானே தாழ்ந்த வகுப்பினர் எனப் படுவோர் குருக்களாகியிருப்பதையும், கத்தோலிக்கு போர்டிங்கில் படிப்பதையும்பற்றிச் சாக்ஷி பகர்ந்ததை வரசித்திருந்தால், தாம் கூறிவிட்டது பரபரப்பேயன்றி உண்மையல்லவென்பதை உணர்ந்திருப்பார். இனி நண்பர் பொதுவான ஸ்தாபனங்களி லெல்லாம் யாவருக்கும் சமத்துவம் வேண்டுமென்கிறார். அதுதான் சரி; பொது ஸ்தாபனமாகிய தெ. இ. க. சங்கத்தில் சேரப் பின்னிடைந்தும், பிகுவு காண்பித்தும், நிராகரித்தும் நிற்பவர்கள் இன்னொரு சபையிலும் மடத்திலும் மிஷனிலும் உள்ள ஒழுங்குகள் சட்டங்களை உடனே மாற்றிவிடவேண்டுமென்று வாதாடும்படி இச்சபையோடு மல்லுக்கொடுப்பதில் என்ன பிரயோஜனம்? உட்கார்ந்தல்லவோ கால் நீட்டவேண்டும்? முதற் படியில் கால் வையாதவன் மற்றும் படிகளைக் கடந்து செல்வதெப்படி? கடைசியாய் இந்த நமது நண்பர் பூர்வீகத் திராவிடக் கிறீஸ்துவர்களே எனக் கூவியழைத்து, அவர்களுக்குப் புத்தி கூறுகிறார். அத்தகையோர் யார்? இந்திய கிறீஸ்துவர்களுக்குள் பூர்வீக திராவிடர் எவரென்பது எனக்கு விளங்கவில்லை. இவ்விதமான வகுப்பு விகற்பங்களை யான் இதுவரையில் கிறீஸ்துவர்களுக்குள் கேள்விப்பட்டதுமில்லை. இதன் பின் இரண்டாவது நிருபராகிய "எதிரொலி" நண்பர் வேத வாக்கியங்களைப் புரொட்டஸ்டாண்டர் புரட்டிவிட்டதுபோல இவரது திரு வாக்கையும் முன்னர்த்தம் பின்னர்த்தம் பாராமல் நான் புரட்டிவிட்டதாகக் கூறுகிறார். பதிதரின் வழக்கம் ஒன்றைப் பேசும்பொழுது மற்றொன்றைத் தாவுவதும், பின் பாப்புமார்களின் பழமையில் இறங்கி யபத்தம் பேசுவதும் சகஜம். அப்படியே சங்கத்தி லன்று விகற்பம் நடந்ததோவென்னும் சந்தேக நிவர்த்திக்கு மறுப்பெழுதவந்து, அதை விட்டுத் தமக்குத் தெரிந்த உலக சரித்திரங்களையெல்லாம் பாடமொப்பிக்கிற இவர் என்னைப் புரொட்டஸ்டாண்டாருக்கு ஒப்பிடுகிறார். இவர் கடிதத்தின் முன்னர்த்தம் தெ. இ. க. சங்கத்தை நிராகரித்தலும், பின்னர்த்தம் தாழ்ந்த வகுப்பாரெனத் தாம் சொல்லும் இந்திய கிறீஸ்துவர்களுக்கென்று ஓர் சங்க மமைத்து அதை ஆதரிக்கவேண்டுமென்பதும் தானேயன்றி வேறல்லவென்பது யாருக்குத்தான் விளங்காது? இவர் "சும்மாவிருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் தாதன்" என்றதுபோல் ஜாதிக் கிறீஸ்துவ துவேஷத்திலிறங்கி. அவர்கள் அதிகமாய் அச்சங்கத்தில் சேர்ந்து காரிய நிருவாகிகளாயிருக்கும்வரை தாழ்ந்த வகுப்புக் கிறீஸ்துவர்கள் அதில் சேருவதில் காரியமில்லை என்கிறார். என்னே இவர் பேரறிவு! இன்னுங் கொஞ்சத்தில், தென்னிந்தியாவில், ஜாதிக் கிறீஸ்துவர்கள் அதிகமாய் குருக்களாயிருப்பதால், நாம் கத்தோலிக்கு வேதத்திலிருப்பதிலும் காரியமில்லை என்பார்போலும்! ஜாதிக் கிறீஸ்துவ துவேஷம் இவரைச் சத்திய மறைக்கே பழிப்பைத் தருவதும் இழிவுக்குரியதுமான கதையொன்றைச் சொல்லச்செய்கின்றது. இழிகுலத்தார்க்கு வேதம் போதிக்கவும் தீட்சை கொடுக்கவும் வேண்டாமென்று எந்த ஊரில் எந்தச் சபையிலே எந்தக் குரு முன்னிலையிலே வாதம் நடக்க இவர் கண்டாரோ தெரியவில்லை!

தானே பழுக்கவேண்டிய பழத்தைத் தடி கொண்டடித்துச் சிதைத்தவன் சீலமாய், காலந்தானே குணப்படுத்தும் ஜாதி விகற்பத்தை இவர் இச்சணமே நிறுத்தப்பார்ப்பது சாத்தியமாமா? இவை போக, முப்பரிதாபிகளாகிய மூன்றாம் நிருபர்கள் எதிரொலி நண்பர் இந்திய கிறீஸ்துவர்களென்ற பதத்தை தாழ்ந்த வகுப்புக் கிறீஸ்துவர்களென்று தாம் சொல்லும் ஒரு சாராருக்கு உரித்தாக்குவதைப்பற்றிச் சமாதானங் கூறவருகிறார்கள். மற்றவர்கள் ஐரோப்பிய கிறீஸ்துவர்களாயிருந்தாலன்றி இந்த ஞாயம் ஒருபோதும் செல்லாது. மேலும் தெ. இ. க. சங்கத்துக்கு உரித்தான பெயரை அதன் அங்கத்தவரில் நின்றகற்றி, அதில் சேராத பிறருக்கு உரித்தாக்குவது கூடாத வேலை. இரண்டாவது, நானறியா ஒருவரை யாரோவென்றும், பலரல்லாதவரை ஒருவரென்றும், ஏற்படுத்தப்போகிறார் என்பதை இனிமேல் எப்பொழுதோவென்றும் நான் சொன்ன வார்த்தைகளை ஏனோதானோவென்று ஏளனம்பண்ணும் வார்த்தைகள் என்கிறார்கள். நீண்ட விலாசங்களையும் பெயரையும் பட்டங்களையும் சுருக்கி, ஒருவரென்றது ஏளனமென்றால் நானென்ன சொல்வது? அவர்களிடத்து எனக்கு மனத்த கருப்புமில்லை நான் ஏளனம் பண்ணவுமில்லை.

3-வது தெ. இ. க. சங்கத்தில் தாழ்ந்த வகுப்பினரைச் சேர்க்காது அவர்களுடைய பிரவேச கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்தது மெய்யோ என்பதை ஷை சங்கத்தின் காரியதரிசியை நான் கேட்க, அவர் அப்படி யொன்றும் நடந்ததில்லையெனச் சொல்லுகிறார். இவ்விஷயத்தின் உண்மையை ருசுப்பிக்க அவர்கள் ஏதேனும் ஆதாரம் கொண்டுவருவார்களாகில், அதைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம். மற்றப்படி, இவ்வித விவாதங்களை விட்டு, இந்திய கிறீஸ்துவர்களுக்குள் எத்தகையார் குற்றத்தினாலேயோ ஜனாசார சங்க (Social intercourse) விஷயமாய் ஏற்பட்டுள்ள பிரிவினைகளை ஒழித்து, ஒன்றித்து ஒத்துத் தொழில் புரிந்து, தென்னிந்திய கத்தோலிக்குக் குடும்பத்தை ஈடேற்றப்பார்ப்பது கற்றோருடைய கடனாகும்.

மணப்பாடு,
25—7—19.

இப்படிக்கு,
க. ஏ. சி.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

106 பிள்ளைகள்.—63-வருஷங்களுக்குமுன்னே அயர்லான்டிலிருந்து ஆஸ்டிரேலியாவுக்குக் குடியேறிப்போன மிஸ்ஸஸ் தாம்ப்சன் எனனும் மாதர் தமது 86-வது வயதில் காலகதியடைந்தனள். அக்காலையில் அவளருகில் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும், அவர்கள் பிள்ளைகளுமாக 106 பிள்ளைகள் இருந்தார்கள். இவளல்லவோ பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தவள்!

சர். அலெக்சான்டர் கார்டியு.—சென்னை இராஜாங்கத்தின் நிர்வாக சபை யங்கத்தினர்களில் ஒருவராயிருக்கும் இக்கன்வான் இம்மாதத்தில் தமதுலுவலினின்று நீங்கிக்கொள்கிறார். இவருக்குப் பதிலாக மிஸ்டர் கி. ஜி டாட்ஹண்டர் துரை நியமிக்கப்படுவாரெனச் சொல்லப்படுகிறது.

பாழாக்கப்பட்ட பிரான்சு தேசம்.—மகா யுத்தகாலத்தில் பிரான்சின் பெரும் பாகம் நாசமாக்கப் பட்டுப் போயிற்றன்றே? அப்பாகங்களைச் செப்பனிடுவதற்கு ஏராளமான வேலையாட்கள் தேவையாயிருப்பதால், அவர்களை ஜெர்மனியிலிருந்து தருவிப்பதற்கு அதிகாரிகளுடன் ஒப்பந்தம் முடிவாகிவிட்டதென்று தெரிகிறது. ஜெர்மானியரால் செய்யப்பட்ட நாசம் அவர்களாலேயே செப்பனிடநேர்ந்தது நியாயமானதுதான்.

ஐந்து பெரிய தேவாலயங்கள்.—உலகத்திலுள்ள தேவாலயங்களிலெல்லாம் மிகப் பெரியது உரோமாபுரியிலுள்ள அர்ச். இராயப்பர் தேவாலயம். அதற்கடுத்தது இத்தாலியாவைச்சார்ந்த மிலன் மேற்றிராசனக் கோவில்; அதற்கடுத்தது, ஸ்பெயின் தேசத்திலுள்ள கார்டோவா மேற்றிராசனக் கோவில்; அதற்கடுத்தது செவில் மேற்றிராசனக் கோவில்; அதற்கடுத்தது ஜெர்மனியிலுள்ள கொலோன் மேற்றிராசனக் கோவில்.

மூழ்கிப்போன கப்பலைத் தூக்க ஒரு புது யந்தனங் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது! பலூன் என்னப்படும் காற்றுப் பை போல அது செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டுபோய் பலதத சங்கிலிகளால் ஜலத்துக்குள்ளிருக்கும் கப்பலில் பக்குவமாய் மாட்டிவிட்டு இந்தப் பைக்குள் ஒரு யந்திரத்தைக்கொண்டு காற்றைச் செலுத்தி, அதை உப்பவைத்தபின அதை மேலில் கிளமபச்செய்தலினால் கப்பலும் அதனோடே மேலில் கிளம்புகின்றது.

குயின் மேரீஸ் பெண்கள் கலாசாலை.—இக்கலாசாலையில தற்போது வாசிக்கிற 143 பெண்களில் 38 பேர் கத்தோலிக்குப் பெண்களாயிருக்கிறார்களென்ற செயதி கேட்டுச் சந்தோஷிக்கிறோம். இதில கத்தோலிக்கு மாணாக்கிகளுடைய மேலதப் படிப்பிணைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மிகவும் சங்கைக்குரிய நமது அருளப்ப ஆலன் அதிமேற்றிராணியார் அவர்கள் இக்கலாசாலையை அடிக்கடிச் சந்தித்து கத்தோலிக்கு மாணாக்கிகளை விசாரித்துவருகிறார்கள்.

கர்தினல் மெர்சியர்.—கத்தோலிக்கு பெல்ஜியம் தேசமானது ஜெர்மானியரால் கைப்பற்றப்பட்டிருந்தபொழுது, அன்னேர்கள் செய்த அட்டூழியங்களைக் கண்டித்துத் தைரியத்தோடு சத்தியத்தைப் பின்பற்றியிருந்த கர்தினல் மெர்சியர் ஆண்டவருக்கு இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை சங்கத்தார், டாக்டர் அப் லாஸ் என்னும் சட்ட நிபுணத்துவ கௌரதாபட்டங் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஓர் பிரபல பந்தயக் குதிரை.—பல பந்தயங்களில் ஜெயம்பெற்று, பரிசுகள் பெற்ற சென்ட் ஆன்ட்ரூஸ் என்னும் பந்தயக் குதிரையானது சமீபத்தில் காயம்பட்டு அதிக தொந்திரவுபட்டுக்கொண்டிருந்தால், அதன் சொந்தக்காரன் அதைக் காணச் சகிக்கமாட்டாதவனாய், அதைக் கொளும்பு நகரில் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றான். அக்குதிரை 13 பந்தயங்களைக் கெலித்தது, சூ 43,820 சம்பாதித்துக் கொடுத்ததாம். ஒரு பந்தயத்தில் மாத்திரம் சூ 10,820 கெலித்ததாம்.

ஆனரபில் மிஸ்டர் அருமைநாதம் பிள்ளை.—சென்னை ஹைகோர்ட்டுவக்கீலும், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியா சங்கத்து கௌரவ காரியதரிசியுமாகிய ம-ரா-ரா-ஸ்ரீ த. அருமைநாதம் பிள்ளையவர்கள் பி.ஏ., பி.எல்., சென்னைச் சட்ட நிரூபண சபையில் தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியர்களின் பிரதிநிதி மெம்பராக கவர்னர் அவர்களால் நியமிக்கப்பட்டாரென்ற செய்தி கேட்டுச் சந்தோஷமானேம் இவருக்கு நாம் மனமார்ந்த சுபமீசாபன வாழ்த்துக் கூறுகிறோம்.

கவர்னரவர்களின் நிர்வாக சபை.—இச்சபையில இப்போது இருக்கும் இந்தியராகிய ஆனரபில் இராஜமகாபாலாசாரியார் அவர்கள் மூன்று மாசத்து ரஜாவில் போகிறபடியால், அவர்களுக்குப் பதிலாக உத்தியோகப்பற்றில்லாத ஒருவரை நியமிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டவரான மாட்சிமைதங்கிய கவர்னர் விலிங்டன் பிரபு அவர்கள் வேலூர் முனிசிபல் சேர்மனாகிய கான்பஹதூர் அபிபுல்லா சாஹேப் அவர்களை நியமித்திருக்கிறார்கள். இந்நியமனம் பொதுவாய் முனிசிபல் என்னும் ஜனநாயக ஆட்சிக்கும், சிறப்பாய் மகம்மதிய சமூகத்துக்கும் கௌரவத்தைத் தருவதாகும்.

ஜலக்கீழ்க் குழாய்.—இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் மத்தியிலுள்ள ஜல சந்தியாகிய இங்கிலீஷ் சானல் என்னும் கால்வாய் ஜலத்துக்குள் பாரிய இருமபுக் குழாய்களை வைத்துப் பொருத்தி அதன் மூலமாய் அவ்விரு தேசங்களுக்கும் ரெயில்வே போக்குவருத்துக்குரிய சாதனங்கள் செய்ய ஏற்பாடாய்விட்டது. கவர்ன்மெண்டார் உத்தரவானவுடன் உடனே வேலை யாரம்பிக்கப்படும். இவ்விதசாதனங்கள் ஏற்பட்டுவிட்டால்ஜனங்கள் பிரயாணம் செய்வதற்கும் சாமான்கள் போக்குவருத்துக்கும் வெகு சௌகரியமுண்டாகும். இந்த ஏற்பாடு யுத்தத்துக்கு முனனேயே உண்டாயிருந்தால் எவ்வளவோ லாபகரமாயிருந்திருக்கும்.

கௌரவச்சின்னம்.—ஐரோப்பிய யுத்தத்துக்கு சேனை திரட்டுமே விஷயமாய் இந்தியாவில இராஜாங்கதாருக்கு உதவி புரிந்தவர்களுக்கெலலாம், மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியவர்களின அங்கீகாரத்துடன் தயாரிக்கப்பட்ட கௌரவச்சின்னம் ஒவ்வொன்று அளிக்கப்படுகிறது. சென்னை ராஜதானியில் அநேகம்பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அத்தகையோர்களின் ஜாபிதாவைப் பார்வையிட்டதில், அதில இருவர்தான் கத்தோலிக்கு இந்தியர் அகப்பட்டார். அவர்கள் நமது தூத்துக்குடி நண்பர்களில் ஒருவராகிய மிஸ்டர் கயித்தான் வில்லவராயரும், கோயம்புதூர் தாசில்தார் மிஸ்டர் டி. சாந்தப்பிள்ளையுமாவார்.

வெளிச்ச மூலமாய் டெலெபோன்—தந்தி மூலமாய் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதன்றோடெலெபோனென்பது. இப்போது, சொச்லட் என்னும் வெளிச்சு மூலமாய் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும் வகையொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த வல்லமையுள்ள விளக்கினின்று புறப்படும் கதிர்கள் எவ்வளவு தூரம் செல்லுமோ அவ்வளவு தூரத்திலிருக்கும் ஜனங்களோடு பேசலாமென்றும், அந்தப்படிக்கு ஒன்றரை மயில் தூரமட்டும் திருப்திகரமாய்ப் பேசி பரீட்சிக்கப்பட்டிருக்கிறதென்றும், இந்தவகையைக் கண்டுபிடித்த மிஸ்டர் ஏ. ஓரான்சின் என்பவர் சொல்லுகிறார்.

கத்தோலிக்கு இஸ்பானியா.—சமீபத்தில், ஸ்பெயின் தேசத்துத் தலைநகரமாகிய மாடிரிட் நகரில், சேசுவின் திரு இருதயத்துக்காக தனிக் கோவிலொன்று கட்டி அதைத் திறந்துவைக்கும் சடங்கு வெகு ஆடம்பரமாக நடந்தது. அக்காலியில் அரசனும், அரசியும் தம் குடும்பத்தோரனைவருடன் அக்கோவிலுக்குவந்து, தங்கள் தேசத்தையும், தங்கள் குடும்பத்தையும் சேசுவின திரு இருதயத்துக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்கள். அன்று அரச குமாரர் அறுவரில் நான்கு பேர் புதுநன்மை வாங்கினர். ஸ்பெயின் தேசத்திலுள்ள எல்லா மேற்றிராணிமாரும் அச்சடங்குக்கு வந்திருந்தனர். இது எப்போர்க்கொத்த கண்காட்சி, கத்தோலிக்கர்களுக்கு எப்போர்க்கொத்த நன்மாதிரிகை!

பாப்பானவரின் ஞாபகச்சின்னம்.—கடந்துபோன ஐரோபபிய மகா யுத்த சம்பந்தமாய் நமது பரிசுத்த பாப்பானவராகிய பதினைந்தாம் ஞரீர்வாதப்பர் செய்துள்ள அரிய பரோபகாரச் செயல்களை இனிவரும் சந்ததிகளுக்கு நினைப்பூட்டுவதற்காக, துருக்கி தேசத்திலுள்ள தலைநகரமாகிய கொன்ஸ்தாந்திநோப்பலில் உள்ள இஸ்பிரீத்துசாந்துவானவரின் தேவாலயத்தில் ஒரு சிலை ஸ்தாபிப்பதற்கு அங்கு நிதி வசூல் செய்யப்படுகிறது. இந்நிதிக்கு துருக்கி சுல்தான் அவர்களும், எஜிப்து தேசத்தின இராஜாவாகிய கெடிவ் என்பவரின் இளவரசரும், அமீனியரின் பிரதிநிதிச் சபையின் தலைவரும் தாராளமான தொகை கொடுப்பதாக கையொப்பமிட்டிருக்கிறார்கள். இது அவசியமும் ஞாயமுமான ஒரு ஞாபகச் சின்னம்.

அர்ச். அந்தோனியாரின் ஆச்சரியம்—ஒரு நாள் அர்ச். அந்தோனியார் உலகெங்கும் பசாசினால் விரிக்கப்பட்டுள்ள மோசக் கண்ணிகளை ஞான திருஷ்டியால் பார்த்து, "ஆ! என் சர்வேசுரா, இக்கண்ணிகளுக்குத் தப்பிப்பிழைக்க யாராலாகுமென்று ஆச்சரியத்துடன் கூவினார்." அதற்கு மாறுத்தாரமாக "தாழ்ச்சியுள்ளவனே ஜெயிப்பான்" என அசரீரி வாக்கியங் கேட்கப்பட்டது. ஆகவே, அகங்காரங்கொள்ளாமல் தன்னைத்தான் தாழ்த்தி, சர்வேசுரன் பேரில் தன் நம்பிக்கையெல்லாம் வைத்திருக்கிறவன் எவனோ அவனே சகல இக்கட்டு இடையூறுகளையும் ஜெயித்து ஈடேற்றமடைவான். இவ்வுண்மையை ஒவ்வொருவரும் அடிக்கடி சிந்தித்து அதன்படி நடக்க பிரயாசைப்படவேண்டும்.

அர்ச். அந்தோனியாரின் அருளிக்கம்—மகா யுத்தத்தின்போது அதாவது சுமார் ஒன்றரை வருஷத்துக்குமுன்னே, ஜெர்மானியருடைய அக்கிரமச் செயல்களால் எங்கே ஆபத்து நேரிடப்போகிறதோவென வஞ்சி, பதுவாபட்டணத்திலிருந்து எடுக்கப்பட்டு, அர்ச். பாப்பானவரின் வத்திக்கான் மாளிகைக்குக் கொண்டுபோய் பத்திரமாய் வைத்துப் பாதுகாக்கப்பட்ட அர்ச். அந்தோனியாரின் அருளிக்கங்களும், அவை சம்பந்தமான விலையுயர்ந்த சாமான்களும் மீண்டும் பதுவாபுரிக்குக் கொண்டுவரப்பட்டன. அவைகளைவிட்டு அத்தனை காலம் பிரிந்திருந்த பதுவை வாசிகள் அவைகள் திரும்பவுங் கொண்டுவரப்பட்ட அத்தினத்தை ஒரு பெரிய திருநாளாகக் கொண்டாடி சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்தார்கள்.

இரத்த மழை—மங்களூரில் சமீபத்தில் பெய்த மழை இரத்த நிறமானதாயிருந்ததாம். அதைக்கண்டு ஆச்சரியமுற்ற ஜனங்கள் அந்த சிவப்பு மழைத்தண்ணீரிற் கொஞ்சம் பிடித்து மற்றவர்களுக்குக் காண்பிக்க வைத்திருக்கிறார்களாம். இவ்வாறு பல நிறமுள்ள மழைகள் பெய்வது ஓரோர் காலத்து நிகழும் சம்பவமேயன்றி அசம்பாவிதமல்லவென்றும், கருப்புமழை மஞ்சள்மழை, பச்சைமழை முதலிய மழைகளையும் தவிர, தவளைமழை, சிறுமீன்மழைகளையுங் கண்டுளாரென்றும் சொல்லப்படுகிறது. 1912௵ ஐதராபாக்கத்தில் மஞ்சள் மழை பெய்ததைத் தாம் பார்த்ததாக மெட்ராசு மெயில் பத்திரிகைக்கு ஒரு கடித நேயர் எழுதியிருக்கிறார். இவ்வாறு மழைகளுக்கு நிறம் உண்டாவதற்குக் காரணம் பூமியிலிருந்து காற்றினால் கொண்டுபோகப்பட்டு, ஆகாயத்தில் தங்கியிருக்கும் சிவப்புமண், மஞ்சள் மண், கருப்புமண் முதலியவைகளின் தூசியேயென்று பௌதிக சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

ஸ்திரீகள் பிரசங்கித்தல்.—வெஸ்ட் மின்ஸ்டரிலுள்ள ஆங்கிலிக்கன் சர்ச், அல்லது ஹைசர்ச் என்று சொல்லப்பட்ட புரோடெஸ்டாண்டு வகுப்பொன்றைச் சார்ந்தவர்கள், தங்கள் பாதிரிகளும், பிஷப்புகளும், கோவில்களில் ஸ்திரீகள் பிரசங்கம் செய்யலாம் என்ற நவீன பிரேரணையை ஆதரிக்கிறார்களெனக் கண்டு, அம்மதத்தைவிட்டுக் கத்தோலிக்குச் சத்திய வேதத்தைத் தழுவச் சித்தமாயிருக்கிறார்களென "வெஸ்ட் மின்ஸ்டர் கெஜட்" என்னும் பத்திரிகை வாயிலாய்த் தெரியவருகிறது. புரோடெஸ்டாண்டார்களுக்குள் எண்ணிக்கையில்லாத பிரிவினைகளுண்டு என்பதும், அவர்களுக்குள் அநேகம் நமது கத்தோலிக்கு வேதாசாரங்களையும், விசுவாச சத்தியங்களையும் நாளுக்கு நாள் ஒவ்வொன்றாய் அநுசரிக்கத் தொடங்குகின்றனவென்பதும், விசேஷமாய் ஷை ஆங்கிலிக்கன் பிரிவினை ஏறக்குறைய முழுதும் கத்தோலிக்கு வேதத்தையே பின்பற்றி வருகிறதென்பதும் வெளிப்படை. கூடியசீக்கிரத்தில் இப்பிரிவினை மற்றெல்லாவற்றிற்கு முன்னே சத்திய மார்க்கத்தில்வந்து சேருமென்று நம்ப இடமுண்டு. அப்படியே யாகக்கடவது.

மூன்று குருக்கள்.—ஒரு காலத்தில் கத்தோலிக்குக் குரு, யூதர் குரு, புரோடெஸ்டான்டர் குரு ஆக மூன்று குருக்களும் ஒரே ரெயில்வண்டியில் பிரயாணஞ் செய்ய நேர்ந்தது. இம்மூவரும் ஒருவரோடொருவர் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் புரோடெஸ்டாண்டு குரு வேத விஷயமாய் பேச ஆரம்பித்து, "நாம் மூவரும் மூன்று வெவ்வேறு வேதத்தினராயிருக்கிறோம். இம்மூன்றில் எவ்வேதம் உண்மையானது?" என்று கேட்டார். அதற்கு நமது கத்தோலிக்குக் குருவானவர் மறுமொழி யொன்றும் பகராது மௌனமாயிருக்க, யூத குரு புரோடெஸ்டான்ட் பாதிரியாரைப் பார்த்துப் பின்வருமாறு பேசினார்: "மெஸையாவானவர் இன்னும் வராமலிருந்தால் எங்கள் வேதமே மெய்யான வேதம்; அவர் வந்துவிட்டிருந்தாரானால் கத்தோலிக்கு வேதமே சத்திய வேதம்; ஆனால் மெஸையா வந்திருந்தாலுஞ் சரி, வராவிட்டாலுஞ் சரி உம்முடைய மதம் சரியான மதமல்ல" என்று சொன்னார். "வாய் கொழுப்பு சீலையால் வடிந்தது" என்ற கதைக்கொப்ப, பாதிரியார் அவமானமடைந்தார்.

வெள்ளி ஜூபிலி மஹோற்சவம்.—சலேசியன் சபையாரின் சிரேஷ்டரும் தஞ்சைமாநகரின் பங்கு சுவாமிகளுமாகிய மி. ச. எ. மெதர்லேக் (Very. Rev. Fr. Eug. Mederlet, s c) சுவாமிகளின் ஷை ஜூபிலி மஹோற்சவம் சென்றமீ 8 தேதி ஷை நகரில் மிக்க விமரிசையாய் நடைபெற்றது. இக்கொண்டாட்டத்துக்காக மைலாப்பூர், திருச்சினாப்பள்ளி, கும்பகோணம் முதலிய மேற்றிராசனங்களிலிருந்து அநேக குருப்பிரசாதிகள் விஜயஞ் செய்திருந்தனர். தங்களுடைய பங்கு சுவாமிகளின்மட்டிலுள்ள அன்பின் அறிகுறியாக கிறீஸ்துவர்கள் ஜூபிலி கொண்டாட்டத்தைச் சிறப்பிக்க பொருளுவி செய்ததுமல்லாமல் பூசை வஸ்திரங்கள், பூசை பாத்திர முதலியவைகளையும் பரிசளித்தனர். அல்லாமலும் அநேக நூறு பேர் சற்பிரசாத பந்தியிலமர்ந்து, தங்களுடைய நல்ல தகப்பனை அக்களிக்கச் செய்தனர். இந்த நல்ல குருவானவர் தீர்க்காயுளுள்ளவராயும் திடகாதிரராயும் பல்லாண்டு சீவித்து இன்னும் பல ஜூபிலிகளைக் கொண்டாடும் பாக்கியம் பெறக் கருணையங் கடவுள் கருணைபுரிவாராக.

மாஜி கெய்ஸரின் விசாரணை.—ஜெர்மனிக்கும் நேச ராஜ்ஜியங்களுக்கும் முடிவாகியுள்ள உடன்படிக்கையின்படி மாஜி கெய்ஸர் லண்டனில் விசாரணை செய்யப்படவேண்டும். ஒரு பிரபல சக்ரவர்த்தியாயிருந்துவிட்டு, இப்போது ஒரு சாமான்ய குற்றவாளியைப்போல் பகிரங்கமாய் விசாரிக்கப்படுவதற்கு கெய்சரும் அவரைச் சார்ந்தவர்களும் சம்மதிக்கவில்லை. ஆயினும், உடன்படிக்கைப்பிரகாரம் கட்டாயம் அந்த ஈனத்துக்கு ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. ஆனதினிமித்தம், அவருக்குப் பதிலாக, ஜெர்மன் தளக்கர்த்தனாகிய வான் ஹின்டன்பர்க், சான்ஸ்சலராகிய பெத்மன் ஹால்வேக், கெய்ஸரின் சகோதரராகிய ஹென்ரி இளவரசர் முதலியோரும், அவர் புதல்வர்களும், அவர் பத்தினியும் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் மனு செய்து, அவ்வித விசாரணை வேண்டாமென்று தடுக்கப் பிரயத்தனப்பட்டுவருகிறார்கள். ஷை தளக்கர்த்தரும், சான்ஸலரும் கெய்ஸருக்குப் பதில் "நாங்களே விசாரணைக்குமுன் ஆஜராவோம். கெய்ஸரல்ல நாங்களே குற்றவாளிகள்; எங்களை எது வேண்டுமானாலும் செய்யுங்கள்; நாங்கள் எல்லாத்துக்குந் தயாராயிருக்கிறோம்" என்று அதிகாரிகளுக்கு விண்ணப்பஞ் செய்திருக்கிறார்கள். ஆயினும், குற்றவாளியைத் தண்டிப்பது நீதியேயன்றி மற்றவர்களைத் தண்டிப்பது நீதியல்ல; குற்றவாளியாகிய கெய்ஸர் விசாரணைக்கு ஆஜராகத்தான்வேண்டுமென்று பதில் சொல்லப்படுகிறது.

ஜில்லா போர்டு பிரசிடென்ட்.—இதுவரையில் ஜில்லா போர்டுகளுக்கு அக்கிராசனாதிபதியாக, அந்தந்த ஜில்லா கலெக்டர் அல்லது அவருக்கடுத்தபடியிலுள்ள கவர்ண்மென்ட் உத்தியோகஸ்தர்களையே நியமித்து வேலை நடத்திவந்தார்கள். இப்போது உலகமெங்கும் ஜன நாயக ஆட்சி கொடுக்கப்படவேண்டுமென்று கிளர்ச்சியுண்டாகியிருப்பதையும், இனி சீக்கிரத்தில் வர விருக்கும் இந்திய அரசியல் சீர்திருத்தங்களையும் அநுசரித்து, முதல்படியாக, ஜில்லா போர்டுகளுக்கு உத்தியோகப்பற்றில்லாதவர்களையும் நியமிக்க தீர்மானமாகியிருக்கிறதுபோலும். இந்தத் தீர்மானத்தின்படி முதன்முதல் நியமிக்கப்பட்ட உத்தியோகப்பற்றில்லாதவர் செங்கல்பட்டு ஜில்லா போர்டு பிரசிடென்ட் ராய் பஹதூர் எம், வெங்கட்டராகவலு ரெட்டியாராகும். இவர் ஏற்

கெனவே முனிசிபல் விஷயங்களில் மெத்த அநுபோகஸ்தர், சமர்த்தர். இதற்குமுன்னமேயே இவர் செங்கற்பட்டு ஜில்லா போர்டின் வைஸ் பிரசிடென்டாகவும், சைதாபேட்டை தாலுக்கா போர்டின் பிரசிடென்டாகவும் இருந்திருக்கிறார். இவரைப்போல இன்னும் பலர் உத்தியோகப்பற்றில்லாதவர்கள் கூடியசீக்கிரத்தில் ஜில்லா போர்டு பிரசிடென்டுகளாக நியமிக்கப்படுவார்கள்.

சமாதானத்தின் ஞாபகச்சின்னம்.—கடந்துபோன ஐரோப்பிய மகா யுத்தத்தையும், அதை முடிவுக்குக் கொண்டு வந்த சமாதான உடன்படிக்கையையும் பின்வரும் சந்ததிகளுக்கு ஞாபகமூட்டும்படிக்கு, பற்பல இடங்களில் பலபல ஞாபகச்சின்னங்களை ஏற்படுத்திவருகிறார்கள். சென்னையில் பிரபல வர்த்தகரான கர். வில்லியம் பியர்ட்செல் என்பவர் ஐரோப்பிய சோல்ஜர்கள் சமுத்திரஸ்நானம் செய்வதற்கு யோக்கியமாய் கடற்கரையில் ஸ்நானக் கட்டம் ஒன்று ஷை ஞாபகச்சின்னமாக தம் சொந்தச் செலவில் கட்டிக்கொடுக்க வாக்களித்திருக்கிறார். ஆங்கிலோ இந்தியன் அசோஸியேஷன் என்னும் பரங்கிக்காரர்கள் சங்கத்தார் தங்கள் வகுப்பு மாணாக்கர்களின் உபகாரச் சம்பளங்கள் (Scholarship) கொடுக்க ஒரு நிதி சேர்க்கும் விஷயமாய் முயற்சி செய்துவருகிறார்கள். லெப்டினென்ட் கானல் ஸ்மித் என்பவர் மேற்படி நிதிக்காக ரூ. 1,200 கொடுத்தார். ஆனரபில் மிஸ்டர். டி. ரிச்மண்டு, ஆகஸ்டுமீ 4-ம் தேதிக்குள்ளாக ரூ. 12,000-க்கு அதிகப்படாமல் எவ்வளவு தொகை சேர்க்கப்படுகிறதோ அவ்வளவு தொகைக்கு இரட்டிப்பான தொகை தாம் அந்நிதிக்கு அளிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார் இன்னும் வேறு அனேக சபையினர் இந்தச் சமாதானத்தை முன்னிட்டு ஒவ்வொருவிதமான பொதுநலக் காரியங்களைச் செய்கிறார்கள். இவை இங்ஙனமாக, நமது கத்தோலிக்கு இந்தியர் சமூகத்தார் பொதுநலத்தைக் கோரி யாதொன்றுஞ் செய்ய முன் வாராரோ?

ரெயில்வண்டியில் விபத்து.—வட இந்தியாவில் இரண்டு மகம்மதியச் சிறுவர்கள் ரெயில்வண்டியில் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கையில், தங்கள் தலைகளை ஜன்னல்களுக்கு வெளியே நீட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டுவந்தார்கள். அப்போது எதிரே வந்துகொண்டிருந்த வேறொரு ரெயில்வண்டியின் கதவுவொன்று திறந்தபடி புறத்து ஆடிக்கொண்டுவந்தபடியால், அக்கதவினால் ஷை பையன்களின் தலைகள் அடிபட்டுப் பலத்த காயம்பட அவர்களிருவரும் மாண்டனராம். சிறுவர்களோடு ரெயில் பிரயாணஞ்செய்யும் பெற்றோரும், மற்றோருமானவர்களே, அவர்களை ஜன்னலுக்கு வெளியே தலைவிடாமற் பார்த்துக்கொள்ளுங்கள்!

கோவாவில் குடியரசு.—போர்த்துகீஸ் ஆதீனத்துக்குட்பட்ட கோவா. டாமன், டையூ என்ற ஊர் ஜனங்களுக்குக் குடியரசு கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

விளம்பரம்.—சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த ஆரம்பாக்கத்தில் மோக்ஷமுடி இராக்கினியின் வருஷாந்திர திருவிழா வழக்கப்படி ஆரவாரமாய்க் கொண்டாடப்படும். 1919ஆ ஆகஸ்டுமீ 9உ சனிக்கிழமை (மாலையில்) கொடியேற்றம், நவநாட் செபம். 1919ஆ ஆகஸ்டுமீ 16உ சனிக்கிழமை (மாலையில்) வெஸ்பர்ஸ், தேர் கற்றுப்பிரகாரம். 1919ஆ ஆகஸ்டுமீ 17உ ஞாயிற்றுக்கிழமை (காலையில்) பெரிய பாடல் பூசை, பிரசங்கம், திவ்யநற்கருணை ஆசீர்வாதம். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களும் மற்றவர்களும் இந்தப் பொருத்தனைக் கோவிலில் நமது பரம தேவதாயரை கொண்டாட இத்திருநாளுக்கு வரக்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மோக்ஷ இராக்கினி முடிபெற்ற பரம ஆண்டவள் திருயாத்திரைக்காரருக்கும், திருநாள் நடத்த உதவி செய்யும் தர்மிஷ்டருக்கும் ஏராளமான சம்பாவனை அளிப்பாள். ஆரம்பாக்கம் நார்த்-ஈஸ்ட் ரெயில்வே லையினில் இருக்கும் ஓர் ரெயில் ஸ்டேஷன். இதற்கும் சென்னைக்கும் 38-மைல். ரெயில் சார்ஜ். 0—8—3. கோவிலுக்கும் ரெயில்வே ஸ்டேஷனுக்கும் மெத்த சமீபம். கோவில் தோட்டத்தில ஓர் சத்திரம் உண்டு.

ஆரம்பாக்கம் R. Stn.
(நெல்லூர் ஜில்லா)
1919ஆ சூலைமீ 10உ

S. M. F. Ignatius,
விசாரணை குருவானவர்.

The
Good Pastor
நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்." (அரு. 10: 11-16.)

புத்தகம் 17. } செப்டெம்பர் 1919. { இலக்கம் 9.

CATHOLICS' PROGRESS.
கத்தோலிக்கரின் முன்னேற்றம்.

தற்போது பற்பல நாட்டினரும், தேசத்தவரும் தத்தம் முன்னேற்றத்தைக் கருதினவராய்ப் பெருமுயற்சி செய்து, தங்கள் தங்கள் இனங்களை யெழுப்பி, சங்கங்கள் சேர்த்து, மகாநாடுகள் கூட்டித் தம்தம்மால் ஆகக்கூடியவைகளை ஆலோசித்துச்செய்து, அரசாங்கத்தாரால் ஆகவேண்டியவைகளுக்காகக் கூக்குரலிட்டு கவலையுற்று அகோராத்திரம் ஒருமித்து உழைத்துப் பலனடைந்து வருகிறார்கள். ஆனால், இந்திய நாட்டின் தென் பாகத்திலுள்ள கத்தோலிக்கு இந்திய கிறீஸ்துவர்களோ ஏற்கெனவே முன்னேற்றமடைந்துவிட்டார்களென்றாவது, அல்லது அதற்காக யாதொரு முயற்சி செய்துவருகிறார்களென்றாவது சொல்வதற்கில்லை. இவர்கள் கல்வியிலுஞ்சரி, சமூகவாழ்க்கையிலுஞ்சரி, பத்திருபது வருஷங்களுக்குமுன்னர் எந்தப் படியிலிருந்தார்களோ அந்தப் படியிலே இப்போதுமிருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில், அப்போழ்திருந்தது போலவே இப்போழ்தும், எம். ஏ. என்னும் பரீட்சை கொடுத்தவர்கள் இரண்டொருவரும், பி. எல். என்னும் சட்டப் பரீட்சை கொடுத்தவர்கள் இரண்டொருவரும், பி. ஏ. பரீட்சை கொடுத்தவர்கள் சிற்சிலருந்தானிருக்கிறார்கள். பாரிய உத்தியோகம் வகிக்கும் விஷயத்திலும், முன்னிருந்ததுபோலவே எங்கேயோ அபூர்வமாய் ஒருவரிருவர் உயர்பதவியிற் காணப்படுகிறார்கள். இந்த நிலைமையுங்கூட நம்மனோர் தம் முயற்சியால் அடையப்பட்டதெனச் சொல்லப்போகாது. நமது குருப்பிரசாதிகளின் முயற்சியால் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சிற்சில கல்லூரிகளின் பயனே தவிர வேறல்ல. நாஷனல் காலேஜ், நாஷனல் ஐஸ்கூல், ஹிந்து காலேஜ், ஹிந்து ஐஸ்கூல் இஸ்லாம் காலேஜ் என்று ஏனையோர் ஏற்படுத்தியிருப்பதுபோல நம்மவர்கள் தம் முயற்சியாலேற்படுத்தின கல்விச்சாலைகள் இந்தத் தென்னிந்தியாவின் எல்லைக்குள் எங்கேயாவது மருந்துக்கேனும் ஒன்றுண்டோ? இல்லை. இலௌகீக முன்னேற்றத்துக்கும் மற்றெவ்வித விருத்திக்கும் மூலாதாரமாயிருப்பது கல்வியேயாதலினால், இங்குக் கத்தோலிக்கு இந்தியரின் கல்வியை உரைகல்லாகக்கொண்டு அவர்களின் இலௌ

கை அபிவிருத்தியை ஆராய்ப் புகுந்தோம். பிராமணர், பலிஜாளத்தார், தென் கன்னடத்தார் முதலியோர் முன்னிருந்ததை விடப் பன்மடங்கு கல்வியிலும், ராசரீகத்திலுர், சம்பத்திலும், சுகாநுபவத்திலும் இப்போது மேம்பாடடைந்திருப்பதோடு, அவைகளில் தினை தினை விருத்தியடைந்துகொண்டும் வருகிறார்கள். அவர்களில் மெடினிக்கியா பட்டங்கள் பெற்ற பேர் அனந்தம். அவர்கள் கொடுக்காத பரீட்சையில்லை; பெறாத பட்டமில்லை. அரசாங்கத்தின் உயர்ந்த உத்தியோகங்களெல்லாம் சற்றேறக்குறைய ஒருங்கே ஒப்பந்தம்பண்ணிக்கொண்டவர்கள்போல் அவர்களே அடைந்துவருகிறார்கள், அதுபவித்துவருகிறார்கள். அவர்கள் அடையாத பதவியில்லை; அவர்கள் இறங்காத துறையில்லை. கல்வியிலுஞ்சரி, கைத்தொழிலிலுஞ்சரி, வர்த்தகத்திலுஞ்சரி, விவசாயத்திலுஞ்சரி, எல்லாத் துறைகளிலும் மிகுந்த ஊக்கத்துடன் உழைத்து உற்ற ஊதியம்பெற்று உல்லாசமாய் உஜ்ஜீவித்து வருகிறார்கள். இத்தனைக்கும் காரணம் யாதோ? முயற்சியே! "முயற்சி திருவினையாக்கும்" "சற்றைநன்மேற், சற்றைதினமேற், பிச்சை புகினும் கற்கை நன்றே" என்னும் மூதுரைகளை முழுதும் கடைப்பிடித்தொழுகுபவர்கள் அவர்களேயாவர்.

சென்ற டிசம்பர் மீ தெ. க. இ. சங்கத்து வருஷாந்தப் பொதுக் கூட்டத்தில் அக்ராசனம் வகித்தபோது சென்னை அதிமேற்றிராணியாராகிய கனம் மிகவந்திக்கத்தக்க அருளப்ப ஆண்ண ஆண்டவரவர்கள், தற்காலத்தில் ஜனங்கள் இலௌகீக முன்னேற்றத்துக்காக ஒருவரோடு ஒருவர் போட்டிபோட்டுக்கொண்டு பெரு முயற்சி செய்யும் விஷயத்தைப்பற்றியும், அவ்விஷயமாகக் கத்தோலிக்கு இந்தியர்கள் தங்களுக்குள் ஒற்றுமையுடனே ஏகோபித்து உழைக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் மிகவும் வற்புறுத்திப் பேசி, அச்சங்கத்தாருக்கு மிக உருக்கமான புத்திமதிகளைப் புகட்டியுள்ளார்கள். அவைகளில் மிகவும் முக்கியமான சில வசனங்களை மிகவிதந்துரைத்துக் கூறுவது நலமெனக் கருதுகிறோம். அவையாவன:—" இனியிந்தத் தேசத்தை யாளும் வகையில் பெரிய மாறுதல்கள் செய்யப்படுமென்று நான் சொல்வதை நம்புங்கள். இனி உங்களுடைய கல்வியையும், கல்வி ஸ்தாபனங்களையும்பற்றி நீங்கள் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்றுநான் சொல்லுவதையும் நம்புங்கள் * * * * ஒற்றுமையினால் உண்டாகக்கூடிய நன்மைகளைப்பற்றிப் பலர் பல சமயங்களில் பிரசங்கஞ்செய்ததை நீங்கள் கேட்டிருக்கலாம். ஆயினும் ஒற்றுமையைப்பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது: இத்தச்சமயத்தில் உங்களுக்கு ஒற்றுமை எவ்வளவு அவசியமாயிருக்கிறதோ அவ்வளவு அவசியமாய் அது எப்போதும் இருந்ததில்லை யென்பதே. * * * * நீங்கள் ஒற்றுமைப்பட்டு உங்கள் கல்வி விஷயத்தில் உறுதியான கொள்கையை உடையவர்களாகி, குருமார்களுடன் சேர்ந்து, உங்கள் கல்வியைக் காப்பாற்ற முன்வராவிடில். கல்வி கற்கும் விஷயத்தில், வெகு சீக்கிரத்தில் உங்களுக்கு அசௌகரியமுண்டாகிவிடும். அப்போழுது நீங்கள் வருத்தப்படும்படியாகும். உங்கள சந்ததிகள் பலவிதக் கஷ்டங்களை அநுபவிக்கவேண்டிய நிலைமையிலிருப்பார்கள். அவர்கள் உங்கள்மேல் குறைகூறுவார்கள். வேண்டுமென்று நீங்கள் அசட்டையாயிருந்துவிட்டதற்கு நீங்கள் சர்வேசுரனுக்கு உத்தரவாதஞ் சொல்லவேண்டியவர்களாயிருப்பீர்கள். ஆகையால், உங்களுக்குள் உள்ள அற்ப மனஸ்தாபங்களை விட்டுவிடுங்கள். பொறுமையை ஒழித்துவிடுங்கள். நீங்கள் செய்யக்கூடிய ஒவ்வொரு பரித்தியாகத்தையும் செய்தால்தான் உங்களுடைய சமூகத்தின் குறை நீங்கும். உங்களுடைய சந்ததிகளின் நன்மைக்காக நீங்கள இடையை யிழுத்துக் கட்டிக்கொண்டு, நீங்களும் அவர்களும் நற்கதியடையப் பாடுபடுங்கள்" என்பவையேயாம்.

ஆத்ம விஷயத்தில் மாத்திரமேயன்றி நமது சரீர விஷயத்திலும் அதிக கவலைகொண்டிருக்கும் மிஷி நமது அதிமேற்றிராணியாண்டவரவர்களின் எச்சரிக்கை மொழிகளை எள்ளளவும் நாம் அசட்டைசெய்பலாகாது. அவைகள் தந்தை, மக்கள் என்ற உரிமையில் அதி அக்கரையுடன் உள்ளன்பாய் உரைக்கப்பட்ட உருக்கமான வார்த்தைகள். அவைகள், அவ்வாண்டவரவர்கள் அரசாங்கச் சட்ட நிரூபண சபை யங்கத்தவராயிருக்குங்காலத்தில், மாட்சிமைதங்கிய கவர்னர் முதலிய பல அதிகார வர்க்கத்தினருடன் கலந்துபேசச் சமயம் கிடைத்தபோது தெரிந்துகொண்ட உண்மை விஷயங்களின் சாராம்ஸத்தில் ஊறி உதித்த வசனங்கள். நமது இலௌகீக விஷயங்களைப் பொறுத்தமட்டில் அவைகளை நாம் திருவாய்மொழியாகப் பாராட்டி, அவைகளைக் கடைப்பிடித்தொழுகவேண்டும்.

தற்காலம் நிகழும் விஷயங்களைச் சற்றுக் கூர்ந்து யோசிப்போருக்கு கத்தோலிக்கு இந்தியரின் இலௌகீக விஷயம் அபாயமான ஸ்திதியில் இருக்கிறதென்பது புலப்படாமற்போகாது. வரப்போகிற அரசியல் முறையில் கல்வி யிலாக்கா, முனிசிபல் இலாக்கா முதலிய இலாக்காக்களை நிர்வகிக்க, இந்திய மந்திரிகள் நியமிக்கப்படுவார்கள். இந்த மந்திரி ஸ்தானங்களை, இப்போது இராஜாங்க உத்தியோகங்கள் பரிமாறப்படும் வகையை நோக்குங்கால், பெரும்பாலும் ஹிந்துக்களும் மகம்மதியர்களுமே யடைவார்கள் எனறு சொல்லலாம். அந்த உத்தியோகங்கள் அவர்கள் வசப்படுமானால், நம் கிறீஸ்துவர்கள் கல்வியும், கல்விஸ்தாபனங்களும், அவர்களது முனிசிபல் விஷயங்களும் எக்கதியடையுமோ ஈசனுக்கே வெளிச்சம! மேலும், மிஷி மந்திரி ஸ்தானங்கள்போன்ற பாரிய உத்தியோக பதவிகளை வகிக்க யோக்கியதையுடையவர் கிறீஸ்துவர்களுக்குள், அதிலும் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்குள் அருமையிலும் அருமையென்று சொல்லவேமானால் அதி மிகையாது. இந்த நிலைமையில் கத்தோலிக்கர் கடைத்தேறும வழியாது என்பது ஒரு பெரிய கேள்வி. இக்கேள்விக்கு சமயந்தமாகவே "கத்தோலிக்கரின முன்னேற்றம" என்பதை மகுடமாகக்கொண்டு நாம் இம்மாதம் எழுதப் புகுந்தோம். கத்தோலிக்கு இந்தியரின் முனனேறுதலில் கவலைகொள்பவர் அனேகமாயிருப்பர். விசேஷமாய்க் கத்தோலிக்கு இந்தியர் ஜன சமூகத்தலைவரனைக்கருதுமிவ்வாரும், கருதப்படுவோரும் இக்கேள்விக்கு விடை, தங்கள் சமூகத்தைப் பொறுத்த சகல விஷயங்களையும் சாவதானத்துடன் சிந்தித்துச் சொல்லவேண்டும. சொல்லுவது மாத்திரம் போதாது; சொன்னவுடனே செயலுக்குத் தொடங்கவேண்டும். காலதாமஞ்செய்தலொண்ணாது. இதுவரையில் காலதாமஞ்செய்துவந்ததில் கத்தோலிக்கு இந்தியர் முன்னேற்றமடையாமற் போனதொன்றுமாதிரியிருந்தும், ஒரு நிதியொன்றும் அவர்களுக்கு சேர்ந்திலதினால் இனியேனுங்கூட முயற்சியற்று வாளா விருப்பார்களேயானால், இவர்கள் கதி நிரப்பக்கவலைக்கிடமாயிருக்கும். கடைத்தேறமுடியாது. இனிச் சமீபத்தில், ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரோடு போட்டி போட்டுகொண்டு செய்யப்போகும் இராஜாங்கச் சுதந்தரப் போர்க்களத்தில, இவர்கள் ஏனையோரால் தோற்கடிக்கப்பட்டுப் போவார்கள். 1836வது டிசம்பர் மீ 31-ந் தேதி சென்னை ஜனசிகாரத்தோட்டத்தில் வருஷாந்தர கிறீஸ்மஸ் சுதந்தை வேடிக்கை நடந்தபட்ட கொட்டகையில் தீபற்றிக்கொண்டபோது, அதனுள்ளிருந்த ஜனங்களில் ஒவ்வொருவரும் தன் தன் உயிரைக்காப்பாற்றிக்கொள்ளமுயல, பலவான்களால் இடிபட்டு வீழ்ந்தபட்ட பலவீனர்களும், ஸ்திரீகளும், சிறுவர் சிறுமிகளும் மிதபட்டு மாண்டதுபோல, மேற்சொன்னபடி இராஜாங்கச் சுதந்தரப் போர்க்களத்தில் பலவீனர்களான கத்தோலிக்கு இந்தியர்கள் பலவான்களான ஏனையோர்களால் தலையெடுக்கவொட்டாமல் நசுக்கப்பட்டுப்போவார்களென்பது திப்பாது. ஆகவே, கத்தோலிக்கு இந்தியர் சமூகத்தலைவர்கள் தங்கள் சமூகமகிமைகளைத் தேறும வழி பாகுபடுமம். கத்தோலிக்கர்களுக்குள் ஜாதப பரிபின்ன ஒரு புறமிருக்க, சங்கப பரிவர்த்தனைகளும் பற்பல மருரு புறமிருந்து அவர்களை ஒதுங்கு வாழ்வை யடையுமாறு செயகனமுன. இதுவும் விசனத்துக்குரிய காரியம். தென்னிந்தியாவுக்குள் அவர்களுக்குளளிருக்கும பற்பல சங்கங்கள், சபைகள் (ஆலௌகீக சபைகள்) எலலாவறறையும ஒருங்கே ஒழித்துவிட்டு, அவர்களெலலோரும ஓர் சபையாய் ஐக்கியமாகி அந்த ஒர் சபையை ஆதரிக்கவேண்டும். அந்தவித ஐக்கியில் சங்கம் வேண்டுமானால், அந்த ஒர் சங்கத்தினை (கருத்துக்களை மேறபார்வையும் அதற்கமைந்த) கமிட்டிச் சங்கங்களை ஸ்தாபித்துக் கொள்ளலாம். எப்படியெனில், சென்னையில்—மதராஸ் பாங்க் (Bank of Madras)

162058

என்று ஒரு பாங்க் இருக்கின்றதுதல்லவா? அதன் கிளைப் பாங்குகள் வெளியூர்களில் பாங்க் ஆப் மட்ராஸ், காகி நாடா (Bank of Madras Cocanada); பாங்க் ஆப் மட்ராஸ், திருச்சிநுப்பள்ளி (Bank of Madras, Trichinopoly); பாங்க் ஆப் மட்ராஸ், தூத்துக்குடி (Bank of Madras, Tuticorin) யென்றிருப்பதுபோல, தலைமைச் சங்கத்தின் கிளைச் சங்கங்களாக வைத்துக்கொள்ளலாமேயொழிய, வேறு பேர், வேறு கருத்துள்ள சங்கங்கள் கத்தோலிக்கருக்குள் இருத்தல் கூடாது. அவை ஒற்றுமைக்கும், விருத்திக்கும், முன்னேற்றத்துக்கும் முற்றும் விரோதமாகும்.

இந்தத் தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியர்களுக்குள் வெறுக்கத்தக்க பல ஜாதிப் பிரிவினைகளிருந்தாலும் அவர்களெல்லாரும் ஒரே குடும்பத்தினராவர். கத்தோலிக்குத் திருச்சபை அவர்கள் கொண்டிருக்கும் பிரிவினைகளைப் பாராட்டாது ஒரே குடும்பமாகவே அவர்களை மதித்து நடத்திவருகிறது. இராஜாங்கத்தாரும் அவர்களை ஒரு வகுப்பாகவே கணித்திருக்கிறார்கள். சமீபத்தில் சென்னைச் சட்ட நிரூபண சபையில் சிறு வகுப்பினர்களுக்குப் பிரதிநிதிகளை கவர்ண்மென்டார் நியமித்தபோது, புரொடெஸ்டாண்டு கிறீஸ்துவர்களுக்காக ஒரு பிரதிநிதியும், கத்தோலிக்கருக்காக ஒரு பிரதிநிதியும், பஞ்சமர்களுக்காக ஒரு பிரதிநிதியும், தீயர்களுக்காக ஒரு பிரதிநிதியும், நியமித்தார்களே தவிர, கத்தோலிக்கருக்குள்ளிருக்கும் பல வேறு ஜாதிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரதிநிதியை நியமித்தார்களோ? இல்லை. ஆகவே, கத்தோலிக்கு இந்தியர் எல்லோரும் ஒரே குடும்பம் என்பதற்கு முக்காலும் சந்தேகமில்லை. இவர்கள் தங்கள் தங்கள் விகற்பங்களை மேற்கொண்டு தனித்தனியாய்ப் பிரிந்து, சுய நிர்ணயம் பாராட்டுவோர்களாகில் உள்ள பலமுங் கெட்டு ஊசலாடும்படியாகும். மேலும், அந்தத் தனிப் பிரிவினைகளை யாரும் மதியார்கள். ஆனதுபற்றி, சென்னை அதிமேற்றிராணியாண்டவரவர்கள் சொன்ன மேற் புத்திமதிப்படி கத்தோலிக்கு இந்தியர் அனைவரும் தங்கள் விகற்பங்களை விட்டு, பொறுமையை ஒழித்து, ஒருமித்து ஒற்றுமை பாராட்ட வேண்டும். ஒத்து வாழவேண்டும். ஒத்து உழைக்கவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு ஈடேற்றமுண்டு.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

V
சாராள்.

"உன் நிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னை வேண்டி என் உயிர் பிழைக்கும்படிக்கும், நீ தயைசெய்து உன்னை என் சகோதரியென்று சொல்லென்றான்" (ஆதி. 12, 13).

விசுவாசிகளின் பிதாவாம் அபிராம், ஆண்டவருடைய கற்பனைக் கிணங்கித் தமது மனைவி சாராளோடு தமது சொந்தப் பொருட்களனைத்தையுமெடுத்துக்கொண்டு, காலுன் காட்டை நாடி ஆரானைவிட்டுப் புறப்பட்டுப்போனார். அத்தேசத்தின்வழியாய்ப் போகையில் பஞ்சம் பலமாகப் பரவி நின்றது. ஜனங்கள் மிக்க வருந்தினர். ஆகவே அபிராம் எழிப்து தேசத்திற்குப் போக எத்தனித்துப் பிரயாணத்தை யம்மார்க்கத் திருப்பிச்சென்றனர். அங்காடு கிட்டினதும், தமதருமைப் பத்னியை யழைத்து "உன் நிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னை வேண்டி என் உயிர் பிழைக்கும்படிக்கும், நீ தயைசெய்து உன்னை என் சகோதரி யென்று சொல்"லென் றுரைத்தார் அபிராம். அவர்கள் எழிப்து தேசமடையவும், அந்த ஸ்திரீயானவள் பரவோனுடைய அரண்மனைக்குப் பல வந்தமாகக் கொண்டுபோகப்பட்டாள். ஆயினும் அவ்வளுக்குச் சேதமில்லை; அவள் நிமித்தம் அரசனும் அங்காட்டாரும் அபிராமுக்குத் தயவு பாராட்டிவந்தார்கள்.

அபிராமின் மனைவி சாராளுக் கோரடிமையுண்டு. அவள் பெயர் ஆகார். இருவருக்கும் புத்திரசந்தானமாயிற்று. அவர்களைக் குறித்து அர்ச். இன்னப்பர் சொல்லுவதாவது:—"அபிராமுக்கு இரு புத்திரரிருந்தனர். அவ்விருவரில் ஒரு குமாரன் அடிமையான ஸ்திரீ வயிற்றில் உதித்தவன்; மற்றொரு குமாரன் சுயாதீன முள்ள ஸ்திரீ கருப்பத்தில் பிறந்தவன். அடிமையான தாயினிடத்துப் பிறந்த பிள்ளை சுபாவத்தன்மையாய்ப் பிறந்தது; சுயாதீன தாய் வயிற்றிற் பிறந்த குமாரனோ வாக்குத்தத்தத்தின் பலனைப் பிறந்தனன். இவைகள் உவமையாகச் சொல்லப்பட்டன" (கலெத். 4, 22..). மேலே குறிப்பிட்டுள்ள இரு புத்திரர்களும் பழய புதிய ஏற்பாடுகளை, அதாவது வரி வேதவருள் வேத பிரமாணங்களையும், மோயீசன் சட்டங்களையுஞ் சேசுவின் கோட்பாடுகளையுங் குறிப்பிடுகின்றனவெனத் தெளிவாய் கூறுகின்றார் அப்போஸ்தலர்.

ஒரு தாய் அடிமை ஸ்திரீ. மற்றொரு தாய் சுயாதீன ஸ்திரீ. சுயாதீன ஸ்திரீயிடமிருந்தே வாக்குத்தத்தத்தின்பலனை ஈசாக் உதித்தான். ஈசாக் சேசுவைக் குறிப்பிடுகிறான். புதிய ஏற்பாட்டிற்கு அஸ்திவாரமும், புதுக் கோட்பாடுகளைக் கொடுத்தவருமாகிய இவர், வாக்குத்தத்தத்தின்பலனை சுயாதீன ஸ்திரீயிடமிருந்தே பிறந்தார். ஆகையால் சுயாதீன ஸ்திரீயாகிய சாராளுக்கும் பரிசுத்த கன்னிமரியாயிக்கும் ஒப்பனைகள் பல உண்டென அர்ச்சியசிஷ்டவர்களும் வேதபாரகர்களும் பகர்வது ஆச்சரியமன்று.

1. "நாம் அவளை (சாராளை) ஆசீர்வதிப்போம்; அவளாலே நாமுனக்குத் தரவிருக்கிற புத்திரனையு மாசீர்வதிப்போம்" என அபிராமுக் கருளினார் ஆண்டவர். இவ்வுன்னத வாசீர்வாதம்பெற்ற சாராள் தேவமாதாவை நன்கு குறிப்பிடுகின்றனளென அர்ச். பொனவெஞ்தூரா விளம்புகிறார். அர்ச். ஜெரோம் உரைப்பதாவது:—பசாசை அரசனுகக்கொண்ட நாட்டிற்கு அனர்த்தமே. ஆனால், பிரபுகுலத் துதித்த சேசுராயனைக்கொண்ட சத்திய திருச்சபையே பாக்கியம்பெற்றது. பக்தர்களும் முக்தர்களும், யாக்கோப், ஈசாக், அபிராம் சந்ததியிலுதித்தவர்கள். ஏனெனில், அவர்கள் பாவச் சுமையை விலக்கிப் பசாசினடிமைத்தனத்திற் குட்படாத சுயாதீன புருஷர். இவர்கள் கோத்திரத்திலேயே ஓர் கன்னிகை பிறந்தாள். அவர்களை விட மேலான சுயாதீனமுள்ளவள், அவன்தான் மரியாயி. திருச்சபையின் அப்போஸ்தலர்களும் அர்ச்சியசிஷ்டவர்களுஞ் சிற்றரசராவார்கள். அவர்களது சக்கரவர்த்தி சேசுதேவனே. அவரே சுயாதீன புத்திரன். அடிமை ஸ்திரீயாகிய ஆகாரிடமிருந்து பிறந்தவரல்ல. ஆனால் சுயாதீன ஸ்திரீயாகிய சாராளைவிட மேலான மரியாயினிடமிருந்து பிறந்தவராவர்.

சுயாதீனஞ் சிறந்தது. அடிமைத்தனங் கேவலமானது. அதிலும் பசாசினடிமையாயிருப்பது மிக்க ஈனமான காரியமாம். பாவத்திற்கும் அதின் வழி பேய்க்கும் அடிமையாயிருப்பதைவிட சீசரும் அவலமானதுங் கிடையாது. சுத்த சுயாதீனம் கடவுளுக்கு ஊழியம் புரிவதிலேயுண்டு. அவருக்குத் தொண்டு செய்வது அடிமைத்தனமன்று. அவரைச் சேவிப்பதினால் அவரோடு உறவாடுகிறோம். பரம பிதாவாங் கடவுளோடு உறவுகொள்ளுகிறோம். "கடவுளின் பிள்ளைகளாக அவர்களுக்குச் சுதந்தரங் கொடுத்தனர்" என அர்ச். அருளப்பர் வசனிக்கிறார். பாவமின்றிக் கடவுளின் பிள்ளையாய் விளங்குவதே உத்தம மகத்துவமுஞ் சுத்த சுயாதீனமுமாம். "பழய ஆகம பிதாப்பிதாக்கள் சுயாதீனமுள்ளவர்களாயிருந்தனர். ஏனெனில், பாவத்திற் குட்படாதும், பசாசினடிமைத்தனத்திற்குக் கீழ்ப்படாதுமிருந்தனர்" என அர்ச். ஜெரோம் பகருகின்றார்.

சாராள் சுபாவத்துக்கடுத்தவிதத்தில் சுயாதீன ஸ்திரீ. அர்ச்சியசிஷ்டவர்கள் தேவ அருளால் சுயாதீனமடைந்தனர். மரியாயோ இவர்களைவிட மேலான மகத்துவமுஞ் சுயாதீனமுமடையப்பெற்றனள். பாவப்படிறு கிஞ்சித்தும் அவளைக் கிட்டாததால் மரியாயி முற்றுஞ் சுயாதீனம்பெற்ற ஸ்திரீ. ஆகையால் சாராளுடைய சுயாதீனமும் மரியாயினது சுயாதீனமும் நிழலும் பொருளும் போன்றனவாகும். "நேச ஈசாக்கை (கிறீஸ்துநாதரை) ஈன்றெடுத்த சுயாதீன ஸ்திரீ மரியாயே" என்று அர்ச். ப்ரோக்ளூஸ் உறுதிகூறுகின்றார்.

2. சாராளும் மரியாயுஞ் செய்த பல பிரயாணங்களில் சில ஒப்பனைகள் இருவருக்குமுண்டென வேதசாஸ்திரியான ஜார்ஜ் ரெயிஸ்மிலர் எடுத்துக்காட்டுகிறார். சாராள் தன் பத்தாவாகிய அபிராமோடு பிரயாணஞ்செய்தாள். மரியாயி தன் நேச பரிசுத்த பத்தாவாஞ் சூசை முனிவரைப் பின்தொடர்ந்து சென்றாள். தமது யாத்திரையில் பற்பல துன்பங்களும் இடையூறுகளும் இருவரு மனுபவித்தார்கள். இருவருந் திருவுளத்திற் கமைந்து அவைகளைப் பொறுமை

யோடி சகித்தனர். ஆண்டவர் அபிராமை நோக்கி "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தந்தையின் வீட்டையும்விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காட்டப்போகிற தேசத்திற்குப் போகக்கடவாய்" என்றருளினார். அவர் தமது மனைவியைக் கூட்டிக்கொண்டு காளுன் நாட்டைநாடிச்சென்றார். அங்கு பஞ்சமிருந்திருந்தமையால், எஜிப்து தேசம் வந்தடைந்தார். அங்கு பஞ்சந் தீரவே, வந்தமார்க்கமாகவே திரும்பி தான் முன கூடாரமடித்திருந்த விடம்வந்து தங்கினர்.

நசரேத் ஊரில் கன்னிமரியாயுஞ் சூசைமுனியுங் காலங கழித்துவருகிறார்கள். தேவசுதன் பிறக்க காளாகிவிட்டது. சேசார் அகுஸ்தஸ் மன்னன் தற்பெருமையை மேற்கொண்டு, தனதாளுகைக் குட்பட்ட பிரஜைகளின் தொகையை யறிய ஜனக் கணக்கெடுக்க ஆசித்தான். அதற்காக ஒவ்வொருவருந் தத்தஞ் சொந்த ஊர் போக நேரிட்டது. ஆகவே பெத்லேம்நகர் வாசிகளாகிய புண்ணிய தம்பதிகளும் அக்கேகவேண்டியதாயிற்று. ஊர் வெகு தூரம் —பாதை கஷ்டம்—காலம் கடினம். ஆயினும் 'மன்னன் சொல்லுக்கு மறு சொல்லுண்டா' வென உடனே புறப்பட்டார்கள். திருவுளத்திற்குப் பணிந்தார்கள். கடவுள் நமக்கு நேராகவோர் கட்டளையை யளித்தால் அதைத் தடுக்க முயல்வது அபூர்வம். அப்படிச்செய்யின் அது குருட்டாட்டமுங் கெட்டதனமுமாம். ஆனால் அவரது சித்தத்தைச் சிருஷ்டிகள்வழியாய்த் தெரிவிக்கின், அதை ஏற்றுக்கொள்வது கஷ்டமாகிறது. 'ஆண்டவரே! உமது சித்தம்போலாகக்கடவது' என்று சொல்ல மகிக்கிறோம். ஆயினும், நமக்கு வரும் துன்பங்கள் எனன! சொற்பமே. பெத்லேம் நகருக்குப் போகையில் கன்னிமரியாயி அனுபவித்த துன்பதுயரங்களுக்கு எல்லையுண்டோ? வழியில் களைப்புந் தவிப்பும், ஊரில் இடமில்லாதலைப்பும், கடையொக மாட்டுக்குடிலில் தேவசுதன் பிறப்பும், எவ்வளவு மனோவேதனைக்குக் காரணமாயின. அபிராமோடு சாராள் எஜிப்து தேசம் போயினள். அங்கேயே கன்னிமரியாயுஞ் செல்ல சம்பவித்தது. கடவுளின் தூதன் சூசையப்பருக்கு நித்திரையில் தரிசனையாகி "நீ ரெழுந்திருந்து 'குழந்தையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எஜிப்து தேசத்திற்கு ஓடிப்போய், நானுனக்குச் சொல்லுமட்டும் அவ்வேயே யிரும். ஏனெனில் குழந்தையைக் கொலைசெய்வதற்காக ஏரோதன் அதனைத் தேடுகிறான்" என்றார் (மத். 2, 13). திவ்ய பாலனை, மாசற்ற சிசுவைக் கொலைசெய்யத் தேடுகின்றனரெனக் கேட்க. இடிவிழுந்ததுபோலிருந்தல்லோ விருக்கும்? ஆயினும், அன்னிய தேசத்திற்கு, தூரபயணமாய்க் கஸ்தியுடனுங் கலேயுடனுங் கடுமுரடான பாதை வழி அவர்கள் போவது சுலபமாயிற்று. திருவுளத்திற் கமைந்து சென்றார்கள். பரதேசிகளாய் ஏழு வருஷ மக்கிருந்தார்கள்.

நாமெல்லோரு மிப்புவியில் கடத்துசெல்லும் யாத்திரைக்காரர்கள். அலைந்து திரியும் பரதேசிகள். இதை நமக்கிருப்பிடம் கிடையாது. காமிப்போது வழிப்பது தகுமடமே. அன்றுடம் நம் சுய நாடு நோக்கிச் செல்லுகிறோம். அதுவே நித்திய காலம் நிலைப்பது. கிறீஸ்தவர்களாகிய நாம் வாக்குத்தத்த நாடடைய ஓடுகிறோம். நிச்சயமா யங்குபோய்ச் சேரவேண்டுமாயின், கன்னிமரியாயையுஞ் சூசைமுனிவரையும் பின்பற்றுவோம். இம்மாய உலகத் தோற்றத்தை நீக்கி, ஆசாபாசத்தைப் போக்கி, நமதேக பொக்கிஷமும் நன்மையுமாம் மெய்யக்கடவுளையே நோக்கிச் செல்லுவோமாக!

3. "உன் நிமித்தம் எனக்கு நன்மையுண்டாகும்படிக்கும், உனை வேண்டி என் உயிர் பிழைக்கும்படிக்கும் நீ தயைசெய்து உனை என் சகோதரி என்ற சொல்லென்ற" அபிராம் சாராளைப் பார்த்து வேண்டிக்கொண்டார். பெண்மணியாகிய சாராளைக் காப்பாற்றவண்ணம் தன்னுயிர் பிழைக்கவே, அவ்வாறு வேண்டினர்? அபிராமுக்கு வரவிருந்ததைவிடப் பெரிய ஆபத்து நமக்கில்லையோ? எவர் இல்லையெனச் செப்பத் துணிவர்? கடவுளினமுன் நீதிமான்களாயிருக்கிறோமா? நமது பாவதோஷங்களைப் பரிகரித்தோமா? நமதுபுண்ணிய பலன்களெங்கே? எல்லாஞ் செவ்வனே யிருக்கிறதென மனதரியமாய்ச் சொல்லமுடியுமா? பயத்தோடு நமது இரட்சண்ணியத்தைத் தேடவேண்டியிருக்கிறதனறோ? இச்சமயத்தில் மரியாயின் தடைக்கலம் புகுவதே யுசிதம். அவள் நிமித்தம் பெரும்பாலினராகிய நமக்குக் கருணை காட்டுவார் கடவுள். நம்மைக் காப்பாற்றுவார். அவள் அவருக் குகந்தவள். அவருக்குப் பிரிதியுள்ளவள். அவள் நிமித்தம் நம்மை யவர் காப்பது நிச்சயம். ஆகவே அர்ச். பொனவெந்து

ராவின் போதனைக்கிணங்கி அபிராம் சாராளை வேண்டினதுபோல நாமும் மரியாயினை மன்றாடுவோம். ஓ! கன்னிகையே. உன்னிமித்தம் எனக்கு கன்மையுண்டாகுமன்னம். உன்னை வேண்டி என் ஞான உயிர் பிழைக்கும்படி. நீ தயைசெய்து உன்னை என் சகோதரியென நீதி பரன்முன் விளம்புவாய். ஓ! மரியே. இனிய சாரா! உன்னிமித்தங் கடவுள் எங்களை யாதரிக்கவும், எங்களாத்துமம் அவர்முன் பரிசுத்தமாயிருக்கவும். உன்னை எங்கள் சகோதரி என்று பகர்வாய்! ஓ! அன்பு மிகுந்த சாரா, உன்னிமித்தம், எஜிப்தியர்களாகிய நரகக் கூளிகள் எங்களுக்கு அஞ்சும்படிக்கும். உன்னிமித்தம் தேவ தூதர்கள் எங்களுக்குதவிபுரியும்படிக்கும். உன்னிமித்தம் பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்து சர்வேஸ்வரன் எங்கள்மீது கருணைகூர்ந்து எங்களை யாசீர்வதிக்கும்படிக்கும். உன்னை எங்கள் சகோதரியென மொழிவாய்; நீ தேவதாய்.

(இன்னும் வரும்)

M. S. M.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2—அதிகாரம்; வசனம்—33-39.

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—33. "அவருடைய பிதாவும் மாதாவும் அவரைக் குறித்துச் சொல்லப்பட்ட வைகளின்பேரில் அதிசயித்துக்கொண்டிருந்தார்கள்." சிமையோன் திவ்ய பாலனைத் தனதுகரங்களில்வாங்கிக்கொண்டு, ஆனந்த பரவசமாய்ப் பாடின சங்கீதத்தைக் கேட்டிருந்த கன்னிமாதாவும், சூசைமுனியும் அசங்கீதத்தின் கருத்துக்களை ஆராய்ந்தறிந்து மகிழ்ந்து அதிசயப்பட்டார்கள். இஸ்பிரீத்துசாந்துவானவர் திவ்ய பாலனை பனுக்குலத்தின் இட்சகர் எனறு சிமையோனுக்கு ஏற்கெனவே வெளிப்படுத்தியிருந்ததைப்பற்றியும், சிமையோன் மெஸ்ஸியாவைப் போற்றிப் புகழ்ந்த உன்னத வகையைப்பற்றியும் தேவதாயும் சூசைமுனியும் மனமுவந்து, சர்வேசுரனை யுந்து போற்றினர்கள்.

சுவிசேஷ வாக்கியம் சூசைமுனியை சேசுவின் பிதாவென்று கூறுவதினால், அவரைச் சேசுவின் கைத்தாதையென்று சொல்லலாமொழிய, சுபாவ முறையில் மெய்யான தந்தையாகமாட்டார் என்றறியக்கடவோம். ஏனெனில், சூசைமுனி தேவதாயின் மெய்யான பத்தாவாயிருந்தாலுர், அவர்களிருவரும் எப்போதும் விரத்தராயிருந்தார்கள் என்பது குன்றாத சத்தியமாம். சூசைமுனி கன்னிமாதாவை மெய்யாகவே விவாகம் செய்தபடியால், அவரைத் தேவமாதாவின் உண்மையான பத்தாவென்றுர், நியாயப்பிரமாணத்தின் படிமாத்திரம் சேசுவின் தந்தையென்றும் சொல்லலாம்.

திவ்ய பாலனைக் கண்ணுற்ற சிமையோன் மனம் பூரித்து மகிழ்கிறார். அப்பாலனைப் பெற்றெடுத்த திவ்ய தாயையும், அவரை வளர்க்கப் பாக்கியம்பெற்ற தந்தையையும், அவர்களுக்குக்கிடைத்த அருமையான ஆசீர்வாதங்களுக்காகவும், அற்புதமான வரங்களுக்காகவும் வாழ்த்துகிறார். "எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதியென்பார்கள்" என்று கன்னிமரியாயி கூறிய தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறத் தொடங்குகிறது.

34-ம் வசனம்.—"அல்லாமலும் சிமையோன் அவர்களை ஆசீர்வதித்து அவருடைய 'தாயாராகிய மரியம்மாளை நோக்கிச் சொன்னதாவது: இதோ, இவர் இஸ்ராயேலில் அநேகருக்குக் கேடாகவும், உதானமாகவும், விரோதிக்கப்படும் குறியாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்.

35-ம் வசனம்—உமதுடைய ஆத்துமத்தையும் ஓர் வாள் ஊடிருவும் இதினாலே அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படுமென்றார்" என்றார் சிமையோன் கன்னிமாதாவை ஆசீர்வதித்து வாழ்த்தினபின் அவளுடைய திவ்ய குமாரன படபோகிற பாடுகளையும், அதனால் அதிதிவ்யமாதாவுக்குண்டாகப்போகிற வியாகுலங்களையும் வெளியிடுகிறார். கிறீஸ்துநாதர் யூத ஜனங்கள் மதத்தில்

தோன்றி, தாம் சர்வேசுரனுல் அனுப்பப் பட்ட மெஸ்ஸியாஸ்—அரசன் என்றும், தேவகுமாரன் என்றும், உலக இரட்சகர் என்றும் போதித்தார். தமது போதனையை மகத்தான புதுமைகளால் மெய்ப்பித்தார். இரட்சண்ணியம் அடையும் நேர் வழியைக் காண்பித்தார். ஆனுல், இச்சனங்களில் அநேகர், அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய போதனையை அருவருத்து, அவர் கொண்டுவந்த இரட்சண்ணிய பலன்களை வேண்டாமென்று தள்ளிப்போட்டார்கள். அன்றியும் அவரைக் குரூரமான பாடுகளுக்கும் அவமானங்களுக்கும் உட்படுத்திச் சிலுவையிலறைந்து கொன்றார்கள். இப்பாதகங்களுக்காகச் சர்வேசுரனுடைய கோபமும் சாபமும் அவர்கள்மேல் வந்தன.

ஆனுல், மற்றநேகர் சேசுநாதரை விசுவசித்து, அவரை நேசத்துடன் ஏற்றுக் கொண்டதினுல், அவர் கொண்டுவந்த சகல பாக்கியங்களுக்கும் பங்காளிகளானுர்கள். தேவ இஷ்டப்பிரசாதத்தையிழந்து ஞானவிதமாய் மரித்தவர்களுக்கு. திவ்ய இரட்சகர் பட்டபாடுகளின் பலனுக மெய்யான ஞான சீவியம் கொடுக்கப்பட்டது. பாவத்தால் மரித்தவர்கள் தேவ இஷ்டப்பிரசாதத்தால் உயிர்த்தார்கள். ஆகவே, கிறீஸ்துநாதர் யூத ஜனங்களுள் அநேகருக்குக் கேடாகவும் உத்தானமாகவுமானுர் என்பது உண்மை.

கிறீஸ்துநாதரை விரோதிக்கப்படும் குறி என்று சொல்வதெப்படி? மலையின் உச்சியில் அல்லது கோபுரத்தின்மேல் நாட்டப்பட்ட ஓர் விருதுக்கொடி அல்லது ஓர் தீபம் எல்லோருக்கும் நன்கு புலப்படும். அதனை எல்லோரும் காணக் கூடிய குறி என்று சொல்லலாம். அப்படியே சேசுநாதருடைய அற்புதமான பிறப்பும், சீவியமும், அவருடைய போதனையும், படிப்பினையும், புதுமைகளும் புண்ணியங்களும் உலக மனுஷர்களுக்கு வெகு துலக்கமாய் அறிவிக்கப்பட்டன. இவைகள் அவர்களுடைய அகங்காரத்துக்கும், தர் இச்சைகளுக்கும் முற்றும் நேர்விரோதமாயிருப்பதினுல் இம்மனிதர் சேசுநாதரை விரோதிக்கும்படியாக நேரிடுகிறது. உலகப் சேசுநாதரையும், அவருடைய திருச்சபையையும் பகைப்பதற்குக் காரணம் இதுதான்.

"நாங்களோ சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துநாதரைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதர்களுக்கு இடறலும், அஞ்ஞானிகளுக்குப் பைத்தியமுமாயிருக்கிறார். (1. கொருந்தி. 1-ம் அதிகாரம். 23-ம் வசனம்). தான் பெற்ற குமாரனுக்கு வருகிற பாடுகளிலும், நிந்தை அவமானங்களிலும் அவனுடைய தாயும் பங்கடைய வேண்டுமல்லவா?" அதற்காகத்தான் சேசுவின் சீயோன் துக்கமுள்ளதென்றால், அவருடைய திவ்ய தாயின் சீவியமும் வியாகுலம் நிறைந்ததாயிருப்பது அவசியமே.

தனது திருக்குமாரன் பட்டபாடுகளையும், சிலுவைமரத்தில் அறையுண்டு அது பவித்த நிர்ப்பந்தங்களையும், அவமானங்களையும் கண்ணுற்ற தேவதாய் தன்னிருதயத்தில் சொல்லொண்ணாக் கஸ்தியை யதுபவித்தாள். சரீர பாடுகளை அவள் பட்டதில்லையென்றாலும் அவளுடைய ஆத்துமத்தைத் துக்கத்தின் கூர்மையான வாள் ஊடுருவினது. இப்புவியில் தேவ மரிக்கு நியமிக்கப்பட்ட சீவியம் சதா இன்பமுள்ளதாயிராமல், துக்கமும் துயரமும், கவலையும் கம்பலையுமுள்ளதாயிருந்தது. பாக்கியவதி என்று அவள் போற்றப்பட்டாலும், சர்வேசுரன் துக்கத்தை அவளுக்குக் கட்டளையிட்டார். அவளுடைய பாக்கிய மெல்லாம் சேசுநாதருடைய பாடுகளில் பங்கடைவதில்தான் அடங்கியிருந்தது. இடையர்களுக்குச் சந்தோஷம் அறிவிக்கப்படுகின்றது. தேவமாதாவின் இருதயத்தை மகா கொடூரமான துக்கத்தின் வாள் ஊடுருவி வாதிக்கின்றது. எவ்வளவுக்கு நாம் சேசுவை நெருங்கி அவருடன் ஐக்கியமாகிறோமோ, அவ்வளவுக்கு அவருடைய பாடுகளுக்கு நாம் பங்காளிகளாவோமென்பது திண்ணம்.

"இதனுல் அநேகருடைய சிந்தனைகள் வெளிப்படும்" என்றார். கிறீஸ்துநாதர் உலகத்தில் தோன்றினபோது, அவருடைய சீவியத்தாலும், போதகத்தாலும், அவர் பட்ட துன்பப் பாடுகள், உபத்திரவங்களாலும், சர்வேசுரனுடைய உண்மையான ஊழியர் எவர் என்று எல்லோருக்கும் வெளியாக்கப்பட்டது. புண்ணிய

வாளருடைய நன்மையும், புண்ணியங்களும் துஷ்டர்களுடைய தின்மையும் பாவச் செயல்களும், நல்லோருடைய இருதயச் சிந்தனைகளும், தீயோருடைய உட்கருத்துகளும் பிரத்தியட்சமாக்கப்பட்டன.

எத்தனையோ விசை சேசுநாதர் கள்ளஞானிகளான பரிசேயரைக் கண்டித்து, அவர்களுடைய கள்ளச் சிந்தனைகளையும், பாவக் கொடுமைகளையும் வெளியாக்கினார் என்றும், நீதிமான்களுடைய புண்ணியங்களையும், உத்தமச் செயல்களையும் வியந்து வாழ்த்தினர் என்றும் சுவிசேஷத்தில் வாசிக்கிறோம்.

மெய்யாகவே, அவருடைய சீவியமும் போதகமும், மனிதர்களுடைய இருதயச் சிந்தனைகள் வெளிப்பட்டு, ஒளிப்பு மறைவு இல்லாமல் புண்ணியம் புண்ணியமாகவும், பாவம் பாவமாகவும், அதது தன்தன் சுய ரூபமாக தெற்றென விளங்கும்படிச் செய்தது.

சிமையோன் தீர்க்கதரிசனம் சொல்லிப் பாடுகிறார். தேவமாதாவும் எலிசபெத் தம்மாளும் தீர்க்கதரிசனம் வசனித்தார்கள். இப்போது விதவையான அன்னுளும் தீர்க்கதரிசனம் கூறுகிறாள்.

பற்பல அந்தஸ்துள்ளவர்களும் உலக இரட்சகரை அங்கீகரிக்கிறார்கள். இப்படியாகக் கிறீஸ்து இரட்சகர் உலகத்தில் தோன்றினதை பலவிதமான அத்தாட்சிகளால் சர்வேசுரன் வெளிப்படுத்தச் சித்தமானுர்.

அன்னுள் என்ற நாமம் பூண்ட யூத ஸ்திரீகள் பலர் இருந்தார்கள். ஆகவே, இங்கே கூறப்பட்ட தீர்க்கதரிசினியான அன்னுளைச் சுட்டிக் காண்பிக்க, அவளுடைய தந்தை பெயரும், கோத்திரமும் விபரமாய் அறிவிக்கப்பட்டன. யூத மாதர் சாதாரணமாய் 15-ம் பிராயத்தில் விவாகம் செய்துகொள்வது வழக்கம். அன்னுளும் அவ்வயதிலேயே மணம் செய்து, தன் புருஷனோடு ஏழு வருஷம் சீவித்தாள். அவள் வாலிப பருவத்திலேயே விதவையானுள் என்றும், மறுபடியும் விவாகம் செய்யாமல் எண்பத்தினான்கு பிராயம் வரையில் விரதத்துவம் அநுசரித்ததானது அவளுடைய புண்ணிய பெருமைக்குச் சான்று பகருகின்றது.

அவள் தேவாலயத்தைவிட்டு அகலவில்லை என்றால், அவள் ஓய்வு ஒழிவு இல்லாமல் எப்போதுமே தேவாலயத்திலேயே வாசஞ்செய்தாள் என்று அர்த்தமாகாது. ஆனுல், தன் வாழ்நாட்களின் முக்கிய பாகத்தைத் தேவாலயத்தில் செலவழித்தாள் என்று கூறவேண்டும். அவள் அல்லும் பகலும் செபத்தியானங்களையும் தபக்கிருத்தியங்களையும் செய்து, சர்வேசுரனுக்கு ஊழியம் செய்து, அவருடைய விசேஷ கிருபைகளைப் பெற பாத்திரமுள்ளவளானுள்.

அவளுடைய புண்ணிய பேறுகளின் பலனுக கிறீஸ்துநாதரைக் காணும் ஓப்பற்ற பாக்கியம் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அன்னுள் தேவ தயவின் அருளால் திவ்ய பாலனே மெய்யான தேவசுதன் என்றறிந்து, அவரை இப்பூலோகத்திற்கு அனுப்பின திஞல் சர்வேசுரனை ஸ்துதித்து, இஸ்ராயேல் பிரசையின் மீட்சியை எதிர்பார்த்திருந்த சமஸ்தருக்கும், உலகத்தை இரட்சிக்கவந்த தேவசுதன் அவர்தானென்று பிரசித்தப்படுத்தினுள். சர்வேசுரன் சகலவித மனுஷரைச் சாட்சியாகக் கைக்கொண்டு, குழந்தையான ஸ்நாபக அருளப்பருக்கும், வயோ விருத்தனான சிமையோனுக்கும், புருஷனோடு இருந்த எலிசபெத்துக்கும், விதவையான அன்னுளுக்கும், எளியோராகிய இடையருக்கும், செல்வம் படைத்த சோதிடசாஸ்திரிகளுக்கும், வயதும், அந்தஸ்தும் பாராமல், சமஸ்தருக்கும் தமது திவ்ய குமாரனுடைய பிறப்பைப் பிரத்தியட்சமாக்கின மேசையைக்கண்டு, தேவதாயும் சூசை முனியும் சந்தோஷமும் ஆச்சரியமுங் கொண்டார்கள்.

இப்படியே கன்னிமாதாவும் சூசை முனியும் வேத கட்டளைப்படி சகலத்தையும் நிறைவேற்றினபின்பு நசரேத் என்னும் தங்கள் ஊருக்குத் திரும்பிப்போனார்கள்.

லூக்காஸ், இங்கு சோதிடசாஸ்திரிகள் கிறீஸ்துவைத்தேடிக் காணவந்தவர்த்தமானத்தையும், திருக்குடும்பம் எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போனதையும், எரோ

தன் பாலர்களைச் சங்கரித்ததையும்பற்றி யாதொன்றும் கூறாமல், திருக்குடும்பம் எஜிப்து நாட்டிலிருந்து நசரேத்துக்கு வந்து குடியேறினதின்பின் அங்கு நடந்த சில முக்கிய சம்பவங்களைமாத்திரம் சுருக்கமாய்க் கூறி, கிறீஸ்துநாதருடைய பாலிய சீவிய வரலாற்றை முடிக்கிறார்.

(தொடரும்.)

S. M.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

5-ம் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாள் விதவையாஞள்—
அதுஸ்தீன் கலாசாலையில் சிறந்த
வித்தைகளைக் கற்றுத்
தேர்ச்சியடையும்படி
தனது ஆஸ்தியாஸ்திகவ்யாவையும் சேல
வழிக்கிறாள்—உரோமானியன் என்பவன்
அவளுக்குச் சகாயமாயி வருகிறான்—
அதுஸ்தீனுடைய தீய வாழ்க்கத்தைப்பற்றி
அவள் சஞ்சல சாகரத்தில் அமிழ்ந்தியிருக்
கையில், அவர் தீநும்ப சன்மார்க்
கத்தை நாடி வரச்செய்யும்
முயற்சிகள், பளிச்சென்று தோன்றும் மின்ன
லுக்கோப்ப அவளது இருதயத்தில்
நம்பிக்கையைப்
பிறப்பிக்கின்றன.

(இ. அ. 372—375.)

அர்ச். மோனிக்கம்மாளின் முதல் அலுவல் முடிந்தது. அவ்வலுவலேதெனில் தன் பத்தாவை மனந்திருப்புவதே. அதனை முடிக்க பதினேழு வருஷம் பிடித்தது. இச்சரிதையில் ஆங்காங்கு காட்டப்படும் காலகணிதம் அவ்வளவு திருத்தமுள்ளதாயிராவிட்டாலும், பத்ரீஸியூஸ் இரட்சண்யம் 371-ம் வருஷத்தில் அதாவது மோனிக்கம்மாளுக்கு முப்பத்தொன்பது வயது நடக்கும் போது, மரணமடைந்தாரென்று சரித்திரக்காரர்கள் யாவரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

இங்கொரு காரியத்தைக் குறிப்பது தகுதி. நாம் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரங்களைக் கவனத்துடன் வாசித்துவரும்போது, அக்காரியம் நமக்குப் புலப்பட்டது. அதேதெனில், எதக்குறைய கீர்த்திபெற்ற எல்லா அர்ச்சியசிஷ்ட பூவையர்களும், தங்கள் புருஷர்களை யிழந்து விதவையவஸ்தை யடைந்திருக்கிறார்கள். அர்ச். மோனிக்கம்மாள், அர்ச். பவுலினம்மாள், ஹங்கரிதேசத்து அர்ச். எலிசபெத்தம்மாள், அர்ச். எட்விஜ் அம்மாள், அர்ச். வஞ்தால் பிராஞ்சீஸ்கு அருளாயம்மாள், இன்னும் மற்றநேகர்களும் அப்படியே. அவர்கள் கலியாண அவஸ்தில் பிரவேசித்தபோதிலும், கொஞ்சகாலம் அவ்வவஸ்தையிலிருந்தார்கள். அதற்குக் காரணம், விவாக அவஸ்தின் இன்பத்தைப் பரிசுத்தத்தனத்தோடு சுகித்து, உலகத்தாருக்கு கன்மாதிரிகையாயிருக்கும்படியாகத்தான் என்னத்தகும். ஆனால் கடவுளோ வெனில், "இல்லறத்தனினும் நல்லறம் துறவறம்" என்றபடி, அவர்கள் அனேகத்தையும் துறந்து தம்மையே நாடியிருக்கும்படி உலகபந்தனங்களிலிருந்து அவர்களை விடுவித்தார். இதைப்பார்த்தால் புறத்துக் காரியங்கள் அவர்களுடைய இருதயங்களைக் கவர்ந்திருந்ததைக் கண்டு கடவுள் ஞான காய்மகாரங்கொண்டு, தாமே அவ்விருதயங்களனேகத்தையும் கவர்ந்திருக்க விரும்பியதுபோலத் தோன்றுகிறது. அவர் அப்படிச்செய்ததில் இன்னொரு கருத்துமிருக்கலாம். அதேதெனில், அப்படிப்பட்ட புண்ணியாத்துமாக்கள் அநுபவிக்கத் தகுதியான வியாகுலங்களைச் சமுசார அந்தஸ்தில் அவர்களுக்குக் கொடுக்கவும், சாதாரணமாய் அவ்வந்தஸ்தில் இருக்கப்பட்டவர்கள் அடையக்கூடாத உந்நத சாங்கோபாங்கப் பதவியில் ஓங்கி வளரும்படிக்கு வேண்டிய இஷ்டப்பிரசாதங்களை வழங்கவும், இருக்கலாம்.

சிலருடைய சரிதைகளைப் பார்த்தாலோ, அவர்கள் சமுசார அந்தஸ்தில் எவ்வளவு பாக்கியவதிகளாயிருந்தார்களோ, அவ்வளவு சீக்கிரமாய்த் தங்கள் புருஷர்களை யிழந்து விதவைகளானார்கள். அர்ச். எலிசபெத்தம்மாளுக்கு இருபது பிராயம் நடக்கும்போதும், அர்ச். எட்விஜ்ஜம்மாளுக்கு 23 பிராயம் நடக்கும்போதும், அர்ச். வஞ்தால் அருளாயம்மாளுக்கு 29 பிராயம் நடக்கும்போதும், கர்த்தர் சமுசார அந்தஸ்தின் நிர்மலமான சந்தோஷபாக்கியத்திலிருந்து அவர்களைப் பிரித்து விலக்கினார். அர்ச். மோனிக்கம்மாள் தன் புருஷனை யிழந்தபோது அவளுக்கு வயது 40 என்பது நிச்சயமே. ஆனால் அவள் தன் புருஷனை யிழக்குமட்டும் தன் முண்முடிக்காக, அதாவது கஷ்டவியாகுலங்களுக்காகக் காத்திருக்கவேண்டியிருந்ததில்லை. எத்தகிமிஷத்தில் அவளுக்கு விவாகம் ஆயிற்றோ, அதேநிமிஷத்திலிருந்து அவள் பட்டுவந்ததெல்லாம் துயரமும் சஞ்சலமுமேயன்றி வேறன்று.

ஆயினும், பத்ரீஸியூஸ் மரணமடைந்தது தான் தாமதம், அவள் புண்ணிய ஒழுக்கத்தில் விசேஷமான அபிவிர்த்தியடையத் துவக்கினாள். அவளது ஆத்துமம் முன்னேயே தேவ நேசத்தின்மட்டில் பேராவல்கொண்டிருந்தது. அந்நேச அக்கினியின் உக்கிரத்தை விவாக அந்தஸ்தானது ஒருவாறு தணித்துவந்ததென்றாலும், அவள் விதவையானவுடன் அவ்வக்கினி, சுவாலைவிட்டெரியவே அவள் வீரதத்துவமான புண்ணிய முயற்சிகளைப் புரிந்துவர எதுவாயிற்று.

சாகுந்தனையும் மறு கலியாணம் செய்யாமல் விதவை அந்தஸ்திலேயே நிலைத்திருக்கச் சேர்ந்துகொண்ட எல்லா விதவைகளுக்கும், திருச்சபையானது ஒரு மூக்காட்டுத் துணியையும், ஒரு உரப்பான வஸ்திரத்தையும் மந்திரித்துக்கொடுத்து, கோவில் திருப்பணிவிடைக்கடுத்த விசேஷமான ஊழியங்களுக்கு அவர்களை நியமிப்பது வழக்கம். இவள் அத்திரு வஸ்திரங்களைத் தகாஸ்தே மேற்றிராணியாரிடமிருந்து பெற்றாளோ இல்லையோ என்பதை அறியோம். அகுஸ்தீனுக்கு இவளுடைய உதவி மெத்தவும் அவசியமாயிருந்ததாலும், அவருக்காக இவள் அடிக்கடி வெளியே போகவரவேண்டியிருந்ததாலும், மேற்கண்டபடி தன்னை வெளியரங்கமாகக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, விதவா வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளாதிருந்திருக்கலாம். ஆயினும், தனது புருஷன்மட்டில் தனக்கிருந்த பிரமாணிக்கத்தின் விசேஷத்தால், எந்த ஆடம்பரஷனையும் இனி தன் இருதய பத்தாவாக ஏற்றுக்கொள்ளாமல், தனது மீதிச்சாட்சாத் தேவ ஊழியத்தில் செலவழிக்க முழு மனதோடு தீர்மானஞ்செய்துகொண்டாள் என்பது குன்றாத சத்தியம். அக்காலத்தில் அவள் இருந்த நிலைமையை அர்ச். அகுஸ்தீனே நமக்கு விளக்கமாய்க் காட்டுகிறார். அதாவது "என் கர்த்தாவே, என் மாதா எப்படியிருந்தாளென்று நீர் அறிவீர். அவள் கற்பும் மனவடக்கமுமுள்ள விதவையாகவும், தாரித்திரர்களை யாதரிக்கும் அன்பின் களஞ்சியமாகவுமிருந்தாள். உமது அர்ச்சியசிஷ்டவர்களுக்குச் சகலவித ஸ்துதி தோத்திரங்களை யொப்புக்கொடுத்து, ஒரு கால் முதலாய் பூசைக்குவரத் தப்பாமல், காலையிலும் மாலையிலும் உற்சாகத்துடன் கோவிலுக்குப் போய், அநேக மணிநேரமட்டும் மவுனத்திலும் தியானத்திலும் ஜெபத்திலும் செலவழித்துவருவாள். மீதியான நேரங்களில் வீடுவீடாய்த் திரிந்து, ஊர் சங்கதிகளைப் பேசி வீணே காலங் கழிக்காமல், உம்மோடு சம்பாஷித்துக்கொண்டும், உமது திருவசனங்களைக் கேட்டுக்கொண்டும் இருந்தாள்."

பொஸ்ஸெ என்பவர் குறித்துப் பேசும் விதவைகளில் இவளொருத்தி என்பதே சரி. அவர் சொல்லும் விதவைகள் எப்படிப்பட்டவர்களென்றால், "தங்கள் புருஷர்களை யிழந்து விதவைகளானபிறகு, அதுவரைக்கும் தங்களிடமிருந்த நேசபாச உணர்ச்சிகளைத் தங்கள் புருஷர்களுடைய கல்லறைகளிலேயே அடக்கிப் புதைத்து, உலகத்திற்கு முழுதும் செத்தவர்களாய், யாவராலும் கைவெறுக்கப்பட்டு சேசுக்கிறீஸ்துநாதரைத் தங்களுடைய புது மணவாளராகத் தெரிந்துகொண்டு, இருதய சம்பூரணத்துடன் அவரையே நேசித்துவருபவர்கள்."

தான் புருஷனிடம் வாழும்போது படாத துன்பங்களையெல்லாம் பட்டு, கடைசியாய் விதவையானபின்னும் சாகுமட்டும் துக்கசாகரத்திலேயே அமிழ்ந்தியிருந்தாள். இதை நினைக்கும்போது உண்மையாகவே நமதுள்ளம் இரக்கத்தினால் கரைந்துறுகின்றது. இந்த வியாகுலமும் மன்றி அவளுக்கிருந்த இன்னொரு வியாகுலமேதெனில், தன் குமாரன் துன்மார்க்கத்தில் சீவித்து தன்னுத்துமத்தைச் சேதப்படுத்திக்கொள்ளுகிறானென்பதுவேயாம். அந்தெறி கெட்ட குமாரன் சன்மார்க்கத்தில் வந்து சேர்ந்து, இரட்சண்ணியமடையவேண்டுமென்று அவனுக்காக ஜெபம் செய்து சுகித்தபமுயற்சிகளை ஒப்புக்கொடுப்பாள். மற்றப்படி, வேறு எதையும் அவளால் செய்ய மூடியவில்லை. ஆதலால் அகுஸ்தீனைத் தேவ பாரிசமாய்த் திருப்பவேண்டிய தேவாநுக்கிரகத்தை யடையும்படியாக, தனியாயிருந்து மவுனமாய் காப்பேனென்றும், உலகத்தார் கண்ணுக்கு முன்னேயவிட

அதிகமாய் மறைந்து ஜீவிப்பேனென்றும், ஏழை எளியவர்களுடைய நிர்ப்பாக்கிய கஷ்டங்களில் ஆறுதலாயிருப்பேனென்றும், எல்லாவற்றிற்கும் மேலாக சுத்த நேசத்துடனேயும், இருதய சம்பூரணத்துடனேயும் கர்த்தரை நேசித்துவருவேனென்றும் கெட்டி பிரதிக்ஞைசெய்து, அழுகைப் பிரலாபத்துடன் ஆண்டவரைப் பார்த்து ஜெபிப்பாள்.

அவள் எப்போதும் உலக காரியங்களே யிச்சித்தவளேயல்ல. அவைகள் விழலும் வீணுமென்று தன் வாலிப வயதில்முதலா யிகழ்ந்து தள்ளுவாள். ஆனால் இப்போதோவெனில், அவைகளே முற்றிலும் வெறுத்துத்தள்ளினாள். அர்ச். சின்னப்பர் குறித்துக்காட்டும் சரியான விதவைகளுக்கு ஆபரணமாகத் துலங்கும் பணிந்த குணம், திறந்த மனம், திறந்த ஒதிக்கம், என்னும் குணலட்சணங்களுக்கு, இவளது இருதயம் ஆலயமாய் விளங்கிவந்தது. அதிக கடினமான தவக் கிரியைகளைச் செய்வாள். அக்காலத்து கிறீஸ்துவர்கள் வெகு தைரியத்துடன் சரீர ஒறுத்தல் செய்துவந்தபோதிலும், இவள் அடிக்கடி ஒருசந்தி பிடித்து தன் தேகத்தை வெகுவாய் அடக்கி வாட்டிவந்தபடியால். தபமுயற்சியில் இவளுக்குச் சமானம் யாருமிருந்ததில்லை. திருநாள் தினங்களில் ஒருசந்தி பிடிக்காமல் சாப்பிட நேர்ந்தால், அப்போது சாதத்தைப் பார்த்ததும் பெரு மூச்சுவிட்டு, கசப்பான பானத்தை எவ்வளவு அரோசகத்துடனேயும் வெறுப்புடனேயும் ஒருவன் குடிப்பானே, அப்படியே கட்டாயத்திற்கு ஒரு கவளம் எடுத்துச் சாப்பிடுவாள். தனது குமாரனுடைய நீய நடத்தையைப்பற்றியும், கிறீஸ்துநாதருடைய பாடுகளைப்பற்றியும், ஓயாமல் சிந்தித்து மனமுருகுவாளாகையால், சாப்பிடும்போதுமுதலாய் அவளுக்குச் சந்துவஷ்டி கிடையாது. அவள் மலர்ந்த முகத்துடன், கனிந்த நேசம்பொருந்திய குளிர்ந்த வார்த்தையை. உபாய தந்திரம் ஒன்றுமின்றி நிஷ்கபடத்துடன் பேசுவாள். தாழ்மையே அவளது முக்கியமான அணிகலம். அவளுடைய சம்பாஷணையில், சேசுக்கிறீஸ்துநாதரின்மட்டில் அத்தியந்த பற்றுதலே மிகுதியாய் விளக்கும். அவளுடன் சம்பாஷித்தவர்கள் அவள் சொத்து வெகு நாளானபிறகு, அவளோடு தாங்கள் செய்த சம்பாஷணையை நினைவுகூர்ந்தபோது, அச்சம்பாஷணையில் அவளது ஆழ்ந்த விசுவாசத்தை விளக்கிக்காட்டாத எந்த வார்த்தையும் அவர்கள் நியாபகத்திற்கு வரவேயில்லை.

ஏழைகளே எப்போதும் உருக்கத்துடன் நேசிப்பாள். இது அவளது ஜீவியத்தின் அவியாத ஆசையென்றும், ஆழுத ஆவலென்றும் உண்மையாகவே சொல்லக்கூடும். எளிய வழிப்போக்கர்களைத் தன் வீட்டிற் கழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய கால்களைக் கழுவி அவர்களுக்குச் சிரத்தையுடன் போசனம் முதலியன சம்ரட்சணை செய்வதும், ஏழைகள் வசிக்கும்குடிசைகளுக்குப்போய் அவர்களுக்கு வேண்டிய அறுசுவை உண்டி உணவுகளைப் பரிமாறி அவர்களுள் வியாதியாயிருக்கிறவர்களுக்குப் பட்சபாதத்துடன் ஊழியம் செய்வதுமே, தன் சிறு பிராயத்திலிருந்து அவளுக்கிருந்த பெரும் பாக்கியமாம்.

ஈவிரக்கமில்லாத பத்ரீவியூஸுக்கு அவள் வாழ்க்கைப்பட்டபிறகு, இப்பிறநேக அக்கினிச்சுவாலையை, சற்று அடக்கவேண்டியிருந்தது. பிரவாகமாய்ப் பாய்ந்துவரும் நீர்த்தாரையை எவ்வளவுதான் அணைகட்டித் தடுத்தாலும், அதன் ஊற்று இருக்குமட்டும் அது முன்னேயவிட வேகமாய்ப் பொங்கிப் பெருகுவதுபோல், கர்த்தருடைய ஏழைகன்மட்டில் இவளுக்கிருந்த நேசத்திற்கு ஒரு தடையாயிருந்த கலியாண அந்தஸ்து ஒழிந்து விதவா அந்தஸ்து வரவே, அந்நேசமானது மட்டுமிதமின்றி அக்கினிமயமாய்ச் சுவாலைவிட்டெரிந்தது. ஏழைகளுக்குச் சாப்பாடு கொடுத்து சம்ரட்சணை செய்வதில்மாத்திரமே அவள் திருப்திகொண்டதில்லை; அவர்களைத் தூக்கி யெடுத்து, அவர்களுக்குப் பணிவிடை செய்யவேண்டுமென்றும் பேராவல்கொள்வாள். அவர்களுடைய இரணங்களுக்கு மருந்து பூசி, அவைகளை மெல்லிய துணியால் சுற்றி, வணக்கத்துடன் முத்தமிட்டு, தாரை தாரையாய்க் கண்ணீர் சிந்தி அழுவாள். இனியில்லாத உருக்க நேசத்தோடு அவர்களைப் பராமரித்து, அவர்களுக்குத் தொண்டுபுரிவாள். அவர்கள் அவளைத் தங்கள் தாயென்றுமாத்திரமல்ல, தங்கள் ஊழியக்காரியென்றும் அழைப்பார்கள். தாய் என்னும் பதம் அவளுடைய உருக்க நிறைந்த பிறநேகத்தைமாத்திரங் காட்டும். ஊழியக்காரி என்னும் பதமோவெனில், அவளது வீரத்துவமான் நேசத்தையும் ஆழ்ந்த தாழ்ச்சியையும் விளக்கமாய்க் காட்டினது.

ஆதாம் சென்ற் விக்டர் என்னும் பாடகர் அர்ச். மோனிக்கம்மாள்பேரில் கட்டிய கவியில் சொல்வது :—

வெண்பா.

"ஏழைகளேயே கிறீஸ்து சேசுநாதராகவுள் [யுடன்
மீழையதப் பாவித்துப் பின்னவர்க்குத்—தாழ்மை
தொண்டுசெய்தாள் நோயாளர் சூர்கெடப் பராமரித்
அண்டு தீனர்த்தா யெனப்பட்டான்". [தாள்

வியாதியஸ்தர்களுக்கு, அவர்களுடைய வீடுகளிலும் பிணியாளர் சாலையிலும் ஊழியம் செய்வதே அவளது மேலான பாக்கியம். அப்போது திருச்சபை ஸ்தாபித்திருந்த பிணியாளர் சாலைகளை அக்கியான உரோமர்கள் கண்டு, கிறீஸ்துவர்களுடைய பிறர் நிநேகம் எப்பேர்ப்பட்டதென்று வியப்படைவார்கள்.

இதுவே அப்பேர்ப்பட்டதென்றால், அழ்குள்ள வாலிப ஸ்திரீகள் தங்கள் உற்றூர் பெற்றூரைத் துறந்து, உலக சந்தோஷங்களை மறந்து, தரும கன்னியர் சபைகளில் சேர்ந்து, பிணியாளர் சாலைகளை காடி, அங்கு எவ்வித அரோசகமுமின்றி, வியாதியஸ்தர்களுக்குத் தொண்டுபுரிவது எப்பேர்ப்பட்ட அதிசயமான காரியம்! இதைப்பார்த்திருந்தால், அவ்வக்கியான இராச்சியத்தார் இன்னும் எவ்வளவு அதிகமாகப் பிரமித்திருக்கமாட்டார்கள். எண்ணத்தொலையாத அப்படிப்பட்ட கன்னியாஸ்திரீ சபைகள் அணியணியாக அப்போது ஸ்தாபகமடைந்திராவிடினும், பத்தியுள்ள ஸ்திரீகள், முக்கியமாய் விதவைகள், பிணியாளர் சாலைகளில் ஊழியஞ் செய்வார்கள். இவர்களுள் சிலர் பிணியாளர்களைத் தனியேவிடாமல், இரவிலும் பகலிலும், ஏமத்திலும் சாமத்திலும் எப்போதும் அவர்களோடுகூட அச்சாலைகளிலேயே தங்கியிருப்பார்கள். இச்சுகிர்த கிருத்தியத்தை அதி உற்சாகத்தோடும் ஞான வைராக்கியத்தோடும் செய்துவந்தவர்களுள் அர்ச். மோனிக்கம்மாளும் ஒருத்தி. இவ்விதமாய்த் தாரித்திரர் ரூபமாயிருக்கும் கிறீஸ்துநாதருக்கு ஊழியஞ் செய்வதே தனது பாக்கியம் என்றெண்ணி, வியாதியஸ்தர்களின் பக்கையருகில் வெகு நேரமட்டும் விழித்துக் காத்துக் கொண்டிருப்பாள்.

மாட்சிமைதங்கியதும், பேறுபலன் நிறைந்ததுமான இச்சுகிர்த கிருத்தியமுமன்றி, இன்னொரு சுகிர்த கிருத்தியத்தையும் அவள் செய்துவந்தாள். அக்காலத்தில் அக்கிருத்தியம் மெத்தவும் அவசரமாயிருந்தது; அதேதெனில், மரித்தவர்களை அடக்கஞ்செய்வதே. பிரேதக்களின் மட்டில் கிறீஸ்துவர்களுக்கு உருக்கமும் இரக்கமும் நிறைந்த விசயபக்தியை யுண்டாக்கும்படி, அக்காலத்தில் திருச்சபையானது வெகு ஊக்கத்துடன் பிரயாசைப்பட்டுவந்தது. இப்பிரயாசையின் பலனாக, நிறைந்த வசதியுடன் ஜீவித்து, சுகசெல்வ பாக்கியங்களைச் சுகித்து வரும் சீமாட்டிகள், தாரித்திரருடைய பிரேதங்களையும், அடிமைகளுடைய சவங்களையும்முதலாய் தங்கள் கைகளால் கழுவி யெடுத்து பரிமளம் நிறைந்த வஸ்திரங்களாலும், சில சமயங்களில் தங்களுடைய விலையுயர்ந்த பட்டாடைகளாலும் அவைகளைச் சுற்றி, அடக்கத்திற்கு மூஸ்திப்புச செய்வார்கள். இது மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட கன்மாதிரிகை தரும் விஷயமென்னலாகும். அர்ச். மோனிக்கம்மாளும் மேற்படி குலஸ்திரீகளைக் கண்டுபொறிக்கத் தொடங்கினாள். யாராவது ஒரு தாரித்திரன் இருந்தால், அவனைப் பட்ச நேசத்துடன் பராமரிப்பாள். அவன் செத்தபிறகு, அவனுடைய பிரேதத்தை அடக்கத்திற்கு மூஸ்திப்புச செய்யும்படியான பாக்கியத்தை யாருக்குவ கொடுக்கமாட்டாள். தானே அதைக்கழுவி, மூதாளு வஸ்திரத்தினால் சுற்றி, கல்லறைவரைக்கும் கூடப்போய் அடக்கஞ்செய்து, மரித்த ஆத்துமத்தின் இளைப்பாற்றிக்காக ஜெபஞ்செய்வாள். சேசுக்கிறீஸ்து நாதரைச் சிலுவையிலிருந்து இறக்கியபிறகு அவரை அடக்கத்திற்கு ஆயத்தஞ்செய்யும்படியான பாக்கியம் தனக்கில்லாதிருந்தபோதிலும், அவருடைய எளிய தாசர்களுள் ஒருவனுக்காவது அவ்விதஊழியஞ் செய்யக்கூடுமாயிருப்பதை நினைத்து மனோரம்மியங்கொள்ளுவாள்.

(இன்னும் வரும்.)

வெய்யிலிலே வைத்த மெழுகுருகும்போலும்
மெழுகிலுருதிரி யெரிய குறையும்போலும்
வையகத்திலுள்ள மனுவோர்கள் வாழ்நாள்
வரவரவே குறையுமிதை மனதிலெண்ணி
மையமருங் கண்ணுண்மேல் வைத்த காதல்
வானபரஞ் சோதியிடம் வைப்பீராகில்
உய்யலாகதியி லிருப்போர்களோடு
ஊழியோ ழேயிருந்துய்வோம் நாமே.

சீக்கிரம் சாவதே நன்மை. கெட்டவர்கள் பூமியிற் ஜீவித்து அதிக குற்றவாளிகளாவதைப் பார்க்க இறப்பது அவர்கட்கு நன்று.

—(அர்ச். அமிர்தநாதர்).

MADIYEENI.

மதியீனி

அல்லது

'தன் வினை தன்னைச் சுடும்.'

(முன் தொடர்ச்சி.)

தாசில்தாருக்கு நாளுக்கு நாள் கற்சுகம் வந்து கொண்டேயிருந்தது. ஆபத்து அடித்து நிற்கிற தென்பதை யொருவரும் எண்ணவில்லை. வியாதி கொடுமையாயிருந்தசமயத்தில் அவர் பிழைப்பதையிட்டு சந்தேகப்பட்டவர் பலர். ஆனால் இப்போது எல்லோரும் முழு நம்பிக்கையாயிருந்தனர். நாள் முழுதும் தாசில்தார் நன்றாகப் பேசியிருந்தார். அவர் பலவீனமாயிருந்தாரேயொழிய வியாதியொன்றுமில்லை. ஆகையால் எல்லோருங் கவலையற்றிருந்தார்கள்.

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட்டொன்றுமன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும் எனையாளு மீசன் செயல்."

மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வம் மற்றொன்று நினைக்கு மென்பது உண்மையான சுலோகம். இரவு சாப்பிட்டுவிட்டு நித்திரை கொண்டார். அப்படியே வீட்டில் எல்லோருக்கும் அயர்ந்த நித்திரை. ஆ, ஊ என்று ஒலமிட்ட சத்தங் கேட்கப்பட்டது. மணி நான்கு விடியற் காலம். சத்தமிட்டவர் தாசில்தார். அவஸ்தையினால் அப்படிச் செய்தார். எல்லோருக்கும் கல்லதுக்கமானதால் யாருக்குங் கேட்கவில்லை சத்தம். கடைசியாக இராஜமணிகாதுக் கெட்டியது. மாமனார் கூவுகிறானெக்கண்டு, எழுந்து அவர் படுக்கையண்டை ஓடினான்.

இராஜ.—மாமா! உங்களுக் கென்னசெய்கிறது? தூக்கம் வரவில்லையா?

தாசில்.—அப்பா! அவஸ்தையாயிருக்கிறது! உயிர்போகிறது! சுவாமியாரைக் கூப்பிடச்சொல்லு.

இதற்குள்ளாக மற்றவர்களும் எழுந்துவிட்டார்கள். அவர் நிலைமையைக் கண்டார்கள். அதிக அவஸ்தையெனக் கொண்டார்கள். உடனே சுவாமியாரையும், டாக்டரையுமழைத்துவர ஆள் போயிற்று. சுவாமியார் அந்தக்ஷணமே ஓடிவந்தார். பார்த்தார் தாசில்தாரை. அவஸ்தையினால் உளறிக்கொண்டிருக்கிறார். அடிக்கடி அவர் வாயினின்று 'சேசுவே! சேசுவே' என்னும் பதமேவந்தது. குருவானவர் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதமளித்தார். தலைமாட்டில் நின்று, மரிப்போருக்குரிய ஜெபத்தைச் சொல்லுகிறார். உறவின்முறையாரெல்லோரும் புடைசூழ நின்று செபிக்கிறார்கள். கழுத்தில் உத்தரியமிருக்கிறது. கையில் பாபெட்ட சுரூபமிருக்கிறது. அதை யடிக்கடி ஒருவரெடுத்து முத்தி செய்யக் கொடுக்கிறார். ஜெபமாலை அவரது நெஞ்சின்மேலிருக்கிறது. மந்திரித்த வத்தி கொளுத்தப்பட்டு பக்கத்திலிருக்கிறது. அவர் சேசுவே என்று உச்சரித்தவண்ணமேயிருக்கிறார். குருவானவர் வியாதியஸ்தனின் தலையை மெதுவாகத் தூக்கி 'செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்படுகிறீரா?' என்று சொல்லும் போது "சேசு மரியே சூசை என்னை இரட்சியுங்கள்" எனுஞ் சுகித்த மொழிகளைச் சொன்ன வண்ணமே, சுவாமியாரின் கரங்களிலே உயிர் துறந்தார். எக இறைச்சல்; எல்லோரும் அழுது புரளுகிறார்கள். அப்போதுதான் டாக்டர் வந்தார். சடலத்தை அங்குமிங்கும் தொட்டுத் தொட்டுப்பார்த்தார். உயிர் போய்விட்டதென்றார். இது அவருக்கிருந்த இருதய வியாதியின் குணம். அதனுற்றான் திடீரென மரணமாயினர் என விளம்பியபின் வெளியேகிவிட்டார். குருவானவர் இருந்தவர்களுக்கு ஆறுதலான வார்த்தை உரைத்துவிட்டு, கோவிலுக்குப்போய் திவ்ய பூசை பண்ண கோமாகிவிட்டபடியால் விரைந்துசென்றார். வழியில் பார்த்தார் பெரியம்மாளை; கொண்டார் துயரம். "எல்லாம் முடிந்துபோய்விட்டது. தாசில்தார் இறந்து போனார். அங்கேயிருந்துதான் வருகிறேன். நல்ல மரணம். நல்லகாலம் நீங்கள் வந்துவிட்டீர்கள்" எனச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து நடந்தார். இவர்கள் ஓடி ஓடி வருகிறார்கள். இல்லம் நெருங்கிவிட்டது. வாயலண்டை வந்துவிட்டார்கள். வீட்டினுள் கூச்சலும் இறைச்சலும், அழுகையும் பிரலாபமும். உள்ளே போனதுந் தாயும் மகளும் தாசில்தாரின் சடலத்தின்மேல் விழுந்து அலறி அலறி அழுதார்கள். சிந்தின கண்ணீருக்குக் கரையில்லை. அவர்களுக்குண்டான ஆறுத்துயரின் அளவை

எடுத்துரைக்குத்தரமன்று. வாசிப்பவர்களே யறிந்துகொள்ளலாம்.

அன்று சாயரட்சையே சேமக்கிரிகைகளெல்லாம் நடைபெற்றன. ஊரிலுள்ள ஜனங்கள் திரன்திரனாய் வந்து கூடி,, திருச்சபைச் சடங்குகளெல்லாஞ் சரிவர நிறைவேற, சடலத்தைப் பூமிதானஞ்செய்தார்கள். உத்தமர் போய்விட்டாரென உரையாதவரில்லை. தர்மவானன் துயின்றுவிட்டாரெனச் சொல்லாதாரில்லை. இப்பேர்ப்பட்ட மகாராஜனை யெப்போது பார்ப்போமென ஏங்காதாரில்லை. மரம் எப்பக்கஞ் சாய்ந்திருக்குமோ அப்பக்கமே வெட்டுண்டால் விழும். ஜீவியம் எப்படியே அப்படியே மரணம் என்பது உண்மை. அதற்கிவர் ஓர் உதாரணம். உத்தமனாய் சிறுபருதல் ஜீவித்துவந்ததால் மரண நேரத்தில் பயமின்றி, தன் எஜமானனிடம் தன் கணக்குகளை ஒப்புவிக்கப் பயணமானார். அவர் இந்நல்லூழியனுக்குச் சம்பாவனை யளிப்பாரென்பதிற் கையமில்லை.

"மலர்மிசை யேகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்" என் பதற்குத் தாசில்தார் ஓர் சான்று என்று குருவானவர் கூடியிருந்தவர்களுக்குச் சொன்னார்.

தாசில்தார் போகவும், அவர் வீட்டில் சந்தோஷமே கிடையாது. பணச் செல்வமிருந்தும், மனச் செல்வமில்லை. துன்பம் ஒன்றின் பின் ஒன்றாக ஓடிவந்தது. குடும்பத்தைத் துயரக்கடலில் ஆழ்த்தினது. மழை முகங் காணாத பயிர்போல வாடி நின்றார்கள். நெருங்கின பக்கத்தாரையெல்லாம் அங்கேயே சில நாள் இருக்கக் கேட்டுக்கொண்டாள் பெரியம்மாள். அப்படியே அவர்களுஞ் சம்மதித்தார்கள்.

தாசில்தார் மரித்து மூன்று மாதகாலமாயிற்று. கவலையோ சற்றும் குறையவில்லை. எல்லாந் தெய்வச் செயல். 'மன்னன் சொல்லுக்கு மறு சொல் உண்டா' 'திரு வாக்குக் கெதிர் வாக்குண்டா' வென உன்னிப் பொறுமையாயிருந்தார்கள் எல்லோரும். பெரியம்மாளிருதயத்தில்மட்டும், பற்பல எண்ணங்கள் காற்றப்போல் மாறிமாறி வீசிக்கொண்டிருந்தன. "ஒரு சமயத்தில் எல்லாங் கடவுள் சித்தமென்று தலைசாய்த்துத் துதிப்பாள். மறு சமயத்தில், இவ்வளவு துன்பத்தை யனுப்பினாரே, காரணந் தானதர்மஞ் செய்யவில்லையா? கோவிலுக்குக் காணிக்கைகள் கொடுக்கவில்லையா? யாருக்கு அநியாயஞ் செய்தோம்? எவர் குடியைக் கெடுத்தோம்? எப்பொருள்களை யபகரித்தோம்? ஒன்றுமில்லையே! அப்படியிருக்க, சகிக்கவொண்ணாச் சஞ்சலத்தை யனுப்பினாரே எங்களுக்கு. இது தகுமா? இது நீதியா? கண்ணில்லையா அந்தக் கடவுளுக்கு? இரக்கமில்லையா அந்த ஈசனுக்கு?" என முறையிடுவாள். இதைக் கேட்ட ஆரோக்கியமரி தனது தாய்க்கு, தன் புருஷன் புகட்டிய நற்புத்தியை சமயோசித மாய்ச் சொல்லிக்காட்டினாள். அவளுக்கும் புத்தி தெளிந்தது. 'பிறந்தபின் இறப்பது நிச்சயம்.' ஆகையால், நாம் வீணாகச் சர்வேஸ்வரனை நொந்து பேசாது, அவர் சித்தத்துக்கிசைந்து நடப்பதே உசிதம் என்றெண்ணிக் காலங்கழித்துவந்தாள். ஆயினும் மனதிற்கு முழுச் சமாதானமில்லை. அஞ்ஞானப் புரோகிதர்களெல்லாரும்வந்து, அப்படிச் செய்வோம், இப்படிச் செய்வோமென்று காசுதட்டிப்போனதை நினைக்கையில் ஒரு பக்கத்தில் வெட்கமும், மறு பக்கத்தில் கோபமும் உண்டானது. 'கடவுளுக்குத் துரோகஞ் செய்தேனே' எனக் கவலைகொள்வாள். 'வீணாக அந்தப் படுபாவிப் பயல்களுக்குப் பணத்தைத் தட்டிக் கொடுத்தேனே' என்று தன்னைத்தானே நிந்தித்துக்கொள்வாள். அவர்கள் அவளை நன்கு ஏமாற்றிப்போனார்களென்பது இப்போதுதான் அவளுக்கு வெளிப்படையாயிற்று.

இப்படியிருக்கையில், ஒரு நான்-மாலையில், மடப்பளியின் முன்னிருந்த முற்றத்தில் இராஜமணி, ஆரோக்கியமரி, பெரியம்மாள் மூவருமிருந்து சமயலுக்குவேண்டியகறிபதார்த்தங்களைச் சரிபண்ணிக்கொண்டிருக்கிறார்கள். வேலைக்காரி அறையைப் பெருக்கிக்கொண்டிருக்கிறாள். மூலையில் சாம்பரில் மறைத்துவிடாத ஓர் வஸ்துவை யெடுத்தான். அதை உற்றுப்பார்த்தாள். "இங்கே ஒரு தாயித்து கிடக்கு" என்று கத்தினாள். "அதுதான் நான் அடுப்பிலே கொண்டு போய்ப் போட்டதுபோலயிருக்கு" என்றாள் இராஜமணி. "அது பொன் தாயித்து 7, 8-ரூபாய் பெறும், இங்கே கொண்டுவா" எனக் கூவினாள் பெரியம்மாள். இராஜமணி உற்றுப் பார்த்து "இது பொன்னு? இல்லை. பித்தளைத் தாயித்து" என்றாள்.

"பித்தளையா! உனக்குத் தெரியாது, இங்கே கொடு" எனப் பிடுங்கிக்கொண்டனள் தாசில்தார் மனைவி.

"பித்தலேயென்று சொல்லவேண்டுமா—அதற்குச் சந்தேகமா? (பெரியம்மாள் அதைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது) நீங்கள் இதைப் பொன்னென்று விலைகொடுத்து வாங்கினீர்களோ அத்தை!" என வினவினாள் சிறுமி. இதைக் கேட்கவும் பெரியம்மாளுக்கு முகம் வெளுத்தது. வெட்கம் பிறந்தது. இராஜ மணிக்கு இதைக் கண்டறிய அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆகவே, அந்தச் சமாச்சாரத்தை யங்கேயே நிறுத்திவிட்டு கறிபதார்த்தங்களைக் கவனிக்கலானாள்.

சூரியன் அஸ்தமனமாகிவிட்டான். இருள் எங்கும் பரவி நிற்கிறது. இல்லங்களில் தீப மேற்றுகிறார்கள். ஜனங்கள் கூட்டங்கூட்டமாய்ப் போகிறார்கள். வேலைவிட்டு வீடுசெல்லுகிறார்கள். அலுத்துவந்த அகமுடையானுக்குப் பாரியாள் பணிசெய்து போஜனம் படைக்கிறாள் ஒரு வீட்டில். வந்த கணவனை உபசரியாது, வாயால் கண்டனஞ்செய்கிறாள் இன்னொருத்தி. இக்கணவன்தான் தாசில்தார் மனைவியை எமாற்றின. ஐயர். பாவம்! அவர் என்னசெய்வார். பூசாரி வேலைசெய்து, புரோஹிதப் புராணங்கள் கூறிக் காசுபறிக்க முயன்றும், ஒன்றுங் கைகூடவில்லை. வேலை செய்ய பலமில்லையாம். பிச்சை யெடுக்க வெட்கமாம். பேதையர்களை எமாற்றிக் கொள்ளையடிப்பது சிலாக்கியமாம். ஊரெல்லாஞ் சுற்றியும் ஒரு தம்மிடியுமகப்படவில்லை. இதற்குமுன் கொண்டுவந்ததெல்லாஞ் செலவாகிவிட்டது. இரண்டு நாள் கடன் வாங்கிச் சாப்பாடு செய்தாள். கடைசியாகப் பட்டினி போட்டாள். பார்ப்பான் பணங்கொண்டுவரு வான் எனும் கருத்தோடு ஐயரை வயிறு வற்ற வைத்துவிட்டாள். அவர் பசி பொறுக்காது "என்னடி இன்றைக்கு ஒன்றுங் கொடுக்கிறு யில்லே" என முறையிட்டார்.

மனைவி.—ஏது! இங்கே வீணாயிதா உனக்குத் தாரைவார்த்துக்கொண்டிருக்க? எங்கேயா வதுபோய் கொண்டுவருகிறதுதானே?

ஐயர்.—என்னடி செய்வேன்? மூதேவி வந்திருக்கிறாள். எங்கே போனாலும் என் ஜாலம் பலிக்கிறதில்லையே.

மனைவி.—என் தாசில்தார் வீட்டுக்குப் போகப்படாதா?

ஐயர்.—ஐயோ! அவர் இறந்துவிட்டாரே. என் வாயிலே மண் விழுந்தது.

மனைவி.—அந்தக் கிழவியை எமாற்றத் தெரியாதா?

ஐயர்.—அதெப்படி? என் பூசையெல்லாம் பலிக்கவில்லையென்று எல்லோருக்கும் வெளிப் படையாயிற்று. இனிமேல் எப்படி அங்கே கால்வைக்கிறது? தாசில்தார் மகள் வந்திருக்கிறாள். அவள் எல்லோரையும் விழுங்கிவிடுவாள். இந்தப் பருப்பெல்லாம் இனிமேலங்கேவேகாது.

மனைவி.—எதாகிலும் ஒரு கட்டுக்கதையை எட்டிப்பிடித்துக்கொண்டுபோய் பணத்தைத் தட்டிக்கொண்டுவருகிறதுதானே?

ஐயர்.—எனக்கொன்றுந் தெரியவில்லை நீதான் ஒன்றுசொல்லிக்கொடேன் பார்ப்போம்.

மனைவி.—சரி! நான் சொல்லுகிறுப்போல் செய்யும். நமக்கு லாபமுண்டு.

இச்சமயத்தில் ஐயருடைய சிநேகிதர் ஒருவர் வந்தார். ஆகையால் உள்ளே புகுந்தனள்.

உதயநேரம் மணி ஆறு. தாசில்தார் மனைவியும் மகளும் கோவிலுக்குப்போக உடையுடுத்திக்கொண்டிருக்கிறார்கள். வீதியில் குறி சொல்லுங் கோணங்கிக்காரன் ஒருவன் குடுகுடு எனக் கொட்டிக்கொண்டு பலபல சாதகங்களைச் சொல்லிவருகிறான். இவர்களிருவரும் வாசல் கதவைத் திறந்து வெளியேகப்போகிறார்கள். அவனும் வாசல் எதிரேவந்து நின்றான். "இங்கே ஒரு சனியன் இருக்கிறான். துஷ்பந் தொலையாதிருக்கிறது. சனியன் தொலைந்தால் துன்பம்போகும்" என்று சொன்னான். இதைக் கேட்டு பயங்கொண்டாள் பெரியம்மாள். அஞ்ஞானக் காரியம் அபத்தம். அது தேவதுரோகம். அதை நம்பப்படாதென்று மனச்சாட்சி யொரு பக்கத்தில் வற்புறுத்திக்கூறுகிறது. மறு பக்கத்தில் அவன் சொன்ன சனியன் என்ன செய்யுமோ எது செய்யுமோவென்று மனம் பதறுகிறது. உடல் துடிக்கிறது. "அந்தச் சனியனை ஓட்டமுடியுமா" என்றாள்.

கோணங்கி.—ஓ! அது செய்துபோடலாம். எத்தனையோ வீடுகளில் நான் செய்திருக்கிறேன். அவனைப் பிடித்து உங்கள் வீட்டு முற்றத்திலேயே ஆணி யறைந்து அமுக்கிப்போடலாம்.

பெரி.—எங்கள் வீட்டிலேயே செய்வாயா?

இதைச் செவியுற்ற ஆரோக்கியமரிக்கு மனம் அரோசகமாயிற்று. உடனே "அம்மா! இவனோடு நீங்கள் பேசாதேயுங்கள். அஞ்ஞானக் காரியங்களில் தலைப்பட்டு இதுவரையுங் கொண்ட கவலை போதாதா? உங்களை எமாற்றின பிராமணனைப்போலத்தான் இவனும் எமாற்றுவான். அவன் பேச்சை நம்பாதேயுங்கள்" என்று தாயைப்பார்த்துச் செப்பினள் அப்புண்ணிய மாது. "அப்பா! நீ வந்த பாதையைப் பார்த்துப்போகலாம், சனியனிருந்தால் இருக்கட்டும். காங்கள் உன்னிடத்தில் புத்தி கேட்கவில்லை" என்று கோணங்கிக்கு இயம்பினள். அவன், எது இன்னுங் கொஞ்ச நேரம் நின்றால் இனங் கண்டுபிடித்துக்கொள்வார்கள். கடைசியில் நமக்கே வினைவரும்; ஓடிப்போவதே நலமென்றெண்ணி கம்பி நீட்டிவிட்டான். இவன்தான் பெரியம்மாளை இதுவரையுஞ் எமாற்றின ஐயர். நேற்றிரவு பெண்சாதி ஓதியபோசனையினால் மாறுவேடம் பூண்டு பணம் பறிக்கவந்தான். அது பலிக்கவில்லை. அவனுக்கே கேடு வரக்கூடுமெனக்கண்டு, "கிணறு வெட்ட பூதம் புறப்பட்டாற்போலும்' 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது 'போலும் இருக்கிறது. இனி நாம் இங்கு நின்றால் குடிகெட்டுப்போம்" என வந்தவழியே திரும்பினான்.

அவன் போகவே, தாயும் மகளும் கோவிலை நோக்கிச் செல்லுகிறார்கள். காய்க்கோ 'சனியன்' நினைவு போகவில்லை. "ஆரோக்கியமரி! சனியன் இருக்கிறான் என்று சொன்னானே. அது நிசமாயிருந்தால் இன்னும் என்னென்ன துன்பங்களெல்லாம் வருமோ?"

ஆரோக்.—என்ன பேசுகிறீர்கள் நீங்கள்? அந்த அஞ்ஞானிப் பயல் சொன்னதை நம்பி மனங்கலங்குகிறதா? கடவுளுக்குச் சித்தமானால் நமக்கு வருகிறது வந்தே தீரும். இந்தப் புரோகிதர்களுடைய பேச்சை நம்பலாமா? அதைக் கேட்பதே பாவம். இதற்காகக் கடவுள் நம்மைத் தண்டிப்பார். இதுவரையில் நமக்கு நேரிட்ட துன்பங்களுக்கெல்லாம், உங்களது அஞ்ஞானக் காரியங்களே காரணமென்பது உண்மை. அதெல்லாங் கடவுளுடைய சாபம். இந்த உலகத்திலேயே இந்த ஆக்கினையென்றால் மறு உலகத்தில் என்ன கிடைக்குமோ? இந்த அநாச்சாரங்களை அறவே விட்டு விலகிக் கடவுள் ஒருவரையே நிதமும் துதிப்போமாக.

பெரி.—தோன் சுவாமியார்மாதிரி பிரசங்கஞ் சொல்லுவாயே.

ஆரோக்.—என்! நான் சொல்லுகிறது பொய்யா?

பெரி.—நிஜந்தான். இனிமேல் அந்த அஞ்ஞானக் காரியமெல்லாஞ் செய்யக்கூடாது. திருட்டுப் பயல்களெல்லாம் எவ்வளவு பணத்தைப் பறித்துக்கொண்டுபோய்விட்டார்கள்.

கோவில் நெருங்கினதும், உள்ளே போய் ஆராதனை செலுத்திப் பூசைகாண்கிறார்கள். பெரியம்மாளின் இருதயத்தில் அமைதியில்லை. 'தன வினை தன்னைச் சுடும்' என்பது பொய்யாகாது. 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்கும்' என்பது வாஸ்தவம். "கடவுளுக்குத் துரோகஞ் செய்தேனே" என்று மெண்ணம் அவள் மனதை வாட்டினது. "கடவுளுடைய சாபந்தான் நமக்கிவ்வளவு துன்பத்தை மூட்டினது" என்பாள். "கடவுளது கருணையை நம்பாது பேயை நம்பினேனே. ஆ! கானல்லோ 'மதியீனி'" எனப் பரிதாபப்பட்டான். மனம் நொந்தாள். கண்ணீர் சொரிந்தான். நல்ல பாவசங்கீர்த்தனம்பண்ணினாள். உறுதியான பிரதிக்ஞைசெய்தாள். அன்றுமுதல் அஞ்ஞானக் காரியங்களைக் கனவிலேயுஞ் சிந்திக்கவில்லை.

இது நடந்த பத்து வருஷத்திற்குப்பின் ஆரோக்கியமரியை விசாரித்ததற்கு, தனது தாயார், தான் செய்த பிரதிக்ஞையை உடைக்கவில்லையென்று சாட்சி பகர்ந்தனள்.

முற்றிற்று

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். நிருப நேயர்கள் தங்கள் நிருபங்களை மிக விரிவாய் எழுதிவிடுகிறார்கள். இடம் போதாமையால் அவைகளை ஒருவாறு குறைக்கவும், அல்லது முழுதுமே விலக்கவும் அவசியம் நேரிடுகிறது. நேயர்கள் இதைக் கவனித்துத் தங்கள் கடிதங்களைக் கூடியவரையில் சுருக்கி எழுத வேண்டுமெனக் கோருகிறேம். ப—ர்.]

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கம்.

I

கான் கடந்த மே மாதத்திலும் ஜூலை மாதத்திலும் எழுதிய கடிதங்களின் நியாயங்களையும்

அவைகட்கு ஆதாரமான குறைபாடுகளையும் கடைசியாக மணப்பாடு க. ஏ. சி. நண்பர் கண்டு பிடித்ததாக ஆகஸ்டு மாதம் அவர் எழுதிப் பிரசுரித்த கடிதத்தினால் தெரியவந்தது. "இந்திய கிறீஸ்துவர்களுக்குள் எத்தகைய குற்றத்தினாலேயோ ஜனாசார சங்க விஷயமாய் (Social Intercourse) ஏற்பட்டுள்ள பிரிவினைகளை யொழித்து" என்று அக்கடிதத்தை முடிக்கிறார். இதனால் ஜாதிக் கிறீஸ்துவர்களுக்கும் இந்திய கிறீஸ்துவர்களுக்கும், "Social Intercourse" என்ற பொதுக் காரியத்திலும் கலப்பில்லையென்பது தெளிவாயிற்று. பிறசிநேகம் விளங்கவேண்டிய கோவில்களிலேமுதலாய் ஒருவர் ஒருவரை நிராகரித்தும், வெறுத்தும் அல்லது அவரவர்கள்பாட்டைப் பார்த்துக்கொண்டும் போவார்கள். உத்தியோகசாலைகளிலும் மற்றும் பொது ஸ்தலங்களிலும் பரஸ்பர பட்சமும், திருச்சபை என்னும் ஒரே தாய்க்குப் பிறந்த மக்கள் என்னும் பாசமும் அல்லது கிறீஸ்துவ பிறசினேகத்தை ஆதாரமாகக்கொண்டிருக்கும் தயாளமும் கிடையா. குடும்ப சுப அசுப காரியங்களில்முதலாய் ஒருவர் ஒருவரை அவரவர்கள் அந்தஸ்தை அநுசரித்து வரவழைப்பதும் உபசரிப்பதும் கிடையா. ஜாதிக் கிறீஸ்துவர்கள் தங்கள் அந்தஸ்திற்குக் கீழ்ப்பட்ட அக்கியானிகளை அழைத்தாலும் அழைப்பார்களேயொழிய, தங்கள் அந்தஸ்திற்கு மேற்பட்ட இந்திய கிறீஸ்துவர்களைமுதலாய் அழைக்கவேமாட்டார்கள். அக்கியானிகள் இந்திய கிறீஸ்துவர்கள்மட்டில் காட்டும் நேசபாசத்தைமுதலாய் ஜாதிக் கிறீஸ்துவர்கள் காட்டமாட்டார்கள்.

இரு கட்சியாரின் காரியாதிகள் இப்படியிருக்க, தெ. இ. க. சங்கம். தனது 22-வருஷ கால சீவியத்தில் இக்காரியாதிகளை நிவர்த்திக்க ஒரு முயற்சியும் செய்யாதிருக்க, திடீரென்று அனைவரும் அச்சங்கத்தில் சேர்ந்துவிட்டால் ஒரு கட்சியாருக்கு மறு கட்சியார்மட்டில் தயாளமும், மறு கட்சியாருக்கு அக்கட்சியார்மட்டில் நம்பிக்கையும் உடனே எப்படி யுண்டாகும்? அறையில் ஆடியல்லவோ அம்பலத்தில் ஆட வேண்டும். வெல்லம் இருந்தால் ஈ சேரும், பசை இருந்தால் ஒட்டும். "ஐக்கியம்" "ஐக்கியம்" என மேற்பேச்சினால் பயனில்லை. மற்றப்படி மனமடிவும் குழப்பமேயுண்டாகும்.

இக்காரணத்தைப் பற்றித்தான் நான் சொல்லிவருவது. அவரவர்கள் தனிச் சங்கம் நடத்திவர, நாளாவட்டத்தில் ஒருத்தருக்கொருத்தர் பரஸ்பர இரக்கம், அன்பு ஏற்பட ஒற்றுமைக்கு வழியுண்டாகும் என்பது.

தெ. இ. க. சங்கம் தனது 22-வருஷ காலத்தில் செய்த காரியங்களை நமது நண்பர் விவரிக்கவில்லை. மேலும் இழிகுலத்தாருக்கு வேதம் போதித்து, தீட்சை கொடுக்கும் விஷயத்தில் இவர் பேசும் வகையைப்பற்றிப் பரிதவிக்கிறேன். அவ்வளவு தூரம் என்?.....மேற்றிராசனத்தில். வேதத்திற்குட்பட மனது காட்டிய தாழ்ந்த ஜாதியாரை ஏற்றுக்கொள்ள, உலக காரணங்களை முன்னிட்டு முன்பின் பார்த்ததைப்பற்றி, புரொட்டெஸ்டாண்டார் அவர்களையெல்லாம் தங்கள் சபைக்குட்படுத்தியதை இவர் அறியார்போலும். ஜாதிக் கிறீஸ்துவர்கள் தெ. இ. க. சங்கத்தில் சேர்ந்து அதில் காரிய கிர்வாகிகளா யிருப்பதினாலன்று, ஆனால் அச்சங்கத்தில் (Caste Spirit) ஜாதி இயக்கம் இருக்குந்தனையும் அதில் சேருவதில் காரியமில்லை என்கிறேன். நமது நண்பர் இந்திய குருக்களை இங்கு இழுத்துப்போட்டு, அவர்களையும் ஜாதிக் கிறீஸ்துவர்களுக் கொப்பிடுவதைப் பார்க்க எனக்கே ஆச்சரியமாயிருக்கின்றது. யாரை யாருடன் ஒப்பிடுவது?

"தானே பழுக்கவேண்டிய பழத்தைத் தடி கொண்டடித்துச் சிதைத்தவன் சீலமாய் காலந்தானே குணப்படுத்தும் ஜாதி விகற்பத்தை இவர் இச்சணமே நிறுத்தப்பார்ப்பது சாத்தியமாமா?" இது சத்தியமான பேச்சு; சாத்தியமேயல்ல. சாத்தியம்போல பேசுவது நமது நண்பரோ நானோ? என் வியாசங்களைத் திரும்பத் தயவுசெய்து படித்துப்பார்ப்பாரேயானால். இந்திய கிறீஸ்துவர்கள் தற்கால நிலைமையில், தங்கள் மட்டில் இரக்கமற்றவர்களிடம்போய் அவமானமடைவதைவிட, தங்கள்பாட்டைப் பார்த்துக் கொண்டு 'சுய முயற்சியே சிறந்த சகாயம்' என்னும் ஆங்கிலேய பழமொழியை யநுசரித்து, தங்கள் முன்னேற்றத்தைப்பற்றி உழைத்து வந்து, நாளாவட்டத்தில் கடவுளுக்குச் சித்தமாகும் நாளில், சகல காரியங்களும் ஒழுங்குபடும் காலத்தில் ஐக்கியத்திற்கு வழியுண்டாகும். நமது நண்பர்தான் நாளையாவதை இன்றே முடிக்கவேண்டுமென்கிறார். அஸ்திவாரமெங்கே! எந்தக் காரியத்தைப்பற்றிப் பேசினாலும் உண்மையையும் அநுபோகத்தையும் அநுசரித்துப் பேசவேண்டும். உண்மையாய் காரியங்கள் எந்த நிலைமையிலிருக்கின்றதோ அந்த நிலைமையை ஆதாரமாக வைத்துக்கொண்டு, நியாயம் பேசி, அந்நிலைமைக்குத்தக்க நிலைமையாயில்லாவிட்டால், அதைத் திருத்தவேண்டிய வழிபாடுகளை மேற்கட்டிலல்ல, ஆனால் அஸ்திவாரத்தில் தொடங்கவேண்டும்.

மற்றப்படி காரியங்கள் தற்காலம் இருக்கிற நிலையைவிட்டு இருக்கவேண்டிய அதாவது இல்லாத நிலைமையை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசுவதினால் என்ன பயன்?

எதிரொலி

II

சங். பத்திராதிபரே,

மணப்பாடு "க. ஏ. சி." என்னும் நண்பர் எனது வியாசத்திற்கு பதில் எழுதியிருந்ததைச் சென்ற ஆகஸ்டுமீ சஞ்சிகையில் வாசித்தேன். அதில் அவர்:

1. "கண்டது விண்டோன்" என்னும் நண்பர் சென்ற ஜூலைமீ சஞ்சிகையில் "தீண்டப்படாதார் என்னப்படும் கத்தோலிக்கரிலும் சிலர் குருக்களாகியும், போர்டிங்குகளில் படிக்கிறதையும் எழுதியிருப்பதைக் கவனித்திருப்பாரானால், தாம் கூறிவிட்டது பரபரப்பேயன்றி உண்மையல்ல என்பதை உணர்ந்திருப்பா" ரென்கிறார். என் வியாசமும் "கண்டது விண்டோன்" என்பவர் வியாசமும் ஒரே சஞ்சிகையில் வெளிப்படுத்தியிருக்க எப்படி யான் வாசிக்கமுடியும் என்பதை கவனியாமல் எழுதினது இவர் பரபரப்பே. அப்படி யோர் குருவானவர் உண்டென்பதைக் கண்ணால் கண்டதுமில்லை. காதினால் கேட்டதுமில்லை. இது அந்தரங்கமாய் இருந்தாலும் இருக்கலாமோ அறியேன். அப்படி இருந்தால் வெகு நன்மையே. சில வேளை அக்குருவானவரும், சில பேதைகள் கல்வி நாகரீகமடைந்தவுடன் மேனாட்டார்போலும், ஜாதி அனுசரிக்கும் மேன். குலத்தான்போலும், தன் இனத்தினரையும உறவினரையுங் கவனியாது நடிப்பதுபோல் நடிக்கின்றனரோ அறிகிலேன்.

2. பொது ஸ்தாபனமாகிய தெ. இ. க. சங்கத்தில் சேரப் பின்னிடைந்தோமென்கிறார். பின்னிட்டது கிடையவேகிடையாது. யானும், திருச்சி ஆரோக்கியமாதாக் கோவில் செய்ண்ட் மேரீஸ் ரீடிங் கிளப் செக்ரட்டெரியரான மிஸ்டர் ஜெ. பி. ஆரோக்கியசாமியும் இன்னும் சில மெம்பர்களும், திருச்சி மார்னிங் ஸ்டார் மானேஜரும் தெ. இ. க. சங்கத்தில் ஊக்கமும் உழைப்புமுள்ள பிரதம மெம்பருமானவர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் முதலில் திருச்சி. தெ. இ. க. கிளைச் சங்கத்தில் கேட்டும் இடமில்லை என்றமையால் ஷை மெம்பரிடமே நாங்கள் சென்று சென்னை தெ. இ. க. தலைமைச் சங்கத்தில் சேர்க்கக் கோரி. முதலில் யானும் ஷை கிளப் செக்ரட்டெரியும் பிரவேசக் கட்டணம் ரூ 1. கொடுத்தோம் (தலைக்கு எட்டணா வீதம்) மாதமாதம் போய் எங்கள் பெயர் தாக்கலாய் விட்டதாவென்று கேட்டுவந்தோம். கடைசியாய் அங்கேயும் இடமில்லையென அவரே பணத்தை வாபீஸ் செய்தார். அச்சமயம் தெ. இ. க. சங்கத்தில் காரியதரிசியாயிருந்தவர் ஹானரபிள் திவான் பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணு பிள்ளை அவர்களே. ஷை கனம் காரியதரிசி அவர்களையும் திருச்சி செய்ண்ட் மேரீஸ் ரீடிங் கிளப்புக்கு வரவழைத்து சகல குறைகளையும் சொல்லியிருக்கிறோம். இவைகளெல்லாம் நடந்தது 1913-ம் ஆண்டிலேயாம். இன்னும் தாட்சிகள் வேண்டுமோ?

3. பூர்வீக திராவிட கத்தோலிக்கரென்றதற்கு அதன் பொருள் விளங்கவில்லை என்கிறார். பூர்வத்தில் திராவிடரே தென்னிந்தியாவிற் குடியேறினவர்களென்றும், அவர்கள் பாஷைகட்குத் திராவிட பாஷையென்றும், அவர்கள் சந்ததியாரே இக்காலத்திலிருப்பவர்களென்றும். இவர்கள் ஒரே இனத்தவராயிருக்க, பின்வந்த ஆரியர் இவர்களை மயக்கி அவர்களுள் பல ஜாதிப் பிரிவினைகளை உண்டாக்கிப்போட்டார்களென்பதும் சரித்திர வாராய்ச்சி. ஆகையால்தான் நான் அந்நாமம்வைத்துக் கூப்பிட்டது என அறியவும்.

4. நண்பரே! நாம் இங்கு தெ. இ. க. சங்கத்தின் விகற்பங்களைப்பற்றியும், தாழ்ந்த வகுப்பினரெனப்படும் கத்தோலிக்கரை கல்வியிலும் மற்றக் காரியங்களிலும் முன்னேற்றாமலிருப்பது நமது கத்தோலிக்கு இந்தியர்க்கோர் குறைவென்பதைப்பற்றியும் உசாவுங்கால் குருமார்களை இடையில் இழுப்பது விவேகமன்று. விரோதத்துக் கிடமே. அவர்களென்றும் ஜனங்கட்குச் சகாயஞ் செய்ய முற்பட்டவர்களே. அவர்கள் நேரிலேயே சொல்வது என்னவென்றால், ஜனங்களுக்குள் எல்லாம் சீர்பட்டால் கோவிலும் மற்ற இடமும் சீர்பட்டுவிடுமென்பதே. யாங்களும் கோவில் முதலிய இடங்களில் செய்யப்படுங் காரியங்களைப்பற்றியும் விகற்பங்களைப்பற்றியும்

வினவினேமல்ல. என்? கற்றோர்கள் சேர்ந்த தெ. இ. க. சகசத்தார். போர்டிங், மடம், சபை இவைகளில் ஏனையோரைப்போல் சேர்க்க இவ் வேழைகட்கு மிடம் கொடுக்கக்கூடாது என பொர்சு செய்யக்கூடாது என்பதுதான் கேள்வி. ஒன்றுய்ச் சாப்பிடவேண்டும், கொள்ளல் கொடுத் தல்வேண்டும் என ஒருவரும் கோரினரில்லை. நண்பர் தப்பர்த்தங்கொண்டு தயங்கவேண்டிய தில்லை. இனிமேல் நண்பர் தயவுசெய்து குரு மார்களைப்பற்றிப் பேசாமலிருப்பாரென நம்புகி றேன்.

5. கவர்ன்மெண்டார் சீர்திருத்தத்தில் கத் தோலிக்கு பிரதிநிதித்துவ மேற்படுத்த சென்னை கவர்ன்மெண்டார் தெ. இ. க. சபை கனம் கொளரவகாரியதரிசியை 20-1-19ல் சபையில் சில கேள்விகள்கேட்க. சகல கேள்விகட்கும் திருப்திகரமான விடையளித்ததைக்கண்ட ஹானரபிள் சுதேந்தரனாத் பானர்ஜி எழுந்து கத்தோலிக்கு இந்தியர்க்குள் ஜாதி வித்தியாசத் தால் ஒற்றுமையின்றி இருக்கின்றனரோ? என, கனம் காரியதரிசியவர்கள் இதை உண்மையென ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்றும். இதை முன்னிட்டே கனம் காரியதரிசியவர்கள் தெ. இ. க. சகல மேற்றிராணிமார்கட்கும் குருமார் கட்கும் (1) ஒவ்வொரு பங்கிலும் இரவுச்சங்கம் ஸ்தாபிக்கவும், (2) ஜாதிக் கோட்பாட்டை தீக் குஞ் சஞ்சீவியைக் கைக்கொள்ளவும் கேட்டுவிட் டிருக்கின்றனரென 28-3-19ல் "கத்தோலிக் வாச்சுமேன்" பத்திரிகையில் வாசித்தோம். இக்கேள்வி யுண்டாகாமல் முன்னரே இது செய்வது இயலாததா? ஆகையால், கனம் கண் பர் கோபியாது முதலில் கனம் காரியதரிசியவர் கள் வேண்டுகோள் தன் ஊரில், ஆங்குள்ள தாழ்ந்த வகுப்புக் கத்தோலிக்கருக்குள் செய்யப் படுகின்றனவா வென்று கவனித்துக் கூடசேர்ந்து உழைத்து அன்னவர்களோ யீடேற்றுவாரென நம் புகின்றனம்.

6. சோபனம். (Congratulation) ஷெ தெ. இ. க. சங்கத்தின் கௌரவகாரியதரிசி யவர்களே சென்னை கவர்ன்மெண்டார் சென்னை சட்ட சபை மெம்பராக கத்தோலிக்கருக்குள தெரிந்தெடுக்கப்பட்டனரென கேள்வியுற்று சோபனங் கூறுகின்றேன். கத்தோலிக்கு இத் தியருக்கும் விசேஷமாய் தாழ்ந்த வகுப்பின ரென்றழைக்கப்படும் கத்தோலிக்கு இந்தியர்கட் கும் கவர்ன்மெண்டாரிடம் பரிந்துபேசி சித்திக் கச்செய்ய, எல்லாம் வல்ல ஈசன் அவருக்கு நிட காத்திரமும் நீடிய ஆயுளும் கொடுக்கவேண்டு மென இறைஞ்சி நிற்கும்.

பர்மா, 10—8—19. } பூர்வீக திராவிட கத்தோ லிக்கு, நேயர்.

Persia Asadabad.

அர்ச். தேவமாதா வணக்கமாதத் திருநாளின் கொண்டாட்டம்.

1919ஆம் மேமீ 31-ந் தேதி சனிக்கிழமை 79-வது காலாட்படையின் யுத்தவீரர்களாகிய கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாலும் மற்றவர்க ளாலும் (Asadabad) Persiaவில் இத்திருநாள் அதிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலே கோவில் இல்லாத விடங்களில் செய்யப்படுகிற பூசை மந்திரமும், மாலே 5½-மணிக்குப் பலவித வர்ண புஷ்பங்களாலும், பட் டுத்துணிகளாலும், மெழுகுதிரிகளினாலும் விசித் திரமாய் அலங்கரிக்கப்பட்ட தேவமாதாவின் திருத்தேர் சுற்றுப்பிரகாரமும். மிக்க மனோகர மாய் அலங்கரிக்கப்பட்டிருந்த பீடத்தின்மீது மகா மகிமைப்பிரதாபத்துடன் வீற்றிருந்த தேவ தாயார் திருச்சரூபத்தின் முன்னிலையில் இரவு 8-மணியிலிருந்து 10-மணிவரையிலும் பாடல் ஜெபமும், பிறகு 10-மணியிலிருந்து பஜனையும் நிறைவேற்றப்பெற்றன. இத்திருநாளுக்கு உதவி செய்த சகல நண்பர்களுக்கும், அவர்கள் குடும்பங்களுக்கும் அர்ச். தேவமாதா வல்லமை பொருந்திய மன்றாட்டால் தேவ ஆசீர் பெருகு வதாக! போன வருஷத்திற்போல இவ்வருஷ மும் மரியாயின் வணக்கமாதத் திருநாள் அதிக சிறப்பாய் கொண்டாடப்பட்டது. இனிமேலும் இவ்வாறே அத்திருநாளை அதிக சிறப்புடன் கொண்டாடத் தேவ தாயார் உதவி செய்வா ளென மன்றாடுகிறோம். இக்கைங்கரியத்திற்கு உதவி செய்த புண்ணிய புருஷர்களுடைய நாம தேயங்கள் பின் வருமாறு:—

No.			Rs.	As.
1726	Hr. Munisami	...	5	0
2352	Sy. Joseph	...	1	0
2817	Nk. J. Leuis	...	3	0
2063	Sy. A. Devis	...	3	8
4129	புல. Gabriel	...	2	8
3870	Sy. Samuel	...	2	8
3821	Nk. Samuel	...	2	0
3905	Sy. Anthony	...	3	0
2729	புல. John	...	2	0
3574	Sy. Novae	...	2	0
2738	,, Aseervadam	...	0	8
3996	,, Darmiah	...	0	4
3200	,, Thomas	...	1	0
3678	,, Arokiasami	...	0	4
3526	,, Bhooshanam	...	2	0
2681	,, A. William	...	1	0
4191	,, Gnanapragasam	...	1	0
2587	,, Sabestian	...	1	0
4010	,, David	...	1	0
4004	,, Veeriah	...	1	0
4381	,, Arokiasami	...	2	0
4000	,, Venkatapiah	...	1	0
3067	,, Doreisami	...	2	0
3903	,, Rajoo	...	1	0
3414	Hr. Lourdunadan	...	5	0
3177	,, Arokiasami	...	5	0
4194	Sy. Yesiah	...	1	8
4148	,, Vembuly	...	0	8

இப்படிக்கு,
JAMADAR S. SANTIAGO,
D. Coy. 79 Cd.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரம்.

பம்பாய் சர்வ கலாசாலையார் பி. ஏ. பட்டப் பரீட்சையை வருஷத்தில் இரண்டு முறை வைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஜேர்மனியின் கப்பல் சேதம்.—சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தில், ஜெர்மனியா ரின் கப்பல் புடைச்சேதம் பின்வருமாறு என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது: 319 கப்பல்களும், 189 ஜலக்கீழ்க் கப்பல் களும், அவற்றிலிருந்த 18,854 மானிட உயிர்களும் சேதமாயினவாம்.

ஆலந்தில் கத்தோலிக்குக் குருக்கள்.—ஆலந்து தேசமானது பொதுவாக புரொ டெஸ்டாண்டு தேசமெனச் சொல்லப்படு கிறது. ஆயினும் அதில் கத்தோலிக்குக் குருப்பட்டத்துக்கு தற்காலம் 1,000 யௌவனர்கள் படித்துவருகிறார்கள். ஏற் கெனவே 900 பேர் குருப்பட்டம் பெற்றி ருக்கிறார்கள்.

பாப்பானவரின் நன்கொடை.—ஐரோப்பிய யுத்தங் காரணமாக ஏற்பட்ட பலவிதக் கஷ்டங்களினால் ஜெர்மனியில் வருந்தும் தரித்திரர்களுக்காக, நமது இரக்கமுள்ள பாப்பானவர் ஐம்பதினாயிரம் பிராங்க்ஸ் நன்கொடையாக அனுப்பி யுள்ளார்.

ஐக்கியமாகாணக் கத்தோலிக்கர்கள்.—அமெரிக்காவைச்சேர்ந்த ஐக்கியமாகாணத்தில் இப்போது 26,332,650 கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் இருக்கிறார்களெனத் தெரியவருகிறது. உலகத்தில் கத் தோலிக்கு ஜனத்தொகை மிகுதியாயுள்ள தேசங்களுக்குள், இது நாலாவதாகும்.

புது ஆகாய விமானம்.—ஆகாயத்தில் செல்லும்போது சந்தடிசெய்யாமல் பறக் கத்தக்க ஒருவிதமான நவீன யந்திரத்தை ஜெர்மனியர் கண்டுபிடித்து, அதை அந்த ரங்கமாய் பரீட்சை செய்கிறார்களென்று சமாசாரம் எட்டுகிறது. இந்தப் புது விமானம் 64 பேர்களைக்கொண்டு செல் லும் ஆற்றலுள்ளதாம்.

"நல்லாயன் சந்தா"—நல்லாயனுக் குச்சேரவேண்டிய 1919-வது வருஷத்திய சந்தாவை மாதம் எட்டாகியும், இன்னுங் கொடாத நண்பர்கள் சுமார் இருநூறுக் கதிகமாயிருக்கிறார்கள். இவர்கள் எம் மீது கிருபைகூர்ந்து, இந்தக் கஷ்டகாலத் தில் தங்கள் பாக்கிச் சந்தாவை உடனே அனுப்பி, எம்மைச் சன்மானிப்பார்களெ னக் கோருகிறோம்.

ஓர் பிழை திருத்தம்.—சென்றமீ பற் பல சமாச்சாரங்களில் கௌரவச்சின்னம் என்னுந் தலைப்பின்கீழ் அக்கௌரவச்சின் னம் அளிக்கப்பட்டவர்களில் இருவர் கத் தோலிக்கர் என வரைந்துள்ளோம். இது நமது நண்பர்களில் ஒருவர் சொன்ன வாறே. இப்போது இன்னொரு நண்பர், தூத்துக்குடி மிஸ்டர் கயித்தான் வில்வ வராயர் ஒருவரே கத்தோலிக்கரென்றும் மற்றவ ரல்லவென்றும் நமக்கு எழுதியி ருக்கின்றார்.

ஆங்கிலேய ஸ்திரீகள்.—சென்ற ஐரோபிய யுத்தத்தில், காயம்பட்டவர்க ளுக்கும், நோயுற்றவர்களுக்கும் நர்சுக ளாக வேலை பார்த்துவந்த அநேக ஆங்கில மாதர்கள் தற்போது வேலையற்று வாளா

ருக்கின்றார்கள். இவர்களுமன்றி யுத்தத்தில் மாண்டுபோன சுதந்தவீரர்களின் தாரவிலிருந்த அநேக ஸ்திரீகளும் இப்பாது ஆதரவற்றிருக்கிறார்கள். இத்தகையார்களுக்கு, ஆஸ்திரேலியா, கானடா முதலிய குடியேற்ற நாடுகளில் தக்க ழைப்புக்கு ஆஸ்பதமுண்டாவென்பதை ராய்ந்து தெரிந்துகொள்ளும்பொருட்டு, ஸ்திரீகளின் பிரதிநிதிக் கமிட்டியொன்று ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்ட்டிருக்கிறது.

ஓர் அரிய இரத்தினம்.—பர்மாவைச் சர்ந்த மோகாக் என்னுமிடத்தில் மிகக் கர்த்தியான மாணிக்கமொன்று கண்டெக்கப்பட்டது; 45 காரெட் எடையுள்ளது. அது உருவிலும், நிறத்திலும் ஒப்பற்றதென்று சொல்லப்படுகிறது. பத்து ட்சத்துக்கு அதை மதிக்கிறார்கள். ஏழு ட்சத்துக்கு ஒருவர் அதைக் கேட்க, சொந்தக்காரர் கொடேன் என்கிறாராம். தைவிடப் பெரியதும் 75 காரெட்டெடை ள்ளதுமான ஒரு மாணிக்கம் 1899ஹுத் ல் கண்டெடுக்கப்பட்டது. ஆனல் அது தைப்போல அவ்வளவு அழகும் திட்முமாயிருந்ததில்லை. இன்னொரு மாணிக்ம் 150 காரெட்டுள்ளது பாரிஸ் பொருட்ாட்சி சாலையில் 3-லட்சத்துக்கு விலை பானதாம்.

அநியாய லாபம்.—யுத்தத்தினல் ாமக்கிரயங்களுக்கு ஏற்பட்ட நெருக்டையைக் காரணமாகக்கொண்டு, வர்த்கர்கள்நியாயவரம்பைக்கடந்து பொருள்ளின் விலையை அபாரமாயுயர்த்தி அநியாய லாபம் பெறுவதைத் தடுக்கும்பொநட்டு, லண்டன் நகரத்தில், அநியாய லாப ட்டம் என்றொரு சட்டம் ஏற்படுத்திருக்கிறார்கள். அதன்பிரகாரம் நியமிக்ப்படும் வியாபாரச் சங்கத்தார் பொருள்ளின் விலைவாசியை ஆராய்ந்தறிந்து, அநியாய லாபம் அநுபவிப்பவர்களைத் தண்டக்க அதிகாரம் பெறுவார்கள். அநியாயான லாபம் அடைந்தானென்ற குற்றம் நசுப்படுத்தப்பட்ட ஒருவனுக்கு ரூ. 200 அபராதம், அல்லது ஆறு மாதங் காவல் திக்கவேண்டி சட்டம் அதிகாரங் கொடுக்றது. இத்தகைய சட்டமொன்று சென்னயிலேற்படுத்தக்கூடாதா?

இராஜப்பிரதிநிதியின் விஜயம்.—மாட்சிமைதங்கிய இராஜப்பிரதிநிதியாகிய செம்ஸ்ஃபார்டு பிரபு அவர்கள், அடுத்த நவம்பர் மாதம் 25-ந் தேதி சென்னைக்கு விஜயஞ்செய்யப்போகிறார்கள். இங்கிருந்து அடுத்த நாள் புறப்பட்டு மைசூர் மாகாணத்துக்குப் போவார்கள். இப்பிரபு அவர்களைச் சென்னையில் வரவேற்று, வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்க அநுமதி பெற்ற பற்பல சங்கங்களில், நமது தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கமுமொன்று. இச்சங்கத்தின் அவசரக் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்டு, அதன் அக்கிராசனாதிபதி, மேன்மைதங்கிய சென்னை அதிமேற்றிராணியார் அவர்களாலும், உபாக்கிராசனாதிபதி, சரி. வந்திக்கத்தக்க மயிலை மேற்றிராணியாரவர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட வந்தனோபசாரப் பத்திரத்தின் நகல் சென்னை கவர்னர் அவர்களின் அந்தரங்கக் காரியதரிசிக்கு முன்னதாக அனுப்பப்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது.

ஆகாயவிமானத் தேர்ச்சி.—இதுவரையில் ஆகாயவிமானத்தைச் செலுத்தி பேர்பெற்றவர்களைவிட அதிக சாமார்த்தியமாய் பிரென்ச்காரனை எம். மாரிஸ் வால்மான் என்னும் விமானி தன்னுடன் ஒரு பிரயாணியை ஏற்றிக்கொண்டு, ஆகாயத்தில் 25,250 அடி உயரம் பறந்து சென்று, திரும்பவும் யாதோர் சங்கடமின்றி பூமியில் வந்திறங்கினராம். இவ்வளவு உயரம் வேறு யாரும் போனதில்லையென்று சொல்லப்படுகிறது. இனி கூடிய சீக்கிரத்தில் ஆகாயகமனம் சர்வசாதாரணமாய்விடும். ஏற்கெனவே ஐரோப்பாவில் பலவிடங்களில் தாபால்களும் ஊர்ப்பிரயாணிகளும், ஆகாயமார்க்கமாய்போக்கு வருத்தாயிருக்கிறார்கள். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இவ்வித பிரயாணத்துக்கு இன்னும் இரண்டொரு மாதத்துக்குள் ஏற்பாடாய்விடும். இந்தியாவிலேயே பல வர்த்தகர்கள் ஒன்றுகூடி நிதிசேர்த்து ஆகாயமார்க்கமாய்த் தபால்கள் கொண்டுபோவதற்கு வேண்டிய எத்தனங்கள் செய்துவருகிறார்கள்.

பாப்பானவரும் சமாதானமும்.—இப்போது முடிவாயிருக்கிற சமாதான உடன்

படிக்கையின் முக்கியாம்சங்களை மூலாதாரமாகவைத்து நமது பாப்பானவராகிய பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் அவர்கள், 1917 ஹு ஆகஸ்டுமீ த்திலேயே ஜெர்மனிக்கு ஒரு குறிப்புப் பத்திரம் அனுப்பியுள்ளார்கள். அப்போது அதில் பெல்ஜியத்தைக் குறித்து ஒரு ஏற்பாடுங் காணுகதினிமித்தம், அதை இங்கிலாந்தும் பிரான்சும் நிராகரித்துவிட்டன. பிறகு அதையே அமெரிக்க ஐக்கியராட்டு அக்கிராசனாதிபதி சிற்சில விவரங்களுடன் பிரேரிக்க அதை ஜெர்மனி மேற்கொண்டு நேசதேசத்தாரைச் சமாதானத்துக்கு அழைக்க, அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் சமாதானப் பேச்சு அம்பலத்துக்கு வந்தது. கடைசியில் யுத்த நிறுத்த உடன்படிக்கை 1918ஹு நவம்பர்மீ 11உ உறுதிப்பட்டது. ஆகவே நமது பாப்பானவரே சமாதானத்துக்கு மூலபுருஷரா வர்.

கார்னகி கோட்டீஸ்வரன்.—அமெரிக்கா கோடீஸ்வரர்களில் மிகப்பேர்பெற்றவராகிய ஆண்ரூ கார்னகியென்னுங் கனவான் சென்றமீ 11-ந் தேதி காலகதியடைந்ததாகக் கேள்விப்பட்டு விசனிக்கிறோம். இவர் சாகுப்போது இவருக்கு 50-கோடி டாலர் மதிப்புள்ள சொத்துக்கள் இருந்தனவாம். இவருக்குப் பிரதிதினமும் வட்டிப் பணமாத்திரம் ரூபாய் 75,000 வந்துகொண்டிருந்தது. இவர் அநேக பொதுநல ஸ்தாபனங்களுக்குப், தரும கைங்கரியங்களுக்கும் ஏராளமான பொருளுதவி செய்திருக்கிறார். இவர் இவ்வாறு செலவிட்ட தொகை எழுபது கோடி பவுன் என்று சொல்லப்படுகிறது. இவருடைய நன்கொடையினல் இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலவச புஸ்தகசாலைகளும், இலவச வாசகசாலைகளும் அனந்தம். ஹேக் நகரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சமாதான மாளிகையும் இவருடைய கைங்கரியமே. இவர் முதல் முதல் பரம ஏழையாயிருந்தவர். இவர் தகப்பன் ஒரு சாதாரண நெசவுத்தொழிலாளி. இவர் பிரதமத்தில் தந்தித் தபால் கொண்டுபோகும் பையனுயமர்ந்து, நாளாவட்டத்தில் ஒரு லிகிதராஞர். பிறகு ஒரு சிறு வர்த்தகனுடு சேர்ந்து கூட்டு வர்த்தகஞ்செய்து, அதிக லாபமடைந்து, அதிலிருந்து ஒரு எண்ணெய்ச் சுரங்கத்தைக் குத்தகையெடுக்க, அது பொன் சுரகமாகி எதிர்பாராத இலாபத்தைத்தந்தது. அதன்பின் அதிக மூலதனம்வைத்து எஃகு இரும்பு கம்பெனி யொன்றை வைத்து ஏராளமான பொருளீட்டி கோடீசுவராஞர். "முயற்சி திருவினையாக்கும்" என்னு மூதுரை இவர்பாவில் முற்றும் மெய்ப்பிக்கப்பட்டது.

மாஜி கேய்ஸர்.—இவரைப்பற்றிப் பற்பல வகையான வதந்திகள் உலாவுகின்றன. இவர் லண்டன் நகரத்தில் விசாரிக்கப்படுவாரென்றும், விசாரணை நடக்குங் காலத்தில், லண்டன் கோபுரத்தில் சிறையிடப்படுவாரென்றும், நெப்போலியனை வைக்கப்பட்டிருந்த செண்ட் ஹெலினு தீவுக்கு அனுப்பப்படுவாரென்றும் சொல்லும் சில வதந்திகளிருக்க, இவர் இப்போது தங்கியிருக்கும் ஆலந்தேசத்தை விட்டுத் திருட்டுத்தனமாய் ஜெர்மனிக்குள் பிரவேசிக்க எத்தனித்துக்கொண்டிருக்கிறரென்றும், தகவல் தெரிந்துகொள்ள முடியாத அன்னிய பிரயாணிகள் மோட்டார் வண்டியிலேறிக்கொண்டு பகலிலும் இரவிலும் ஆலந்துக்குள்ளே பிரவேசிப்பதும், அங்கிருந்து வெளிப்படுவதுமாயிருக்கிறரென்றும், இப்பேர்க்கொத்த வண்டிகளின்மூலமாய் கெய்ஸர் ஏற்கெனவே ஆலந்தை விட்டு வெளிப்பட்டுவிட்டாரென்ற நம்பிக்கை பரவிவருகிறதென்றும், இப்போது கெய்ஸர் இருந்த மாளிகையில், அவரைப்போல வேஷம்போட்ட வேறொருவரிருக்கிறரென்றும் வேறு வதந்திகள் கூறுகின்றன. இவற்றில் எவை மெய் எவை பொய் என்பதை இப்போது அறியக்கூடுமாயில்லை.

எல். எக்ஸ். பெர்னாந்தீஸ் சுவாமிகள்.—பரதகுலத்தவருள் முதல் குருவும், சென்னை, ஜியார்ஜ்டவுன் மோட்சராக்கினி மாதா ஆலயத்தின் விசாரணைக் குருவானவருமாகிய சங். லாரென்ஸ் பெர்னாந்தீஸ் சுவாமிகள் குருப்பட்டம் பெற்று வருகிற நவம்பர் மாதம் 25-ந் தேதியோடு 25-வருஷங்களாகிறபடியால், அச்சுவாமிகளின் வெள்ளி ஜூபிலி மகோற்சவத்தைத் தக்க சிறப்புடன் கொண்டாடி, அவரை உபசரிப்பதற்கு உபசரணைக் கமிட்டியொன்று

நியமிக்கப்பட்டு, அவ்விஷயமாய் வேலை வெகு மும்முரமாக நடந்துவருகிறது. சங். பெர்னாந்தீஸ் சுவாமிகளை அறியாதார் இந்தத் தென்னிந்தியாவில் வெகு சிலரே. "பாவசங்கீர்த்தன விளக்கம்" முதலிய கத்தோலிக்குப் புத்தகங்களின் கிரந்தகர்த்தாவும், அருமையான பிரசங்கியுமாகிய இந்த நல்ல சுவாமியாருடைய ஜூபிலி மகோற்சவத்தை மிக்க சிறப்புடன் கொண்டாடி, அதன் சம்பந்தமாய் ஓர் பொது நலத்துக்குரிய ஞாபகச்சின்னம் ஏற்படுத்தும்படிக்கு, அக்குருவானவரின் சிநேகிதரும், அபிமானிகளுமான அனைவோரும் தம் தம்மாலான பொருளுதவி செய்யும்படி ஷை உபசரணைக் கமிட்டியார் கேட்டுக்கொள்ளுகிறார்கள். இவ்விஷயமாய் பணம் அனுப்புவோர்கள், "நல்லாயன்" பத்திராதிபருக்கு "சங். பெர்னாந்தீஸ் சுவாமிகளின் ஜூபிலி பண்டுக்காக" என்று குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நன்கொடையாளர் நாமமும், தொகையும் நல்லாயனில் பிரசுரிக்கப்படும்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைப்பத்திக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுப் பத்திக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

ஜனன அறிக்கை.

கோறமாண்டல்.

எங்களது அருமை சகோதரியும் மெஸர்ப டோமியா-டானூமாவில் இளர்க்காயிருக்கும் எம்மைத்தனர் C. S. Sebastianனின் பிரிய பத்தினியுமான சௌபாக்கியவதி ஆரோக்கியமரியம்மான் 1919ஆம் ஜூலைமீ 28உ திங்கட்கிழமை மாலை 3-25க்கு தனது முதல் பேரான ஓர் பெண்மகவை ஈன்றனள். தாயும் சேயும் சுகம்.

இங்ஙனம்,
M. A. SANTIAGO JACOB,
Coromandel P. O.,
K. G. F.
Mysore State.

நன்மரண அறிக்கை.

இரங்கூன்.

சிருஞ் செழிப்பும் பொருந்திய பர்மா நாட்டிற்குத் திலகம்போன்ற அரங்கமாநகரில் 1890ஆம் மேமீ 22உ வியாழக்கிழமை என்னைத் திருமணமுடித்த (சென்னை ஸ்ரீமான் முனிஸ்வாமிப் பிள்ளை, ஸ்ரீமதி பிரகாசமரியம்மாள் ஆகிய இவர்கள் தவப் புத்திரியும், என் நேச மனைவியுமாகிய) ஸ்ரீமதி தனம் அடைக்கலமரியம்மாள் நாளது 1919ஆம் ஜூலைமீ 10உ வியாழக்கிழமை இரவு 8-45-மணிக்கு இவ்வுலகைவிட்டு கர்த்தருக்குள் நித்திய இளைப்பாறுதலடைய மறு உலகஞ் சென்றனள். பக்தியுள்ள சகோதர சகோதரிகளே! எல்லா நற்குணங்களும் ஒருங்கே யடைத்து கடந்த இருபத்தொன்பதாண்டுகளை என்னுடன் சகல கஷ்ட நிஷ்டூரங்களிலும் பொறுமையாகக் கழித்துக் காலஞ்சென்ற ஷையாளின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர.. பிரி., திரி. வேண்டிக்கொள்ளும்படி மிகத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

No. 36, 38th Street,
Railway Block,
Rangoon,
18—7—1919.

இப்படிக்கு,
நன் மனைவியை யிழந்த
கிர்ப்பாக்கியன்.
C. M. MICHAEL,
Medical Practitioner.

நீலகிரி, உதகமண்டலம்.

அதிக விசனத்துடன் தெரிவிப்பது யாதெனில்:—நண்பர்களே! மே மாதம் எனது அருமை மனைவி ஆ. மனோஞ்சிதமரி, சென்ற 10-நாட்களாகக் கபவாதசுரம கண்டு வியாதியாயிருந்து, எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல் சென்ற மேமீ 30உ வெள்ளிக்கிழமையன்று, காலை 10½-மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்தனள். அடுத்த நாள் மாலை 4-மணிக்கு, அவள் சடலம நல்லடக்கம் செய்யப்பட்டது. என மனத்துயரத்தால் இதுநாள்வரையில் ஆயனில் பிரசுரிக்காததற்கு என்னை மன்னிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். மேற்படியாளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர.. பிரி. வேண்டிக் கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

22—8—19. இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
A. V. ஆரோக்கியசாமி ஆசாரி.
(of V. A. Siluvaimuthu Asary & Bros.)

The
Good Pastor
நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுகெளும் எமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்." (அரு. 10: 11–16.)

புத்தகம் 17. | அக்டோபர் 1919. | இலக்கம் 10.

7-OCT 1919

AN APPEAL.
ஓர் விண்ணப்பம்.

இலங்கையிலுள்ள கண்டிமாநகரின்கண் ஸ்தாபகமாயிருக்கும் பாப்பானவர் குரு மடத்தைப்பற்றிய வியாசம் ஒன்று, இம்மாசப் பத்திரிகையின் இன்னொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்க, நமது நண்பர்கள் காண்பார்கள். அவ்வியாசத்தில் இம்மடத்தின் நோக்கமும், உற்பத்தியும், இதன் விருத்தியும், இன்னும் இதனுடைய இதர வரலாறுகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனை நமதுடைய சந்தாதாரர்கள் அனைவரும் வாசிக்கும்படி மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறோம். இம்மடம் ஸ்தாபிக்கப்பெற்று தற்போது வருடங்கள் 26 ஆகின்றன. இந்த 26-வருடங்களுக்குள் ஏறக்குறைய 200பேர் இம்மடத்தில் படித்துக் குருப்பட்டம்பெற்று, இந்தியாவிலும் இலங்கையிலும் பற்பல விடங்களில் விசாரணைக் குருக்களாகவும், கலாசாலைகளுக்கும் மடங்களுக்கும் விசாரணைக்கர்த்தாக்களாகவும், மேற்றிராணிமார்களுக்கு சம பிரதிகளாகவும் (Secretaries) தங்களுக்கொப்பிக்கப்பட்ட அலுவலை மிகத் திறமையாயும் நேர்மையாயும் நிறைவேற்றி வருகிறார்கள். மேலும் இவர்களுக்குள் ஒருவர் கண்டி மேற்றிராணியாராகவும், மற்றொருவர் கோட்டையத்து மேற்றிராணியாராகவும், வேறொருவர் எர்ணாகுளத்து மேற்றிராணியாருக்கு உதவி மேற்றிராணியாராகவும், ஆக மூன்று பேர் மேற்றிராணியார் பட்டமும் பெற்றிருக்கிறார்கள். பரிசுத்த பாப்பானவருடைய ஸ்தானாபதியாகிய மிகவும் வந்திக்கத்தக்க பூமசோனி பியோண்டி அதிமேற்றிராணியாரவர்களும் கண்டி மடத்துக் குருக்களைப்பற்றி "இக்குருக்கள் ஏறக்குறைய எல்லோருமே ஆத்தும இரட்சணியத்துக்காக ஆவலாயும், தத்தம் மேற்றிராணிமார்களுக்கு திருப்திகரமாயும் உழைத்துவருகிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்.

இவ்வளவு நல்ல குருக்களுக்கு உறையிட்மாயிருக்கும் இம்மடமானது ஆற்றோரத்திலுள்ள ஓர் விருக்ஷத்தைப்போல் செழித்தோங்கி வளர்ந்து, ஆயிரமாயிரமாய்ப் பலனளிக்கப் பார்ப்பது நம்மெல்லோருக்குமுள்ள கடமையாமே. இம்மடம் அளிக்கும் பலன் இந்தியரான நமக்கேயன்றி மற்றவர்க்கன்று. சமீபத்தில் முடிவாகிய கொடிய ஐரோப்பா யுத்தத்

தின் நிமித்தம் இம்மடத்துக்குப் பல குறைகளும் அசௌகரியங்களுமுண்டாக இடமாகிவிட்டது. இம்மடத்தைக் கண்காணித்துவரும் பெல்ஜிய தேசத்து சேசு சபைக் குருக்கள், மடத்து சவரட்சணைக்காகவும், அதன் விருத்திக்காகவும் தம் தேசத்திலிருந்தும், பரிசுத்த தந்தை பாப்பானவரிடமிருந்தும் வரப்பெற்றுக் கொண்டுவந்த பொருளுதவி வெகுவாய் நின்றுவிட்டது. அல்லாமலும், வித்தியார்த்திகளுக்குப் போதுமான விடுதியும், தேவ பணிவிடைக்கான பயிற்சிக்கு ஓர் நல்லதேவாலயமுமின்றியிருப்பது பெருங் குறையல்லவா? இப்பெருங் குறையை நிவர்த்திக்கப் பெரு முயற்சி தற்போது செய்யப்பட்டுவருகின்றது. இம்மடத்துக்கென்று 23-வருடங்களுக்குமுன்னதாகவே அஸ்திவாரமிடப்பட்ட தேவாலயத்தைக் கட்டி முடிக்கப் பணவசூல் செய்துவருகிறார்கள். மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை ரூ. தொண்ணூறுயிரம் (90,000). இத்தொகை சேகரமாக கண்டி குரு மடத்துச் சிரேஷ்டரவர்கள் இந்தியரான நம்மெல்லோரிடத்திலும் எதிர்பார்க்கிறார்கள். மேற்சொன்னபடி, இந்தியர்களான நமக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இம்மடத்துக்கு நம்மாலியன்ற பொருளுதவி புரிய நாம் முன்வரவேண்டியதல்லவா? விசேஷமாய் தென்னிந்தியாவிலுள்ள எல்லாக் கிறீஸ்துவர்களும் இது விஷயத்தைக் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளார். அதேனெனில், தென்னிந்தியாவில்மாத்திரம் 120 பேர் கண்டி மடத்தில் படித்துக் குருக்களாகி நமக்குள் உழைத்துவருகிறார்கள். சென்னை அதிமேற்றிராசனத்தையும், மயிலை மேற்றிராசனத்தையுஞ்சேர்ந்த கண்டி மடத்துக் குருக்கள் ஒருங்குசேர்ந்து, சென்னை, புதுப்பேட்டை விசாரணைக் குருக்களாகிய சங். எ. அருளப்ப சுவாமியாரவர்களைத் தலைமையாகவும் (President), சங். பொ. தோமாஸ் சுவாமியாரவர்களை பொக்கிஷதாரராகவும் (Secretary) நியமித்து, பணம் வசூல் செய்துவருகிறார்கள். நம்முடைய சந்தாதாரர்களனைவரும் இத்தேவாலயத்தைக் கட்டியெழுப்ப தங்களாலியன்ற பொருளுதவி செய்து தங்களுடைய வேதாபிமானத்தையும் தேசாபிமானத்தையுங் காட்டுவார்களென்று நம்பியுள்ளோம். "நல்ல ஆய"னுக்குள்ள சந்தாதாரர்கள் 2,000 பேர். இவர்கள் எல்லோரும் தலைக்குக் குறைந்தபட்சம் 8-அணா விழுக்காடு கொடுத்ததுவார்களானால் 'சிறு துளி பெரும் வெள்ளம்' என்பதற்கொப்ப ரூ. 1,000 சேர்ந்துவிடுமன்றோ? இந்தத் தொகை "நல்ல ஆயன்" சந்தாதாரர்களின் நன்கொடையாகக்கண்டி குரு மடத்துக்கனுப்பப்படுமானால், எவ்வளவோ புகழ்ச்சிக்குரியதும் பலனுக்குரியதுமான ஓர் பரோபகார கைங்கரியமாகும்! அன்றியும் இது "நல்ல ஆயன்" சந்தாதாரிடத்தில் வேதாபிமானமும் தேசாபிமானமும் சிறந்து விளங்குகின்றதென்பதை மெய்ப்பிக்கும். ஆனபடியால், நேயர்களே, இந்த எமது விண்ணப்பத்தைச் சன்மானிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பணமனுப்பும் சந்தா நேயர்கள் மேற்கூறிய பொக்கிஷதாரராகிய சங். பொ. தோமாஸ் சுவாமிகளுக்கனுப்பிக்கொள்ளலாம். அவ்வாறு உதவி புரிபவர்களுடைய நாமதேயங்கள் "நல்ல ஆய"னில் பிரசுரிக்கப்படும்.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

VI
இரெபெக்காள்.

"மிகுந்த ரூபவதியான பெண்; அதி சௌந்தரியமுள்ள கன்னிகை; புருஷ ஸ்பரிச மறியாத மாது" (ஆதி. 24, 16).

அபிரகாம் வயோதிபராகவுந் தன் மகன் ஈசாக்குக்கு மணஞ் செய்விப்பதிலேயே கவலையாயிருந்தார். பத்தாவிற்கேற்ற பாரியாள் வேண்டிய தவையாதலால், கற்குணசீலியைத் தேடப் பிரயாசைப்பட்டனர். தன் குமாரனுக்குகந்த மட்சத்தை காணான் நாட்டிற் கிடைப்பதரிதென வெண்ணி வேறிடந் தேட முயன்றார். ஆகவே, பெண்கொள்வதற்காகத் தற்குலத்தோர் வசிக்கும் மெசபொத்தேமியாவுக்குத் தனது காரியக்காரனாகிய எலியஸெரை யனுப்பினர். அவன் தனது எஜமானனுடைய கட்டளையைச் சிரமேற் கொண்டு ஒட்டகங்களுடன் பிரயாணமானான். பல நாள் கடக்க, நக்கோர் நகரம் கிட்டிற்று. சாயங்கால நேரம். ஸ்திரீகள் ஜலம் மொள்ள வருஞ் சமயம். கேணி சமீபத்திலிருக்கின்றது. அத்தருவுக்குப் பக்கத்திலேயே ஒட்டகங்களை இளைப்பாறவிட்டுத் தனக்குள் சொல்லிக்கொண்டதாவது:—"என் எஜமானனான அபிரகாமின் தேவனாகிய என் ஆண்டவரே! தேவரீர் இன்று எனக்குத் துணையாயிருந்து, என் எஜமானனாகிய அபிரகாமுக்குங் கிருபைபுரியவேணுமென்று உம்மைப் பிரார்த்திக்கிறேன். இதோ! நான் கேணியருகாமையிலிருக்கிறேன். இந்நகரவாசிகளின் புத்திரிகள் ஜலம்மொள்ள வெளியே வருவார்கள். அங்ஙனமானால் எத்தப் பெண்ணை நோக்கி 'நான் குடிக்கும்படி குடத்தைச் சாய்த்துக்கொடு அம்மணி' என்று கேட்டகையில் 'நீரும் குடியும்; அப்புறம் உமது ஒட்டகங்களுக்கும் குடிக்கத் தண்ணீர் காட்டுவேன்' என்று எவள் மாறுத்தரஞ் சொல்வாளோ அவளே தேவரீருடைய ஊழியனாகிய ஈசாக் என்பவருக்குத் தேவரீரால் நியமிக்கப்பட்டவளாகக்கடவது; அப்போது எனது எஜமானனுக்குத் தேவரீர் கிருபைசெய்தருளினீர் என்று ஞானதஞ்ஞல் அறிந்துகொள்வேன்" என்றான். இவ்வேண்டுகோளை இவன் மனனம்பண்ணி முடித்தும் முடியாமுன்னே ஓர் யௌவன ஸ்திரீ தனது தோளின்மேல் தண்ணீர் குட மேந்தியவளாய் அப்பக்கமாக வந்தனள். அவள்தான் பத்துவேலின் குமாரத்தி இரெபெக்காள். மிக்க எழில் பொருந்தியவள். அழகமைந்த கன்னிகை. புருஷ ஸ்பரிசமறியா மங்கை. இணற்றில் தண்ணீர் மொண்டுகொண்டு திரும்பி இல்லம் எகுகையில், எலியஸெர் அவளை யண்டிக் குடிக்கத் தண்ணீர் கேட்டான். "பானஞ்செய்யும் ஐயா" என்று தன் குடத்தைச் சட்டெனக் கையில் இறக்கிவைத்துக்கொண்டு அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். அவன் குடித்தானதும் மீண்டும் அவனை நோக்கி "உமது ஒட்டகங்கள் எல்லாங் குடித்துத் தீருமட்டும் தண்ணீர் மொண்டு காட்டுகிறேன்" என்று செப்பியபிரகாரஞ் செய்ய வாரம்பித்தாள். இவள்தான் ஈசாக்குக்குக் கடவுளால் குறிக்கப்பட்ட பெண் என எலியஸெர் தீர்மானித்துக்கொண்டு அவளுக்குத் தான் கொண்டுவந்துள்ள பொற்காதணிகளையும், கைக்காப்புகளையு மளித்தான். தனது வேலை அநுகூலமாய் முடிந்ததையிட்டுக் கடவுளைப்பார்த்து "என் எஜமானனாயிருக்கிற அபிரகாமினுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாகக்கடவது. ஏனெனில் அவர் என் எஜமானனிடத்தில் வைத்த கிருபையையும் விசுவாசத்தையும் விலகவொட்டவில்லையே" என்று மனமார ஸ்தோத்தித்தான். மறுநாளுதயம் பெற்றோர் உத்தரவு பெற்று, எலியஸெரோடு காணான் நாட்டிற்குப் பயணமானாள் இரெபெக்காள். அங்கு சென்றதும் ஈசாக்குக்கு மனைவியாகி ஏசா, யாக்கோப் எனும் இரு புத்திரர்களுக்குத் தாயானாள்.

இரெபெக்காளைப்பற்றிய அலங்கார வர்ணிப்புக் கன்னிமரியாயிக்கு நன்கு பொருந்துமென அர்ச். வில்லனோவா தோமையாரும், அர்ச். பொனவெந்துராவுஞ் சொல்லுகிறார்கள். இரெபெக்காள் மிகுந்த ரூபவதி, அழகு சௌந்தரியமுள்ள கன்னிகை. புருஷ ஸ்பரிசமறியாமாது. கடவுள்முன் இருதய சுத்தமும் ஆத்தும சுத்தமுமே மேலான அழகு. மரியாயின் இருதயமும் ஆத்துமமும் மிக்கப் பரிசுத்தமாயிருந்ததென்பதற்கையமில்லை. ஆகையால் மெய்யாகவே அவளே ரூபவதி. "மரியாயைப்பற்றிக் கவனிக்கின் அவளிடம் எல்லா அழகும் மகத்துவமும் எல்லாப் புண்ணியங்களுமே ஒருங்கே தோன்றும்" என அர்ச். ஜெரோம் உரைக்கின்றார். "மரியாய்க் குவமானம் இரெபெக்காள். ஆனால் அவளைவிட மரியாய் பன்மடங்கு அழகு சௌந்தரியம்பொருந்தியவள்" என அர்ச். அந்தோனின் பகர்கிறார். "ஓ! மதுர கன்னிகையே! செவ்விய அழகும் சௌந்தரியவமைப்பும்பெற்றவளே! எனக்குதவிசெய்! என் பாவமாசைப் போக்கியருள்வாய்" என அடிக்கடி தேவதாயை மன்றாடினர் அர்ச். பிரிஜெத்.

1. தனது மகனுக்குப் பெண் கொள்வதற்காக தனது காரியக்காரனைக் காணான் நாட்டிற் கனுப்பினர் அபிரகாம். காரியக்காரன் இரெபெக்காளை ரூபவதியண்டை கண்டான். காதணிகளையுங் கைக்காப்புகளையும் அவளுக்குக் கொடுத்தான். தமது நேசகுமாரனுக்குத் தாயாகத் தெரிந்துகொண்ட கன்னிமரியாயினிடம் பிதாவாகிய சர்வேஸ்வரன் அதிதூதரான கபிரியேலை மெய்யான காணான் நாடாகிய அதாவது வாக்குத்தத்தத்தின் நாடாகிய பரலோகத்திலி

ருந்து அனுப்பினார். அதிதூதர் அவளைக் கண்டார். ஓர் கன்னிகை, கற்பலங்காரி, புண்ணிய சனகத்தரி, மற்றக் கன்னிகைகளைவிட மேலான கன்னிகை, சீவியந்தருந் தேவ அருள் ஊருணி யண்டை தேவ அருளோடு கண்டார் அவளை. மனுமகன் மானிட இரட்சண்ணிய தாகமாயிருந்தார். கன்னிமரி "இதோ! ஆண்டவருடைய அடிமையானவள், உம்மூடைய வார்த்தையின் படி எனக்காகக்கடவது" என்று செப்பிய சம்மதத் தண்ணீரைக் குடித்துத் தாகத்தைத் தணித்தார் தேவசுதன். "பிரியதத்தத்திஞல் பூரண மானவளே!" எனுங் காதணிகளையும்! "கர்த்தர் உம்மூடனே" எனும் மகிமை மொழியால் கைக்காப்புகளையும் அதிதூதர் அவளுக்களித்தார்.

2. இரெபெக்காளுக்கு இரு பிள்ளைகள்; இருவரும் ஒரே பிரசவத்தில் பிறந்தவர். ஒருவன் ஏசா, மயிர்கள் செறிந்த தோலையுடையவன், வளர்ந்து வாலிபனானதும் வேட்டையாடுவதிலுங் கிருஷிக வேலை பண்ணுவதிலும் வல்லவனானன். மற்றவன் யாக்கோப், கபடற்றவன், கூடாரங்களில் சஞ்சரிப்பவனாயினன். கன்னிமரியாய்க்கும் இரு வகைப் பிள்ளைகளுண்டு. இருதாத்தினரும் ஒரு சமயத்தில் பிறந்தவர்களாம். சேசுவானவர் மரியாயின் குமாரன். அவருக்குத் தாயானகூணமே மரியாய் மனிதவர்க்கத்தினருக்குந் தாயாஞள். எனெனில் அவரே யவர்களின் உயிரும் வெளிச்சமுமாம். ஏசாவிற்கும் யாக்கோபிற்கும் வித்தியாசமிருந்தது. அப்படியே மரியாயின் பிள்ளைகள் இருதரத்தினருக்கும் வெகு வித்தியாசமுளது. இரெபெக்காளால் அதிகமாய் நேசிக்கப்பட்ட யாக்கோப் கிறீஸ்துநாதருக் குவமானமென அர்ச். அகுஸ்தீன் வியாக்கியானிக்கின்றார். ஏசாவோ மனுக்குலத்தைக் குறிப்பிடுகின்றன். தனது ஜேஷ்ட புத்திர பாகத்தை யாக்கோபிற்கு அற்ப பதார்த்தத்திற்காக விற்றான் ஏசா. மனிதனும் மோக்ஷத்துக்குரிய தன் சுதந்தரத்தை நீச தோஷ நாச மாசான பாவத்தால் இழந்துபோனன். ஏசாவைப்போல் சிதான்றும்வண்ணம் இரெபெக்கான் பந்தித்து வைத்த வெள்ளாட்டுத் தோலுடையோடு யாக்கோப் தனது பிதாவாம் ஈசாக்கண்டை போனன். நமது இரட்சகராகிய சேசுநாதர் நீச உடையாம் மனிதவதாரந்தரித்துக் கன்னி மரியினிடமிருந்து பிறந்து நமது பாவங்களுக்குப் பரிகாரமாகத் தம்மைத் தமது பரம பிதாவிற்குப் பரித்தியாகஞ்செய்தார். கடவுளும் மனிதனுமாயிருந்ததால் நம்மை இரட்சித்தார். ஏனெனில் கடவுளாகமட்டுமிருந்திருப்பாராகில் நமக்காகப் பாடுபெட்டிருக்கமுடியாது. மனிதஞக மட்டு மிருந்திருப்பாராகில் நம் பாவத்திற்காகப் பரிகாரம் பண்ணமுடியாது.

ஏசா யாக்கோபை வெறுத்தான். அவனைக் கொல்லவும் உள்ளத்தில் நீர்மானித்தான். நமது இரட்சகர் காலு பக்கத்திலும் நன்மைகள் பொழிந்துவந்தனர். ஆயினும் அவரது இனத்தாராகிய யூதர்கள் அவரைப் பகைத்தார்கள். நன்மைக்குப்பதில் தின்மை செய்தார்கள். அவரையெடுக்க முயன்றார்கள். அந்தோ! யூதர் மட்டுமன்று, நாமுமல்லோ அகந்தத் தடவை நமது பாவத்தால் அவரைச் சிலுவையிலறைந்திருக்கும்.

3. யாக்கோப் கிறீஸ்துவையும் ஏசா மனிதரையுங் குறிப்பிடுவதாகப் பார்த்தோம். இப்போது முதற் பிறந்தோனிய ஏசா கிறீஸ்துவையும், யாக்கோப் மனிதனையும் எப்படிக் குறிப்பிடுகின்றனரெனப் பார்ப்போம். "தனது குமாரன் யாக்கோப் ஜேஷ்ட புத்திரனுக்குரிய ஆசீர்வாதத்தைப் பெறுமாறு பல விதத்தில் உதவி புரிந்த இரெபெக்காள் மரியாய்க் குவமானம்" என்று அர்ச். அந்தோனின் குறிப்பிடுகிறார். தனது குமாரன் யாக்கோப் ஜேஷ்ட புத்திரனுக்குரிய சுதந்தரத்தை அவனது பிதாவினிடமிருந்து பெறவேண்டுமென்பது இரெபெக்காளினது அபிலாசை. அதற்காக ஏசாவினுடைய நல்லுடைகளால் அவனை உடுத்தி, அவனது கரங்களிலேயும், உரோமமற்ற கழுத்திலேயும் வெள்ளாட்டுக்குட்டியின் தோலைப் பந்தித்து, தகப்பனுக்குப் பிரியமாயிருக்கும்படி ருசிகரமாய்த்தான் செய்த பதார்த்தங்களையுஞ் சுட்ட அப்பங்களையுங் கொடுத்து ஈசாக்கினிடம் அனுப்பினாள் யாக்கோபை. அவனும் போய்த் தன்னை யாசீர்வதிக்கும்படிப் பிதாவை மன்றாடினான். "தேவன் அனுக்கிரகம்பண்ணி வானத்துப் பனியையும், பூமியின் கொழுமையையும், மிகுந்த தானியத்தையுந் திராட்சை ரசத்தையுந் தந்தருள்வாராக" என மங்களமாய் ஆசீர்வதித்தார் ஈசாக்.

இரெபெக்கால் யாக்கோபை விசேஷித்த விதமாய் நேசித்ததுபோல் கன்னிமரியாய் நம் மெல்லோரையும் நேசிக்கின்றனள். தேவ ஆசீர்வாதத்தை நாம் சம்பூரணமாகப் பெறவேண்டுமென்பதே அவளது ஆவல். அதற்காக, நமக்குத் தாயன்புகாட்டி, கஸ்தியில் மனதைத் தேற்றி, நற்புத்தி புகட்டி, நமக்கு வருஞ் சோதனைகளையகற்றி நம்மீது கருணைசெலுத்துகிறாள். தனது மேலான புண்ணிய நட்த்தையால், நாம் பரம பிதாவினிடம் போவதற்கு என்னசெய்யவேண்டுமெனக் கற்பிக்கின்றாள். நமது பிதா நம்மைப் புறக்கணித்துத் தள்ளாதிருக்க, அவளது புண்ணிய பேறுபலன்களாலேயே நம்மை யலங்கரித்து அவர் சந்நிதானத்திற் கனுப்புகிறாள்.

4. இரெபெக்காள் தன் சீவியகாலத்தில் பற்பல துன்பங்களுமனுபவித்தாள். விசேஷமாய்த் தனது இரு மக்களின் நடத்தையானது அவள் மனதை வாட்டி இருதயத்தைத் துன்புறுத்தியது. மனம் பொறுக்காது "இப்படி எனக்காருமாஞல் பிறந்தென்ன பலன்" என மூறையிட்டாள். கன்னிமரியாயும் அதிக துன்பத்தையநுபவித்தனளென்று ஈண்டு சொல்லவேண்டியதில்லை. தேவமாதாவெனும் மகுடத்தைத் துன்பமின்றி பெற்றனளோ? இல்லை. வியாகுலமாதாவானாள். வேதசாட்சிகளின் இராக்கினியானாள். சேசுநாதர் பிறந்த சில நாட்களுக்குள்ளேயே சிமையோன் "விசன வாள் உன்னுத்துமத்தை யூடுருவும்" எனத் தீர்க்கதரிசனமாய் விளம்பினார். திவ்ய குமாரனின் நிமித்தம் எவ்வளவோ கவலை, கஸ்தி, மனோவியாகுலமநுபவித்தாள். மூப்பது வருஷகாலம் இவ்வாறு சகித்துபோதக் கடையியாய்ப் பெரும் வேதனையை யடைய நேரிட்டது. அவளது நேசகுமாரன் கல்வாரி மலையினுச்சியிற் கள்ளனைப்போல் சிலுவையிலறையுண்டு மரித்தார். அக்காட்சியால் அவளிருதயம் புண்ணுகி யிருந்ததன்றே? "இவ்வழி போகும் நீங்கள், எனது வியாகுலத்தைப் பார்க்கிலும் வேறு வேதனையுண்டோவென்று கவனித்துப்பாருங்கள்" என ஜெரேமியாசோடு அத்தாய் சொல்லலாம். கன்னிமரியாய்க்கும் இரெபெக்காளுக்குந் துன்பதுயரங்கள் விளைந்தன. அவ்வாறே சகல அர்ச்சியசிஷ்டவர்களுஞ் சஞ்சல வியாகுலங்களுக்குள்ளாஞர்கள். அப்படியாயின் நமக்குக் கஸ்தி துன்பம் வருவது ஆச்சரியமோ? நாம் நினைப்பதெல்லாம் அகத்தியஞ் சந்தோஷமாகக் கைகூடவேண்டுமென்று ஆசிப்பது உசிதமோ? "கடவுள் யார்யாரை நேசிக்கின்றாரோ அவர்களைத்தான் தண்டிக்கிறார்." இது நம்மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கவேண்டியது. துன்பமின்றி இன்பமில்லை. ஆகையால் இவ்வுலகிலிருக்கையில் கஸ்தி வழி சென்றே மோக்ஷபேரானந்தம் பெற எதிர்பார்க்கவேண்டும்.

5. அபிரகாமின் காரியக்காரனுகிய எலியஸெருக்கு "பானஞ்செய்யும் ஐயா" என்று மரியாதையாக வசனித்துக்கொண்டே தண்ணீர் ஈந்தனள் இரெபெக்காள். மீண்டு மவனை நோக்கி "உமது ஒட்டைகள் எல்லாங் குடித்துத் தீருமட்டுமே தண்ணீர் மொண்டு காட்டுவேன்" என்று கூறி குடத்துச் சலத்தைத் தொட்டியில் ஊற்றிவிட்டு மறுபடியும் தண்ணீர் மொள்ளக் கிணற்றண்டைக்குத் தீவிரமாய்ப் போய் மொண்டுகொண்டு ஒட்டகங்கள் யாவற்றுக்கும் ஊற்றிக் காட்டினாள்." இதினின்று இரெபெக்காளது ஈவு இரக்கத்தையும் ஜீவகாருண்யத்தையுங் கண்கூடாய்க் காண்கின்றோம். இவளை விட மேலான கருணைக்கடலாம் கன்னிமரியாய். மனிதர்களுக்கொப்பான நீதிமான் கன்மீதும் மிருகங்களுக்கினையான பாவிகள்மீதும் அன்பு பாராட்டி ஒத்தாசை புரிய பின்வாங்குகிறதில்லை. "ஞான இரெபெக்காளாகிய மரியாய், தங்களது புத்தியை நல்வழியில் நடத்தி உத்தமர்களாய் விளங்கும்புண்ணியவான்களுக்குத் தேவ இஷ்டப் பிரசாத பிரவாகத்தைப் பெற்றுப் பொழிகிறது மன்றி, புத்தியற்ற மிருகங்களைப்போன்ற பாவிகளுக்கும் அவர்கள் கேட்காவிடினுங்கூட தேவ அருள் நீர் காட்டி நல்வழி சொண்டுவர முயலாநிற்கின்றனன்" என அர்ச். அந்தோனின் உறுதியாய் மொழிகின்றனர். நமது நல்ல தாய் நமக்குதவி புரியும்வண்ணம் வேண்டுவோம். கொலேவாவென்பவரோடு அவளைப் பிரார்த்திப்போமாக. "மரியே! இதுகால் உலகமெனும் குடத்தினின்று பெருமையெனும் நீரைப் பானம்பண்ணினேன். இப்போது உனது குடத்தினின்று தண்ணீர் தருவாய். உலக குடத்தினின்று எவ்வளவு குடித்தும் தாகம் தீரவில்லை. பேயின் குடத்தினின்று குடித்து எங்களிருதயம் பாவத்தாலும் பயத்தாலும் நிரம்பியிருக்கின்றது. ஓ, மரியே! இரக்கஞ் சொரியும் இரெபெக்காளே! முன்காலுன் காட்டு கல்யாணப்போழ்தில் உமது திருக் குமாரனே வேண்டினதுபோல், இப்போது என்பாலிரங்கி எனக்காக மன்றாடுவாய். அவரிடமிருந்து எங்களுக்காக மன்றாடுவாய். அவரிடமிருந்து எங்களுக்காக தேவ அருள் நீரும் ஆத்ம அமைதியும் பெற்றருள்வாய் நீ!"

(இன்னும் வரும்.) *M. S. M.*

A REMARKABLE STORY.
ஓர் அதிசய சம்பவம்.

அமெரிக்க ஐக்கியராடுகளுக் கடுத்தாப்போல் அநேக தீவுகளிருக்கின்றன. அந்தத் தீவுகளில் ஒன்றில் லுலிவா வென்ற கிராமம் ஒன்றுண்டு. அந்தக் கிராமத்திலுள்ள அஞ்ஞானிகளுக்கு அந்த ஊரையடுத்தகப்பாடு என்ற பங்கு விசாரணையைச்சேர்ந்த கத்தோலிக்குக் குருமார்கள் தங்கள் சத்திய வேதத்தைப் போதித்துக்கொண்டுவந்தார்கள். இவர்கள் அங்கில்லாத சமயம் பார்த்து புரொடெஸ்டாண்டு பாதிரிகள் அங்கு போய், "கத்தோலிக்கு வேதம் சரியானதல்ல, அதில் பல கஷ்ட நிஷ்டூரங்களுண்டு, அதைத் தழுவவேண்டாம். எங்கள் மதத்தைத் தழுவுங்கள், உங்களுக்கு பலசௌகரியங்கள் செய்துகொடுப்போம், நீங்கள் சுகமாய் வாழலாம்" எனச் சொல்லி அக்கிராமத்தாரைத் தங்கள் வசம் இழுக்க முயற்சிசெய்தார்கள். ஏதுமறியாத அந்த மௌடீக மனிதர்கள் ஏதுசெய்வார்கள்? தங்களுடைய லௌகிக புத்திக்கு எது லாபகரமாய்த் தோன்றினதோ அதையே அநுசரிக்கத் தீர்மானித்தார்கள். எப்படியெனில் அந்தக் கிராமத்துக்கு பெரிய தனக்காரனவன் புரொடெஸ்டாண்டு மதத்தையே கைக்கொள்ளுவதாக வாக்குக்கொடுத்துவிட்டான்.

ஆயினும் இதன் மத்தியில் அந்தக் கிராமவாசிகளில் முதிர்ந்த வயதுடைய ஒருவன் அபாயத்துக்குரிய விதமாய் நோயுற்றுக் கிடந்தான். கத்தோலிக்கு வேதத்தில் பற்றுள்ள ஒருவன் அதைக் கண்டு, அக்கிழவனுக்கு ஞானஸ்நானங் கொடுக்க கப்பாட்டுக்கு ஓளனுப்பி ஒரு கத்தோலிக்குக் குருவானவரை யழைத்து வரச்செய்தான். அக்கிழவன் மிக்க கேவலமான ஸ்திதியிலிருந்தபடியால் அவனுக்கு வேத சத்திய மூழுமையும் கற்பிக்கமுடியாமல் மிக்க அவசியமானவற்றைமாத்திரம் உபதேசித்தபிறகு ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. ஞானஸ்நானம் பெற்ற சில நிமிஷங்களுக்குப்பிறகு கிழவன் இறந்துபோனான். அவனைச்சேர்ந்த பந்துக்கள் அவனைச் சுற்றியிருந்து அழுது கொண்டிருந்தார்கள்.

திடீரென இதோ! அங்கிருந்தவர்களெல்லோருந் திடுக்கிடும்படி, இறந்தவன் எழுந்து உட்கார்ந்து பின்வருமாறு பேசத் தொடங்கினான். "நான் சர்வேசுரனின் திருச்சமுகத்துக்குப்போனேன். கடவுள் என்னுடன் பேசி எனக்கு உத்தரவளித்ததாவது: 'நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். நீ நம்முடைய ராச்சியத்தில் பிரவேசிப்பதற்குமுன்னே, திரும்பவும் உலகத்துக்குப்போய் அங்கே உன் கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு, கப்பாட்டு விசாரணைக் குருக்களே நமது உண்மையான பிரதிநிதிகள், அவர்கள் போதித்த படி நமது பத்துக் கற்பனைகளை விசுவசித்து அவற்றின்பிரகாரம் நடக்கும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுவாயாக' என்பதே". இவ்வாறு செத்தவன் பிழைத்து உபதேசம்பண்ணுகிறானென்ற செய்தி கேட்ட அக்கிராமத்தாரும், அயல் கிராமத்தாரும் கூட்டங் கூட்டமாய் அவனைப் பார்க்கவந்தார்கள். அப்படி வந்த திரளான கும்பலுடன் அவன் வேறொன்றும் பேசாமல், அன்னந் தண்ணீர் ஒன்று மருந்தாமல், ஊணுறக்கமின்றி ஒரு பகலும் ஒரு இரவும், "கத்தோலிக்கு வேதத்தைவிடாதீர்கள், அதுவே சத்தியமான வேதம், அதைவிட்டால் மோசம்போவீர்கள், இது சத்தியம், சொன்னேன், சொன்னேன்" என்று ஓயாமல் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தான். பிறகு இரவு இரண்டு மணிக்கு இந்த உபதேசத்தை நிறுத்திவிட்டு, "என் கட்டளையை நிறைவேற்றிப் போட்டேன், என்னை என் மகன் வீட்டுக்கு தூக்கிக்கொண்டுபோங்கள். அங்கிருந்துதான் சர்வேசுரனுடைய வீட்டுக்குப் பிரயாணப்படுவேன்" என்று சொன்னான். அப்படியே அங்கு தூக்கிக்கொண்டுபோகப்பட்ட சில நிமிஷங்களுக்குள் கிழவன் உயிர்துறந்தான்.

இந்தச் சம்பவம் மெய்யோ பொய்யோவென்று விணவுவோருக்கு, இவ்விருத்தாந்தம் ஓஷியானியா என்னுந் தீவாந்தரநாடுகளுக்கு மேற்றிராணியாராண சரி. வ்.

லார்ன் ஆண்டவரவர்கள் கையினால் "நியூயார்க்கு மிஷனரி பேப்பர்" என்ற பத்திரிகைக்கு எழுதப்பட்டதென்றும், அவர் எழுதியபடியே இருநூறுக்கு அதிகமான பேர்கள் அவ்வாச்சரியத்தைக் கண்ணுரக் கண்டார்களென்றும், மிஷிகப்பாட்டு விசாரணைக் குருவாகிய சங். கொல்லிபால்ட் சுவாமியாரால் அது ஊர்ஜிதப்படுத்தப்பட்டதென்றும் சொல்வதைவிட வேறொன்றும் சொல்வதற்கில்லை.

PAYING FOR ABSOLUTION!
பாவப்பொறுத்தலுக்குப் பணம்!

பாவப்பொறுத்தல் அடைய நம் கிறீஸ்துவர்கள் நம் குருக்களுக்குப் பணம் கொடுத்துவருகிறார்களென்ற நம்பிக்கை அல்லது அவ்வாறான தப்பெண்ணம் புரொடெஸ்டாண்டாருக்குள் வழங்கப்பட்டு அல்லது போதிக்கப்பட்டுவருகிற தென்பது பின்வரும் விஷயத்தினால் நன்குவிளங்குகிறது. சமீபத்தில், லண்டன் பட்டணத்திலுள்ள, ஹைட் பார்க் என்னும் ஜன சிங்காரத் தோட்டத்தில், கத்தோலிக்கு உண்மை உபதேசச் சபையார் ஜனங்களுக்கு பஹிரங்கமாய் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தபொழுது, ஜனக் கும்பலிலிருந்து கனவானொருவர் தலை நீட்டி சொன்னதாவது:—"கத்தோலிக்கு வேதம் போதிப்பதையெல்லாம் எண்ணை விசுவசிக்கச்செய்ப உங்களால் முடியாதாயினும், இப்போது நீங்கள் உங்கள் பிரசங்கத்தால், எனக்கு அவ்வேதத்தின் மட்டிலிருந்த துவேஷத்தை நீக்கிவிட்டீர்கள். கத்தோலிக்குக் குருக்கள் பணம் பெற்றுக்கொண்டுதான் பாவப்பொறுத்தல் அளிக்கிறார்கள் என்று எனக்கு சிறுவமுதல் இருந்த நம்பிக்கை ஆகாரமற்றதென்று நீங்கள் இப்போது கருதலாமலகமெனக் காட்டிவிட்டீர்கள். நான் சிறுவனாயிருந்தபொழுது, என்னை வளர்த்த செவிலித்தாய் இவ்விஷயமாய் எனக்குக் கற்பித்த பாட்டு எனக்கு இன்னும் ஞாபகத்திலிருக்கிறது. அது ஒரு பிரபல வித்துவானால் இயற்றப்பெற்றது. அந்தப் பாட்டின் தாற்பரிய மிது:—ஒரு சிறுவன் ஒரு குருவையண்டி என் பாவ சங்கீர்த்தனத்தைக் கேட்டு, எனக்குப் பாவப்பொறுத்தல் கொடுமெனக் கேட்டானும். அதற்கு அவர் மறுமொழியாக பாவப்பொறுத்தல் கொடுப்பதற்கு எட்டணா கட்டணந் தரவேண்டுமென்றாராம். பிறகு அச்சிறுவனுக்கும், அக்குருவுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்ததாம்.

சிறுவன்.—"குருக்கள் பாவசங்கீர்த்தனம் பண்ணுவதில்லையோ?"

குருவானவர்.—"ஆம், குருக்கள் மேற்றிராணிமார்களிடத்தில் பாவசங்கீர்த்தனஞ்செய்கிறார்கள். அவர்கள் ஒரு பாவசங்கீர்த்தனத்துக்கு ஒரு ரூபாய் தரவேண்டும்."

சிறு.—"மேற்றிராணிமார்கள் பாவசங்கீர்த்தனம்பண்ணவேண்டுமானால்?"

குரு.—"ஓ! அவர்கள் அதிமேற்றிராணியாரிடம் செய்வார்கள். அதற்குமேல் அதிககட்டணம் அவருக்குக் கொடுக்கவேண்டும்."

சிறு.—"அப்புறம் அதிமேற்றிராணிமார்கள்?"

குரு.—"அவர்கள் கர்தினல்மார்களிடம், அதற்குமேல் அதிக கட்டணங்கொடுத்துச் செய்துகொள்ளுவார்கள்."

சிறு.—"கர்தினல்மார்கள்?"

குரு.—"அவர்கள் பாப்பானவரிடத்தில் அதைவிட அதிக கட்டணங் கொடுத்துத்தான் ஆகவேண்டும்."

சிறு.—"பாப்பானவர்கூட ஏதாவது கட்டணம் கட்டத்தான்வேண்டுமோ?"

குரு.—"ஓ! இல்லை, இல்லை. அவர் நேரே கடவுளிடத்தில் சங்கீர்த்தனஞ்செய்கிறார்."

சிறு.—"அப்படியானால், நானும் கடவுளிடத்தில் சங்கீர்த்தனஞ்செய்து என் அரை ரூபாயை மீதுதுக்கொள்வேன்."

கடைசியில் மேற் சிறுவன் சொன்ன பதிலே மேற் பாட்டின் படிப்பினை. இந்தக் கொள்கையே எனக்கு நெடுநாளிருந்தது. கடைசியில் உண்மை யிதுவல்ல.

கத்தோலிக்கர் பாவப்பொறுத்தலுக்குக் காசொன்றும் கொடுக்கவேண்டுவதில்லையென்று கண்டபிறகு, இவ்வாறு உண்மையில்லாததை உண்மைபோல் வற்புறுத்திக் கவி கட்டின புலவரின் அறியாமையையும், அக்கவியை சிறுவர் பாடப்புத்தகத்திற் சேர்த்தவர்களின் அறியாமையையும் பற்றிப் பேராச்சரியமுற்றேன்" என்று முடித்தார். தப்பான அபிப்பிராயத்தை ஜனங்களுக்குள் பரவச்செய்வதற்கு புறமதஸ்தார் மேற்கண்ட சூழ்ச்சிகள் செய்கையில், நமது வேதத்தின் உண்மை விஷயங்களை ஜனங்களுக்கு விளக்கிக்காட்ட நாம் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது. இக்குறையை நிவர்த்திக்கவே இவ்விந்தியாவில் சமீபத்தில் புதிதாய் "கத்தோலிக்கு உண்மைப் பிரசுரச் சபை" ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இச்சபையை உண்மைக் கத்தோலிக்கர் எவரும் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

THE PAPAL SEMINARY, KANDY.
கண்டியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுதேச குரு மடம்.

நமது நாட்டார் குருப்பட்டம் பெறுவதற்குப் படிக்க இலங்கைத்தீவில் கண்டியென்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுதேச குரு மடத்தைப்பற்றி நமது நல்லாயனை வாசிக்கும் நேயர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள் என்று நம்புகிறோம். இந்த அருமையான வேத சாஸ்திர கலாசாலையை ஏற்படுத்துவதிற் காட்டிய தீவிர புத்திக்கும், அபார ஆலோசனைக்கும் காலஞ்சென்ற மகாத்மாவாகிய பதின்மூன்றாம் சிங்கராயரென்னும் பாப்பரசருக்கு நம்மவர் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். "இந்தியாவின் இரட்சண்யம் அதன் மக்களையே விசேஷமாய்ப் பொருத்தது" என்னும் அம்மகானுடைய ஸ்திரமான நம்பிக்கையை செய்கையாற் காட்டியது அக்கலாசாலையின் ஸ்தாபகம். அந்த மடம் ஸ்தாபகமான மறுவருஷம் பாப்பரசரி னேவுதலால் செய்யப்பட்ட ஒரு பதக்கத்தி னொரு புறம் பொறிக்கப்பட்ட மொழிகளாவன. "இந்திய நாடே, நின் இரட்சண்யமாயிருப்பவர்கள் நின் மக்களே."

தங்கள் நாட்டினர் ஞானதீட்சை பெற்று பக்தியில் மேன்மேலும் விர்த்தியடைய அந்தந்த நாட்டில் பக்தியிலும் கல்வியிலும் தேர்ந்தவராயுள்ள பிள்ளைகளைத் தெரிந்துகொண்டு அவர்களைக் குருக்களாக்குவது அப்போஸ்தலர் காலமுதல் ஏற்பட்ட திருச்சபையின் வழக்கம். அர்ச். சின்னப்பர் நடவடிக்கை, நிருபங்கள் முதலிய வேதநூல்களால் அப்போஸ்தலர் யாவரும் இந்த மேலான யோசனையின்படியே நடந்துவந்ததாகத் தெரிகிறது. அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியாரும் வேதப் பரம்புதலுக்கு சுதேச குருக்கள் அவசியமெனக் கண்டறிந்தபடியால், கோவை மாநகரில் குருப்பட்டத்துக்குப் படிப்பதற்காக ஒரு கலாசாலையை ஸ்தாபித்தார். அவர் இந்தியாவைவிட்டு வெளி நாட்டுக் கேகும்போது, அந்த மடத்தை கோமஸ் என்னும் ஒரு குருவானவர் வசம் ஒப்பித்துச்சென்றார். அந்த குருவானவர், அர்ச். சவேரியாரின் நோக்கத்தை யுணராமல், அம்மடத்திலிருந்த சுதேசப் பிள்ளைகளை வெளிப்படுத்திவிட்டு, அவர்களுக்குப் பதிலாக போர்த்துகீஸியரைக் கொணர்ந்து, அவர்களுக்கு வேத சாஸ்திரங்களைப் போதித்துக் கொண்டிருந்தார். இதைக் கேள்விப்பட்ட அர்ச். சவேரியாருக்குண்டான எரிச்சலுக் களவில்லை; ஆதலால் அவர் சீன தேசத்திலிருந்து திரும்பி வந்ததும், கோமஸ் சுவாமியாரின் ஏற்பாட்டை அடியோடு தள்ளி, தமது பழய யோசனையின்படி சுதேசப் பிள்ளைகளைத் தேர்ச்சிசெய்ய முயன்றார். வேதப் பரம்புதலில் இந்திய குருக்களே தமக்குப் பேருதவி புரிந்தவர்களென்றும், அவர் அடிக்கடி அவர்களுடைய கூட்டுறவை நாடிப் பலனடைந்ததாகவும், இந்திய அப்போஸ்தலராகிய அம்மகான் தமது நிருபங்களில் வரைந்துள்ளார். எங்கெங்கே அர்ச். சவேரியார் உழைத்துவந்தாரோ, எங்கெங்கே அவருடைய அரிய போதகங்களைக் கர்ண பரம்பரையாய்க் காத்துவருகிறார்களோ அந்த இடங்களிலெல்லாம் கத்தோலிக்கு வேதம் வேரூன்றி நிலைபெற்றிருப்பதுடன், சுதேச குருக்களும் அதிகமாயிருந்திருப்பதாக விளங்குவது வியக்கத்தக்கதே. அடுத்தாப்போலிருக்கும் இலங்கைத் தீவில் ஒரு காலத்தில் குருக்களின்மையாலும் வேத கலாபனையாலும் நமது திருச்சபை யடியோடு

அழிந்துவிடும் என்று பயந்துகொண்டிருக்கையில், நமது இந்திய குருக்களே கடலைக் கடந்து அத்தீவிற்குப்போய், பரிசுத்தவானாகிய வாஸ்சுவாமிகளைத் தலைமையாகக் கொண்டு, மிக்கப் பராக்கிரமத்துடன் உழைத்து இந்தப் பேராபத்தை விலக்கினார்கள்.

ஆனால் நாள் போகப்போக என்ன காரணத்தாலோ இந்திய குருக்களின் தொகை குறைந்து, கிறீஸ்துவர்களின் விர்த்திக்குத் தகுந்தாப்போல் குருக்களின் தொகை விருத்தியடையவில்லை. நமது உன்னத வேதம் பழமையும் சிறப்பும்வாய்ந்த இந்த நாட்டில் வேரூன்றி வளர்ந்து தழைப்பதற்கு இந்திய குருக்கள் ஒரு விதத்தில் அவசியமென்றே சொல்லவேண்டியது. மேலும் இத்தேசத்தில் திருச்சபை யபிவிர்த்தியால் நாளடைவில் நமக்குள் பெருகும் ஆத்மாவசியங்களைக் கவனிக்க, பிரதி வருஷமும் ஐரோப்பாவிலிருந்து அபரிமிதமாய்க் குருக்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பது முடியாத காரியம். அநேக கோடி ஜனங்களோடு இன்னும் அஞ்ஞான இருளில் அழுந்திக்கிடக்கும் இந்தியாவை மனந்திருப்பும் அலுவலைப் புதிய வழியில் ஆரம்பிக்கவேண்டியதாயிருந்தது. போர்த்துகல் அரசன் ஆதரவிலிருந்த குருக்களுக்கும் மற்ற குருக்களுக்கும் நேர்ந்த சில சச்சரவுகளை, பதின்மூன்றாம் சிங்கராயர் என்னும் பாப்பானவர் சீர்படுத்தி, எட்டு மாகாணங்களடங்கிய வேதாதிபத்தியத்தை இந்தியாவில் ஸ்தாபித்தார். கொழும்பு, பெங்களூர், அல்லஹபாத் என்னும் மாகாணங்களிலுள்ள மாகாண் ஆலோசனைச் சபைகள் தத்தம் ஆதீனத்தில் சுதேச குருக்கள் படிக்க மடங்களை ஏற்படுத்தவேண்டுமெனத் தீர்மானித்தன. ஆனால் இந்த தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கிடையூறுகள் அநந்தம்; தேவ அழைப்பின் குறைவு, பொருளுதவியின்மை, ஒவ்வொரு மடத்துக்கும் வேண்டிய போதகாசிரியரின்மை முதலியன ஆதீன குரு மடங்கள் ஸ்தாபிப்பதற்கிடையூறாய் நின்றன. ஆதலால் அர்ச். பாப்பானவரே இவ்விஷயத்தில் முன்வந்து ஒரு வழி காட்டினார்; சுதேச குருக்களின் அபிவிர்த்திக்காதாரமாயும் மூலகாரணமாயும் இருக்கவேண்டிய ஒரு குரு மடத்தைத் தம்முடைய செலவில் கட்டத் தீர்மானித்தார்.

பொது மடமொன்றை ஸ்தாபிக்கவேண்டுமெனத் தீர்மானித்த அர்ச். பாப்பானவர், அதை நடத்தும் வேலையை பெல்ஜிய சேசு சபை குருக்களிடம் ஒப்புவித்தார். மேலும் அவர் அம்மடத்தை ஸ்தாபிக்கவேண்டியதற்கானமுன் முயற்சிகளைச் செய்யும்படி தம் ஸ்தானாபதியாகிய மகா வந்திக்கத்தக்க ஜெலஸ்கியாண்டவரவர்களை நேமித்தார். ஆண்டவரவர்களும் ஆரம்ப முதல் தம்மிடம் விடப்பட்ட இந்த விஷயத்தை தன்னுடைய சொந்தக் காரியமாகப் பாவித்தவரானபடியால், வங்காள ஆதீன குருவான குரோஷன் என்பவருடன், மடங் கட்டத் தகுந்த இடம் எங்கே கிடைக்குமென்று தேடித் தெரிந்துகொள்ளும்பொருட்டு, இந்தியா, இலங்கையென்னும் இரண்டு நாடுகளையும் சுற்றிப் பார்த்துக்கொண்டுவந்தனர். அநேக மேற்றிராணிமார்கள் தத்தம் அநுபவத்துக் கேற்பப் பல்வேறிடங்களைக் காட்டினார்கள்; ஆனால் அவற்றில் கண்டி, பெங்களூர் என்னும் இரண்டிடங்களே கடைசியில் யோசித்தற் குரியன என்று எண்ணினர். இவ்விரண்டு இடங்களின் சௌகர்யங்களைச் சீர்தூக்கிப் பார்த்ததில், ஜெலஸ்கியாண்டவரவர்கள் எப்போதும் பிரியப்படும் கண்டியென்னும் ஊரே, மடங் கட்ட வசதியான இடமென முடிவில் தீர்மானித்தனர்.

பின்னர் அவசியமான கட்டிடங்களைக் கட்டுவதற்குத் தகுந்த நிலம் வாங்கவேண்டியதே இரண்டாவதலுவலாயிற்று. கண்டியைச்சேர்ந்த தோட்ட முதலியவைகளைச் சுற்றி ஆராய்ந்து பார்த்ததில், இப்போது மடங் கட்டியிருக்குமிடமே தகுந்ததென்று, ஜெலஸ்கி யாண்டவரவர்கள் அதைத் தெரிந்துகொண்டார். புல்பூண்டுகளும் மனிதர் புகுந்து செல்லமுடியாதடர்ந்துள்ள முட் செடிகளும் நிறைந்து எங்கும் ஒரே காடாயிருந்த அந்த நிலத்தின் சொந்தக்காரர் பலபேர். அந்த வூராரின் பழக்க வழக்கங்களை நன்கறிந்த ஒருவருடைய உதவியால் நிலத்துக்குடையவர்களுடன் தக்கவிதமாய்ப் பேசி அவர்களை விற்றுவிடும்படி வழிக்குக் கொண்டுவருவது எமப் பிரயத்தனமாகிவிட்டதுடன், காலமுங் கடந்தது. கடைசியில் தேவ கிருபையால் சுமார் 180 ஏக்கராக்களடங்கிய அந்த நிலத்தை வாங்கினார்கள். உடனே விசாலமான ஒரு கட்டிடத்தைக் கட்டுவதென்றால் நாள் பிடிக்குமென்று, ஒரு வீட்டை கொஞ்ச நாளுக்கு வாடகைக்கமர்த்தி, பின்னர் பிள்ளைகள் தங்குவதற்கு ஒரு சிறிய கட்டிடமும் கட்டப்பட்டது.

1894வது தற்போதுள்ள கட்டிடங்களின் அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டு, 1899வது வேலை முடிந்தது. கடல் மட்டத்துக்கு 2,000 அடி யுயரத்துக்கு மேல் கட்டப்பட்டு விளங்கும் அந்த மடம் மூன்றடுக்குகள்கொண்ட ஒரு பெரிய மாளிகை. அதே அளவினதாக வேறொரு கட்டிடம் அதன் பக்கல் கட்டவேண்டுமென்பதே ஆரம்பத்தில் செய்த ஏற்பாடாயினும், பணமுடையால் அதைப்பற்றி தற்சமயம் கவனிப்பதில்லையென்று விடப்பட்டது. அந்த குரு மடமானது இலங்கையில் வெகு விநோதமும் அழகும் நிறைந்த இடங்களில் ஒன்றுகிய உயர்ந்த ஸ்தலத்தில் கட்டப்பட்டு விளங்குவதுடன், அதற்கு காலா பக்கத்திலும் பரந்து கிடக்கும் மரங்களடர்ந்த செழிப்பான அழகிய பள்ளத்தாக்குகளும், காடடர்ந்து வானத்தை யளாவும் பெரிய மலைகளுமாகிய இயற்கை விநோதங்களை அம்மடத்திலிருந்து பார்ப்பதற்கு வெகு ரம்மியமாயிருக்கும். ஜன சந்தடியும், நகரப் பரபரப்பும் எள்ளளவுந் தோன்றுத ஏகாந்தமான இடத்தின் காற்புறமும் தென்னந் தோப்புகளால் சூழப்பட்டு, எப்பவும் சுத்தமான குளிர்ந்த காற்று வீசப்பெற்றதாய் அமைந்துள்ளது அந்த குரு மடம். மன அமைதியுடன் கல்வி கற்பதற்கு வசதியான இடமாம். அந்த நிலத்தை வாங்கும்போது, அதில் பலவித காட்டுப் பூண்டுகளும், முட்செடிகளும் நெருங்கி வளர்ந்திருந்தன. பின்னர் அந்நிலத்தின் பெரும் பாகம் நாளாவட்டத்தில் சீர்திருத்தப்பட்டு, தென்னை, தேயிலை முதலியவைகள் அதிற் பயிராகின்றன. அதன் தற்போதிய வருமானத்தை அந்நிலத்தை மேன்மேலும் திருத்தி வளப்படுத்தவே செலவிட்டுவருகிறார்கள். ஆனால் கொஞ்ச காலத்தில் கிலம் பண்பட்டு திருத்தி நல்ல வருமானத்தை யளிக்கும்போது அதைக் குரு மடத்திற் படிக்கும் பிள்ளைகளின் செலவுக்கு உபயோகிப்பார்கள் என்று எதிர்பார்க்க இடமுண்டாம்.

இத்தகைய நிலைமையில் ஆரம்பிக்கப்பட்ட கண்டி வேத வித்தியாசாலையில் துவக்கத்தில் படித்த பிள்ளைகள் பதினெண்ணும். இத்தொகை நாளாவட்டத்தில் பெருகி இப்போது சுமார் நூறு மாணவர்வரையில் அங்கே குருப்பட்டத்துக்குப் படித்துவருகிறார்கள். இம்மாணவர் இந்தியா, இலங்கை, மோரீஸ் முதலிய இடங்களிலுள்ள இருபத்திரண்டு மேற்றிராசனங்களிலிருந்தும்வந்தவர்கள். சண்டையினால் உண்டாகிய பணமுடையில்லாவிட்டால், மாணவர் தொகை அதிகமாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. மேலும் பல பாஷை பேசுவோரும் பல ஜாதியாரும் ஒரே இடத்தில் வாசித்து ஒரு கூரையின்கீழ் ஒரு குடும்பத்தைப்போல் வசித்துவருவது எவ்வளவோ ஆச்சரியப்படத்தக்க விஷயம்! அம்மாணவர்களில் ஐரோப்பியர், சட்டைக்காரர், இந்தியர், சிங்களவர் முதலிய பல ஜாதியாரும் பல நாட்டினரும் இருந்து பிரிருக்கிறார்கள். இப்போதும் இருந்தும் வருகிறார்கள். அவர்களுக்குள் ஒற்றுமையும், சகோதர வாஞ்சையும், அன்பும் செப்பத்தரமன்று. எழெட்டு வருஷங்கள் இம்மாணவர் தம்மூரை விட்டு ஒரே இடத்தில் தங்கி, ஒரே மேசையிலுண்டு, ஒருவர் ஒருவருடன் அளவளாவி, இடையில் தமது சொந்த ஊருக்குப்போகாமலே காலங்கழிப்பதால் அவர்களுக்குள் நமது மெய்ம்மறையில்மட்டுமே உண்டாக்கூடிய சகோதரத்துவம் விர்த்தியாகி வளர்ந்து நமது நாட்டில் வேத விசுவாசப் பரம்புதலுக்கு ஓரரண்போலிருக்குமென்பது திண்ணம்.

இவ்வாறு நமது நாட்டில் திருச்சபையை வளர்த்துப் போஷிக்கும் முக்கிய ஆதாரம்போல் விளங்கும் இந்த கண்டி குரு மடம் சிலவருஷங்களில் செய்திருக்கும் நன்மையைக் கவனித்தால், அவ்வித்தியாசாலையின் இன்றியமையாமை தெற்றெனத் தோன்றும். சுமார் இருநூறு குருமார் அங்கே படித்துக் குருப்பட்டம் பெற்றுத் தத்தம் ஆதீனங்களுக்குச் சென்று அங்கே பலவித அலுவலைப் பார்த்துவருகிறார்கள். கண்டி சுவாமிமார் இங்காட்டில் எங்கு முழைத்துவருகிறார்கள். சிலர் சிறிய குரு மடங்களை நடத்திவருகிறார்கள்; சிலர் கலாசாலைகளுக்குத் தலைவராகவும் போதகாசிரியர்களாகவும் விளங்குகிறார்கள்; சிலர் மேற்றிராணிமாருக்குக் காரியதரிசிகளாயிருந்துவருகிறார்கள்; ஆனால் பெரும்பான்மையோர் நகரங்களிலும் பட்டிக்காடுகளிலும் பங்கு விசாரணை செய்துவருகிறார்கள். கண்டி குரு மடப் பழய மாணவரில் மூன்று பேர் மேற்றிராணியார் பட்டத்துக்குயர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆறு பேர் தாங்கள் போக இச்சித்திருந்த நமது பரம பிதாவினருகில் இளைப்பாறுகிறார்கள்.

மடம் உண்டான சொற்ப காலத்துக்குள் இவ்வளவு நன்மை புரிந்துள்ள இந்த வேத வித்தியாசாலை இனி இதனிலும் பன்மடங்கு நன்மைகள் புரிந்து நமது நாட்டின் அஞ்ஞான அந்தகாரத்தை யழிக்குமோர் ஆதவனுய் விளங்குமென்பதிற் சந்தேகமேயில்லை. அப்படியே அருள்புரியும்படியாக, ஆதாரமென்று அண்டினோரை அணைத்து, அவர்க ளிடையூறைப் போக்கி கலம் புரியும் அருட்பெருங் கடலாகிய ஆகந்த பரமனது அரவிந்தப் பாதங்களை இறைஞ்சித் தொழுகிறோம்.

S. S.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

5-ம் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாள் விதவையானாள்—அதஸ்தீன் கலாசாலையில் சிறந்த வித்தைகளைக் கற்றுத் தேர்ச்சியடையும்படி தனது அஸ்திபாஸ்திகள்யாவையும் செலவழிக்கிறாள்—உரோமானியன் என்பவன் அவளுக்கு சகாயமாய் வருகிறான்—அதஸ்தீனுடைய தீய வொழுக்கத்தைப்பற்றி அவள் கஷ்ட சாகாத்தில் அமிழ்ந்தியிருக்கையில், அவர் திரும்ப சன்மார்க்கத்தை நாடி வரச்செய்யும் முயற்சிகள் பலிக்கென்று தோன்றும் மின்னலுக்கோப்ப அவளது இருதயத்தில் நம்பிக்கையைப் பிறப்பிக்கின்றன.

(இ. அ. 372—375.)

(முன் தொடர்ச்சி.)

தனக்கிருந்த ஞானவைராக்கியத்தோடும் உத்தம ஆலோசனையோடும், அவள் செய்துவந்த இன்னொரு தருமக் கிருத்தியம் யாதெனில், அநாத பிள்ளைகளை ஆதரிப்பதேயாம். அப்பிள்ளைகளுக்குத் தாய்மார் இருந்திருந்தால், இளமையிலேயே அவர்களுக்கு ஞானோபதேசம் கற்றுக்கொடுத்து நல்வழியில் நடத்தியிருப்பார்கள். ஆனால் அத்தாய்மார் காலமடைந்தபடியால் அவ்வித நற்போதனை யூட்டயாருமிருந்ததில்லை.

"தாயற்றபோதே சேற்றதென்றும்
தந்தையற்றபோதே கல்வியற்றதென்றும்"

வழங்கும் பழமொழிப்படி, அப்பிள்ளைகளும் துர்ச்சகவாசஞ்செய்து, வேத விசுவாசத்தை யிழந்துபோவார்கள். அர்ச். மோனிக்கம்மாளோ வெனில், அப்பிள்ளைகளைத் தன் மக்களைப்போல் பாராட்டி, சில சமயத்தில் அவர்களைத் தன் வீட்டிலேயேவைத்து வளர்த்துக்கொண்டு சன்மார்க்கத்திற் பயிற்றுவிப்பாள். வியாகுல நிறைந்த ஒரு தாயினுடைய இருதயத்தின் ஆவல் எப்படிப்பட்டதென்ற இதனால் மைக்குத் தெரியவருகிறது. கர்த்தர் அருளீனே கல்வழியில் திருப்பித் தனக்குக் கொடுத்தருளும்படியாக, தான் இப்பிள்ளைகளை கல்வழியில் திருப்பி அவருக்கு ஒப்புக்கொடுப்பாள். தனது குமாரன் விசுவாசத்தில் ஸ்திரமடையவும், அவர் தன் மனசாட்சியின் கண்டனைக்குச் செவிகொடுத்துப் புண்ணிய முயற்சிகளை யநுசரித்து, தேவ நேசத்தையடையும்படியாகவும், இப்பிள்ளைகளுடைய இருதயங்களில் தேவ நேசத்தையும் விசுவாசத்தையும் தேவ பயத்தையும் எழுப்புவாள்.

ஆனால் அவள் புரிந்துவந்த தரும கிருத்தியங்களுள் அதிக மாட்சிமைதங்கியதும் அத்தியந்த பிரயோசனமுள்ளதுமான தேதெனில், விதவைகளுக்கும் சமூசாரிகளுக்கும் ஆறுதலளிப்பதாம். இக்கிருத்தியமே அவளுடைய இருதய நாட்டத்திற்கு வெகுவாய் ஒத்திருந்தது. இக்கிருத்தியத்திற்கே கர்த்தர் விசேஷமானவிதமாய் அவளை ஆயத்தஞ் செய்திருந்தார். ஐயோ! ஜனங்கள் விதவைகளுக்குத்தான் எப்போதும் ஆறுதலளிப்பார்கள். ஆனால் "சமூசாரம், சாலதக்கம்" என்னப்படுகிறதினால், விவாக அந்தஸ்திலிருப்பவர்களுக்கும் ஆறுதல் இன்றியமையாதென்று கனவில்முதலாய் நினைப்பவர்கள் யார்? அப்படிப்பட்ட ஆறுதலையவர்களுக்கு யார் அளிக்கக்கூடும்? விவாக அந்தஸ்திலிருப்பவர்களுடைய துக்கத்தைவிட, அதிக அகோரமானதும் அந்தரங்கமானதும் வேறு கிடையாது. இவர்களுடைய இருதயங்கள் வியாகுலப் பெருக்கத்தில் மூழ்கியிருந்தாலும், யாவையும் உள்ளே அடக்கிக்கொண்டு, வெளிக்குச் சந்தோஷமுகத்தையே காட்டவேண்டியிருக்கிறது. சமூசாரத்தில் இருக்கும் எத்தனை பெண்கள், தங்கள் புருஷர்களால் தக்கபடி நேசிக்கப்படுகிறதில்லை

எத்தனை பேர்கள் தங்கள் புருஷர்களுடைய நேசத்தை யிழந்து அவர்களால் அலட்சியத்துடனேயும் வெறுப்புடனேயும் நடத்தப்பட்டு, அநேக சமயங்களில் நிராதரவாய்க் கைவிடப்படுகிறார்கள். புருஷர்களிடம் வாழும் எத்தனையோ ஸ்திரீகளின் வெளிக்கோலத்தை உலகம்பார்த்து, "ஆ! ஆ! இவர்களுக்கென்ன அதிர்ஷ்டம்" என்று பொறாமைகொள்ளுகிறது. ஆனால் அந்த ஸ்திரீகளின் உள்ளாந்தரக் காரியங்களைக் கொஞ்சம் கவனித்துப்பார்த்தால், பரிதாபம் பரிதாபமே. இவையெல்லாம் அர்ச். மோனிக்கம்மாளுக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் சமுசார வாழ்க்கையிலிருக்கும் ஸ்திரீகளிடம்போய், அத்தியந்த மாதுரியத்தோடும், உந்நதமான சுசீலத்தோடும், ஆழ்ந்த குட்சமப் புத்தியோடும் அவர்களிடம் நல்ல வார்த்தைகளைப் பேசி ஆறுதலளிப்பாள். இப்படிச் செய்வதில் இவளடைந்த அநுகூலசித்தி ஆச்சரியத்துக்குரியது.

அவள் தன் சீயிய காலத்தில் புரிந்துவந்த பிறர்நிநேகக் கிருத்தியங்களுள் சில இப்படிப்பட்டவைகள். உலக இன்பத்தில்முதலாய்க் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஆயாசம் உண்டாவதேயானால், பத்திக்கிருத்தியத்தில் அப்பேர்ப்பட்ட ஆயாசம் ஏன் உண்டாகக்கூடாது? மோனிக்கம்மாளுக்குத் தான் செய்துவரும் பிறநிநேகக்கிருத்தியங்களில் ஆயாசம் உண்டாகுமேயானால், உடனே திருப்பீடத்தில் தேவநேசப் பலியாய் நிவாசங்கொண்டிருக்கும் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய சீயியமூள்ள வற்றுத ஊருணியிடம் தீவிரமாய்ப் போய், வேண்டிய பலத்தையும் சத்துவத்தையும் மன்றாடி அடைவாள்.

அக்காலத்தில் காலையிலாவது மாலையிலாவது, யாராவது தகாஸ்தேயிலுள்ள கோவிலுக்குப்போனால், அர்ச். மோனிக்கம்மாள் பிறவத்தில் ஆசையோடு எத்த மூலை முடுக்கில் உட்கார்ந்துகொண்டிருந்தாளோ, அதே இடத்தில் இப்போதும் அவள் முழங்காலிலிருக்க, துக்கம் நிறைத்த அவளது சுந்தர வதனத்தில், ஆழ்ந்த விசுவாசமும் உருக்கமுள்ள தேவ நிநேகமும் பிரதாபத்துடன் விளங்குவதைக் காணலாகும். அவள் கோவிலில் நடக்கும் தேவாராதனைகளுக்கு எப்பொழுதும் தப்பினவளேயல்ல. மேலும் ஒரு நாளைக் கிருதரம் தேவிலேச் சந்தித்து, ஒவ்வொரு சந்திப்பிலும் நெடுநேரம் ஜெபத்தில் செலவழிப்பாள். அவள் விதவையானபிறகு, ஓயாமல் வேதாகமங்களையும் விசேஷமாய் சங்கீதாகமத்தையும் வாசித்து, கர்த்தரின் மகத்துவத்தையும் பாவத்தின் கொடூரத்தையும் நினைத்துக் கண்ணீர் சிந்தி யழுவாள்.

அர்ச்சியசிஷ்டவர்களின்மட்டில், விசேஷமாய் வேதசாட்சிகளின்மட்டில், அவளுக்கு பத்தி மெத்த. அவர்களது திருக்கல்லறைகளுக்கும், அவர்களுடைய வீரத்துவமான கிருத்தியங்களினால் பிரபலமடைந்த ஸ்தலங்களுக்கும், அடிக்கடி திருயாத்திரையாய்ப் போவாள். அக்காலத்திய வழக்கப்படி, அவர்களுடைய திருநாள் காலங்களில், சிறுகூடைகளில் உரொட்டி, திராட்சாரசம், மாமிஸம், ஆகிய இவைகளை கிரப்பிக் கோவிலில் கொண்டுபோய் காணிக்கையாய் ஒப்புக்கொடுப்பாள். இவைகளை யவர்களுடைய கல்லறைகளின்மேல் பரப்பி, அவர்களுடைய பேறுகளில் பங்கடைய தனக்கிருக்கும் ஆசைக்கு அறிகுறியாக, அவைகளுள் ஒவ்வொன்றில் கொஞ்சம் எடுத்துச் சுவை பார்த்து, பிறகு ஏழைகளுக்குப் பங்கிட்டுத்தருவாள். இப்படிச் செய்வதில், அந்த நல்ல பழய வழக்கம் பங்கமடையவும், அதனால் அது முழுதும் எடுபடவும் காரணமாயிருந்த அலங்கோலங்களுக்குச் சற்றேனும் இடந்தராமல் அதி எச்சரிக்கையாயிருப்பாள்.

அர்ச். அகுஸ்தீன் சொல்வது, "சவக் காணிக்கைகளடங்கிய கூடையை, அவள் வேதசாட்சிகளின் கல்லறைகளண்டை கொண்டுவந்ததும், காணிக்கை பதார்த்தங்கள் ஒவ்வொன்றிலும் கொஞ்சங் கொஞ்சம் சுவை பார்த்து சில துளி ரசத்தை எடுத்து, அதில் தண்ணீர் வார்த்து, பிறகு அதைத் தான் பானம்பண்ண வைத்துக் கொண்டு, மிகுதியான யாவற்றையும் தாரித்திரருக்குப் பங்கிட்டுத்தருவாள். ஒரோ நாளில் இரண்டு மூன்று வேதசாட்சிகளின் திருநாட்கள் கொண்டாடப்படும்பட்சத்தில், அப்போது எல்லா திருநாட்களுக்போராலும், ஒரே கோப்பை திராட்சாரசத்தை வார்த்து, அதில் தாராளமாய் நீரைக்கலந்து வைத்துக்கொண்டு, தானும் தன் நிநேகிதர்களுமாக கொஞ்சங் கொஞ்சமாக உறிஞ்சிக் குடிப்பார்கள். இப்படியிவள் செய்தது பத்தி நிமித்தமாகவேயன்றி, சர்தோஷத்திற்காகவல்ல.

பிரதி காலையிலும் பூசைகண்டு, அத்தியந்த பக்தி சிரத்தையோடும், உருக்கப் பெருக்கத்தோடும், சற்பிரசாதம் வாங்குவாள். கடவுள் அவளை

உந்நதமான விசேஷ இஷ்டப்பிரசாதவரங்களினால் நிரப்பினார். அவள் எப்போதும் கண்ணுங் கண்ணீருமாகச் செபம் செய்வாள். அடிக்கடி விசேஷமாய் இரட்சகரின் திரு ஸ்நேஹாற்சவ நாள்களில் மெய்ம்மறந்து பரவசமடைவாள். ஆனால் எல்லா தேவரகசியங்களிலும் நமதாண்டவருடைய பாடுகளின் தேவரகசியமே, அவளுடைய ஆத்துமத்தை மேலுக்கெழுப்பி, அவளுடைய இருதயத்தைத் தீயின்மூன்வைத்த மெழுகைப்போல் உருகச்செய்யும். நமதாண்டவர் சிலுவை மரத்தில் உயிர்விட்டார் என்று நினைத்தால், உடனே அவளது இருதயம் அவ்விசனத்தைத் தாளமுடியாமல் சோர்வடையும்.

முக்கியமாய் ஒரு நாள், அவள் கோவிலில் இரட்சண்யப் பரம ரகசியத்தைத் தியானித்துக் கொண்டு, இவ்ய இரட்சகரின் பாடுகளின் மூகாந்தரமாய் உண்டாகும் பேறுபலன்களின் பெருக்கையும், மாட்சிமையையும், உற்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவளது ஆத்துமத்தைத் தமது வரத்தினாலும், தேவ நிநேகத்தினாலும், ஞான வெளிச்சத்தினாலும் அவ்வளவாய் நிரப்பினபடியால், அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாய் வடிய, மயக்கங் கொண்டு சோர்வடைந்தாள். புத்தி தெளிவடைந்ததும், தன்னைச்சுற்றி ஜனங்கள் இருப்பதைப்பார்த்து, தானிருந்த நிலைமையை யெங்கே அவர்கள் அறிந்துகொள்ளுகிறார்களோவென்று, தீவிரமாய் கோவிலேவிட்டுபுறப்பட்டுப்போனாள். ஆனால் பயனில்லை. ஏனெனில், அவள் கண்களினின்று கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரிந்து, அவளது வெளுத்த கன்னங்களில் வழிந்தோடியபடியால், கோவிலுக்குவந்த ஜனங்கள் அவளைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டு, ஐயோ பாவம்! ஏதோ துக்கம் மேலிட்டு அழுகிறாளென்றெண்ணி, அவளுக்கு ஆறுதலளிக்கத் தொடங்கினார்கள். ஆனால் மனிதர்கள் அவளுக்கு என்ன ஆறுதலே யளிக்கப்போகிறார்கள்!

கடவுள் தாம் தெரிந்துகொள்பவர்களுக்கு, சில சமயம் ஒரு விதமான வியாகுலத்தைத் தருவதுண்டு. அப்படிப்பட்ட வியாகுலத்தை யவர் மோனிக்கம்மாளுக்குத் தந்ததிலிருந்து, அவள் ஓயாமல் கண்ணீர் சிந்தி அழுவாள். அர்ச். மோனிக்கம்மாளுடைய சரித்திரம் முழுவதிலும், அவள் வியாகுலமடைந்தாள் எனும் ஒரு விஷயமே நமக்குத் திட்டமாய்த் தெரியவருகிறது. ஆனால், இதனால் எவ்வளவு காரியம் வெளிக்கு வருகிறது! இது எத்தகையான புண்ணியங்களைக் காட்டுகிறது! எம்மேரையான தேவ சம்பந்தத்தை அறிவிக்கிறது!

அவளுடைய கோர்த்தியான சீயிய விருத்தாந்தத்தை நாம் விவரமாய் அறியக்கூடாமலிருக்கிறது எப்பேர்ப்பட்ட துயரமான காரியம்! இச்சரித்திரம் போகப்போக இடைக்கிடை நமக்கப்பேர்ப்பட்ட துயரமுண்டாகும். அகுஸ்தீன் தன் மார்க்கத்தில் அலைந்து திரிந்திருக்கும் காலத்தில், அவள் சீவித்துவந்த ஜெப சீயியமும், இயல்புகடந்து அவன் புரிந்துவந்த சரீர ஒறுத்தலும், தவமுயற்சிகளும், நமக்கு விவரமாய்த் தெரியவில்லையே! உலகத்தை அவள் எவ்வளவாய் வெறுத்தாளென்றும், தனது இச்சையை எவ்வளவாய் அடக்கினாளென்றும், குடும்ப சீயியத்தில் அவள் அநுஷ்டித்துவந்த புண்ணிய முயற்சிகளும், வீரத்துவமான பிறநிநேக கிருத்தியங்களும், இன்னின்னவையென்றும் நாமறியோமே! தன் பெற்றோருக்குக் குமாரத்தியாகவும், தன் புருஷனுக்குப் பத்தினியாகவும், ஏழைகளுக்கு ஊழியக்காரியாகவும், ஆத்ம காரியங்களில் சுத்த யோகியாகவும், அவள் சீவித்த சீயியத்தை நமக்குத் தெரிவிக்காமல் மறைத்துவைத்து, அவளது தாய்க்குரிய அன்புக்கும் கவலைக்கும் நேசத்திற்கும் அடுத்த சீயிய விவரத்தை மாத்திரமே, கர்த்தர் நமக்கறிவிக்கச் சித்தங்கொண்டதுபோலிருக்கின்றது.

பத்தீவிபூஸ் மரணமடைந்தது அவளுக்கு ஒரு பெரிய விபத்தென்று அநேக காரணங்களைப்பற்றிச் சொல்லக்கூடும். அவரென்னவோ பணக்காரரல்ல. தனது செலவைக் குறைத்து, குடும்ப சீவனத்தைச் சிக்கினமாய் நடத்தி, அகுஸ்தீனைப் படிக்கவைப்பதற்குவேண்டிய திரவியத்தைச் சேகரித்துவைத்தார். ஆனால் அத்தொகையாவும் செலவழிந்துபோனதினால், அவர் மரணத்திற்குப்பிறகு தான் எப்படி காலகேபம் செய்வதென்று தெரியாமல் மோனிக்கம்மாள் கலங்கினாள். உண்மையாகவே தன் மட்டுக்கும் அவள் இச்சித்தவெல்லாம் சுயப்பரித்தியாகமேயன்றி வேறல்ல. தான் தாரித்திர சீயியம் சீவிக்க நேர்ந்துகொண்டாள். வேண்டுமென்று தாரித்திர சீயியத்தைக் கைப்பற்றி காலங்கழிப்பதைவிட, சுயமாய் தரித்திரளாயிருந்து எவ்வித முறுமுறுப்புமின்றி அவ்வந்தஸ்தில் தேவ சித்தத்திற்குப் பணிந்து நடப்பது சிரேஷ்டமென்று அர்ச்சியசிஷ்டவர்கள் சொல்லி

யிருக்கிறார்கள். ஆனல் மோனிக்கம்மாள் கருணை நிறைந்த தாயார். தான் தாரித்திரத்திலிருந்தாலும், தன் மக்களும் அப்படியே தாரித்திரத்தில் தவிப்பதைத் தாங்கமாட்டாள். மேலும் அகஸ்தீன் கெட்டிக்காரனென்று பேரெடுத்திருந்தபடியால், எல்லா சாதனங்களும் சௌகரியங்களும் அவருக்கு இருந்து, இண்ணம் கல்வியிலேயே ஊடாடிவருவாரேயானல் பிரபலமான சாஸ்திரியாவாரென்றும் நம்பிக்கையிருந்தது. ஆனல் அவரை இண்ணம் படிக்கவைக்க போதுமான பணமில்லாததினுல், அவருடைய படிப்பை நிறுத்திவிட்டு தானிருக்கும் தகாஸ்தேயுக்கு அவரை அழைத்துக்கொண்டால், அவர் என்ன செய்வதென்று தெரியாமல், நாட்களோ வீணிலும் சோம்பேறித்தனத்திலும் செலவழித்து, கற்ற கல்வியையும் நாளடைவில் மறந்து விடுவது எப்படிப்பட்ட நிர்ப்பாக்கியமென்று உணர்ந்தாள். இந்த நிர்ப்பாக்கியத்திற் கிடங்கொடாமல், அவர் இண்ணும் உயர்தரக் கல்வியைக் கற்றுவருவதற்கு, தான் எவ்வித அரும்பிரயாசைகள் படவேண்டியிருந்தாலும், அவைகள் யாவற்றையும் பட சித்தமாயிருந்தாள்.

(இண்ணும் வரும்.)

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். நிருப நேயர்கள் தங்கள் நிருபங்களை மிக விரிவாயி எழுதிவிடுகிறார்கள். இடம் போதாமையால் அவைகளை ஒருவாறு தறைக்கவும், அல்லது முழுதுமே விலக்கவும் அவசியம் நேரிடுகிறது. நேயர்கள் இதைக் கவனித்துத் தங்கள் கடிதங்களைக் கூடியவரையில் சுருக்கி எழுத வேண்டுமெனக் கோருகிறேம். ப—ர்.]

தெ. இ. க. சங்கம் என்ன செய்தது?

சங். பத்திராதிபரே,

இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு சென்ற மே மீ 3-தோடு சரியாய் இருபது வருஷங்களாயின. இந்த 20-வருஷங்களாக இச்சங்கம் கத்தோலிக்கு இந்தியர் ஜனசமூகத்துக்கு என்ன நன்மை செய்துவிட்டது? என்ற கேள்வி பலகால் கேட்கப்படுகிறது. இக்கேள்வி சம்பந்தமாய் நான் இங்கு வரையும் சில சமாதானங்களை தயைசெய்து நும் பத்திரிகையிற் பிரசுரிப்பீரெனக் கோருகிறேன். டி கேள்விக்கு விடை சொல்லுமுன்னே, சங்கமாவது என்னவென்று அறிந்துகொள்வது அவசியம். யாதாமொரு அல்லது பல கருத்துக்களுக்காகப் பலர் சேர்ந்து ஒருமித்துத் தொழில் செய்யும் ஸ்தாபனமே சங்கமெனப்படும். ஒரு சங்கமானது அதன் அங்கத்தினர் செலுத்தும்வழி செல்லுமேயன்றி வேறல்ல. ஒரு சங்கத்தின்மேல் குணமோ குற்றமோ கூறும்போது, அக்குணமாவது குற்றமாவது அச்சங்கத்தைச்சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரையுஞ் சாருமேயன்றி, அவர்களில் ஒருவரை அல்லது சிலரைமாத்திரஞ் சாராது. அதுபோல தெ. இ. க. சங்கத்தைச்சேர்ந்த ஒருவர் அச்சங்கம் என்ன செய்துவிட்டது? என்ற கேள்வி கேட்பாராஞல், அவரையே நோக்கி, "நீர் அச்சங்கத்துக்கு என்ன செய்தீர்?" எனக் கேட்கலாம். அல்லது அவரே சரியான மனச்சாட்சியுடையவராஞல், தம்மைத்தாமே அக்கேள்வி கேட்டுக்கொள்ளவேண்டும். அதாவது: "கத்தோலிக்கரின் பொது நன்மைக்காக எற்பட்டுள்ள இச்சபையில் சேர்ந்து இத்தனே நாளாக நாம் இதற்கு என்ன செய்தோம்?" என்பதே. சங்கத்தின் கட்டணங்களைச் சரிவரக் கொடுத்துவருவதோடே ஒரு அங்கத்தினர் கடமை தீர்ந்துவிட்டதென்று எண்ணவொண்ணுது. சங்கம் எண்ண கருத்துக்காக எற்பட்டதோ அந்தக் கருத்து நிறைவேறுகிறதா வென்று பார்த்து, நிறைவேறுதபட்சத்தில் அதற்குக் காரணம் யாது என்று கண்டுபிடித்து, அதைப் பரிகரிக்கத் தாமும் தம்மைப்போல் அபிப்பிராயங்கொண்டவர்களும் பிரயாசைப்படவேண்டும். இதைவிட்டுக் குறைகூறுவதில் பிரயோஜனமில்லை.

தெ. இ. க. சங்கம் என்ன செய்துவிட்டது? என்று கேட்பவர்களிற் பெரும்பாலோரும் அது செய்யக்கூடியவற்றில் ஒன்றஞ் செய்யவில்லை என்கிற எண்ணத்தில் நம்பிக்கை கொண்டவராய் அக்கேள்வி கேட்கிறார்கள். அவ்வாறு எண்ணுவது பிசகு. எனெனில் அச்சங்கம் கொண்டிருக்கும் கருத்துக்கள் பலவும் மகத்தாண்மைகளுமாயிருக்கின்றன. அநேக பெருந் தொகையினர் சேர்ந்து அதைத் தக்கபடி ஆதரிக்காததினுலும், போதுமான பண வசூலாகாததினுலும், எழை மாணுக்கர்களுக்கு ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச் சம்பளம் உதவுவது, அவர்கள் இருக்க ஆஸ்டல் என்னும் விடுதிகள் ஏற்படுத்துவது, பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது, அநாதைகள், விதவைகள், வயது சென்றவர்கள் முதலிய ஆதரவற்றவர்களுக்கு அன்ன சத்திரங்கள் சாவடிகள் கட்டுவது, அல்லது அப்படிப்பட்டவர்களுக்கு பண உதவி செய்வது முதலிய பரோபகாரக் கருமங்கள் செய்யக்கூடவில்லையென்றுலும், மிகுந்த பணச் செலவின்றி யாகக்கூடிய மற்ற நன்மைகள் அச்சங்கத்தினுல் விளைந்துள்ளனவென்பதை எவரும் மறுக்கமுடியாது. மேற்குறித்த நன்மைகளைச் செய்வதற்கு தெ. இ. க. சங்கத்தைப்போன்ற சங்கமொன்று அத்தியாவசியமல்ல. அவைகளில் ஒன்றை அல்லது பலவற்றை ஒரேயொரு தனவந்தனே தனியாய்ச் செய்துவிடலாம். ஆனல் தெ. இ. க. சங்கம் செய்துள்ளதாக நான் பின் விவரிக்குமவைகள், இதைப்போன்ற ஒரு சங்கத்தினுல்மாத்திரமே செய்யக்கூடியவைகளேயன்றி மற்றெவராலுஞ் செய்யக்கூடியவைகளல்ல. அவை பின்வருமாறு:—

(1) இச்சங்கம் ஸ்தாபிக்கப்படுவதற்குமுன்னே, கத்தோலிக்கு இந்தியர் எல்லோரும் ஒருகுறுப்பினர், ஒரு மத்தையிற் சேர்ந்தவர், ஒரு குடும்பத்தினராயிருந்தாலும், அவர்கள் தங்களுக்குள் பிறர் நேசமென்பது கிஞ்சித்துமின்றி, ஒருவரையொருவர் சந்திக்க நேரிட்டால் குளிர்ந்த பார்வை, இன்சொல் முதலியவைகூட இல்லாமல், சுத்த அன்னியரையும், விரோதிகளையும் நடத்துவதுபோல் நடத்திவந்தார்கள். ஒரூர் கிறீஸ்துவர்கள் மற்றவூர் கிறீஸ்துவர்களை யறியாமலும், பரஸ்பர அன்பும் அநுதாபமுமில்லாமலுமிருந்தார்கள். இப்போது அவர்களுக்குள் அந்நியோந்நிய நேசமும், சகோதரபாண்மையும் அதிகரித்திருக்கின்றது. கத்தோலிக்கு இந்தியரெல்லோரும் ஒரு குடும்பம் என்ற உணர்ச்சியுண்டாகத் தலைப்பட்டிருக்கிறது. இனி காலம் போகப்போக இவ்வுணர்ச்சி ஸ்திரப்பட்டு முழுதும் சகோதரரைப்போலாவரர்களெனபதற்குத் தடையில்லை.

(2) ஆதியில் இத்தென்னிந்தியாவின் ஜனங்களை சத்திய வேதத்துக்கு மனந்திருப்பின ஞானஞானிகாரிகளின் உபேட்சை காரணமாய் கத்தோலிக்கு இந்தியருக்குள் வழங்கிவரும் பல ஜாதி விகற்பங்களினுல் அவர்களுக்குள் சகவாசம், சமபந்தி போசனம், சமரசபாண்மை யில்லாதிருந்தன. இப்போது இவைகள் விஷயமாயுள்ள வேறுபாடுகளெல்லாம் எறக்குறைய ஒழிந்துபோயின. இன்னுமிகுதியாயுள்ள இரண்டொரு விகற்பங்களும் காளாவட்டத்தில் நீங்கிவிடும்.

(3) யாதோர் விஷயத்தில், தென்னிந்தியாவிலுள்ள கத்தோலிக்கு இந்தியரின் பொது ஜன அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள, கவர்ண்மெண்டார் இச்சங்கத்தை முக்ய ஆதாரமாகக்கொண்டுளார்.

(4) இராஜப்பிரதிநிதி, கவர்னர் முதலியோர் இந்நாட்டிற்கு விஜயஞ்செய்யுங்காலையில், தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சமூகத்தின்பேரால் அவர்களோ பேட்டிகண்டு, அவர்களுக்கு சுபசோபன வாழ்த்துப் பத்திரம் வாசித்து, தங்களுக்குள்ள குறைகளோ அன்னேருக்குச் சொல்லிக்கொள்ளும் சுதந்தரத்தைப் பெற்றுள்ளது.

(5) சென்னை இராஜாங்கச் சட்ட நிரூபணச் சபையில் கத்தோலிக்கு இந்தியரின் பிரதிநிதிக்கு ஸ்தானங் கிடைத்துள்ளது.

(6) இப்போது வரவிருக்கிற புது அரசியல் முறைப்படி சட்ட சபையில் இந்திய கிறீஸ்துவர்களுக்கு மூன்று ஸ்தானங்கள் சுவதரிக்கப்பட்டிருப்பதும் தெ. இ. க. சங்கத்தின் முயற்சியாகும்.

(7) பொது ஜனசமூக வாழ்க்கைச் சம்பந்தமாயாவது, நியாய பரிபாலன விஷயமாயாவது கத்தோலிக்கு இந்தியர்களுக்கு யாதோர் சங்கடம் இடையூறு அநியாயங்கள் நேர்ந்தால் அவைகளைப்பற்றி இராஜாங்கத்தாரிடம் வாதாடி வழக்கிட்டு அவைகளுக்குப் பரிகாரந் தேடும் ஆற்றல் இச்சங்கத்துக்குளது.

இவை நிற்க, டி சங்கத்தின்மேற் குறை கூறவந்தவர்கள் எதிர்பார்க்கும் நன்மைகளில் ஒன்றையேனும் செய்வதற்குப் போதுமான பணம் சங்கத்திற் சேரவில்லை. ஆதலினுல் அந்நன்மைகளைச் செய்வதற்கில்லை. தென்னிந்தியாவிலுள்ள பத்து லட்சங் கத்தோலிக்கரில் டி சங்கத்தைச்சேர்ந்துள்ளவர்கள் எக்காலத்திலும் 1,500க்கு அதிகப்பட்டதில்லை. சங்கத்தைச் சேர்ந்தவர்களில் சராசரி நூற்றுக்கு 20 பேர் கூட சந்தாவைச் சரியாயும் தொடர்ந்தும் செலுத்துவாரில்லை. இவ்வாறு வருஷா வருஷம் வந்த வரும்படியில் செலவு போக மிகுதி

யாயுள்ள தொகைகள் சேர்த்து தற்காலக் கையிருப்பு மொத்தம் ஏறக்குறைய ரூ 5,000ந்தான். சங்க விடுதிக்காகச் சேர்ந்துள்ள நிதியின் தொகை ரூ 2,000. ஷை ரூ 5,000த்தை மூல தனமாக வைத்து, அதிலிருந்துவரும் வட்டியைக் கொண்டு சங்கத்தின் கூட்டங்கள் நடத்துவது, அறிக்கைகளின் அச்சுக் கூலி, தபாற் கூலி கொடுப்பது, ஆபீசு செலவு முதலியவை செய்வதிலேலே சங்கம் ஒருவாறு நடைபெற்றுவருகிறது. சங்கம் நாம் கோரும் கன்மை பயக்க வேண்டுமானால், சென்னை இராஜதானியிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும், கிராமத்திலும் கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். அவைகளில் கிறீஸ்துவர்கள் ஏராளமாய்ச் சேர்ந்து சங்கத்தை ஆதரிக்கவேண்டும். சந்தாவைத் தவறாமல் ஒழுங்காய்ச் செலுத்தி, சங்க விஷயங்களில் உற்சாகமாய் உழைக்கவேண்டும். இவ்வாறு தென்னிந்தியா கத்தோலிக்கு இந்திய ரெல்லோரும் இச்சங்கத்தை ஆதரித்து ஒத்து உழைப்பார்களானால் எத்தகைய அரிய காரியங்களேயும் முடித்துக்கொள்ளலாகும். "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்."

சென்னை,
20—8—19. } உள்ளதுரைப்போன்.

திண்டுக்கல் ஒடுக்கப்பட்டவர் சங்கம்.

இச்சங்கமானது, திண்டுக்கல் நிறுத்த கத்தோலிக்கரும், பிறர் நினைவுள்ளலும், பிறர் மனம் நோக தன் மனம் நொந்ததுபோல் வாடுங் குணமுமுடைய கௌரவ மாஜிஸ்ட்ரேட்டான ஸ்ரீமான் ஐ. சந்தனக்கவுண்டரவர்கள் ஆதரவினியிலும், அவ்வூரின் கத்தோலிக் இரட்சகனாயுக்க முற்ற மகாகனம். வின்சென்ட் நாராயண ஐயர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழும் அமைக்கப்பட்டு இரண்டாண்டுகளாயினவென்றும், இப்போது அதன் பலனுக 85 பிள்ளைகளடங்கிய ஒரு இராப் பள்ளிக்கூடம் போதனு முறையில் தேர்ச்சியடைந்து சர்ட்டிபிக்கேட் பெற்றுள்ள மூன்று உபாத்திமார்களால் நடைபெற்று வருகின்றதென்றும், இப்பிள்ளைகள் பகலுழைத்து இரவில் கல்விகற்கிறார்களென்றும், இவர்களில் சில பிள்ளைகள் உயாதரப்படிப்பிற்கென்று பாளையங்கோட்டை அர்ச். சவேரியார் ஹைஸ்கூலுக்கு சங்கத்தின்பேரால் அனுப்பப்பட்டுள்ளாரென்றும், இச்சங்கமும் இவ்வேழைக் கத்தோலிக்கரும் மேம்பாடடைய உதாரகுணமுள்ள கனவான்களின் உதவி தேவையென்றும் ஓர் அறிக்கையொன்றை வரப்பெற்றேன். என்ன குதூகலம்! இஃதன்றே பிரார் சிநேக ஊற்று! இதுவன்றே கிறீஸ்துவ சகாயம்! இதல்லவோ ஐக்யவுணர்ச்சி! இதுதானே கற்றோர் கடமை! இம்மூன்மாதிரிகையோரும் இவர்கள் போன்ற மற்ற யீகையோரினடிச்சுவடுகளே ஏனைய கத்தோலிக் கல்வியாளரான பரோபகாரிகள் பின்பற்றி அவரவர் ஊர்களிலுள்ள ஏழைகளே முன்னேற்ற முயற்சிக்கின், என் நம் நாடு முன்னேறி கத்தோலிக்கருள் ஒற்றுமையுண்டாகாது? இதுதானே யாவருங் கோருவது. இப்பேர்ப்பட்ட ஓர் சங்கத்தை தென்னிந்தியா முழுவதுக்கும் தெ. இ. கத்தோலிக் சங்கத்தினர் எற்படுத்தி முன்னேற்றக் கருதினால் எவ்வளவோ கன்மை. "மனமுண்டேல் வழியுண்டு" இப்படி நடத்தினுல் இதரர் கம்மை "நீங்களும் ஜாதியாசாரத்திலமிழ்ந்தியிருக்கும் அஞ்ஞானியைப் போன்றோர்தானே" என்று சொல்லுவரோ? இவ்விதக் கேள்வி சீர்திருத்த பிரான்ஸைஸ் கமிட்டியாரும் கேட்பரோ? கேட்கவிடமில்லை. ஆனால் இதுவரையில் கவலையில்லாதிருந்தார்கள். ஆயினும் ஜீவகாருண்ய சிரத்தையுடனுழைக்கும் ஸ்ரீமான் ஐ. எஸ். கவுண்டரவர்கள் வேண்டுகோளால் இவ்வருடம் தெ. இ. க. சங்கம் திண்டுக்கல்லில் கூடப்படப்போவதால் அச்சமயம் அம்மேண்மைதங்கிய மஹான், யான் மேற் கூறியுள்ள காரியங்களே ஒடுக்கப்பட்டோரின் மத்யஸ்தராயிருந்து எடுத்துப்பேசி அதோடு கனம். ஒடுக்கப்பட்டவர் சங்க பிரதிடெண்டும் ஆதரிப்பரேல், காரியம் கைகூடுமென்பதிற்கையமில்லை. ஆனால் இவர்கள் மாத்திரம் கேட்பது பற்றுது. ஒடுக்கப்பட்ட கத்தோலிக்கரும் கூடிச் சென்று கைகூடப் பிரயத்தனம் செய்யவேண்டும். ஒரு தடவை முயன்றால் போதுமா? பல தடவை முயன்றால்தான் பயன் கிடைக்கும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" இவ்வொடுக்கப்பட்ட சங்கத்துக்கு பொருள்தானம் விஷயதானம் செய்து முயற்சியெடுப்பது "கன்மேலெழுத்தென்றால்" மிகையாகாது. பொருள் தானம் செய்ய முற்படுவோர் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிகொள்ளலாம்.

VINCENT NARAYANA IYER,
President,
Dindigul Depressed Class Society,
Near Post Office,
DINDIGUL.

மாண்டலே
22—8—19, } D. X. ஐயாப் பிள்ளை,

தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர். சங்கம்.

I

ஆகஸ்ட்டு மாத நல்லாயனில் நான் எழுதிய கடிதத்துக்கு மறுப்புரையாக சென்றமாத ஆயனில் தோன்றிய இரண்டு நிருபங்களில் முதல் நிருபத்தை எழுதிய எதிரொலி நண்பர், நான் எனது கடிதத்தின் முடிவில் "இந்திய கிறீஸ்துவர்களுக்குள் எத்தகைய குற்றத்தினுலோ ஏற்பட்டுள்ள பிரிவினைகளே ஒழித்து ..... ஒன்றித்து." என்றதை ஆதாரமாகக்கொண்டு தமது நிருபங்களில் தாழ்ந்த உயர்ந்த என இருபிரிவாக்கி குறிப்பிடத் தாம் நவமாய் நிரூபித்துச் செய்தியாவரும் தடுமாறித் திகைக்கும்படி கூறும் இந்திய (ஜாதி) கிறீஸ்துவர்களுக்கும் (இந்திய) ஜாதிக் கிறீஸ்துவர்களுக்கு மிடையில் பொதுக் காரியத்தில் கலப்பில்லாத குறைபாடுள்ளதை நான் இப்பொழுதுதான் கண்டு பிடித்ததாகக் களிப்படைந்தது மேலும் மேலும் அதை விவரிக்கின்றார். நான் எனது (ஏப்பிரல் மாத) முதல் நிருபத்தில் தானே "ஆயிரக் கணக்கான ஜாதிகளும் வகுப்புகளும் உள்ள இவ்விந்தியாவில்" இந்துக்களில் குறவர், மறவர், பறையர், பள்ளர், பரதர், வாணியர், வேளாளர், காடார், நாய்க்கர், ரெட்டிகள் என்றிப்படி எத்தனைவகுப் பினருண்டோ அத்தனை வகுப்பினரும் கிறீஸ்துவர்களாகி பல நூறு வருஷங்களாகியும், தங்கள் பெயர், நடை, உடை, பாவனை, கருமம், சடங்கு, ஆசாரானுஷ்டானம் ஒன்றையும் தவிர்க்காமலும், ஒரு குலத்தார் மற்றொரு குலத்தாரோடு தங்கள் சுபாசுபங்களில் கலக்காமலும், ஒரே குலத்தவருக்குள் முதலாய் நிலைச் சாதி வழுவுள்ளவனைச் சாற்றி உயர்வு தாழ்வு பாராட்டியும், அவர்கள் பந்தியமர்ந்த காரணத்தால் இட்ட இலையும், வட்டித்த சாதமும் சிரழிய எழுந்துபோய் விடுவதும் இப்படியே எல்லாச் சாதியாரிடத்திலும் உள்ளும் புறமும் ஏற்பட்டுள்ள குறைபாடுகளேயும், கலப்பில்லாமையையும் ஆகாத வழக்கங்களெனச் சுட்டிச் சுருக்கமாய் எனினும் தெளிவாய்க் கூறி இருக்க, அவையெல்லாம் காணுதவர்போலக் கிறீஸ்துவர்களே உயர்ந்த தாழ்ந்த என நிருகூறுபடுத்திக் கூறும் தமது கட்டுரையையிலெழுத்த "இருகக்ஷியாரின் காரியாதிகள் இப்படி இருக்க" என்கிறார். பல கக்ஷியை இரு கக்ஷி யென்றிவ ரியம்புவது ஏனோ? அன்றியும் உயர்வு தாழ்வென்றால் யார் உயர்ந்தவர் யார் தாழ்ந்தவர்? ஒருவன் தன் குடிப்பிறப்பின் பெருமையை வலங்கைமுகவள்ளுவர்குல திலகமென்றால், மற்றொருவன் தன்னைச் சான்றோர் குல கூத்திரிய வீர னென்பான். இப்படியே அவனவன் குலத்தை அவனவனும் பெரிதெனப் பகர்வதையே பார்த்து வருறோம். இவை நிற்க பிற நினைகம் விளக்க வேண்டிய கோவில்களிலும் ஜாதிப் பிரிவினையோ என்கிறார் நண்பர். மெய்தான். ஆனால், ஆதியி லிந்துக்களா யிருந்தபோதே புள்ள ஜாதி விகற்பத்தாலோ, அல்லது சிலர் அபிப்பிராயப் படுகிறபடி அழுக்காடையும் ஊத்தை யுடலோடும் வந்த அசுசி காரணத்தாலோ, மற்றெவ்விதவேறுபாட்டாலோ அவரவருக்கென்று கோவில்களில் வெவ்வேறிடங் குறித்து உட்கார்ந்தாலும், ஞாலனுபாணங்களேச் சமமா யிருந்தே அடைக்து வந்தார்கள். இந்நாகரிகமற்ற எற்பாடு நாகரிகம்பெற்ற பல இடங்களிலும் முற்றுய் நாளடைவில் நீங்கிவிட, சிற்சில விடங்களில் மூர்க்கர் சிலருடைய ஆத்திரப் புத்தியினலும், சாமான்ய ஜனங்களுடைய பிடிவாதத்தாலும் தங்களுக்கென்று ஆதியில் குறிக்கப்பட்ட இடத்தைப் பிறருக்கு விட்டுக்கொடுக்க மாட்டோமென்று மூறண்டு பண்ணுகிறார்கள். இப்படியே சின்னட்களுக்குமுன் சென்னை ஜார்ஷ்மிஷன் அதி மேற்றிராசனக் கோவிலில் இடப்பட்டிருக்கும் ஆசனங்களில் அயலாரி லிருந்து வந்திருந்த சில இந்திய பிரபுக்களின் பிள்ளைகளுக்கு சட்டைக்காரர் இருக்க இடங்கொடாமல் அகற்றி அப்புறப்படுத்தினதும், திருநெல்வேலி ஜில்லா வடக்கன்குளமென்னு மூரில் நாடார் குலத்தவருக்கு வேளாள மரபினர் தங்களுக்கென்று குறிக்கப்பட்ட இடத்தை விடமாட்டோமென்றமையால் கலகமாகி, ஐகோர்ட்வரையும் வியாஜ்ஜியம் நடந்ததும், சிலர் மூர்க்கராய்ப் பதித மதத்தைப் பற்றிக்கொண்டதும் பலருமே யறிந்த காரியம். இவை தான் உண்மையும், அனுபோகமும், தற்காலமிருக்கும் நிலைமையுமேயன்றி வேறல்ல. இவற்றைத்தான் ஆகாத வழக்கமென்று அதை நீக்குவதற்காகக் குருக்களும் பொதுச்சங்கத்தின் அதிகாரிகளும் முயற்சி கொண்டுள்ளார் என்று என் முதல் நிருபத்தில் கூறினேன். ஆனால், இதிலும் கேடாய் கிறீஸ்துவர்களுக்கு அடாததும், வேத ஒழுங்கை மீறினதுமாகிய தன்னோடு கூடப்பிறந்த சகோதரி மகளேயேதான் கலியாணஞ் செய்வது எங்கள்

ஜாதி வழக்கமென்னும் கொடிய அஞ்ஞானவழக்கத்தை அகற்றுவதற்கே குருக்கள் அரும் பிரயாசை எடுத்தும் லகுவில் ஆகாதிருக்க, ஜாதி வழக்கமென்னும் கலப்பில்லாமையை குணப்படுத்த யாராலேனும் லகுவி லாகுங் காரியமா? காலந்தான தைக் குணப்படுத்த வேண்டும். சூரியனுதயமாக இருள் நீங்குவதுபோல, ஞான முதயமாக மேற்கூறிய அஞ்ஞான அந்தகாரமெல்லாம் நீங்கிவிடு மென்பதே ஆன்றோர் துணிபு. அப்படியே நூற்றில் 90 இந்நாளில் நீங்கிவிட்டதென்றே சொல்லவேண்டும். இதன் பின் வெல்ல மிருந்தாலல்லோ ஈ சேரும். தெ. இ. க. சங்கம் இது காரியத்தில் செய்ததென்ன? என்கிறார். மதுவைவிட்டு மலத்தை யுண்ணும் ஈக்களும் உண்டல்லோ? பொதுச் சங்க மென்றால் யாவருக்கும் நன்மை விளையுமென்று பெரியோரெல்லாம் உறுதியாய்க்கூற, அதனால் பயனில்லை என்று பிடிவாதம் செய்பவர்களு மிருப்பார்கள். இழிகுலத்தாருக்கு வேதம் போதிக்க எந்த மேற்றிராசனமோ உலக காரணங்களையிட்டு உபேக்ஷிக்க அவர்கள் பதிதரானதாய் ஒரு கதை சொல்லுகிறார். விசுவசித்துத் தீக்ஷை பெறுவாருக்கன்றி உலக காரியங்களுக்காக தீக்ஷை பெற வேண்டுபவர்கள் சோற்று வேதத்தில்தான் சேர வேண்டும். தெ. இ. க. சங்கத்துக்கும் ஷை விஷயத்துக்கும் சம்பந்த மொன்றுமில்லை யாகையால் அதைவிட்டு, நான ஆதியிலிருந்து கத்தோலிக்கர்களுக்குள் பிரிவினை கூடாது, ஒற்றுமை வேண்டுமென்று கூறிக்கொண்டு வருவதை அநுசரித்து, கத்தோலிக்குச் சகோதரர்கள் எல்லோரும், பொதுச் சங்கமாகிய தெ. இ. க. சங்கத்தைச் சேர்ந்து இகபர நன்மைகளை யடைவார்களென நம்புகிறேன்.

மணப்பாடு,
20—9—19.

க. அ. சி.

II

சங்.பத்திராதிபரே,

"கண்டது விண்டோன்" என்னும் நண்பர் கடந்த ஜூன்மீ "ஆயனில்" யானெழுதிய வியாசத்திற்கு மறுப்பெழுதியதைக் கண்ணுற்றேன். அதில் யான்சொன்னதை மறுத்து "உள்ளதை ஒப்புக்கொள்ள மனமில்லாதவனென்றும், பொய்த்துயில் கொள்வோ" னென்றுங் குறைகூறி "தெ. இ. க. சங்க அக்ராசனாதிபதியவர்கள் நண்பர் முன்னர் கூறியபடி பிரதிநிதியை (தாழ்ந்தோரெனப்படும் கத்தோலிக்கரால் அனுப்பப்பட்டவரை) பின்னர் பேசலாமென்று மொழிந்தாரென்றும், முதலிலேயே பேசவிடவில்லையே என்ற முறைப்பாட்டினால் அப்பிரதிநிதி மூர்க்கத்துடன் முறுமுறுத்துக்கொண்டு தம்மவருடன் வெளியே போய்விட்டாரென்பதும் சுத்த உண்மை" என்கிறார். உண்மையிதுவல்ல. யான் முன்னர் கூறியபடி முதலிலேயே தெ. இ. க. சங்கக் காரியதரிசியவர்கள் அப்பிரதிநிதிக்கு அக்கிராசனாதிபதி சங்க ரிப்போர்ட்டு முடிந்ததும் தன பிரசங்கத்தைச் சொல்ல உத்தரவாய்விட்ட' தென்றுசொல்ல, அதைக்கொண்டு இவர் ரிப்போர்ட் முடிந்ததும் சென்று பிரசங்கத்தைத் தொடங்க, இரு மெம்பர்கள் எழுந்து அதைத் தடுத்து "அஜண்டா முடிந்தபின் பேசலா" மென்றனர். இதற்கஞ்சி அக்கிராசனாதிபதி சில புத்திகளைக்கூறி யமர, பிரதிநிதி கடைசியிலாகிலும் உத்திரவாகுமோ, வென யாதொரு பதிலுமில்லாததைக்கண்டு பொறுமையுடன் வெளியேற, சங்கத்தினரும் மற்றவரும் இவ்வேழைகள் அவமானப்பட்டதை யுன்னி அக்களித்து, பின்வெளிவந்து இகழ்ந்து பேசியது உண்மையிலும் உண்மை. உத்தரவு கிடைத்ததென்று பிரதிநிதியிடத்தில் வந்து சொன்ன காரியதரிசியவர்களும், முதலில் உத்தரவு தந்த அக்கிரரசனாதிபதியவர்களும், சென்ற பிரதிநிதியும் சாட்சிபகர்ந்தால் நமது நண்பர் என்ன சொல்லுவரோ அறிகிலேன். யான் கத்தோலிக்கனானதால், எவரையும் திடீரென நண்பர் கோபித்து, பொய்த்துயில் கொள்வோனென்று சொல்லியதுபோல் சொல்ல எனக்கு மனமில்லை.

இந்துக்கள் தாழ்ந்தவரை முன்னேற்றும் வகையைக்கூறினதுபற்றி "அவர்கள் பிரசங்க மேடையில் பேசுபவரேயொழிய செய்பவரில்லையே" என்கிறார். அவர்கள் நன்மைசெய்யாமல் போகவில்லை. அவர்கள் தாழ்ந்தவர்கள்மட்டில் செய்துள்ளதை பத்திரிகை வாயிலாயும் அவர்கள் சங்க ரிப்போர்ட் மூலியமாயும் அறியலாம். ஒவ்வொரு ஜில்லாக்களிலும் பஞ்சமர் கட்கு சொந்தமனை கவர்ன்மெண்டார் வாங்கிக் கொடுக்கவும, ஐக்கிய நாணய சங்கம் ஸ்தாபிக்கவும், இராப்பள்ளிக்கூடம் ஸ்தாபித்து கல்வி கற்பிக்கவும் செய்தது அவர்களாலேயே. அவர்களாகிலும்பேசினர். நம்மவர் பேசச் சென்றவர்க்கு மிடங்கூட கொடுக்கவில்லையே? ஆதியிலிருந்து சகல பயன்பெறவேண்டிய காரியங்களில் பயன

பெற்றுவருகிறார்களாம். என்ன பயன் என்பது தெரியவில்லை. திருச்சி போர்டிங்கில் சேர்த்தது இதுவரையில்கிடையாது. அப்படிச் சேர்த்திருந்தால் அவ்வகுப்புப் பிள்ளைகளிற்சிலர் எஸ். பி. ஜி. போர்டிங்கில் ஏன்சேர்ந்து படித்திருப்பார்கள்? பாளையங்கோட்டை போர்டிங்கில் சேர்ப்பது வாஸ்தவமே. அதனால் கல்வியில் தேர்ந்து உத்தியோகம்செய்வதும் உண்மையே. இது சோழநாட்டில் முடியாதென "சுருங்கச் சொன்னேன்" சென்னையிலிருக்கும் ஓர் பையன் இதற்காக கன்னியாகுமரிமுனை நாட வேண்டியதே.

குருவானவர்களைப்பற்றியும் கோவிலைப்பற்றியும் நமக்குப் பேச்சே கிடையாது. திருச்சபையைப் புகுத்து என்னை திருச்சபையின் விரோதியெனக் காட்டவேண்டாம். சமரசமாய் உட்காரவும் உண்ணவும் எனக்கு எண்ணமே இல்லை. சம்மந்தம் கலக்கச் சொல்லவுமில்லை. ஒரு சார்பினர்மட்டும் ஆதி முதலிம்மட்டும் சமத்துவமடைந்து சகல நன்மைகளுமடைய, இவர்கட்கு மட்டுமில்லாமல் போனதென்ன? என்பது தான் கேள்வி. கட்டளைக் குருக்களும் கல்லூரி அதிகாரிகளும், கல்வியுள்ள கத்தோலிக்கு குடும்பத் தலைவர்களும் மெம்பராகி கவர்ன்மெண்டாரிடம் பிரதிநிதித்துவம் கேட்டும் தெ. இ. க. சங்கத்தாராலே இவர்களை முன்னேற்ற முடியாததா? அப்படியானால், இவர்களிலொருவர் கவர்ன்மெண்டில் பிரதிநிதியானால் இவர்கட்காய் பரிந்துபேச இயலாதவரே. இப்படி எளியோரை இகழ்ந்து ஏனோ தானோ வென இருந்ததால் தானே சென்னையில் சீர்திருத்தக் கமிட்டியார், கத்தோலிக்கருக்குள் ஜாதி வித்தியாசம் உண்டென்பதைப்பற்றி தெ. இ. க. சங்கக் காரியதரிசியைக் கேள்வி கேட்கலானார் என அறிகிறோம்.

நண்பர் காலமே குணப்படுத்து மென்கிறார். காலம் குணப்படுத்துமெனக் கையைக் கட்டிக் கொண்டிருந்தால் ஞால முடிய நடுத்தீர்வையாகும். இவர்களீராந்தம் இடுப்பொடிந்து ஓலமிட வேண்டியதே. ஆத்திரப்படவுமில்லை. அனைத்தையும்கேட்கவுமில்லையே. வார்த்தைகளினாலே சன்னஞ்சன்னமாய் செய்கிறோமென்கிற சொல்லுமில்லையே என்றதுதான் இம்மல்லுக்கு வந்ததின் நோக்கம். ஆகையால், நண்பர் திடீரெனப் பொய்த்துயில் கொள்வானென்று தூற்றாமல் காரியங்களை முற்றுமாராய்ந்து விளக்கினால் அதை நானேற்க இன்பமே.

ஆகையால் தென்னிந்தியாவில் இனி ஐக்கிய கத்தோலிக்கராயிருக்க ஏற்ற சஞ்சீவியைப் பிரயோகித்து இனிதாய் வாழ முற்படுமாறு ஏக திரித்துவத்தை என்று மிறைஞ்சும்,

மாண்டலே வாசி.

[குறிப்பு.—கத்தோலிக்குச் சகோதரருக்குள் விசனத்துக்குரிய விதமாய் ஏற்பட்டுள்ள ஜாதி யாசாரத்தின் விஷயமாய், அவரவர்க்குள்ள அபிப்பிராயங்களைச் சகோதரர் மேரையில் வெளியிட்டுத் தங்களுக்குள்ளேயே ஒருவித முடிவுக்கு வரட்டுமென்ற நோக்கத்துடன் மார்ச்சுமீ முதல் இதுவரையில் அவ்விஷயத்தைப் பற்றிய தர்க்கங்களுக்கு நம் பத்திரிகையில் இடங் கொடுத்தோம். அப்படிக்கின்றி இருதிறத்தினரும் தம் தம் கட்சியையே சாதித்துக்கொண்டு வீண்வாதஞ் செய்கிறார்களே தவிர, இருவரும் கொடுத்தும் வாங்கியும், கிட்டிவந்து, கை கொடுத்து, மனமொத்து ஒரு சாத்தியமான பொதுவழியைத் தெரிந்து கொண்டார்களில்லை. தென்றல் முற்றிப்பெருங் காற்றாவதுபோல், சமரச சம்வாதத்தை விட்டு, விரோதம் பின்னும் பலப்பட்டுப்போகுந் தன்மை மூர்க்கமாய்ப் பேசத் தலைப்பட்டு விட்டார்கள். ஆகவே, அவ் விஷயத்தைப் பற்றிய தர்க்கங்களுக்கு இனி இப்பத்திரிகையில் இடந் தரோம். இவ்விஷயத்தைப்பற்றி நாமும் விரிவா யெழுதக் காலமுமில்லை இடமுமில்லை. பொதுவா யிரண்டொரு வார்த்தை மட்டும் சொல்வோம். எளியாரை இதுவரையில் அவமதித்து வந்த வலியார் இப்போது அப்படிச் செய்வது பிசகு, இனி அவர்களை மேன்மையாய் நடத்தவேண்டுமென்று உணர்ந்துவிட்டார்கள். உணர்ந்தாலும் அப்படிச்செய்ய அவர்களுக்குள்ளிருக்கும் பாமர ஜனங்கள் உடனே இடந் தருவதாயில்லை. பிடிவாதமாய் உடனே அப்படிச் செய்துவிடும் பட்சத்தில் அவர்களுக்குள்ளேயே பெருங் கலகம் நேரிடும். அதைத் தடுக்கப் பெரியோர் சீர்திருத்தத்தைச் சன்னஞ் சன்னமாய்ச்செய்ய முன்வந்திருக்கிறார்கள். இவ்வாறு ஏற்கெனவே சில திருத்தங்கள் நிறைவேறிவிட்டன. இவற்றைக் கண்ணுள்ளோர் கண்டுகொள்ளலாம். இனி கூடிய சீக்கிரத்தில் நிலைமை முழுமாற்றத்தை யடைந்து விடுமென்று நம்புகிறோம்.—பத்திராதிபர்.]

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

சுங்கச் சாவடிகள்.—பிரென்ச் இலாகாவிலிருந்து இங்கிலீஷ் இலாக்காவுக்குக் கொண்டுபோகும் சாமான்கள்மீது தீர்வை போடுவது சீக்கிரத்தில் நிறுத்தப்பட்டுப் போகுமென்று, ஒரு பலத்த வதந்தி யுலாவுகிறது. இது ஒழிந்தால் ஜனங்களுக்கு பெரிய சௌகரியமாகும்.

இராஜ குமாரர் சேசு சபையிற் சேர்கிறார்.—பெவேரியா தேசத்து அரசிளங் குமாரராகிய ஜியார்ஜ் இளவரசர் இம் மாய வுலகத்தைத் துறந்து, டைரோலைச் சேர்ந்த இன்ஸ்பிரக் கென்னும் இடத்திலுள்ள சேசு சபைக் குருமடத்தைச் சேர்ந்தாரெனத் தெரியவருகிறது. இது ஒரு பெரிய பரித்தியாகமே.

குறிப்பிடத்தக்க மனந் திரும்புதல்.—முப்பத்திரண்டு வருஷ மளவாக ஆங்கிலிக்கன் சர்ச் என்னும் புரொடஸ்டாண்டு மத வகுப்பில் பாதிரியாராயிருந்து வந்த செவரன்ட் பிரெடரிக் பீயர்க்ஸ் என்பவர், சமீபத்தில் லண்டனில், பார்ம் தெருவிலுள்ள தேவாலயத்தில், சங். டன்ஞெகொ என்னும் சேசு சபைக் குருவானவரால் சத்திய வேதத்தில் சேர்க்கப்பட்டார். சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக!

ஓர் அதிசயக் கோவில் கட்டிடம்.—உலகிலுள்ள எல்லாக் கோவில்களிலும் மிக்க அதிசயத்துக்குரியது ஸார்வே தேசத்தைச் சேர்ந்த பெர்ஜன் என்ற நகரிலுள்ளதாகும். அது கடுதாசிகளால் கட்டப்பட்டிருக்கிறது. நீற்றுத சுண்ணும்பு, தோய்ந்த பால், முட்டை ஆகிய இவைகளைக் கடுதாசியோடு சேர்த்துப் பக்குவப்படுத்தி, கடுதாசிச் சுவர் அமைத்துக் கட்டியதாம் அந்தக் கோவில். அதில் ஆயிரம் பேர் உட்கார இடமிருக்கிறது.

சத்தியத்தின் வல்லமை.—சீனதேசத்திலுள்ள 400,000 புரொடஸ்டாண்டு கிறீஸ்துவர்களுக்கு 25,000 பாதிரிமார்களிருக்கிறார்கள். ஆனால், அங்குள்ள 1,600,000 கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்கோ 2,267 குருக்கள் மாத்திரம் இருக்கிறார்கள். ஆயினும், சென்றவருஷத்தில் 130,000 சீனர்கள் கத்தோலிக்கு வேதத்திலுட்பட்டார்கள். இன்னும் அநேகர் மனந்திரும்புவார்களென எதிர்பார்க்கப் படுகிறது. இது சத்தியத்தின் வல்லமை யல்லவா?

இங்கிலாந்தில் நன்னடக்கை!—கட்டின தாரத்தை விட்டு இன்னொரு ஸ்திரீயை மணவியாக்கிக் கொள்ளும் சீர்கேடான வழக்கம் இங்கிலாந்தில் பெருக்க மடைவதைப் பார்த்து நல்லோர் விசனப்படுவதற்கு இடமாயிருக்கிறது. இங்கிலாந்துக்குள்ளேயே, 1914வுத்தில் நியாயஸ்தலத்தின் முன் வந்த இருதார கமனக்கேசுகள் நூற்றுமுப்பதாயிருக்க, 1917வுத்தில் வந்த கேசுகளோ 435 என்று ஆங்கிலேய நியாயாதிபதிகள் வருத்த முறுகிறார்கள். நாகரிகம் பெருகப் பெருக அதனோடு அக்கிரமங்களும் பெருக்க மடைகின்றன.

பால் சோரியு மரங்கள்.—தென் அமேரிக்காவைச்சேர்ந்த வெனிஜூவல்லா என்ற ஊரிலுள்ள பாலவனத்தில், மனிதனின் தாகத்தைத் தணிக்கக் கடவுள் பால் பசு மரம் என்னு மோர்வித மரத்தையுண்டாக்கியிருக்கிறார். இம்மரத்தின் சாறு பசுவின் பாலையொத்து, இனிமையும் வெண்மையும் பொருந்திப் பருகுவதற்கு மனோகரமாயிருக்கிறதாம். அதைக்காய்ச்சி பிரையிடத் தயிராக அதை மோராக கடைந்தால் வெண்ணெயும் கிடைக்கிறதாம்.

ஆகாயத்தில் அற்புத விவாகம்.—அமெரிக்காவில் சமீபத்தில் ஒரு விவாகம் ஆகாயத்தில் நடந்தது. மணம் புரிய விரும்பிய சதியும் பதியும் ஓர் ஆகாய விமானத்தில் இருந்தனர். மற்றொரு விமானத்தில் பாதிரியார் இருந்தனர். இரண்டு ஆகாய விமானங்களுக்கும் இடையில் கம்பியில்லா டெலிபோன் அமைக்கப்பட்டிருந்தது. அதன் வாயிலாகச் சதிபதிகள் சத்தியப் பிரமாணத்தை பாதிரியார் கேட்டுக்கொண்டனர். கீழே, தரையில் திரளான ஜனங்கள் நின்றுகொண்டிருந்தனர். அவர்களும் சதிபதிகளின் பிரமாணத்தை யந்திரங்களின் வாயிலாகக் கேட்டுக்கொண்டனர். கலியாணம் முடிந்து விட்டது. என்னே நவீன நாகரிகத்தின் போக்கு!

மரித்தவரை உயிர்ப்பித்தல்.—பர்மாவில் ஒரு மருத்துவமாது செத்தவர்களை யுயிர்ப்பிக்க தனக்குச் சக்தி யுண்டென்று வீரம் பேசுகின்றனளாம். இவள் மரித்தவருக்கு உள்ளும் புறமும் ஏழு நாள் மருந்து கொடுத்து, அவருக்கு மீண்டும் உயிர்வரச் செய்யக்கூடுமாம். இப்படி உயிர்த்தவர்களுக்கு புதிய மணமும், புதிய அவயவங்களும்உண்டாகுமாம். அவர் உயிர்த்தபிறகு அவளிடத்தில் ஒருமாதகாலம் சிகிச்சையிலிருக்க வேண்டுமாம். இந்தச் செய்தி ரங்கூன் பத்திரிகையில் காணப்பட்டது. இதைச் சுத்தப் பொய்யென்றே மதிக்க வேண்டியது. ஏனெனில் செத்தவர் இம்மாதிரி பிழைக்கக் கூடுமாஞல் உலகமே மோட்சமாய்விடும். உலகத்துக்கும் மோட்சத்துக்கும் தாரதம்மியம் ஏற்படாது. பாவம் புண்ணியமென்று கருதார்கள்.

இரு குருக்களின் மரணம்.—கும்பகோணத்து மேற்றிராசனத்தைச் சேர்ந்த கபிரியேல்புரத்து விசார்ணைக் குருவாகிய சங். ஜே. எல். மர்தீன் சுவாமிகள் திருச்சிராப்பள்ளியிலும், பில்லாவடந்தை சங். மரிய ஆரோக்கியநாத சுவாமிகள் தரங்கம்பாடியிலும் மரண மடைந்தார்களெனக் கேள்வியுற்று விசனப்படுகிறோம். போதுமான குருக்களில்லாத காலத்தில் அது போகமுள்ள ஷை இரு குருக்கள் மரணித்தது கும்பகோணத்து மேற்றிராசனத்தின் தர்ப்பாக்கியமே. சர்வேசுரனுடைய திராட்சைத் தோட்டத்தில் காலமுழுதும் உழைத்துக் காலஞ் சென்ற இவர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ள எமது சந்தாதாரர்களனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சென்னையில் சேசு சபைக் கலாசாலை.—திருச்சிராப்பள்ளியில் பேர்பெற்றிலங்கும் அர்ச். சூசையப்பர் கலாசாலையை நடத்தும் சேசு சபைக் குருக்கள் சென்னை சேத்துப்பட்டில் ஸ்டான்லிங்ஸ் ரோட்டிலுள்ள நவாப்புத் தோட்டம் (Nawab's Gardens) என்ற விஸ்தீரணமான பூஸ்திதியை ஏராளமான திரவியசெலவிட்டு விலைக்குவாங்கி விட்டார்கள். அவ்விடத்தில் (first Grade college) முதல் கிரேட் கலாசாலையொன்று கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்தக் கலாசாலை நமது கத்தோலிக்கு மாணவர்களுக்கு மாத்திரமல்ல, எல்லா மதத்தினர் பிள்ளைகளுக்கும் இடங்கரும். அவரவர்கள் தங்கிக் கல்வி பயிற்சி செய்யும்போது இருக்கவேண்டிய வசதிகள் ஏற்படுத்தப் படும். சென்னையில் கத்தோலிக்கு முதல் கிரேட் காலேஜ் இல்லாத நெடுநாட் குறையை இது நிவர்த்திசெய்வதால் இது கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்கு நிரம்பச் சந்தோஷமான செய்தியாகும்.

இந்தியாவின் யுத்த நன்கொடை.—ஐரோப்பிய மகா யுத்தச் செலவுக்காக, இந்தியர் பிரிட்டிஷாருக்கு உதவிய தொகை 127,800,000 பவுனுகும். இந்திய மன்னர்களும் ஏனைய தனவான்களும் 2,100,000, பவுன் நன்கொடை யளித்ததோடு, குதிரைகள் வாங்கவும், மோட்டார் ரதங்கள் வாங்கவும், மற்றபடி யுத்தவீரர்களின் சௌக்கியத்துக்கு வேண்டிய மற்ற உபகரணங்களைச் சேகரிக்கவும் செலவு செய்த தொகை அளவற்றதாகும். இப்படி இந்தியர் உதவ, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்த மற்றநேக நாடுகளும் இவ்வாறே பெருந்தொகை உதவி செய்திருக்க, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து அயர்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் எவ்வளவோ அபார தொகை செலவிட்டிருக்க, இத்தனை கோடி திரவியத்தையும் சாப்பிட்டு ஏப்பமிட்டுவிட்டது இந்தப் பாழாய்ப்போன யுத்தம். இதைப் பூதங்களே யெல்லாம் விழுங்கும் பெரும்பூதமென்னலாமோ!

கிறீஸ்து மதங்களின் ஒருமிப்பு.—வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் காணப்படுகின்றனவோ அத்தனை மதப் பிரிவினைகளுண்டு புரொடஸ்டாண்டு மதத்தில் என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம். இந்த மதப்பிரிவினைகள் தினே தினே பெருகிக்கொண்டு வருவதையும் நம் நேயர்கள் அறிவார்கள். இவ்விதப் பிரிவினைகள் அவர்களுக்கே அரோசகபாய்த் தோன்றிற்றுபோலும். ஏனெனில், உலகத்திலுள்ள எல்லா கிறீஸ்து மதங்களையும் சேர்த்து ஒரேமதமாக்கும்எண்ணத்துடன் சமீபத்தில உலகச் சங்கமென ஒரு பெரிய கூட்டம் கூட்டப்போகிறார்கள். எந்த மதம் எப்படி மாறினாலும், எத்தனை மதங்கள் ஒன்று சேர்ந்தாலும், நமது கத்தோலிக்குச் சத்தியவேதம் எப்போதும் எந்த

மாற்றத்தையும் அடையாது. அது ஆதியில் எவ்வாறிருந்ததோ அவ்வாறே இன்றளவு மிருந்து வருகிறது. அதை நரக வாசல்கள் மேற்கொள்ளா.ஷே உலகச்சங்கத்தில் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் ஒருகாலும் சேரக்கூடாதென்ற கண்டிப்பான கட்டளை நமது அர்ச். பாப்பானவர் பிறப்பித்திருக்கிறார். மேலும் பிரமஞானம் என்று சொல்லப்படுகிற தியசாபிக்கல் மதத்தைச் சேரவாவது, அல்லது அம்மதம் பிரசுரிக்கிற பிரசுரங்களை வாசிக்கவாவது கூடாதென்று கத்தோலிக்கர்களை விலக்கி யிருக்கிறார். இவ் விஷயத்தைப் பற்றி ஒரு நிருபம் அர்ச். பாப்பானவரால் எழுதப்பட்டிருக்கிறதென்றும் அது சமீபத்தில் இந்தியாவுக்கும் அனுப்பப்படுமென்றும் உரோமை நகர் நிருபர் ஒருவர் தெரிவிக்கிறார்.

கிறீஸ்துவக் கலியாணச் சட்டம் என்றொரு சட்டம் கொச்சி இராஜ்ஜியத்தில் ஏற்படுத்த அவ்விராஜாங்கத்தாரால் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அந்த மசோதா சட்டமும் பொது ஜனங்களுக்குத் தெரியுமாறு வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. இது சட்டமாகி அமுலுக்கு வருமானால், இஷ்டமுள்ள எந்தப் புருஷனும் எந்த ஸ்திரீயும் யாதோர் தட்டு தடங்கலின்றி, வரன்முறையின்றி, ஒழுங்கின்றி மிருகங்கள் மாதிரி ஒருவரை யொருவர் மணந்து கொள்ளலாம். அதை இராஜாங்கம் அங்கீகரிக்கும். கத்தோலிக்கு வேத ஒழுங்குப்படி "மெய் விவாகம்" என்கிற தேவத்திரவியானுமானத்தை கிறீஸ்துவர்கள் திரஸ்கரித்து நடக்க அந்தச் சட்டம் இடங்கொடுக்கிறது. அதுவுமின்றி அத்தகைய கலியாணங்களினால் புருஷன் பெண்சாதியையும், பெண்சாதி புருஷனையும் வெகு எளிதில் விட்டுப் பிரியவும் கலியாணத்தை ரத்து செய்யவுங் கூடும். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுக்கு இந்தச் சட்டம் கெடுதியைத் தருமே யொழிய நன்மையைத் தருவ தாகாது என்பதை முன்னிட்டு, அது கத்தோலிக்கரைப் பாதிக்காம லிருக்கும்படிச் செய்ய, கொச்சி இராஜ்ஜியத்தைச் சேர்ந்த கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களில் பெரும் பாலோரும், அங்குள்ள மேற்றிராணிமார்க ளெல்லோரும் ஷே இராஜாங்கத்துக்கு மனு செய்துள்ளார்கள். தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கமும் சமீபத்தில் ஒரு விசேஷப் பொதுக் கூட்டங் கூட்டி, அம்மசோதாவைக் கண்டனஞ் செய்து ஒரு தீர்மானம் கொச்சி இராஜாவுக்கு அனுப்பி யிருக்கிறது. இவ்வளவு ஆட்சேபனைகள் இருக்க கொச்சி இராஜாங்கத்தார் ஷே சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர மனந் துணியார்களென நம்புகிறோம்.

மழை பொழியும் மரங்கள்.—ஆப்பிரிக்கா கண்டத்தின் மேற்குக் கடலிலுள்ள தீவு ஒன்றில் நதி, ஓடை, நீர் வீழ்ச்சி முதலிய நீர் நிலைகள் கிடையா. அங்கே கிணறுகள் வெட்டினாலும் போதுமான தண்ணீர் கிட்டாது. ஆயினும், இந்தத் தண்ணீர் வறுமையைத் தவிர்க்கக் கடவுள் மழை பொழியும் அதிசய் மரங்களை அங்கே உற்பத்தி பண்ணியிருக்கிறார். இம் மழை மாங்கள் உயரத்தில் 40 அடி முதல் 48 அடி வரையில் வளர்கின்றன. அவற்றின் கிளைகள் முருங்கைக் கிளைகள்போல எளிதில் முறிகின்றன. இலைகள் வெளிப் புறம் நீலமும், உட்புறம் வெண்மையுமாயிருக்கும். இம்மரம் புஷ்பிக்கிறதுமில்லை, காய், பழம் என்பனவுமில்லை. அதன் இலைகள் பகற் காலத்தில் வாடி வதங்கியிருக்கக் காணப்பட்டு, இராக்காலத்தில் செழிப் புற்று விளங்க, அவைகளினின்றும் சுத்த ஜலம் வடிக்கின்றது. இரவில் இம்மரத்தைச்சுற்றி மேகத்திரள் காணப்படுகின்றது. கண்டவுடன் அடிப்புறத்தினின்று நீர் சுரந்து கிளைகளுக்கேறி, இலைகளிற் பாவி, இலைகளினின்று வியர்வைத்துளிகள் போலத் தண்ணீர் வடிகின்றதாம். ஒரு மரத்தினின்று, ஓரிரவிற்குள் 20,000 டன் எடையுள்ள ஜலம் வெளிப்படுகிறதாம். இவ்விதமாக உதவப்படும் ஜலாதாரத்தைக் கொண்டு அத்தீவில் 150 மைல் விஸ்தீரணத்துக்கு ஜனங்கள் வாசஞ்செய்கிறார்களாம். என்னே கடவுளின் அதிசயச் செயல்!

தேவாலயத்தில் சுருட்டுப் பிடித்தல்.—"இட்டதெல்லாம் கொள்ளும் பொட்டி மகன் கப்பரை" என்றொரு பகடிச்சொல் நம் பெண்டிர்க்குள் வழங்குகின்றது. இச்

சொல்லுக்கிணங்கியிருக்கிறது புரொடஸ்டாண்டாரின் மதாச்சாரக் கொள்கை. மனிதனின் ஆசாபாசமும், விநோதப்பிரியமும் ஏதேதை விரும்பிக் கேட்குமோ அதற்கெல்லாம் அவர்களுடைய மத வொழுங்கு இடங் கொடுக்கும்போலும். சில நாளைக்கு முன்னே, ஸ்திரீகளும் கோவில்களில் பிரசங்கஞ் செய்யலா மென்று ஒரு புரொடஸ்டாண்டு பாதிரி ஒழுங்கு ஏற்படுத்திக்கொண்டதாக அறிந்தோம். இப்போது அந்தப் பாதிரியாரே (ரெவர்ன்ட் டாக்டர் போர்ட் நியூடன் என்பார்) கோவிலில் எவரும் சுருட்டுப் பிடிக்கலாமென்று ஒரு புது ஒழுங்கு ஏற்படுத்தியிருக்கிறாராம். இனிச் சுருட்டுக் குடியாட்டங்கள் (Smoking Concerts), நாடகங்கள், கூத்துக்கள் (Balls), சாராயங்கள் குடித்தல் முதலியனவும் கோவிலுக்குள் நடத்துவார்கள் போலும்! என்னே இவர்கள் மதாச்சாரமும், வேதாச்சாரமும்! மனம்போன ஆச்சாரமாய்த்தானிருக்கிறது. "என் பிதாவின் ஆலயத்தைக் கள்ளர் கெபிகளாக்குகிறீர்கள்" என்று நமது ஆண்டவர் சொன்னதை இவர்கள் மறந்துவிட்டார்கள் போலும்! ஆனால் புரொடஸ்டாண்டர் கோவில்களுக்கும், தேவன் பிரசன்னமாயிருக்கும் தேவநற்கருணைக்கு இருப்பிடமாயுள்ள நமது கோவில்களுக்கும்பாரதூர வித்தியாசமிருக்கிறது. எனினும், கோவில் என்று பேரிட்டஸ்தலத்தில் மரியாதையுடனும் பயபக்தியுடனும் நடந்துகொள்ள வேண்டாமா?

ஒரு பாதிரியாரின் ராஜிநாமா.—அமெரிக்கா நாட்டிலுள்ள டெலவேர் என்ற ஊரின் புரொடெஸ்டான்ட் பிஷப் பாகிய ரெவர்ன்ட் டாக்டர் கின்ஸ்மன் என்பார், தமது உத்தியோக பதவியை ராஜிநாமா செய்துவிட்டாராம். அதற்கு காரணம் என்னவெனில், தமது விசாரணைக் கிறீஸ்துவர்களுக்கு வேத சத்தியங்களின்மட்டிலும், தேவத்திரவியானுமானங்கள்மட்டிலும் விசுவாசக் குறைவு ஏற்பட்டிருப்பதோடு, எவ்விதமான அஞ்ஞானக் கொள்கைகளையும் அவர்கள் ஆடங்கமின்றி ஆசரிக்கிறார்கள் என்பதாகும். "ஆதலினால, என் உத்தியோகத்தை ராஜிநாமா செய்து, இந்தப் பதவியினின்றும் நீங்கிக்கொள்வதைவிடவேறு வகையில்லை" எனச்சொல்லுகிறார் அந்த உத்தம பாதிரியார். தம் மதக்கொள்கைகளைச் சரியாய் விசுவசியாத பிரஜைகளை ஆளச் சகியாத மனமுடைய அவர், அவ்வித அவிசுவாசங்களையும், மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும் கண்டியாமல் விடுகிற வேதத்திலிருக்கச் சகிப்பரோ? இத்தகைய விகற்பங்களுக்கு இடங்கொடாமல் எந்நாளும் சத்தியத்தையே பற்றிநிற்பது கத்தோலிக்கு வேதமேயென்று அவர் உணர்ந்திருப்பார். அப்படியே அவர் கூடிய சீக்கிரத்தில் சத்திய திருச்சபையிற் சேருமாறு சர்வேசுரனைப் பிரார்த்திப்போமாக.

தேசபக்தனின் அறியாமை.—"தேசபக்தன்" பத்திரிகாசிரியர் "சத்தியாக்கிரக" நிகழ்ச்சிக்குக் காரணரான மிஸ்டர் காந்தியை, தாம் "காந்தியடிகள்" "மகாத்மா" என்று புகழ்வதோடு மாத்திரம் நிறுத்திக்கொள்ளாமல், அவரை நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருக்கு ஒப்பிட்டுப் பேசினதுமன்றி, "பல கிறீஸ்துவர் அவரைத் தற்காலத்திய கிறீஸ்துவென்றும், உயிருள்ள கிறீஸ்துவென்றும் போற்றுகிறார்கள்" என்று சென்ற 'ஆகஸ்டுமீ' 8உ வெளிவந்த பத்தனில் தலையங்கத்தின் இறுதியில் எழுதியிருக்கிறார். உண்மைக் கிறீஸ்துவன் எவனும் தன்தலை போகிறதானாலும் இவ்வண்ணம் உரையானே! போலிக் கிறீஸ்துவன் கூட இப்படிச் சொல்லத்துணியானே! கிறீஸ்துநாதருக்கும் காந்திக்கும் யானைக்கும் எறும்பிற்குமுள்ள தாரதம்மிய முளதென்று சொலவதுகூடப் பொருத்தமாகாதே! என்னே இவர் அறியாமை! சமீபத்தில் "காந்தியடிகளின்" பிறந்த திருநாள் கொண்டாட்டத்தின் சம்பந்தமாய் தூத்துக்குடியில் ஒரு கூட்டங் கூடிய போது கத்தோலிக்குக் கிறீஸ்துவர் ஜி. எட்வர்டு என்பவர் ஒருவர் காந்தியை நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருக்கு ஒப்பிட்டுப் பேசினரென்று சென்றமீ 25உ வெளிவந்த "தேசபக்தன்" பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது! இது மெய்யோ? பொய்யோ? தூத்துக்குடி நண்பர்கள் உண்மையைத் தெரிந்து கொள்ளக்கூடும்.

சங். எல். எக்ஸ் பெர்நாந்தீஸ் சுவாமிகளின் வெள்ளி சூபிலி-இம்மகோற்சவத்தை எவ்வாறு கொண்டாடுவது என்பதை யோசிக்கச் சென்றமீ 23உ சென்னை போர்த்துகீஸ் சர்ச் தெருவிலுள்ள சூபிலி மண்டபத்தில் ம-ா-ா-ஸ்ரீ திவான்பஹதூர் எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை யவர்களின் அக்கிராசனத்தில் ஒரு பிரதான கூட்டம் நடைபெற்றது. ஷை சுவாமிகளின் குணாதிசயங்களையும், அவர் செய்துள்ள அரும் பெருஞ் செயல்களையும், அவருடைய வெள்ளி சூபிலியைத் தக்க சிறப்புடன் நடத்தவேண்டிய கிரமத்தைப் பற்றியும், ஆங்கிலத்திலும், தமிழிலுமாக ஐவர் விரிவாய் உபந்நியாசங்கள் செய்தார்கள். அக்கிராசனாதிய வர்களும் பெர்நாந்தீஸ் சுவாமிகளைப்பற்றி பெரிதும் புகழ்ந்து, அவருடைய சூபிலியை அவரது நேசர்களும் அபிமானிகளும் தக்க ஆரவாரச் சிறப்புடன் கொண்டாட வேண்டுமென மிகவும் வற்புறுத்திப் பேசினார்கள். பிறகு, சுவாமிகளின் சூபிலியின் சாஸ்வத ஞாபகமாக ஒரு கல்வி நிதி யேற்படுத்த வேண்டுமென்றும், ஷை சூபிலி யன்றைக்கு ஒரு பெரிய கூட்டங் கூட்டுவித்து, அதில் சுவாமிகளுக்கு சுப சோபன வாழ்த்துப் பத்திரமொன்று வாசித்து அதை யொரு வெள்ளிப் பெட்டகத்தில் அடக்கி சுவாமிகளுக்குச் சமர்ப்பித்து அவரை யுபசரிக்க வேண்டுமென்றும், அத்தினத்தை அவரை யறிந்த அனைவோரும் ஏகோபித்துச் சிறப்பாய்க் கொண்டாடும்படி அவர்களுக்கு ஊக்கம் ஊட்ட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விஷயமாய் ஏற்கெனவே சொல்லியுள்ளபடி, நன்கொடை கொடுக்கப் பிரிய முள்ளோர்கள், "நல்ல ஆயன்" மானேஜருக்கு அனுப்பலாம். அங்ஙனம் பணம் அனுப்பும்போது, பெர்நாந்தீஸ் சுவாமிகளின் வெள்ளி சூபிலி நிதிக்காக என்று குறிப்பிடுவது அவசியமாகும்.

லக்ஷம் பவுன் வரும்படி யுள்ளவர்கள். —இங்கிலாந்தில் வருடத்திற்கு லட்சம் பவுனுக்கு அதிக வரும்படியுள்ள தனவான்கள் 148 பேர் இருப்பதாக ரிவினியூ இலாக்கா தெரிவிக்கிறது. இவர்கள் இராஜாங்கத்துக்கு வரி மாத்திரம் 13,352,000 பவுன் செலுத்துகிறார்களாம்.

ஓர் வேண்டுகோள்.

சென்னை, திருமைலையை யடுத்த குப்பம் துமிங் தெருவில் வசித்து காலஞ்சென்ற கிராமம் கனம் இம்மானுவேல், அவரது குமாரன் காலஞ்சென்ற கனம் ஜேக்கப், அவரது குமாரர்கள்: கனம் தனசாமி, கனம் தானியேல்..... குமாரத்திமார்கள்: ஸ்ரீமதி பிலோமினாள், பசி, சந்தானாள், மருகிரது ஆகிய இவர்களுடைய இருப்பிடமும், விலாசமும் தற்சமயம் அடியேனுக்கு தெரியாத விஷயத்தால், நண்பர்களில் அறிந்தவர் யாராயினுந் தயவுகூர்ந்து இதன் அடியிற் கண்ட விலாசத்துக்கு எழுதி தெரிவிக்கக் கோருகின்றேன்.

இங்ஙனம்
மேற்படி பிலோமேனா அல்லது
மாதரசியின் குமாரன்,
A. T. Dooraisawmy,
Roman Catholic Church
Bhusawal
(Ditt: East—Khandesh.)

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைப்பத்திக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுப் பத்திக்கு 4-ரூபாயுமாக முபெணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

சருவேஸ்பரா சுவாமீ! மரித்துப்போன உமது அடியாரர்களாகிய வேம்பாத் அம்புரோஸ் கருவாலி, ஜோண் அந்தோனிப் பருனாந்து, பூவம்மாள் பருனாந்து, ந. மரியநோவிஸ் பருனாந்து, மாணிக்கம் கோமிஸ், ம. அந்தோனி அய்யாப்பிள்ளை விற்றோரிய ஆகிய இவர்களுடைய ஆத்துமங்களுக்கு நித்திய மோக்ஷ இளைப்பாற்றியை கொடுத்தருளும் சுவாமி. எப்போதும் எப்போதுமுள்ள பிரகாசம் இவர்களுக்கு பிரகாசிக்கக்கடவது. இதைக் கண்ணுறும் கிறீஸ்துவர்கள் இவர்களுக்கு நித்திய மோக்ஷ பேரின்ப சமாதானத்தை சர்வேசுரன் கொடுக்கும்படியாக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக் கொள்ள தயவாக கேட்டுக்கொள்கிறேன்.

ம. அ. அ. விற்றோரியா மரணம்		9	3	18
ந. ம. நே. பருனாந்து	,,	10	5	18
அம்புரோஸ் கருவாலி	,,	26	6	18
ஜோண் அந்தோனி பருனாந்து		15	9	18
மாணிக்கம் கோமிஸ்	,,	16	12	18
பூவம்மாள் பருனாந்து	,,	31	12	18

கடுகணாவ,
9—9—19.

நீ. ச. பி. பெ.

The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்." (அரு. 10: 11-16.)

புத்தகம் 17. நவம்பர் 1919. இலக்கம் 11.

LITURGICAL AND HOMILETIC NOTES.
தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

ஞானஸ்நான வார்த்தைப்பாட்டை புதிப்பிப்பதின்பேரில்

பூர்வகாலத்தில் திருச்சபை ஞானஸ்நானம் பெற ஆயத்தமாயிருப்பவர்களுக்கு, அதை அர்ச்சியசிஷ்ட வாரத்தில் வரும் பெரிய சனிக்கிழமையன்று ஆடம்பரமாகக் கொடுப்பது வழக்கம். இவ்வழக்கத்தை முன்னிட்டு, இக்காலத்திலும் பெரிய சனிக்கிழமையில் ஞானஸ்நானத்துக்காக தீர்த்தம் விசேஷ விதமாய் மந்திரிக்கப்பெற்று வருகிறது. அக்காலத்தில் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாயிருப்பவர்கள் அனைவரும் அப்பரிசுத்த தேவத்திரவிய அநுமானத்தினால் தாங்கள் வரப்பெறும் பரிசுத்தத்தனத்தின் அறிகுறியாக வெள்ளை யுடை தரித்துக் கோவிலுக்கு வருவார்கள். இவ்வெள்ளை யுடையை இவர்கள் எட்டு நாள் பரியந்தம் தரித்திருந்து ஒன்பதாம் நாளில், அதாவது கர்த்தர் உயிர்த்த ஞாயிறுக்குப் பின் வரும் முதல் ஞாயிறன்று அதைக் களைந்துவிடுவார்கள். இவ்வாறு இவர்கள் தாங்களடையப்பெற்ற பரிசுத்தத்தனத்தின் அடையாளமாகிய வெள்ளை வஸ்திரத்தைக் கழற்றிவிட்டாலும், 'அப்பரிசுத்தத்தனத்தைத் தங்கள் ஆத்துமத்தில் பதிப்பித்துக்கொண்டவர்களா யிருக்கிறார்களென்று அர்ச். அகுஸ்தீன் வசனிக்கிறார். இவர்கள் மேற்சொன்னபடி கர்த்தர் உயிர்த்த திருநாளுக்குப்பின் வரும் ஞாயிற்றுக்கிழமையில் தங்களுடைய ஞானஸ்நான உடையைக் களைந்துவிடுவதின் நிமித்தம் அந்த ஞாயிறு "வெள்ளை வஸ்திர ஞாயிறு" (Dominica in albis) என்று இன்னும் திருச்சபையில் சொல்லப்பட்டு வருகிறது.

* * *

இந்த வெள்ளை வஸ்திர ஞாயிறிலாகிலும், அல்லது கர்த்தர் உயிர்த்த திருநாளின் எட்டு நாளைக்குள் எந்த நாளிலாகிலும் முந்தின வருஷம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எல்லோரும் தத்தம் ஞானத்தாய் ஞானத் தகப்பனோடு தங்களுடைய ஞானஸ்நானத்தின் வருஷாந்த நாளைக் கொண்டாட கோவிலுக்கு வருவார்கள்.

இக்கொண்டாட்டம் முக்கியமாய் இவர்கள் தங்களுடைய ஞானஸ்நான வார்த்தைப்பாட்டைப் புதிப்பிப்பதிலேயே அடங்கியிருக்கும். ஆனபடியால், குருவானவர் இவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது சர்வேசுரனுக்குக் கொடுத்த வார்த்தைப்பாட்டை இவர்களுக்கு நினைப்பூட்டி, அதை இவர்கள் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ளும்படி புத்திசொல்லி, அதைப் புதுப்பிக்கச்செய்து, அதை மிக்க பிரமாணிக்கமாய் நிறைவேற்ற அன்பாய் ஏவுவார்.

*
* *

இவ்வாறு ஞானஸ்நான வார்த்தைப்பாட்டைப் புதிப்பிக்கும் சடங்கு இக்காலத்தில் எவ்விடத்திலும் அவ்வளவாய் நடைபெறுவிடினும், நாமெல்லோரும் நம்முடைய ஞானஸ்நான வார்த்தைப்பாட்டை நினைவுகூர்ந்தவர்களாய் அதை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளோமல்லவா? நாம் இப்படிச்செய்ய நமக்கு இன்றியமையாத ஏற்ற சமயம் எது? நாம் நமது திவ்ய இரட்சகரை திவ்யசற்பிரசாதத்தின்வழியாய் உட்கொள்ளும் சமயமே ஏற்ற சமயமாகும். நாம் நன்மைவாங்கின பிறகு நன்றியறிந்த தொத்திரஞ் செய்கையில் நம்உள்ளத்தில் எழுந்தருளியிருக்கும் நம்முடைய இரட்சகரோடு சம்பாஷிக்கிறோம், சல்லாபிக்கிறோம். அத்தருணத்தில் நம்முடைய ஞானஸ்நான வார்த்தைப்பாட்டை ஞாபகப்படுத்திக்கொண்டு, அவ்வார்த்தைப்பாட்டை நம்முடைய கர்த்தருக்குமறுபடியுங்கொடுப்பதுஎவ்வளவோ பலனுக்குரியது! அப்படிச்செய்வது நமதாண்டவருக்கும்எவ்வளவோ அகமகிழ்ச்சியைத் தரும். அதனால் நமதாண்டவரும் நமக்குத் தேவையாயுள்ள வரப்பிரசாதங்களை நம்மேல் ஏராளமாய்ப் பொழியவிடுவாரல்லோ? நாம் நல்ல கிறீஸ்துவர்களாயிருக்கும்பொருட்டு ஞானஸ்நாதத்தின்போது நாம் சர்வேசுரனுக்குக் கொடுத்த வார்தைப்பாட்டுக்குமிஞ்சி செய்யவேண்டியது ஒன்றுமில்லையல்லவா? அதேனென்றால், மனிதர்களைச் சர்வேசுரன் தம்மையறிந்து நிதேகித்து சேவிக்கவும், அதினால் மோட்சத்தையடையவும் உண்டாக்கினார். ஆனால நம்முடைய ஆதித் தாய்தகப்பன் பசாசை நம்பி சர்வேசுரன்பேரில் அவநம்பிக்கைப்பட்டு விலக்கப்பட்ட கனியைத் தின்றதினால் அவர்களும் அவர்களுடைய சந்ததியாரான சகல ஜாதி ஜனங்களும் சபிக்கப்பட்டவர்களானார்கள். எல்லோரையும் இரட்சிக்கவந்த இரட்சகபெருமான், தம்முடைய இரட்சண்ணியத்தின் பேறுபலன்களுக்குப் பங்காளிகளாக விரும்புவோர்தமக்குப்பிரமாணிக்கமுள்ள ஊழியர்களாயிருக்கும்பொருட்டு, அவர்களிடத்தில் ஓர் ஒப்பந்தஞ்செய்துகொள்வது நியாயத்திலும் நியாயமல்லவா? ஆனது நிமித்தம் நம்முடைய ஞானஸ்நானத்தின்போது நம்மிடத்தில் அவர் பிரமாண வாக்கு வாங்கிக்கொள்ளுகிறார்.

*
* *

நாம் கொடுக்கும் இப்பிரமாணமான வாக்கு, அல்லது ஞானஸ்நான வார்த்தைப்பாடு எதில் அடங்கியுளது? பசாசையும், அதன் கிரியைகளையும், அதன் ஆரவாரங்களையும் விட்டுவிடுவதிலேயும் விசுவாச சத்தியங்களை விசுவசிப்பதிலேயும் அடங்கியுளது.

(தொடரும்.)

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

VII
யாக்கோபின் ஏணி.

"ஓர் ஏணியானது பூமியில் ஊன்றி, அதன் மேல் நுனியோ வானத்தைத் தொட்டுக்கொண்டிருப்பதாக (யாக்கோப்) கனவிற் கண்டான்" (ஆதி. 28, 12).



ஈசாக் என்பவருக்கு இரு குமாரர்கள். மூத்தவன் பெயர் ஏசா, இளையவன் பெயர் யாக்கோப். பின்னவன் முன்னவனுக்குரிய ஜேஷ்ட சுதந்தரத்தை தனது தந்தையிடமிருந்து கபடமாய்ப் பெற்றுக்கொண்டான். ஜேஷ்டன் அதை யறிந்ததும் கவலைகொண்டான்—கோபங்கொண்டான்—யாக்கோபைப் பழிவாங்கத் தீர்மானித்தான். "என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் வருமே; அப்போது நான் என் தம்பியாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன்" என்று தன்னுள்ளத்தில் தீர்மானம்பண்ணினான். இதையறியவும் ரெபெக்காள், பெருந் தீங்கு வீளையக்கூடுமென எண்ணினாள்—பயங்கொண்டாள். ஆகையால், இருவரையும் பிரித்துவைப்பதே புசிதமென அவளுக்குத் தென்பட்டது. தனது கணவன் ஈசாக்கினிடஞ்சென்று "பத்தாவே! ஏசா யாக்கோபின்மீது மிகப் பகைகொண்டு பழிவாங்கத் தீர்மானம்—வெறிகொண்ட சிங்கம்போல் கர்ஜிக்கிறான். இருவரும் இங்கிருப்பது நன்றன்று. ஆகையால் யாக்கோபை எனது தமயனிடம் ஆரானுருக்கு அனுப்பிவிடுவதே உத்தமம். உமது யோசனை என்ன?" வென வினவினாள். அப்படிச் செய்வதே நன்றென அவருக்குத் தோன்றினதினால் யாக்கோப் தன் பெற்றோரின் ஆசீர் பெற்று பிரயாணமாயினன். பெற்சபேயிலிருந்து புறப்பட்டு ஆரானுரை நோக்கி நடக்கிறான். கால் கடுக்கிறது. களைப்பு மேலிடுகிறது. சூரியனும் அஸ்தமிக்கின்றது. அங்கேயே யிளைப்பாறவெண்ணி கீழே யுட்கார்ந்தான். பக்கத்திற்கிடந்த கல்லொன்றின்மேல் தலையைச் சாய்த்துக் காலை நீட்டினான். நித்திரை அவனைக் குடிகொண்டது. அப்போது அவன் கண்ட கனவு என்னவென்றால் :—"ஓர் ஏணி பூமியிலே ஊன்றியிருந்தது. அதன் மேல்நுனியோ வானத்தை எட்டும். அதன்மேல் தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள். அதற்குமேலாக ஆண்டவர் வீற்றிருந்து அவனை நோக்கி 'உன் தந்தையான அபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர் நானே' எனத் திருவுளம்பற்றினார்" என்பதுவே.

யாக்கோப் கண்ட ஏணியைக் கன்னிமரியாய்க்கு உவமானமாய்க் கூறி சிற்சின்னனர் அர்ச்சியசிஷ்டவர்களும்; வேதபாரகர்களும். அவர்களில் அர்ச். அத்தனேஷியஸ், அர்ச். அகுஸ்தீன், அர்ச். புல்ஜென்சியஸ், அர்ச். பெர்னார்து முதலியோரை ஈண்டு குறிப்பிடலாம். "யாக்கோப்கனவிற்கண்ட ஞான ஏணி மரியாயே" என அர்ச். பொனவெந்தூரா பகர்கிறார். "இடைவிடாது பூலோகத்திலிருந்து பரலோகம் எறிக்கொண்டிருந்த மரியாயைவிட மேலாக வேறு யாரை யாக்கோபின் ஏணி குறிப்பிடக்கூடும்?" என மடாதிபதியான 'காட்பிரே' என்பவர் வினவுகிறார்.

1. ஏணியானது தரையிலிருந்து அல்லது தாழவிருந்து அதற்குமேலாயுள்ள ஸ்தலத்திற்குச்செல்ல உதவும் எத்தனம். மரியாய் இகத்தினின்று பரத்திற்குப்போக உதவும் எத்தனம்—துணை—வழியாம். யாக்கோபின் ஏணி வழியாய் சம்மனசுக்கள் ஏறியுமிறங்கியுங்கொண்டிருந்தார்கள். அவ்வாறே மரியாயின் வழியாய் சம்மனசுக்களின் தேவனுகிய சேசுக்கிறீஸ்துநாதர் பூலோகத்திற்கு மனுவவதாரமெடுக்க இறங்கினார். "சம்மனசுக்களேப்போன்ற புண்ணியாத்துமாக்கள் பரலோகம் ஏறினர்" என அர்ச். பொனவெந்தூரா உரைக்கின்றார். "மரியாய் மோக்ஷ ஏணி; ஏனெனில் அவள் வழியாய் மனிதன் மோட்சமேறும்வண்ணம் கடவுள் பூமியிலிறங்கினார்" என அர்ச். புலாஜெண்சியஸ் செப்புகிறார். கபிரியேல் சம்மனசானவர் மரியாய்க்கு மங்களவார்த்தை சொல்லவந்தபோது வேறுபல தூதர்களுங்கூட வந்திருக்கவேண்டும். ஏனெனில் அறியுன்னத கன்னியைக் கனம்பண்ண பலர் வந்திருப்பார்கள். மேலும் கபிரியேல் சம்மனசானவர்—அதிதூதர். ஆகவே வேறு தூதர்களுங்கூட வந்திருப்பார்கள். இவர்களெல்லோரும் இந்த ஏணியினிடத்தும் இதின் வழியாகவுமே யிப்புவியிலிறங்கினர். நமது இரட்சணியத்திற்கு பெருமுபகரணமாகிய இவ்வேணியின் வழியாகவே சுவாமி பிறந்தினத்தில் படைபடையாகத் தேவதூதர்கள் இறங்கிவந்து இடையர்களுக்குத் தோன்றி சுபசேதி யறிவித்தனர். "மேலான உன்னதங்களிற் சர்வேஸ்வரனுக்குத் தோத்திரமும், பூமியில் நல்ல மனதுள்ள மனிதர்களுக்குச் சமாதானமும் உண்டாக" எனக் கடவுளுக்கு ஸ்துதி பாடினார்கள். சம்மனசுக்கள் எத்தனை தடவை மரியாயின் ஜெபத்தியானங்களைக்கொண்டு ஏறிச்சென்றிருப்பார்களென்று யார் சொல்லக்கூடும்? ஆகையால் இஞ்ஞான ஏணியின் வழியாய் சம்மனசுக்கள் ஏறியுமிறங்கியுங்கொண்டிருந்தார்கள் என செப்புவது பிசகாகாது.

2. ஏணியானது தரையினின்று நிமிர்ந்து வானத்தைத் தொட்டு நின்றது. மரியாயோ தம் ஜீவியகாலமுற்றும் கடவுள் ஒருவரையே நோக்கி நிமிர்ந்து நின்றாள். அவளளையாது நின்றான். ஏனெனில் பாவமானது—ஜென்ம வினையோ—கர்மதோஷமோ—ஒன்றுமே யவளை விழத்தாட்டவில்லை. தனது மாசற்ற ஜீவியத்தின்பலனால் எப்போதும் மோக்ஷத்தையே தொட்டு நின்றாள்.

அவளது புண்ணிய பேறுபலன்களாலும் கடவுளாலளிக்கப்பட்ட விசேஷவரங்களாலும் மோட்சத்தையே தொட்டு நின்றாள். மோக்ஷ சுகந்தமே யவளிடம் வீசினது.

3. "ஆண்டவர் எணியின்மேல் வீற்றிருந்தார்." யாக்கோப் கனவிற்கண்ட எணியின் மீது ஆண்டவர் வீற்றிருந்து நல்வார்த்தை கூறினார். மரியாயெனும் எணியில் சேசு தேவன் வீற்றிருக்கவில்லையோ? அவளுதரத்தில் லற்புதமாய் ஒன்பது மாதமிருந்தாரே! மனுவா யுதித்த பின் அவனது மடியன்றே அவருக்குப் பூலோக சிம்மாசனமாயிற்று. தனது சிசுப் பிராயத்தில் மரியாயின் மிருதுவான மடியிலன்றே துயின்றார்; இருந்து வீளையாடினார். 30-வருஷகாலம் அவளோடே—அவள் பக்கத்திலேயே—அவளிடத்திலேயே வாசஞ்செய்தார். அப்படியாயின் யாக்கோபின் எணி மரியாய்க்கு உவமானமாய்ப் பொருந்துமன்றே?

4. எணியினிரு பக்கம் நிமிர்ந்த இரண்டு கம்புகள் உள். இவைகளைச் சேர்க்கக் குறுக்கே பல கம்புகள் போடப்பட்டுள. இவைகளே படிகள். எல்லாம் ஒன்றுசேர்ந்தே எணியாகும். இரு பக்கமுள்ள கம்புகள்—குருத்துவ ராஜ வம்சங்களாகும். அவ்வம்சங்களினின்றே மரியாய் உதித்தனள். விசுவாசம், நம்பிக்கை, நிதேகம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், தயைதாக்ஷணியம், விவேகம், விமரிசை—ஒரு வார்த்தையில்—அவளிடந்துலங்கின சகல புண்ணியங்களுமே எணியின் படிகளாய் நிற்கின்றன. இரு பக்கமுள்ள கம்புகள் எணிக்குப் பிரதானமானதுபோல் மரியாயின் மகிமை கீர்த்திக்குப் பிரதானமாக அப்புனிதவதியின் கன்னிமையும், கடவுளது தாயான அருளும் ஜ்வலிக்கின்றன.

5. எணியின்கீழ்யாக்கோப் விழுந்துகிடக்கிறான். நித்திரைகொள்கிறான். அவன் பலவந்தமாய் சொந்த தேசம் விடலாயிற்று. பரதேசியாக அந்திய நாட்டிலிருக்கின்றான். அது அவனுடைய கதி. மனுக்குலத்தின் கதியுமப்படியே. சுவனத்தினின்று துறத்தப்பட்டோம். இப்போது பரதேசிகளாய் யாத்திரைசெய்கிறோம். இக்குவலயத்தில் அன்னியரைப்போலிருக்கிறோம். மனுக்குலம் பாவத்தால் கீழே விழுந்துகிடக்கின்றது. கடவுளே மறந்தோ அல்லது கவனியாதோ அஞ்ஞானத்தில் நித்திரை கொள்கின்றது. ஆயினும் மனுக்குலத்திற்கு இரட்சண்ணியம் உண்டு. மரியாயைத் தேடிப் போங்கள். "அதி உன்னத இராஜா தாழ்ச்சியால் இறங்கிவந்த மோக்ஷ எணி மரியாய். கீழே விழுந்துகிடக்கும் மனிதன் அவ்வழியே உன்னத ஸ்தானத்திற்கு ஏறிச்செல்லக்கூடும்" என அர்ச். தமியான் இராயப்பர் உரைக்கிறார்.

6. மரியாயின் பக்தி மோக்ஷ எணி. அவ்வழியாய் சுலுவாயும் நிச்சயமாயும் பரலோகம் போகலாம். மரியாயின் பக்தி நமது இரட்சண்ணியத்தின் பிணை. அத்தாயே மோக்ஷமேகும் நெருக்கமும் கரடுமுரடுமான கஷ்ட பாதையில் நமக்கேற்ற துணை. எணியில் ஏறுகிறவன் தன் கைகளேயுங் கால்களேயு முபயோகப்படுத்த வேண்டும். அவ்வாறே இஞ்ஞான எணி வழியாய் ஏற விரும்புகிறவனுந் தன் கைகளேயுங் கால்களேயும் பிரயோகிப்ப தவசியம். கைகளைக் கொண்டு நற்கிரிகைகள் புரிந்துங் கால்களினுல் அதாவது நமது விசுவாச நம்பிக்கையினுல் அத்தாயின்மீது ஊன்றியும் நின்று அவளது சலுகையைத் தேடுவதாகும். விசேஷமாய் பாவத்தால் விழுத்தாட்டப்பட்டுக்கிடக்கும் நீசன் இவ்வேணியை ஏறெடுத்துப்பார்க்கவேண்டும். அப்படிச் செய்யின் அருள் பெறுவான். அதுகூலமடைவான். "ஏனெனில் நாம் பாவத்தினின்று பரிசுத்தத்தனத்திற்கேறும் எணி மரியாயே" என உறுதிகூறுகிறார் முத்திப்பேறுபெற்ற அல்பெர்த். "பாவிகளின் எணி யவள்—எனது மிகுந்த நம்பிக்கை" என அர்ச். பெர்னார்து மொழிகிறார். பாவியானவன்—அவனது பாவங்கள் எவ்வளவாயினுஞ்சரி எத்தன்மைத்தாயினுஞ்சரி—இஞ்ஞான எணியை ஏறெடுத்துப்பார்ப்பானுகில்—மரியாயின் சலுகையைத் தேடுவானுகில்—நம்பிக்கையை யிழந்துபோவதற்குச் சற்றேனுங் காரணமில்லை. அவ்வேணி வழியாய் பாவத்தினின்று புண்ணியத்திற்கு ஏறுவானென்பது திண்ணம். நாமெல்லோரும் பாவிகள்—ஆண்டவனருள் நமக்குத் தேவை—மோக்ஷமேற விரும்புகிறோம். ஆகவே, நமது இரட்சண்ணிய எணியைக் கடைப்பிடித்து நிற்போமாக. அர்ச். அசிசி பிராண்சிஸ்கு சபை நடவடிக்கை வரலாற்றில் ஜில்ஸ் சகோதரர் கண்ட பின்வருங் காட்சி வரையப்பட்டுளது. "பொதுத்தீர்வை நாள் வந்துவிட்டது. தேவதூதர்கள் எக்காளங்களே ஊதினார்கள். எண்ணிறந்த ஜனங்கள் அகண்ட மைதானத்தில் கூடினர். அவ்கு இரண்டு எணிகளைக் கண்டார் ஒன்று வெண்ணிறமுள்ளது. மற்றொன்று செந்நிறமுள்ளது. இரண்டும் பூமியில் ஊன்றி வானத்தைத் தொட்டு நின்றன. செந்நிற எணியின் உச்சியில் கிறீஸ்துவானவரிருந்தார். துஷ்டரால் பகைக்கப்பட்டதாலும் மற்றோரால் புறக்கணிக்கப்பட்டதாலும் கோபக்குறியுடன் தென்பட்டார். அவரிருந்த விடத்திற்கு சற்றே கீழ் அர்ச். பிராண்சிஸ்கு நின்றார். மேலே ஏறுகையில் தன் சகோதரர்களே நோக்கி "சகோதரர்களே! வாருங்கள். நமதாண்டவர் உங்களே யழைக்கின்றார். தைரியமாயிருங்கள். அஞ்சவேண்டாம். வாருங்கள்" எனக் கூவியழைத்தார். அவர்களுந் துணிந்து எணியின்மேலேறினர். ஒருவர் மூன்றும் படி போனதும்—மற்றொருவர் நான்காம் படி போனதும்—வேறொருவர் பத்தாம் படி போனதும்—சிலர் மத்தியில் போனதும்—சிலர் கிட்டே போனதும்—எல்லோருங் கீழேவிழுந்தார்கள். இதைக் கண்டு பரிதாபத்தோடே நீதிபரனே வேண்டினர் அர்ச்சியசிஷ்டவர். தஞ்சசோதரர்கள்மட்டில் இறங்கும்வண்ணம் மன்றாடினார். ஆனுல் கிறீஸ்துவானவரோ! இரத்தம் வடிந்துகொண்டிருந்த தன் கையின், விலாவின் காயங்களே அவருக்குக் காட்டி "உன் சகோதரர்கள் செய்ததை இதோ பார்!" எனச் சொன்னார்.

ஆயினும் அர்ச். பிராண்சிஸ்கு அதைரியப்படவில்லை. இன்னு மிரந்து மன்றாடினார். ஏதோ பதிலடைந்தவர்போல் அவ்வேணிவிட்டிறங்கி "அவநம்பிக்கைப்படாதேயுங்கள் சகோதரர்கள், அதோ! வெண்ணிற எணி. அங்கே செல்லுங்கள், அதின் வழி மோக்ஷம் ஏறக்கூடும்" என மொழிந்தார். அப்படியே சகோதரர்களுந் தீவிரத்துச் சென்றார்கள். கன்னிமரியாய்—பாவிகளினடைக்கலம்—மனிதர்களின் தஞ்சம் அங்கே வீற்றிருந்தனள். தம் பிதாவாம் பிராண்சிஸ்கு செப்பியதுபோல் அவர்கள் துணிந்து அவ்வேணியின்மே லேறினர்கள். மரியாயும் அவர்களே யண்போடேற்று பரகதி சேர்த்தனளாம்.

(தொடரும்.)

M. S. M.

(இச்சம்பவத்தினின்று கிறீஸ்துவானவரைவிட மரியாய்க்கு அதிக வல்லமையுண்டெனக் கொள்ளலாகாது. ஆனுல் நமது இரட்சகர் நம் பாவத்திற்காக கோபமாயிருப்பினும் நந்தாயாம் மரியம்மாளின் அடைக்கலம் புகுந்து, அவளது மன்றாட்டினுல் அவர் கோபத்தைத் தணித்து நாம் அருள்பெறலாம் எனத் தெரிந்துகொள்க.)

A CHRISTION RISHI.

ஒரு கிறீஸ்துவ ரிஷி.



பந்நூற்றிப்பதினேட்டு வயதுள்ள ஒரு கிறீஸ்துவ ரிஷி ஹிமயபருவதத்திலிருப்பதாகவும், அவரைக் கண்டுபேசியதாகவும் வட இந்தியாவிலுள்ள சுந்தர சிங் என்னும் புரொடஸ்டாண்டு கிறீஸ்துவர் ஒருவர் சொல்லுகிறார். ஷி ரிஷியாரைக்கண்டு பேசினவிருத்தாந்தம் சுந்தர சிங் சொன்னபடி பின்வருமாறு:—

"ஹிந்துக்களால் மிக்க பூசியமாயெண்ணப்படும் ஹிமயபருவதத்தின் சிகரங்களில் ஒன்று கைலாசமலை என்னப்படுவது. அந்த மலைதான் அநேக ரிஷிகளின் வாசஸ்தலமென்று சொல்லப்பட்டதால் அதைப் பார்க்க நான் மெத்த ஆவலோடு பிரயாணஞ்செய்துபோகையில் ஷி சிகரத்தினருகே வழியில், ஒரு கற்பாறையின்மேல் திருச்சிலுவை யடையாளம் செதுக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றுப் பேராச்சரியமுற்றேன். ஹிந்து தேவர்கள் நடமாடுவதாகக் கருதப்படுமிடத்தில் அர்ச்சிக்கப்பட்ட சிலுவை காணப்படுவ தெங்ஙனமென்று சிந்தித்து, இன்னும் இதுபோன்ற கிறீஸ்துவ சின்னங்கள் இவ்விடத்திற் காணலாகுமோவென்ற ஆவலுடையவனுய் அந்தச் சுற்றுப்புறங்களிலேயே சிலகாள் அகருமிங்குஞ் சுற்றித்திரிந்தேன். ஒன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை. கடைசியில் ஒரு நாள் ஒரு சிறு சிகரத்திலிருந்து கீழே இறங்குகையில், சூரியகிரணத்தின் ஒளியானது என் கண்ணை மங்கச்செய்ய எனக்குமுன் இருப்ப தென்னவென்றும், நான் எங்கே கால்வைக்கிறேனென்பது முதலாய்த் தெரியாமல் அடியெடுத்தவைக்கவே, கால்தவறி விழுந்து மலைச்சரிவில் உருண்டு புரண்டு ஒரு பள்ளத்தாக்கில் தள்ளப்பட்டேன். இவ்வாறு அலங்கோலமாய்த் தலைகீழாகத் தள்ளப்பட்ட அதிர்ச்சியிலுல் அங்கு நான் சில நிமிஷநேரம்வரையில் ஸ்மரணையற்றுக்கிடந்தேன். பிறகு மூர்ச்சை தெளிந்து கண்திறந்து பார்க்கையில், எனக்கெதிரே பெருங் குகையொன்றிருப்பதையும், அதன் வாசலில் கரைத்துத் திரைத்துப் பழுத்த

கிழவனொருவன் உட்கார்ந்திருப்பதையுங் கண்டேன். அவர் தலைமயிரும் தாடிமயிரும் நீண்டு வளர்ந்து நிலத்தில் படிந்தன. கண் புருவங்களிரண்டும் வளர்ந்து தளர்ந்து வளைந்து, கண்ணைத் திரைபோட்டதுபோல் மூடிக்கொண்டிருந்தன. அவர் ஆடையொன்றும் உடுக்காமலிருந்தாலும் அவர் உரோமங்கள் அவரது நிர்வாண தேகத்தை முழுதும் மூடி மறைத்திருந்தன. அந்த மகாரிஷி ஒரு பெரிய தீர்க்கதரிசியாயிருக்கவேண்டுமென மதித்து அவரைப் பயபக்தியுடன் அண்டி அவருடன் வார்த்தையாட ஆரம்பித்தேன். அவர் என்னுடன் இரண்டொரு வார்த்தை பேசி நான் கிறீஸ்துவன் என்று தெரிந்துகொண்டபின், பார்ச்மென்ட் என்னும் தோற் கடுதாசியினால் செய்யப்பட்டிருந்த சுவிசேஷத்தின் பழய புத்தகமொன்றையெடுத்து, அதினின்று அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் ஐந்தாம் அதிகாரத்தை வாசிக்க ஆரம்பித்தார். அதன்பின் அந்த மகாரிஷி தன் ஜீவிய சரித்திரத்தை எனக்குப் பின் வருமாறு சொல்லலாயினார் :—

"நான் 318-வருஷங்களுக்கு முன்னே எஜிப்து நாட்டைச்சேர்ந்த அலெக்சாண்டிரியா பட்டணத்திலே ஒரு மகம்மதிய குடும்பத்திலே பிறந்தேன். எனக்கு முப்பது வயதானபோது, உலகத்தைத் துறந்து மகம்மதிய சந்நியாசியானேன். அதில் எனக்கு ஞான ஆறுதல் கிடைக்கவில்லை. ஒரு நாள் ஒரு கிறீஸ்துவ குருவைக் கண்டேன். அவருடன் சம்பாஷித்துத் தர்க்கம் பண்ணினதின் பலனாக சில நாட்களுக்குப்பின் நான் கிறீஸ்து வேதத்தைத் தழுவி ஞானஸ்நானம் பெற்றேன். அப்போது எனக்கு ஞான ஆறுதல் கிடைத்தது. எனக்கு ஞானோபதேசம் பண்ணினவர் அர்ச். சவேரியாரோடு கூடப்பிறந்தவரின் மகனாகிய ஜெர்னாஸ் என்பவர். இவர் அக்காலத்திலிருந்த அக்பர் சக்கரவர்த்திக்கும், மற்றும் பல மத சிரேஷ்டர்களுக்கும் ஞானஸ்நானங் கொடுத்தவர். நான் வைத்திருக்கும் இந்தப் புராதீன பைபிள் புத்தகம், கான்ஸ்டன்டைன் அரசர் காலத்தில் செய்ததுமன்றி, அர்ச். சவேரியாருக்குச் சொந்தமாயிருந்து, அவர் கையாண்டு வந்தது. அவர் காலத்துக்குப்பின் ஷை ஜெர்நாசுக்குச் சொந்தமாக, அதை அவர் எனக்குக் கொடுத்தார். எனக்கு 105 வயதானபோது உலக சஞ்சாரத்தைவிட்டு என் சீவியத்தின் மீதியான காலத்தைத் தனியேயிருந்து கழிக்க வெண்ணி யிந்தக் கானகத்தை யடைந்தேன். இங்கே நானாவித பழவர்க்கங்களும் அரிய கந்த மூலாதிகளுமுண்டு. இவைகளிற் சில கற்பகத்தைக்கொண்டிருக்கின்றன. இத்தகைய மூலிகைகளைப் புசித்தேன். நான் என் வாழ்நாளைப் பெருக்கிக்கொண்டுவருகிறேன்" என்பதே.

மேற்குறித்த விவரங்கள் "மோட்சமும் அதற்குப்பின்னும்" என்னும் பெயர் கொண்ட ஓர் ஆங்கிலப் புத்தகத்தினின்று எடுக்கப்பட்டவை. அவை மெய்யோ பொய்யோவென்பதற்குப் போதிய சாட்சியமில்லாததால் நாம் எதுவுஞ் சொல்வதற்கில்லை. ஷை ரிஷி, ஷை சுந்தர சிங்கிடத்தில் வேடிக்கைக்காக பொய்யை மெய்போலச்சொல்லி அவனை யேமாற்றினான் போலும். ஆயினும் 318 வயதுள்ள ஒரு மனுஷன் ஜீவித்திருக்கிறான் என்பது தற்காலத்து அநுபவத்துக்குப் பொருந்தாது.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

5-ம் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாள் விதவையானாள் — அகுஸ்தீன் கலாசாலையில் சிறந்த வித்தைகளைக் கற்றுத் தேர்ச்சியடையும்படி தனது ஆஸ்திபாஸ்திகள்யாவையும் செலவழிக்கிறாள்—உரோமானியன் என்பவன் அவளுக்குச் சகாயமாய் வருகிறான்—அகுஸ்தீனுடைய தீய வொழுக்கத்தைப்பற்றி அவள் சஞ்சலசாகரத்தில் அமிழ்ந்தியிருக்கையில், அவர் திரும்ப சன்மார்க்கத்தை நாடி வரச்செய்யும் முயற்சிகள் பளிச்சென்று தோன்றும் மின்னலுக்கொப்ப அவளது இருதயத்தில் நம்பிக்கையைப் பிறப்பிக்கின்றன.

(கி. அ. 372—375.)

(முன் தொடர்ச்சி.)

அகுஸ்தீன் தான் கற்றிருந்த கல்வியை நினைத்து பூரிப்படைந்தார். அத்தனை சிறும் வயதில், அவ்வளவு படிப்புப் படித்து முடிக்கலாகுமென்று அவர் நினைத்ததேயில்லை. அவர் இலக்கியத்தில் அடைந்த கீர்த்திக்குமுன் இப்போது தத்துவ சாஸ்திரத்தில் அவர் அடைந்திருக்கும் கீர்த்தியானது, சிறு மணிக்குமுன் பெரு மலைக்கு ஒத்திருந்தது! அவருடைய விசேஷித்த வரமேதெனில், வியப்பையுண்டாக்கும் அவரது சாதுரியமுமல்ல, சூட்சமமான உணர்ச்சித் தீவிரமுமல்ல, சாமர்த்தியமும் துலக்கமுமான புத்திக் கூர்மையுமல்ல, இளம் பருவத்தில் துலங்கிவந்த இப்பெருமித குணவிலட்சணங்களுக்குமேலான வேறொன்று அவரிடமிருந்தது. அவ்வரத்தின் முன் மற்ற வரங்கள்யாவும் சூரிய வெளிச்சத்தில் ஏற்றப்பட்ட தீபம்போல் வெறுமையாய்த் தோன்றின. கர்த்தர் அவதரித்த 372-ம் ஆண்டில், அகுஸ்தீன் படிப்பை நிறுத்தாமல், இன்னும் மேலான சாஸ்திரங்களைக் கற்றுவரவேண்டுமென்று மோனிக்கம்மாள் அபிலாஷை கொண்டு, என்ன செய்வதென்று தெரியாமல் ஏக்கமாயிருந்தாள். அச்சமயத்தில், அகுஸ்தீனுடைய சாமர்த்தியமானது, உதய காலை சூரியனைப்போல், அதிசயத்துக்குரிய காந்தியுடன், ஜோதிமயமாய் ஜொலிக்கத் தொடங்கிற்று.

அகுஸ்தீன் இலக்கியங்களைக் கற்றுவரும் காலையில், ஆரிஸ்டோட்டல் என்பவர் இயற்றியுள்ள (Categories) காட்டகோரி என்னும் சுயம்பிதநையாயிதப் புஸ்தகம் ஆழ்ந்த அர்த்தங் கொண்டதென்றும், சிறந்த வித்துவான்களின் உதவியைக்கொண்டு, அதன் மானத சாஸ்திர மறை பொருள்கள் கண்ணுக்குப் புலப்படும்படி மணலில் சித்திர வடிவங்கள் வரைந்து, தான் அதைக் கற்க முடியுமென்றும், அவருடைய அணியிலக்கண சாஸ்திரியார் அடிக்கடி சொல்லக்கேட்டிருக்கிறார். அவ்வளவு அபூர்வமான புஸ்தகத்தை உபாத்தியாயர் தனக்குக் கற்பித்துத் தருங்காலம் வரும்பரியந்தரம், காத்திருக்க முடியாமல், இப்போதே அதைப் படிக்க அபிலாஷைகொண்டு, ஒரு புஸ்தகம் சம்பாதித்து அதைத் தானே படிக்கத்தொடங்கினார். அதைக் கண்டுபிடிக்க தனக்கு அற்பமேனும் பிரயாசையாவது கஷ்டமாவது இல்லாமல்போனதே அவருக்கு அதிசயமாய்த் தோன்றிற்று. அதிலிருந்த அதிக கஷ்டமான பிரசனங்களைச் சுலபமாய்ப் படித்துக்கொண்டார். பிறகு முறைப்படி வித்தியாசாலையில் அது கற்பிக்கப்படும்போது, தான் முன்னதாகக் கற்றறியாத எதையும் உபாத்தியாயர் புதிதாய்க் கற்றுத்தரவில்லை. அற்ப உதவியாவது அற்ப பிரயாசையாவது இல்லாமல் சுலபமாகவே நியாய சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், க்ஷேத்திரக் கணிதம், சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம் என்னும் எண்வகைப்பட்ட கணக்கு சாஸ்திரம், சங்கீத சாஸ்திரம் ஆகிய இவைகளைக் கற்றுக்கொண்டார்.

சுயம்பிதநையாயிதப் (Categories) புஸ்தகத்தைப் பிறருக்கு வியாக்கியானஞ்செய்து விளக்கிக்காட்டுவதுதான் அவருக்கு அரும்பிரயாசையாயிருந்தது. ஏனெனில், அதிக புத்தி சாமர்த்தியமுள்ளவர்கள்முதலாய் அதைக் கிரஹிக்க படும் பாட்டைக்கண்டு அதிசயமுற்றார். அப்படிப்பட்ட புத்திசாலிகளுள், வெகு சிலர் மாத்திரம் அவருடைய வியாக்கியானத்தை அறைகுறையாய்க் கண்டுபிடிக்கக்கூடுமாயிற்று.

அவருக்கு அப்போது 19 வயதாயிருந்தும், உரும வெயிலில் கண்கூசாமல் சூரியனை யுற்று நோக்கக்கூடும் பார்வையும், வானத்தை யளாவி நிற்கும் உயர்ந்த மலையினுச்சியை நாடிச்செல்லும் தீவிரமும் உள்ள கழுகுக்கொத்த சிறந்த புத்தித் தீட்சண்யத்தோடும், அத்தியந்த சாவதானத்தோடும் முன்னுக்கு விளங்குவாரென்று அப்போதே யாவருக்கும் வெட்டவெளிச்சமாய் புலப்பட்டது. "நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்க" மென்பதுபோல் அவருடைய தீட்சண்ய புத்தியோடு, அவருடைய நடத்தையும் நல்லொழுக்கமும் மாட்சிமையில் ஓங்கிவந்தன. பாலியத்தில் அவருக்கிருந்த முரட்டுத்தனமும் மனோலெளலியமும்போய், அதற்கு எதிரிடையாக யாவரரலும் விரும்பத்தக்க மதுரகுணமுள்ளவரானார். நடத்தையில் முன்னையவிட அடக்கவொடுக்கமுள்ளவரானார். தன்னுடைய பள்ளித்தோழர்களுடன் சேர்ந்து ஆட்டபாட்டத்திலும் விநோத வேடிக்கைகளிலும் நாள்கழிக்கமாட்டார். கம்பீரமுள்ளவராயிருக்கப் பிரயாசைப்பட்டு, நல்லபேரெடுக்க ஆசித்து, "தினைத்துணை நன்றிசெயினும், பனைத்துணையாகக்கொள்வர் பயன்றெரிவார்" என்றபடி தனக்கு சகாய உதவி செய்பவர்கள் மட்டில், என்றும் நன்றியுள்ளவராயிருந்தார். அவரது தீட்சண்ய புத்திக்கு ஒத்த விசாலமான இருதயமும், அவருக்கிருந்தது. மற்றவர்கள்மட்டில் அவர் எவ்வளவு உருக்கப் பெருக்கமுள்ளவராயிருந்தாரென்றால், உருக்கப் பெருக்கமென்னும் சாகரத்தின் வற்றாத ஊற்று, அவரிடமிருந்தே உற்பவித்த தெனத்தகும்.

அவரது அங்க விலட்சணத்தைப்பற்றி கொஞ்சம் சொல்வோம். அதாவது அவரது ஆத்துமத்திற்கு உடையைப்போலிருந்த, அவரது சரீரத்தைப்பற்றியே. அவர் அவ்வளவு

நெட்டையானவருமல்ல, குட்டையானவருமல்ல. அவருடைய குணலட்சணம் மேன்மையும் அச்சமுமானது. நஸியான்ஸன் அர்ச். கிரகோரியார் சொல்லுமாப்போல், வித்தையிற் சிறந்த விற்பன்னர்களுக்குச்... .....சாதாரணமாயிருப்பதுபோல, அவருடைய மேற்றோல் சுத்தமாயும் தெளிவாயுமிருந்தது. அவருடைய கூர்மையுள்ள பார்வை எதையும் ஊடுருவிப் பார்க்கும் குணமுள்ளது. ஆயினும், அப்பார்வையில் அமைதியும் உணர்ச்சித் தீவிரமும் உருக்கமுமே அணிகலங்களாக விளங்கும். அவருடைய மெல்லிய குரலும், நுண்ணிய தொண்டையும், குறுகிய நெஞ்சும், எதைக் காட்டுமென்றால், இப்படியப்படியென்று பறையடிப்பதைவிட, சிந்திப்பதே சிரேஷ்டம்; ஒருவனை அடக்கி யாள்வதைவிட, நல் வார்த்தைகளால் தன் வழிக்குத் திருப்புவதே உசிதம்; பெருத்த சபைகளுக்குப் போய் தன் வாய்ச்சாலகத்தினால் அச்சபையாரை வியக்கச்செய்வதைவிட, தன் பிராண சிநேகிதர்கள் சிலரைச் சேர்த்துக்கொண்டு அவர்களுடன் மதுரமும் நேசமும்பொருந்திய வார்த்தைகளையாடி, அவர்களைத் தன் பாரிசமாக்குவதே உசிதம் என்று காட்டும். ஒரே வார்த்தையில், அவர் சம்பூரண சவுந்தரியமும், பாரமார்த்திகப் பெருந்தன்மையுமுள்ள கனவானாகக் காணப்படுவார்.

மோனிக்கம்மாள் உலகத்து மனுஷியாயிருந்திருப்பாளேயானால், தன் புத்திரனுடைய அங்க விலட்சணத்தையும் புத்தி திறத்தையுங் கண்டு அவளது இருதயம் அக்களிப்பினால் துள்ளியிருக்கும். ஆனால் அவளோவெனில், இந்த அழகான மேற்பூச்சுக்குள்ளிருந்ததென்னவென்று கவனித்து, அங்கு பயங்கரத்துக்குரிய பாவாக்கிரமங்களையும், நாளுக்குநாள் அவருடைய ஆத்துமத்தை இறுகப்பந்தனம் செய்து வரும் பாவச்சங்கிலியையும், தன் நேசபுத்திரனுடைய அழியாத ஆத்துமமானது கேடுகெட்டுப் போவதையுங்கண்டு நடுங்கினாள். ஆனதால் அவளது எண்ணத்தின்பிரகாரம், தன் மகனுடைய படிப்பு சவுந்தரியம் யாவும் அவளுக்கு விழலாய்த் தோன்றின. இதோடு, அவர் புண்ணிய ஒழுக்கத்தை விட்டுவிட்டதையும், அவரது இருதயத்தில் தெய்வ விசுவாசமென்பது மாயமாய் மறைந்துபோனதையுங்கண்டு மனமுருகினாள். அவ்விசுவாசமானது தனது உற்பவஸ்தானமாகிய இருதயத்திலிருந்து மண்டைக்கேறி விட்டது.

ஒரு பாதாளத்திலிருந்து அதிலும் ஆழமான மற்றொரு பாதாளத்தில் விழுந்தார். அவர் விசுவாசத்தை யிழந்ததுதான் தாமதம். சீக்கிரத்தில் கற்பையுமிழந்தார். அவர் கூவிச்சொல்வது :—

"கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்கவதற்குத் தக" என்பதற்கு விரோதமாய், ஐயோ இப்படிப்பட்ட பயங்கரத்துக்குரிய பாவச்சேற்றில் நான் அமிழ்ந்தியிருக்குந்தனையும்—விசுவாசத்திற்கடுத்த காரியங்களில் இப்படிப்பட்ட வெட்கத்திற்குரிய அசட்டைத்தனத்தில் நான் முழுகியிருக்குந்தனையும்—சகலவித சாஸ்திர சம்பிரதாயங்களை யான் கற்றுத்தானென்ன? அதிக கருகலான புஸ்தகங்களை ஆசானுடைய உதவியின்றி யான் கண்டுபிடித்துத்தானென்ன? ஐயோ! அவைகளினால் என்ன பயன்? புத்தியில்லாத பேதைகளும் சம்பத்தில்லாத ஏழைகளும் உமது திருச்சபையைவிட்டு தூரந் தவறிப் போகாமல், அதன் தாய்க்குரிய மடியிலேயேயிருந்து, தேவ ஏவுதலுக்கு ஆசை அன்புடன் செவிகொடுத்து, புண்ணிய சாங்கோபாங்கத்தையடைந்து, மனோசமாதானத்துடன் வாழ்ந்து வருகிறபடியால், அவர்கள் என்னைவிட பாக்கியவானகளல்லவா?"

அவருக்கிருந்த இந்தப் பெருத்த ஆத்துமவியாதி, நாளுக்குநாள் அதிகரித்துவருவதை மோனிக்கம்மாள் கண்டு பயந்தாள். ஆனால் அவள் தைரியம் தப்பவில்லை. அவளுக்குக் கடவுள்மேல் விசுவாசமும், அகுஸ்தீனுடைய நல்ல இருதயத்தின்மட்டிலும் ஆழ்ந்த புத்தியின்மட்டிலும் நம்பிக்கையுமிருந்தது.

உண்மையாகவே, லௌகீக கல்விசாஸ்திரமானது அவரைத் தேவ பாதைக்குக் கொண்டு வந்துசேர்க்கும் என்று, அவள் வெகுவாய் நம்பி, அவருடைய படிப்பை நிறுத்தாமல், எவ்வித கஷ்டங்களாவதுபட்டு, அவரை இன்னும் கார்த்தேஜ் நகரில் படிக்கவைப்பதே சரியென்று ஒரே மனதாய் தீர்மானித்தாள். ஆனால் ஐயோ! கேவலம்! ஒரு பெண்பிள்ளை என்ன கஷ்டப்பட்டு, எவ்வளவு பொருள்தான் சேகரிக்கப்போகிறாள்!!

மோனிக்கம்மாளுக்கிருந்த பல கவலைகளுக்குள் அகுஸ்தீனை யின்னும் படிக்கவைக்கவேண்டுமென்னும் கவலையே பெருத்த கவலையாயிருந்தது. அவள் இதே விசாரமாயிருக்கும்போது, பத்ரீஸியூஸின் நேசனும், தகாஸ்தே நகரின் முக்கிய குடிகளில் ஒருவனுமான, உரோமானியானூஸ் என்பவன், அவளுடைய சிந்தாகுலத்தையறிந்து, அகுஸ்தீனுடைய படிப்புக்குண்டாகும் செலவைத் தான் ஏற்றுக்கொள்வதாக அத்தியந்த விநயத்தோடும் பக்தி சிரத்தையோடும் அவளுக்குத் தெரிவித்தான். இந்த உதாரகுண புருஷனுக்குத் திருச்சபையும் ஜனசமூகமும் என்றும் நன்றிபாராட்டக்கடவது. இவருடைய நாமதேயம் உலக முடிவுபரியந்தம் மறையாதிருக்கக்கடவது.

(இன்னும் வரும்.)

A MOTHER'S SACRIFICE.
ஒரு தாயின் பரித்தியாகம்.

(பரிதாபத்துக்குரிய சம்பவம்)



சென்னை அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த ஒரு கிராமத்தில், ஒரு தகப்பனும் தாயும், பதினாறு வயசுள்ள ஏக புத்திரனுமாக மூன்று பெயர் சேர்ந்த ஹிந்து குடும்பம் ஒன்றிருந்தது. அவர்கள் அஞ்ஞானிகளாயிருந்தாலும் நல்லவர்களாயும், கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாயிருந்த தங்கள் அயலாருடன் அதிநேசமுடையவர்களாயும் வாழ்ந்துவந்தார்கள். "இயற்கை வாசனை செயற்கை வாசனை" என்பதற்கேற்ப கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களுடன் ஸ்நேகஞ்செய்ததினால், கத்தோலிக்கர்களுடைய சகவாசத்தின் பயனாக, சத்திய வேதத்தினுண்மையும், இலாபமும் அவர்களுக்கு நாளாவட்டத்தில் தெரியவர; ஞானஸ்நானம் பெறாத தொன்றுமாத்திரமேயன்றி, மற்றப்படி அவர்கள் கத்தோலிக்கர்களுடைய நல்லொழுக்கங்களையும், பக்திக் கிருத்தியங்களையும் வெகு நுணு நுணுக்கமாய்க் கையாண்டுவருவாராயினர். ஆகவே, ஷை தாயானவள் அக்கிராமத்திலிருந்த அர்ச். அந்தோனியார் கோவிலுக்குள் சாஷ்டாங்க தெண்டனிட்டு பயபக்தியுடன் வேண்டிக்கொண்டிருப்பதை அடிக்கடி ஜனங்கள் பார்ப்பார்கள். சர்வேசுரன் மட்டிலும் மற்ற அர்ச்சியசிஷ்டவர்கள்மட்டிலும் அவள் அதிவிசுவாசமுடையவளாயிருந்தாலும், அர்ச். அந்தோனியார்மட்டில் விசேஷ பக்தி விசுவாசங்கொண்டிருந்தாள். அக்குடும்பத்துக்கு எஜமானனாகிய புருஷன் பர்மாவுக்குப்போய் உத்தியோகஞ்செய்து சம்பாதித்து, அங்கிருந்து அனுப்பும் சிறு தொகையைக்கொண்டும், ஷை சிறுவன் சில ஆடுகளை மேய்ப்பதினால் வரும் சுவல்ப வரும்படியைக்கொண்டும் அவர்கள் ஒருவாறு ஜீவனஞ்செய்துவந்தார்கள். குடும்பத்தலைவன் பர்மாவிலிருந்து வருஷத்துக்கு ஒரு முறை இந்தியாவுக்குவந்து சில நாள் தன் குடும்பத்துடனிருந்துவிட்டுத் திரும்பவும் போய்விடுவான். அவ்வாறு அவன் இரண்டு மாதங்களுக்கு முன் இவ்விடம் வந்திருந்தபோது சத்திய வேதத்தின்மேல் அவனுக்கிருந்த ஆசை மிகுதினால், "நான் இம்முறை பர்மாவுக்குப் போகுமுன் சத்திய வேதத்தைக் கைக்கொள்ளவேண்டும்" என்று தன் விருப்பத்தைத் தெரிவிக்கவே, அவ்வூர் குருவானவரின் முயற்சினால், மந்திரங் குறிப்பிடமும் பிரதான வேதசத்தியங்களும் அவனுக்கு நன்கு உபதேசிக்கப்பட்டு ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டபின் அவன் பர்மாவுக்கு போகலானான். அவன் மனைவிக்கும் மகனுக்கும் குறிப்பிடம் நன்றாய்த் தெரியாததால் அவர்களுக்கு அடுத்த வருஷம் அவன் சென்னைக்குத் திரும்பிவரும்பொழுது ஞானஸ்நானங் கொடுக்கலாமென்று அச்சடங்கை நிறுத்திவைத்தார்கள். ஆனால் "மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது" என்ற பழமொழிப்படி விஷயம் வேறாய் முடிந்தது.

தீடீரென இளைஞன் பக்கவாதத்தினால் (பாரிசவாய்வு) பீடிக்கப்பட்டு, இரண்டு கால்களும்வழங்காமல் படுகிடையாய்க்கிடந்து பெருந் துன்பமுற்றான். கைவிரல்கள் மூடக்கிக்கொண்டன. கைகளை ஒருவாறு தூக்க இயலுமேயன்றி உண்ண உடுக்க அவைகள் உதவா. நாவுங் குளறுதலாயிருந்தது. உணவு தாய்தான் ஊட்ட வேண்டுவதாயிற்று. மலமும் ஜலமும் படுக்கையிலேயே. இவ்வாறு அவன் நிலைமை மிகவும் ஆபத்துக்கிடமாயிருந்தது. ஆதனாலே அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்துவிட ஏற்பாடு செய்தார்கள். அவன் சற்று தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்தவன். மந்திரங் குறிப்பிடப் புத்தகத்தை எந்நேரமும் படித்து, அவைகளை ஒருவாறு ஏற்கெனவே கற்றுக்கொண்டதினால் அவனுக்கு உடனே ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. ஏழைத் தயானவள், தனக்குப் பெருமையும் ஆதரவுமாயிருந்த தன் ஏக புத்திரனின் பரிதாபத்துக்குரிய நிலைமையைக்கண்டு பெருந் துயரங் கொண்டு கண்ணீரும் கம்பலையுமாயிருந்தனள்.

அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போக அவள் சம்மதிக்கவில்லை. அவனுக்கு வேண்டும் சிகிச்சைகள்யாவையும் தானே செய்துவந்தாள். இரவும் பகலும் ஊணுறக்கமின்றி மகனண்டை கட்டிக் காத்திருந்து, அவனைத் தன் கையில் தூக்கவும் பிடிக்கவும், மார்போடணைத்து கஞ்சி பால் முதலிய ஆகாரங்கள் புகட்டவும் மெத்த சிரமப்பட்டுப் பராமரித்துவந்தாள். இவ்விதப் பணிவிடைகளை அண்டை அயலார் வலியுச்செய்யவந்தாலும் அவர்களுக்கு அவைகளை விடாமற் தானே சகலத்தையுஞ் செய்வாள். தாய் இவ்வாறு கஷ்டப்பட்டு உழைப்பதையும், அவள் அடிக்கடி "என் கண்ணே, எப்படியப்பா இருக்கிறது உடம்பு, உனக்கு அர்ச். அந்தோனியார் சிக்கிரம் சௌக்கியத்தைக் கொடுப்பாரப்பா, பயப்படாதே" என்று அன்பின் மொழிகளால் தேற்றுவதையும் மகன் கண்டு புன்சிரிப்பான முகத்தைக் காண்பிப்பானேயல்லாது பேச வாய் வரவில்லை. இந்தச் சிறுவன் வளர்த்த ஆசைகள் தன் ஆயனைக் காணுமல் மூடியிருக்கும் குடிசைக்கு வெளியேயிருந்து கத்தும். வியாதிஸ் தன் நிலைமை ஈரவர கவலைக்கிடமாயிருந்தது. சன்னம் சன்னமாய் குறைவதற்குப் பதிலாக வியாதி காளுக்குகாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆகாரம் கொள்வது மட்டுப்பட்டுக் கொண்டுவந்தது. கஞ்சி, பிராத் முதலியவைகள் இறங்குவது பிரயாசையாயிருந்தது. சில வேளைகளில் நெடுநேரம் அசைவற்றுப் பிணம் போல் கிடப்பான். சில வேளைகளில் குதிரை போல் கனைத்துச் சிரிப்பா . இப்படியாய் துன்பத்துடனும் கஷ்டத்துடனும் பல பகலையும் இரவையும் போக்கவேண்டியதாயிற்று. பத்து நாளாய் பையன் ஆகாரமின்றி அறிவின்றிப் பேச்சின்றிப் பிணம்போற் கிடந்தான். இந்த நிலைமையைக்கண்ட குருவானவர் அவனுக்கு அவஸ்தைப்பூசுதல் கொடுத்தார். அந்தக் குடிசையின் சுவரில் ஒரு பாடுபட்ட சுரூபம் தொங்க விட்டிருந்தது. அதன் பக்கத்தில் எரிந்துகொண்டிருந்த இரண்டு மெழுகுவத்திகளே அக்குடிசைக்கு வெளிச்சந் தந்தன. அப்பையனின் சரீரமாகிய கூடு, அதனுள்ளிருந்த ஆத்துமா சர்வஜீவதயாபரக்கடவுளிடத்துக்குச் செல்லத் தடையாயிருந்தது. அக்கம்பக்கத்திலிருந்த கிறீஸ்துவ சகோதரர்களெல்லாரும் ஒவ்வொருவராய் வந்து மரிக்கப்போகிறவனுக்காக ஓயாமல் சர்வேசுரனைப் பார்த்து ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அவரவர்களும் தங்கள் தங்கள் பக்திக்கும் சக்திக்குமேற்றவாறு பக்திக்குரிய சுரூபம், படம், அருளிக்கம் முதலிய பண்டங்களைக் கொண்டுவந்து அந்தக் குடிசையை அலங்கரித்தார்கள். ஆகவே அக்குடிசை ஒரு சிறு ஜெபக் கூடமாக மாறிவிட்டது.

கடைசியாய் ஒரு நாள் கள்ளிரவில் அவனுக்கு மூடிவு நேரிட்டது. எப்படியெனில், சிறுவன் பார்வைக்கு சமாதானமாயும் அமைதியாயும் நித்திரைசெய்வதுபோலிருக்கையில், சாந்தமாய் மரித்து அம்பரன் திருவடி சேர்ந்தான். ஆனால் அவனைத் தன் மார்போடணைத்துக் கொண்டிருந்த தாய்க்கு மகன் மரித்தது தெரியவில்லை. அவன் மரித்து நெடுநேரஞ் சென்ற பின் தேகஞ் சில்லிட்டபின்னரே மகன் மரித்தானெனக் கண்டாள். கண்டவுடன் சகிக்கொணாச் சஞ்சலத்தால் வீறிட்டலறி யெழுந்து "மகனே, மகனே, என்னருமைக் கண்மணியே, என் செல்வமே, என்னுருயிரே, என்னைவிட்டுப் பரலோகஞ் சென்றனையோ" வென்று கத்திக் கதறி நிலத்தில்விழுந்து புரண்டழுத ஆபாசத்தால் அக்குடிசையின் மூலையில் சாய்ந்தாள். இவளிட்ட கூக்குரலைக்கேட்ட அயலார் சித்திரை கெளிந்தெழுந்து வந்துபார்க்க, பையன் இறந்து கிடப்பதையும், தாயார் விசனமிகுதியால் ஸ்தம்பித்து மூலையில் உட்கார்ந்திருப்பதையும் கண்டார்கள். இந்தப் பரிதாபத்துக்குரிய நிலைமையைக்கண்டு, வந்தவர்கள் எல்லோரும் இரக்கமும் துக்கமுங்கொண்டு, அலங்கோலமாய்க் கிடந்த பிரேதத்தையும், வீட்டையும் சீர்ப்படுத்தி, உடலை யடக்கஞ்செய்வதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினார்கள். சிலர் பிரேதத்தை யெடுத்துக் கழுவிச் சுத்த உடை உடுத்துவதிலும், சிலர் வீட்டைப் பெருக்கிச் சீர்ப்படுத்துவதிலும், சிலர் குடிசைக்குள் இடம் போதாமையால் வெளியே பிரேதத்தை வளர்த்திவைக்க ஒரு சிறு பந்தல் போடுவதிலும் அலுவலாயிருக்க, இன்னொரு ஸ்த்ரீ, மகனைப்பறி கொடுத்துவிட்டு, துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் எழைத்தாயை ஒருவாறு ஆற்றித் தேற்றலாமென்ற இரக்கச் சிந்தையுடன், மூலையில் இன்னும் அசைவற்று உட்கார்ந்திருந்த அவளருகே சென்று பார்கையில், ஐயோ பரிதாபம்! அவளும் தன் மகன்கூடவே உயிர்துறந்து மறுலோகஞ் சென்றனளென்று தெரியவந்தது. "மகனும் தாயும் இருவரும் காலஞ்சென்றார்கள்" என்ற அபூர்வ துக்க செய்தியைக்கேட்ட அந்த

கிராமத்தாரனைவருங் கூட்டமாய்வந்து, யாரு மற்ற அந்த இரண்டு பிரேதங்களைக்கண்டு வெகு வாய்த் துக்கித்துப் பிரலாபித்தார்கள். இந்தப் பரிதாபமான சம்பவத்தை நேரிற் கண்டவர்களிலுஞ்சரி, கேட்டவர்களிலுஞ்சரி கண்ணீர் சிந்தி அழாதவ ரொருவரில்லை. தாயும் மகனும் மற்றெல்லாக் காரியங்களிலும் பிரியாமல் ஒன்றித்திருந்ததுபோல், மரணத்திலும் அவர்கள் இணை பிரியாமல் ஒன்றாகவே போனார்கள். ஆனால், மகன் ஞானஸ்நான முத்திரையால் மோட்சத்துக்குச் சுதந்தரவாளனாக்கப்பட்டு, அவஸ்தைப் பூசுதலால் உறுதிப்படுத்தப்பட்டபடியால் அவன் தப்பாமல் மோட்சத்துக்குப் போயிருப்பானென்று எண்ண இடமுண்டு. தாயோ, சத்திய வேதத்தின்மட்டிலும் மெய்யான சர்வேசுரன் மட்டிலும் மெத்த பக்தியுள்ளவளாயிருந்தபோதிலும், ஞானஸ்நானம் பெறுமல் மரித்தாளான தினால், அவளுக்கு மோட்ச பதவி கிட்டியிருக்குமோ என்பது சந்தேகம். ஆயினும் நாம் இவ்விஷயத்தைப்பற்றி இத்தோடு நிறுத்திக்கொண்டு, இந்த கல்ல பெருந்தன்மையுள்ள தாய்மட்டில், அளவில்லாத நன்மைத்தனமுடைய கருணையங் கடவுள் கருணாகடாட்சம்வைப்பாரென்னும் நம் பிக்கையைக் கைப்பற்றியுள்ளோம்.

FEMALE EDUCATION.
பெண் கல்வி.

"உழைப்புள்ளாருக்கு ஆகாத காரியம் ஒன்றுமில்லை" என்பது மூத்தோர் வாக்காம். பெண் கல்வி அபிவிர்த்தி விஷயமாய் பின்வரும் சரித்திரமே மேற்படி உவமானத்திற்குப் போதிய சான்றாகும். அதாவது :—

சுமார் எண்பது வருடங்களுக்கு முன்னர் கல்கத்தாவுக்கு அருகில் ஓர் ஊரில் ஸ்வியாத பானர்ஜீ என்னும் அந்தணரொருவர் இருந்தார். அவர் கல்வியிலும் அறிவிலும் சிறந்தவர். ஆங்கில பாஷா ஞானமும் உடையவர். கல்வி என்பது சிற்றறிவைக் குற்றதுணையென்றும், சிற்றறிவென்பது ஆணும் பெண்ணுமாகுமென்றும் அவர் சொல்லிவருவார். வாசியாத மாதை மணஞ் செய்பவன் வாழ்க்கை பிருக வாழ்க்கைக்கு சமானமாகும் என்னும் எண்ணத்தை அவர் உடையவர். அத்தகைய எண்ணங்களையுடைய அவர் படித்த பெண்ணையே தாம் மணஞ்செய்து மகிழவேண்டுமென்று முயன்றும் அம்முயற்சிப் பயன்படவில்லை. கடைசியில் அரியடா என்னும் ஊரில் போலாநாத கோசா என்பாரின் புதல்வியாகிய சசி சல்லாபாய் என்னும் மங்கையை மணந்தார். அம்மாதோ எழுத்தவாசனை இன்னதென்றறியாதவள். புருஷனுக்கும் மனைவிக்கும் உண்டாகும் அந்நியோன்னிய நேசத்துக்குக் கல்வியே காரணமாகுமென்பதைக் கண்டுணர்ந்த பானர்ஜீ தன் எழ்மை நிலைமையைக் குறித்து எண்ணாது எண்ணித் துணிவுற்றார். சில சமயங்களில் அவர் ஆசையோடு தம் மனைவியுடன் பேச விரும்புகையில் அம்மாது அவருடைய மனவியாயிருந்தும் அவரைக்கண்டு நாணத்தால் ஓடி ஒளிவதைக் காணும்போது அவருக்கு உண்டாகும் அருவருப்புக்கும் பெருந் துயரத்துக்கும் அளவேயில்லை. இத்தகைய மடமாதை தாம் மணஞ் செய்ததற்குக் காரணமாயிருந்த தன் அன்னையை அவர் வெறுத்ததும் நொந்ததும் கொஞ்சமல்ல. அவருக்கு நாளாக நாளாக தம் மனவியின் உறவு துக்க உறவாகி ஒன்றும் தோன்றுமல் ஓர் நாள் தாமே தம் மனைவிக்குக் கல்வி கற்பிக்க எண்ணங்கொண்டு அவளிடம் தம் எண்ணத்தை எடுத்துரைக்கலானார்.

கல்வி கற்பதென்பது அம்மாதுக்கு விபரீதச்செய்கையாக விளங்கிற்று. பெண்கள் படிப்பதென்பது இந்தியாவில் எங்கேனும் உண்டா? பெண் தர்மமாவது "தெருவாயலைக் கடவாமல் வீட்டுக்குள் இருந்து மூத்தோர் சொற்படி நடப்பதன்றோ? எப்போதும் வேலையும் கையுமாயிருப்பதன்றோ? நாயகன் உண்டபின் உண்டு, எழுமுன் எழுந்திருப்பதன்றோ?" என்ற எண்ணங்களையுடைய அம்மாது, தன் கணவனார் தனக்குக் கற்பிக்க எத்தனிக்கும்போதெல்லாம் தனக்கு வேலையுண்டென்றும், தன் மாமியார் தன்னைக் கூப்பிடுகிறாளென்றும், மறநாளைக்காகட்டும் என்றும் பல சாக்குபோக்குகளைச் சொல்லுவான். ஸவியாத பானர்ஜீயோ தம் எண்ணத்தை எப்படியாவது நிறைவேற்றவேண்டுமென்னும் மன உறுதி உடையவராய், காளடைவில் அவளிடம் கல்வியின் பெருமையைக் கூறி தன் கருத்திற்கிசையவைத்தார். அவள் அப்பால் ஒருவாறு படிக்க முயன்றாள். ஆனால் அவ்வீட்டி

லுள்ளார் சிலரும் அக்கம்பக்கத்தார் பலரும் இக் காரியத்தைக்கண்டு அவரவர் இஷ்டப்படி பேச லாயினர். பகற்காலத்தில் ஓர் இறு பெண் தன் காயகளோடு பேசுவதும், சிரிப்பதும் கூடுமா வென்றும், அவன் அருகில் அமர்ந்து கையில் புத்தகம் எந்தி படிப்பது முறையோவென்றும், படித்த பெண்கள் புருஷர்களுக்கு அடங்குவரோ வென்றும், நாணமின்றி வெளியிலுலாவி ஆண்க ளோடிறவாடி தீராப் பழி கேடாரோவென்றும், இன்னும் பலவாறுகவும் அவர்கள் சொன்னார் கள். அவ்வூரிலும் அடுத்த ஊரிலும் மேற்படி தம்பதிகளை நிந்தித்தார் சிலர்; கைகொட்டி பரி கசித்தார் பலர். இந்த நிந்தைகளைச் சகிக்கமுடி யாமல் பானர்ஜீ சிந்தைநொந்து தியங்கியது முண்டு. ஆனால் தாம் கொண்ட விரதத்தை விடாது தம் மனைவிக்குக் கல்வி கற்பித்துவந் தார். அவருடைய விடா முயற்சியாலும், தன் அறிவின் மேம்பாட்டாலும் சசிசல்லாபாய் கொஞ்சகாலத்திற்குள் எப்புத்தகத்தையும் படிக் கவும் படித்ததன் பொருளை அறியும் திறமையு முடையவளானாள். அம்மாது அவ்வாறு படித்து வருவதைக்கண்ட பானர்ஜீயின் அண்ணன் மனைவிக்கும் படிப்பில் சற்று ஆசையுண்டா யிற்று. மேற்படி புருஷன் மனைவியிருவரும் இவளுக்கும் கல்வி கற்பித்துவந்தார்கள். இவ ளும் சிறிது காலத்துக்குள் படிக்கக் கற்றுக் கொண்டபின் இம்மூவரும் தம் வீட்டில் தம் உற வின்முறையாரில் சிறு பெண்களையும் பருவ மாதரையும் படிபிக்கவேண்டுமென்னும் பேரா வல்கொண்டனர்.

ஆரம்பத்தில் எளனமும் நிந்தையும் செய்த அவர்கள் (உறவின்முறையாரும் மற்றவர்களும்) வரவரத் தாமும் படிக்க விரும்பி எந்நேரமும் புத்தகமும் கையுமாயினர்.

அவர்களெல்லோரும் பானர்ஜீயின் மனை வியைச் சூழ்ந்து, அவள் கற்பிப்பதைக் கருத் தோடு கேட்டுவந்தார்கள். பிறகு ஊரிலுள்ள மற்றப் பெண்களும் கல்விகற்றுக்கொள்ளுமாறு பானர்ஜியும் அவர் மனைவியும் ஓர் பாடசாலை வைத்தார்கள். அப்பாடசாலைக்கு உபாத்தியாயர் கள் இவ்விருவரேயாவர். "பெண் கல்வி" யைப் பொறிதும் பிழையாகக்கொண்ட அந்நாளில் ஊராரால் பானர்ஜீயும், சசிசல்லாபாயும் அடைந்த கஷ்டம் அதிகம். பாடசாலைக் கட் டிடத்தின் சொந்தக்காரரைக்கொண்டு பாடசா லையிலிருந்த சாமான்களை வெளியிலெறிந்து கட் டிடத்திற்குப் பூட்டுப்போட்டுவிட்டார்கள். ஒவ் வொரு வீடாய்ச்சென்று பெண்களை பானர்ஜீ சசிசல்லாபாய் பாடசாலைக்கு அனுப்பவேண் டாமென்று வற்புறுத்திச் சொன்னார்கள். ஆனால் பானர்ஜீ அவர்கள், தம் விடா முயற்சியால் முதல் வருடத்திலேயே சுமார் 60 பெண்களைச் சேர்த்து அவர்களுக்குப் படிப்புகற்றுக்கொடித் துக்கொண்டுவந்தனர்.

பிறகு ஒரு பாடசாலை இரண்டாகி, பின் னர் அவை மூன்றாகி பின்னர் சில வருடங்க ளுக்கெல்லாம் அவை இருபதாயின. கல்சத்தா விலிருந்து அநேக உபாத்தியாயர்களைவந்து பாட சாலைகளை நடத்திவந்தனர். பின்பு பாடசாலை கள் நூற்றுக்கணக்காய் அங்கங்கே ஏற்பட்டன.

இதனை வாசிக்கும் கத்தோலிக்குத் திரா விடச் சகோதரிகளே! இந்நாளில் பெண் கல்வி யில் பெரிதும் விர்த்தியாயிருப்பது கல்கத்தாவே யாகும். இவ்விர்த்திக்குக் காரணமாயிருந்த சில ருள் ஸவியீபாத பானர்ஜீயும் அவர் மனைவியாரு மாவர் என்று நாம் உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ?

தற்காலத்தில் நம்முடைய ஞான மேய்ப்பர் கள் கத்தோலிக்கு ஆரம்பப் பாடசாலைகளைத் தங்கள் பங்குகளில் நூற்றுக்கணக்காய் எங்கும் ஸ்தாபித்து அநேக விடங்களில் இலவசமாயும் பெண்களைப் பயில்விக்க முயன்றுவருகிறார்கள்.

இவர்களுடைய அரும்பெரும் முயற்சிகள் எல்லோராலும் போற்றத்தக்கனவாம்.

ஆனால் சாதாரணமாய்க் கத்தோலிக்குப் பெண்கள் அம்முயற்சிகளால் தக்கவாறு பய னடையாமல் இன்னும் கண்மூடித்தனமாய் தங் கள் காலத்தை வீணாகக் கழிப்பதானது பெரி தும் விசனிக்கத்தக்கதே. ஆகவே, கத்தோலிக் குத் தாய் தந்தையர் தங்கள் அசமந்தத்தை மூற் றும் ஒழித்து தங்கள் பெண்கள் சத்திய வேதக் கல்வியையும் இலௌகீகக் கல்வியையும் கற்று மேம்பாடு அடையுமாறு சிரத்தை எடுத்துக் கொள்வார்களாக!

S. M.

"ஆத்துமங்கள் மோக்ஷபாக்கியஞ் சேர்ந்த பின் எனக்காகப் பரிந்து பேசும்படி நான் மர ணித்த ஆத்துமங்களுக்காக வேண்டிக்கொண்டு வருகிறேன்." —அர்ச். அதுஸ்தீன்.

"தயையாயிருங்கள், என் நேசர்களே, நீவ களாவது என்பேரில் தயையாயிருங்கள்." —ஜோப். 19, 21.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத் திராதிபர் உத்தரவாதியல்லர். நிருப நேயர் கள் தங்கள் நிருபங்களை மிக விரிவாய் எழுதி விடுகிறார்கள். இடம் போதாமையால் அவை களை ஒருவாறு தறைக்கவும், அல்லது முழு துமே விலக்கவும் அவசியம் நேரிடுகிறது. நேயர்கள் இதைக் கவனித்துத் தங்கள் கடி தங்களைக் கூடியவரையில் சுருக்கி எழுத வேண்டுமெனக் கோருகிறேம். ப—ர்.]

சங். எல். எக்ஸ். போர்ஞ்தீஸ் சுவாமிக ளின் வெள்ளி ஜூபிலி.

1919-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 23-ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை சென்னை ஜார்ஜ் டௌன் ஜூபிலி ஹாலில் சங்கைக்குரிய L. X. பொர்ஞந்தீஸ்சுவாமியவர்களின்வெள்ளி ஜூபிலி மகோற்சவத்தைக் கொண்டாடுகிற விஷயமாய் நெல்லூர் ஜில்லாக் கலெக்டராகிய திவான் பஹ தூர் L. D. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் கூடிய கூட்டத்தில் தி. ஏ. சில்வெயிராப் பண்டிதாவர்கள் செய்த உபந் நியாசத்தின் சாராம்சம்:—

இந்த வெள்ளி ஜூபிலியை நாம் விசேஷ சிறப்பாய்க் கொண்டாடவேண்டியதேன்?

கௌரவம்பொருந்திய சபா நாயகரே! சகோதரர்களே! இதோ சங்கைக்குரிய L. X. பொர்ஞந்தீஸ் சுவாமிகளின் வெள்ளி ஜூபிலியை தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள இந் திய கிறீஸ்துவர்களனைவரும் தக்க சிறப்போடு கொண்டாடவேண்டுமென்று நமது டெப்டி போஸ்ட் மாஸ்டர் ஜெனரலாகிய ம-ா-ா-ஸ்ரீ மஜிமைதாஸ் பிள்ளையவர்கள் பிரரேபிக்கவும், அந்தப் பிரரேபனையை ஆங்கிலேய யூனிவர் சிற்றி காலேஜ் பிரின்சிப்பால் ம-ா-ா-ஸ்ரீ டி. குழந்தையவர்கள் எற்றுக்கொண்டு, அதனைத் இண்டமும் ஷை உற்சவத்தைக் கௌரவப்படுத் தும்படியாக மாணாக்கருக்குக் கொடுக்கும் உயர் தரப் படிப்பின் உபகாரச் சம்பளத்துக்காக ஓர் நி தியை ஸ்தாபிக்கும்படியாக வற்புறுத்தவும் கேட்டீர்களே! அந்தப் பிரேரணையையும் அதை யொட்டிய ஆலோசனையையும் ஆதரிக்கப் புகும் நான் அப்படிச் செய்யுமுன் இது விஷயமாய் முன்னுரையாகச் சில வார்த்தைகள் பேசுவது வசியமெனக் கருதுகிறேன்.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள இந்திய கிறீஸ்துவர்களியாவரும் ஒருங்கே கனம் சுவாமியவர்களின் வெள்ளி ஜூபிலி மகோற்ச வத்தைக் கொண்டாடவேண்டியதவசியமேன்? என்னும் கேள்வி பலர் மனத்திலும் உதிக்கக் கூடும். ஆம் சாதாரணமாய் ஒரு குருவானவரு டைய வெள்ளி ஜூபிலியை அல்லது வேறெந்தக் கொண்டாட்டத்தையாவது அவருடைய பங்கு விசாரணைக் கிறீஸ்துவர்களும் ஒரு வேளை கினைகிதரும், அபிமானிகளும்மாத்திரம் கொண் டாடுவது சகஜம். இந்த L. X. பொர்ஞந்தீஸ் சுவாமிகளும் ஒரு சாதாரண குருவானவர் தானே? இவரது இந்த வெள்ளி ஜூபிலியை தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள இந் திய கிறீஸ்துவரனைவரும் இத்தனை ஆரவாரத் தோடு கொண்டாடவேண்டி இவரிடத்தில் நாம் காண்கிற நூதன விசேஷம் என்ன? நம் அனை வருடைய அன்புக்கும் வணக்கமுள்ள பற்றுத லுக்கும் இவர் உரியவராவதெப்படி?

இவர் மற்றக் குருக்களைப்பார்க்கிலும் வைதிக லௌகீக விஷயங்களில் அதிகத் தேர்ச்சி பெற்ற விற்பன்னர் என்பதற்காகவோ? அல்ல லது கடந்த 25-வருஷகாலமாய் ஒரே பங்கு விசாரணையை மிகச் திறமையாய் பரிபாலனஞ் செய்துவருகிற இவருடைய பேராற்றலுக்கா கவோ? அல்லது தமதாட்சிக்குள் இருக்கும் அனைதைகளுக்கும் ஏழை எளியவர்களுக்கும் அன்னவஸ்திர முதலானவை கருணையோடளித் துவரும் இவரது தரும குணத்துக்காகவோ? அல்லது அனேக ஏழைகளுக்குக் கல்வி பயிற்று வித்தும், அவர்கள் ஜீவனோபாயத்துக்கு பல உத்தி யோகங்களைத் தேடிக் கொடுத்தும் வந்த பேருப காரத்துக்காகவோ? அல்லது பற்பல வைதிக நூல்களைத் தாமே சுயமாய் எழுதியும் வேறு பல பாஷைகளிலிருந்து மொழிபெயர்த்து அச்சுப் பதிப்பித்தும் தந்த பெருங்கொடைக்காகவோ? அல்லது வேறு பல பங்கு விசாரணைத் திருநாட் களில், அந்தந்தக் குருக்களாலும் வரவழைக்கப் பட்டு அங்கங்கேபோய்ச் செய்த சாதுரியமும் மாதுரியமுமான அதி உன்னத பிரசங்கங்களால் அந்தந்த பங்குக் கிறீஸ்துவர்களுக்கு ஞானஜீர் தங்களை ஊட்டி பேருவகை காட்டிய அவரது பரோபகாரத்திற்காகவோ? மேலும் அனேக அஞ்ஞானிகளையும் பதிதரையும் மனந்திருப்பி, கத்தோலிக்கு வேதத்தின் மெய்யான விசுவா

சத்தை அவர்களிருதயங்களிற் சொரிந்து, சத்திய மவறக்குக் கொண்டுசேர்த்த இவருடைய பெருந்தகைமைக்காகவோ? அல்லது 20-வருஷங்களுக்குமுன் மிகவும் ஈன ஸ்திதியிலிருந்த ஓரிடத்தையும் அவ்விடத்தில் கட்டியிருந்த கோவிலையும் அலங்காரமும் உன்னதமுமான ஓர் அழகிய விஸ்தாரமான தேவாலயமாயமைத்து அதற்கேற்ற சுற்றுச்சுவரையுங் கட்டி முன்னிருந்த குரு சுவாமியாருடைய சிறு வீட்டை பெரிய மாளிகையாய்ச்செய்து அதையடுத்து ஜூபிலி மண்டபமென்றொரு மேல்மாடியையும் அதன்கீழ் ஏழைப் பிள்ளைகளுக்கென்றொரு பள்ளிக்கூடத்தையும் சிருமித்து அப்பள்ளிக்கூடத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு வரும்படி ஞாயிறுவாரந்தோறும் தமது கோவிலுக்குவரும் தாய்தந்தையருக்குத் தமது சுகத்தைப்பாராமல் கதறி வற்புறுத்தி பிரசங்கித்து வந்ததற்காகவோ? பின்னும் அனுத வித்தவைகளின் போஷிப்புக்காகவும் உதவியற்ற ஏழைக்குமாரர்களை கறையேற்றுவதற்காகவும் ஓர் நிதியை ஏற்படுத்தி அந்நிதியிலிருந்து அவர்களுக்கு உதவி புரிந்துவரும் அவருடைய பெருங் கருணைக்காகவோ? இவர்கு சிறந்த அரிய குணவிசேஷங்களுக்காகவும் இன்னமும் நாம் அறிந்ததும் அறியாததுமான இவருடைய பற்பல உத்தம புண்ணியகிருத்தியங்களுக்காகவும்மாத்திரம் நாம் இந்த உற்சவத்தை மிகச் சிறப்பாய் கொண்டாட வருந்துகிறோமென்று யாவரும் நினைக்கக் கூடும். மெய்யாகவே இப்பொழுது நான் சொல்லிவந்த நமது சுவாமிகளின் ஒவ்வொரு கிரியையும் நமது அன்புக்கும் நன்றியறிதலுக்கும் உரியதேயாகும். அன்றியும் அவைக்காகமாத்திரம் நாம் அந்த நல்ல தந்தையை புகழ்ந்து வாழ்த்தி அவருடைய ஜூபிலியை நாம் எல்லோரும் சிறப்பித்து கௌரவப்படுத்தி ஓர் ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்துவது நியாயமேயாயினும் அந்தக் கடமை முக்கியமாய் அவரது பங்கு விசாரணைக்குட்பட்ட கிறீஸ்துவர்களையும் அவரிடமிருந்து விசேஷ பராமரிப்பையும் உபகாரத்தையும் பெற்றவர்களையும் பொருத்ததேயாகும் அல்லவா? அவ்வாறின்றி இத்தென்னிந்தியாவெங்கும் இலங்கையிலுமுள்ள இந்திய கத்தோலிக்கர் சகலரும் இவ்வுற்சவத்தைக் கொண்டாடவும் அதற்காக ஓர் ஞாபகச் சின்னத்தை ஸ்தாபிக்கவும் மூற்பட்டதற்கு இன்னும் விசேஷித்த காரணங்களிருக்கவேண்டும்.

யாதொரு தளக்கர்த்தன் தனது தேசத்தின் சத்துருக்கள்மீது படையெடுத்துப்போய் அவர்களைச் சமர்க்களத்தில் முறியடித்து வெற்றிமாலை சூடி ஜெயசீலனாய் தன் நாட்டுக்குத் திரும்பும்போது அந்நாட்டின் பிரஜைகள் சந்தோஷ ஆரவாரஞ்செய்து அவ்வெற்றியின் ஞாபகார்த்தமாகவும் அத்தளக்கர்த்தனைக் கௌரவப்படுத்துவதற்காகவும், யாதோர் உன்னதமான ஞாபகச் சின்னத்தை எழுப்புவதை நாம் கேட்டும் பார்த்துமிருக்கிறோம். அல்லது நீதி, நெறி, பொறை முதலிய சற்குணங்களைக்கொண்ட ஓர் செங்கோல் மன்னனுடைய இராச்சியபரிபாலனகாலத்தில் அந்நாட்டின் பிரஜைகளுக்கு இருந்த செல்வம், சமாதானம், சுயாதீனம் முதலிய சுபிக்ஷகாலத்தை ஞாபகப்படுத்தவும் அவ்வரசனை தலைமுறை தலைமுறையாக வாழ்த்திப் புகழவும் அவனுக்காக ஓர் மகோன்னத ஞாபகச் சின்னத்தை நிருமாணிப்பதையும் நாம் அறிவோம் நல்லது, இப்பொழுது நமது சுவாமிகள் இத்தகைய காரியங்களில் எதையேனும் செய்திருக்கிறார்களோ? என்பதைப் பார்ப்போம். இதோ இந்திய கிறீஸ்துவர்கள்யாவரும் ஒருங்கேவாழ்த்தித் துதிக்கத்தக்கதாய் அவர்கள் செய்திருக்கும் மூன்று பெரிய காரியங்களை உங்கள்முன் ஒன்றன்பின் ஒன்றாய் ஞாபகப்படுத்துவேன். முதலாவது நமது நாட்டில் சத்திய வேதத்தை விதைத்தவரும், இன்றைக்கு நாநூறு வருஷங்களுக்குமுன் நமது மத்தியிலிருந்தவரும், பூத உடம்பும் புகழுடம்பும் அழியப்பெறுதவருமான அர்ச். பிரான்சிஸ்கு சவேரியாரின் ஞாபப் பிள்ளைகளாகிய ஏறக்குறைய ஒரு லக்ஷம் பேருக்கு அடைக்கப்பட்டிருந்த குருத்துவமென்னும் பூலோக மோக்ஷத்தை தம தரும்பெரும் பிரயாசையால் திறந்து, தாமே முதன்முதல் அதில் பிரவேசித்து தம்மைப் பின்பற்றிய பலருக்குமே அதன் வழியைச் செப்பனிட்டவர் இவரேயாவர். தென்னாட்டின் கரைதுறைப்பட்டணங்களில் அர்ச். சவேரியாருடைய காலத்துக்குப் பின் இந்த 400-வருஷங்களாக இந்த உத்தம வழிகாட்டிக்குமுன் ஒருவராவது குருத்துவத்தின் பரிசுத்த அந்தஸ்தில் பிரவேசித்ததேயில்லை. இந்தியாவின் நாகரீகத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அடிப்படையாக நம்மில் பலர் உயர்தரக் கல்வி கற்றுக்குருத்துவம் பெறவேண்டியது அத்தியாவஸ்யம். ஏனெனில், பொது நன்மைக்காக உழைப்பதற்கு குருத்துவத்தின் உன்னத பதவியைவிட வேறு எற்ற மேலான பதவி ஒன்றுமில்லை. இதை நாம் யாவரும் அறிந்திருந்தும் 400-வருஷங்களாய் இவ்வுயர் பதவியை அடையாத காரணம் நமது தேச ஜனங்களின் மத்தியிலுள்ள சபிக்கப்பட்ட வேற்றுமையும் வித்தியாசமுமேயாகலாம்.

சங்கைக்குரிய பெர்னாந்தீஸ் சுவாமிகள் தாம் குருப்பட்டம் பெறு முன்னே பூலோக மோக்ஷமென்ற ஒரு சிறு பிரபந்தத்தை மொழிபெயர்த்துப் பிரசுரித்தபோது அதன் முகவுரையில் அங்கலாய்ப்போடு முறையிட்டு உரைப்பதாவது "நான் குருத்துவ அந்தஸ்தை தெரிந்துகொள்ள அபேக்ஷித்து அதற்கான வேத சாஸ்திரப் பயிற்சியைப் பெற விரும்பி, இவ்விந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள எல்லா மேற்றிராணிமாருக்கும் விண்ணப்பம் செய்து தங்கள் செமினெரிகளில் ஒன்றில் என்னை ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடினேன். அவர்கள் அனைவோரும் என்னைச் சேர்க்க இடமில்லை என்றுவிட்டார்கள். இரண்டொருவர்மாத்திரம் என் சொந்தச் செலவில் வேண்டுமளவுல் படித்துக்கொள்ளலாமென்றார்கள்" என்பதே. இதனால் 400-வருஷங்களாக இந்தியாவிலுள்ள இலக்ஷக்கணக்கான கிறீஸ்துவர்களுக்கு இந்தியாவிலுள்ள குருமடங்களில் ஒன்றிலாவது இடமில்லாதிருந்தது பட்டப்பகல்போல வெளிப்படையாகிறது. அர்ச். சவேரியார் தமது காலத்தில் அதாவது 1534-ம் வருஷத்தில் தென்னாட்டின் கரைதுறைப்பட்டணங்களிலிருந்து 4 வாலிபர்களை வேதசாஸ்திரப்பயிற்சி பெறும்படி லிஸ்போன் பட்டணத்துக்கு அனுப்பினதாக அவரது சரித்திரவாயிலாக அறிகிறோம். இதனால் அந்தப் பெரிய அப்போஸ்தலர் இந்தியரின் கல்வியிலும் அபிவிருத்தியிலும் தமது சிந்தையில் எவ்வளவு தாகமுடையவராயிருந்தாரென்பது தெரியவருகிறதல்லவா? ஐயோ! அவருக்கிருந்த அந்தப் பேராவலும் தாகமும் அவரோடேயே அற்றுப் போனதுபோலும். இற்றைக்கு 25-வருஷங்களுக்குமுன் அர்ச். பிரான்சிஸ்கு சவேரியார் தமது அப்போஸ்தலிக்கு ஜீவியத்தின் பெரும் பாகத்தை செலவழித்த அங்கிருந்து ரோமாபுரிக்கு அனேக நிருபங்களை எழுதிய இடமுமாகிய மணப்பாட்டை ஒரு பக்தர் தெரிசித்தபோது, அங்கே அவர் கண்ணீர் நிறைந்த கண்களோடு சொன்னதாவது "400-ம் வருஷங்களுக்குமுன் இந்த ஜனங்கள் மத்தியில் வசித்து இவர்களோடு கடமாடித் திரிந்த இப்போது மோக்ஷ வீட்டிலிருக்கும் அந்தப் பெரிய அர்ச்சியசிஷ்டவராகிய சவேரியார் இப்போது இந்த ஜனங்கள் இருக்கும் பரிதாபத்துக்குரிய நிலைமையைக் காண்பாராகில் உண்மையாகவே இரத்தக்கண்ணீர் சிந்தி யழுவார்" என்பதே. சங். பெர்னாந்தீஸ் சுவாமிகள் தாம் குருப்பட்டம் பெறுமுன் இச்சம்பவம் அவ்வூரில் நடைபெற்றதாகையால், அவரும் இந்த மன உடைவான வார்த்தையைக் கேட்டிருக்கக்கூடும். அந்த காட்சியில் அவ்வூரில் ஜீவித்திருந்தவர்களில் அந்தப் பெரிய அர்ச்சியசிஷ்டவரின் பெயரைக்கொண்ட நமது சங்கைக்குரிய L. சவியேர் பெர்னாந்தீஸ் சுவாமிகளே முதலாவது குருவாக அபிஷேகம் பெறத் தேவன் சித்தமானார். திருச்சி மிஷனைச்சேர்ந்த சங். சுவாமிகளான T. ரோச், G. ரோச், J. ரோச், J. L. மிராண்டா, சல்வதோர் மிராண்டா மிஜியேர், தோமஸ் முதலிய குருக்களும், மைலாப்பூர் மிஷனைச்சேர்ந்த சங். சுவாமிகளான, L. B. ரோச், மிக்கேல் மோத்தாவாஸ் முதலிய குருக்களும் இன்னும் அனேகரும் நமது சங்கைக்குரிய சுவாமிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினவர்களே! ஆகையால் 'இந்தப் புண்ணிய புருஷரே அவர்களுக்கு அந்தப் பூலோக மோக்ஷத்தைத் திறந்துகொடுத்தவர் என்பது வெளிப்படை. ஆகையினால் நான் முன் சொன்னதுபோல அந்த ஜெயசீலனை தளக்கர்த்தனுக்கு நாம் செய்யும் ஆரவாரச் சிறப்பைப் பார்க்கிலும் பதின்மடங்காய் இந்த நமது குரு சுவாமியார் அவர்களின் வெள்ளி ஜூபிலியைக் கொண்டாடி அதை என்றும் நினைவூட்டும் ஓர் ஞாபகச் சின்னத்தை ஸ்தாபிப்பது நிரம்பவும் நியாயம் அல்லவா?

2-வது 400-வருஷங்களுக்குமுன் அர்ச். பிரான்சிஸ்கு சவேரியார் ஐரோப்பாவிலிருந்து நம்மை இரக்ஷிப்பதற்காக இந்தியாவின் கரைதுறைப்பட்டணங்களுக்கு வந்தார். அவ்வாறே அதற்கு 400-வருஷங்களுக்குப்பின் இன்னொரு சவேரியார் (அதாவது சங். L. X. பெர்னாந்தீஸ் சுவாமியார்) நமது முன்னேற்றம் இரக்ஷணியம் ஆகிய அதே நோக்கத்தைக்கொண்டு நம் கரைதுறைகளைவிட்டு ஐரோப்பாவுக்குப் பிரயாணமானார். அங்கே அவர் அந்த அன்னிய பிரதேசங்களில் அரசர், பட்டவர்த்தனர், பிரபுக்கள் முதலாயினோர் மத்தியில் செய்த அரும்பெருங் காரியங்களைப்பற்றி இதோ ஸ்ரீமான் டி.குழந்தை

யவர்கள் சவிஸ்தாரமாய் எடுத்துரைத்ததை நீங்கள் காதாரக் கேட்டீர்களாகையால், நான் அவைகளை மீண்டும் எடுத்துச்சொல்லுவதனுவவியம். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் அவர் அத்தேசங்களில் செய்த சுற்றுப்பிரயாணத்தின் முகாந்திரமாய் ஒரு லக்ஷ நூ சேர்த்துவந்து அத்தத் தொகையைக்கொண்டு தஞ்சாவூரில் ஓர் கைத்தொழில்சாலையை உண்டாக்கி அது இன்று வரையும் கர்த்தர் கிருபையால் செவ்வனே நடைபெற்றவரும்படி செய்திருக்கிறார். இந்தியாவின் முன்னேற்றத்திற்கு மிக்க அவசியமானது கல்வியும் முக்கியமாய் கைத்தொழிலுமென்பதை நாம் எல்லோரும் அறிவோம். 25-வருஷங்களுக்குமுன் இதன் அத்தியாவசியத்தை நாம் சரியாய் அறியாமுன்னமேயே இந்த மேலான நோக்கத்தை நமது நல்ல தந்தையாகிய இவர் உணர்ந்து இப்படி ஷே காரியத்தைச் செய்தாரென்றால், இவருக்கு எற்கெனவே இருந்திருந்த நமது முன்னேற்றத்தின் அபிலாஷையும் தாகமும் உள்ளன்புந்தெற்றென விளங்குகிறதல்லவா? இதனால் நான் முன்னே சொன்னதுபோல நீதிநெறி முறையோடி ராஜபரிபாலனஞ்செய்யும் செங்கோல் மன்னனுக்கு தனது பிரசைபின்மட்டிலுள்ள அன்பையும் ஆதரவையும் அக்கரையையும் அபாரக் கவலையையும் விடப் பன்மடங்கு நமதுமட்டில் இந்த நல்ல குருவானவருக்கு உண்டாயிருந்ததென்று விதிதமாகின்றமையால், ஓர் நல்ல அரசனுக்கு அவன் பிரசைகள் செய்வதுபோல, நாமெல்லோரும் அவரது இந்த ஜூபிலிமகோற்சவத்தைஒருங்கே சேர்ந்து கொண்டாடி அவ்வுத்தம தந்தையை பின்வரும் சந்ததிகள் என்றென்றைக்கும் நினைவு கூரும்படி ஓர் ஞாபகச் சின்னத்தை ஸ்தாபிப்பது ஞாயமேயாகும்.

3-வது இந்த உத்தம தந்தையின் குருப் பட்டாபிஷேகத்தின் ஆரம்பத்திலிருந்து சர்வேஸ்வரனுக்கும் தாது தேசத்துக்கும் உழைக்கவேண்டுமென்ற பேராவல்பூண்டவரென்பதை இவருடைய வார்த்தைகளும் கிரியைகளும் வெளியிடுகின்றன. அன்றியும் இவர் எழுதியுள்ள புஸ்தகங்களில் தமது விருது வாக்கியமாக இவர் தெரிந்துகொண்ட Pro Deo et Patria கடவுளுக்கும் என் தேசத்துக்கும் என்ற பொன்னுரை இவரது இருதயத்தின் உணர்ச்சிகளே கரதலாமலகம்போல் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

தற்காலத்தில் தாழ்ந்த வகுப்பாரென்று சொல்லப்படுபவர்களின் அபிவிருத்தியை மனதில்கொண்டு, அதற்காகவே இங்கிலாந்துக்குச் சென்று, விதிவசத்தால் அங்கேயே காலஞ் சென்ற டாக்டர் காயர் என்பவருடைய காமத்தை நினைப்பூட்டுவதற்காக அனேக முயற்சிகள் நடப்பதை நாம் கேட்டும் பத்திரிகைவாயிலாய் வாசித்தும்வருகிறோம். இதுவுமன்றி சத்தியாக்கிரகம் என்னும் பிரமாணத்தைக்கொண்டு இந்துக்களின் நிலைமையை முன்னேற்றிச் சீர்திருத்தம் செய்ய யாதோ முயற்சி எடுத்துக்கொள்ளும் காந்தி என்னும் ஒருவரை இந்துக்கள் ஒரு தெய்வீக புருஷனாக எண்ணி அவர் உருவகப்படத்தை வைத்து பூசிக்கவும் கொண்டாடவும் இவ்விதமாய் கன்றி பாராட்டவும் எற்பட்டிருக்கிறார்கள் என்றும் அறிவோம். இவ்விருநிறத்தவரும் முறையே தங்கள் தங்களுக்கென்று பரிந்து பேசுபவர்க்காக இவ்வளவு கன்றி பாராட்டவும் பிரயாசை எடுக்கவும் செய்வார்களானால் 25-வருஷகாலமாய்க் கடவுள் ஊழியத்திலும் தமது தேசத்தின் மேம்பாட்டுக்காகவும் அபிவிருத்திக்காகவும் உழைக்கும் வீரதம்பூண்டு தமது வாழ்நாட்களைச் செலவழித்துக்கொண்டுவருகிற இந்த உத்தம சற்குருவுக்கு நாம் எவ்வளவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்? ஆகவே, இப்பொழுது நான் சொன்ன மூன்று விசேஷக் காரியங்களாலும் அதாவது (1) இவரே பூலோக மோக்ஷத்தைத் திறந்து நமக்கு வழி காட்டி அதில் பிரவேசிக்கச் செய்தவராகிலும் (2) நமது நன்மையைக் கோரி அர்ச். சவேரியார் ஐரோப்பாவிலிருந்து இங்கு வந்ததுபோல நமது நன்மையைக் கோரியே இந்தச் சவேரியார் இங்கிருந்து ஐரோப்பாவுக்குப் போய்வந்து நமதபிவிருத்திக்காக ஓர் கைத்தொழிற்சாலையை எற்படுத்தினார். ஆனாலும் (3) தமது உன்னத வாழ்நாட்களைத் தேவ ஊழியத்தில்மாத்திரமல்ல நமது தேச சேவைக்காகவுமே செலவழிக்க வேண்டுமென்னும் வீரதம்பூண்டவர் ஆனதினாலும். இந்த ஞானத்தந்தையின் ஜூபிலியை நாம் எல்லோரும் சிறப்பித்து கௌரவப்படுத்தி ஓர் ஞாபகச் சின்னத்தை எற்படுத்துவதும் விசேஷ ஞாயமாகும். இவருக்காக நாம் இப்பொழுது என்ன செய்ய உத்தேசிக்கிறோம். அவர் நமக்காகச் செய்துவருவதை நாம் அவர்போல் தொடர்ந்துசெய்வதைதவிர வேறென்றுமில்லை.

அதாவது, 20-வருஷங்களுக்குமுன் கைத்தொழிற்சாலை யொன்றை யமைக்க லக்ஷத்துக்கு மேற்பட்ட தொகையை அவர் அன்னிய காட்டிலிருந்து நமக்குக் கொண்டுவந்தார். இப்போது நாம் 20-வருஷத்துக்குப்பின் அதைப்போன்ற ஓர் தொகையை சுமக்கென்றே அவர் போல் சேகரித்து அவருடைய மேலான நோக்கங்களை நிறைவேற்றப் பிரயத்தனப்படுகிறோமேயன்றி வேறல்ல. கடைசியில் கேளுங்கள். அன்று இந்தச் சந்தர்ப்பத்தையொட்டி ஆரம்பக் கூட்டத்தைக் கூட்டியவருள் மூவர் நமது மைலாப்பூர் மேற்றிராணியாண்டவர் அவர்களிடம் சென்று இது விஷயமாய் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டபோது அவரதைக்கேட்டு ஆனந்தங்கொண்டு இந்த முயற்சியை வாழ்த்தி ஆசீர்வதித்ததுமல்லாமல் "நீங்கள் எண்ணுருக்களில் ஒருவரைக் கனப்படுத்துவதற்காகச் செய்யும் இந்த முயற்சி ஓர் தர்ம கைங்காரியமும் ஞானப் பிரயோசனமுமான காரிய" மென்று வெகுவாய்ச் சிலாகித்துப் பேசி அவர்களுக்கு உற்சாகமூட்டினார். நானேவென்றால் இன்னமும் சொல்லவேண்டுமானால் இந்தக் கைங்காரியம் சர்வேஸ்வரனுடைய அதிமிக தோத்திரத்துக்கும் நமது ஞானப் பிரயோசனத்துக்கும் நமது உத்தம தந்தையின் சுயப் பரித்தியாகத்தின் ஞாபகத்துக்கும்மாத்திரமன்றி நம் அனைவருடைய சொந்த லௌகீக பிரயோசனத்துக்குமே வழியாயிருக்குமென்று கண்டிப்பாய்ச் சொல்லுவேன். ஆகையால் இந்த ஜூபிலி மகோற்சவத்தைக் கொண்டாடுகிறது இந்த அதி உத்தம தந்தைக்காகமாத்திரமல்ல, நமக்காகவுமே. மேலும் தென்னிந்தியாவும் இலங்கையுமாத்திரமல்ல, நமது தேச முழுமையுமே இந்த ஜூபிலியை தக்க சிறப்போடு கொண்டாடவும் உத்தேசிக்கப்பட்ட ஞாபகச் சின்னத்தை எற்படுத்தவும் அவசியமென்று வற்புறுத்தி முன் பேசினவர்கள் கொண்டுவந்த ஷை பிரேரணையையும் ஆமோதிப்பையும் உறுதியாக ஆதரித்து என் பேச்சை முடிக்கிறேன்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

பம்பாயில் அமெரிக்க குருக்கள்.—பம்பாயில் இதுகாறும் வேதம் பரம்புகலுக்காக உழைத்துவந்தவர்கள் ஜெர்மன் சேசு சபைக் குருக்களாகும். யுத்தங்காரணமாய் அவர்கள இனிமேல் இங்கு இருக்கப்படாதென்று தீர்மானித்துவிட்டபடியால், அமெரிக்காவிலிருந்து சேசு சபைக் குருக்கள்வந்து பம்பாய் மேற்றிராசனத்தை ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

முத். மரிய மார்கரித்தம்மாள்.—சேசுவின் திரு இருதய பக்தியோடு சம்பந்தப்பட்ட முத்திபேறுபெற்ற மரிய மார்கரித்தம்மாளுக்கு, அடுத்த 1920ஆம் மேமீ 13-ம்வ யாகிய கர்த்தர் மோட்சத்துக் கெழுந்தருளின திருநாளன்றைக்கு, அர்ச். சியசிஷ்ட பட்டம் கொடுப்பதற்கு அர்ச். பாப்பானவர் தீர்மானித்திருக்கிறார்.

நாடக மாதின் சம்பளம்.—அமெரிக்காவில், மேரி பிக்போர்டு என்ற மாதொருத்தி நாடகசாலையில் அலுவலாயிருக்கின்றாள். அவளுக்கு வருஷத்துக்கு இரண்டு லட்சம் பவுன் சம்பளமாம். ஒருத்தி சம்பளம் இவ்வளவாக, இன்னும் இருக்கப்பட்ட ஏனையோர்களின் சம்பளங்களையும் கூட்டிப் பார்த்தால் எவ்வளவோ ஏராளமான தொகையாகும். இவ்வளவு தொகையும் எங்கிருந்துவருகிறது? நாடகம் பார்க்கும் ஜனங்களிடத்திலிருந்தல்லவோ? அப்படியானால், அமெரிக்காவில் நாடகப்பிரியர் அதிகமென யூகிக்கலாம்.

ஓர் உத்தம கத்தோலிக்குத் தேசம்.—தென் அமெரிக்காவிலுள்ள "பிரேசில்" என்ற தேசம் கத்தோலிக்கர் தேசம். இதில் இருக்கப்பட்ட நியாயஸ்தலங்களி லெல்லாம், நமது நிவ்ய இரட்சகரின் பாடுபட்ட சுரூபங்கள் மிகு பூர்வியமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவாம். சமீபத்தில் குயூரிட்டியாபா என்ற ஊரைச்சேர்ந்த நீதிசாலையில் ஜூரிகள்கூடித் தீர்ப்பு சொல்லுமிடத்தில் ஒரு பாடுபட்ட படம் பூர்வியமாய் ஸ்தாபிக்கப்பட்டதாம். இது வல்லோ சரியான கத்தோலிக்குத் தேசம்! இதைப்போன்ற மற்ற கத்தோலிக்குத் தேசங்களிலெல்லாம் இவ்வாறு செய்வது மெத்த உசிதமான காரியமாகும்.

துருக்கியர் குரூரச்செயல்.—கடந்து போன ஐரோப்பிய யுத்தத்தின்போது, 25,000-த்துக் கதிகமான கிறீஸ்துவர்களும், 45-க் கதிகமான குருமார்களும், மூன்று மேற்றிராணிமார்களும் துருக்கியரால் குரூரமாய்க் கொலைசெய்யப்பட்டதன்றி, அவர்கள் குரூரத்துக்குத் தப்பி

யோடினவர்களில் இரண்டு மேற்றிராணி மார்கள் வழியில் மரித்துக்கிடந்தனரென்று பாபிலோன் பிதாப்பிதாவாகிய மிகவும் வந்திக்கத்தக்க ஜோசப் எம்மானுவல் தோமாஸ் என்பவர், கொலையுண்டவர்களின் சந்ததியாருக்காகத் திரவிய சகாயம் கேட்குமென்னுவில் மிக்க பரிதாபத்துடன் சொல்லுகிறார். ஸன்னே துருக்கரின் துடுக்குத்தனம்!

ஒரு மகம்மதியர் மனந்திரும்புதல்.—பம்பாயிலுள்ள ஒரு மகம்மதிய கனவான், இந்திய படையில் லெப்டினெண்ட் பதவியடைந்தவர்; லெப்டினெண்ட் எப். அன்வர்கான் எம். பி. பி எஸ். ஐ. எம். எஸ். என்னும் பெயரினர். சமீபத்தில் தாமன் அதிமேற்றிராணியாரால் ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டு சத்திய வேதத்திற் சேர்க்கப்பட்டார். அவருக்கு "ஆல்பெர்ட் கென்னட்" என்ற பேர் கொடுக்கப்பட்டது.

சென்னை ஐகோர்ட்டே ஜட்ஜிகள்.—இந்தியா மந்திரியிடமிருந்துவந்த உத்தரவினால் இதுமுதற்கொண்டு, சென்னை ஐகோர்ட்டில் நான்கு இந்திய ஜட்ஜிகள் சாஸ்வதமாய் நியமனம் பெறுவார்கள். இவ்வுத்தரவுபடி இப்போது இருக்கிற ஜட்ஜிகள் கனம் சதாசிவ ஐயர், கனம் சேஷகிரி ஐயர், கனம் குமாரசாமி சாஸ்திரிகள், கனம் கிருஷ்ணன் ஆவர். இவர்கள் மூன்றினமூவரும் பிராமணர், மற்றவர் மலையாளி. இப்பதவிகளுக்குக் கிறீஸ்துவர்கள், அவர்களிலும் கத்தோலிக்கர்கள் வருவது எக்காலம்!

வேனேட்டோவின் கோவில் மணிகள்.—இத்தாலியா தேசத்தைச்சேர்ந்த வெனிஸ் மாகாணத்திலுள்ள வெனெட்டோ என்கிற ஊரை ஆஸ்திரியர் சிறிது காலம் கைப்பற்றியிருந்தபோது, அங்கிருந்த கோவில்களிலுள்ள வெண்கல மணிகளையெல்லாம் அவர்கள் எடுத்து உருக்கிப் பிரங்கி செய்துகொண்டார்கள். இவ்வாறு அவர்கள் 7,610 கோவில்களினின்று எடுத்த மணிகளின் மொத்த எடை 3,188 டன்கள் என்று கணக்குப்பார்த்து, அந்த நஷ்டத்தைப் பரிகரிக்கும்படி ஆஸ்திரிய இராஜாங்கத்தைக் கேட்க, அவர்கள் அங்ஙனமே அவ்வளவு எடையுள்ள வெண்கலத்தை அனுப்பிப் பரிகாரஞ்செய்வதாக வாக்குக்கொடுத்திருக்கிறார்களாம்.

எக்ஸ் பி. பாய்வ, கோழும்பு.—இந்தப் பெரிய வர்த்தகக் கம்பனியாரிடமிருந்து, புதுவருட வாழ்த்துக் கார்டுகளும் (New Year Cards), சுவாமி பிறந்த மகோற்சவசோபனக் கார்டுகளும் (Xmas Cards), அழகிய படங்களுள்ள போஸ்டுகார்டுகளும் அடங்கிய இரண்டு பாக்கட்டுகள் வரப்பெற்றோம். இந்தக் கம்பெனியார் நாணுவித விநோத விசித்திர சாமான்களை ஏராளமாய்த் தருவித்திருக்கிறார்களென்று தெரியவருகிறது. அந்தச் சாமான்களின் தன்மை விலை முதலிய விவரங்கள் அடங்கிய முழுப்பட்டி இந்த சஞ்சிகையின் வேறோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்க.

ஒரு யௌவன குரு.—இருபத்தஞ்சு வயசு வராமல் யாருக்கும் குருப்பட்டங் கொடுக்கக்கூடாதென்பது அர்ச். பாப்பானவரின் கட்டளை. எல்லாப் பொது விதிகளுக்குஞ் சிறப்பு விதி இருப்பதுபோல, இதற்கும் சிறப்பு விதியுண்டு. அதன் பிரகாரம், அர்ச். பாப்பானவரின் உத்தரவு பெற்று, 22 வயதுள்ள ஒருவருக்கு, சமீபத்தில் இங்கிலாந்தில் பிரண்ட்வுட் மேற்றிராசனக் கோவிலில், சரி. வந். வார்டு என்னும் மேற்றிராணியாரால் குருப்பட்டங் கொடுக்கப்பட்டது. இங்கிலாந்து ஸ்காட்லாண்டு ஆகிய இவ்விரு தேசங்களுக்குள் இவரே மிக்க இளவயசுள்ள குருவானவராகும். இவரைவிட யௌவன குரு அந்தத் தேசத்திலெங்கும் யாருமில்லை. இந்தக் குருவானவர் மெத்த புத்திசாலியும் பக்திசாலியுமாவர்.

ஒரு கம்பீரமான மறுமொழி.—ராணுவ வீரர்கள் தங்கள் ராணுவ உடையோடே கோவிலுக்குப்போக ஒண்ணுதென்ற கட்டளையை ஒரு பட்டாளத்தைச்சேர்ந்த சேவகர்கள் மீறிநடக்கிறார்களென்று கேள்விப்பட்ட சேனபதி அந்தப் பட்டாளத்தைச்சேர்ந்த தளக்கர்த்தருக்கு கடிதமெழுதி, அப்படி மீறுகிறவர்களுண்டானால் அவர்கள் பேர்களைக் குறித்தனுப்ப வேண்டுமென்று கேட்டார். அதற்கு அந்தத் தளக்கர்த்தர் எழுதி விடுத்த மறுமொழியாவது: "என் பிரிய சேனபதியே, என்னுடைய பட்டாளத்தைச் சேர்ந்த அநேகர் ராணுவ உடையுடன் பூசைகாணவருகிறார்கள் என்பதும், அப்படிப்பட்டவர்களில் அதன் தளர்க்கர்த்தரும் ஒருவர் என்பதும் வாஸ்தவம். ஆனால் தளர்க்கர்த்தர் முன்னும் மற்றவர்கள் அவருக்குப் பின்னும் உட்காருகிறபடியால், யார் ராணுவ உடையுடன் வருகிறார்களென்பதைப் பார்க்க அவரால் முடியாது" என்பதே.

பொருள்களின் விலையேற்றம்.—யுத்தத்திற்குமுன், அதாவது 1914ஜூலை மீத்தில் இருந்ததைப்பார்க்கிலும் 1915 ஜூத்தில் நூற்றுக்கு 25-ம், 1916ஜூத்தில்நூற்றுக்கு 42-ம், 1917ஜூத்தில் நூற்றுக்கு 78-ம், 1918ஜூத்தில் நூற்றுக்கு 88-மாக அகவிலை ஏறிவந்திருக்கின்றதென்று இராஜாங்க கணக்கதிகாரி தெரிவிக்கின்றார். பொதுவாகஎல்லாப்பொருட்களின் விலையிப்படியானாலும், சில விசேஷப் பொருட்களின் விலை அபாரமாய் ஏறிவிட்டதென்று சொல்லுகிறார். பருத்தித் துணிகளின் விலை நூற்றுக்கு 199-ம், இரும்பு முதலிய உலோக சாமான்கள் 188-ம், பருத்தி 167-ம், சர்க்கரை 82-ம், உணவுப்பொருட்கள் 53-மாக ஏறிவிட்டதென்றும், ஆனால் தேயிலை நூற்றுக்கு 12 குறைந்துபோய்விட்டதென்றும் மேற்படியாரின் ரிப்போர்ட்டினால் தெரிகிறது. இந்த விலை எப்போது இறங்குமோ தெரியவில்லை. ஏழைகள் பாடு பெரிதாயிருக்கிறது.

சமாதானக் கொண்டாட்டம் அடுத்த டிசம்பர் 13, 14, 15-ந் தேதிகளில் கொண்டாடப்படுமென்று தெரிகிறது. அவ்வைபவத்தைச் சென்னையிலுள்ள கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் தனியே வெகு சிறப்பாக 14-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுவதற்குவேண்டிய முயற்சி செய்துவருகிறார்கள். அன்று காலையில் சென்னை அதிமேற்றிராணியாரால் தம்முடைய அதிமேற்றிராசனக் கோவிலிலும், மயிலை மேற்றிராணியாரால் தம்முடைய மேற்றிராசனக் கோவிலிலும் பெரிய பாடற்பூசை மிக்க ஆரவாரச் சிறப்பாய் நடைபெறும். சென்னை ஐகோர்ட்டு மைதானத்தில் இடப்படும் ஒரு பெரிய பந்தலுக்கு மயிலையில் கத்தோலிக்கருடைய பிரதாப வைபவ பவனியொன்று சென்று, அங்கு நன்றியறிந்த தோத்திரப் பாடல், திவ்யநற்கருணை யாசீர்வாதம் முதலிய ஆராதனைகள் மிக்க விமரிசையாய் நடத்தப்படும்.

ஐம்பது பிரியதத்த மந்திரம்.—வட இந்தியாவிலுள்ள ஒரு மலைப் பிராந்தியத்தில் வழிப்போக்கன் ஒருவன் பிரயாணஞ் செய்துகொண்டுபோகையில், தங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்குப் போகும் மூன்று சிறுவர்களைச் சந்தித்தான். சந்திக்குங்காலையில் அச்சிறுவர்கள் யாதொன்றும் பேசாமலும், விளையாடாமலும், அல்லது பாடமொன்றையும் படியாமலும், வாயில் யாதோ முணுமுணென்று சொல்லிக்கொண்டு நடந்தார்கள். அவர்கள் தங்கள் பள்ளிக்கூடத்துக்குத் தான் செல்லுகிறார்களென்றுகண்டறிந்து பிரயாணி, அவர்களை நோக்கி, உங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்குப்போக எவ்வளவு நேரம் பிடிக்குமென்று கேட்க, அவர்கள் 50 பிரியதத்த மந்திரஞ் சொல்லுகிற நேரம் பிடிக்குமென்று மறுமொழி சொன்னார்களாம். என்னே சிறுவர்கள் பக்தி நேர்மை! பெரியோர்களின் வளர்ப்பும் அவ்விதமாகும். அச்சிறுவர்களின் விடையிலிருந்து அவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்குப்போகுங் காலத்தை வீணுக்காமல் அதையும் ஞான விதமாய்ச் செலவழித்து நன்மையடையும்படி தங்கள் பெற்றோர்களால் பழக்கப்பட்டிருக்கிறார்களென்பது நன்கு விளங்குகின்றது. பெற்றோர்களே! இம்மாதிரி உங்கள் பிள்ளைகளை சிறுவத்திலேயே ஞான விஷயத்தில் பயிற்றுவிப்பது மெத்த மேன்மையான காரியமென்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

கைக்குட்டைகளின் வரலாறு.—கைக்குட்டைகள் முதன்முதல் ஐரோப்பாவில் வழங்கத் தொடங்கினது பதினாறும் நூற்றாண்டின் மத்தியிலென்று தெரிகிறது. அதற்குமுன்னர் கைக்குட்டையின் உபயோகம் ஐரோப்பியருக்குத் தெரியாது. இத்தாலியாவிலுள்ள வேனிஸ் நகரத்தில்தான் அவ்வழக்கம் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது. ஜெர்

மனியில் 1580-ம் வருஷத்தில் அவை உபயோகிக்கப்படத் துவக்கின. சில காலத்துக்குள் அதன் உபயோகத்தைக் கண்டித்து ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்தச் சட்டம் சுமார் 250 வருஷ காலமாய் அமுலிலிருந்து 18-ம் நூற்றாண்டில் ரத்து செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கைக்குட்டைகள் வட்டமாயும் வேறு விதமாயுமிராமல் சதுரமாயிருப்பதற்குக் காரணங்கள் தெரியவில்லை. சீனாவில் துணிக் கைக்குட்டைகளுக்குப் பதிலாக காகிதக் குட்டைகளை வைத்திருந்து மூக்குசிந்தும்போதும், முகத்தைத் துடைக்கும்போதும் ஒரு துண்டு கடுதாசியை எடுத்து உபயோகித்து அதைக் கீழே எறிந்துவிடுகிறார்களாம்.

பசராவில் அர்ச். ஆரோக்கியமாதாவின் திருநாள் கொண்டாட்டம்.—(ஒரு நண்பர் (T. R.) எழுதுகிறார்) இவ்வருஷம் அர்ச். ஆரோக்கியமாதாவின் திருநாள் செப்டம்பர்மீ 8-ந் தேதி மிக்க விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. காலை 8-மணிக்கு, (Civil) கத்தோலிக் கோவிலில் திவ்ய பூசையும், மாலை ஆராதனை முடிந்தவுடன் ஆரோக்கியநாயகியின் அழகிய அலங்கிர்த தேர் சுற்றுப்பிரகாரமும் மிக்க பயபக்தியுடன் நமது மதராஸ் இந்தியக் கிறீஸ்துவர்களாலும், இத்தேசத்தின் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாலும் நடத்தப்பட்டதையும், சர்வேசுரனுக்கு யாவரும் சேர்ந்து மிகு பூச்சியமாய் நன்றியறிந்த தோத்திரம் ஆராதனையுங் செலுத்தியதையுங்கண்ட இவ்விடத்திய அராபிய துலுக்கரும், யூத ஜாதியாரும் எக்காலத்திலும் கிறீஸ்துவர்கள் திருநாள் இவ்வளவு பயிரங்கமாய் நடத்தப்படாததை உணர்ந்து, மெத்தவும் பிரமிப்படைந்தார்கள். இதை வாசிக்கும் கிறீஸ்துவ சகோதரர்கள் இத்தேசத்திய யூதரும், அர்மீனியரும், சைரீனியரும், நசரானியரும், அராபியரும் இன்னும் மற்ற ஜாதியாரும் மனந்திரும்பி சத்திய வேதத்தில் உட்படும்படியாய்த் தங்கள் தங்களின் அனுதின ஜெபத்தில் ஒரு பர. பிரி. திரி. ஜெபிக்கும்படியாய் மிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பிரிட்டிஷ் இராஜாங்கமும், ஜார்ஜ் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் என்றும் வாழ்க!

"சுப்பிரமணிய சரித்திர ஆராய்ச்சி" என்ற துண்டுப் புத்தகமொன்று அதன் ஆக்கியோனாகிய, சங். எஸ். ஞானப்ரகாச சுவாமிகளால் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. இது, "சுப்பிரமணியக் கடவுள்", "வீரபத்திரக் கடவுள்", "முருகக் கடவுள்" என்பனவாகிய பல நாமங்களால் அழைக்கப்பட்டுவருவோர் ஒருவரோ, பலரோ, தெய்வமோ அல்லவோ என்னுங் கேள்விகளை யாராய்ந் தெழுதப்பட்ட புத்தகம். இக்கேள்விகளை ஷை சுவாமிகள் அதிக பொறுமையோடும், பாரபட்சமற்ற மனதோடும் சைவருடைய வேதாகம, புராணேதிகாசங்களைக்கொண்டும், தொல்காப்பியம், திருமுருகாற்றுப்படை, இறையனாரகப்பொருள், புறப்பொருள், வெண்பாமாலை, அகநானூறு, புறநானூறு, பரிபாடல், சிலப்பதிகாரம், பெரும்பாணாற்றுப்படை, குறுந்தொகை, பத்துப்பாட்டு, கலிங்கத்துப் பரணி முதலிய புராதீன நூல்களைக்கொண்டும் ஆராய்ச்சிசெய்து சில முடிவுகளுக்குவந்திருக்கிறார்கள். இதை இந்துக்களேயன்றிக் கிறீஸ்துவர்களும் வாசித்தறிவது நன்று. வேண்டுவோர் யாழ்ப்பாணத்து, அர்ச். சூசையப்பர் அச்சியந்திரச்சாலைத் தலைவருக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு படு பொய்.—"தேசபக்தனின் அறியாமை" என்ற தலைப்பின்கீழ் சென்ற மாத ஆயனில், தூத்துக்குடியில் கூடின ஒரு கூட்டத்தில் "ஜி. எட்வர்ட்ஸ்" என்னும் கிறீஸ்துவர் ஒருவர் நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரை, மிஸ்டர் காந்திக்கு ஒப்பிட்டுப் பேசியதாக ஷை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது மெய்யோ, பொய்யோவென உசாவியிருந்தோம். "நான் அப்படி பேசினதில்லை" யென்று ஜி. எட்வர்ட்ஸ் என்று கையொப்பமிட் டெழுதிய கார்டொன்று நமக்குக் கிடைத்தது. (இது நமக்கு பெரியதோர் மன ஆறுதலைத் தந்தது). ஆகவே, தேசபக்தனில் வெளிவந்த கூற்றானது படு பொய் என்பதற்கு ஆட்சேபமில்லை. இப்படிப்பட்ட படு பொய்யைத் தம் பத்திரிகையில் பிரசுரஞ்செய்த ஷை பத்திராதிபருக்கு இதைச் சுட்டிக் காட்டி, பொய்க் கூற்று எப்படி பகிரங்கப்படுத்தப்பட்டதோ, அப்படியே அதை மறுக்கும் மெய்க் கூற்றையும் அப்பத்திரிகையில் பகிரங்கப்படுத்த வேண்டுமென்று கேட்கும் உரிமை ஷை மிஸ்டர் ஜி. எட்வர்ட்ஸைச் சேர்ந்தது. இவர் தம்பேரிற் சுமத்தப்பட்ட அபகீர்த்தியைப் பரிகரித்துக் கொள்வதும், அதனால் மற்ற கிறீஸ்துவ உலகத்துக்கு உண்டான அபவாதத்தைப் போக்குவதும் அவர் பேரிற் சுமந்த கடமையாகும். இக்கடமையை யவர் செய்யாமற் போகாரென நம்புகிறோம்.

யுத்தத்திலிருந்து திரும்பிய குருக்கள்.—(ஒரு நண்பர் எழுதுகிறார்) கோயமுத்தூர் மேற்றிராசனத்துக் குள்பட்ட கொடிவேரி பங்கு விசாரணையிலிருந்து யுத்தத்துக்கு புறப்பட்டுப்போன சங்கை J. B. பெடிட் சுவாமியார் அவர்களும், பரோன் சுவாமியார் அவர்களும், அக்டோபர்மீ 8உ ஊருக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள். உயிர் ஆபத்துக்குத் தப்பிவந்த தங்கள் தகப்பன்மார்களை அவ்வூரார் வணக்கமரியாதையுடன் 46 மைல் தூரத்திலிருந்து தங்கள் சொந்த செலவில் மோடார் வண்டியில் அழைத்துவந்து, கொடிவேரிக்கு அருகாமையில் நிறுத்தி, பாண விருசுவாத்திய வேடிக்கைகளுடன் அவர்களுக்குப் பூமாலை சூட்டி, அவர்களை ஊர்வலம் கொண்டுவந்தனர். பின்னர் அவ்வூர் அர்ச். சவேரியார் ஆலயம் சென்று, தேதேயும் பாடி முடிந்தவுடன் சங்கை. பெடிட் சுவாமியார் அவர்கள் கிறீஸ்துவர்களுக்கு ஒரு சிறு பிரசங்கம் செய்து, தெய்வநற் கருணையாசீர்வாதங்கொடுத்து முடித்தார். 9-ந் தேதி வியாழக்கிழமை ஷை குருவானவர்களுக்கு ஒரு சந்திப்பு வைக்கப்பட்டும், வந்தனப் பத்திரிகை வாசிக்கப்பட்டும் முடிந்தபின் ஆண் பெண் பாடசாலைகளுக்கும் அழைக்கப்பட்டு, அம்மாணவர்களால் வந்தனப் பத்திரிகை வாசிக்கப்பட்டதையும், கும்மி கோலாட்டம் வாழ்த்துப் பாடல் முதலியவற்றையுங்கண்ட குருப்பிரசாதிகள் ஆனந்த சந்தோஷத்தில் மூழ்கினார்கள். பிறகு சங்கை பெடிட் சுவாமியார் அவர்கள் மாணவர்களுக்கும், அவர்களுடைய தாய் தகப்பன்மார்களுக்கும், சிறு புத்திமதிகளைச் சொன்னபின் ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. அம் மகாத்துமாக்களில் ஒருவரான சங்கை பெடிட் சுவாமியார் காட்டு மலைவாசிகளான ஊரானி ஜாதியாருக்கு சுவிசேஷத்தைப் போதித்து அவர்களை ஞான மந்தையில் சேர்த்தார். சங்கை. பரோன் சுவாமியார் யுத்தத்தில் வலது கையின் முழங்கைக்கு மேல் குண்டுபட்டு எலும்பு முறிந்திருந்தாலும், தேவத்திரவிய அனுமானங்களை நிறைவேற்றத் தடையில்லையென்பதைப் பற்றி சுவாமிக்கு நன்றி செலுத்தக்கடவோம். இக்குரு சுவாமிகள் இருவருக்கும் கடவுள் நீடிய ஆயுளைக்கொடுத்துக் காப்பாற்றுவாராக?

சென்னையில் மதுவிலக்கு வேலை.—சென்னையிலுள்ள தொழிலாளர்கள், கூலியாட்கள் முதலாயினோர் நாள் முழுதும் கஷ்ட வேலை செய்தபின் தங்கள் வீட்டிற்குப்போனவுடன் தாகசாந்தி செய்வதற்கோ, பசியாறுவதற்கோ போதுமான வசதியில்லாததால்தான் அவர்களிற் பெரும்பாலார், கள், சாராய முதலியலாகிரி வஸ்துக்களைச் சாப்பிட்டு தேகசுகத்தைக் கெடுத்துக்கொள்ளுவதுமல்லாமல், வறுமையிலகப்பட்டு பல துன்பங்களுக்கும் ஆளாகிறார்களென்பதுபற்றி, கவர்ண்மென்டார் அன்னார்களுக்கென்று தனி விடுதியொன்று கட்டி ஷை சௌகரியங்கள் செய்வதற்கு ரூ 14,000 சாங்ஷன் செய்திருக்கிறார்கள். இவ்விடுதியில் இவர்களுக்குக் குறைந்த விலைக்குச் சிற்றுண்டிகள், சாப்பாடுகள் கொடுப்பதோடு, அவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களை உல்லாசமாய்ப்போக்குவதற்கு, லான்டர்ன் லெக்ச்சர்ஸ் என்னும் படங்காட்டிப் பிரசங்கஞ் செய்தல், சினிமா என்னும் பயாஸ்கோப்புப் படங்காட்டுதல், கிராமபோன் பாட்டு பாடச்செய்தல், மதுவிலக்கு உபந்நியாசங்கள் முதலியவைகள் நடத்தப்படும். அவர்களுக்குக் குளிக்க இடம், சாப்பிட இடம், மலஜலோபாதைகளுக்கு ஒதுங்க இடம் முதலிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படும். ஷை கட்டிடம் சென்னையானைகெவுனிக்கருகில் உப்புக் கொட்டாரத்துக்குள் அமைக்க உத்திரவாகியிருக்கிறது. இவ்வேற்பாட்டைக் கவனித்து நடத்தும் வேலையை சென்னை ஒய். யெம். சி. யே. என்னும் சென்னைக் கிறீஸ்துவ சங்கத்தார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வேற்பாடு தக்கபடி நடைபெறுமானால்,

சென்னையில் ஒரு சிறிதாவது மதுபானி கள் குறைந்துபோவார்கள் என்று நம்ப இடமுண்டு.

ஒருபயங்கரத்துக்குரிய முன்னறிவிப்பு.—"பீப்பில்" என்ற பத்திரிகைக்கு புரொபஸர் ஆல்பர்ட் போர்ட்டர் என்னும் வானசாஸ்திரி பின்வறுமாறு எழுதுகிறார்:—" அடுத்த டிசம்பர் மாதம் 17-ந் தேதியிலிருந்து 20-ந் தேதிவரையிலும், அதற்கு மேலும் உலகாதிமுதல் இதுபரியந்தம் என்றும் நடவாத அகோரமான பெரிய விபத்துக்கள் இவ்வுலகத்துக்கு நடக்கப் போகின்றன. இவற்றிற்கு முதல் அடையாளமென்னவென்றால், டிசம்பர் மாதம் 17-ந்தேதி வானத்திலுள்ள வல்லபம்பொருந்திய ஆறு கிரகங்கள் ஒரு பக்கமும் மறுபக்கம் சூரியனும் யூரானுஸும் இழுத்துக்கொள்ளவதின் பயனாக, சூரியனில் இதுவரையில் கருவியினுதவியின்றி வெறுங் கண்ணுக்குத் தோன்றுத பெரிய தோர் கருப்புக் கறை காணப்படுவதே. அது கண்டவுடன் சூரியனிலிருந்து, (எரிமலையினின்று வெளிப்படும் உருகிய கற் குழம்பைப்போல்), அக்கினிச் சுவாலை விட்டு எரியும் அக்கினிக் குழம்பு ஆயிரம் பதினாயிர மயில் தூரமட்டும் அதிவேகத்துடன் பாய்ந்து பீறிட்டடிக்கும். விசுவியஸ் எரிமலையிலிருந்துவரும் அக்கினியானது ஒரு (புட்பால் எனும்) காலடிப் பந்தை எப்படிச் சூழ்ந்துகொள்ளக்கூடுமோ, அப்படி அன்றைக்கு சூரியனினின்றுவரும் அக்கினியானது நமது பூலோகத்தைச் சூழ்ந்துகொள்ளக்கூடியதாயிருக்கும். மகா பயங்கரத்துக்குரிய பெரும் புசலுங் காற்று மழையும், இடியும், மின்னலும், பூமியதிர்ச்சியும் உண்டாகும். மேலும் அபார ஜலப்பிரளயமும், பொறுக்கப்படாத குளிரும் சம்பவிக்கும். உலகத்தாருக்கு ஒரு பீதியை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் நான் இந்தப் பயங்கரமான செய்திகளைச் சொல்ல வரவில்லை. உள்ளபடியே வானத்திலுள்ள கிரகங்களுள் காணப்படும பெரும் மாற்றத்தை யநுசரித்தே வானசாஸ்திர முறைப்படிக் கணக்கிட்டுச் சொல்லுகிறேன். ஆனதினால் டிசம்பர் மாதம் 17-ந் தேதிமட்டில் எச்சரிக்கையாயிருங்கள்." இந்த வானசாஸ்திரி சொல்லுகிறபடி நடக்குமானால் அதையே உலக முடிவாகச் சொல்லலாம், ஏனெனில் அப்படிப்பட்ட அக்கினிப் பிரளயம்வந்து உலகத்தை முழுதும் மூடிக்கொள்ளுமானால், மனுஷ ரெல்லோரும் மாண்டுபோய்விடுவார்கள். மனுஷர் மாண்டபின் உலகமேது? ஆனால் உலக முடிவுக்கு சுவிசேஷத்தில் சொல்லியுள்ள கொடிய பஞ்சம், அந்திக்கிறீஸ்து முதலிய சின்னங்கள் இன்னுந் தோன்றவில்லையாதலால் உலக முடிவு இவ்வளவு சீக்கிரத்தில் இல்லையென்று சொல்லலாம்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

வேம்பார்.

ஈடேற்றப் பூசை.

என் நகர் வீற்றிருந்தும் தன் நகரழைத்துச் சமாதானமளிக்கும் சாஸ்வத் பரமனின் நித்தத் திற்கமைந்து தேவனின் சந்நிதானத்தில் இளைப் பாறச்சென்ற எங்களின் நேச பிறவி, ஜோன் அந்தோனி பர்னாந்து தன் நகர்விட்டு இலங்கை கடுகண்ணவில் மரணமாகி இலங்காபுரி என்று சொல்லப்படும் கண்டிமாநகரில் நல்லடக்கஞ் செய்த வருட ஞாபகார்த்தமாய் இம்மதி செப்டெம்பர் மாதம் 16-ந் தேதியன்று கண்டிமாநகரில் அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் சங். சொறம் சுவாமியாரவர்களால் செய்யும் பாடற் பூசைசெய்ய, இதற்கென கொளும்பு, குருணாகல், கடுகண்ணவ, கம்பளை, பதுளை, யாழ்ப்பாணம் முதலிய இதர இடங்களிலிருந்து தம்மினத்தவர் திரளாய்வந்து அவ்வாத்தும ஈடேற்றத்திற்காகத் தங்களை அர்ப்பணஞ்செய்து திவ்ய பூசைகண்டு தேவத்திரவிய அநுமானங்களில் ஒன்றாகிய நற்கருணை பெற்று அவ்வாத்தும ஈடேற்றத்திற்காக ஒப்புக்கொடுத்தார்கள். பூசைக்குப்பின் மேற்கண்ட சுவாமியவர்கள் மையவாடிக்குச்சென்று அங்கு எமது நேச பிறவிக்காக கட்டப்பட்டிருந்த புதுக் கல்லறையை மந்திரித்தானபின் இறந்தோரின் குணாதிசயங்களையும், பக்திக் கிருத்தியத்தையும், கண்ணடத்தைத்தரும் சிந்தை தயாள குணத்தையும்பற்றிக் கல்லுங் கரையும்வண்ணம் கேட்டோர் கண்ணீர் சிந்தி நிற்க ஓர் விரிவான பிரசங்கஞ்செய்தார்கள். மையவாடி சடங்குகளனைத்தும் முடிவானபின் எழைகளுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கப்பட்டது. ஆண்டவரே! இரக்கம்புரிகிறதும் பொறுத்தலளிக்கிறதும் உமது திருவுளத்தின் இயல்பாகையால் இவ்வுலகத்தைவிட்டுப்பிரிந்து உமது பணிவிடைக்கழைக்கப்பட்ட எமது நேச பிறவி ஜோண் அந்தோனி பர்னாந்துவின் ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கிருபை செய்தருள உம்மை மன்றாடி நிற்கும், மரணித்தவரின் சகோதரர்கள்

ALEX. FERNANDO, N. VISUVASAM FERNANDO, S. M. FERNANDO, N. X. P. FERNANDO, N. S. M. FERNANDO, X. M. FERNANDO, A. S. M. FERNANDO.

பிறப்பு—வேம்பார், 3—8—1980.
மரணம்—கடுகண்ணவ, 15—9—1918.

16—9—19.

கண்டி.

சர்வேஸ்வரா சுவாமீ, மரித்துப்போன உமது அடியார்களாகிய எனது பிரிய தந்தைகள் தொ. சவியேர் இத்தேரிப் பெர்னாந்து அவர்கள்—தொ. பாக்கியப் பெர்னாந்து அவர்கள்—யு. எஸ்தோவுப் பெர்னாந்து அவர்கள் ஆகிய இவர்களுடைய ஆத்துமகளுக்கு நித்திய மோக்ஷ இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் சுவாமீ, எப்போதும் எப்போதும் உள்ள பிரகாசம் இவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது. இதைக் கண்ணுறும் கிறீஸ்துவ நண்பர்களே நித்திய மோக்ஷ பேரின்ப சமாதானத்தை சர்வேஸ்வரன் இவர்களுக்கு கொடுக்கும்படியாக ஒரு பர்., பிரி., திரி. வேண்டிக்கொள்ள தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொ. சவியேர் இத்தேரிப் பெர்னாந்து அவர்கள் மரணம் 23—9—19.
தொ. பாக்கியப் பெர்னாந்து அவர்கள் மரணம் 9—9—18.
யு. எஸ்தோவுப் பெர்னாந்து அவர்கள் மரணம் 14—12—18.

இப்படிக்கு, தந்தைகளே இழந்து பரிதபிக்கும்

பா. இஞ்ஞாசிப் பேர்னாந்து,

14—10—19. வேம்பார், E. & O. E.

பூனை.

தஞ்சாவூர் வாசியும், பூனாவில் 38-வருஷ காலமாக மெஸ்மென், கண்டிரக்டர், போண்டிலர் அலுவல்களே நடத்திக்கொண்டு, சகலராலும் மெத்தவும் கொண்டாடப்பெற்று வாழ்ந்து கொண்டிருந்தவருமான எனது மிகவும் பிரிய ஸினேகிதர் மகா-ரா-ரா-ஸ்ரீ கனம மெஸ்மென் ஜி. ஜோசேப் பிள்ளை அவர்கள், நிகழும் 1919வது அகஸ்டோபர்மீ 1வ நிமோனியாவெனும் கொடிய விஷஜ்வரத்தால் பீடிக்கப்பட்டு எவ்வித அவஸ்த பிரயோகஞ்செய்தும் குணப்படாமல் தமது பரலோக பிரயாணத்துக்குரிய ஞான ஔஷதங்களே குறையறப் பெற்றுக்கொண்டு 15வ புதன்கிழமை விடியற்காலே தமது மனைவி, மக்கள், பந்துக்கள் யாவரையும் இப்பாழுலகில் பரதவிக்கவிட்டு விண்ணுலகஞ்சேர்ந்தனர். அன்றையத்தினம் சாயந்திரமே Coffin என்னும் அலங்கார பேழைக்குள் அவரது சடலத்தை அடக்கி திருச்சபை ஆசாரத்தின்படியே அது பூமிதானஞ் செய்யப்பட்டது. இதை வாசிக்கும் என் பிரிய சகோதரர்களே! மரணமடைந்த என் ஜினேகிதர் கனம மெஸ்மென் ஜி. ஜோசேப் பிள்ளை அவர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காகத் தங்கள் ஜெபத்தில் ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளும்படி மன்றாடுகிறவனாகிய,

மீ. தே. அந்து (ANTONE DAVID.)

20—10—19.

வீரமாமுனிவர் ஔஷதசாலை.

"வீரமாமுனிவரின் சுகந்தரு மாத்திரை" யானது நாளுவித வியாதிகளையும் கண்டித்துப் போக்கும் அதிசய குணத்தைக்கொண்டிருப்பதனால் அதற்கு "சர்வரோக நிவாரணி" யென்னும் பேர்கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கட்டுக்கதையல்ல; கைகண்டது. பல்லாயிரம் பேர்களால் பரீட்சிக்கப்பட்டது. மேலும் பேர்போன ஓர் கத்தோலிக்குக் குருவானவரால் ஏழைகளின் பிரயோஜனத்துக்காக கவனமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. கத்தோலிக்குக் குருவானவர்கள், கன்னியாஸ்திரிகள், கிறீஸ்துவர்கள் முதலியோரால் கையாளப்பட்டுவருகிறது. அநேகந் சாட்சிப் பத்திரங்களைப் பெற்றுள்ளது. ஒவ்வொருவரும் தம்தம் வீடுகளில் கையிருப்பாய் வாங்கி வைத்துவைக்கத் தக்கது. குணமேதவிர குற்றம் ஒருபோதும் செய்யாதது. பத்தியம் வேண்டாதது. இதனை இதுவரையில் வாங்கி பரீட்சியாதவர்களும், அல்லது வாங்கி அரை குறையாய் அவசரமாய் உபயோகித்துப் பயன் பெறுமல் கைவிட்டவர்களும், மறுபடியும் அவசியம் வாங்கி பரீட்சித்துப்பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விலை 100 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு விலை ரூ 1 0 0.

தபாற் செலவு வி. பி. சார்ஜ் உள்பட ரூ 1 3 0.

வேண்டியவர்கள் பின்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தி. ம. மாணிக்கம் பிள்ளை,
போஸ்டு பாக்ஸ் நெ. 103,
மதராஸ்.

C. A. SILVEIRA,
Proprietor.

மகா பேர்போன ஹாஸ் விக்கோமா மருந்துகள்.

ஹாஸ் விக்கோமா பாம்.

தலை நோய், தொண்டை நோய், இருமல், மார்சிதளம், பக்கசூலை, கீல்வாதம், பாரிச வாய்வு முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. இதற்கிணையிடையாது. பரீட்சித்துப்பார்த்துக்கொள்ளலாம். விலை டப்பி ஒன்றுக்கு, அணா 10.

ஹாஸ் விக்கோமா சரும களிம்பு.

கால் கையிலுள்ள வெடிப்புகள், கரப்பான் சொறிசிரங்குகள், தீபட்ட புண் முதலிய சரும நோய்களை அதி துரிதத்தில் சுகப்படுத்தும். விலை டப்பி ஒன்றுக்கு, அணா 8.

VICOMA AGENCY,
2/74, Broadway, Madras.

ஹாஸ் விக்கோமா பல்வலி தைலம்.

பல்வலி, பல்லரணை, சொத்தைப்பல் முதலிய பல் நோய்களுக்கு முதல்தரமான மருந்து. அது பட்டவுடன் பல்வலியெல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோம். க்ஷணத்துக்குள் சௌக்கியந்தரும். ஆச்சரிய குணத்தைப்பற்றியே அது "மாஜிக் டேத்தேக் டிராப்ஸ்" "மாயாஜால பல்வலித் துளிகள்" எனப் பேர்பெற்றிருக்கிறது. சீசா ஒன்றுக்கு, அணா 8.

விக்கோமா ஏஜென்சி,
2/74, பிராட்வே, மதறஸ்.

ம. ஞா. சவரிமுத்துப் பிள்ளை அதிர்ஷ்ட சீட்டுகள்
சாத்தூர். S. I. Ry.

Catholic Male Orphanage.
டிக்கட்டு ஒன்றுக்கு ரூபா 1.
ரூபா 4,000த்திலிருந்து ரூபா 5 வரை
209 பிரைஸ்கள்
2—1—1920ல் குலுக்கப்படும்.
11 டிக்கட்டுள்ள புஸ்தகம் ரூபா 10.

St. Ann's Orphanage.
டிக்கட்டு ஒன்றுக்கு ரூபா 1.
ரூபா 2,000த்திலிருந்து ரூபா 5 வரை
250 பிரைஸ்கள்.
17—12—1919ல் குலுக்கப்படும்.
22 டிக்கட்டுள்ள புஸ்தகம் ரூபா 5.

10 டிக்கட்டுக்கு ஒரு டிக்கட் இலவசமாக அனுப்பப்படும். புஸ்தகம் விற்கக் கூடியவர்கள் உடனே எமக்கு எழுதுங்கள். 2 புஸ்தகம் விற்றால் ஒரு ஸ்பெஷல் டிக்கட்டும் கிடைக்கும். அதிகம் விற்கிறவர்கள் எழுதித் தெரிந்துகொள்ளுங்கள்.

A. F. SIMON,
COMMISSION AGENT MAHA VEGADATHOOTHAN OFFICE, G. T., MADRAS.

இப்புத்தகங்கள் அதிமேற்றிரார்ணியாரின் அனுமதிப்பேற்றது.

நசரேசர் பிள்ளைத்தமிழ்.

இந்நூல் நமது கர்த்தராகிய யேசு நசரேசரது பிள்ளைப் பருவங்களின் விளையாட்டுகளை இலக்கண இலக்கிய பாகுபாடுகளுடன் முன்னோர்களின் கருத்துக்கிணங்க கடின பதங்களின்றி எளிதில் அர்த்தம் விளங்கக்கூடியதாய் ஸ்ரீ புருஷோத்தமாவரும் தங்கள் ஒழிந்த நேரங்களில் பாடி நமது ஆண்டவரின் அற்புத மகிமைகளை தியானிக்கக்கூடியதாய் இயற்றப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8.

தபசுகால தியான பூஷணம்.

நமது ஆண்டவரின் திருப்பாடுகளைப்பற்றி வெகு பக்தி உருக்கத்துடன் (சிறு கல்வியாளரும் எளிதில் பொருள் அறிந்துகொள்ளுமாறு) பலவிதமான தமிழ்ப் பாவினங்களால் துயரமான இராகங்களமைத்து இயற்றப்பட்டுள்ள இந்நூலில் நசரேசர் அம்மானை, திருப்பாட்டுச் சிலுவைத்யானம் திருப்பாட்டு வரலாற்றுத்யானம், திருப்பாட்டு மனோவல்லயத்யானம், திருப்பாட்டுச் சித்தாகுலத்யானம், திருப்பாட்டுத் திருவலங்கல், சேவடி தியானப்பத்து முதலியவைகளுடன் உத்தானக் கீர்த்தனமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை அணா 8. இப்புத்தகம் தபசுகாலத்திற்கொப்பான இந்நவம்பர் மாதத்தில் வெகு பிரயோசனமானது. இரண்டு புத்தகங்களும் ஒரே முறையில் வாங்குபவர்களுக்கு ஒரு சிறு புத்தகம் இலவசமாய் அளிக்கப்படும்.

சைவ மகத்துவ திமிரபாநு விவிலிய விரோதநிக்காரமெனம் பெரும்பேரான தர்க்கப் புத்தகம். விலை ரூபாய் 2—0—0.

எ. எப். சைமன், கமிஷன் ஏஜண்ட், மகா விகடதூதன் ஆபீஸ், ஜார்ஜ்டவுன், மட்றஸ்.

The Good Pastor

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறு ஆடுகளும் நமக்குண்டு. அவைகளையும் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்." (அரு. 10: 11–16.)

புத்தகம் 17. | டிசம்பர் 1919. | இலக்கம் 12.

CHRISTMAS GREETING

கர்த்தர் பிறந்த திருநாட் சோபனம்

எமது சந்தாதார நேயர்கட்கும், அவர்களுடைய குடும்பத்தார், பந்துமித்திரர்கட்கும் கர்த்தர் பிறந்த திருநாளின் சுபசோபனம் மனமுவந்து கூறுகின்றோம். இந்த எமது சோபன வாழ்த்து எதில் அடங்கியுளதெனின், மனிதனுய் அவதரித்த நம் பெருமான் சுதனுகிய சர்வேசுரன் தம் நர ஜனன தினத்தில் நமக்குக் கொண்டு வந்த சமாதானத்திலேயே அடங்கியுளது. இச்சமாதானம் யாது? "சேசுக்கிறிஸ்துநாதர் சிலுவையிற் சிந்தின இரத்தத்தினுல் சகலத்தையும் சர்வேசுரனோடு சமாதானமாக்கினார்" (கொலோ. I. 20) என்று அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் இனிது இசைத்திருக்கும்வண்ணம் தம்முடைய திரு இரத்தப் பேறுபலன்களினுல் அவர் நம்மெல்லோருக்கும் சம்பாதித்துத் தந்திருக்கிற தேவ இஷ்டப்பிரசாதமேயாம் அச்சமாதானம். ஆதலின், தன் சர்வேசுரனோடும், தன் புறத்தியானோடும், தன்னோடும் சமாதானமாய் வாழ்பவன் எவனும் தேவ இஷ்டப்பிரசாதத்தையுடையவனுவான். நமது நண்பர்கள் இத்தகைய வாழ்வு வாழவும், இத்தகைய வாழ்வு அவர்களுக்கனுதினமும் பெருகவும் கருதி நல்ல ஆயனை சூழ்ந்தை சேசுவை இறைஞ்சி மன்றாடுகின்றோம்—ஆமென்சேசு.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

ஞானஸ்நான வார்த்தைப்பாட்டை புதுப்பிப்பதின்பேரில்

(முன் தொடர்ச்சி.)

நாம் ஞானஸ்நானம் பெறும்போது பசாசை விட்டுவிடுகிறேமென்று பிரமாணஞ் செய்கிறோம். இப்பிரமாணத்தின்படி நாம் பசாசைப் புறக்கணித்து அதைப் பகைக்கக் கடமைப்பட்டுள்ளோம். ஆனபடியால், நாம் பசாசுக்கு எவ்வித ஊழியமும்செய்யவொண்ணாது. அதற்கும் நமக்கும் எவ்வித சம்பந்தமும் பொருத்தமும் இருக்கப்படாது. ஆம், நம்முடைய நேச இரட்சகரின் பகையாளி அப் பசாசு. அது அவருடைய அரசாட்சியை அழிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கின்றது. அது அவருடைய மகிமைக்கும் தோத்திரத்துக்குமானவைகளையெல்லாம் வெறுக்கின்றது. இப்படி அது சர்வேசுரனுடைய சத்துருவாயிருப்பதுடன் நம்முடைய சத்துருவாயிருப்பதும் நமக்குத் தெரிந்த விஷயம். அர்ச். இராயப்பர் கூறியிருக்கின்றவாறு அது "கெற்சிக்கிறசிங்கத்தைப் போல் யாரை விழுங்கலாமோவென்று தேடிச் சுற்றித்திரிகின்றது" (I. இரா. V. 8). நம்மை அணைகடந்தவிதமாய் நேசித்து, நம்மை பசாசின் அடிமைத்தனத்தினின்று தம்முடைய விலையேறப் பெற்ற திரு இரத்தத்தினால் மீட்டு, நம்முடைய சேசுமகாபங்களினமட்டில் என்றும் கண்ணுங் கருத்துமாயிருக்கும் நம்முடைய ஆண்டவருக்கு நாம் கொடுத்திருக்கிற வாக்கின்படி அவருக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்வது நமக்குப் புத்தியோ, அலலது அவருடையவும் நம்முடையவும் சத்துருவாகிய அப் பசாசுக்கு ஊழியஞ்செய்வது புத்தியோ?

மேலும் நாம் பசாசை விட்டுவிடுகிறேமென்று வாக்களிப்பதினால் அதின் பங்காளிகளையும் விட்டுவிடுகிறேமென்பதை மறக்கப்படாது. பசாசின் பங்காளிகளிலொன்று உலகம். இச்சத்துருவைப் பற்றி அர்ச். அருளப்பர் சொல்லியிருப்பதாவது: "உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் சிநேகியாதேயுங்கள். உலகத்தை சிநேகிக்கிறவனிடத்தில் பிதாவானவருடைய சிநேகமிராது" (1. அருள. II. 15) என்பதேயாம். ஆம், உலகமானது எப்போதும் பசாசோடு உடன்பட்டுழைக்கின்றது. இப்பிரபஞ்ச வாழ்வே பாக்கியமென்றும், இதுவே சகலமென்றும், சதமென்றும் நமக்குப் பசப்பிக்கர்ட்டி, ஞானகாரியங்களைக் கவனிக்கவிடாமல், சர்வேசுரனையும் அவருடையகற்பனைகளையும்புறக்கணித்து, இப்பிரபஞ்ச நன்மைகளை நியாயம் அநியாயம் பாராமல் சம்பாதிக்கவும், சேகரிக்கவும் செய்ய இச்சத்துரு நம்மை உடன்படுத்துகின்றது. பசாசின் மற்றொரு பங்காளி சரீரம். இஃது நம்மை சுலபமாய் ஏமாற்றிவிடுகின்றது. அதேனெனில், இது நம்மோடு உடன்பிறந்திருக்கிறதினாலேயாம். இச்சத்துரு நம்முடைய ஐம்புலன்களேயன்றி வேறன்று. ஐம்புலன்களினால் மனிதர் கட்டிக்கொள்ளும் பாவாக்கிரமங்களுக்குக் கணக்கு வழக்குண்டோ? மனிதர்களிடத்திலுண்டாகும் துர் வழக்கங்களுக்கும் பழக்கங்களுக்கும் ஐம்புலன்களன்றோ வழியும் கருவியுமாம்? கட்டிக் காக்கப்படாத ஐம்புலன்கள் நம்மை நித்திய கேட்டுக்குச்செல்லும் வழியில் விரைவாய்க் கூட்டிக்கொண்டுபோகின்றனவென்பதற் கையமில்லை. இப்படியாக நம்முடைய சரீரமும் நமக்குச் சத்துருவாயிருக்கின்றது. ஆனபடியால், நாம் பசாசை விட்டுவிடுகிறேமென்று பிரமாணஞ்செய்கையில் பசாசையும், அதன் கூட்டாளிகளான உலகம், சரீரம் ஆகிய இவ்விரண்டையும் வெறுத்துப் பகைக்கிறதாகப் பிரமாணஞ்செய்கிறோமென்றறியக் கடவோமாக.

* * *

பசாசின் கிரியைகளை விட்டுவிடுகிறேமென்று பிரமாணஞ்செய்வதினால், நாம் எந்தப் பாவத்தையுங் கட்டிக்கொள்ளாதிருக்கக் கடமைப்பட்டுள்ளோம். பசாசின் கிரிகையே பாவம். பாவத்தைப் பசாசுதான்செய்யும். பசாசுக்கே உரியது பாவம். பசாசால்தான் பாவம் உலகத்தில் உண்டானது. இத்துர்மனப் பசாசு இன்னும் மனிதர்களை பாவத்துக்குள்ளாக்க விடா முயற்சியுடன் படாதபாடெல்லாம் பட்டுவருகின்றது. அர்ச். சின்னப்பர் இப் பசாசின் கிரிகைகளை, தாம்கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் ஸ்பஷ்டமாய் கூறியுள்ளார். அவைகளாவன: "விபசாரம், அசுத்தம், வேசித்தனம், காமவிகாரம், விக்கிரகங்களுக்கு அடிமைத்தனம், பில்லிசூனியம், பகை, வாக்குவாதம், பொறாமை, கோபம், சண்டை, பிரிவினை, பதிதத்தனம், காய்மகாரம், கொலை, குடிவெறி, பெருந்தீனி இவை முதலியவைகளாம்" (கலாத். V. 19, 21). இத்தகைய பசாசின் கிரியைகளைத் தான் செய்யமாட்டோமென்று நாம் நம்முடைய ஞானஸ்நானத்தின்போது வாக்குக் கொடுத்திருக்கின்றோம். பக்தியுள்ள கிறீஸ்துவர்கள் பாவத்தை விலக்கிச் சீவிப்பார்கள். அவர்கள் ஒரு சாவான பாவத்தைக் கட்டிக்கொள்வதைவிட ஆயிரம்விசை சாகச் சித்தப்பார்கள். அமெரிக்காவிலுள்ள கனடா தேசத்தின் காட்டுப்பிராந்தியத்தில் சீவித்துவந்த இந்தியனொருவன் தான் ஞானஸ்நானமும் புதுநன்மையும் வாங்கப் பாக்கியம்பெற்ற மறு வருஷம், தன்னுடைய பங்கு சுவாமியாரிடம்வந்து தனக்கு திவ்ய நன்மை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டான். அவனுக்கு நன்மை கொடுக்கக் குருவானவர் ஒப்புக்கொண்டபோதிலும் அவனை நோக்கி: "மகனே, நீ உன்னுடைய ஞானஸ்நானத்துக்குப்பிறகு ஏதாவது சாவான பாவத்தைக் கட்டிக்கொண்டிருந்தால், பாவசங்கீர்த்தனஞ் செய்" எனறார். இவ்வாறு குருவானவர் சொல்லக் கேட்ட வாலிபனுக்குத் தாங்கொண்ணாத்துக்கமுண்டாகி கண்களிலிருந்து கண்ணீர் ததும்பி வழிந்து ஓட, திக்கித் திணறிக் கொண்டு: "சுவாமீ, நான் ஞானஸ்நானம் பெற்றபிறகு கட்டிக்கொண்ட சாவான பாவங்களைப் பாவசங்கீர்த்தனஞ் செய்யச் சொல்லுகிறீர். ஞானஸ்நானம் பெற்றபிறது யாராகிலும் சாவான பாவத்தினால் சர்வேசுரனுக்கு இரண்டகம் புரியத் துணிவுகொள்வாரா?" என்றான். இந்த நல்லவாலிபன் தன்னுடையஞானஸ்நானத்துக்குப்பிறகு சாவான பாவம் எதையுங் கட்டிக்கொள்ளாமல் சீவித்துவந்ததுமல்லாமல், மனது பொருந்தி ஓர் அற்பப் பாவத்தையுங் கட்டிக்கொள்ள உடன்பட்டவனல்ல. இவனைப்போல நாம் நம்முடையஞானஸ்நானவார்த்தைப்பாட்டை பிரமாணிக்கமாய் நிறைவேற்றி வருகிறோமா?

* * *

பசாசின் ஆரவாரங்களை விட்டுவிடுகிறேமென்றும் நாம் பிரமாணஞ்செய்கிறோம். பசாசின் ஆரவாரங்களென்ன? பசாசின் ஆரவாரங்களெல்லாம் ஆங்காரமேயன்றி வேறல்ல. பசாசின் கிரிகைகளுக்குள் பிரதானமானது ஆங்காரமேயாம். ஆங்காரத்தினால்தான் பசாசு கெட்டது. தன்னைப்போல் மனிதர்களுங் கெட அது ஆங்காரத்துக்கடுத்த சோதனைகளையே அவர்களிடத்தில் உண்டாக்குகிறது. நம்முடைய ஆதித்தாய் தகப்பனை அது எதனால் கெடுத்தது? ஆங்காரத்தினாலன்றோ? அவர்கள்மாத்திரம் விலக்கப்பட்ட கனியைப் புசிப்பார்களானால்சர்வேசுரனுக்குச் சமானமாகிவிடுவார்களென அவர்களுக்கு வஞ்சகமாய் வற்புறுத்தி, அவர்களை ஏமாற்றிவிட்டது. மேலும் நமது கர்த்தர் நமக்குக் கொண்டுவந்த இரட்சண்யத்தில் பங்குபெற நாம் தாழ்ச்சியுள்ளவர்களாயிருக்கவேண்டியதென்பதைத் தவிர்த்து நடத்தும்படி, பசாசு நம்மிடத்தில் எப்போதும் ஆங்காரத்தையெழுப்புகின்றது. நாம் செய்யும் புண்ணியகிருத்தியங்களையும், பிறசிநேக காரியங்களையும் சர்வேசுரனுடைய மகிமைக்காகவுந் தோத்திரத்துக்காகவுஞ் செய்து பலனடையநம்மை விடாமல், நம்முடைய பெருமைக்கும் கீர்த்திக்கும் செய்ய பசாசு நம்மை எவி ஏமாற்றிவிடுகிறது. ஆனபடியால் பசாசின் ஆரவாரங்களை விட்டுவிட்டோமென்று நாம் கொடுத்த வாக்கின்படி ஆங்காரத்தை, அதாவது பெருமை சிலாக்கியம், வீம்பு வீறுப்பு, வீண் தோத்திரப்பிரியம், பிறர் மதிப்பைத் தேடல், பிறரை இகழ்தல், அவர்களைக் குறைவாய் நினைத்தல் ஆகிய இவை முதலியவைகளையெல்லாம் அகற்றி தாழ்ச்சியைக் கடைப்பிடித்து ஒழுகுவோமாக. "நீங்கள் மனந்

திரும்பிப் பாலர்களுக்கொத்தவர்களாகா விட்டால் (தாழ்ச்சியுடையவர்களாகாவிட்டால்) பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு XVIII. 3).

(தொடரும்.)

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

VIII
ஓராக்கேல்.

"இராக்கேல் என்பவள் எழிப்து தேசத்துப் போவஸனே பெற்றதுபோல், ஸ்துதிக்கும் படியாக நீர் ஒரு இரட்சகரை இப்பிரபஞ்சத்துக்குத் தந்தீர்" (மரியாயின் மந்திரமாலை).

யாக்கோபின் தாய் மாமனுகிய லாபானுக்கு இராக்கேல் எனுமோர் பெண் ணிருந்தாள். வேதாகமத்திற் கண்டுள்ளதுபோல் "அவள் ரூபவதியும் முக சவுந்தரியமு முள்ளவள்"; அவளே மணந்தான் யாக்கோப். லாபானின் ஊரில் சிலகாலமிருந்தான் அவன். அவ்விடத்தில் திரவியந் தேடி ஐசுவரியவானுனன். இராக்கேல் ஓர் குமாரனே யீன்றனள். அவனுக்கு ஜோசேப் எனும் நாமஞ் சூட்டப்பட்டது. அதன்பின் யாக்கோப் தன் மாமனுரை நோக்கி "என் சுய தேசத்திற்கும் என் நாட்டிற்குந் திரும்பிப்போக விடைகொடுப்பீராக" என்று கேட்டான். உடனே பதிலடையவில்லை. ஆயினும், உத்தாரம் பெறு மூன்னமே, "மெசபொத்தேமியாவில் சம்பாதித்த பொருள்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு கானுன் தேசத்திலிருக்கிற தன் பிதாவாகிய ஈசாக்கிடத்திற்குப் பிரயாணமாயினுன் யாக்கோப். லாபான் அச்சமயம் வெளியே போயிருந்தனன். இராக்கேல் தன் தகப்பன் வைத்திருந்த விக்கிரகங்களையுந் திருடிக்கொண் டோடினுள்."

"யாக்கோபோவெனில் தான் ஓடிப்போகிற விஷயத்தைத் தன் மாமனுக்குத் தெரிவிக்கத் துணியவில்லை." ஆயினும் மூன்றும் நாள் இவர்கள் போன சேதி லாபானுக் கெட்டியது. உடனே அவன் "தன் சகோதரர்களே யழைத்துக்கொண்டு அவனை ஏழு நாளாகத் தொடர்ந்துபோய் 'கலாயத்' எனும் மலையிலே அவனைக் கண்டுபிடித்தான்." சற்றே சினந்து "உன் பந்துக்களிடத்திற்கும், உன் பிதாவின் வீட்டைத் திரும்பிப்பார்க்கவும் விரும்பினுய்; போகலாம். ஆனுல் என் தேவர்களே என் திருடிக் கொண்டுபோகிறுய்" என்ற லாபான் வினவினுன் யாக்கோபை. "நான் திருடியதாக, நீர் என்பேரில் குற்றஞ்சாட்டுகிறீரே. உமது தெய்வங்களே இங்கு கண்டுபிடிப்பீராகில் எடுத்துக் கொள்ளும்" என்றுன். இவ்வாறு சொல்லும் போது இராக்கேல் விக்கிரகங்களே எடுத்துவந்தாளென்று அவனறியாதிருந்தான். லாபான் யாக்கோபின் கூடாரத்தைப் பரிசோதித்தான். இராக்கேலோ அதிசீக்கிரத்தில் அந்த விக்கிரகங்களே யெடுத்துத் தன் ஒட்டகச் சேணத்தின் கீழே அவைகளே ஒளித்துவைத்து அதின்மேலே உட்கார்ந்துகொண்டாள். தகப்பன் அவளிருந்த கூடாரம் புகுந்தபின்னும், உடம்பு அசௌக்கியம் என்றுசாங்குபண்ணி இருந்தவிடம் விட்டகலவில்லை. லாபான் கூடாரமெங்குஞ் சோதித்தும் அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை. கடைசியாக லாபானுக்கும் யாக்கோபுக்கும் உடன்படிக்கை எற்பட்டது. சமாதானத்தோடு ஒருவர் ஒருவரைவிட்டுப் பிரிந்தனர்.

இது கடந்து ஒன்பது வருஷங்களாயின. இராக்கேல் திரும்பவும் கர்ப்பந்தரித்திருந்தாள். பிரசவகாலங் கிட்டிற்று. வாதைப்படுகிறுள். ஆபத்தாயிருக்கிறது. "வேதனை மிகுதியால் ஆத்துமா பிரியப்போகும் மரணத்தருவாயில் அவள் தன் பிள்ளைக்குப் 'பெனுனி' அதாவது என் வேதனைக் குமாரன் என்று பெயரிட்டாள். தந்தையோவென்றுல் அவனை 'பெஞ்சமின்' அதாவது வலக்கர மகன் என்றழைத்தான். குழந்தையைப் பெற்றதும் இராக்கேல் இறந்தனள். எப்றத்தா அதாவது பெத்லெம் ஊருக்குச் செல்லும் வழியில் தகனஞ்செய்யப்பட்டாள். யாக்கோப், அவளது கல்லறையின் மேல் ஞாபகமாக ஓர் ஸ்தம்பம் காட்டிவைத்தான்.

1. யாக்கோப் இராக்கேலை யதிகமாக நேசித்தான். கடவுள் கன்னிமரியாயை அதிகமாகவும், விசேஷித்த விதமாகவும் நேசிக்கின்றுர். சங்கீதாகமத்திலுள்ள வார்த்தைகள் அவள் மட்டில் கன்கு பொருந்தும். "குமாரத்தியே கேள்; கண் திறந்து உன் செவிசாய். உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் விட்டு விடு. உன் அழகை இராஜா நேசித்து விரும்புவார்." ஆம்! தேவ குமாரன் அவளழகை நேசித்து விரும்பியதாலல்லோ அவளுதரத்திலி றங்கினுர். கடவுள் நம்மை நேசிப்பதற்கு நமதாத்துமத்தின் அழகே காரணம். ஆத்துமத்தின் அழகு அவருடைய அருளே! அதுவே ஆன்மாவை யலங்கரிக்கும். அதுவே ஆத்துமாவைக் கடவுள் பார்வைக்கு எழில்பொருந்தியதாக்கும். ஆத்துமாவானது தேவ அருள் நிறையப்பட்டுப் பரிசுத்த அந்தஸ்திலிருக்குமாயின், அதைக் கடவுள் களிப்புடன் கண்ணேக்குகிறுர். அதனிடத்து தனது பரிசுத்தத்தனத்தையே ஒருவாறு பிரதிபிம்பமாய்ப் பார்க்கின்றுர். அதற்குமாறுக பாவியை வெறுக்கிறுர். ஏனெனில் அவனது ஆத்துமாவில் அருளில்லை. சிருஷ்டிகரின் திவ்ய சாயலுக்குப்பதிலாய் பேயின் கோரத்தோற்றம் காணப்படுகிறது. நீதிமானுடைய ஆத்துமம் ஆண்டவர் கையிலிருக்கிறது. அதை யவர் நேசிக்கிறுர்; கண்காணித்துவருகிறுர். நீதிமான்கள் எல்லோரையுமவர் நேசிப்பினும், ஆத்துமாவில் எவ்வளவுக்கு தேவ அருளும் புண்ணிய கனியும் பொலிந்து கிடக்கின்றனவோ அவ்வளவுக்கு அவருடைய நேசம் பெருகி நிற்கும். அறிவுள்ள சிருஷ்டிகளில் மரியாயைப்போல் யார்தான் கடவுளே நேசித்தவர்? எவர்தான் அக்கன்னிகையைப் போல் தானடைந்த அருள்களையெல்லாங் காப்பாற்றிப் பிரமாணிக்கமாயிருந்துளார்? "ஓ! மரியே, பிரியதத்தத்திலுல் பூரணமானவளே! தேவ நேசமே உன்னிடத்திற் பொங்கிக் கிடந்தது. அன்னிய நேசத்திற் கவகிடமில்லை. ஆகவே, மற்ற சிருஷ்டிகளைவிட உன்னை அதிகமாக நேசித்தார் கடவுள். பரலோக இராயன் உனது அமல ஆன்மாவின் அழகைக்கண்டு ஆனந்தித்தார்." "இராக்கேல் என்பவள் எழிப்து தேசத்தின் போஷகனைப் பெற்றதுபோல் ஸ்துதிக்கும்படியாக நீர் ஒரு இரட்சகரை இப்பிரபஞ்சத்திற்குத் தந்தீர்."

2. இராக்கேலின் சிரேஷ்ட குமாரன் ஜோசெப். அவன் கிறீஸ்தாதருக் குவமானம். அவன் தன் தகப்பனுருக்கு நேசபாசமுள்ளவன். அன்புந் தயையும்பொருந்தியவன். ஆயினும் அவனுடைய சகோதரர்கள் அவனைப் பகைத்தனர். அவனைக் கொன்றுபோடமுதலாய் எத்தனித்தனர். தன் சகோதரர்களால் விற்கப்பட்டான். எஜிப்துக்கு அடிமையாகக் கொண்டு போகப்பட்டபின் குற்றவாளியைப்போல் சிறையிலிடப்பட்டான். அங்கிருந்து உன்னத பதவிக்கேறினுன். பரோவா இராயனிடம் தேவ அருள் பெற்ற புண்ணியோத்மனுகக் கொண்டாடப்பட்டான். அவனுடைய நாமம் 'ஜோசெப்' என்பதை மாற்றி 'உலக இரட்சகர்' எனப் பட்டப் பெயர் சூட்டினுன் இராஜா. அநேகாகே ஜனங்களைப் பஞ்சம், மரணத்தினின்று இரட்சித்தான். தன்னைப் பகைத்துத் தனக்குத் தீங்கு விளைவித்த தஞ் சகோதரர்களையுமே காப்பாற்றினுன்.

பரம பிதாவின் அதி நேசக்குமாரன் சேசு. எங்கும் கன்மை சொரிந்துகொண்டுசென்றவள்ளல். தாழ்ச்சியும் சாந்தமும்பூண்டவர். ஒருவருக்கும் இன்னல்கொடாத உத்தமர். எல்லோரையும் ஒருங்கே நேசித்த அன்பர். ஆயினும் அவருடைய சகோதரர்கள்—அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட பிரஜைகள்தானே அவரைப் பகைத்தார்கள். அவரை மாய்க்க வழி தேடினர். அவரது அப்போஸ்தலர்களில் ஒருவனுலேயே விற்கப்பட்டார். கடைசியாக ஒரு கொலைஞனைப்போல் கழுமரத்தில் இரு கள்வர் நடுவில் அறையுண்டு கீச மரணத்துக்குள்ளாயினர். ஆனுல் அம்மரணத்தினுலேயே உலகம் இரட்சிக்கப்பட்டது. அடக்கஞ் செய்யப்பட்ட கல்லறையினின்று ஒட்டோலகராய் உயிர்த்தெழுந்தருளினுர். அவரது திருச் சிலுவையுங் கல்லறையும் அவரது தேவத்துவத்தைப் பரிஷ்காரமாய்க் காட்டுகின்றன. அவருடைய பெயர் 'சேசு' அதாவது நம்மையிரட்சிக்கிறவர். மெய்யாகவே அவர்தான் நம் இரட்சகர். உலகத்திற்கு ஈடேற்றங்கொண்டுவந்தவர். கித்திய மரணத்தினின்று யூதர்களை மட்டுமன்று, மற்ற ஜாதி ஜனங்கள் யாவரையுமே யிரட்சிக்கிறுர்—இரட்சிக்கச் சித்தமாயிருக்கிறுர்.

3. இராக்கேலுக்கு 'பெஞ்சமின்' என்ற இன்னுரு குமாரனிருந்தான். அவனை 'வேதனையின் குமாரன்' என்றழைத்தாள். மரியாயின் பிள்ளைகள் நாமெல்லோரும். அதுவும் வேதனையின் குமாரர்களாமே. எனெனில் சிலுவைமரத்தினடியிலேயே நமது வேதனையில் யீன்றுளென்கலாம். அவளிருதயம் வியாகுல

வாளால் ஊடுருவப்பட்டுக்கிடக்கையில் "ஸ்திரீயே! இதோ உன் குமாரன்" என்ற அர்ச். அருளப்பரைச் சுட்டிக்காட்டி மரியாய்க்கு சேசுநாதர் வசனித்த வாக்கியம் அவளுள்ளம்புகுந்தது. தேவ ஆணையச் சிரமேற்கொண்டு கம்மை யவளது பிள்ளைகளாக ஏற்றக்கொண்டனள். நாமும் வேதசாட்சிகள் இராக்கினியின் மக்களாலேம். இதைக் குறித்து அர்ச். பெர்னார்து உரைப்பது "ஓ! பாக்கியம் நிறைந்த மாதாவே! மெய்யாகவே ஓர் ஈட்டியானது உமதாத்துமத்திற் பாய்ந்தது. ஏனெனில் உம்மிருதயத்தின் வழி போகாது உமது திருக் குமாரனின் விலாப்பக்கம் எப்படிப் பாயும்? சேசுநாதர் உயிர்துறந்தபின் வாளானது அவருடைய ஆத்துமாவைப் புண்படித்தக்கூடவில்லே. ஆனல் உமது இருதயத்தை யூடுருவினதன்றே. அவருடைய ஆத்துமம் அப்போதங்கில்லே. ஆனல் உம்முடையது, எமது இரட்சணியத்தின் பலியாகிய சேசுவோடல்லோ ஒன்றித்திருந்தது" என்பதே. இவ்வனவு துன்பதுரிதத்திலேயேகன்னி மரியாய் நம்மைப் பெற்றனள். ஆகையால் நாம் அவளது 'வேதனையின் குமாரர்க'ளென்பது பொய்யாகாது.

4. "இராக்கேல் தன் தகப்பனிடமிருந்த விக்கிரகங்களே எடுத்து ஒளித்துவைத்தாள்." லாபானும் அவன் குடும்பத்தாரும் மெய்யுங் கடவுளைத் தொழுகிறவர்கள். ஆனல் அந்திய தேசத்தில் வெகு காளாய் வாசம்பண்ணினபின்பு 'லாபான்' வரவர வேதசத்தியத்தை மறந்து, சில விக்கிரகங்களைத் தன் வீட்டில் வைத்துக் கொள்ளத் துணிந்தான். இவைகளையே இராக்கேல் எடுத்து அழித்துவிட்டாள். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் மெய்யான கடவுளின் கற்பனைகளையும், அவர் ஸ்தாபித்த திருச்சபையின் கட்டளைகளையுங் கோட்பாடுகளையும் விசுவசித்து அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டியதவசரம். ஆனல் நெறிகெட்ட சிலர், பசாசின் மாயவலையிற் சிக்குண்டு பொய் விக்கிரகங்களே ஏற்படுத்தத் தலைப்பட்டனர். இவைகள் தான் பதித போதனைகள். இவ்விக்கிரகங்களே கன்னிமரியாய் அழித்தாள். ஆகையாலேயே சத்திய திருச்சபை கன்னிமரியாயைப் பார்த்து "ஓ! கன்னிகையே, அக்களிப்பீராக! ஏனெனில், உலகத்திற்றோன்றிய எல்லாப் பதித போதனைகளையும் நீர்தானழித்தீர்" எனப் பாடுகின்றது. எப்படி அழித்தாளென்று அர்ச். பொனவெந்தூரா பகர்கிறதாவது: "ஓ! மரியாயே. எல்லாப் பதித போதனைகளையும் நீர் அழித்தீர். தேவனின் மேலான வல்லமையைக் கொண்டு பதித போதகர்களின் தலையை நசுக்கினீர். எங்களே யிரட்சிக்கிறவரும் மனிதனுந் தேவனுமாகிய உமது திருக் குமாரனே அவர்களுக்குக் காட்டி—தேவ அன்பை யூட்டி அவர் மூன் கூட்டிச்சென்றீர்" என்பதே.

இதற்குதாரணமாக செஸ்தொரியஸ் என்பவனின் தேவதூஷண துர்ப்போதனை எப்படியடக்கப்பட்டதென்பதைச் சுருக்கமாய் ஈண்டு கூறுவோம். "கிறீஸ்து ஆப்தம் 5-ம் நூற்றாண்டில் கொன்ஸ்தாந்திநூபுரி பிதாப்பிதாவாயிருந்த நெஸ்தொரியஸ் எனும் பேர்போன பதிதன் சேசுநாதரிடத்துள்ள தேவ சுபாவமும் மனித சுபாவமுமாகிய இரண்டும் இரு விதேகிதர்களுக் கிடையிலுள்ள மன ஐக்கியம்போலவே, தம்மூள் ஐக்கியப்பட்டிருந்தனவென்று சாதிக்கத் தலைப்பட்டான். தலைப்பட்டு சேசுக்கிறீஸ்துவானவரில் இரண்டு ஆட்களுண்டென்றும், மனித சுபாவமானது தேவ சுபாவத்தோடு மனமுறையாய் மாத்திரம் ஒர்மனப்பட்டிருப்பதென்றும், சேசுக்கிறீஸ்துவானவர் மனிதனுயிருக்கிறாரென்றும் அர்ச். கன்னிமரியம்மான் தேவமாதாவல்ல, ஏனெனில், அவள் பெற்றெடுத்தவர் மனித ஆளேயன்றி தேவ ஆள் அல்லவென்றுஞ் சாதித்தான்." (ச. வே. த.) அலெக்சாந்திரிய நகரத்துப் பிதாப்பிதாவாகிய அர்ச். சிரில் என்பவர் இப்பதித போதனையை மறுத்து சேசுநாதரிடத்தில் ஒரேயாட் தன்மையின்றி இரண்டாட் தன்மையில்லையெனும் மெய்யான சத்தியத்தைப் போதித்தார். எபேசு நகரத்திற் கூடிய மூன்றும் சாதாரண திருச்சங்கமானது இக்கொடிய பதித போதனையைச் சபித்துத்தள்ளி. அர்ச். கன்னிமரியாய் மெய்யான தேவதாய் என்பதை ஓர் விசுவாச சத்தியமாக ஏற்படுத்திற்று.

சத்திய திருச்சபையானது ஓர் மரக்கலம். உலகமெனுங் கடலில் பிரயாணமாகிறது. அர்ச். பாப்பானவர் அதின் மீகான். காற்றும் புசலுமாகிய சத்துருக்களின் நிர்ப்பந்தங்கள் அதை அலைக்கழிக்கின்றன. பதித போதனைகளெனும் அலைகள் அதை மூழ்கடிக்கப் பிரயாசைப்படுகின்றன. இவ்வாறு அல்லல்படுகையில் மீகான் மோகூ தாரகையை எறெடுத்துப்பார்க்கிறார். ஆபத்தினின்று நிச்சயமாகவே கடைத்தேறுகின்றது கப்பல். திருச்சபைக்குவந்த கஷ்டங்கள் எல்லாவற்றிலும் பாப்புமார்கள் அர்ச். மரியாயின் உதவியைத் தேடியே ஜெயம்பெற்றனர். அல்பிஜென்சியனின் பதித போதனை, கன்னி மரியளித்த ஜெபமாலையின் வல்லமையாலேயே யடக்கப்பட்டது. அத்திரு ஜெபமாலையின் உதவியாலேயே லெப்பாந்தோவெனுங் குடாக்கடலில் துருக்கியர் முறியடிக்கப்பட்டனர். ஏழாம் பத்திநாதர் அத்தாயின் அற்புதரகத்தாலேயே சத்துருக்களீடமிருந்து தப்பித்து இரு முறை இராயப்பர் ஆசனமமர்ந்ததாகச் சொல்லுகிறார். ஒன்பதாம் பத்திநாதர் தம் காலத்துண்டான துன்பங்களில் அத்தாயின் சலுகையைத் தேடியே ஆறுதலடைந்துளர். பதின்மூன்றாம் கிரகோரியார் கன்னிமரியாயின் வழியாய் தனக்குக் கிடைத்த உபகாரங்களுக்கு நன்றியறிதலாகத் திருச்செபமாலைராயகியின் திருநாளேற்படுத்தினர். பதின்மூன்றாம் கிலகராயர் திருச்சபை படுங் கஷ்டநஷ்டங்களையுந் துன்பதுரிதங்களையுமபார்த்து அவைகளினின்று ஜெயம் பெறுமாறு தேவதாயை மன்றாடும்படி ஆக்ஞாபித்தார். அக்டோபர் மாசத்தில் திருச்செபமாலையைக் கட்டாயம் ஜெபிக்கக் கட்டளையிட்டார். அர்ச். கன்னிமரியாய் பதித போதனைகளே யடக்கியும், திருச்சபைக்கு விசேஷ உதவியும் புரிந்துவருவதால் பிசாசின் தலையை யின்னும் நசுக்கிவருகிறளென்பது திண்ணம்.

5. பழய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இராக்கேலின் துயரப் பிரலாப சம்பவங் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "இராமாவூரிலே புலம்பலும், துக்கத்தினுலுஞையும், அழுகையின் சத்தமும் ஒரு உயர்ந்த இடத்திற் கேட்கப்பட்டது. அது இராக்கேலின கூக்குரலாம். அவள் தனது பிள்ளைகளைப்பற்றியழுகின்றனள். அவர்களில்லாததால் ஆறுதலடைய அவளுக்கு மனமில்லே" (எரேமியாஸ் 31, 15). "இராமாவூரிலே ஓர் குரலொலியும், அழுகையும் மிகுந்த புலம்பலுங் கேட்கப்பட்டன. இராக்கேல் என்பவள் தன் பாலர்களின்மட்டில் புலம்பி அவர்களில்லாமையால் ஆறுதலடைய மனங்கொள்ளாதிருந்தாள்" என்பதேயாம். (மத்தேயு 2, 18). இராக்கேல் தம் மக்கட்காக அழுதாள்: அர்ச். மரியாய் சிலுவைமரத்தடியில் தானீன்றெடுத்த மக்கட்காக அழவில்லேயோ? அன்று புலம்பித் தவித்ததோடு நிற்காது இன்றுமே அழுது நிற்கின்றனள். தம் மக்கள் சத்திய மார்க்கந் தவறி நிதிப்போவதையும், நெறிகெட்டொழுகுவதை யும்பார்த்து அவர்களுக்காக அழுகின்றனள். அவர்கள் திரும்பி நல்வழி வரும்வரையில் ஆறுதலடைய மனங்கொள்ளாதிருக்கின்றனள்.

சில சமயங்களில் அத்தாயின் சுரூபம் புதுமையாகக் கண்ணீர் சிந்தினதாக சொல்லப்பட்டிருக்கிறது. 'தல்மேசியா' காட்டில் 'கிலியா' எனுமூருனது. அங்குள்ள கோவிலில் தேவ மாதா சுரூபம் ஒன்று பூச்சியமாய் வணக்கப்பட்டுவருகின்றது. அது 'கிலிஸா' மாதா வென்றழைக்கப்படுகிறது. 1677ஸ் அத்திருச் சுரூபத்தைச் சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டு போனபோது அச்சுரூபம் கண்ணீர் ஏராளமாய் சொரிந்ததாகவும், அக்கண்ணீர்த் துளிகளே ஜனங்கள் சேர்த்துப் பூச்சியமாய் வைத்திருந்தனரென்பதும் சரித்திரம். அதே சுரூபத்தினிடத்து இன்னெரு தடவையும் இவ்வித புதுமை நடந்துளதாம். துருக்கியர் அவ்வூரின்பேரில் படையெடுத்துவருகின்றனர். எல்லோரும் மாதாவை யிரந்து மன்றாடுகிறார்கள். அத்தாய் அவர்கள்மட்டில் பரிதாபப்படுவதைக் காட்டும் பொருட்டு தமது திருக் குமாரனே யவர்கட்காக வேண்டுவதாகக் காட்டும்வண்ணம் கண்ணீர் சிந்தினள். அத்தாயின் அழுகைக்குரல் கடவுளால் கேட்கப்பட்டது. எனெனில் துருக்கியர் 10,000 ஜனங்களே யிழந்துபோக ஓட்டம் பிடித்தார்கள். கிறீஸ்துவர்கள் ஜெயமடைந்தனர். தேவதாயின் சலுகையை நாடுவோர் கைவிடப்படாரென்பது வுண்மையிலுமுண்மையாம்.

(தொடரும்.)

M. S. M.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

2-ம் அதிகாரம்; வசனம்—40–45.

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—40. "பிள்ளை வளர்ந்து, ஞானத்தால் நிறைந்து, பலப்பட்டு வந்தது! சர்வேசுரனுடைய அருளும் அவரிடத்தில் இருந்தது."

"பிள்ளை வளர்ந்து பலப்பட்டது" என்னும் வாக்கியம் சேசுநாதருடைய சரீ

ரத்தின் வளர்த்தியையும், பலத்தையும் மாத்திரம் குறிக்கிறது. அவருடைய சரீரம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து பலமடைந்து, தமது திவ்ய தாயின் இருதயத்தைச் சந்தோஷத்தால் பூரிக்கும்படி செய்தது. அவருடைய ஆத்துமத்திலோ ஞானமும் அருளும் சம்பூரணம்பெற்று விளங்கினது. சரீரத்தில்மாத்திரம் மாற்றம் உண்டானதே தவிர, அவருடைய ஆத்துமத்தில் விருத்தியும் மாற்றமும் ஏற்படவில்லை. ஏனெனில், அவர் தாய் உதரத்தில் உற்பவித்த முதல் க்ஷணத்தில்தானே அவருடைய ஆத்துமத்தில் சகலமான அறிவும், ஞானமும், தேவ அருளும், வரங்களும் சம்பூரணமாய்த் துலங்கின. மோட்சவாசிகள் சர்வேசுரனே முகமுகமாய்த் தரிசிப்பதுபோல், அவருடைய ஆத்துமம் எப்போதும் பிரத்தியட்ச தேவ தரிசனத்தைப் பெற்று அளவில்லாத ஞானத்தாலும், இஷ்டப்பிரசாத வரங்களின் சம்பூரணத்தாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தீர்க்கதரிசிகளும் மெஸ்ஸியாஸ் சர்வ ஞானத்தாலும் இஷ்டப்பிரசாதத்தாலும் சம்பூரணம்பெற்று தோன்றுவார்' என்று வியந்து கூறியிருக்கிறார்கள். "நமது தாசன் புத்தி சாதுரியருமாய், மகத்துவமுடையவருமாய், உயர்ந்த கியானம்படைத்தவருமாய், மிக்கப் பரம மான்மியமுடையவருமாய்ப் பிரகாசிப்பர்" (இசையாஸ் 53-ம் அதி. 13-ம் வசனம்). வார்த்தையானவர் மாம்சமாகி இஷ்டப்பிரசாதமும் சத்தியமும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசமாயிருந்தார். அவருடைய மகிமையைக்கண்டோம்! அது பிதாவின் ஏக சுதனுக்குரிய மகிமைக்கு நிகராயிருந்தது என்று அருளப்பரும் சாட்சி பகருகின்றார்.

மோயீஸன் நியாயப்பிரமாணத்துக்குச் சேசுநாதர் கீழ்ப்படிந்துவந்தார் என்று காட்டவும், அவர் ஞானத்தால் நிறைந்தவர் என்று முன்னர் தாம் செப்பியிருந்ததை ருசுப்படுத்தவும், பின்வரும் வர்த்தமானத்தை லூக்காஸ் கூறுகிறார். மூன்றி சேசுநாதரின் தாழ்மையான நிலைமை வானதூதர்களாலும், சிமையோன் அன்னை என்பவர்களாலும் தெய்வச்செயலால் மகிமையடைந்ததுபோல இப்போது அவர் தம்மைத் தாழ்த்தி நியாயப்பிரமாணத்துக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தும் போதே, தம்முடைய தெய்வீக ஞானத்தின் கதிரை வீசி, தம்மை மெஸ்ஸியாவாக ஜனங்கள் ஏற்றுக்கொள்ளுவதற்காக அவர்களே ஒருவாறு ஆயத்தம்பண்ணுகிறார்.

41-ம் வசனம் —" அவருடைய பிதாவும் மாதாவும் வருஷந்தோறும் பாஸ்கா என்னும் மகா பண்டிகை நாளிலே ஜெருசலேம் நகரத்துக்குப் போவார்கள் " வருஷத்தில் மூன்றுதரம் திருநாட்கள் கொண்டாட ஜெருசேலம் நகர்போக யூத ஜனங்களுக்கு கட்டளையிருந்தது. அவைகளில் பாஸ்கா திருநாள்தான் முக்கியமானது. இத்திருநாட்களுக்குப்போக பெண்களுக்குக் கடன் இல்லை. ஆனல் அவர்கள் பக்தி முகாந்தரமாய்ப்போவதற்கு ஆட்சேபணை கிடையாது.

பாஸ்கா பண்டிகையானது சர்வேசுரன் இஸ்ராயேல் ஜனங்களைத் தமது பிரசையாகத் தெரிந்துகொண்டு எஜிப்து இராச்சியத்தின் அடிமைத்தனத்தினின்று மீட்டு இரட்சித்த பேருபகாரங்களை அச்சனங்களுக்கு ஞாபகப்படுத்தும்படியாக ஏற்படுத்தப்பட்டது.

அந்நாட்களில்தான் மெஸ்ஸியாவுக்கு முன்குறிப்பாயிருந்த செம்மறிப் புருவையைப் பலியிடுவார்கள். பலியிட்ட புருவையையும், பாஸ்கா அப்பத்தையும் புசிப்பார்கள். தங்கள் விசேச்சல்களின் முதற் பலன்களைக் காணிக்கை செலுத்துவதும் அப்போதுதான்.

42-ம் வசனம்.— அவ்வண்ணமே அவருக்குப் பன்னிரண்டு வயது நடக்கிறபோது, அவர்கள் பண்டிகைக்குப்போகும் வழக்கப்படி ஜெருசலேமுக்குப்போய்,

43-ம் வசனம்.—பண்டிகை நாட்கள் முடிந்து திரும்பிவரும்போது பாலனாகிய சேசுநாதர் பிதா மாதாவுக்குத் தெரியாமல் ஜெருசலேமில் தங்கிவிட்டார்.

பன்னிரண்டாம் பிராயத்தில் யூத ஆண்மக்கள் ஒருசந்தி பிடிக்கவும் மோயீஸன் வேத முறைமைகளை அநுசரிக்கவும் தகுதியுள்ளவர்களானார்கள். சேசுநாதரும் அதே பிராயத்தில் நியாயப்பிரமாணத்தின்படி நடந்தொழுக முற்றும் தம்மைக் கீழ்ப்படுத்தினர். அவர் பாஸ்கா கொண்டாட ஜெருசலேம் நகர் நடந்து சென்றது இதுதான் முதல் விசை.

தேவமாதாவும் சூசைமுனியும் திவ்ய பாலனும் எவ்வளவு அடக்க ஒடுக்கத்தோடும், மேரைமரியாதையோடும் அத்திருயாத்திரையில் நடந்துகொண்டார்களென்றால், அவர்களோடு சென்றவர்கள் சமஸ்தரையும், சர்வேசுரன்பேரில் பயபக்தியாயிருக்கச்செய்ய அதுகூலமாயிருந்தார்கள். தேவாலயத்தில் பிரவேசித்ததும் கன்னிமாதாவும் சூசைமுனியும் திவ்ய பாலனும் அங்கு காட்டிய பக்தியையும், ஆசார வணக்கத்தையும், சர்வேசுரனை ஸ்துதித்த மேரையையும் எடுத்துரைக்கயார் தரம்? அவர்களுடைய ஸ்துதி வணக்க நமஸ்காரங்களும், அதிசயமான நேச பக்தி பற்றுதல்களும், தேவ சிம்மாசனத்தின்முன் சுகந்த பரிமளம் வீசும் பலியாய் எழும்பி, பரம திரித்துவத்தைப் பூரிக்கச்செய்தன. பாஸ்கா பண்டிகைக்காக ஏழு நாளும் ஜனங்கள் ஜெருசலேமில் தங்கவேண்டிய கடனில்லை. மூன்று நாளிலேயே அநேகர் திருநாட் சடங்குகளை நிறைவேற்றிவிட்டு, தங்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிவிடுவார்கள். பண்டிகைநாட்கள் முடிந்து அவரவர்கள் தங்களூர்களுக்குப் போகிறபோது கன்னிசுத்த தேவமாதா ஸ்திரீகள் போகும் வாசலாலும், சூசைமுனி பூமான்கள் போகும் வாசலாலும் புறப்பட்டுபோகத் தேவகுமாரன் இவ்விருவரில் ஒருவர்கூடவும் போகாமல், தேவாலயத்திலேதானே தங்கிவிட்டார். அப்போது திவ்ய பாலன் மாதாவின்கூட போனர் என்று பிதா நினைத்தும், பிதாவின்கூட போனர் என்று மாதா நினைத்தும் அந்த நினைவாகவே ஒருநாள் வழிப்பயணம்போய் இருவரும் சந்தித்த விடத்திலே, தங்கள் அன்பார்ந்த குமாரன் இல்லாததைக்கண்டு, எந்த ஜனசமூகங்களோடு போனரோவென்று சோகவியாகுலப்பட்டு, அடித்தாரோடும் அயலாரோடும் விசாரிக்க, அவர்களோடேயும் காணாமல், ஓர் இரவுமுழுதும் எண்ணுதும் எண்ணி துன்புறுகிறார்கள். தமது திவ்ய பிதா தம்மை இவ்வுலகில் எந்த அலுவலுக்காக அனுப்பினர் என்று காண்பிக்கிறதற்காக பாலனாகிய சேசு தம் பெற்றோருக்குத் தெரியாமல் ஜெருசலேமில் தங்கிவிட்டார்.

சேசுவினிடம் இருவித கிருத்தியங்கள் இருந்தன. மனுஷ சுபாவமுடைய எல்லோருக்கும் பொதுவான கிருத்தியங்களும், இரட்சகருக்குமாத்திரம் உரித்தான தேவ கிருத்தியங்களுமாம். முதல் வகுப்பு கிருத்தியங்களில் தம் பெற்றோருக்குக் கீழ்ப்படிய விரும்பினர். இரட்சகரையடுத்த கிருத்தியங்களிலோ தமது தேவ பிதாவுக்குமாத்திரம் கீழ்ப்படிந்தார். இதுவரையில் நசரேத்தில் தம் பெற்றோருக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்துவந்தவர், அவர்களுக்குத் தெரியாமல் ஜெருசலேமில் தங்கிவிட்டதினல், சில காரியங்களில் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லையென்றும், இவைகளில் தம் தேவ பிதாவுக்குமாத்திரம் பணிந்து நடத்தல்வேண்டுமென்றும் இவ்வர்த்தமானத்தில் கண்கூடாய்ப் படிப்பிக்கச் சித்தமானர். இதைக் காண்பிக்கிறதற்காக பிள்ளைகள் தாய் தந்தையருக்கு விசேஷமாய் அடங்கி நடக்கும் காலமாகிய பாலபருவத்தைத் தெரிந்துகொண்டார். தமது திவ்ய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவும் மனுக்குலத்தின் இரட்சண்ணியத்துக்காகவும் அவர் தமது நேச மாதாவைவிட்டு பிரிந்ததினல், அவரிருதயம் வியாகுலத்தால் நிரப்பப்பட்டது. ஆனல், தமது பிதாவின் சித்தம் தம்பாக்கியம் என்று தம்முடைய நியாயமான பற்றுதல்களையும் விருப்பங்களையுமுதலாய் முழுதும் பரித்தியாகஞ்செய்தார்.

தான் பெற்றெடுத்து, அருமையாய் வளர்த்த தன ஏக குமாரனை தாயானவள் இழக்க நேரிட்டால, அவள் படும் கஸ்திக்கு நிகருண்டோ? ஆனல், தாய்மார்களுக்குள் அன்பு மிக்க தேவ கன்னிமாதா தன்னுயிருக்குயிராயிருந்த தனது இனிய செல்வ மகனை இழந்தபோது, அவள் பட்ட கஸ்தியையும், கவலையையும் வருணிக்கவும், அவ்வியாகுலத்தின் ஆழத்தை கணிக்கவும் யாரால் முடியும்? தமது திவ்ய குமாரன் தேவன் என்று அவள் அறிந்திருந்தாலும், அவ்வறிவு அவளுடைய துக்கத்தைக் குறைக்கவில்லை.

ஏனெனில், அவர் மனுஷ்ய பாவத்தின் பலவீனங்களையும் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு, மற்றப் பிள்ளைகளைப்போல இது வரையில் நடந்துவந்தபடியால், சாமான்ய பாலர்களுக்கு நேரிடுகிற ஆபத்து இடைஞ்சூறுகள் இப்போது அவருக்கும் சம்பவித்தனவோவென்று பயந்து, சிந்தாகுலப் பட்டாள். மேலும் மனுக்குலத்தின் இரட்சகராய்ப் பிறந்தவருக்குப் பாடுகளும் உபாதைகளும், துன பமும் துயரமும் வர வேண்டுமென்பது அவளுக்குத் தெரிந்த விஷயமே. என்றாலும் அவர் பாடுபடும் காலமும், பாடுகளின் விவரங்களும் மறை வாயிருந்தன.

இதினிமித்தம் பல விசாரமும் கவலையும் பயமும் திகிலும் அவள் மனதைக் கலவரப்படுத்தி, வாதித்து துக்கசாகரத்தில் அமிழ்த்தின. சிமையோன் தீர்க்கதரிசி கூறியவாறு துக்கத்தின் வாள் அவளுடைய உருக்கநேசமுள்ள இருதயத்தை ஊடுருவி வாதித்தது. தேவமாதாவோடும் சூசை முனியோடும் வந்த பிரயாணிகள் பொழுது விடிந்ததும் சமரியா, கலிலேயா நாடுகளுக்குப்போக புறப்பட்டார்கள்.

ஆனல் இவர்களோ திரும்பவும் ஜெருசலேமநகர் மார்க்கமாய்ப் பிரயாணஞ்செய்தார்கள். வழிநெடுக தங்கள் தெய்வ குமாரனைத் தேடினர்கள். நிரள் நிரளாய் திரும்பிவரும் திரு யாத்திரிகள் கூட்டங்களில் அவரைக் காண ஆசித்தும், காணவில்லை. ஜெருசலேம் நகரில் அவர்கள் முந்தி தங்கியிருந்த இடங்களில் அத்தினமெல்லாம் அலைந்து திரிந்து தேடியும் அவரைக் கண்டார்களில்லை.

இவ்விதமாய் ஜெருசலேமில் தங்களன்பார்ந்த அழகிய தெய்வ குமாரனைக் காணுமல் இரண்டாவது இரவையும் துக்கத்திலும் கவலையிலும் போக்கினர்கள்.

(தொடரும்.)

S. M.

"நல்ல ஜெபம் செய்வதற்கு அதிகமாய்ப் பேசவேண்டியதில்லை. தேவதாகருணைப் பெட்டியில் நமதாண்டவர் இருக்கிறபடியால் அவரை நோக்கி நமது மனதை எழுப்பவேண்டும். அவருடைய தேவ சன்னிதானத்தில் சந்தோஷமாயிருப்போமென்பது நிட்சயம்." இதுவே ஜெபங்களுக்கெல்லாம் மேலான ஜெபம்."

—(முத். தூதோர்ஸ்.)

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

5-ம் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாள் விதவையானாள்—அகுஸ்தீன் கலாசாலையில் சிறந்த வித்தை களைக் கற்றுத் தேர்ச்சியடையும்படி தனது ஆஸ்திபாஸ்திகளையாவையும் செலவழிக்கிறாள்—உரோமானியர் என்பவள் அவளுக்குச் சகாயமாய் வருகிறாள்—அகுஸ்தீனுடைய தீய வாழ்க்கத்தைப்பற்றி அவள் சஞ்சல சாகரத்தில் அமிழ்ந்தியிருக்கையில், அவர் திரும்ப ஞானமார்க்கத்தை நாடி வரச்செய்யும் முயற்சிகள் பளிச்சென்று தோன்றும் மின்னலுக்கொப்ப அவளது இருதயத்தில் நம்பிக்கையைப் பிறப்பிக்கின்றன.

(இ. அ. 372—375.)

(முன் தொடர்ச்சி.)

உரோமானியா னூஸ் என்பவர் ஐஸ்வரியவான் என்பது உண்மையே. ஆனல் அவருடைய பெருமை அதில் அடங்கியிருந்ததில்லை. அவருடைய உதார குணத்திலும் சுசீலமுள்ள இருதயத்திலுமே யடங்கியிருந்தது. இதனலேதான் அவர் கீர்த்திரத்தில் காரியத்தைத் தீர்க்கமாய்க் கண்டுபிடிக்கலாயிற்று. அவர் அகுஸ்தீனுடைய மனேசக்தியைக் கண்டுபிடித்து, கூடியமட்டும் அதிக செலவின்றி, அவர் தன் கல்வியைத் தொடர்ந்து கற்றுவரும்படியாக, அவர் கார்த்தேஜ் நகரிலிருக்குந்தனையும் தன் வீட்டில் வசிக்கும்படியாக, அதை மோனிக்கம்மாள் வசம் ஒப்பித்தார்.

இப்படியிருக்க "கன்றி மறப்பது நன்றன்று" எனறபடி, அகுஸ்தீனுடைய நல்ல இருதயம், நன்றியறிதல் நிறைந்த பாசக்கட்டுகளால் கட்டப்படும் என்று சொல்லவும்வேண்டுமோ? அவர் ஆயுள் வளரவளர, உரோமானியானூஸ்மட்டில் அவர் கொண்டிருந்த நன்றியறிதலும் கூடவே வளர்ந்துவந்தது. அவர் கூவிச் சொல்வது "ஓ! உரோமானியானூஸே, நான் உனக்கு நன்றி செலுத்தவேண்டுமென்றே? நான் சிறுவனாயும், ஏழையாயும் இருக்கும்போது, கல்வி கற்கும்படி தூரதேசத்திற்குப்போய், இருக்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையும், படிக்க புஸ்தகமுமின்றி தவித்துக் கொண்டிருக்கும்போது, நீ வேண்டிய திரவிய சகாயம் செய்ததுமன்றி, எல்லாத்திற்கும் மேலாய், உன் அன்பையும் எனக்குக் கொடுத்தாயல்லோ? நான் என் தந்தையை இழந்து, நிர்ப்பாக்கியதசையிலிருந்தபோது, தேசபாசத்தினல் என் மனதைத் தேற்றி, கல்லாலோசனைகளால் என்னைத் திடப்படுத்தி, திரவிய சாகாயத்தால் என்னை முன்னுக்குக்கொண்டுவந்தது நீயல்லவோ? ஆம், நமது சிறிய நாடாகிய தகாஸ்தேயில் நாமிருக்கும்போது, வெளியரங்கமாய் நீ என்மட்டில் காட்டிய நேசத்தினல் என்னைக் கவுரவப்படுத்தி, உனது வீட்டில் பாதியை நான் வசிக்கக்கொடுத்ததுமன்றி, பிற்காலத்தில் எனக்குண்டான சகல மகிமைக்கும் காரணஸ்தனுமிருந்தது நீயல்லவோ?"

உரோமானியானூஸ் காட்டிய இந்தப் பெருந் தயவைக் கண்டு, அகுஸ்தீனைவிட மோனிக்கம்மாள் மெத்தவும் ஆச்சரியமுற்றாள். தான் சாகுந்தனையும் அந்நன்றியை மறந்தவளேயல்ல. உரோமானியானூஸுக்கு லஸென்வியூஸ் என்னும் புத்திரன் ஒருவன் இருந்தான். அவன் புத்திசாலி. ஆனல் விளையாட்டுக்குணமுள்ளவன். சிறுபத்திலேயே கட்டுத்திட்டத்தில் வைக்கப்பட்டிராவிட்டால், கேட்டுக்கு ஆஸ்பதமான குணச்சார்புள்ளவனுயிருக்கிறபடியால், அச் சிறுவனை மோனிக்கம்மாள் உருக்கம் நிறைந்த பட்சத்தோடும், அத்தியந்த வைராக்கியம்பொருந்திய ஜாக்கிரதையோடும் பராமரித்துவந்தாள். தகப்பனில்லா அகுஸ்தீனுக்கு உரோமானியானூஸ் தகப்பனுய் முன்னின்று அவரைத் தாபரித்ததற்கு நன்றியறிதலாகூ மோனிக்கம்மாள் லஸென்வியூஸுக்குத் தாயைப்போலிருந்து, தாய்க்குரிய கவன விசாரத்துடன், அவனை நடத்தவருகிறளென்று நமக்குத் தோன்றுகிறது.

இப்படியாக, அகுஸ்தீன் தக்க சமயத்தில் உரோமானியானூஸிடம்திரவியசகாயம்பெற்று, தூர்ச்சகவாசத்தினின்றும், ஒய்வொழிச்சலின்றி தன்னை வாதித்துவந்த ஆசாபாசப் போராட்டத்தினின்றும் விடுபட்டு, தன் தாயார், மேலும் மேலும் தூண்டிவந்தபடி, படிப்பின்மேலேயே தன் கவனமெல்லாம் செலுத்தினர். தன் தகப்பனர் மரித்ததிலிருந்து, இவருக்கு நல்லுணர்ச்சியுதித்ததுபோலும். எனெனில், அவருக்குப் புத்திபுமுண்டு, நல்ல இருதயமுமுண்டு. ஆகவே, அவர் எவ்வளவுதான் பாவப்பழக்கத்தில் மிகுந்திருந்தபோதிலும், தன் தகப்பனுடைய மரணத்தைச்சிந்தித்துச் சிந்தித்து, "ஒவ்வொருவனுக்கும் அழியாத ஆத்துமம் ஒன்றுண்டு; யாராயிருந்தாலும் இவ்வுலகில் புண்ணிய முயற்சிகளை யநுசரித்து நல்லவனுய் நடப்பதிலேயே சர்வ பாக்கியமும் அடங்கியிருக்கிறது" என்னும் இப்படிப்பட்ட நினைப்பானது அவரை அலட்டி வாதித்துவந்தது. உண்மையில் அச்சிந்தனைகளை யடக்கி மறக்கடிப்பது கஷ்டம்.

தன் மகன் வித்தையின்மூலமாகவே சன்மார்க்கத்தை நாடிவருவானென்றும், மனிதன் எவ்வளவாக தன் ஆத்துமத்தின் மேன்மையை யறிவானே அவ்வளவாக கர்த்தரை நெருங்கிப் போவானென்றும். இக்கப் புத்திசாலியான பெண்பிள்ளை எப்போதும் முன்னுணர்ச்சி கொண்டிருந்தாள். ஆசாபாசத்தின் அலைமோதித்திரியும் அவருக்கு வேதாகமம் இன்பந்தரா தென்று அவளறிந்து அத்திருப் புஸ்தகங்களைப் படிக்க அவருக்குத் தரவில்லை. மேலும் வேதாகமங்களுக்கு விரோதமாய் அஞ்ஞானிகள் சொல்லும் எதிர் நியாயங்களை மறுத்துக்காட்டும்படி, கிறீஸ்துவிற்பன்னர்களாகியவேதபாரகர் எழுதியிருக்கும் சிறந்த புஸ்தகங்களையும் படிக்க அவரைத் தூண்டவில்லை. ஏனெனில், அவருடைய விசுவாசம் முழுதும் மங்கிப்போயிருந்த படியால், அவைகளைக் கண்டுபிடிக்க அவரால் கூடாதிருந்தது. ஆனல் பூர்வீக தத்துவசாஸ்திரங்களைப் படிக்க அவரை வெகுவாய் எவுவாள். இதற்குக் காரணம் அவர் தமது எழுத்தின் திறமையைப் பக்குவப்படுத்திக்கொள்வதற்கென்று அவருக்கவள் சொன்னபோதிலும், உண்மையில் அவருடைய உணர்ச்சித் திறமை ஒய்ந்து அமர்ந்திருக்கவிடக்கூடாதென்றே அப்படி தூண்டி எவுவாள்.

ஒரு பக்கம் தன் தாயார் அவரைப் படிப்பில் தூண்டிவந்தான். இன்னெரு பக்கம் அவரது மனேசக்தியும் பரிபக்குவமடைந்துவந்தது. அவர் ஒவ்வொரு சாஸ்திரத்தையும் படித்து முடித்து, பூலோகத்தின் ஆதியுகங்களில் சிறந்த வித்துவான்களால் இயற்றப்பட்ட சாஸ்திர புஸ்